நிறுவனச் சட்டம்

Company Law

தமிழக அரசு

தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூலாசிரியருக்கான பரிசை

மும்முறை வென்றெடுத்த சட்டத்தமிழாய்வு அறிஞர்

பி.ஆர்.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G. Dip. in A.D.R., D.Lit.,

வழக்குரைஞர் மற்றும் சட்டக்கல்வியாளர்

நிறுவனங்கள் சட்டம், 2013-இல்

2015, 2017, 2019 மற்றும் 2020-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட

திருத்தச்சட்டங்களுடன் வெளியிடப்பட்டுள்ள

முதல் சட்டத்தமிழ் நூல்

பல்கலைக்கழக பாடத்திட்டம்
நிறுவனச்சட்டம்
பல்வேறு பிரச்சனைகளும் தீர்வுகளும்
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்கள் –அண்மைக்காலம் வரை
புதிய வடிவிலான வினாத்தாள் எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது?
தேர்வுக்கு தயாராகும் மாணவ, மாணவியருக்கு சில முக்கிய குறிப்புகள்
பிரச்சனைகளுக்கு தீர்வு காண் வினாக்களுக்கு விடையளிப்பது எப்படி?
தேர்வில் அதிக மதிப்பெண் பெற என்ன வழி?

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

தமிழக அரசின் பரிசு பெற்ற சிறந்த சட்ட நூல் வெளியீட்டாளர்கள்,

69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, சேலம் 636007.

இயங்கலையில் (ஆன்லைன்)

நூல்கள் வாங்க : www.shripathirajanpublishers.com

11–ஆம் பதிப்பு : ஜனவரி, 2023

பதிப்புரிமை © : பி.ஆர்.ஜெயராஜன்

இது ஒரு ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ் தயாரிப்பு

விலை : ₹ 500/-

ISBN : 978-81-953292-6-7

- **Title** : **Niruvana Sattam (Company Law)**
- **Author** : Advocate **P.R.Jayarajan**
- **Language** : TAMIL
- **Edition** : First Edition, December, 1993
  Second Revised Edition, March, 1996
  Third Revised Edition, October, 1997
  Fourth Revised Edition, January, 2000
  Fifth Revised Edition, May, 2004
  Sixth Edition, October, 2007
  Seventh Edition, March, 2010
  Eighth Revised Edition, February, 2016
  Ninth Updated Edition, November, 2021
  Tenth Edition, February, 2022
  Eleventh Edition, January, 2023
- **Pages** : 640
- **Size** : 22 x 14 cm (Demi)
- **Fonts** : 11 and 10 pts.
- **Paper used** : 18.1 Kg. Maplitho
- **Binding** : Paperback
- **Published by** : **SHRI PATHI RAJAN PUBLISHERS,**
  69/42-C, Meenakshi Nagar,
  Hasthampatty, **SALEM 636007.**
  Phone : 0427-2403402
- **Price** : **₹ 500/-**
- **E-Shop at** : www.shripathirajanpublishers.com

அச்சுப்பணி :

எழுத்தாக்கம் : ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்,
69/42–சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, சேலம் 636007.

நூலாக்கம் : ஸ்ரீ அபிராமி ஆஃப்செட்,
6/2ஏ, துரைசாமி நகர், பள்ளப்பட்டி, சேலம் 636009.

பொருளடக்கம்

இயல் I

அறிமுகம்

[Introduction]

1. இந்தியாவில் நிறுவனச் சட்டத்தின் தோற்ற வரலாறு [Origin of Company Law in India] 1

- நிறுவனங்களின் தோற்ற வரலாறு 1
  - இங்கிலாந்தில் 2
  - இந்தியாவில் 3
- 2013–ஆம் ஆண்டில் புதிய நிறுவனங்கள் சட்டம் 4
- 2015–ஆம் ஆண்டில் கொரணப்பட்ட திருத்தச் சட்டம் 5

2. நிறுவனங்கள் சட்டம், 2013 - சிறப்பம்சங்கள் [The Companies Act, 2013 - Salient Features] 6

- நிறுவனங்கள் சட்டம், 2013 – பின்னணி 6
- நிறுவனங்கள் சட்டம், 2013 – சிறப்பம்சங்கள் 7

3. நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015 - முக்கிய அம்சங்கள் [The Companies (Amendment) Act, 2015 - Key Points] 15

- நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015 – பின்னணி 15
- நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015 – முக்கிய அம்சங்கள் 16

4. நிறுவனத்தின் வரையறையும் அதன் குண இயல்புகளும் [Definition of a Company and its Characteristics] 20

- நிறுவனம் – சட்டம் தரும் வரையறை 21
- நிறுவனத்தின் குண இயல்புகள் அல்லது முக்கிய அம்சங்கள் 22
  - நன்மை தரக் கூடிய இயல்புகள் 22
  - தீமை தரக் கூடிய இயல்புகள் 25
- நிறுவனத்தின் தனித்தன்மை அல்லது நிறுவனத்தின் திரை தூக்கப்படுதல் 30

5. நிறுவனங்களின் வகைகள் [Classes of Companies] 34

- பதிவின் அடிப்படையில் 36
- பொறுப்பின் அடிப்படையில் 38

- உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 40
  - தனி (அல்லது) தனியார் நிறுவனம் 41
  - பொது நிறுவனம் 41
  - பொது நிறுவனமாக கருதப்படுவத 42
- கட்டுப்பாட்டின் அடிப்படையில் 42
  - பிடிப்பு நிறுவனம் 43
  - துணை நிறுவனம் (அல்லது) பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் 43
- உடைமையின் அடிப்படையில் 47
  - அரசு நிறுவனம் 47
  - தனி நபர் நிறுவனம் 50
- தனியார் நிறுவனம் 53
- தனியார் நிறுவனம்மொன்று பொது நிறுவனமாக மாறுதல் 57
- பொது நிறுவனம் தனியார் நிறுவனமாக மாறுதல் 59
- இலாப நோக்கமில்லாத தரும நிறுவனங்கள் 60
- நிதி நிறுவனங்கள் 61
- ஃபெரா நிறுவனங்கள் 62
- சட்ட முரணான சேர்க்கை 63
- ஒரு நபர் நிறுவனம் 66
  - வரையறை 67
  - உருவாக்கம் 67
  - விதிமுறைகள் 69
  - நன்மைகள் (அனுகூலங்கள்) 71
  - விலக்குகள் அல்லது சிறப்புரிமைகள் 72

இயல் II

உருவாக்கம்

[Formation]

1. நிறுவனமொன்றை உருவாக்குதல் [Formation of a Company] **80**

அ. தோற்றுவிப்பாளர்கள் (அல்லது) துவக்குநர்கள் 81
- விளக்கம் 82
- வரையறை 83
- தோற்றுவிப்பாளரின் சட்ட நிலை 84
- தோற்றுவிப்பாளரின் உரிமைகள் 86
- பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்கள் 89

ஆ. பதிவு செய்தல் மற்றும் கூட்டுருவாக்கல் 92

- ஒரு நிறுவனத்தை உருவாக்கும் முறை 93
- ஒரு நிறுவனத்தை உருவாக்க எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் (அல்லது) நிறுவனத்தைப் பதிவு செய்தல் 95
- பதிவுச் சான்றிதழின் முக்கியத்துவம் 99
- பதிவுச் சான்றிதழ் வழங்குவதன் விளைவுகள் 101
- பதிவுக்குப் பிறகு ஒரு நிறுவனம் தனது தொழிலை தொடங்கு நடைமுறை 102

2. அமைப்பு முறையேடு [Memorandum of Association] 104

- விளக்கம் 105
- நோக்கம் 106
- அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கம் அல்லது அதில் குறிப்பிடப்பட வேண்டிய பல்வேறு விபரங்கள் 107
- அமைப்பு முறையேட்டின் படிவம் 111
- அமைப்பு முறையேட்டின் முக்கியத்துவம் 111
- ஒரு நிறுவனம் தனது பெயரில் செய்யும் மாற்றம் 114
- எந்த அளவிற்கு நோக்கங்களை மாற்றலாம்? 118
- வரம்பு மீறல் கோட்பாடு – விளக்கம் 124
  - இந்தியாவில் வரம்பு மீறல் கோட்பாடு 126
  - ஆங்கிலச் சட்டத்தால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் 127
- வரம்பு மீறிய செயலினால் ஏற்படும் விளைவுகள் 128

3. செயல்முறை விதிகள் [Articles of Association] 132

- விளக்கம் 132
- வரையறை 133
- செயல்முறை விதிகள் பதிவு செய்யப்படல் அவசியமா? 133
- செயல்முறை விதிகளின் படிவம் 134
- செயல்முறை விதிகளின் உள்ளடக்கம் அல்லது முக்கியத்துவம் 134
- செயல்முறை விதிகளில் தவறான தகவல் தருவதன் விளைவு 135
- மாற்றமுடியாததற்கான வகைமுறைகள் 137
- அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின் கட்டுப்படுத்தும் வலிமை 141
- செயல்முறை விதிகளில் மாற்றம் 147
- கொள்நிலை அறிவிக்கைக் கோட்பாடு 151
- உட்புற மேலாண்மைக் கோட்பாடு 155

4. திட்ட அறிவிப்பு (அல்லது) தகவலறிக்கை [Prospectus] 159

- விளக்கம் 161

- வரையறை 162
- திட்ட அறிவிப்பின் பதிவு குறித்த வகைமுறைகள் 163
- திட்ட அறிவிப்பை தயாரிப்பது குறித்தான பொன் விதி 163
- திட்ட அறிவிப்பில் உண்மையற்ற கூற்றுக்களை கொடுத்தலும், அதன் சட்ட விளைவுகளும் மற்றும் தீர்வழிகளும் 164
- திட்ட அறிவிப்பில் செய்யப்படும் விடுகை அல்லது உண்மையற்ற மற்றும் தவறாக வழிநடத்தும் கூற்றுகளினால் ஏற்படும் விளைவுகள் அல்லது பொறுப்புகள் 165
  - குற்றவியல் பொறுப்பு 166
  - உரிமையியல் பொறுப்பு 166
  - ஒப்பந்தவியலில் ஏற்படும் விளைவுகள் 169
- பணத்தை முதலீடு செய்யும்படி நபர்களை மோசடியாக தூண்டுதலுக்குத் தண்டனை 170
- பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ள தீர்வழிகள் 171
- பொறுப்புகளுக்கான எதிர்வாதங்கள் 174
- திட்ட அறிவிப்பு – இரண்டு வகைகள் 176
  - ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பு 177
  - முதனிலை திட்ட அறிவிப்பு 178
- திட்ட அறிவிப்பாக கருதப்படுவது 180

5. வைப்பீடுகள்
[Deposits] 182

- நிறுவனங்கள் வைப்பீடுகளை ஏற்பது – வரலாற்றுப் பின்னணி 183
- பொது நிறுவனங்கள் வைப்பீடுகளை ஏற்பது 184
- மற்ற நிறுவனங்கள் வைப்பீடுகளை ஏற்பது 185
- 2013 சட்டம் வருவதற்கு முன் ஏற்ற வைப்பீடுகளை திருப்பிச் செலுத்தல் 185

இயல் III
நிறுவன நிதியாட்சி
[Corporate Financing]

1. பங்குகள்
[Shares] 187

அ. பங்குகளும் அவற்றின் வகைகளும் 187
- பங்கு – வரையறை 188
- பங்கின் சிறப்புக் கூறுகள் 188
- பங்குகளின் வகைகள் 189

ஆ. பங்குகளுக்கான விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீடு 200

- பங்கு ஒதுக்கீடு – விளக்கம் 201
- பங்குகளின் ஒதுக்கீடு தொடர்பான விதிகள் 202
- பங்கு ஒதுக்கீட்டு நடைமுறை 208
- பங்குத் தொகை அழைப்பு 213
- பங்குகள் பறிமுதல் செய்யப்படுதல் 217
- பங்குகளை சரண் செய்தல் 220

இ. பங்குகள் மாற்றமும் வாரிசுவழியில் பங்குரிமை மாறுதலும் 222

- பங்கு மாற்றம் – பொருள் 223
- பங்கு மாற்றத்திற்குண்டான வகைமுறைகள் 223
- வாரிசுவழியில் பங்குரிமை மாறுதல் 229
- வாரிசுவழியில் பங்குரிமை மாறுதல் தொடர்பான சட்ட வகைமுறைகள் 230
- வாரிசுவழியில் பங்குரிமை மாறுதலுக்கான நடைமுறை 231

2. உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்கள் [Members and Shareholders] 235

- உறுப்பினர் – வரையறை 236
- உறுப்பினர், பங்குதாரர் – நுணுக்கமான வேறுபாடுகள் 237
- ஒருவர், ஒரு நிறுவனத்தில் உறுப்பினராகும் முறைகள் 237
- எப்படி உறுப்பினர் பதவி முடிவுக்கு வருகிறது? 239
- உறுப்பினர்களின் உரிமைகளும் பொறுப்புகளும் 240
- ஒரு நிறுவனத்தின் உறுப்பினராகக் கூடியவர்கள் 242

3. பங்காதாயம் [Dividend] 244

- விளக்கம் 244
- வரையறை 245
- பங்காதாயம் தொடர்பான சட்ட வகைமுறைகள் 245
- பங்காதாயம் வழங்கல் 245

4. மூலதனம் [Capital] 248

- மூலதனம் 248
- இருப்பு மூலதனம் 249
- தீர்ப்பாயத்தின் ஒப்புதலுடன் மூலதனத்தைக் குறைக்கும் முறைகள் 251
- மூலதனப் பகுதியை மாற்றுவதற்கான வகைமுறைகள் 254
- ஒரு நிறுவனம், தனது பங்குகளை தானே வாங்குதல் 256

5. கடன் பெறும் அதிகாரங்கள் [Borrowing Powers] 259

- அதிகாரவரம்பு மீறிய கடன் 260

– வரம்பு மீறிய கடனாக இருக்கும் போது கடன் அளித்தவருக்கு கிடைக்கும் உரிமைகள் 260

6. கடனீட்டுப் பத்திரங்கள் [Debentures] 268

– பொருள் 268
– வரையறை 268
– சிறப்பான பண்புகள் 269
– கடனீட்டுப் பொறுப்பாண்மைப் பத்திரம் 270
– கடனீட்டுப் பத்திரதாரருக்குள்ள உரிமைகள் 271
– கடனீட்டுப் பத்திரதாரருக்குள்ள தீர்வழிகள் 272
– கடனீட்டுப் பத்திரங்களின் பல்வேறு வகைகள் 273

7. படரும் பொறுப்பும் நிலையான பொறுப்பும் [Floating Charge and Fixed Charge] 280

– பொறுப்பு – வரையறை 281
– படரும் பொறுப்பு – பொருள் 281
– நிலையான பொறுப்பு – விளக்கம் 282
– படரும் பொறுப்பு எப்பொழுது நிலையான பொறுப்பாக உருவடைகிறது? 283
– பற்றுப் பொறுப்பை பதிவு செய்தல் 285
– பற்றுப் பொறுப்பை பதிவு செய்யாமையால் ஏற்படும் விளைவுகள் 286

இயல் IV

நிறுவன செயலாட்சி

[Corporate Governance]

1. இயக்குனர்கள் [Directors] 287

– ஒரு நிறுவனத்தில் இயக்குனர்களின் முக்கியத்துவம் 288
– பெண் இயக்குனர் 289
– சுதந்திரமான இயக்குனர் 289
– இயக்குனர் – வரையறை 289
– இயக்குனர்களின் பங்கு 290
– இயக்குனர்களின் அதிகாரங்கள் 294
  – கட்டுப்பாடுகள் 295
– இயக்குனராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் 297
– இயக்குனர் அடையாள எண் ஒதுக்கீட்டிற்கான நடைமுறை 298
– தகுதியின்மைகள் 300
– இயக்குனரின் பதவி நீக்கம் 301

- இயக்குனர்களின் பொறுப்புகள் 304
  - பங்குதாரர்களுக்கு எதிரான பொறுப்புகள் 304
  - மூன்றாம் நபர்களுக்கு எதிரான பொறுப்புகள் 307
  - இயக்குனர்களின் வேறு சில பொறுப்புகள் 310
- நிறுவன சமூகப் பொறுப்புடைமை 310

2. மேலாண்மை அலுவலர்கள் [Management Personnel] 311

- மேலாண்மை இயக்குனர் – யார்? 312
- மேலாண்மை இயக்குனரை நியமித்தல் 312
- மேலாளர் – யார்? 314

3. கூட்டங்கள் [Meetings] 316

- கூட்டங்களின் பல்வேறு வகைகள் 318
  - ஆண்டுப் பொதுக் கூட்டம் 318
  - சிறப்பு பொதுக் கூட்டம் 321
- செல்லத்தக்க கூட்டம் ஒன்றிற்குத் தேவையான கூறுகள் 322
- கூட்டத் தலைவர் 323
- குறைவெண் 324
- வாக்கெடுப்பு 325
- மாற்றாள் 325

4. தீர்மானங்கள் [Resolutions] 327

- விளக்கம் 328
- தீர்மானத்தின் வகைகள் 328
  - சாதாரண தீர்மானம் 328
  - சிறப்புத் தீர்மானம் 329
  - சிறப்பு அறிக்கை தேவைப்படும் தீர்மானங்கள் 330

5. கணக்குகளும் தணிக்கைகளும் [Accounts and Audits] 332

- தணிக்கையாளரின் முக்கியத்துவம் 332
- தணிக்கையாளரின் தகுதிகள் 333
- தணிக்கையாளரின் தகுதியின்மைகள் 334
- தணிக்கையாளர் நியமனம் 335
- தணிக்கையாளரின் நீக்கம் 337
- தணிக்கையாளரின் ஊதியம் 338
- தணிக்கையாளரின் உரிமைகள் அல்லது அதிகாரங்கள் 339
- தணிக்கையாளரின் கடமைகள் 340

- தணிக்கையாளரின் பொறுப்புகள் 341
- நிதிநிலை அறிக்கைகள் 342

6. தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பு [National Financial Reporting Agency] 344

- பணிகள் 345
- கட்டமைப்பு 345
- அதிகாரங்கள் 346
- பாதிக்கப்பட்டவரின் மேல்முறையீடு 347
- அலுவலக இடம் 348

7. புலன் விசாரணை [Investigation] 349

- புலன் விசாரணையின் தேவை 350
- மைய அரசின் புலன் விசாரணை அதிகாரம் 350
- ஆய்வாளர்களின் அதிகாரம் 358

8. பெரும்பான்மையின் விதி மற்றும் சிறுபான்மையினர் உரிமைகள் [Majority Rule and Minority Rights] 362

- ஃபோஸ் – எதிர் – ஹர்பாட்டில் வழக்கு விதி 364
- விதிவிலக்குகள் 365

9. அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மையை தடுத்தல் [Prevention of Oppression and Mismanagement] 369

- அடக்குமுறை – பொருள் 371
- தவறான மேலாண்மை – பொருள் 373
- தீர்ப்பாயத்திடம் விண்ணப்பித்தல் 373
- தீர்ப்பாயம் வழங்கும் நிவாரணம் 374
- தீர்ப்பாயத்திடன் அதிகாரங்கள் 375
- விண்ணப்பம் செய்தவற்கான உரிமை 377

இயல் V

சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் கலைப்பு

[Compromise, Arrangements and Winding up]

1. சமரசங்களும் ஏற்பாடுகளும் [Compromises and Arrangements] 378

- சமரசம் – விளக்கம் 379
- ஏற்பாடு – விளக்கம் 380
- சமரசத்திற்கான திட்டம் எப்போது வகுக்கப்படுகிறது? 380
- சமரசத்திற்கான காரணிகள் 381
- ஏற்பாட்டிற்கான திட்டம் எப்போது வகுக்கப்படுகிறது? 381
- சமரசம் அல்லது ஏற்பாட்டுத் திட்டத்திற்கான நடைமுறை 382
- சமரசம் அல்லது ஏற்பாட்டை வலியுறுத்த தீர்ப்பாயத்திற்குள்ள அதிகாரம் 386

2. மறுநிருமாணம், இணைதல் மற்றும் ஒருங்கிணைப்பு [Reconstruction, Merger and Amalgamation] 388

- மறுநிருமாணம் 389
- மறுநிருமாணத்தின் தேவை 389
- இணைதல் 390
- ஒருங்கிணைப்பு 390
- இணைதலும் ஒருங்கிணைப்பும் 390
- ஒருங்கிணைத்தலின் முக்கிய நோக்கம் 391
- மறுநிருமாணமும் ஒருங்கிணைப்பும் நிகழும் முறைகள் 391
- மறுநிருமாணம் மற்றும் ஒருங்கிணைப்பிற்காக தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணை 392
- ஒருங்கிணைப்பிற்காக மைய அரசு பிறப்பிக்கும் ஆணை 395

3. நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நிறுவனங்களின் பெயர்களை நீக்குதல் [Removal of Names of Companies from the Register of Companies] 397

- செயலற்ற நிறுவனம் 398
- நிறுவனங்களின் பெயர்களை நீக்குதல் 398

4. நலிவுற்ற நிறுவனங்களின் இயல்புமீட்பு, புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வு [Restoration, Revival and Rehabilitation of Sick Companies] 403

- நலிவுற்ற நிலையை தீர்மானித்தல் 404
- நிறுவனத்தின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்விற்கான விண்ணப்பம் 405
- இடைக்கால நிருவாகியின் நியமனம் 406
- தீர்ப்பாயத்தின் ஆணை 406
- புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்விற்கான திட்டம் 407
- திட்டத்திற்கு தீர்ப்பாயம் அளிக்கும் அனுமதி 407

5. நிறுவனக் கலைப்பு [Winding up of a Company] 408

- நிறுவனக் கலைப்பு 412

- நிறுவனக் கலைப்பின் முறைகள் 412
- தீர்ப்பாயத்தால் கலைக்கப்படுதல் (அல்லது) கட்டாயக் கலைப்பு 413
  - தீர்ப்பாயத்தால் கலைக்கப்படும் சூழ்நிலைகள் 413
  - ஒரு நிறுவனத்தைக் கலைக்க யார் மனுச் செய்தல் வேண்டும்? 417
  - தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள் 421
  - கலைப்பு ஆணையின் விளைவு 425
  - ஆலோசனைக் குழு 425
- தன்விருப்பக் கலைப்பு 426
  - தன்விருப்பக் கலைப்பிற்கான சூழ்நிலைகள் 427
  - தன்விருப்பக் கலைப்பின் முறைகள் 427
    - செல்வ விளம்புகை செய்ய முடிந்தால் 428
    - கடனீந்தவர்களின் கூட்டம் (செல்வ விளம்புகை செய்ய முடியாத நேர்வில்) 433
- முறையார்ந்த கலைப்பதிகாரி 441
- கலைப்பதிகாரி மற்றும் நிறுவனக் கலைப்பதிகாரி 442
- தற்காலிக கலைப்பதிகாரி 442
- முறையார்ந்த கலைப்பதிகாரிக்கு பொருந்தும் வகைமுறைகள் 442
- நிறுவனக் கலைப்பதிகாரியின் கடமைகள் 448

6. தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் [National Company Law Tribunal and Appellate Tribunal] 450

- பின்னணி 450
- தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் செல்லும் தன்மை குறித்து உச்ச நீதிமன்றத்தில் எழுந்த முக்கிய வழக்குகள் 452
- தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் தொடர்பான சட்ட வகைமுறைகள் 453

7. சிறப்பு நீதிமன்றங்கள் [Special Courts] 460

- சிறப்பு நீதிமன்றங்களின் நோக்கம் 460
- சிறப்பு நீதிமன்றங்கள் தொடர்பான வகைமுறைகள் 461

8. செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம் [Dormant Company] 464

- வரையறை 464
- பிரிவு 455(1)–இன் கீழான சில விளக்கங்கள் 465
- இதர வகைமுறைகள் 465
- சிறு நிறுவனம் 466
  - பிரிவு 2(85) தரும் வரையறை 467

இயல் VI
இந்திய
பங்கு பரிவர்த்தனை வாரியம்
[Securities Exchange Board of India]

1. இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் - அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகள் [Securities Exchange Board of India - Establishment, Powers and Functions] **468**

- அமைப்பு 469
- அதிகாரங்கள் மற்றும் பணிகள் 471

2. சூழ்ச்சி மற்றும் வஞ்சக திட்டங்கள், உள்ளிருப்போர் வணிகம் மற்றும் பங்குகள் அல்லது கட்டுப்பாட்டை கணிசமாக அடைதலுக்குத் தடை [Prohibition of Manipulative and Deceptive Devices, Insider Trading and Substantial Acquisition of Securities or Control] **474**

- தடை 475
- உள்ளிருப்போர் வணிகம் 476
  - ஒழுங்குமுறை விதிகள் 477

3. தண்டங்களும் அவற்றைத் தீர்மானிக்கும் முறையும் [Penalties and Adjudication] **479**

- தண்டங்கள் 480
- தண்டங்களை தீர்மானிக்கும் முறை 481

4. பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் [Securities Appellate Tribunal] **483**

- பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை நிறுவுதல் 483
- கட்டமைப்பு 484
- பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு 486
- பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் நடைமுறை மற்றும் அதிகாரங்கள் 487
- சட்டமுறை பிரதிநிதித்துவத்திற்கான உரிமை 488
- உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரவரம்பில்லை 488
- உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு 488

பிரச்சனைகளும் தீர்வுகளும்
[Problems and Solutions]

இந்நூலின் 491 முதல் 529 வரையிலான பக்கங்களில் மொத்தம் 43 பிரச்சனைகளுக்கு தீர்வளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர்
சட்ட பல்கலைக்கழக வினாத்தாள்கள்
[University Question Papers]

1. மூன்றாண்டு சட்டக்கல்வி
[Three Years Regular Course] **533**
- நவம்பர், 2018 முதல் ஜூன் 2022 முடிய 533 - 546

2. ஐந்தாண்டு சட்டக்கல்வி
[Five Years Regular Course] **547**
- நவம்பர், 2015 முதல் ஜூன் 2022 முடிய 547 - 578

குறுகிய விடைகள்
[Short Answers]

1. நிறுவனத்தின் திரைச் சீலை விலக்கப்படுதல் [Lifting the Corporate veil] 29
2. கூட்டமைப்புத் திரை [Corporate veil] 29
3. பொது நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனம் [Public Company and Private Company] 34
4. வெளிநாட்டு நிறுவனம் [Foreign Company] 35
5. பிடிப்பு நிறுவனம் [Holding Company] 35
6. பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் [Subsidiary Company] 35
7. பிடிப்பு நிறுவனம் மற்றும் கிளை ஆட்சி நிறுவனம் [Holding Company and Subsidiary Company] 35
8. அரசு நிறுவனம் [Government Company] 35
9. பொது நிறுவனமாக கருதப்பட்டது [Deemed Public Company] 36
10. தனியார் நிறுவனம் [Private Company] 53
11. தனியார் நிறுவனத்திற்குரிய சிறப்புரிமைகள் [Privileges of a Private Company] 53
12. பொது நிறுவனமாக கருதப்பட்டது [Deemed Public Company] 59
13. இலாப நோக்கமில்லாத தரும நிறுவனங்கள் [Companies with Charitable Objects not for profit] 60

14.	நிதி நிறுவனங்கள் [Finance Companies]	61
15.	ஃபெரா நிறுவனங்கள் [FERA Companies]	62
16.	சட்ட முரணான சேர்க்கை [Illegal Association]	63
17.	ஒரு நபர் நிறுவனம் [One Person Company]	68
18.	தோற்றுவிப்பாளர் (ஆக்க முயற்சியாளர்) [Promoter]	81
19.	எர்லாஞ்சர் – எதிர் – நியூ சாம்பிரிரோ பாஸ்பேட் கம்பெனி [Erlanger v. New Sombrero Phosphate Co.]	81
20.	நிறுவனம் துவங்குவதற்கு முந்தைய ஒப்பந்தங்கள் [Pre-incorporation Contracts]	89
21.	பதிவுச் சான்றிதழ் [Certificate of Incorporation]	93
22.	பீல்ஸ் வழக்கு [Peell's Case]	93
23.	அமைப்பு முறையேடு [Memorandum of Association]	105
24.	வரம்பிகந்த கோட்பாடு [Doctrine of Ultra vires]	124
25.	நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ் மாற்றமுடியாத செயல்முறை விதிகள் [Entrenchment under the Companies Act, 2013]	135
26.	செயல்முறை விதிகளின் மாற்றம் [Alteration of Articles]	146
27.	செயல்முறை விதிகளை மாற்றுதல் மற்றும் அதனின் வரம்புகள் [Alteration of Articles and its limitations]	147
28.	கொள்நிலை அறிக்கை [Constructive Notice]	151
29.	கோட்லா வெங்கடசாமி எதிர் ராமமூர்த்தி [Kotla Venkatasamy v. Rammurthy]	151
30.	உள்நிர்வாகக் கோட்பாடு [Doctrine of Indoor Management]	155
31.	திட்ட அறிவிப்பு [Prospectus]	161
32.	பொன் விதி [Golden Rule]	161
33.	ஒருமுறை ஒதுக்கு திட்டஅறிவிப்பு [Shelf prospectus]	176
33.	முதனிலை திட்ட அறிவிப்பு [Red-herring prospectus]	176
34.	திட்ட அறிவிப்பாக கருதப்படுவது [Deemed prospectus]	180
35.	திட்ட அறிவிப்பிற்கு பதிலான அறிக்கை [Statement in lieu of Prospectus]	181
36.	வைப்பீடுகள் [Deposits]	182
37.	முன்னுரிமைப் பங்குகள் [Preference Shares]	188
38.	மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகள் [Redeemable Preference Shares]	188
39.	சாதாரணப் பங்குகள் [Equity Shares]	188
40.	ஆதாயப் பங்குகள் அல்லது மீதூதிய பங்குகள் [Bonus Shares]	192
41.	மிகை தொகை பங்குகள் [Premium Shares]	194
42.	பங்குகளை மேல் பணத்திற்கு வழங்குதல் [Issue of Shares at Premium]	194
43.	பங்கு கட்டணக் கணக்கு [Share Premium Account]	194
44.	பங்குகளை தள்ளுபடி செய்து வழங்குதல் [Issue of Shares at Discount]	196
45.	நியாயமான வியர்வைப் பங்குகள் [Sweat equity shares]	199
46.	பங்குகளை ஒதுக்கல் [Allotment of Shares]	201

47.	குறைந்த அளவு பங்குத் தொகை [Minimum Subscription]	201
48.	முறைகேடான ஒதுக்கீடு [Irregular Allotment]	201
49.	பங்குச் சான்றிதழ் [Share Certificate]	209
50.	பங்காணை (பங்குச் சீட்டு) [Share Warrant]	211
51.	பங்குகளும் பங்குத் தொகுப்புகளும் [Shares and Stock]	212
52.	பங்குத் தொகை அழைப்புகள் [Calls on Shares]	213
53.	பங்குகளை பறிமுதல் செய்தல் [Forfeiture of Shares]	216
54.	பங்குகளை சரண் செய்தல் [Surrender of Shares]	220
55.	பங்குகள் மாற்றம் [Transfer of Shares]	222
56.	வெற்று மாற்றம் [Blank Transfer]	226
57.	மாற்றம் சான்றிடல் [Certification of Transfer]	227
58.	போலிக் கையொப்பமிட்ட மாற்றம் [Forged Transfer]	228
59.	வாரிசுவழி பங்குரிமை மாற்றம் [Transmission of Shares]	229
60.	பங்குகளுக்கு பெயர் நியமனம் செய்தல் [Nomination of Shares]	232
61.	பங்குகள் மாற்றம் மற்றும் வாரிசுவழியில் பங்கு மாறுதல் [Transfer of Shares and Transmission of Shares]	234
62.	பங்காதாயம் [Dividend]	244
63.	இடைக்கால பங்காதாயம் [Interim Dividend]	244
64.	இருப்பு மூலதனம் [Reserve Capital]	248
65.	மூலதனத்தின் வகைகள் [Kinds of Capital]	248
66.	பங்கு மூலதனக் குறைப்பு [Reduction of Share Capital]	251
67.	நிறுவனம் அதனுடைய பங்குகளை திரும்பவும் வாங்குதல் [Company buy-back of its shares]	262
68.	பங்குகளை திரும்ப வாங்குதல் [Buy-back share]	262
69.	கடன் கொள்ளும் அதிகாரம் [Borrowing Powers]	263
70.	கடனீட்டுப் பத்திரங்கள் [Debentures]	269
71.	படரும் பற்றுப் பொறுப்பு [Floating charges]	280
72.	இழையுறு பற்றுப் பொறுப்பு [Floating charges]	281
73.	இயக்குனர்களின் அதிகாரங்கள் [Powers of Directors]	294
74.	இயக்குனர் அடையாள எண் [Director Identification Number (DIN)]	297
75.	இயக்குனர்களின் தகுதியின்மைகள் [Disqualifications of Directors]	297
76.	மேலாண்மை இயக்குனர் [Managing Director]	311
77.	மேலாளர் [Manager]	314
78.	தகுதியான கூட்டத்திற்கு தேவையானவைகள் [Requirements for a valid meeting]	317
79.	கூட்டங்களின் வகைகள் [Kinds of Meeting]	317
80.	வருடாந்திர பொதுக் கூட்டம் [Annual General Meeting]	317
81.	சிறப்புப் பொதுக் கூட்டம் [Extraordinary General Meeting]	317
82.	கூட்டத் தலைவர் [Chairman of the Meeting]	323

83.	குறைவெண் [Quorum]	324
84.	வாக்கெடுப்பு [Poll]	325
85.	மாற்றாள் [Proxy]	325
86.	தீர்மானங்களின் வகைகள் [Types of Resolutions]	327
87.	சிறப்புத் தீர்மானம் [Special Resolution]	327
88.	தணிக்கையாளர் [Auditor]	332
89.	தணிக்கையாளரின் ஆற்றல்கள் [Powers of Auditor]	338
90.	தணிக்கையாளரின் உரிமைகள் மற்றும் கடமைகள் [Rights and Duties of an Auditor]	338
91.	இருப்பு நிலைக் குறிப்பேடு [Balance Sheet]	342
92.	நிதிநிலை அறிக்கைகள் [Financial Statement]	342
93.	தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பு [National Financial Reporting Authority]	344
94.	புலன் விசாரணை [Investigation]	350
95.	ஆய்வாளர்கள் [Inspectors]	350
96.	ஃபோஸ் எதிர் ஹர்பாட்டில் வழக்கு விதி [Rule in Foss Vs. Harbottle]	363
97.	ஒடுக்கப்படுதல் [Oppression]	371
98.	சமரசங்கள் மற்றும் ஏற்பாடுகள் [Compromises and Arrangments]	378
99.	மறுநிருமாணமும் ஒருங்கிணைப்பும் [Reconstruction and Amalgamation]	388
100.	நிறுவனங்கள் இணைதல் மற்றும் ஒருங்கிணைதல் [Merger and Amalgamation]	389
101.	நிறுவனங்கள் இணைதல் [Merger of Comapanies]	389
102.	நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நிறுவனங்களின் பெயர்களை நீக்குதல் [Removal of names of Companies from the Register of Companies]	397
103.	செயலற்ற நிறுவனம் [Defunct Company]	398
104.	நிறுவனம் கலைந்து போவது [Dissolve of Company]	398
105.	நலிவுற்ற நிறுவனங்களின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வு [Revival and Rehibilitation of Sick Companies]	403
106.	நலிவுற்ற நிறுவனங்கள் [Sick Companies]	403
107.	பங்குக் கடப்பாட்டாளர்கள் [Contributories]	410
108.	ஆலோசனைக் குழு [Advisory Committee]	410
109.	தன்விருப்பத்தினால் கலைத்தல் [Voluntary winding up]	410
110.	கலைப்பு அதிகாரிகள் [Official Liquidators]	441
111.	தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் [National Company Law Tribunal]	450
112.	நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் [Company Law Appellate Tribunal]	450
113.	சிறப்பு நீதிமன்றங்கள் [Special Courts]	460
114.	நிறுவனங்கள் சட்டம், 2013–ன் கீழ் சிறப்பு நீதிமன்றங்கள் [Special Courts under the Companies Act, 2013]	460

115. செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம் [Dormant Company] 464
116. 2013 சட்டத்தின் கீழ் சிறு நிறுவனம் [Small Company under 2013 Act 466
117. தனியார் நிறுவனம் மற்றும் சிறு நிறுவனம்
[Private Company and Small Company] 467
118. இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம்
[Securities Exchange Board of India] 468
119. செபி [SEBI] 468
120. செபி சட்டத்தின் கீழ் சூழ்ச்சி மற்றும் வஞ்சக திட்டங்களுக்கு தடை
[Prohibition of Manipulative and Deceptive Devices under SEBI Act] 474
121. உள்ளிருப்போர் வணிகம் [Insider Trading] 474
122. செபி சட்டத்தின் கீழ் தண்டங்களும் தீர்மானிப்பும்
[Penalties and Adjudication under the SEBI Act] 479
123. பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் [Securities Appellate Tribunal] 483

வேறுபாடுகள்
[Distinctions]

1. தனியார் நிறுவனம் மற்றும் பொது நிறுவனம்
[Private Company and Public Company] 50
2. ஒரு நபர் நிறுவனம் மற்றும் உரிமையாளர் வணிகம்
[One Person Company and Sole Proprietorship] 73
3. நிறுவனம் மற்றும் கூட்டாண்மை நிறுமம்
[Company and Partership Firm] 74
4. நிறுவனம் மற்றும் சட்ட முரணான சேர்க்கை
[Company and Illegal Association] 76
5. நிறுவனம் மற்றும் இந்து கூட்டுக் குடும்ப நிறுமம்
[Company and Hindu Joint Family Firm] 77
6. அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகள்
[Memorandum of Association and Articles of Association] 150
7. பங்குச் சான்றிதழ் மற்றும் பங்குப் பணப்பற்றாணை
[Share Certificate and Share Warrant] 211
8. பங்கு மற்றும் பங்குத் தொகுப்பு
[Share and Stock] 213
9. பங்குகள் பறிமுதல் மற்றும் பங்குகளை சரண் செய்தல்
[Forfeiture of Shares and Surrender of Shares] 221
10. பங்குகள் மாற்றம் மற்றும் வாரிசுவழியில் பங்கு மாறுதல்
[Transfer of Shares and Transmission of Shares] 234
11. கடனீட்டுப் பத்திரம் மற்றும் பங்கு
[Debenture and Share] 278
12. நிலையான பொறுப்பு மற்றும் படரும் பொறுப்பு
[Fixed Charge and Floating Charge] 282

சுட்டிக்காட்டப்பட்ட வழக்குகள்

[Case Laws Cited]

'A'

A.Lakshmanaswami Mudaliar v. Life Insurance Corporation of India 126, 523
Ajit Jayantilal Seth v. Shriram Transport Finance Co. Ltd., 210
Alexandar v. Automotive Telephone Co. 215
Anand Bihari Lal v. Dinshaw & Co. 157
Andrews v. Gas Meter Co. Ltd. 148
Andrews v. Mockford 501
Asea Brown Boveri Ltd. v. Boving Fouress Ltd., 413
Ashbury Railway Carriage and Iron Co. Ltd., v. Riche 124
Attorney-General v. The Great Eastern Railway Co. 125
Aviling Barford Ltd. v. Perion Ltd. 495

'B'

Banaras Bank v. Bank of Bihar 285
Bank of Baroda v. H.B. Shivdasani 284
Bank of India v. Depro Foods Ltd. 285
Barron v. Potter 511
Bharat Insurance Co. Ltd. v. Kanhaiya Lal 366
BIn Re W & M Roith Ltd. 524
Bishop v. Balkis Consolidated Co. 509
Bloomenthal v. Ford 507
Borland's Trustee v. Steel Brothers & Co. Ltd. 141
Bradford Banking Co. v. Briggs Son & Co., 141
British Murac Syndicate Ltd. v. Alperton Rubber Co. 149
Brown v. British Abrasive Wheel Co. 522
Browne v. La Trinidad 145

'C'

Cook v. Deeks 305, 514

'D'

Daimler Co. Ltd. v. Continental Tyre & Rubber Co. 32
Dawson v. African Consolidated Land and Trading Co. 214
Dehra Dun Mussorie Electric Tramway Co. v. Jagmandardas 153
Derry v. Peek 168, 172
Dhakeswari Cotton Mills Ltd. v. Nil Kamal Chakravarty 366
Dhananjaya Pande v. Bais Surgical & Medical Institution (P) Ltd., 204
Duraiswami v. U.I.L. Assurance Co. 145

'E'

E and W Insurance Co. Ltd. v. Mrs. Kamala Mehta 214
Eastern Counties Rly. Co. v. Hawkes 126
Edgington v. Fitzmaurice 168, 173
Elder v. Elder & Watson Ltd. 371
Eley v. Positive Government Security Life Ass. Co. 144

Erlanger v. New Sombrero Phosphate Co. 85
Evans v. Brunner, Mond & Co. Ltd., 126

'F'

Fazulbhoy Jaffar v. Credit Bank of India Ltd. 505
Ferguson v. Wilson 290
Forest v. Manchester etc., Rly. Co. 125
Foss v. Harbottle 364, 519, 521

'G'

Galloway v. Halls Concerts Society 215
Gilford Motor Co. v. Horne 31
Glass v. Atkin 520
Government Stock and other Securities Investment Co. Ltd. v. Manila Railway Co. Ltd. 283
Greenberg v. Cooperstein 65, 66

'H'

Heald v. O'Connor 257
Hedley Byrne & Co. Heller & Partners 501
Household Fire and Carriage Accident Insurance Co. v. Grant 202, 528
Howard v. Patent Ivory Manufacturing Co. 156
Hutton v. Scarborough Cliff Hotel Co. 147

'I'

In Re Asiatic Insurance Co. Ltd. 122
In Re Beauforte (Jon) (London) Ltd. 130
In Re Bhuoria Bros. 122
In Re Canning and Land Investment Co. 130
In Re City Equitable Fire Insurance Company 305
In Re Colonial Produce Co. Ltd. 90
In Re Cyclists Touring Club 121, 493
In Re English & Colonial Produce Co. 502
In Re F.G. (Films) Ltd. 32
In Re German Date Coffee Co. 416, 525
In Re Hindustan Co-operative Insurance Society Ltd. 372
In Re Indian Mechanical Gold Extracting Co. 121
In Re Indus Films Corporation Ltd. 284
In Re Mahanmandai Shastra Prakashik Samiti Ltd. 416
In Re National Motor Mail Coach Co. Ltd. 87
In Re New British Iron Co. 145
In Re North Eastern Insurance Co. Ltd. 517
In Re Patent Tyre Co. 121
In Re Rajendra Industries (P) Ltd., 122
In Re Scientific Poultry Breeder's Association 121
In Re Sir Dinshaw Maneckjee Petit 30
In Re Yenidje Tobacco Co. Ltd. 415
Indian States Bank Ltd., v. Kunwar Sardar Singh 204
Industrial Development Consultants Ltd. v. Cooley 513

Issacs' Case 146

'J'

Jehangir R.Modi v. Shamji Ladha 129, 494
Johnson v. Lyttle's Iron Agency 218
Jones v. Lipman 31
Juggilal Kamlapat Jute Mills v. Registrar of Companies 122

'K'

K.P.Chackocham v. Federal Bank 527
Kanika Mukherji v. Rameshwar Dayal Dubey 368
Kelner v. Baxter 90
Kraus v. Lloyd Property Ltd 368
Kreditbank Cassel v. Schenkers 158
Krishnamsetty Basav Rao v. Kubashi Machine Tools (P) Ltd., 413

'L'

Laroeque v. Beauchemin 215
Lee v. Lee's Air Farming Ltd. 492
Lennard's Carrying Co. v. Asiatic Petroleum Co. 293
Loch v. John Blackwood Ltd. 417
London County Council v. Attorney General 126

'M'

Murlidhar v. Bengal Steamship Co. 283
Macaura v. Northern Assurance Co. Ltd. 25, 493
Madhwa Ram Chandra Kamath v. Canara Banking Corporation 218
Madras Bar Association v. Union of India and Another 452
Malhado v. Porto Alegre Railway Co. 87
Mangal Sain v. Indian Merchants Bank, Amritsar 511
Menier v. Hopper's Telegraph Works 367, 521
Mewa Ram v. Ram Gopal 65
Mohan Lal Chandumall v. Punjab Co. Ltd. 372
Mohari Bibi v. Dharmadas Ghose 242
Moosa Goolam Ariff v. Ebrahim Goolam Ariff 101, 529
MRS.Rathna velusami v. MRS Manicka velu Chettiar 518

'N'

Nagaisuree Tea Co. v. Ram Chand Karnani 122
Nagappa Chettiar v. Madras Race Club 368
Narain Chettiar v. Kaleeswar Mills 527
New Brunswick and Canada Rly. and Land Co. v. Muggeridge 164

'O'

Official Liquidator v. Suleman Bhai 238

'P'

Palaniappan v. Official Liquidator 506
Peek v. Gurney 173, 500
Peels Case (or) Peell's Case 100
Pranlal Jayanand Thakar v. V.R.Shelat 227
Prayam Prasad v. Gaya Bank and Trades Association Ltd. 218

Probodh Chandra v. Road Oils (India) Ltd. 153
Public Passenger Service Ltd. v. Khadar 218
Pulbrook v. Richmond Consolidated Mining Co. 144

'R'

R. v. Sinclair, Queens-wood, E.W.Smithson 129, 495
Ram Parshotam Mittal & Another v. M/s. Hillcrest Realty Sdn. Bhd. & other etc. 58
Rama Corporation v. Proved Tin and General Investment Co. 158
Ramlal Gupta v. MER Malak 204
Re Exchange Banking Corpn. 257
Re Hi Fi Equipments (Cabinets) Ltd., 284
Rolled Steel Products (Holdwings) Ltd., v. British Steel Corporation 130
Royal British Bank v. Turquand 155, 498
Ruben v. Great Fingall Consolidated Ltd. 157

'S'

Saloman v. Saloman & Co. Ltd. 22, 50, 492
Scottish Co-operative Wholesale Society v. Meyar 372
Sharp v. Dawas 516
Shyam Nandan Prasad v. State of Bihar 41
Sidebottom v. Kershaw Lease and Co. 523
Smallwood v. Black 503
Smith Stone & Knight Ltd. v. Birmingham Corporation 33
Smith v. Chadwick 170
Sothern Foundries Ltd. v. Shirlaw 149
State of U.P. v. Renusagar Power Company 33
Sunil Kumar v. M. & A. Machinary Corporation Ltd. 49

'T'

T.V.Krishna v. Andhra Prabha (Pvt.) Ltd. 57
The Rex (King) v. Kylsand (Lord) 117, 312
Trevor v. Whitworth 182
T.V.Krishna v. Andhra Prabha (Pvt.) Ltd. 100
The Rex (King) v. Kylsand (Lord) 169, 500
Trevor v. Whitworth 256, 494

'U'

Underwood Ltd. v. Bank of Liverpool 158, 513
Union of India vs. R. Gandhi, President, Madras Bar Association 453
Universal Mutual Aid and Poor Houses Association v. A.D.Thippa Naidu 417

'V'

V.Ramaswami Iyer v. Madras Times Printing and Publishing Co. 517
Vijay Kumar Gupta v. Eagle Paint & Pigment Industries Ltd., 185

'W'

Welton v. Saffery 143
Wood v. Odessa Waterworks Co. 142

-o0o-

நிறுவனங்கள் சட்டம், 2013-இல் கொண்டு வரப்பட்ட திருத்தச்சட்டங்கள் - ஒரு பார்வை

ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுபட்டு நமது நாடு சுதந்திரம் அடைந்து குடியரசான பிறகு, நமது நாட்டில் நிறுவனங்களைத் தோற்றுவிப்பது, நடத்துவது தொடர்பாக 1956–ஆம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அது **"நிறுவனங்கள் சட்டம், 1956"** எனப்பட்டது.

இச்சட்டம் பின்னிட்டு வந்த காலகட்டங்களில், நாட்டின் பொருளாதார நிலை மாற்றம், முன்னேற்றம் காரணமாக பல முறை திருத்தப்பட்டது. நமது அரசியலமைப்பு சட்டத்திற்குப் பிறகு பல முறை திருத்தச்சட்டங்களால் திருத்தப்பட்ட சட்டம் எது என்று கேட்டால், அதற்கு இந்த 1956–ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

இந்நிலையில் இதற்கும் மேலும் இச்சட்டத்தை திருத்துவதை விட்டுவிட்டு நிறுவனங்கள் தொடர்பாக புதிதாக ஒரு சட்டத்தை இயற்றுவதே முறையாக இருக்கும் என்று நமது மைய அரசு கருதியதன் விளைவாக 2013–ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தை நமது இந்திய நாடாளுமன்றம் புதிதாக இயற்றியது. இப்புதிய சட்டம், ஏற்கனவே இயற்றப்பட்டு செயல்விளைவில் இருந்து வந்த 'நிறுவனங்கள் சட்டம், 1956'–ஐ நீக்கறவு செய்துவிட்டது. எனவே நமது நாட்டின் நிறுவனங்களை 30–08–2013–ஆம் தேதியிலிருந்து 'நிறுவனங்கள் சட்டம், 2013' வழி நடத்துகிறது. இவற்றை எல்லாம் நாம் அறிவோம்.

அதே நேரத்தில் 2013–ஆம் ஆண்டின் இப்புதிய நிறுவனங்கள் சட்டத்தை மேலும் செம்மைப்படுத்தும் முகமாக, தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இதில் திருத்தங்கள் செய்யப்பட்டன. இதன் பொருட்டு பின்வரும் திருத்தச்சட்டங்கள் இயற்றப் பட்டன. அவை,–

1. நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015 (சட்டம் எண். 21/2015) [The Companies (Amendment) Act, 2015]
2. நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2017 (சட்டம் எண். 1/2018) [The Companies (Amendment) Act, 2017]
3. நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2019 (சட்டம் எண். 22/2019) [The Companies (Amendment) Act, 2019]
4. நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2020 (சட்டம் எண். 29/2020) [The Companies (Amendment) Act, 2020]

இந்த நான்கு திருத்தச்சட்டங்களும் 2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தை திருத்துவதற்கென்ற நேரடி நோக்கத்துடன் இயற்றப்பட்டவை ஆகும். இந்ததிருத்தச்சட்டங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இயற்றப்பட்ட சில சட்டங்கள் நிறுவனங்கள் சட்டம், 2013–ஐ மேலும் திருத்தின. அவை வருமாறு :–

1. வக்கற்றநிலை மற்றும் நொடிப்புநிலை சட்டத்தொகுப்பு, 2016 (சட்டம் எண். 31/2016) (15–11–2016 முதல் செயல்விளைவுக்கு வந்தது)
   [The Insolvency and Bankruptcy Code, 2016] (31 of 2016) (w.e.f. 15-11-2016)

2. நிதிச்சட்டம், 2017 (சட்டம் எண். 7/2017)
   [The Finance Act, 2017] (7 of 2017) (w.e.f. 31-3-2017 for section 154, w.e.f. 26-5-2017 for section 172)

3. வக்கற்றநிலை மற்றும் நொடிப்புநிலை சட்டத்தொகுப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம், 2018 (சட்டம் எண். 26/2018)
   [The Insolvency and Bankruptcy Code (Second Amendment) Act, 2018] (26 of 2018) (w.r.e.f. 6-6-2018)

இப்புதிய நிறுவனச்சட்டம் இயற்றப்பட்ட பிறகு இதன் கீழ் இதுகாறும் 50–க்கும் அதிகமான விதிகள் இயற்றப்பட்டுள்ளன. அதுபோல் அவ்விதிகளைத்திருத்தும் முகமாக பலப்பல அறிவிக்கைகளை **நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (Ministry of Corporate Affairs - MCA)** வெளியிட்டு உள்ளது; தொடர்ந்து வெளியிட்டும் வருகிறது.

எனவே 2013–ஆம் ஆண்டின் இப்புதிய நிறுவனச் சட்டமும், நீக்கறவு செய்யப்பட்ட 1956–ஆம் ஆண்டின் பழைய நிறுவனச்சட்டத்தைப்போலவே பல்வேறு திருத்தங்களுக்கு உள்ளாகி வருகிறது என்று சொன்னால் அது மிகையன்று.

நாம் தற்போது நிறுவனச்சட்டம் எனும் இந்நூலின் 9–ஆம் பதிப்பில் உள்ளோம். இந்நூலின் 8–ஆம் பதிப்பு அச்சாகி வெளிவந்த 2016–ஆம் ஆண்டில் 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனங்கள் சட்டம் மற்றும் 2015–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் திருத்தச்சட்டமும் மட்டுமே செயல்திறத்தில் இருந்தன. எனவே அவற்றை மட்டுமே நாம் கடந்த 8–ஆம் பதிப்பில் கண்டோம்.

தற்போது நிறுவனச் சட்டத்தில் 2017, 2019 மற்றும் 2020–ஆம் ஆண்டுகளில் திருத்தச்சட்டங்களின் வாயிலாக திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே அவற்றின் முக்கிய அம்சங்களை நாம் ஓர் விரைவுப்பார்வையாக இந்த 9–ஆம் பதிப்பில் தொடர்ந்து வரும் பக்கங்களில் காண உள்ளோம்.

மேலே தொடர்வோமா?

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2017 – முக்கிய அம்சங்கள்

[The Companies (Amendment) Act, 2017 - Key Points]

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2017 - பின்னணி :

இத்திருத்தச்சட்டத்திற்கு அடிப்படையான நிறுவனங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2017–ஆனது [Companies (Amendment) Bill, 2017] 16–03–2016–ஆம் தேதியில் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, தொடர்ந்து 12–04–2016–ஆம் தேதியில் நிதி மீதான நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிசீலனைக்காக சுட்டியனுப் பட்டது. இதன் பேரில் அக்குழு மேற்சொன்ன சட்டமுன்வடிவு தொடர்பாக பல்வேறு தரப்பிலிருந்தும் கருத்துக்களை கேட்டறிந்தது. குறிப்பாக நிறுவனங்களுடன் தொடர்புடைய தொழிலாற்றுநர்கள், நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக் களை உள்வாங்கி, தனது அறிக்கையைத் தயாரித்து, அதனை நாடாளுமன்றத்திடம் 07–12–2016–ஆம் தேதியன்று சமர்ப்பித்தது.

இதன் அடிப்படையில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மேற் சொன்ன சட்டமுன்வடிவு விவாதிக்கப்பட்டு, மக்களவையில் (லோக்சபா) 27–07–2017–ஆம் தேதியிலும், மாநிலங்களவையில் (இராஜ்யசபா) 19–12–2017–ஆம் தேதி யிலும் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து இச்சட்டமுன்வடிவு இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவை 03–01–2018–ஆம் தேதியில் பெற்று, அதே தேதியில் இந்திய அரசிதழில் வெளியிடப்பட்டு சட்டமாக ஆனது.

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2017 என வழங்கப்பெறும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அனைத்தும் ஒரே நாளில் செயல்விளைவுக்கு வந்துவிட வில்லை. மைய அரசாங்கம், அறிவிக்கை வாயிலாக, அரசிதழில், நிர்ணயித்த பல்வேறு தேதிகளில் செயல்விளைவுக்கு வந்தன. எடுத்துக்காட்டாக இத்திருத்தச்சட்டத்தின் 1 மற்றும் 4–ஆம் பிரிவுகள் 26–01–1018–ஆம் தேதியன்று செயல்விளைவுக்கு வந்தன. இவ்வாறு பல்வேறு பிரிவுகளும் பல்வேறு தேதிகளில் செயல்விளைவுக்கு வந்தன.

2017–ஆம் ஆண்டின் இத்திருத்தச்சட்டம் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் மொத்தம் 93 திருத்தங்களைச் செய்துள்ளன. இவை முக்கியமாக நிறுவனங்கள் சட்டத்தில் இடம் பெறும் பல்வேறு பதங்களின் சட்ட வரையறைகள் (Definition Clause), நிறுவன செயலாட்சி (Corporate governance) மற்றும் நிறுவன மேலாண்மை கடைப்பிடிக்க வேண்டிய சட்ட திட்டங்களில் (Management compliance) திருத்தங்களைச் செய்கின்றன.

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2017 - நோக்கங்கள்:

இத்திருத்தச் சட்டம் கொண்டு வந்துள்ள திருத்தங்கள் பின்வரும் பரந்த நோக்கங்களை நிறைவேற்றும் முகமாக அமைந்துள்ளன. அவை,

(1) 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் இருக்கும் பல கெடுபிடி யான வகைமுறைகள் காரணமாக அவற்றைச் செயலாக்குவதில் ஏற்பட்டுள்ள இடர் பாடுகளை களைதல் (To address the difficulties in implementation owing to stringent compliance requirements);

(2) வேலை வாய்ப்புடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு நிறுவனங்கள் இலகுவாக வணிகம் செய்வதற்கு எளிதாக்கல் (To facilitate ease of doing business in order to promote growth with employment);

(3) இந்தியப் பொருளாதாரம் மற்றும் சட்டச்சூழலைக் கருத்தில் கொண்டு வகுக்கப்படும் நிறுவனக்கணக்களிக்கும் முறையின் தரநிலைகள், இந்திய பங்குப் பரிவர்த்தனை வாரியச்சட்டம் 1992, இந்திய சேம வங்கிச்சட்டம், 1934 மற்றும் இவற் றின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதிகள் ஆகியன ஒன்றுடன் ஒன்று முரண்படாத வாறு இணக்கமாக்கல் (To harmonise with the Accounting Standards formulated keeping the Indian economic and legal environment in view, the Securities and Exchange Board of India Act, 1992 and the regulations made thereunder, and the Reserve Bank of India Act, 1934 and the regulations made thereunder);

(4) இந்தியப்பங்கு பரிவர்த்தனை வாரியம், இந்திய சேம வங்கி போன்ற நிதி சார் ஒழுங்குமுறை அமைப்புகளுக்கிடையில் இருக்கும் கொள்கை முரண்பாடுகளை நீக்குதல்;

(5) 2013–ஆம் ஆண்டு சட்டத்தில் இருக்கும் விடுபாடுகள் மற்றும் முரண் பாடுகளை சரிசெய்தல் (To rectify omission and inconsistency in the Act).

திருத்தச்சட்டம், 2017 - முக்கிய அம்சங்கள்:

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2017–ஆனது 2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தில் 93 திருத்தங்களைச் செய்துள்ளது. அவற்றில் முக்கியமான சிலவற்றை பின்வருமாறு காண்போம்.

(1) ஒரு இயக்குனர் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் அவரை நிறுவனங்கள் சட்டம், 2013–இன் பிரிவு 164(2)–இன் கீழ் தகுதியிழப்பிற்கு ஆளாக்க முடியாது.

(2) நிறுவனமொன்றின் இயக்குனராக ஒரு நபர் நியமனம் செய்யப்பட வேண்டுமெனில் அவர் (DIN - Director Identification Number) பெற வேண்டும். இந்த எண்ணை தனக்கு ஒதுக்கும்படி அந்நபர் மைய அரசிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்று பிரிவு 153 கூறுகிறது. தற்போது இதில் ஒரு திருத்தத்தை 2017–ஆம் ஆண்டு திருத்தச்சட்டம் கொண்டு வந்துள்ளது. அதன்படி ஒருவருக்கு மைய அரசு வழங்கியிருக்கும் அடையாள எண் எதையும் இயக்குனர் அடையாள எண்ணாக பாவிக்கலாம். எடுத்துக்காட்டாக, நிரந்தர கணக்கு எண் (பான்) அல்லது ஆதார் எண்.

(3) ஒரு நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கு "ஆணையுறுதியாவணங்கள்" (Affidavits) தாக்கல் செய்யப்பட வேண்டும். தற்போது இது "விளம்புகைகளின்" (Declarations) வடிவில் இருக்க வேண்டும் என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(4) தற்போது நிறுவனத்தின் இயக்குனர்கள் மற்றும் முக்கிய மேலாண்மை அலுவலர்களுடன், நிறுவனத்தின் அலுவலர் எவரும் ஆவணங்களின் உண்மைத் தன்மை குறித்து சான்றொப்பம் செய்து அதிகாரபூர்வமாக்கலாம். [Along with Directors and KMP (Key Managerial Personnel), any employee of the Company can authenticate the Documents].

(5) நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட வேண்டிய பல்வேறு படிவங்களைப் பொறுத்து 2017–இன் திருத்தச்சட்டம் நிறைய திருத்தங்களைச் செய்துள்ளது. சில தாக்கலை தவிர்த்துள்ளது.

(6) நிறுவனத்தின் நிகர இலாபத்திலிருந்து 11 விழுக்காட்டிற்கு மேலாக ஊதியம் வழங்க முன்பு மைய அரசின் ஒப்புதல் பெற வேண்டியது கட்டாயமாகும். தற்போது இந்தக்கட்டாயத்தை திருத்தச்சட்டம் நீக்கியுள்ளது. அதாவது சம்பந்தப்பட்ட நிறுவனம் ஒரு சாதாரண தீர்மானத்தை கொண்டு வருவதன் வாயிலாக 11 விழுக் காட்டிற்கு மேலாக ஊதியம் வழங்குவதை அனுமதிக்கலாம்.

(7) அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகத்தின் (recognised stock exchange) பட்டியலில் சேர்க்கப்படாத நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவரின் சம்மதமும் முன்கூட்டியே பெறப்பட்டால், அது தனது ஆண்டு பொதுக்கூட்டத்தை இந்தியாவில் எந்த இடத்தில் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். (Annual General Meeting of Unlisted Company may be held at any place in India if the consent is received in advance from all the members).

(8) அயல்நாட்டு நிறுவனத்தால் இந்தியாவில் முழுமையாக சொந்தமாக்கிக் கொள்ளப்பட்ட துணை நிறுவனத்தின் அசாதாரண பொதுக்கூட்டத்தை இந்தியா விற்கு வெளியிலும் வைத்துக்கொள்ளலாம். [Wholly owned subsidiary of foreign Company can hold extraordinary general meeting (EGM) outside India also].

(9) நிதி அறிக்கைகளில் ஏற்கனவே அடங்கிய தகவல் வெளிப்பாடுகளை, இயக்குனர் வாரிய அறிக்கையில் திரும்பவும் குறிப்பிட வேண்டியதில்லை. (Disclosures included in Financial Statements already, need not to be repeated in Board Report).

(10) பங்கு ஒதுக்கீட்டு விவரங்களை 15 நாட்களுக்கும் மேலாக ஒரு நிறுவனம் தாக்கல் செய்யத்தவறினால், அந்நிறுவனம், அதன் தோற்றுவிப்பாளர்கள், மற்றும் அதன் இயக்குனர்கள் அனைவரும் நாளொன்றுக்கு தண்டத்தொகையாக ரூ.1000/– செலுத்த வேண்டும். இது அதன் அதிகபட்ச அளவான ரூ.25 இலட்சத்திற்கு உட்பட்ட தாகும்.

(11) நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை வேறிடத்திற்கு மாற்றுவற்கான அறிவிப்பை முன்பு 15 நாட்களுக்குள் நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். தற்போது இது 30 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

(12) ஒரு நபர் நிறுவனம் மற்றும் சிறு நிறுவனங்களுக்கான ஆண்டறிக்கை யின் சுருக்க வடிவமானது வகுத்துரைக்கப்பட வேண்டும் [Abridged version of Annual Return for one person company (OPC) and Small companies shall be prescribed].

(13) நிறுவனங்கள் சட்டம், 2013–இன் அத்தியாயம் 26 "நிதிகள்" (Nidhis) பற்றி குறிப்பிடுகிறது. "நிதி" என்பதை நிதி நிறுவனம் எனலாம். கிட்டத்தட்ட வங்கிகள் செய்யும் பணியை இது செய்யும். 2017–ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்திற்குப் பிறகு இதில் "பரஸ்பர சகாய சங்கமும்" (Mutual Benefit Society) சேரும் என்று பிரிவு 406–இல் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே ஒரு பரஸ்பர சகாய சங்கத்தையும் நிறுவனங்கள் சட்டத்தின் அத்தியாயம் 26–இன் கீழ் பதிவு செய்யலாம்.

(14) கூட்டுத்தொழில் முனைவுகளின் நிதிநிலை அறிக்கைகளை நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளுடன் இனி தொகுக்க முடியாது.

(15) இனி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் (Chief Executive Officer) நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் கையொப்பமிட வேண்டும்.

(16) கூட்டாண்மை நிறுமம் (Partnership Firm), வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கூட்டாண்மை நிறுமம் (Limited Liability Partnership), சங்கங்கள் (Societies) ஆகியன குறைந்தபட்சமாக 2 அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர் களை கொண்டு தங்களை தனியார் நிறுவனங்களாக தற்போது மாற்றிக் கொள்ள முடியும். (முன்பு இதற்கு குறைந்தபட்சம் 7 உறுப்பினர்கள் தேவைப்பட்டனர்.)

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2019 – சிறப்பம்சங்கள்

[The Companies (Amendment) Act, 2019 - Key Points]

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2019 - பின்னணி :

2017–ஆம் ஆண்டின் திருத்தச்சட்டம் கொண்டு வந்த திருத்தங்களுக்குப் பிறகு, நிறுவனச்சட்டம், 2013–இல் மேலும் பல திருத்தங்களைச் செய்ய வேண்டிய அவசியம் எழுந்தது. எனவே இதற்காக மைய அரசு குழு ஒன்றை 2018, ஜூலை மாதத் தில் கட்டமைத்தது. இக்குழுவிடம் இரண்டு பணிகளை மைய அரசு ஒப்படைத்தது. (1) நிறுவனக் குற்றங்கள் தொடர்பாக நிறுவனச் சட்டம், 2013–இல் இருக்கும் சட்ட வகைமுறைகளை மறுஆய்வு செய்தல், (2) நிறுவனச் சட்டதிட்டங்களை நிறுவனங்கள் சரிவர பின்பற்றுவதை எவ்வாறு மேம்படுத்துவது என்பதற்கான பரிந்துரைகள்.

இதன் பொருட்டு மேற்சொன்ன ஆய்வுக்குழுவானது முதலீட்டாளர்கள், பங்குதாரர்கள், நிறுவன மேலாண்மையினர் என நிறுவனத்துடன் தொடர்புடைய பல்வேறு தரப்பிலிருந்தும் கருத்துகளை கேட்டறிந்து, தனது பரிந்துரைகளை மைய அரசிடம் சமர்ப்பித்தது. அதன் அடிப்படையில் 2013–ஆம் ஆண்டு நிறுவனச்சட்டத்தில் பல்வேறு திருத்தங்களை செய்ய மைய அரசு உத்தேசித்தது. எனினும் அப்போது நிலவிய அவசர நிலை காரணமாக திருத்தச்சட்டம் (Amendment Act) ஒன்றை முறைப்படி இயற்றுவற்குப் பதிலாக நிறுவனங்கள் (திருத்த) அவசரசட்டம், 2018 [The Companies (Amendment) Ordinance, 2018] என்ற தலைப்பில் அவசர சட்டம்

ஒன்றை 02–11–2018–ஆம் தேதியில் மைய அரசு பிரகடனப்படுத்தியது. பின்னிட்டு இந்த அவசரச்சட்டத்தை மாற்றி சட்டமுன்வடிவாக்க நிறுவனங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2018 [The Companies (Amendment) Bill, 2018] மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, 04–01–2018–ஆம் தேதியில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மாநிலங்களவையில் இந்த சட்டமுன்வடிவு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவே இல்லை.

எனவே ஏற்கனவே கொணரப்பட்ட நிறுவனங்கள் (திருத்த) அவசரச் சட்டம், 2018–க்கு தொடர் செயல்விளைவு கொடுப்பதற்காக, இந்தியக் குடியரசுத் தலைவர் (1) நிறுவனங்கள் (திருத்த) அவசரச்சட்டம், 2019 [The Companies (Amendment) Ordinance, 2019], (2) நிறுவனங்கள் (திருத்த) இரண்டாம் அவசரச்சட்டம், 2019 [The Companies (Amendment) Second Ordinance, 2019] என்ற இரண்டு அவசரச்சட்டங்களை முறையே 12–01–2019 மற்றும் 21–02–2019–ஆம் தேதிகளில் பிரகடனப்படுத்தினார்.

இந்நிலையில் மேற்படி இரண்டாம் (திருத்த) அவசரச்சட்டத்திற்கு மாற்றாக சட்டமுன்வடிவு (Bill) ஒன்றை கொண்டு வர மைய அரசு உத்தேசித்தது. இதற்காக நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019–ஐ [The Companies (Amendment) Bill, 2019] 25–07–2019–ல் மக்களவையில் அறிமுகப்படுத்தியது. இது நிறுவனங்கள் சட்டம், 2013–இல் சில கூடுதல் திருத்தங்களைச் செய்தது. அத்துடன் மேற்படி இரண்டாம் திருத்த அவசரச்சட்டத்தை மேற்சொன்னவாறு மாற்றியமைக்கவும் விழைந்தது (The Bill sought to replace the second ordinance). இச்சட்ட முன்வடிவு மக்களவையில் 27–07–2019–ஆம் தேதியிலும், மாநிலங்களவையில் 30–07–2019–ம் தேதியிலும் நிறைவேற்றப்பட்டு, 31–07–2019–ஆம் தேதியில் இந்தியக் குடியரசுத்தலைவரின் இசைவைப்பெற்று அன்றைய தினமே இந்திய அரசிதழிலும் வெளியிடப்பட்டு, **நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2019** என்ற பெயரில் செயல் விளைவுக்கு வந்தது. இது மேற்படி நிறுவனங்கள் (திருத்த) இரண்டாம் அவசரச் சட்டம், 2019 [The Companies (Amendment) Second Ordinance, 2019]–ஐ நீக்கறவு செய்துவிட்டது.

2019–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தின் சில பிரிவுகள் 02–11–2018–ஆம் தேதியிலிருந்து முன்மேவு செயல்விளைவுடனும் (With retrospective effect), சில பிரிவுகள் மைய அரசு நிர்ணயித்த தேதியான 15–08–2019–லிருந்தும் செயல்விளைவுக்கு வந்தன.

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2019 - நோக்கம்:

முன்னதாக இத்திருத்தச்சட்டத்திற்கான முன்வடிவை மக்களவையில் அறிமுகப்படுத்துகையில் நிதி மற்றும் நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் "நிறுவனங்கள் சட்டம், 2013–இல் கூறப்பட்டுள்ளவாறு நிறுவனத் துறையில் நிறுவன செயலாட்சி நெறிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களை

கடைப்பிடிக்கும் மேலாண்மையை பலப்படுத்துவதற்குரிய வலியுறுத்தலை திறம்பட செய்யவும் மற்றும் மேலதிகமான பொறுப்புடைமையை உறுதிப்படுத்தவும் இந்த சட்ட முன்வடிவு விழைகின்றது"[1] என உரை நிகழ்த்தினார்கள். இதிலிருந்து, இந்திய நிறுவனங்கள் துறையில் நிறுவனச்சட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் மற்றும் வணிக மேலாண்மையில் வெளிப்படையான நிலை மற்றும் பொறுப்புடைமையை மேலும் அதிகரிக்கவும் மற்றும் நிறுவன செயலாட்சி முறையை வலிமைப்படுத்துவதை வலியுறுத்தவும் நோக்கம் கொண்டதாக 2019 திருத்தச்சட்டம் அமைந்துள்ளதை நாம் அறியலாம்.

அந்த வகையில் 2019–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தின் முக்கிய நோக்கங்களை பின்வருமாறு பரந்த அளவில் குறிப்பிடலாம்

(1) நிறுவனக்குற்றங்கள் சிலவற்றுக்கு சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதித்து தண்டிக்கும் நிலை 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் இருந்ததைத் திருத்தி, அவற்றை உரிமையியல் தவறாக பாவித்து அவற்றுக்கு தண்டம் மட்டும் விதிக்க வகை செய்தல்

(2) 2013–ஆம் ஆண்டு சட்டத்தில் நிறுவன செயலாட்சி சார்ந்த சட்ட வகை முறைகளை சீரமைத்தல்.

(3) தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தில் தேங்கியிருக்கும் வழக்குகளை குறைக்க வழிவகை செய்தல்.

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2019 - சிறப்பம்சங்கள்:

(1) நிறுவனக் குற்றங்கள் சிலவற்றை மறுவகைப்பாடு செய்தலும் குற்றத்தன்மை நீக்கலும் (Re-categorisation and De-criminalization of certain offences): 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் 81 வகையான குற்றங்கள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றுக்கு சிறைத்தண்டனை, அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். இவை நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படக்கூடியதும் சமரசம் செய்து கொள்ளப்படக்கூடியதும் ஆகும். தற்போது இந்த திருத்தச்சட்டத்தின் வாயிலாக இவற்றில் 16 வகையான குற்றங்கள் உரிமையியல் தவறுகையாக (Civil defaults) மறு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவை மைய அரசாங்கத்தால் நியமிக்கப்படும் தீர்வு அதிகாரிகளால் (Adjudicating Officers) விசாரிக்கப்படும். இதற்கு, முன்பு போல் சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப்படாது. மாறாக தண்டத்தொகை (Penalty) விதிக்கப்படும்.

1. "The Companies (Amendment) Bill, 2019 seeks to ensure more accountability and better enforcement to strengthen the corporate governance norms and compliance management in corporate sector as enshrined in the Companies Act, 2013" -**Mrs. Nirmala Sitharaman, Hon'ble Finance and Corporate Affairs Minister** (Speech while introducing the bill in Lok Sabha.)

அதாவது இந்த 16 வகையான குற்றங்களும் குற்றத்தன்மையற்றதாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக (1) பங்குகளை தள்ளுபடியில் வெளியிடுதல், (2) ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கத்தவறுதல். மேலும் சில வகை குற்றங்களுக்கான தண்டத்தொகைகளும் இந்த திருத்தச்சட்டத்தால் திருத்தப்பட்டுள்ளன.[1]

(2) நிறுவன சமூகப்பொறுப்பில் திருத்தம் (Amendment in Corporate Social Responsibility - CSR): 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்படி நிறுவனங்களுக்கு சமூகப்பொறுப்பும் உண்டு. அதற்காக நிதி ஒதுக்கி, அதை ஆண்டுதோறும் நிறுவனங்கள் அப்போது நிலவும் சமூகப்பிரச்சனைகளுக்கு செலவு செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக அண்மையில் கொரோனா தொற்று நோயிலிருந்து சமுதாயத்தை காக்க நிறுவனங்கள் நிதி அளித்ததையும், அளித்து வருவதையும் குறிப்பிடலாம். இவ்வாறு செலவளிக்க வேண்டிய நிலையில் இருக்கும் நிறுவனங்கள், அதற்கான நிதியை முழுதளவில் செலவளிக்கவில்லையெனில். அதற்குரிய காரணங்களை தங்கள் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும். ஆனால் தற்போது இந்த 2019–ஆம் ஆண்டு திருத்தத்தின் காரணமாக, அவ்வாறு செலவளிக்கப்படாத சமுகப்பொறுப்புக்குரிய ஆண்டு நிதியை, அந்த நிதியாண்டின் ஆறு மாதங்களுக்குள் நிறுவனங்கள் சட்டத்தின் பின்னிணைப்புப்பட்டியல் 7–இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிதியம் ஏதேனுமொன்றுக்கு மாற்றியனுப்ப வேண்டும். எடுத்துக்காட்டாக பாரதப்பிரதமர் தேசிய நிவாரண நிதியைக் குறிப்பிடலாம்.[2]

அதே நேரம் ஒரு நிறுவனம் தனது சமூகப்பொறுப்பு நிதியை, தொடர்ந்து பணி நடந்து கொண்டிருக்கும் திட்டங்கள் எதற்கும் ஒதுக்கியிருப்பின், அதற்காக செலவு செய்யப்படாத நிதியை, சம்பந்தப்பட்ட நிதியாண்டின் முடிவிலிருந்து 30 நாட்களுக்குள் 'நிறுவன சமூகப்பொறுப்புக்கு செலவளிக்கப்படாத கணக்கிற்கு' (Unspent CSR Account) மாற்றப்பட வேண்டும். அதை மூன்றாண்டுகளுக்குள் அத்திட்டங்களுக்காக செலவளித்துவிட வேண்டும். மூன்றாண்டுகளுக்குப் பிறகு செலவளிக்கப்படாத நிதி ஏதும் மீதியிருப்பின், அது முன் சொன்னவாறு நிறுவனங்கள் சட்டத்தின் பின்னிணைப்புப்பட்டியல் 7–இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிதியம் ஏதேனு

1. **Re-categorisation and De-criminalization of certain offences:** The Companies Act 2013 contains 81 compoundable offences punishable with fine or fine or imprisonment, or both. These offences are heard by courts. The Bill re-categorizes 16 of these offences as civil defaults, where adjudicating officers (appointed by the central government) may now levy penalties instead. These offences include: (i) issuance of shares at a discount, and (ii) failure to file annual return.

2. **Amendment in Corporate Social Responsibility (CSR):** Under the Act, if companies which have to provide for CSR, do not fully spent the funds, they must disclose the reasons for non-spending in their annual report. Under the Amendment Act, any unspent annual CSR funds must be transferred to one of the funds under Schedule 7 of the Act (e.g. Prime Minister's National Relief Fund) within six months of the financial year.

மொன்றுக்கு மாற்றியனுப்ப வேண்டும்.[1] [பிரிவு 135(6)]

(3) தணிக்கையாளர்களாக தொழிலாற்ற தடை (Debarring Auditors): 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்படி, பட்டயக் கணக்காயர்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட பட்டயக்கணக்காயர்களின் உறுப்பினர் அல்லது நிறுமத்தின் தொழில்முறை தவறான நடத்தை நிரூபிக்கப்படுமாயின், அவரை அல்லது அந்நிறுமத்தை ஆறு மாதம் முதல் 10 ஆண்டுகள் வரையிலான கால கட்டத்திற்குள் ஏதேனும் ஒரு காலஅளவுக்கு பட்டயக்கணக்காயராக தொழிலாற்றுவதை தடை செய்ய தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்புக்கு அதிகாரம் உண்டு.

இவ்வாறு கூறும் பிரிவு 132(4)(C)(B)–யை திருத்தச்சட்டம், 2019 முற்றிலும் திருத்தியமைத்து மேற்கண்ட தொழிற்தடை தண்டனையை மேலும் பல வடிவங்களில் விரிவுபடுத்தியுள்ளது. திருத்தச்சட்டத்தின்படி மேற்கண்ட தொழில்முறை தவறான நடத்தை புரிந்த பட்டயக்கணக்காய உறுப்பினர் அல்லது நிறுமமானது, நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பு எதிலும் ஓர் தணிக்கையாளராக, அல்லது உள்ளக தணிக்கையாளராக நியமனம் செய்யப்பட தடை செய்யப்படுவார். மேலும் அந்நிறுவனத்தின் பணிகள் மற்றும் செயற்பாடுகளின் நிதிநிலை அறிக்கைகள் அல்லது உள்ளக தணிக்கை குறித்து தணிக்கை எதையும் மேற்கொள்ள தடை செய்யப்படுவார். அத்துடன் பிரிவு 247–இன் கீழ் வகை செய்யப்பட்டவாறான மதிப்பீட்டுப் பணி எதையும் செய்வதிலிருந்தும் தடை செய்யப்படுவார். இத்தடை எவ்வளவு காலத்திற்கு என்றால், குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு அல்லது தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பால் 10 ஆண்டுகளுக்கு மிகாமல் தீர்மானிக்கப்படலாகும் அத்தகு அதிகபட்ச காலஅளவு எதற்கும் ஆகும்.[2]

(4) தொழில் தொடங்குதல் (Commencement of business): தொழில் தொடங்குதலைப்பொறுத்து 2019–ஆம் ஆண்டு திருத்தச்சட்டம் ஓர் முக்கிய திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. அதாவது, (1) நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் கையொப்பமிட்ட ஆதரவாளர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் எடுக்க ஒத்துக்கொண்ட பங்குகளுக்கான தொகையை செலுத்திவிட்டனர் என்று உறுதிப்

1. If the CSR funds are committed to certain ongoing projects, then the unspent funds will have to be transferred to an Unspent CSR Account within 30 days of the end of the financial year, and spent within three years. Any funds remaining unspent after three years will have to be transferred to one of the funds under Schedule 7 of the Act.

2. **Debarring auditors:** Under the Companies Act, 2013, the **National Financial Reporting Authority** debar a member or firm from practising as a Chartered Accountant for a period between six months to 10 years, for proven misconduct. The Amendment Act, 2019 amends the punishment to provide for debarment from appointment as an auditor or internal auditor of a company, or performing a company's valuation, for a period between six months to 10 years.

படுத்தி, சம்பந்தப்பட்ட நிறுவனம் பதிவான 180 நாட்களுக்குள் விளம்புகை ஒன்றை தாக்கல் செய்தல் வேண்டும் மற்றும் (2) மேலும் நிறுவனத்தின் பதிவு முகவரியை சரிபார்க்கும் அறிக்கை ஒன்றை அதன் பதிவுத்தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். இந்த இரண்டையும் நிறைவு செய்த பிறகுதான் நிறுவனம் தொழில் தொடங்க முடியும். ஒருவேளை இதை நிறைவு செய்வதில் தவறுகை புரிந்தால், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயரானது நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.[1]

(5) பற்றுப்பொறுப்புகளை பதிவு செய்தல் (Registration of charges): 2013–ஆம் ஆண்டு நிறுவனச்சட்டத்தின் பிரிவு 77(1)–இன்படி ஒரு நிறுவனம் தனது சொத்தின் மீது செய்து கொண்டுள்ள பற்றுப்பொறுப்புகளை (எடுத்துக்காட்டாக அடைமானம் போன்று) அவ்வாறு பற்றுப்பொறுப்பை உருவாக்கிக்கொண்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் நிறுவனங்களின் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும். இது பதிவாளரின் அனுமதியுடன் 300 நாட்களுக்கு நீட்டிக்கப்படலாம். தற்போது 2019–ஆம் ஆண்டு திருத்தச்சட்டப்படி இதில் ஒரு முக்கியத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. பற்றுப்பொறுப்பை உருவாக்கிக்கொண்டதிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும் என்பதில் மாற்றம் ஏதுமில்லை. ஆனால் **(அ)** 2019–ஆம் ஆண்டு திருத்தச்சட்டம் செயல்விளைவுக்கு வருவதற்கு முன் செய்து கொள்ளப்பட்ட பற்றுப்பொறுப்பின் விடயத்தில் நிறுவனப்பதிவாளரின் அனுமதியோடு இது 300 நாட்களுக்குள்ளும், **(ஆ)** 2019 திருத்தச்சட்டம் செயல்விளைவுக்கு வந்த தேதியன்று அல்லது அதற்குப் பிறகு உருவாக்கிக்கொள்ளப்பட்ட பற்றுப்பொறுப்பின் விடயத்தில் இது 60 நாட்களுக்குள்ளும் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும்.

மேற்சொன்ன நாட்களுக்குள் பதிவு செய்து கொள்ளப்படவில்லை எனில், கூடுதல் கட்டணம் செலுத்தப்படுவதன் பேரில் இது முறையே **(அ)** ஆறு மாதங்களுக்குள் (அதாவது 2019 திருத்தச்சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து) மற்றும் **(ஆ)** மேலும் 60 நாட்களுக்கு என நீட்டிக்கப்பட்ட ஒரு காலஅளவுக்குள் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும்.[2]

---

1. **Commencement of business:** The Companies (Amendment) Act, 2019 states that a company may not commence business, unless it (i) files a declaration within 180 days of incorporation, confirming that every subscriber to the Memorandum of the company has paid for the shares agreed to be taken by him, and (ii) files a verification of its registered address with the RoC within 30 days of incorporation. If it fails to comply with these provisions and is found not to be carrying out business, its name of the company may be removed from the Register of Companies.

2. **Registration of charges:** Section 77(1) of the Act of 2013 requires the companies to register charges (e.g. Mortgages) on their property within 30 days of creation of charge, extendable upto 300 days with the permission of the RoC. The Amendment Act, 2019 changed the deadline to 60 days (extendable by 60 days).

[6] அனுமதியளிக்கும் அதிகாரஅமைப்பில் மாற்றம் (Change in permitting Authority): 2013–ஆம் ஆண்டு நிறுவனச்சட்டத்தின் பிரிவு 2(41)–இன்படி நிதி ஆண்டு என்பது ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31–ஆம் தேதியன்று முடியும் ஒரு கால அளவு ஆகும். அதாவது ஒரு நிறுவனத்தின் நிதியாண்டு ஒரு ஆண்டின் ஏப்ரல் 1–ஆம் தேதி தொடங்கி அடுத்த ஆண்டு மார்ச் 31–இல் முடிகிறது. 1956–ஆம் ஆண்டு சட்டப் படியும் இதே நிலைதான் என்றாலும், கூடுதலாக ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 முடிய ஒரு ஒரு காலஅளவும் நிதியாண்டாக கருதப்பட்டு வந்தது. பின்னிட்டு இந்த சட்டம் நீக்கறவு செய்யப்பட்டு, 2013–இல் புதிய நிறுவனச்சட்டம் வந்த பிறகு, அதன் மேற்படி பிரிவு 2(41)–இன்படி ஒரு நிதியாண்டு என்பது ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 முடிய மட்டுமே என ஒரே சீர்மையாக நிறுவனங்கள் பின்பற்றத்தொடங்கின.

மேற்சொன்ன நிலைப்பாட்டில் 2019–ஆம் ஆண்டு திருத்தச்சட்டம் ஒரு முக்கிய திருத்தத்தை பிரிவு 2(41)–இல் கொண்டு வந்தது. அதாவது, ஒரு அயல்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றும் நிறுவனமொன்று வழக்கமான கால அளவை விடுத்து ஒரு மாறுபட்ட கால அளவை தனது நிதியாண்டாக பின்பற்றலாம். ஆனால் முந்தைய 2013 சட்டப்படி இதற்கு **தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயத்திடம்** (National Company Law Tribunal) விண்ணப்பித்து அதன் அனுமதி பெற வேண்டும். தற்போது 2019–திருத்தச்சட்டப்படி இதற்கு **மைய அரசிடமிருந்து** (Central Government) அனுமதி பெற வேண்டும்.

அவ்வாறே ஒரு பொது நிறுவனம், ஒரு தனியார் நிறுவனமாக மாற்றப்படுவ தற்கு நிறுவன செயல்முறைவிதிகளில் மாறுதல் செய்ய தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று 2013 நிறுவனச்சட்டத்தின் பிரிவு 14(1)–இன் கீழான வரம்புரை வாசகம் முன்பு கூறியது. தற்போது 2019 திருத்தச் சட்டத் தின்படி இதற்கு மைய அரசிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டும்.

சற்றே சுருங்கச்சொன்னால் முன்பு தேசிய நிறவனச் சட்ட தீர்ப்பாயத்திடம் அனுமதியும் ஒப்புதலும் பெற்று வந்த மேற்கண்ட இரண்டு செயல்களுக்கு 2019 திருத் தச் சட்டத்தின்படி மைய அரசிடமிருந்து முறையே அத்தகு அனுமதியும் ஒப்புதலும் பெற வேண்டும்.[1]

[7] சமசரத்திற்கான அபராதத் தொகையின் உச்சவரம்பில் உயர்வு (Increase in the ceiling of fine amount for compounding the offences): முன்பு 5 இலட்சம் ரூபாய் வரை அபராதம் மட்டும் விதித்து தண்டிக்கப்படக் கூடிய நிறுவனக் குற்றங்களை சமரசம் செய்து கொள்ளலாம். இந்த வரம்பு தற்போது 2019–

1. **Change in permitting authority:** Under the 2013 Act, change in period of financial year for a company associated with a foreign company, has to be approved by the National Company Law Tribunal. Similarly, any alteration in the incorporation document of a public company which has the effect of converting it to a private company, has to be approved by the Tribunal. Under the 2019 Amendment Act, these powers have been transferred to central government.

ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தால் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி சிறைத்தண்டனை மட்டும் அல்லது சிறைத்தண்டனையுடன் அபராதமும் விதித்து தண்டிக்கப்படக்கூடிய குற்றம் அல்லாததும், நிறுவனச்சட்டத்தால் தண்டிக்கப்படக்கூடியதுமான குற்றம் எதற்கும் அதிகபட்ச அபராதத்தொகை 25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்குமிடத்து, அதை இதற்கென மைய அரசால் நியமிக்கப்பட்ட மண்டல இயக்குநர் அல்லது மைய அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும் சமரசம் (இணக்கம்) செய்து வைக்கலாம் என்று பிரிவு 441(1)–இல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதாவது சமரசத்திற்கான அதிகபட்ச அபராதத் தொகையின் உச்சவரம்பு 5 இலட்சத்திலிருந்து 25 இலட்ச ரூபாயாக 2019 திருத்தச்சட்டம் உயர்த்தியுள்ளது.[1]

[8] பயன்மிகு உரிமைநிலை (Beneficial ownership): நிறுவனமொன்றின் பங்குகளில் ஒரு நபர் குறைந்தபட்சம் 25 விழுக்காடு பங்குகளைக் கொண்டு ஓர் பயன்தரு உரிமைநிலையை கொண்டிருந்தால் அல்லது அந்நிறுவனத்தின் மீது தனது ஆதிக்கத்தை செலுத்துவதாக இருந்தால் அல்லது அதைக் கட்டுக்குள் வைத்திருப்பதாக இருந்தால், அவர் தனக்கு அந்நிறுவனத்தில் உள்ள அக்கறை/நலன் பற்றி விளம்புகை ஒன்றை செய்யும்படி வேண்டுறுத்தப்படுவார். இந்த நிலைப்பாட்டில் 2019–ஆம் ஆண்டு திருத்தச்சட்டம் ஒரு பணியை நிறுவனங்களுக்கு விதிக்கிறது. அதன்படி ஒரு நிறுவனத்தில் 'குறிப்பிடத்தக்கவாறு பயன்மிகு உரிமையாளராக' வலம் வரும் நபர் யார் என்பதை அந்நிறுவனம் கண்டுபிடிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு கண்டறிந்து அவரை நிறுவனச்சட்டம் சொல்லும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படும்படி ஆக்க வேண்டும் என்றும் கூறுகிறது.[2]

[9] இதர முக்கிய அம்சங்கள் (Other features): 2019–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் மேற்கண்டவாறு பல்வேறு முக்கியத் திருத்தங்களைச் செய்துள்ளது. இன்னும் சில திருத்தங்களை சுட்டிக்காட்டுவதாக இருந்தால், (1) நிறுவனம் தனது தொழிலைத் தொடங்குவதற்காக விளம்புகை செய்யும் வகைமுறையை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது; (2) நிறுவனப்பதிவு அலுவலகத்தை பராமரிக்காமல் போனால், அதன் பதிவை இரத்து செய்கிறது; (3) பற்றுப்பொறுப்புகள் தொடர்பாக ஆவணங்களை தாக்கல் செய்வதில் மேலும் பொறுப்புடைமையை நிறுவனங்களுக்கு விதிக்கிறது; (4) அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால் இயக்குனர் பதவியை துய்த்தால், அத்தகு இயக்குனர்களை 2019 திருத்தச்சட்டம் தகுதியிழக்கச் செய்கிறது.

---

1. **Increase in the ceiling of fine amount for compounding of offences :** Under the 2013 Act, a regional director can compound (settle) offences with a penalty of up to 5 lakh rupees. The 2019 Amendment Act increases this ceiling to Rs 25 lakh.

2. **Beneficial ownership:** If a person holds beneficial interest of atleast 25% shares in a company or exercises significant influence or control over the company, he is required to make a declaration of his interest. The 2019 Amendment Act requires every company to take steps to identify an individual who is a **significant beneficial owner** and require their compliance under the Act.

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2020 – சிறப்பம்சங்கள்

[The Companies (Amendment) Act, 2020 - Salient Features]

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2020 - பின்னணி :

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக 2019–ஆம் ஆண்டு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்திற்குப் பிறகு 2020–இல் அறிமுகப்படுத்தப்பட்டதே **நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 [The** Companies (Amendment) Bill, 2020] ஆகும்.

இச்சட்டமுன்வடிவு 28–09–2020–ஆம் தேதியில் குடியரசுத்தலைவரின் இசைவைப் பெற்று, அன்றைய தேதியிலேயே இந்திய அரசிதழில் **நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2020 [The Companies (Amendment) Act, 2020]** என அறிவிக்கை செய்யப்பட்டது.

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2020 - நோக்கம்:

(1) இந்தியாவில் இலகுவாக வணிகம் செய்வதை மேம்படுத்தல் (Improving the ease of doing business in India),

(2) நிறுவனங்கள் தொடர்பான பல்வேறு சிறு குற்றங்களை குற்றத்தன்மையமற்றதாக்குதல் (De-criminalizing various minor offences) மற்றும்

(3) உற்பத்தி செய்யும் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் (Regulating producer companies)

என்ற இந்த மூன்று பரந்துபட்ட முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வேறு சில திருத்தங்களையும் உள்ளடக்கியதே 2020–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் (திருத்த) சட்டமாகும்.

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2020- சிறப்பம்சங்கள்:

(1) சிறு குற்றங்களை குற்றத்தன்மையற்றதாக்குதல் (De-criminalization of minor offences): நிறுவனச்சட்டப்பிரிவுகளை மீறுவது குற்றச்செயலாகும். அத்தகு பல குற்றங்களுக்கு சிறைவாசத்தை தண்டனையாக விதிக்க 2013 சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கும் நிலைப்பாடு 2019–ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்திலேயே மெல்லத்தளர்ந்து போனதை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். அந்த வகையில் இந்த 2020–ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்திலும் பல்வேறு சிறு குற்றங்களுக்கு நிறுவனச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டு வந்த சிறைத்தண்டனை நீக்கப்பட்டது.[1]

மேலும், இக்குற்றங்களுக்கான அபராதத் தொகைகள் மற்றும் தண்டங்கள் கணிசமாக குறைக்கப்பட்டன, மாற்றியமைக்கப்பட்டன மற்றும் விடப்பட்டும்விட்டன. எடுத்துக்காட்டாக, பங்குகளை திரும்ப வாங்கிக்கொள்ளுதல், ஒரு நிறுவனத்தில் அதன் இயக்குனர்களுக்கு இருக்கும் நலனை (அக்கறையை) வெளிப்படுத்தல், நிதி நிலை அறிக்கைகள் மற்றும் வாரியத்தின் அறிக்கை, அறநிலைய நோக்கங்களுக்காக நிறுவனங்களை உருவாக்குதல், இயக்குனர்களின் தகுதியிழப்பு மற்றும் தணிக்கை, நிறுவன வணிகத்தில் பங்குடையோருடன் கொண்டிருக்கும் உறவுநிலை மற்றும் ஊதியக்குழு ஆகியன தொடர்பான வகைமுறைகளின் மீறுகைக்காக சிறைவாசத்தை தண்டனையாக விதிக்கப்பட்டிருந்தை இந்த திருத்தச்சட்டம், 2020 நீக்கிவிட்டது.[2]

அதுபோல் ஆண்டறிக்கையை நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்தல், பங்குதாரர்களின் உரிமைகளில் மாறுபாடு, பங்குத்தொகுப்புகளை மாற்றுதல், பங்கு மூலதனத்தை மாற்றியமைத்தல், பங்கு மூலதனத்தை குறைத்தல் ஆகியன தொடர்பான வகைமுறைகளின் மீறுகைக்கான அபராதத் தொகை மற்றும் தண்டங்

---

1. **Decriminalisation of minor offences:** The 2020 Amendment Act has done away with imprisonment as a consequence of contravention of certain provisions of the Act for various offences under the Act.

2. In addition to the above, the fines or penalties have been reduced, modified and omitted for these offences. By way of example, imprisonment has been eliminated as a punishment for contravention of provisions in relation to buyback of securities, disclosure of interest by directors, financial statements and Boards' report, formation of companies with charitable objects, disqualification of directors and constitution of audit, stakeholder relationship and nomination and remuneration committee.

களில் சில குறைக்கப்பட்டன, மாற்றியமைக்கப்பட்டன மற்றும் விட்டுவிடப்பட்டன.[1]

[2] பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் வரையறையில் திருத்தம் (Amendment in definition of Listed Companies): ஒரு நிறுவனம் தனது பங்குகளில் எவற்றையாவது அங்கீகரிக்கப்பட்ட பங்குப்பரிவர்த்தனை நிலையத்தின் பட்டியலில் இட்டிருப்பின், அது பட்டியலிடப்பட்ட நிறுவனம் என்று பொருளாகும் என்று பிரிவு 2(52) கூறுகிறது. இதன் கீழ் 2020–ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தால் புதிதாக சேர்க்கப்பட்ட ஓர் வரம்புரையின்படி (Proviso) பங்குப்பரிவர்தனை வாரியத்துடன் கலந்தாலோசித்து அதன் பேரில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு வகையான பங்குகளை பட்டியலில் இடும் அல்லது இட உத்தேசிக்கும் நிறுவனங்கள், பட்டியலிடப் பட்ட நிறுவனங்களாக கருதப்படுதல் ஆகாது. வேறுவிதத்தில் சொன்னால் பங்குப் பரிவர்த்தனை வாரியம் குறிப்பிடும் வகையான பங்குகளை வெளியிடும் சில நிறுவனங்களை பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் என்பதன் வரையறையிலிருந்து 2020 திருத்தச்சட்டம் விலக்குகிறது எனலாம்.[2]

[3] பொது நிறுவனங்கள் அயல்நாட்டு அதிகாரவரம்பில் பட்டியலிடுதலை அனுமதித்தல் : 2020–ஆம் திருத்தச்சட்டத்தால் பிரிவு 23–இன் கீழ் சேர்க்கப்பட்ட உட்பிரிவு (3) மற்றும் (4)–ஆனது, சில வகையான பொது நிறுவனங்கள் தங்கள் பங்குகளை அயல்நாட்டு அதிகாரவரம்பில் உள்ள பங்குப்பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடுவதை அனுமதிக்க மைய அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.[3]

[4] உரிமைப்பங்குகள் வெளியீடு (Rights Issue): ஏற்கனவே இருக்கும் பங்குதாரர்களுக்கு வெளியிடப்படும் உரிமைப்பங்குகளை அவர்கள் ஏற்றுக்கொள்வ தற்கான காலவரம்பு, அதற்கான முனைவு அறிவிப்பு தேதியிலிருந்து குறைந்தபட்சம் 15 முதல் அதிகபட்சம் 30 நாட்கள் ஆகுமென்று பிரிவு 62(1)(அ)(i) கூறுகிறது. தற்போது இதில் 15 நாட்களுக்கும் குறைவான நாட்களையும் நிறுவனம் தனது முனைவு அறிவிப்பில் வகுத்துரைக்கலாம் (such lesser number of days as may be prescribed) என்ற வகைமுறை சேர்க்கப்பட்டுள்ளது.

---

1. Similarly, penalties and fines have been omitted/modified/reduced for contravention of provisions in relation to filing of annual return with Registrar, variation of shareholder rights, transfer of securities, alteration of share capital and reduction of share capital, among others.
2. **Amendment in definition of Listed Companies:** The definition of Listed Companies in S. 2(52) has been amended to exclude certain companies from issuing specified classes of securities, in consultation with SEBI. In the definition, it is stated that such class of companies would not be considered as Listed Companies.
3. **Allowing certain Public Companies to list in foreign jurisdiction:** The sub-sections (3) and (4) inserted under section 23 of the Act by 2020 amendment, empowers the central government to allow certain public companies to list their securities in foreign jurisdiction.

[5] பயன்மிகு நலன் குறித்த விளம்புகை (Declaration in respect of Beneficial interest): நிறுவனமொன்றில் குறிப்பிட்டுக்கூறும்படி பயனடையும் உரிமையாளர்களுக்கு [Significant Beneficial Owners (SBO)] சில நிபந்தனைகளை விதிக்கும் வகைமுறைகளை பிரிவு 89–இல் 2020–ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் சேர்க்கிறது. குறிப்பாக நிறுவனத்தின் பங்குகளில் தனக்கிருக்கும் பயன்மிகு நலன் பற்றிய விளம்புகையும், அறிக்கையும் நிறுவனங்களின் பதிவாளரிடம் அந்நபர் உரிமையாளர் தாக்கல் செய்ய வேண்டும்.

[6] காலக்கிரமமான நிதிநிலை முடிவுகள் (Periodical Financial Results): 2020 திருத்தச்சட்டமானது 2013 நிறுவனச்சட்டத்தில் 129A என்றொரு புதிய பிரிவைச்சேர்க்கிறது. இது, நிறுவனத்தின் நிதிநிலை முடிவுகளை உரிய கால இடைவெளிகளின் அடிப்படையில் தயாரித்து வழங்க வேண்டுமென்று சில வகையான நிறுவனங்களைப் பணிக்கும் விதிகளை வகுத்துரைக்க மைய அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்குகிறது.

[7] நிறுவனச்சமூகப்பொறுப்பு (Corporate Social Responsibility): ஒரு நிறுவனம் தான் சமூகப்பொறுப்புக்காக ஒரு நிதியாண்டில் செலவிட வேண்டி சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவைக்காட்டிலும் 2 விழுக்காடு அதிகமாக செல வளித்திருந்தால், அதை பின்னிட்டு வரும் ஆண்டுகளில் சரி செய்து கொள்ளலாம் என்று பிரிவு 135–இல் 2020–ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தால் செய்யப்பட்ட திருத்தம் கூறுகிறது.

[8] சுதந்திரமான இயக்குனர்கள் மற்றும் நிர்வாகமற்ற இயக்குனர்கள் (Independent Directors and Non-Executive Directors): 2013 நிறுவனச் சட்டத்தின் பிரிவுகள் 149 மற்றும் 197–இல் செய்யப்பட்ட திருத்தம் காரணமாக, ஒரு நிறுவனத்தில் போதுமான இலாபம் இல்லாத போது சுதந்திரமான இயக்குனர்களும், நிர்வாகமற்ற இயக்குனர்களும் நிறுவனச்சட்டத்தின் பின்னிணைப்புப்பட்டியல் V–இன்படி செலுத்தப்படக்கூடிய ஊதியத்தின் கீழ் வருகிறார்கள்.

[9] தேசிய நிறுவனச்சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் அமர்வாயங்களைக் கட்டமைத்தல் (Constitution of NCLAT benches): தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் அமர்வாயங்களை அதிக அளவில் கட்டமைக்க வேண்டும் என்ற நோக்குடன் 2013 நிறுவனச்சட்டத்தில் 418A என்றொரு புதிய பிரிவு 2020–ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தால் சேர்க்கப்பட்டது. தற்போது இந்த அமர்வாயம் புது தில்லியில் செயல்பட்டு வருகிறது.

[10] உற்பத்தி நிறுவனங்கள் (Producer Companies): உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நிறவனங்களுக்கென தனிச்சிறப்பு வகைமுறைகளைச் சேர்க்கும் பொருட்டு 2013 நிறுவனச் சட்டத்தில் அத்தியாயம் XXIA (Chapter XXIA) என்றொரு புதிய அத்தியாயத்தை 2020–ஆம் ஆண்டு திருத்தச்சட்டம் சேர்க்கிறது. இது 2020–ஆம் திருத்தச்சட்டத்தின் மிகச்சிறப்பானதொரு முன்னெடுப்பு ஆகும்.

இயல் I

அறிமுகம்

[நிறுவன ஆளுமை–நிறுவனத்தின் வரையறை – நிறுவனத்தின் குணவியல்புகள் மற்றும் சங்கங்களின் வேறு வகைகள்– சட்டமுறையான சேர்க்கை – நிறுவனங்களின் வகைகள் – நிறுவனத்தின் திரையை தூக்குதல் அல்லது கிழித்தல்– ஒரு நபர் நிறுவனம்]

Introduction

[Corporate Personality - Definition of Company - Characteristics of a Company and other types of Associations - Illegal Association - Classes of Companies - Lifting or Pierching the Corporate Veil - One Person Company]

இந்தியாவில் நிறுவனச் சட்டத்தின் தோற்ற வரலாறு
[Origin of Company Law in India]

நிறுவனங்களின் தோற்ற வரலாறு:

1

பொருள் சேர்க்க வேண்டும் எனும் அவா யாருக்குத்தான் இருக்காது? அதற்காக பணம் தோன்றா ஆதிகாலத்தில் 'பண்ட மாற்று' முறையில் தொடங்கிய வணிக நடைமுறை, இன்று பன்னாட்டு நிறுவனங்கள் வரை வளர்ச்சியுற்றது என்று சொன்னால் அதில் மிகையில்லை. ஆரம்பத்தில் தனிநபர் வாணிபம் தலை யெடுத்தது. பிறகு இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் கள் இணைந்து முதலீடு செய்து கூட்டாக வாணிபம் செய்தால் என்ன, எனும் கருத்து மலர்ந்தது. இக் கருத்தின் அடிப்படையில் 'கூட்டாண்மை வியாபாரம்' (Partnership Business) தோன்றியது. எனினும் இது குறு முதலீட்டைக் கொண்டு தொடங்கும் சிறு வியாபாரங்களுக்கு மட்டுமே பயன் நல்குவதாக இருந்தது. எனவே, பெரும் முதலீடு தேவைப்படும் தொழில்களுக்கு, பங்குகளை வெளியிட்டு, அதன் மூலம் பொது மக்களையும் பங்குதாரர்களாக்கி, அவர்களிடமிருந்து

ஒரு கணிசமான பெருந் தொகையை மூலதனமாகக் கொண்டு நடாத்தப்படும் நிறுவனங்களை அமைப்பதே சிறந்த வழியாகும் எனும் சிந்தனை உதித்தது. இதனால் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் (Joint Stock Companies) பல தோன்றின.

நிறுவனங்கள் சட்டத்தின் தோற்றம்:

நிறுவனங்களில்தாம், பங்குதாரர்களின் தனிப்பட்ட பொறுப்பை வரம்புடைய தாக்கிக் கொள்ளும் வசதி உள்ளது. அதாவது நிறுவனம் வாங்கும் கடன்களுக்கு அந் நிறுவனமே பொறுப்பாகுமே தவிர, அதன் பங்குதாரர்களுக்கு தனிப்பட்ட விதத்தில் பொறுப்பு ஏதுமில்லை. ஆனால் ஒரு கூட்டாண்மையில், கூட்டாளிகளின் பொறுப்பு வரம்பற்றதாகும். அதாவது கூட்டாண்மை வாங்கும் கடன்களுக்கு கூட்டாளிகளுக்கும் தனிப்பட்ட பொறுப்பு உள்ளது. மேலும் ஒரு கூட்டாண்மையில் அதன் கூட்டாளி ஒருவர் இறந்தாலும், நொடிந்தாலும், புத்தி சுவாதீமனடைந்தாலும், அக்கூட்டாண்மை நிறுமம் கலைக்கப்படும். இது மட்டுமல்லாது கூட்டாண்மையில் கூட்டாளிகளாக இருக்கும் நபர்களின் எண்ணிக்கை, சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே பெரும் எண்ணிக்கையுடையவர்கள் ஒன்று கூடி, பெரும் முதலீட்டை ஒன்று திரட்டி, நிரந்தர மாக இயங்கக் கூடிய வகையில் நிறுவனங்களை அமைத்துக் கொண்டனர். முன்ன தாக கூட்டாண்மையை அமைத்து வியாபாரம் செய்து வந்தவர்கள் அனைவரும், அதை நிறுவனங்களாக மாற்றிக் கொண்டனர். இதன் அடிப்படையில் பின்னிட்டு தனியார் நிறுவனங்கள் பல தோன்றின. மேலும் அரசும் நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படவும், நவீன உற்பத்தித் தொழில் சமுதாயத்திற்கு நிறுவனங்களே அடிப்படைக் கட்டமைப்பு என்பதையும் உணர்ந்தது. எனவே நிறுவனங்களை ஒழுங்குபடுத்தி, அவற்றின் செயற்பாடுகளை மேம்படுத்த நிறுவனச் சட்டங்களும் இயற்றப்பட்டன.

இங்கிலாந்தில் நிறுவனச் சட்டங்களின் தோற்ற வரலாறு:

இங்கிலாந்தில் 17 மற்றும் 18–ஆம் நூற்றாண்டுகளில், அரசுப் பட்டயம் (Royal Charter) ஒன்றினால் அல்லது பாராளுமன்றத்தின் சிறப்புச் சட்டம் (Special Act of Parliament) ஒன்றினால் பதிவு பெற்ற நிறுவனங்கள் நிறுவப்பட்டன. ஆனால் இவ்விரண்டு வழிகளும் மிகுந்த செலவை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தன.

எனவே சட்டப்படியான பதிவில்லாமல் கூட்டாண்மை அமைப்புகள் பலவும் நிறுவனங்கள் எனும் போர்வையின் கீழ் தோன்றின. அவற்றின் நிருவாகம் பொறுப் பாண்மையர்கள் (Trustees) சிலரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனவே நிறுவனத்தின் மீதான உரிமைக்கும், நிறுவன மேலாண்மைக்கும் இடையே பெரும் இடைவெளி ஏற்பட்டது. அப்பொறுப்பாண்மையர்களும், நிறுவனங்களில் பொது மக்கள் செய்த முதலீட்டை தங்கள் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொண்டனர். அப்பொழுது அவர்களைக் கட்டுப்படுத்த சட்ட விதிகள் ஏதும் இயற்றப்பட்டிருக்க வில்லை. எனவே நிறுவனத்தை தோற்றுவிக்கிறேன் (Promoters) பேர்வழி என்று மோசடியான நபர்கள் பலர் கிளம்பினர். அவர்கள் எந்நிறுவனத்தையும் தோற்றுவிக்க வில்லை; மாறாக பொது மக்களின் பணத்தை சுரண்டிச் சென்றனர். எனவே நீர்க் குமிழிகள் போல் நிறுவனங்கள் தோன்றுவதும், தோன்றியவுடனே வெடித்து

மறைவதும் அப்பொழுது வெகு இயல்பாக இருந்தது. இதனால் பொது மக்கள் முதலீடு விழலுக்கு இறைத்த நீர் போல் வீணாகியது. எனவே, 1720–ஆம் ஆண்டில் இங்கிலாந்து பாராளுமன்றம், '**நீர்க்குமிழிகள் சட்டம்**' (Bubbles Act, 1720) எனும் ஒரு சட்டத்தை இயற்றியது. ஆனால் அந்தோ பரிதாபம்! இச்சட்டம் மோசடியான நிறுவனங்கள் உருவாவதைத் தடுப்பதற்குப் பதிலாக, நிறுவனங்களைத் தோற்றுவிக்கும் வணிகத்தையே சட்ட விரோதமாக்கியது. எனவே வியாபார மற்றும் வணிக வளர்ச்சிக்கு, மேற்படி சட்டம் மரண அடி கொடுத்தது என்றே கூற வேண்டும். எனினும், ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக அது சட்டப் புத்தகத்தில் ஒரு செல்லத்தக்க சட்டமாகவே இடம் பிடித்திருந்தது. பின்னிட்டு, அது 1825–ஆம் ஆண்டில் நீக்கப்பட்டது.

இந்நிலையில் 1844–ஆம் ஆண்டில் '**கூட்டுப் பங்கு நிறுவனங்கள் சட்டம்**' (The Joint Stock Companies Act, 1825) இயற்றப்பட்டது. இச்சட்டம்தான் எளிய முறையில் நிறுவனங்களைப் பதிவு செய்யும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்த முதற்சட்டமாகும். இதனால் கூட்டாண்மை அமைப்புகள் (Partnerships) பலவும், தம்மை நிறுவனங்களாகப் பதிவு செய்து கொண்டன. எனினும் அவை ஒரு கூட்டாண்மை நிறுமத்தைப் போல வரம்பற்ற பொறுப்புடனேயே இயங்கி வந்தன. அதாவது அவை வாங்கும் கடன்களுக்கு, அதன் கூட்டாளிகளும் தனிப்பட்ட விதத்தில் பொறுப்புடையவர்களாகவே தங்களைக் காட்டிக் கொண்டனர். எனவே **1855-ஆம் ஆண்டில் வரம்புடைய பொறுப்புச் சட்டம்** (Limited Liability Act, 1855) இயற்றப்பட்டது. இதன் மூலம் வரம்புடைய பொறுப்புடன் வணிகம் செய்யும் உரிமை அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

இதற்குப் பின்னிட்டு ஓராண்டு கழித்து 1856–ஆம் ஆண்டில் அத்தகு நிறுவனங்கள் தொடர்பான சட்டம் முழுவதும் தொகுக்கப்பட்டு, '**1856-ஆம் ஆண்டின் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் சட்டம்**' (The Joint Stock Companies Act, 1856) இயற்றப்பட்டது. அப்பொழுது முதல் 1948 மற்றும் 1985–ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து பாராளுமன்றத்தால் '**நிறுவனங்கள் சட்டம்**' (The Companies Act, 1948 and 1985) இயற்றப்படும் வரை, நிறுவனங்கள் குறித்த சட்டங்கள் பல முறை திருத்தப் பட்டுள்ளன, விரிவாக்கப்பட்டுள்ளன மற்றும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவில் நிறுவனச் சட்டங்களின் தோற்ற வரலாறு:

இந்திய நாட்டை இங்கிலாந்து மண்ணினர் ஆட்சி புரிந்தனர். எனவே, நமது இன்றைய சட்டங்களில் பெரும்பாலானவை, இங்கிலாந்து நாட்டு சட்டங்களைத் தழுவியது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அந்த வகையில், நமது இந்திய நிறுவனச் சட்ட வளர்ச்சியானது, இங்கிலாந்து பாராளுமன்றம் இயற்றிய பல்வேறு நிறுவனச் சட்டங்களின் அடிப்படையில் அமைந்தது என்றே கூற வேண்டும்.

அவ்வளர்ச்சி குறித்த வரலாறானது, **1850-ஆம் ஆண்டில் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் சட்டம்** (The Joint Stock Companies Act, 1850) இயற்றப் பட்டதிலிருந்து தொடங்குகிறது எனலாம். அப்பொழுதிருந்து நிறுவனங்கள் குறித்த சட்டம் நமது இந்திய நாட்டிலும் பலமுறை திருத்தப்பட்டன. எனினும் அவற்றை

யெல்லாம் தொகுத்து, ஒரே சட்டத்தின் கீழ் கொண்டு வரும் பொருட்டு, நமது இந்தியப் பாராளுமன்றம் 1956–ஆம் ஆண்டில் **'நிறுவனங்கள் சட்டம்' (The Companies Act, 1956)** எனும் ஒரு சட்டத்தை இயற்றியது. அடிக்கடி திருத்தப்பட்டு, பின்னர் தொகுக்கப்பட்ட சட்டம் என்பதால், மேற்படி 'நிறுவனங்கள் சட்டம்' மிக விரிவான தொரு சட்டமாக உள்ளது. மேலும் சிக்கலான வகைமுறைகள் பலவற்றைக் கொண்ட தாகவும் உள்ளது.

இச்சட்டத்தை முழுமையானதொரு சட்டம் என்றும் கூறிவிட முடியாது (not exhaustive). ஏனெனில், வியாபார நிறுவனங்கள் அனைத்தும் இதன் கீழ் பதிவு செய்து கொள்ளப்பட வழிவகை செய்யப்படவில்லை. வியாபார மற்றும் வணிக நோக்கங்களைக் கொண்ட சில அமைப்புகள், பாராளுமன்றத்தின் சிறப்புச் சட்டங் களினால் பதிவு செய்யப் பெற்றன. எடுத்துக்காட்டாக, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தைக் **(Life Insurance Corporation of India)** கூறலாம். இது அடிப்படை யில் ஒரு நிறுவனமாக இருப்பினும், 1956–ஆம் ஆண்டு நிறுவனங்களின் சட்டத்தின் கீழ் இது பதிவு செய்யப்படவில்லை; மாறாக 1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டத்தின் **(The Life Insurance Corporation Act, 1956)** கீழ் இது கூட்டுருவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வாறு சிறப்புச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்படும் அமைப்புகள் 'கழகங்கள்' (கூட்டுருக்கள்) (Corporations), 'வியாபார நிறுமங்கள்' (Business Firms) என்று அழைக்கப்படுகின்றன. இதற்கு மாறாக, மேற்கண்ட 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் அமைப்புகள், 'நிறுவனங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

நாம் இந்நூலில் காணவிருக்கும் '1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டமும்' திருத்தங்களுக்கு தப்பியது அல்ல. இச்சட்டம் இயற்றப்பட்டது முதல், பல முறை திருத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இச்சட்டம் 1960, 1963, 1965, 1966, 1971, 1974, 1977, 1985, 1988, 1996, 1999, 2000, 2001, 2002, 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தப்பட்டுள்ளது. 1966, 2000, 2002–ஆம் ஆண்டுகளில் மட்டும், மேற்படி நிறுவனச் சட்டம் இரண்டு முறை திருத்தப்பட்டுள்ளது. இவற்றில் 2002–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டம், 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் பல்வேறு திருத்தங்களைச் செய்துள்ளது; மாறுதல்களைக் கொண்டு வந்துள்ளது. அதிகம் தடவை திருத்தப்பட்ட சட்டம் எது என்று கேட்டால், அது '1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டமே' என்று உறுதியாகக் கூறலாம்.

2013–ஆம் ஆண்டில் புதிய நிறுவனங்கள் சட்டம்:

1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம் மேற்கண்டவாறு பல முறை திருத்தங்களுக்கு உள்ளானது. இதில் மேலும் திருத்தங்கள் செய்ய வேண்டிய சூழல் நமது பாராளுமன்றத்திற்கு தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. எனவே, 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தை இப்படி தொடர்ச்சியாக திருத்திக் கொண்டே இருப்பதை விட, இன்றைய வணிகச் சூழலையொட்டி புதிதாகவே ஒரு நிறுவனச் சட்டத்தை தொகுத்து இயற்றுவதும், அதில் திருத்தச் சட்ட வகை

முறைகளை புதிய சட்டப்பிரிவுகளின் கீழ் கொடுப்பதும் பொருத்தமானதாக இருக்கும் என்று நமது பாராளுமன்றம் கருதியது. இதன் விளைவாக 2013–ஆம் ஆண்டில் புதிதாக இயற்றப்பட்டதே **'நிறுவனங்கள் சட்டம், 2013'**[1] **(The Companies Act, 2013)** ஆகும். இப்புதிய சட்டம் ஏற்கனவே இருந்த நிறுவனங்கள் சட்டம், 1956–ஐ நீக்கறவு (Repeal) செய்தது. எனினும் சில விடயங்களைப் பொறுத்தவரை 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம் நீக்கறவு செய்யப்படாமல் இருப்பின் எவ்வாறு அவற்றுக்குப் பொருந்துமோ, அவ்வாறே பொருந்தக் கூடிய வகையில் அது தொடர்ந்து செயல்திறத்தில் உள்ளதாகவும் இப்புதிய சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டது.

இப்புதிய சட்டம் போட்டி மிக்க உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வணிகச் சூழல்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சந்திக்கும் வகையில் பல புதிய கருத்துக் களையும், சட்டப்பிரிவுகளையும் கொண்டதாக உள்ளது. குறிப்பாக நிறுவனங்களில் பங்குதாரர்கள் செய்யும் முதலீடுகளுக்கு திறம்பட பாதுகாப்பு அளித்தல் (investor protection), நிறுவனங்களை பெருமளவில் பொறுப்புடையதாக்குதல் (accountability), மின்–ஆளுமை (e-governance) நிறுவனங்களுக்கு உள்ள சமூகப் பொறுப்புகளை வலியுறுத்தல் (corporate social responsibility), வேகமாக மாறி வரும் நிறுவனக் கலாச்சாரத்துக்கு ஈடு கொடுத்து நடக்கும் வகையில் வணிக நிறுவனங்களை முறைப்படுத்தல் என சொல்லிக் கொண்டே போகலாம். சுருங்கச் சொன்னால், நிறுவனங்களின் சட்டத்தை சமகாலத்திற்கு பொருந்தக் கூடிய வகை யில், நிறுவனங்களுக்கு மட்டும் தொடர்புடையதாக இல்லாமல், முதலீட்டார்களுக்கும், நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தி நடத்துபவர்களுக்கும் தொடர்புடையதாகவும் 2013–ஆம் ஆண்டின் இப்புதிய சட்டம் ஆக்கியுள்ளது என்றால் அது மிகையன்று.

2015–ஆம் ஆண்டில் கொணரப்பட்ட திருத்தச் சட்டம்:

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் வகைமுறைகள் சிலவற்றை எளிமைப்படுத்தும் முகமாக இதில் 2015–ஆம் ஆண்டில் மேலும் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இதற்காக **நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015 [The Companies (Amendment) Act, 2015]** என்றொரு திருத்தச் சட்டத்தை நமது பாராளுமன்றம் இயற்றியது. மொத்தம் 23 சட்டப்பிரிவுகள் கொண்ட இத்திருத்தச் சட்டம் 25–05–2015–ஆம் தேதியில் இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று, 26–05–2015 தேதியில் இந்திய அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டது. இதில் 1 முதல் 12 வரையுள்ள பிரிவுகளும், 15 முதல் 23 வரையுள்ள பிரிவுகளும் 29–05–2015–ஆம் தேதி முதல் செயல்விளைவுக்கு (அமலுக்கு) வந்தன.

இவ்வாறு 2013 மற்றும் 2015–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் அமைந்த நிறுவனங்கள் சட்டத்தையே நாம் இந்நூலில் காண உள்ளோம்.

---

1. '2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம்' என்பதை, சுருக்கமாக நாம் இந்நூலில் '2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டம்' என்றும், 'நிறுவனங்கள் சட்டம், 2013' என்றும், 'நிறுவனச் சட்டம்' என்றும் காண உள்ளோம் என்பதை கவனத்தில் கொள்க.

நிறுவனங்கள் சட்டம், 2013 – சிறப்பம்சங்கள்
[The Companies Act, 2013 - Salient Features]

2

நிறுவனங்கள் சட்டம், 2013 – பின்னணி :

நமது பாராளுமன்றம் அவ்வப்போது கொண்டு வந்த திருத்தச் சட்டங்களால் 1956–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தின் வகைமுறைகள் 2006–ஆம் ஆண்டு வரை பல முறை திருத்தப் பட்டது. இந்நிலையில் 2009–ஆம் ஆண்டில் நிறுவனங்கள் (திருத் தச்) சட்டமுன்வடிவு [The Companies (Amendment) Bill, 2009] பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1956–இன் நிறுவனங்கள் சட்டம் முழுவதையும் சீராய்வு செய்யும் நோக்கில் அமைந்த இச்சட்ட முன்வடிவு, ஒப்புதலுக்காக பாராளுமன்ற நிலைக் குழுவுக்கு அனுப்பப் பட்டது. இதை பரிசீலித்த நிலைக் குழு தனது அறிக்கை யில் பல்வேறு பரிந் துரைகளைச் செய் தது. பங்குதாரர்கள் பலரும் முக்கிய ஆலோசனைகளை முன் வைத்தனர்.

இவற்றின் அடிப்படையில் மேற்படி 2009–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவை மைய அரசு திரும்பப் பெற்றுக் கொண்டு, சீரமைக்கப் பட்ட வடிவில் புதிய நிறுவனங்கள் சட்டமுன்வடிவு ஒன்றை பாராளுமன்றத்தில் 2011–ஆம் ஆண்டில் [The Companies (Amendment) Bill, 2011] அறிமுகப்படுத்தி யது. இதன் மீதான விவாதத்திற்குப் பிறகு, இது மக்களவையால் 2012–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 18–ஆம் நாளில் நிறைவேற்றப்பட்டது; இதையடுத்து இது 2013–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள், 8–ஆம் நாளில் மாநிலங்களவையால் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது. இவ்வாறு இரு அவைகளாலும் நிறை வேற்றப்பட்ட இச்சட்டமுன்வடிவு **'2013-ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம்'** (The Companies Act, 2013) என்ற சட்டமாக நிலைபெற்றது.

இது இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவை 2013–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29–ஆம் நாளில் பெற்று, அதற்கு அடுத்த நாளிலிருந்து அதாவது 30–ஆம் தேதியிலிருந்து செயல்விளைவுக்கு வந்தது.

நிறுவனங்கள் சட்டம், 2013 - சிறப்பம்சங்கள் :

1. 29 அத்தியாயங்களாக பிரிக்கப்பட்ட 2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தில் மொத்தம் 470 சட்டப்பிரிவுகள் அடங்கியுள்ளன. 7 அட்டவணைகள் (Schedules) பின்னிணைப் பாக இணைக்கப்பட்டுள்ளன. இதற்கு முந்தைய 1956–இன் நிறுவனங்கள் சட்டத்தில் 658 சட்டப்பிரிவுகளும், 15 அட்டவணைகளும் இருந்தன. அதாவது முந்தைய சட்டத்தில் இருந்த பயனற்ற, தற்கால வணிகச் சூழலுக்கு ஒவ்வாத 188 சட்டப் பிரிவுகளும், 8 அட்டவணைகளும் இப்புதிய சட்டத்தில் விடப்பட்டுவிட்டன.

2. பல்வேறு புதிய அத்தியாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, பதிவு பெற்ற மதிப்பீட்டாளர்கள் (Registered Valuers - Ch. XVII), அரசாங்க நிறுவனங்கள் (Government Companies - Ch. XXIII), நிதி (Nidhis- Ch. XXVI) , தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (National Company Law Tribunal - Ch.XXVII), சிறப்பு நீதிமன்றங்கள் (Special Courts - Ch. XXVIII) ஆகியவற்றைக் கூறலாம்.

3. நிறுவனத்தில் அவ்வப்போது பயன்படுத்தப்பட்டு வந்த பல்வேறு சொற் களுக்கும் சொற்றொடர்களுக்கும் முந்தைய நிறுவனச் சட்டத்தில் வரையறை (definition) தரப்படவில்லை. இந்த வெற்றிடம் தற்போது இந்த 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனச் சட்டத்தால் நிரப்பப்பட்டுவிட்டது. இச்சட்டத்தின் பிரிவு 2–இல் 30–க்கும் அதிகமான புதிய வரையறைகள் உள்ளடங்கியுள்ளன.

4. **'ஒரு நபர் நிறுவனம்'** என்ற கருத்துருவை (Concept of One

Person Company - OPC) இப்புதிய சட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதாவது ஒரே ஒரு நபரை உறுப்பினராகக் கொண்ட தனியார் வரம்புடைய நிறுவனம் (private limited company having only one person as a member) இவ்வாறு அழைக்கப்படுகிறது [பிரிவு 2(62)].

5. 2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தின் மற்றொரு முக்கிய சிறப்பம்சம் யாதெனில், இது ஒரே சீர்மையான நிதியாண்டை (uniform financial year) வருத்துரைத்துள்ளது. அதாவது நிறுவனங்கள் அனைத்தும் ஒருசில விதி விலக்குகளுக்கு உட்பட்டு தங்கள் நிதியாண்டை ஏப்ரல் 1–ஆம் நாள் முதல் மார்ச் 31–ஆம் நாள் வரை கடைப்பிடித்தல் வேண்டும். இது நிறுவனங்கள் தங்கள் நிதிநிலை கணக்கை எளிமையாக பதிவிட பெருமளவில் உதவிகரமாக உள்ளது.

6. முந்தைய 1956–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டப்படி ஒரு தனியார் நிறுவனத்தின் அதிகபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 50 ஆகும். இது தற்போது 2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தால் 200 என அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தனியார் நிறுவனங்களை வலுவாகச் செயல்பட வழிவகுத்துள்ளது.

7. நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் (Memorandum of Association) உள்ள 'நோக்கப் பகுதி' (object clause) 1. முக்கிய நோக்கங்கள், 2. உடனிகழ்வு அல்லது துணை நோக்கங்கள் மற்றும் 3. பிற நோக்கங்கள் என்றிருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை 2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டம் நீக்கிவிட்டது. தற்போதைய சட்டப்படி ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் அந்நிறுவனம் எதற்காக பதிவு செய்யப்பட்டதோ அதற்கான நோக்கங்கள் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும். [பிரிவு 4 (1)(c)]

8. நிறுவனச் சட்டம், 2013–இன்படி நிறுவனத்தின் செயல்முறை விதிகள் **'மாற்றமுடியாததற்கான வகைமுறைகளை'** கொண்டிருக்கலாம் (Articles of a company may contain provisions for entrenchment) [பிரிவு 5 (3)].

9. பொய்யான அல்லது தவறான தகவலை அளித்து, அல்லது முக்கியச் சங்கதிகளை மறைப்பதன் வாயிலாக நிறுவனம் ஒன்று தன்னை பதிவு செய்து கொண்டிருந்தால், அதன் பெயரை நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நேரடியாக நீக்கம் செய்வதற்கு தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயத்திற்கு நிறுவனச் சட்டம், 2013 அதிகாரமளிக்கிறது (பிரிவு 7).

10. நிறுவனத்தின் திட்ட அறிவிப்பில் விடயம் எதையும் சேர்த்தல் அல்லது விடுத்தல் மூலம் தவறான கூற்று அளித்ததற்காக அதன் மீது உரிமை வழக்கு தாக்கல் செய்யப்படலாம் அல்லது வேறு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படலாம் (பிரிவு 37).

11. தனியார் நிறுவனங்கள் 'திட்ட அறிவிப்புக்கு பதிலான அறிக்கை' (Statement in lieu of Prospectus) அளிக்க வேண்டும் என்பது முந்தைய நிறுவனச் சட்டம், 1956–இன் நிலைப்பாடு. இதனை நிறுவனச் சட்டம், 2013 நீக்கி விட்டது. இப்புதிய சட்டத்தின்படி நிறுவனங்கள் விரிவான திட்டஅறிவிப்பு ஒன்றை

வெளியிட வேண்டும். அத்துடன் திட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த நிபந்தனைகள் அல்லது நோக்கங்களை நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் சிறப்புத் தீர்மானத்தின் வாயிலாக பங்குதாரர்கள் அளிக்கும் ஒப்புதல் இல்லாமல் நிறுவனங்கள் மாற்றுதலுக்குள்ளாக்கக் கூடாது.

12. முந்தைய நிறுவனச் சட்டம், 1956-ஆனது நிதி நிறுவனங்கள், பொதுத் துறை வங்கிகள், அட்டவணை வங்கிகள் ஆகியவற்றை மட்டுமே **'ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பை' (Sholf Prospectus)** வெளியிட அனுமதித்தது. தற்போதைய நிறுவனச் சட்டம், 2013-ஆனது எந்தெந்த வகையான நிறுவனங்கள் ஒருமுறைஒதுக்கு திட்ட அறிவிப்பை நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்யலாம் என்று வகுத்துரைக்க **இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்திற்கு (SEBI)** அதிகாரமளிக்கிறது.

13. மின்னணு முறை (electronic) வாயிலாக நிறுவன உறுப்பினர்கள் வாக்களிக்கும் வசதி (பிரிவு 108).

14, ஒரு நிறுவனத்தின் செலுத்தப்பெறாத அல்லது கோரப்படாத கடனீட்டுப்பத்திரத் தொகையானது (Unpaid or unclaimed dividend amount) அட்டவணை வங்கி ஏதேனுமொன்றில் துவக்கப்பட்ட சிறப்புக் கணக்குக்கு மாற்றப் படும். இது **செலுத்தப்பெறாத கடனீட்டுப் பத்திர கணக்கு (Unpaid Dividend Account)** என்று அழைக்கப்படும் (பிரிவு 124)

15. நிறுவனங்கள் தங்கள் பங்குகளை திரும்ப விலைக்கு வாங்கிக் கொள்வது தொடர்பான சட்ட திட்டங்கள் தாராளமயமாக்கப்பட்டுள்ளது. அதாவது, நிறுவனங்கள் தங்களிடம் வைப்பீடு செய்யப்பட்ட தொகைகளை திரும்பத் தருவதில் அல்லது அதன் மீதான வட்டித் தொகைகளை தருவதில், அல்லது கடனீட்டுப் பத்திரங்களை மீட்பதில் அல்லது பங்குதாரர்களுக்கு பங்காதாயத்தைத் தருவதில் ஆகிய இவற்றில் எதில் தவறுகை புரிந்திருந்தாலும், நிறுவனச் சட்டம், 2013-இன்படி அந்நிறுவனங்கள் தங்கள் பங்குகளை திரும்ப விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்.

16. ஒரு நிறுவனம் தனது பிடிப்பில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணை நிறுவனங்களைக் (subsidiary companies) கொண்டிருந்தால், அது தொகுப்பு நிதிநிலை அறிக்கைகளை (consolidate financial statements) சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானதாகும். அதாவது, துணை நிறுவனங்கள் மற்றும் அதனை பிடிப்பில் கொண்டிருக்கும் நிறுவனங்களின் (holding companies) தொகுப்பு நிதிநிலை அறிக்கைகளை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக துணை (பிடிப்பிலுள்ள) நிறுவனம் என்பது அதன் இணை மற்றும் கூட்டு நிறுவனத்தையும் (associate and joint venture company) உள்ளடக்கியதாகும் (பிரிவு 129).

17. வைப்பீடுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான விடயங்களில் வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் (Non-Banking Financial Companies)

தற்போது இந்திய சேம வங்கி (RBI) விதிகளின்படி செயற்படுமே தவிர, நிறுவனச் சட்டம், 2013-இன் வகைமுறைகள்படி அல்ல.

17. ஒரு நிறுவனம் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 18 மாதங்களுக்குள் ஆண்டுப் பொதுக் கூட்டம் (Annual General Meeting - AGM) நடத்தப் பெறுதல் வேண்டும். தற்போது இது 9 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

18. நிறுவனங்களின் கணக்குகளை பராமரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக நிறுவனச் சட்டம், 2013-ஆனது மிக முக்கியமானதொரு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. அதாவது, நிறுவனங்கள் தங்கள் கணக்கு வழக்குப் பேரேடுகளை மின்னணு முறை வடிவில் (electronic form) பராமரித்தல் வேண்டும். மேலும் புதிய வகைமுறைகள்படி, நிறுவனங்கள் தயாரிக்கும் மற்றும் தாக்கல் செய்யும் நிதி அறிக்கைகள், இருப்புச் சீட்டு, இலாப மற்றும் நட்டக் கணக்கு, ரொக்க வரவு செலவு அறிக்கை ஆகியன ஓர் தொகுப்பு அறிக்கை வடிவில் (consolidated form) இருக்க வேண்டும். இவற்றை முந்தைய சட்டப்படி தனித்தனியாக தாக்கல் செய்ய வேண்டும் என்ற அவசியம் தற்போதைய சட்டப்படி இல்லை.

19. நிறுவனச் சமூகப் பொறுப்புடைமை (Corporate Social Responsibility - CSR) தொடர்பாக ஓர் புதிய வகைமுறை நிறுவனச் சட்டம், 2013-ஆல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அளவு இலாபமீட்டும் நிறுவனங்கள், மக்களின் சமூக மற்றும் பொருளதார நலனுக்காக குறிப்பாக கைவிடப்பட்டவர்கள் அல்லது புறக்கணிக்கப்பட்டவர்களின் நலனுக்காக கொள்கைகளை வகுத்து, அதற்குரிய செயல்களை ஆற்ற வேண்டும் (பிரிவு 135). சுருங்கச் சொன்னால், நிறுவனங்கள் தங்கள் தொழில் நலனுக்கு மட்டுமல்லாமல் சமூக நலனுக்கும் பொறுப்புடையதாக செயலாற்ற வேண்டும்.

20. உள்ளக தணிக்கையை (internal audit) பட்டய கணக்காயர்/செலவினக் கணக்கீட்டு கணக்காயர்/இயக்குநர் வாரியம் தீர்மானிக்கும் அத்தகு தொழிலர்கள் செய்தல் வேண்டும் என்பது குறிப்பிட்ட சில வகையான நிறுவனங்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது (பிரிவு 138).

21. தணிக்கையர்கள் மோசடியான முறையில் செயல்பட்டுள்ளார்கள் என்றோ, அல்லது அவர்கள் நிறுவனம் அல்லது அதன் அலுவலர்கள் அல்லது இயக்குநர்களின் மோசடிக்கு உடந்தையாக அல்லது அவர்களுடன் வஞ்சகக் கூட்டாக செயல் பட்டுள்ளார்கள் என்றோ தீர்ப்பாயம் மனநிறைவடைந்தால், அது தணிக்கையர்களை மாற்றும்படி சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ஏவுரைக்கலாம் (பிரிவு 140).

22. வரம்புடைய பொறுப்புக் கூட்டாளிகள் (Limited Liability Partners) தணிக்கையர்களாக நியமனம் செய்யப்படலாம் (பிரிவு 141).

23. தணிக்கையர்கள் சிலவகை பணிகளை செய்தல் ஆகாது (பிரிவு 144).

24. வகுத்துரைக்கப்பட்ட நிறுவனங்கள் சில, குறைந்தபட்சம் ஒரு பெண் இயக்குநரைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும். மேலும் இயக்குநர் வாரியத்தின்

இயக்குநர்களில் ஒருவர் முந்தைய பட்டிகை ஆண்டில் (calendar year) 182 நாட்களுக்குக் குறையாமல் இந்தியாவில் தங்கியிருந்திருக்க வேண்டும் (பிரிவு 149).

25. வகுத்துரைக்கப்படும் பட்டியல் நிறுவனங்கள் மற்றும் வேறு வகையான நிறுவனங்கள் பின்வரும் இயக்குநர்கள் குழுக்களை கொண்டிருத்தல் கட்டாயமான தாகும். அவை, (அ) தணிக்கைக் குழு, (ஆ) பணி அமர்விப்பு மற்றும் ஊதியக் குழு, (இ) பங்குதாரர்களின் தொடர்புக் குழு (பிரிவு 177 மற்றும் 178).

26. அரசியல் கட்சிகளுக்கு கொடுக்கும் தொகையின் அளவு (contributions) ஏற்கனவே இருந்த 5 விழுக்காட்டிலிருந்து 7.5 விழுக்காடாக உயர்த்தப் பட்டுள்ளது (பிரிவு 182).

27. ஒரு நபர் நிறுவனம் (One Person Company) ஈடுபடும் ஒப்பந்தம் தொடர்பாக ஒரு புதிய வகைமுறை பிரிவு 193–இல் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, ஒரு நபர் நிறுவனத்துக்கும் அதன் ஒரே ஒரு உறுப்பினருக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் அல்லது நடவடிக்கைகள் எந்த முறையில் இருக்க வேண்டும் என்பது குறித்து இப்பிரிவு விளக்குகிறது. முந்தைய சட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு நபர் நிறுவனம் என்பதே கிடையாது.

27. நிறுவனச் சொத்துகள் தொடர்பாக அதனுள் இருப்போர் வணிகம் செய்வதை பிரிவு 195 தடுக்கிறது (Prohibition of insider trading of securities).

21. ஒரு நிறுவனம் கொண்டிருக்க வேண்டிய இயக்குநர்களின் உச்ச அளவு எண்ணிக்கை 12–லிருந்து 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதே போன்று முந்தைய நிறுனச் சட்டம், 1956–இன்படி, ஒருவர் அதிகபட்சம் 15 நிறுவனங்களில் இயக்குநராக இருக்கலாம். இது தற்போதைய நிறுவனச் சட்டம், 2013–இன்படி 20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த 20 நிறுவனங்களில் அவர் பத்துக்கு மேற்பட்ட பொது நிறுவனங்களில் (Public Companies) இயக்குநராக இருக்கக் கூடாது.

22. நிறுவனச் சட்டம், 2013–இன்படி, நிறுவனமொன்று ஓராண்டில் குறைந்தபட்சம் நான்கு கூட்டங்களை நடத்த வேண்டும். இவ்வாறு அடுத்தடுத்து நடக்கும் கூட்டங்களுக்கு இடையிலான இடைவெளி 120 நாட்களுக்கு மிகக் கூடாது. மேலும் இயக்குநர் வாரியக் கூட்டங்களில் இயக்குநர்கள் காணொளி கூட்டமர்வு (video conferencing) வாயிலாக அல்லது ஒலி–ஒளி முறை (audio-visual mode) வேறெதன் மூலமாக கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் ஒரு நிறுவனம் காலாண்டுக்கு ஒருமுறை கூட்டம் நடத்த வேண்டும் என்று முந்தைய 1956–ஆம் ஆண்டு சட்டம் கூறிய நிலைப்பாடு, தற்போது நிறுவனங்களின் வசதிக்கேற்றவாறு மாற்றப்பட்டுள்ளது.

23. முந்தைய சட்டத்தில் '**கடன்**' (loan) என்ற பதத்தில் **கடனீட்டுப் பத்திரங்களும் (debentures)** அடங்கியிருந்தன. தற்போதைய சட்டத்தின் பிரிவு 186–இன்படி கடன் என்பதில் கடனீட்டுப்பத்திரங்கள் அடங்காது என்று வகை செய்யப்

பட்டுள்ளது. மேலும் கொடுக்கப்பட்ட கடன்களின் முழு விவரங்கள், செய்யப்பட்ட முதலீடு அல்லது கொடுக்கப்பட்ட பொறுப்புறுதி அல்லது அளிக்கப்பட்ட சொத்துப் பிணையம், அத்துடன் அக்கடன் அல்லது பொறுப்புறுதி அல்லது பிணையத்தைப் பெற்றவரால் அவை பயன்படுத்தப்படக் கூடியதன் நோக்கம் ஆகியவற்றின் முழு விவரங்களை ஒரு நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு தனது நிதி அறிக்கைகளின் வாயிலாக தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். நிறுவனங்களுக்கு இடையே பெறப்படும் கடன்கள் அல்லது செய்யப்படும் முதலீடுகள் தொடர்பாக பிரிவு 186 கூறும் வகைமுறைகளை மீறினால் கடுமையான தண்டனை விதிக்கப்படும். அதே நேரத்தில் கடன் அல்லது முதலீட்டை முழுமையாக திரும்பக் கொடுத்துவிடும் நேர்வில் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

24. (அ) நிறுவனங்களின் இயக்குநர்களுக்கு கடன் கொடுப்பதற்கு, (ஆ) சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு, அல்லது (இ) நிறுவனத்தின் அல்லது அதன் துணை நிறுவனத்தில் ஆதாயப் பதவி எதிலும் இயக்குநர் அல்லது வேறு நபர் எவரையும் நியமிப்பதற்கு மைய அரசின் ஒப்புதல் வேண்டும் என்ற வேண்டுறுத்தத்தை இப்புதிய சட்டம், 2013 நீக்கிவிட்டது. முந்தைய சட்டத்தின்படி இதற்கெல்லாம் மைய அரசின் ஒப்புதல் பெற வேண்டியது கட்டாயமான தாகும்.

25. மேலாண் இயக்குநர்/முழு நேர இயக்குநர்/மேலாளர் ஆகியோரை நியமிப்பதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் பற்றி நிறுவனச் சட்டம், 2013–இன் அட்டவணை V கூறுகிறது. இது தொடர்பான வகைமுறைகள் தனியார் நிறுவனங்களுக்கும் பொருந்தும். அட்டவணை V–இல் வகை செய்யப்பட்ட நிபந் தனைகளின்படி மேலாண் அலுவலர்களை நியமனம் செய்ய ஒரு நிறுவனம் தனது சிறப்புத் தீர்மானம் வாயிலாக முடிவு செய்தால், அதற்கு மைய அரசின் ஒப்புதல் தேவையாகும்.

26. நிறுவனமொன்றின் விவகாரங்கள் தொடர்பான விசாரணை அல்லது புலனாய்வு தொடர்பாக மைய அரசால் சுட்டுகை ஒன்று செய்யப்படுகின்ற போது, நிறுவனத்தின் சொத்துக்களை முடக்க நிறுவனச் சட்டம், 2013 தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் வழங்குகிறது. நிறுவனமொன்றின் பங்கு இருப்புகள், பங்குகள், கடனீட் டுப்பத்திரங்கள், காப்புச் சொத்துக்கள், நன்மதிப்பு, மொத்த மதிப்பு, சொத்துக்கள் ஆகியவற்றின் மதிப்பீடானது, மதிப்பீட்டாளராக பதிவு செய்யப்பட்ட நபர் ஒருவரால் செய்யப்படுதல் வேண்டும் (பிரிவு 247).

27. நலிவுற்ற நிறுவனங்களின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வு (Revival and Rehaibilitation of sick companies) தொடர்பான வகைமுறைகளில் முக்கியத் திருத்தங்களை இப்புதிய சட்டம் கொண்டு வந்துள்ளது (பிரிவுகள் 253 முதல் 269 வரை).

28, நிறுவனமொன்றின் கலைப்பானது தீர்ப்பாயத்தின் ஆணை வாயிலாக அல்லது தன்னிச்சையாக செய்யப்படலாம் (Winding up of a company may be

either by the order of the Tribunal or voluntary) (பிரிவு 270)

29. நிறுவனக் கலைப்பதிகாரிகள் மற்றும் அவர்களது நியமனங்கள் (Company Liquidators and their appointments) தொடர்பாக பல்வேறு புதிய வகைமுறைகள் இப்புதிய சட்டத்தால் செய்யப்பட்டுள்ளன (பிரிவு 275).

30. நிறுவன கலைப்பதிகாரியால் கலைக்கப்பட்ட நிறுவனத்தின் கடன் சுமை சேர்ந்த சொத்துக்களின் பொறுப்புத்துறப்பு தொடர்பாக முந்தைய நிறுவனச் சட்டம், 1956–இன்படி நீதிமன்றத்தால் செயற்படுத்தப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பணிகள் தற்போது புதிய நிறுவனச் சட்டம், 2013–இன்படி தீர்ப்பாயத்திற்கு மாற்றப் பட்டுள்ளன. (பிரிவு 333).

31. இந்தியாவிற்கு வெளியே கூட்டுருவாக்கப்பட்ட (பதிவு செய்யப்பட்ட) நிறுவனம் (Company incorporated outside India) பற்றிய வகைமுறைகள் இப் புதிய சட்டத்தால் சீரமைக்கப்பட்டுள்ளன (பிரிவுகள் 379 முதல் 393)

32. இன்று வணிக நடவடிக்கைகளை தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையதளம் வாயிலாக இலகுவாக செய்ய முடிகிறது. இவற்றை நிறுவனங்களும் தங்கள் வணிக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளும் முகமாக ஒரு சட்ட அங்கீகாரத்தை நிறுவனச் சட்டம், 2013–இன் பிரிவு 400 வழங்குகிறது. இதன்படி, பிரிவு 398 மற்றும் 399–இல் கூறப்பட்டுள்ளவாறான விண்ணப்பங்கள், ஆவணங்கள் ஆகியவற்றை தாக்கல் செய்தல், பதிவாளர் வைத்திருக்கும் ஆவணங்களை ஆய்வு செய்தல், அவரிடம் ஆவணங்களை முன்னிடுதல், ஆவணங்களின் சாட்சியம் பெறுதல் ஆகியவற்றை தகவல் தொழில் நுட்பம் மற்றும் இணையதள வசதியைப் பயன் படுத்தி செய்யலாம். நேர்முகமாக தோன்றி மேற்கண்ட செயல்களைச் செய்யும் முறைக்குப் பதிலாக, அதற்கும் கூடுதலாக அல்லது முழுதளவில் இவ்வாறு மின்னணு முறையின் வாயிலாக செய்வதை இப்பிரிவு அனுமதிக்கிறது (electronic form to be the exclusive, alternative or in addition to physical form).

33. **"நிதி"** (Nidhi) என்ற பெயரில் நிறுவனமொன்று பதிவு செய்யப் படுவதை இப்புதிய சட்டம் அனுமதிக்கிறது. இங்கு "நிதி" என்றால் சிக்கனம் மற்றும் சேமிக்கும் (thrift and savings) பழக்கத்தை தனது உறுப்பினர்களிடையே வளர்க் கும் நோக்கத்துடன் பதிவு செய்யப்படுகின்ற ஓர் நிறுவனம் என்று பொருள்படும் (பிரிவு 406).

34. மைய அரசு (அதாவது தீர்ப்பாயம்) அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப் பாயத்தின் முன் எழும் வழக்கு நடவடிக்கைகளில் தரப்பினர்களின் வேண்டு கோளுக்கு இணங்க சமரசத் தீர்விற்காக **இடைநின்றிணைத்தல் மற்றும் சமரச முறை வல்லுநர்கள் அடங்கிய குழு (Mediation & Conciliation panel of experts)** ஒன்றைக் கட்டமைக்க புதிய நிறுவனச் சட்டம், 2013 வகை செய்கிறது (பிரிவு 422).

35. உயர் நீதிமன்ற தலைமை நீதியரசருடன் கலந்தாய்ந்து சிறப்பு

நீதிமன்றங்களை (Special Courts) நிறுவ மைய அரசுக்கு இப்புதிய சட்டம் அதிகாரமளித்துள்ளது (பிரிவு 435).

36. மூன்று ஆண்டுகளுக்கு மிகாத சிறைவாசம் விதித்து தண்டிக்கத்தக்க குற்றங்களுக்கான சுருக்கமுறை வழக்கு நடவடிக்கைகளை (summary proceedings) விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அதிகாரம் படைத்தது (பிரிவு 436).

37. நிறுவனம் அல்லது கூட்டுருவாக்கப்பட்ட அமைப்பின் விவகாரங்கள் தொடர்பாக செய்யப்படும் '**மோசடி**'–யை (fraud) வரையறுத்து நிறுவனச் சட்டம், 2013 ஓர் புதிய வகைமுறையைக் கொண்டு வந்துள்ளது. இதற்கு கடுமையான தண்டனைக்கும் இச்சட்டம் வகை செய்கிறது. முந்தைய சட்டத்தில் மோசடிக்கான வரையறை எங்கும் தரப்படவில்லை. அதுபோல் அதற்கான தண்டனைக்கும் தனியாக வகை செய்யப்படவில்லை (பிரிவு 447).

38. **'செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம்' (Dormant Company)** தொடர்பாக புதிய வகைமுறை ஒன்றை நிறுவனச் சட்டம், 2013 கொண்டு வந்துள்ளது. அதாவது, நிறுவனச் சட்டப்படி அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்று, எதிர்கால திட்டத்திற்காக அல்லது சொத்து அல்லது அறிவுசார் சொத்து ஒன்றை வைத்திருப்பதற்காக அல்லது அந்நிறுவனத்திற்கு குறிப்பிடத்தக்க கணக்கு வழக்கு நடவடிக்கைகள் ஏதும் இல்லாமல் இருப்பின், அது தனக்கு 'செயல் நிறுத்தி வைத்திருக்கிற நிறுவனம்' என்ற தகுநிலையைத் (status) தருமாறு கோரி நிறுவனங்களின் பதிவாளரிடம் விண்ணப்பம் செய்யலாம். இப்படிப்பட்ட நிறுவனங்கள் குறித்த பதிவேடு ஒன்றை பதிவாளர் பராமரித்து வருதல் வேண்டும். ('செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம்' என்றால் பின்னிட்டு செயல்படும் நோக்கத்திற்காக தற்காலம் செயல்படாமல் இருக்கும் நிறுவனம் என்று பொருள்படும்.) (பிரிவு 455)

39. விதிகள் இயற்றும் அதிகாரத்தை 2013–இன் நிறுவனச் சட்டம் மைய அரசுக்கு அளித்துள்ளது. இந்த அதிகாரத்தின் கீழ் மைய அரசு இயற்றும் விதிகள் எவற்றையேனும் மீறினால், அது அபராதம் விதித்து தண்டிக்கப்படத்தக்கதாகும் (பிரிவு 469).

40. நிறுவனச் சட்டத்தின் வகைமுறைகளை மீறினால் அல்லது முரணாக நடந்தால் அது குற்றச் செயலாகும். இதற்கான தண்டனையின் அளவு முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தைக் காட்டிலும் இந்த புதிய 2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தில் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிறுவனச் சட்ட வகைமுறைகளை நிறுவனங்கள் கடைப்பிடிப்பதை கண்டிப்பாக வலியுறுத்தவும், மேலும் நிறுவன மேலாண்மையிலும், செயல்பாடுகளிலும் நிறுவனங்கள் பொறுப்புடையதாக விளங்க வேண்டும் என்பதை உறுதி செய்யவும் நோக்கமாகக் கொண்டே 2013–ஆம் ஆண்டின் இப்புதிய நிறுவனச் சட்டத்தால் கொண்டு வரப்பட்ட பல்வேறு மாற்றங்கள் அமைந்துள்ளன என்றால் அது மிகையன்று.

-oOo-

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015 – முக்கிய அம்சங்கள்

[The Companies (Amendment) Act, 2015 - Key Points]

3

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015 - பின்னணி:

1956–ஆம் ஆண்டு பழைய நிறுவனங்கள் சட்டத்தை நீக்கறவு செய்துவிட்டு, 2013–ஆம்ஆண்டில் புதிய நிறுவனங்கள் சட்டத்தை நமது பாரரளு மன்றம் இயற்றியது. அதில் நிறுவனங்கள் இலகுவாக வணிகம் செய்வதற்கு இருந்த சில இடர்ப்பாடுகளை நமது நாட்டின் பெரும் நிறுவன அதிபர்கள் பலரும் அரசுக்கு அவ்வப்போது சுட்டிக்காட்டி வந்தனர். தொடர்ந்து அந்த இடர்ப்பாடுகளை களையும் வண்ணம் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் வகைமுறைகள் சிலவற்றில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டியது அவசியம் என்றும் அரசிடம் முறையிட்டனர். இதை ஆய்ந்தறிந்த அரசு, 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தை

திருத்தும் வகையில் 2014–ஆம் ஆண்டில் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு [Companies (Amendment) Bill, 2014] பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. இதை மக்களவை 17–12–2014–ஆம் தேதியிலும், மாநிலங்களவை 13–05–2015–ஆம் தேதியிலும் நிறைவேற்றியது. இதையடுத்து இது 25–05–2015–ஆம் தேதியில் நமது குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று, 26–05–2015–ஆம் தேதியில் அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டு, **நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015 [The Companies (Amendment) Act, 2015]** என்ற பெயருடன் செயல் விளைவுக்கு வந்தது. மொத்தம் 23 சட்டப்பிரிவுகள் கொண்ட இத்திருத்தச் சட்டத்தின் 1 முதல் 12 வரையுள்ள பிரிவுகளும், 15 முதல் 23 வரையுள்ள பிரிவுகளும் 29–05–2015–ஆம் தேதி முதல் செயல்விளைவுக்கு (அமலுக்கு) வந்தன.

நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015 - முக்கிய அம்சங்கள் :

1. **செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (Paid up share capital):** 2013–ஆம் ஆண்டு சட்டப்படி ஒரு தனியார் நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டுமென்றால் அது பிரிவு 2(68)–இன்படி குறைந்தபட்சம் ரூபாய் ஒரு இலட்சத்தை செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகக் (paid up share capital) கொண்டிருக்க வேண்டும். தற்போது 2015–ஆம் ஆண்டு திருத் தச் சட்டத்தின்படி இந்த மூலதன வரம்பில்லை. அவ்வாறே ஒரு பொது நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டுமென்றால் அது பிரிவு 2(71)–இன்படி குறைந்தபட்சம் ரூபாய் ஐந்து இலட்சத்தை செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகக் கொண்டிருக்க வேண்டும். 2015–ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின்படி இந்த மூலதன வரம்பு தேவையில்லை. எனவே தனியார் அல்லது பொது நிறுவனம் தொடங்க எவ்வளவு ரூபாய் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக இருக்க வேண்டும் என்ற குறைந்தபட்ச வரம்பு திருத்தச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிட்டது.

2. **பொது முத்திரை (Common seal) :** 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவுகள் 9, 12 மற்றும் 223–இன்படி ஆவணங்களில் நிறுவனத்தின் பொது முத்திரையைப் பதிக்க வேண்டியது கட்டாயமானதாகும். தற்போது இது மேற்படி திருத்தச் சட்டத்தால் விருப்பப்பூர்வமாக்கப்பட்டுவிட்டது. இதனால் பிரிவு 22–இன்படி நிறுவனத்தின் மாற்றுச் சீட்டு மற்றும் பிரிவு 46(1)–இன்படி பங்குச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களில் அந்நிறுவனத்தின் இரு இயக்குநர்கள் அல்லது இயக்குநர் ஒருவரும் நிறுவனச் செயலாளரும் கையொப்பமிட்டால் போதுமானதாகும். நிறுவனத்தின் பொது முத்திரையைப் பதிக்க வேண்டியது கட்டாயமில்லை.

3. **தொழில் தொடங்குதல் (Commencement of business):** 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 11–இன்படி ஒரு நிறுவனம் தனது தொழிலைத் தொடங்குவதற்கு முன் அதற்கான சான்றிதழ் பெற வேண்டும். அதற்குத் தேவையான விளம்புகைகளை தாக்கல் செய்ய வேண்டும். தற்போது 2015–ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தால் இந்த நடைமுறை நீக்கப்பட்டுவிட்டது. மேற்படி பிரிவு 11 விடப்பட்டுவிட்டது.

4. வைப்பீடுகளை பெறுவதில் மீறுகை (Violation of Acceptance of Deposits): 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 76–க்குப் பிறகு பிரிவு 76A என்ற புதிய பிரிவு 2015–ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தால் சேர்க்கப்பட்டுள்ளது. வைப்பீடுகளைப் பெறுவது, புதுப்பிப்பது, திருப்பிச் செலுத்துவது தொடர்பாக 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் கடுமையான வகைமுறைகளை கொண்டு வந்தது. ஆனால் இதில் மீறுகை புரிந்தால் அதற்கான தண்டனைகளை வரையறுக்க வில்லை. தற்போது 2015–ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் வைப்பீடுகளைப் பெறுதல் தொடர்பான வகைமுறைகளை ஒரு நிறுவனம் மீறினால் அதற்கு கடுமையான தண்டனைகளை புதிய பிரிவு 76A வாயிலாக வரையறுத்துள்ளது.

5. பதிவாளரிடம் தாக்கல் செய்யப்படும் தீர்மானங்களை பார்வையிடல் (Inspection of Resolutions filed with the Registrar): 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 117 உடன் இணைந்து வாசிக்கத்தக்க பிரிவு 399–இன் கீழ் நிறுவனங்கள் பதிவாளரிடம் தாக்கல் செய்யும் தங்கள் சில தீர்மானங்களை பொதுமக்கள் பார்வையிடலாம். மேலும் அவற்றின் நகல்களையும் எடுத்துக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக சிறப்புத் தீர்மானங்கள், மேலாண் இயக்குனரை நியமனம் செய்வதற்கான வரைவுரைகள் அடங்கிய தீர்மானம், நிறுவனக் கலைப்பு தீர்மானங்கள், கடன் வாங்குதலுக்கான தீர்மானம் ஆகியன பொது மக்களின் பார்வைக்கு உட்பட்டவை. ஆனால் தற்போது மேற்படி திருத்தச் சட்டத்தின் காரணமாக அத்தீர்மானங்களை குறிப்பாக நிறுவனத்தின் தொழில் தொடர்பான விடயங்களுக்கான தீர்மானங்களை பொது மக்கள் பார்வையிட முடியாது. மேலும் அவற்றின் நகல்களையும் பெற முடியாது. இது பிரிவு 117(3)–இல் கொண்டு வரப்பட்ட திருத்தமாகும்.

6. பங்காயதாயம் (Divident): வகுத்துரைக்கப்பட்ட சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒவ்வொரு நிதியாண்டும் நிறுவனங்கள் தங்கள் பங்காயதாயத்தை விளம்பலாம் என்பது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 123 கூறும் நிலைப்பாடாகும். தற்போது 2015–ஆம் ஆண்டு திருத்தச் சட்டமானது மேற்படி பிரிவு 123–இல் புதிய வரம்புரை வாசகம் ஒன்றை சேர்த்துள்ளது. அதன்படி, ஒரு நிறுவனம் தனது நட்டங்கள் மற்றும் தேய்மானங்களை முந்தைய ஆண்டுகளிலிருந்து கொண்டு வந்து அவற்றை அந்நிறுவனத்தின் இலாபங்களுக்கு எதிராக வரவு வைக்காமல், சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான (நடப்பு ஆண்டிற்கான) பங்காதாயத்தை விளம்புகை செய்ய முடியாது.

7. மோசடி குறித்து தணிக்கையாளர் புகாரளித்தல் (Reporting by Auditors in respect of Fraud): நிறுவனச் சட்டம், 2013 –இன்படி நிறுவன அலுவலர்கள் அல்லது பணியாளர்கள் எவரேனும் மோசடி புரிந்திருப்பதாக அந்நிறுவனத்தின் தணிக்கையாளர் நம்புவதற்கு காரணம் கொண்டிருந்தால், அம்மோசடியில் உள்ளடங்கியுள்ள தொகை எவ்வளவாக இருந்தாலும், அது குறித்து மைய அரசிடம் புகார் அளிக்க வேண்டிய கடப்பாடு அத்தணிக்கையாளருக்கு உண்டு. தற்போது 2015–ஆம் ஆண்டு திருத்தச் சட்டமானது மோசடி குறித்து மைய அரசு, அல்லது

தணிக்கைக் குழு அல்லது இயக்குநர் வாரியத்திடம் புகார் தெரிவிப்பதற்கு சில எல்லைகளை வகுத்துள்ளது. அத்தகு எல்லைகளுக்கும் கீழாக வரும் மோசடி நிகழ்வுகளை 2013–ஆம் ஆண்டு சட்டப்படி மைய அரசிடம் புகார் அளிக்க வேண்டிய கட்டாயத்திற்குப் பதிலாக தணிக்கைக் குழு அல்லது இயக்குனர் வாரியத்திடம் தணிக்கையாளர் புகார் அளிக்க வேண்டும். மேலும் அதை நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும். இது தணிக்கையாளர்களுக்கு உள்ள நிருவாகச் சுமையை குறைத்துள்ளது எனலாம். இது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவுகள் 134, 143 மற்றும் 177–இல் கொண்டு வரப்பட்ட திருத்தங்களின் சாரமாகும்.

8. **பிரிவு 185-க்கு விலக்குகள் (Exemptions to Section 185):** ஒரு நிறுவனம் தனது இயக்குநருக்கு அல்லது அக்கறையுடைய நபர்கள்/நிறுவனங்கள் வேறு எதற்கும் கடன் அளிப்பதன் மீது பிரிவு 185–இன் கீழ் தடைகளை வகுத்துரைத்துள்ளது. இதில் தற்போது மேற்படி திருத்தச் சட்டத்தின் வாயிலாக சில விதிமுறைகள் வகுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றின்படி, பிடிப்பிலுள்ள தனது சொந்த துணை நிறுவத்திற்கு பிடிப்பு நிறுவனம் வழங்கும் கடன்கள், பொறுப்புதிகள், பிணையங்கள் ஆகியவற்றுக்கு பிரிவு 185 கூறும் தடைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அது போல் துணை நிறுவனம் பெற்ற கடனுக்காக நிதி நிறுவனம் ஒன்றுக்கு பிடிப்பு நிறுவனம் அளிக்கும் பொறுப்புறுதி (உத்தரவாதம்) அல்லது பிணையத்திற்கும் விலக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால் அத்துணை நிறுவனம் பெறும் கடனானது அது தனது முதன்மைத் தொழிலுக்கு பயன்படுத்துவதாக இருக்க வேண்டும்.

9. **தொடர்புடைய தரப்பினர் நடவடிக்கைகளுக்கு சிறப்புத் தீர்மானம் தேவையில்லை (Relaxations to Related Party Transactions):** 2013–ஆம் ஆண்டு சட்டப்படி, தொடர்புடைய தரப்பினர் நடவடிக்கைகளுக்கு இயக்குநர் வாரியம் அல்லது பங்குதாரர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். அதாவது பங்குதாரர்களில் நான்கில் மூன்று பங்கினர் (பெரும்பான்மையினர்) ஒப்புதல் அளிக்கும் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். தற்போது இத்தகு நடவடிக்கைகளுக்கு இவ்வாறு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றுவதற்குப் பதிலாக ஒரு சாதாரணத் தீர்மானம் (அதாவது பங்குதாரர்களின் சாதாரண பெரும்பான்மை ஒப்புதல்) நிறைவேற்றினால் போதுமானது என்று 2015–ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் பிரிவு 188–இல் திருத்தம் கொண்டு வந்துள்ளது.

10. **சிறப்பு நீதிமன்றங்கள் (Special Courts):** 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் கீழான குற்றங்களை விசாரிப்பதற்கு சிறப்பு நீதிமன்றங்களை கட்டமைக்க மைய அரசுக்கு பிரிவுகள் 435 மற்றும் 436 அதிகாரமளிக்கின்றன. இதில் ஒரு முக்கியத் திருத்தத்தை 2015–ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் கொண்டு வந்துள்ளது. அதன்படி, இரண்டு ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலான சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கும் குற்றங்களை மட்டுமே சிறப்பு நீதிமன்றம் விசாரித்தல் வேண்டும். பிற குற்றங்கள் அனைத்தையும் பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர் விசாரித்தல் வேண்டும்.

-oOo-

நிறுவனம் என்றால் என்ன?

பலர் ஒன்று சேர்ந்து வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் அமைக்கப்படும் கூட்டமைப்பு 'நிறுவனம்' **(Company)** என்றழைக்கப்படும். அவ்வாறு ஒன்று கூடியவர்கள் ஆதர வாளர்கள் **(Subscribers)** என்றும், நிறுவனம் பதிவு செய்யப்பட்ட பிறகு அவர்கள் பங்குரிமையாளர்கள் அல்லது பங்குதாரர்கள் **(Share holders)** அல்லது உறுப்பினர்கள் **(Members)** என்றும் குறிப்பிடப் படுகின்றனர்.

ஒரு நிறுவனம் பதிவு செய்யப்பட்டவுடன், அது ஒரு தனியான செயற்கை நபராக அல்லது சட்டமுறையான நபராக செயல்படுகிறது. ஒரு நிறுவனம் காலவரையின்றி நிலையாக இயங்குகிறது.

ஒரு தனியார் நிறுவனமாயின், அது குறைந்தபட்சம் இருவரை உறுப்பினர்களாக கொண்டிருக்க வேண்டும். பொது நிறுவனமாயின், அது குறைந்தபட்சம் ஏழு நபர்களை உறுப்பினர்களாக கொண்டிருக்க வேண்டும். இந்த இரு வகையான நிறுவனங்களில், உறுப்பினர்கள் தங்களது பொறுப்பை வரம்புடையதாகவோ **(Limited Liability)** அல்லது வரம்பற்றதாகவோ **(Unlimited Liability)** அல்லது பொறுப் புறுதியால் வரம்புடையதாக்கப்பட்டதாகவோ **(Limited by Guarantee)** அமைத்துக் கொள்ளலாம். ஒரே ஒரு நபரை உறுப்பின ராகக் கொண்ட ஒரு நபர் நிறுவனத்தையும் **(One Person Company)** தோற்றுவித்துக் கொள்ளலாம்.

மேற்கண்ட தன்மைகளைக் கொண்டதே இன்றைய நிறுவனமா கும். ஒரு நிறுவனத்தின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, 1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதே, நிறுவனச் சட்ட மாகும். இச்சட்டம் தொடர்ந்து பல்வேறு ஆண்டுகளில் திருத்தச் சட்டங் களால் திருத்தியமைக்கப்பட்டது. இதனை மேற்கொண்டு திருத்துவ தற்குப் பதிலாக இன்றைய நவீன வணிகச் சூழலுக்கு ஏற்ற வகையில் புதிதாக ஒரு நிறுவனச் சட்டத்தை இயற்றுவது உகந்தது என்று கருதப் பட்டதால், 2013–ஆம் ஆண்டில் புதிதாக நிறுவனச் சட்டம் **(The Companies Act, 2013)** இயற்றப்பட்டது. மேலும் இதில் 2015–ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தால் திருத்தங்களும் கொணரப்பட்டன. இவை இரண்டும் நிறுவனச் சட்டத்தில் பல வகையான மாற்றங்களை அறிமுகப்படுத்தின. இனி ... ...

நிறுவனத்தின் வரையறையும் அதன் குணஇயல்புகளும் [Definition of a Company and its Characterstics]

4

1. Define a 'Company'. Discuss the characteristics of a Company. ('நிறுவனம்' என்பதை வரையறை செய்து அதன் இயல்புகளை விளக்குக.)

(அல்லது)

Define company and describe the important characteristics of a compnay (நிறுவனம் என்பதை வரையறுத்து ஒரு நிறுவனத்தின் இன்றியமையா குணஇயல்புகளை எடுத்துரைக்கவும்)

(அல்லது)

What is meant by a Company. What are its characteristics? (நிறுவனம் என்பது என்ன? அதன் குணாதிசயங்கள் யாவை?)

(அல்லது)

Define a 'Company'. Explain the advantages and

disadvantages of incorporation of a Company. ('நிறுவனம்' என்பதை வரையறு. நிறுவனமாக இணைக்கப்படுவதால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் விளக்குக.)

(அல்லது)

"The advantages of companies are followed with very few disadvantages". Discuss. ("நிறுவனங்களின் நன்மைகள் சில தீமைகளைத் தொடர்ந்தே அமையும்" - விவாதிக்க.)

நிறுவனம் - சட்டம் தரும் வரையறை (Definition):

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 2 (20)–இல், "**நிறுவனம் என்பது இந்தச் சட்டத்தின்படி அல்லது முந்தைய நிறுவனச் சட்டம் வேறெதன் படியும் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்று பொருள்படும்**"[1] என வரையறை செய்யப் பட்டுள்ளது. இந்த வரையறையில் வரும் "**இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம்**" என்பது 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றும், அது போல், "**முந்தைய நிறுவனச் சட்டம் வேறெதன்படியும் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்**" என்பது தற்போதைய சட்டத் திற்கு முன்பிருந்த 1956–ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்பும் இருந்த வேறெந்த நிறுவனச் சட்டங் களின்படியும் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றும் பொருள்படும்.

எனினும், இவ்வரையறை ஒரு நிறுவனத்தைப் பற்றிய தெளிவான, நேரடியான பொருளைக் கொடுக்கவில்லை என்பதை நாம் இந்த வரையறையை வாசித்த மாத்திரத்திலேயே அறிந்து கொள்ளலாம். எனவே, நிறுவனத்தைப் பற்றி நாம் ஏற்கனவே சென்ற அத்தியாயத்தில் கண்ட தன்மைகளிலிருந்து, ஒரு நிறுவனத்தை பின்வருமாறு வரையறுக்கலாம். அஃதாவது, "ஒரு நிறுவனம் என்பது பலர் ஒன்று கூடி அமைத்ததும், அதன் உறுப்பினர்களினின்றும் வேறாய் நின்று ஒரு தனி நபராக திகழ்ந்து குறிப்பிட்ட நோக்கங்களுக்கிணங்க காலவரையற்று நிலையாக இயங்கு வதோடு தனக்கென பொது முத்திரை படைத்ததொரு இயக்கமாகும். நிறுவனத்தின் குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை எழுவராயின் அது பொது நிறுவனம் என்றும், இருவராயின் அது தனியார் நிறுவனம் என்றும், ஒருவராயின் அது ஒரு நபர் நிறுவனம் என்றும் குறிப்பிடப்படுகிறது".

நிறுவனச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் நிறுவனங்கள் பெரும்பாலும் வியாபார நிறுவனங்களாக உள்ளன. இருப்பினும் கலை, ஆராய்ச்சி, சமயம் அல்லது

1. **"Company"** means a company incorporated under this Act or under any previous company Law - **Section 2(20) of the Companies Act, 2013.**

பிற பயனுள்ள நோக்கங்களைக் கொண்ட அமைப்பாகவும் ஒரு நிறுவனம் இருக்கலாம்.

நிறுவனத்தின் குண இயல்புகள் அல்லது முக்கிய அம்சங்கள் (Characteristics or salient features of a Company):

ஒரு நிறுவனத்திற்கு பல்வேறு குண இயல்புகள் உள்ளன. அவற்றில் நன்மைகளைத் (advantages) தரக் கூடியதும் உள்ளன; தீமைகளைத் (disadvantages) தரக் கூடியதும் உள்ளன. அவை பின்வருமாறு:

நன்மைத் தரக்கூடிய இயல்புகள் (Advantages):

1. செயற்கை நபர் (அல்லது) சட்ட நபர் [Artificial Person (or) Legal Person]:

ஒரு நிறுவனம் அதன் உறுப்பினர்களிலிருந்து வேறுபட்டு நின்று, ஒரு தனியான சட்ட நபராக செயல்படுகிறது. இயற்கையான நபர்கள் பலர், உறுப்பினர்களாக ஒன்று கூடி நிறுவனம் எனும் பெயரில் செயற்கையான ஒரு சட்ட நபரை உருவாக்குகின்றனர். இங்கு அவ்வுறுப்பினர்களை, அந்நிறுவனம் தனது கூட்டுருத் திரையால் **(Corporate veil)** மறைத்துக் கொண்டு செயல்படுகிறது. எனவேதான் **'கூட்டுருத் திரை'** என்றழைக்கப்படும் நிறுவனத்தின் திரை **(Corporate veil),** அதன் உறுப்பினர்கள் அனைவரையும் மறைத்து சட்டத்தின் முன்பு அதனை ஒரு தனி நபராக செயல்படச் செய்கிறது என்கிறோம். மேற்கண்டவாறு, ஒரு நிறுவனத்தை இயக்குபவர்கள், இயற்கை நபர்கள் என்றாலும், அவர்களது இறப்பின் காரணமாக, அவர்கள் அமைத்த நிறுவனமும் இறந்துவிடாது. அது ஒரு செயற்கை நபராக, நிலையான வாழ்வு பெற்றதாக உள்ளது. எனவே ஒரு நிறுவனத்திற்கு இன்னார்தான் உரிமையாளர் என்று கூறிவிட முடியாது. அந்நிறுவனமே, அதற்கு உரிமையாளராக உள்ளது. ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினராக இருந்தபோதிலும், நிறுவனம் அக்குடும்பத்தினின்று முற்றிலும் வேறுபட்ட ஒரு தனி நபர் ஆகும். இந்நிலையினை விளக்கும் முகமாக பின்வரும் ஒரு முக்கிய வழக்கு அமைந்தது. [ஆனால் இவ்விதி தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. வினா எண். 2–ல் விரிவாகக் காண்க].

Saloman v. Saloman & Co. Ltd.[1]

சாலமன் என்பவர் காலணி வியாபாரம் செய்து வந்தார். வியாபாரம் மிகவும் நன்றாக நடந்து கொண்டிருந்த பொழுது, நிறுவனத்தின் நன்மைகளை அடைவதற்கு அவர், அவரது மனைவி, அவருடைய மக்கள் அய்ந்து பேர், மொத்தம் ஏழு பேர் கொண்ட நிறுவனம் ஒன்றை நிறுவினார். பின்னர் தனது வியாபாரத்தை அந்நிறுவனத்திற்கு 40,000 பவுண்டு (£ 40,000) பணத்திற்கு விற்றார். விற்ற தொகைக்கு அந்நிறுவனத்தின் ஒரு பவுண்டு மதிப்புள்ள 20,000 பங்குகளையும் (Shares), மேலும் 10,000 பவுண்டுகளுக்கு நிறுவனத்தின் கடனீட்டுப் பத்திரங்களையும் (Deben-

1. (1895-99) All ER Rep 33: (1897) AC 22

tures) தன் பெயருக்கு பெற்றுக் கொண்டார். இந்த கடனீட்டுப் பத்திரங்களுக்கு நிறுவனத்தின் சொத்துக்களின் பேரில் பிணையம் (Security) வழங்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நிறுவனத்தின் வியாபாரம் நஷ்ட நிலைமைக்கு வந்து நிறுவனம் கலைக்கப்பட்டது(Wound-up). நிறுவனத்தின் எஞ்சியுள்ள சொத்துக்கள் 6,000 பவுண்டுகள் என மதிப்பிடப்பட்டது. இத் தொகையை, பிணையக் கடனாளரான (Secured Creditor) மேற்படி சாலமன், தனக்குத்தான் சேர வேண்டுமென்று கூறினார். அப்படிக் கொடுத்துவிட்டால், அங்கு பிணையமில்லாக் கடனாளிகளுக்கு (Unsecured Creditors) அளிப்பதற்கென ஒன்றும் இல்லை. எனவே நிறுவனத்தின் பிணையமில்லாக் கடனாளிகள், சாலமனும், நிறுவனமும் வெவ்வேறு நபர்கள் அல்ல; அவர்கள் இருவரும் ஒருவரே. ஆகையால், நிறுவனத்தின் சொத்துக்கள் தங்களுக்குத்தான் சேர வேண்டும் என வாதிட்டனர். நீதிமன்றம், நிறுவனம் என்பது ஒரு செயற்கை நபர் என்றும், அதன் சொத்துக்களை பிணையக் கடனாளரான சாலமனே முதலில் அடைய வேண்டியது என்றும் தீர்ப்பளித்தது.

2. வரம்புடைய பொறுப்பு (Limited Liability) :

ஒரு நிறுவனத்தின் வணிகம் சரிந்து அதற்கு கடன் சுமைகள் ஏற்படும் பொழுது, அந்நிறுவனமானது வரம்புடைய பொறுப்பினைக் கொண்ட நிறுவனமாக இருப்பின், அந்நிறுவன உறுப்பினர்கள் தாங்கள் ஏற்றுக் கொண்ட பங்குத் தொகையின் அளவிற்கு மட்டுமே பொறுப்பேற்றுக் கொண்டால் போதுமானது. அதாவது நிறுவனத்தின் கடன்கள் முழுவதற்கும் பங்குதாரர்கள் (உறுப்பினர்கள்) பொறுப்புடையவர்கள் அல்லர். தங்களால் வாங்கப்பட்ட பங்குகளின் பெயரளவு மதிப்பிற்கு (Normal Value) மேல், எதையும் அவர்கள் கொடுக்கக் கடமைப்பட்டவரல்லர். இது வரம்புடைய பொறுப்பினைக் கொண்ட ஒரு நிறுவனத்தின் கடன்களுக்கு, உறுப்பினர்களின் சொந்த சொத்துக்கள் பொறுப்பாவதில்லை என்பதை மறைமுகமாக விளக்குகிறது.

எனினும், பொறுப்புறுதியால் வரம்புடையதாக்கப்பட்ட நிறுவனமொன்றின் விடயத்தில், (Limited by guarantee) அது கலைக்கப்படும் பொழுது, அதன் உறுப்பினர்கள், தாங்கள் முன்பே ஒத்துக் கொண்ட தொகையை, நிறுவனத்தின் கடன் முதலான பொறுப்புகளைத் தீர்ப்பதற்கு கொடுக்க வேண்டும்.

3. காலவரையறையின்றி நிலையாகத் தொடர்ந்து செயல்படல் (Perpetual Succession) :

பதிவு செய்யப்பட்ட நிறுவனமானது, ஒரு செயற்கை நபராக கருதப்படுவதால், அதற்கு இறப்பு என்பது கிடையாது. ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள் மரணமடைந்தாலும், நொடிப்பு நிலையுற்றாலும் அல்லது பித்து நிலை அடைந்தாலும், அதன் செயல்பாடு பாதிக்கப்படுவதில்லை. ஆகவே, நிலையாக, காலவரையறையின்றி வணிகம் தொடர்ந்து நடைபெற நிறுவனமே மிகச் சிறந்த அமைப்பாகும். இந்நிலைப் பாட்டை **நீதிப்பெருமகனார் கோவர்** அவர்கள், **"பங்குதாரர்கள் வரலாம், போகலாம். ஆனால் நிறுவனம் எப்போதும் இருக்கும்"** என்று அழகாகக் குறிப்பிடுகிறார்.

4. பொது முத்திரை (Common Seal) :

சட்டம், நிறுவனத்தை ஒரு தனி நபராகக் கருதினாலும், அது ஒரு இயற்கை நபரைப் போன்று எந்த ஆவணங்களிலும் கையெழுத்திட முடியாது. எனவே, நிறுவனம் ஒவ்வொன்றும் தனது பெயர் பொறிக்கப்பட்ட பொது முத்திரையைப் பெற்றிருக்கும். பொது முத்திரை என்பது ஒரு நிறுவனத்தின் அலுவலகரீதியான கையெழுத்தாகக் கருதப்படுகிறது. நிறுவனத்தின் பொது முத்திரை பதிக்காத ஆவணங்கள், நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது. எனினும் தற்போது இவ்வாறு பொது முத்திரை பதிப்பது கட்டாயமல்ல என்று **நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015** வகை செய்துள்ளது.

5. சட்ட நடவடிக்கைகள் (Legal Proceedings) :

ஒரு நிறுவனம் தனி நபராக கருதப்படுவதால், அது தன் பெயரில் மற்றவர்களின் மீது வழக்கு தொடரலாம். அதே சமயத்தில் மற்றவர்களும் நிறுவனத்தின் மீது வழக்கினை தொடுக்கலாம் (Capacity to sue and be sued).

6. தனிச் சொத்து (Separate Property) :

நிறுவனம் தனது பெயரில் சொத்துக்களை வாங்கவும், விற்கவும், வாங்கிய சொத்துக்களை அனுபவிக்கவும் உரிமையுண்டு. நிறுவனத்தால் வாங்கப்பட்ட சொத்துக்கள், பங்குரிமையாளர்களுக்கு அல்லது பங்குதாரர்களுக்கு உரியது ஆகாது. பங்குதாரர்கள் மாறினாலும் இச்சொத்துக்கள் பாதிக்கப்படுவதில்லை.

7. மாற்றத்தக்க பங்குகள் (Transferable Shares) :

நிறுவனமொன்றின் பங்கு, ஓர் அசையும் சொத்து (Movable Property) என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 44–வது பிரிவு கூறுகிறது. எனவே, ஒரு பொது நிறுவனத்தின் (Public Company) உறுப்பினர்கள் தங்கள் விருப்பம் போல், எப்போது வேண்டுமானாலும் தங்களது பங்குகளை, செயல்முறை விதிகளில் (Articles of Association) உள்ள சட்ட திட்டங்களுக்குட்பட்டு, வேறெவருக்கும் மாற்றம் செய்யலாம்.

8. மூலதனம் (Capital) :

ஒரு வியாபாரத்திற்கு முக்கியமானது, தேவையான மூலதனமாகும். ஒரு நிறுவனம் தனக்குத் தேவையான மூலதனத்தை அதன் பங்குகளை பொது மக்களுக்கு வெளியிட்டு எளிதில் பெறுகிறது. இந்நன்மையைக் கருதி பல தனியார் நிறுவனங்கள், பொது நிறுவனங்களாக மாற்றப்படுகின்றன.

9. கடன் வாங்குதல் (Borrowings) :

ஒரு நிறுவனத்திற்கு பங்குத் தொகை போதாவிடில், அந்நிறுவனம் தன் சொத்துக்களின் பேரில் எளிதில் கடன் பெறலாம் அல்லது கடனீட்டுப் பத்திரங்களை (Debentures) வெளியிட்டு, தனக்குத் தேவையான கடன் தொகையைப் பெறலாம்.

10. பங்குதாரர்களிடமிருந்து தனித்தன்மை (Separation from Share

holders) :

நிறுவனம் தன்னை அமைத்த பங்குதாரர்களிடமிருந்து தனித்துள்ளது. நிறுவனத்தின் எத்தகைய செயலும் பங்குதாரர்களைக் கட்டுப்படுத்தாது. அதே போல பங்குதாரர்களின் எச்செயலும் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது.

11. வரிச்சலுகைகள் (Concessions of Taxes) :

நிறுவனங்களை ஊக்குவதற்கும், அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்கவும் வரி விதிக்கும் சட்டங்கள், நிறுவனங்களுக்குப் பற்பல சலுகைகளையும் விலக்குகளையும் (Exemptions) அளித்துள்ளன.

தீமைத் தரக்கூடிய இயல்புகள் (Disadvantages) :

1. திரை தூக்கப்படுதல் (Lifting the Corporate veil) :

நிறுவனத்தின் திரையானது, அதன் உறுப்பினர்களை சட்டத்தின் கண்களிலிருந்து மறைத்தாலும், அது ஓர் இரும்புத் திரை அன்று. நீதிமன்றங்கள், தேவை என்று கருதும்பொழுது நிறுவனத்தின் திரையை தூக்கி அல்லது விலக்கி அல்லது கிழித்து அதன் உள்ளக்கிடக்கைகளை, எண்ணங்களை காண்கின்றன. (வினா எண். 2–ல் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.)

2. நிறுவனம் அமைத்தவனுக்கே, அந்நிறுவனம் தீங்கு விளைவித்தல் :

சில சமயங்களில் ஒரு நிறுவனத்தால், அந்நிறுவனத்தை அமைத்தவனுக்கே தீங்கு விளைகிறது. பின்வரும் வழக்கினைக் கண்டால் இது விளங்கும்.

Macaura v. Northern Assurance Co.Ltd.,[1]

இவ்வழக்கில் மெக்கூரா என்பவர் ஒரு பெரிய தேக்கு மரக் காட்டின் உரிமையாளர். அவர், தீயினால் ஏற்படக்கூடிய சேதத்தைத் தவிர்க்க, அத்தேக்கு மரங்களை போதிய தொகைக்குக் காப்பீடு செய்தார். பின்னர் நிறுவனம் தரக்கூடிய நன்மைகளை அடைய, ஒரு நிறுவனம் நிறுவி, அதன் பங்குகளில் ஒரு பங்கினைத் தவிர மீதமுள்ள பங்குகள் அனைத்தையும் தானே எடுத்துக் கொண்டார். அந் நிறுவனத்திற்கு தனக்குரிய தேக்கு மரக்காட்டினை விற்றார். அதன் பிறகு ஒருநாள் அத்தேக்கு மரக்காடு தீக்கிரையாகிறது. நிறுவனத்தின் பங்குகள் யாவும் தனக்கு உரிமையானவையென்றும், ஆகையால் நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பு தனக்கு ஏற்பட்ட இழப்பாகும் என்றும் கூறி காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து, காப்பீட்டுத் தொகையைக் கோரினார். ஆனால் நீதிமன்றம், நிறுவனமும் மெக்கூராவும் வெவ்வேறு நபர்கள் என்றும், ஆகையால் நிறுவனத்தின் இழப்பு, அவருடைய இழப்பு ஆகாது என்றும், காப்பீட்டு நிறுவனம் அந்த இழப்பிற்கு பொறுப்பன்று என்றும் முடிவு செய்தது. இவ்வாறு நிறுவனம் அமைத்தவனுக்கே நிறுவனம் சில தருணங்களில் தீங்கை விளைவிக்கிறது.

3. சட்டச் சடங்குகள், விளம்பரங்கள், செலவுகள் :

ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்குப் பற்பலச் சட்டச் சடங்குகள்,

1. (1925) AC 619

விளம்பரங்கள், செலவுகள் தவிர்க்க முடியாத தேவையாகின்றன.

4. கலைக்கப்படுதல் (Winding up) :

ஒரு நிறுவனத்தைக் கலைப்பது எளிதன்று. அதற்கான சட்டச் சடங்குகளை காணும்பொழுது அச்செயல் மிகவும் கடினமும், காலதாமதம் நிரம்பியதாகவும் உள்ளது.

5. நிருவாக முறை (Administration) :

நிறுவன நிருவாகம் கடினமானது. சட்டத்தின் விதிகளை அறிந்தோ அறியாமலோ தவறினாலும், மீறினாலும், நிருவாகிகள் தண்டனைக்கு அல்லது அபராதத்திற்கு உள்ளாக வேண்டியுள்ளனர். நிறுவன நிருவாகிகள் ஒவ்வொரு நாள் காலையும் கொடிய குற்றவாளிகளாகக் கண்விழித்தெழுகிறார்கள் என்று நீதிப்பெருமகனார் கோவர் குறிப்பிடுகிறார். அந்த வகையில் நிறுவனச் சட்டத்தை ஓர் இரண்டாவது தண்டனைச் சட்டம் (Second Penal Code) என்று கூறினால் அது மிகையன்று. தண்டனைக்கான சட்ட வகைமுறைகளை 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனச் சட்டம் மேலும் கடுமையாக்கியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

6. சட்ட நடவடிக்கைகள் (Legal Proceedings) :

வழக்குகளில் ஒரு நிறுவனம், வாதியாக இருப்பின் (Plaintiff), அது செலவுத் தொகைகளுக்குப் பிணையம் வழங்கும்படி நீதிமன்றத்தால் உத்திரவிடப் படுகிறது.

7. சட்டத்தின் இடர்பாடுகள் அல்லது முட்டுக்கட்டைகள் (Legal Obstacles):

நிறுவனத்திற்கென நிருணயிக்கப்பட்ட சிறப்பு விதிகளும், கோட்பாடுகளும் குறிப்பாக, வரம்பு மீறுதல் கோட்பாடு (The Doctrine of Ultra Vires) பல சூழ்நிலைகளில் இடர்பாடுகளை விளைவிக்கின்றன.

8. நிறுவனம், இயக்குனர்களின் கைப்பொம்மை :

நிறுவனம் ஒரு செயற்கை நபர். எனவே, அது இயக்குனர்களின் மூலமாக செயலுறுகிறது. எனவே, ஒரு நிறுவனம் இயக்குனர்களின் விருப்பு வெறுப்புகளுக்குட்பட்டு செயல்பட வேண்டிய நிலையில் உள்ளது. இத்தீங்குகளைத் தவிர்க்க உறுப்பினர்களின் கவனமும், அரசினரின் கண்காணிப்பும் இன்றியமையாததாகும்.

9. வரம்புடைய பொறுப்பு (Limited Liability) :

ஒரு நிறுவனத்தின் பெயருடன் இணைந்துள்ள 'வரம்புடைய பொறுப்பு' என்ற வார்த்தைகள், பொதுமக்களுக்கு, உறுப்பினர்களின் பொறுப்பு, அவர்களின் பங்களவே ஆகும் என்பதை நினைவூட்டி எச்சரிக்கிறது. இது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்களைத் தயக்கமுறச் செய்கிறது.

10. குடியுரிமை (Citizenship):

நிறுவனம் ஒரு குடிமகன் அன்று என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் பலவும் எடுத்துக்கின்றன. இதனால் ஒரு நிறுவனம் குடிமகனுக்குரிய உரிமைகள் எதையும்

பெற முடியாது என்பது தெளிவாகிறது.

II. குற்றங்களும் தீங்குகளும் (Crimes and Torts):

நிறுவனம் ஒரு செயற்கை நபராக இருந்தாலும், அதனை இயக்கி வரும் இயக்குனர்களின் அறிவையும், எண்ணங்களையும் நிறுவனத்திற்குச் சாற்றி, அதன் பெயரால் செய்யப்படும் குற்றங்களுக்கும், தீங்குகளுக்கும் அந்நிறுவனம் பொறுப்பாக்கப்படுகிறது. எனினும், நிறுவனம் ஒரு செயற்கை நபர் எனும் காரணத்தால், அதனைக் கைது செய்யவோ அல்லது சிறையிலடைக்கவோ முடியாது.

முடிவுரை:

மேற்கூறப்பட்ட நன்மைகளையும், தீமைகளையும் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது, நன்மைகளே அதிகமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நிறுவனங்களைப் பேணி வளர்ப்பதில் வியப்பேதுமில்லை. அதே நேரத்தில் நிறுவனத்தால் விளையும் மேற்கண்ட சில தீமைகளைத் தவிர்க்கவும் இயலாது. ஆகவே ஒரு நிறுவனத்தின் நன்மைகள், சில தீமைகளைத் தொடர்ந்தே அமையும் என்ற கூற்றில் பிழையில்லை.

2. Define 'Company'. Discuss the Doctrine of 'Lifting the corporate veil' of a company. ('நிறுவனம்' என்பதை வரையறு. 'நிறுவனத்தின் திரை தூக்கப்படுதல்' என்ற கோட்பாட்டை விவரி.)

(அல்லது)

Explain the doctrine of lifting the corporate veil? (நிறுவன திரை அகற்றுதல் என்ற கோட்பாட்டை விளக்குக.)

(அல்லது)

What do you mean by lifting the corporate veil? What are the circumstances in which the corporate veil will be lifted? (நிறுவன திரை தூக்கல் என்றால் என்ன? எந்தெந்த சூழ்நிலைகளில் இத்திரை தூக்கல் செய்யப்படுகிறது?)

(அல்லது)

Explain the theory of 'Corporate Personality.' When does the Court allow corporate veil to be lifted ? (நிறுவனச் சட்டமைப்புத் தன்மைக் கோட்பாட்டை விளக்குக. நிறுவனத் திரையை அகற்றுவதற்கு நீதிமன்றம் எப்பொழுது அனுமதிக்கின்றது?)

(அல்லது)

What is meant by 'Corporate entity'? What are the circumstances in which the lifting of the Corporate veil takes place? ('கூட்டுறு நபர்' என்றால் என்ன? ஓர் கூட்டுறுவத்தின் திரையானது எத்தகைய சூழ்நிலைகளில் விலக்கப்படுகிறது?)

(அல்லது)

"Though the complete separation of the company and its members has never been doubted, there has been cases in which the legislature and to some extent the courts have allowed the veil of incorporation to be lifted" - Explain citing relevant cases. ("நிறுவனத்தையும் அதன் அங்கத்தினர்களையும் முழுமையாக பிரிப்பதற்கு தெளிவான சான்றுகள் இல்லாமலிருந்தாலும், சட்டமன்றமும் ஓரளவு நீதிமன்றமும் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட திரையை நீக்கியுள்ள நிகழ்ச்சிகள் உள்ளன." பொருத்தமான வழக்குகளை குறிப்பிட்டு விளக்குக.)

(அல்லது)

What are the advantages and disadvantages of a company and to what extent the lifting of corporate veil is working as a disadvantage of a company? Under what circumstances the corporate veil will be lifted? (ஒரு நிறுமத்தால் ஏற்படும் நலன்களையும் பாதகங்களையும் விளக்குக. திரை அகற்றல் விதி எந்த அளவுக்கு ஒரு நிறுமத்திற்கு ஒரு நிறுமத்திற்கு பாதகமாகக் கருதப்படுகிறது? எந்தெந்த சூழ்நிலைகளில் திரை அகற்றல் நடைபெறுகிறது என்பதை விவரிக்க.)

(அல்லது)

What are the circumstances under which the piercing of the corporate veil could take place? (ஒரு நிறுவனத்தின் திரை எச்சூழ்நிலைகளில் கிழிக்கப்படுகிறது?)

(அல்லது)

'A company is a distinct legal entity'. Discuss. ('ஒரு நிறுவனம் வேறுபட்ட ஒரு சட்ட நபர்'. விவாதிக்க)

(அல்லது)

Enumerate the instances in which the modern company law disregards the principle that the company is an independent legal entity. ("கம்பெனியானது தனித்தியங்குகிறதும் சட்டத்தினால் ஆக்கப்பட்டதுமான ஒரு நபர்" என்றும் தத்துவத்தை தற்காலத்து கம்பெனிச் சட்டம் நிராகரிக்கும் நிகழ்வுகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

The theory of 'Corporate Entity' cannot be pushed to unnatural limits - Comment. ("நிறுவனத் தனித்தன்மை" என்ற கொள்கையை செயற்கை வரம்பு வரை தள்ள முடியாது - விளக்குக.)

(அல்லது)

The doctrine of 'lifting the Corporate veil' is formed to eliminate the difficulties arising out of the doctrine of 'Corporate entity'. Examine the statement. ('கூட்டுருமம்' என்கிற கோட்பாட்டின் மூலம் ஏற்படும் கடினங்களை கலைத்து விடுவதற்காக 'திரைச் சீலையை விலக்குதல்' என்கிற கோட்பாடு உருவாக்கப்பட்டிருக்கிறது. இக்கூற்றினை ஆய்வு செய்க.)

(அல்லது)

"The Company is at law different person altogether from subscribers of the memorandum". Explain. ("அமைப்பு முறையேட்டில் உள்ள ஆதரவாளர்கள் எல்லோரிடமிருந்தும் ஒரு வேறுபட்ட நபராக நிறுவனம் உள்ளது". விளக்குக.)

(அல்லது)

"A Company is a legal person distinct from its members taken individually and collectively" - Discuss. ("ஒரு பங்கமைப்பை உருவாக்கும் உறுப்பினர்களைத் தனியாகவோ அல்லது மொத்தமாகவோ எடுத்துக் கொண்டாலும், ஒரு பங்கமைப்பு தனித்த சட்ட நபராகவே விளங்கும்". விவாதிக்க.)

(அல்லது)

Lifting the Corporate veil - Write short notes. (நிறுவனத்தின் திரைச் சீலை விலக்கப்படுதல் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Corporate veil - Write short notes. (கூட்டமைப்புத் திரை - குறுகிய விடை எழுதுக.)

நிறுவனம் - வரையறை :

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 2 (20)–இல், "**நிறுவனம் என்பது இந்தச் சட்டத்தின்படி அல்லது முந்தைய நிறுவனச் சட்டம் வேறெதன்படியும் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்று பொருள்படும்**" என்று மட்டும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இதில் நிறுவனத்தின் இயல்புகள் அல்லது தன்மைகள் குறித்த தெளிவான விளக்கம் ஏதும் இல்லை. எனவே, ஒரு நிறுவனத்திற்குரிய இயல்புகளை கூட்டிணைத்து, அதனை பின்வருமாறு வரையறுக்கலாம். அதாவது, "ஒரு நிறுவனம் என்பது பலர் ஒன்று கூடி அமைத்ததும், அதன் உறுப்பினர்களினின்றும் வேறாய் நின்று ஒரு தனி நபராக திகழ்ந்து குறிப்பிட்ட நோக்கங்களுக்கிணங்க காலவரையற்று நிலையாக இயங்கும் இயக்கமாகும். நிறுவனத்தின் குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை எழுவராயின் அது பொது நிறுவனம் என்றும், இருவராயின் அது தனியார் நிறுவனம் என்றும், ஒருவராயின் அது ஒரு நபர் நிறுவனம் என்றும் குறிப்பிடப் படுகிறது".

நிறுவனத்தின் தனித் தன்மை அல்லது நிறுவனத்தின் திரை தூக்கப்படுதல் (Corporate Entity or Lifting the Corporate Veil):

ஒரு நிறுவனம் பதிவானவுடன், அது அதன் உறுப்பினர்களினின்று முற்றிலும் வேறுபட்ட ஒரு தனி செயற்கை நபர் (Separate Artificial Person) என்றழைக்கப்படுகிறது. இதுவே 'நிறுவனத்தின் தனித்தன்மை' (Corporate Entity) எனப்படுகிறது. இக்கருத்து சாலமன் – எதிர் – சாலமன் நிறுவனம் என்ற வழக்கில் ஏற்படுத்தப்பட்டதாகும். இதன்படி நிறுவனத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இடையே ஒரு கற்பனை திரை (veil) இருப்பதாகவும், அத்திரையை அகற்றிவிட்டு, நிறுவனத்தினுள் நடக்கும் நடவடிக்கைகளை ஆராய முடியாது என்ற நிலை இருந்து வந்தது. ஆனால் இந்நிலை மாறிவிட்டது. அதன்படி ஒரு நிறுவனம் பொது நல நோக்கத்திற்கு விரோதமாக நடக்குமானால், நீதிமன்றம் அந்நிறுவனத்தின் கற்பனைத் திரையைத் தூக்கி, அதன்பின் மறைந்துள்ள உறுப்பினர்களை பொறுப்பாளியாக்கலாம். மேலும் நிறுவனத்தின் உண்மையான உள்ளக்கிடக்கைகளை அறியலாம். இச்செயல், **'நிறுவனத்தின் திரை தூக்கப்படுதல் அல்லது கிழிக்கப்படுதல்'** (Lifting or Piercing the Corporate Veil) என்றழைக்கப்படுகிறது. அதாவது ஒரு நிறுவனம் தனக்கிருக்கும் தனித்தன்மையை (Entity) பயன்படுத்தி, பொதுமக்களை மோசடி செய்யவியலாது. இதனைத் தற்பொழுதைய நவீன நிறுவனச் சட்டம் தடுக்கிறது. எனவே, 'நிறுவனத்தின் தனித்தன்மை' எனும் கோட்பாட்டை, செயற்கையாக ஏற்படுத்திக் கொண்ட வரம்புகள் வரை தள்ள முடியாது (The theory of 'Corporate Entity' cannot be pushed to unnatural limits). நிறுவனத்தின் இயற்கையான நிகழ்வுகளே, அந் நிறுவனத்தின் செயல்பாடாகும். அதனை நீதிமன்றம் 'நிறுவனத்தின் தனித்தன்மை' என்பதை மறைத்து கொண்டிருக்கும் திரையை தூக்கி அல்லது கிழித்துப் பார்ப்பதன் மூலம் அந்நிறுவனத்தின் உண்மையான, இயற்கையான நிலைப்பாட்டை உலகிற்கு உணர்த்துகிறது. சற்று சிறப்பாக சொல்வதென்றால், 'கூட்டுருமம்' என்கிற கோட்பாட்டின் மூலம் ஏற்படும் கடினங்களை கலைத்து விடுவதற்காக 'திரைச் சீலையை விலக்குதல்' என்கிற கோட்பாடு நீதிமன்றத்தால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

1. வரி ஏய்ப்பு:

வருமான வரி ஏய்ப்பு செய்வதற்காக அல்லது வரிச் சுமையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, ஒரு நிறுவனத்தைப் பயன்படுத்தினால், நீதிமன்றம் அந்நிறுவனத்தின் திரையைத் தூக்கி, அதன் உண்மை நிலையை ஆராய்கிறது. இதனைப் பின்வரும் வழக்கு விளக்கும்.

In Re Sir Dinshaw Maneckjee Petit[1]

இவ்வழக்கில் ஒரு பெரிய பணக்காரர் தன் பெரும் தொகைகளை வைப்புத் தொகைகளிலும் (Deposits), பங்குகளிலும் (Shares) முதலீடு (invest) செய்து அதற்குரிய வட்டியும், பங்கு ஆதாயமும் (Dividend) பெற்றார். அவற்றிற்குரிய

வருமான வரியைத் தவிர்க்க, அவர் நான்கு தனியார் நிறுவனங்கள் (Private Companies) நிறுவி, தமக்குச் சொந்தமான முதலீடுகளை (Investments) மேற்படி நிறுவனங்களுக்கு மாற்றிக் கொடுத்தார். அதற்கு மறுபயனாக (consideration) அவற்றின் பங்குகளை பெற்றுக் கொண்டார். முதலீட்டிற்குரிய வருமானங்களை மேற்படி நிறுவனங்கள் பெற்றுக் கொண்டன. தனக்குச் சொந்தமான அவ்வருமானங்களை நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெற்றுக் கொண்டார். ஆனால் அவர் கடன்களை திருப்பிச் செலுத்தவேயில்லை. இவ்விதம் தமக்கு எவ்வித வருமானமும் கிடையாது; நிறுவனங்களிடமிருந்து பெரும் கடன்கள் வருமானமல்ல என்று கூறி வருமான வரிகளை அவர் தவிர்க்க முயன்றார். ஆனால் நீதிமன்றம் மேற்படி தனியார் நிறுவனங்கள், வருமான வரிகளை தவிர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும், நிறுவனங்களின் வருமானங்கள் யாவும் அப்பணக்காரருடைய வருமானம் என்றும் முடிவு செய்தது.

2. மோசடி (Fraud) :

மோசடி செய்யும் நோக்குடன் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து அந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, அதனைப் பயன்படுத்தியிருந்தால் நீதிமன்றம் அந்நிறுவனத்தின் திரையை தூக்கி, அதன் உண்மை நிலையைக் காண்கிறது. பின் வரும் வழக்குகள் ஒரு நிறுவனத்தின் போர்வையில் மோசடிகள் செய்ய முடியா தென்பதை விளக்கும்.

Gilford Motor Co. v. Horne[2]

இவ்வழக்கில் ஆர்னே என்பவர் கில்ஃபோர்டு மோட்டார் கம்பெனியின் மேலாண்மை இயக்குனராக (Managing Director) இருந்தார். அவர் அந் நிறுவனத்திலிருந்து விலகினால், நிறுவனத்தின் வாடிக்கையாளர்களை (customers) தன்னிடம் வரும்படி தூண்டுவதில்லை என்று மேற்படி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்திருந்தார். ஆனால் அவர் நிறுவனத்தை விட்டு விலகிய பிறகு வேறொரு நிறுவனம் நிறுவி, அதனுடன் தன் முன்னாள் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொள்ளும்படி தூண்டினார். ஆனால் ஆர்னே நிறுவிய நிறுவனம் போலியானது (Sham) என்றும், மோசடி செய்வதற்கு உற்ற கருவியாக அந்நிறுவனம் பயன்படுத்தப்பட்டது என்றும், அதனால் நிறுவனமும் ஆர்னேயும் வெவ்வேறான நபர்கள் அல்ல; அவர்கள் இருவரும் ஒருவரே; ஆகவே ஆர்னே ஒப்பந்தத்தை மீறியதற்குப் பொறுப்பாகிறார் என்றும் உண்மை நிலையை கண்டறிந்து நீதிமன்றம் அதைத் தீர்ப்பாக உரைத்தது.

Jones v. Lipman[3]

இவ்வழக்கில் 'அ' என்பவர் தன் நிலத்தை 'ஆ' என்பவருக்கு விற்பதாக ஒப்பந்தம் செய்திருந்தார். பின்னர் 'அ' என்பவர் மேற்படி ஒப்பந்தத்தை தவிர்ப்பதற்

1. AIR 1927 Bom. 371
2. (1933) 1 Ch 935
3. (1962) 1 WLR 832

காக தன் நிலத்தை தானே நிறுவிய ஒரு நிறுவனத்திற்கு விற்றுவிட்டார். ஆனால் நீதி மன்றம் அந்நிறுவனம் ஒரு போலி நபர் என்றும், 'அ'–வும் அவர் நிறுவிய நிறுவனமும் ஒருவரே என்றும் கூறி, அந்நிலத்தை அவர் நிறுவிய ஒரு நிறுவனத்திற்கே விற்பனை செய்தது செல்லாதென தீர்ப்பளித்தது.

3. பங்குதாரர்களின் முகவராக நிறுவனம் செயல்படுதல் (Company acting as Agent of Shareholders) :

ஒரு நிறுவனம், பங்குதாரர்களின் முகவராக உட்கிடையான அல்லது வெளிப் படையான ஒப்பந்தத்தின் மூலம் செயல்பட்டால், நிறுவனத்தின் செயல்களுக்கு பங்கு தாரர்களே பொறுப்பாவார்கள். இந்நிலையில் நீதிமன்றம் நிறுவனத்தையும், பங்குதாரர் களையும் வெவ்வேறாகக் கருதுவதில்லை. இது குறித்த முக்கிய வழக்கு வருமாறு.

In Re F.G. (Films) Ltd.[1]

இவ்வழக்கில் ஓர் அமெரிக்கரும், இரண்டு ஆங்கிலேயர்களும் இணைந்து ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார்கள். அந்த நிறுவனம் இங்கிலாந்து நாட்டில் பதிவு செய்யப்பட்டது. அதன் பங்குகளில் 90 சதவீதம், அமெரிக்கருக்குச் சொந்தமானது. அந்த நிறுவனம் இந்தியாவில் ஒரு ஆங்கிலப்படத்தை தயாரித்தது. ஆனால் திரைப் படங்களை தணிக்கை செய்யும் குழு (Film Censor Board) அப்படத்தை, அமெரிக் கருக்குச் சொந்தமானது எனக்கூறி, அதை ஆங்கில நிறுவனம் தயாரித்த திரைப்பட மாகப் பதிவு செய்ய மறுத்தது. பின்னிட்டு இது தொடர்பாக எழுந்த வழக்கில், தணிக் கைக் குழு மேற்கண்டவாறு மறுத்தது சரிதான் என்று நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

4. பகைமை நிறுவனம் என்று தீர்மானித்தல் (Determination of a Company as an enemy) :

ஒரு நிறுவனத்தின் நடவடிக்கைகள் பகைமை நாட்டவரால் கட்டுப்படுத்தப் பட்டால், அந்நிறுவனம் பகைமை நிறுவனமாகக் கருதப்படும். இம்மாதிரியான சூழ் நிலையில் நீதிமன்றம் நிறுவனத்தின் திரையைத் தூக்கி, அந்நிறுவனம் பகைமை நாட்டவரால் கட்டுப்படுத்தப்படுகிறதா என்பதை ஆராய்ந்து உண்மை நிலையை உலகிற்கு உணர்த்தும்.

Daimler Co. Ltd. v. Continental Tyre & Rubber Co.[2]

இவ்வழக்கில் செர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு நிறுவனம், தான் உற்பத்தி செய்த டயர்களை விற்பதற்கு இங்கிலாந்தில் ஒரு நிறுவனம் நிறுவி அதனை அங்கு பதிவு செய்தது. அதில் பெரும்பாலான பங்குகள் செர்மானியர்களுக்கு சொந்தமானது. மேலும் அந்நிறுவனத்தின் இயக்குனர்கள் அனைவரும் செர்மனியில் வசிக்கும் செர் மானியர்கள். அந்நிறுவனம், செர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் இடையே போர் மூண்ட போது (முதல் உலகப்போர்), தன் வியாபாரக் கடன்களை தீர்க்கக்கோரி இங்கிலாந்தில்

1. (1953) 1 WLR 483: (1953) 1 All ER 615
2. (1916) 2 AC 307

உள்ள நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுத்தது. ஆனால் நீதிமன்றம் அந்நிறுவனம் பகைமை நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று அதன் திரையைத் தூக்கிப் பார்த்து தீர்ப்பளித்தது.

5. பல நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து, கூட்டான ஒரு நிறுவனமாக இருந்தால் (Group of Enterprises) நீதிமன்றங்கள் அவை அனைத்தையும் ஒரே நபராகச் சில சூழ்நிலைகளில் முடிவு செய்கின்றன. இது குறித்த வழக்கு பின்வருமாறு:

Smith Stone & Knight Ltd. v. Birmingham Corporation.[1]

இவ்வழக்கில் பிடிப்பு நிறுவனம் ஒன்று (Holding Company) பிடிப்பிலுள்ள (துணை) நிறுவனத்திற்கு (Subsidiary Company) சொந்தமான நிலத்தை அரசினர் எடுத்துக் கொண்டதற்குரிய இழப்பீட்டுத் தொகையை பெறுவதற்கு உரிமை கிடையாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

6. பிற முக்கிய சூழ்நிலைகள்:

1. பொதுக் கொள்கை காரணமாக (On grounds of Public Policy) ஒரு நிறுவனத்தின் திரை தூக்கப்படுகிறது.
2. ஒரு நிறுவனம் உறுப்பினர்களின் பொறுப்பாண்மையராக இருப்பின் (Trustee of the members) அது உறுப்பினர்களினின்று வேறுபட்ட ஒரு நபராக கருதப்படாது.
3. ஒரு நிறுவனத்தின் பெரும்பான்மையான பங்குதாரர்கள் செய்யும் தீர்மானம், அந்நிறுவனத்தின் தீர்மானமாக நீதிமன்றம் கருதுகிறது.
4. ஒரு நிறுவனம் கலைக்கப்படும் பொழுது அது கடன் அளித்தவருக்கு மோசடி செய்யும் நோக்கத்துடன் வாணிகம் செய்திருந்தால், அவ்வாறு நடந்து கொண்ட நபர்களை, நீதிமன்றம் அக்கடனுக்கு பொறுப்பேற்க உத்திரவிடும்.

State of U.P. v. Renusagar Power Company [1]

இவ்வழக்கில் "நிறுவன ஆளுமையின் திரையானது சிலசமயங்களில் தூக்கப்படாவிட்டாலும், நவீன நிறுவன சட்டவியலில் அதனை சாதாரணமாக ஊடுருவி உள்ளே பார்க்கும் அளவுக்கு மேலும்மேலும் வெளிப்படையானதாக (... .. becoming more and more transparent in modern company jurisprudence) ஆகிக் கொண்டே வருகிறது", என்று நமது உச்ச நீதிமன்றம் கூறிய வரிகளை இங்கு சுட்டிக்காட்டுவது, இந்த 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனச் சட்டம் கொண்டு வந்துள்ள மாற்றங்களை கருத்தில் கொள்ளும் போது மிகப் பொருத்தமானதாகும்.

1. (1939) 4 KB 116
2. AIR 1988 SC 1732

நிறுவனங்களின் வகைகள்
[Classes of Companies]

3. Enumerate the forms of Companies available under the Companies Act, 2013. In what respects does a Public Company differ from a Private Company. (2013-ன் நிறுவனச் சட்டத்தின் கீழ் உள்ள நிறுவனங்களின் வடிவங்களை விளக்குக. ஒரு பொது நிறுவனம், தனியார் நிறுவனத்திலிருந்து எவ்வகைகளில் வேறுபடுகிறது?)

(அல்லது)

5 Explain the kinds of company and differentiate between Private and Public Company. (நிறுவனத்தின் பல்வேறு வகைகளைக் கூறி, தனியார் நிறுவனத்தையும் பொது நிறுவனத்தையும் வேறுபடுத்துக.)

(அல்லது)

Public company and private company - Write short answers. (பொது நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

நிறுவனங்களின் வகைகள்
பதிவின் அடிப்படையில்
1. பட்டயம் பெற்ற நிறுவனம் [Chartered Company]
2. சட்டப்படி அமைந்த நிறுவனம் [Statutory Company]
3. பதிவு செய்யப்பட்ட நிறுவனம் [Registered Company]
4. உரிமம் பெற்ற நிறுவனம் [Licensed Company]
5. வெளிநாட்டு நிறுவனம் [Foreign Company]
பொறுப்பின் அடிப்படையில்
1. வரையறுக்கப்பட்ட நிறுவனம் [Limited Company]
2. பொறுப்புறுதி நிறுவனம் [Guarantee Company]
3. வரையறுக்கப்படா நிறுவனம் [Unlimited Company]
உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையில்
1. தனி நிறுவனம் [Private Company]
2. பொது நிறுவனம் [Public Company]
3. பொது நிறுவனமாக கருதப்படுவது [Deemed Public Company]
4. ஒரு நபர் நிறுவனம் [One Person Company]
கட்டுப்பாட்டின் அடிப்படையில்
1. பிடிப்பு நிறுவனம் [Holding Company]
2. பிடிப்பிலுள்ள (துணை) நிறுவனம் [Subsidiary Company]
உடைமையின் அடிப்படையில்
1. அரசு நிறுவனம் [Government Company]
2. தனி நபர் நிறுவனம் [One Man Company]

(அல்லது)

Foreign Company - Write short answers. (வெளிநாட்டு நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Holding Company - Write short answers. (பிடிப்பு நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Subsidiary Company - Write short answers. (பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Holding Company and Subsidiary Company - Write short answers. (பிடிப்பு நிறுவனம் மற்றும் கிளை ஆட்சி நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Government Company - Write short answers. (அரசு நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

நாம் சென்ற பக்கத்தில் கண்ட விளக்கப் படத்தின்படி, 2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தின் கீழ் நிறுவனங்கள் அய்ந்து பெரும் அடிப்படைகளின் கீழ் பலவாறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விளக்கம் வருமாறு.

I. பதிவின் அடிப்படையில் (On the basis of Incorporation):

நிறுவனங்களை பதிவு செய்தல் மிகவும் இன்றியமையாததாகும். பதிவு செய்வதால், ஒரு நிறுவனத்திற்கு உயிரும், சட்ட அங்கீகாரமும் கிடைக்கிறது. இவ்வாறு பதிவு செய்தலின் அடிப்படையில் நிறுவனங்கள் பின்வரும் வகையில் பிரிக்கப்படுகின்றன.

1. பட்டயம் பெற்ற நிறுவனம் (Chartered Company):

ஒரு நாட்டின் அரசால் தோற்றுவிக்கப்பட்ட அல்லது அரசு வழங்கிய பட்டயத்தின் (Charter) மூலம் தோன்றிய நிறுவனங்கள் **'பட்டயம் பெற்ற நிறுவனங்கள்'** எனப்படுகின்றன. இந்தியாவில் ஆங்கிலேயரால் தொடங்கப்பட்ட கிழக்கிந்திய நிறுவனத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

2. சட்டப்படி அமைந்த நிறுவனம் (Statutory Company):

அரசு தனிச் சட்டம் இயற்றி தோற்றுவிக்கும் நிறுவனங்கள், சட்டப்படி

அமைந்த நிறுவனங்கள் ஆகும். பாராளுமன்றம் அல்லது சட்டமன்றம் இயற்றுகின்ற சட்டங்களால் இவ்வகை நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. சட்டத்தில் குறிப் பிட்டுள்ள அதிகாரங்களுக்குட்பட்டு இந்நிறுவனங்கள் இயங்க வேண்டும். இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் மேற்பார்வையில் (Auditor General of India), இந்நிறுவனத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட வேண்டும். இந்திய சேம வங்கி (Reserve Bank of India), பாரத ஸ்டேட் வங்கி (State Bank of India), இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆகியவை இவ்வகையே நிறுவனங்களுக்கு உதாரணங்களாகும்.

3. பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (Registered Company) :

2013–ஆம் ஆண்டு நிறுவன சட்டத்தின் கீழ் அல்லது அதற்கு முன் நடைமுறையில் இருந்து வந்த நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் இவ்வகையைச் சார்ந்தவை. இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான நிறுவனங்கள் இவ்வகையைச் சார்ந்தவையே. இவை நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அதன் சட்ட திட்டங்களுக்குட்பட்டு இயங்கி வருகின்றன.

4. உரிமம் பெற்ற நிறுவனம் (Licensed Company) :

அரசிடமிருந்து உரிமம் பெற்று இந்நிறுவனங்கள் அமைக்கப்படுகின்றன. கலை, அறிவியல், இலக்கியம், மதம், தருமம் ஆகியவற்றை பராமரிக்கும் நோக்கத்தில் அமைக்கப்படும் நிறுவனங்கள் இவ்வகையைச் சார்ந்தவை.

5. வெளிநாட்டு நிறுவனம் (Foreign Company) :

வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் இந்தியாவில் ஒரு வணிகத்தை கொண்டிருந்தால், அந்நிறுவனம் வெளிநாட்டு நிறுவனம் எனப் படுகிறது. இந்நிறுவனங்கள் இந்தியாவில் செயல்படும்போது இந்திய நிறுவனச் சட்டத்தின் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 2(42)**–இன்படி, "**வெளி நாட்டு நிறுவனம்**" என்பது இந்தியாவிற்கு வெளியே பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பு எதுவும் (அ) தானாகவோ அல்லது முகவர் ஒருவர் வாயி லாகவோ, உடலியக்கமாக அல்லது மின்னணு முறை வாயிலாக இந்தியாவில் வணிகத் திற்கான இடம் ஒன்றை அமைத்துக் கொண்டிருக்கிறதும்; மற்றும் (ஆ) இந்தியாவிற் குள் வேறு முறை எதன்படியும் வணிகம் எதையும் செய்கிறதும்[1], என்று பொருள்படும்.

வெளிநாட்டு நிறுவனங்கள் பற்றிய வகைமுறைகளை 2013–ஆம் ஆண்டு

---

1. **"Foreign company"** means any company or body incorporate incorporated outside India which,-
   (a) has a place of business in India whether by itself or through an agent, physically or through electronic mode; and
   (b) conducts any business activity in India in any other manner.
   - Sec. 2(42) of the Companies Act, 2013.

நிறுவனச் சட்டத்தின் 379 முதல் 393 வரையிலான பிரிவுகள் விளக்குகின்றன. அவற்றின்படி, வெளிநாட்டு நிறுவனம் இந்தியாவில் உள்ள தனது அலுவலகத்தில் அதனுடைய மற்றும் அதன் துணை நிறுவனங்களுடைய இருப்புநிலை ஏட்டினையும், இலாப–நட்டக் கணக்கினையும் வைத்திருக்க வேண்டும். மேலும் அதனுடைய பெயர்ப் பலகையில் அதனுடைய பெயரையும், அது பதிவான நாட்டின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேற்படி விவரங்களை அதன் திட்ட அறிவிப்பிலும், கடிதங்களி லும், விலைப்பட்டியலிலும் சரியாக குறிப்பிட வேண்டும். உறுப்பினர்களின் பொறுப்பு, வரம்பிற்குட்பட்டதாயின் அதையும் அவற்றில் குறிப்பிடல் இன்றியமையாததாகும்.

வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியிடும் திட்ட அறிவிப்புகள் (Prospectus) நிறுவனச் சட்டம், 2013–இன் 387 முதல் 391 வரையிலான பிரிவுகளை பின்பற்றி அமைந்திருக்க வேண்டும். இந்நிறுவனங்கள் இந்தியாவில் உள்ள அலுவலகங்களின் விபரங்களையும் அதன் இருப்புநிலை ஏட்டின் மற்றும் இலாப–நட்டக் கணக்குகளின் மூன்று நகல்களை நிறுவனங்களின் பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். வெளிநாட்டு நிறுவனங்கள் தொடர்பான நிறுவனச் சட்ட வகைமுறைகளை அத்தகு வெளிநாட்டு நிறுவனம் ஏதும் மீறினால் அதற்கான தண்டனையை பிரிவு 392 கூறு கிறது.

Grindlays Bank Ltd. வங்கி உட்பட இன்று இந்தியாவில் பல்கிப் பெருகி யுள்ள பல்வேறு வெளிநாட்டு வங்கிகள் வெளிநாட்டு நிறுவனத்திற்கு எடுத்துக்காட்டு களாகும்.

வெளிநாட்டு நிறுவனங்களைப் போன்று **பன்னாட்டு நிறுவனங்களுக்கும் (Multi National Companies)** இன்றைய நவீன நிறுவனக் கட்டமைப்பில் முக்கிய இடமுண்டு. ஒரு நிறுவனம் தனது உற்பத்தி மேலாண்மையை அல்லது சேவை வழங்குதலை ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் மேற்கொண்டால் அது பன்னாட்டு நிறுவனம் அல்லது சர்வதேச நிறுவனம் என்றழைக்கப்படுகிறது. சர்வதேச தொழி லாளர் அமைப்பானது (International Labour Organisation) இத்தகு பன்னாட்டு நிறுவனங்களை, ஒரு நாட்டில் (சொந்த நாடு) நிர்வாக தலைமை அலுவலகத்தைக் கொண்டு, பல்வேறு நாடுகளில் தனது வணிக மேலாண்மையை செய்யும் கூட்டுருமம் என்றழைக்கிறது. அந்த வகையில் Reliance Industries, Tata Motors, Larsen and Toubro, VIPRO, NOKIA Communication, IBM India ஆகியவற்றை இந்திய பன்னாட்டு நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

II. பொறுப்பின் அடிப்படையில் (On the basis of Liability):

ஒரு நிறுவனம் கொண்டுள்ள பொறுப்புகளின் அடிப்படையில், அது பின்வருமாறு பிரிக்கப்படுகின்றன.

1. வரையறுக்கப்பட்ட நிறுவனம் (Limited Company) :

இதனைப் **'பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனம்'** (Company Limited by Shares) என்றும் கூறலாம். இந்நிறுவன உறுப்பினர்களின் பொறுப்பு, அவர்கள் வாங்கியுள்ள பங்குகளின் தொகைக்குட்பட்டது. அதாவது நிறுவனத்திற்கு கடன் தரப்பட்டு அது நட்டமடையும் போது, உறுப்பினர்களின் பொறுப்பு அவர்கள் வாங்கியுள்ள பங்கின் மதிப்பளவே ஆகும். அமைப்புமுறையேட்டின்படி (Memorandum of Association), நிறுவன உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தாக இருந்தால், அந்நிறுவனம் பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும்.

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 2 (22)**–ஆனது, **'பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனம்'** (Company Limited by Shares) என்பது, "தனது நிறுவன உறுப்பினர்களால் முறையே வைத்திருக்கப்படும் பங்குகளின் மீது செலுத்தப்படாத தொகை ஏதேனுமிருப்பின் அத்தொகைக்கு அமைப்புமுறையேட்டால் வரம்பிடப்பட்ட உறுப்பினர்களின் பொறுப்பைக் கொண்டிருக்கும் ஓர் நிறுவனம்"[1] என்று வரையறுக்கிறது.

இந்த வரையறையை வேறு விதத்தில் சொன்னால் நிறுவனம் ஒன்று கலைக்கப்படும் போது, அதன் உறுப்பினர் ஒருவரின் பொறுப்பானது, அவர் அந்நிறுவனத்தில் வாங்கியுள்ள பங்குகளைப் பொறுத்தது. இது எந்த அளவிற்கு வரம்பிடப்படுகிறது என்றால், அப்பங்குகளின் செலுத்தப்படாத மதிப்பின் அளவிற்கு. எனவே இந்த பொறுப்பு நெகிழாதது. பங்குதாரரின் செலுத்தப்படாத தொகையின் அளவுக்கு வரம்பிற்குட்பட்டதாக அப்படியே நிலையாக இருக்கிறது. அப் பங்குதாரர் ஆதியில் பங்குகளை வாங்கியவராக இருக்கலாம் அல்லது அவரால் பங்குகள் மாற்றிப் பெற்றவராக இருக்கலாம் (Original shareholder or the transferee).

பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனம் தனி நிறுவனமாக அல்லது பொது நிறுவனமாக இருக்கலாம். இந்நிறுவனங்கள் தங்கள் பெயரின் பின்னால், **'வரையறுக்கப்பட்டது'** அல்லது **'வரை'** (Limited or Ltd.) என்ற சொற்களை சேர்த்துக் கொள்ள வேண்டும். தற்போது நடைமுறையில் காணப்படுகின்ற பெரும் பாலான நிறுவனங்கள் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

2. பொறுப்புறுதி நிறுவனம் (Gurarantee Company) :

இதனை **'பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுவனம்'** (Company

1. **"Company limited by shares"** means a company having the liability of its members limited by the memorandum to the amount, if any, unpaid on the shares respectively held by them.
- Sec. 2(22) of the Companies Act, 2013.

Limited by Guarantee) என்றும் கூறலாம். ஒரு நிறுவனம் கலைக்கப்படும் போது அதன் சொத்துக்களுக்கு பங்களிப்பதாக அதன் உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பது அமைப்பு முறையேட்டில் (Memorandum of Association) குறிக்கப்பட்டிருந்தால், அந்நிறுவனம் பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும்.

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 2(21)**–ஆனது, **'பொறுப் புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுவனம்'** (Company Limited by Shares) என்பது, "நிறுவனமொன்று கலைக்கப்படுகின்ற போது, அதன் சொத்துக்களுக்கு பங்களிப்பதாக உறுப்பினர்கள் முறையே பொறுப்பேற்றுக் கொள்ளலாகும் அத்தகு தொகைக்கு அமைப்புமுறையேட்டால் வரம்பிடப்பட்ட உறுப்பினர்களின் பொறுப்பைக் கொண்டிருக்கும் ஓர் நிறுவனம்"[1] என்று வரையறுக்கிறது.

வரையறுக்கப்பட்ட நிறுவன உறுப்பினர்களின் பொறுப்பு, அவர்கள் பொறுப் புறுதி அளித்துள்ள தொகைக்கு உட்பட்டதாகும். பெரும்பாலும் இலாப நோக்கம் இல்லாத அனைத்து நிறுவன உறுப்பினர்களின் பொறுப்பும் பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கும். உதாரணமாக, **தென்னிந்திய வாணிப சங்கம், சென்னை பங்கு மாற்று நிலையம்** ஆகியவற்றை பொறுப்புறுதியால் வரையறுக்கப் பட்ட நிறுவனங்களாக கூறலாம். அது தனி நிறுவனமாகவோ அல்லது பொது நிறுவன மாகவோ இருக்கலாம். மேலும் அது தனது பெயரின் பின்னால், **'வரையறுக்கப்பட்டது'** அல்லது **'தனியார் வரையறுக்கப்பட்டது'** ('Ltd.' or 'Pvt. Ltd.') என்ற சொற்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

3. வரையறுக்கப்படா நிறுவனம் (Unlimited Company) :

ஒரு நிறுவன உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாததாக இருப்பின், அது **வரையறுக்கப்படா நிறுவனம்** எனப்படும். **[பிரிவு 2(92)]**.

பொறுப்பு வரையறுக்கப்படாத நிறுவனங்களின் உறுப்பினர்கள், நிறுவனத் தின் கடன்களை அடைக்கும் முழுப் பொறுப்பையும் தனிப்பட்ட விதத்தில் ஏற்கிறார்கள். இங்கு உறுப்பினர்களின் பொறுப்பு எவ்வளவு என்பது வரையறுக்கப்படவில்லை. எனவே, நிறுவனத்திற்கு ஏற்படும் கடன்கள் முழுவதையும் உறுப்பினர்கள் தீர்க்க வேண்டும். இத்தகைய நிறுவனங்கள் நம் நாட்டில் அதிகம் காணப்படவில்லை. எனினும், வரையறுக்கப்படா நிறுவனமொன்று, தனி நிறுவனமாகவோ அல்லது பொது நிறுவனமாகவோ இருக்கலாம்.

III. உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் (On the basis of number of Members):

---

1. **"Company limited by guarantee"** means a company having the liability of its members limited by the memorandum to such amount as the members may respectively undertake to contribute to the assets of the company, in the event of of its being wound up.
- Sec. 2(21) of the Companies Act, 2013.

உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், ஒரு நிறுவனம் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.

1. தனி (அல்லது) தனியார் நிறுவனம் (Private Company):

தனி நிறுவனம் என்பது, குறைந்தபட்சம் 2 நபர்களையும் அதிகபட்சம் 200 நபர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டது. (முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டப்படி தனி நிறுவனத்திற்கான அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 ஆகும். இது தற்போது 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தால் 200 என அதிகரிக்கப்பட்டுள்ளது.) தனி நிறுவனத்தின் பங்குகளை மாற்றித்தர இயலாது. பொது மக்களுக்கு இந்நிறுவனத்தின் பங்குகள் அல்லது கடன் பத்திரங்கள் ஆகியன வழங்கப்படுவதில்லை. **[பிரிவு 2(68) - நிறுவனச் சட்டம், 2013].**

தனி நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஒரு குடும்பத்தைச் சார்ந்த உறவினர்களாக அல்லது நெருங்கிய நண்பர்களாக இருப்பார்கள். **நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015-இன்படி** தனி நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகைக்கு (Minimum paid-up share capital) குறைந்தபட்ச வரம்பு ஏதும் இல்லை. இந் நிறுவனம் தன் பெயரின் இறுதியில் 'தனி வரையறுக்கப்பட்டது' **(Privato Limitod)** என்ற சொற்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

2. பொது நிறுவனம் (Public Company) :

தனி நிறுவனம் அல்லாத ஒன்று பொது நிறுவனமாகும் என்று **2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 2(71)** கூறுகிறது. இந்நிறுவனத்தில் குறைந்தபட்சம் 7 நபர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அதிகபட்ச எண்ணிக்கைக்கு வரம்பில்லை. உறுப்பினர்கள் தங்களது பங்குகளை மற்றவர்களுக்கு மாற்றித்தரலாம். பொது மக்களுக்கு பங்குகளையும் கடன் பத்திரங்களையும் விற்பனை செய்யலாம். பொது நிறுவனங்களில், பொதுமக்கள் பலரும் பங்குகள் வாங்கி ஈடுபடுவதால், அவை கடுமையான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகும். **நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம், 2015-இன்படி** பொது நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகைக்கு (Minimum paid-up share capital) குறைந்தபட்ச வரம்பு ஏதுமில்லை.

Shyam Nandan Prasad v. State of Bihar[1] என்ற வழக்கில் பீகார் மற்றும் ஓரிஸ்ஸா கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு வசதி சங்கம் ஒன்றின் செலுத்தப்பட்ட மூலதனத் தொகை அரசாங்கத்தால் செலுத்தப் படவில்லை. அதே நேரம் அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் அதிகமாக இருந்தது. இதை எந்த வகை நிறுவனத்தில் சேர்ப்பது என்ற பிரச்சனை எழுந்த போது, இது ஒரு அரசு நிறுவனமும் அல்ல, அதே நேரம் தனியார் நிறுவனமும் அல்ல, மாறாக இது ஒரு பொது நிறுவனம் (neither a private company nor a private company, but a public company) ஆகும் என்று உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்தது.

1. (1993) 4 SCC 255 (263)

II. பொது நிறுவனமாக கருதப்படுவது (Deemed Public Company):

இந்த வகை நிறுவனம் குறித்து 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தில் இருந்து வந்த சில குறைபாடுகளை 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் நீக்கி, இதன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது என்று கூறலாம். 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 2(71) பொது நிறுவனத்திற்கான வரையறையைத் தருகிறது. அதன் படி, 'பொது நிறுவனம்' என்பது (அ) தனி நிறுவனம் அல்லாத ஓர் நிறுவனம் (a company which is not a private company), (ஆ) அது வருத்துரைக்கப்படலாகும் குறைந்தபட்ச செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகையைக் கொண்டிருக்க வேண்டும் (has a minimum paid up share capital as may be prescribed).

இந்த இரண்டு கூறுகளை அடுத்து மேற்படி பிரிவில் வரம்புரை வாசகம் (proviso clause) ஒன்று வருகிறது. அதுவே 'பொது நிறுவனமாக கருதப்படுவது' எது என்பதை விளக்குகிறது. அந்த வரம்புரைப்படி, "தனி நிறுவனம் அல்லாத நிறுவனம் ஒன்றின் துணை நிறுவனமாக உள்ள நிறுவனம் ஒன்று, அத்தகு துணை நிறுவனம் தனது செயல்முறை விதிகளில் ஓர் தனி நிறுவனமாக தொடர்ந்திருந்திருந்தாலும் கூட இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஓர் பொது நிறுவனம் என்று கருதப்படுதல் வேண்டும்"

சுருங்கச் சொன்னால் பொது நிறுவனமொன்றின் துணை நிறுவனமாக உள்ள தனியார் நிறுவனம் ஒன்று பொது நிறுவனமாக கருதப்படுவது ஆகும். அத்தகு துணை நிறுவனம் வெளிநாட்டு நிறுவனத்தின் பிடிப்பில் உள்ளதும் இந்தியாவில் வணிகம் செய்வதுமான தனி நிறுவனமாக இருக்கலாம். அல்லது இந்திய நிறுவனத் தின் பிடிப்பில் உள்ள வெளிநாட்டு தனி நிறுவனமாக இருக்கலாம்.

இது குறித்து மேலும் தெளிவாக அறிய நாம் பிடிப்பு நிறுவனம், துணை நிறுவனம் ஆகிய பதங்களின் வரையறையை அறிதல் வேண்டும். அவை வருமாறு:–

IV. கட்டுப்பாட்டின் அடிப்படையில் (On the basis of Control):

கட்டுப்பாட்டின் அடிப்படையில் நிறுவனங்கள் பின்வருமாறு பிரிக்கப்படுகின் றன. அவை பிடிப்பு நிறுவனம் மற்றும் பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் ஆகும். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பான பதங்கள். அதாவது, ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்தின் பிடிப்பு நிறுவனம் என்றால் அந்த மற்றொரு நிறுவனம் அதன் பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் ஆகும்.

இவை குறித்து 2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டம் யாது கூறுகிறது என்பதை அடுத்த பக்கத்தில் கவனிப்போம்.

---

1. Provided that a company which is a subsidiary of a company, not being a private company, shall be deemed to be a Public Company for the purposes of this Act even where such subsidiary company continues to be a private company in its Articles - **Proviso of Section 2(71).**

1. பிடிப்பு நிறுவனம் (Holding Company) :

பிடிப்பு நிறுவனம் என்பது 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **2(46)-வது பிரிவில்** வரையறை செய்யப்பட்டுள்ளது. அதன்படி **ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிற நிறுவனங்கள் தொடர்பாக 'பிடிப்பு நிறுவனம்' என்பது அத்தகு துணை நிறுவனங்களை பிடிப்பில் கொண்டுள்ள ஓர் நிறுவனம் என்று பொருள் படும்**[1]. சுருங்கச் சொன்னால், பிடிப்பு நிறுவனம் என்பது வேறொரு நிறுவனத்தை தனது கிளை நிறுவனமாக கொண்டதாகும். அதாவது, ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்தை தனது கட்டுப் பாட்டிற்குள் வைத்திருந்தால், அது பிடிப்பு நிறுவனம் என்று கருதப்படுகிறது.



துணை நிறுவனங்களை பிடிப்பில் கொண்டிருக்கும் நிறுவனம் பிடிப்பு நிறுவனம் என்று மேலே பொத்தம்பொதுவாக கண் டோம். ஆனால் அவ்வாறு பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் (Subsidiary Company) என்பது யாது என்பதற்குண்டான சட்ட வரையறையை நாம் கண்டால்தான் பிடிப்பு நிறுவனத்தின் உள்ளபடியான வரையறையை மதிப்பிட முடியும் அல்லது அறிந்து கொள்ள முடியும். அது வருமாறு:–

2. துணை நிறுவனம் (அல்லது) பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் (Subsidiary Company):

பிடிப்பு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு ஒரு நிறுவனம் உள்ளாகிறதென் றால், அந்நிறுவனம் பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் என்றழைக்கப்படும். ஒரு நிறுவனம், மற்றொரு நிறுவனத்தின் துணை நிறுவனமாக கருதப்பட வேண்டுமெனில் பின்வரும் தன்மைகளில் ஏதேனும் ஒன்று பொருந்தியிருத்தல் அவசியம் என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 2(87)** கூறுகிறது. அவை,–

(i) நிறுவன இயக்குனரவையின் மீது அம்மற்றொரு நிறுவனம் கட்டுப்பாடு கொண்டிருக்க வேண்டும்; அல்லது

(ii) நிறுவனத்தின் மொத்த பங்கு மூலதனத்தில் ஒரு பாதிக்கும் மேற் பட்டதன் மீது தானே சொந்தமாகவோ அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணை நிறுவனங்களுடன் இணைந்தோ தனது அதிகாரத்தை செயல்படுத்த வேண்டும் அல்லது கட்டுப்பாடு கொண்டிருக்க வேண்டும்.

---

1. **"Holding company"** in relation to one or more other companies, means a company of which such companies are subsidiary companies - **Section 2(46) of the Companies Act, 2013.**

மேற்கண்ட (i) அல்லது (ii)–வது உட்கூறில் கூறப்பட்டுள்ள கட்டுப்பாட்டை பிடிப்பு நிறுவனத்தின் மற்றொரு துணை நிறுவனம் எந்த நிறுவனத்தின் மீது கொண்டிருக்கிறதோ அந்நிறுவனமும் பிடிப்பு நிறுவனத்தின் துணை நிறுவனமாகவே கருதப்படுதல் வேண்டும். சுருங்கக் கூறின் துணை நிறுவனமொன்றின் துணை நிறுவனமானது, பிடிப்பு நிறுவனத்தின் துணை நிறுவனமாகவே கருதப்பட வேண்டும்.



மேலும் ஒரு நிறுவனத்தின் இயக்குனர்களில் அனைவரையும் அல்லது அவர்களில் பெரும்பான்மையினரை நியமிக்கும் அல்லது நீக்கும் அதிகாரத்தை மற்றொரு நிறுவனம் கொண்டிருந்தால், அந்நிறுவன இயக்குனரவை அல்லது இயக்குனர்கள் மீது அம் மற்றொரு நிறுவனம் கட்டுப்பாடு கொண்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.[1]

மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டை அடுத்து வரும் ஒரு எடுத்துக்காட்டு மூலம் கண்டால் தெளிவாக விளங்கும். இங்கு 'S' என்பதை 'துணை நிறுவனம்' என்றும், 'H' என்பதை 'பிடிப்பு நிறுவனம்' என்றும் கொள்வோம்.

(i) 'S' நிறுவன இயக்குனரவையின் மீது 'H' நிறுவனம் கட்டுப்பாடு கொண்டிருந்தால்;

---

1. **"Subsidiary company"** or **"subsidiary"**, in relation to any other company (that is to say the holding company), means a company in which the holding company-

   (i) controls the composition of the Board of Directors; or

   (ii) exercises or controls more than one-half of the total share capital either at its own or together with one or more of its subsidiary companies:

   Provided that such class or classes of holding companies as may be prescribed shall not have layers of subsidiaries beyond such numbers as may be prescribed.

   Explanation .- For the purposes of this clause.-

   (a) a company shall be deemed to be a subsidiary company of the holding company even if the control referred to in sub-clause (i) or sub-clause (ii) is of another subsidiary company of the holding company;

   (b) the composition of a company's Board of Directors shall be deemed to be controlled by another company if that other company by exercise of some power exercisable by it at its discretion can appoint or remove all or a majority of the directors;

   (c) the expression 'company' includes any body corporate;

   (d) 'layer' in relation to a holding company means its subsidiary or subsidiaries - **Section 2(87) of the Companies Act, 2013**

(ii) 'S' நிறுவன (சாதாரண) பங்கு மூலதனத்தில் பாதிக்கும் அதிகமாக (அதாவது 50 விழுக்காட்டுக்கும் அதிகமாக) 'H' நிறுவனம் தானே அல்லது ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட துணை நிறுவனங்களுடன் சேர்ந்து வைத்திருந்தால்;

(iii) 'S' நிறுவனமானது 'C' என்ற வேறொரு துணை நிறுவனத்தின் துணை நிறுவனமாக இருந்தால் 'C' என்ற அந்நிறுவனமே 'H' நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்;

(iv) 'S' நிறுவன இயக்குனர்களை நியமிக்கும் அல்லது நீக்குவதற்கான அதிகாரத்தை 'H' நிறுவனம் வைத்திருந்தால்;

(v) 'S' நிறுவனத்தில் வாக்களிக்கும் அதிகாரத்தை பாதிக்கும் மேலாக (50 விழுக்காட்டிற்கும் அதிகமாக) 'H' நிறுவனம் வைத்திருந்தால்;

இங்கு 'S' நிறுவனம் 'H' நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். அது போல் 'S'–ஐ தனது துணை நிறுவனமாகக் கொண்ட 'C' என்ற மற்றொரு துணை நிறுவனம் 'H' நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்.

'பிடிப்பிலுள்ள துணை நிறுவனம்' (Subsidiary Company) என்பதற்கு நாம் ஏற்கனவே கண்ட வரையறையில் இடம் பெறும் '**நிறுவனம்**' என்ற சொல்லில் '**கூட்டுரு அமைப்பு**' **(Body corporate)** என்பதும் உள்ளடங்கும் என்று பிரிவு **2[87]-இன் கீழான விளக்கம் [c]** கூறுகிறது. இங்கு 'கூட்டுரு அமைப்பு' என்பதன் வரையறையை காண்பது அவசியமாகும்.

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 2[11]**–இன்படி, 'கூட்டுரு அமைப்பு' அல்லது 'கூட்டுருமம்' **(corporation)** என்பது இந்தியாவிற்கு வெளியே பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றையும் உள்ளடக்கியதாகும். ஆனால் (i) கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான சட்டம் எதன்படியும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கம் ஒன்றை உள்ளடக்கியதாகாது. அதுபோல், (ii) மைய அரசு அறிவிக்கை மூலம் இதன் பொருட்டு குறித்துரைக்கலாகும் (இந்த நிறுவனச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான நிறுவனமொன்று அல்லாத) கூட்டுரு அமைப்பு வேறு எதையும் உள்ளடக்கியதாகாது.[1]

பிடிப்பிலுள்ள துணை நிறுவனத்திற்கான தீமைகள் (Disad-

1. **"Body corporate"** or **"corporation"** includes a company incorporated outside India, but does not include-
   (i) a co-operative society registered under any law relating to co-operative societies; and
   (ii) any other body corporate (not being a company as defined in the Act), which the Central Government may, by notification, specify in this behalf; - **Section 2(11) of the Companies Act, 2013**

vantages of a subsidiary company): பிடிப்பு நிறுவனம் மற்றும் பிடிப் பிலுள்ள துணை நிறுவனத்திற்கு இடையே உள்ள உறவுநிலை காரணமாக, பின்வரும் சில தீமைகள் ஏற்படவே செய்கின்றன. அவை,

1. பொது நிறுவனமொன்றின் துணை நிறுவனமாக உள்ள தனியார் நிறுவன மொன்று, பொது நிறுவனத்திற்கான அதே தகுநிலையை அடைகிறது. இதன் விளை வாக அந்நிறுவனம் ஒரு தனியார் நிறுவனத்திற்கு கிடைக்கத்தக்க சிறப்புரிமைகள் மற்றும் விலக்குகளை இழந்துவிடுகிறது.

2. ஒரு துணை நிறுவனம் தன்னை பிடித்துக் கொண்டிருக்கும் பிடிப்பு நிறுவனத்தின் பங்குகளை வைத்துக் கொள்ள முடியாது. இதையும் மீறி அதற்கு பங்குகள் ஒதுக்கப்பட்டாலோ அல்லது மாற்றப்பட்டாலோ அது இல்லா நிலையதாகும்.

எனினும் இந்நிலைப்பாடு பின்வரும் மூன்று நிலைகளில் பொருந்தாது. அவை, (அ) ஒரு துணை நிறுவனமானது தனது பிடிப்பு நிறுவனத்தில் உறுப்பினராக இருந்து இறந்து போன ஒருவரின் சட்டநிலை பிரதிநிதியாக (வாரிசாக) அப்பங்குகளை வைத்திருந்தால், அல்லது (ஆ) அத்துணை நிறுவனம் ஒரு பொறுப்பாண்மையராக (டிரஸ்டி) அப்பங்குகளை வைத்திருந்தால், அல்லது (இ) பிடிப்பு நிறுவனத்தின் துணை நிறுவனமாக ஆவதற்கு முன்னதாகவே அப்பிடிப்பு நிறுவனத்தில் அத்துணை நிறுவனம் ஒரு பங்குதாரராக இருப்பின், அப்பங்குகள் செல்லத்தக்கதாகவே ஆகும். மேலும் மேற் கண்டவாறு ஒரு சட்ட நிலை பிரதிநிதியாக அல்லது ஒரு பொறுப்பாண்மையராக அடைந்த பங்குகளைப் பொறுத்து மட்டுமே பிடிப்பு நிறுவன கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை துணை நிறுவனத்திற்கு உண்டு. மற்ற நேர்வுகளில் அவ்வாறு பிடிப்பு நிறு வனத்தின் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை துணை நிறுவனத்திற்கு கிடை யாது.[1]

பிடிப்பு நிறுவனமும் அதனுடைய துணை நிறுவனமும் தனிப்பட்ட சட்டத்

---

1. **Subsidiary company not to hold shares in its holding company.-** (1) No company shall, either by itself or through its nominees. hold any shares in its holding company and no holding company shall allot or transfer its shares to any of its subsidiary companies and any such allotment or transfer of shares of a company to its subsidiary company shall be void;

   Provided that nothing in this sub-section shall apply to a case -

   (a) where the subsidiary company holds such shares as the legal representative of a deceased member of the holding company; or

   (b) where the subsidiary company holds such shares as a trustee; or

   (c) where the subsidiary company is a shareholder even before it became a subsidiary company of the holding company:

   Provided further that the subsidiary company referred to in the preceding proviso shall have a right to vote at a meeting of the holding company only in respect of the shares held by it as a legal representative or as a trustee, as referred to in clause (a) or clause (b) of the said proviso. - **Section 19(1) of the Companies Act, 2013**

தன்மையை பெற்றிருக்கிறது. ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக கூட்டுருமத் திரை (Corporate veil) உள்ளது.

V. உடைமையின் அடிப்படையில் (On the basis of Ownership):

உடைமையின் அடிப்படையில் நிறுவனங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் படுகின்றன.

1. அரசு நிறுவனம் (Government Company) :

அரசு நிறுவனம் என்பது 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 2(45)**–இல் வரையறை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு நிறுவனத்தின் செலுத்தப் பட்ட பங்கு மூலதனத்தில் (பங்குகளில்) 51%-க்கு மேல் மைய அரசு அல்லது மாநில அரசு அல்லது மாநில அரசுகள் அல்லது பகுதியளவில் மைய அரசும் பகுதியளவில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகளும் கூட்டாகப் பெற்றிருந்தால், அந்நிறுவனம் அரசு நிறுவனம் எனப்படுகிறது. அத்தகு நிறுவனத்தின் துணை நிறுவனமும் அரசு நிறுவனம் என்றே அழைக்கப்படுகிறது. மத்திய, மாநில அரசுகள் நிறுவனச் சட்டப்படி பல நிறுவனங்களை நடத்தி வருகின்றன.

இந்த அரசு நிறுவனங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை (1) அரசுக்கு உடைமையான இந்திய வங்கிகள் (Government-owned banks of India); (2) அரசுக்கு உடைமையான இந்திய காப்பீட்டுக் கழகங்கள் Government-owned insurance companies of India); (3) இந்திய நாணயச் சாலைகள் (Mints of India); (4) இந்திய அரசாங்கத்தால் தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்கள் (Companies nationalised by the Government of India).

ஏர் இந்தியா, பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிட்., பாரத் பெட்ரோலியம், பாரத் சன்சார் நிகம் லிட்., இந்தியன் ஆயில் கார்ப்பரேசன், ஷிப்பிங் கார்ப்பரேசன் ஆஃப் இந்தியா, தி நியூ இந்தியா அஸ்ஸூரன்ஸ் கம்பெனி லிட்., இந்தியன் ரயில்வே கேடரிங் அண்ட் டூரிஸம் கார்ப்பரேசன் ஆகியவற்றை அரசு நிறுவனத்திற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

பின்வரும் விதிகள் அரசு நிறுவனத்திற்கு பொருந்தக் கூடியதாகும் :

அரசு நிறுவனங்களும் பிற நிறுவனங்களைப் போன்று நிறுவனச் சட்டத்தால் வழி நடத்தப்பட்டாலும், நிறுவனச் சட்டத்தின் சட்டப் பிரிவுகள் ஏதேனும் அதற்குப் பொருந்தாது என்றோ, சில விலக்குகளுடன் அல்லது மாற்றங்களுடன் பொருந்தும்

---

1. **"Government company"** means any company in which not less than fifty-one percent of the paid-up share capital is held by the Central Government, or by any State Government or Governments, or partly by the Central Government and partly by one or more State Governments, and includes a company which is a subsidiary company of such a Government company; - **Section 2(45) of the Companies Act, 2013**

என்னே அறிவிக்கை (Notification) மூலம் ஏவுரைக்கும் அதிகாரத்தை மைய அரசுக்கு 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **395-வது பிரிவு** அளித்துள்ளது. மேலும் **பிரிவு 394**–இல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளை அரசு நிறுவனங்கள் அனைத்தும் கண்டிப்பாக நிறைவு செய்ய வேண்டும். அவை,

1. *தணிக்கையாளரின் நியமனம் மற்றும் தணிக்கையை நடத்துதல்* (Appointment of Auditor and conduct of Audit): அரசு நிறுவனத்தின் தணிக்கையாளரை இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் (Comptroller and Auditor General of India) அறிவுரையின் படி மைய அரசு நியமனம் அல்லது மறு நியமனம் செய்கிறது. அரசு நிறுவனக் கணக்குகளை எந்த முறையில் தணிக்கை செய்ய வேண்டும் என்று ஏவுரைக்கவும், அதுபோல் பணிகளை செய்யும் முறை தொடர்பாக அதன் தணிக்கையாளருக்கு அறிவுறுத்தவும் இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவருக்கு அதி காரம் உண்டு. மேலும் அவர் தான் அதிகாரமளிக்கும் நபர்கள் மூலம் நிறுவனத்தை துணை அல்லது சோதனை தணிக்கை செய்யவும் அதிகாரம் படைத்தவர். அரசு நிறுவனத்தின் தணிக்கையாளர் தனது தணிக்கை அறிக்கையின் நகல் ஒன்றை இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர் அதன் மீது தனது கருத்துரைகளை (விமர்சனங்களை) வழங்கலாம்.

2. *தணிக்கை மற்றும் ஆண்டு அறிக்கையை பாராளுமன்றம் மற்றும்/அல்லது மாநில சட்டமன்றத்தின் முன் வைத்தல் வேண்டும்* (Audit and Annual report to be placed before the Parliament and/or State Legislature): அரசு நிறுவனத்தின் தணிக்கையாளர் மேற் கண்டவாறு சமர்ப்பித்த தணிக்கை அறிக்கை மற்றும் அதன் மீது தணிக்கைத் துறை தலைவர் வழங்கிய கருத்துரைகள் ஏதும் இருப்பின் அவை, ஆகிய இந்த இரண்டையும் அரசு நிறுவனத்தின் பொதுக் கூட்டம் நடத்தப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக மைய அரசு பாராளுமன்றத்தின் இரு அவைகள் முன்பும் வைத்தல் வேண்டும். மைய அரசுடன் மாநிலஅரசும் அந்த அரசு நிறுவனத்தின் ஓர் உறுப்பினராக இருக்கும் நேர்வில், அந்த மாநில அரசு மேற்கண்ட அறிக்கை மற்றும் கருத்துரைகளை தனது சட்டமன்றத்தின் முன்பும் வைத்தல் வேண்டும். மேற்கண்ட நடைமுறை அரசு நிறுவனத்தின் பொது ஆண்டறிக்கைக்கும் (General Annual report) பொருந்தக் கூடியதாகும்.

3. *நிறுவனச் சட்ட வகைமுறைகள் சிலவற்றின் பொருந்துகை யிலிருந்து அரசு நிறுவனத்திற்கு விலக்கு* (Government companies are exempt from the applicability of certain provisions of the Act): நாம் ஏற்கனவே கண்டவாறு நிறுவனச் சட்டத்தின் சில பிரிவுகள் அரசு நிறுவனத்திற்கு பொருந்தாது என்று அறிவிக்கை மூலம் விளம்ப மைய அரசுக்கு 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் அதிகாரமளித்துள்ளது. மேலும் சில பிரிவுகள் சில மாற்றங்களுடன் பொருந்தும் என்று அறிவிக்கை வாயிலாக விளம்பவும் மைய அரசு அதிகாரம் படைத்துள்ளது. அத்தகு அறிவிக்கையின் நகல் ஒன்று பாராளு

மன்றத்தின் இரு அவைகள் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும். அந்த வகையில் அரசு நிறுவனங்களுக்கு நிறுவனச் சட்ட வகைமுறைகளின் பொருந்துகை தொடர்பாக விலக்குகளையும் மாற்றங்களையும் விளம்பி பலமுறை மைய அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. எடுத்துக்காட்டுக்கு பின்வரும் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம்.

(அ) அரசுக்கே முழுமையாக சொந்தமான அரசு நிறுவன இயக்குனர்கள் நியமனம் மற்றும் மறு நியமனம் தொடர்பான பிரிவு 152–லிருந்து விலக்களித்துள்ளது.

(ஆ) வணிகத்தை தொடங்குவதன் மீதான தடைகள் அரசுக்கே முழுமையாக சொந்தமான அரசு நிறுவனங்களுக்குப் பொருந்தாது.

(இ) நிறுவனப் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டிய இயக்குனர்கள் நியமனத்திற்கான தீர்மானம், தடைகள், ஒப்புதல் ஆகியன தொடர்பாக பிரிவுகள் 162 மற்றும் 163 கூறும் வகைமுறைகளிலிருந்து அரசு நிறுவனங்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

(ஈ) நிறுவனமொன்றின் பங்குகளில் உள்ள ஆதாய நலன் மற்றும் அதனை புலனாய்வு செய்வதை வேண்டுறுத்தும் பிரிவு 112–லிருந்து அரசு நிறுவனங்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

(உ) பிரிவு 98–இல் இடம் பெறும் 'நீதிமன்றம்/நிறுவனச் சட்ட வாரியம்' ஆகிய பதங்களுக்கு மாற்றாக அரசு நிறுவனங்களைப் பொறுத்தவரை 'தீர்ப்பாயம்' என்ற பதத்தை மைய அரசு மாற்றியமைத்து அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

(ஊ) மூலதனத்தைக் குறைத்தல் தொடர்பாக 100 முதல் 103 வரையிலான பிரிவுகளின் கீழும், நிறுவன ஒருங்கிணைப்பு தொடர்பாக 230 முதல் 232 வரையிலான பிரிவுகளின் கீழும் செய்யப்பட வேண்டிய விண்ணப்பங்களை நீதிமன்றத்திடம் செய்ய வேண்டும் என்பதற்குப் பதிலாக மைய அரசிடம் செய்ய வேண்டும் என்று மைய அரசு அறிவிக்கை மூலம் மாற்றியமைத்துள்ளது.

அரசு நிறுவனத்தின் பணியாளர்கள் குடிமைப் பணியாளர்கள் அல்ல (Employees of a Government Company are not civil servants):

நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓர் அரசு நிறுவனத்தின் சட்ட நிலையானது, சாதாரண நிறுவனமொன்றின் சட்ட நிலையை ஒத்ததே. அது தனக்குரிய தனிப்பட்ட சட்ட ஆளுமையைக் கொண்டு, அரசு அல்லது அரசாங்கம் என்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக நிற்கிறது. எனவே அரசு நிறுவனமொன்றின் பணியாளர்கள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுபு 311(2)–ன் கீழ் பணிப் பாதுகாப்பை பெற்றிருக்கும் குடிமைப் பணியாளர்களை ஒத்தவர்கள் அல்ல. அவர்கள் அத்தகு பாதுகாப்பை பெறவியலாது.

Sunil Kumar v. M. & A. Machinary Corporation Ltd.[1] என்ற வழக்கில் நிறுவமொன்றின் மொத்த பங்கு மூலதனத்தையும் அரசே முதலீடு செய்

1. AIR 1968 Cal. 322

திருந்தாலும், அது முற்றிலும் அரசு நிறுவனம் என்றே பாவிக்கப்படக் கூடியதென்றா லும், அதன் பணியாளர்கள் குடிமைப் பணியாளர்களின் தகுநிலையை (Status of Civil Servants) அடைய முடியாது என்று மாண்பமை கல்கத்தா உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

2. தனி நபர் நிறுவனம் (One man Company or Non-Government Company):

நிறுவனத்தின் பங்கு முதல் (Share Capital) அனைத்தையும் தனியொரு நபரே வைத்திருந்தால், அத்தகைய நிறுவனம் தனி நபர் நிறுவனம் ஆகும். தனி நபர் நிறுவனத்தில் ஒருவர் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு தேவையான பங்குகளை அவரே வைத்திருக்கின்றார். நிறுவனத்திற்கு வேண்டிய குறைந்த அளவு உறுப்பினர் எண்ணிக்கையை பெற தனக்கு வேண்டிய ஒருவரை அல்லது உறவினர் ஒருவரை சேர்த்துக் கொள்வார். இவருக்கு ஓரிரு பங்குகளை அளித்திருப்பார். சில நேரங்களில் ஒருவர் தன் குடும்ப உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டு நிறுவனத் தைத் தொடங்கினால் அது 'குடும்ப நிறுவனம்' எனப்படுகிறது. இங்கு நிறுவனம் உறுப் பினர்களிடமிருந்து தனித்தியங்கும் தன்மையைப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக, **Saloman v. Saloman & Co. Ltd.** எனும் வழக்கில் சாலமன் எனும் தனி நபர் ஒருவர் தனது குடும்பத்தினரை உறுப்பினர்களாக கொண்டு நிறுவனம் தொடங்கி யதை இங்கு குறிப்பிடலாம்.

இதை சில மாற்றங்களுடன் அடியொற்றி 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டமானது தனது பிரிவு 2(62) வாயிலாக **'ஒரு நபர் நிறுவனம்'** (One Person Company) என்ற மற்றுமொரு வகை நிறுவனத்தை அறிமுகப்படுத்தியுள்ளது எனில் அது மிகையன்று. (இது குறித்து விரிவாக பின்னர் காண்போம்).

தனியார் நிறுவனம், பொது நிறுவனம் - வேறுபாடுகள்:

தனியார் நிறுவனம் [Private Company]	பொது நிறுவனம் [Public Company]
1. குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டு.	குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழு.
2. அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை இருநூறு.	அதிகபட்ச வரம்பு கிடையாது.
3. பங்கு, கடனீட்டுப் பத்திரங்களை வாங்கும்படி பொதுமக்களை கேட்டுக் கொள்வது இங்கு தடை செய்யப் பட்டுள்ளது.	தனது பங்கு, கடனீட்டுப் பத்திரங்களை வாங்கும்படி பொது மக்களை கேட்டுக் கொள்ளலாம்.
4. பங்கு மாற்ற உரிமை இல்லை.	பங்கு மாற்ற உரிமை உண்டு.

தனியார் நிறுவனம் [Private Company]	பொது நிறுவனம் [Public Company]
5. தொழில் தொடங்குவதற்கு பதிவுச் சான்றிதழ் பெற்றால், அதுவே போதுமானது.	தொழில் தொடங்க பதிவுச் சான்றிதழ் பெற்றால் மட்டும் போதாது. தொழில் தொடக்கச் சான்றிதழையும் பெற வேண்டும். (தற்போது கட்டாயமானதல்ல.)
6. தனி நிறுவனத்தின் பெயரின் முடிவில் "தனி வரையறுக்கப்பட்டது" (Private Limited) என எழுத வேண்டும்.	பொது நிறுவனப் பெயரின் முடிவில் 'வரையறுக்கப்பட்டது' (Limited) என எழுதினால் மட்டும் போதுமானது.
7. ஏற்கனவே இருக்கும் தனது பங்கு தாரர்களுக்கு உரிமைப் பங்குகள் (Rights issue) அல்லது ஆதாயப் பங்குகளை (Bonus issue) திட்ட அறிவிப்பு (Prospectus) வெளி யிடுவதன் வாயிலாக வழங்கலாம்.	பொது மக்களுக்கு திட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டவாறான பொது முனைவு மூலம் பங்குகளை வெளியிடலாம்.
8. பங்குரிமைச் சீட்டு (Share Warrant) வழங்க இயலாது.	பங்குரிமைச் சீட்டு வழங்கலாம்.
9. சட்ட முறைக் கூட்டம் (Statutory meeting) நடத்த வேண்டாம்.	சட்டமுறைக் கூட்டம் நடத்தப்பட வேண் டும். சட்டமுறை அறிக்கை தயாரித்து அனுப்ப வேண்டும்.
10. இயக்குனராக பணியாற்ற விரும்பு வதாகக் கூறும் இசைவுப் பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டியதில்லை.	இதில் தாக்கல் செய்ய வேண்டும்.
11. இயக்குனர்களாக பணியாற்ற இசைவு தெரிவித்தவர்களின் பட்டியலை பதிவாளரிடம் தாக்க செய்ய வேண்டியதில்லை.	இயக்குனர்களாக பணியாற்ற இசைவு தெரிவித்தவர்களின் பட்டியலை ஒரு பொது நிறுவனம் தனது அமைப்பு முறை யேடு மற்றும் செயல்முறைவிதிகளுடன் சேர்த்து நிறுவனப்பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும்.
12. இயக்குனராக நியமிக்கப்பட தகுதிப் பங்குகளை பெற வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.	இயக்குனராக நியமிக்கப்பட கட்டாய மாக தகுதிப் பங்குகளை பெற வேண்டும்.

தனியார் நிறுவனம் [Private Company]	பொது நிறுவனம் [Public Company]
13. இங்கு திட்ட அறிவிப்புக்குப் பதிலான அறிக்கை (Statement in lieu of prospectus) தாக்கல் செய்ய வேண்டியதில்லை	பங்கு மூலதனம் உள்ள பொது நிறுவனம் ஒன்று திட்ட அறிவிப்பு வெளியிடவில்லை எனில், திட்ட அறிவிப்புக்கு பதிலான அறிக்கையை பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். அந்த அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட அனைத்து இயக்குனர்களும் அதில் கையொப்பமிட வேண்டும்.
14. தனி நிறுவனத்தின் குறைந்தபட்ச இயக்குனர்களின் எண்ணிக்கை இரண்டு ஆகும். (அது பொது நிறுவனத்தின் துணை நிறுவனமாக இருத்தல் ஆகாது).	பொது நிறுவனமொன்று குறைந்தபட்சம் மூன்று இயக்குனர்களைக் கொண்டிருக்க வேண்டும்.
15. மேலாண்மை இயக்குனரை பணியில் அமர்த்த மைய அரசின் ஒப்புதல் தேவையில்லை.	மேலாண்மை இயக்குனரை நியமிக்க மைய அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும்.
16. ஒரு நபர், எத்தனை நிறுவனங்களில் வேண்டுமானாலும் இயக்குனராக இருக்கலாம்.	ஒரு நபர் 20–க்கும் மேற்பட்ட பொது நிறுவனங்களின் இயக்குனராக இருக்க முடியாது.
17. கணக்கு வழக்குகளை பார்வை இட, ஆய்வு செய்ய பொது மக்களுக்கு உரிமையில்லை.	கணக்கு வழக்குகளை பார்வையிட, ஆய்வு செய்ய பொதுமக்களுக்கு உரிமை உண்டு.
18. நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் இருவர் கையெழுத்திட்டால் போதும்.	நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் குறைந்தது ஏழு பேர் கையெழுத்திட வேண்டும்.
19. இதன் உறுப்பினர் எண்ணிக்கை இரண்டுக்கும் குறைந்தால், நிறுவனம் கலைக்கப்பட வேண்டும்.	இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழுக்கும் குறைந்தால், நிறுவனம் கலைக்கப்பட வேண்டும்.
20. இந்தத் தடை தனி நிறுவனத்திற்குப் பொருந்தாது.	ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு எதிலும் நலன் கொண்ட பொது நிறுவன இயக்குனர்கள் அவற்றின் விவாதத்தின் போது கலந்து கொள்ள அல்லது வாக்களிக்கக் கூடாது.

4. Define Private Company. Explain its privileges. ('தனியார் நிறுவனத்தை' வரையறுத்து அதன் தனிச்சலுகைகளை கூறுக.)

(அல்லது)

Discuss the privileges and exemptions of a Private Company under the Companies Act, 2013. (நிறுவனச் சட்டம், 2013 ன் கீழ் தனியார் நிறுவனத்திற் குரிய சிறப்புரிமைகள் மற்றும் விலக்குகளை விவாதிக்க.)

(அல்லது)

Privileges of a Private Company - Write short notes. (தனியார் நிறுவனங் களுக்குரிய சிறப்புரிமைகள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Define a Private Company and distinquish it from a Public Company. What are the privileges of a Private Company (தனியார் நிறுவனத்தை வரையறை செய்து அதை ஒரு பொது நிறுவனத்திடமிருந்து வேறு படுத்திக் காட்டுக. ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் யாவை?)

(அல்லது)

Private Company - Write short notes (தனியார் நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Public company and Private company - Write short notes. (பொது நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

தனியார் நிறுவனம் (Private Company) - வரையறை :

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 268)–இன்படி, ஒரு நிறுவனம், குறைந்தபட்ச செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைக் கொண்டு, பின்வரும் கட்டுவரம்புகளை அதன் செயல்முறை விதிகளில் (Articles of Association) கொண்டிருந்தால், அது 'தனியார் நிறுவனம்' எனப்படுகிறது. அவை,–

(i) தனது பங்குகள் மாற்றும் உரிமையை கட்டுப்படுத்தி இருக்க வேண்டும்.

(ii) உறுப்பினர்களின் எண்ணிக்கையை 200–க்கு வரையறை செய்திருக்க வேண்டும். அதாவது 200–க்கு மிகாமல் இருக்க வேண்டும். [இதற்கு ஒரு நபர் நிறுவனம் (One Person Company) விதிவிலக்கு]

வரம்புரையாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரு நிறுவனத்தில் கூட்டாக ஒன்று அல்லது அதற்கு அதிகமான பங்குகளை வைத்திருந்தால், இச்சட்டக்கூறின் நோக்கங்களுக்காக,

அவர்கள் இருவரும் ஒரே உறுப்பினராக பாவிக்கப்படுதல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக–

(அ) நிறுவனத்தின் பணியில் உள்ள நபர்கள்; மற்றும்

(ஆ) நிறுவனத்தின் பணியில் ஏற்கனவே இருந்திருந்து, அந்தப் பணியின் போது உறுப்பினர்களாக இருந்த நபர்கள் மற்றும் அப்பணியை விட்டு விலகிய பிறகு உறுப்பினர்களாக தொடர்ந்திருக்கக் கூடிய நபர்கள்,

ஆகியோர் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் உள்ளடங்குதல் ஆகாது.

(iii) நிறுவனத்தின் பங்குகள் எதையும் வாங்குவதற்கு பொது மக்களுக்கு அழைப்பு விடுப்பதை தடை செய்ய வேண்டும்.[1]

தனியார் நிறுவனத்திற்குரிய சிறப்புரிமைகள் மற்றும் விலக்குகள் (Previleges and exemptions of a Private Company):

ஒரு தனியார் நிறுவனத்திற்கு நிறுவனச் சட்டம் பல்வேறு தனிச் சிறப்புரிமைகளை வழங்கியுள்ளது. அவற்றை ஒரு தனியார் நிறுவனத்திற்கு நிறுவனச் சட்டம் வழங்கியுள்ள சலுகைகள் என்றே குறிப்பிடலாம். மேலும் நிறுவனச் சட்ட வகைமுறைகள் சிலவற்றை நிறைவு செய்வதிலிருந்தும் தனியார் நிறுவனத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இச்சிறப்புரிமைகள் மற்றும் விலக்குகளுக்குக் காரணம்,

---

1. **"Private company"** means a company having a minimum paid-up share capital as may be prescribed, and which by its articles,

(i) restricts the rights to transfer its shares;

(ii) except in case of One Person Company, limits the number of its members to two hundred:

Provided that where two or more persons hold one or more shares in a company jointly, they shall, for the purposes of this clause, be treated as a single member:

Provided further that-

(A) persons who are in the employment of the company; and

(B) persons who, having been formerly in the employment of the company, were members of the company while in that empolyment and have continued to be members after the employment ceased,

shall not be included in the number of members;

(iii) prohibits any invitation to the public to subscribe for any securities of the company; - **Section 2(68) of the Companies Act, 2013**

தனியார் நிறுவனங்கள் தங்கள் பங்குகளை வாங்கச் சொல்லி பொது மக்களை அழைக்க முடியாது. அவ்வாறு அழைப்பதன் மீது நிறுவனச் சட்டம் தடை விதித்துள்ளது. அதாவது தனியார் நிறுவன மூலதனத்தை பொது மக்களிடமிருந்து திரட்ட முடியாது. இதனால் பொது மக்களின் நிதி பாதிப்படைவதில்லை. எனவே தனி நபர்கள் தங்கள் சொந்த மூலதனத்தைக் கொண்டு நடத்தும் தனியார் நிறுவனத்திற்கு இவ்வாறு சிறப்புரிமைகளும் விலக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு.

1. தனி நிறுவனம் பதிவு செய்யப்படுவதற்குக் குறைந்தது இரண்டு உறுப்பினர்கள் இருந்தால் போதுமானது. [பிரிவு 3(1)(b)]
2. திட்ட அறிவிப்போ (Prospectus) அல்லது திட்ட அறிவிப்பிற்குப் பதிலான அறிக்கையையோ தாக்கல் செய்ய வேண்டியதில்லை. காரணம், அது தனது பங்குகளை வாங்கச் சொல்லி பொது மக்களை அழைக்க முடியாது.
3. பதிவுச் சான்றிதழ் பெற்றவுடனேயே தொழில் தொடங்கலாம். தொழில் தொடங்குவதற்குரிய சான்றிதழை பெற வேண்டிய அவசியமில்லை.
4. குறைந்த அளவு பங்குத் தொகை பெறுவதற்கு முன்பே பங்குகளை ஒதுக்கீடு செய்வதை தொடங்கலாம்.
5. சட்டமுறையான கூட்டத்தைக் கூட்டத் தேவையில்லை. சட்ட முறையான அறிக்கையையும் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டியதில்லை.
6. இது எந்த வகையான பங்குகளையும் வெளியிடலாம்.
7. கூட்டங்களுக்கு குறைந்தது இரண்டு உறுப்பினர்கள் நேரில் கலந்து கொண்டால் போதுமானது.
8. புதியதாக பங்குகளை வெளியிடும்பொழுது ஏற்கனவே உள்ள பழைய பங்குதாரர்களுக்கு முதலில் வழங்க வேண்டுமென்ற கட்டாயமில்லை.
9. நிறுவனத்திற்கு இரு இயக்குனர்கள் இருந்தால் போதும். எல்லா இயக்குனர்களும் நிரந்தரமாக, அவர்கள் ஆயுள் வரையில் அப்பதவியில் அமர்த்தப்படலாம். அதாவது இயக்குனர்கள் சுழற்சி முறையில் பதவி விலக வேண்டியதில்லை.
10. இயக்குனர்கள் தாங்கள் பணியாற்ற விரும்புவதாக கூறும் இசைவுப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டியதில்லை. மேலும் அவர்கள் தகுதிப் பங்குகள் பெற வேண்டுமென்ற கட்டாயமுமில்லை.
11. நிறுவனம் ஈடுபடும் ஒப்பந்தங்கள் தொடர்பான விடயங்களில் நலன் (தனிப்பட்ட அக்கறை) கொண்ட இயக்குனர்கள் அதன் மீதான விவாதத்தின் போது சுதந்திரமாக வாக்களிக்கலாம்.
12. தனி நிறுவனத்தின் ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்கள் கூட வாக்கெடுப்பு (Poll) நடத்தப்பட வேண்டும் என்று கோரலாம்.

13. தனியார் நிறுவனத்தால் நிறுவனப் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்படும் இலாப நட்ட கணக்குகளின் நகல்களை அதன் உறுப்பினர் அல்லாதோர் பார்வையிட முடியாது.

14. மேலாண்மை இயக்குனரின் நியமனம் அல்லது மறுநியமனத்தின் மீது தடை ஏதுமில்லை. அதுபோல் மேலாண்மை ஊதியத்திற்கு (managerial remuneration) உச்ச வரம்பும் தனி நிறுவனத்தில் கிடையாது.

மேற்கண்ட சிறப்புரிமைகள் மற்றும் விலக்குகள், ஒரு தனியார் நிறுவனம் தனது விருப்பத்தின் பேரிலோ, சட்டத்தின் செயல்பாட்டாலோ பொது நிறுவனமாக மாறினால் அதற்கு கிடைக்காது. அதேநேரம் ஒரு தனியார் நிறுவனம் பொது நிறுவன மொன்றின் துணை நிறுவனமானால், அச்சிறப்புரிமைகள் மற்றும் விலக்குகளை தொடர்ந்து அனுபவிக்கலாம்.

5. Discuss in detail the procedure for conversion of Private Company into Public Company. (ஒரு தனியார் நிறுமம் பொது நிறுமமாக மாறுவதற்கான நடைமுறை விதிகளை விளக்கமாக விவரி.)

(அல்லது)

How can a Private Company be converted into a Public Company? Can a Public Company be converted into a Private Company ? If so, how ? (ஒரு தனியார் நிறுவனத்தை எப்படி பொது நிறுவனமாக மாற்றுவது? ஒரு பொது நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்ற முடியுமா? முடியுமெனில் எவ்வாறு ?)

(அல்லது)

Define a Private Company. When does a Private Company become a deemed Public Company ? Is it necessary to alter the articles of such company to introduce the requirement of a Public Limited Company ? (தனியார் நிறுவனம் என்றால் என்ன? ஒரு தனியார் நிறுவனம் எப்பொழுது கருதப்பட்ட பொது நிறுவனமாகிறது ? அந்தச் சமயத்தில் நிறுவனத்தின் விதிகளை பொது நிறுவனத்திற்கு ஏற்றவாறு மாற்றுதல் அவசியமா?)

(அல்லது)

Define a Private Company. State the provisions of the Companies Act governing the conversion of a Private Company into Public Company. (தனியார் பங்கமைப்பு என்றால் என்ன? ஒரு தனியார் பங்கமைப்பை பொது பங்கமைப்பாக மாற்றுவது குறித்து நிறுவனச் சட்டத்தின் வகைமைகளைக் கூறுக.)

(அல்லது)

In what respect does a Private Limited Company differ from a Public Limited Company? How can a Private Limited Company be converted into a Public Limited Company? (வரம்புடைய தனியார் நிறுவனம் எவ்வகைகளில் வரம்புடைய பொது நிறுவனத்தில் இருந்து வேறுபடுகிறது? வரம்புடைய தனியார் நிறுவனம் எவ்வாறு வரம்புடைய பொது நிறுவனமாக மாற்ற முடியும்?)

முன்னுரை:

ஒரு தனியார் நிறுவனம் பொது நிறுவனமாக மாறுதல் மற்றும் ஒரு பொது நிறுவனம் தனியார் நிறுவனமாக மாறுதலைப் பொறுத்த சட்ட நிலைப்பாட்டை 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் சற்றே எளிமையாக்கியுள்ளது என்று குறிப்பிடலாம். இது குறித்து முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 43 பல்வேறு நடைமுறைகளைக் கூறியது. தற்போது ஒரு சுருக்கமான நடைமுறையை 2013–ஆம் ஆண்டு புதிய நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 14** அறிமுகப்படுத்தியுள்ளது.

2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 14 (1) கூறும் பொதுவான சட்ட நிலைப்பாடு:

ஒரு நிறுவனம் சிறப்புத் தீர்மானம் ஒன்றின் வாயிலாக

(அ) தனியார் நிறுவனத்தை பொது நிறுவனமாக மாற்ற; அல்லது

(ஆ) பொது நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்ற

தனது செயல்முறை விதிகளை திருத்தலாம் என்று நிறுவனச் சட்டத்தின் 14(1)–ஆம் பிரிவு கூறுகிறது. இது நிறுவனச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் அதே நேரத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது. அதாவது ஒரு தனியார் நிறுவனம் சிறப்புத் தீர்மானம் ஒன்றின் வாயிலாக தனது செயல்முறை விதிகளில் திருத்தம் கொண்டு பொது நிறுவனமாக மாறலாம். இந்த அடிப்படை நடைமுறை அவ்வாறே ஒரு பொது நிறுவனம் தனியார் நிறுவனமாக மாறுவதற்கும் பொருந்தும்.

தனியார் நிறுவனமொன்று பொது நிறுவனமாக மாறுதல் (Conversion of a Private Company into a Public Company):

இதனை பின்வரும் இரண்டு வகைகளில் கூறலாம். அவை,

1. விருப்பத்தின் மூலம் மாறுதல் (Conversion by Choice):

இம்முறை குறித்து நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 14(1)**–இன் கீழான **முதல் வரம்புரை வாசகம் (Proviso clause)** கூறுகிறது. ஒரு நிறுவனம், தனியார் நிறுவனமாக விளங்குவதற்கு பிரிவு 2(68)–ல் கூறப்பட்டுள்ள தடைகளை (வரம்புகளை) தனது செயல்முறை விதிகளில் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அத்தடைகளையும் வரம்புகளையும் தொடர்ந்து தனது செயல்முறை விதிகளில் சேர்த்துக்

கொண்டிருக்க அத்தனியார் நிறுவனம் விரும்பவில்லை என்றால் அது அத்தடைகளையும் வரம்புகளையும் தனது செயல்முறை விதிகளிலிருந்து நீக்கி திருத்தம் செய்து சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி பொது நிறுவனமாக மாறலாம். அவ்வாறு சிறப்புத் தீர்மானம் கொண்டு வந்த தேதியிலிருந்து அது ஒரு தனியார் நிறுவனமாக தொடர்ந்திருக்கும் நிலையை இழந்து பொது நிறுவனமாகிவிடும்.

இவ்வாறு பொது நிறுவனமாக மாறிய அந்நிறுவனம் பின்வரும் சில நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

1. செயல்முறை விதிகளில் செய்யப்பட்ட திருத்தத்தையும், திருத்தப்பட்ட செயல்முறை விதிகளின் அச்சடிக்கப்பட்ட நகலையும் அவ்வாறு திருத்தம் கொண்டு வரப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். அவர் அதனை பதிவு செய்து கொள்வார். **[பிரிவு 14(2)]**. மேலும் திட்ட அறிவிப்பையும் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.
2. மாற்றம் செய்யப்பட்ட தேதியில் நிறுவன உறுப்பினர்களின் எண்ணிக்கை 7–க்கும் குறைவாக இருப்பின், அதனை 7–ஆக உயர்த்த வேண்டும்.
3. புதிய செயல்முறை விதிகளை தயாரிக்க வேண்டும்.
4. அமைப்பு முறையேட்டில் உகந்த மாற்றங்களை செய்ய வேண்டும்.
5. நிறுவன இயக்குநர்களின் எண்ணிக்கை 3–க்கும் குறைவாக இருப்பின், அதனை 3–ஆக உயர்த்துதல் வேண்டும்.
6. நிறுவனத்தின் பெயருடன் உள்ள 'தனி' எனும் சொல்லை அகற்றுதல் வேண்டும்.

Ram Parshotam Mittal & Another v. M/s. Hillcrest Realty Sdn. Bhd. & other etc.[1] என்ற வழக்கில் ஒரு தனியார் நிறுவனம் பொது நிறுவனமாக மாறுவதற்கு தனது செயல்முறை விதிகளில் திருத்தம் செய்து சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றிய தேதியிலிருந்தே அது அவ்வாறு பொது நிறுவனமாகி விடுகிறது; மாறாக செயல்முறை விதிகளில் செய்த திருத்தத்தை நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்து அவர் பதிந்து கொண்ட தேதியிலிருந்து அல்ல என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

2. தவறுகையால் மாறுதல் (Conversion by Default) :

தனியார் நிறுவனமொன்று பிரிவு 2(68) கூறியுள்ள தடைகளை கடைப்பிடிப்பதில் தவறுகை புரிந்தால், அது நிறுவனச் சட்டத்தின் கீழ் ஓர் தனியார் நிறுவனமாக கருதப்படாது. மேலும், தனியார் நிறுவனத்திற்குரிய தனிச்சலுகைகளையும் பெற முடியாது. பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வாங்க பொது மக்களை அழைப்பதை தடை செய்தல், பங்கு மாற்றத்தில் கட்டுப்பாடு, உறுப்பினர் எண்ணிக்கையை 200–

1. AIR 2009 SC 2859

ஆக வரையறுத்தல் போன்ற தடைகளையும் வரம்புகளையும் பின்பற்றுவதில் ஒரு தனியார் நிறுவனம் தவறுகை புரிந்தால், அது பொது நிறுவனமாக மாற்றப்படலாம்.

பொது நிறுவனம் தனியார் நிறுவனமாக மாறுதல் (Conversion of a Public Company into a Private Company):

நாம் ஏற்கனவே கண்டவாறு, தனியார் நிறுவனத்தை எவ்வாறு பொது நிறுவனமாக மாற்ற வழியுள்ளதோ, அவ்வாறே பொது நிறுவனமொன்றை தனியார் நிறுவனமாகவும் மாற்ற முடியும். இதற்காக அப்பொது நிறுவனம் செய்ய வேண்டிய தெல்லாம் யாதெனில், அது தனது செயல்முறை விதிகளில் 2013, நிறுவனச் சட்டத்தின் பிரிவு 2(68)–ல் கூறப்பட்டுள்ள தடைகளை சேர்த்துக் கொள்ளும் வகையில் அவற்றை திருத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு சிறப்பு தீர்மானத்தை (Special Resolution) நிறைவேற்றுவதுதான். ஆனால் ஒரு பொது நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்றுவதற்குண்டான செயல்முறை விதிகளின் திருத்தமானது, தீர்ப்பாயத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால்தான், அத் திருத்தம் அமலுக்கு வரும், என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 14(1)-இன் கீழான இரண்டாவது வரம்புரை வாசகம்** குறிப்பிடுகிறது. இந்த ஒப்புதலுக்குப் பின், அப்பொது நிறுவனம் ஒரு தனியார் நிறுவனமாக மாறிவிடும்.

அதே நேரத்தில் மேற்கண்ட மாறுதலுக்கு ஒப்புதல் அளித்து தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணையின் நகலை, திருத்தப்பட்ட செயல்முறை விதிகளின் அச்சடிக்கப்பட்ட நகலுடன் இணைத்து அவ்வாறு திருத்தம் கொண்டு வரப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும். அவர் அம்மாறுதலை பதிவு செய்து கொள்வார் என்று **பிரிவு 14(2)** கூறுகிறது. அதாவது ஒரு பொது நிறுவனம் தனியார் நிறுவனமாக மாறிய தகவலை மேற்கண்ட ஆவணங்களுடன் நிறுவனங்களின் பதிவாளருக்கு தெரிவிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு பதிவு செய்து கொள்ளப்பட்ட செயல்முறை விதிகளின் திருத்தமானது, அது அந்த செயல்முறை விதிகளில் ஆதியிலிருந்தே இருந்தது போன்று செல்லத்தக்கதாகும் என்று **பிரிவு 14(3)** கூறுகிறது.

இதைத் தொடர்ந்து நிறுவனத்தின் பெயரின் இறுதியில் இருந்த 'பொது நிறுவனம்' (Public Company) என்ற சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக 'தனியார் நிறுவனம்' (Private Company) எனும் சொற்களைச் சேர்க்க வேண்டும்.

6. Deemed Public Company - Write short notes. (பொது நிறுவனமாக கருதப்பட்டது - குறுகிய விடை எழுதுக.)

(வினா எண். 3–இன் விடையில் காண்க.)

7. Companies with Charitable Objects not for Profit - Write short notes. (இலாப நோக்கமில்லாத தரும நிறுவனங்கள் - குறுகிய விடை எழுதுக.)

2013-ஆம் ஆண்டு நிறுவனச்சட்டத்தின் 4-ஆம் பிரிவு வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும் தனது பெயருக்குப் பின்னால் 'வரையறுக்கப்பட்டது' (Ltd., or Limited) என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. எனினும், இந்த இந்தச் சொல்லை அவ்வாறு நிறுவனங்கள் சேர்க்காமல் விட்டுவிட மைய அரசு அனுமதிக்கலாம். இத்தகு அனுமதி வழங்க மைய அரசுக்கு **பிரிவு 8(1)** அதிகாரமளிக்கிறது.



அதன்படி, நிறுவனச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யக் கருதும் நபர் ஒருவர் அல்லது நபர்களின் சங்கமொன்று மைய அரசு மன நிறைவு கொள்ளுமாறு

(அ) தங்கள் நோக்கங்களில் வணிகவியல், கலை, அறிவியல், விளையாட்டு, கல்வி, ஆராய்ச்சி, சமூக நலம், மதம், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் தருமப் பணி அல்லது அத்தகு வேறு நோக்கம் எதையும் மேம்படுத்துவதைக் கொண்டிருப்பதாக;

(ஆ) தனது இலாபங்கள், ஏதும் இருப்பின் அதை அல்லது பிற வருமானங்களை தனது நோக்கங்களின் மேம்பாட்டிற்கு செலவழிக்க கருதுவதாக;

(இ) பங்காதாயம் எதையும் தனது உறுப்பினர்களுக்கு வழங்க நிறுவனம் தடை செய்யக் கருதுவதாக,

மெய்ப்பித்தால் அந்த நபர் அல்லது நபர்களின் சங்கத்தை 'வரையறுக்கப்பட்டது' (Limited) அல்லது 'தனியார் வரையறுக்கப்பட்டது' (Private Limited) என்ற சொற்களின் சேர்க்கை இல்லாமல் ஓர் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்து கொள்ள அனுமதித்து உரிமம் வழங்கலாம். இந்த உரிமத்தை மைய அரசு தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு வழங்கலாம். இதையடுத்து செய்யப்படும் மனுவின் பேரில் அந்த நபர் அல்லது நபர்களின் சங்கத்தை ஒரு நிறுவனமாக பதிவாளர் பதிந்து கொள்வார். இது **'தரும நோக்கங்கள் முதலானவற்றுடன் நிறுவனங்களை உருவாக்குதல்' (Formation of companies with charitable objects, etc.)** எனப்படுகிறது.

இவ்வாறு பதிவு செய்து கொள்ளப்படும் நிறுவனத்திற்கு வரைறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு எத்தகு கடப்பாடுகள் உள்ளனவோ அவற்றுக்கு உட்பட்டு பிற எல்லா சலுகைகளையும் (சிறப்புரிமைகளையும்) அனுபவிக்க உரிமை உண்டு என்று

பிரிவு 8(2) கூறுகிறது.

இந்தப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும் நிறுவனத்தின் உறுப்பினராக ஓர் நிறுமமும் (firm) இருக்கலாம் என்று **பிரிவு 8(3)** கூறுகிறது.

இந்த உரிமத்தைப் பெறும் நிறுவனம் தனது அமைப்பு முறையேட்டில் உள்ள நோக்கங்கள் பகுதியை மைய அரசின் எழுத்துப்பூர்வமான முன்னனுமதி இல்லாமல் மாற்றக் கூடாது என்று **பிரிவு 8(4)** எச்சரிக்கிறது.

அதே நேரத்தில் இந்த உரிமத்தை மைய அரசு எந்த நேரத்திலும் இரத்து செய்யலாம். ஆனால் அதற்கு முன் தனது தரப்பு வாதத்தை முன் வைக்கும் வாய்ப்பு ஒன்றை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு மைய அரசு வழங்குதல் வேண்டும். மேற்கண்ட நோக்கங்களைக் கொண்டு பதிவு செய்யப்பட்ட நிறுவமொன்று வேறொரு நிறுவனத்துடன் ஒருங்கிணைய (amalgamation) வேண்டுமென்றால், அந்த நிறுவனமும் மேற்கண்டவற்றை தனது நோக்கங்களாகக் கொண்டதொரு நிறுவனமாக இருக்க வேண்டும்.

8. Finance Companies - Write short notes. (நிதி நிறுவனங்கள் - குறுகிய விடை எழுதுக.)

பாரத சேம வங்கிச் சட்டம், 1934–இன் (Reserve Bank of India Act, 1934) பிரிவு 45(1)(c)–இன்படி **'நிதி நிறுவனம்'** என்பது வங்கியல்லாதொரு நிறுவனமாகும் (Non-banking company). இதனை 'நிதி நிலையம்' (financial institution) என்றும் அழைக்கலாம். நிதி நிலையம் என்பது பின்வரும் நடவடிக்கைகளில் எதையும் தனது தொழிலாக அல்லது தனது தொழிலின் ஒரு பகுதியாக புரியும் வங்கியல்லாத ஒரு நிறுவனமாகும்.

(அ) கடன் அல்லது முன்பணம் அளித்தல் வாயிலாக நிதியுதவி செய்தல்;

(ஆ) அரசால் அல்லது உள்ளூர் அதிகார அமைப்பால் வெளியிடப்பட்ட பங்குகள், பங்கு இருப்புகள், பிணைப்பத்திரங்கள், கடனீட்டுப் பத்திரங்கள் அல்லது பிணையங்கள் ஆகியவற்றை வாங்குதல்;

(இ) வாடகைக் கொள்முதல் சட்டம், 1972–இன் பிரிவு 2(c)–இல் வரையறுக்கப்பட்டவாறு வாடகைக் கொள்முதல் உடன்படிக்கையின் கீழ் சரக்குகள் எதையும் வாடகைக்கு விடுதல் அல்லது ஒப்படைத்தல்;

(ஈ) காப்பீட்டு வணிகத்தின் வகை எதையும் செய்தல்;

(உ) அப்போது செயல்திறத்தில் உள்ள சட்டம் எதன் கீழும் சீட்டு அல்லது லாட்டரி வணிகம் எதையும் மேலாண் செய்தல், நடத்துதல் அல்லது கண்காணித்தல்;

(ஊ) சந்தா தொகை மூலம் அல்லது ஆவண விற்பனை அல்லது பரிசு அல்லது கொடை அளித்தல் மூலம் ஒட்டுமொத்தமாக தொகை திரட்டுதல்;

எனினும் பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலையங்கள், மேற்படி சட்டத்தின் கீழ் ஓர் நிதி நிலையமாக கருதப்படாது. அவை,

(அ) இந்திய தொழில் மேம்பாட்டு வங்கிச் சட்டம், 1964–இன் பிரிவு 2(c)–இல் வரையறுக்கப்பட்டவாறான ஓர் தொழில் தொடர்பான செயல்;

(ஆ) வேளாண் செயல்கள், (பிணையங்கள் அல்லாத) சரக்குகள் எதையும் வாங்குதல் அல்லது விற்றல், சேவை எதையும் அளித்தல், அசையாச் சொத்து விற்பனை அல்லது கட்டுமானம்.

பின்வரும் நிலையங்கள் பொது நிதி நிலையங்களாக கருதப்படுகின்றன. அவை,

(அ) இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டு கழகம்
(The Industrial Credit and Investment Corporation of India)

(ஆ) இந்திய தொழிற் நிதிக் கழகம்
(The Industrial Finance Corporation of India)

(இ) இந்திய தொழிற் மேம்பாட்டு வங்கி
(The Industrial Development Bank of India)

(ஈ) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்
(The Life Insurace Corporation of India)

(உ) அடிப்படைக் கட்டுமான மேம்பாட்டு நிதி நிறுவனம்
(Infrastructure Development Finance Company Ltd.)

(ஊ) இந்திய ஒருமை அறக்கட்டளை
(Unit Trust of India)

9. FERA Companies - Write short notes. (ஃபெரா நிறுவனங்கள் - குறுகிய விடை எழுதுக.)

அந்நியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம், 1973–இன் (Foreign Exchange Regulation Act, 1973) கீழ் இந்தியாவில் செயல்படும் நிறுவனங்கள் ஃபெரா நிறுவனங்கள் என்று நுணுக்கப் பெயரால் அழைக்கப்படுகின்றன. சுருங்கச் சொன்னால், அவை பின்வரும் வகையினங்களில் அடங்குவதாகும்.

(அ) வெளிநாட்டு நலன் ஏதும் கொண்டிராத அல்லது 40 சதவீதத்திற்கும் குறைவான வெளிநாட்டு நலன் கொண்டிருக்கும் இந்திய நிறுவனங்கள்;

(ஆ) 40 சதவீதத்திற்கும் மேலான அயல்நாட்டு வாழ் நலன் கொண்டிருக்கும் இந்திய நிறுவனங்கள். அத்தகு நிறுவனங்கள் முன்பு "வெளிநாட்டு கட்டுப்பாட்டுடைய நிறுவனங்கள்" என்று முன்பு அழைக்கப்பட்டன.

(இ) தொழில் நோக்கத்திற்காக மட்டும் இந்தியாவில் பதிவு செய்யப்பட்டு வெளிநாட்டில் கூட்டுருவாக்கப்பட்ட நிறுவனங்கள்.

அந்நியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம், 1973–இன் பிரிவு 26–இன் கீழ் இத்தகு ஃபெரா நிறுவனங்கள் மீது மைய அரசு சில தடை வரம்புகளை விதிக்கலாம்.

10. What is an 'Illegal Association' under the Companies Act? Discuss the consequences of the formation of such Associa-tion. (நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 'சட்ட முரணான சேர்க்கை' என்பது என்ன? அவ்வித சேர்க்கையை உருவாக்குவதின் விளைவுகளை ஆராய்க.)

(அல்லது)

Illegal Association - Write short notes. (சட்ட முரணான சேர்க்கை - குறுகிய விடை எழுதுக.)

சட்ட முரணான சேர்க்கை - விளக்கம்:

பலரை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டு செயல்படும் சங்கங்கள் அல்லது கூட்டாண்மை நிறுமங்கள் தங்களை நிறுவனங்களாக பதிவு செய்து கொள்ளாமல் வணிகம் நடத்துவதால் பல்வேறு விரும்பத்தகாத சட்ட விளைவுகள் தோன்றுகின்றன; சிக்கல்கள் எழுகின்றன. இதைத் தவிர்க்கும் பொருட்டு குறிப்பிட்ட எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட வணிகச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தங்களை நிறுவனமாக பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொள்ளாமல் போனால், அது 'சட்ட முரணான சேர்க்கை' எனப்படுகிறது. அந்த வகையில் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட பதிவு செய்து கொள்ளப்படாத நிறுவனம், சங்கம் அல்லது கூட்டாண்மை நிறுமம் ஒவ்வொன்றும் சட்ட முரணான சேர்க்கை என்று விளம்பப்படும். இது தொடர்பாக முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 11–ஆம் பிரிவு வகை செய்தது. தற்போது இது குறித்து **2013-ஆம் ஆண்டு புதிய நிறுவனச் சட்டத்தின் பிரிவு 464** வகை செய்கிறது.

எது சட்ட முரணான சேர்க்கையாகும்? - பிரிவு 464(1):

வகுத்துரைக்கப்பட்ட அத்தகு எண்ணிக்கைக்கும் மேலான நபர்களைக் கொண்ட சங்கம் அல்லது கூட்டாண்மை நிறுமம் எதுவும், நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் ஓர் நிறுவனமாக பதிவு செய்யப்படாமல் அல்லது அச்சமயத்தில் செயல்திறத்தில் உள்ள சட்டம் வேறு எதன்படியும் அமைக்கப்படாமல் ஆதாயம் அடையும் வணிகம் எதையும் செய்யும் நோக்கத்திற்காக உருவாக்கப்படக் கூடாது[1], என்று **பிரிவு 464(1)** கூறுகிறது.

மேற்கண்ட வரையறையில் வரும் 'வகுத்துரைக்கப்பட்ட அத்தகு எண்ணிக்கைக்கும் மேலான நபர்கள்' என்பது **நூறு பேருக்கு** அதிகமாகச் செல்லுதல் கூடாது

1. No association or partnership consisting of more than such number of persons as may be prescribed shall be formed for the purpose of carrying on any business that has for its object tha acquisition of gain by the association or partnership or by the individual members thereof, unless it is registered as a company under this Act or is formed under any other law for the time being in force: - **Section 464(1) of the Companies Act, 2013.**

என்று மேற்படி பிரிவு 464(1)–இன் கீழான வரம்புரை வாசகம் தெளிவுபடுத்துகிறது.

இவ்வாறு பதிவு செய்யப்படாமல் உருவாக்கப்படும் நிறுவனம் சட்ட முரணான சேர்க்கையாகும்.

எது சட்ட முரணான சேர்க்கையாகாது? - பிரிவு 464(2):

மேற்கண்ட பிரிவு 464(1)–இல் அடங்கியுள்ள எதுவும் பின்வரும் சேர்க்கைகளுக்கு பொருந்தாது என்று பிரிவு 464(2) கூறுகிறது. அதாவது பின்வருவன சட்ட முரணாண சேர்க்கையாகாது. அவை,

(அ) தொழில் எதையும் செய்யும் ஓர் இந்து கூட்டுக் குடும்பம்; அல்லது

(ஆ) சிறப்புச் சட்டங்களால் வழிநடத்தப்படும் தொழிலாற்றுனர்களால் (professionals who are governed by special Acts) உருவாக்கப்படும் சங்கம் அல்லது கூட்டாண்மை நிறுமம்.

பொறுப்பும் அபராதமும் - பிரிவு 464(3):

பிரிவு 464(1)–க்கு முரணாக தொழில் செய்யும் சங்கம் அல்லது கூட்டாண்மை நிறுமம் ஒன்றின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதம் தண்டனையாக விதிக்கப்படும். மேலும் அவர்களது அத்தகு தொழிலில் ஏற்படும் பொறுப்புகள் அனைத்திற்கும் அவர்களே தனிப்பட்ட விதத்தில் பொறுப்புடையவர்கள் (personally liable) என்று பிரிவு 464(3) கூறுகிறது.

சட்ட முரணான சேர்க்கையின் விளைவுகள் (Consequences of the formation of Illegal Association):

1. சட்ட முரணான சேர்க்கை ஒரு தனி நபர் அல்ல. எனவே அது எந்த நபருடனும், எவ்விதமான ஒப்பந்தமும் செய்ய முடியாது. அப்படி செய்து கொண்டாலும் அதனை சட்டப்படி நிறைவேற்ற இயலாது.
2. சேர்க்கையில் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அதன் கடன்கள் முழுவதற்கும் தனிப்பட்ட விதத்தில் முழுப் பொறுப்புடையவர்.
3. சேர்க்கையானது அதன் உறுப்பினர் மீதோ அல்லது வேறு ஒரு நபர் மீதோ எவ்வித வழக்கும் தொடர முடியாது. அதே போன்று சேர்க்கையின் மீது எவ்வுறுப்பினரும், எவ்வித வழக்கும் தொடர முடியாது.
4. உறுப்பினர்கள், சேர்க்கையின் சொத்துக்களில் பங்கு பெறுவதற்கும் அல்லது அதைக் கலைப்பதற்கும் வழக்கு தொடர முடியாது.
5. ஒரு சேர்க்கை சட்ட விரோதமானது என்பதை அறியாமல் மூன்றாம் நபர்கள் எவரும் அதனுடன் தொடர்பு கொண்டு, அதனால் நட்டமேதும் அடைந்தால், அதற்காக அவர்கள் அச்சேர்க்கையின் மீது வழக்குத் தொடரலாம்.

6. சேர்க்கைக்கு கடன் கொடுத்தவர்கள் கூட அதைக் கலைப்பதற்கு மனுச் செய்ய முடியாது.

7. சேர்க்கையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான அபராதம் காத்திருக்கிறது.

8. சட்ட முரணாண சேர்க்கைத் தொழிலால் ஏற்படும் பொறுப்புகள் அனைத்திற்கும் அதன் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் பொறுப்புடையவர்கள் ஆவார்.

9. சட்ட முரணான சேர்க்கை என்பது சட்டத்தின் கண்களின் முன்பு இல்லாத ஒன்று. எனவே அது ஈடுபடும் ஒப்பந்த உறவுகள் அனைத்தும் சட்ட முரணாணதாகும். மேலும் அதனை நீதிமன்றத்தின் முன் வலியுறுத்தி செயல்படுத்தவும் முடியாது. எனவே சட்ட முரணாண சேர்க்கைக்கு அல்லது அதன் உறுப்பினர்களுக்கு நீதிமன்றம் எவ்வித நிவாரணத்தையும் வழங்காது.

முந்தைய முக்கிய வழக்குகள்:

Greenberg v. Cooperstein[1]

இவ்வழக்கு சட்ட முரணான சேர்க்கையின் தீய விளைவுகளை விளக்கும் முகமாக அமைந்துள்ளது. உறுப்பினர்கள் செலுத்தும் பங்குத் தொகையிலிருந்து உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கும் நோக்கமுடன் இருபது நபர்களுக்கு மேற்பட்ட ஒரு சேர்க்கை (Association) நான்கு கிளைகளுடன் தொடங்கப்பட்டது. இந்தச் சேர்க்கை, சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை. உறுப்பினர்களிடையே கருத்து வேறு பாடு ஏற்படவே அதில் மூன்று உறுப்பினர்கள், சேர்க்கையை சரிவர நிருவாகம் செய் யாததற்கும், உறுப்பினர் சந்தா தொகைகளைக் (Subscription amount) கோரியும் செயலாளர் மீது வழக்கிட்டனர். பிரதிவாதியான செயலாளர், சேர்க்கை சட்ட முரணானதாகையால் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதாடினார். ஆனால் நீதிமன்றம் சேர்க்கை சட்ட முரணாக இருப்பினும், கட்டிய சந்தா தொகையை சட்ட முரணான செயலுக்குப் பயன்படுத்தும் முன்னர் திருப்பிக் கேட்பதில் தவறில்லை என்று தீர்ப்பளித்து வாதிகளின் கோரிக்கையை அனுமதித்தது.

Mewa Ram v. Ram Gopal[2]

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி ஒரு கூட்டாண்மை நிறுமம் சில பஞ்சு நூற்பாலைகளை (ginning factories) பல ஆண்டுகளாக நடத்தி வந்தது. இதில் 20–க்கும் அதிகமான பங்குதாரர்கள் இருந்தனர். இது (பழைய) நிறுவனச் சட்டத்தின் பிரிவு 11(2)–க்கு முரணானதாகும். எனவே இது ஒரு சட்ட முரணான சேர்க்கையா கியது. இவ்வழக்கில் வாதியாக உள்ள ஒரு பங்குதாரர், அக்கூட்டாண்மை நிறுமம் சட்ட

1. 1926 Ch. 657
2. (1926) ILR 48 All. 735

முரணானதாகும் என்றும், எனவே, அப்பஞ்சாலைகளை ஏல விற்பனையில் விற்று, அதிலிருந்து கிடைக்கும் தொகையில் தனக்குரிய சந்தா தொகையை திருப்பித் தரும்படியும், பாகத்தை பிரித்துக் கொடுக்கும்படியும் உத்தரவிட வேண்டும் என்றும் கோரி அலகபாத் நீதிமன்றத்தில் வழக்கிட்டார். ஆனால் வழக்கை ஆராய்ந்த அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் இரு நீதியரசர்கள் கொண்ட ஆயம் (Division Bench), மேற்கண்ட சட்ட முரணான சேர்க்கையில் வாதியும் ஒரு பங்குதாரராக சேர்ந்து, அதன் இலாபத்தை பல ஆண்டுகளாக அனுபவித்து வந்துள்ளார் என்றும், அவரது சந்தா தொகை சட்ட முரணான செயலுக்கு பயன்படுத்தப்பட்டு விட்டது என்றும் கூறி, அவரது வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது. (ஆனால் மேற்கண்ட இரு நீதிபதிகளில், நீதியரசர் சுலைமான் அவர்கள், கூட்டாண்மைச் சொத்தில் பாகப்பிரிவினை கோர வாதிக்கு உரிமையுண்டு தீர்ப்பளித்தார்).

இவ்வழக்கு நாம் ஏற்கனவே கண்ட **Greenberg v. Cooperstein** வழக்கின் தீர்ப்பிலிருந்து மாறுபட்டதாகும். அதில் வாதிகளின் சந்தாத் தொகை சட்ட முரணான செயலுக்குப் பயன்படுத்தப்படும் முன்னர், அதைத் திரும்பக் கோரியதால், அது அங்கு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. ஆனால் இவ்வழக்கில் சட்ட முரணான சேர்க்கையின் இலாபத்தை வாதியும் பல்லாண்டு அனுபவித்து வந்துள்ளார். மேலும் அவரது சந்தாத் தொகை சட்ட முரணான செயலுக்கு பயன்படுத்தப்பட்டு விட்டது. எனவே, வழக்கு தோற்றது.

11. One Person Company - Write short notes. (ஒரு நபர் நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Define One Person Company under the Companies Act, 2013 and explain. (நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் ஒரு நபர் நிறுவனம் என்பதை வரையறுத்து விளக்குக.)

(அல்லது)

Define One Person Company and explain its formation under the Companies Act, 2013. (நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் ஒரு நபர் நிறுவனம் என்பதை வரையறுத்து அதன் உருவாக்கத்தை விளக்குக.)

ஒரு நபர் நிறுவனம் – அறிமுகம்:

நிறுவனங்களின் வகைகளில் தனி நிறுவனம், பொது நிறுவனம் என்ற இரண்டு வகையினமே முந்தைய நிறுவனச் சட்டங்கள் முழுவதும் பெரிதும் பரவியிருந்தது. அதில் தற்போது 'ஒரு நபர் நிறுவனம்' என்ற ஒரு புது வகை நிறுவனம் தற்போதைய 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது நிறுவனச் சட்ட வரலாற்றில் ஓர் புரட்சிகரமான புதிய கருத்துருவாகும். இக்கருத்துரு டாக்டர் ஜெஜெ.இரானி தலைமையில் அமைந்த வல்லுநர் குழுவால் முதன்முதலில்

னால் அவர் ஒரு நபர் நிறுவனத்தை உருவாக்குபவரின் பெயர் நியமனதாரர் (நாமினி) ஆவார். அத்தகு நபரின் எழுத்துப் பூர்வமான இசைவை ஒரு நபர் நிறுவனத்தை பதிவு செய்யும் பொழுது, அமைப்பு முறை யேடு மற்றும் செயல்முறை விதிகளுடன் இணைத்து பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். அதே நேரம் அத்தகு நபர் தனது இசைவை வகுத்துரைக்கப்பட்ட முறையில் திரும்பப் பெற்றுக் கொள்ள அவருக்கு உரிமை உண்டு. அதேபோல், ஒரு நபர் நிறுவனத்தை உருவாக்கும் உறுப்பினர், மேற்படி நபரின் பெயரை, அவருக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு, மாற்றுவதற்கு உரிமை படைத்தவர். **[பிரிவு 3(1)-இன் கீழான வரம்புரை வாசகங்கள்]**

மேற்கண்டவாறு உருவாக்கப்படும் ஒரு நபர் நிறுவனம் (அ) பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகவோ, அல்லது (ஆ) பொறுப்புறுதியால் வரையறுக்கப் பட்ட நிறுவனமாகவோ, அல்லது (இ) வரையறுக்கப்படாத நிறுவனமாகவோ இருக்க லாம் என்று **பிரிவு 3(2)** கூறுகிறது.

ஒரு நபர் நிறுவனத்தை உருவாக்கிய ஆதரவாளர் இறக்கும் நேர்வில் அடுத்து உறுப்பினராகவுள்ள நபரின் பெயரை அந்நிறுவனத்தின் அமைப்பு முறையேட் டில் குறிப்பிட வேண்டும் என்று **பிரிவு 4(1)(f)** கூறுகிறது.

ஒரு நபர் நிறுவனத்தின் பெயர் எங்கெல்லாம் அச்சடிக்கப்பட்டுள்ளதோ, பதிக்கப்பட்டுள்ளதோ அல்லது பொறிக்கப்பட்டுள்ளதோ அதன் கீழ் அது ஓர் "ஒரு நபர் நிறுவனம்" என்ற சொற்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட வேண்டும் என்று **பிரிவு 12(3)-இன் கீழான வரம்புரை வாசகம்** கூறுகிறது.

ஒரு நபர் நிறுவனத்தின் ஆண்டு விவர அறிக்கை தாக்கலில் (Annual Return) நிறுவன செயலாளர் கையொப்பமிட வேண்டும் அல்லது அந்நிறுவனத்திற்கு அவ்வாறு நிறுவன செயலாளர் இல்லாது போனால் அந்நிறுவனத்தின் இயக்குனர் கையொப்பமிட வேண்டும் என்று **பிரிவு 92(1)-இன் கீழான வரம்புரை வாசகம்** கூறுகிறது.

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பின்வரும் வகைமுறைகள் ஒரு நபர் நிறுவனத்திற்குப் பொருந்தாது என்று **பிரிவு 122(1)** கூறுகிறது. அவை,

பிரிவு 98 : உறுப்பினர்களின் கூட்டத்தை அழைக்க தீர்ப்பாயத்திற்கு உள்ள அதிகாரம்

பிரிவு 100 : அசாதாரண பொதுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தல்

பிரிவு 101 : கூட்டத்திற்கான அறிவிப்பு

பிரிவு 102 : அறிவிப்பில் பின்னிணைப்பாக சேர்க்க வேண்டிய அறிக்கை

பிரிவு 104 : கூட்டங்களின் தலைவர்

பிரிவு 105 : பதிலாட்கள் (Proxies)

பிரிவு 106 : வாக்களிக்கும் உரிமைகள் மீது தடை

பிரிவு 107 : கை தூக்குவதன் மூலம் வாக்களித்தல்

பிரிவு 107 : மின்னணு மூலம் வாக்களித்தல்

பிரிவு 109 : வாக்கெடுப்பு கோருதல்

பிரிவு 110 : அஞ்சல்வழி வாக்குச் சீட்டு

பிரிவு 111 : உறுப்பினர்களின் தீர்மானத்தை சுற்றறிக்கைக்கு விடுதல்

ஒரு நபர் நிறுவன உருவாக்கம் பற்றி நிறுவனங்கள் (கூட்டுருவாக்கல்) விதிகள், 2014 கூறும் விதிமுறைகள்:

ஒரு நபர் நிறுவன உருவாக்கத்திற்குத் தேவையான விதிமுறைகளை 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் கீழ் 2014–ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட **நிறுவனங்கள் (கூட்டுருவாக்கல்) விதிகள்** [The Companies (Incorporation) Rules, 2014] கூறுகின்றன. **இவ்விதிகளை ஒரு நபர் நிறுவன உருவாக்கத்திற்கான நிபந்தனைகள்** என்றும் கூறலாம். அவை வருமாறு:–

1. இயற்கை நபர் மட்டுமே ஒரு நபர் நிறுவனத்தை உருவாக்க முடியும். அதுவும் அவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். மேலும் இந்தியாவில் வசிப்பவராக இருக்க வேண்டும். இத்தகுதி உடையவர் மட்டுமே ஒரு நபர் நிறுவனத்தால் கிடைக்கும் அனுகூலங்களை அடைய முடியும். **[விதி 3(1)(அ)]**

2. மேலும் மேற்கண்ட தகுதிகள் உடையவர் மட்டுமே ஒரு நபர் நிறுவனத்தை உருவாக்கும் நபரால் பெயர் நியமனம் செய்யப்படும் நியமனதாராக (நாமினி) ஆக முடியும். **[விதி 3(1)(ஆ)]**

3. ஒரு நபர் நிறுவனத்தை உருவாக்குபவர் இந்தியாவில் வசிப்பவராக இருக்க வேண்டும் என்பதில் அவர் அதற்கு உடன் முந்தைய பட்டிகை ஆண்டின் பொழுது நூற்று எண்பத்து இரண்டு நாட்களுக்கு குறையாமல் இந்தியாவில் தங்கியிருந்திருக்க வேண்டும். **[விதி 3(1)-இன் கீழான விளக்கம்]**

4. ஒன்றுக்கு அதிகமான ஒரு நபர் நிறுவனத்தை உருவாக்க எவரும் தகுதி படைத்தவர் அல்ல. அதே போன்று ஒன்றுக்கு அதிகமான ஒரு நபர் நிறுவனத்தில் ஒருவர் பெயர் நியமனதாரராக ஆக முடியாது. **[விதி 3(2)]**

5. இயற்கை நபர் ஒருவர் மேற்கண்டவாறு ஒரு நபர் நிறுவனத்தை தோற்றுவித்து அதன் உறுப்பினராக இருக்குமிடத்து, அவர் மற்றொரு ஒரு நபர் நிறுவனத்தில் பெயர் நியமனதாரராக இருந்து அதன்படி அவர் அந்நிறுவனத்தின் உறுப்பினராகும்

நேர்வில், அவர் முன் சொல்லப்பட்டவாறு இந்தியாவில் நூற்று எண்பத்து இரண்டு நாட்களுக்கு குறையாமல் தங்கியிருந்திருக்க வேண்டும். **[விதி 3(3)]**

6. இளவர் எவரும் ஒரு நபர் நிறுவனத்தின் உறுப்பினராகவோ அல்லது பெயர் நியமனதாரராகவோ ஆக முடியாது. மேலும் அவர் தனது அனு கூல நலனுக்காக அதன் பங்கு எதையும் வாங்கி வைத்துக் கொள்ள முடியாது. **[விதி 3(4)]**

7. ஒரு நபர் நிறுவனத்தை 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 8–இல் கூறப்பட்டவாறு இலாப நோக்கமில்லாத தரும நிறுவனங்களாக (Formation of companies with charitable objects, etc.) கூட்டுருவாக்க முடியாது அல்லது அவ்வாறு மாற்றவும் முடியாது. **[விதி 3(5)]**

8. ஒரு நபர் நிறுவனமொன்று கூட்டுருவான அமைப்புகள் எதன் பிணையத்திலும் முதலீடு செய்வது உள்ளிட்ட வங்கிச் செயல் அல்லாத நிதி முதலீட்டு நடவடிக்கைகள் எதையும் செய்ய இயலாது. **[விதி 3(6)]**

9. ஒரு நபர் நிறுவனமொன்று அது கூட்டுருக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிந்தலான்றி தாமே தன்னிச்சையாக வேறு வகை நிறுவனம் எதாகவும் மாற முடியாது. எனினும், அதன் செலுத்தப் பட்ட பங்கு மூலதனத் தொகை 50 இலட்ச ரூபாய்க்கும் அதிகமானால் அல்லது தொடர்புடைய காலகட்டத்தில் அதன் ஆண்டு சராசரி பயன் பாட்டுத் தொகை (turnover) ரூபாய் இரண்டு கோடிக்கும் அதிகமா னால் இரண்டு ஆண்டுகள் முடிவதற்கு முன்பே அவ்வாறு மாறலாம். **[விதி 3(7)]**

10. ஒரு நபர் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை 50 இலட்ச ரூபாய்க்கு அதிகமானால் அல்லது தொடர்புடைய கால கட்டத் தில் அதன் ஆண்டு சராசரி பயன்பாட்டுத் தொகை ரூபாய் இரண்டு கோடிக்கும் அதிகமானால் அது தனி நபர் நிறுவனமாக தொடர்ந்து நீடித்திருக்கும் நிலையை இழந்துவிடும்.**[விதி 6(1)]**. இதையடுத்து அந் நிறுவனம் அவ்வாறு அதிகமான தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தன்னை தனி நிறுவனமாக அல்லது பொது நிறுவனமாக மாற்றிக் கொள்ள வேண்டும்.**[விதி 6(2)]**.

11. செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை 50 இலட்ச ரூபாயும் அல்லது அதற்கு குறைவாகவும், அல்லது தொடர்புடைய கால கட்டத்தில் அதன் ஆண்டு சராசரி பயன்பாட்டுத் தொகை ரூபாய் இரண்டு கோடி அல்லது அதற்கும் குறைவாக கொண்டிருக்கும் தனியார் நிறுவனமொன்று தன்னைத் தானே ஒரு நபர் நிறுவனமாக மாற்றிக் கொள்ளலாம். இதற்கு

அது தனது பொதுக் கூட்டத்தில் சிறப்புத் தீர்மானமொன்றை நிறை வேற்ற வேண்டும். **[விதி 7(1)]** அத்தகு தீர்மானத்தை நிறைவேற்றும் முன்பு அது தனது உறுப்பினர்கள் மற்றும் கடனீந்தவர்களிடமிருந்து எழுத்துப்பூர்வமான ஆட்சேபணையில்லாச் சான்று பெற வேண்டும். **[விதி 7(2)]**.

12. எந்த இடத்தில் ஒரு நபர் நிறுவனத்தின் பதிவு அலுவலகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதோ அந்த இடத்தின் மீது அதிகாரவரம்பு கொண்ட பதிவாளரிடம் அந்நிறுவனத்தை கூட்டுருவாக்குவதற்கான (அதாவது பதிவு செய்வதற்கான) விண்ணப்பம் படிவம் எண். INC.2–இல் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் Companies (Registration offices and fees) Rules, 2014 இல் வகை செய்யப்பட்டவாறு கட்டணம் செலுத்த வேண்டும். **[விதி 12]**.

ஒரு நபர் நிறுவனத்தின் நன்மைகள் (அனுகூலங்கள்):

1. ஒரு நபர் நிறுவனம் என்பதே அடிப்படையில் ஒரு தனியார் நிறுவனம் (Private company) ஆகும். எனவே தனியார் நிறுவனத்திற்கு உள்ள அனைத்து நன்மைகளும் இந்த ஒரு நபர் நிறுவனத்திற்கும் கிடைக்கும்.

2. இதன் பொறுப்பு பெரும்பாலும் வரம்புடையதாகும். எனவே இப்படிப்பட்ட ஒரு நபர் நிறுவனத்தை உருவாக்குவதில் இன்றைய வணிக சமுதாயம் அதிக ஆர்வம் காட்டுகிறது.

3. ஒரே உரிமையாளரைக் (Proprietorship) கொண்டு நடத்தப்படும் வணிகத்தை அதிக இடர்ப்பாடுகள் ஏதுமின்றி ஒரு நபர் நிறுவனமாக எளிதாக மாற்ற முடியும்.

4. அதிகபட்ச காலவரம்பு முடிவுற்றவுடன் தணிக்கையாளரை சுழற்சி முறையில் மாற்ற வேண்டும் என்ற கட்டாயம் ஒரு நபர் நிறுவனத்திற்குப் பொருந்தாது.

5. ஒரு நபர் நிறுவனத்திற்கு குறைந்தபட்சம் ஒருவர் இயக்குனராக இருந்தால் அதுவே போதும். எனினும் அது அதிகபட்சமாக 15 பேரை தனது இயக்குனர்களாக கொண்டிருக்கலாம். இதை சிறப்புத் தீர்மானம் வாயிலாக மேலும் உயர்த்தலாம்.

6. நாம் ஏற்கனவே கண்டவாறு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 98 மற்றும் பிரிவுகள் 100 முதல் 111 வரையிலானவை ஒரு நபர் நிறுவனத்திற்குப் பொருந்தாது.

7. ஒரு நபர் நிறுவனத்தைப் பொறுத்தவரை அதன் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒருவர் மட்டுமே.

ஒரு நபர் நிறுவனத்திற்கு கிடைக்கும் விலக்குகள் அல்லது சிறப்புரிமைகள் (Exemptions available to one person company):

ஒரு தனியார் நிறுவனத்திற்கு உள்ள அனைத்து சிறப்புரிமைகளும் ஒரு நபர் நிறுவனத்திற்கும் உண்டு. அதே நேரம் ஒரு தனியார் நிறுவனத்திற்கு கிடைக்காத வேறு சில சிறப்புரிமைகளும் விலக்குகளும் ஒரு நபர் நிறுவனத்திற்கு கூடுதலாக கிடைக்கின்றன. அவை வருமாறு:–

1. ஒரு நபர் நிறுவனத்தின் ஆண்டு விவர அறிக்கை (annual returns) தாக்கலில் அதன் நிறுவன செயலாளர் கையொப்பமிட வேண்டும். அப்படி நிறுவன செயலாளர் அந்நிறுவனத்திற்கு இல்லை என்றால், அந்நிறுவனத்தின் இயக்குனர் கையொப்பமிட வேண்டும் என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 92(1)-இன் கீழான வரம்புரை வாசகம்** வகை செய்கிறது. இங்கு கவனிக்கத்தக்கது யாதெனில், மற்ற வகை நிறுவனங்களைப் பொறுத்தவரை இயக்குநர் மற்றும் நிறுவனச் செயலாளர் அதில் கையொப்பமிட வேண்டும். அவ்வாறு நிறுவனச் செயலாளர் இல்லாது போனால், நிறுவனச் செயலாளராக தொழிலாற்றும் ஒருவர் அதில் கையொப்பமிட வேண்டும்.

2. நாம் ஏற்கனவே கண்டவாறு **பிரிவு 122(1)**–இன்படி நிறுவனச் சட்டம், 2013–இன் பிரிவுகள் 98 மற்றும் 100 முதல் 111 வரை ஒரு நபர் நிறுவனத்திற்குப் பொருந்தாது. எனவே பொதுக் கூட்டம் நடத்துதல், அசாதாரண பொதுக் கூட்டம் நடத்துதல், அதை நடத்துவதற்கு அறிவிப்பு தருதல் ஆகியன தொடர்பான வகைமுறைகள் ஒரு நபர் நிறுவனத்திற்குப் பொருந்தாது.

3. ஒரு நபர் நிறுவனத்திற்கு ஒரு இயக்குனர் இருந்தால் போதும். அதிகபட்சமாக 15 இயக்குனர்கள் இருக்கலாம். இதை மற்ற நிறுவனங்களைப் போன்று சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் உயர்த்திக் கொள்ளவும் ஒரு நபர் நிறுவனத்திற்கு உரிமை உண்டு. ஒரேயொரு இயக்குனரைக் கொண்ட ஒரு நபர் நிறுவனத்தைப் பொறுத்தவரை நிறுவன வாரியக் கூட்டங்களை (board meetings) நடத்தும் நோக்கத்திற்காக, அந்நிறுவனம் தனது வாரியக் கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய அனைத்து தீர்மானங்களையும் கூட்ட நடவடிக்கை புத்தகத்தில் (minute book) பதிவு செய்து, அதில் அந்நிறுவனத்தை உருவாக்கிய உறுப்பினர் கையொப்பமிட்டு தேதியிட்டால் போதுமானது. அத்தேதியானது வாரியக் கூட்டம் நடத்தப்பட்ட தேதியாக கருதப்படும் என்று **பிரிவுகள் 149, 152 மற்றும் 173** கூறுகின்றன.

4. ஒரு நபர் நிறுவனம் தனது நிதிநிலை அறிக்கைகளை நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். நிதியாண்டு முடிவதிலிருந்து 180 நாட்களுக்குள் ரொக்க விவர அறிக்கைகளுடன் மற்றும் நிதிநிலை அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட வேண்டிய மற்ற அனைத்து ஆவணங்களையும் இணைத்து பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையில் அந்நிறுவனத்தின் இயக்குனர் கையொப்பமிட்டால் போதும்.

5. ஒரு நபர் நிறுவனம் ஈடுபடும் ஒப்பந்தங்களில் 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் தனது சிறப்பு கவனத்தை செலுத்துகிறது என்றால் அது மிகை யன்று. பங்குகளால் அல்லது பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட ஒரு நபர் நிறுவனம் ஒன்று அந்நிறுவனத்தின் ஒரே உறுப்பினராகவும் அதேநேரம் அவரே இயக்குனராக வும் உள்ளவருடன் ஒப்பந்தத்தில் ஈடுபடும் போது, அவ்வொப்பந்தம் எழுத்துப்பூர்மாக இருந்தாலன்றி, அதன் வரைவுரைகள் அல்லது முனைவானது ஒரு முறையேட்டில் அடங்கியுள்ளதையும், மேலும் ஒப்பந்தத்தில் ஈடுபட்ட பிறகு நடத்தப்படும் இயக்கு னர்கள் வாரியத்தின் முதல் கூட்ட நடவடிக்கை பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளதையும் அந்நிறுவனம் உறுதி செய்து கொள்ள வேண்டும். எனினும் இது அந்நிறுவனத்தின் சாதாரண வணிக நடவடிக்கையின் பொழுது அந்நிறுவனம் ஈடுபடும் ஒப்பந்தங்களுக்குப் பொருந்தாது என்று **பிரிவு 193(1)** கூறுகிறது. ஒரு நபர் நிறுவனம் என்பதே ஒரே நபரை உறுப்பினராகக் கொண்டது. எனவே அந்நிறுவனம் அந்த ஒரே உறுப்பினருடன் ஒப்பந்தத்தில் ஈடுபடும் பொழுது அதை சட்டப்படி உறுதி செய்யவே மேற்கண்ட சிறப்பு நடைமுறை நிறுவனச் சட்டத்தால் வகுக்கப்பட்டுள்ளது என்றால் அது மிகையல்ல. மேலும் ஒரு நபர் நிறுவனம் ஈடுபடும் ஒப்பந்தம் ஒவ் வொன்றைக் குறித்தும் மற்றும் இயக்குனர்கள் வாரியக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூட்ட நடவடிக்கை பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் குறித்தும், அவை இயக்குனர்கள் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக் குள் அந்நிறுவனம் பதிவாளருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று **பிரிவு 193(2)** கூறுகிறது.

ஒரு நபர் நிறுவனம் உரிமையாளர் வணிகத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? (How is an One Person Company different from Sole Proprietorship):

ஒரு நபர் நிறுவனம் என்ற கருத்துருவானது, ஒரு தனி நபர் பங்குகளால் அல்லது பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஒன்றை நடத்த அனுமதிக் கிறது. உரிமையாளர் வணிகம் என்பது ஒரு வணிகம் ஒரே உரிமையாளரால் நடத்தப் படுவது ஆகும். இங்கு உரிமையாளருக்கும் அவரது வணிகத்திற்கும் இடையே வேறு பாடு இல்லை.

ஒரு நபர் நிறுவனத்துக்கும் உரிமையாளர் வணிகத்திற்கும் இடையே உள்ள அடிப்படை வேறுபாடு யாதெனில், ஒரு நபர் நிறுவனத்தின் பொறுப்பானது அதன் பங்குகளால் வரையறுக்கப்பட்டது. நிறுவன உறுப்பினருக்கு தனிப்பட்ட பொறுப்பு இல்லை.

ஒரு நபர் நிறுவனம் என்பது தனித்தன்மை கொண்டது. அது, அதனை உருவாக்கியவரிடமிருந்து மாறுபட்டது. ஆனால் உரிமையாளர் வணிகம் அவ்வாறு அல்ல. உரிமையாளரும் அவரது வணிகமும் ஒன்றே.

நாம் ஏற்கனவே கண்டவாறு நிறுவன பங்குதாரரின் பொறுப்பானது அவரது பெயரில் செலுத்தப்படாமல் உள்ள சந்தா (பங்குத்) தொகையளவு மட்டுமே. ஆனால்

உரிமையாளர் வணிகத்தில் அதன் உரிமையாளரே அவரது வணிகத்திற்கு எதிராக செய்யப்படும் கோரிக்கைகளுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார்.

ஒரு நபர் நிறுவனத்தில் அதை உருவாக்கியவர் தனது இறப்புக்குப் பிறகு அல்லது இயலாமை காரணமாக செயல்பட முடியாத நிலை உருவாகும் நேர்வில், அதை அடுத்து நடத்துவதற்கு பொறுப்புடைய நபர் ஒருவரை அதன் உருவாக்கத்தின் போதே பெயர் நியமனம் (நாமினி) செய்துவிடுகிறார். ஆனால் உரிமையாளர் வணிகத்தில் அந்த உரிமையாளர் அப்படி வணிகம் தொடங்கும் போதே அவ்வாறு யாரையும் நியமனம் செய்வதில்லை. அவரது இறப்புக்குப் பிறகு அவரது சட்டப்படியான வாரிசுகளுக்கு அந்த வணிகம் செல்கிறது, அல்லது அந்த உரிமையாளர் உயில் மூலம் குறிப்பிடும் நபர்கள் அந்த வணிகத்தை நடத்துகிறார்கள் அல்லது நடத்தாமலும் கலைத்து விடுகிறார்கள்.

ஒரு நபர் நிறுவனம் தனது ஆண்டு விவர அறிக்கையை நிறுவனச் சட்ட வகைமுறைகளின் கீழ் மற்ற சாதாரண நிறுவனங்களைப் போல் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறே தனது கணக்குகளை தணிக்கைக்குட்படுத்திக் கொள்ள வேண்டும். உரிமையாளர் வணிகத்தில், அதன் வருமானம் ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மேல் சென்றால், அது தனது கணக்குகளை வருமான வரிச் சட்டம், 1961–இன் பிரிவு 44AB–யின் கீழ் தணிக்கைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். ஆண்டு விவர அறிக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை.

12. Define a 'Company' and distinguish the same from a partnership firm. ('நிறுவனம்' என்பதனை விளக்குக. நிறுவனத்தை ஒரு கூட்டாண்மை நிறுமத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.)

நிறுவனம் [Company]	கூட்டாண்மை நிறுமம் [Partership Firm]
1. நிறுவனம் என்பது அதன் உறுப்பினர் களினின்றும் வேறுபட்ட சட்டப் படியான தனித் தன்மை (Entity) கொண்டதொரு இயக்கமாகும்.	நிறுமமும் கூட்டாளிகளும் வேறல்ல. கூட்டாளிகளின் கூட்டுப் பெயரே நிறுமமாகும்.
2. நிறுவனம், 2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரும்.	நிறுமம், 1932–ஆம் ஆண்டின் இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் கீழ் வரும்.
3. பொது நிறுவனத்திற்கு (Public Company) அதிகபட்ச உறுப்பினர் அளவே கிடையாது. தனியார் நிறுவனத்தில் அதிகபட்சம் 200 நபர்கள் உறுப்பினர்களாக இருக்க	வங்கித் தொழிலில் அதிகபட்சம் 10 நபர்களும் மற்ற தொழில்களில் அதிக பட்சம் 20 நபர்களும், ஒரு கூட்டாண்மை நிறுமத்தில் கூட்டாளிகளாக இருக்கலாம்.

நிறுவனம் [Company]	கூட்டாண்மை நிறுமம் [Partership Firm]
நபர்கள் உறுப்பினர்களாக இருக்க முடியும்.	
4. பொது நிறுவனத்தில் குறைந்த பட்சம் 7 நபர்களும், தனி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 2 நபர்களும் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.	இங்கு குறைந்தது இருவர் கூட்டாளிகளாக இருத்தல் வேண்டும்.
5. இது கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.	இங்கு பதிவு செய்தல் கட்டாயமல்ல.
6. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும். [Limited] (வரையறுக்கப்படாத பொறுப்பாக இருந்தாலொழிய)	கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப் படாததாகும்.
7. ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினரின் முகவராக (Agent) செயல்பட்டு நிறுவனத்தைக் கட்டுப்படுத்த முடியாது.	கூட்டாளிகள் அனைவரும் மற்ற கூட்டாளிகளின் முகவராக செயல்பட்டு, கூட்டாண்மையைக் கட்டுப்படுத்தலாம்.
8. ஒரு உறுப்பினர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கொள்ளலாம். நிறுவனத்தின் பணியாளாகவும் இருக்கலாம்.	ஒரு கூட்டாளி மற்ற கூட்டாளிகளுடன் ஒப்பந்தம் கொள்ளலாம். ஆனால் கூட்டாண்மை நிறுமத்துடன் அவ்வாறு ஒப்பந்தம் கொள்ள முடியாது.
9. உறுப்பினரின் இறப்பு, விலகல் முதலியவை நிறுவனத்தைப் பாதிப்பதில்லை. நிறுவனம் தொடர்ச்சியான 'வாழ்வை' பெற்றதாகும்.	விருப்பத்திலான கூட்டாண்மையை அறிவிப்பு மூலம் எந்நேரமும் கலைக்கலாம். கூட்டாளியின் இறப்பு, விலகல் ஆகியவையும் கலைப்பை உண்டாக்கும்.
10. ஒரேயொருவரை உறுப்பினராகக் கொண்டு 'ஒரு நபர் நிறுவனம்' கூட இங்கு தொடங்கலாம்.	கூட்டாண்மையே குறைந்தபட்சம் இருவர் கூட்டு சேர்வதால்தான் ஏற்படுகிறது.
11. நிறுவனம் என்பது அதன் உறுப்பினர்களிடமிருந்து வேறுபட்டது. எனவே உறுப்பினர்களுக்கு சொந்தப் பொறுப்பு இல்லை.	ஒரு கூட்டாண்மை நிறுமத்தில் அதன் கூட்டாளிகளுக்கு சொந்தப் பொறுப்பு தனிப்பட்ட முறையில் உண்டு.

நிறுவனம் [Company]	கூட்டாண்மை நிறுமம் [Partership Firm]
10. நிறுவனத்திற்கு குறிப்பிட்ட ஏடுகளை வைத்திருத்தல், இருப்பு நிலைக் குறிப்பை (Balance Sheet) அளித்தல் போன்ற பல சட்டக்கடப் பாடுகள் உண்டு.	நிறுமத்திற்கு சட்டப்படியான கடப் பாடுகள் ஏதுமில்லை.
11. நிறுவனத்தின் மேலாண்மை, அதன் நிருவாகக் குழுவினரிடம் உள்ளது. உறுப்பினர் ஒருவர் நிறுவனத்தின் மேலாண்மையில் கலந்து கொள்ள முடியாது.	நிறுமத்தின் மேலாண்மையில் பங்கு கொள்ள அனைத்து கூட்டாளிகளுக்கும் உரிமையுண்டு.
12. ஒரு உறுப்பினர் தன் பங்கினை எத் தடையுமின்றி விற்கலாம்.	ஒரு கூட்டாளி, தன் கூட்டாண்மை உரிமையை மற்ற கூட்டாளிகளின் இசைவின்றி மாற்றியளிக்க முடியாது.
13. நிறுவனத்தின் அமைப்பு முறையேட் டில் (Memorandum of Associa-tion) கூறப்பட்டுள்ள செயலைத் தவிர வேறு எதையும் செய்யவிய லாது.	கூட்டாளிகள் தங்களுக்குள் உடன்பாடு கொண்ட எச்செயலையும் செய்யலாம்.
14. நொடிந்து போன நிறுவனத்தின் கலைப்பு, அதன் உறுப்பினர்களையும் நொடித்தவராக்குவதில்லை.	பொதுவாக நிறுமத்தின் நொடிப்பு கூட்டாளிகளின் நொடிப்பாகும்.
15. தணிக்கை சட்டப்படியான தேவை யாகும்.	தணிக்கை கட்டாயமல்ல.

13. Distinguish a company from an illegal association. (சட்ட முரணான சேர்க்கையிலிருந்து ஒரு நிறுவனத்தை வேறுபடுத்துக.)

(அல்லது)

Differentiate a Company and an illegal association. (நிறுவனம் மற்றும் சட்ட முரணான சேர்க்கை - வேறுபடுத்துக.)

சட்ட முரணான சேர்க்கை, நிறுவனமொன்றிலிருந்து பல விதங்களில் வேறு பட்டது. அவற்றை ஒரு அட்டவணை வடிவில் அடுத்த பக்கத்தில் காண்போமா?

நிறுவனம் [Company]	சட்ட முரணான சேர்க்கை [Illegal Association]
1. நிறுவனம், சட்டப்படி பதிவு செய்யப் படுகிறது.	சட்ட முரணான சேர்க்கை, பதிவு செய்யப் படுவதில்லை.
2. சட்ட முறையானது.	சட்ட முரணானது.
3. நிறுவனம் ஒரு தனியான சட்ட நபர்.	தனி நபர் அல்ல.
4. நிறுவனம் வழக்காடலாம்.	சட்ட முரணான சேர்க்கை வழக்காட முடியாது.
5. நிறுவனத்தின் கடன்களுக்கு உறுப்பினர்கள் பொறுப்பில்லை.	கடன்கள் முழுவதற்கும் உறுப்பினர்கள் பொறுப்பாகிறார்கள்.
6. உறுப்பினர்களின் பொறுப்பு அவர்கள் பங்களவே ஆகும்.	உறுப்பினர்களின் பொறுப்பு வரம்பற்றது.
7. நிறுவனத்தின் உறுப்பினர்கள் குற்றவாளிகளல்லர்.	உறுப்பினர்கள் குற்றவாளிகளெனத் தண்டிக்கப்படுகின்றனர்.

14. Differentiate between a Company and Hindu Joint Family Business firm. (நிறுவனத்தையும் இந்து கூட்டுக் குடும்ப வியாபார நிறுமத்தையும் வேறுபடுத்துக.)

இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து செய்யும் வியாபார நிறுமம், ஒரு நிறுவனத்திலிருந்து பல விதங்களில் வேறுபட்டது. அவற்றை ஒரு அட்டவணை வடிவில் அடுத்த பக்கத்தில் காண்போமா?

நிறுவனம் [Company]	இந்து கூட்டு குடும்ப நிறுமம் [Hindu Joint Family Firm]
1. நிறுவனம், உறுப்பினர்கள் உடன் பாட்டினால் உண்டாகிறது.	இந்து கூட்டுக் குடும்ப நிறுமம், பிறப்பு எனும் தகுதி நிலையில் தோன்றியதே தவிர உடன்பாட்டினால் உண்டாவதல்ல.
2. ஆண், பெண் ஆகிய இருபாலாரும் உறுப்பினர்களாகலாம்.	குடும்பத்தில் பிறக்கும் ஆண் உறுப் பினரே இந்நிறுமத்தில் உறுப்பினராவார்.
3. உறுப்பினர்கள் இயற்கை அல்லது செயற்கை நபராக இருக்கலாம்.	உறுப்பினர்கள் யாவரும் இயற்கை நபர்கள்.
4. நிறுவனம் ஒரு தனி நபர்.	இந்நிறுமம் ஒரு தனி நபர் அல்ல.

நிறுவனம் [Company]	இந்து கூட்டு குடும்ப நிறுமம் [Hindu Joint Family Firm]
5. பொது நிறுவனத்தில் குறைந்த பட்சம் 7 நபர்களும், தனியார் நிறுவனத்தில் குறைந்தபட்சம் 2 நபர்களும் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.	இதில் உறுப்பினர்களுக்கு குறைந்த பட்ச வரம்பு ஏதும் கிடையாது.
6. நிறுவனம், வரம்பு மீறல் கோட் பாட்டிற்குட்பட்டது.	இந்து கூட்டுக் குடும்ப நிறுமம் வரம்பு மீறல் கோட்பாட்டிற்குட்பட்டதல்ல.
7. இளவர் உறுப்பினராக முடியாது.	இளவரும் இந்நிறுமத்தில் ஓர் உறுப்பினர்.
8. ஒரு நிறுவனத்தில் பிறப்பினாலேயே பங்குதாரராக முடியாது. பங்குதாரராவற்கு சில குறிப்பிட்ட நடை முறைகளைப் பின்பற்ற வேண்டும். பங்குகளைப் பிறருக்கு வழங்குவதன் மூலமாகத்தான் பங்குதாரர்களை அதிகமாக்கலாம்.	இங்கு ஒருவர் தனது பிறப்பினால் உறுப்பினராகிறார். அதாவது ஆண் மகன் பிறக்கப் பிறக்க, உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகுதியாகிறது.
9. உறுப்பினர் இறந்தால் அவரது உரிமையை அவரது சட்டப்படியான பிரதிநிதி (வாரிசு) (Legal Representative) பெறுகிறார். இதனால் உறுப்பினர்கள் எண்ணிக்கை பாதிக்கப்படுவதில்லை.	குடும்ப உறுப்பினர்கள் இறப்பதால், இந்து கூட்டுக் குடும்ப நிறுமத்தின் உறுப்பினர் எண்ணிக்கையும் குறை கிறது.
10. உறுப்பினர்கள் அனைவரும் இறந் தாலும் நிறுவனம் பாதிக்கப் படுவதில்லை.	உறுப்பினர்கள் அனைவரும் இறந்தால், நிறுமம் மறைகிறது.
11. உறுப்பினர்களின் பொறுப்பு அவர்கள் பங்களவே ஆகும்.	உறுப்பினர்களின் பொறுப்பு அவர்கள் பங்களவேயாயினும், இந்து கூட்டுக் குடும்ப நிறுமத்திற்கு மேலாளராக விளங்கும் அக்குடும்பத்தின் தலைவர் (கர்த்தா) முழுப் பொறுப்புடையவர் ஆவர்.
12. நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டும்.	நிறுமம் பதிவு செய்யப்பட வேண்டிய தில்லை.

நிறுவனம் [Company]	இந்து கூட்டு குடும்ப நிறுமம் [Hindu Joint Family Firm]
13. ஒரு நிறுவனம் கடன் வாங்குவதற்கு தனது சொத்தினை படரும் பற்றாக (floating charge) வழங்கலாம்.	இந்துக் கூட்டுக் குடும்ப நிறுமம் அவ்வாறு படரும் பற்று வழங்க முடியாது.
14. ஒரு நிறுவனம் ஆண்டுதோறும் ஆண்டறிக்கையையும், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளையும் உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும்.	இத்தகைய கடமை இந்து கூட்டுக் குடும்ப நிறுமத்திற்குக் கிடையாது.
15. நிறுவனம், நிறுவனச் சட்டத்தின் விதிகளுக்குட்பட்டது.	இந்து கூட்டுக் குடும்ப நிறுமம் இந்து மதச் சட்டத்திற்குட்பட்டு இயங்குகிறது.

15. Explain classes of Companies. Discuss about Associations and illegal Association. (நிறுவனத்தின் வகுப்புகளை விளக்குக. அமைப்புகள் மற்றும் சட்ட விரோத அமைப்பினை பற்றி விவாதிக்க.)

முந்தைய வினாக்களின் விடைகளில் இருந்து கண்டறிந்து தொகுத்து எழுதுக.

-o0o-

இயல் II

உருவாக்கம்

[உருவாக்கம் – நிறுவனமொன்றை உருவாக்கல் – தோற்றுவிப்பாளர்கள், பதிவு செய்தல், கூட்டுருவாக்கல், சமைப்பு முறைமேடு, செயல்முறை விதிகள், திட்ட அறிவிப்பு மற்றும் வைப்பீடுகள் – பதிவுக்கு விண்ணப்பம்]

Formation

[Formation - Formation of a Company - Promotors, Registration, Incorporation, Memorandum of Association, Articles of Association, Prospectus and Deposits - Application for Registration]

நிறுவனமொன்றை உருவாக்குதல்
[Formation of a Company]

அ.
தோற்றுவிப்பாளர்கள் (அல்லது) துவக்குநர்கள்
[Promoters]

1 **16. Who is a Promoter? What is his legal status? Whether he is legally entitled to remuneration?** (துவக்குனர் என்பவர் யார்? அவருடைய சட்டத் தகுதி யாது? அவர் ஊதியம் பெற சட்டப்படி உரிமையுள்ளவரா?)

(அல்லது)

Define a Promoter. Explain the position of Promoters in relation to the Company. ('தோற்றுவிப்பாளர்' - வரையறு. நிறுவனத்தைப் பொறுத்து தோற்றுவிப்பாளரின் நிலையை விளக்குக.)

(அல்லது)

"The relationship between a promoter and a company floated by him is of a fiduciary character." Discuss. ("ஒரு தோற்றுவிப்பாளருக்கும், அவர் உருவாக்கிய ஒரு நிறுவனத்திற்கும் இடையே உள்ள உறவு, நம்பகத் தன்மை வாய்ந்ததாகும்" - விவாதி.)

(அல்லது)

"Promoter is not a trustee or agent for the company but he stands a fiduciary position towards it" - Explain. ("தோற்றுவிப்பாளர் என்பவர் நிறுவனத்தின் பொறுப்பாண்மையரோ அல்லது முகவரோ அல்ல. ஆனால் அவர் அதன் நம்பிக்கைக்குரிய நிலையில் இருப்பவர்" - விளக்குக.)

(அல்லது)

Explain the legal position of a Promoter of a company and examine his duty, liabilities and rights. (ஒரு நிறுவன உருவாக்குனரின் சட்ட நிலையை விளக்கி அவருடைய கடமை, பொறுப்புகள் மற்றும் உரிமைகளை ஆராய்க.)

(அல்லது)

Promoter - Write short notes. (ஆக்க முயற்சியாளர் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Promoter - Write short notes. (தோற்றுவிப்பாளர் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Promoter - Write short notes. (தொடக்குநர் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Promoters - Write short notes. (துவக்குநர்கள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Erlanger v. New Sombrero Phosphate Co. (1878) LR 3 App Cas 1218 - Write short notes. [எர்லாஞ்சர் - எதிர் - நியூ சாம்பிரிரோ பாஸ்பேட் கம்பெனி (1878) எல்.ஆர். 3 ஏ.சி. 1218 - குறுகிய விடை எழுதுக.]

முன்னுரை:

பொதுவாக வணிகத்திலோ, தொழிலிலோ முதலீடு செய்வதன் மூலம் இலாப

மீட்டுவதற்காக நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. ஒரு நிறுவன உருவாக்கம் என்பதை பரந்த அளவில் பிரித்து சொல்ல வேண்டுமென்றால், அதில் மூன்று படி நிலைகள் அடங்கியுள்ளன. அவை,

(1) நிறுவனத்தை தோற்றுவிப்பது,
(Promotion of a company)

(2) அதை பதிவு செய்வதன் மூலம் கூட்டுருவாக்குவது, மற்றும்
(Its incorporation by registration)

(3) தொழிலைத் தொடங்குவது
(Commencement of business).

இந்த அத்தியாயத்தில் நாம் மேற்கண்ட மூன்றில் முதல் படிநிலையான நிறுவனத்தை தோற்றுவித்தலும், அதன் தோற்றுவிப்பாளர் குறித்தும் விரிவாகக் காண உள்ளோம்.

தோற்றுவிப்பாளர் (Promoter) - விளக்கம் :

நிறுவனமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் உருவானதிலி ருந்து அதனை நிறைவேற்றுவதற்குத் தேவையான முயற்சிகள் எடுப்பது வரையிலான செயல்கள் 'தோற்றுவிப்பு' எனப்படுகிறது. நிறுவனத்தைத் தோற்றுவிப்பதையே தம் தொழிலாகக் கொண்ட வல்லுநர் 'தோற்றுவிப்பாளர்' (Promoter) என்றழைக்கப்படுகிறார். அதாவது, 'தோற்றுவிப்பாளர்' என்றால் ஒரு நிறுவனத்தை உருவாக்கியதில், பங்கேற்றவர் என்று கூறலாம். உதாரணமாக, ஒரு நிறுவனம் அல்லது ஒரு நபர், நிறுவனத்திற்கு இயக்குனர்களைப் பெற உதவி செய்தாலும் அல்லது நிறுவனத்தின் பதிவிற்கு முந்தைய ஒப்பந்தங்களை தயாரித்தாலும், அந்நிறுவனம் அல்லது அந்நபர் ஒரு தோற்றுவிப்பாளராக கருதப்படலாம். இதிலிருந்து ஒரு நிறுவனம் கூட தோற்றுவிப்பாளராக இருக்கலாம் என்பதும் புலப்படுகிறது.

தொழில்ரீதியாக ஒரு நிறுவனத்திற்குப் பணியாற்றியவர்கள் தோற்றுவிப்பாளர்களாக கருதப்பட முடியாது. எடுத்துக்காட்டாக வழக்குரைஞர், பட்டயக் கணக்காயர் ஆகியோர்களும் ஒரு நிறுவனத்தை உருவாக்குவதில் பங்கு கொள்கின்றனர். ஆனால் இவர்கள் தொழில்ரீதியாக தங்கள் பணிகளை மேற்கொள்வதால், இவர்களை தோற்றுவிப்பாளர்களாகக் கருத முடியாது. எனினும், அவர்கள் தங்கள் தொழில்

முறைக்கும் அப்பால், நிறுவனத்திற்கான பங்குத் தொகையைப் பெறவும், இயக்குனர்கள் பெறவும் வழிவகை செய்தவர்களென்றால், அவர்களும் தோற்றுவிப்பாளர்களே.

தோற்றுவிப்பாளர் - 2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் பிரிவு 2(69) தரும் வரையறை :

தோற்றுவிப்பாளருக்கான வரையறையை முந்தைய 1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் தரவில்லை. ஆனால் தற்போது 2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம், தனது **பிரிவு 2(69)**-இன் வாயிலாக தோற்றவிப்பாளர் என்ற பதத்தை வரையறுக்கிறது. அதன்படி,

"தோற்றுவிப்பாளர்" என்பது -

(a) அவ்வாறு தோற்றுவிப்பாளர் என்று திட்டஅறிவிப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட அல்லது பிரிவு 92-இல் குறிப்பிடப்பட்ட ஆண்டு விவர அறிக்கையில் நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட ஓர் நபர்; அல்லது

(b) நிறுவன விவகாரங்களில் ஒரு பங்குதாரராக, இயக்குனராக அல்லது வேறுவகையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கட்டுப்பாடு கொண்டுள்ள ஓர் நபர்; அல்லது

(c) எந்த நபர் வழங்கும் ஆலோசனை, ஏவுரைகள் அல்லது அறிவுறுத்தல்களின்படி வழக்கமாக செயல்படுவதற்கு நிறுவனத்தின் இயக்குனர்கள் வாரியம் (குழு) பழகியுள்ளதோ அந்த நபர்

என்று பொருள்படும்.

வரம்புரையாக மேற்கண்ட உட்கூறு (c)-யில் கூறப்பட்டுள்ள எதுவும் வெறும் தொழில்ரீதியான தகுதியில் செயல்படும் நபர் ஒருவருக்குப் பொருந்தாது;[1]

---

1. **"Promoter"** means a person -

(a) who has been named as such in a prospectus or is identified by the company in the annual return referred to in section 92; or

(b) who has control over the affairs of the company, directly or indirectly whether as a shareholder, director or otherwise; or

(c) in accordance with whose advice, directions or instructions the Board of Directors of the company is accustomed to act:

Provided that nothing in sub-section (c) shall apply to a person who is acting merely in a professional capacity;

- Section 2(69) of the Companies Act, 2013.

நிறுவனத்தைப் பொறுத்து தோற்றுவிப்பாளரின் சட்ட நிலை (The Legal Position of Promoter in a Company):

தோற்றுவிப்பாளருக்கும், அவர் உருவாக்கிய நிறுவனத்திற்கும் இடையிலான நம்பகத் தன்மை உறவு (அல்லது) தோற்றுவிப்பாளரின் கடமைகளும் பொறுப்புகளும் (The Fiduciary Relationship between a Promoter and a Company floated by him (or) The Duties and Liabilities of a Promoter):

தோற்றுவிப்பாளர்களுக்கு அதிகமான கடமைகளையும் பொறுப்புகளையும் சட்டமும் நீதிமன்றங்களும் விதிக்கின்றன.

(1) ஒரு நிறுவனத்தை தோற்றுவிப்பதில் (துவக்குவதில்), மிக அதிகமான நன்மைகளை (இலாபங்களை) பெறுபவர் அதன் தோற்றுவிப்பாளரே ஆவார். இந்நிலையை ஒரு கட்டுக்குள் கொண்டு வர, நீதிமன்றங்கள் தோற்றுவிப்பாளரை நம்பிக்கைக்குரிய முகவர் (fiduciary agent) ஒருவருக்குரிய பொறுப்பினைத் தந்துள்ளது. ஒரு தோற்றுவிப்பாளரின் நிலை, நிறுவனத்தின் பொறுப்பண்மையர் (trustee) ஒருவரின் நிலையை ஒத்துள்ளது. **எனவே அவர், நிறுவனத்துடன் கொண்டுள்ள தொடர்பு வெளிப்படையானதாகவும், நியாயமானதாகவும் இருக்க வேண்டும்.**

இந்த வகையில் தோற்றுவிப்பாளருக்கு விதிக்கப்படும் முதற்கடமை யாதெனில், அவர் தன்னுடைய சொத்தினை வாங்குவதற்காகவும் மற்றும் பங்குதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து தனக்குரிய தொகையை எடுத்துக் கொள்வதற்காகவும், ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தால், அந்நிறுவனத்தால் வாங்கப்பட இருக்கும் தனது சொத்து குறித்த அனைத்து விபரங்களையும் ஒளிவுமறைவு இல்லாமல் வெளியிட வேண்டும். சொத்தின் மதிப்பு அல்லது தன்மை அல்லது செய்யப்படும் விற்பனையில் தன்னுடைய சொந்த நலன் குறித்த ஏதேனும் ஒரு உண்மையை தோற்றுவிப்பாளர் மறைத்தால், அவ்விற்பனை நடவடிக்கையை நிறுவனம் இரத்து செய்யலாம் அல்லது தன்னுடைய இழப்பிற்கு இழப்பீடு கோரலாம். தோற்றுவிப்பாளர், நிறுவனத்திற்கு விற்கப்படும் சொத்து தன்னுடைய சொத்து என்பதை நிறுவனத்திற்கு தெரிவிக்காமல் விற்பனை செய்தால், அவர் நம்பிக்கை மோசடி (நம்பிக்கைத் துரோகம்) (Breach of trust) குற்றத்திற்கு ஆளாகின்றார். மேலும் நிறுவனத்திற்கு சொத்தை விற்கும் நபர் எவரிடமிருந்தும் கழிவுத் தொகையை (commission) அல்லது மீதூதியத்தை (bonus) தோற்றுவிப்பாளர் பெற்றுக் கொண்டால், அங்கும் அவர் நம்பிக்கை மீறல் குற்றத்தைச் செய்தவராகிறார்.

சுருங்கக்கூறின், நிறுவனத்திடம் தன்னுடைய நிலை, தன்னுடைய இலாபம், நிறுவனத்தால் விற்கப்படும் அல்லது வாங்கப்படும் சொத்தில் தனக்குள்ள நலன் ஆகியவற்றை நிறுவனத்தின் நம்பிக்கைக்குரிய முகவரின் நிலையில் இருந்து தோற்றுவிப்பாளர் நிறுவனத்திடம் தெரிவிக்க வேண்டும். எனவே தோற்றுவிப்பாளர் களால் தொடங்கப்பட இருக்கும் நிறுவனத்தில் அவர் நேரடியாகவோ, மறைமுக மாகவோ இலாபம் ஈட்டுவதை சட்டம் அனுமதிக்கவில்லை. அவ்வாறு இலாபம் ஈட்டி னால், அதை அவரிடமிருந்து வசூலிக்க நிறுவனம் வழக்கு தொடரலாம். தோற்றுவிப் பாளரின் பொறுப்பு நிலையை விளக்கும் முக்கிய வழக்கு வருமாறு.

Erlanger v. New Sombrero Phosphate Co.[1]

இவ்வழக்கில், ஒரு சிலர் E-யின் தலைமையில் பாஸ்பரஸ் சுரங்கங்கள் உள்ள ஒரு தீவை 55,000 பவுண்டு பணத்திற்கு வாங்கினார்கள். அச்சுரங்கங்களில் பணியை மேற்கொள்வதற்காக ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டது. E அந்நிறுவனத்திற்கு அய்ந்து இயக்குனர்களை நியமித்தார். அதில் இருவர் வெளிநாடு சென்றிருந்தனர். மீதமுள்ள மூவரில், இரண்டு இயக்குனர்கள், முற்றிலும் E–யின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். இந்த மூன்று இயக்குனர்களும் மேற்படி தீவை தங்கள் நிறுவனத்திற்காக 1,10,000 பவுண்டு பணத்தைக் கொடுத்து வாங்கினார். இதற்கு பிறகு நிறுவனம் திட்ட அறிவிப்பு (Prospectus) ஒன்றை வெளியிட்டது. இதனடிப்படையில் பொதுமக்கள் பலரும், நிறுவனத்தின் பங்குகளை வாங்கினார். நிறுவனத்தின் முதற்கூட்டத்தில் மேற்படி தீவு வாங்கப்பட்டது குறித்து பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால், அது எச்சூழ்நிலையில், எப்படி வாங்கப்பட்டது எனும் உண்மை நிலை அவர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. நிறுவனம் கலைக்கப் பட்ட பொழுது, நிறுவனக் கலைப்பு அதிகாரி, தோற்றுவிப்பாளர் அடித்த கொள்ளை இலாபம் நிறுவனத்திற்குச் சேர வேண்டும் என்று வாதிட்டார். ஆனால் தோற்றுவிப் பாளரோ தனது இலாபம் முழுவதையும் இயக்குனர்களுக்கு அறிவித்துவிட்டேன் என்றும், நிறுவனத்திற்காக மேற்படி தீவு வாங்கப்பட்ட விபரம் அனைத்தும் இயக்கு னரவைக்கு (Board of Directors) தெரியும் என்றும் வாதிட்டார். ஆனால் உண்மை நிலை யாதெனில், தீவு வாங்கப்படும் பொழுது, அய்ந்து இயக்குனர்களில் இரண்டு இயக்குனர்கள் வெளிநாடு சென்றிருந்தனர். எஞ்சியுள்ள மூவரில், இருவர் தோற்று விப்பாளரின் கைப்பொம்மைகள். இப்படி இருக்கையில் தோற்றுவிப்பாளர் தான் பெற்ற இலாபத்தை எப்படி இயக்குனர்கள் அனைவருக்கும் அறிவித்ததாக கொள்ளப்படும் என்று கூறி, தோற்றுவிப்பாளர் பெற்ற இலாபம் முழுவதையும், நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

மேற்படி வழக்கின் முடிவிலிருந்து தோற்றுவிப்பாளர்கள் சட்டப்படி இலாபம் பெற வேண்டுமெனில், அதை அவர்கள் கட்டுப்பாடற்ற சுதந்திரமான இயக்குனர்கள் அனைவருக்கும் அறிவிக்க வேண்டும். தோற்றுவிப்பாளர்களின் கைப்பொம்மை களாக இயக்குனர்கள் விளங்கினால், அதை அவர்கள் பங்குதாரர்களிடம் ஒளிவு மறைவு இல்லாமல் தெரிவிக்க வேண்டும்.

1. (1878) LR 3 App Cas 1218 : 39 LT 269

(2) 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 26(1)(xiv)**–ஆனது, ஒரு நிறுவனத்தின் தோற்றுவிப்பு பணியில் தோற்றுவிப்பாளர் எந்த அளவு பங்கெடுத் துள்ளார் என்பதற்கான ஆதாரங்களை திட்டஅறிவிப்பில் தெரிவிக்க வேண்டும் என்று கூறுகிறது. வேறு வகையில் சொன்னால் தோற்றுவிப்பாளரின் ஆதாயங்களை (இலாபங்களை) திட்ட அறிவிப்பிலேயே வெளிப்படுத்த வேண்டும். தவறினால் அவர் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்புகளுக்கு ஆளாக நேரிடும்.

(3) பொய்யான மற்றும் தவறான கூற்றுகளுடன் திட்ட அறிவிப்பை வெளியிட அனுமதித்தால், அதற்கு பிரிவு 447–இன்படி குற்றவியல் பொறுப்புக்கு தோற்றுவிப்பாளர் ஆளாவர் என்று **பிரிவு 34** கூறுகிறது.

(4) திட்ட அறிவிப்பில் தோற்றுவிப்பாளர் குறிப்பிடும் தவறான கூற்றுகளால் எவருக்கேனும் கேடு நேர்ந்தால் அல்லது எவரேனும் இழப்படைந்தால், அதற்கு அத் தோற்றுவிப்பாளர் பொறுப்பாவர். மேலும் அந் நிறுவனமும் பொறுப்பாகும் என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 35(1)(C)** கூறுகிறது.

(5) தாம் தோற்றுவிக்கும் நிறுவனத்தின் சொத்திலிருந்து எடுத்துக் கொள் ளும் தொகைக்கு சரியான கணக்கு காண்பிக்க தோற்றுவிப்பாளர் கடமைப்பட்டவரா வார்.

(6) தொடங்கும் நிறுவனத்தின் சார்பில் பிறருடன் தோற்றுவிப்பாளர் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களுக்கு அவரே தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவர். ஒப்பந் தம் செய்து கொண்ட நபர்களின் இசைவின் பேரில், தோற்றுவிப்பாளரின் பொறுப்பை நிறுவனம் ஏற்றுக் கொள்ளும் வரையில், அவரது பொறுப்பு நீடிக்கும்.

(7) நிறுவனத்தைக் கலைக்கும் பொழுது தோற்றுவிப்பாளர் நம்பிக்கைத் துரோகம் செய்ததாகக் அல்லது தவறாக செயல்பட்டதாக கண்டறியப்பட்டால், அவர் மீது சட்டப்படி வழக்கு தொடர்ந்து அதனால் தவறாக அடைந்த அல்லது தன்னிடம் இருத்திக் கொண்ட தொகை அல்லது சொத்தை திரும்ப பெறலாம் அல்லது அதற்காக அவரிடமிருந்து இழப்பீடு பெறலாம் என்று **பிரிவு 340** கூறுகிறது.

மேற்கண்ட பொறுப்புகளை, செயல்முறை விதிகளையும் ஒப்பந்தங்களையும் தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டு, தோற்றுவிப்பாளர்கள் தட்டிக் கழிக்க முடியாது. ஏமாற்றப்பட்ட நிறுவனம், ஒப்பந்தத்தை தள்ளிவிட்டு, தோற்றுவிப்பாளர்கள் பெற்ற இலாபத்தையும், ஆதாயங்களையும் பறித்துக் கொள்ளும் உரிமையுடையதாகும். மேலும் தோற்றுவிப்பாளர்கள் குற்றப் பொறுப்புக்கும் ஆளாக நேரிடும்.

தோற்றுவிப்பாளரின் உரிமைகள் (Rights of Promoter):

தோற்றுவிப்பாளர்களுக்கு குறிப்பிட்டுச் சொல்லும்படியான உரிமைகள் எவற்றையும் நிறுவனச் சட்டம் வழங்கவில்லை. ஆனால் இவர்களாகவே சில உரிமைகளை ஒப்பந்தங்களின் வாயிலாக உருவாக்கிக் கொள்வதை சட்டம் தடை செய்யவில்லை. இங்கு அத்தகு ஒப்பந்தங்கள் ஏதுமில்லை என்றால், தோற்றுவிப் பாளர்கள் எவ்வுரிமையையும் பெறாததோடு, உள்ளதையும் இழப்பார்கள்.

1. பூர்வாங்க செலவுகளைப் பெறும் உரிமை (Right to receive preliminary expenses): ஒப்பந்தம் இருந்தாலன்றி, தோற்றுவிப்பாளர்கள் செய்த பூர்வாங்க செலவுகள் (preliminary expenses), பதிவுக் கட்டணங்கள் (registration fees) ஆகியவற்றை நிறுவனத்திடமிருந்து பெற முடியாது. எடுத்துக்காட்டாக பின்வரும் வழக்கொன்றை கவனிப்போம்.

In Re National Motor Mail Coach Co. Ltd.[1]

மேற்படி வழக்கில், ஒரு நிறுவனம் தோன்றும் முன் பதிவுக் கட்டணத்திற்காக அதன் தோற்றுவிப்பாளர், 460 பவுண்டு பணத்தை செலவு செய்தார். பின்னர் அந்நிறுவனம் கலைக்கப்பட்டது. இங்கு ஒப்பந்தம் ஏதுமில்லாததால், மேற்படி செலவுத் தொகையைப் பெற தோற்றுவிப்பாளருக்கு உரிமையில்லை என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. எனவே தனக்கு ஒரு தொகை சேர வேண்டும் என்ற தோற்றுவிப்பாளர் உரிமை கொண்டாடினால், அவ்வுரிமை உள்ளடங்கிய ஒப்பந்தத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். இல்லாது போனால், செய்த செலவு கைக்குச் சேராது.

அதுபோல் நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் அந்நிறுவனத்தை தோற்றுவித்தத்தற்கான பூர்வாங்க செலவுகள் வகையில் ஒரு குறிப்பிட்ட தொகை தோற்றுவிப்பாளருக்குத் தரப்பட வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டு வகை செய்யப்பட்டிருக்கலாம். அத்தொகையை நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட பிறகும் கூட தோற்றுவிப்பாளருக்கு நிறுவனம் தரலாம். எனினும் அவ்வாறு செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டிருப்பது நிறுவனத்திற்கும் தோற்றுவிப்பாளருக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தம் ஆகாது. எனவே செயல்முறை விதிகளின் அடிப்படையில் தோற்றுவிப்பாளர் தொகை கோரி வழக்கிட முடியாது. இதற்கு பின்வரும் வழக்கினை கவனிப்போம்.

Malhado v. Porto Alegre Railway Co.[2]

இவ்வழக்கில் நிறுவனத்தை அமைப்பதற்கு ஆன செலவுத் தொகைகளை தோற்றுவிப்பாளருக்கு நிறுவனம் தர வேண்டும் என்று அதன் செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தது. எவ்வளவு செலவுத் தொகை கொடுக்க வேண்டும் என்பது குறித்து இயக்குனர்கள் வாரியம் எடுப்பதே முடிவாகும்; ஆனால் அது நேர்வு எதிலும் 2000 பவுண்டுக்கும் மேல் செல்லக் கூடாது என்று அச்செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வழக்கின் வாதிகள் அந்நிறுவனத்தை தோற்றுவித்தவர்கள். எனவே அவர்கள் செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டுள்ள தொகையை தங்கள் பூர்வாங்க செலவுகளாகத் தர வேண்டும் என்று வலியுறுத்தி நிறுவனத்தின் மீது வழக்கிட்டனர். வழக்கினை ஆராய்ந்த நீதிமன்றம், செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டவற்றுக்கு தங்கள் உறுப்பினர்களுக்கு அதுவும் அவர்கள் உறுப்பினர்கள் என்று தகுதியில் தவிர வேறு எவருக்கும் பொறுப்பாகாது என்று தீர்ப்பளித்தது. அதாவது செயல்முறைவிதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது நிறுவனத்திற்கும் தோற்றுவிப்பாளருக்கும் இடையிலான ஒப்பந்தமாகாது.

1. (1908) 2 Ch. 228
2. (1874) LR 1 CP 503

2. சக-தோற்றுவிப்பாளர்களிடமிருந்து விகிதாச்சார தொகையை வசூலிக்கும் உரிமை (Right to recover proportionate amount from the co-promoters): ஒரு நிறுவனத்தில் இரகசிய ஆதாயங்கள் அல்லது இலாபங்கள் ஏதும் அதன் தோற்றுவிப்பாளர்கள் அடைந்தால், அதற்கு அனைவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புடையவர்கள் ஆவர். இங்கு அவ்வாறு அடைந்த இலாபங்கள் அனைத்தையும் தனியொரு தோற்றுவிப்பாளரே நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்திவிடும் நேர்வில், அவர் மீதமுள்ள சக–தோற்றுவிப்பாளர்களிடமிருந்து அத் தொகையின் விகிதாச்சாரத்தை திரும்பப் பெற உரிமை படைத்தவர். அதுபோலவே திட்ட அறிவிப்பில் தவறான கூற்றுகள் கூறியமைக்காக எழும் முழுப் பொறுப்பையும் தோற்றுவிப்பாளர்களில் ஒருவரே ஏற்றுக் கொண்டால், அதன் விகிதாச்சாரத்தை தனது சக–தோற்றுவிப்பாளர்களிடமிருந்து வசூலித்துக் கொள்ளும் உரிமை அவருக்கு உண்டு.

3. ஊதியத்திற்கான உரிமை (Right to remuneration): சட்டப்படி சரியாக நடந்து கொள்ளும் தோற்றுவிப்பாளர் ஒருவர் தனது முயற்சிகளுக்காக நிறுவனத்திடமிருந்து ஊதியம் பெற உரிமை படைத்தவர். அது முழுமையாக அல்லது பகுதியளவில் செலுத்தப்பட்ட பங்குகளாக, கடனீட்டுப் பத்திரங்களாக அல்லது தரகுத் தொகையாக அல்லது ஒரு ஒட்டுமொத்தத் தொகையாக இருக்கலாம். ஆனால் இதற் குரிய வெளிப்படையான உடன்படிக்கை தோற்றுவிப்பாளருக்கும், அந்நிறுவனத்திற் கும் இடையில் இருக்க வேண்டும்.

முடிவுரை:

எந்த ஒரு விஷயத்திலும், யார் முதலில் ஆரம்பிப்பது என்ற பிரச்சனை எழும். அந்த வகையில் ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்கும் பொழுதும், அதை யார் முன்னின்று உருவாக்குவது எனும் பிரச்சனை எழுகிறது. நிறுவனத் தோற்றுவிப்பாளர்கள், ஒரு நிறுவனத்தை தாங்களே முன்னின்று தோற்றுவித்து இப்பிரச்சனைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கின்றனர். நிறுவனத்தைத் தொடங்குவதே இவர்கள் கையில் இருப்பதால், இவர்கள் நினைத்தால் மறைமுகமான இலாபங்கள் பலவற்றைப் பெறலாம். யாருக்குத் தான் ஆசை இல்லை? தோற்றுவிப்பாளர்களும் மனிதர்கள்தானே? எனினும், இவர் களது நிறுவன விரோதப் போக்கிற்கும், எண்ணத்திற்கும் வரம்பிடும் முகமாக இவர்கள் மீது பல்வேறு கடமைகளையும், பொறுப்புகளையும் சட்டமும், நீதிமன்றங் களும் விதிக்கின்றன. அந்த வகையில் இவர்கள், தாம் ஆரம்பிக்கும் நிறுவனத்தின் நம்பிக்கைக்குரிய ஒரு **முகவராகச் (fiduciary agent)** செயற்பட வேண்டும் எனும் முக்கியமான நிபந்தனை ஒன்று இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. ஏனெனில், நிறுவ னம் தனது தோற்றத்திற்கு இவர்களை முழுமையாக நம்புகிறது. இந்த நம்பிக்கைக்கு முரணாக இவர்கள் ஏதேனும் செய்தால், அது நம்பிக்கை மோசடி குற்றமாகிவிடும். நாம் இதுகாறும் கண்ட கடமைகளும், பொறுப்புகளும் தோற்றுவிப் பாளர்களின் மேற்படி நம்பகத் தன்மை நிலையை தெளிவாகப் பறை சாற்றுகிறது. இந்த **நம்பகத் தன்மை நிலை (fiduciary position),** ஒரு பொறுப்பாண்மையரின் (trustee) அல்லது முகவரின் (agent) நிலையைவிட மேம்பட்டதாகும்.

எனவேதான், "**தோற்றுவிப்பாளர் என்பவர் நிறுவனத்தின் பொறுப்பாண்மையரோ அல்லது முகவரோ அல்ல. ஆனால் அவர் அதன் நம்பிக்கைக்குரிய நிலையில் இருப்பவர்,**"[1] என்று சரியாக உரைக்கப்பட்டுள்ளது.

17.What is the position of promoters in pre-incorporation contracts? (பதிவுக்கு முந்திய ஒப்பந்தங்களில் ஈடுபட்ட தோற்றுவிப்பாளரின் நிலை என்ன ?)

(அல்லது)

What do you understand by pre-incorporation contracts? Discuss the liability of a promoter in relation to the pre-incorporation contracts made on behalf of a company. (பதிவுக்கு முந்திய ஒப்பந்தங்கள் என்றால் என்ன? ஒரு நிறுவனத்தின் சார்பாக செய்யப்படும் பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்கள் தொடர்பாக தோற்றுவிப்பாளரின் பொறுப்பை விவாதிக்க.)

(அல்லது)

What is pre incorporation contract? Explain its legal basis. (நிறுமங்கள் இணைப்பாக்கத்திற்கு முந்தைய ஒப்பந்தங்கள் என்றால் என்ன? அதன் சட்ட நிலையை விவரிக்க.)

(அல்லது)

Is Pre-incorporation contracts binding on the company? What are the remedies available to the Party to such contracts? (நிறுவனம் பதிவு செய்வதற்கு முன்னால் செய்யப்பட்ட ஒப்பந்தம் நிறுவனத்தைக் கட்டுப் படுத்துமா? அவ்வகை ஒப்பந்தத்தில் மறு தரப்பினருக்கான தீர்வழிகள் யாவை?)

(அல்லது)

Pre-incorporation contract - Write short notes. (நிறுவனம் துவங்குவதற்கு முந்தைய ஒப்பந்தங்கள் - குறுகிய விடை எழுதுக)

(அல்லது)

Pre-incorporation contract - Write short notes. (நிறுவப்படும் முன் செய்த ஒப்பந்தங்கள் - குறுகிய விடை எழுதுக)

பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்கள் (Pre-incorporation

1. The Court held that a promoter occupies a fiduciary position in relation to the company he promotes. He is neither an agent nor a trustee for the company because the company before incorporation has no legal existence. - **Lagunas Nitrate Co. v. Lagunas Syndicate** (1899) 2 Ch 392

Contracts):

பொதுவாக ஒரு நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள் பதிவு செய்யப்பட விருக்கும் நிறுவனத்தின் சார்பில் சொத்துக்களை வாங்கவோ அல்லது சேவைகள் அல்லது உரிமைகளைப் பெறவோ ஒப்பந்தங்கள் செய்து கொள்வதுண்டு. இவ்வகை ஒப்பந்தங்கள் பூர்வாங்க ஒப்பந்தங்கள் (Preliminary Contracts) அல்லது பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்கள் (Pre-incorporation Contracts) என்றழைக்கப்படும்.

பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்கள் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துமா? (அல்லது) பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்களில் தோற்றுவிப்பாளர்களின் நிலை:

பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்களிலும் தோற்றுவிப்பாளர்களின் நிலை, இறங்குமுகமாகவே உள்ளது. அதாவது நிறுவனம் தோன்றுவதற்கு முன் இவர்களால் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள், நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது. ஒப்பந்தங்களின் நலனை நிறுவனம் பெற்றாலும், பலனை இவர்கள் தர வேண்டிய பொறுப்புக்குள்ளா கிறார்கள். ஏனெனில், பதிவுக்கு முன்னால், ஒரு நிறுவனம், ஒப்பந்தம் செய்து கொள் ளும் சட்டத் தகுதியற்றது **(non-entity)**. எனவே, நிறுவனத்திற்காக செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கு தோற்றுவிப்பாளர்களே பொறுப்புடையவர்கள். இதனை பின்வரும் வழக்கு தெளிவாக விளக்கும்.

Kelner v. Baxter[1]

இவ்வழக்கில், தோன்றாத ஒரு நிறுவனத்தின் உபயோகத்திற்கென, தோற்று விப்பாளர்கள் மூவர் சில பொருள்களை வாங்கினர். பின்னர் தோன்றிய அந்நிறுவனம், அப்பொருள்களை உபயோகித்துவிட்டு, அதற்குரிய பணத்தைச் செலுத்தும் முன் கலைக்கப்பட்டது. இங்கு தோற்றுவிப்பாளர்களே அப்பொருளுக்கு பொறுப்புடைய வர்கள் எனப்பட்டது.

எனவே, தோற்றுவிப்பாளர்கள் பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்களின் பொறுப் பிலிருந்து விலக வேண்டுமெனில், நிறுவனம் பதிவு செய்யப்படும் பொழுது, மேற்படி ஒப்பந்தங்கள் உரிய முறையில் உறுதி செய்யப்பட வேண்டும்.

In Re Colonial Produce Co. Ltd.[2]

இவ்வழக்கில், தோற்றுவிப்பாளரின் அறிவுறுத்தலின் பேரில் தேவையான ஆவணங்களை வரைந்து நிறுவனத்தை பதிவு செய்து கொடுத்த வழக்குரைஞருக் குண்டான சேவைக் கட்டணத்தை நிறுவனம் அளிக்க பொறுப்புடையதல்ல என்றும், நிறுவனம் கூட்டுருவாக்கப்படுவதற்கு முன் அது ஒரு சட்டத்தகு நிலை பெற்ற அமைப் பல்ல என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. எனவே பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்களின் பேரில் செய்யப்பட்ட செலவுகளுக்காக நிறுவனத்தின் மீது வழக்கிட முடியாது.

1. (1866) 15 LT 213 : (1861-73) ALL ER Rep Ext 2009
2. (1906) 2 Ch 435

அதே நேரத்தில் பதிவுக்கு முந்தை ஒப்பந்தங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனம் வழக்கிட முடியுமா என்ற ஒரு வினாவும் இங்கு எழுகிறது. இதற்கு பதில் "முடியாது" என்பதுதான். அதாவது, ஒரு நிறுவனம் பதிவுக்கு முந்தைய ஒப்பந்தத்தின் மீது வழக்கிட முடியாது. மேலும் அதனடிப்படையில் நலன் எதையும் கோர முடியாது. அதுபோல் அத்தகு ஒரு ஒப்பந்தத்தை ஏற்புறுதி செய்யவும் முடியாது. பதிவாகாத அதாவது சட்டப்படி இல்லாத ஒரு நிறுவனத்தின் சார்பாக ஒருவர் ஒப்பந்தம் செய்து கொண்டால், அதற்கு அவரே தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவர் ஆவார்.

எனினும், ஒரு நிறுவனம் முன்னதாக செய்து கொள்ளப்பட்ட பூர்வாங்க ஒப்பந்தம் ஒன்றின் நிபந்தனைகளின் அடிப்படையில், அது பதிவான பிறகு, மற்றொரு புதிய ஒப்பந்தத்தை செய்து கொண்டால், அந்த பூர்வாங்க ஒப்பந்தத்தில் நிறுவனத்திற்காக யார் (இங்கு தோற்றுவிப்பாளர்கள் அல்லது முகவர்கள் என எடுத்துக் கொள்ளலாம்) ஈடுபட்டார்களோ அவர்களது பொறுப்பு மறைந்துவிடும். அப்புதிய ஒப்பந்தத்திற்கு நிறுவனமே பொறுப்புடையதாகிவிடும்.

ஆங்கிலச் சட்ட நிலை மற்றும் இந்தியச் சட்ட நிலை:

நிறுவனம் தோற்றுவிக்கப்படாத காலகட்டத்தில் நிறுவனத்தாலோ அல்லது நிறுவமொன்றின் முகவர் ஒருவராலோ ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட கருதப்படமிடத்து, அதற்கு முரணான உடன்படிக்கை ஏதுமிருப்பின் அதற்கு உட்பட்டு, அந்த ஒப்பந்தம், நிறுவனத்திற்காக செயல்படக் கருதும் நபரால் அல்லது அதற்கான முகவரால் செய்து கொள்ளப்பட்டதற்கான விளைவைப் பெறும். மேலும் அவர் அந்த ஒப்பந்தத்திற்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார், என்று **ஆங்கில நிறுவனங்கள் சட்டம், 1985-இன் பிரிவு 36(4)** [Section 36(4) of the English Companies Act, 1985] குறிப்பிடுகிறது. அதாவது தோற்றுவிக்கப்படாத நிறுவனமொன்றின் சார்பாக ஒப்பந்தம் செய்து கொள்ளக் கருதும் நபரே அந்த ஒப்பந்தத்திற்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார். அதே நேரத்தில் அவரது பொறுப்பை விலக்கும் வெளிப்படையான வரைவுரைகள் ஏதும் அந்த ஒப்பந்தத்திலேயே இருந்தால், அவர் தனது தனிப்பட்ட பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பதே மேற்படி பிரிவு கூறுவதாகும்.

நமது இந்திய நாட்டைப் பொறுத்தவரை பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்களின் சட்ட விளைவு தொடர்பாக நிறுவனங்கள் சட்டத்தில் சட்ட வகைமுறை ஏதும் இல்லை. எனவே ஒரு நிறுவனம் பதிவுக்கு முந்தைய ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டதல்ல. மேலும் அதனால் அனுகூலம் பெறவும் உரிமை படைத்ததல்ல என்பதுதான் இங்கு வழிவழி வந்த சட்டக் கருத்தாக உள்ளது. எனினும் இந்நிலைப்பாடு குறித்தவகை நிவாரணச் சட்டத்தின் பிரிவு 15(4)–க்கு உட்பட்டதாகும். அதாவது நிறுவன நோக்கங்களுக்காக அதன் பதிவுக்கு முன்பு அதன் தோற்றுவிப்பாளர்கள் ஒப்பந்தம் ஏதும் செய்து கொள்கின்ற நேர்வில், அந்த ஒப்பந்தம் நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன நோக்கங்களின் பரவெல்லைக்குட்பட்டதாக இருப்பின், அதனை வலியுறுத்திச் செயற்படுத்த அந்நிறுவனம் கோரலாம் என்று அப்பிரிவு கூறுகிறது. அதேபோல் நிறுவனம் பதிவான பிறகு அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளுமானால் ஒப்பந்தத்தின் மறு தரப்பினர் அதனை வலியுறுத்தி செயல்படுத்த உரிமை படைத்தவர்.

நிறுவனமொன்றை உருவாக்குதல்
[Formation of a Company]

ஆ.
பதிவு செய்தல் மற்றும் கூட்டுருவாக்கல்
[Registration and Incorporation]

18. Explain briefly the various stages in the incorporation of a company and bring out the importance of the certificate of incorporation. (ஒரு நிறுவனம் பதிவு செய்யப்படுவதில் உள்ள பல்வேறு நிலைகளை சுருக்கமாக விளக்கு. மேலும் நிறுவனம் பதிவு செய்யப்படுவதற்கு வழங்கப்படும் சான்றிதழின் முக்கியத்துவத்தைக் கூறுக.)

(அல்லது)

Examine briefly the various stages in the incorporation of a company and bring out the importance of the certificate of incorporation. (ஒரு நிறுவனத்தை பதிவு செய்யப்படுவதற்கான பல்வேறு நிலைகளை சுருக்கமாக

விளக்குக. மேலும் நிறுவனப் பதிவு சான்றிதழின் முக்கியத் துவத்தை ஆராய்க.)

(அல்லது)

What are the steps to be taken for the formation of a Company? What is the effect of issuing a certificate of incorporation? (ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் யாவை? நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கு சான்றிதழ் வழங்குவதன் விளைவு என்ன?)

(அல்லது)

Mention the steps to be taken for the formation of a company. Discuss the conclusive nature of a certificate of incorporation issued by the Registrar of Companies. (ஒரு நிறுவனத்தை உருவாக்கு வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. நிறுவனப் பதிவாளரால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழின் அறுதியான தன்மை குறித்து விவாதிக்க.)

(அல்லது)

Explain the mode of forming a Company under the Indian Companies Act of 2013. (2013-ம் ஆண்டைய இந்திய நிறுவனச் சட்டத்தின் கீழ் ஒரு நிறுவனத்தை ஏற் படுத்தும் முறையை விளக்குக.)

(அல்லது)

Certificate of Incorporation - Write short notes. (பதிவுச் சான்றிதழ் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Peell's Case - Write short notes. (பீல்ஸ் வழக்கு - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Bring out the importance of rule in Peell's Case illustrating with Indian case laws. (இந்திய வழக்குகளை மேற்கோள் காட்டி பீல்ஸ் வழக்கில் சொல்லப்பட்ட விதியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக.)

ஒரு நிறுவனத்தை உருவாக்கும் முறை (Formation) :

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **3-வது பிரிவானது** ஒரு நிறுவனத்தை உருவாக்கும் முறை குறித்து பின்வருமாறு எளிமையாகக் குறிப்பிடு கிறது. அப்பிரிவின்படி , சட்டப்படியான நோக்கம் எதற்காகவும்,

(அ) உருவாக்கப்பட வேண்டிய நிறுவனம் ஓர் பொது நிறுவனமாக இருக்குமிடத்து ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களாலும்

(ஆ) உருவாக்கப்பட வேண்டிய நிறுவனம் ஓர் தனியார் நிறுவனமாக

இருக்குமிடத்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களாலும்

(இ) உருவாக்கப்பட வேண்டிய நிறுவனம் ஓர் ஒரு நபர் நிறுவனமாக அதாவது ஓர் தனியார் நிறுவனமாக இருக்குமிடத்து ஒரு நபராலும்,

அவர்களது பெயரை அல்லது அவரது பெயரை அமைப்பு முறையேடு ஒன்றில் கையொப்பமிட்டு பதிவு தொடர்பாக நிறுவனச் சட்டம் குறிப்பிடும் வேண்டுறுத் தங்களை (நிபந்தனைகளை) பூர்த்தி செய்வதன் மூலம் நிறுவனமொன்று உருவாக்கப் படலாம், என்று **பிரிவு 3(1)** கூறுகிறது.

இவ்வாறு உருவாக்கப்படும் நிறுவனம் பின்வரும் வகைகளில் ஏதேனும் ஒன்றின்படி இருக்கலாம். அதாவது,

(அ) பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக, அல்லது
(a company limited by shares)

(ஆ) பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக, அல்லது
(a company limited by guarantee)

(இ) வரையறுக்கப்படா நிறுவனமாக,
(an unlimited company)

இருக்கலாம் என்று **பிரிவு 3(2)** கூறுகிறது.

பொதுவாக ஒரு நிறுவனத்தை உருவாக்கி, அதற்கான பதிவுச் சான்றிதழ் (Certificate of Incorporation) பெற வேண்டுமெனில் நிறுவனங்களின் பதிவாள ரிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும். அதனுடன் பின்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும். அவை, (a) அமைப்பு முறையேடு (Memorandum of Association); (b) செயல்முறை விதிகள் (தேவையெனில்) (Articles of Association);



(c) நிறுவனத்தைப் பதிவு செய்வ தற்கு நிறுவனச் சட்டம் கூறும் அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதாக உறுதி மொழி/விளம்புகை (Declaration); (இவ்வுறுதிமொழி யாரால் கையொப்பமிட வேண்டும் என்பது குறித்து சில பத்திகளுக் குப் பின்னர் விரிவாகக் காண உள்ளோம்). (d) நிறுவனத்தின் ஆதரவாளர்கள் (உறுப்பினர் கள்) அளிக்கும் ஆணையுறுதியாவணம் (Affidavit). அந்நிறுவனத்தால் அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதாக பதிவாளர் மனநிறைவடைவாரானால் அவர் மேற்கண்ட ஆவணங்களை தன்னிடமே இருத்திக் கொண்டு, அவற்றை நிறுவனங்களின் பதிவேட்டில் பதிவு செய்து கொள்வார். இதைத் தொடர்ந்து அவர்

அந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டுவிட்டதாக தன்னுடைய கையொப்பமிட்டு சான்றளித்து, பதிவுச் சான்றிதழ் ஒன்றை அளிப்பார். அவ்வாறு சான்றிதழ் அளிக்கப்பட்ட தேதியிலிருந்து அந்நிறுவனம், நிறுவனச் சட்டப்படி உருவான ஒரு சட்ட நபராகிறது (legal person). பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் அந்நிறுவனத்திற்கு **'நிறுவன அடையாள எண்'** (Corporate identity number) ஒன்றை பதிவாளர் ஒதுக்குவார். அதுவே அந்நிறுவனத்தின் குறிப்பிடத்தகுந்த அடையாளம் (distinct identity) ஆகும். இந்த எண் பதிவுச் சான்றிதழிலும் சேர்க்கப்படும். **(பிரிவு 7).**

இவ்வாறு ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டாலும், இதையொட்டி அந்நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை (steps) எடுக்க வேண்டியுள்ளது. அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

ஒரு நிறுவனத்தை உருவாக்க எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் (Various steps to be taken for the formation of a Company) அல்லது நிறுவனத்தைப் பதிவு செய்தல் (Incorporation of Company):

நாம் ஏற்கனவே கண்டவாறு ஒரு நிறுவனம், பொது நிறுவனமா அல்லது தனியார் நிறுவனமா அல்லது ஒரு நபர் நிறுவனமாக என்பதையும், உறுப்பினர்களின் பொறுப்பு வரம்புடையதா (Limited Company) அல்லது வரம்பற்றதா (Unlimited Company) அல்லது பொறுப்புறுதி அளவினதா (Guarantee Company) என்பதையும் முடிவு செய்து கொண்டு, தனியார் நிறுவனமாயின் குறைந்தது இரண்டு நபர்களும், பொது நிறுவனமாயின் குறைந்தது ஏழு நபர்களும் ஒன்று சேர்ந்து அல்லது ஒரு நபர் நிறுவனம் என்றால் ஒரு நபரும் நிறுவனத்தின் அமைப்பு முறையேடு (Memorandum of Association) தயாரித்து அதில் கையொப்பமிட வேண்டும். அமைப்பு முறையேட்டில் கையெழுத்திட்டவர்கள் ஆதரவாளர்கள் (Subscribers) எனப்படுவர். அத்தகு ஆதரவாளர்கள் தங்களது நிறுவனத்தை பதிவு செய்ய சென்ற பக்கத்தில் கண்ட நடைமுறையையொட்டி, பின்வரும் சட்ட சடங்குகளை பூர்த்தி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டதாக (அல்லது) நிறுவப்பட்டதாகக் (formed) அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் (incorporated) கருதப்படும். உருவாக்கம் மற்றும் பதிவு செய்தல் குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 3 முதல் 7 வரையிலான பிரிவுகள் தெளிவுபடுத்துகின்றன.



1. பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு முறையேடு (Memorandum of Association of the Proposed Company):

அமைப்பு முறையேடு என்பது ஒரு நிறுவனத்தின் உருவாக்கத்திற்குத் தேவைப்படும் அடிப்படையான ஆவணமாகும். இது ஒரு நிறுவனத்தின் பெயர், பதிவு அலுவலக முகவரி, அமைப்பு, நோக்கங்கள், பங்குதாரர்களின் பொறுப்புகள் ஆகிய வற்றை அறிவிக்கும் ஓர் ஆவணம். எனவே இது அந்நிறுவனத்தின் மிக முக்கியமான ஆவணமாகக் கருதப்படுகிறது. இந்த அமைப்பு முறையேட்டில் நிறுவனத்தின் ஆதர வாளர்கள் (உறுப்பினர்கள்) ஒவ்வொருவரும் கையொப்பமிட வேண்டும். மேலும் தங்களுடைய பெயர்களுக்கெதிரே தாங்கள் எடுத்துக் கொள்ள உடன்பட்டிருக்கும் பங்குகளின் எண்ணிக்கையையும் குறிப்பிட வேண்டும். பங்கு மூலதனத் தொகையை குறிப்பிட வேண்டும். இந்த ஆவணத்திற்கு குறிப்பிடப்பட்ட முத்திரை கட்டணம் (stamp fees) செலுத்த வேண்டும். நிறுவனச் சட்டத்தின் பட்டியல் I–ல் உள்ள அட்ட வணை A,B,C,D மற்றும் E (Table A,B,C,D and E)–இல் நிறுவனங்களுக்கு பொருந்தும் வகையிலான மாதிரி அமைப்பு முறையேட்டுப் படிவங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. உருவாக்க உத்தேசித்திருக்கும் நிறுவனத்திற்கு அவற்றில் எது பொருத் தமாக உள்ளதோ, அதன்படி அமைப்பு முறையேடு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அமைப்பு முறையேடு குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 4** விரிவாக விளக்குகிறது. ஒரு நிறுவனத்தை பதிவு செய்வதற்காக தாக்கல் செய்யப் படும் விண்ணப்பத்துடன் இந்த அமைப்பு முறையேட்டை தாக்கல் செய்ய வேண்டும் என்று **பிரிவு 7(1)(a)** கூறுகிறது.

2. நிறுவனத்தின் பெயர் (Name of the Company):

நிறுவனத்திற்கு தக்கதொரு பெயரிடல் வேண்டும். சட்டம் அனுமதிக்காத, பொருந்தாத பெயர்களை பதிவாளர் ஏற்றுக் கொள்ளமாட்டார். மேலும் பெயரின் இறுதி யில், அது வரம்புடைய பொது நிறுவனமாயின் 'வரம்புடையது' (Limited) என்ற சொல்லையும், வரம்பற்ற தனியார் நிறுவனமாயின் 'தனியார் வரம்புடையது' (Private Limited) என்ற சொற்களையும் சேர்க்க வேண்டும்.

3. பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்ட நிறுவனத்தின் செயல்முறை விதிகள் (Articles of Association of the Proposed Company):

இது அமைப்பு முறையேட்டிற்கு அடுத்தபடியாக முக்கியமாக கருதப்படும் ஒரு ஆவணமாகும். இந்த ஆவணத்தில் நிறுவனத்தின் ஆதரவாளர்கள், தங்களது செயல் முறை விதிகளை குறிப்பிட்டு, கையொப்பம் செய்து கொடுக்க வேண்டும். நிறுவனச் சட்டத்தின் பட்டியல் I–ல் உள்ள அட்டவணை F,G,H,I மற்றும் J (Table-F,G,H,I and J) நிறுவனத்தின் மாதிரி செயல்முறை விதிகள் தரப்பட்டுள்ளன. அவற்றை நிறுவனங்கள் அப்படியே அல்லது தனக்கேற்றவாறு சட்டவரம்பிற்குட்பட்ட சில மாறுதல்களை செய்து ஏற்றுக் கொள்ளலாம். ஒரு நிறுவனத்தை மேலாண்மை செய் வதற்கான ஒழுங்குமுறை விதிகளை அதன் செயல்முறை விதிகள் வகுத்துரைக்

கின்றன. செயல்முறை விதிகள் குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 5** விரிவாக விளக்குகிறது.

ஒரு நிறுவனத்தை பதிவு செய்வதற்காக தாக்கல் செய்யப்படும் விண்ணப் பத்துடன் அமைப்பு முறையேட்டை அளிக்கும் போது, செயல்முறை விதிகள் அடங்கிய ஆவணத்தையும் இணைத்து கொடுக்க வேண்டும் என்று **பிரிவு 7(1)(a)**[1] கூறுகிறது.

4. உறுதிமொழி/விளம்புகை (Declaration) :

ஒரு நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கு தேவையான நடைமுறைகள் அனைத்தும் நிறுவனச் சட்டம் மற்றும் அதன் கீழான விதிகளின்படி சரிவரப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பின்வருவோர்கள் அதற்கென வகுத்துரைக்கப்பட்டுள் படிவத்தில் உறுதிமொழி அளிக்க வேண்டும், அதாவது விளம்ப வேண்டும். அவர்கள், (1) வழக்குரைஞர், (2) பட்டயக் கணக்காயர், (3) செலவுக் கணக்காயர், அல்லது நிறுவன செயலாளராக தொழிலாற்றுபவரும் நிறுவன உருவாக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவருமான அத்தகு நிறுவன செயலாளர், மற்றும் (4) இயக்குனர், மேலாளர் அல்லது செயலாளராக செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிடப்பட்ட நபர். இவ்வாறு **பிரிவு 7(1)(b)** கூறுகிறது.

5. ஆணையுறுதியாவணம் (Affidavit) :

அமைப்பு முறையேட்டில் கையொப்பமிட்ட ஆதரவாளர்கள் மற்றும் செயல் முறை விதிகளில் முதல் இயக்குனர்களாக பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் அனைவரும் தாங்கள் நிறுவனம் எதையும் தோற்றுவித்தல், உருவாக்குதல் அல்லது மேலாண்மை செய்தல் தொடர்பாக குற்றச் செயல் எதற்கும் தண்டிக்கப்படவில்லை என்று, அல்லது முந்தைய அய்ந்து ஆண்டுகளின் பொழுது இந்த நிறுவனச் சட்டத்தின் கீழ் அல்லது இதற்கு முந்தைய நிறுவனச் சட்டத்தின் கீழ் நிறுவனம் எதற்கும் மோசடி அல்லது தீய நடத்தை அல்லது கடமை தவறுதல் குற்றம் செய்யவில்லை என்று ஆணையுறுதி யாவணம் ஒன்றை அளிக்க வேண்டும். மேலும் அதில் நிறுவனப் பதிவுக்காக பதிவாள ரிடம் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்திலும் அளிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் சரியானவை, முழுமையானவை மற்றும் உண்மையானவை என்றும் குறிப்பிட வேண்டும் என்று **பிரிவு 7(1)(c)** கூறுகிறது.

6. தகவல் தொடர்பு முகவரி (Address for correspondence):

பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பதிவு அலுவலகம் நிறுவப்படும் வரை அந்நிறுவனத்தை தகவல் தொடர்பு கொள்வதற்கான முகவரியை பதிவுக்கான விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்று **பிரிவு 7(1)(d)** கூறுகிறது.

1. There shall be filed with the Registrar ... ... the memorandum and articles of the company duly signed by all the subscribers to the memorandum in such manner as may be prescribed - **Section 7(1)(a) of the Companies Act, 2013.**

7. ஆதரவாளர்களின் பெயர் முதலான விவரங்கள் (Particulars of name etc. of subscribers):

அமைப்பு முறையேட்டில் கையொப்பம் செய்த ஆதரவாளர்கள் ஒவ்வொரு வரின் பெயர் (பட்டப் பெயர் அல்லது குடும்பப் பெயர் உள்ளடங்கலாக), வீட்டு முகவரி, நாட்டினம் மற்றும் அத்தகு வேறு விவரங்களை அதற்கான அடையாளச் சான்றுடன் பதிவுக்கான விண்ணப்பத்துடன் தாக்கல் செய்ய வேண்டும். அந்த ஆதரவாளர் ஒரு நிறுவனமாக இருந்தால், அதன் விவரங்களைக் குறிப்பிட வேண்டும், என்று **பிரிவு 7(1)(e)** கூறுகிறது.

8. முதல் இயக்குனர்களின் பெயர் முதலான விவரங்கள் (Particulars of first directors):

நிறுவனத்தின் முதல் இயக்குனர்களாக செயல்முறை விதிகளில் குறிப்பிடப் பட்ட நபர்களின் பெயர்கள் (பட்டப் பெயர் அல்லது குடும்பப் பெயர் உள்ளடங்கலாக), இயக்குனர் அடையாள எண் (Director Identification number - DIN), வீட்டு முகவரி, நாட்டினம் மற்றும் அத்தகு வேறு விவரங்களை அதற்கான அடையாளச் சான்றுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்று **பிரிவு 7(1)(f)** கூறுகிறது.

9. முதல் இயக்குனர்கள் வேறு நிறுமங்களில் கொண்டுள்ள நலன் பற்றிய விவரங்கள் (Particulars of the interests of the first directors in other firms or body corporate):

நிறுவனத்தின் முதல் இயக்குனர்களாக செயல்முறை விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ள நபர்கள் வேறு நிறுமங்களில் அல்லது கூட்டுரு அமைப்புகளில் கொண்டுள்ள நலன்களின் விவரங்களை, நிறுவன இயக்குனர்களாக செயல்படுவதற்கான அவர் களது இசைவுக் கடிதத்துடன் தாக்கல் செய்ய வேண்டும் என்று **பிரிவு 7(1)(g)** கூறு கிறது.

10. பதிவுச் சான்றிதழ் வழங்கப்படல் (Issuance of Certificate of Incorporation):

மேற்கண்டவாறு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் அவை அனைத்தையும் பதிவு செய்து கொண்டு, வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குவார். இதனால் பதிவுக்கு உத்தேசிக்கப் பட்ட அந்நிறுவனம் இந்நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகிறது (அல்லது கூட்டுருவாக்கப்படுகிறது) என்று **பிரிவு 7(2)** கூறுகிறது.

11. நிறுவன அடையாள எண் வழங்கப்படல் (Issuance of Corporate Identity Number):

பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட தேதியில் அந்நிறுவனத்திற்கு 'நிறுவன அடையாள எண்' (Corporate identity number) ஒன்றை பதிவாளர் ஒதுக்குவார். அதுவே அந்நிறுவனத்தின் தனித்துவமான அடையாளம் (distinct identity)

ஆகும். இந்த எண் பதிவுச் சான்றிதழிலும் சேர்க்கப்படும் என்று **பிரிவு 7(3)** கூறுகிறது.

12. ஆவணங்களின் நகல்களை பேணிப் பாதுகாக்க வேண்டும் (Maintain and preserve the copies of documents):

பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களின் நகல்களை சம்பந்தப்பட்ட நிறுவனம் அது இந்தச் சட்டத்தின் கீழ் கலைக்கப்படும் வரை அதன் பதிவு அலுவலகத்தில் வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்று **பிரிவு 7(4)** விதிக்கிறது.

13. பொய்யான அல்லது தவறான விவரங்களைக் கொடுத்தலாகாது (No false or incorrect particulars):

நிறுவனமொன்றின் பதிவு தொடர்பாக நிறுவனப் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் எவற்றிலும் அதை அறிந்த நபர் ஒருவர் தகவல்கள் எது குறித்தும் பொய்யான அல்லது தவறான விவரங்களைக் கொடுத்தால் அல்லது முக்கிய தகவல்களை மறைத்தால், அவர் நிறுவனச் சட்டத்தின் பிரிவு 447–இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு ஆளாவார் என்று **பிரிவு 7(5)** எச்சரிக்கிறது.

அவ்வாறே ஒரு நிறுவனம் பதிவு செய்யப்பட்ட பிறகு, அது பொய் அல்லது தவறான தகவல்கள் வழங்கப்பட்டு அல்லது ஆவணங்களில் அல்லது உறுதி மொழியில் முக்கியச் சங்கதி அல்லது தகவல் எதையும் மறைத்து பதிவைப் பெற்றுள்ளதாக மெய்ப்பிக்கப்பட்டால், அந்நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள், முதல் இயக்குனர்கள் மற்றும் உறுதிமொழி செய்த நபர்கள் ஆகியோர் நிறுவனச் சட்டத்தின் பிரிவு 447–இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு ஆளாவார் என்று **பிரிவு 7(6)** மேலும் எச்சரிக்கிறது. இது குறித்து நிறுவனத் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் ஏதும் செய்யப்படுவதன் பேரில், அது இதனை விசாரித்து நிறுவன மேலாண்மையை ஒழுங்குமுறைப்படுத்தும் விதமாக, அல்லது உறுப்பினர்களின் பொறுப்பை வரம்பற்றதாக ஆக்கும் விதமாக, அல்லது நிறுவனங்களின் பதிவேட்டில் இருந்து அந்நிறுவனத்தின் பெயரை நீக்கும் முகமாக ஆணைகள் பிறப்பிக்கலாம் என்று **பிரிவு 7(7)** கூறுகிறது.

பதிவுச் சான்றிதழின் முக்கியத்துவம் (அல்லது) பதிவுச் சான்றிதழின் அறுதியான தன்மை :

ஒரு நிறுவனத்திற்கு மேற்கண்டவாறு பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டவுடன், அது ஒரு தனி சட்ட நபராக (separate legal person) விளங்குகிறது. மேலும் இச்சான்றிதழ், நிறுவனம் பதிவு செய்யப்படுவதற்கு பின்பற்ற வேண்டிய சட்ட முறை விதிகள் யாவும் பின்பற்றப்பட்டுள்ளன என்பதற்கு ஒரு முடிவான அல்லது அறுதியான சான்றாகும் **(conclusive evidence)**. அதன் பிறகு எக்காரணம் கொண்டும் நிறுவனம் பதிவு செய்யப்பட்டது செல்லாது எனக் குறை கூறிட முடியாது.

உதாரணமாக, அமைப்பு முறையேட்டில் கையொப்பமிடவில்லை அல்லது பொய்க் கையொப்பம் இடப்பட்டுள்ளது அல்லது நிறுவனத்தின் நோக்கங்கள் சட்ட விரோதமானவை ஆகிய காரணங்களுக்காக நிறுவனம் பதிவு செய்யப்பட்டது

செல்லாது எனக் கூற முடியாது. இது பின்வரும் ஆங்கில மற்றும் இந்திய வழக்குகளால் மேலும் தெளிவாகும்.

Peels Case (or) Peell's Case[1]

பதிவாளர் வழங்கிய பதிவுச் சான்றிதழ், அறுதியான ஒன்றா எனும் வினா மேற்கண்ட முக்கிய வழக்கில்தான் முதன்முதலாக ஆராயப்பட்டது. இவ்வழக்கின் சங்கதிகள்படி, நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில், சம்பந்தப்பட்ட ஏழு உறுப்பினர்களும் கையொப்பமிடவில்லை என்றும், இதனால் நிறுவனச் சட்டத்தின் விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும், ஆனால் இதை மீறி பதிவாளர் அந்நிறுவனத்திற்கு பதிவுச் சான்றிதழ் வழங்கிவிட்டார் என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டது.

இந்த வழக்கை ஆராய்ந்த நீதிப்பெருமகனார் கைர்ன்ஸ் (Lord Cairns) மேற்படி ஆட்சேபணை சரியானதுதான் என்று ஏற்றுக் கொண்டார். ஆனால், ஒரு முறை நிறுவனப் பதிவுச் சான்றிதழ் கொடுக்கப்பட்டுவிட்டால், அதன் பிறகு சம்பந்தப்பட்ட நிறுவனம் பதிவு செய்யப்படுவதில் நடந்துள்ள ஒழுங்கீனங்கள் குறித்து விசாரிப்பதற்கு ஏதுமில்லை என்றும், ஒழுங்கீனங்கள் குறித்து எழுப்பப்படும் வினாக்களுக்கு **நிறுவனப் பதிவுச் சான்றிதழ் என்பது ஒரு முதற்தோற்ற பதிலாக மட்டுமல்லாமல், அறுதியான பதிலாகவும் விளங்குகிறது** (The Certificate of Incorporation is not merely a prima facie answer, but a conclusive answer to such objection), என்று அவர் முடிவாகக் கூறினார். இது **'பீல்ஸ் வழக்கின் விதி'** (Rule in Peell's Case) எனப்படுகிறது. இதன் அடிப்படையில் பின்வரும் இரு இந்திய வழக்குகளில் முடிவு காணப்பட்டது.

T.V.Krishna v. Andhra Prabha (Pvt.) Ltd.[2]

இவ்வழக்கில், எக்ஸ்பிரஸ் செய்தித்தாள் நிறுவனமானது (Express News Paper Pvt. Ltd.) செய்தித்தாள்களையும், வாரப் பத்திரிக்கைகளையும் வெளியிடும் ஒரு முன்னணி தனியார் பதிப்பு நிறுவனமாகும். இந்நிலையில், பத்திரிக்கையாளர்களாக பணிபுரிபவர்களின் ஊதியம், பணி வரைமுறைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு, ஊதிய வாரியம் (Wage Board) செய்த பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டது. இப்பரிந்துரைகள், பத்திரிக்கை நிறுவனங்களின் மீது ஊதியம் தொடர்பான சில புதிய பொறுப்புகளை சுமத்துவதாக இருந்தன. இதைத் தொடர்ந்து, மேற்படி எக்ஸ்பிரஸ் செய்தித்தாள் நிறுவனமானது, தன்னுடைய நிறுவனப் பொறுப்பை (undertaking), 'ஆந்திர பிரபா' எனும் ஒரு புதிய தனியார் நிறுவனத்தை உருவாக்கி, அதற்கு விற்றுவிட்டது. ஊதிய வாரியம் விதித்துள்ள புதிய பொறுப்புகளை ஏய்த்து அதிலிருந்து தப்பிக்க வேண்டும் எனும் சட்ட விரோதமான நோக்கத்துடன் 'ஆந்திர பிரபா' எனும் நிறுவனம் உருவாக்கப்பட்டது என்றும், எனவே அந்நிறுவனத்தின் பதிவை செல்லாதது என்று அறிவிக்க வேண்டுமென்றும், ஒரு டி.வி.கிருட்டிணா என்பவர் வழக்கு தொடுத்தார். ஆனால் எந்த நோக்கங்களுக்காக 'ஆந்திர பிரபா' எனும்

1. (1887) 2 Ch App 674: 16 LT 780
2. AIR 1960 AP 123

நிறுவனம் உருவாக்கப்பட்டதோ, அவை எந்த விதத்திலும் சட்ட முரணானதாக அல்லது பொதுக் கொள்கைக்கு விரோதமானதாக இல்லை என்றும், எனவே, அந்நிறுவனம் செல்லத்தக்கவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும் அந்நிறுவனத்தின் நோக்கங்களில் சில, சட்ட முரணானதாக இருப்பினும், அதற்குரிய பதிவுச் சான்றிதழை இரத்து செய்வதன் வாயிலாக அதன் சட்ட நபரத்துவம் (legal persona) மறைந்துவிடுவதில்லை என்றும், அத்தகு நேர்வில் கூட, அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ், அது சட்ட நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் என்பதற்கு அறுதியான சான்றாகும் என்றும், அதற்கென இருக்கும் ஒரே தீர்வழி அந்நிறுவனத்தை கலைக்க விண்ணப்பம் செய்தலே ஆகும் என்றும், பதிவுச் சான்றிதழை இரத்து செய்யவியலாது என்றும் நீதிமன்றம் கருத்துரைத்தது.

Moosa Goolam Ariff v. Ebrahim Goolam Ariff[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில், உரிய வயதடைந்த நபர்கள் இருவரும், மேலும் அச்சமயத்தில் இளவர்களாக (minors) இருந்த அய்ந்து பேர்களின் சார்பாக அவர்களது காப்பாளர் (guardian) ஒருவரும் கையொப்பம் செய்தனர். இவ்வாறு கையொப்பம் செய்கையில், மேற்கண்ட அய்ந்து இளவர்களில் ஒவ்வொருவரின் சார்பாகவும் அக்காப்பாளர், தனித்தனியாக கையொப்பம் செய்தார். எனினும் பதிவாளர் மேற்படி நிறுவனத்தை பதிவு செய்து கொண்டு, அதற்குரிய பதிவுச் சான்றிதழை வழங்கிவிட்டார். இச்சான்றிதழை இல்லாநிலையது என்று விளம்ப வேண்டுமென வாதி நீதிமன்றத்தில் வழக்கிட்டார்.

இங்கு அமைப்பு முறையேட்டில் கையொப்பம் செய்தவர்களில் அய்வர், இளவர்கள். எனவே அவர்களை ஒரு நிறுவனத்தின் ஆதரவாளர்களாகக் கொள்ள முடியாது. இதனால் ஒரு பொது நிறுவனத்தை உருவாக்குவதற்குத் தேவையான ஏழு நபர்கள் இங்கு சேரவில்லை. எனவே, நிறுவனச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் சரிவர பூர்த்தி செய்யப்படவில்லை; பதிவாளர் அந்நிறுவனத்திற்கு பதிவுச் சான்றிதழை வழங்கியிருத்தல் கூடாது என்று **நீதிப்பெருமகனார் மெக்னாட்டன் (Lord Macnaghten)** கூறினார். ஆனால் அவரே தொடர்ந்து, ஒரு நிறுவனத்திற்கு வாங்கப்பட்ட பதிவுச் சான்றிதழானது, அந்நிறுவனம் முறைப்படி பதிவு செய்யப்பட்டது என்பதற்கு அறுதியாக சான்று கூறும் ஒரு ஆவணமாகும் என்று கூறினார்.

பதிவுச் சான்றிதழ் வழங்குவதின் விளைவுகள் - பிரிவு 9:

ஒரு நிறுவனம் பதிவு செய்யப்பட்டு, பதிவாளரால் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்ட பிறகுதான் ஒரு நிறுவனமே பிறப்பதாக அல்லது தோன்றுவதாக கொள்ளப்படுகிறது. அந்நிறுத்தின் வாழ்க்கை, பதிவுச் சான்றிதழ் பெறப்பட்ட தேதியிலிருந்துதான் ஆரம்பமாகிறது. இவை தவிர 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 9–இன்படி பின்வரும் முக்கிய விளைவுகள் ஏற்படுகின்றன.

1. ILR (1913) 40 Cal. 1 (P.C.)

1. பதிவுச் சான்றிதழானது நிறுவனத்தை ஒரு தனிப்பிட்ட சட்ட நபராக (separate legal person) ஆக்குகிறது.
2. நீடித்த நிலைத்து நிற்கும் தன்மையைப் (perpetual succession) பெற்றுத் தருகிறது.
3. அமைப்பு முறையேட்டில் கையொப்பம் செய்த ஆதரவாளர்கள் நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஆகிறார்கள்.
4. அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்ட பெயரில் அந்நிறுவனம் ஒரு கூட்டுரு அமைப்பாகிறது (body corporate).
5. நிறுவனச் சட்டத்தின் கீழ் கூட்டுருவான நிறுவனம் ஒன்றுக்கு இருக்கும் அனைத்து பணிகளையும் செயல்படுத்தும் ஆற்றல் பெறுகிறது.
6. நிறவனத்தின் பெயரில் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை வாங்க, வைத்திருக்க அல்லது விற்க அதிகாரம் பெறுகிறது.
7. நிறுவனத்தின் சொத்துக்கள், பங்குதாரர்களின் சொத்தாகாது.
8. ஒப்பந்தங்களில் ஈடுபட அதிகாரம் பெறுகிறது.
9. நிறுவனத்தின் பெயரில் வழக்குரைக்க அல்லது வழக்குரைக்கப்பட தகுதி பெறுகிறது.

அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின் விளைவுகள் (Effect of memorandum and articles) - பிரிவு 10:

நிறுவனம் பதிவு செய்யப்படும் பொழுது அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகள் அந்நிறுவனத்தையும் அதன் உறுப்பினர்களையும் கட்டுப் படுத்தக் கூடியதாகிறது. அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின் கீழ் நிறுவனத்திற்கு உறுப்பினரால் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் அனைத்தும் அவரால் அந்நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய கடன் பாக்கியாகிறது. இவ்வாறு 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 10** கூறுகிறது.

19. Define a Company. Can a company start its business immediately after its incorporation? Discuss. [நிறுவனத்திற்கு வரையறை தருக. ஒரு நிறுவனம் பதிவு செய்யப்பட்டவுடன் தன்னுடைய தொழிலை தொடங்க முடியுமா? விவாதிக்க.]

பதிவிற்குப் பிறகு ஒரு நிறுவனம் தனது தொழிலைத் தொடங்கும் நடைமுறை:

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 11–இன்படி ஒரு நிறுவனம் தனது தொழிலைத் தொடங்குவதற்கு முன் அதற்கான சான்றிதழ் பெற வேண்டும்.

அதற்குத் தேவையான விளம்புகைகளை தாக்கல் செய்ய வேண்டும். **தற்போது 2015-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தால்** [The Companies (Amendment) Ava, 2015] **இந்த நடைமுறை நீக்கப்பட்டுவிட்டது. மேற்படி பிரிவு 11 விடப்பட்டுவிட்டது** (Omitted).

எனினும் இது தொடர்பாக 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் மேற்படி பிரிவு 11 என்ன கூறியிருந்தது என்பதை அறிந்து கொள்வது நலம்.

அதன்படி, பங்கு மூலதனம் இல்லாத தனி நிறுவனம் அல்லது பொது நிறுவனம், பதிவுச் சான்றிதழ் பெற்றவுடனேயே தனது தொழிலைத் தொடங்கலாம். அதுபோல் தனது கடன் வாங்கும் அதிகாரத்தை உடனடியாக செயல்படுத்தலாம். ஆனால் பங்கு மூலதனம் கொண்ட பொது நிறுவனம் ஒன்று அவ்வாறு உடனடியாகத் தொழில் தொடங்க முடியாது அல்லது கடன் வாங்கும் அதிகாரத்தைச் செயற்படுத்த முடியாது. அது நிறுவனங்களின் பதிவாளரிடம் இருந்து தொழில் தொடக்கச் சான்றி தழ் பெற வேண்டும். இது 'வணிகச் சான்றிதழ்' (Trading Certificate) என்று பெரிதும் அழைக்கப்படுகிறது. பங்கு மூலதனம் கொண்ட ஒரு பொது நிறுவனம் ஒன்று தொழில் தொடக்கச சான்றிதழ் பெற பிரிவு 11–இல் கூறப்பட்டுள்ள வகைமுறைகளை நிறைவு செய்ய வேண்டும்.

குறிப்பாக நிறுவன இயக்குனர் விளம்புகை ஒன்றை நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும். அதில் அமைப்பு முறையேட்டில் கையொப்ப மிட்ட ஆதரவாளர்கள் அனைவரும் தாங்கள் எடுக்க ஒப்புக் கொண்ட பங்குகளுக் கான மதிப்பை செலுத்திவிட்டார்கள் என்று அவர் உறுதிமொழி தர வேண்டும்/விளம்ப வேண்டும். அந்த விளம்புகையை அவர் சரிபார்த்திருக்க (verified declaration) வேண்டும். அது போல் நிறுவனம் தனது பதிவு அலுவலகம் குறித்து சரிபார்த்து விளம்புகை ஒன்றை பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

இதில் தவறுகை ஏதும் புரிந்தால் நிறுவனத்திற்கு ரூ.5000 வரை நீட்டிக்க லாகும் அபராதம் விதிக்கப்படும். அதுபோல் தவறுகை புரிந்த அலுவலர் ஒவ்வொரு வருக்கும் அவரது தவறுகை தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ.1000 வரை நீட்டிக்க லாகும் அபராதம் விதிக்கப்படும்.

மேற்கண்ட விளம்புகையை நிறுவனம் பதிவுச் சான்றிதழ் பெற்றதிலிருந்து 180 நாட்களுக்குள் தாக்கல் செய்யாமல் இருந்து, அந்நிறுவனம் தொழில் அல்லது தொழிற் நடவடிக்கை எதையும் செய்யவில்லை என்று நம்புவதற்கு பதிவாளர் நியாய மான காரணம் பெற்றால், அந்நிறுவனத்தின் பெயரை நிறுவனங்களின் பதிவேட்டி லிருந்து நீக்க அவர் தனது நடவடிக்கைகளைத் தொடங்கலாம்.

-o0o-

அமைப்பு முறையேடு
[Memorandum of Association]

20. What is meant by Memorandum of Association? What are its contents? (அமைப்பு முறையேடு என்றால் என்ன? அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கங்கள் யாவை?)

(அல்லது)

2 **Explain the different particulars which must be stated in the Memorandum of Association of a Company.** (ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட வேண்டிய பல்வேறு விபரங்களை விளக்குக.)

(அல்லது)

"The Memorandum of Association is the charter of the company defining the objects and limiting the powers of the Company"-Explain ("ஒரு நிறுவனத்தின் நோக்கங்களை வரையரை செய்யும் மற்றும் அதிகாரங்களை வரம்பிற்கு உட்படுத்தும் அதிகாரப் பத்திரமே அமைப்பு முறை

யேடு" - விளக்கிக் கூறுக.)

(அல்லது)

"The Memorandum of Association is the fundamental law or charter defining the objects and limiting the powers of a Company" - Explain ("அமைப்பு முறையேடு என்பது ஒரு நிறுவனத்தின் நோக்கங்களை வரையறுப்பதும் அதன் அதிகாரங்களை வரம்பிற்குட்படுத்துவது மான அடிப்படைச் சட்டம் அல்லது பட்டயமாகும்" - விவாதிக்க.)

(அல்லது)

"The Memorandum of Associotion is the fundamental document of a compay" - Explain ("அமைப்பு முறையேடு என்பது ஒரு நிறுவனத்தின் அடிப்படைச் பட்டயமாகும்" - விளக்குக.)

(அல்லது)

What are the contents of Memorandum of Association? Discuss the procedures for alteration of clauses in Memorandum of Association. (அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள விவரங்கள் யாவை? அதன் பகுதிகளை மாற்றியமைக்க கையாள வேண்டிய முறை பற்றி விவரி.)

(அல்லது)

Explain the meaning of Memorandum of Association and its importance. (ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டின் பொருளைக் கூறி அதன் முக்கியத்துவத்தை விளக்கவும்.)

(அல்லது)

Memorandum of Association - Write short notes. (அமைப்பு முறையேடு - குறுகிய விடை எழுதுக.)

அமைப்பு முறையேடு - விளக்கம் :

அமைப்பு முறையேடு என்றால் என்னவென்று நிறுவனச் சட்டம் தெளிவாக வரையறை செய்யவில்லை. **2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 2(56)-வது பிரிவானது "முதன்முதலாக உருவாக்கப்பட்ட, அல்லது முந்தைய நிறுவனச் சட்டத்தின் அல்லது இந்தச் சட்டத்தின்படி (நிறுவனச் சட்டம், 2013) அவ்வப்போது திருத்தப்பட்டவாறான அமைப்புக் குறிப்பே, ஒரு நிறுவனத்தின் அமைப்புமுறைடாகும்"**[1] என்று மட்டும் கூறுகிறது.

1. "Memorandum" means the memorandum of association of a company as originally framed or as altered from time to time in pursuance of any previous company law or of this Act - **Section 2(56) of the Companies Act, 2013.**

எனவே, அமைப்பு முறையேட்டின் தன்மைகளையும், பயன்களையும் மற்றும் அதனால் நிறுவனத்திற்கு ஏற்படும் பொறுப்புகளையும் அறிய நமக்கு பல வழக்கு களில் நீதிமன்றம் வழங்கியுள்ள கருத்துரைகள்தாம் உதவுகின்றன. அவற்றின்படி, அமைப்பு முறையேடு என்பது, ஒரு நிறுவனத்தின் அமைப்பை (Constitution) அறிவிக்கிறது. அது நிறுவனம் என்ற மொத்த கட்டடத்தையும் வலுவாக தாங்கிப் பிடிக்கும் அஸ்திவாரமாகும். அது நிறுவனத்தின் பெயர், அதன் பதிவு அலுவலகம், நோக்கங்கள், மூலதனம் ஆகியவற்றை வகுத்துரைக்கிறது. மேலும் நிறுவனம் கொண்டுள்ள அதிகாரத்தின் பரவெல்லையை வரையறுக்கிறது. ஒரு நிறுவனம், வெளி உலகோடு கொண்டுள்ள தொடர்பையும், செயல்படும் முறையினையும் அமைப்பு முறையேடு என்ற அந்த அடிப்படை ஆவணம் தெளிவாக எடுத்தியம்புகிறது. பங்கு தாரர்களும், கடனீந்தவர்களும் மற்றும் அதனுடன் தொடர்பு கொள்ளும் அனைவரும், நிறுவனம் எவ்வகையான செயல்களில் ஈடுபடலாம் என்பதை அந்நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் (Objects) உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகிறது. இது ஒரு பொது ஆவணமாகையால் (Public Document) இதில் குறிப்பிட்டுள்ள யாவும் பொது மக்களுக்கு கொள்நிலை அறிவிக்கையாகும் (Constructive Notice).

சுருங்கக் கூறின், ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேடு, அதன் செயல் பாட்டு எல்லையை வரையறை செய்கின்றது. இவ்வேடு, அச்சிடப்பட்டு பத்தி பத்தியாக பிரிக்கப்பட்டுப் பத்திகளுக்கு எண்கள் வழங்கப்பட்டிருக்கும். அமைப்பு முறையேட்டில், நிறுவனத்தின் ஆதரவாளர்கள் (Subscribers) கையொப்பமிட வேண்டும். **(பிரிவு 7 (1)(a))**. அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்படாத எச்செயலையும் நிறுவனம் செய்ய இய லாது. அவ்வாறு செய்தால், அது வரம்பு மீறிய (Ultra vires) செயலாகக் கருதப்படும். எனவே அமைப்பு முறையேட்டை ஒரு நிறுவனத்தின் அடிப்படை ஆவணம் என்றும் அடிப்படை பட்டயம் (fundamental document or charter of the company) என்றும் அழைப்பதில் எள்ளளவும் மிகையில்லை.

அமைப்பு முறையேட்டின் நோக்கம் (Purpose of Memorandum of Association):

ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேடு பின்வரும் இரண்டு முக்கிய நோக்கங்களை நிறைவு செய்வதாக உள்ளது. அவை (1) பங்குதாரர்கள் முதலீடு செய்யும் தொகைகளை நிறுவனம் பயன்படுத்தும் விதம் பற்றி அமைப்பு முறையேட்டின் வாயிலாக பங்குதாரர்கள் அறிந்து கொள்ளலாம். மேலும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் நோக்கங்களை அறிந்து கொள்வதன் வாயிலாக அது செய்யவிருக்கும் முதலீட்டில் எத்தகு இடர்பாடுகள் எழலாம் என்பதை பங்குதாரர்கள் அமைப்பு முறையேட்டின் வாயி லாக ஆய்ந்தறியலாம். (2) நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் வெளியார்கள் நிறு வன நோக்கங்களை அமைப்பு முறையேடு வாயிலாக அறிந்து கொள்வதால், தாங்கள் அதனுடன் ஈடுபட விழையும் ஒப்பந்த உறவு அந்நோக்கங்களுடன் இணங்கியதாக உள்ளதா என்பதை அறிந்து கொள்ள அமைப்பு முறையேடு அவர்களுக்கு உதவுகிறது.

அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கம் அல்லது அதில் குறிப்பிடப்பட வேண்டிய பல்வேறு விபரங்கள்:



ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறை யேடு என்பது, பின்வரும் ஆறு பகுதிகளைக் (Clauses) கொண்டது. அவை குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 4** விளக்குகிறது.

1. பெயர்ப் பகுதி (Name Clause):

அமைப்பு முறையேட்டின் முதற் பகுதி பெயர்ப் பகுதியாகும். இதில் நிறுவனம் எந்தப் பெயரில் தொழில் நடத்த விரும்புகிறதோ அந்த பெயரை குறிப்பிட வேண்டும். நிறுவனம் பொது நிறுவனமாக இருந்தால் "வரையறுக்கப்பட்டது" **(Limited)** என்ற சொல்லுடனும், தனி நிறுவனமாக இருந்தால் "தனியார் வரையறுக்கப்பட்டது" **(Private Limited)** என்ற சொல்லுடனும் அதன் பெயர் முடிய வேண்டும், என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 4(1)(a)** கூறுகிறது.

அந்நிறுவனத்தின் பெயர், **பிரிவு 4(2)(a)**–இன்படி, இச்சட்டத்தின்படி அல்லது இதற்கு முந்தைய நிறுவனச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டு தற்போது இயக்கத்தில் இருக்கும் மற்றொரு நிறுவனத்தின் பெயரை ஏறத்தாழ ஒத்ததாக (identical) அல்லது அது போல் காட்சியளிப்பதாக (resembles) இருக்கக் கூடாது. ஏனெனில் ஒரே பெயரில் பல நிறுவனங்கள் செயல்பட்டால் அது பொது மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தும்.

மேலும் ஒரு நிறுவனம் தனது பெயரை பயன்படுத்துவதால் அது அச்சமயம் செயல்விளைவில் உள்ள சட்டம் எதனின் கீழும் அத்தகு பெயர் குற்றமொன்றை உருவாக்குவதாக இருத்தலாகாது. மேலும் மைய அரசின் அபிப்பிராயத்தில் ஒரு நிறு வனத்தின் பெயர் விரும்பத்தகாத (undesirable) ஒன்றாக இருத்தலாகாது என்று **பிரிவு 4(2)(b)(i)** மற்றும் **(ii)** கூறுகிறது.

ஒரு நிறுவனம் தன் பெயரில் பின்வருவனவற்றைக் கொண்டிருந்தால் அதை பதிவாளர் பதிவுக்கு ஏற்க மறுப்பார். அதாவது அந்நிறுவனம் பதிவு செய்யப்படாது என்று **பிரிவு 4(3)** கூறுகிறது. அதன்படி, ஒரு நிறுவனம் தனது பெயரில் மைய அரசு, மாநில அரசு அல்லது மைய அரசால் அல்லது மாநில அரசால் அச்சமயம் செயல்விளை வில் உள்ள சட்டம் எதனின் கீழும் உருவாக்கப்பட்ட உள்ளூர் அதிகார அமைப்பு, கழகம் அல்லது அமைப்புடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புடையதாக அல்லது அதன்

ஆதாரமாகப் பெற்றதாக மனதில் ஒரு உணர்வையாருக்கும் ஏற்படுத்தக் கூடாது என்று **பிரிவு 4(3)(a)** கூறுகிறது. அதுபோல் வருத்துறைக்கப்படலாகும் அத்தகு கொலை அல்லது கொற்றொடரை அந்நிறுவனம் தனது பெயரில் கொண்டிருக்கக் கூடாது என்று **பிரிவு 4(3)(b)** கூறுகிறது. அவ்வாறு கொண்டிருக்க வேண்டுமானால் அதற்கு மைய அரசின் முன் அனுமதி தேவை.

2. நிறுவனத்தின் பதிவு அலுவலகப் பகுதி (Registered Office Clause):

இந்த இரண்டாம் பகுதியில், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பதிவு அலுவலகம் அமைந்திருக்கும் மாநிலத்தின் பெயரைக் குறிப்பிட வேண்டும் என்று பிரிவு **பிரிவு 4(1)(b)** கூறுகிறது. எனினும் பதிவு அலுவலகத்தின் சரியான முகவரியை ஒரு நிறுவனம் குறிப்பிட வேண்டியதில்லை. இதை நிறுவனம் கூட்டுருவாக்க (பதிவான) தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் படிவம் எண். 18-இல் நிறுவனங்களின் பதிவாளர் பூர்த்தி செய்து கொள்வார்.

ஒரு நிறுவனம் பதிவான தேதியிலிருந்து அல்லது அது தனது தொழிலை தொடங்கிய தேதியிலிருந்து இவற்றில் எது முதலில் வருகிறதோ அந்தத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவு அலுவலகம் ஒன்றை அதற்கு முகவரியிட்டு வரும் அனைத்து தகவல் தொடர்புகளையும் பெறுவதற்கு ஒப்புகை செய்வதற்கும் ஏதுவாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்று **பிரிவு 12(1)** கூறுகிறது. எனினும் நடைமுறையில் அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளை பதிவுக்காக நிறுவனங்கள் தாக்கல் செய்யும் பொழுது அவை தனது பதிவு அலுவலக முகவரியையும் பெரும்பாலும் பூர்த்தி செய்து கொடுத்து விடுகின்றன.

3. நோக்கப் பகுதி (Object Clause):

இந்த மூன்றாம் பகுதியில் நிறுவனத்தின் நோக்கங்களைக் குறிப்பிட வேண்டும். அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள அனைத்துப் பகுதிகளிலும் இந்த நோக்கப் பகுதி மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் அவற்றை மேம்படுத்தும் விடயங்கள் அனைத்தையும் பற்றி இப்பகுதியில் தெளிவாக குறிப்பிட வேண்டும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலையும் செயலையும் தவிர, வேறு எதையும் செய்ய நிறுவனத்திற்கு அதிகாரம் கிடையாது. அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் சட்டத்திற்கு புறம்பானதாகவோ, இந்திய நிறுவனச் சட்டத்திற்கு விரோதமானதாகவோ இருத்தல் கூடாது.

முந்தைய 1956-ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தில் இருந்த நோக்கப் பகுதியின் வகைப்பாட்டை தற்போதைய 2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் மேலும் எளிமையாக்கியுள்ளது என்றால் அது மிகையன்று. 2013-இன் புதிய சட்டத்தின் **பிரிவு 4(1)(c)**-யின்படி, இந்த நோக்கப்பகுதியில் நிறுவனத்தின் நோக்கங்களை இரண்டு வகைப்பாட்டின் கீழ் அமைப்பு முறையேட்டில் குறிப்பிட வேண்டும். அவை,-

(i) ஒரு நிறுவனம் எந்த நோக்கங்களுக்காக கூட்டுருவாக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது,

(ii) அந்நோக்கங்களை மேம்படுத்துவதற்குத் தேவையென கருதப்படும் விடயம் எதுவும்

நோக்கப் பகுதியை அமைக்கும் பொழுதே அதை விளக்கமாகவும் தெளிவாக வும் அமைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் நோக்கப் பகுதியை மாற்றுதல் அவ்வளவு சுலபமல்ல. நோக்கப் பகுதியில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய நோக்க மாக நாம் ஏற்கனவே கண்ட பின்வரும் இரண்டைக் குறிப்பிடலாம். அவை,

(1) பங்குதாரர்களுக்கு அவர்களுடைய பணம் எந்தெந்த தொழில்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரியப்படுத்துவதாகும்.

(2) நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் வெளி நபர்களுக்கு நிறுவனம் எந்தெந்த வகையான செயல்களில் சட்டப்படி ஈடுபடலாம் என்பதை தெரியப்படுத்துவதாகும்.

4. பொறுப்புப் பகுதி (Liability Clause):

அமைப்பு முறையேட்டின் இந்த நான்காவது பகுதியில் நிறுவன உறுப்பினர் களின் பொறுப்பு வரம்புடையதா (Limited) அல்லது வரம்பற்றதா (Unlimited) என்பதை நிறுவனம் குறிப்பிட வேண்டும் என்று **பிரிவு 4(3)(d)** கூறுகிறது. மேலும் பின்வருவனவற்றையும் குறிப்பிட வேண்டும். அவை,–

(i) ஒரு நிறுவனம் பங்குகளால் வரையறுக்கப்பட்டதாக இருப்பின் (in the case of a company limited by shares), தனது உறுப்பினர்கள் தங்கள் நிறுவனத்தில் கொண்டுள்ள பங்குகளின் மீது செலுத்தப்படாத தொகை ஏதும் இருப்பின் அந்த அளவு மட்டும் அவர்கள் பொறுப்பு வரம்புடையது; மற்றும்

(ii) ஒரு நிறுவனம் பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்டதாக இருப்பின் (in the case of a company limited by guarantee), உறுப்பினர் ஒவ்வொருவரும்

(A) அவர் உறுப்பினராக உள்ள பொழுது அல்லது அவர் உறுப்பின ராக இல்லாதவராகி ஓராண்டிற்குள் அந்நிறுவனம் கலைக்கப் படும் நிகழ்வில் நிறுவனத்தின் பொறுப்புகளுக்கு அல்லது நேர்விற்கேற்ப அவர் ஒரு உறுப்பினராக இல்லாதவராவதற்கு முன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட கடன்கள் மற்றும் பொறுப்புகளுக்கு பங்களிக்க பொறுப்பேற்கும் தொகையின் அளவு; மற்றும்

(B) நிறுவனக் கலைப்பிற்கான செலவுத் தொகைகள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்கும் மற்றும் பங்களிப்பவர் களின் உரிமைகளை அவர்களுக்குள் சரி செய்து கொள்வதற் காகவும் பங்களிக்க பொறுப்பேற்கும் தொகையின் அளவு.

5. மூலதனப் பகுதி (Capital Clause) :

இந்த அய்ந்தாவது பகுதியின் வாயிலாக நிறுவனத்தின் மொத்த மூதனம் எவ்வளவு என்பதை அறியலாம்.

ஒரு நிறுவனம் பங்கு மூலதனம் ஒன்றைக் கொண்டிருக்கும் நேர்வில் (in the case of a company having a share capital), அது எவ்வளவு பங்கு மூலதனத்துடன் பதிவு செய்யப்படவுள்ளது என்றும், அது எவ்வளவு நிலையான மதிப்புள்ள (fixed amount) பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றும், அமைப்பு முறையேட்டில் ஆதரவாளர்களாக (subscribers) கையொப்பம் செய்தவர்கள் எடுக்க உடன்பட்ட பங்குகளின் எண்ணிக்கையையும் குறிப்பிட வேண்டும் என்று **பிரிவு 4(3) (e) (i)** கூறுகிறது. அதேநேரம் ஆதரவாளர்கள் எடுத்துக் கொள்ளும் பங்குகளின் எண்ணிக்கை ஒரு பங்குக்கும் குறைவாக இருத்தலாகாது என்றும் இப்பிரிவு வரையறுக்கிறது. அதாவது ஆதரவாளர்களில் ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு பங்காவது எடுத்துக் கொள்ளல் அவசியம்.

6. ஆதரவாளர்கள் ஒப்பப் பகுதி அல்லது பங்கொப்பப் பகுதி (Subscription Clause or Association Clause) :

அமைப்பு முறையேட்டின் இந்த ஆறாவது பகுதியில், நிறுவனத்தின் ஆதரவாளர்கள் அனைவரும் சேர்ந்து, தங்களது அமைப்பை ஒரு நிறுவனமாகப் பதிவு செய்வதற்குண்டான தங்கள் விருப்பத்தை தெரிவித்து, ஒவ்வொருவரும் தம் பெயருக்கெதிராக தாம் ஏற்றுக்கொள்ளும் பங்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும் என்று **பிரிவு 4(3)(e)(ii)** கூறுகிறது. மேலும் இதில் ஆதரவாளர்களின் பட்டப்பெயர் அல்லது குடும்பப் பெயர் உள்ளடங்கலான பெயர், வீட்டு முகவரி, நாட்டினம் பற்றிய விவரங்களையும் மற்றும் அத்தகு வேறு விவரங்களையும் அவர்களது ஆளறி நிரூபணத்துடன் (identify proof) குறிப்பிட வேண்டும், என்று பிரிவு 7(1)(e)] கூறுகிறது.

1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டப்படி ஒரு அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட வேண்டிய பகுதிகள் மேற்சொன்னவை ஆகும். எனினும் தற்போதைய 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனச் சட்டப்படி **'ஒரு நபர் நிறுவனம்' (One Person Company)** என்பது நிறுவனங்களின் வகைகளில் ஒன்றாகச் சேர்கிறது. எனவே அந்த ஒரு நபர் நிறுவனம் தனது அமைப்பு முறையேட்டில் பின்வரும் பகுதியை சேர்க்க வேண்டும். (இது மற்ற வகை நிறுவனங்களுக்கு பொருந்தாது.)

ஒரு நபர் நிறுவனம் தனது அமைப்பு முறையேட்டில், அந்த நிறுவனத்தை உருவாக்கும் ஒரே ஆதரவாளர் இறக்கும் நேர்வில், அடுத்து அந்த நிறுவனத்தை யார் எடுத்து நடத்துவது என்பதற்காக மற்றொரு நபரின் பெயரை (வாரிசாக) நியமனம் (நாமினி) செய்ய வேண்டும். அவரது பெயர் விவரங்களை அவர் அமைப்பு முறையேட்டில் குறிப்பிட வேண்டும். வேறு வகையில் சொன்னால், ஒரு நபர் நிறுவனத்தின் ஆதரவாளர் இறக்கும் நிகழ்வில், அந்நிறுவனத்தின் உறுப்பினராகும் நபரின் பெயரை அமைப்பு முறையேட்டில் குறிப்பிட வேண்டும் என்று **பிரிவு 4(3)(f)** கூறுகிறது.

அமைப்பு முறையேட்டின் படிவம் (Form of Memorandum of Association):

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பட்டியல் I–ல் உள்ள அட்டவணை A,B,C,D மற்றும் E (Table A,B,C,D and E)–இல் நிறுவனங்களுக்கு பொருந்தும் வகையிலான மாதிரி அமைப்பு முறையேட்டுப் படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உரு வாக்க உத்தேசித்திருக்கும் நிறுவனத்திற்கு அவற்றில் எது பொருத்தமாக உள்ளதோ, அதன்படி அமைப்பு முறையேடு அமைக்கப்பட வேண்டும் என்று **பிரிவு 4(6)** கூறுகிறது.

மேற்கண்டதில் அட்டவணை A பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனங் களுக்கும், அட்டவணை B பங்கு மூலதனம் கொண்டிராமல் பொறுப்புறுதியால் வரை யறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கும், அட்டவணை C பங்கு மூலதனம் கொண்ட பொறுப் புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கும், அட்டவணை D பங்கு மூலதனம் கொண்டிராமல் வரம்பற்ற நிறுவனங்களுக்கும், அட்டவணை E பங்கு மூலதனம் கொண்ட வரம்பற்ற நிறுவனங்களுக்கும் பொருந்தக் கூடிய அமைப்பு முறையேட்டின் படிவத்தை தருகிறது.

அமைப்பு முறையேட்டின் முக்கியத்துவம்:

1. அமைப்பு முறையேடு "நிறுவனத்தின் அடிப்படை ஆவணமாக" கருதப் படுவதால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரவரம்பிற்கு உட்பட்டுதான் நிறுவனம் செயல்பட வேண்டும்.
2. எந்நிறுவனமும் அமைப்பு முறையேட்டின்றி பதிவு செய்யப்பட மாட்டாது. இதன் அடிப்படையில்தான் ஒரு நிறுவனமே தொடங்கப்படுகிறது.
3. பங்குதாரர்கள் மற்றும் கடன் கொடுத்தவர்கள், நிறுவனத்தின் அனுமதிக்கு உட்பட்ட நடவடிக்கையின் எல்லையை அறிந்து கொள்ள உதவுகிறது.
4. அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சரத்துகளுக்கு புறம்பாக எச்செயலையும் செய்வதற்கு நிறுவனத்திற்கு அதிகாரம் கிடையாது என இந்த ஆவணம் தெரிவிக்கிறது.
5. அமைப்பு முறையேடு நிறுவனத்திற்கு உயிர் கொடுக்கும் ஆவணமென புகழப்படுகிறது.

முடிவுரை:

ஒரு நிறுவனத்திற்கு அமைப்பு முறையேடு என்பது எவ்வளவு முக்கியத் துவம் வாய்ந்தது என்பது மேற்கண்டவற்றை காணுறும் பொழுது தெளிவாகிறது. எனவே, "**அமைப்பு முறையேடு என்பதை ஒரு நிறுவனத்தின் நோக்கங்களை வரையறுப்பதும் அதன் அதிகாரங்களை வரம்பிற்குட்படுத்துவதுமான அடிப் படைச் சட்டம் அல்லது பட்டயமாகும்**" என்று கூறுவதில் தவறொன்றுமில்லை.

21. Can the Memorandum of Association of a Company be altered? (ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டினை மாற்ற முடியுமா ?)

(அல்லது)

How and to what extent can the memorandum of association of a company be altered? (நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டினை எப்படி எந்த அளவிற்கு மாற்றலாம்?)

(அல்லது)

What are the contents of Memorandum of Association? Discuss the procedures for alternation of clauses in Memorandum of Association. (அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள விவரங்கள் யாவை? அதன் பகுதிகளை மாற்றியமைக்க கையாள வேண்டிய முறை பற்றி விவரி.)

ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேடு என்பது மாற்ற முடியாத, திருத்த இயலாத ஒரு பட்டயமாக முன்பு கருதப்பட்டு வந்தது. ஆனால் நாளடைவில் இதனால் பல இன்னல்கள் ஏற்பட்டன. எனவே இன்று இந்நிலை பெரிதும் மாறிவிட்டது என்றே கூற வேண்டும். பின்வரும் விதங்களில் ஒரு அமைப்பு முறையேட்டை மாற்ற முடியும். அதாவது, ஒரு நிறுவன அமைப்பு முறையேட்டின் ஆறு பகுதிகளில் மூலதனப்பகுதி நீங்கலான பிற பகுதிகளை ஒரு நிறுவனம் மாற்றிக் கொள்ள முடியும். இதற்கு பிரிவு 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 13** வகை செய்கிறது.

1. ஒரு நிறுவனம் பிரிவு 13–இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறையை பின்பற்றி சிறப்பு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் வாயிலாக தனது அமைப்பு முறையேட்டின் வகைமுறைகளை (பகுதிகளை) மாற்றலாம் என்று **பிரிவு 13(1)** கூறுகிறது.

2. ஒரு நிறுவனத்தின் பெயரில் செய்யப்படும் மாற்றமானது நாம் ஏற்கனவே கண்ட 4–ஆம் பிரிவின் உட்பிரிவுகள் (2) மற்றும் (3) கூறப்பட்டுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டதாகும். இது மைய அரசின் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் இல்லாமல் செயல்விளைவுக்கு வராது என்று **பிரிவு 13(2)** கூறுகிறது. எனினும், நிறுவனத்தின் வகைகளில் ஒரு வகையில் இருந்து மற்றொரு வகைக்கு மாறுவதன் விளைவாக நிறுவனத்தின் பெயரிலிருந்து 'தனியார்' (Private) என்ற சொல்லை விட்டுவிடுவதற்காகவோ, அல்லது சேர்த்துக் கொள்வதற்காகவோ மட்டும் செய்யப்படும் மாற்றம் எனில், அதற்கு மைய அரசின் ஒப்புதல் தேவையில்லை என்று மேற்படி பிரிவின் கீழான வரம்புரை வாசகம் கூறுகிறது.

3. மேற்கண்டவாறு செய்யப்படும் நிறுவனப் பெயர் மாற்றத்தை நிறுவனப் பதிவேட்டில் பழைய பெயர் உள்ள இடத்தில் புதிய பெயரை பதிந்து கொண்டு, அப்புதிய பெயருடன் புதிதாக பதிவுச் சான்றிதழ் ஒன்றை பதிவாளர் வழங்குவார். இதனால் பெயர் மாற்றம் முழுமை பெற்றதாகி, செயல்விளைவுக்கு வருகிறது என்று **பிரிவு 13(3)** கூறுகிறது.

4. நிறுவனத்தின் பதிவு அலுவலக இடத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவது தொடர்பாக அதன் அமைப்பு முறையேட்டில் செய்யப்படும் மாற்றத்திற்காக மைய அரசிடம் விண்ணப்பித்து அதன் ஒப்புதல் பெற வேண்டும். தவறினால் அந்த மாற்றம் செயல்விளைவுக்கு வராது. அதாவது செல்லாது என்று **பிரிவு 13(4)** கூறுகிறது.

5. மேற்கண்ட பதிவு அலுவலக இட மாற்றத்திற்கான விண்ணப்பத்தை மைய அரசு 60 நாட்களில் முடித்து ஆணை பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு ஆணை பிறப்பிப்பதற்கு முன், மேற்படி இட மாற்றமானது நிறுவனத்திற்கு கடனீந்தவர்கள், கடனீட்டுப் பத்திரம் வைத்துள்ளவர்கள் மற்றும் நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்ட இதர நபர்களின் இசைவைப் பெற்றுள்ளது என்று மைய அரசு மனநிறைவடைய வேண்டும். மேலும் நிறுவனத்திற்குள்ள கடன்கள் மற்றும் கடப்பாடுகளை அடைப்பதற்கு அது போதுமான ஏற்பாடுகளை செய்துள்ளதா என்பது குறித்தும், அல்லது அவ்வாறு அடைப்பதற்கு போதுமான பிணையம் அளித்துள்ளதா என்பது குறித்தும் மைய அரசு மன நிறைவடைய வேண்டும் என்று **பிரிவு 13(5)** கூறுகிறது.

6. தனது அமைப்பு முறையேட்டில் மாற்றம் ஏதும் செய்யும் ஒரு நிறுவனம், (அ) மேற்படி பிரிவு 13(1)–இன் கீழ் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின் நகலையும், (ஆ) செய்யப்பட்ட மாற்றமானது நிறுவனத்தின் பெயர் தொடர்புடையதாக இருப்பின் அதற்கு மேற்படி பிரிவு 13(2)–இன் கீழ் மைய அரசு அளித்த ஒப்புதலின் நகலையும் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும் என்று **பிரிவு 13(6)** கூறுகிறது.

7. அதுபோல் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதற்காக அமைப்பு முறையேட்டை மாற்றியிருந்தால், அதற்கு ஒப்புதல் அளித்து மைய அரசு பிறப்பித்த ஆணையின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றை அந்நிறுவனம் சம்பந்தப்பட்ட மாநிலங்களில் உள்ள நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும். எந்த மாநிலத்திற்கு நிறுவனத்தின் பதிவு அலுவலகம் மாற்றப்பட்டதோ அந்த மாநிலத்திற்கான நிறுவனங்களின் பதிவாளர் அத் தகு மாற்றத்தைச் சுட்டிக்காட்டி புதிய பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குவார் என்று **பிரிவு 13(7)** கூறுகிறது.

8. ஒரு நிறுவனம் தனது திட்ட அறிவிப்பின் வாயிலாக பொது மக்களிடமிருந்து தொகை ஏதும் பெற்றிருந்து, அவ்வாறு பெற்ற தொகையில் பயன்படுத்தப் படாத தொகை எதையும் இன்னும் வைத்திருந்தால், அது எந்த நோக்கங்களுக்காக மேற்கண்டவாறு தொகை பெற்றதோ அந்த நோக்கங்களை, சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றாமல், மாற்றுதல் ஆகாது என்று **பிரிவு 13(8)** கூறுகிறது.

9. நிறுவனத்தின் நோக்கங்கள் தொடர்பாக அமைப்பு முறையேட்டில் செய்யப்பட்ட மாற்றம் எதையும் அந்நிறுவனம் பதிவாளரிடம் பதிவு செய்தல் வேண்டும். இப்பதிவிற்கு, பிரிவு 13(6)(a)–இன்படி சிறப்புத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவாளர் சான்றளித்தல் வேண்டும் என்று **பிரிவு 13(9)** கூறுகிறது.

10. அமைப்பு முறையேட்டில் செய்யப்பட்ட மாற்றம் எதுவும் இந்த பிரிவு 13–

இன் வகைமுறைகளின்படி பதிவு செய்யப்படும் வரை செயல்விளைவுக்கு (அதாவது அமலுக்கு) வராது என்று **பிரிவு 13(10)** கூறுகிறது.

11. பங்கு மூலதனத்தைக் கொண்டிராத பொறுப்புறுதியால் வரையறுக்கப் பட்ட நிறுவனமொன்றின் நேர்வில், நிறுவனத்தின் பிரிக்கத்தக்க இலாபங்களில் பங் கெடுத்துக் கொள்ளத்தக்க வகையில் ஒரு உறுப்பினராக அல்லாமல் வேறு வகையில் நபர் எவருக்கும் உரிமை வழங்கக் கருதும் வண்ணம் அமைப்பு முறையேட்டில் செய்யப் படும் மாற்றம் எதுவும், இல்லாநிலையதாகும் என்று **பிரிவு 13(11)** கூறுகிறது.

அமைப்பு முறையேடு ஆறு பகுதிகளைக் கொண்டது என்று நாம் முன்பே கண்டோம். அவற்றில் மாற்றங்கள் செய்வதற்கான நடைமுறை குறித்து பிரிவு 13 கூறுவதை மேலே விரிவாகக் கவனித்தோம். இவ்வாறு ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் செய்யப்படும் மாற்றம் ஒவ்வொன்றையும் அந்த அமைப்பு முறையேட்டின் நகல் ஒவ்வொன்றிலும் குறிப்பிட வேண்டும் என்றும், இதில் தவறுகை செய்தால் அந்நிறுவனத்துக்கும் அதன் அலுவலர் ஒவ்வொருவருக்கும், அவ்வாறு மாற்றம் செய் யப்படாமல் வெளியிடப்பட்ட அமைப்பு முறையேடு ஒவ்வொன்றுக்கும் ரூ.1000 என்ற வீதத்தில் அபராதம் விதிக்கப்படும் என்று **பிரிவு 15** எச்சரிக்கிறது.

22. How can the name of a Company be altered? (ஒரு நிறுவனத்தின் பெயரை எங்ஙனம் மாற்றலாம் ?)

(அல்லது)

State the restrictions imposed on the choice of a name for a limited company and the modes to change such name? (வரையறுக் கப்பட்ட ஒரு நிறுவனம் பெயரைத் தேர்ந்தெடுப்பதின் மீது சுமத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும், அப்பெயரை மாற்றம் செய்யும் முறைகளையும் கூறுக.)

(அல்லது)

State the restrictions imposed on the choice of a name for a limited company. Discuss the manner in which the name of a limited company is changed and the word 'limited' removed from its name. (வரையறுக்கப்பட்ட ஒரு பங்கமைப்பு பெயரை தேர்ந்தெடுப்பதன் மீதுள்ள கட்டுப்பாடுகளை எடுத்துக் கூறுக. பங்கமைப்பு ஒன்றின் பெயர் மாற்றும் முறை மற்றும் 'வரையறுக்கப்பட்டது' என்னும் சொல்லை அதன் பெயரில் இருந்து எடுக்கும் முறை ஆகியவற்றை விவாதிக்க.)

ஒரு நிறுவனம் தனது பெயரில் செய்யும் மாற்றம் (Change or Alteration in the of name of a Company)- பிரிவு 13:

ஒரு நிறுவனம் தன்னுடைய பெயரை, தனது சிறப்புத் தீர்மானம் (Special resolution) ஒன்றின் மூலம், மைய அரசின் ஒப்புதல் (approval) பெற்று மாற்றி விடலாம் என்றும், அவ்வாறு மைய அரசு அளிக்கும் ஒப்புதல் எழுத்துப்பூர்வமானதாக

இருக்க வேண்டும் என்றும் 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 13 (1) மற்றும் (2)** கூறுகிறது. (இதை நாம் சென்ற வினாவின் விடையில் ஏற்கனவே கண்டோம்.)

நிறுவனத்தின் பெயரின் இறுதியில் 'தனியார்' எனும் சொல்லை சேர்த்து அல்லது நீக்கி செய்யப்படும் மாற்றம்:

எனினும், நிறுவனத்தின் பெயரில் பின்வரும் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு, மைய அரசின் ஒப்புதல் தேவையில்லை. அஃதாவது, நிறுவனச் சட்ட வகைமுறைகளின்படி ஒரு பொது நிறுவனம் தனியார் நிறுவனமாக மாறும் பொழுது, அப்பொது நிறுவனப் பெயரின் இறுதியில் 'தனியார்' **(Private)** எனும் சொல்லை சேர்த்துக் (addition) கொள்ள வேண்டும்; அதுபோல், ஒரு தனியார் நிறுவனம் பொது நிறுவனமாக மாறும் பொழுது, அத்தனியார் நிறுவனப் பெயரின் இறுதியில் இருக்கும் 'தனியார்' எனும் சொல்லை நீக்க (deletion) வேண்டும். இவ்வாறு மேற்கண்ட நேர்வுகளில் 'தனியார்' எனும் சொல்லை சேர்த்தும், நீக்கியும் நிறுவனத்தின் பெயரில் செய்யப்படும் மாற்றத்திற்கு, மைய அரசின் ஒப்புதல் தேவையில்லை; நிறுவனத்தின் சிறப்பு தீர்மானம் ஒன்றே போதும். [பிரிவு 13(2)–ன் கீழான வரம்புரை **(Proviso)** வாசகம்]. (இதையும் நாம் சென்ற வினாவின் விடையில் கண்டோம்).

இனி நிறுவனத்தின் பெயரைத் திருத்துவதற்குண்டான நடைமுறை பற்றி காண்போம்.

நிறுவனத்தின் பெயரைத் திருத்துதல் (Rectification of name of Company) - பிரிவு 16:

பொதுவாக ஒரு நிறுவனம் ஒரு குறிப்பிட்ட பெயருடன் பதிவு செய்யப்பட்ட பிறகு அப்பெயரில் திருத்தம் கொண்டு வருவது என்பது இயலாது. எனினும் ஒரு நிறுவனம் தனது முதல் பதிவின் பேரில் அல்லது புதியதொரு பெயரால் செய்யப்படும் பதிவின் பேரில் கவனக்குறைவாகவோ அல்லது வேறுவிதமாகவோ, அது எந்தப் பெயரால் பதிவாகின்றதோ அந்தப் பெயரானது,

(அ) இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது இதற்கு முந்தைய நிறுவனச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு இயக்கத்தில் இருக்கும் மற்றொரு நிறுவனத்தின் பெயரை ஒத்திருப்பதாக அல்லது அதுபோல் நெருக்கமாக காட்சியளிப் பதாக உள்ளது என்று மைய அரசு அபிப்பிராயப்பட்டால், அது அந்நிறுவனத்தின் பெயரை மாற்றிக் கொள்ளுமாறு ஏவுரைக்கலாம். அந்நிறுவனமும் நேர்விற்கேற்றவாறு தனது பெயரை அல்லது புதிய பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும். இதற்காக சாதாரண தீர்மானம் ஒன்றை அந்நிறுவனம் நிறைவேற்றிய பிறகு, மைய அரசு அவ்வாறு ஏவுரைத்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அந்நிறுவனம் தனது பெயரை மாற்ற வேண்டும் என்று **பிரிவு 16(1) (a)** கூறுகிறது.

(ஆ) வணிக முத்திரைச் சட்டம், 1999–இன் கீழ் பதிவு செய்யப்பட்ட

வணிக முத்திரை ஒன்றை ஒத்திருப்பதாக அல்லது அதுபோல் நெருக்கமாக காட்சியளிப்பதாக உள்ளது என்று அந்த வணிக முத்திரையின் பதிவு பெற்ற உரிமையாளர் ஒருவரால், இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது இதற்கு முந்தைய நிறுவனச் சட்டத்தின் கீழ் கூட்டுருவாக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது பெயர் மாற்றம் செய்யப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மைய அரசிடம் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரில், அவ்வணிக முத்திரை ஏற்கனவே இருக்கும் வணிக முத்திரையை ஒத்திருப்பதாக அல்லது அதுபோல் நெருக்கமாக காட்சியளிப்பதாக உள்ளது என்று மைய அரசு அபிப்பிராயப்பட்டால், நிறுவனம் தனது பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அதற்கு மைய அரசு ஏவுரைக்கலாம். அந்நிறுவனமும் நேர்விற்கேற்றவாறு தனது பெயரைஅல்லது புதிய பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும். இதற்காக சாதாரண தீர்மானம் ஒன்றை அந்நிறுவனம் நிறைவேற்றிய பிறகு, மைய அரசு அவ்வாறு ஏவுரைத்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அந்நிறுவனம் தனது பெயரை மாற்ற வேண்டும் என்று **பிரிவு 16(1) (b)** கூறுகிறது.

பெயர் மாற்றத்தின் பதிவும் அதன் விளைவும் (Registration of change of name and effect thereof):

மேற்கண்ட பிரிவு 16(1)–இன் இரண்டு உட்பிரிவுகளின் கீழ் ஒரு நிறுவனம் தனது பெயரை மாற்றிக் கொள்ளுமிடத்து அல்லது புதிய பெயரை பெறுமிடத்து, அத்தகு மாற்றம் ஏற்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் அது தனது பெயர் மாற்றம் குறித்து நிறுவனங்களின் பதிவாளரிடம், அதற்காக மைய அரசு பிறப்பித்த ஆணையுடன் அறிவிப்பு கொடுக்க வேண்டும். இதையடுத்து பதிவுச் (கூட்டுருவாக்கச்) சான்றிதழ் மற்றும் அமைப்பு முறையேட்டில் தேவையான மாற்றங்களை பதிவாளர் செய்வார் என்று **பிரிவு 16(2)** கூறுகிறது.

மைய அரசு மேற்கண்டவாறு ஏவுரைத்து பிறப்பிக்கும் ஆணை எதையும் கடைப்பிடிப்பதில் நிறுவனமொன்று தவறுகை புரிந்தால், அத்தவறுகை தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ.1000 என்ற வீதத்தில் அந்நிறுவனத்திற்கு அபராதம் விதிக்கப்படும். மேலும் அதற்குத் தொடர்புடைய அலுவலர் ஒவ்வொருவருக்கும் ரூ.5000த்திற்கும் குறையாத ஆனால் ரூபாய் ஒரு இலட்சம் வரை நீட்டிக்கலாகும் ஒரு தொகை அபராதமாக விதிக்கப்படும் என்று **பிரிவு 16(3)** கூறுகிறது.

மாற்றம் செய்யப்பட்ட அல்லது புதிய பெயருடன் பதிவாளர் அளிக்கும் பதிவுச் சான்றிதழ் தேதியிலிருந்து அம்மாற்றம் செயல்விளைவுக்கு வரும். ஒரு நிறுவனத்தின் பெயர் மாற்றம் அந்நிறுவனத்தின் உரிமைகளையும், கடமைகளையும் பாதிக்காது. அதுபோல் நிறுவனம் தொடர்ந்துள்ள அல்லது நிறுவனத்தின் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகள் நிறுவனப் பெயர் மாற்றத்தின் காரணமாக குறைபாடுடைய தாக ஆகிவிடாது. அவ்வழக்கு நடவடிக்கைகளை நிறுவனத்தின் புதிய பெயரிலேயே தொடரலாம். புதிய பெயரை ஒரு நிறுவனம் அடைந்த பிறகு, அது தனது பழைய பெயரில் வழக்கு நடவடிக்கைகளை நீதிமன்றத்தில் தொடர முடியாது. எனினும் பழைய பெயரில் ஒரு நிறுவனம் பெற்ற தீர்ப்பாணையை, தனது புதிய பெயரில் நிறைவேற்றக்

கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம்.

23. By what method and to what extent may a Company alter its objects as stated in the Memorandum of Association? (அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை எந்த அளவிற்கு மற்றும் எம்முறையில் ஒரு நிறுவனம் மாற்றலாம் ?)

(அல்லது)

State the requirements of the Companies Act, 2013 as regards Memorandum of Association. What is the procedure for altering the objects of a company ? (அமைப்பு முறையேடு தயாரிப்பதற்கு தேவையான உபகரணங்களைப் பற்றி நிறுவனச் சட்டம், 2013ல் எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது? ஒரு நிறுவனத்தின் நோக்கங்களை மாற்றம் செய்வதற்கு வேண்டிய நடைமுறைகள் யாவை ?)

(அல்லது)

Enumerate the contents of Memorandum of Association. When can a company change the objects of its Memorandum of Association? State the procedure for such a change briefly. (அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கங்களை விவரிக்க. எப்பொழுது ஒரு நிறுவனம் தனது அமைப்பு முறையேட்டின் நோக்கங்களை மாற்றலாம்? அப்படிப்பட்ட ஒரு மாற்றத்திற்கான நடைமுறையை சுருக்கமாகக் குறிப்பிடுக.)

(அல்லது)

Discuss the importance of the Memorandum of Association and examine to what extent can a company alter its objects as stated in the Memorandum of Association. (அமைப்பு முறையேட்டின் முக்கியத்துவத்தை விளக்கி, அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை ஒரு நிறுவனம் எந்த அளவிற்கு மாற்றலாம் என்பதை ஆராய்க.)

முன்னுரை:

ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டின் மூன்றாம் பகுதியாக வருவது, நோக்கப் பகுதியாகும் (Object Clause). அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள ஆறு பகுதிகளிலும் மிக முக்கியமானதாக இப்பகுதி கருதப்படுகிறது. ஒரு நிறுவனத்தின் நோக்கங்கள், செயல்வரம்புகள் ஆகியன பற்றி இப்பகுதியில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலையும், செயலையும் தவிர வேறு எதையும் செய்ய நிறுவனத்திற்கு அதிகாரம் கிடையாது. எனவே, நோக்கப் பகுதியை அமைக்கும்பொழுது அதை விளக்கமாகவும், தெளிவாகவும் ஒரு நிறுவனம் அமைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் நோக்கப் பகுதியை மாற்றுவது என்பது அவ்வளவு எளிதல்ல.

எந்த அளவிற்கு நோக்கங்களை மாற்றலாம்?

அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை மாற்றுவதற்கு வழிவழியாக சில வரம்புகள் நிறுவனச் சட்ட வரலாற்றில் கூறப்பட்டு வருகின்றன. இதற்குட்பட்டுதான் அம்மாறுதல் அமைய வேண்டும் அல்லது இந்த அளவிற்குத்தான் நோக்கங்களில் மாறுதலைச் செய்ய வேண்டும். அவ்வரம்புகள் பின்வருமாறு :

1. நிறுவன வியாரத்தை இன்னும் அதிக சிக்கனமாகவும், அதிக திறமையுடனும் செய்வதற்காகவும்;
2. புதிய மற்றும் மேம்பாடான வழிகளில் நிறுவனத்தின் முக்கிய நோக்கத்தை அடைவதற்காகவும்;
3. நிறுவனத்தின் வியாபாரம் பரவியுள்ள இடத்தை மேலும் விரிவாக்கவும் அல்லது மாற்றவும்;
4. நிறுவனத்தின் வியாபாரத்துடன் எளிதாகவும் இலாபகரமாகவும் நடத்துவதற்குரிய எந்த வியாபாரத்தையும் மேற்கொள்வதற்காகவும்;
5. அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களில் எவற்றையாவது கட்டுபடுத்துவதற்காகவும் அல்லது கை விட்டுவிடுவ தற்காகவும் (abandon);
6. நிறுவனம் தான் மேற்கொண்ட பணிகளில் எந்த ஒரு பகுதியையாவது அல்லது முழுவதையும் விற்பதற்காகவும் அல்லது கழித்து விட்டுவிடுவ தற்காகவும் (dispose of);
7. வேறொரு நிறுவனத்துடன் இணைவதற்காகவும் (Amalagamation).

மாற்றம் செய்வதற்கான முறை (Method of alteration) (அல்லது) மாற்றத்திற்கான நடைமுறை (Procedure for alteration) :

அமைப்பு முறையேட்டின் பகுதிகளை (பங்கு மூலதனப்பகுதி நீங்கலாக) ஒரு நிறுவனம் தனது சிறப்புத் தீர்மானம் (Special resolution) ஒன்றின் வாயிலாக மாற்றலாம் என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 13(1)** கூறுகிறது. அந்த வகையில் ஒரு நிறுவனத்தின் நோக்கப்பகுதியையும் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் வாயிலாக ஒரு நிறுவனம் மாற்றலாம். பழைய 1956–ஆம் ஆண்டு சட்டத்தில் இதற்கென வகுக்கப்பட்டிருந்த விரிவான நடைமுறையை இந்த 2013–ஆம் ஆண்டு புதிய நிறுவனச் சட்டம் வெகுவாகச் சுருக்கிவிட்டது எனலாம்.

எனினும் நோக்கப்பகுதியை மாற்ற விழையும் நிறுவனத்தின் மீது பின்வரும் வரம்பொன்றை **பிரிவு 13(8)** சுமத்துகிறது. அதன்படி,–

ஒரு நிறுவனம் தனது **திட்ட அறிவிப்பின்** வாயிலாக பொது மக்களிடமிருந்து தொகை ஏதும் பெற்றிருந்து, அவ்வாறு பெற்ற தொகையில் பயன்படுத்தப்படாத

தொகை எதையும் இன்னும் வைத்திருந்தால், அது எந்த நோக்கங்களுக்காக மேற் கண்டவாறு தொகை பெற்றதோ அந்த நோக்கங்களை அந்நிறுவனம் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றாமல், மாற்றுதலாகாது என்று **பிரிவு 13(8)** கூறுகிறது. மேலும் பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் அப்பிரிவு விதிக்கிறது.

(i) அத்தகு தீர்மானம் தொடர்பான விவரங்களை செய்தித்தாள்களில் (ஆங்கில செய்தித்தாளில் ஒன்றும், வட்டார மொழி செய்தித்தாளில் ஒன்றும் என இரண்டு செய்தித்தாள்களில்) அந்நிறுவனம் வெளியிட வேண்டும். குறிப்பாக அச் செய்தித்தாள்கள் அந்நிறுவனத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் சுற்றுக்கு (சர்குலேசன்) விடப்படுவதாக இருக்க வேண்டும். மேலும் அவ்விவரங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கென தனியாக இணையதளம் ஏதும் இருந்தால், அதில் மேற்படி மாற்றத்தை நியாயப்படுத்துவதற்கான காரணங்களைச் சுட்டிக்காட்டி அந்நிறு வனம் பார்வைக்கு வைக்க வேண்டும்.

(ii) இம்மாற்றத்திற்கு (சிறப்புத் தீர்மானத்தின் போது) இணங்காத பங்கு தாரர்கள் இதிலிருந்து வெளியேற அவர்களுக்கு அதற்கான வாய்ப்பு ஒன்றை, பங்குப் பரிவர்த்தனை வாரியத்தால் குறித்துரைக்கப்படவுள்ள ஒழுங்குமுறைகளின்படி கட்டுப் பாடு கொண்டிருக்கும் தோற்றுவிப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் கொடுக்க வேண் டும்.

மேற்கண்ட **பிரிவு 13(8)**–இன் கீழான சிறப்புத் தீர்மானத்தை **அஞ்சல் வாக் கெடுப்பு** (Postal ballot) மூலம் நிறைவேற்றலாம் என்றும், அத்தீர்மானத்திற்கான அறிவிப்பில் பின்வரும் விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும் என்றும் **நிறுவனங்கள் (கூட்டுருவாக்கல்) விதிகள், 2014-இன் [The Companies (Incorporation) Rules, 2014] 32(1)-வது விதி** கூறுகிறது. அவை,

(அ) திட்ட அறிவிப்பின் வாயிலாக பெற்ற மொத்த தொகை;

(ஆ) திட்ட அறிவிப்பில் கூறப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்ட மொத்தத் தொகை;

(இ) திட்ட அறிவிப்பின் மூலம் திரட்டப்பட்ட (பெற்ற) தொகையில் பயன் படுத்தப்படாமல் உள்ள தொகை;

(ஈ) நிறுவனத்தின் நோக்கங்களில் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றத்தின் விவரங்கள்;

(உ) நோக்கங்களின் திருத்தம் அல்லது மாற்றத்திற்கான அதிகாரவரம்பு;

(ஊ) புதிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை;

(எ) செய்ய உத்தேசிக்கப்பட்ட மாற்றமானது நிறுவன வருமானங்கள் மற்றும் ரொக்க செலவின் மீது எந்த அளவு நிதிநிலை விளைவை ஏற்படுத்தும் என்பதற்காக செய்யப்பட்ட மதிப்பீடு;

(ஏ) உத்தேசிக்கப்பட்ட தீர்மானத்தின் மீது விவரமறிந்து முடிவொன்றை

எடுப்பதற்கு உறுப்பினர்களுக்கு அவசியமாக உள்ள தொடர்புடைய தகவல்கள் வேறு எதுவும்;

(ஐ) இதில் அக்கறையுடைய நபர் எவரும், நிறைவேற்றப்படவுள்ள தீர் மானத்திற்கான அறிவிப்பு நகலை எங்கே பெறலாம் என்பதற்குண் டான இடம்

இதையடுத்து நோக்கங்களை மாற்றுவதற்காக நிறைவேற்றப்படவுள்ள சிறப்புத் தீர்மானம் ஒவ்வொன்றின் விவரங்களையும் கொடுத்து அஞ்சல் வாக்கெடுப் புச் சீட்டு அறிவிப்புகளை பங்குதாரர்களுக்கு நிறுவனம் அனுப்ப வேண்டும் (dispatch of postal ballot notices to shareholders). மேலும் அவ்விவரங்கள் குறித்து விளம்பரமும் வெளியிட வேண்டும் என்று **விதி 32(2)** கூறுகிறது.

மேலும் அந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்திலும் காட்சிக்கு வைக்க வேண்டும் என்று **விதி 32(3)** கூறுகிறது.

மாற்றத்தை பதிவு செய்தலும் விளைவும்:

நோக்கங்கள் பகுதியில் செய்யப்பட்ட மாற்றத்தை பதிவு செய்வது தொடர் பாக 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் கூறும் தொடர்புடைய வகைமுறைகளை பின்வருமாறு காண்போம். (அமைப்பு முறையேட்டில் செய்யப்படும் மாற்றங்கள் குறித்த பொதுவான சில வகைமுறைகள், நோக்கப்பகுதியை மாற்றுவதற்கான மற்றும் பதிவு செய்வதற்கான நடைமுறைக்கும் பொருந்தும் என்பதை கவனத்தில் கொள்க.)

நிறுவனத்தின் நோக்கங்களை மாற்றுவதற்காக சிறப்புத் தீர்மானம் நிறை வேற்றப்பட்ட பின் அதன் நகல் ஒன்றை அந்நிறுவனம் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டுமென்று நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 13(6)(a)** கூறுகிறது, மேலும், நிறுவனத் தின் நோக்கங்கள் தொடர்பாக அமைப்பு முறையேட்டில் செய்யப்பட்ட மாற்றம் எதையும் அந்நிறுவனம் பதிவாளரிடம் பதிவு செய்தல் வேண்டும் என்றும், இப்பதிவிற்கு, பிரிவு 13(6)(a)–இன்படி சிறப்புத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவாளர் சான்றளித்தல் வேண்டும் என்றும் **பிரிவு 13(9)** கூறுகிறது. அமைப்பு முறையேட்டில் செய்யப்பட்ட மாற்றம் எதுவும் மேற்கண்டவாறு பதிவு செய்யப் படும் வரை செயல்விளைவுக்கு (அதாவது அமலுக்கு) வராது என்று **பிரிவு 13(10)** கூறுகிறது. பங்கு மூலதனத்தைக் கொண்டிராத பொறுப்புறுதியால் வரையறுக்கப் பட்ட நிறுவனமொன்றின் நேர்வில், நிறுவனத்தின் பிரிக்கத்தக்க இலாபங்களில் பங் கெடுத்துக் கொள்ளத்தக்க வகையில் ஒரு உறுப்பினராக அல்லாமல் வேறு வகையில் நபர் எவருக்கும் உரிமை வழங்கக் கருதும் வண்ணம் அமைப்பு முறையேட்டில் செய்யப் படும் மாற்றம் எதுவும், இல்லாநிலையதாகும் என்று **பிரிவு 13(11)** கூறுகிறது.

முந்தைய முக்கிய வழக்குகள்:

அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை எந்த அளவிற்கு மாற்றலாம் என சில வரம்புகளை நிறுவனச் சட்டம் விதித்துள்ளதை முன்பே கண்டோம். அதனை மேலும் தெளிவாக்கும் வண்ணம் உள்ள சில முக்கிய

வழக்குகளை பின்வருமாறு காண்போம்.

In Re Scientific Poultry Breeder's Association[1]

இவ்வழக்கில், ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில், அதன் மேலாளர் களுக்கு ஊதியம் வழங்குவது தடை செய்யப்பட்டிருந்தது. பின்னிட்டு, அவர்களுக்கு ஊதியம் வழங்கும் வகையில் அது மாற்றப்பட்டது. இவ்வாறு ஊதியம் வழங்கப்படு வதன் காரணமாக, அம்மேலாளர்கள் தங்கள் நிறுவனத்தின் மேலாண்மையை மேலும் திறம்பட நடத்துவதற்கு வாய்ப்பு உள்ளது எனும் அடிப்படையில், மேற்கண்ட மாற்றத்தை நீதிமன்றம் அனுமதித்தது.

In Re Indian Mechanical Gold Extracting Co.[2]

ஒரு நிறுவனம் தனது வியாபாரம் பரவியுள்ள இடத்தை மேலும் விரிவாக்க வும் அல்லது மாற்றவும், அது தனது அமைப்பு முறையேட்டின் நோக்கங்களை மாற்றிக் கொள்ளலாம். மேற்கண்ட வழக்கில், ஒரு நிறுவனம் தனது வியாபாரத்தை இந்தியாவில் மட்டுமே நடத்துதல் வேண்டும் என்று தனது அமைப்பு முறையேட்டில் வரையறுத்துக் கொண்டிருந்தது. எனினும் அது பின்னிட்டு தனது வியாபாரத்தை மற்ற இடங்களிலும் விரிவுபடுத்த எண்ணி, தனது பெயரில் உள்ள 'இந்தியன்' (Indian) எனும் சொல்லை நீக்கிக் கொண்டது. இவ்வாறு நீக்கி செய்து கொண்ட மாற்றம் செல்லத்தக்கதே என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. ஏனெனில் முன் கண்ட வாறு ஒரு நிறுவனம் தனது வியாபாரத்தை விரிவுபடுத்தும் பொருட்டு, தனது அமைப்பு முறையேட்டில் மாற்றங்களைச் செய்து கொள்ள சட்டம் அனுமதிக்கிறது.

In Re Patent Tyre Co.[3]

இதில் ஒரு டயர் நிறுவனம் தனது தொழிலோடு, வங்கித் தொழிலையும் (Banking Business) மேற்கொள்ளும் வகையில் தனது அமைப்பு முறையேட்டினை மாற்றி அமைத்தது. வங்கித் தொழிலை, தனது டயர் தொழிலுடன் இணைத்து நடத்துவது அந்நிறுவனத்திற்கு எளிதாகவும், இலாபகரமாகவும் இருந்தது. எனவே நீதிமன்றம் அம்மாற்றத்தை ஏற்றுக் கொண்டது.

In Re Cyclists Touring Club[4]

இவ்வழக்கில், இரண்டு சக்கர மிதி வண்டி ஓட்டுபவர்களை (Cyclists) விபத்துகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு ஒரு சங்கம் (Club) ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது நான்கு சக்கர வண்டி ஓட்டுபவர்களையும் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கத்தில், தனது அமைப்பு முறையேட்டை மாற்றியது. ஆனால் இங்கு இரண்டு சக்கர வண்டி ஓட்டுபவர்களை பாதுகாத்தல் என்பதே, நான்கு சக்கர வண்டி ஓட்டுபவர் களால் அவர்களுக்கு விபத்து ஏதும் ஏற்படக் கூடாது எனும் நோக்கத்தின் அடிப்படை

1. (1933) Ch. 277
2. (1891) 3 Ch. 536
3. (1923) 2 Ch. 222
4. (1907) 1 Ch. 269

யில்லாமல் என்றும், இவ்வாறிருக்கும் பொழுது, நான்கு சக்கர வண்டி ஓட்டுபவர்களை உத்தரவாதுகாக்க அமைப்பு முறையேட்டை மாற்றியது செல்லாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. இங்கு மேற்கண்ட இரண்டு நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது.

Juggilal Kamlapat Jute Mills v. Registrar of Companies[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனம், ஆரம்பத்தில் 'சணல்' வியாபாரம் செய்வதற்காக உருவாக்கப்பட்டது. அது பின்னிட்டு, தனது மேற்படி வியாபாரத்துடன், 'இரப்பர்' வியாபாரத்தையும் நடத்துவதற்காக தனது அமைப்பு முறையேட்டை மாற்றிக் கொண்டது. இது செல்லத்தக்கதே என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

In Re Bhuoria Bros.[2]

ஏற்கனவே ஒரு வியாபாரத்தை செய்து வரும் நிறுவனமொன்று தொடங்கும் மற்றொரு புதிய வியாபாரமானது, வியாபாரக் கொள்கை அல்லது வணிக சாத்தியக் கூறுகளின் அடிப்படையில், ஏற்கனவே உள்ள வியாபாரத்துடன் இணைத்து செய்வதற்கு வசதியாக அல்லது அனுகூலமாக இல்லையென்றால், அப்புதிய வியாபாரத்தைத் தொடங்கும் பொருட்டு அந்நிறுவனம் தனது அமைப்பு முறைபேட்டில் செய்த மாற்றத்தை அனுமதித்தல் கூடாது என்று மேற்படி வழக்கில் கல்கத்தா உயர் நீதிமன்றம் நிலைநிறுத்தியது.

In Re Asiatic Insurance Co. Ltd.[3]

இவ்வழக்கின் சங்கதிகள்படி ஒரு நிறுவனம் காப்பீட்டு (இன்சூரன்ஸ்) வணிகத்தைச் செய்து வந்தது. அதை பின்னிட்டு மைய அரசு எடுத்துக் கொண்டு விட்டது. எனவே அந்நிறுவனம் தனது தொழிலை பொறியியல் பணிகள் மற்றும் ஏற்று மதி இறக்குமதிக்கு மாற்றிக் கொண்டது. இதற்காக அது தனது நோக்கங்களில் செய்த திருத்தம் அனுமதிக்கப்பட்டது.

Nagaisuree Tea Co. v. Ram Chand Karnani[4]

இவ்வழக்கில் ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்துடன் அல்லது கூட்டுரு அமைப்புடன் ஒருங்கிணையும் (amalgamation) நோக்கத்திற்காக அதன் நோக்கங்களில் செய்யப்படும் மாற்றம் அனுமதிக்கத்தக்கதே என்று கூறப்பட்டது.

In Re Rajendra Industries (P) Ltd.,[5]

இவ்வழக்கில் ஒரு நிறுவனத்தின் நிதிநிலை வலுவாக இருந்து, அது தனது வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவற்காக நிறுவன நோக்கப்பகுதியில் செய்யும் மாற்றமொன்றுக்கு அந்நிறுவனத்தின் கடனீந்தவர்கள் மற்றும் அதன் பங்குதாரர்கள்

1. (1967) 37 Comp Cas. 20: (1966) LJ 292 (All)
2. AIR 1957 Cal. 593
3. (1965) 2 Comp. LJ 24 Punj.
4. (1966) 2 Comp. LJ 208
5. (1957) 2 Comp. LJ 144 Mad.

ஆட்சேபணை ஏதும் தெரிவிக்காத பொழுது அத்தகு மாற்றத்தை அனுமதித்தலே முறையாகும் என்று சென்னை உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது.

பொதுவாக பெரும்பாலான வழக்குகளில் ஒரு நிறுவனம் தனது நோக்கங் களை மாற்றுவதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை அந்நோக்கங்கள் மாறிச் சென்று விடுவதைத் தடுப்பதற்காக நிறுவனங்களின் பதிவாளர் ஆட்சேபணை தெரிவிப்பார். ஆனால் இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்திற்கு செல்லும் போது அது நிறுவன நோக்கங்களை மாற்றுவதற்காக பங்குதாரர்கள் எடுத்த ஏகமனதாக முடிவில் தலை யிடுவதில்லை. இங்கு நீதிமன்றம் பெரிதும் கவனிப்பதெல்லாம், 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 13–இல் கூறப்பட்டுள்ள வரம்புகள் மற்றும் 2014–ஆம் ஆண்டு நிறுவனங்கள் (கூட்டுருவாக்கல்) விதிகளின் 32–வது விதியில் வகை செய்யப்பட்டுள்ள நடைமுறைகள் முறையே நிறைவு செய்யப்பட்டுள்ளனவா மற்றும் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பது மட்டுமே.

24. Discuss fully the doctrine of Ultra vires in relation to companies with the help of decided cases. (நிறுவனங்களைப் பொறுத்து 'வரம்பு மீறல் கோட்பாடு' என்பதனை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் உதவியைக் கொண்டு விவாதிக்க.)

(அல்லது)

Discuss the doctrine of Ultra vires. What reforms have been made under English Law in this doctrine? (வரம்புமீறல் கோட்பாட்டை விவாதிக்க. இக்கோட்பாட்டில் ஆங்கிலச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் யாவை?)

(அல்லது)

Examine the 'doctrine of ultra vires'. What are the suggestion for the abrogation of the doctrine? (அதிகாரவரம்பு மீறல் கோட்பாட்டை ஆராய்க. அக்கோட்பாட்டினை நீக்கம் செய்ய உமது யோசனைகள் என்ன?)

(அல்லது)

"The doctrine of ultra vires serves no useful purpose in the interpretation of the object clause of a company"- Critically examine the validity of this statement. ("வரம்பு மீறல் கோட்பாடு என்பது ஒரு நிறுவனத்தின் நோக்கப்பகுதிக்கு பொருள் விளக்கமளிப்பதில் எந்த பயனையும் ஏற்படுத்தவில்லை"- இந்த வாசகத்தின் செல்லுதன்மை குறித்து திறனாய்வு செய்க.)

(அல்லது)

Examine critically the doctrine of ultra vires and its utility in the modern context. (வரம்பு மீறல் கோட்பாட்டையும், அதன் பயன்பாட்டையும்

நவீன பொருளில் ஆராய்க.)

(அல்லது)

Explain the doctrine of ultra vires with reference to leading cases. (வரம்பு மீறல் கோட்பாட்டினை முக்கிய வழக்குகள் துணை கொண்டு விளக்கவும்.)

(அல்லது)

Doctrine of Ultra vires - Write short notes. (வரம்பிகந்த கோட்பாடு - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Ultra vires - Write short notes. (வரம்புமீறல் கோட்பாடு - குறுகிய விடை எழுதுக.)

வரம்பு மீறல் கோட்பாடு - விளக்கம் :

ஆரம்பத்தில் தோன்றிய நிறுவனங்கள், மிகப் பெரிய கூட்டாண்மைகளைப் போல் (Legal Partnership) செயல்பட்டன. அப்போது உறுப்பினர்களின் பொறுப்பு வரம்பற்றதாக (Unlimited) இருந்தது. ஆனால் நாளடைவில் உறுப்பினர்களின் பொறுப்பு கட்டுப்படுத்தப்பட்டு, வரம்புக்குட்பட்ட நிறுவனங்கள் (Limited Companies) பெருவாரியாக தோன்ற ஆரம்பித்தன. செயற்கை நபரான நிறுவனம் இயக்குனரால் மனம் போனபடி பொறுப்பற்ற வகையில் இயக்கப்பட்டு உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் தொல்லை ஏற்படுத்தாமல் இருக்க, நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை மீறி எச்செயலையும், ஒரு நிறுவனம் செய்யக்கூடாது என்றும், அப்படியும் மீறி எதையாவது செய்தால் அச்செயல் முற்றிலும் செல்லாதவையாகும் என்றும், அவை நிறுவனத்தையும் எள்ளளவும் கட்டுப் படுத்தாது என்றும் ஒரு மிகச் சிறந்த கொள்கையை நீதிமன்றங்கள் உருவாக்கின. இக்கொள்கை '**வரம்பு மீறல் கோட்பாடு**' எனப்பட்டது. சட்டம் உருவாக்கிய நிறுவனங்களும் (Statutory Companies), நிறுவனச் சட்டப்படி பதிவான நிறுவனங்களும் (Registered Companies) இக்கோட்பாட்டிற்கு உள்ளாகின்றன.

வரம்பு மீறல் கோட்பாடு செயல்படும் முறை :

வரம்பு மீறல் கோட்பாடு செயற்படும் முறை குறித்து முதன்முதலில் பின்வரும் மிக முக்கியமான வழக்கில் ஆங்கில நீதிப்பெருமகனார்கள் அவையால் (House of Lords) விளக்கப்பட்டது.

Ashbury Railway Carriage and Iron Co. Ltd., v. Riche[1]

இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள நிறுவனம் பிரயாணிகள் இரயில் பெட்டிகள்

1. (1875) 44 LJ Exch 185 : (1875) LR 7 HL 653

மற்றும் உதிரிபாகங்கள் உற்பத்தி செய்து விற்பது, வாடகைக்கு விடுவது, மேலும் இயந்திரப் பொறியியல் மற்றும் பொதுப்படை ஒப்பந்தங்களை (general contracts) மேற் கொள்வது முதலான தொழில்களைச் செய்வதை தனது அமைப்பு முறையேட்டின் நோக்கமாக கொண்டிருந்தது. இந்நிறுவனம் ரிச்சி (Riche) என்பவருக்கு பெல்ஜியம் நாட்டில் இருப்புப்பாதை அமைக்கப் பொருளுதவி செய்ய ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகு, அதை நிறைவேற்ற மறுத்தது. இதனால் மேற்படி ரிச்சி, நிறுவனம் தன்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறுவதாகக் கூறி வழக்குத் தொடுத்தார். ஆனால் அந் நிறுவனமோ, அத்தகைய ஒப்பந்தம் தனது வரம்பிற்கு அப்பாற்பட்டதாகையால் அது செல்லாது என்று முறையிட்டது. அதை மறுத்து, 'பொதுப்படை ஒப்பந்தங்கள்' என்பதன் கீழ், அந்நிறுவனம் எல்லா விதமான இயந்திரப் பொறியியல் ஒப்பந்தங்களையும் செய்யலாமென ரிச்சி எதிர்வாதம் புரிந்தார். இரு தரப்பினரின் வாதங்களையும் கேட்டு ஆராய்ந்த பின்னர், நிறுவனம் எல்லாவித ஒப்பந்தங்களையும் மேற்கொள்ள முடியாது என்றும், அது இரயில் வண்டி பாகங்கள் சம்பந்தப்பட்ட பொதுப்படையான ஒப்பந்தங் களைத்தாம் மேற்கொள்ள முடியும் என்றும் முடிவு செய்து, வழக்கிற்கு அடிப்படையாக அமைந்த ஒப்பந்தம், அந்நிறுவன நோக்கத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டது என்று இங்கிலாந்தின் நீதிப் பெருமகனார்கள் அவை (House of Lords) தீர்ப்பளித்தது.

Attorney-General v. The Great Eastern Railway Co.[1]

மேற்கண்ட Ashbury வழக்கில் கூறப்பட்ட வரம்பு மீறல் கோட்பாட்டை அத்தகு ஒவ்வொரு வழக்கிலும் பின்பற்ற வேண்டியது அவசியம் என்றும், எனினும் ஒரு நிறுவனத்தின் செயல், அதன் முக்கிய நோக்கத்தை (Main objects) அடைவற்கு உண்டான ஒரு உடனிகழ்வு (incidental) நோக்கமாக நியாயமான வகையில் கருதப் பட முடியும் எனில் அதற்கு வரம்பு மீறல் கோட்பாட்டை பொருத்துதல் கூடாது என்றும், அதனை நியாயமான முறையில் பொருள் கொண்டு நீதிமன்றங்கள் அனுமதிக்க வேண்டும் என்றும் நீதிப்பெருமகனார்கள் அவை கருத்துரைத்தது.

Forest v. Manchester etc., Rly. Co.[2]

மேற்படி வழக்கில் கருத்துரைக்கப்பட்டபடி, ஒரு நிறுவனம் தனது முக்கிய நோக்கத்தின் விளைவான உடனிகழ்வு செயலும் (incidental) அதன் காரணமாகச் செய்யும் செயலும்(consequential) சட்டத்திற்குட்பட்டதாகும். இது மேற்படி வழக்கில் விளக்கப்பட்டது. அதாவது ஒரு இரயில் நிறுவனம், பயணத்திற்காக (ferry) நீராவிப் படகுகள் விடுவதையும் தனது நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், அந் நிறுவனம் அப்படகுகளை, பயணம் இல்லாத நாட்களில் சுற்றுலாவிற்கும் (excursion trips) பயன்படுத்தியது. அந்நிறுவனத்தின் இச்செய்கை, அதன் முக்கிய நோக்கத் தின் விளைவான உடனிகழ்வு செயலாகையால் (incidental), அது நிறுவனத்தின் வரம்பிற்குட்பட்டது என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

1. (1880) 5 AC 473 : (1874 - 80) ALL ER Rep. Ext 1459 Lord Selborne at p. 478
2. (1861) 54 ER 803

Evans v. Brunner, Mond & Co. Ltd.,[1]

இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று, அறிவியற் கல்வியையும், ஆராய்ச்சியையும் மேம்படுத்தும் பொருட்டு, 1,00,000 பவுண்டு பணத்தை (£ 1,00,000) பல்கலைக்கழகங்களுக்கும், அறிவியற் கழகங்களுக்கும் அளிக்க முன்வந்தது. ஆனால் ஈவான்ஸ் என்பவர் இவ்வாறு அந்நிறுவனம் அளிக்க முடியாது என்றும், இவ்வாறு அளிப்பது நிறுவனத்தின் நோக்கமல்ல என்றும் வழக் கிட்டார். ஆனால், அந்நிறுவனத்தின் மேற்படி செயல், அந்நிறுவனம் ஒரு இரசாயனப் பொருள் உற்பத்தியாளராக தொடர்ந்து மேம்பட்ட நிலையில் இருப்பதற்கு அவசியமாக உள்ளதால், நிறுவனத்தின் செய்கை அதன் அமைப்பு முறையேடு கூறும் நோக்கத்தின் வரம்பிற்குட்பட்டதே என்று தீர்ப்புரைத்தது.

Eastern Counties Rly. Co. v. Hawkes[2]

இவ்வழக்கில், ஒரு நிறுவனம், தனது நோக்கங்களை அடைவதற்கு எவ் வகையிலும் உடனிகழ்வானதாக அல்லது தேவையானதாக இல்லாத ஒரு விடயத்திற் காக, தனது நிதியின் எப்பகுதியையும், அதனால் பெரும் பலன் ஏற்படும் என்றாலுமே கூட, எவருக்கும் வழங்குதல் கூடாது எனும் ஒரு மாறுபட்ட கருத்து கூறப்பட்டது.

London County Council v. Attorney General[3]

இவ்வழக்கில் டிராம் வண்டி (Tramways) விடும் உரிமை பெற்ற இலண்டன் மாவட்ட மன்றம் (County Council), பேருந்து போக்குவரத்தையும் மேற்கொண்டது. ஆனால் பேருந்து வண்டிகளை விடுவது, டிராம் வண்டி விடுவதோடு தொடர்பு கொண்டது அல்ல என்று கூறி, அது நிறுவனத்தின் வரம்பு மீறிய செயல் என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. மேலும், இவ்வாறு பேருந்து விடுவது, மாவட்ட மன்றத்தின் டிராம் வண்டி விடும் தொழிலுக்கு மிகவும் வெற்றிகரமாக இருக்கக் கூடியதாக இருப்பி னும், அதை மேற்கண்ட 'நோக்கத் தொடர்பின்மை காரணத்தால்' இங்கு பரிசீலித்தல் கூடாது என்றும் மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

இந்தியாவில் வரம்பு மீறல் கோட்பாடு :

இந்தியாவிலும் வரம்புமீறல் கோட்பாடு பயன்பட்டுள்ளதை பின்வரும் வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பிலிருந்து அறியலாம்.

A.Lakshmanaswami Mudaliar v. Life Insurance Corporation of India[4]

இவ்வழக்கில், நிறுவனத்தின் பணத்தை அறம் அல்லது நன்நோக்கம் எதற்கும் அல்லது பொதுமக்கள் நலனுக்காக அல்லது பயன்தரும் நோக்கத்திற்காக

1. (1921) 1 Ch 359 : LJ Ch 294
2. (1855) 10 ER 928 at p. 934 : (1855) 5 HL Cas 331
3. (1902) AC 165
4. AIR 1963 SC 1185 : (1963) 33 Comp Cas 420 : (1962) 32 Comp Cas 1022

பயன்படுத்த நிறுவன இயக்குனர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. இதன்படி, அவர்கள், தொழில் நுட்ப மற்றும் வியாபார அறிவை வளர்க்க முயலும் அறக்கட்டளை (Trust) ஒன்றிற்கு இரண்டு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கினர். ஆனால் அந்த நிறுவனத்தின் இயக்குனர்கள் அவர்கள் விரும்பிய அறம் அல்லது பொது நல நோக்கத்திற்காக நிறுவனத்தின் பணத்தை செலவளிக்க முடியாது என்றும், தங்கள் நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கு உபயோகமாகயிருக்கும் அறம் அல்லது பொதுநல நோக்கங்களுக்கு மட்டுமே செலவழிக்க முடியும் என்றும், எனவே அந்நிறுவனம் அளித்த நன்கொடை வரம்பு மீறியது என்றும் நமது உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. ஒரு நிறுவனத்தின் நோக்கத்தை மீறி, அதன் இயக்குனர்கள் தம் இச்சைப்படி செயல்பட முடியாது என்பது மேற்கண்ட வழக்கிலிருந்து தெளிவாகிறது.

வரம்பு மீறல் கோட்பாட்டில் ஆங்கிலச் சட்டத்தால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் (அல்லது) வரம்பு மீறல் கோட்பாட்டின் நவீன பொருள்:

ஒரு நிறுவனம் தனது அமைப்பு முறையேட்டில் கண்ட நோக்கங்களின்படி செயலுற வேண்டும். அதை மீறும் வகையில் செய்யப்படும் செயல், வரம்புமீறல் கோட்பாட்டினால் தடுக்கப்படுகிறது. எனவே இக்கோட்பாட்டினால் ஒருபுறம் நன்மை தரும் விளைவுகள் (வரம்புமீறல் கோட்பாட்டின் விளைவுகள் பற்றி அடுத்த வினாவின் விடை விரிவாக விளக்குகிறது) ஏற்பட்டாலும், மற்றொருபுறம் அது சில சமயங்களில் மறை முகமாக நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்களுக்கு அநீதி விளைவிப்பதாகக் கருதப்பட்டது. எனவே இக்கோட்பாட்டை தொடர்ந்து பின்பற்ற வேண்டியது அவசியந் தானா அல்லது இதில் ஏதேனும் சீர்திருத்தங்களைக் கொண்டு வரலாமா எனும் வினாக்கள் எழுந்தன.

அந்த வகையில் 1945–ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 'கோஹென் குழு' **(Cohen Committee)** என்றழைக்கப்படும் 'ஆங்கில நிறுவனச் சட்ட சீராய்வுக் குழு' **(English Company Law Revision Committee)**, ஒரு நிறுவனத்தின் வரம்பு மீறிய செயல் மேற்கண்ட கோட்பாட்டின் அடிப்படையில் செல்லாதது என்று நீதிமன்றம் அறிவித்தாலும், அதனால் அந்நிறுவனத்துடன் தொடர்பு கொண்ட பிற வெளியாட்கள் தாம் உண்மையில் பாதிக்கப்படுகின்றனர் என்றும், எனவே இக்கோட்பாட்டையை ஒழித்துவிட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

எனினும் பின்னிட்டு 1963–ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட **'ஜென்கின்ஸ் குழு'** **(Jenkins Committee)** எனும் மற்றொரு குழு, ஒரு நிறுவனம் தனது வரம்பிற்குட்பட்டு அல்லது வரம்பிற்கப்பாற்பட்ட நிலையில் செய்யும் ஒப்பந்தம் எதுவும் செல்லத் தக்கதே என்றும், ஆனால் அந்நிறுவனத்தின் மூலதனத் தொகையானது தவறான நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டால், அதற்கு இயக்குனர்களே பொறுப்பு என்றும், அவர்களே அதை திரும்பக் கட்ட வேண்டும் என்றும் கூறியது. மேற்கண்ட சீர்திருத்தமானது, 1972–ஆம் ஆண்டின் அய்ரோப்பிய சமூகங்களின் சட்டத்தால் **(European Communities Act, 1972)** ஏற்றுக் கொள்ளப்பட்டது. இச்சட்டத்

தின்படி தற்பொழுது ஒரு நிறுவனத்தின் இயக்குனர்கள் முடிவு செய்யும் எதன் பேரிலும் நல்லெண்ணத்துடன் செயல்படும் எவருக்கும் அந்நிறுவனமே பொறுப்புடையதாகும்.

இதன் உட்பொருள் யாதெனில், ஒரு நிறுவனம் தனது நோக்கத்தை மீறி தனது மூலதனத்தைப் பயன்படுத்தினால், அல்லது எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தினால், அதற்கு அதன் இயக்குனர்களே பொறுப்பு; நிறுவனம் வரம்பு மீறல் கோட்பாட்டை தனக்காதரவாக காண்பித்து பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளவியலாது.

25. Discuss the consequences of Ultra vires of a company. (ஒரு நிறுவனத்தின் வரம்பு மீறிய செயலினால் ஏற்படக் கூடிய விளைவுகளை விவாதிக்க).

(அல்லது)

What do you understand by the doctrine of 'Ultra Vires'? Give its legal effect and exceptions. ('வரம்பு மீறல்' கோட்பாட்டினால் நீவிர் புரிந்து கொள்வது யாது? அதன் சட்ட விளைவுகளையும் விலக்குகளையும் கூறுக.)

(அல்லது)

Discuss about the doctrine of ultra vires and bring out its consequences. (வரம்பு மீறல் கோட்பாடு பற்றி விவரித்து அதன் விளைவுகளை வெளிக் கொணர்க.)

(அல்லது)

Explain the consequences of Ultravires transactions. (வரம்பு மீறல் நடவடிக்கையினால் ஏற்படும் விளைவுகளை விளக்குக.)

முன்னுரை:

ஒரு நிறுவனம் வரம்பு மீறிய செயலில் ஈடுபடுவதால் பின்வரும் சில விளைவுகள் ஏற்படுகின்றன.

வரம்புமீறிய செயலினால் ஏற்படும் விளைவுகள்

1. உறுத்துக் கட்டளை (Injunction):

பதிவு பெற்ற நிறுவனமொன்றின் உறுப்பினர்கள், அந்நிறுவனம் தனது அமைப்பு முறையேட்டில் கண்டுள்ள நோக்கங்களின்படி செயலுற வேண்டும் என்று கோர உரிமை படைத்தவர்கள் என்பது காலங்காலமாக உள்ள சட்ட நிலைப்பாடாகும். அந்த வகையில், ஒரு நிறுவனம் வரம்பு மீறிய செயலைச் செய்ய முயன்றால், அவ்வாறு செய்வதிலிருந்து அதனைத் தடுக்கும் பொருட்டு அதன் உறுப்பினர் எவரும் நீதி மன்றத்தை அணுகி உறுத்துக்கட்டளை (injunction) பெறலாம்.

2. இயக்குனர்களின் தனிப்பட்ட பொறுப்பு (Personal Liability of

Directors) :

நிறுவனத்தின் மூலதனம், நிறுவனத்தின் சட்டபூர்வமான வியாபாரத்திற்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதை கவனிக்க வேண்டியது, இயக்குனர்களின் கடமைகளில் ஒன்றாகும். மூலதனத்தின் எந்த ஒரு பகுதியாவது, நிறுவனத்தின் நோக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை தவிர, வேறு எந்த நோக்கத்திற்காவது வரம்பு மீறி பயன்படுத்தப்பட்டிருப்பின் அதனை நிறுவன இயக்குனர்கள் தனிப்பட்ட பொறுப்பேற்று, ஈடுசெய்ய வேண்டும். அதாவது வரம்பு மீறி பயன்படுத்தப்பட்ட மூலதனத் தொகையை தங்களது தனிப்பட்ட பொறுப்பில் நிறுவனத்திற்கு கொடுக்க வேண்டும்.

Jehangir R.Modi v. Shamji Ladha[1]

இவ்வழக்கில், ஒரு நிறுவனத்தின் இயக்குனர்கள் தங்களுக்கு அந்நிறுவனத்தால் அதிகாரமளிக்கப்படாத செயல் ஒன்றில் நிறுவனத்தின் பணத்தை முடக்கினர். இப்பணத்தை திரும்பவும் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும் என்று அதன் பங்குதாரர் எவரும் இயக்குனர்கள் மீது வழக்குத் தொடரலாம் என்றும், அச்சமயத்தில் அந்நிறுவனத்தை அவ்வழக்கின் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் பம்பாய் உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது.

R. v. Sinclair, Queens-wood, E.W.Smithson[2]

இவ்வழக்கில் நிறுவனத்தின் நிதியை அதன் இயக்குனர்கள் நன்கு திட்டமிட்டு தவறான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தினால், அவர்களுக்கு எதிராக மோசடி செய்த குற்றத்திற்காக குற்றவியல் நடவடிக்கை கூட எடுக்கலாம் என்று கூறப்பட்டது.

3. அதிகார நம்புறுதி மீறுகை (Breach of Warranty of Authority):

நிறுவனத்தின் இயக்குனர்களும், அதனை முன்னின்று நடத்தும் அனைவரும் நிறுவனத்தின் முகவர்கள் (Agents) ஆவர். எனவே நிறுவனம் தனது அமைப்பு முறையேட்டின் வாயிலாக வகுத்துக் கொடுத்துள்ள அதிகார எல்லைக்குட் பட்டு அவர்கள் செயல்பட வேண்டும். அந்த அதிகாரத்தை மீறி செயல் எதையும் செய்து, அதனால் ஏதுமறியாத மூன்றாம் நபர் ஒருவரை தங்கள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தூண்டி, அவருக்கு இழப்பு எதையும் ஏற்படுத்தினால், அதற்கு அந்த இயக்குனர்களே தனிப்பட்ட விதத்தில் பொறுப்பாவர்.

4. வரம்பை மீறி அடையப் பெற்ற சொத்து (Ultra vires acquired Property) :

ஒரு நிறுவனத்தின் பணம், சில சொத்துக்களை வாங்குவதற்காக வரம்பு மீறி பயன்படுத்தப்பட்டிருப்பின், அச்சொத்துக்களின் மீதான நிறுவனத்தின் உரிமை பாதுகாக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. ஏனெனில், அச்சொத்து தவறான முறையில் பெறப்பட்டிருப்பினும், அது நிறுவன மூலதனத்தின் ஒரு பகுதியாகிவிடுகிறது.

---

1. (1866-67) 4 Bom HCR 185
2. (1968) 1 LR 1246

5. வரம்பு மீறிய ஒப்பந்தங்கள் (Ultra vires Contracts) :

வரம்பு மீறிய ஒப்பந்தங்கள் முற்றிலும் இல்லா நிலையதாகும். நிறுவனத்தை அவ்வொப்பந்தங்கள் கட்டுப்படுத்தாது. மேலும் ஒப்பந்தம் செய்தவர், அவற்றால் எவ் வித உரிமையும் பெற இயலாது. ஆனால் இதனால் சில சமயங்களில் அநீதி விளை கிறது. இதனைப் பின்வரும் வழக்குகள் விளக்கும்.

In Re Beauforte (Jon) (London) Ltd.[1]

இவ்வழக்கில், ஒரு நிறுவனம் உடை தயாரிப்பு (costumiers), அங்கி உற்பத்தி (gown makers) மற்றும் அதையொட்டிய பிற செயல்களைப் புரிய அதன் அமைப்பு முறையேட்டால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மேற்படி நிறுவனம் மேலடை மெல்லொட்டுப் பலகைச் சட்டங்களை (veneered panels) செய் யும் தொழிலை செய்ய முடிவெடுத்தது. இது அமைப்பு முறையேட்டின் வரம்பை மீறிய ஒரு தொழிலாகும். எனினும் மேற்படி தொழிலின் பொருட்டு, அந்நிறுவனம் ஒரு தொழிற்சாலையை அமைத்தது. அதனை ஒரு கட்டிடக் கலை நிறுமம் கட்டிக் கொடுத் தது. இதற்காக 2,078 பவுண்டு (£ 2,078) பணத்தை அந்நிறுவனத்திடமிருந்து கோரி யது. அதுபோல் அந்நிறுவனத்திற்கு மேலடை மெல்லொட்டுப் பலகைகளை அளித்த வகையில் மற்றொரு நிறுமம் 1,011 பவுண்டு (£ 1,011) பணத்தையும், நிலக்கரி அளித்த வகையில் பிறிதொரு நிறுமம் 107 பவுண்டு (£ 107) பணத்தையும் தர வேண்டுமென்று அந்நிறுவனத்தைக் கோரியது. ஆனால் இவர்களில் எவருக்கும் மேற்படி நிறுவனம் செய்யத் தொடங்கிய மெல்லொட்டுப் பலகைத் தொழில் வரம்பு மீறியது என்பது தெரியாது. எனினும் அவர்களது மேற்படி தொகைகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல என்றும், நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள விழையும் ஒவ்வொருவரும், அந் நிறுவனத்தின் அதிகாரங்கள் பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றும் கூறி, அவர்களது வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

In Re Canning and Land Investment Co.[2]

இவ்வழக்கில் ஒரு நிறுவனம் தன் வரம்பை மீறி, நெல் அரவைத் தொழி லினை மேற்கொண்டது. நிறுவனத்திடமிருந்து அரிசி வாங்கியவர்கள் அதன் தரக் குறைவால் நட்டத்திற்கு விற்க நேரிட்டது. நிறுவனம் அந்நட்டத்திற்கு ஈடாக அவர் களுக்கு பண வரைவோலைகள் (Drafts) வழங்கியது. நிறுவனம் கலைக்கப்பட்ட போது அவ்வரைவோலைகள் செல்லாதவை என்றும், அவை நிறுவனத்தை கட்டுப் படுத்தாது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Rolled Steel Products (Holdwings) Ltd., v. British Steel Corporation[3]

இவ்வழக்கில், மூன்றாம் நபர்கள் நல்லெண்ணத்துடன் ஒரு நிறுவனத்துடன்

1. (1953) Ch 131. noted 69 LOR 166
2. (1871) 7 Beng. LR
3. (1982) 3 WLR 715

செய்து கொண்ட ஒப்பந்தங்களை, அந்நிறுவனம் தவிர்க்க இயலாது என்று மாறுபட்ட நிலையில் ஒரு கருத்து கூறப்பட்டது.

6. வரம்பு மீறிய தீங்குகள் (Ultra vires Torts) :

இது குறித்து பல கருத்துரைகள் இருப்பினும், ஒரு நிறுவனம் தனது வரம்பிற்குட்பட்ட செயலால் விளைவிக்கும் தீங்குகளுக்கு மட்டும் அது பொறுப்பாகும். எனவே, வரம்பு மீறிய செயலால் விளைந்த தீங்குகளுக்கு நிறுவனம் சிறிதும் பொறுப்பல்ல. எனினும் நிறுவனம் விளைவித்த தீங்குச் செயல் எதற்கும் அதைப் பொறுப்பாக்க வேண்டுமெனில்,

(1) அந்நிறுவனம் செய்த செயல், அமைப்பு முறையேட்டின் எல்லைக்குட்குட் பட்டதாக இருக்க வேண்டும்.

(2) அந்நிறுவனத்தின் பணியாள், 'தனது பணியின் பொழுது' (during the course of his employment) அத்தீங்குச் செயலைப் புரிந்திருக்க வேண்டும்.

-o0o-

செயல்முறை விதிகள்
[Articles of Association]

26. Define Articles of Association. Is it necessary to register Articles of Association? How is the form of articles similated? What are its contents? (செயல் முறை விதிகளை வரையறு. அதனைப் பதிவு செய்தல் அவசி யமா? செயல்முறை விதிகளின் வடிவம் எங்ஙனம் அமைந்துள் ளது? அதன் உள்ளடக்கங்கள் யாவை?)

(அல்லது)

3 Explain what is meant by Articles of Association? Examine the broad features of Articles of Association and their importance in the administration of the company. ('செயல்முறை விதிகள்' என்றால் என்ன? செயல்முறை விதிகளின் சிறப்பியல்புகளையும், நிறுவன நிருவாகத்தில் அவற்றின் முக்கியத்துவத்தையும் ஆராய்க.)

செயல்முறை விதிகள் - விளக்கம்:

நிறுவனம் பதிவு செய்யப்படும் பொழுது சேர்க்கப்பட

வேண்டிய ஆவணம் செயல்முறை விதிகளாகும். இது அமைப்பு முறையேட்டிற்கு அடுத்தபடியாக தயாரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். செயல்முறை விதிகள் என்பது, நிறுவனம் நடத்தப்படும் முறைகளை நன்றாக விளங்கச் செய்து, பொது மக்களுக்கு அதில் குறிப்பிட்டவைகளைக் **கொள்நிலை அறிவிக்கையாக்கும் (Constructive Notice)** ஓர் பொது ஆவணமாகும். சுருங்கக்கூறின், செயல்முறை விதிகள் நிறுவனத்தின் உள்நிர்வாகத்திற்காக, அதன் மேலாண்மைக்காக எழுதப்பட்ட சட்ட விதிகளாகும். அமைப்பு முறையேடு நிறுவனத்தின் நோக்கங்களை விளக்குகின்றன. செயல் முறை விதிகள் அந்நோக்கங்களை எவ்வாறு எய்தலாம் என்பதனை விளக்குகின்றன. எனவே, அமைப்பு முறையேட்டிற்கு புறம்பான எதுவும் செயல்முறை விதிகளில் இருந்தால் அது செல்லுபடி யாகாது.

செயல்முறை விதிகள் - சட்டம் தரும் வரையறை :

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 2(5), 'செயல்முறை விதிகள்' என்பதற்கான வரையறையை தருகிறது. அதன்படி, "**முதன்முதலாக உருவாக்கப் பட்ட, அல்லது முந்தைய நிறுவனங்கள் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின்படி** (2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம்) **அவ்வப்போது திருத்தப்பட்டவாறான அல்லது பொருந்துகின்ற செயல்முறை விதிகளே, ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் ஆகும்.**"[1]

எனவே ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் என்பதை அந்நிறுவனம் தனது தொழில் நடத்தை மற்றும் உள் விவகாரங்களை நடத்துவதற்கான முறையை வகுத்துரைக்கும் விதிகள் அல்லது துணை விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகள் என்று கூறலாம். அவை நிறுவன உறுப்பினர்கள் மற்றும் நிறுவனத்தின் உரிமைகள் தொடர்பானதாக இருப்பதால் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அவை ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டிற்கு துணையானதாகும். மேலும் அந்த அமைப்பு முறையேட்டால் கட்டுப்படுத்தப்பட்டதுமாகும். அமைப்பு முறையேடு என்பது ஒரு நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் அதிகாரங்களை வரையறுக்கிறது; செயல்முறை விதிகள் நிறுவனத்தின் நோக்கங்களை எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்கான வழிகளை எடுத்துரைக்கின்றன.

செயல்முறை விதிகள் பதிவு செய்யப்படல் அவசியமா ?

ஒரு நிறுவனத்தை பதிவு செய்வதற்காக தாக்கல் செய்யப்படும் விண்ணப் பத்துடன் அமைப்பு முறையேட்டை அளிக்கும் போது, செயல்முறை விதிகள் அடங்கிய ஆவணத்தையும் இணைத்து கொடுக்க வேண்டும் என்று **2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 7(1)(a)**[1] கூறுகிறது. எனவே ஒரு நிறுவனத்தை பதிவு செய்வதற்கு கட்டாயமாக அதன் செயல்முறைவிதிகளை பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும் என்பது நிறுவனச் சட்டம் வகுக்கும் நடைமுறையாகும்.

---

1. "Articles" means the articles of association of a company as originally framed or as altered from time to time or applied in pursuance of any previous company law or of this Act - **Section 2(5) of the Companies Act, 2013.**



செயல்முறை விதிகளின் படிவம் (Form of Articles):

நிறுவனச் சட்டத்தின் பட்டியல் I–ல் உள்ள அட்டவணை F,G,H,I மற்றும் J (Table-F,G,H,I and J) நிறுவனத்தின் மாதிரி செயல் முறை விதிகள் தரப்பட்டுள்ளன. அவற்றை நிறுவனங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள லாம் அல்லது அவற்றில் தங்கள் நிறுவனத் திற்கு பொருந்தக் கூடிய ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொள்ளலாம். என்று **2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத் தின் பிரிவு 5(6) மற்றும் (7)** கூறுகின்றன.

மேற்கண்டதில் அட்டவணை F பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனங் களுக்கும், அட்டவணை G பங்கு மூலதனம் கொண்ட பொறுப்புறுதியால் வரையறுக் கப்பட்ட நிறுவனங்களுக்கும், அட்டவணை H பங்கு மூலதனம் கொண்டிராமல் பொறுப் புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கும், அட்டவணை I பங்கு மூலதனம் கொண்ட வரம்பற்ற நிறுவனங்களுக்கும், அட்டவணை J பங்கு மூலதனம் கொண்டி ராத வரம்பற்ற நிறுவனங்களுக்கும் பொருந்தக் கூடிய செயல்முறை விதிகளின் படிவத்தை தருகிறது.

பதிவாளரிடம் பதிவுக்காக தாக்கல் செய்யப்படும் செயல்முறை விதிகள் அச்சிடப்பட்டு, தொடர்ச்சியான எண்ணிக்கைகள் கொண்ட பத்திகளாக பிரிக்கப் பட்டு, ஒவ்வொரு கையொப்பத்திற்கும் குறைந்தது ஒரு சாட்சி, சான்றுக் கையொப்பம் (Attest) செய்து, ஆதரவாளரும், சாட்சியுமாகிய இருவரும் தத்தம் முகவரி, தொழில் ஆகிய விவரங்களை கையொப்பத்திற்கெதிரே குறிப்பிட வேண்டும்.

செயல்முறை விதிகளின் உள்ளடக்கம் அல்லது முக்கியத் துவம் [Contents (or) Importance of Articles]:

ஒரு நிறுவனத்தை நடத்துவதற்கு (அல்லது நிருவகிப்பதற்கு) தேவையான அனைத்து விபரங்களையும் இதில் குறிப்பிடலாம். பொதுவாக செயல்முறை விதிகள், நிறுவனச் சட்டத்திற்கும், அதன் விதிகளுக்கும், அமைப்பு முறையேட்டிற்கும் உட்பட்ட தாக இருக்க வேண்டும். அவைகளை மீறினால் அவை செல்லாதவை ஆகும். பின் வருவன குறித்த தெளிவான விதிமுறைகள் நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் இடம் பெற்றிருக்கும்.

1. பங்கு மூலதனம், 2. பங்குகளின் வகைகள், 3. பங்குதாரர்களின் உரிமைகள், 4. பங்கு மீதான பற்றுரிமை, 5. பங்கழைப்பு, 6. பங்கு மாற்றம், 7.பங்குகளை ஒப்படைத்தல், 8. பங்கு பறிமுதல், 9. பங்கு மறுவெளியீடு, 10. பங்குச் சான்று அளித்தல், 11. பங்குரிமைச் சீட்டு வெளியிடல், 12. பங்குகளை பங்குத் தொகுப்பாக மாற்றல், 13.

மூலதனப் பகுதியை மாற்றுதல், மூலதனத்தைக் குறைத்தல், 14.நிறுவனக் கூட்டங்கள், அறிவிப்புகள், 15. இயக்குனர்கள் நியமனம், அவர்களின் ஊதியம், தகுதிகள் போன்றவை, 16. மேலாளரின் நியமனம், அதிகாரம் போன்றவை, 17. கணக்குகள், தணிக்கை முறைகள், 18. இலாபங்களை முதற்படுத்துகை, 19. காப்பு நிதி ஒதுக்கீடு, 20. நிறுவனத்தை கலைப்பதற்குரிய விபரங்கள்.

செயல்முறை விதிகளில் தவறான தகவல் தருவதன் விளைவு [Effect of furnishing false or incorrect information in the Articles of Association]:

நிறுவனமொன்று பதிவு செய்யப்பட்ட பிறகு, அது பொய்யான மற்றும் தவறான தகவல்களை தனது செயல்முறை விதிகளில் கொடுத்தோ அல்லது முக்கியச் சங்கதி அல்லது தகவல் எதையும் மறைத்தோ பதிவு செய்து கொள்ளப் பெற்றிருப்பதாக கண்டறியப்பட்டால், அந்நிறுவனமும், அத்தகு மோசடியான தகவல்களை கொடுத்த நபர்களும் **2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 447**–இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு உள்ளாவார்கள். இதற்கான சிறைத் தண்டனை மற்றும் அபராத தொகையை **பிரிவு 448** வகுத்துரைக்கிறது.

முடிவுரை:

உலகை பூரணமாக இரசிக்க மனிதனுக்கு தெளிவான பார்வை வேண்டும். அதற்கு இரு கண்கள் அவசியம். அதுபோல் ஒரு நிறுவனம் வெளியார்களுடன் தொடர்பு கொள்ள அமைப்பு முறையேடு, செயல்முறை விதிகள் எனும் இரண்டு ஆவணங்கள் முக்கியம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அதிலும் உள் மனதின் அழகை, ஒருவனது கண்களைக் கண்டு மதிப்பிடலாம். இவ்வாறே, ஒரு நிறுவனத்தின் உள் எண்ணங்களை, அதன் அமைப்பு முறையேடு, செயல்முறை விதிகள் எனும் இரு கண்களைக் கண்டே எவரும் அறிந்து கொள்ளலாம்.

27. Explain the provisions relating the Articles of Association of a company under the Companies Act, 2013. (ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் தொடர்பாக நிறுவனங்கள் சட்டம், 2013 கூறும் வகை முறைகளை விளக்குக.)

(அல்லது)

Provisions for Entrenchment in the Articles of Association - Write short notes. (செயல்முறை விதிகளில் மாற்றமுடியாததற்கான வகைமுறைகள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Entrenchment under the Companies Act, 2013 - Write short notes. (நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ் மாற்றமுடியாத செயல்முறை விதிகள் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 5-ஆம் பிரிவு ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் தொடர்பான பல்வேறு வகைமுறைகளை விளக்குகிறது. செயல் முறை விதிகளின் அடிப்படை விளக்கம், படிவம், நடைமுறை பற்றி அப்பிரிவு தனது 9 உட்பிரிவுகளின் வழியாகக் கூறுகிறது. அவற்றை விரிவாக பின்வருமாறு காண்போம்.

செயல்முறை விதிகள் - பிரிவு 5 கூறும் வகைமுறைகள்:

(1) நிறுவன மேலாண்மைக்கான ஒழுங்குமுறைவிதிகளை (Regulations for management of the company) நிறுவனமொன்றின் செயல்முறை விதிகள் கொண்டிருத்தல் வேண்டும் என்று **பிரிவு 5(1)** கூறுகிறது.

(2) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு விடயங்களையும் செயல்முறை விதிகள் கொண்டிருத்தல் வேண்டும் என்று **பிரிவு 5(2)** மேலும் கூறுகிறது.

எனினும் இந்த உட்பிரிவில் வகுத்துரைக்கப்பட்டது எதுவும் நிறுவன மேலாண்மைக்கு அவசியமெனக் கருதப்படலாகும் அத்தகு கூடுதல் விடயங்களைச் சேர்த்துக் கொள்வதிலிருந்து நிறுவனமொன்றை தடுப்பதாக கருதப்படுதல் ஆகாது என்று மேற்படி **பிரிவு 5(2)-இன் கீழான வரம்புரை வாசகம்** கூறுகிறது.

(3) செயல்முறை விதிகளின் குறித்தவகையிலான வகைமுறைகளை, சிறப் புத் தீர்மானம் ஒன்றின் நேர்வில் பொருந்தக் கூடியதையும் விட அதிகத் தடை வரம்பு டைய நிபந்தனைகள் அல்லது நடைமுறைகளை எதிர்கொண்டால் அல்லது நிறைவு செய்தால் மட்டுமே மாற்றப்படலாமெனக் கூடிய வகையில் **மாற்றமுடியாததற்கான வகைமுறைகளை** (provisions for entrenchment) செயல்முறை விதிகள் கொண்டிருக்கலாம் என்று **பிரிவு 5(3)** கூறுகிறது.

(4) மேற்படி பிரிவு 5(3)–இல் சுட்டிக்காட்டப்பட்ட மாற்றமுடியாததற்கான வகைமுறைகளானவை நிறுவனமொன்றை உருவாக்கும் போது, அல்லது தனியார் நிறுவனம் ஒன்றின் நேர்வில் செயல்முறை விதிகளில் நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட திருத்தம் ஒன்றினால் மற்றும் பொது நிறுவனம் ஒன்றின் நேர்வில் சிறப்புத் தீர்மானம் ஒன்றினால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும் என்று **பிரிவு 5(4)** கூறுகிறது.

(5) நிறுவனமொன்றை உருவாக்கும் போது, அல்லது திருத்தத்தினால் செய் யப்படுகின்ற மாற்றமுடியாததற்கான வகைமுறைகளை செயல்முறை விதிகள் கொண் டிருக்குமிடத்து, அந்நிறுவனம் அத்தகு வகைமுறைகள் குறித்து வகுத்துரைக்கப் படலாகும் அத்தகு படிவத்திலும் முறையிலும் பதிவாளருக்கு அறிவிப்பு கொடுத்தல் வேண்டும் என்று **பிரிவு 5(5)** கூறுகிறது.

(6) நிறுவனமொன்றின் செயல்முறை விதிகள் பட்டியல் I–இல் உள்ள அட்டவணைகள் F,G,H,I மற்றும் J-இல் (Table-F,G,H,I and J) முறையே குறித் துரைக்கப்பட்ட படிவங்களில் அத்தகு நிறுவனத்திற்கு பொருந்தலாமெனக் கூடிய

வாறு இருத்தல் வேண்டும் என்று **பிரிவு 5(6)** கூறுகிறது.

(7) மாதிரி செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள ஒழுங்குமுறைவிதிகள் அனைத்தையும் அல்லது அத்தகு நிறுவனத்திற்கு பொருந்தக் கூடிய எதையேனும், ஒரு நிறுவனம் தனதாக ஏற்கலாம் என்று **பிரிவு 5(7)** கூறுகிறது.

(8) இந்தச் சட்டம் தொடக்கத்திற்கு வந்த பிறகு பதிவு செய்யப்பட்ட நிறுவனம் எதனின் நேர்விலும், அந்நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட செயல்முறை விதிகள் அதற்குப் பொருந்தும் மாதிரி செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள ஒழுங்குமுறை விதிகளை விலக்குதல் அல்லது மாற்றம் செய்யாத வரையில், அந்த ஒழுங்குமுறை விதிகள் எந்த அளவுக்கு பொருந்துகின்றனவோ அந்த அளவுக்கு பொருந்தும் வண்ணம் அந்நிறுவனத்தின் செயல்முறை விதிகளாக அதே முறையில் இருக்கும். மேலும் அவை அந்த நிறுவனத்தின் முறைப்படி பதிவு செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் அடங்கியிருந்தால் எவ்வாறோ அவ்வாறான அளாவுகைக்கும் பொருந்தும் **பிரிவு 5(8)** கூறுகிறது.

(9) இந்தப் பிரிவில் உள்ள எதுவும் இந்தச் சட்டத்தின் கீழ் திருத்தப்பட்டிருந்தாலன்றி முந்தைய நிறுவனச் சட்டம் எதனின் கீழும் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றின் செயல்முறை விதிகளுக்குப் பொருந்தாது என்று **பிரிவு 5(9)** கூறுகிறது.

மாற்றமுடியாததற்கான வகைமுறைகள் [Provisions for Entrenchment]:

மேற்சென்ற விதிகளில் நாம் மாற்றமுடியாததற்கான வகைமுறைகள் என்ற ஒரு கருத்துருவை பிரிவு 5(3), (4) மற்றும் (5)–இன் வாயிலாகக் கண்டோம். அதாவது ஒரு நிறுவனத்தின் செயல்முறைவிதிகளில் மாற்றமுடியாததற்கான வகைமுறைகள் அடங்கியிருக்கலாம் என்பது அப்பிரிவுகளின் அடிப்படை சாரமாகும். இது 2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இப்படிப்பட்ட வகைமுறைகள் பற்றி முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் எதையும் கூறவில்லை.

அதே நேரம் **'Entrenchment'** என்ற பதத்திற்கு 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் வரையறை ஏதும் தரவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. எனவே இதற்கு பொருள் காண அகராதிகள் சிலவற்றை கண்ணோக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் **ஆக்ஸ்:போர்டு ஆங்கில அகராதியானது** 'Entrenchment' என்பதற்கு மாற்றுவதற்கு கடினமான அல்லது அனேகமாக மாற்ற முடியாத மனப்பாங்கு, பழக்கம், அல்லது நம்பிக்கை ஒன்றை உறுதியாக நிறுவுதல் ['entrench' means establish (an attitude, habit, or belief) so firmly that change is

very difficult or unlikely] என்று பொருள் தருகிறது. அடுத்தாக **விக்கிபீடியா (Wikipedia)** தரும் பொருள் விளக்கம் யாதெனில், அடிப்படைச் சட்டம் அல்லது அரசமைப்பின் மாற்றமுடியாத கூறு என்பது திருத்தங்கள் சிலவற்றை செய்வதை மிகவும் கடினமான ஒன்றாகவோ அல்லது முடியாததாகவோ ஆக்கும் ஓர் வகைமுறை என்று பொருள் பகர்கிறது. அதாவது இதற்கு ஓர் உச்சபட்ச பெரும்பான்மை வேண்டும், அல்லது ஒட்டுமொத்த மக்களின் வாக்களிப்பிற்கு சமர்ப்பிக்க வேண்டும் அல்லது மற்றொரு (எதிர்க்) கட்சியின் இசைவு தேவை (an entrenched clause or entrenchment clause of a basic law or constitution is a provision which makes certain amendments either more difficult or impossible, i.e., inadmissible. It may require a form of supermajority, a referendum submitted to the people, or the consent of another party)

நமது பெருமை மிகு சென்னை பல்கலைக்கழகம் பதிப்பித்த ஆங்கில–தமிழ் அகராதி 'entrenchment' என்ற பதத்திற்கு தரும் மற்றொரு பொருளையும் இங்கு கவனித்தல் அவசியம். அது **'entrench'** என்பதற்கு **அகழிதோண்டிக் கொள்** என்றும், **வலிதாக்கிக் கொள்** என்றும் பொருள் தருகிறது. **'entrenchment'** என்பதற்கு **அகழிசூழ்ந்த கோட்டை, வலிய காப்பிடம்** என்றும் பொருள் தருகிறது. அரசன் தனது கோட்டையைச் சுற்றி எதற்காக அகழி தோண்டிக் கொள்ள வேண்டும்? எதிரிகள் அல்லது வெளிநபர்கள் அத்துமீறி நுழையாமல் இருக்க, அல்லது அவர்களிட மிருந்து பாதுகாத்துக் கொள்ள. அந்த வகையில் இதை ஒரு நிறுவனத்திற்கும் பொருத்திப் பார்க்கலாம். அதாவது, ஒரு நிறுவனம் தனது செயல்முறை விதிகளை மாற்றிக் கொள்ள அதிக உரிமை பெற்றுள்ளது. அப்படி இருக்கும் போது அந்நிறுவன மேலாண்மை, செயல்முறை விதிகள் சிலவற்றை எளிதாக மாற்றிக் கொள்ள முடியாத அளவிற்கு அமைத்துக் கொண்டு பாதுகாப்பு தேடலாம். நிறுவனத்தை வலிமையான தாக்கிக் கொள்ளலாம். வேறு வகையில் சொன்னால், நிறுவன செயல்முறை விதிகளை மாற்ற அல்லது திருத்த சிறப்புத்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினால் போதுமானது. இதைவிடவும் வேறு கடினமான நிபந்தனைகளின் அல்லது நடைமுறை களின் பின்பற்றினால் மட்டுமே ஒரு குறிப்பிட்ட செயல்முறை விதியொன்றை மாற்ற முடியும் என்பதற்கு ஒரு நிறுவனம் வகைமுறைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்படி ஏற்படுத்திக் கொள்வது மாற்றமுடியாததற்கான வகைமுறை எனப்படுகிறது. இது, சம்பந்தப்பட்ட செயல்முறை விதி ஒன்றை சுலபமாக மாற்றி விடாமல் இருப்பதற்கு கூடுதல் பாதுகாப்பை நல்குகிறது. இதற்கான அதிகாரத்தைத்தான் **பிரிவு 5(3)** ஒரு நிறுவனத்தை பின்வருமாறு தருகிறது.

> செயல்முறை விதிகளின் குறித்தவகையிலான வகைமுறைகளை, சிறப்புத் தீர்மானம் ஒன்றின் நேர்வில் பொருந்தக் கூடியதையும் விட அதிகத் தடை வரம்புடைய நிபந்தனைகள் அல்லது நடைமுறைகளை எதிர் கொண்டால் அல்லது நிறைவு செய்தால் மட்டுமே மாற்றப்படலாமெனக் கூடிய வகையில் **மாற்றமுடியாததற்கான வகைமுறைகளை** (provisions for entrenchment) செயல்முறை விதிகள் கொண்டிருக்கலாம்.

பொதுவாகச் சொன்னல் செயல்முறை விதிகளை மாற்ற ஒரு நிறுவனம் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றினால் போதுமானது. மாற்றமுடியாத செயல்முறை விதிகளை மாற்ற வேண்டுமெனில் சிறப்புத் தீர்மானத்துடன் அதிகத் தடைவரம்புடைய நிபந்தனைகள் அல்லது நடைமுறைளை நிறுவனம் பின்பற்ற வேண்டும். எடுத்துக் காட்டாக, குறித்தவகையிலான செயல்முறை விதி ஒன்றை மாற்ற குறிப்பிட்ட சில பங்குதாரர்களின் இசைவு தேவை, அல்லது பங்குதாரர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும், அல்லது கூட்டத்தில் கலந்து கொள்ளும் பங்குதாரர்கள் 90 விழுக்காட்டினர் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என நிபந்தனைகள் விதித்து வகைமுறை செய்து கொள்வது மாற்ற முடியாததற்கான வகைமுறை எனப்படுகிறது. எனினும் இன்னதுதான் மாற்றமுடியாததற்கான வகைமுறை என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் எதையும் வரையறுத்துக் கூறவில்லை. இனி வரும் கால கட்டங்களில் நீதிமன்றங்கள்தாம் இதற்குச் சரியான பொருள் விளக்கத்தை அல்லது எடுத்துக் காட்டுகளை பகர வேண்டும்.

அத்தகு வகைமுறை ஒன்றை நிறுவனம் ஒன்று உருவாக்கப்படும் (பதிவாகும்) போதே செய்து கொள்ளலாம் அல்லது உருவானதற்குப் பின்னிட்டு செயல் முறை விதிகளில் திருத்தங்கள் கொண்டு வருவதன் வாயிலாகச் செய்து கொள்ளலாம். கூட்டுருவானதற்குப் பின்னர் செய்வதாக இருப்பின், உறுப்பினர்களின் இசைவு கட்டாயம் தேவை. தனியார் நிறுவமெனில், நிறுவன உறுப்பினர்கள் அனைவரும் ஒரு தீர்மானத்தின் வாயிலாக அளிக்கும் இசைவு போதும். பொது நிறுவனமெனில், சிறப்புத் தீர்மானம் ஒன்றின்படி உறுப்பினர்கள் அளிக்கும் இசைவு வேண்டும். இந்நிலைப் பாட்டை **பிரிவு 5(4)** பின்வருமாறு கூறுகிறது.

> பிரிவு 5(3)–இல் சுட்டிக்காட்டப்பட்ட மாற்றமுடியாததற்கான வகை முறைகளானவை நிறுவனமொன்றை உருவாக்கும் போது, அல்லது தனியார் நிறுவனம் ஒன்றின் நேர்வில் செயல்முறை விதிகளில் நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட திருத்தம் ஒன்றினால் மற்றும் பொது நிறுவனம் ஒன்றின் நேர்வில் சிறப்புத் தீர்மானம் ஒன்றினால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

முன் கூறியபடி, ஒரு நிறுவனம் உருவாக்கப்படும் போதோ, அல்லது உருவான பிறகு செயல்முறை விதிகளில் செய்கின்ற திருத்தத்தினாலோ மாற்றமுடியாததற்கான வகைமுறைகளை செய்யலாம். அவ்வாறு செய்தது குறித்து பதிவாளருக்கு முறைப்படி அறிவிப்பு கொடுக்க வேண்டும். அதாவது அதற்கான படிவத்திலும் முறையிலும் பதிவாளருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இதை **பிரிவு 5(5)** பின்வருமாறு கூறுகிறது.

> நிறுவனமொன்றை உருவாக்கும் போது, அல்லது திருத்தத்தினால் செய்யப்படுகின்ற மாற்றமுடியாததற்கான வகைமுறைகளை செயல்முறை விதிகள் கொண்டிருக்குமிடத்து, அந்நிறுவனம் அத்தகு வகைமுறைகள் குறித்து வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு படிவத்திலும் முறையிலும் பதிவாளருக்கு அறிவிப்பு கொடுத்தல் வேண்டும்.

28. How far the Memorandum of Association and Articles of Association of a company bind a member to the company, a company to the member, the company to outsider and members interse? (ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேடு மற்றும் செயல் முறை விதியேடு இரண்டும் எந்த அளவுக்கு ஒரு உறுப்பினரை நிறுவனத்திடமும், ஒரு நிறுவனத்தை உறுப்பினரிடமும், ஒரு நிறுவனத்தினை வெளி நபரிடமும் மற்றும் உறுப்பினர்களுக்குள்ளும் கட்டுப்படுத்துகிறது?)

(அல்லது)

How far do the Memorandum of Association and Articles of Association of a company bind :

(a) the members of a company

(b) the members interse and

(c) company and outsiders

ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேடும், செயல்முறை விதிகளும் எந்த அளவிற்கு

(அ) அந்நிறுவன உறுப்பினர்களை

(ஆ) உறுப்பினர்களுக்குள் மற்றும்

(இ) அந்நிறுவனம் மற்றும் வெளியார்களைக் கட்டுப்படுத்தும்?

முன்னுரை:

நிறுவனச் சட்டம், 2013-இன் 10(1)-வது பிரிவு, ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேடும், செயல்முறை விதிகளும் பதிவு செய்யப்படுகின்ற போது, அவற்றை அந் நிறுவனமும், அதன் உறுப்பினர் ஒவ்வொருவரும் கையொப்பம் செய்தது போலவும், அந்நிறுவனமும் உறுப்பினரும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகைமுறை களின்படியும் நடந்து கொள்வதாக ஒப்புக் கொண்டதைப் போலவும், அந்நிறுவனத்தை யும் அதன் உறுப்பினர்களையும் கட்டுப்படுத்துகிறது என்று கூறுகிறது. மேலும் அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின் கீழ் உறுப்பினர் எவராலும் செலுத் தப்பட வேண்டிய பணத் தொகைகள் அனைத்தும், அவரிடமிருந்து அந்நிறுவனத் திற்கு பாக்கி நிற்கும் ஓர் கடன் தொகையாக ஆகும் என்று **பிரிவு 10(2)** கூறுகிறது.[1]

---

1. **Effect of memorandum and articles.-** (1) Subject to the provisions of this Act, the memorandum and articles shall, when registered, bind the company and the members thereof to the same extent as if they respectively had been signed by the company and by each member, and contained covenants on its and his part to observe all the provisions of the memorandum and of the articles.

   (2) All monies payable by any member to the company under the memorandum or articles shall be a debt due from him to the company.

   - Section 10 of the Companies Act, 2013.

இவ்வாறு ஒரு நிறுவனமும், அதன் உறுப்பினர்களும் அமைப்பு முறையேட்டிலும், செயல்முறை விதிகளிலும் கையொப்பம் செய்வதால், அது அவர்களுக்கிடையே ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குவதாக உள்ளது. எனவே அமைப்பு முறையேடும், செயல் முறை விதிகளும் எந்த அளவிற்கு நிறுவனத்தையும், அதன் உறுப்பினர்களையும் மற்றும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் வெளியார்களையும் கட்டுப்படுத்துகிறது என்பதை இங்கு காண வேண்டியது அவசியமாகும். அதனைப் பின்வருமாறு காண்போமா?

அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின் கட்டுப்படுத்தும் வலிமை (Binding Force of Memorandum and Articles of Association):

(1) நிறுவனத்துடன் கொண்ட தொடர்பில் உறுப்பினர்களின் மீதான கட்டுப்பாடு (Binding on Members in their relation to the Company):

உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் செயல்முறை விதிகள் கூறும் வகைமுறைகளின்படி நிறுவனத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். ஏனெனில், முன் கண்டபடி, செயல் முறை விதிகளானது உறுப்பினர்களுக்கும், நிறுவனத்திற்கும் இடையே ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குகிறது. இதன்படி உறுப்பினர்கள் நிறுவனத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். இந்நிலைப்பாட்டை பின்வரும் வழக்குகள் விளக்குகின்றன.

Bradford Banking Co. v. Briggs Son & Co.,[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனம் தனது உறுப்பினர்களிடமிருந்து வர வேண்டிய கடனுக்காக அவர்களது பங்குகளின் மீது பற்றுரிமை பெற்றிருந்தது. அந்த வகையில் அந்நிறுவனத்திடம் கடன் பெற்றிருந்த உறுப்பினர் ஒருவர், தனது வங்கியிடமிருந்து இருப்புக்கு மேலான கடன் (மேல்வரைப் பற்று) (over-draft) பெற, தனது பங்குச் சான்றிதழ்களை அதனிடம் அடகு வைத்தார். எனவே, அவ்வங்கி, அப்பங்குச் சான்றிதழ்கள் மீது தனக்கிருக்கும் அடகு உரிமையை அந்நிறுவனத்திற்கு ஒரு அறிவிப்பின் வாயிலாக அறிவித்தது. அவ்வுறுப்பினர், தனது நிறுவனத்திற்கோ அல்லது தனது வங்கிக்கோ தான் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தவில்லை. எனவே அப்பங்குச் சான்றிதழ்களின் மீதான முதல் உரிமை தமக்கே உள்ளது என்று அந்நிறுவனமும், வங்கியும் சொந்தம் கொண்டாடின. ஆனால் வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், அவ்வுறுப்பினர், தனது நிறுவனத்தின் செயல் முறை விதிகளுக்கு ஏற்கனவே உடன்பட்டிருப்பதால், நிறுவனம் பெற்றுள்ள பற்றுரிமையே, வங்கி பெற்றிருக்கும் அடகு உரிமையை விட முதன்மை பெற்றது என்று தீர்ப்புரைத்தது.

Borland's Trustee v. Steel Brothers & Co. Ltd.[2]

இவ்வழக்கின் சங்கதிகள்படி ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளில்,

1. (1886) 12 Ap. Cas 29
2. (1901) 1 Ch 279

அதன் உறுப்பினர் எவரேனும் நொடிப்பு நிலை (bankruptacy) எய்தினால், அவரது பங்குகளை அந்நிறுவனத்தின் இயக்குனர்கள் நிருணயிக்கும் ஒரு குறிப்பிட்ட விலைக்கும், அவர்கள் குறிப்பிடும் ஒரு நபருக்கும் விற்க வேண்டும் என்று வகை முறைகள் செய்யப்பட்டிருந்தன. போர்லண்ட் எனும் பெயருடைய அந்நிறுவனத்தின் பங்குதாரர் ஒருவர், நொடிப்பு நிலை எய்தினார். எனவே அவரது பங்குகள், அவரது பொறுப்பாண்மையர் (Trustee) வசம் வந்தன. இந்நிலையில் நிறுவனத்தின் இயக்குனர்கள், தாங்கள் குறிப்பிடும் விலைக்கு அப்பங்குகளை விற்கும்படி அப்பொறுப் பாண்மையரைக் கோரினார்கள். ஆனால் அவரோ, மேற்படி போர்லண்ட், செயல்முறை விதிகள் கூறும் மேற்கண்ட வகைமுறைகளுக்கு கட்டுப்பட்டவர் அல்ல என்றும், அவர் தனது பங்குகளை அதன் உண்மையான மதிப்பிற்கு விற்க சர்வ சுதந்திரம் கொண்ட வர் என்றும் வாதுரைத்து நீதிமன்றத்தில் வழக்கிட்டார். ஆனால் நீதிமன்றம் இவ் வாதத்தை நிராகரித்து, மேற்படி போர்லண்ட் நிறுவனத்தின் செயல்முறை விதிகளுக்கு எந்த வகையில் கட்டுப்பட்டுள்ளாரோ, அதே வகையில் அவரது பொறுப்பாண்மையரும் கட்டுப்பட்டவர் என்றும், ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்குவதாலேயே, அந்நிறு வனத்தின் செயல்முறை விதிகளில் உள்ளடங்கியுள்ள ஒப்பந்தங்களுக்கும் கட்டுப்படு வதாக பொருளாகிறது என்றும், அவ்வாறு எத்தகு நிபந்தனைகள் மற்றும் வரை முறை களின் அடிப்படையில் பங்குகள் விலைக்கு வாங்கப்பட்டதோ, அதற்குப் பின்னிட்டு, அத்தகு நிபந்தனை களையும், வரைமுறைகளையும் பின்பற்ற வேண்டியதில்லை என்று கூறுதல் சாத்தியமற்ற ஒன்று என்றும், எனவே செயல்முறை விதிகளில் கட்டுப்பட்டுள் ளவாறு அப்பொறுப்பாண்மையரும் செயல்பட வேண்டும் என்றும் தீர்ப்புரைத்தது.

(2) உறுப்பினர்களுடன் கொண்ட தொடர்பில் நிறுவனத்தின் மீதான கட்டுப்பாடு (Binding on Company in its relation to Members):

எவ்வாறு உறுப்பினர்கள் நிறுவனத்திற்கு கட்டுப்பட்டவர்களாக உள்ள னரோ, அவ்வாறு நிறுவனமும் உறுப்பினர்களுக்கு கட்டுப்பட்டதாகவும், நிறுவன செயல்முறை விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டிய கடப்பாடு கொண்டதாகவும் உள்ளது. எனவே ஒரு நிறுவனம், தனது அமைப்பு முறையேட்டையும், செயல்முறை விதிகளையும் மீறி நடந்தால், அதனைத் தட்டிக் கேட்கும் உரிமை அதன் உறுப் பினர்களுக்கு உண்டு. இந்நிலைப்பாட்டை பின்வரும் வழக்கு விளக்குகிறது.

Wood v. Odessa Waterworks Co.[1]

இவ்வழக்கின்படி, உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பங்காதா யத்தை (divident) நிறுவனப் பொதுக் கூட்டத்தில் (general meeting) அதன் இயக்குனர்கள் அறிவிக்க வேண்டும் என்று செயல்முறை விதிகளில் வகை செய்யப் பட்டிருந்தது. ஆனால் இப்பங்காதாயத்தை பணமாகக் கொடுப்பதற்குப் பதிலாக, கடனீட்டுப் பத்திரங்களின் (debentures) வடிவில் கொடுக்கும் பொருட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு கடனீட்டுப் பத்திரங்களின் வடிவில்

1. (1889) 42 Ch D 636

பங்காதாயம் கொடுக்கப்படுவதை எதிர்த்து வட் எனும் ஒரு உறுப்பினர் வழக்கு தொடுத்தார். வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பங்காதாயத்தை இயக்குனர்கள் பொதுக் கூட்டத்தில் அறிவிக்க வேண்டும் என்று செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டிருப்பதே, அதனை பணமாகத்தான் கொடுக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது என்றும், அவ்வாறிருக்க, அதை கடனீட்டுப் பத்திரங்களின் வடிவில் கொடுப்பது முறையல்ல என்றும் கூறி, அவ்வாறு கொடுப்பதிலிருந்து இயக்குனர்களை தடுக்கும்படியிலான உத்தரவு ஒன்றை பிறப்பித்து, மேற்படி வழக்கை முடிவு செய்தது. (நமது இந்திய நிறுவனச் சட்டம், 2013–இன் 123(5)–வது பிரிவில் கூட பங்காதாயத்தை பணமாகத் தவிர வேறு விதத்தில் செலுத்தல் கூடாது என்று கூறப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.)

(3) உறுப்பினர்களுக்கிடையிலான தொடர்பில் அவர்களின் மீதான கட்டுப்பாடு (Binding on Members interse) (அல்லது) உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் எந்த அளவிற்கு கட்டுப் படுத்தப்பட்டுள்ளனர்? (How far binding between Members?):

அடுத்ததாக, நிறுவனத்தின் அமைப்பு முறையேடும், செயல்முறை விதிகளும் ஒரு உறுப்பினரைக் கட்டுப்படுத்தும் வலிமையை மற்றொரு உறுப்பினருக்குக் கொடுக் கிறதா எனும் வினா இங்கு எழுகிறது. இதற்கு விடை பகரும் முகமாக அடுத்து வரும் வழக்கில் கூறப்பட்ட கருத்துரை அமைகிறது.

Welton v. Saffery[1]

இவ்வழக்கில் **நீதிப்பெருமகனார் ஹெர்ஸ்சில் (Lord Herschell)**, ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளானவை, அதன் உறுப்பினர்களுக்கும் அந்நிறு வனத்திற்கும் இடையே ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குகிறது என்பது முற்றிலும் உண்மை; ஆனால் அது நிறுவனத்தின் ஒரு உறுப்பினருக்கும் மற்றொரு உறுப் பினருக்கும் இடையே எவ்வித ஒப்பந்தத்தையும் உருவாக்குவதில்லை என்றும். அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின் வாயிலாக உறுப்பினர்கள் பெற்றுள்ள உரிமைகளை மீறி ஒரு உறுப்பினர் நடந்து கொண்டார் என்பதற்காக, அவர் மீது மற்றொரு உறுப்பினர் நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாது என்றும், இங்கு சம்பந்தப்பட்ட நிறுவனம்தான் அவ்வுறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்க உரிமை படைத்தது என்றும் கூறினார். எனவே அமைப்பு முறையேடும், செயல்முறை விதிகளும் ஒரு உறுப்பினரைக் கட்டுப்படுத்தும் வலிமையை மற்றொரு உறுப்பினருக்குக் கொடுக்கவில்லை என்பது இங்கு தெளிவாகிறது.

எனினும் ஒரு நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவரின் சாதாரண உறுப்பினர் உரிமைகளை (Ordinary Membership Rights) அல்லது தனி உரிமைகளை (Special Rights) பாதிக்கும்படி மற்றொரு உறுப்பினர் நடந்து கொண்டால், அவர் மீது நடவடிக்கை எடுக்க அவ்வுறுப்பினருக்கு உரிமை உண்டு. இது பின்வரும் வழக்கில் விளக்கப்பட்டது.

---

1. (1897) AC 299, 315 : (1895-9) All ER Rep. 567

Pulbrook v. Richmond Consolidated Mining Co.[1]

இவ்வழக்கில் இயக்குனர் ஒருவரை, இயக்குனரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிடாமல் இதர இயக்குனர்கள் தடுத்தனர். இதை எதிர்த்து அவ்வியக்குனர் தொடுத்த வழக்கில், அவர் கூட்டத்தில் கலந்து கொள்வதை இதர இயக்குநர்கள் தடுக்காமலிருத்தல் வேண்டும் என்று அவர்களுக்கு எதிராக நீதிமன்றம் ஆணையிட்டது.

(4) வெளிநபர்களின் மீதான கட்டுப்பாடு (Binding on Outsiders):

உறுப்பினர்களை நிறுவனத்திற்கும், அதுபோல் நிறுவனத்தை உறுப்பினர்களுக்கும் ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேடும், செயல்முறை விதிகளும் எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதையும், உறுப்பினர்களுக்குள் எந்த அளவிற்கு கட்டுப்படுத்துகிறது என்பதையும் நாம் இதுகாறும் கண்டோம். ஆனால் மேற்கண்டவர்களில் எவரும், நிறுவனத்திற்கு அப்பாற்பட்ட வெளியார்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர். அதாவது ஒரு நிறுவனத்திற்கும், மூன்றாம் நபருக்கும் இடையே எவ்வித ஒப்பந்தத்தையும் செயல்முறை விதிகள் உருவாக்குவதில்லை என்பதே இதன் அடிப்படைக் கருத்தாகும்.

யார் வெளியார்? (Who is an Outsider?): இங்கு 'வெளியார்' என்பவர் நிறுவனத்தின் உறுப்பினராக இல்லாதவர் என்று பொருளாகும். சில சமயங்களில் ஒரு உறுப்பினர் கூட, வெளியாராக கருதப்பட வாய்ப்புண்டு. அதாவது உறுப்பினர் என்பவர் தனது 'உறுப்பினர்' எனும் தகுதியின் அடிப்படையில் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் பொழுதுதான், இருவருக்குமிடையே சில உரிமைகளும், பொறுப்புகளும் ஏற்படுகின்றன. அந்த வகையில் ஒரு உறுப்பினர், தான் அந்நிறுவனத்தில் கொண்டுள்ள வேறு தகுதி அல்லது பதவியின் அடிப்படையில் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டால், அவர் ஒரு வெளியாராகவே கருதப்படுவார். இந்நிலைப்பாட்டை பின்வரும் இரு முக்கிய வழக்குகள் விளக்குகின்றன.

Eley v. Positive Government Security Life Ass. Co.[2]

மேற்படி வழக்கில் வாதியாக உள்ள ஈழே என்பவர், நிறுவனத்தின் வழக்குரைஞராக இருக்க வேண்டியது என்றும், அவர் தவறாக நடந்து கொண்டால் தவிர அவரை அப்பதவியிலிருந்து விலக்கக் கூடாது என்றும் செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தது. இங்ஙனம் அந்நிறுவனத்தின் வழக்குரைஞராக இருந்த வாதி ஈழே, அதன் உறுப்பினராகவும் இருந்தார். இவ்வாறு அவர் சில காலம் வரையில் அந்நிறுவனத்தின் வழக்குரைஞராக செயல்புரிந்தார். எனினும், பின்னிட்டு அந்நிறுவனம் அவருக்குப் பதிலாக வேறு வழக்குரைஞர்களை நியமனம் செய்து, அவர்கள் வாயிலாக தங்கள் சட்டப் பிரச்சனைகளை தீர்த்துக் கொண்டு வந்தது. இதையறிந்த மேற்படி ஈழே, நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் வகுக்கப்பட்டுள்ள சரத்துக்களின்படி தன்னை ஒரு வழக்குரைஞராக அந்நிறுவனம் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்

1. (1889) 9 Ch. D. 610
2. (1876) Ex D 881

டது என்றும், இதனால் அது ஒப்பந்த மீறுகை புரிந்துவிட்டது என்றும் கூறி, அந் நிறுவனத்தின் மீது வழக்கிட்டார். ஆனால் அவரது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஏனெனில், அவர் அந்நிறுவனத்தின் உறுப்பினர் எனும் தகுதியில் அல்லாமல், அதன் வழக்குரைஞர் எனும் தகுதியில் வழக்கு தொடுத்துள்ளார்; எனவே அவர் அந் நிறுவனத்தின் உறுப்பினராக இருந்தாலுமே கூட, வேறு தகுதியில் அவர் தொடுத்த வழக்கு அவரை ஒரு வெளியாராகவே காட்டுகிறது என்றும், வெளியார்கள் நிறுவனத் தைக் கட்டுப்படுத்த செயல்முறை விதிகள் துணை போகா என்றும் நீதிமன்றம் கூறியது.

Browne v. La Trinidad[1]

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் 'பி' என்பவர் அந்நிறுவனத்தின் இயக்குனராக இருக்க வேண்டியது என்றும், அவரை 1888–ஆம் ஆண்டு வரை அப்பதவியிலிருந்து விலக்கக் கூடாது என்றும் வகைமுறை செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவர் அதற்கும் முன்பாகவே மேற் படி இயக்குனர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். எனவே தன்னை விடுத்து நிறு வனத்தை நடத்துவதிலிருந்து, அதனை தடுத்து நிறுத்தக் கோரி மேற்கண்ட வழக்கை அவர் தொடுத்தார். அதில் மேற்கண்ட 'பி'–க்கும் அந்நிறுவனத்திற்கும் இடையே எவ்வித ஒப்பந்தமும் இல்லை என்றும், வெளியார் எவரும் நிறுவனத்தின் செயல்முறை விதிகளை அந்நிறுவனத்திற்கு எதிராக வலியுறுத்திச் செயல்படுத்தக் கோர முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்து, 'பி'–யின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

மேற்கண்ட இரு வழக்குகளும் நிறுவனச் சட்டவியலில் சற்று கடுமையான விளைவுகளை ஏற்படுத்திய காரணத்தால், 'வெளியார்' எனும் தகுதியில் நிறுவனங் களுடன் தொடர்பு கொள்பவர், தன்னுடைய வழக்கிற்கு ஆதரவாக எதைச் சுட்டிக் காட்டி வெற்றி பெறுவது எனும் வினா பிந்தய வழக்குகளில் எழுந்தது. இதற்கு விடை கூறிய சில வழக்குகளை பின்வருமாறு காண்போம்.

Duraiswami v. U.I.L. Assurance Co.[2]

மேற்கண்ட இந்திய வழக்கில், நிறுவனத்திற்கெதிராக சில உரிமைகள் உள்ளதாகக் கருதும் வெளியார் ஒருவர், தனது வழக்குக் கோரிக்கைக்கு ஆதரவாக அந்நிறுவனத்தின் செயல்முறை விதிகளைச் சுட்டிக் காட்டி வாதிடுவதைத் தவிர்த்து, அவ்விதிகளுக்கு அப்பாற்பட்டு தனக்கும் அந்நிறுவனத்திற்கும் இடையே ஒரு தனி வகை ஒப்பந்தம் (Special Contract) இருப்பதாகவும், அதனை அந்நிறுவனம் மீறிவிட்டதாகவும் கூறி வாதிடுவாரானால், அவர் வெற்றி பெறக் கூடும் என்று சென்னை உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது.

In Re New British Iron Co.[3]

இவ்வழக்கில் நிறுவனச் செயல்முறை விதிகளின் அடிப்படையில், ஒருவர்

1. (1887) 37 Ch. D. 1
2. AIR 1956 Mad. 316
3. (1898) 1 Ch D 324 : (1895-9) All ER Ext. 1655

அந்நிறுவனத்தின் இயக்குனராக நியமனம் செய்யப்பட்டார். செயல்முறை விதிகளில் அவரது நியமனத்திற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைகள் (terms of article), அவருக்கும் நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டு, அதன் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டது. பின்னிட்டு அவர் அப்பதவியிலிருந்து விலக்கப் பட்டார். இதை எதிர்த்து அவர் தொடர்ந்த வழக்கில், அவர் நிறைவேற்றக் கோருவது அவருக்கும் அந்நிறுவனத்திற்கும் இடையே செயல்முறை விதிகளின் அடிப்படையில் எழுந்த ஒப்பந்தத்தையே தவிர, செயல்முறை விதிகளையே அல்ல என்று கூறி, அவரது கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றது.

Issacs' Case[1]

இவ்வழக்கில், ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் சில சமயங்களில் அதற்கும், ஒரு மூன்றாம் நபருக்கும் (வெளியார்) இடையே ஒரு உட்கிடையான ஒப்பந்தத்தை (Implied Contract) உருவாக்கத்தக்க வகையில் அமைந்துவிடக் கூடும் என்றும், அதனடிப்படையில் அவ்வெளியார் நிறுவனத்தின் மீது வழக்கிடலாம் என்றும் கூறப்பட்டது.

29. What is the procedure for altering the Articles of Association of a Company ? What are the limitations ? (ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளை மாற்றுவதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள முறை யாது? இதற்கான வரம்புகள் யாவை?)

(அல்லது)

What are the Articles of Association? To what extent and how are Articles of Association of a company amended? (செயல்முறை விதிகள் என்றால் என்ன? ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளை எந்த அளவிற்கு எவ்வாறு மாற்றலாம்?)

(அல்லது)

"The statutory power given to the shareholders to amend their Company's Article must be exercised not only in the manner required by law, but also bonafide for the benefit of the company as a whole" - Elucidate. ("நிறுவனத்தின் செயல்முறை விதிகளை மாற்றுவதற்காக பங்குதாரர்களுக்கு சட்டப்படியாக கொடுக்கப்பட்டுள்ள அதிகாரமானது, சட்டத்தால் கூறப்பட்ட முறையின்படி செயல்படுத்தப்படுவதோடு மட்டுமல்லாமல், நிறுவனத்தின் ஒட்டுமொத்த நலனுக்காகவும் நல்லெண்ணத்துடன் செயல்படுத்தப்பட வேண்டும்" - விளக்குக.)

(அல்லது)

Alteration of Articles - Write short notes. (செயல்முறை விதிகளின்

1. (1892) Ch D 158

மாற்றம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Alteration of Articles and its limitations - Write short notes.
(செயல்முறை விதிகளை மாற்றுதல் மற்றும் அதனின் வரம்புகள் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

2013-ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தின் 14-வது பிரிவு செயல்முறை விதிகளை மாற்றும் முறைகளையும், அதற்குள்ள தடைகளையும் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஒரு நிறுவனம் தன் செயல்முறை விதிகளை மாற்றவதற்கு மிக அதிகமான உரிமை பெற்றுள்ளது. அந்த உரிமையை இழப்பதற்கு நிறுவனத்திற்கே உரிமை கிடையாது. எனவே, ஒரு நிறுவனம் இந்த உரிமையைப் பயன்படுத்துவதில்லை என்று ஒப்பந்தம் செய்து கொண்டால், அந்த ஒப்பந்தமே செல்லாததாகிவிடும். அது நிறுவனத்தைச் சிறிதும் பாதிக்காது. ஏனெனில், செயல்முறை விதிகளை மாற்ற, ஒரு நிறுவனத்திற்கு பிரிவு 14 கொடுத்திருக்கும் அதிகாரம் முழுமையானதாகும்.

செயல்முறை விதிகளில் மாற்றம்:

பிரிவு 14(1)–ன்படி, ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளின் மாற்ற மானது சிறப்புத் தீர்மானம் (Special Resolution) ஒன்றினால் செய்யப்பட வேண்டும். செயல்முறை விதிகள், தங்களை மாற்ற சிறப்புத் தீர்மானம் தேவையில்லை என்று குறிப்பிட்டால் அந்த விதிகள் செல்லாதவையாகும். மேலும், முதன்முதலாக உருவாக்கப்பட்ட செயல்முறை விதிகள் எப்படி உறுப்பினர்களை கட்டுப்படுத்தியதோ, அதே போன்று மாற்றப்பட்ட செயல்முறை விதிகளும் உறுப்பினர்களை கட்டுப்படுத் தும், என்று **பிரிவு 14(3)** கூறுகிறது.

வரம்புகள் (Limitations):

ஒரு நிறுவனம், தன்னுடைய செயல்முறை விதிகளை மாற்றிக் கொள்ள முழு உரிமை பெற்றிருந்தாலும், அதன் மீது சட்டங்களும், நீதிமன்றங்களும் சில தடைகளை (வரம்புகளை) விதித்துள்ளன. அவை வருமாறு:

1. செய்யப்படும் மாறுதல் நிறுவனச் சட்டத்திற்கும் மற்றும் அமலில் உள்ள இதர சட்டங்களும் முரணாக இருக்கக் கூடாது.

2. செய்யப்படும் மாறுதல் நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டிற்கு முரணாக இருக்கக் கூடாது. இது குறித்த வழக்கு பின்வருமாறு.

Hutton v. Scarborough Cliff Hotel Co.[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில், புதிய பங்குகளை முன்னுரிமை பங்காதாயத்துடன் (Preference Dividend) வெளியிட அதிகார

1. (1865) 62 ER 717 : 2 Dr & Sm 521

மளிக்கும் வகையில் செயல்முறை விதிகளை மாற்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ஆனால் இப்படிப்பட்ட எந்த அதிகாரமும் அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப் படவில்லை. ஆகவே, இம்மாறுதல், அமைப்பு முறையேட்டிற்கு முரணாக கருதப்பட்டு செல்லாததாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது.

அமைப்பு முறையேடு, ஒன்றினைப் பற்றி எதையும் கூறாமல் மௌனமாக (Silent) இருப்பின், அது எல்லாப் பங்குதாரர்களின் ஒருமித்த நிலையை விரும்புவ தாக நீதிமன்றம் ஊகித்தது. ஆனால் தற்பொழுது நீதிமன்றம் இம்மாதிரி ஊகிக்க மறுக்கிறது. ஏனெனில் அமைப்பு முறையேடு எதை வெளிப்படையாக அல்லது உட்கிடையாக தெளிவாகத் தடை செய்துள்ளதோ, அதனைப் பொறுத்துதான் செயல் முறை விதிகளை மாற்றும் அதிகாரமே அமைந்துள்ளது. அவ்வதிகாரத்திற்கு தெளி வான வரம்பு இருக்க வேண்டும். இல்லையெனில், அது நிறுவனத்தின் அடிப்படை அமைப்பையே மாற்றிவிடக்கூடும்.

இந்நிலைப்பாடுதான், "**நிறுவனத்தின் செயல்முறை விதிகளை மாற்று வதற்காக பங்குதாரர்களுக்கு சட்டப்படியாக கொடுக்கப்பட்டுள்ள அதிகாரமா னது, சட்டத்தால் கூறப்பட்ட முறையின்படி செயல்படுத்தப்படுவதோடு மட்டுமல்லா மல், நிறுவனத்தின் ஒட்டுமொத்த நலனுக்காகவும் நல்லெண்ணத்துடன் செயல் படுத்தப்பட வேண்டும்**", என்று கூறப்படுகிறது.

முன் கண்ட வழக்கின்படி செயல்முறை விதிகளை மாற்றம் செய்வது குறித்த அதிகாரம், அமைப்பு முறையேட்டில் இல்லாததால், அது அமைப்பு முறையேட்டிற்கு முரணாக கருதப்பட்டது. ஆனால் பின்வரும் வழக்கில், செயல்முறை விதிகளில் செய் யப்பட்ட மாற்றத்திற்கு அமைப்பு முறையேட்டில் எவ்வித தடையோ அல்லது வரம்போ குறிப்பிடப்படாததால், அம்மாற்றம் சரியெனப்பட்டது.

Andrews v. Gas Meter Co. Ltd.[1]

இவ்வழக்கில், நிறுவனத்தின் அமைப்பு முறையேடு நிறுவனம் வேண்டும் போது மூலதனத்தை அதிகப்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கியது. ஆனால் அதில் முன்னுரிமைப் பங்குகளை (Preference Shares) பற்றிக் குறிப்பிடவில்லை. நிறுவனம் செயல்முறை விதிகளை மாற்றி, முன்னுரிமைப் பங்குகளை வழங்குவதற்கு அதிகாரம் பெற்றது. அமைப்பு முறையேடு அவ்வித பங்குகளை தடை செய்யாததால் அம்மாறுதல் முற்றிலும் சரியென, நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

3. ஒரு பொது நிறுவனம், ஒரு தனியார் நிறுவனமாக மாற்றப்படுவதற்குச் செயல்முறை விதிகளில் மாறுதல் செய்ய தீர்ப்பாயத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். இதற்கு பொருத்தமான ஆணையை தீர்ப்பாயம் பிறப்பித்தல் வேண்டும். [பிரிவு 14(1)-ன் கீழான வரம்புரை **(proviso)** வாசகம்].

4. மாறுதல் உறுப்பினர்களின் பொறுப்பை அதிகமாக்கினாலும் அல்லது அவர்கள் ஏற்றுக் கொண்ட பங்குகளுக்கு அதிகமான பங்குகளை ஏற்கச் செய்தாலும், அதற்கு உறுப்பினர் ஒவ்வொருவரின் ஒப்புதலையும் பெற வேண்டும்.

1. (1897) 1 Ch 361 : (1895-9) All ER Rep. 1280

5. செயல்முறை விதிகளில் செய்யப்படும் மாறுதல் ஒவ்வொன்றும் மற்றும் மாறுதலுக்கு ஒப்புதல் அளித்து தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணையின் நகல் ஒன்றை. மாற்றம் செய்யப்பட்ட செயல்முறை விதிகளின் அச்சடிக்கப்பட்ட பிரதியுடன் பதினைந்து நாட்களுக்குள் பதிவாளரிடம் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அதைப் பதிவாளர் பதிவு செய்து கொள்வார். **[பிரிவு 14(2)]**. தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணை செயல்முறை விதிகளில் மாற்றம் எதையும் செய்தால், அந்த ஆணைக்கு முரணாக செயல்முறை விதிகளை மாற்ற நிறுவனத்திற்கு அதிகாரம் இல்லை. எனினும் அந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மாற்ற வேண்டுமெனில், அதற்கு அந்நிறு வனம் தீர்ப்பாயத்தின் அனுமதியைப் பெற வேண்டும். **[பிரிவு 242(5)]**.

6. நிறுவனம், தான் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு மாறாகச் செயல் முறை விதிகளை மாற்ற முடியாது (Alteration in Breach of Contract) என்று முன்பு கருதப்பட்டது. ஆனால் இக்கருத்து தவறானது என பின்வரும் வழக்கு தெளிவாக்கியது.

Sothern Foundries Ltd. v. Shirlaw[1]

ஒப்பந்தத்தை மீறியதற்கு நிறுவனம் இழப்பீடு (Damages) தரக் கடமைப் பட்டுள்ளதே தவிர, அவ்வொப்பந்தம் செயல்முறை விதிகளை மாற்றுவதற்கு எவ்விதத் தடையும் செய்ய முடியாது என்பது இவ்வழக்கில் பொதிந்துள்ள கருத்தாகும். இவ்வழக் கின்படி ஒரு நிறுவனத்தின் இயக்குனர், அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குன ராகப் (Managing Director) பத்தாண்டு காலம் வரை அமர்த்தப்பட்டார். பின்னிட்டு அந்த நிறுவனம் வேறொரு நிறுவனத்துடன் இணைந்து (Amalgamated) புதிய செயல்முறை விதிகளை மேற்கொண்டது. புதிய விதிகளின்படி அந்நிறுவனம் இயக் குனர்களைப் பதவியிலிருந்து நீக்கும் உரிமை பெற்றது. மேலும், அவ்விதிகளின்படி இயக்குனர் பதவி இழந்தவர், மேலாண்மை இயக்குனர் பதவியையும் இழக்க வேண்டும். இப்புது விதிகளின்படி வாதி, இயக்குனர் பதவியில் இருந்து விலக்கப்பட் டார். இதன் விளைவாக அவர் மேலாண்மை இயக்குனர் பதவியையும் பத்தாண்டுகள் கழிவதற்கு முன்பாகவே இழந்தார். நீதிமன்றம் புதிய செயல்முறை விதிகள் முறை யானவை என்றும், ஆனால் நிறுவனம் ஒப்பந்தத்தை மீறியதற்கு வாதிக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது.

எனினும் பண வடிவில் இழப்பீடு கொடுக்க முடியாத நேர்வுகளில் என்ன செய்வது என்பதற்குண்டான வழிமுறை முன்னதாக பின்வரும் வழக்கில் உரைக்கப் பட்டுள்ளது.

British Murac Syndicate Ltd. v. Alperton Rubber Co.[2]

இவ்வழக்கில், செயல்முறை விதிகளில் செய்யப்படும் மாறுதலின் காரணமாக எவருக்கேனும் இழப்பு ஏற்பட்டு, அதற்கு பண வடிவில் போதுமான இழப்பீடு தர வாய்ப்பில்லை எனும் பொழுது, அந்த செயல்முறை விதிகளை அமலுக்குக்

1. (1940) AC 701 : (1940) 2 All ER 445
2. (1915) 2 Ch 186

கொண்டு வர நீதிமன்றம் தடை விதிக்க அதிகாரம் படைத்தது எனப்பட்டது.

7. மாறுதல், சிறுபான்மை பங்குதாரர்களை (minority shareholders) ஒடுக்குவதாகவோ (suppress) அல்லது மோசடி (fraud) செய்வதாகவோ இருக்கக் கூடாது.

8. நாம் முந்தைய பக்கத்தில் கண்டவாறு, செயல்முறை விதிகளில் செய்யப் படும் மாறுதல், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் ஒட்டுமொத்த நன்மைக்காக நல்லெண் ணத்துடன் செய்யப்பட வேண்டும். (Alteration must be bonafide for the benefit of the company as a whole).

9. மாறுதல் சட்ட விரோதமானதாக இருக்கக்கூடாது.

30. Distinquish between Memorandum of Association and Articles of Association of a company. (ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டிற்கும் செயல்முறை விதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் குறிப்பிடவும்.)

அமைப்பு முறையேடு [Memorandum of Association]	செயல்முறை விதிகள் [Articles of Association]
1. இது நிறுவனத்தின் அடிப்படை சாசனமாக விளங்குகிறது.	இது நிறுவனத்தின் துணை சாசனமாக விளங்குகிறது.
2. இது நிறுவனத்தின் வெளி நிருவாகத்தைப் பற்றிக் கூறுகிறது. அதாவது, நிறுவனத்திற்கும் வெளி நபருக்கும் இடையே உள்ள தொடர்பை இது குறிப்பிடுகிறது.	இது, நிறுவனத்தின் உள்நிருவாகத்தைப் பற்றிக் கூறுகிறது. அதாவது, நிறுவனம் பங்குதாரர்கள் மற்றும் நிருவாகிகள் ஆகியோர்களுக்கிடையே உள்ள தொடர்பைக் கூறுகிறது.
3. இது நிறுவனத்தின் அடிப்படை உரிமைகளையும் நோக்கங்களையும் எடுத்தியம்புகிறது.	இது நிறுவனத்தின் அடிப்படை உரிமைகளை பயன்படுத்தும் விதத்தை யும், நோக்கங்களை நிறைவேற்றும் வழிமுறைகளையும் கூறுகிறது.
4. இதனை மாற்றுவதற்கு கடினம். நிறு வனச் சட்டத்திற்குட்பட்டு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி மைய அரசின் அனுமதி பெற்று, குறிப்பிட்ட நாட்களுக்குள் மாற்றப்பட்ட அமைப்பு முறையேட்டைபதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.	இதனை மாற்றுவது எளிது. ஒரு சிறப்பு தீர்மானம் நிறைவேற்றினால் அதுவே போதுமானது. (இருப்பினும் இதற்கு சில வரம்புகள் உள்ளன.)

அமைப்பு முறையேடு [Memorandum of Association]	செயல்முறை விதிகள் [Articles of Association]
5. இது, நிறுவனச் சட்டத்தால் கட்டுப் படுத்தப்படுகிறது.	இதனை, அமைப்பு முறையேடும் நிறுவனச் சட்டமும் கட்டுப்படுத்துகிறது.
6. இது ஒரு பொது ஆவணம். எனவே இதனை யார் வேண்டுமானாலும் படிக்கலாம். எத்தடையும் கிடையாது.	இது ஒரு பொதுவான ஆவணமல்ல. எனவே வெளியார் யாரும் இதனை படித்தல் என்பது இயலாது.

31. What is meant by the Doctrine of Constructive Notice ? ('கொள்நிலை அறிவிக்கைக் கோட்பாடு' என்பதன் பொருள் என்ன ?)

(அல்லது) Section 399 (மறு)

Constructive Notice - Write short notes. (கொள்நிலை அறிக்கை - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Constructive Notice Rule - Write short notes. (கொள்நிலை அறிக்கை விதி - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Kotla Venkatasamy Vs. Rammurthy - Write short notes. (கோட்லா வெங்கடசாமி எதிர் ராமமூர்த்தி - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

எந்தவொரு நிறுவனத்தின் அமைப்பு முறையேடும், செயல்முறை விதிகளும் நிறுவனப் பதிவாளரிடம் பதிவு செய்யப்படுகின்றன. பதிவாளரின் அலுவலகம் ஓர் பொது அலுவலகம். ஆகவே, அதில் பதிவு செய்யப்பட்ட மேற்படி ஆவணங்களும் பொது ஆவணங்களாகின்றன (Public documents). அவற்றைப் பார்த்து படித்தறிய பொது மக்களுக்கு அல்லது அதனுடன் தொடர்பு கொள்பவர்களுக்கு உரிமை உண்டு. மேலும் அவற்றின் நகலையும் எடுத்துக் கொள்ளலாம். இது நிறுவனச் சட்டம் வகுத்துக் கொடுத்திருக்கும் ஒரு முக்கிய விதியாகும்.

கொள் நிலை அறிவிக்கைக் கோட்பாடு - விளக்கம்:

இவ்விதியின்படி, நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர் யாவரும் இந்த ஆவணங்களைப் படித்து அவற்றின் விதிகளை சரியான முறையில் புரிந்து கொண் டிருக்க வேண்டும். ஒரு நிறுவனம், தன்னுடன் தொடர்பு கொள்பவர் அனைவரும்

தன்னுடைய நோக்கம் மற்றும் செயல்முறை விதிகளை அறிந்தவராக ஊகிக்கிறது. ஆகவே தம் நிலையைப் பாதுகாத்துக் கொள்ள வெளியாரும், நிறுவன உறுப்பினர் களும், மேற்படி ஆவணங்களைப் படித்து அதனைப் பற்றிய தெளிந்த அறிவினைப் பெற்றிருத்தல் அவசியம். சுருங்கக்கூறின், மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிடப் பட்டுள்ளவைகள், நிறுவனத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ளும் பொது மக்களுக்கு ஒரு **'கொள்நிலை அறிவிக்கையாகும்' (Constructive Notice)**. அதாவது நிறு வனத்தைப் பற்றி அறிந்தவர்களாக அந்நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்களை, பொது மக்களை நிறுவனச் சட்டம் எடுத்துக் கொள்கிறது. இதுவே **"கொள்நிலை அறிவிக்கை கோட்பாடு" (Doctrine of Constructive Notice)** எனப்படுகிறது. இது குறித்த மிக முக்கிய வழக்கு பின்வருமாறு.

Kotla Venkataswamy v. Rammurthy[1]

இவ்வழக்கில் நிறுவனத்தின் அனைத்து ஒப்பாவணங்களிலும் மேலாண்மை இயக்குனரும், செயலாளரும் கையெழுத்திட வேண்டும் என்று செயல்முறை விதிகள் குறிப்பிட்டன. எனினும் செயலாளர் மட்டும் கையெழுத்திட்ட ஒப்பாவணம் ஒன்றை ஒருவர் ஏற்றுக் கொண்டார். இங்கு மேற்கண்ட கோட்பாட்டின்படி, அதில் மேலாண்மை இயக்குனரும், கையெழுத்திட வேண்டும் என்பது அவருக்கு கொள் நிலை அறி விக்கையாகும். ஆகையால் ஒருவர் மட்டும் கையெழுத்து செய்த அந்த ஒப்பாவணம், நிறுவனத்தைப் பாதிக்காது என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

ஒருவர் எவற்றையெல்லாம் கொள்நிலையாக அறிவிக்கை பெற்றவராகக் கருதப்படுகிறார் ?

நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் ஒருவர், அந்நிறுவனத்தின் மேற்படி ஆவணங்களை படித்தறிந்தவராக மட்டுமல்லாமல், அதற்குரிய சரியான பொருளின் படி அவற்றைப் புரிந்து கொண்டவராகவும் உள்ளார் என்றும் மேற்படி கோட்பாடு கூறுகிறது. மேலும், அவர் நிறுவனத்தின் அதிகாரங்களை மட்டும் அறிந்தவராக இல்லாமல், அதன் அலுவலர்களையும் அறிந்தவராக அனுமனிக்கப்படுகிறார். அது போல் நிறுவனத்தின் அமைப்பு முறையேடு, செயல்முறை விதிகள் ஆகிய ஆவணங்கள் குறித்து மட்டும் கொள்நிலை அறிவிக்கை பெற்றவராக அவர் இல்லா மல், பதிவாளரிடம் நிறுவனச் சட்டப்படி பதிவு செய்யப்பட வேண்டிய அந்நிறுவனத்தின் சிறப்புத் தீர்மானங்கள், பற்றுரிமை குறித்த விபரங்கள் உள்ளிட்ட அனைத்து ஆவணங் களையும் அவர் அறிந்தவராக உள்ளார் என்றே மேற்படி கோட்பாடு ஊகிக்கிறது.

இக்கோட்பாட்டில் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றம்:

எனினும் காலப் போக்கில் கொள்நிலை அறிக்கைக் கோட்பாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தால், அதனால் அந்நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்கள் தாம் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்ற கருத்து உருவானது. மேலும், மக்கள் ஒரு நிறுவனத்தை அதனை நிருவகிக்கும் அலுவலர்களின் வழியாகத்தான் காண்கின்

1. AIR 1934 Mad. 579

றனரே தவிர, அதன் ஆவணங்களின் வழியல்ல என்றும் கூறப்பட்டது. இதனால் 1972–ஆம் ஆண்டின் அய்ரோப்பிய சமூகங்களின் சட்டம் (The European Communities Act, 1972) தனது 9–ஆம் பிரிவின் வாயிலாக மேற்கண்ட கொள்நிலை அறிக்கைக் கோட்பாட்டையே நீக்கிவிட்டது. மேலும் பல வழக்குகளில் நமது இந்திய நாட்டின் நீதிமன்றங்களாலும், இக்கோட்பாடு கண்டிப்புடன் பின்பற்றப்படவில்லை. எடுத்துக்காட்டாக, பின்வரும் இரு வழக்குகளைக் கவனிப்போம்.

Dehra Dun Mussorie Electric Tramway Co. v. Jagmandardas[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனத்தின் இயக்குனர்கள், தங்களது கடன் வாங்கும் அதிகாரத்தைத் தவிர பிற அனைத்து அதிகாரங்களையும் மற்ற அலுவலர்களிடம் ஒப்படைக்கலாம் என்று அதன் செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால், அந்நிறுவனத்தின் மேலாண்மை முகவர்கள், இயக்குனரவையின் ஒப்புதல் பெறாமல், வங்கியிலிருந்து இருப்புக்கு மேலான கடன்(மேல்வரைப்பற்று) (overdraft) வாங்கினர். இக்கடன் அந்நிறுவனத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதே என்றும், இவ்வாறு தற்காலிக கடன்கள் வாங்குவதை, செயல்முறை விதிகள் ஏற்படுத்தியுள்ள வகைமுறைகளிலிருந்து விலக்கி வைத்தல் வேண்டும் என்றும் அலகாபாத் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Probodh Chandra v. Road Oils (India) Ltd.[2]

இவ்வழக்கில் நிறுவனச் செயல்முறை விதிகளின்படி கையொப்பமிடப்படாத பிணையம் (security) ஒன்றை வலியுறுத்திச் செயல்படுத்த கல்கத்தா உயர் நீதிமன்றம் ஆணையிட்டது.

32. Explain the 'Doctrine of Indoor Management' and point out its exceptions. ('உட்புற மேலாண்மைக் கோட்பாடு' என்பதை விளக்கி அதன் விதிவிலக்குகளைக் குறிப்பிடவும்.)

(அல்லது)

Explain the doctrine of Indoor Management with illustration cases. ("உட்புற மேலாண்மைக் கோட்பாட்டினை" வழக்குகளுடன் விளக்குக.)

(அல்லது)

What do you mean by the doctrine of Indoor Management? What are the Exceptions to this Doctrine? (உட்புற நடைமுறைக் கோட்பாட்டை விளக்குக. இக்கோட்பாட்டிற் குள்ள பல்வேறு வரையறைகள் யாவை?)

(அல்லது)

What do you mean by the doctrine of Indoor Management? What

1. AIR 1932 All 141
2. ILR (1929) 57 Cal. 1110

are the Exceptions to this Doctrine? Illustrate with case law. (உட்புற நடைமுறைக் கோட்பாடு என்பது பற்றி நீர் அறிவது என்ன? அக்கோட்பாட்டிற்குள்ள விதிவிலக்குகள் யாவை? அதை தகுந்த வழக்குகளுடன் விவரி.)

(அல்லது)

Explain critically the scope and limitations of the doctrine of "Indoor Management". ("உட்புற நடைமுறை" கோட்பாட்டின் நோக்கெல்லை மற்றும் வரம்புகளை செவ்வனே வரையறுத்துக் கூறவும்.)

(அல்லது)

Explain the doctrine of 'Indoor Management.' What are the various limitations to the doctrine? (உட்புற நடைமுறைக் கோட்பாட்டை விளக்குக. இக்கோட்பாட்டிற்குள்ள பல்வேறு வரையறைகள் யாவை?)

(அல்லது)

"Doctrine of Constructive Notice helps the company and Indoor Management helps the outsiders" Narrate this with the help decided cases. ("கொள்நிலை அறிவிப்புக் கோட்பாடு நிறுவனத்திற்கு உதவுகிறது. உட்புற நடைமுறை கோட்பாடு வெளி ஆட்களுக்கு உதவுகிறது". முடிவு செய்யப்பட்ட வழக்குகள் மூலமாக இக்கூற்றை விவரிக்க.)

(அல்லது)

"Constructive notice cautions and indoor management assists the outsiders of the company" Discuss. ("ஒரு நிறுவனத்தின் வெளியாட்களை கொள்நிலை அறிவிப்பு எச்சரிக்கிறது. உட்புற நடைமுறைக் கோட்பாடு அவர்களுக்கு உதவுகிறது"- இக்கூற்றை விவரிக்க.)

(அல்லது)

Examine the Doctrine of Indoor Management as a limitation of the Doctrine of Constructive notice. ('உள்ளாட்சி அதிகாரம்' என்ற கோட்பாடானது 'கொள்நிலை அறிவிக்கை' என்ற கோட்பாட்டிற்கு ஒரு வரையறையாக ஏற்பட்டிருக்கிறது என்பதனை ஆராய்க.)

(அல்லது)

State the rule with exceptions if any, in Royal British Bank Vs. Turquand. (ராயல் பிரிட்டிஷ் பாங்க் - எதிர் - டர்க்குவாண்ட் வழக்கின் விதியைக் குறிப்பிட்டு, அதற்கு விதிவிலக்குகள் ஏதேனும் இருந்தாலும் குறிப்பிடுக.)

(அல்லது)

State the rule in Royal British Bank Vs. Turquand and explain the

basis of the rule. (ராயல் பிரிட்டிஷ் பாங்க் - எதிர் - டர்க்குவாண்ட் வழக்கின் விதியைக் குறிப்பிட்டு, அவ்விதிக்கான அடிப்படையை விளக்குக.)

(அல்லது)

Discuss the Turqand Rule with its exceptions. (டர்க்குவாண்ட் விதியை அதன் விலக்குகளுடன் விவாதி.)

(அல்லது)

Doctrine of Indoor Management - Write short notes. (உள் நிர்வாகக் கோட்பாடு - குறுகிய விடை எழுதுக.)

கொள்நிலை அறிவிக்கைக் கோட்பாடு - எதிர் - உட்புற மேலாண்மைக் கோட்பாடு (Doctrine of Constructive Notice Vs. Doctrine of Indoor Management):

அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின் கொள்நிலை அறிவிக்கை கோட்பாட்டிற்கு எதிரான ஒரு கோட்பாடாக இந்த உட்புற மேலாண்மைக் கோட்பாட்டினைக் குறிப்பிடலாம். 'கொள்நிலை அறிவிக்கை கோட்பாடு' என்பது, வெளியார்களிடமிருந்து நிறுவனத்தைக் காப்பாற்றுகிறது. 'உட்புற மேலாண்மைக் கோட்பாடு' என்பது நிறுவனத்திடமிருந்து வெளியார்களை காப்பாற்றுகிறது. இங்கு 'உட்புற மேலாண்மைக் கோட்பாடு' என்பதின் பொருளை அறிந்து கொள்ளல் அவசியம்.

உட்புற மேலாண்மைக் கோட்பாடு - விளக்கம்:

ஒரு நிறுவனம், உட்புற நடைமுறைகளை (Internal formalities) பின்பற்றியதா இல்லையா என்பதை பொது மக்கள் ஆராய வேண்டியதில்லை. அந்நிறுவனம், அவை யாவற்றையும் பின்பற்றியுள்ளதாக அவர்கள் ஊகித்துக் கொள்ளலாம். உண்மையில் நிறுவனம் அவற்றைப் பின்பற்றாவிட்டாலும், நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் பொது மக்கள் (வெளியார்கள்) அதனால் பாதிக்கப்படமாட்டார்கள். கொள்நிலை அறிவிக்கையின் இந்த வரம்பிற்கு, **உட்புற மேலாண்மைக் கோட்பாடு** (Doctrine of Indoor Management) என்று பெயர். இக்கோட்பாடு, பின்வரும் வழக்கில் கூறப்பட்ட விதியிலிருந்து (Rule) எழுகிறது.

Royal British Bank v. Turquand[1]

இவ்வழக்கில், நிறுவனத்தின் இயக்குனர்கள், நிறுவனப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்து (bond) கடன் பெற அதிகாரமுடையவர்கள் என நிறுவனத்தின் செயல்முறை விதிகள் குறிப்பிடுகின்றன. ஆனால், அவர்கள் நிறுவனத்தின் தீர்மானமின்றி டர்க்குவாண்ட் என்பவருக்கு கடன் பத்திரம் எழுதிக் கொடுத்து அவரிடமிருந்து கடன் பெற்றனர்.

1. (1856) 119 ER 886

இக்கடன் தங்கள் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது என்று அதன் பங்குதாரர்கள் வழக்கிட்டனர். இங்கு டர்க்குவாண்ட் என்பவர் உண்மையில் நிர்வாகம் நிறைவேற்றப் பட்டதா என்று ஆராய வேண்டிய அவசியமில்லை என்றும், கடன் பெறுவதற்கு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அதன் இயக்குனர்களுக்கு எப்பொழுது அதிகாரம் வழங்கியிருந்ததோ, அப்பொழுதே அவர்கள் கடன் பெறுவதற்கான நிர்வாகமும் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக அனுமானிக்க டர்க்குவாண்ட்–ற்கு உரிமை உண்டு என்றும், எனவே அவரிடமிருந்து பெற்ற கடனுக்கு நிறுவனம் பொறுப்பேற்றே ஆக வேண்டும் என நீதிமன்றம் முடிவு செய்தது. இதுவே டர்க்குவாண்ட் வழக்கின் விதி (Rule in **Turquand Case**) எனப்படுகிறது.

விதிவிலக்குகள் (Exceptions):

'உட்புற மேலாண்மைக் கோட்பாடு' எனும் மேற்படி டர்க்குவாண்ட் வழக்கு விதிக்கு சில விதி விலக்குகளை (Exceptions), நீதிமன்றங்கள் தம் முன் எழுந்த பல வழக்குகளில் வகுத்துக் கொடுத்துள்ளன. அவற்றின் தொகுப்பு வருமாறு.

1. ஒழுங்கீனத்தை அறிந்திருத்தல் (Knowledge of Irregularity):

நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் ஒரு நபர், அந்நிறுவனத்தின் உட்புற மேலாண்மையின் ஒழுங்கீனத்தைப் பற்றி உண்மையாகவே அறிந்திருந்தால், அவர் உட்புற மேலாண்மைக் கோட்பாட்டின் பயனைப் பெற முடியாது.

Howard v. Patent Ivory Manufacturing Co.[1]

இவ்வழக்கில், நிறுவனத்திற்காகக் கடன் பெறுவதற்கு இயக்குனர்களுக்கு அதிகாரம் இருந்தது. ஆனால் ஆயிரம் பவுண்டு பணத்திற்கு மேல் கடன் வாங்க நிறுவனப் பொதுக் கூட்டத்தின் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் அந்நிறுவனத்தின் இயக்குனர்களே, அதற்கு 3500 பவுண்டு பணத்தை கடனாக வழங்கி, பின் அத்தொகையை கடனீட்டுப் பத்திரங்கள் மூலம் கடனாகப் பெற்றுக் கொண்டனர். எந்த அளவிற்கு கடன் பெறலாம் என்பதும், அந்த அளவிற்கு மேலாகக் கடன் பெற வேண்டுமெனில் நிறுவனப் பொதுக் கூட்டத்தின் அனுமதி வேண்டும் என்பதும், அவ்வியக்குனர்களுக்குத் தெரியும். அப்படியிருக்க, அனுமதி பெறாமல், கடன் பெறும் அளவை மீறி அவ்வியக்குனர்களே தங்கள் பணத்தை கடனாக வழங்கியிருப்பது, ஒழுங்கீனமாகும். அறிந்தே ஒழுங்கீனத்தில் ஈடுபட்டதால், அவர்களுக்கு உட்புற மேலாண்மைக் கோட்பாட்டின் பலனை அளிக்க முடியாது என்றும், அவர்கள் பெற்ற கடனீட்டுப் பத்திரங்கள் 1000 பவுண்டு பணம் வரைதான் செல்லும் என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது.

2. நிறுவனத்தின் ஒழுங்கீனமான நடத்தைப் பற்றி சந்தேகம் கொண்டிருத்தல் (Suspicion of Irregularity):

ஒரு நிறுவனம் தனது உட்புற மேலாண்மையை நிறுவனச் சட்டமும், இதர சட்டங்களும் வகுத்துள்ள முறைப்படி நிருவகிக்க வேண்டும். இதற்கு முரணமாக

1. (1888) 38 Ch D 156

நடத்தல் ஒழுங்கீனமாகும். ஒரு நிறுவனத்தின் நடத்தை ஒழுங்கீனமானது எனும் சந்தேகம் எழுந்த பின்பும் அதனுடன் தொடர்பு வைத்துக் கொள்பவர்களுக்கு, உட்புற மேலாண்மைக் கோட்பாடு உதவிக்கு வராது.

Anand Bihari Lal v. Dinshaw & Co.[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனத்தின் கணக்காயர் (Accountant) அந்நிறுவனச் சொத்தை மற்றொருவருக்கு உரிமை மாற்றம் செய்தார். சாதாரணமாக ஒரு கணக்காயருக்கு நிறுவனத்தின் சொத்தை உரிமை மாற்றம் செய்யும் அதிகாரம் கிடையாது. இதை அனைவரும் அறிவர். அப்படியிருக்க, சந்தேகத் திற்கிடமான இச்சூழ்நிலையில் மேற்படி கணக்காயரிடமிருந்து நிறுவனத்தின் சொத்தை வாங்கியது செல்லாது என நீதிமன்றம் முடிவு செய்தது.

3. பொய்யாவணம் புனைதல் (Forgery):

டர்க்குவாண்ட் வழக்கில் கூறப்பட்ட விதியின்படி, ஒரு நிறுவனத்தின் உட்புற மேலாண்மையை வெளியார்கள் அறிந்து வைத்திருக்க வேண்டியதில்லை; ஒரு நிறுவனம் தனது உட்புற மேலாண்மையில் செய்யும் செயல்களுக்கு, அதுவே பொறுப்பாகும். ஆனால் ஒரு நிறுவனத்தின் அலுவலர்கள், அதன் அதிகாரமின்றி செய்யும் ஒரு முழுமையான பொய்யாவணம் புனைதல் (complete forgery) செயலுக்கு, அந்நிறுவனம் பொறுப்பாகாது; சம்பந்தப்பட்ட அலுவலர்களே பொறுப்பு. எனவே பொய்யாவணம் புனைதல் என்பது டர்க்குவாண்ட் வழக்கு விதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட ஒன்று. இந்நிலைப்பாட்டை பின்வரும் வழக்கு விளக்குகிறது.

Ruben v. Great Fingall Consolidated Ltd.[2]

இவ்வழக்கில் நிறுவனத்தின் செயலாளர், பங்கு சான்றிதழில் மோசடியான முறையில் நிறுவனத்தின் முத்திரையிட்டு, இரண்டு இயக்குனர்களின் கள்ளக் கையெழுத்திட்டு வழங்கினார். இக்கையெழுத்துக்கள் உண்மையானதா, கள்ளத்தன மானதா என்று கூற வேண்டிய அதிகாரம் அந்நிறுவனத்திற்குத்தான் உண்டு என்றும், எனவே, இது அந்நிறுவனத்தின் உட்புற மேலாண்மையைச் சார்ந்தது என்றும், அவற்றின் உண்மைத்தன்மையை (genuineness) மறுப்பதிலிருந்து அந்நிறுவனம் முரண்தடை (estopped) செய்யப்பட வேண்டும் என்றும் அப்பங்குச் சான்றிதழைப் பெற்றவர் வாதிட்டார். ஆனால் அச்சான்றிதழ், கள்ளத்தனமானதா அல்லது உண்மை யானதா என்று கூற அச்செயலாளருக்கு எவ்வித அதிகாரத்தையும் அந்நிறுவனம் உள்ளபடியாகவோ, உட்கிடையாகவோ அளிக்கவில்லை. எனவே, இது அந்நிறுவனத் தின் உட்புற மேலாண்மையைச் சார்ந்தது ஆகாது. இதனால் அச்சான்றிதழ் கள்ளத் தனமானது என்று அந்நிறுவனம் மறுக்கலாம் என்றும், இத்தகு பொய்யாவணம் புனைதல், டர்க்குவாண்ட் வழக்கில் கூறப்பட்ட விதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட தாகும் என்றும், அதற்கு நிறுவனம் பொறுப்பல்ல என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

1. AIR 1942 Oudh 417
2. (1908) AC 439

4. வெளிப்படையான அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட செயல் (Acts outside Apparent Authority) :

ஒரு நிறுவனத்தின் அலுவலர் மூன்றாம் நபருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, அவரின் செயல் அவரது அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாயின் நிறுவனம் அதற்கு பொறுப்பல்ல. டர்க்குவாண்ட் வழக்கு விதியின் பாதுகாப்பைக் கோர முடியாது.

Kreditbank Cassel v. Schenkers[1]

இவ்வழக்கில், ஒரு நிறுவனத்தின் கிளை மேலாளர் நிறுவனத்திற்காக ஏழு மாற்று சீட்டுகளை (Bill of Exchange) வரைந்தார். இப்படி மாற்றுச் சீட்டுகளை வரைய இவர் மேற்படி நிறுவனத்திடமிருந்து எவ்வித அதிகாரத்தையும் பெற்றிருக்க வில்லை. ஆகவே அதிகாரவரம்பு மீறிய இவரது செயலுக்கு நிறுவனம் பொறுப்பல்ல என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

Underwood Ltd. v. Bank of Liverpool[2]

இவ்வழக்கில், நிறுவனத்திற்குரிய காசோலைகளை அதன் இயக்குனர் ஒருவர், தன் கணக்கில் (Account) வரவு வைத்துக்கொள்ளும்படி கூறினார். இங்கு அவர் தன்னுடைய வெளிப்படையான அதிகாரத்தை மீறியுள்ளதால், அதற்கு நிறுவனம் கட்டுப்பட வேண்டியதில்லை என்று தீர்ப்புரைக்கப்பட்டது.

5. செயல்முறை விதிகளை அறியாதிருத்தல் (No Knowledge of Articles of Association) :

இது 'டர்க்குவாண்டு வழக்கு விதிக்கு' முற்றிலும் முரணாகவும், குழப்பம் மிகுந்ததாகவும் உள்ளது. இதன்படி, ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டையும் செயல்முறை விதிகளையும் படித்தறியாமல், ஒருவர் அந்நிறுவனத்துடன் தொடர்பு கொண்டால் அவருக்கு 'உட்புற மேலாண்மைக் கோட்பாடு விதி' எவ்வித பாது காப்பையோ அல்லது பயனையோ தராது. இது குறித்த வழக்கு வருமாறு :

Rama Corporation v. Proved Tin and General Investment Co.[3]

இவ்வழக்கில், நிறுவனத்தின் இயக்குனர்கள் தங்களுடைய அதிகாரத்தை மற்றவர்களிடம் ஒப்படைக்கலாம் (delegate) என்று அதன் செயல்முறை விதிகள் கூறின. அதன் இயக்குனர் ஒருவர், வாதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். ஆனால் மேற்படி இயக்குனரைக் கொண்ட பிரதிவாதி நிறுவனம், தன் பொறுப்பை மறுத்தது. இயக்குனருக்கு அவ்வதிகாரம் வழங்கப்படாத காரணத்தால் நீதிமன்றம், இயக்குனரின் செய்கை அவரது அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்டது என்றும், செயல்முறை விதிகள் அவ்வதிகாரத்தை ஒப்படைக்க அதிகாரம் வழங்கினா லும், அவ்விதிகளையே அறியாத வாதி நிறுவனம் அவற்றை பிரதிவாதி நிறுவனத் திற்கு எதிராக பயன்படுத்த முடியாது என்றும் முடிவு செய்தது.

1. (1927) All ER 421 : (1927) 1 KB 826 (CA)
2. (1924) 1 KB 775 : (1924) ALL ER Rep 230
3. (1952) 2 QB 147 : (1952) 1 ALL ER 554

திட்ட அறிவிப்பு அல்லது தகவலறிக்கை
[Prospectus]

33. What is meant by a Prospectus? Explain the remedies available to a party for Untrue Statements in a Prospectus. (திட்ட அறிவிப்பு என்றால் என்ன? ஒரு திட்ட அறிவிப்பில் செய்யப்பட்ட உண்மையற்ற கூற்றுகளினால் பாதிக்கப்பட்ட நபருக்கு கிடைக்கும் தீர்வழிகளை விளக்குக.)

(அல்லது)

4 **Define prospectus. What are the consequences of misrepresentations in it?** (திட்ட அறிவிப்பை வரையறு. அதில் செய்யப்படும் தவறான கூற்றுகளின் விளைவுகள் யாவை?)

(அல்லது)

Define prospectus. Discuss the remedies for the misrepresentation in a prospectus. (திட்ட அறிவிப்பை வரையறு. திட்ட அறிவிப்பில் உள்ள திரித்துக் காட்டுதலுக்கன

தீர்வு வழிகளை விவாதி.)

(அல்லது)

What is meant by a Prospectus of a Company ? Explain the remedies for mis-statements in the Prospectus. (நிறுவனக்கின் திட்ட அறிவிப்பைப் பற்றி அறிவது என்ன? திட்ட அறிவிப்பில் கிரிக்குள்ள விபரப்பட்டிக்கான நிவாரணத்தை விளக்குக.)

(அல்லது)

Define prospectus. Explain the civil and criminal liability for mis-statement. (திட்ட அறிவிப்பு என்பதனை வரையறுக்கு திட்ட அறிவிப்பில் தவறான தகவல் கொடுப்பதால் விளையும் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்படைவினை விளக்கவும்.)

(அல்லது)

What is 'Prospectus'? Who are responsible and what is the nature and extent of their liability for untrue statements or omissions made in the prospectus? (திட்ட அறிவிப்பு என்றால் என்ன? திட்ட அறிவிப்பில் செய்யப்படும் உண்மையற்ற கூற்றுகள் அல்லது விடுகைகளுக்கு யார் பொறுப்பு மற்றும் அவர்களது பொறுப்பின் தன்மை மற்றும் அளவுகை யாது?)

(அல்லது)

Define prospectus. Discuss the Golden Rule of framing a Prospectus. (திட்ட அறிவிப்பை வரையறு. ஒரு திட்ட அறிவிப்பைத் தயாரிப்பதற்கான பொன் விதியை விவாதிக்க.)

(அல்லது)

What is the golden rule for framing of Prospectus? Specify the legal consequences of Untrue Statements in the Prospectus. (திட்ட அறிவிப்பை தயாரிப்பது குறித்தான பொன்விதி என்றால் என்ன ? திட்ட அறிவிப்பில் உள்ள உண்மையற்ற கூற்றுகளின் சட்ட விளைவுகளை குறிப்பிடுக.)

(அல்லது)

What is golden rule in framing Prospectus? What are the remedies available to deceived share holder who purchased shares relying on the mis-statement in Prospectus? (திட்ட அறிவிப்பு தயாரிப்பதில் கடைப்பிடிக்க வேண்டிய பொன்விதி யாது? திட்ட அறிவிப்பில் வெளியிடப்பட்ட பொய்யான சங்கதிகளை நம்பி பங்கு வாங்கி ஏமாற்றமடைந்த பங்குனருக்குள்ள பரிகாரங்கள் யாது?)

(அல்லது)

State the "Golden rule" in framing the prospectus of a company. Discuss the civil and criminal liabilities for misstatements in a prospectus and the defences to those liabilities. (ஒரு நிறுவனத்தின் திட்ட அறிவிப்பை தயாரிப்பது குறித்தான பொன் விதியைக் குறிப்பிடுக. திட்ட அறிவிப்பில் உள்ள உண்மையற்ற கூற்றுகளின் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்புகளையும், அப்பொறுப்புகளுக்கான எதிர்வாதங்களையும் விவாதிக்க.)

(அல்லது)

What is the most important rule regarding framing of a prospectus? Examine the legal consequences of untrue statements in a prospectus? (திட்ட அறிவிப்பு தயாரிப்பது தொடர்பான இன்றியமையாத விதி எது? திட்ட அறிவிப்பிலுள்ள பொய்யான கூற்றுகளின் சட்டரீதியான விளைவுகளை ஆராய்க.)

(அல்லது)

Prospectus - Write short notes. (திட்ட அறிவிப்பு -குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Golden Rule - Write short notes (பொன் விதி - குறுகிய விடை எழுதுக.)

திட்ட அறிவிப்பு - விளக்கம் :

ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்குத் திட்ட அறிவிப்பைத் தயாரிப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஒரு பொது நிறுவனத்தின் பங்கையோ (share) அல்லது கடனீட்டுப் பத்திரத்தையோ (debenture) பொதுமக்கள் வாங்கிட அவர்களுக்கு நிறுவனம் விடும் ஓர் அழைப்பே **'திட்ட அறிவிப்பாகும்' (Prospectus)**. இது ஒரு அறிவிக்கை, புத்தகம் அல்லது விளம்பரம் போன்ற அமைப்பில் இருக்கும். திட்ட அறிவிப்பு ஒவ்வொன்றும் தேதியிடப்பட்டிருக்க வேண்டும். திட்ட அறிவிப்பை பொது மக்களுக்கு வெளியிடுவதற்கு முன்பு அதில் எல்லா இயக்குனர்களும் கையெழுத்திட

வேண்டும். மேலும் அதன் ஒரு படிவை பதிவாளரிடம் பதிவுக்காக தாக்கல் செய்ய வேண்டும். பதிவாளரிடம் தாக்கல் செய்த 90 நாட்களுக்குள் திட்ட அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும். திட்ட அறிவிப்பு பதிவு செய்யப்படாவிட்டால் தள்ளுபடியாகும்.

திட்ட அறிவிப்பு - வரையறை (Definition of Prospectus) :

2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **2(70)-வது பிரிவில்** 'திட்ட அறிவிப்பு' வரையறை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, திட்ட அறிவிப்பு என்பது, "திட்ட அறிவிப்பென விவரிக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஆவணம் எதையும் குறிப்பதோடு, அது ஒரு கூட்டுறு அமைப்பின் பிணையங்களை[1] (பங்குகளை அல்லது கடனீட்டுப் பத்திரங்களை) வாங்கும்படி அல்லது அவற்றிற்கு சந்தா (ஆதரவு) வழங்கும்படி பொது மக்களிடமிருந்து முனைவுகளை அழைக்கும், பிரிவு 32-இல் குறிப்பிடப்பட்ட **முதனிலை திட்ட அறிவிப்பு (Rod-horring Prospectus)** அல்லது பிரிவு 31-இல் குறிப்பிடப்பட்ட **'ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பு' (Shelf Prospectus)** அல்லது அறிவிப்பு, சுற்றறிக்கை, விளம்பரம் அல்லது வேறு வகையான ஆவணம் எதையும் உள்ளடக்கியது என்று பொருள்படும்"[2]

பொது நிறுவனம் மற்றும் தனி நிறுவனம் தங்கள் பிணையங்களை வெளியிடுதலும் திட்ட அறிவிப்பும்:

2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 23(1)**-இன்படி, பொது நிறுவனம் ஒன்று பொது மக்களுக்கு திட்ட அறிவிப்பு வெளியிடுவதன் மூலம் தனது பிணையங்களை (பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள்) வாங்கும்படி அழைக்கலாம். இது **பொது முனைவு (Public Offer)** எனப்படுகிறது. அதே நேரம் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் அடங்கிய குழு ஒன்றுக்கு தனிப்பட்ட முறையில் முனைவுக் கடிதம் **(Private Placement Offer Letter)** வழங்கி தனது பிணையங்களை

---

1. பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது கூட்டுறு அமைப்பு வேறு எதனின் பங்குகள், பங்குச் சான்றிதழ், பங்கு முதல் தொகுதிகள், பிணைமுறிகள், கடனீட்டுப் பத்திரங்கள், கடனீட்டுப்பத்திர முதல் தொகுதி அல்லது அதையொத்த தன்மையுடைய சந்தைப்படுத்தப் படக் கூடிய பிணையங்கள் வேறு எதுவும் பிணையங்கள் என்பதில் உள்ளடங்கியதாகும்.
   ["Securities" include shares, scrips, stocks, bonds, debentures, debenture stock or other marketable securities of a like nature in or of any incorporated company or other body corporate - **Section 2(81) of the Companies Act, 2013 r/w Section 2(h) of the Securities Contracts (Regulation) Act, 1956]**

2. **"Prospectus"** means any document described or issued as a prospectus and includes a red herring prospectus referred to in section 32 or shelf prospectus referred to in section 31 or any notice, circular, advertisement or other document inviting offers from the public for the subscription or purchase of any securities of a body corporate.
   - Section 2(70) of the Companies Act, 2013.

வழங்கலாம் அல்லது பிணையங்களை வாங்கும்படி அழைக்கலாம். இது **தனிமுறை வழங்குதல் (Private Placement)** எனப்படுகிறது.

பிரிவு 23(2)–இன்படி ஒரு தனியார் நிறுவனம் தனது பிணையங்களை ஏற்கனவே இருக்கும் தனது பங்குதாரர்களுக்கு திட்ட அறிவிப்பு வெளியிடுவதன் மூலம் உரிமைப் பங்குகள் அல்லது மீதூதிய பங்குகளை (rights issue or bonus issue) வழங்கலாம். மேற்கண்ட தனிமுறை வழங்குதல் மூலமும் வழங்கலாம்.

திட்ட அறிவிப்பின் பதிவு குறித்த வகைமுறைகள்:

பதிவுக்காக வழங்கப்படும் திட்ட அறிவிப்பு ஒன்றில் என்னென்ன விடயங்கள் அடங்கியிருக்க வேண்டும் என்று **பிரிவு 26(1)** பட்டியலிட்டுக் காட்டுகிறது. அதில் ஒரு நிறுவனம் தனது பதிவு அலுவலகம், நிறுவனச் செயலாளர், முதன்மை நிதி அலுவலர், தணிக்கையாளர்கள், சட்ட ஆலோசகர்கள், வங்கியர்கள் ஆகியோர்களின் பெயர் முகவரி குறித்த விடயங்கள் தொட்டு நிறுவனத்தை உருவாக்கும் தோற்றுவிப் பாளர்களின் பங்களிப்பிற்கான ஆதாரங்கள் வரை 14 விடயங்களை ஒரு நிறுவனம் தர வேண்டும். மேலும் அந்நிறுவனம் தனது நிதிநிலை குறித்த தகவல் நோக்கங்களுக் காக பெற்ற பல்வேறு அறிக்கைகளை குறிப்பிட வேண்டும். அப்பொழுதுதான் அத் திட்ட அறிவிப்பு பதிவுக்கு உகந்த ஒன்றாகிறது.

திட்ட அறிவிப்பின் நகல் ஒன்றை நிறுவனங்களின் பதிவளாரிடம் பதிவுக்கு கொடுக்காமல் அதை வெளியிடுதல் ஆகாது. அதை திட்ட அறிவிப்பு வெளியிடப்படும் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவாளரிடம் வழங்க வேண்டும். மேலும் திட்ட அறிவிப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட இயக்குனர்கள் அனைவரும் அதில் கையொப்பமிட்டிருக்க வேண்டும். **[பிரிவு 27(4)]**.

திட்ட அறிவிப்பை பதிவு செய்தல் தொடர்பாக பிரிவு 27 கூறும் தேவைகளை பூர்த்தி செய்யாததும், அதில் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் அனைவரின் எழுத்துப் பூர்வமான இசைவுக் கடிதம் இல்லாமலும் வழங்கப்படும் திட்ட அறிவிப்பை பதிவாளர் பதிவு செய்தல் ஆகாது. **[பிரிவு 27(7)]**.

திட்ட அறிவிப்பின் நகல் ஒன்றை மேற்சொன்னவாறு பதிவாளரிடம் வழங்கிய தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் திட்ட அறிவிப்பை நிறுவனம் வெளியிட வேண்டும். இந்த காலஅளவைக் கடந்து வெளியிடப்படும் திட்ட அறிவிப்பு செல்லாது. **[பிரிவு 27(8)]**.

திட்ட அறிவிப்பை தயாரிப்பது குறித்தான பொன் விதி (Golden Rule for framing of Prospectus) :

திட்ட அறிவிப்பின் அடிப்படையில்தான், முதலீடு செய்ய விரும்புகின்ற பொது மக்கள் நிறுவனத்தின் பிணையங்களை அதாவது பங்குகளையும், கடனீட்டுப் பத்திரங்களையும் வாங்க தூண்டப்படுகின்றனர். எனவே தோற்றுவிப்பாளர்கள் (Pro-moters) மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அதனைத் தயாரிக்க வேண்டும்.

திட்ட அறிவிப்பு தவறுதலாக இருந்தாலும், உண்மைகள் மறைத்து வைக்கப்பட்டாலும், அது **'உண்மையற்ற கூற்றுகள் அடங்கிய திட்ட அறிவிப்பு' (Prospectus containing untrue or mis-statements)** எனப்படும். எனவே இதனை அதிக கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் தயாரிக்க வேண்டும்.

'திட்ட அறிவிப்பு தயாரிப்பது குறித்தான பொன் விதி' என்பது, **New Brunswick and Canada Rly. and Land Co. v. Muggeridge**[1] எனும் வழக்கில் உருவாக்கப்பட்டதாகும். அதன்படி, திட்ட அறிவிப்பு வெளியிடுவதற்கு பொறுப்பான தோற்றுவிப்பாளர்கள், இயக்குனர்கள் ஆகியோர் ஒரு திட்ட அறிவிப்பை பின்வருமாறு தயாரித்து வெளியிட வேண்டும். அவை,

1. நிறுவனம் தொடர்பான அனைத்து உண்மைகளையும் அதில் வெளியிட வேண்டும்.
2. அவை துல்லியமானதாக இருக்க வேண்டும்.
3. உண்மையல்லாத எதையும் உண்மையென உரைத்தல் கூடாது. (Nothing should be stated as fact which is not so);
4. பங்குகளை வாங்க பொது மக்களைத் தூண்டக் கூடிய விதத்தில் உள்ள நன்மைகள் மற்றும் சிறப்புரிமைகளின் தன்மையை அல்லது தரத்தை எந்த அளவிலேனும் பாதிக்கக் கூடிய உண்மை எதுவும் இருப்பதை குறிப்பிடாமல் விட்டுவிடக் கூடாது. (No fact should be omitted the existence of which might in any degree affect the nature or quality of the privileges and advantages which the prospectus holds out as inducement to take shares). சுருங்கக் கூறின் நிறுவனச் செயற்பாட்டின் உண்மையான தன்மையை திட்ட அறிவிப்பு வெளியிட வேண்டும்.

மேற்கண்டவைதாம் திட்ட அறிவிப்பு தயாரிப்பது குறித்தான பொன்விதி எனப்படுகிறது.

திட்ட அறிவிப்பில் உண்மையற்ற கூற்றுகளைக் கொடுத்தலும் அதன் சட்ட விளைவுகளும் மற்றும் அதற்கான தீர்வழிகளும்:

மேற்கண்ட பொன்விதியை மதியாமல், திட்ட அறிவிப்பில் உண்மையற்ற, பொய்க் கூற்றுகளைக் கொடுத்தால், அவற்றிற்குப் பொறுப்பானவர்கள் தீங்கியல், உரிமையியல், குற்றவியல் முதலான சட்டங்கள் விதிக்கும் பொறுப்பிற்கும், தண்டனைக்கும் ஆளாகின்றனர். உண்மையற்ற கூற்றுகளினால் பாதிக்கப்பட்டவர், உரிய தீர்வழிகளைக் கோரவும் உரிமையுண்டு.

1. (1860) 3 LT 651 : 30 LJ Ch 242

உண்மையற்ற கூற்றுகளின் இரு வகைகள் :

உண்மையற்ற கூற்றுகள் (Untrue Statements) இரு வகைப்படும். அவை:–

(அ) திட்ட அறிவிப்பில் சேர்க்கப்பட்ட ஒரு கூற்று, அது எதற்காக அதில் சேர்க்கப்பட்டதோ அதன் அமைப்பு மற்றும் பொருளில் தவறாக வழிநடத்திச் சென்றால், அக்கூற்று உண்மையற்ற கூற்றாக கருதப்படும். (a statement included in a prospectus shall be deemed to be untrue, if the statement is misleading in the form and context in which it is included);

(ஆ) தவறாக வழிநடத்திச் செல்லக் கூடியது என்று திட்டமிடப்பட்ட விடயம் எதையும் திட்ட அறிவிப்பு ஒன்றில் கூறாமல் விடுக்குமிடத்து, அத்தகு விடுகையைப் பொறுத்து, அத்திட்ட அறிவிப்பு ஒரு உண்மையற்ற கூற்று சேர்க்கப்பட்ட திட்ட அறிவிப்பாகக் கருதப்படும். (where the omission from a prospectus of any matter is calculated to mislead, the prospectus shall be deemed, in respect of such omission, to be a prospectus in which an untrue statement is included.)

திட்ட அறிவிப்பில் செய்யப்படும் விடுகை அல்லது உண்மையற்ற மற்றும் தவறாக வழிநடத்தும் கூற்றுகளினால் ஏற்படும் விளைவுகள் அல்லது பொறுப்புகள் (Consequences or Liabilities for Omission or Mis-statements and Mis-leading statements) :

திட்ட அறிவிப்பு ஒன்றில் ஒரு நிறுவனம் குறிப்பிட வேண்டிய பல்வேறு முக்கிய விடயங்களைப் பற்றி **பிரிவு 26(1)(a)** பட்டியலிட்டுக் காட்டுகிறது. அந்த விடயங்களைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டால் அல்லது அதற்கு முரணாக திட்ட அறிவிப்பை தயாரித்து வெளியிட்டால், அந்நிறுவனத்திற்கு 50000 ரூபாய்க்கு குறையாத ஆனால் 3 இலட்ச ரூபாய்க்கு மிகாத அபராதம் விதிக்கப்படும். மேலும் அவ்வாறு திட்ட அறிவிப்பை வெளியிட்டதில் தரப்பினராக உள்ள நபர் ஒவ்வொருவரும் 3 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை அல்லது 50000 ரூபாய்க்கு குறையாத ஆனால் 3 இலட்ச ரூபாய்க்கு மிகாத அபராதம் விதிக்கப்பட்டு தண்டிக்கப் படுவார் என்று **பிரிவு 26(9)** கூறுகிறது.

மேற்படி **பிரிவு 26(1)(a)**–இன் வகைமுறைகளை ஒரு நிறுவனம் மீறினால் அபராதம் மற்றும் தண்டனை விதிக்கப்படும் என்று பிரிவு 26(9) கூறுவதைக் கண்டோம். அதே நேரத்தில் இதற்கு பிரிவுகள் 34 மற்றும் 35–இன்படி பின்வரும் இரண்டு பொறுப்புகள் ஒரு நிறுவனத்திற்கும் அதற்கு தொடர்புடையவர்களுக்கும் ஏற்படுகின்றன. அவை,

1. குற்றவியல் பொறுப்பு (Criminal Liability)
2. உரிமையியல் பொறுப்பு (Civil Liability)

1. குற்றவியல் பொறுப்பு - பிரிவு 34:

திட்ட அறிவிப்பில் தரப்படும் உண்மையற்ற கூற்றுகள் காரணமாக ஒரு நிறுவனத்திற்கு எழும் குற்றவியல் பொறுப்பை பிரிவு 34 கூறுகிறது. அதன்படி, வெளியிடப்பட்ட, சுற்றுக்கு விடப்பட்ட, அல்லது விநியோகிக்கப்பட்ட திட்ட அறிவிப்பு ஒன்று அதன் படிவத்தில் அல்லது பொருளில் உண்மையற்ற அல்லது தவறாக வழி காட்டும் கூற்றுகள் ஏதும் கொண்டிருந்தால், அல்லது அதில் சேர்க்கப்பட்ட அல்லது விடப்பட்ட விடயம் எதுவும் தவறாக வழிகாட்டும் வண்ணம் இருந்தால், அத்தகு திட்ட அறிவிப்பை வெளியிட அனுமதித்த நபர் ஒவ்வொருவரும் பிரிவு 447–இன் கீழ் பொறுப்பாவர். அதாவது இவ்வாறு உண்மையற்ற அல்லது தவறாக வழி காட்டும் கூற்றுகளை திட்ட அறிவிப்பில் சேர்ப்பது தனது பங்குகளை அல்லது கடனீட்டுப் பத்திரங்களை வாங்க அழைக்கும் ஒரு நிறுவனம் பொது மக்களுக்கு எதிராக செய்யும் மோசடியாகும்.

அந்த வகையில் பிரிவு 447 ஆனது நிறுவனம் மற்றும் அதன் அலுவலர்களால் செய்யப்படும் மோசடிக் குற்றத்திற்கான சிறைத்தண்டனை மற்றும் அபராதம் பற்றி கூறுகிறது.

எனினும் இங்கு அவ்வாறு திட்ட அறிவிப்பை வெளியிட அனுமதித்த நபருக்கு ஒரு எதிர்வாதத்தை (defence) அதே பிரிவு 34–இன் கீழான வரம்புரை வாசகம் தருகிறது. அதாவது, அத்தகு உண்மையற்ற அல்லது தவறாக வழிகாட்டும் கூற்றுகள் அல்லது விடுகையானது முக்கியமற்றது என்றோ, அல்லது திட்ட அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்பு அல்லது அவ்வாறு வெளியிடும் காலம் வரை அக்கூற்று உண்மையென நம்புவதற்கு தாம் நியாயமான காரணங்கள் கொண்டிருந்ததாகவோ, அல்லது அவற்றின் சேர்க்கை அல்லது விடுகையானது அவசியமாக இருந்தது என்றோ அந்நபர் மெய்ப்பித்தால், அவர் பிரிவு 34–இன் குற்றவியல் பொறுப்புக்கு ஆளாக மாட்டார்.

2. உரிமையியல் பொறுப்பு - பிரிவு 35:

திட்ட அறிவிப்பில் சேர்க்கப்பட்ட தவறாக வழிகாட்டும் கூற்று அல்லது அதில் சேர்க்கை அல்லது விடுகை செய்யப்பட்ட தவறான விடயம் எதனின் அடிப்படையிலாவது செயல்பட்டு ஒரு நபர் அதன் பிணையங்களுக்கு சந்தா செலுத்தி (அதாவது பங்குகளை வாங்க சந்தா தொகை கட்டினால்), அதன் விளைவாக அவருக்கு இழப்பு

அல்லது கேடு ஏதும் ஏற்பட்டிருந்தால், முதற்கண் சம்பந்தப்பட்ட நிறுவனம் உரிமையியல் பொறுப்புக்கு ஆளாகும். இதையடுத்து அந்நிறுவனத்தின் **பின்வரும் நபர்கள்** பொறுப்பாவர்கள். அவர்கள்,

(அ) திட்ட அறிவிப்பு வெளியிடப்படும் காலத்தில் நிறுவனத்தின் இயக்குனராக இருப்பவர்;

(ஆ) இயக்குனராக பெயர் சேர்க்கப்பட தனக்குத்தானே அதிகாரமளித்துக் கொண்டு நிறுவனத்தின் இயக்குனராக திட்ட அறிவிப்பில் அவ்வாறு பெயர் இடம் பெற்றவர் அல்லது உடனடியாகவோ அல்லது ஒரு கால இடைவெளிக்குப் பிறகோ அத்தகு இயக்குனராக ஆவதற்கு உடன்பட்டவர்;

(இ) நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்;

(ஈ) திட்ட அறிவிப்பை வெளியிடுவதற்கு அதிகாரமளித்தவர்; மற்றும்

(உ) நிறுவன உருவாக்கம், தோற்றுவிப்பு அல்லது மேலாண்மையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, திட்ட அறிவிப்பு வெளியிடுவதற்கு தனது எழுத்துப்பூர்வமான இசைவை அளித்த வல்லுநர்

மேற்கண்டோர்கள் அனைவரும் திட்ட அறிவிப்பின் உண்மையற்ற கூற்றுகளால் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு தர பொறுப்புடையவர்கள் ஆவர் என்று **பிரிவு 35(1)** கூறுகிறது.

எனினும் இந்தப் பொறுப்பிலிருந்து தப்பிக்க மேற்படி நபர்கள் பின்வரும் எதிர்வாதங்களை முன்வைத்து மெய்ப்பிக்க **பிரிவு 35(2) அ**னுமதிக்கிறது. அதன்படி,

(அ) நிறுவனத்தின் இயக்குனராக ஆவதற்கு இசைவு தெரிவித்த பிறகு, திட்ட அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பாக அந்த இசைவை திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டதாகவும், அந்த திட்ட அறிவிப்பே தனது இசைவு மற்றும் அதிகாரம் இல்லாமல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அந்நபர் மெய்ப்பித்தால், அவர் இழப்பீடு தரும் பொறுப்புக்கு ஆளாக மாட்டார்; அல்லது

(ஆ) தனக்குத் தெரியாமல் அல்லது தனது இசைவு இல்லாமல் திட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வெளியிடப்பட்டுள்ளதை அறிந்தவுடன் அது குறித்து உடனடியாக நியாயமான பொது அறிவிப்பு ஒன்றை கொடுத்துள்ளதாகவும் அந்நபர் மெய்ப்பித்தால், அவர் இழப்பீடு தரும் உரிமையியல் பொறுப்புக்கு ஆளாக மாட்டார்.

நிறுவனத்தின் பங்குகளை வாங்க வேண்டி விண்ணப்பிப்பவர்களை அல்லது வேறு நபர்களை மோசடி செய்யும் உட்கருத்துடன் அல்லது வேறு மோசடியான நோக்கம் எதற்காகவும் திட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக மெய்ப்பிக்கப்படும் பட்சத்தில், அதனால் இழப்பு அல்லது கேடு அடைந்த நபர்களுக்கு மேற்கண்ட நபர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் (personally liable) பொறுப்புடையவர்கள். அதாவது சொந்தப் பொறுப்புடையவர்கள். இந்தப் பொறுப்புக்கு வரம்பு ஏதும்

கிடையாது என்று **பிரிவு 35(3)** கூறுகிறது.

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 26(1)(a)**–இன்படி கொடுக்கப்பட வேண்டிய விடயங்களையும், சேர்க்கப்பட வேண்டிய அறிக்கைகளையும் திட்ட அறிவிப்பில் இடம் பெறச் செய்ய வேண்டியது இயக்குனர்கள், தோற்றுவிப் பாளர்கள் மற்றும் வல்லுநர்களின் சட்டப்படியான கடமையாகும். இக்கடமையிலிருந்து தவறினால், அது மோசடியாகும் (Fraud). இயக்குனர்களின் தீங்குச் செயலாகும் (Tort). எனவே தவறான திட்ட அறிவிப்பு தந்த மோசடிக்காக, அவர்கள் பங்குதாரர்களுக்கு இழப்பீடு (தீங்கீடு) (Damages) தர வேண்டும். பாதிக்கப்பட்ட பங்குதாரர், இயக்குனர், தோற்றுவிப்பாளர் மற்றும் வல்லுநர் மீது வழக்கு தொடுத்து அவர்களை தனிப்பட்ட முறையில் பொறுப்பாக்கி இழப்பீடு பெறலாம். இங்கு முக்கிய முந்தைய வழக்கொன்றை கவனிப்போம்.

Edgington v. Fitzmaurice[1]

இவ்வழக்கில், இயக்குனர்கள் கடனீட்டுப் பத்திரங்கள் (debentures) வழங்குவதற்கு வெளியிட்ட திட்ட அறிவிப்பில், வாங்கப்படும் கடன் தொகையானது வியாபார அபிவிருத்திக்கும் கட்டிடங்களில் மாற்றம் செய்வதற்கும் பயன்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தனர். ஆனால் உண்மையில் அவர்கள் பழைய கடனை அடைப் பதற்காகவே கடனீட்டுப் பத்திரங்களை வழங்கினர். கடனீட்டுப் பத்திரம் வாங்கிய ஒருவர், தான் மோசடி செய்யப்பட்டுவிட்டதாக வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்றம், இது ஒரு முழு மோசடி என முடிவு செய்து இயக்குனர்கள் அவருக்கு இழப்பீடு அளிக்க வேண்டுமென தீர்ப்பளித்தது.

நாம் முன் கண்ட 35–வது பிரிவானது, ஒரு திட்ட அறிவிப்பில் சேர்க்கப்பட்ட தவறாக வழி நடத்தும் கூற்றுகளினால் (misleading statements) பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இயக்குனர்கள், தோற்றுவிப்பாளர்கள், வல்லுநர்கள் ஆகியோரும், திட்ட அறிவிப்பை வெளியிட அதிகாரம் பெற்ற ஒவ்வொருவரும் இழப்பீடும் வழங்கும் உரிமையியல் பொறுப்பை கொண்டவர்கள் என்று கூறுகிறது. அப்பிரிவின் படி, பொய்யான கூற்றுகள் அடங்கிய திட்ட அறிவிப்பினை நம்பி, பங்குகளை வாங்கி நட்டமடைந்த பங்குதாரர் ஒருவர் மேற்கண்டவர்களிடமிருந்து இழப்பீடு பெறலாம்.

Derry v. Peek[2] எனும் வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு, பாதிக்கப்பட்ட பங்குதாரர்களுக்கு சட்டப்படி சரியான பாதுகாப்பை அளிக்கவில்லை. எனவே இந்நிலையினை மாற்ற இங்கிலாந்தில் 'இயக்குனர்கள் பொறுப்புச் சட்டம்' (Directors' Liability Act) எனும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இதனைப் பின்பற்றி இந்திய நிறுவனச் சட்டத்தின் 35–வது பிரிவு உண்டாக்கப்பட்டது.

ஒப்பந்தவியலில் ஏற்படும் விளைவுகள் :

உண்மைகளைத் திரித்துக் காட்டியதால் (mis-representation) தூண்டப்

1. (1885) 29 Ch D 459 : (1885) 53 LT 369
2. (1889) 14 AC 337 : (1886-90) All ER Rep 1. Noted (1889) 5 LQR 102

மட்டு செய்து கொண்ட ஒப்பந்தம், தவிர்தகு ஒப்பந்தம் (voidable) ஆகும். மேற்படி திரித்துக் காட்டல் தெரிந்தே செய்யப்பட்டதாயின் அது 'மோசடி' எனப்படும். ஒப்பந்தம் மோசடியின் விளைவாக ஏற்பட்டதென்றால், பங்குதாரர் ஒப்பந்தத்தை தள்ளுபடி (நீக்கம்) செய்வதோடு (Rescission of contract) இழப்பீடும் கோரலாம். இழப்பீடு பெற முடியாவிட்டால் பங்குதாரர், தான் செலுத்திய பங்குத் தொகையையாவது திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

திட்ட அறிவிப்பில் கூறப்பட்டவை, பொய்யான கூற்றுகளாக இருக்க வேண்டும். முக்கியமானவற்றைக் கூறாவிட்டாலும், அதுவும் பொய்யான கூற்றாகும். அதாவது, சொல்ல வேண்டிய உண்மையை சொல்லாது மறைத்தாலும், அதுவும் பொய்மையே. எனவே அது திரித்துக் காட்டலாகிறது. இது இலத்தீன் முதுமொழியில் Suppressio veri suggestio falsi (Suppession of fact is the suggestion of falsehood) எனக் கூறப்படுகிறது. இது குறித்த வழக்கு வருமாறு.

The Rex (King) v. Kylsand (Lord) [1]

இவ்வழக்கில், திட்ட அறிவிப்பில் 1911–ஆம் ஆண்டிலிருந்து 1927–ஆம் ஆண்டு வரை, நிறுவனம் 5% பங்காதயம் (Dividend) வழங்கியதென்றும், 1914–ஆம் ஆண்டு மட்டும் பங்காதாயம் வழங்கவில்லை என்றும், 1926–ஆம் ஆண்டு 4% பங்காதாயம் வழங்கியதென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் உண்மையில் நிறுவனம் பல வருடங்களாக இழப்புகள் அடைந்து, தனது சேமிப்பு நிதிகளிலிருந்து பங்காதாயம் வழங்கி வந்தது. எனவே திட்ட அறிவிப்பில் கூறியது உண்மை என்றாலும், அது முழு உண்மையல்ல என்றும், திட்ட அறிவிப்பு ஒரு திரித்துக் காட்டல் என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேலும், ஏமாற்றப்பட்ட பங்குதாரர் உடனே காலதாமதம் செய்யாமல் உரிய காலத்திற்குள் ஒப்பந்தத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தவறினால் தன் உரிமையை இழப்பார். மேலும் ஏமாற்றப்பட்டதை அறிந்த பிறகு ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் வகையில் அவர் நடந்து கொள்ளக் கூடாது.

திட்ட அறிவிப்பு, நிறுவனம் வெளியிட்டதாக இருக்க வேண்டும் அல்லது நிறுவனத்திற்காக அதன் அனுமதி பெற்றவரால் வெளியிடப்பட வேண்டும். இல்லாவிட்டால் நிறுவனம் அதற்கு பொறுப்பாகாது. பங்குதாரரும் ஒப்பந்தத்தை நீக்க முடியாது. திட்ட அறிவிப்பை, நிறுவனம் வெளியிட்டபோது அதில் குறிப்பிடப்பட்டவை உண்மையாக இருக்கலாம். ஆனால் பங்குகளை வழங்கும்போது அவை உண்மையில்லை என்றால் ஒப்பந்தத்தை நீக்கிவிடலாம்.

திட்ட அறிவிப்பில் இரு பொருள் தரும்படியான தகவலைக் கொடுத்திருந்து அது ஒரு பொருளில் உண்மையாகவும், மற்றொரு பொருளில் பொய்யாகவும் இருப்பின், பொய்யான பொருளைக் கொண்டு பங்குதாரர் ஒப்பந்தம் செய்தால், அவர் மேற்படி ஒப்பந்தம், திரித்துக் காட்டப்பட்டது எனும் அடிப்படையில் நீக்கிக் கொள்ள வழக்கிடலாம். இது குறித்த வழக்கு வருமாறு.

1. (1932) KB 442

Smith v. Chadwick[1]

இவ்வழக்கில், திட்ட அறிவிப்பில், நிறுவனத்தின் வியாபாரம் பத்து இலட்சம் என்று அறிவிக்கப்பட்டது. இங்கு, நிறுவனத்தின் வியாபாரம் ஆண்டிற்கு பத்து இலட்சம் என்று பொருள் கொண்டால் அது உண்மையல்ல. ஆனால் நிறுவனம் பத்து இலட்சம் ரூபாய் வியாபாரம் செய்யவல்லது என்று பொருள் கொண்டால் அது உண்மை யாகும். பொய்யான பொருளைக் கொண்டு ஏமாறிய பங்குதாரர் ஒப்பந்தத்தை நீக்கிவிடலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

திட்ட அறிவிப்பில் திரித்துக் காட்டப்பட்டது, பொருண்மை பற்றியதாக இருக்க வேண்டுமே தவிர, சட்டத்தைப் பற்றியதாக இருக்கக் கூடாது. ஏனென்றால், நாட்டின் குடிமகன் ஒவ்வொருவருக்கும் அந்நாட்டின் சட்டம் தெரிந்து இருக்க வேண்டும் என்பது பொது நீதி.

பணத்தை முதலீடு செய்யும்படி நபர்களை மோசடியாக தூண்டுதலுக்கு தண்டனை (Punishment for fradulently inducing persons to invest money) - பிரிவு 36:

மற்றொரு நபரை

(அ) பிணையங்களை வாங்க, விற்க அல்லது சந்தா செலுத்த, அல்லது பிணையங்களுக்கு ஒப்புறுதி தருவதற்காக அல்லது அந்நோக்குடன் உடன்படிக்கை எதிலும், அல்லது

(ஆ) பிணையங்களின் பலனிலிருந்து அல்லது பிணையங்களின் மதிப் பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் தரப்பினர்கள் எவருக்கும் ஆதாயம் ஒன்றைப் பெற்றுத் தரும் நோக்கத்திற்கு அல்லது பாசாங்கான நோக்கத் திற்கு உடன்படிக்கை எதிலும், அல்லது

(இ) வங்கி அல்லது நிதி நிறுவனம் எதிலிருந்தும் கடன் வசதி பெறுவதற் காக அல்லது அந்நோக்குடன் உடன்படிக்கை எதிலும்

ஈடுபடத் தூண்டுவதற்கு அல்லது அவ்வாறு ஈடுபட முனைவதற்கு பொய்யானது. வஞ்சனையானது அல்லது தவறாக வழிநடத்தக் கூடியது என்று தெரிந்தே அல்லது அசட்டையாக கூற்று, உறுதியுரை அல்லது முன் அறிவிப்பு எதையும் செய்கிற அல்லது முக்கியச் சங்கதிகள் எதையும் திட்டமிட்டே மறைக்கிற நபர் எவரும்

பிரிவு 447–இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பொறுப்பாவார் **(பிரிவு 36)**.

இப்பிரிவின் சாரம் யாதெனில் பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்க, விற்க அல்லது அவற்றின் பலனிலிருந்து ஆதாயம் பெற்றுத் தருவற்கான போலி நோக்கத்துடன் அல்லது வங்கிக் கடன் வசதி பெற்றுத் தரும் நோக்குடன் பொய்யான, ஏமாற்றும் எண்ணம் கொண்ட கூற்றுகளைக் கூறி அல்லது முக்கியச் சங்கதிகள் எதையும் மறைத்து மற்றொரு நபரை உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட

1. (1884) 9 CA 187 : (1881-5) ALL ER Rep 242 : 50 LT 697

வைப்பதற்காக அவரைத் தூண்டுகின்ற யாரும் நிறுவனங்கள் சட்டம், 2013–இன் பிரிவு 447–இன் கீழ் மோசடிக் குற்றம் புரிந்தவர் ஆவார். பாதிக்கப்பட்டவர் அப்பிரிவின் கீழ் அவர் மீது நடவடிக்கை எடுத்து, அவரைத் தண்டிக்கலாம். எனவே யாரேனும் ஒரு நிறுவனத்தை முன்னிறுத்தி அதன் பிணையங்களில் பணத்தை முதலீடு செய்யும்படி மோசடியான கருத்துடன் தூண்டினால் அவருக்கு பிரிவு 447–இன்படி தண்டனை காத்திருக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ள தீர்வழிகள் (Remedies to affected persons) – பிரிவு 37:

திட்ட அறிவிப்பில் செய்யப்படும் தவறாக வழி நடத்தும் கூற்றுகள் அல்லது அதில் விடயம் எதையும் சேர்க்கை அல்லது விடுகை செய்ததினால் பாதிப்புக்குள்ளான நபர், நபர்களின் குழு அல்லது சங்கம் எதுவும் அந்நிறுவனத்தின் மீது அல்லது அதற்குரிய நபர்கள் மீது உரிமையியல் வழக்கு (Suit) தொடரலாம் அல்லது பிரிவு 34 அல்லது பிரவு 35 அல்லது பிரிவு 36–இன் கீழ் வேறு நடவடிக்கை எதையும் எடுக்கலாம் என்று **பிரிவு 37** கூறுகிறது. இத்தீர்வழியை **"பாதிக்கப்பட்ட நபர்களால் எடுக்கப்படும் நடவடிக்கை" (Action by affected persons)** என்ற தலைப்பில் **பிரிவு 37** மேற் கண்டவாறு கூறுகிறது.

இதில் பிரிவு 34 குற்றவியல் பொறுப்பு நிலை குறித்தும், பிரிவு 35 உரிமை யியல் பொறுப்பு நிலை குறித்தும் கூறுகிறது. இவை குறித்தும், இவற்றின் கீழ் பாதிக்கப் பட்டவருக்கு கிடைக்கும் தீர்வழிகள் குறித்தும் நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். மேலும் முதலீடு செய்ய மோசடியாக தூண்டுவதற்கு எதிராக பிரிவு 36 தரும் தீர்வழி பற்றியும் நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். குற்றவியல் பொறுப்பு நிலையில் அபராதம், சிறைத்தண்டனையானது பாதிக்கப்பட்டவருக்கான தீர்வழியாக வழங்கப்படுகிறது. உரிமையியல் பொறுப்பு நிலையில் பாதிக்கப்பட்டவர் உடன்படிக்கையை இரத்து செய்யக் கோரலாம்; அத்துடன் இழப்பீடு கோரியும் வழக்கிடலாம்.

எடுத்துக்காட்டாக பங்குகளை கொடுக்கும்படி ஒருவர் நிறுவனத்தைக் கேட் டலும், அவ்வாறு வழங்குவதாக நிறுவனம் ஏற்றுக் கொள்தலும் உடன்படிக்கையின் அடிப்படையில் எழுவதாகும். திட்ட அறிவிப்பில் தவறான செய்திகளை கூறி, பங்குகளை வாங்கும்படி செய்திருந்தால் அவ்விதம் பங்கு வாங்கியவர் நீதிமன்றத்தில் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்து ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்றத் தீர்ப்பிற்கு பின் அவருடைய பெயர் உறுப்பினர்களின் பதிவேட் டிலிருந்து, நீக்கப்பட்டு, பங்குகளுக்கு செலுத்தப்பட்ட பணம் வட்டியுடன் கொடுக்கப் படும். இது **உடன்படிக்கையை இரத்து செய்வதற்கான வழக்கு நடவடிக்கை (Suit for Rescinding the agreement)** எனப்படுகிறது.

திட்ட அறிவிப்பில் உள்ள தவறான கூற்றுகளை நம்பிப் பங்கு வாங்கிய வர்கள், நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்து இழப்பீடு பெறலாம். அவ்வாறு செய் வதற்கு முன்பு அவர் தனது பங்குகளை நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட வேண்டும். ஏனெனில் பங்குகளை கையில் வைத்துக்கொண்டு இழப்பீடு கோர முடியாது. இந்திய

ஒப்பந்தச் சட்டம் 73–வது பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி, இழப்பீடு நிருணயிக்கப்படும். அதாவது, பங்குகளுக்காகச் செலுத்திய தொகைக்கும், பங்கு ஒதுக்கீடு செய்யும் காலத்தில் நிலவிய மதிப்பிற்கும் இடையே உள்ள வேறுபாட்டுத் தொகை இழப்பீடாக அறுதியிடப்படும். இது **இழப்பீடு கோருவதற்கான வழக்கு நடவடிக்கை (Suit for claiming damages)** எனப்படுகிறது.

நிறுவனச் சட்டத்தின் கீழ் மட்டுமல்லாமல் ஒரு நிறுவனத்திற்கும் அதன் அலுவலர்களுக்கும் பொதுச் சட்டத்தின் (Common Law) கீழும் பொறுப்பு நிலை எழுகிறது. அதாவது, ஒருவர் பொய்யான கூற்றினை கூறி அப்பொய்யினால் பிறரை மோசடி (fraud) செய்யின், அம்மோசடிக்கு அவரை, தீங்கியல் சட்டத்தின் கீழ் வஞ்சகம் (deceit) என்னும் தீங்கிற்குப் பொறுப்பாக்கி, மோசடி செய்யப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கும்படி தண்டிக்கப்படுகிறார். இதன் அடிப்படையில் பங்குதாரர் ஒருவர் திட்ட அறிவிப்பில் பொய்யான கூற்று கூறப்பட்டிருப்பது மூலம், தான் மோசடி செய்யப் பட்டதாகக் கூறி சம்மந்தப்பட்ட இயக்குனர்களிடமிருந்து இழப்பீடு கோரலாம்.

மோசடியின் மிக முக்கிய கூறுகள்: 1. உண்மையற்றது என்று தெரிந்தே ஒன்றைப் பற்றி கூறுவது; 2. ஒரு விபரம் உண்மை என்று நம்பிக்கையில்லாமல் கூறுவது; 3. ஒரு விபரத்தை, உண்மையா பொய்யா என்பதை அறிய அக்கறை இல்லா மல் கவனமின்றி அசட்டையாக கூறுதல். மோசடியை மெய்ப்பிக்க மேற்கூறிய ஏதேனும் ஒன்றை மெய்ப்பித்தால் போதுமானது.

மோசடிக்கு உள்ளானவர் பெறும் தீர்வழிகள் : 1. இழப்பீடு பெறுதல்; 2. ஒப்பந்தத்தை தள்ளிவிடுதல். இது குறித்த முக்கிய ஆங்கில வழக்குகள் வருமாறு:

Derry v. Peek[1]

புகழ்பெற்ற டிராம்வே நிறுவனமொன்று குதிரைகளின் துணை கொண்டு டிராம் வண்டிகளை ஓட்டி வந்தன. அந்நிறுவனம் குதிரைகளுக்கு பதிலாக நீராவியில் (Steam) ஓடும் வண்டிகளைப் பயன்படுத்த விரும்பியது. அவ்விதம் பயன்படுத்து வதற்கு நிறுவன விதிமுறைகளின்படி இங்கிலாந்து தொழில் வாரியத்தின் (Board of Trade) அனுமதி பெற வேண்டும். அதற்கு முன்னோடியாக வரைபடங்களைத் தயாரித்து அதைத் தொழில் வாரியத்தின் அங்கீகாரத்திற்கு அந்நிறுவனத்தின் இயக்குனர்கள் அனுப்பி வைத்தனர். மேற்படி தொழில் வாரியம் அவ்வரைபடங்களை அங்கீகரித்துவிட்டால், பின்னர் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகளை ஓட்டுவதற்கு அதன் அனுமதியைப் பெறுவதும் எளிது என்றும், அவ்வாரியம் மேற்படி அனுமதியை நிச்சயம் கொடுத்துவிடும் என்றும் அந்நிறுவனம் நம்பியது. அந்த எண்ணத்தின் பேரில் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகள் விடுவதற்கு நிறுவனத்திற்கு உரிமை உண்டென்று இயக்குனர்கள் திட்ட அறிவிப்பில் (Prospectus) கூறியிருந்தார்கள்.

இந்த அறிவிப்பு பீக் என்பவரை அந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கத் தூண்டியது. ஆனால் மேற்படி தொழில் வாரியம் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகளை

1. (1889) 14 AC 337 : (1886-90) All ER Rep 1. Noted (1889) 5 LQR 102

ஓட்டுவதற்கு எதிர்பார்த்தபடி அனுமதியளிக்கவில்லை. அதனால் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகளை மேற்படி நிறுவனத்தால் விட முடியவில்லை. இதனால் ஏமாற்ற மடைந்த பீக், அந்நிறுவனம் திட்ட அறிவிப்பில் மோசடி செய்துவிட்டதாகக் கூறி, அதன் இயக்குனர்கள் மீது வழக்கொன்றைத் தாக்கல் செய்தார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகள் விடுவ தற்கு தொழில் வாரியத்தின் இசைவு நிச்சயம் தங்களுக்கு கிடைத்து விடுமென்று இயக்குனர்கள் நம்பினார்கள்; மோசடி செய்ய வேண்டுமென்ற எண்ணம் (intention to deceive) இயக்குனர்களுக்கு இல்லை; எனவே, உண்மையென நம்பியதை எடுத்துரைத்தது மோசடி அல்ல என்று தீர்ப்புக்கூறி, பீக் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்தது. இவ்வழக்கில் நீதிப்பெருமகனார்கள் அவை (House of Lords), ஒரு மோசடியை நிரூபிக்க வேண்டுமெனில், அம்மோசடி அறநெறியின்படி பார்த்தா லும், ஒரு மோசடியே (Moral Fraud) என்பதை பாதிக்கப்பட்ட தரப்பினர் நிரூபிக்க வேண்டும் என்ற ஒரு முக்கியமான கூற்றைக் கூறியது. [மேற்படி வழக்கில் சட்டப்படி யான மோசடி (Legal Fraud) என்று கூறப்பட்டதேயொழிய மேற்கண்ட விதத்தில் நிரூபிக்கப்படவில்லை].

Edgington v. Fitzmaurice[1]

இவ்வழக்கில், இயக்குனர்கள் கடனீட்டுப் பத்திரங்கள் (debentures) வழங்குவதற்கு வெளியிட்ட திட்ட அறிவிப்பில், வாங்கப்படும் கடன் தொகையானது வியாபார அபிவிருத்திக்கும் கட்டிடங்களில் மாற்றம் செய்வதற்கும் பயன்படுத்தப் படும் என்று அறிவித்திருந்தனர். ஆனால் உண்மையில் அவர்கள் பழைய கடனை அடைப்ப தற்காகவே கடனீட்டுப் பத்திரங்களை வழங்கினர். கடனீட்டுப் பத்திரம் வாங்கிய ஒருவர், தான் மோசடி செய்யப்பட்டுவிட்டதாக வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்றம், இது ஒரு முழு மோசடி என முடிவு செய்து இயக்குனர்கள் அவருக்கு இழப்பீடு அளிக்க வேண்டுமென தீர்ப்பளித்தது. (இதனை முன்னரே கண்டுள்ளோம்.)

Peek v. Gurney[2]

திட்ட அறிவிப்பின் அடிப்படையில் நிறுவனத்திடமிருந்து நேரடியாக பங்குகளை ஒதுக்கப் பெற்ற பங்குதாரர் ஒருவரே, அதில் உள்ள உண்மையற்ற கூற்றுகள் குறித்து, அதன் இயக்குனர்கள், தோற்றுவிப்பாளர்கள் மீதும் வழக்கிட்டு தீர்வழி பெற முடியும். மாறாக அவர் அப்பங்குகளை மற்றொருவரிடமிருந்து பங்குச் சந்தையின் வாயிலாக மாற்றிப் பெற்றிருந்தால், அவருக்கு மேற்கண்டவர்களுக்கு எதிராக தீர்வழி எதுவும் கிடையாது. இக்கருத்து மேற்படி வழக்கில் உரைக்கப்பட்டது.

இவ்வழக்கின் சங்கதிகள்படி, தவறான கூற்றுகள் அடங்கிய மோசடியான திட்ட அறிவிப்பு ஒன்றை நிறுவனத்தின் சார்பாக பிரதிவாதிகள் வெளியிட்டனர். அதன் நகல் ஒன்றை வாதி பெற்றார். ஆனால் பங்குகள் எதையும் பெற அவர்

1. (1885) 29 Ch D 459 : (1885) 53 LT 369
2. (1873) 43 LJ Ch 19 : (1861-73) All ER Rep 116

நேரடியாக நிறுவனத்திற்கு விண்ணப்பிக்கவில்லை. இந்நிலையில் பங்குகள் ஒதுக்கீடு முடிவடைந்து ஆறு மாதங்கள் கழித்து, வாதியானவர் பிரதிவாதி நிறுவனத்தின் 2,000 பங்குகளை மற்றொரு பங்குதாரரிடமிருந்து பங்குச் சந்தையின் வாயிலாக வாங்கினார். திட்ட அறிவிப்பில் மோசடி நிகழ்ந்துள்ளது என்று கூறி, இயக்குனர்கள் மீது அவர் வழக்கிட்டார். ஆனால் இவ்வழக்கை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

அப்பொழுது, ஒரு நிறுவனத்தின் திட்ட அறிவிப்பை வெளியிடும் அலுவலகம், தன் நிறுவனத்தின் பங்குகள் ஒதுக்கப் பெற்றவர்களாக ஆகுமாறு பொது மக்களை அழைக்கிறது. இவ்வாறு பங்குகள் ஒதுக்கப் பெற்ற பிறகு, அந்த அலுவலகத்தின் பணி முடிவடைந்துவிடுகிறது. எனவே பங்குகள் ஒதுக்கப் பெற்றவர்களுக்கு நிறுவனம் கொண்டுள்ள பொறுப்பு, அப்பங்குகள் அவர்களிடமிருந்து மற்றவர்கள் கைகளுக்கு மாறிமாறிச் செல்லும் பொழுதும் தொடர்வதில்லை. எனவே பங்குகள் ஒதுக்கப்பட்ட பின்னர் பங்குச் சந்தையின் மூலம் எழும் பிந்தைய பங்கு வர்த்தக நடவடிக்கைகளுக்கு, இயக்குனர்கள் முடிவில்லாமல் பொறுப்பாக்கப்படுதல் கூடாது என்று நீதிமன்றம் கருத்துரைத்தது.

பொறுப்புகளுக்கான எதிர்வாதங்கள் (Defences for Liabilities) - ஒரு தொகுப்புப் பார்வை:

திட்ட அறிவிப்பில் செய்யப்படும் உண்மையற்ற மற்றும் தவறாக வழிகாட்டும் கூறுகள் தொடர்பாக பிரிவு 34–இன் கீழ் எழும் குற்றவியல் பொறுப்பு மற்றும் பிரிவு 35–இன் கீழ் எழும் உரிமையியல் பொறுப்பில் அதிலிருந்து தப்பிக்க சில எதிர்வாதங்கள் அக்கூற்றுகளை செய்ததாக சாட்டுரைக்கப்படும் நபருக்கு உள்ளன. அவை முறையே அப்பிரிவிலேயே கூறப்பட்டுள்ளன. அவற்றை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம் எனினும் அவற்றை ஒரு தொகுப்பாக பார்வையிடுவது இங்கு நலம் பயக்கும்.

அதாவது, மேற்படி பிரிவுகள் 34 மற்றும் 35–ன் கீழ் கிடைக்கும் முக்கிய அனுகூலம் யாதெனில், பாதிக்கப்பட்ட பங்குதாரர், தனக்கிழைக்கப்பட்ட மோசடியை மெய்ப்பிக்க வேண்டியதில்லை. திட்ட அறிவிப்பில் செய்யப்பட்ட கூற்று பொய்யானதாக இருந்தால் அதுவே போதும். அது நல்லெண்ணத்துடன் செய்யப் பட்டது அல்லது வஞ்சிக்கும் எண்ணத்துடன் செய்யப்பட்டதல்ல என்று வெறுமனே மறுத்துக் கூறி அதற்கான பொறுப்பிலிருந்து இயக்குனர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. எனினும் மேற்படி அதே பிரிவுகளின் கீழ் இயக்குனர்கள், தோற்றுவிப்பாளர் மற்றும் வல்லுநருக்கு சில எதிர்வாதங்களும் (defences) அனுமதிக்கப்பட்டுள்ளன. அவற்றின்படி அவர்கள் மெய்ப்பித்தல் வேண்டும். அதாவது திட்ட அறிவிப்பில் பொய்யான கூற்றுகள் இருக்குமிடத்து, இயக்குனர்களும், மேற்கண்டவர்களும் பின்வரும் எதிர்வாதங்களை நீதிமன்றத்தில் எடுத்துரைத்து, தண்டனைக்குள்ளாகவோ, இழப்பீடு தரவோ தங்களுக்கு எப்பொறுப்பும் இல்லை என்று வாதிடலாம். அவை,

1. இசைவைத் திரும்பப் பெறுதல் (Withdrawal of consent): இயக்குனர் ஒருவர், திட்ட அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பே, தான் ஒரு இயக்குனராக பதவி வகிப்பதற்கான தனது இசைவை திரும்பப் பெற்றுக் கொண்ட

தாகவும், அத்திட்ட அறிவிப்பு தனது அனுமதி அல்லது இசைவில்லாமல் வெளியிடப் பட்டுள்ளது என்றும் மெய்ப்பிப்பாரானால், அவர் பிரிவு 35(1)–இன் கீழ் இழப்பீடு தர வேண்டியதில்லை.

2. தனக்குத் தெரியாமல் திட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுவிட்டது (Issue without knowledge): திட்ட அறிவிப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட இயக்குனர் ஒருவர், அது வெளியிடப்படுவதற்கு முன்னர் தனது இசைவு பெறப்படவில்லை என்றும் அல்லது தனக்குத் தெரிவிக்கப்படாமல் அது வெளியிடப்பட்டுள்ளது என்றும், அது தனக்கு தெரிந்தவுடன், அதன் பொருட்டு தான் ஒரு பொது அறிவிப்பை பொது மக்களுக்கு கொடுத்துவிட்டதாகவும் மெய்ப்பிப்பாரானால், அவர் பிரிவு 35(1)–இன் கீழ் இழப்பீடு தரும் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

3. பொய்யான கூற்றை அறியாதிருத்தல் (Ignorance of untrue statement): சில சமயங்களில் திட்ட அறிவிப்பில் செய்யப்பட்ட கூற்றுகள் பொய் யானவை என்பதை இயக்குனர் அறியாதிருக்கலாம். அத்தகு இயக்குனர் ஒருவர், அப்பொய்யான கூற்று குறித்து அறிந்தவுடன், ஒரு பொது அறிவிப்பின் மூலம் தனது இசைவைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டதாக காட்டி, தன்னை பின்னிட்டு எழக் கூடிய பொறுப்பு நிலையிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம். ஆனால் இப்பொது அறிவிப்பு, அந்நிறுவனத்தின் பங்குகள், பொது மக்களுக்கு ஒதுக்கப்படும் முன்னர் அவரால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. கூற்று முக்கியமானதல்ல என்று மெய்ப்பித்தால் (Statement was or omission was immaterial): திட்ட அறிவிப்பில் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் உண்மையற்ற கூற்று அல்லது அதில் சேர்க்காமல் விடப்பட்ட விடயம் முக்கியமானவை அல்ல என்று அத்திட்ட அறிவிப்பை வெளியிட அதிகாரமளித்த நபர் மெய்ப்பிப்பாரானால், அவர் பிரிவு 34–இன் கீழான குற்றவியல் பொறுப்பிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

5. நம்புவதற்கு நியாயமான அடிப்படை கொண்டித்தல் (Reasonable ground for belief): திட்ட அறிவிப்பில் உள்ள கூற்றுகள் உண்மையானவையே என்று தாம் நம்புவதற்கு நியாயமான அடிப்படை இருந்ததாகவும், பங்குகள் ஒதுக்கப் படும் வரை அவ்வாறே தாம் நம்பியதாகவும், அத்திட்ட அறிவிப்பை வெளியிட அதிகார மளித்த நபர் மெய்ப்பிப்பாரானால், அவர் பிரிவு 34–இன் கீழான குற்றவியல் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

6. வல்லுநரின் கூற்று (Statement of expert): பொய்யான கூற்றுகள் எதுவும், வல்லுநர் ஒருவர் கொடுத்த அறிக்கையில் உள்ளடங்கியிருக்குமாயின், அதற்காக வழக்கிடப்பட்ட இயக்குனர், அக்கூற்றுகளைச் செய்ய அவ்வல்லுநர் தகுதி யானவர் என்று தாம் நம்புவதற்கு நியாயமான அடிப்படை இருந்ததாகவும், பங்குகள் பொதுமக்களுக்கு ஒதுக்கப்படும் வரை அவ்வாறே தாம் நம்பியதாகவும் நீதிமன்றத்தில் மெய்ப்பித்தால், அவர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படலாம்.

34. Explain the two kinds of prospectus under the Companies Act, 2013. (நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ் திட்ட அறிவிப்பின் இரண்டு வகைகளை விளக்குக.)

(அல்லது)

Define Prospectus and discuss its two kinds. (திட்ட அறிவிப்பு என்பதை வரையறுத்து அதன் வகைகளை விவாதிக்க.)

(அல்லது)

Shelf prospectus under the Companies Act, 2013 - Write short notes. (நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ் ஒரு முறை ஒதுக்கு திட்ட அறிவிப்பு - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Red-herring prospectus under the Companies Act, 2013 - Write short notes. (நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ் முதனிலை திட்ட அறிவிப்பு - குறுகிய விடை எழுதுக.)

திட்ட அறிவிப்பு - வரையறை (Definition of Prospectus) :

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **2(70)-வது பிரிவில்** 'திட்ட அறிவிப்பு' வரையறை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, திட்ட அறிவிப்பு என்பது, "திட்ட அறிவிப்பென விவரிக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஆவணம் எதையும் குறிப்பதோடு, அது ஒரு கூட்டுரு அமைப்பின் பிணையங்களை (பங்குகளை அல்லது கடனீட்டுப் பத்திரங்களை) வாங்கும்படி அல்லது அவற்றிற்கு சந்தா (ஆதரவு) வழங்கும்படி பொது மக்களிடமிருந்து முனைவுகளை அழைக்கும், பிரிவு 32–இல் குறிப்பிடப்பட்ட **முதனிலை திட்ட அறிவிப்பு (Red-herring Prospectus)** அல்லது பிரிவு 31–இல் குறிப்பிடப்பட்ட **'ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பு' (Shelf Prospectus)** அல்லது அறிவிப்பு, சுற்றறிக்கை, விளம்பரம் அல்லது வேறு வகையான ஆவணம் எதையும் உள்ளடக்கியது என்று பொருள்படும்"

திட்ட அறிவிப்பின் இரண்டு வகைகள்:

திட்ட அறிவிப்பு இரு வகைப்படும். அவை **(1) ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பு (Shelf Prospectus); (2) முதனிலை திட்ட அறிவிப்பு. (Red-herring Prospectus).** விரிவாக வருமாறு.

---

1. **"Prospectus"** means any document described or issued as a prospectus and includes a red herring prospectus referred to in section 32 or shelf prospectus referred to in section 31 or any notice, circular, advertisement or other document inviting offers from the public for the subscription or purchase of any securities of a body corporate.

   - Section 2(70) of the Companies Act, 2013.

ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பு (Shelf Prospectus) :

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 31-இன் கீழான விளக்கத் தின்படி, "ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பு (Shelf Prospectus)** என்பது மேலுமொரு திட்ட அறிவிப்பை வெளியிடாமல் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு ஒன்று அல்லது அதற்கும் மேலான வெளியிடுகைகளில் (பொது மக்களின்) ஆதரவுக்காக வெளியிடப்படுகின்ற பிணையங்கள் (பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள்) அல்லது அதில் சேர்க்கப்பட்ட பிணையங்கள் குறித்ததொரு திட்ட அறிவிப்பு என்று பொருள்படும்."[1]

அதாவது இந்த வகை திட்ட அறிவிப்பை நிறுவனம் எதுவும் பதிவாளரிடம் தாக்கல் செய்யலாம். இதை அதில் சேர்க்கப்பட்ட பிணையங்களின் (பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களின்) முதல் முனைவின் போது நிறுவனம் அவ்வாறு தாக்கல் செய்ய வேண்டும். இதில் அந்த திட்ட அறிவிப்பு எவ்வளவு காலத்திற்குச் செல்லத் தக்கது என்ற விவரத்தைக் குறிப்பிட வேண்டும். எனினும் அந்த காலஅளவு ஓராண்டிற்கு மேல் செல்லக் கூடாது. இந்த காலஅளவு பிணையங்களின் முதல் முனைவு திறக்கப்படுகின்ற (வெளியிடப்படுகின்ற) தேதியிலிருந்து தொடங்குதல் வேண்டும். அதே நேரம் மேற்படி செல்லத்தக்க கால அளவின் போது பிணையங்கள் குறித்து இரண்டாவதாக அல்லது பின்னிட்டு முனைவு ஒன்றைச் செய்கின்ற போது, மேலுமொரு திட்ட அறிவிப்பை வெளியிட வேண்டியதில்லை **[பிரிவு 31(1)]**. சுருங்கச் சொன்னால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் செல்லத்தக்க வகையில் பங்குகளை ஒதுக்கி வெளியிடுவதற்கான திட்ட அறிவிப்பை வெளியிட்டுவிட்டால், அந்த கால அளவிற்குள் மீண்டும் பங்குகளை வெளியிடுவதற்காக இரண்டாவதாக திட்ட அறிவிப்பு ஒன்றை வெளியிட வேண்டிய அவசியமில்லை.

ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பை தாக்கல் செய்யும் நிறுவனமொன்று, தகவல் முறையேடு (information memorandum) ஒன்றையும் தாக்கல் செய்ய வேண்டும். அதில் பின்வரும் விவரங்களைக் நிறுவனம் குறிப்பிட வேண்டும். அவை, (1) உருவாக்கப்பட்ட புதிய பொறுப்புகள் தொடர்பான அனைத்து முக்கியச் சங்கதிகள், (2) பிணையங்களின் முதல் முனைவு அல்லது முந்தைய முனைவு மற்றும் பிந்தைய முனைவுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் நிறுவனத்தின் நிதிநிலையில் ஏற்பட்டிருக் கும் மாற்றங்கள் மற்றும் (3) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு மாற்றங்கள் ஆகிய இம் மூன்றையும் அத்தகவல் முறையேட்டில் நிறுவனம் குறிப்பிட வேண்டும். மேலும் இந்த தகவல் முறையேட்டை மேற்படி திட்ட அறிவிப்பின் கீழ் பிணையங்களின் இரண்டாவது அல்லது பின்னிட்டு செய்யப்படுகின்ற முனைவு வெளியிடப்படுவதற்கு முன், வகுத்துரைக்கப்பட்ட கால அளவிற்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும்

1. For the purposes of this section, the expression **"shelf prospectus"** means a prospectus in respect of which the securities or class of securities included therein are issued for subscription in one or more issues over a certain period without the issue of afurther prospectus.

   - Explanation under Section 31 of the Companies Act, 2013.

[பிரிவு 31(2)].

அதாவது நிறுவனங்கள் (திட்ட அறிவிப்பு மற்றும் பிணையங்களை ஒதுக்குதல்) விதிகள், 2014–இன் விதி 10–இன்படி, மேற்படி தகவல் முறையேட்டை PAS-2 என்ற படிவத்தில் தயாரித்து, அதற்கு நிறுவனங்கள் (பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் கட்டணங்கள்) விதிகள், 2014–இல் கூறப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி, ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பின் கீழ் பிணையங்களின் இரண்டாவது அல்லது பின்னிட்டு செய்யப்படுகின்ற முனைவு வெளியிடப்படுவதற்கு முன் ஒரு மாதத்திற்குள் பதிவாளரிடம் நிறுவனம் தாக்கல் செய்ய வேண்டும்.[1]

மேற்கண்ட மாற்றங்கள் ஏதும் செய்யப்படுவதற்கு முன், பிணையங்களை ஒதுக்குவதற்காக அதற்குரிய சந்தாவிற்கான முன்பணத்துடன் செய்த விண்ணப்பங்களை நிறுவனமொன்று அல்லது வேறு நபர் எவரும் பெறுகின்றவிடத்து, அந்நிறுவனம் அல்லது அந்நபர் நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து அந்த விண்ணப்பதாரருக்கு தெரிவிக்க வேண்டும். ஒருவேளை அந்த விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தை திரும்பப் பெற விழைந்தால், சந்தா தொகையாக அந்நிறுவனம் அல்லது அந்நபர் பெற்ற தொகை அனைத்தையும் 15 நாட்களுக்குள் அவருக்குத் திரும் பக் கொடுத்துவிட வேண்டும். **[பிரிவு 31(2)-இன் கீழான வரம்புரை வாசகம்]**.

மேற்சொன்னவாறு தகவல் முறையேடு ஒன்று தாக்கல் செய்யப்படுகின்ற விடத்து, பிணையங்களின் முனைவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு முறையும், ஒருமுறை ஒதுக்கு திட்டஅறிவிப்புடன் தாக்கல் செய்யப்படும் மேற்படி தகவல் முறையேடானது ஓர் திட்ட அறிவிப்பாக கருதப்படுதல் வேண்டும். **[பிரிவு 31(3)]**.

முதனிலை திட்ட அறிவிப்பு (Red-herring Prospectus) :

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 32-இன் கீழான விளக்கத்தின்படி, "முதனிலை திட்ட அறிவிப்பு (Red-herring Prospectus)** என்பது திட்ட அறிவிப்பில் சேர்க்கப்பட்ட பிணையங்களின் எண்ணிக்கை அல்லது விலையின் முழுமையான விவரங்கள் உள்ளடங்கியிருக்காத ஓர் திட்ட அறிவிப்பு என்று பொருள் படும்."[2]

இந்த வரையறையை பின்வரும் சட்ட விளக்கத்துடன் பொருத்தி வாசித்தால்

---

1. In accordance with the Rule 10 of the Companies (Prospectus and Allotment of Securities) Rules, 2014, the information memorandum shall be prepared in Form PAS-2 and filed with the Registrar along with the fee as provided in the Companies (Registration Offices and Fees) Rules, 2014 within 1 month prior to the issue of a second or subsequent offer of securities under the shelf prospectus.
2. For the purposes of this section, the expression **"red-herring prospectus"** means a prospectus which does not include complete particulars of the quantum or price of the securities included therein.

   - Explanation under Section 32 of the Companies Act, 2013.

மேலும் தெளிவாகும். அதாவது பிணையங்களை முனைவு செய்ய உத்தேசித்திருக்கும் நிறுவனமொன்று திட்ட அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதற்கு முன்னதாக முதனிலை திட்ட அறிவிப்பு (Red-herring Prospectus) ஒன்றை வெளியிடலாம் என்று **பிரிவு 32(1)** கூறுகிறது.

மேற்கண்டவாறு முதனிலை திட்ட அறிவிப்பு ஒன்றை வெளியிட உத்தேசித் திருக்கும் நிறுவனமொன்று அதை (பிணையங்களுக்கான) சந்தா பட்டியல் (அல்லது பங்குத் தொகை பட்டியல்)[1] மற்றும் முனைவு (subscription list and offer) திறக் கப்படுவதற்கு குறைந்தபட்சம் மூன்று நாட்களுக்கு முன் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும் என்று **பிரிவு 32(2)** கூறுகிறது.

திட்ட அறிவிப்பு ஒன்றுக்கு பொருந்தும் அதே கடப்பாடுகளை முதனிலை திட்ட அறிவிப்பு ஒன்றும் கொண்டிருக்க வேண்டும். முதனிலை திட்ட அறிவிப்புக்கும் திட்ட அறிவிப்புக்கும் இடையிலான மாறுபாடு எதுவும், மாறுபாடுகள் என்ற தலைப்பில் திட்ட அறிவிப்பில் எடுப்பாக சுட்டிக்காட்டப்பட வேண்டும் என்று **பிரிவு 32(3)** கூறு கிறது.

பிணையங்களுக்கான முனைவு மூடப்படுவதன் பேரில், கடன் அல்லது பங்கு மூலதனத்தின் வாயிலாக திரட்டப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் பிணையங்களின் மூடுகை விலை (closing price of the securities) மற்றும் முதனிலை திட்ட அறிவிப்பில் சேர்க்கப்படாத வேறு விடயங்களை குறிப்பிடும் திட்ட அறிவிப்பையும் பதி வாளர் மற்றும் பங்குப் பர்வர்த்தனை வாரியத்திடம் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும் என்று **பிரிவு 32(4)** கூறுகிறது. (அதாவது, பங்குகள் விற்பனைக்கு வெளியிடப்பட்டு அதற்கு சந்தா செலுத்தும் காலம் முடிவடைவதன் பேரில் முதனிலை திட்ட அறிவிப் புடன், மேற்கண்ட விவரங்களைக் குறிப்பிடும் திட்ட அறிவிப்பு ஒன்றையும் சம்பந்தப் பட்ட நிறுவனம் பதிவாளர் மற்றும் பங்குப் பரிவர்த்தனை வாரியத்திடம் தாக்கல் செய்தல் வேண்டும்.)

மேற்சென்ற வகைமுறைகளின் சாரத்தை சற்றே தொகுத்துச் சொன்னால், ஒரு நிறுவனம் திட்ட அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதற்கு முன்னதாக வெளியிடும் ஓர் திட்ட அறிவிப்பே, முதனிலை திட்ட அறிவிப்பு எனப்படுகிறது. இதில் பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்களின் எண்ணிக்கை அல்லது விலை பற்றிய விவரங்கள் முழுமை யாகக் குறிப்பிடப்பட்டிருக்காது. இதை பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். இது எந்த விதத்தில் திட்ட அறிவிப்பிலிருந்து மாறுபடுகிறது என்பதை எடுப்பாக சுட்டிக்

1. திட்ட அறிவிப்பு ஒன்றில் குறைந்தபட்ச சந்தா தொகை எவ்வளவு என்பது வரையறுக்கப் பட்டிருக்கும். அத்துடன், பங்குகளுக்காக பொது மக்கள் செய்யும் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட நிறுவனம் எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து பெற்றுக் கொள்ளும் என்பதற் கான குறைந்தபட்ச கால அளவை திட்ட அறிவிப்பு நிர்ணயம் செய்கிறது. அக்குறைந்த பட்ச காலஅளவே சந்தா (பங்குத் தொகை) பட்டியலை திறந்து வைத்திருத்தல் (subscription list open) எனப்படுகிறது. இது குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு திறந்து வைக்கப்பட் டிருக்க வேண்டும். பொதுவாக திட்ட அறிவிப்பு வெளியிடப்படுகின்ற தேதியிலிருந்து 5–ஆம் நாள் தொடக்கத்திற்கு முன்னதாக சந்தாபட்டியல் திறக்கப்படுதல் ஆகாது.

காட்ட (high lighted) வேண்டும். மேலும் பங்குகள் விற்பனை முடிவடைவதன் பேரில், வழக்கமான திட்ட அறிவிப்பு ஒன்றையும் சம்பந்தப்பட்ட நிறுவனம் பதிவாளரிடமும் பங்குப் பரிவர்த்தனை வாரியத்திடமும் தாக்கல் செய்தல் வேண்டும்.

35. Deemed Prospectus - Write short notes. (திட்ட அறிவிப்பாக கருதப்படுவது - குறுகிய விடை எழுதுக.)

பங்குகள் அல்லது கடனிட்டுப்பத்திரங்களை விற்பதற்கான முனைவைத் தாங்கிய ஓர் ஆவணம், **"திட்ட அறிவிப்பாக கருதப்படுவது"** எனப்படுகிறது. இது குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 25** கூறுகிறது. விரிவாக வருமாறு:–

ஒரு நிறுவனம் தனது பிணையங்கள் எவற்றையாவது (பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், பங்குச் சான்றிதழ்கள், பிணை முறிகள் ஆகியவற்றில் எதையாவது) பொது மக்களுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் ஒதுக்குகின்றவிடத்து அல்லது ஒதுக்க உடன்படுகிறவிடத்து, ஆவணம் எதனின் வாயிலாக பொது மக்களுக்கான அந்த விற்பனை முனைவு செய்யப்படுகிறதோ அந்த ஆவணம், அந்நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஓர் திட்ட அறிவிப்பாக கருதப்படுதல் வேண்டும். இதற்கு ஒரு திட்ட அறிவிப்பில் உள்ளடங்கியிருக்க வேண்டிய விடயங்கள் மற்றும் அதில் செய்யப்படும் தவறான கூற்றுகள், மற்றும் அதிலிருந்து விடுகை செய்யப்படும் விடயங்கள் தொடர்பாக எழும் பொறுப்புகள் ஆகியவற்றுக்கு என்னென்ன சட்டங்கள் மற்றும் விதிகள் பொருந்துமோ, அவை அனைத்தும் பொருந்தும். மேலும் அது அப்பிணையங்கள் பொது மக்களின் சந்தாவுக்காக (ஆதரவுக்காக) முனைவு செய்யப்பட்டதைப் போன்றும், அந்த முனைவை ஏற்பவர்கள் அப்பிணையங்களின் ஆதரவாளர்களைப் (சந்தாதாரர்கள்) போன்றும் செயல்விளைவைக் கொண்டிருக்கும். **[பிரிவு 25(1)]**.

இந்த ஆவணம் **"பிணையங்கள் விற்பனைக்கான முனைவு"** (offer for sale of securities) என்றும் அழைக்கப்படுகிறது. இதில் பின்வரும் கூடுதல் விவரங்களையும் சேர்க்க வேண்டும். அவை,

(அ) முனைவு தொடர்பான பங்குகள் அல்லது கடனீட்டுப்பத்திரங்கள் குறித்து நிறுவனத்தால் பெறப்பட வேண்டிய மறுபயனின் மொத்த தொகை (அதாவது நிறுவனத்தால் பெறப்பட வேண்டிய மொத்த விற்பனைத் தொகை)

(ஆ) இது தொடர்பான ஒப்பந்தங்களை பார்வையிடுவதற்கான இடம் மற்றும் காலத்தையும் திட்ட அறிவிப்பாக கருதப்படும் மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

இந்த விற்பனை முனைவுக்கான ஆவணம் நாம் ஏற்கனவே கண்டதைப் போல், ஓர் திட்ட அறிவிப்பாக கருதப்படுவது ஆகும். எனவே இதனை பிரிவு 26–இன் படி பதிவு செய்தல் வேண்டும். பதிவுக்கு அனுப்பப்படும் நகலில், பிணையங்களின் விற்பனை முனைவைச் செய்த நபர்கள், நிறுவன இயக்குனர்கள் என்ற நிலையில் கையொப்பமிட வேண்டும். **[பிரிவு 25(3)]**

ஒரு நிறுவனத்தால் விற்பனை முனைவு செய்யப்பட்டால், அந்த ஆவணத்தில் குறைந்தபட்சம் இரண்டு இயக்குனர்கள் கையொப்பமிட வேண்டும். இதுவே ஒரு கூட்டாண்மை நிறுமத்தால் செய்யப்பட்டால், அதில் பங்குதாரர்களில் ஒரு பாதி பேருக்கும் குறையாதவர்கள் கையொப்பமிட வேண்டும். **[பிரிவு 25(4)]**.

36. Statement in lieu of Prospectus - Write short notes. (திட்ட அறிவிப்பிற்கு பதிலான அறிக்கை - குறுகிய விடை எழுதுக.)

திட்ட அறிவிப்புக்கு பதிலான அறிக்கை என்பதற்கு முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் வகை செய்திருந்தது. **ஆனால் தற்போது 2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின்படி இது செயல்விளைவில் இல்லை.** எனினும் கல்வியியல் நலனுக்காக இதன் விளக்கம் பின்வருமாறு:–

ஒரு நிறுவனம் பொது மக்களிடமிருந்து பங்குகளை வரவேற்காவிட்டால் அது பொது மக்களுக்கு திட்ட அறிவிப்பு வெளியிட வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு பொது நிறுவனம் தனக்கு வேண்டிய மூலதனம் முழுவதையும், அந்நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள், அவர்களது உறவினர்கள், நண்பர்கள் மூலம் திரட்ட முடியுமென்றால், அது பொது மக்களிடமிருந்து மூலதனத்தை திரட்ட வேண்டிய அவசியமில்லை. இம்மாதிரியான சமயத்தில் நிறுவனம், திட்ட அறிவிப்பிற்கு பதிலான அறிக்கை ஒன்றை தயாரித்து பதிவாளரிடம் அளித்தாலே போதுமானது. இதில் உண்மையான கூற்றுகள் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும். பங்கு ஒதுக்கீடு செய்வதற்கு குறைந்தது மூன்று தினங்களுக்கு முன்னர் திட்ட அறிவிப்பிற்கு பதிலான அறிக்கையை பதிவாளரிடத்தில் தாக்கல் செய்ய வேண்டும். திட்ட அறிவிப்பில் காணப்படும் பெரும்பாலுமான கூறுகள் இதிலுமிருக்கும். திட்ட அறிவிப்பிற்கு பதிலான அறிக்கையை தாக்கல் செய்யாமல் செய்யப்படும், பங்கு ஒதுக்கீடு செல்லாது (1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 70). இவ்வறிக்கையில் நிறுவனச் சட்டத்தின் மூன்றாம் பட்டியலில் உள்ள விபரங்கள் சேர்க்கப்பட வேண்டும். மேற்படி விதிக்கு புறம்பாக ஒரு நிறுவனம் நடந்தால், அதன் இயக்குனர் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– வரை அபராதம் விதிக்கப்படும்.

திட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் திட்ட அறிவிப்பிற்கு பதிலான அறிக்கையிலும் இருக்கும் என்றாலும், இந்த இரண்டிற்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் உள்ளன.

1. திட்ட அறிவிப்பு, பொது மக்களிடமிருந்து நிதி திரட்டும் நோக்கத்துடன் தயாரிக்கப்படுகிறது. திட்ட அறிவிப்பிற்கு பதிலான அறிக்கை, இது போன்ற நோக்கத்துடன் தயாரிக்கப்படுவதில்லை.

2. திட்ட அறிவிப்பு, பொது மக்கள் அறியும் பொருட்டு செய்தித்தாள் மூலம் வெளியிடப்படுகின்றன. திட்ட அறிவிப்பிற்கு பதிலான அறிக்கை இவ்வாறு வெளியிடப்படுவதில்லை.

-oOo-

வைப்பீடுகள்
[Deposits]

37. Examine the provisions of the Companies Act, 2013 regarding the acceptance of deposits by companies. (நிறுவனங்களால் வைப்பீடுகள் ஏற்கப்படுவது குறித்து நிறுவனங்கள் சட்டம், 2013 கூறும் வகைமுறைகளை ஆராய்க.)

(அல்லது)

Deposits - Write short notes (வைப்பீடுகள் - குறுகிய விடை எழுதுக.)

5

வைப்பீடு - பிரிவு 2(31) தரும் வரையறை:

2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 2(31)-ஆனது வைப்பீடு என்ற பதத்தில் எவை உள்ளடங்கும், எவை உள்ளடங்காது என்று வரையறுக்கிறது.

அதன்படி, "**வைப்பீடு**" என்பது வைப்பீடு அல்லது கடன் அல்லது வேறு வடிவம் எதன் வாயிலாகவும் நிறுவனமொன்றால்

பணம் பெறுதல் எதையும் உள்ளடக்கியதாகும். ஆனால் இந்திய சேம வங்கியுடன் கலந்தாலோசித்து வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு தொகையின் வகைப்பாடுகளை உள்ளடக்கியதாகாது[1], என்று **பிரிவு 2(31)** வரையறை தருகிறது.

நிறுவனங்கள் வைப்பீடுகளை ஏற்பது - வரலாற்றுப் பின்னணியும் சட்டமும்:

வைப்பீடுகளை ஏற்பது குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 73 முதல் 76 வரையிலான பிரிவுகள் கூறுகின்றன. பொது மக்களிடமிருந்து வைப்பீடுகளை நிறுவனம் ஏற்பதன் மீதான தடை குறித்து பிரிவு 73–ம், இந்த 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு ஏற்கப்பட்ட வைப்பீடுகள் முதலானவற்றை திரும்பச் செலுத்துதல் குறித்து பிரிவு 74–ம், மோசடிக்கான இழப்பீடு குறித்து பிரிவு 75–ம், பொது மக்களிடமிருந்து சில நிறுவனங்களால் வைப்பீடுகள் ஏற்கப்படுவது குறித்து பிரிவு 76–ம் கூறுகின்றன.

இவ்வகைமுறைகளை ஆராய்வதற்கு முன்பாக நிறுவனங்கள் வைப்பீடுகளை ஏற்பது குறித்த வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்ளல் அவசியம்.

1966–ஆம் ஆண்டிற்கு முன்பாக பொது மக்களிடமிருந்து நிறுவனமொன்று வைப்பீடுளை ஏற்பதன் மீது தடையோ, வரம்புகளோ ஏதும் கிடையாது. ஆனால் காலப் போக்கில் பல நிறுவனங்களும் தாங்கள் பெற்ற வைப்பீட்டை அதன் முதிர்வின் போது முதலீட்டாளர்களுக்கு திரும்பக் கொடுக்காமல் அவர்களை அலைக்கழித்தன. மேலும் அதற்கான வட்டித் தொகை தருவதிலும் காலதாமதம் செய்து வந்தன. எனவே, நிறுவனத்திடம் வைப்பீடு செய்தவர்களையும், அதற்கு கடனீந்தவர்களையும் பாதுகாக்க, முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 58–ஏ–யின் கீழான அதிகாரத்தை மைய அரசு எடுத்துக் கொண்டது. அது இந்திய சேம வங்கியுடன் கலந்தாலோசித்து வைப்பீடுகளை ஏற்பது தொடர்பான விடயங்களை ஒழுங்கு முறைப்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக பிணையம் பெறாத கடனீந்தவர்களை அதாவது வைப்பீட்டாளர்களை பாதுகாக்க 1974–ஆம் ஆண்டு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தின் வாயிலாக வகை செய்யப்பட்டது. அதற்காக 58–ஏ மற்றும் 58–பி என்ற இரண்டு பிரிவுகள் நிறுவனச் சட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டன. இதில் பிரிவு 58–ஏ ஆனது (தற்போது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பிரிவு 73) மைய அரசு, இந்திய சேம வங்கியுடன் கலந்தாலோசித்து ஒரு நிறுவனம் பொது மக்களிடமிருந்தோ, அல்லது அதன் உறுப்பினர்களிடமிருந்தோ எந்த அளவுக்கு, எந்த முறையில் மற்றும் எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு வைப்பீடுகளை ஏற்கலாம் அல்லது அவ்வாறு ஏற்பதற்கு அழைக்கலாம் என்பதற்குண்டான வழிவகைகளைச் செய்தது.

அந்த வகையில் வைப்பீடுகள் பற்றிய வகைமுறைகளைக் கூறும் அத்தி

1. "Deposit" includes any receipt of money by way of deposit or loan or in any other form by a company, but does not include such categories of amount as may be prescribed in consultation with the Reserve Bank of India.
- Section 2(31) of the Companies Act, 2013.

யாயம் V–இல் வகை செய்யப்பட்ட முறை தவிர வேறு விதத்தில் நிறுவனம் எதுவும், இந்த 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் தொடக்கத்திற்கு வந்த தேதியன்று அல்லது அதற்குப் பின்னிட்டு பொது மக்களிடமிருந்து இந்தச் சட்டத்தின் கீழ் வைப் பீடுகளை அழைத்தல், ஏற்றல் அல்லது புதுப்பித்தல் ஆகாது என்று முக்கியத் தடை ஒன்றை **பிரிவு 73(1)** கூறுகிறது.

எனினும் இத்தடை இந்திய சேம வங்கிச் சட்டம், 1934–இல் வரையறுக்கப் பட்ட வங்கித் தொழிலாற்றும் நிறுவனம் மற்றும் வங்கித் தொழிலாற்றாத நிதி நிறுவனம் ஒன்றுக்கு பொருந்தாது. மேலும் இந்திய சேம வங்கியுடன் கலந்தா லோசித்து மைய அரசு இதற்கென குறித்துரைக்கலாகும் அத்தகு வேறு நிறுவனத் திற்கும் இத்தடை பொருந்தாது.

பொது நிறுவனங்கள் வைப்பீடுகளை ஏற்பது:

குறிப்பிட்ட அளவு மொத்த மதிப்பு அல்லது பயன்பாட்டுத் தொகை கொண்டி ருக்கும் பொது நிறுவனங்கள் மட்டுமே தனது உறுப்பினர்கள் அல்லாதவர்களிட மிருந்து அதாவது பொது மக்களிடமிருந்து வைப்பீடுளை அழைக்கலாம், ஏற்கலாம் அல்லது புதுப்பிக்கலாம் என்று **பிரிவு 76** கூறுகிறது. ஆனால் இவ்வாறு ஒரு பொது நிறுவனம் வைப்பீடுகளை அழைக்க, ஏற்க அல்லது புதுப்பிக்க **பிரிவு 73(2)** கூறும் நிபந்தனைகளை அது நிறைவு செய்ய வேண்டும். அவை,

(அ) வைப்பீடுகள் ஏற்பதற்கு ஒப்புதல் அளித்து நிறுவனப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

(ஆ) நிறுவனத்தின் நிதி நிலைமை, பெற்றுள்ள நம்பகத்தன்மையின் மதிப் பளவு (Credit rating obtained), வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கை, அது முன்ன தாக வைப்பீடு ஏதும் ஏற்றுக் கொண்டிருந்தால் அதற்குச் செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை ஆகிய விவரங்களைக் காட்டும் கூற்றை (statement) உள்ளடக் கிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்.

(இ) அச்சுற்றறிக்கை வெளியிடப்படும் தேதிக்கு முப்பது நாட்களுக்கு முன்னர் அதன் நகலை மேற்படி கூற்றுடன் சேர்த்து பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

(ஈ) நடப்பு நிதி ஆண்டு மற்றும் அடுத்த நிதி ஆண்டின் போது முதிர் வடையும் வைப்பீட்டுத் தொகையில் குறைந்தபட்சம் 15 சதவீத தொகையை, வைப் பீடுகளை திருப்பிச் செலுத்துவதற்காக மட்டும் பயன்படுத்தப்படக் கூடிய வகையில் அட்டவணை வங்கி ஒன்றில் திறக்கப்பட்ட வைப்பீடு திருப்பிச் செலுத்தல் காப்புக் கணக்கில் (Deposit repayment reserve account) நிறுவனம் வைப்பீடு செய்தல் வேண்டும்.

(உ) நிறுவனத்தில் உள்ள வைப்பீடுகளை காப்பீடு (Deposit insurance) செய்யப்பட வேண்டும்.

(ஊ) இந்தச் சட்டம் செயல்விளைவுக்கு வருவதற்கு முன்னரோ, வந்த பின்னரோ வைப்பீடுகளை திருப்பிச் செலுத்துவதில் அல்லது அதற்கு வட்டி வழங்கு

வதில் தவறுகை எதையும் நிறுவனம் செய்யவில்லை என்று சான்றளிக்க வேண்டும்.

(எ) வைப்பீடுகளை முறையாக திருப்பிச் செலுத்த அல்லது வட்டியை தவறாமல் செலுத்த பிணையம் (security) ஏதும் அளிக்க வேண்டும். அதற்காக தனது சொத்துக்கள் மீது பற்றுப் பொறுப்பை (creating charge over the property or assets of the company) எதையும் நிறுவனம் உருவாக்குதல் வேண்டும்.

மற்ற நிறுவனங்கள் வைப்பீடுகளை ஏற்பது:

பொது நிறுவனங்கள் அல்லாத மற்ற நிறுவனங்கள் தனது உறுப்பினர் களிடமிருந்து மட்டுமே வைப்பீகளை அழைக்க, ஏற்க அல்லது புதுப்பிக்க அனுமதிக்கப் பட்டுள்ளது. அவை பொது மக்களிடமிருந்து வைப்பீடுகளை ஏற்க முடியாது. இங்கு **பிரிவு 73(2)** கூறும் மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தும் அப்படியே அத்தகு நிறுவனங்களுக்கும் பொருந்தும். எனினும் வைப்பீடுகளை ஏற்றல், அதை திருப்பிச் செலுத்தல் அல்லது வட்டி தருதலுக்கு பிணையம் அளித்தல் ஆகியற்றுக்கு உரிய நிபந்தனைகளை அத்தகு நிறுவனமும் அதன் உறுப்பினர்களும் உடன்படிக்கை ஒன் றின் வாயிலாக ஒப்புக் கொள்ளலாம். மேலும் அத்தகு நிறுவனங்கள் உடன்படிக்கை யில் ஒப்புக் கொண்ட நிபந்தனைகளின்படி வைப்பீடுகளை வட்டியுடன் தங்கள் உறுப்பினர்களுக்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்று **பிரிவு 73(3)** கூறுகிறது. இதில் தவறுகை எதையும் நிறுவனம் செய்தால், சம்பந்தப்பட்ட வைப்பீட்டாளர் தனது வைப்பீட்டுத் தொகையை திரும்பப் பெற அல்லது வட்டி பெற அல்லது அதனால் தனக்கு ஏற்பட்ட நட்டம் அல்லது கேட்டிற்கு ஈடு பெற தீர்ப்பாயத்திடம் மனு செய்யலாம் என்று **பிரிவு 73(4)** கூறுகிறது.

Vijay Kumar Gupta v. Eagle Paint & Pigment Industries Ltd.,[1]

இவ்வழக்கில் தனியார் நிறுவனங்கள் பொது மக்களிடமிருந்து வைப் பீடுகளை அழைத்து விளம்பரம் எதையும் வெளியிட முடியாது என்று நிறுவன சட்ட வாரியம் (தற்போது தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயம்) தீர்ப்புரைத்தது. ஒரு நிறுவனம் தனது உறுப்பினர்கள் அல்லது இயக்குனர்களிடமிருந்து வைப்பீடுகளை ஏற்றால், தாங்கள் அவ்வைப்பீட்டை அந்நிறுவனத்திற்கு அளித்த கடனாக எடுத்துக் கொள்ளவில்லை என்று விளம்புகை ஒன்றை அந்நிறுவனம் அவர்களிடமிருந்து பெற வேண்டும் என்றும் இவ்வழக்கில் தெளிவுபடுத்தப்பட்டது.

2013 சட்டம் வருவதற்கு முன் ஏற்ற வைப்பீடுகளை திருப்பிச் செலுத்தல் - பிரிவு 74:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்ன தாக ஏற்கப்பட்ட வைப்பீடுகள் முதலியவற்றை திருப்பிச் செலுத்துதல் (Repayment of deposits, etc., accepted before commencement of this Act) தொடர்பான வகைமுறைகளை **பிரிவு 74** பின்வருமாறு கூறுகிறது.

1. (1997) 26 Comp LA 236 (CLB)

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் தொடங்குவதற்கு முன் நிறுவன மொன்றால் ஏற்கப்பட்ட வைப்பீடுகள் தொடர்பாக, அவை அச்சட்டத்தின் தொடக்க தேதியன்று செலுத்தப்படாமல் இருந்தாலோ அல்லது அதன் பின்னிட்டு அவை செலுத்தப்படாத பாக்கியாக ஆனாலோ, அந்நிறுவனம்,

(அ) அச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து அல்லது அவ்வைப்பீட்டின் செலுத்துகை பாக்கியாக நின்ற தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் தான் ஏற்ற அனைத்து வைப்பீட்டுத் தொகைகளின் விவரம், செலுத்தப்படாமல் பாக்கியாக நிற்கும் தொகைகள், செலுத்தப்பட வேண்டிய வட்டித் தொகை, அவற்றைச் செலுத்துவதற்கு நிறுவனம் செய்துள்ள ஏற்பாடுகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய கூற்று ஒன்றை நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும்.

(ஆ) அச்சட்டம் தொடக்கத்திற்கு வந்த தேதியிலிருந்து அல்லது அத்தகு வைப்பீட்டுத் தொகைகள் பாக்கியாக நின்ற தேதியிலிருந்து இவற்றில் எது விரைவாக வருகிறதோ அத்தேதியிலிருந்து ஓர் ஆண்டிற்குள் பாக்கியாக நிற்கும் தொகைகளை திருப்பிச் செலுத்த வேண்டும் [**பிரிவு 74(1)**].

மேற்கண்டவாறு திருப்பிச் செலுத்தும் காலத்தை நீட்டித்து வழங்கும்படி அந்நிறுவனம் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கலாம். அது நிறுவனத்தின் நிதி நிலை மற்றும் செலுத்தப்பட வேண்டிய வைப்பீட்டுத் தொகை மற்றும் அதன் மீதான வட்டித் தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஆராய்ந்து, திருப்பிச் செலுத்தும் காலத்தை நியாயமானதொரு காலத்திற்கு நீட்டித்தளித்து ஆணையிடலாம், என்று பிரிவு **74(2)** கூறுகிறது.

ஒரு நிறுவனம் மேற்கண்டவாறு ஓராண்டிற்குள் அல்லது தீர்ப்பாயம் நீட்டித் தளித்தளிக்கும் அத்தகு காலகட்டத்திற்குள் வைப்பீட்டுப் பாக்கித் தொகைகள் அல்லது அதன் மீதான வட்டித் தொகைகளை திருப்பிச் செலுத்துவதில் தவறுகை புரிந்தால், அது மேற்கண்ட தொகைகளை செலுத்துவதோடு மட்டுமல்லாமல், ஒரு கோடி ரூபாய்க்கும் குறையாத ஆனால் பத்து கோடி ரூபாய்க்கு நீட்டிக்கக்கூடிய அபராதம் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படும். மேலும் நிறுவனத்தின் அலுவலர் ஒவ்வொருவருக்கும் ஏழாண்டுகள் வரை நீட்டிக்கக் கூடிய சிறைத்தண்டனை விதிக் கப்படும். அத்துடன் இருபத்தைந்து இலட்ச ரூபாய்க்கும் குறையாத ஆனால் இரண்டு கோடி ரூபாய்க்கு நீட்டிக்கக்கூடிய அபராதமும் அவர்களுக்கு தண்டனையாக விதிக் கப்படும் என்று **பிரிவு 74(3)** கூறுகிறது.

மோசடிக்கு இழப்பீடு (Damages for fraud) – பிரிவு 75:

வைப்பீட்டாளர்களை மோசடி செய்யும் உட்கருத்துடன் அல்லது மோசடியான நோக்கம் எதற்காகவும் ஒரு நிறுவனம் வைப்பீடு பெற்றதாக மெய்ப்பிக்கப்பட்டால், அதனால் பாதிக்கப்பட்ட வைப்பீட்டாளர்கள் அனைவருக்கும் அத்தகு வைப்பீடுகளை ஏற்றதற்கு பொறுப்பான நிறுவன அலுவலர்கள் ஒவ்வொருவரும் சொந்தப் பொறுப்புடையவர்கள். இழப்பீடு வேண்டி, அல்லது வைப்பீட்டை வட்டியுடன் திருப்பிச் செலுத்தக் கோரி பாதிக்கப்பட்ட வைப்பீட்டாளர்கள் அவர்கள் மீது வழக்கிடலாம்.

இயல் III

நிறுவன நிதியாட்சி

[பங்குகள் – பங்குகளுக்கான விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீடு, உறுப்பினர்கள், பங்குதாரர்கள், பங்கு மற்றும் பங்கு மூலதனம், கடனீட்டுப்பத்திரங்கள், பற்றுப் பொறுப்புகள் மற்றும் கடனீட்டுப் பத்திரம் வைத்திருப்பவர்கள், பங்காதாயம், கடன் பெறுதல், முதலீடுகளை கடனாக வழங்குதல், ஒப்பந்தங்கள்]

Corporate Financing

[Shares - Application and allotment of shares, members and share holders, share and shares capital, debentures, charges and debenture holders, dividents, borrowings, lending investments, contracts]

பங்குகள்
[Shares]

அ.
பங்குகளும் அவற்றின் வகைகளும்
[Shares and its kinds]

38. Define 'Share'. Describe its kinds. ('பங்கு' என்பதை வரையறுத்து அதன் பல்வேறு வகைகளை விளக்குக.)

(அல்லது)

1 Briefly explain different kinds of Shares. (பங்குகளின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விளக்குக.)

(அல்லது)

Define 'Share'. What are the different types of Shares that may be issued by a company. ('பங்கு' என்பதை வரையறு. ஒரு நிறுவனத்தால் வெளியிடப்படக் கூடிய பல்வேறு வகையான பங்குகள் யாவை ?)

(அல்லது)

Preference shares - Write short notes. (முன்னுரிமைப் பங்குகள் - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Cumulative and Non-cumulative Preference shares - Distinguish. (குவிவு மற்றும் குவியா முன்னுரிமைப் பங்குகள் - வேறுபடுத்துக.)

(அல்லது)

Redeemable Prefernce Shares - Write short notes. (மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகள் - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Equity Shares - Write short notes. (சாதாரணப் பங்குகள் - சிறு குறிப்பு எழுதுக.)

பங்கு (Share) - வரையறை :

நிறுவனத்தின் பதிவான மூலதனம் (Registered Capital) ஒரு குறிப்பிட்ட மதிப்புடைய பல அலகுகளாக (Units) பிரிக்கப்படுகிறது. இந்த அலகுகளே, **'பங்கு' (Share)** எனப்படுகிறது. இத்தகு பங்கினைப் பெறுபவர் **'பங்குதாரர்' (Share-holder)** எனப்படுகிறார்.

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 2(84)**–இன்படி, **'பங்கு' என்பது நிறுவனமொன்றின் பங்கு மூலதனத்தில் ஓர் பங்கு என்று பொருள்படும் மற்றும் அது பங்குத் தொகுப்பையும் (stock) உள்ளடக்கியதாகும்.**[1]

சற்று விரிவாகச் சொன்னால், நிறுவனமொன்று கொண்டிருக்கும் பங்கு மூலதனத்தின் ஓர் பகுதிதான் பங்கு எனப்படுகிறது. இது பங்கின் முதற் தொகுதியையும் (stock) உள்ளடக்கியதாகும். எனவே நிறுவனச் சட்டத்தில் அல்லது மற்ற இடங்களில் 'stock' என்ற பதம் எங்கெல்லாம் இடம் பெறுகிறதோ, அங்கெல்லாம் அது பங்கு (share) என்பதைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். நிறுவனம் இயங்கும் போது அதன் இலாபத்தில் பங்கேற்கும் உரிமையையும், அது கலைக்கப்படும்போது நிறுவனத்தின் சொத்துக்களில் பங்கேற்கும் உரிமையையும் 'பங்கு' எனும் பதம் குறிப்பதாக அமைகிறது.

பங்கின் சிறப்புக் கூறுகள் (Salient Features of Share) :

1. நிறுவனத்தில் பங்குதாரர் ஒருவரின் பணத்தால் அளக்கப்பட்ட உரிமையே பங்காகும்.

---

1. **'Share'** means a share in the share capital of a company and includes stock - **Section 2(84) of the Companies Act, 2013.**

2. பங்கு என்பது ஓர் அசையும் சொத்தாகும் (movable property). எனவே எளிதில் மாற்றக் கூடியதுமாகும். (Transferable) **[பிரிவு 44]**.

3. ஒரு பங்கை மற்றொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக ஒவ்வொரு பங்கிலும் எண் குறிக்கப்படுகிறது **[பிரிவு 45]**.

4. பங்கு பண மதிப்புடைய உரிமையாகும்.

5. பங்குகளை உடையவர் சில உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கொண்டவர்கள்.

பங்குகளின் வகைகள் (Kinds of Shares) - மூவகை:

நிறுவனச் சட்டத்தின்படி மூவகையான பங்குகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன, I. முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares). II. சாதாரண பங்குகள் (Equity Shares) III. பின்னுரிமைப் பங்குகள் (Deferred Shares).

இம்மூவகைப் பங்குகளில் பொது நிறுவனங்களும் (Public) அதன் துணை நிறுவனங்களும் (Subsidiary Companies) முன்னுரிமைப் பங்குகளையும், சாதாரணப் பங்குகளையும் மட்டும் வெளியிட முடியும். பின்னுரிமைப் பங்குகளை வெளியிட முடியாது. ஆனால் தனியார் நிறுவனமாயின் (Private) இம்மூவகையான பங்குகளையும் வெளியிட முடியும். பங்குகளின் வகைக்கேற்றபடி அதன் தன்மைகள் வேறுபடுகின்றன. அவை விரிவாக வருமாறு.

I. முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares) - விளக்கம்:

பங்குகளுக்கு இரண்டு சிறப்புரிமைகள் உள்ளன. அவை, 1. பங்காதாயத்தை முதலில் பெறுதல். அதாவது நிறுவனம் இலாபம் பெறும்போது இத்தகு பங்குகளுக்கு குறித்த விகிதத்தில் இலாபத்தில் பங்கு வழங்கிய பின்னரே மற்ற பங்குகளுக்கு பங்காதாயம் வழங்கப்படும். 2. நிறுவனம் கலைக்கப்படும்போது, நிறுவனத்தின் கடன்களையும், பொறுப்புகளையும் அடைத்த பின்னர் இத்தகு பங்குகளுக்குண்டான தொகையை முதலில் திருப்பிச் செலுத்திய பின்னரே, மற்ற பங்குகளுக்குண்டான தொகை அளிக்கப்படும். இவ்விரண்டு சிறப்புரிமைகளையும் பெற்றுள்ள பங்குகளே '**முன்னுரிமைப் பங்குகள்**' எனப்படும். சுருங்கக்கூறின் நிறுவனத்தின் பங்காதாயத்தை பெறுவதிலும், நிறுவனம் கலைக்கப்படும் போது பங்குத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதிலும் முன்னுரிமை பெற்றுள்ள பங்குகள், 'முன்னுரிமை பங்குகள்' எனப்படும். இதனை '**சலுகைப் பங்குகள்**' என்றும் அழைப்பர். **[பிரிவு 43 (ii)]**.

குறிப்பிட்டளவு பங்காதாயம் பெற விரும்பும் பங்குதாரர் இவ்வகையான பங்குகளை வாங்கச் செய்து முதலீட்டை அதிகப்படுத்துவது, முன்னுரிமைப்

பங்குகளை வெளியிடுவதன் முக்கிய நோக்கமாகும்.

முன்னுரிமைப் பங்குகளின் வகைகள் - 4 வகை :

1. குவிவு மற்றும் குவியா முன்னுரிமைப் பங்குகள் (Cumulative and Non-Cumulative Preference Shares);
2. பங்கேற்கும் மற்றும் பங்கேற்கா முன்னுரிமைப் பங்குகள் (Participating and Non-Participating Preference Shares);
3. மீட்கப்படும் மற்றும் மீட்கப்படா முன்னுரிமைப் பங்குகள் (Redeemable and Non-Redeemable Preference Shares).
4. மாற்றத்தக்க மற்றும் மாற்றமுடியா முன்னுரிமைப் பங்குகள் (Convertible or non-convertible Preference Shares).

மேற்கண்டவற்றை பின்வருமாறு சுருக்கமாகக் காண்போம்.

(1-a) குவிவு முன்னுரிமைப் பங்குகள் (Cumulative Preference Shares) : முன்னுரிமைப் பங்குகள் சிலவற்றிற்கு நிறுவனம் இலாபம் பெற்றாலும் பெறாவிட்டாலும், குறிப்பிட்டளவு பங்காதாயத்தை அப்பொழுதே அந்நிறுவனம் செலுத்தக் கடமைப்பட்டதல்ல. இவ்வாறு செலுத்தப்படாத பங்காதாயம், செலுத்தப் படும் வரை குவிந்து கொண்டே போகும். ஏதாவது ஒரு ஆண்டின் செலுத்தப்படாத பங்காதாயப் பாக்கி, அடுத்த ஆண்டு இலாபத்திலிருந்து தரப்படத்தக்கதாக பற்று வைக்கப்படும். நிறுவனம் நல்ல இலாபம் ஈட்டும் பொழுது, குவிந்து போன பங்காதாயப் பாக்கி முழுவதும் ஒட்டு மொத்தமாக அளிக்கப்படத்தக்க பங்குகளே, 'குவிவு முன்னுரிமைப் பங்குகள்' எனப்படும். சுருங்கக்கூறின் நிறுவனம் இலாபம் பெறாத காலத்திற்கு உரிய பங்காதாயத்தை, நிறுவனம் இலாபம் பெறும் காலத்தில் சேர்த்துப் பெற்றுக் கொள்ளும் முன்னுரிமைப் பங்குகளே 'குவிவு முன்னுரிமைப் பங்குகள்' எனப்படுகிறது.

(1-b) குவியா முன்னுரிமைப் பங்குகள் (Non-Cumulative Preference Shares): நிறுவனம் இலாபம் பெறும் காலத்தில் மட்டும் தங்களுக்குரிய பங்காதாயத்தை பெறத் தகுதியுடைய முன்னுரிமைப் பங்குகள், 'குவியா முன்னுரிமைப் பங்குகள்' எனப்படும். அதாவது ஓர் ஆண்டின் பங்காதாயத்தை அடுத்து வரும் ஆண்டுகளின் இலாபத்திலிருந்து பெற முடியாது.

(2-a) பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகள் (Participating Preference Shares): முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு பங்காதாயம் அளித்தவுடன், பொது நிலைப் பங்குகளுக்கு பங்காதாயம் அளிக்கப்படும். பின்னர் எஞ்சியுள்ள மிகுதி இலாபத்தில் பங்கு பெற உரிமையுடைய முன்னுரிமைப் பங்குகள், 'பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகள்' எனப்படும்.

(2-b) பங்கேற்கா முன்னுரிமைப் பங்குகள் (Non-participating Preference Shares): முன்னுரிமைப் பங்குகளுக்கும் பொது நிலைப் பங்குகளுக்கும்

பங்காதாயம் அளிக்கப்பட்ட பின்னர், எஞ்சியுள்ள மிகுதி இலாபத்தில் எவ்விதமான பங்கும் பெற உரிமையற்ற முன்னுரிமைப் பங்குகள், 'பங்கேற்கா முன்னுரிமைப் பங்குகள்' எனப்படும்.

(3-a) மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகள் (Redeemable Preference Shares): செயல்முறை விதிகள் அனுமதித்தால், நிறுவனம் 'மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகளை' பொதுமக்களுக்கு வழங்கிக் தேவைப்படும்போது மீட்டுக் கொள்ளலாம். நிறுவனம் இலாபத்திலிருந்தோ, புதிதாக பங்கு வழங்கிப் பெற்ற தொகையிலிருந்தோ, மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகளை மீட்கலாம். மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகள், முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக இருக்க வேண்டும். இதனையே நிறுவனத்தால் முன் உரிமை கொடுத்து மீட்கப்படும் பங்குகள் என்னும் பொருளில் 'மீட்கக் கூடிய முன்னுரிமைப் பங்குகள்' என்கிறோம்.

இவ்வாறு பங்குகளை மீட்பதனால் மூலதனம் உண்மையில் குறைகிறது. எனினும், இதனை மூலதனக் குறைப்பு என்று கொள்ள முடியாது. எனவே, மீட்கப்பட்ட பங்குகளின் தொகைக்கு சமமாக, நிறுவனம் புதிய பங்குகளை மக்களுக்கு வழங்கலாம். மூலதனத்தை அதிகப்படுத்திக் கொள்ளலாம். எனினும், இது அவ்வாறு கருதப்படமாட்டாது. மூலதன மீட்புத் தொகையிலிருந்து உறுப்பினர்களுக்கு மீதூதியப் பங்கு வழங்கலாம். நிறுவனத்தின் இலாபத்திலிருந்து முன்னுரிமைப் பங்குகளை மீட்பதாய் இருந்தால், அத்தொகைக்கு சமமான தொகையினை 'மூலதன மீட்புத் தொகை' என ஒதுக்குதல் வேண்டும்.

(3-b) மீட்கப்படா முன்னுரிமைப் பங்குகள் (Non-Redeemable Preference Shares): நிறுவனக் கலைப்புக்கு முன்பு பங்குகளை மீட்பதற்கு உரிமை வழங்கப்படாத நிலையில் வெளியிடப்படும் முன்னுரிமைப் பங்குகள், 'மீட்கப்படா முன்னுரிமைப் பங்குகள்' எனப்படும்.

(4-a) மாற்றத்தக்க முன்னுரிமைப் பங்குகள் (Convertible Preference Shares): இவ்வகை பங்குகளை வைத்திருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் அல்லது ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் அப்பங்குகளை சாதாரண பங்குகளாக மாற்றிக் கொள்ள உரிமை படைத்தவர்கள்.

(4-b) மாற்றமுடியா முன்னுரிமைப் பங்குகள் (Non-Convertible Preference Shares): அவ்வாறு மாற்றிக் கொள்ளும் உரிமையில்லாத பங்குகள் மாற்ற முடியா முன்னுரிமைப் பங்குகள் எனப்படுகின்றன.

II. சாதாரண பங்குகள் (Equity Shares):

இதனை '**தகைமை முறைப் பங்குகள்**' அல்லது '**நேர்மைப் பங்குகள்**' அல்லது '**சம உரிமைப் பங்குகள்**' அல்லது '**பொதுநிலைப் பங்குகள்**' என்றும் அழைக்கலாம். ஒரு நிறுவனத்தின் மூலதனத்தில் பெரும்பான்மையான பங்குகள், இவ் வகையான பங்குகளே ஆகும். நிறுவனத்தில் பங்காதாயம் பெறுவதிலும், பங்கு முதலை திரும்பப் பெறுவதிலும் எவ்வித முன்னுரிமைகளையும் பெற்றிராத பங்குகள்

என இதனைக் குறிப்பிடலாம். இவற்றின் பங்காதாய வீதம் ஆண்டுக்காண்டு மாறுபடும். இலாப ஏற்ற–இறக்கங்களுக்கு தகுந்தாற்போன்று பங்காதாயமும் வேறுபடும். எனவே நிறுவனம் அதிக இலாபம் பெறும் பொழுது, அதிக பங்காதாயம் பெற இவ்வகை பங்குதாரர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் இவ்வகை உரிமை, முன்னுரிமை பங்கு தாரர்களுக்கு ஒப்பந்தம் மூலம் கொடுத்தாலொழிய கிட்டாது. இவ்வகை பங்குதாரர்கள் நிறுவனத்தின் கூட்டங்களில் பங்கு பெறலாம். தீர்மானங்களில் ஓட்டுப் போடலாம். நிறுவனத்தின் அதிக பொறுப்பும், அதிக உரிமையும் இப்பங்குதாரர்களுக்கே உண்டு.

III. பின்னுரிமைப் பங்குகள் (Deferred Shares) :

இதனை **'நிறுவனர் பங்குகள்'** (Founder's Shares) என்றும் அழைப்பர். அனைத்து வகைப் பங்குகளுக்கும் பங்காதாயம் வழங்கிய பின்னர் எஞ்சி இருக்கும் ஆதாயத்தில் (இலாபத்தில்), இவ்வகைப் பங்குகளுக்கு பங்காதாயம் வழங்கப்படும். எனவே இதனை 'பின்னுரிமைப் பங்குகள்' என்கிறோம். நிறுவனத்திற்கு இலாபம் குறைவாக கிடைக்குமேயானால் இவ்வகைப் பங்குகளுக்கு பங்காதாயம் (இலாபத்தில் பங்கு) கிடைக்காமல் போகலாம். நிறுவனத்திற்கு அதிக இலாபம் கிடைக்கும் போது, இவ்வகைப் பின்னுரிமைப் பங்குகளுக்கும் அதிக பங்காதாயம் (இலாபம்) கிடைக்க வழியுண்டு. ஆரம்பத்தில் நிறுவனத்தை நிறுவியவர்களுக்கும், தோற்றுவிப்பாளர்களுக்கும் இத்தகைய பங்குகள் வழங்கப்பட்டன. இந்தியாவில் நிறுவனச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் இத்தகைய பங்குகள் வழங்கப்பட்டன. **இப்போதுள்ள சட்டப்படி இவ்வகை பங்குகளை நிறுவனம் வழங்க முடியாது.**

39. Bonus Shares - Write short notes. (ஆதாயப் பங்குகள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

What are bonus shares? When are they issued? What are the legal provisions in respect of the issue of said shares? (மீதூதிய பங்குகள் என்பவை யாவை? அவை எப்பொழுது வழங்கப்படுகிறது? இத்தகைய பங்குகள் வழங்கப்படுவது குறித்த சட்ட விதிகள் யாவை?)

ஆதாயப் பங்குகள் அல்லது மீதூதியப் பங்குகள்:

இதை **'மிகையாதாயப் பங்குகள்'** என்றும் அழைப்பர். ஒரு நிறுவனம் ஆண்டுதோறும் தான் ஈட்டும் இலாபம் அனைத்தையும் பிரித்துக் கொடுத்து விடாமல், அதன் ஒரு பகுதியை காப்பில் (reserve) வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறது. இக் காப்பு நிதி நாளாடைவில் பெருமளவு அதிகரித்து விடுகிறது. இந்நிலையில், நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அனுமதித்தால் இக்காப்பு நிதியின் ஒரு பகுதியை முழுவதும் செலுத்தப்பட்ட பங்குமூலதனமாக மாற்றுவதன் மூலம், ஏற்கனவே உள்ள பங்குதாரர்களுக்கு சாதாரணப் பங்குகளுக்கு நிகரான, முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை (fully paid up shares) இலவசமாக அளிக்கும். இவ்வாறு இலவசமாக அளிக்கப்படும் பங்குகள் 'ஆதாயப் பங்குகள்' அல்லது 'மீதூதியப் பங்குகள்' எனப்படும்.

அதாவது இயல்பாகப் பெறும் பங்காதாயத்தினின்றும் கூடுதலாக ஆதாயப் பங்குகள் பங்குதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன. சுருங்கக்கூறின், ஆதாயப் பங்குகள், செலவேதுமின்றி (பங்கு விலையின்றி) முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகள் வடிவில் பங்குதாரர்களுக்கு வழங்கப்படக் கூடியதாகும்.

இப்பங்குகள் வழங்கப்படும் விதம் - பிரிவு 63(1):

நாம் ஏற்கனவே மேலே கண்டவாறு ஒரு நிறுவனம் **பிரிவு 63(1)**–இன்படி முழுவதும் செலுத்தப்பட்ட மீதூதியப் பங்குகளை அது தன் உறுப்பினர்களுக்கு பின்வருவனவற்றிலிருந்து வழங்கலாம். அவை,–

(i) தனது தடையற்ற காப்பு நிதியிலிருந்து
(out of its free reserves)

(ii) மிகை தொகை பங்குக் கணக்கிலிருந்து
(out of the security premium account)

(iii) மூலதன மீட்பு காப்புக் கணக்கிலிருந்து
(out of the capital redemption reserve account)

எனினும் நிறுவனச் சொத்துக்களை மறுமதிப்பீடுவதால் உருவாக்கப்பட்ட காப்பு நிதியை மூலதனமாக்குவதன் மூலம் மீதூதியப் பங்குகள் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

மீதூதியப் பங்குகள் குறித்த சட்ட விதிகள் - பிரிவு 63(2):

பின்வரும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டாலன்றி நிறுவனம் எதுவும் தனது இலாபங்களை அல்லது காப்பு நிதியை முழுவதும் செலுத்தப்பட்ட மீதூதியப் பங்குகள் வழங்கும் நோக்கத்திற்காக மூலதனமாக்குதல் ஆகாது. அவை வருமாறு,–

(அ) மீதூதியப் பங்குகளின் வெளியிடுகை நிறுவனத்தின் செயல் முறை விதிகளால் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) இப்பங்குகளின் வெளியிடுகை இயக்குனரவையின் பரிந்துரையின் பேரில், அதன் பொதுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(இ) அந்நிறுவனம் தான் பெற்றுள்ள நிலை வைப்பீட்டுத் தொகையின் அல்லது தான் வழங்கியுள்ள கடன் பிணையங்கள் தொடர்பாக வட்டி அல்லது அசல் தொகையை செலுத்துவதில் அது தவறுகை ஏதும் புரிந்திருக்கக் கூடாது.

(ஈ) தனது பணியாளர்களுக்கு சேம நல நிதி பங்களிப்பு, பணிக்கொடை மற்றும் மீதூதியம் வழங்குதல் ஆகிய சட்டப்படியான பாக்கிகளை செலுத்துவதில் அந்நிறுவனம் தவறுகை ஏதும் புரிந்திருத்தலாகாது.

(ஈ) இப்பங்குகளை ஒதுக்கீடு செய்யும் தேதியில் பாக்கி ஏதாவது நிற்கும்

பகுதியளவு செலுத்தப்பட்ட பங்குகள் முழுதளவில் செலுத்தப்பட்ட தாக்கப்பட வேண்டும்.

(உ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு நிபந்தனைகளை அது நிறைவு செய்தல் வேண்டும்.

அடுத்ததாக, பங்காயத்திற்குப் பதிலாக இவ்வகை ஆதாயப்பங்குகள் வெளியிடப்படல் ஆகாது (The bonus shares shall not be issued in lieu of dividend) என்று **பிரிவு 63(3)** கூறுகிறது.

இப்பங்குகளை வெளியிடுவதால் நிறுவனத்தின் மொத்த மூலதனம், அனுமதிக்கப்பட்டுள்ள மூலதனத்தை விட அதிகமாகிறது. எனவே நிறுவனம் தனது அனுமதிக்கப்பட்ட மூலதனத்தையும் அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

40. Premium Shares - Write short notes. (மிகை தொகை பங்குகள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

What are premium shares? When it can be issued? What is the legal position of such shares? (மிகை ஊதிய பங்குகள் என்பவை யாவை? அவை எப்பொழுது வழங்கப்படலாம்? அவ்வகைப் பங்குகளின் சட்ட நிலை என்ன?)

(அல்லது)

Issue of Shares at Premium - Write short notes. (பங்குகளை மேல் பணத்திற்கு வழங்குதல் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Share premium account - Write short notes. (பங்கு கட்டணக் கணக்கு - குறுகிய விடை எழுதுக.)

மிகை தொகை (அல்லது) மிகை ஊதிய பங்குகள்:

நிறுவனம் ஒன்று மிக அதிகமாக இலாபம் ஈட்டும்போது அதன் பங்குகளை வாங்கப் போட்டியும் மிக அதிகமாக ஏற்படுகிறது. அப்போது நிறுவனம் பங்குகளை அவற்றின் இயல்பான மதிப்பை விட (nominal value) அதிக மதிப்புக்கு அதாவது அதிக விலைக்கு விற்கிறது. இதனை **'மிகைத் தொகைப் பங்கு'** (Premium Shares) என்றும், இப்பங்குகளின் வெளியிடுகையை, **'மிகை மதிப்பிற்கு பங்குகளை வெளியிடல்'** (Issue of Shares at Premium) என்றும் கூறுகிறோம். இப்பங்குகளை **'முனைமப் பங்குகள்'** என்றும் **'மிகை ஊதியப் பங்குகள்'** என்றும் கூறலாம். இங்கு பங்குகளின் இயல்பான மதிப்பிற்கும், அதற்கும் அதிகமாக அவை விற்கப்படும் மதிப்பிற்கும் இடையிலான வேறுபாடு **'முனைமம்' (Premium)** ஆகும்.

இப்பங்குகளை எப்பொழுது வெளியிடலாம்?

ஒரு நிறுவனம், வர்த்தக சந்தையில் தனக்கென ஒரு இடத்தை நிறுவி, நல்ல முறையில் தொழில் நடத்தி மிகுந்த இலாபம் பெறுமானால், அந்நிறுவனத்தின் பங்குகளில் பொது மக்கள் பெரிதும் முதலீடு செய்ய விரும்புவர். இதனால் அதிக பங்குகளை வாங்க முற்படுவர். எனவே அந்நிறுவனத்தின் பங்குகளுக்கான தேவையும் அதிகரிக்கிறது. இந்நிலையில் அந்நிறுவனம் தனது பங்குகளை முனைமத்தில் (மிகைத் தொகையில்) வெளியிட முடிகிறது. ஒரு நிறுவனம் இப்பங்குகளை பணத்திற்காக அல்லது வேறு எதற்காகவும் வெளியிடலாம்.

மிகை தொகைப் பங்குக் கணக்கு (Securities Premium Account):

மிகை தொகை பங்குகளை நிறுவனம் தன் இஷ்டம்போல் வெளியிட முடியாது. 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **52(1)-வது பிரிவு**, இதற்கென முக்கிய நிபந்தனை ஒன்றை விதித்துள்ளது. அவற்றின்படி, மிகை தொகை பங்கினை ஒரு நிறுவனம் வெளியிட்டால், அந்த மிகைத் தொகையின் மொத்த மதிப்பிற்கு சமமான ஒரு தொகையை, **'மிகை தொகை பங்குக் கணக்கு' (Securities Premium Account)** என்றழைக்கப்படும் ஒரு கணக்கிற்கு மாற்ற வேண்டும். [மேற்படி மிகை தொகை பங்குக் கணக்கு எனும் சொற்களில் வரும், 'பங்கு' எனும் சொல் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்படி, **'பிணையங்கள்'** (Securities) என மாற்றப்பட்டுள்ளது. எனவே இது தற்போது, **'மிகை தொகை பிணையங்கள் கணக்கு' (Securities Premium Account)** என்றழைக்கப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்க].

மிகை தொகைப் பங்குகளின் சட்ட நிலை:

இவ்வாறு பங்குகளை மிகையான விலைக்கு விற்றதனால் பெறப்பட்ட அதிகப்படியான தொகையை, மேற்படி மிகை தொகை பிணையங்கள் (பங்குக்) கணக்கில் வரவு வைக்க வேண்டும். இவ்வாறு சேரும் தொகையை அந்நிறுவனத்தின் பங்கு மூலதனமாகவே (share capital) பாவித்தல் வேண்டும். இக்கணக்கில் உள்ள தொகையைக் குறைத்துக் கொள்ள நிறுவனம் விரும்பினால், அது எந்த வகைமுறைகளின்படி, தனது பங்கு மூலதனத்தைக் குறைத்துக் கொள்ளுமோ, அவற்றின்படியே குறைத்துக் கொள்ள வேண்டும்.

எனினும் இக்கணக்கில் உள்ள தொகையை, பின்வரும் செலவுகளைச் சரிக்கட்ட ஒரு நிறுவனத்திற்கு **பிரிவு 52(2)** சுதந்திரம் அளித்துள்ளது. அதாவது அப்பொழுது, பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான வகைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதில்லை. அச்செலவுகள் வருமாறு.

1. அந்நிறுவனம், தனது உறுப்பினர்களுக்கு வெளியிட வேண்டியிருந்து, அவ்வாறு வெளியிடாத பங்குகளை, முழுவதும் செலுத்தப் பெற்ற

ஆதாயப் பங்குகளாக (fully paid bonus shares) மாற்றி அதற்கான தொகையைச் செலுத்துவதற்கு;

2. அந்நிறுவனம், தனது பூர்வாங்கச் செலவுகளைச் (preliminary expenses) சரிக்கட்டுவதற்கு;
3. அந்நிறுவனம் தனது பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதில் செய்த செலவுகள் (expenses) அல்லது செலுத்திய கழிவுத் தொகை (commission paid) அல்லது அனுமதித்த தள்ளுபடித் தொகையை (discount allowed) சரிக்கட்டுவதற்கு;
4. மீட்கக் கூடிய முன்னுரிமைப் பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்கள் எதையும் மீட்பதன் பேரில் செலுத்தப்பட வேண்டியுள்ள மிகைத் தொகையை (முனைமம்) (premium) செலுத்துவதற்கு;
5. பிரிவு 68–இன் கீழ் தனது சொந்தப் பங்குகள் மற்றும் பிணையங்களை வாங்குவதற்கு.

மேற்கண்ட செலவுகளுக்காக 'மிகை தொகை பிணையங்கள் கணக்கில்' சேர்ந்த மிகைத் தொகையை ஒரு நிறுவனம் எவ்விதமான சட்டத் தடையும் இல்லாமல் பயன்படுத்தலாம். இதுவே மிகை தொகை பங்குகளை வெளியிடுவதனால் விளையும் சட்ட நிலையும் கூட.

41. Issue of Shares at Discount - Write short notes. [பங்குகளை தள்ளுபடி செய்து வழங்கல் - குறுகிய விடை எழுதுக.]

பங்குகளை தள்ளுபடி செய்து வழங்கல் (Issue of Shares at Discount) – பிரிவு 53:

'பங்குகளை தள்ளுபடி செய்து வழங்கல்' என்பது, ஒரு நிறுவனம் தனது பங்குகளை அதன் முக மதிப்பிற்கும் (face value) குறைவான விலையில் வெளியிடுவதாகும். எடுத்துக்காட்டாக, ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.100/– என்றால் அதில் ரூ.10/– அய்க் குறைத்து, ரூ.90/–க்கு வெளியிடுதலாகும்.

பொதுவாக இவ்வாறு பங்குகளை வெளியிடுவதை நிறுவனச் சட்டம் அனுமதிப்பதில்லை. தள்ளுபடியில் பங்குகளை வாங்குவதற்காக செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தை வலியுறுத்திச் செயல்படுத்தவும் முடியாது. ஏனெனில் அது சட்ட விரோதமான ஒப்பந்தமாகிறது. இந்நிலைப்பாட்டை 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 53** பின்வருமாறு கூறுகிறது.

(1) பிரிவு 54–இல் வகை செய்யப்பட்டவாறு தவிர, ஒரு நிறுவனம் பங்குகளை தள்ளுபடியில் வெளியிடுதல் ஆகாது.[1]

(2) நிறுவனமொன்றால் தள்ளுபடி விலையில் பங்குகள் ஏதும் வெளியிடப்

1. Except as provided in section 54. a company shall not issue shares at a discount - **Section 53(1) of the Companies Act, 2013.**

பட்டால் அது இல்லாநிலையதாகும்.

(3) இந்தப் பிரிவின் வகைமுறைகளை நிறுவனம் மீறினால், அதற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறையாத ஆனால் அய்ந்து இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கக் கூடிய அபராதம் விதித்து தண்டிக்கப்படும். அவ்வாறே மேற்படி தவறுகையைப் புரியும் நிறுவனத்தின் அ லுவலர் ஒவ்வொருவரும் ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைவாசமோ அல்லது ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறையாத ஆனால் அய்ந்து இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப் படுவர்.

இங்கு தற்போது எழும் வினா யாதெனில் இப்படிப்பட்ட பங்குகளை வெளி யிடவே முடியாது எனில், இதற்கு நிறுவனச் சட்டத்தில் இடம் எதற்கு என்பது தான். இதற்கு விடை காண இங்கு மேற்படி பிரிவு 53(1)–இன் வகைமுறையை மற்றொரு முறை வாசித்தல் அவசியம். அதாவது அதில், பிரிவு 54–இல் வகை செய்யப்பட்டவாறு தவிர, ஒரு நிறுவனம் பங்குகளை தள்ளுபடியில் வெளியிடல் ஆகாது என்று கூறப் பட்டுள்ளது. எனவே பிரிவு 54–இல் வகை செய்யப்பட்டவாறு பங்குகளை தள்ளுபடி செய்து வெளியிடலாம் என்பது தெளிவாகிறது.

எனவே இங்கு **பிரிவு 54** என்ன கூறுகிறது என்பதை கவனித்தல் அவசியம். இது ஒரு நிறுவனம் **"நியாயமான வியர்வைப் பங்குகள்" (Sweat Equity Shares)** வெளியிடுவதைப் பற்றிக் கூறுகிறது. இதன் விளக்கம் வருமாறு:–

நியாயமான வியர்வைப் பங்குகள் (Sweat Equity Shares) – பிரிவு 54:

விளக்கம்: இவ்வகைப் பங்குகளை ஒரு நிறுவனம் தனது பணியாளர்கள் மற்றும் இயக்குனர்களுக்கு தள்ளுபடி விலையில் (at a discounted price) அல்லது அறிவுசார் சொத்துரிமைகளின் தன்மையில் உரிமைகளை கிடைக்கச் செய்தமைக்கு அல்லது மதிப்பைப் கூட்டியமைக்கு அல்லது தொழில்நுணுக்கங்களை வழங்கியதற்கு மறுபயனாக அவர்களி டமிருந்து ரொக்கம் ஏதும் பெற்றுக் கொள்ளாமல் அவர்களுக்கு வழங்குவதாகும் **[பிரிவு 2(88)]**. வேறு வகையில் சொன்னால், அவர்கள் நிறுவனத்திற் காக சிந்திய வியர்வைக்கு பிரதிபலனாக அவர்களுக்கு தள்ளுபடி விலையிலோ, அல்லது ரொக்கம் (விலை) ஏதும் பெற்றுக் கொள்ளாமலோ அந்நிறுவனம் பங்குகளை வழங்குவதாகும். எனவே மேற்கண்ட நோ்வின் போது ஒரு நிறுவனம் பங்குகளை தள்ளுபடி செய்து வழங்கலாம் என்பது தற்போது தெளிவாகியிருக்கும். அதாவது இது நாம் ஏற்கனவே கண்ட **பிரிவு 53-இன்படி** பங்குகளை தள்ளுபடி செய்து வழங்கலே (Issue of shares at discount) தவிர வேறொன்றுமில்லை.

நிபந்தனைகள்: ஒரு நிறுவனம் தான் ஏற்கனவே வெளியிட்ட பங்குகளின் வகையில் ஒன்றாக இந்த நியாயமான வியர்வைப் பங்குகளை வெளியிடலாம். அதா வது இப்பங்குகள் அந்நிறுவனத்தால் முன்னரே வெளியிடப்பட்ட பங்கு வகையாக இருத்தல் வேண்டும். மேலும் பங்குகளை தள்ளுபடியில் வழங்குதல் பற்றி பிரிவு 53

கூறப்பட்டுள்ளது எதுவும், பிரிவு 54–இன் மேற்படி வியர்வைப் பங்குகள் வெளியிடுத லுக்குப் பொருந்தாது. சற்று நுணுக்கமாகச் சொன்னால், பிரிவு 54–இல் வகை செய்யப்பட்டவாறு தவிர (Except as provided in section 54), ஒரு நிறுவனம் பங்குகளை தள்ளுபடி செய்து வெளியிடல் ஆகாது என்று பிரிவு 53 கூறுகிறது. ஆனால் பிரிவு 54–ஆனது ஒரு நிறுவனம் தனது பணியாளர்கள் மற்றும் இயக் குனர்களுக்கு பங்குகளை தள்ளுபடி செய்து வெளியிடலாம் என்று கூறுகிறது. எனவே பிரிவு 53–இல் யாது அடங்கியிருப்பினும் (Not withstanding anything contained in section 53), அது பிரிவு 54–க்குப் பொருந்தாது. மேலும் இவ்வியர்வைப் பங்குகளை ஒரு நிறுவனம் வெளியிட சில நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று **பிரிவு 54(1)** கூறுகிறது. அவை வருமாறு:–

(அ) நியாயமான வியர்வைப் பங்குகளின் வெளியிடுகையானது நிறுவனத்தால் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானம் ஒன்றினால் அனுமதிக்கப் பட்டிருக்க வேண்டும்.

(ஆ) அத்தீர்மானத்தில் பங்குகளின் எண்ணிக்கை, அவற்றின் நடப்பு சந்தை விலை, அதற்கான மறுபயன் ஏதுமிருப்பின் அது, அப் பங்குகள் யாருக்கு வெளியிடப்படுகின்றதோ அந்த இயக்குனர்கள் மற்றும் பணியாளர்களின் வகை அல்லது வகைகள் குறித்துரைக்கப் பட்டிருக்க வேண்டும்.

(இ) அந்நிறுவனம் தனது தொழிலைத் தொடங்கிய தேதியிலிருந்து, அப்பங்குகளின் வெளியீட்டுத் தேதியில் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் கடந்து விட்டிருக்க வேண்டும்.

(ஈ) அந்நிறுவனத்தின் சாதாரண பங்குகள் (Equity shares) அங்கீ கரிக்கப்பட்ட பங்கு பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்டிருக்குமிடத்து, இதற்கென பங்கு பரிமாற்று வாரியத்தால் செய்யப்பட்ட ஒழுங்கு முறைவிதிகளின்படி நியாயமான வியர்வைப் பங்குகள் (Sweat equity shares) வெளியிடப்பட வேண்டும். அச்சாதாரண பங்குகள் அவ்வாறு பட்டியலிடப்படவில்லையானால், வகுத்துரைக் கப்படலாகும் அத்தகு விதிகளின்படி நியாயமான வியர்வைப் பங்குகள் வெளியிடப்பட வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்வதன் பேரில், ஒரு நிறுவனம் நியாயமான வியர்வைப் பங்குகளை வெளியிடலாம்.

சாதாரண பங்குகளுக்குப் பொருந்தும் உரிமைகள், வரம்புகள், தடைகள் மற்றும் அச்சமயத்தில் அமலில் இருக்கும் வகைமுறைகள் அனைத்தும் அப்படியே மேற்படி நியாயமான வியர்வைப் பங்குகளுக்கும் பொருந்தும் என்றும், இந்த நியாயமான வியர்வைப் பங்குகளை வைத்திருப்பவர்கள் அனைவரும் மற்ற சாதாரண பங்குளை வைத்திருப்பவர்களுக்கு இணையான தகுதியுடையவர்களாவர் என்றும் **பிரிவு 54(2)** கூறுகிறது.

42. Sweat equity share - Write short notes. [நியாயமான வியர்வைப் பங்கு - குறுகிய விடை எழுதுக.]

(அல்லது)

Sweat Equity Shares - Write short notes. [வியர்வைப் பங்குகள் - குறுகிய விடை எழுதுக.]

(முந்தைய வினாவின் விடையில் காண்க)

-o0o-

ஆ.

பங்குகளுக்கான விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீடு
[Application and Allotment of Shares]

43. State the Rules for allotment of Shares. What is the effect of an irregular allotment ? (பங்கு ஒதுக்கீட்டிற்கான பல்வேறு விதிகளைக் குறிப்பிடுக. முறைகேடான பங்கு ஒதுக்கீட்டின் விளைவுகள் யாவை?)

(அல்லது)

What is the meaning of 'Allotment of Shares'? What are the restrictions on allotment? What is the effect of an Irregular allotment? (பங்கு ஒதுக்கீடு என்பதன் பொருள் யாது? ஒதுக்கீட்டின் மீதான வரம்புகள் யாவை? ஒரு முறையற்ற ஒதுக்கீட்டின் விளைவு யாது?)

(அல்லது)

Examine the rules for the allotment of shares and point out when can a company cancel the allotment of shares. (பங்குகள் வழங்குவது குறித்த விதிகளை ஆராய்ந்து எப்பொழுது ஒரு நிறுவனம் பங்கு ஒதுக்கீட்டை ரத்து செய்யலாம் என்பதை குறிப்பிடுக.)

(அல்லது)

Define 'share'. What are the different types of shares that may be issued by a company? What are the rules relating to allotment of shares? ('பங்குகள்' என்பதை வரையறு. ஒரு நிறுவனம் வெளியிடுகின்ற பலதரப்பட்ட பங்குகள் யாவை? பங்குகள் ஒதுக்கீட்டிற்கான விதிகள் யாவை?)

(அல்லது)

Allotment of Shares - Write short notes. (பங்குகளை ஒதுக்குதல் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

What do you understand by 'Minimum Subscription ?' When an allotment be regarded as irregular? What is the effect of irregular allotment? ('குறைந்தபட்ச பங்குத் தொகை செலுத்தல்' என்பது எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது? பங்கு ஒதுக்கீட்டினை ஒழுங்கின்மை ஒதுக்கீடு என்று கருதப்பட முடியுமா ? அவ்வாறான ஒதுக்கீட்டின் விளைவுகள் யாவை ?)

(அல்லது)

Minimum Subscription - Write short notes. (குறைந்த அளவு பங்குத் தொகை - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Explain the Allotment of shares. What are the remedies available in case of irregular allotment of shares? (பங்குகள் ஒதுக்கீட்டைப் பற்றி விளக்குக. முறையற்ற பங்குகள் ஒதுக்கீட்டிற்கான நிவாரணங்கள் யாவை?)

(அல்லது)

Irregular allotment - Write short notes. (முறைகேடான பங்கீடு - குறுகிய விடை எழுதுக.)

பங்கு ஒதுக்கீடு - விளக்கம் :

ஒரு நிறுவனம் தனக்குத் தேவையான முதலை, பங்குகளை வெளியிட்டு பொது மக்களிடமிருந்து திரட்டிக் கொள்கிறது. அதற்காக நிறுவனம் திட்ட அறிவிப்பு வெளியிட வேண்டும். மேலும் ஒவ்வொரு பங்கு விண்ணப்பப் படிவத்துடன் (Share

application form) அதன் திட்ட அறிவிப்பையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். பங்குகளைப் பெற விரும்புவோர் மேற்படி விண்ணப்பப் படிவத்தை நிரப்பி குறிப்பிட்ட விண்ணப்பத் தொகையுடன் (Application money) நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும். இந்த பங்கு விண்ணப்பத்தின்படி, நிறுவனம் பங்குகளை ஒதுக்கித் தருவதற்கு **'பங்கு ஒதுக்கீடு'** என்று பெயர்.

பங்குகளின் ஒதுக்கீடு தொடர்பான விதிகள் (Rules) :

பங்குகள் ஒதுக்கீடு செய்வதற்கான விதிகளை பின்வரும் இரண்டு தலைப்புகளில் கூறலாம். I. 1872–ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் காணப்படும் பொது விதிகள்; II.2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தில் காணப்படும் சிறப்பு விதிகள். அவை,–

I. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படியிலான பொது விதிகள் (General Rules according to the Indian Contract Act):

ஒப்பந்தச் சட்டத்தின் அடிப்படைக் கூறுகளான முனைவு (Offer) மற்றும் முனைவேற்பு (acceptance) தொடர்பான கோட்பாடுகள், பங்குகளைக் கோரி விண்ணப்பித்தலுக்கும், அதன் பேரில் பங்குகளை ஒதுக்கீடு செய்தலுக்கும் பொருந்துவதாகும். அவை பின்வருமாறு.

1. **தக்க அதிகாரம் பெற்றவரால் செய்யப்பட வேண்டும் (By Proper Authority):** பங்குகளை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் பெற்றவரால்தான் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். சாதாரணமாக, பங்குகளை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் படைத்தவர்கள், நிறுவனத்தின் இயக்குனர்களாவர்.

2. **நியாயமான காலத்திற்குள் செய்யப்பட வேண்டும் (Within a Reasonable time):** நிறுவனம் பங்குகளை ஒரு நியாயமான காலத்திற்குள் ஒதுக்கீடு செய்ய வேண்டும். நியாயமான காலம் என்ன என்பது அவ்வப்போது சூழ்நிலைக் கேற்றவாறு முடிவு செய்யப்படும்.

3. **ஒதுக்கீடு அறிவிப்பு செய்யப்பட வேண்டும் (Must be communicated):** பங்கு ஒதுக்கியது குறித்து, நிறுவனம் பங்கு ஒதுக்கப்பட்டவருக்கு தகவல் அளிக்க வேண்டும். இது மிகவும் கட்டாயமான ஒரு விதியாகும். மேற்படி தகவலை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். சரியான முகவரியிட்டு, உரிய முத்திரை ஒட்டி அனுப்பப்பட்ட ஒதுக்கீட்டுக் கடிதம் சென்று சேர்வதில் காலதாமதம் ஏற்பட்டாலும் அல்லது செல்லும் வழியில் அக்கடிதமே தொலைந்து போய்விட்டாலும், போதுமான முறையில் ஒதுக்கீடு அறிவிப்பு செய்யப் பட்டுவிட்டதாகவே கருதப்படும்.

Household Fire and Carriage Accident Insurance Co. v. Grant[1]

இவ்வழக்கில், கிராண்ட் எனும் பெயருடைய பிரதிவாதி, பங்குகள் பெற

1. (1879) 4 Ex Div 216 : 48 LJ Ex 597 : 41 LT 298 : 27 WR 858

வேண்டி வாதி நிறுவனத்திற்கு விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பம் தபாலில் அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து, பங்கு ஒதுக்கீட்டுக் கடிதமும் அனுப்பப்பட்டது. ஆனால் அக்கடிதம் பிரதிவாதியை சென்றடையவே இல்லை. எனினும் அவர் வாதி நிறுவனத்தின் ஒரு பங்குதாரரே என்றும், ஒரு பங்குதாரருக்குரிய பொறுப்புகளை உடையவர் என்றும் தீர்ப்புரைக்கப்பட்டது.

4. ஒதுக்கீடு முழுமையானதாகவும் நிபந்தனையற்றதாகவும் இருக்க வேண்டும் (Absolute and Unconditional): நிறுவனம் பங்கு ஒதுக்கீடு செய்தது முழுமையானதாகவும் நிபந்தனையற்றதாகவும் இருக்க வேண்டும். நிபந்தனையுடன் இருப்பின் நிபந்தனை நீக்கப்படும் வரை பங்கு ஒதுக்கீடு முழுமையடையாது.

5. பங்குகள் பெறுவதற்கான முனைவையும் ஒதுக்கீட்டையும் திரும்பப் பெறல் [(Revocation of Application (offer) and Allotment (acceptance)]: ஒருவர் பங்கு பெறுவதற்கான முனைவை (அதாவது, விண்ணப் பத்தை) அதன் ஏற்பு அறிவிக்கப்படுவதற்கு முன்பு எந்த நேரத்திலும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். நிறுவனமும் பங்கு ஒதுக்கீட்டை அதன் அறிவிப்பு முடிவடைவதற்கு முன்பு எந்த நேரத்திலும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

II. *நிறுவனச் சட்டத்தின்படியிலான சிறப்பு விதிகள்* (Special Rules according to the Companies Act) :

பொது நிறுவனங்கள் பங்குகளையும் கடன் பத்திரங்களையும் ஒதுக்கீடு செய்ய 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டமானது சில நிபந்தனைகளை விதிக்கிறது. இவற்றை ஒரு நிறுவனம் பங்குகளை ஒதுக்கீடு செய்வதற்கு முன் நிறைவு செய்ய வேண்டும். விரிவாக பின்வருமாறு காண்போம்.

1. குறைந்தபட்ச பங்குத் தொகை செலுத்தல் மற்றும் விண்ணப்பப் பணம் (Minimum Subscription and Application Money): 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 39–வது பிரிவு நிறுவனத்ததால் பங்குகள் ஒதுக்கப்படுவது பற்றிய வகைமுறைகளைக் கூறுகிறது. அவற்றின்படி ஒரு செல்லத்தக்க ஒதுக்கீட்டிற்கு தேவையான முக்கிய நிபந்தனை, அது தனது பங்கு மூலதனத்தில் குறைந்தபட்ச பங்குத் தொகையை பொது மக்களிடமிருந்து பெறுதல் வேண்டும். **'குறைந்தபட்ச பங்குத் தொகை'** என்பது, நிறுவனம் தனது தொழிலுக்குத் தேவையான சொத்துக்களை வாங்குதல், பூர்வாங்க செலவுகள் மற்றும் செயல்முறை மூலதனத்தை (Working Capital) உருவாக்குதல் போன்ற ஆரம்ப காலகட்டத் தேவைகளை சமாளிப்பதற்காக அந்நிறுவனத்தின் இயக்குனர்கள் கணக்கிட்டு நிருணயிக்கும் ஒரு குறைந்தபட்ச தொகையாகும் இத்தொகையை, அந்நிறுவனம் பொது மக்களுக்கு வெளியிடும் திட்ட அறிவிப்பில் குறிப்பிட வேண்டும். இப்படிப்பட்ட குறைந்தபட்ச பங்குத் தொகைக்கான **விண்ணப்பப் பணத்தை** (Application money) காசோலை அல்லது இதர முறையாவணங்கள் வாயிலாக பொது மக்களிடமிருந்து ஒரு நிறுவனம் பெறாவிட்டால், அது பொது மக்களுக்கு பங்குகளை ஒதுக்கீடு செய்தல் கூடாது என்று **பிரிவு 39(1)** கூறுகிறது.

பொது மக்கள் அளிக்கும் விண்ணப்பப் பணமானது அந்நிறுவனத்தின் பங்குகளின் பெயரளவு மதிப்பில் குறைந்தபட்சம் 5% இருக்க வேண்டும் என்று **பிரிவு 39(2)** கூறுகிறது. இந்த விண்ணப்பப் பணத்தை நாம் முன் கண்ட பிரிவு 39(1)–இன்படி பொது மக்கள் காசோலை அல்லது வேறு முறையாவணங்கள் வாயிலாக நிறுவனத்திற்கு செலுத்தலாம்.

ஆனால் வழக்குகள் பலவற்றில், ஒரு செல்லத்தக்க பங்கு ஒதுக்கீட்டிற்கு விண்ணப்பப் பணம் முழுவதையும் ரொக்கமாக பெற்றிருத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. விண்ணப்பப் பணத்துடன் வராத எந்த விண்ணப்பமும் ஒரு செல்லத்தக்க முனைவை உருவாக்காது என **Ramlal Gupta v. MER Malak**[1] என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது. விண்ணப்பபணம் செலுத்தப்படாத விண்ணப்பத்திற்கு பங்கு ஒதுக்கீடு செய்தது செல்லாது என்றும், அந்நிறுவனத்தின் இயக்குனர்கள் சட்டமுறைப் பிழை (misfeasance) செய்த குற்றத்திற்கு ஆளாவார்கள் என்றும் **Indian States Bank Ltd., v. Kunwar Sardar Singh**[2] என்ற வழக்கில் கூறப்பட்டது.

திட்ட அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அதில் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச பங்குத் தொகை பெறப்படவில்லையானால் மற்றும் விண்ணப்பத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய பணம் பெறப்படவில்லையானால், விண்ணப்பதாரர்களிடமிருந்து பெற்ற பணத்தை நிறுவனம் திருப்பிச் செலுத்திவிட வேண்டும் என்று **பிரிவு 39(3)** கூறுகிறது.

பங்கு மூலதனத்தைக் கொண்டதொரு நிறுவனம் பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்களை ஒதுக்கீடு செய்யும் பொழுது, அது அவ்வொதுக்கீடு பற்றிய விவர அறிக்கை (return) ஒன்றை பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும் என்று **பிரிவு 39(4)** கூறுகிறது.

மேற்கண்ட பிரிவு 39(3)–இன்படி ஒரு நிறுவனம் பணத்தை திருப்பிச் செலுத்துவதில் தவறுகை புரிந்தாலோ, பிரிவு 39(4)–இன்படி விவர அறிக்கை தாக்கல் செய்வதில் தவறுகை புரிந்தாலோ, அந்நிறுவனமும் அதன் அலுவலரும், அத்தவறுகை தொடரும் நாளொன்றுக்கு 1000 ரூபாய் என்ற வீதத்தில் அல்லது ஒரு இலட்சம் ரூபாய் ஆகிய இவற்றில் எது குறைவோ அதன்படியான ஓர் அபராதம் செலுத்த பொறுப்புடையதாகும்/பொறுப்புயைவர் ஆவர் என்று **பிரிவு 39(5)** கூறுகிறது.

Dhananjaya Pande v. Bais Surgical & Medical Institution (P) Ltd.,[3] என்ற வழக்கில் பொது மக்கள் செலுத்தும் விண்ணப்ப பணத்தை பங்குகளை ஒதுக்கீடு செய்வதற்காகவோ அல்லது அது குறைந்தபட்ச பங்குத் தொகையை பெறாத நேர்வில் அப்பணத்தை விண்ணப்பதாரர்களுக்கு திருப்பிச் செலுத்துவதற்காகவோதான் ஒரு நிறுவனம் பயன்படுத்த வேண்டுமே தவிர, அப்பணத்தை விண்ணப்பதாரருக்கு எதிரான வேறு பரிவர்த்தனைகள் எதற்கும் சரியீடு (adjust) செய்து

1. AIR 1939 Nag. 225
2. AIR 1934 All. 855
3. (2005) Comp Cas 626 (CLB)

கொள்ளக் கூடாது என்று நிறுவன சட்ட வாரியம் தீர்ப்புரைத்தது.

2. முதனிலை திட்ட அறிவிப்பு (பிரிவு 32) மற்றும் ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பு (பிரிவு 31) (Red-herring Prospectus and Shelf Prospectus): பிரிவு 32–இன்படி திட்ட அறிவிப்பு ஒன்று தன்னுடன் சேர்க்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அல்லது விலை பற்றிய முழுமையான விவரங்களை உள்ளடக்காமல் இருப்பின் அது முதனிலை திட்ட அறிவிப்பு (Red-herring Prospectus) எனப்படுகிறது. இதை நாம் ஏற்கனவே திட்ட அறிவிப்பு என்ற அத்தியாயத்தில் கண்டுள்ளோம்.

பங்குகளை வெளியிடுவதற்கான முனைவு ஒன்றைச் செய்ய உத்தேசிக்கும் நிறுவனமொன்று அதற்கான திட்ட அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னதாக இந்த முதனிலை திட்ட அறிவிப்பை வெளியிடலாம். இதை பங்குத் தொகை பட்டியல் திறக்கப்படுவதற்கு மூன்று நாட்கள் முன்னதாக பதிவாளரிடம் நிறுவனம் தாக்கல் செய்தல் வேண்டும். ஒரு திட்ட அறிவிப்பு எத்தகு கடப்பாடுகள் பொருந்துமோ அவை அனைத்தும் இந்த முதனிலை திட்ட அறிவிப்புக்கும் பொருந்தும். **[பிரிவு 32(1) மற்றும் (2)]**.

பிரிவு 31–இன்படி ஒருமுறை ஒதுக்கு திட்ட அறிவிப்பு (Shelf Prospectus) என்பது மேலுமொரு திட்ட அறிவிப்பை வெளியிடாமல் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு ஒன்று அல்லது அதற்கும் மேலான வெளியிடுகைகளில் (பொது மக்களின்) ஆதரவுக்காக வெளியிடப்படுகின்ற பிணையங்கள் (பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள்) அல்லது அதில் சேர்க்கப்பட்ட பிணையங்கள் குறித்ததொரு திட்ட அறிவிப்பு என்று பொருள்படும்.

அதாவது இந்த வகை திட்ட அறிவிப்பை நிறுவனம் எதுவும் பதிவாளரிடம் தாக்கல் செய்யலாம். இதை அதில் சேர்க்கப்பட்ட பிணையங்களின் (பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களின்) முதல் முனைவின் போது நிறுவனம் அவ்வாறு தாக்கல் செய்ய வேண்டும். இதில் அந்த திட்ட அறிவிப்பு எவ்வளவு காலத்திற்குச் செல்லத் தக்கது என்ற விவரத்தைக் குறிப்பிட வேண்டும். எனினும் அந்த காலஅளவு ஓராண்டிற்கு மேல் செல்லக் கூடாது. இந்த காலஅளவு பிணையங்களின் முதல் முனைவு திறக்கப்படுகின்ற (வெளியிடப்படுகின்ற) தேதியிலிருந்து தொடங்குதல் வேண்டும். அதேநேரம் மேற்படி செல்லத்தக்க கால அளவின் போது பிணையங்கள் குறித்து இரண்டாவதாக அல்லது பின்னிட்டு முனைவு ஒன்றைச் செய்கின்ற போது, மேலுமொரு திட்ட அறிவிப்பை வெளியிட வேண்டியதில்லை **[பிரிவு 31(1)]**. சுருங்கச் சொன்னால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் செல்லத்தக்க வகையில் பங்குகளை ஒதுக்கி வெளியிடுவதற்கான திட்ட அறிவிப்பை வெளியிட்டுவிட்டால், அந்த கால அளவிற்குள் மீண்டும் பங்குகளை வெளியிடுவதற்காக இரண்டாவதாக திட்ட அறிவிப்பு ஒன்றை அந்நிறுவனம் வெளியிட வேண்டிய அவசியமில்லை.

திட்ட அறிவிப்புக்கு பதிலான அறிக்கை (Statement in lieu of Prospectus) என்பதை 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் நீக்கிவிட்டது.

மேற்சென்ற வகைமுறைகளுக்கு முரணாக நிறுவனமொன்று பங்குகள்

அல்லது கடனீட்டுப் பத்திரங்களை ஒதுக்கீடு செய்தால், அவ்வொதுக்கீட்டை பங்குகள் ஒதுக்கப் பெற்றவர் தனது விருப்பத்தின் அடிப்படையில் தவிர்த்துக் கொள்ளலாம். அச்சமயம் அந்நிறுவனம் கலைப்பு நடவடிக்கைகளின் இருந்தாலும், அது இங்கு ஒரு பொருட்டல்ல (shall be voidable at the option of the allottees even when the company is in the process of winding up).

3. பங்குத் தொகைப் பட்டியலை திறந்து வைத்தல் (Opening of the Subscription List): பொதுவாக திட்ட அறிவிப்பு வெளியீட்டின் மூலம் பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் பொது மக்களுக்கு முனைவு செய்யப்பட்டால், அவற்றை உடனடியாக ஒதுக்கீடு செய்ய முடியாது. நிறுவனச் சட்டத்தின்படி, திட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து அய்ந்தவது நாள் தொடங்குவதற்கு முன்னர் அல்லது திட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நாளுக்கு முன்னர் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படக் கூடாது. பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படத் துவங்கும் மேற்கண்ட அய்ந்தாவது நாள் அல்லது திட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நாள், 'பங்குத் தொகை பட்டியல் திறக்கப்படும் நாள்' எனப்படும். இந்தக் கால அளவிற்கு நேர்வு எதிலும் குறுக்க முடியாது. எனினும் இவ்விதிமுறையை ஒரு நிறுவனம் மீறினால், அது ஏற்கனவே செய்த பங்கு ஒதுக்கீட்டை எந்த வகையிலும் பாதிக்காது. இதற்குக் காரணம், பங்குத்தொகை பட்டியல் திறக்கப்படுவதிலிருந்து அய்ந்தாம் நாள் முடிவடையும் வரை செய்யப்பட்ட பங்கு ஒதுக்கீட்டை இரத்து செய்ய முடியாது.

4. பங்குகளும் கடனீட்டுப் பத்திரங்களும் ஈடுபடுத்தப்படவுள்ள பங்கு பரிவர்த்தனை வாரியம் (Securities to be dealt with in stock exchange): திட்ட அறிவிப்பு வெளியீட்டின் மூலம் பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் பொது மக்களுக்கு முனைவு செய்யும் நிறுவனம் ஒவ்வொன்றும், அவ்வாறு வெளியிடுவதற்கு முன்னதாக தாம் முனைவு செய்யவுள்ள பங்குகளையும், கடனீட்டுப் பத்திரங்களையும் பங்கு வணிகத்தில் ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அங்கீகரிக்கப்பட்ட ஏதேனுமொரு பங்கு பரிவர்த்தனை வாரியத்திடம் விண்ணப்பித்து அதன் அனுமதியைப் பெற வேண்டும் என்று **பிரிவு 40(1)** கூறுகிறது.

இவ்வாறு விண்ணப்பமொன்று பங்கு பரிவர்த்தனை வாரியத்திடம் செய்யப்பட்டுள்ளதாக திட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டால், அத்திட்ட அறிவிப்பில் சம்பந்தப்பட்ட பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் பெயர் அல்லது பெயர்களை நிறுவனம் குறிப்பிட வேண்டும் என்று **பிரிவு 40(2)** கூறுகிறது.

பங்குகளுக்கான தொகை (சந்தா) செலுத்துவதற்காக விண்ணப்பத்தின் பேரில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட பணம் அனைத்தையும், இதற்கென அட்டவணை வங்கி ஒன்றில் திறக்கப்பட்ட தனிக் கணக்கு ஒன்றில் நிறுவனம் வைப்பீடு செய்தல் வேண்டும். இதை பின்வரும் நோக்கங்களைத் தவிர வேறு நோக்கங்களுக்கு நிறுவனம் பயன்படுத்தல் ஆகாது என்று **பிரிவு 40(3)** கூறுகிறது. அவை,

(அ) பங்குகள் ஒதுக்கீட்டிற்கு எதிராக சரிக்கட்டுவதற்காக; அல்லது

(ஆ) அந்நிறுவனம் ஏதேனும் காரணத்தை முன்னிட்டு பங்குகளை ஒதுக்

கீடு செய்யமுடியாதபட்சத்தில், திட்ட அறிவிப்பின் அடிப்படையில் பொது மக்களிட மிருந்து பெற்ற பணத்தை பங்குப் பரிவர்த்தனை வாரியத்தால் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அவர்களுக்கு திருப்பிச் செலுத்துவதற்காக.

இந்த 40–வது பிரிவில் கூறப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்வதை தளர்த்துவதற்காக பங்குகளுக்கான விண்ணப்பதாரர்கள் எவரையும் வேண்டுறுத்தும் அல்லது கட்டுப்படுத்தும் நிபந்தனை எதுவும் இல்லாநிலையதாகும் என்று **பிரிவு 40(4)** கூறுகிறது.

அவ்வாறே இந்த 40–வது பிரிவில் கூறப்பட்டுள்ள வகைமுறைகளை பூர்த்தி செய்வதில் தவறுகை புரியும் நிறுவனத்திற்கு அபராதமும், அதன் அலுவலருக்கு அபராதத்துடன் சிறைவாசமும் தண்டனையாக விதிக்கப்படும் என்று **பிரிவு 40(5)** கூறுகிறது.

வகுத்துரைக்கப்படும் அத்தகு நிபந்தனைகளுக்குட்பட்டு பங்குகளுக்கு சந்தா பெற்றுத் தருவது தொடர்பாக நபர் எவருக்கும் ஒரு நிறுவனம் தரகுத் தொகை தரலாம் என்று **பிரிவு 40(6)** கூறுகிறது.

5. பங்கு விண்ணப்பத்தை திரும்பப் பெறுதல் (Revocation of Share Application): ஒரு நிறுவனத்தின் பங்குகளுக்கான விண்ணப்பத்தை பங்குத் தொகை பட்டியல் திறக்கப்படும் அய்ந்தாவது நாள் முடியும் வரை திரும்பப் பெறலாம்.

முறைகேடான பங்கு ஒதுக்கீடு (Irregular Allotment) :

பங்குகளை ஒதுக்கல் தொடர்பாக நிறுவனச் சட்டத்தின் 39 மற்றும் 40–வது பிரிவுகளில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றாமல், அவற்றிற்கு முரணாக பங்கு ஒதுக்கீடு செய்தால், அது **'முறைகேடான பங்கு ஒதுக்கீடு' (irregular allotment)** எனப்படுகிறது.

அதாவது நாம் சென்ற பத்திகளில் கண்டவாறு குறைந்தபட்ச அளவு பங்குத் தொகையை பெறாமலும் அல்லது திட்ட அறிவிப்பை வெளியிடாமலும், அதை பதிவாளரிடம் பதிவு செய்யாமலும் அல்லது பங்கு ஒதுக்கீடு பற்றிய விவர அறிக்கையை பதிவாளரிடம் தாக்கல் செய்யாமலும் அல்லது நிறுவனச் சட்டப்படி விண்ணப்பப் பணம் வசூலிக்காமலும், அல்லது பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் அனுமதி பெறாமலும் ஒரு நிறுவனம் பங்குகளை ஒதுக்கீடு செய்தால் அது முறைகேடான பங்கு ஒதுக்கீடாகும்.

முறைகேடான பங்கு ஒதுக்கீட்டின் விளைவுகள் (Effects): முறை கேடான பங்கு ஒதுக்கீட்டினால் பின்வரும் விளைவுகள் ஏற்படுகின்றன.

1. முறைகேடாக ஒதுக்கப்பட்ட பங்கை, விண்ணப்பதாரர் தனது விருப்பத் தின் பேரில் தவிர்த்துக் (voidable) கொள்ளலாம்.

2. முறைகேடாக பங்குகளை ஒதுக்கியதன் காரணமாக, விண்ணப்பதாரர் அடைந்த இழப்பு அல்லது கேட்டிற்கு இருந்த அந்நிறுவனமும், அதன் அலுவலர்களும் பொறுப்பாகும். விண்ணப்பதாரர், தாம் செலுத்திய பங்குத் தொகையை திரும்பவும் பெற்றுக்கொள்ளலாம்.

3. திட்ட அறிவிப்பை வெளியிட்ட அய்ந்து நாட்களுக்குள் பங்கு ஒதுக்கப் பட்டால், அது முறையற்றது ஆகும். எனினும், அது செல்லுபடியாகும்.

பங்கு ஒதுக்கீட்டு நடைமுறை (Procedure of Allotment):

பங்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்பு நிறைவேற்ற வேண்டிய கட்டு வரம்புகளை (நிபந்தனைகளை) நிறைவு செய்த பிறகு நிறுவன இயக்குனர்கள் பங்கு ஒதுக்குவதில் ஈடுபடுகிறார்கள். பங்கு வாங்க விண்ணப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிறுவனம் வெளியிட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இருந்தாலும் (fully subscribed), குறைவாக இருந்தாலும் (under subscribed) எவ்வித இடர்பாடும் இன்றி பங்குகளை ஒதுக்கீடு செய்யலாம்.

அதாவது விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் எத்தனை பங்குகளுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறாரோ அத்தனை பங்குகளையும் ஒதுக்கீடு செய்து விட லாம். ஆனால் பங்குகளைப் பெறுவதற்கு வேண்டி நிறுவனத்திற்கு செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள், அந்நிறுவனம் வெளியிட்டுள்ள பங்குகளைவிட அதிகமாக இருப்பின் (over-subscribed), பங்கு ஒதுக்கல் சிக்கல் நிறைந்ததாக அமையும். நிறுவனத்தின் இயக்குனரவை, தங்கள் நிறுவன பங்குகளை விண்ணப்பதாரர் களுக்கிடையே பிரித்துக் கொடுக்க வேண்டும். இப்பணியை உண்மையில் 'பங்கு ஒதுக்கல் குழு' (allotment committee) செய்கிறது.

இவ்வாறு ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் ஒதுக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையானது, பங்கு விண்ணப்ப ஒதுக்கீட்டுப் பட்டியலில் (share application allotment list), அவரது பெயருக்கு நேராகக் குறிக்கப்படும். இப்பட்டியலில் இயக்குனரவையின் தலைவர் கையொப்பம் செய்தல் வேண்டும். பிறகு விண்ணப்ப தாரருக்கு பங்கு ஒதுக்கீட்டுக் கடிதம் அனுப்பப்படும்.

பகுதி ஒதுக்கீடு (Partial Allotment) : விண்ணப்பதாரர் கேட்டிருந்த பங்குகளை விட குறைவான பங்குகளை ஒதுக்குதல், 'பகுதி ஒதுக்கீடு' எனப்படும். நிபந்தனையுடன் கூடிய ஒதுக்கீடாக, மேற்படி பகுதி ஒதுக்கீடு அமைகிறது. எனினும் இப்பகுதி ஒதுக்கீட்டை விண்ணப்பதாரர் மறுக்கலாம். ஒதுக்கீடு செய்யப்படும் பங்கு களின் எண்ணிக்கையை குறிப்பிட்டு, ஒதுக்கீட்டுக் கடிதத்துடன் பங்குச் சான்றிதழை நிறுவனம் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அதிகப்படியான விண்ணப்பப் பணத்தை சரி செய்தல் [சரிக்கட்டிக் கொள்ளல்] (Adjustment of excess application money) : விண்ணப்ப தாரருக்கு, அவர் விண்ணப்பித்திருந்ததை விட குறைவான எண்ணிக்கையுள்ள பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டால், அதிகப்படியான விண்ணப்பப் பணத்தை அவரிட மிருந்து வர வேண்டிய ஒதுக்கீட்டு பணத்திற்காக சரிசெய்து கொள்ளலாம். பங்கு விண்ணப்ப ஒதுக்கீட்டுப் பட்டியலில் இது குறிக்கப்பட்டு, விண்ணப்பதாரருக்கு இது ஒதுக்கீட்டுக் கடிதத்தின் வாயிலாகத் தெரிவிக்கப்படும்.

ஒதுக்கீட்டுக் கடிதம் அனுப்புதல் (Issue of allotment letter):

ஒதுக்கீட்டுக் கடிதம் என்பது ஒரு நிறுவனம், பங்கு ஒதுக்கீடு செய்யப் பெற்ற நபர்களுக்கு பங்குகள் ஒதுக்கப்பட்ட விபரத்தைத் தெரிவிக்கும் கடிதமாகும். இது, பொதுவாக அச்சிடப்பட்டிருக்கும். மேலும் இது பதிவு அஞ்சல் மூலமாக பங்கு ஒதுக்கீடு செய்யப் பெற்றவருக்கு அனுப்பப்படும். இக்கடிதத்தை, அவர் பாதுகாப்பாக வைத் திருந்து, பங்குச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும். இக்கடிதத்தில் எத்தனை பங்குகளுக்கு விண்ணப்பிக்கப்பட்டது, எத்தனை பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது, ஒதுக்கீட்டின் போது செலுத்தப்பட வேண்டிய தொகை எவ்வளவு, எந்த தேதிக்குள் இத் தொகை செலுத்தப்பட வேண்டும் ஆகிய விபரங்கள் குறிக்கப்பட்டிருக்கும். விண்ணப் பப் பணம் அதிகமாக இருப்பின், அது திருப்பி அனுப்பி வைக்கப்படும். இது தொடர்பாக, **'தொகை திரும்பக் கொடுக்கும் கீறலிடப்பட்ட ஆணையொன்று' (Crossed refund order)** ஒதுக்கீட்டுக் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

பங்கு ஒதுக்கல் துறப்பு (Renunciation of allotment): பங்கு ஒதுக்கப் பெற்றவர்கள், தங்கள் பங்கு ஒதுக்கீட்டை துறத்தலே, பங்கு ஒதுக்கல் துறப்பு எனப்படு கிறது. அதாவது பங்கு ஒதுக்கப் பெற்ற ஒருவர், தொடர்ந்து பங்குகளை வைத்துக் கொள்ள விரும்பவில்லை என்றால், அவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளின் மீதான உரிமையை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுப்பதாகும். பங்கு ஒதுக்கலை துறைக்க விரும்புவர், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதமொன்றை எழுதித் தர வேண்டும். இக் கடிதம் 'துறப்புக் கடிதம்' (Letter of renunciation) எனப்படுகிறது. இந்த உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, பங்கு ஒதுக்கீட்டுக் கடிதத்துடன், துறப்புக் கடிதம் மற்றும் ஒதுக்கீட்டு விண்ணப்பக் கடிதம் (Letter of request) எனும் இரு கடிதங்களை சம்பந்தப்பட்ட நிறுவனம் சேர்த்து அனுப்பி வைக்கும். பங்கு ஒதுக்கீடு செய்யப் பெற்றவர், தனது பங்கை விட்டுக் கொடுக்க விரும்பினால் துறப்புக் கடிதத்தையும், ஒதுக்கீட்டு விண்ணப்பக் கடிதத்தையும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். இவற்றைப் பெற்றுக் கொண்டு, அந்நிறுவனம் விண்ணப்ப ஒதுக்கீட்டுப் பட்டியலில் தேவையான மாற்றங்களைச் செய்யும்.

முடிவுரை:

மேற்கண்ட பல்வேறு நிபந்தனைகளையும், கட்டுவரம்புகளையும் பூர்த்தி செய்து, சட்டப்படியான தடைகளை தாண்டி வந்தால்தான் பங்கு ஒதுக்கீடு செல்லும்.

44. Share Certificate - Write short notes. (பங்குச் சான்றிதழ் - குறுகிய விடை எழுதுக.)

விண்ணப்பம் செய்தவர்களுக்கு பங்குகளை ஒதுக்கீடு செய்து, ஒதுக்கீட்டு கடிதம் வழங்கிய பிறகு, நிறுவனம் அடுத்தபடியாக, அப்பங்குதாரர்களுக்கு பங்குச் சான்றிதழ்களை வழங்க வேண்டும். பங்கு ஒதுக்கீடு செய்யப் பெற்றவர், தனக்கு அந்நிறுவனத்தில் இத்தனை எண்ணிக்கையுள்ள பங்குகள் உள்ளன என்று அந் நிறுவனம் சான்றளித்துத் தரக் கூடிய ஆவணமொன்றைப் பெற உரிமையுடையவர். அத்தகு ஆவணமே, **'பங்குச் சான்றிதழ்'** எனப்படுகிறது.

வேறுவிதத்தில் கூறுவதெனில், 'பங்குச் சான்றிதழ்' என்பது அதில் குறிப்

பிடப்பட்டவரும், அது வழங்கப்பட்டவரும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளை விற்பதற்கும், கைமாற்றம் செய்வதற்கும் முற்படலாம் என்ற எண்ணத்துடன் நிறுவனத்தால் வழங்கப்பட்டதாக, அனைவரும் அறிந்துகொள்ளக் கூடிய விதத்தில் சான்றளிக்கப் பட்டு கொடுக்கப்படும் ஆவணமாகும்.

பங்குச் சான்றிதழ் : மேற்கண்ட நிலைப்பாட்டையே நிறுவனச் சட்டத்தின் **46(1)-வது பிரிவு** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, ஓர் உறுப்பினரின் பங்குகளைக் குறிப்பிட்டு, அவ்வுறுப்பினர் அவ்விதம் குறிப்பிடப்பட்ட பங்குகளுக்கு உரியவர் என்பதற்கு நிறுவனத்தின் பொது முத்திரை, ஏதுமிருந்தால், அதன் கீழ் முத்திரையிடப்பட்ட அல்லது இரண்டு இயக்குனர்களால் அல்லது இயக்குனர் ஒருவர் மற்றும் நிறுவனச் செயலாளர் ஒருவரை அந்நிறுவனம் நியமனம் செய்திருந்தால் அவரும் கையொப்பமிட்ட பங்குச் சான்றிதழானது அதன் மீதான உரிமைமூலத்திற்கு முதற்தோற்ற சான்றாகும் (Prima facie evidence).[1]

பங்குச் சான்றிதழில் நிறுவனத்தின் பெயர், வரிசை எண், உரிமையாளரின் பெயர், தொழில், முகவரி, பங்கின் முகமதிப்பு, தேதி ஆகியன காணப்படும். இப்பங்குச் சான்றிதழை நிறுவனத்தின் செயல்முறை விதிகளின்படி 'மாற்றுவதற்குரிய அசையும் சொத்து' எனலாம்.

பங்குச் சான்றிதழின் இரண்டாம் பிரதியை (Duplicate share certificate) பெறுவது எப்படி? : நிறுவனம் வழங்கிய பங்குச் சான்றிதழ் தொலைந்து விட்டதை அல்லது அழிக்கப்பட்டு விட்டதை அப்பங்குகளுக்கு உரியவர் மெய்ப்பித்தால் அவருக்கு பங்குச் சான்றிதழின் இரண்டாம் பிரதியை நிறுவனம் வழங்கலாம். மேலும் பங்குச் சான்றிதழ் உருத்தெரியாமலோ, உருச்சிதைந்தோ, அல்லது கிழிந்தோ போனாலும், மற்றும் நிறுவனத்திடமே சரண் செய்யப்பட்டிருந்தாலும், சம்பந்தப்பட்ட பங்குகளுக்கு உரியவர் பங்குச் சான்றிதழின் இரண்டாம் பிரதியை நிறுவனத்திடமிருந்து பெறலாம். **[பிரிவு 46(2)]**.

Ajit Jayantilal Seth v. Shriram Transport Finance Co. Ltd.,[2]

இவ்வழக்கில் பங்குச் சான்றிதழின் இரண்டாம் பிரதியை வழங்கும்படி ஒரு நிறுவனத்திற்கு ஏவுரைக்க நிறுவனச் சட்ட வாரியத்திற்கு (தற்போது நிறுவன சட்டத் தீர்ப்பாயம்) 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 113 (தற்போது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 46) அதிகாரமளிக்கவில்லை என்றும்,

---

1. A certificate, issued under the common seal, if any, of the company or signed by two directors or by a director and the Company Secretary, wherever the company has appointed a Company Secretary, specifying the shares held by any person, shall be prima facie evidence of the title of the person to such shares - **Section 46(1) of the Companies Act, 2013 r/w Section 7 of the Companies (Amendment) Act, 2015.**
2. (2006) 113 Comp Cas. 604 (CLB)

இங்கு பாதிக்கப்பட்ட மனுதாரர் நிறுவனங்கள் (பங்குச் சான்றிதழ் வழங்குகை) விதிகள், 1960 [The Companies (Issuance of Share Certificate) Rules, 1960] –இன் விதி 4(3)–இன் கீழ் கிடைக்கும் தீர்வழியை நாட வேண்டும் என்றும், எனவே அவ்விதியின்படி மனுதாரர் விண்ணப்பித்து நிறுவனத்திடமிருந்து பங்குச் சான்றிதழின் இரண்டாம் பிரதியை பெறலாம் என்றும் நிறுவன சட்ட வாரியம் விளக்கமளித்து, தீர்ப்புரைத்தது.

ஒரு நிறுவனம் மோசடி செய்யும் நோக்குடன் பங்குச் சான்றிதழின் இரண்டாம் பிரதியை வெளியிட்டால், சம்பந்தப்பட்ட பங்கு முக மதிப்பின் அளவில் அப்நது மடங்கு அளவிற்கான அபராதத்திற்கு ஆளாகும். இது அதிகபட்சமாக பத்து மடங்கு வரையும் நீட்டிக்கப்படலாம். அல்லது பத்து கோடி ரூபாய் வரையிலும் அபராதம் விதிக்கப்படலாம். மேலும் மேற்கண்டவற்றில் எது அதிகமாக உள்ளதோ அது அபராதமாக நிறுவனத்திற்கு விதிக்கப்படும். அத்துடன் தவறுகை புரிந்த நிறுவன அலுவலர் நிறுவனச் சட்டத்தின் பிரிவு 447–இன் கீழ் மோசடிக் குற்றத்திற்கான நடவடிக்கைக்கும் ஆளாக நேரிடும். **[பிரிவு 46(2)].**

45. Share Warrant - Write short notes. (பங்காணை அல்லது பங்குச் சீட்டு - குறுகிய விடை எழுதுக.)

பொது நிறுவனம் ஒன்று, அதன் செயல்முறை விதிகள் அனுமதித்தால், மைய அரசின் ஒப்புதல் பெற்று, அதன் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளுக்கு நிறுவனத்தின் பொது முத்திரையிட்டு பங்காணை ஒன்றை வழங்கலாம். பங்காணையில் அதனுடைய மதிப்பு மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கும். உடைமையாளருடைய பெயர் மற்றும் பிற விபரங்கள் இருக்காது. எனவே பங்காணை முற்றிலும் செலாவணித் தன்மை பெற்றதாகும். இந்த ஆவணத்தை வைத்திருப்பவரே, அதனுடைய முழு உரிமையாளராக கருதப்படுகிறார். இந்த ஆவணத்தை சாதாரணமாக மாற்றிக்கொடுப்பதன் மூலம் பங்குகளின் மீதான உரிமையையும் மாற்றிக்கொடுத்து விடலாம். பங்காணையின் பங்கு அத்தாட்சி ஆவணம் அல்லது பத்திரம் என்றும் இதனைக் கூறலாம்.

பங்காணையுடன், உரிமைச்சான்று சீட்டுக்கள் (Coupons) இணைக்கப்பட்டிருக்கும். ஆண்டு முடிவில் இவற்றை ஒப்படைத்து நிறுவனத்திடமிருந்து பங்காதாயத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

பங்காணை வழங்கியதும், நிறுவனம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளுக்குரிய உறுப்பினர் பெயரை உறுப்பினர் பதிவேட்டிலிருந்து நீக்கி அதற்கு பதிலாக, பங்காணை வழங்கப்பட்டதையும், அது வழங்கப்பட்ட தேதியையும், எண்ணிக்கை விவரங்களையும் குறிக்க வேண்டும். பங்காணையை வைத்திருப்பவர், அதை எப்போது வேண்டுமானாலும் நிறுவனத்திற்கு திருப்பியளித்து, அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளலாம். எனவே பங்காணை வைத்திருப்பவர் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உறுப்பினராகக் கருதப்படுகிறார்.

46. Distinguish between Share Certificate and Share Warrant. (பங்குச் சான்றிதழையும் பங்குப் பணப்பற்றாணையையும் வேறுபடுத்துக.)

1. பங்குச் சான்றிதழ் மாற்றுமுறையாவணம் அல்ல. மாறாக, பங்கு பணப் பற்றாணை மாற்றுமுறையாவணம் ஆகும்.

2. பங்குச் சான்றிதழ் உடையவர் நிறுவனத்தின் உறுப்பினராவார். ஆனால் பங்குப் பணப்பற்றாணை வைத்திருப்பவர் நேரடியாக ஒரு உறுப்பினராவதில்லை. அவர் அதை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்குச் திருப்பியளித்து, தனது பெயரை உறுப்பினர் பதிவேட்டில் பதிந்து கொள்ளும் வரை, ஒரு உறுப்பினராகக் கருதப்படுபர் (deemed) மட்டுமே. எனவே அதுவரையில் உறுப்பினருக்குரிய பொறுப்புகள் எழுவ தில்லை.

3. பங்குச் சான்றிதழ், பணம் முழுமையாக செலுத்தாத போதிலும் வழங்கப் படும். பங்கு பணப்பற்றாணை முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளுக்குத்தான் மைய அரசின் முன் அனுமதியுடன் வழங்கப்படும்.

4. பொது நிறுவனமும் தனியார் நிறுவனமும் பங்குச் சான்றிதழ் வழங்க லாம். ஆனால் பங்கு பணப்பற்றாணையைப் பொது நிறுவனம் மட்டுமே வழங்க முடியும்.

47. Shares and Stock - Write short notes. (பங்குகளும் பங்குத் தொகுப்புகளும் - குறுகிய விடை எழுதுக.)

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 2(84)**–ஆனது பங்கு என்ற பதத்திற்கு வரையறை தருகிறது. அதன்படி, **'பங்கு' என்பது நிறுவனமொன் றின் பங்கு மூலதனத்தில் ஓர் பங்கு என்று பொருள்படும்,** அதே சமயத்தில் பங்கு என்ற பதத்தில் **பங்குத் தொகுப்பும் (stock)** உள்ளடங்கியதாகும் என்று அவ்வரை யறையில் கூறப்பட்டுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது.

பங்கிற்கான வரையறை இவ்வாறிருக்க, **'பங்குத் தொகுப்பு' (Stock)** என்பது முழுவதும் செலுத்திய பங்குகள் ஒன்றாக சேர்க்கப்பட்டு சட்டப்படி இணைக் கப்பட்டதாகும். பங்குத் தொகுப்பினை பிரித்து, பங்கு பகுதியாக்கி அவ்வாறு ஒவ்வொரு பகுதிக்கும் கொடுக்கப்படும் பத்திரம், **'பங்குத் தொகுப்பு சான்றிதழ்' (Stock Certificate)** எனப்படும்.

பங்குத் தொகுப்புகள் பதிவு செய்யப்பட்டவை என்றும், பதிவு செய்யப்படா தவை என்றும் இருவகைப்படும். பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுப்பிற்கு 'பங்குத் தொகுப்பு சான்றிதழ்' வழங்கப்படும். பதிவு செய்யப்படாத பங்குத் தொகுப்பிற்கு **'பங்குத் தொகுப்பு உரிமைச் சீட்டு' (Stock Warrant)** வழங்கப்படும். நிறுவனத் தின் செயல்முறை விதிகளின்படி, சில நிறுவனங்கள் தங்கள் பங்குகளை, பங்குத் தொகுப்பாக மாற்றும் உரிமையினை பெற்றுள்ளன.

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 61 (c)**-ஆனது, ஒரு நிறுவனம், முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை பங்குத் தொகுப்பாக மாற்றலா மென்றும், அவற்றை மீண்டும் பங்குகளாக மாற்றலாம் என்றும் குறிப்பிடுகிறது. **பிரிவு 64(1)(a)**–ஆனது, பங்கு மூலதனத்தைக் கொண்ட ஒரு நிறுவனம் தனது பங்குகளை பங்குத் தொகுப்பாக மாற்றினால், அது குறித்து நிறுவனங்களின் பதிவாளருக்கு அறிவிப்பு செய்தல் வேண்டும் என்று கூறுகிறது.

48. Differentiate between Shares and Stocks. (பங்குகளுக்கும் பங்குத் தொகுப்புகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறுக.)

பங்குகள் [Shares]	பங்குத் தொகுப்பு [Stock]
1. பங்குகள் சம மதிப்புள்ளவைகளாக இருக்க வேண்டும்.	பங்குத் தொகுப்பு வெவ்வேறு மதிப்பு உள்ள பகுதிகளாக பிரிக்கப்படலாம்.
2. பங்குகளை முழுமையாகத்தான் உரிமை மாற்றம் செய்யலாம்.	பங்குத் தொகுப்பை பின்னங்களாகவும் (fractions) உரிமை மாற்றம் செய்யலாம்.
3. பங்குகளின் உரிமை மாற்றம் பதிவு செய்யப்பட வேண்டும்.	பங்குத் தொகுப்புகளின் உரிமை மாற்றம் பதிவு செய்யப்பட வேண்டியதில்லை.
4. பங்குகள் தொடர்ச்சியாக எண்ணிக்கையிடப்படுகிறது.	பங்குத் தொகுப்பின் பகுதிகளுக்கு எண்ணிக்கையிடப்படுவதில்லை.
5. பங்குகள், முழுவதும் செலுத்தப் படாத பங்குகளையும் குறிக்கின்றன.	பங்குத் தொகுப்பு, முழுவதும் செலுத்தப் பட்ட பங்குகளைத்தாம் குறிக்கின்றன.
6. நிறுவனச் சட்டத்தில் பங்குகளுக்கு என தனியாக பல பிரிவுகள் உள்ளன.	பங்குகளுக்கென நிறுவனச் சட்டம் கூறியுள்ள பிரிவுகள் பங்குத் தொகுப்பை பாதிப்பதில்லை. (அதாவது அப்பிரிவுகள் பங்குத் தொகுப்பிற்கு பொருந்தாது.)

49. Define a 'Call'. What are the essentials of a valid Call. ('அழைப்பு' என்பதை வரையறு. ஒரு செல்லத்தக்க அழைப்பின் முக்கியக் கூறுகள் யாவை?)

(அல்லது)

Calls on shares - Write short notes. (பங்குத் தொகை அழைப்புகள் - குறுகிய விடை எழுதுக.)

அழைப்பு (Call) - விளக்கம்:

ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்படும் பொழுது, அது தான் வெளியிடும் பங்குகளின் முழு மதிப்பையும் வசூலிப்பதில்லை. பொதுவாக பங்குகளின் மதிப்பில் ஒரு பகுதியை பங்கு விண்ணப்பத்துடனும், மற்றொரு பகுதியை பங்கு ஒதுக்கீட்டின் பொழுதும், மீதமுள்ள பகுதியை பல்வேறு தவணைகளிலும் வசூலிக்கின்றன. இவ்வாறு வசூலிக்கப்படும் தவணைகள், **'அழைப்புகள்' (Calls)** எனப்படும். எடுத்துக்காட்டாக, நிறுவனமொன்று வெளியிடும் பங்கின் மதிப்பு ரூ.1000/- என்று வைத்துக் கொள்வோம். இதில் விண்ணப்பப் பணம் ரூ.100/- என்றும், பங்கு ஒதுக்கப்படும் பொழுது செலுத்தப்படும் பணம் ரூ.100/- என்றும், பங்கு வழங்கப்பட்டு இரண்டாவது

மாதத்தில் செலுத்தப்படும் தொகை ரூ.200/– என்றும் கொண்டால், மீதியுள்ள ரூ.600/– என்பது இங்கு '**அழைப்புப் பணம்**' (Call Money) ஆகும். இப்பணத்தைச் செலுத்தும்படி சம்பந்தப்பட்ட உறுப்பினரை நிறுவனம் பின்னிட்டு அழைக்கலாம். விண்ணப்ப நிலைக்கும், ஒதுக்கீடு நிலைக்கும் அடுத்துள்ள நிலைதான், '**பங்குத் தொகை அழைப்பு**' நிலையாகும். இதன் நுணுக்கமான வரையறை வருமாறு.

பங்குத் தொகை அழைப்பு (Call on Shares) – விளக்கம்:

நிறுவனத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தாம் வாங்கியுள்ள பங்குகளின் செலுத்தப்படாத பகுதியினை செலுத்தும் பொறுப்பினை பெற்றுள்ளார்கள். அவ்வாறு செலுத்தப்படாத பகுதியினை, செலுத்தும்படி முறையாகக் கோரி அனுப்பப்படும் அறிவிக்கை '**பங்குத் தொகை அழைப்பு**' (Call on Shares) எனப்படுகிறது.

ஒரு முறையான அழைப்பிற்கான விதிகள் (அல்லது) ஒரு செல்லத்தக்க அழைப்பிற்கான முக்கியக் கூறுகள்:

1. இயக்குனரவையின் தீர்மானம் (By a Resolution of the Board): 'அழைப்பானது' தகுதி பெற்ற இயக்குனரவைத் தீர்மானத்தின் மூலம் செய் யப்பட வேண்டும். அழைப்பு விடும் பொழுது இயக்குனரவைக் கூட்டம் முறையாகக் கூட்டப் பட்டதா, கூட்டத்திற்குத் தேவையான குறைந்த எண்ணிக்கை (Quorum) இருந்ததா என்பதையும் கவனிக்க வேண்டும். மேலும் அழைப்பு விடுக்கும் இயக்குனர்கள் தகுதி யானவர்களாக இருத்தல் வேண்டும். எனினும் இயக்குனர்கள் தகுதியற்றவர்களாக இருந்தாலும் அல்லது முறைப்படி நியமனம் செய்யப்படாதவர்களாக இருந்தாலும், அவர்தம் செய்கைகள் செல்லக் கூடியதே என்று சில நிறுவனங்கள் தங்கள் செயல் முறை விதிகளில் சரத்துக்களை ஏற்படுத்திக் கொள்கின்றன.

Dawson v. African Consolidated Land and Trading Co.[1]

இவ்வழக்கில் நிறுவனத்தின் இயக்குனர்கள் மூவர் கூடி பங்குத் தொகை அழைப்பு செய்ய தீர்மானம் நிறைவேற்றினர். அதில் ஒருவர் இயக்குனராக இருப்ப தற்கு தகுதியற்றவராக இருந்தார். இருப்பினும் இக்குறை, இயக்குனர்களின் செய்கை களைப் பாதிக்காது என்று அந்நிறுவனத்தின் செயல்முறை விதிகள் குறிப்பிட்டன. எனவே நிறுவனம் செய்த அழைப்பு செல்லத்தக்கதே என்று நீதிமன்றம் பகர்ந்தது.

2. செலுத்தலுக்குரிய தொகையும் காலமும் (The Amount and Time of Payment): இயக்குனரவையின் தீர்மானத்தில் அழைப்புத் தொகையும், அது செலுத்தப்பட வேண்டிய தேதியும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். தவறி னால் தீர்மானம், செல்லாததாகும்.

E and W Insurance Co. Ltd. v. Mrs. Kamala Mehta[2]

இவ்வழக்கில் இயக்குனர்கள் செய்த இரண்டு தீர்மானங்களிலும், அழைப்

1. 1898 1 Ch 6
2. AIR 1956 Bom 537

புத் தொகையும், அது செலுத்தப்பட வேண்டிய தேதியும் குறிப்பிடப்படவில்லை. அந் நிறுவனத்தின் செயலாளர், மேற்படி விபரங்களை தம்மிச்சைப்படி நிச்சயித்துக் கொண் டார். இந்த அழைப்பு செல்லாது என்று பம்பாய் உயர் நீதிமன்றம் கூறியது.

3. அழைப்பு உண்மையாக நிறுவனத்தின் நன்மைக்காக அமைதல் அவசியம் (Bonafide in the interest of the Company): அழைப்பு விடுக் கின்ற அதிகாரம் மிகவும் நம்பிக்கைக்குகந்த அதிகாரமாகும். எனவே அந்த அதிகாரத்தை நம்பிக்கைக்குகந்த வகையில் நிறுவனத்தின் நன்மைக்காக நல்லெண்ணத்துடன் பயன்படுத்த வேண்டும். இவ்வாறில்லாவிட்டால் அவ்வழைப்பு செல்லாததாகும்.

Alexandar v. Automotive Telephone Co.[1]

இவ்வழக்கில், இயக்குனர்கள் தாங்கள் முதற்கண் செலுத்த வேண்டிய அழைப்புத் தொகையைச் செலுத்தாமல், மற்றெல்லா உறுப்பினர்களையும் குறிப்பிட்ட அழைப்புத் தொகையினை செலுத்தக் கோரி அழைப்பு விடுத்தனர். ஆனால் மேற்படி அழைப்பு நல்லெண்ணத் துடன் செய்யப்பட்டதல்ல; நம்பிக்கைத் துரோகமானது என்று நீதிமன்றம் கூறி, இயக்குனர்களும் அழைப்புத் தொகையைச் செலுத்த வேண்டு மெனத் தீர்ப்பளித்தது.

4. ஒரே சீர்மையான அடிப்படை (Uniform basis): நிறுவனச் சட்டப்படி ஒரே வகையான பங்குகளின் மீதான அழைப்பு பணம் (Call money) ஒரே சீராக இருத்தல் வேண்டும். ஒரே வகையான பங்குதாரர்களுக்கிடையே மாறுபட்ட தொகையை, அழைப்புப் பணமாக வசூலிக்கக்கூடாது. **[பிரிவு 49].**

Galloway v. Halls Concerts Society[2]

இவ்வழக்கில் உறுப்பினர் ஒருவர், முதலிரண்டு அழைப்புத் தொகைகளைக் காலம் கடந்து செலுத்தினார். மூன்றாவது அழைப்புத் தொகையைச் செலுத்தாமல் கவனக்குறைவாக இருந்தார். இதனால் சினமடைந்த இயக்குனர்கள், அவ்வுறுப்பினர் தம் பங்கில் செலுத்த வேண்டிய அழைப்புத் தொகை முழுவதையும் உடனடியாகச் செலுத்த வேண்டுமென தீர்மானித்தனர். இந்த அழைப்பு செல்லாதது என்று நீதிமன் றம் கூறியது.

5. அழைப்புத் தொகையை பணமாகவோ அல்லது பொருள்களாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

Laroeque v. Beauchemin[3]

இவ்வழக்கில் ஒரு நிறுவனம் காகித ஆலை ஒன்றை வாங்கியது. அவ்வாலை விற்கப்பட்ட தொகையின் ஒரு பகுதியை அந்நிறுவனத்தின் பங்குகளாக அவ்வாலையை விற்றவர் பெற்றுக் கொண்டார். இங்கு அவர் தாம் விற்ற தொகைக்

1. (1900) 2 Ch 56
2. (1915) 2 Ch 233
3. (1897) AC 358

காக அந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கிய வகையில், அழைப்புத் தொகையானது செலுத்தப்பட்டுவிட்டது. இவ்வாறு அழைப்புத் தொகை செலுத்தப்பட்டது செல்லத் தக்கதே என்று முடிவு செய்யப்பட்டது.

6. **அழைப்பு, கண்டிப்பாக செயல்முறை விதிகளுக்குட்பட்டு செய்யப்பட வேண்டும்.** அழைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டிய இடம் மற்றும் காலத்தை அழைப்பு அறிவிக்கையில் குறிப்பிட வேண்டும்.

அழைப்புத் தொகையை வசூல் செய்யும் முறைகள்:

ஒரு நிறுவனம் பங்குத் தொகையைச் செலுத்தக் கோரி முறையாக அழைப்பு விடுத்தும், உறுப்பினர் (பங்குதாரரின்) ஒருவர் அத்தொகையை செலுத்தத் தவறினால், அந்நிறுவனம் அத்தொகையை வசூலிக்க பின்வரும் நடைமுறைகளைக் கையாளலாம். அவை,–

1. அழைப்புத் தொகையைச் செலுத்தத் தவறிய உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளை பறிமுதல் (Forfeiture of Shares) செய்து கொள்ளலாம்.
2. அவ்வுறுப்பினர், தனக்கு அப்பங்குகள் வேண்டாம் என்று கூறி, அவற்றைச் சரண் (Surrender of Shares) செய்ய விழைந்தால், நிறுவனம் அதை ஏற்றுக் கொள்ளலாம்.
3. மேலும் செலுத்தத் தவறிய அழைப்புத் தொகையை, நிறுவனம் தனக்குரிய கடனை வசூல் செய்வதைப் போன்று சட்ட முறைப்படியான நடவடிக்கைகளை எடுத்து வசூல் செய்து கொள்ளலாம்.

50. What is forfeiture of Shares? What are the essentials of a valid forfeiture and what are the effects of forfeiture? (பங்குகள் பறிமுதல் செய்யப்படுதல் என்றால் என்ன? சட்டப்படியான ஒரு பறிமுதலுக்கு தேவையான கூறுகள் என்ன? பறிமுதல் செய்யப்படுவதின் விளைவுகள் யாவை ?)

(அல்லது)

"In the matter of forfeiture of shares technicalities must be strictly observed". Examine the nature of such technicalities and the consequences of their non-observance. ("பங்குகளை பறிமுதல் செய்யும் விஷயத்தில், சட்ட நுணுக்கஞ்சார்ந்த விதிமுறைகளை சற்றும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும்." அவ்வித சட்ட நுணுக்கஞ்சார்ந்த விதிமுறைகளின் தன்மையையும், அவைகளைக் கடைபிடிக்காவிடில் ஏற்படும் விளைவுகளையும் ஆராய்க.)

(அல்லது)

Forfeiture of shares - Write short notes. (பங்குகளை பறிமுதல் செய்தல் - குறுகிய விடை எழுதுக.)

பங்குகள் பறிமுதல் செய்யப்படுதல் - பொருள் :

நிறுவன உறுப்பினர் ஒருவரிடமிருந்து அவரது உறுப்பினர் பதவியை கட்டாய மாக பறித்து, அந்த உறுப்பினரை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக அவ்வுறுப்பினர் பதவியை இழக்கச் செய்வதை **'பங்குகள் பறிமுதல் செய்தல்' (Forfeiture of shares)** எனலாம்.

பொதுவாக பங்கிற்கான பணத்தைச் செலுத்தக் கோரி உறுப்பினர் ஒருவருக்கு அழைப்பு விடுத்து, அவர் அப்பணத்தைச் செலுத்தத் தவறினால், அவர் மீது சம்பந்தப்பட்ட நிறுவனம் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் நிறுவனச் செயல் முறை விதிகள் இவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகளை சம்பந்தப்பட்ட நிறுவனம் பறிமுதல் செய்து கொள்ளலாம் என்று கூறுகிறது. எனவே இவ்வாறு பங்குகளை பறிமுதல் செய்வதற்கு, அந் நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் தெளிவாக அதிகாரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு பங்குகள் பறிமுதல் செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட உறுப்பினரின் பெயர், உறுப்பினர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுகிறது. இது தவிர அவர் அதுவரை செலுத்தி வந்த பங்குத் தொகையினையும் இழக்க நேரிடலாம்.

சட்டப்படியான பறிமுதலுக்கு தேவையானவை :

ஒரு நிறுவனம் பங்குகளைப் பறிமுதல் செய்வதனால், அதன் மூலதனம் குறைகிறது. எனவே, பறிமுதல் செய்வது, பங்கையிழந்த உறுப்பினரை (பங்குதாரரை) நம்பியுள்ள அனைவரின் நலனையும் பாதிக்க வல்லதாக உள்ளது. எனவே ஒரு நிறுவனம் தனக்குள்ள பங்கு பறிமுதல் செய்யும் அதிகாரத்தை மிகவும் கவனமாகச் சட்டநுணுக்கஞ் சார்ந்த விதிகளைப் பின்பற்றி பயன்படுத்த வேண்டும். இவ்விதிகளைப் பின்பற்றுவதிலிருந்து சற்று தவறினாலோ அல்லது இவ்விதிகளைத் தளர்த்தினாலோ அல்லது மீறினாலோ, பங்குகளைப் பறிமுதல் செய்தது முற்றிலும் செல்லாததாகிவிடும். எனவே நிறுவனம் பின்வரும் சட்ட விதிகளின்படி பங்குகளைப் பறிமுதல் செய்ய வேண்டும்.

1. பங்குப் பறிமுதலானது செயல்முறை விதிகளின்படி அமைந்திருக்க வேண்டும் (In accordance with the Articles): பங்குகளைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தை ஒரு நிறுவனம் தனது செயல்முறை விதிகளின்படி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால், செயல்முறை விதிகளைத் தக்கபடி மாற்றி மேற்படி அதிகாரத்தை நிறுவனம் பெற வேண்டும்.

ஒரு நிறுவனம் தனது உறுப்பினர் ஒருவரின் உறுப்பினர் பதவியைப் பறித்துக் கொள்ள அந்நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அதற்கு அதிகாரமளித்திருக்க லாம். ஆனால் இவ்வாறு உறுப்பினர் பதவியை பறித்துக் கொண்டதால் மட்டுமே, அவர் தனது பங்குகளையும் இழந்தவராகிவிடமாட்டார். அவரது பங்குகளைப் பறிக்க நிறுவனச் செயல்முறை விதிகள் அந்நிறுவனத்திற்கு திட்டவட்டமான அதிகாரமளித் திருக்க வேண்டும். இவ்வாறு செயல்முறை விதிகள் அதிகாரமளித்திருக்காத பொழுது செய்யப்படும் பங்குப் பறிமுதல் செல்லாததாகும், என்று **Madhwa Ram Chandra**

Kamath v. Canara Banking Corporation[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

2. பறிமுதலுக்கு முன் அறிவிப்பு அனுப்புதல் (Notice precedent to Forfeiture): பங்குத் தொகையைச் செலுத்துமாறு அழைப்பு விடுத்தும், செலுத்தத் தவறும் உறுப்பினருக்கு, அதனைச் செலுத்தக் கோரி பதினான்கு தினங்கள் தவணை கொடுத்து அறிவிப்பு ஒன்றை நிறுவனம் அனுப்புதல் வேண்டும். அதில் மேற்படி பதினான்கு தினங்கள் முடிவுற்ற பிறகு வரக் கூடிய ஒரு தேதியைக் குறிப்பிட்டு, அத்தேதியில் அழைப்புத் தொகையைச் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தத் தவறினால் அவருக்கு ஒதுக்கப்பட்ட பங்குகள் பறிமுதல் செய்யப்படும் என்றும் திட்டவட்டமாகக் குறிப்பிட வேண்டும். மேலும் அவ்வுறுப்பினர் செலுத்த வேண்டிய சரியான தொகையையும் அதில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

Public Passenger Service Ltd. v. Khadar[2] – எனும் வழக்கில் பங்குப் பறிமுதலுக்கான ஒரு அறிவிப்பில், நிறுவனம் கோரும் அழைப்புப் பணம், அதற்கான வட்டி மற்றும் செலவுத் தொகைகளை அந்நிறுவனம் சரியாகக் குறிப்பிடப் படவில்லையானால், அப்பங்கு பறிமுதல் செல்லாததாகும் என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

Johnson v. Lyttle's Iron Agency[3] – எனும் வழக்கில் ஒரு பங்குப் பறிமுதல் அறிவிப்பில், பங்குத் தொகை செலுத்தத் தவறிய தேதியிலிருந்து வட்டி கேட்பதற்குப் பதிலாக, பங்குத் தொகையை செலுத்தும்படி அழைப்பு விடுக்கப்பட்ட தேதியிலிருந்து வட்டி கேட்கப்பட்டது. இது ஒரு பிழையான அறிக்கை (bad notice) என்றும், பங்குப் பறிமுதல் செல்லாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

மேற்கண்ட அறிவிப்பில் ஒரு சிறு பிழையிருப்பினும், அது பங்குப் பறிமுதலையே செல்லாததாக்கிவிடும் என்பதற்கு மேற்கண்ட வழக்குகளே சான்று களாகும். இந்த நடைமுறைகள் மிகவும் நுணுக்கமாக இருப்பினும், அவற்றை ஒரு நிறுவனம் மிகக் கண்டிப்புடன் பின்பற்றியே ஆக வேண்டும்.

3. பறிமுதலுக்கான தீர்மானம் (Resolution of Forfeiture): பங்குகளை பறிமுதல் செய்வதற்காக அனுப்பப்பட்ட அறிவிப்பே, பங்குகளைப் பறிமுதல் செய்ததாகிவிடாது. எனவே அவ்வறிவிப்பினைத் தொடர்ந்து, பறிமுதல் செய்வதற் கான தீர்மானத்தை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் இயக்குனர்கள் நிறைவேற்ற வேண்டும்.

Prayam Prasad v. Gaya Bank and Trades Association Ltd.[4] – எனும் வழக்கில் உறுப்பினர் ஒருவருக்கு செய்யப்பட்ட மூன்றாவது அழைப்புத் தொகையை அவர் செலுத்தவில்லை. அதை ஆறு வாரங்களுக்குள் வட்டியுடன்

1. AIR 1941 Mad. 354
2. (1965) 1 Comp. L.J. 1 : AIR 1966 SC 289
3. (1877) 5 Ch D 687
4. AIR 1931 Pat. 44

செலுத்த வேண்டுமென்றும், தவறினால் அவரது பங்குகள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. எனினும் அவர் அந்த அழைப்புத் தொகையைச் அறிவிப்பில் கண்டுள்ளவாறு செலுத்தவில்லை. எனவே அவரது பங்குகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால் இங்கு அந்த அறிவிப்பைத் தொடர்ந்து இயக்குனர்கள் பறிமுதலுக்கான தீர்மானம் எதையும் நிறைவேற்றி யிருக்கவில்லை. எனவே, அப்பங்குப் பறிமுதல் செல்லாது என்று பாட்னா உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

எனினும் முன்னதாக தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, அதனடிப்படையில் அறிவிப்பு அனுப்பலாம். எடுத்துக்காட்டாக, ஒரு அறிவிப்பில், 'அழைப்பு விடுக்கப் பட்டுள்ள இன்ன பங்குத் தொகையை நீவிர் இன்ன தேதியில் செலுத்தத் தவறும் பட்சத்தில், நிறுவனத்தின் இயக்குனர்கள் இன்ன தேதியில் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின்படி, உமது பங்குகள் பறிமுதல் செய்யப்படும் என்பதை அறிவீராக' என்றும் குறிப்பிடலாம். இம்மாதிரியான சூழலில் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, மேற்கண்டவாறான தீர்மானத்தை நிறைவேற்றத் தேவையில்லை.

4. **தகுதியுடைய இயக்குனர்கள்:** மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றும் இயக்குனர்கள், உரிய அதிகாரம் பெற்றவர்களாகவும், தகுதியுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. **நல்லெண்ணம் (Good faith):** பங்குகளைப் பறிமுதல் செய்யும் அதிகாரம் நம்பிக்கைக்குகந்ததாகும். எனவே, அதனை நம்பிக்கைக்குகந்த முறையில், நல்லெண்ணத்துடன் நிறுவனத்தின் நன்மைக்காக அந்நிறுவனம் பயன்படுத்த வேண்டும்.

6. **முறையான அழைப்பு:** பங்குத் தொகையை செலுத்தக் கோரி நிறுவனம் செய்த அழைப்பு முறையானதாக இருக்க வேண்டும்.

7. **செலுத்தலுக்கான காலம் கடந்திருத்தல்:** அழைப்பு செய்யப்பட்ட தொகை செலுத்தப்பட வேண்டிய காலம், முடிவடைந்ததாக இருக்க வேண்டும்.

8. **வேறு காரணங்களுக்காக பறிமுதல் கூடாது:** அழைப்புத் தொகைக்குத் தவிர, நிறுவனத்திற்குரிய வேறு கடனுக்காகப் பங்கை பறிமுதல் செய்யக் கூடாது. ஆனால் நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அனுமதித்தால், மேற்படியான வேறு காரணங்களுக்காகவும் பங்கை பறிமுதல் செய்யலாம்.

பங்குகள் பறிமுதல் செய்யப்படுதலின் விளைவுகள் :

1. அந்நிறுவனத்தில் அவ்வுறுப்பினர் கொண்டிருந்த 'உறுப்பினர் பதவி' பறி போகும். அதாவது அவர் அந்நிறுவத்தின் பங்குதாரராக மேலும் தொடர்ந்திருக்க முடியாது. அவரது பெயர் உறுப்பினர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.

2. அதுவரை அவர் நிறுவனத்திற்குச் செலுத்திய பணத்தைத் திரும்பப் பெற முடியாது.

3. செலுத்தப்படாத தொகையை, அவர் செலுத்த வேண்டிய பொறுப்புக்கு

உள்ளாகிறார். இங்கு, அவ்வுறுப்பினர் நிறுவனத்திற்கு ஒரு 'கடனாளி' ஆகிறார். எனினும் இவ்வாறு செலுத்தப்படாத தொகையை செலுத்தக் கோரும் அதிகாரத்தை அந்நிறுவனத்திற்கு, செயல்முறை விதிகள் வழங்கியிருக்க வேண்டும்.

4. பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் நிறுவனத்தின் சொத்தாகும். எனவே, அதனை மீண்டும் மற்றொருவருக்கு அதே விலைக்கோ அல்லது அதைவிட குறைந்த விலைக்கோ அல்லது எவ்விலைக்கும் விற்க அந்நிறுவனம் சுதந்திரம் படைத்தது. ஒருக்கால் அப்பங்குகளை அதிகமான விலைக்கு அந்நிறுவனம் விற்றால், சம்பந்தப் பட்ட உறுப்பினர் அவ்வாறு அதிகமான விலைக்கு விற்றதால் கிடைத்த உபரித் தொகையிலிருந்து, தான் செலுத்த வேண்டிய தொகையைக் கழித்துக் கொண்டு, மீதத்தை தனக்களிக்கும்படி கோர அவருக்கு உரிமை உண்டு.

முடிவுரை:

ஒரு நிறுவனம், 'எடுத்தேன்; கவிழ்த்தேன்' எனும் முறையில் தனது உறுப்பினர் (பங்குதாரர்) ஒருவரின் பங்குகளைப் பறிமுதல் செய்துவிட முடியாது. பங்குகள் என்பது, உறுப்பினரின் சொத்தாகும். எனவே அவற்றைப் பறிக்க, ஒரு நிறுவனம் மேற்கண்ட நடைமுறைகளை இம்மியும் பிசகாமல் நுணுக்கமாக பின்பற்ற வேண்டும்.

இந்நிலைப்பாடுதான், "பங்குகளை பறிமுதல் செய்யும் விஷயத்தில், சட்ட நுணுக்கஞ்சார்ந்த விதிமுறைகளை சற்றும் தவறாமல் ஒரு நிறுவனம் கடைபிடிக்க வேண்டும்," என்று சரியாகக் கூறப்படுகிறது. இவ்வாறு கடைப்பிடிக்காவிடில், பங்குப் பறிமுதல் செல்லாததாவது திண்ணம்.

51. Surrender of Shares - Write short notes. (பங்குகளை சரண் செய்தல் - குறுகிய விடை எழுதுக.)

பங்குகளைச் சரண் செய்தல் - விளக்கம்:

'பங்குகளைச் சரண் செய்தல்' என்பது நிறுவன உறுப்பினர் ஒருவர் தனது பங்குகளை அந்நிறுவனத்திடம் திரும்பக் கொடுத்தல் எனப்படும். நிறுவனச் சட்டம் இது குறித்து ஏதும் கூறவில்லை. எனினும், நிறுவனம் செலுத்தக் கோரிய பங்கு அழைப்புத் தொகையினைக் கட்ட முடியாத உறுப்பினர் (பங்குதாரர்), தான் வாங்கிய பங்குகளை அந்நிறுனத்திற்குத் திருப்பிக் கொடுத்தலே, 'பங்குகளைச் சரண் செய்தல்' எனப்படும்.

பங்குகளைச் சரண் செய்வதால் ஏற்படும் விளைவுகள்:

பங்குகளை சரண் (திருப்பிக்) கொடுப்பதால், நிறுவனத்தின் மூலதனம் குறைகிறது. எனவே ஒரு நிறுவனம் தனது நலனைக் கருத்தில் கொண்டே, அது சரண் செய்யப்படும் பங்குகளை திரும்ப ஏற்றுக் கொள்ள வேண்டும். பங்குத் தொகை செலுத்தக் கோரி ஒரு நிறுவனம் அழைப்பு விடுத்தும், அதனைச் செலுத்தத் தவறும் உறுப்பினர்களின் பங்குகளை நிறுவனம் பறிமுதல் செய்யலாம் என்று நாம் முன்ன

தாகக் கண்டோம். ஆனால் இங்கு அவ்வாறு செலுத்த இயலாத உறுப்பினரே, தனது பங்குகளை திரும்ப ஒப்படைத்துவிடுவதால், பங்கு பறிமுதலுக்கான நிறுவனத்தின் வேலை குறைகிறது. காலமும் விரயமாவதில்லை.

பங்குகள் பறிமுதலுக்கும், பங்குகளை சரண் (திருப்பி) செய்தலுக்குமுள்ள வேறுபாடுகள் :

1. பங்குப் பறிமுதல் என்பது நிறுவனத்தால் செய்யப்படுகிறது. ஆனால் பங்குகளை திருப்பிக் கொடுத்தல் என்பது உறுப்பினர் ஒருவரால் செய் யப்படுகிறது.
2. பறிமுதல் செய்ய நுணுக்கமான விதிமுறைகள் பல உண்டு. அவற்றை ஒரு நிறுவனம் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். திருப்பிக் கொடுப்பது பற்றி கட்டாய விதி ஏதுமில்லை.
3. பறிமுதலை நிறுவனச் சட்டமே அங்கீகரித்துள்ளது. ஆனால் பங்குகள் திருப்பிக் கொடுத்தல் பற்றி நிறுவனச் சட்டத்தில் வகைமுறைகள் ஏதுமில்லை. நீதிமன்றங்கள் வகுத்துக் கொடுத்துள்ள நெறிமுறை களின்படி பங்குகளை திருப்பிக் கொடுத்தல் அமைந்துள்ளது.
4. பங்குப் பறிமுதல் என்பது பங்குதாரரின் இசைவின்றி செய்யப்படுகிறது. ஆனால் பங்குகளை திருப்பிக் கொடுக்கும் செயலை, சம்பந்தப்பட்ட உறுப்பினரே விரும்பி செய்கிறார்.

-o0o-

இ.

பங்குகள் மாற்றமும் வாரிசுவழியில் பங்குரிமை மாறுதலும்

[Transfer of Shares and Transmission of Shares]

52. What is meant by Transfer of Share? What are the provisions for transfering shares? (பங்கு மாற்றம் என்பதன் பொருள் யாது? பங்குகளை மாற்றுவதற்குண்டான வகைமுறைகள் யாவை ?)

(அல்லது)

Transfer of Shares - Write short notes. (பங்குகள் மாற்றம் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை :

பொது நிறுவனப் பங்குகளின் சிறப்புத் தன்மையே அவை

எளிதாக பிறருக்கு மாற்றப்படுவதுதான். நிறுவனச் சட்டத்தின் **44-வது பிரிவானது.** "ஒரு நிறுவனத்தில் அதன் உறுப்பினர் எவரும் கொண்டுள்ள பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் அல்லது பிற நலன்கள் யாவும் அவரது அசையும் சொத்துக்களாகும். அவற்றை அந்நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளவாறு மாற்றிக் கொடுக்கலாம்,"[1] என பங்கு மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

பங்கு மாற்றம் (Transfer of Shares) - பொருள் :

நிறுவன உறுப்பினர் (பங்குதாரர்) ஒருவர் தன்னுடைய பங்குகளை விற்க முயலும் போதும், பிறர் அவற்றை வாங்கும் போதும் பங்கு மாற்றத்திற்கான சூழ்நிலை உருவாகிறது. பங்குகளை மாற்றிக் கொடுக்கும் உரிமையினை நிறுவனச் சட்டம், பொது நிறுவன (Public Company) உறுப்பினர்களுக்குத் கொடுத்துள்ளது. எனவே அப்பொது நிறுவன உறுப்பினர்கள் நிறுவன செயல்முறை விதிகளுக்குட்பட்டு, தங்கள் பங்குகளை மற்றவர்களுக்கு மாற்றிக் கொடுக்கலாம்.

பங்கு மாற்றத்திற்குண்டான வகைமுறைகள் (Provisions for Transfer of Shares) - பிரிவு 56:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 56–ஆவது பிரிவு பிணையங்களின் (அதாவது பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களின்) மாற்றம் மற்றும் வாரிசு வழியில் பங்குரிமை மாற்றத்தினைப் (Transfer and transmission of securities) பற்றி கூறுகிறது.

1. மாற்றம் செய்வதற்குண்டான ஆவணம் (Instrument of transfer) [பிரிவு 56(1)]: பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்களை மாற்றம் செய்வதற்காக **'மாற்றல் ஆவணம்' (Instrument of Transfer)** ஒன்றை நிறுவனத்திடம் அளிக்க வேண்டும். அது முறையாக முத்திரையிடப்பட்டு (duly stamped), அப் பங்குகளை மாற்றுபவரும் (Transferer), அவற்றை மாற்றிப் பெறுபவரும் (Transferee) அதில் கையொப்பமிட்டு அளித்தால்தான், நிறுவனம் அம்மாற்றத்தைப் பதிவு செய்யும். மேலும் அந்த ஆவணத்தில் மாற்றம் பெறுபவரின் பெயர், முகவரி, தொழில் முதலியன குறிப்பிடப்பட வேண்டும். மாற்றம் பெறுபவரின் பெயர் பதிவாகும் வரை பங்கு மாற்றம் முழுமை பெறாது. இந்த ஆவணத்தை பங்குச் சான்றிதழுடன் (Share certificate) இணைத்து நிறுவனத்திடம் அளிக்க வேண்டும். ஒருக்கால் பங்குச் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்கவில்லையானால், பங்கு ஒதுக்கீட்டு கடிதத்தை (Letter of allotment of shares) இணைத்து அளிக்கலாம். இதை மாற்றல் ஆவணம் கையொப்பமிடப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் நிறுவனத்திடம் அளிக்

1. **Nature of shares or debentures .-** The shares or debentures or other interest of any member in a company shall be movable property transferable in the manner provided by the articles of the company.
- Section 44 of the Companies Act, 2013.

கப்பட வேண்டும். [சட்டச் செயற்பாட்டால் பங்குகளின் வாரிசுவழி உரிமை (Transmission of shares by operation of law) ஏதும் மாறுவதாக அவ்வாறு வாரிசு வழி மாறப்பெற்ற நபர் எவரிடமிருந்தும் தகவல் கிடைக்கப் பெற்றால் அங்கு பங்குகளை மாற்றித் தர நிறுவனத்திற்குள்ள அதிகாரத்தை மேற்படி பிரிவு 56(1)–இல் உள்ள எதுவும் பாதிக்காது. அதாவது பங்குகளை வைத்திருப்பவர் இறந்து விடும் நேர்வில், அதன் மீதான உரிமை அவரது வாரிசுகளுக்கு மாறுகிறது. அப்போது வாரிசுதாரர்கள் அது குறித்து நிறுவனத்திற்கு தகவல் தெரிவித்து பங்குகளை மாற்றிக் கொள்ளலாம். இங்கு பிரிவு 56(1) கூறப்பட்டுள்ள மாற்றல் ஆவணம் தேவையில்லை. அதுபோல் அங்கு பின்பற்றப்படும் நடைமுறையையும் நிறுவனம் பின்பற்ற வேண்டியதில்லை – **பிரிவு 56(2)]**.

2. வகுத்துரைக்கப்பட்ட படிவம் (Prescribed form): மாற்றல் ஆவணம் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். அதாவது, மாற்றல் ஆவணம் நிறுவனப் பதிவாளரால் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். மாற்றம் பெறுபவரின் மாற்றம் நிறுவனத்தால் பதிவு செய்யப்பட்ட பின்னரே, அவர் நிறுவனத்தின் உறுப்பினர் ஆவார். அதுபோல், உறுப்பினர் பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கப்படும் வரை, மாற்றியளிப்பவரே பங்குகளின் உரிமையைக் கொண்டவராக தொடர்ந்து இருப்பார். பெயர் நீக்கப்பட்டவுடன் மாற்றம் பெறுபவருக்கு புதிய பங்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

3. பங்குகளை மாற்றுபவர் மட்டுமே விண்ணப்பம் செய்தல் (Application by the transferer alone) [பிரிவு 56(3)] : பகுதியளவு செலுத்தப்பட்ட பங்குகள் தொடர்பாக மாற்றம் செய்ய வேண்டி மாற்றுபவர் மட்டும் விண்ணப்பம் செய்தால், அதை நிறுவனம் அப்படியே பதிவு செய்துவிடல் ஆகாது. பங்குகள் யாருக்கு மாற்றப் பெற வேண்டுமோ அவருக்கு அந்த விண்ணப்பம் குறித்து அறிவிப்பு ஒன்றை நிறுவனம் அனுப்புதல் வேண்டும். அவ்வறிவிப்பு கிடைக்கப் பெற்ற இரண்டு வாரங்களுக்குள், பங்குகளை மாற்றிப் பெறுபவர் அம்மாற்றத்திற்கு தனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்பதை நிறுவனத்திற்கு தெரிவித்த பிறகுதான் பங்கு மாற்றத்தை அது பதிவு செய்தல் வேண்டும்.

4. பங்குகள் மாற்றப்பட்ட அல்லது வாரிசுவழியில் மாற்றப்பட்ட சான்றிதழை நிறுவனம் வழங்குவதற்கான கால அளவு (Period for delivering the certificate of transfer or transmission of shares) [பிரிவு 56(4) (a) மற்றும் (b)] : ஒரு நிறுவனம் பங்குகள் மாற்றப்பட்ட சான்றிதழை பிரிவு 56(1)–இன் கீழ் மாற்றல் ஆவணம் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் வழங்கி விட வேண்டும். அவ்வாறே பிரிவு 56(2)–இன் பங்குகளின் வாரிசுவழி மாற்றத்திற்கான தகவல் கிடைக்கப்பெற்ற ஒரு மாதத்திற்குள் வழங்கிவிட வேண்டும்.

5. சட்டநிலைப் பிரதிநிதியால் செய்யப்படும் மாற்றம் (Transfer by legal representative) [பிரிவு 56(5)]: நிறுவனத்தின் உறுப்பினராக இருந்து இறந்து போன ஒருவரின் சட்டநிலைப் பிரதிநிதி (வாரிசு) ஒருவர், இறந்து போனவரின்



பங்குகளை தன் வசம் கொண்டிருக்காவிட்டாலும், அவர் செய்யும் பங்கு மாற்றம் செல்லத்தக்கதே. அதாவது மாற்றல் ஆவணம் எழுதப்படும் சமயத்தில் அவர் அப்பங்குளை தன் வசம் கொண்டிருந்தவரைப் போன்றே கருதப்படுவார். வேறு விதத்தில் சொன்னால், இறந்து போன உறுப்பினர் ஒருவரின் சட்ட நிலைப் பிரதிநிதி ஒருவர், அவர் அச்சமயத்தில் நிறுவனத்தின் உறுப்பினராக இல்லாவிட்டாலும், அவர் நிறைவேற்றிய பங்குரிமை மாற்றம் செல்லத்தக்கதே யாகும்.

பங்கு மாற்றத்தை பதிவு செய்ய நிறுவனம் மறுத்தல் (Refusal to register Transfer of Shares) - பிரிவு 58:

பங்குகளால் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்று (Private company limited by shares) பங்கு மாற்றத்தை அல்லது சட்டச் செயற்பாட்டால் எழும் வாரிசு வழி பங்குரிமை மாற்றத்தை பதிவு செய்ய மறுத்தால், அம்மறுப்பு குறித்த அறிவிப்பை அதற் கான காரணங்களுடன் பங்குகளை மாற்றுபவர் மற்றும் மாற்றிப் பெறுபவருக்கு அல்லது நேர்விற்கேற்ப வாரிசு வழி பங்குரிமை மாற்றம் பெறுவதற்காக தகவல் கொடுக்கும் நபருக்கு அனுப்ப வேண்டும். இந்த அறிவிப்பை மாற்றல் ஆவணம் அல்லது நேர்விற்கேற்ப வாரிசுவழி பங்குரிமை மாற்றத்திற்கான தகவல் நிறுவனத்திடம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அது மேற்படியார்களுக்கு அனுப்ப வேண்டும் **[பிரிவு 58(1)]**.

மேற்படி வகைமுறைக்கு யாதொரு குந்தகமுமின்றி, **பொது நிறுவனம்** (Public company) ஒன்றில் உள்ள உறுப்பினர் எவரது பங்குகளும் அல்லது வேறு நலனும், சுதந்திரமாக மாற்றப்படக் கூடியதாகும் **[பிரிவு 58(2)]**.

எனினும் பங்குகள் மாற்றம் குறித்து இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்களுக்கிடையே இருக்கும் ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு ஏதும் ஒரு ஒப்பந்தமாக வலியுறுத்திச் செயற்படுத்தக் கூடியதாகும்.

நிறுவனத்தின் மறுப்பை எதிர்த்து, அதற்கான அறிவிப்பு கிடைக்கப் பெற்ற முப்பது நாட்களுக்குள் பங்குகளை மாற்றிப் பெறுபவர் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப் பாயத்திடம் (National Company Law Tribunal) மேல்முறையீடு (Appeal) செய்யலாம். மேற்கண்ட அறிவிப்பை நிறுவனம் அனுப்பவில்லையானால், மாற்றல் ஆவணம் அல்லது வாரிசுவழி பங்குரிமை மாற்றத்திற்கான தகவல் நிறுவனத்திடம் வழங்கப்பட்ட

தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், மேற்படி தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு செய்ய வேண்டும் **[பிரிவு 58(3)]**.

பொது நிறுவனமொன்று போதிய காரணமின்றி பங்கு மாற்றத்தை, அதற்கான மாற்றல் ஆவணம் அல்லது நேர்விற்கேற்ப வாரிசுவழி பங்குரிமை மாற்றத்திற்கான தகவல் அதனிடம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவு செய்ய மறுத்தால், பங்குகளை மாற்றிப் பெறுபவர் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு செய்யலாம். இதை அத்தகு மறுப்பிற்கான அறிவிப்பு கிடைக்கப் பெற்ற அறுபது நாட்களுக்குள் அவர் செய்யலாம். ஒருக்கால் அவ்வாறு அறிவிப்பு ஏதும் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப் பெறாவிட்டால், மாற்றல் ஆவணம் அல்லது வாரிசு வழி பங்குரிமை மாற்றத்திற்கான தகவல் நிறுவனத்திடம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து தொன்னூறு நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம் **[பிரிவு 58(4)]**.

மேற்கண்ட பிரிவு 58(3) மற்றும் 58(4)–இன் கீழ் செய்யப்பட்ட மேல்முறையீட்டை, நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், அந்நிறுவனத்தையும், சம்பந்தப்பட்ட தரப்பினரையும் விசாரித்து, பங்கு மாற்றத்தை அல்லது வாரிசுவழி பங்குரிமை மாற்றத்தை பதிவு செய்யும்படி அந்நிறுவனத்திற்கு ஆணையிடலாம். இந்த ஆணை கிடைக்கப் பெற்ற 10 தினங்களுக்குள் அந்நிறுவனம் பங்கு மாற்றத்தைப் பதிவு செய்தல் வேண்டும். அத்துடன் பதிவேட்டைத் திருத்தும்படியும் நிறுவனத்திற்கு ஏவுரைக்கலாம். மேலும் தரப்பினர் எவரேனும் பாதிப்படைந்திருந்தால் அவருக்கு இழப்பீடு வழங்கும் படியும் நிறுவனத்திற்கு ஏவுரைக்கலாம். ஒருவேளை, நிறுவனம் பங்கு மாற்றத்தை பதிவு செய்ய மறுத்ததற்கு அடிப்படையாகக் கூறிய காரணங்கள் ஏற்புடையதாக இருப்பின், தீர்ப்பாயம் அம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யலாம் **[பிரிவு 58(5)]**.

தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணைக்கு முரணாக நபர் ஒருவர் நடந்தால், அவருக்கு ஓராண்டிற்கும் குறையாத ஆனால் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கத் தக்க சிறைவாசமும், ஒரு இலட்ச ரூபாய்க்கும் குறையாத ஆனால் அய்ந்து இலட்ச ரூபாய்க்கு நீட்டிக்கத்தக்க அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும் **[பிரிவு 58(6)]**.

53. Blank Transfer - Write short notes. (வெற்று மாற்றம் - குறுகிய விடை எழுதுக.)

'வெற்று மாற்றம்' என்பது, பங்குகளை மாற்றம் செய்பவர் சம்பந்தப்பட்ட பங்குச் சான்றிதழை ஒரு வெற்று மாற்று ஆவணத்துடன் (Blank transfer deed), மாற்றம் பெறுபவர் வசம் ஒப்படைத்து, பங்குகளை மாற்ற விழைவதாகும். இந்த ஆவணத்தில், பங்குகளை மாற்றம் செய்பவர் தனது பெயரை மட்டும் பூர்த்தி செய்து, கையொப்பத்தை இட்டிருப்பார். பங்குகளை மாற்றம் பெறுபவரின் பெயர் மற்றும் கையொப்பம், பங்குகளை மாற்றிப் பெற்ற தேதி ஆகியவை வெற்றிடங்களாக விடப் பட்டிருக்கும்.

நடைமுறையில், மேற்கண்டவாறுதான் பங்குகள் மாற்றம் செய்யப்படுகின்றன. ஏனெனில், பங்குகளை மாற்றம் பெறுபவர் (வாங்குபவர்), எவ்வித விவரங்களையும் பூர்த்தி செய்யாமல் அதனை மீண்டும் அந்த வெற்று மாற்று ஆவணத்துடன்

மற்றொருவருக்கு எளிதில் விற்கலாம். இவ்வாறு வாங்குபவர் பங்கு மாற்றத்திற்கான முத்திரைக் கட்டணத்தை தவிர்க்கலாம். புதிய மாற்று ஆவணம் எழுதுவதையும் தவிர்க்கலாம். கருங்கக்கூறின் கடினமான பங்கு மாற்ற நடைமுறைகளை தவிர்த்து, காலத்தை மிச்சப்படுத்தி, பங்கு மாற்றப் பணியை எளிதாக்கிக் கொள்ளலாம். இவ்வாறு பலமுறை மாற்றிக் கொண்டே இருக்கலாம்.

ஆனால் இவ்வாறு காலவரம்பில்லாமல் மாற்றிக் கொண்டே இருப்பது, பின்னிட்டு பல பிரச்சனைகளுக்கு வழி வகுத்தது. எனவே இத்தகு மாற்றமானது, அந்நிறுவனத்தின் உரிய அதிகாரம் பெற்றவரால் கையொப்பமிடப்பட்ட பின் 12 மாதங் களுக்கு மட்டுமோ அல்லது அந்நிறுவனம் தனது உறுப்பினர்கள் பதிவேட்டை மூடும் காலம் வரை மட்டுமோ அமலில் இருக்க வேண்டும். அதற்கு மேல் வெற்று மாற்றம் செய் வது அனுமதிக்கப்படக் கூடாது என்று சட்ட வகைமுறைகள் கொண்டு வரப்பட்டன.

மேற்கண்ட காலகட்டத்திற்குள், இறுதியாக யார் ஒருவர் தன்வசமே அப் பங்குகள் இருக்க வேண்டும் என எண்ணுகிறாரோ, அவர் தனது பெயரையும் கையொப்பத்தையும் பங்கு மாற்ற ஆவணத்திலிட்டு, நிறுவனத்திற்கு அளித்து மாற்றத்தை தன் பெயரில் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்யப்படும் மாற்றத்தில், முதன்முதலாக அப்பங்குகளை விற்றவரே, பங்குகள் மாற்றம் செய்பவராக (transferrer) கருதப்படுவார். இறுதியாக வாங்கி தன் பெயரில் மாற்றத்தை பதிவு செய்து கொள்பவர், அந்நிறுவனத்தின் உறுப்பினராகக் (பங்குதாரராகக்) கருதப்படு வார்.

இத்தகு வெற்று மாற்று ஆவணம், செல்லத்தக்கதா எனும் வினா நீதிமன்றத் தின் முன்பு எழுந்த போது, அது சட்டப்படி செல்லத்தக்கதே என்று பல வழக்குகளிலும் தீர்ப்புரைக்கப்பட்டது.

Pranlal Jayanand Thakar v. V.R.Shelat[1] – எனும் வழக்கில், இது குறித்து சில அடிப்படைக் கொள்கைகளை குஜராத் உயர் நீதிமன்றம் வகுத்தது. அவற் றின்படி, (1) மாற்று ஆவணம் ஒன்றில், பங்குகளை மாற்றம் செய்பவரின் கையொப்பம் தவிர வேறு எந்த விபரமும் பதிவு செய்யப்படாமல் இருப்பினும், அது செல்லத்தக்கதே; (2) இந்த ஆவணம் பங்குச் சான்றிதழுடன் யாருக்கு அளிக்கப்படுகிறதோ, அவரே அதனைப் பூர்த்தி செய்து கொள்ள அவருக்கு உட்கிடையான அதிகாரம் உள்ளது; (3) பங்குகளை மாற்றிப் பெற்றவர், அந்த ஆவணத்தை நல்லெண்ணத்துடன், மறுபயன் கொடுத்து பெற்றிருப்பின், அந்த ஆவணத்திற்குரிய பங்குகளின் மீது நல்ல உரிமை மூலம் கொண்டவராக விளங்குகிறார்.

54. Certification of Transfer - Write short notes. (மாற்றம் சான்றிடல் - குறுகிய விடை எழுதுக.)

ஒருவர் பல பங்குகளை வாங்கினாலும், அதற்கெல்லாம் ஒட்டு மொத்தமாக ஒரே பங்கு சான்றிதழைத்தான் நிறுவனம் அளிக்கிறது. அவர் அப்பங்குச் சான்றிதழில் உள்ள பங்குகளில் ஒரு பகுதியை மட்டும் மாற்ற (விற்க) விரும்பினால், மேற்படி பங்குச்

1. (1973) 43 Comp Cas 203 (Guj)

சான்றிதழை நிறுவனத்தின் வசம் 'சான்றிடலுக்காக' ஒப்படைக்க வேண்டும். 'சான்றிடல்' என்பது, நிறுவனத்தின் அலுவலர், மாற்றத்தை வேண்டி நிற்கும் பங்குகள் குறித்த பங்குச் சான்றிதழ் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கும் செயலாகும். அவ்வலுவலர் பங்குச் சான்றிதழுடன் இணைந்த பங்கு மாற்ற ஆவணத்தில் 'சான்றிதழ் ஒப்படைக்கப்பட்டுள்ளது' (Certificate lodged) என எழுதி, எவ்வளவு எண்ணிக்கையுடைய பங்குகள் விற்கப்படுவதற்காக அது ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவார். பின்னர் பங்குகளை விற்பவர், சான்றிடப்பட்ட பங்கு மாற்ற ஆவணத்தை பங்குகளை வாங்குபவருக்கு அளிப்பார். வாங்குபவர் பங்கு மாற்றச் சான்றிடலையே, தமக்கு வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழாகக் கருதலாம். இதுவே 'மாற்றம் சான்றிடல்' என்பதாகும்.

நாளாவட்டத்தில் நிறுவனம் இரண்டு பங்குச் சான்றிதழ்களைத் தயாரிக்கும். ஒன்று வாங்குபவருக்கு விற்கப்பட்ட பங்குகளுக்கானது; மற்றொன்று விற்பவர் தன்னிடம் வைத்துக் கொண்ட மீதமுள்ள பங்குகளுக்கானது. இவ்விரண்டு பங்குச் சான்றிதழ்களும் முறையே மாற்றியளிப்பவருக்கும், மாற்றிப் பெறுபவருக்கும் வழங்கப்பட்டுவிட்டால், முன்னவர் அந்நிறுவனத்தின் புதிய உறுப்பினர் ஆகிவிடுவார். பின்னவர் தன்னிடம் மீதமிருக்கும் பங்குகளைப் பொறுத்து, அந்நிறுவனத்தின் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பார்.

தற்போது, பெரும்பாலுமான நிறுவனங்கள் பின்பற்றும் நடைமுறையின்படி, பங்குச் சான்றிதழ்கள் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கள் கொண்ட பங்குகளுக்காக வழங்கப்படுகிறது. வழக்கமாக 25 அல்லது 50 பங்குகளுக்கு ஒரு சான்றிதழ் எனும் வீதக் கணக்கில் வழங்கப்படுகிறது. இது 'மாற்றி வழங்கத்தக்க அலகு' (transferable unit) எனப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு உறுப்பினருக்கு 250 பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டால், அவருக்கு தலா 25 பங்குகள் அடங்கிய 10 பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும். அவர் 25 பங்குகள் அடங்கிய ஒவ்வொரு பகுதியையும் (பங்குச் சான்றிதழையும்) எளிதாக யாருக்கு வேண்டுமானலும் மாற்றியளிக்கலாம். எனவே இங்கு 'மாற்றம் சான்றிடல்' எனும் நடைமுறை தேவையற்றதாகிவிடுகிறது.

55. Forged Transfer - Write short notes. (போலிக் கையொப்பமிட்ட மாற்றம் - குறுகிய விடை எழுதுக.)

பங்கு மாற்ற ஆவணத்தில், மாற்றியளிப்பவரின் கையெழுத்து போலியாக இடப்பட்டிருந்தால், அது 'போலி ஆவணமாகும்'. இவ்வாவணத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட மாற்றம் 'போலிக் கையொப்பமிட்ட மாற்றம்' எனப்படும்.

பங்கு மாற்ற ஆவணமொன்றில் மேற்கண்டவாறு போலிக் கையொப்பமிடப்பட்டிருப்பதாக ஒரு நிறுவனம் அப்புறுமானால், அந்த ஆவணத்தின் செல்லத்தகு தன்மை குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். எனவே பங்கு மாற்றத்திற்கான ஆவணம் ஒன்றை நிறுவனம் கிடைக்கப் பெற்றவுடன், மாற்றப்பட வேண்டிய பங்குகள் யாருடைய பெயரில் உள்ளதோ, அப்பங்குதாரரின் பதிவு பெற்ற முகவரிக்கு, தம்மிடம் மாற்றத்திற்கென பங்குச் சான்றிதழ் ஒப்படைக்கப்பட்டுள்ளது

என்றும், அது குறித்து ஆட்சேபணை ஏதும் ஒரு குறிப்பிட்ட தினங்களுக்குள் வரப் பெறாத பொழுது, அப்பங்குகளின் மாற்றம் பதிவு செய்யப்பட்டுவிடும் என்றும் அறிவிப்பு ஒன்றை அந்நிறுவனம் அனுப்புதல் வேண்டும். இது பங்கு மாற்றலை பதிவு செய்வதில் ஒரு நிறுவனம் பின்பற்ற வேண்டிய மிக முன்னெச்சரிக்கையான நடவடிக்கை ஆகும். ஒரு நிறுவனம் எவ்வளவு முன்னெச்சரிக்கையாக இருப்பினும், சில சமயங்களில் ஒரு போலி மாற்றம் பதிவு செய்யப்பட்டுவிடலாம். அவ்வாறு பதிவு செய்யப்படும் போலி மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் வருமாறு.

1. முதற்கண், அது ஒரு செல்லாத ஆவணம் (Nullity) ஆகும். எனவே, அது மாற்றியளிக்கப் பெறுபவருக்கு எவ்வித சட்ட உரிமையையும் வழங்காது. அந்த ஆவணத்தின் அடிப்படையில் பங்குகளின் பெயரை உறுப்பினர் பதிவேட்டில் இருந்து நிறுவனம் நீக்கிவிட்டிருப்பின், அது மீண்டும் அவரது பெயரை உறுப்பினர் பதிவேட்டில் சேர்க்கக் கடமைப்பட்டது. எனவே அவரே அப்பங்குகளின் உண்மை உரிமையாள ராகத் தொடர்ந்து நீடித்திருக்க உரிமை படைத்தவர்.

2. இரண்டாவதாக, போலி மாற்றத்தின் அடிப்படையில் பங்குகளை மாற்றியளிக்கப் பெற்றவருக்கு, நிறுவனமானது ஒரு பங்குச் சான்றிதழை வழங்கி யிருந்து, அவர் அப்பங்குகளை மேற்படி போலி மாற்றத்தை அறியாத அப்பாவியான மற்றொரு நபருக்கு (innocent buyer) விற்றிருந்தால், அதை வாங்கிய மேற்படி நபர், ஒரு பங்குதாரராக பதிவு செய்யப் பெற உரிமையற்றவரா கிறார். இந்நிலையில், நிறுவனம் வழங்கிய பங்குச் சான்றிதழின் அடிப்படையில் தாம் செயல்பட்டதாக மெய்ப்பித்து, அவர் நிறுவனத்திடமிருந்து இழப்பீடு கோரலாம்.

3. இறுதியாக, போலி மாற்றத்தால், நிறுவனத்திற்கு நட்டமேதும் ஏற் பட்டிருந்தால், அதனை பதிவுக்காக நிறுவனத்திடம் வழங்கிய நபரிடமிருந்து, அதற்குரிய நட்டத் தொகையை அந்நிறுவனம் திரும்பப் பெறலாம்.

56. Transmission of Shares - Write short notes. (வாரிசுவழி பங்கு உரிமை மாற்றம் - குறுகிய விடை எழுதுக.)

வாரிசுவழியில் பங்குரிமை மாறுதல் (Transmission of Shares):

ஒரு தனி உறுப்பினர் மரணமடைந்தாலோ அல்லது நொடிந்து போனாலோ அல்லது நிறுவனத்தின் உறுப்பினர் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக இருந்து அது கலைக்கப்பட்டாலோ, ஒரு நிறுவனப் பங்குகளில் வாரிசுவழி உரிமை மாற்றம் ஏற்படு கிறது. ஒரு நிறுவனத்தின் உறுப்பினர் இறந்தால், அவரது பங்குகளின் மீதான உரிமை அவரது சட்டப்படியான வாரிசுகளையும் அல்லது அவர் நொடிந்தால் (insolvent) அவரது பங்குகளின் மீதான உரிமை அவரது சொத்தாட்சியரையும் (Official Receiver or Assignee) சென்றடையும். சட்டப்படியான வாரிசுகள் அல்லது சொத் தாட்சியர் அப்பங்குகளை செல்லத்தக்க வகையில் மாற்றம் செய்யலாம். இது சட்டத் தின் செயலால் (Operation of Law) ஏற்படும் உரிமை மாற்றமாகும். தரப்பினர்

களின் தன்னிச்சையான செயலால் அல்ல.

வாரிசுவழியில் பங்குரிமை மாறுதல் தொடர்பான சட்ட வகைமுறைகள் (Provisions relating to Transmission of Shares):

பொதுவாக ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் வாரிசுவழி பங்குரிமை மாற்றம் தொடர்பான கூறு அடங்கியிருக்கும். அது **2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பட்டியல் I-இன் கீழான அட்டவணை 'F'–ல் உள்ள 23 முதல் 27 வரையிலான விதிகளை** (Articles 23 to 27 of Table F under Schedule I) அடியொற்றியதாக இருக்கும். இங்கு அவ்விதிகளையே நாம் வாரிசு வழியில் பங்குரிமை மாறுதல் தொடர்பான சட்ட வகைமுறைகளாக எடுத்துக் கொள்ளலாம். அவை வருமாறு:–

1. ஒரு உறுப்பினர் மரணமடைந்தால், அவர் ஒரு கூட்டு உரிமையாளராக (Joint Holder) இருந்திருந்தால், அவரை எஞ்சி வாழ்பவர்களுக்கும், அவர் ஒரு தனி உரிமையாளராக (Sole Holder) இருந்திருந்தால், அவரது சட்ட வாரிசுகளுக்கும், பங்குகளின் மீதான பங்குரிமை வாரிசுவழியில் செல்கிறது [விதி 23(i)].

2. ஒரு உறுப்பினர் இறந்ததும் அல்லது நொடிந்ததும் அவரது பங்கில் உரிமையுள்ள எந்நபரும், அவ்வப்போது இயக்குனரவை கோரும் சான்றை கொடுத்து பின்வரும் இரண்டிலொன்றை செய்ய தேர்வு செய்யலாம். அவை, 1. தன்னை அப்பங்கினுடைய உரிமையாளராக பதிவு செய்யவோ, அல்லது 2. இறந்த அல்லது நொடிந்த உறுப்பினர் செய்திருக்க வேண்டிய பங்கு மாற்றத்தைச் செய்து முடிக்கவோ, தேர்ந்தெடுக்கலாம் [விதி 24(i)].

மேற்கண்ட இறந்துபோன அல்லது நொடிந்து போன உறுப்பினர், முறையே தனது இறப்பு அல்லது நொடிப்பிற்கு முன்னரே பங்குகளை மாற்றியளித்திருப்பின், மேற்படி இரண்டு நேர்வுகளிலும் பங்கு மாற்றத்தைப் பதிவு செய்தலை இயக்குனரவை மறுக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் [விதி 24(ii)].

3. மேற்கண்டவாறு தேர்வு செய்ய உரிமை பெற்ற நபர், தன்னை அப்பங்குகளின் உரிமையாளராகப் பதிவு செய்து கொள்ள தேர்ந்தெடுப்பின், தான் அவ்வாறு தேர்வு செய்துள்ளதை, தன் கையொப்பமிட்ட அறிவிப்பு ஒன்றின் மூலம் நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும் [விதி 25(i)].

ஒருக்கால், அவர் பங்கை மாற்றியளிக்கத் தேர்வு செய்தால், அவர் தனது தேர்வை ஒரு பங்கு மாற்ற ஆவணத்தினை எழுதியளிப்பதன் மூலம் சான்று கூற வேண்டும் [விதி 25(ii)].

இங்கு அவ்வுறுப்பினரின் இறப்பு அல்லது நொடிப்பு நேராதிருந்தால், அவரது பங்கு மாற்ற அல்லது பங்குப் பதிவு உரிமைகள் தொடர்பாக என்னென்ன வரம்புகள், தடைகள் அல்லது வகைமுறைகள் பொருந்தியிருக்குமோ, அவை அனைத்தும் அந்த

அறிவிப்பு அல்லது பங்கு மாற்றம் மேற்கண்ட இறந்து போன அல்லது நொடிந்து போன உறுப்பினராலேயே கையொப்பமிடப்பட்டவாறு பொருந்தக் கூடியதாகும் [விதி 25(iii)].

4. உறுப்பினரின் இறப்பு அல்லது நொடிப்பின் காரணமாக அவரது பங்குகளுக்கு உரிமையாளரான ஒருவருக்கு, அப்பங்குகளின் மீது பதிவு பெற்ற உறுப்பினர் ஒருவருக்குக் கிடைக்கத்தக்க அதே பங்காதாயங்களும், ஏனைய சலுகைகளும் கிடைக்கும் (விதி 26).

5. **ஒரு நபர் நிறுவனம் (One Person Company)** ஒன்றைப் பொறுத்தவரை, அந்நிறுவனத்தின் ஒரே உறுப்பினரான அவர் இறப்பதன் பேரில், அவரால் பெயர் நியமனம் (நாமினி) செய்யப்பட்ட நபரை அவ்வுறுப்பினரின் எல்லாப் பங்குகளின் மீதும் உரிமைமூலம் கொண்ட நபராக நிறுவனம் அங்கீகரித்தல் வேண்டும் [விதி 26(i)]. பெயர் நியமனம் செய்யப்பட்ட அந்நபர் அவ்வாறு இறந்து போன உறுப்பினரின் பங்குகளுக்கு உரிமையுடையவரான நிகழ்வை நிறுவனத்தின் இயக்குனரவை தெரிவித்தல் வேண்டும் [விதி 26(ii)]. பெயர் நியமனம் செய்யப்பட்ட அந்நபர் (நாமினி அதே பங்காதாயங்களைப் பெற உரிமையுடையவர். மேலும், இறந்து போன உறுப்பினருக்கு அந்த ஒரு நபர் நிறுவனத்தில் என்னென்ன உரிமைகளும் பொறுப்புகளும் இருந்தனவோ, அவை அனைத்துக்கும் அவர் உரிமையுடையவர் மற்றும் பொறுப்புடையவர் [விதி 26(iii)]. பெயர் நியமனம் செய்யப்பட்ட அந்நபர், ஒரு நபர் நிறுவனத்தின் உறுப்பினராக ஆவதன் பேரில், அவர் தனது இறப்புக்கு பிறகு நிறுவனத்தின் உறுப்பினராக ஆவதற்கு ஏதுவாக மற்றொரு நபரை எழுத்துப்பூர்வமான அவரது முன் ஒப்புதல் கடிதத்துடன் பெயர் நியமனம் செய்தல் வேண்டும் [விதி 26(iv)].

மேற்கண்ட விதிகள் மட்டுமல்லாது, 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 56–இன் கீழ் பங்கு மாற்றத்திற்காக கூறப்படும் வகைமுறைகளில் சில இந்த வாரிசுவழி பங்குரிமை மாற்றத்திற்கும் பொருந்தும். மேலும் பங்கு மாற்றத்தை பதிவு செய்ய ஒரு நிறுவனம் மறுக்கும் நேர்வில் பிரிவு 58–இன்படி மேல்முறையீடு செய்வதற்காக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் அனைத்தும் அப்படியே இந்த வாரிசுவழி பங்குரிமை மாற்றத்திற்கும் பொருந்தும்.

வாரிசுவழி பங்குரிமை மாறுதலுக்கான நடைமுறை (Procedure):

1. உறுப்பினர் ஒருவர் உயில் எழுதிவிட்டு இறக்கும்போது அவருடைய பங்குகளின் மீதான உரிமைகள், அவ்வுயிலில் கண்டுள்ள நிறைவேற்றாளருக்கு (Executor) செல்கிறது. இதற்கு உரிய நீதிமன்றத்திடமிருந்து உயில் மெய்ப்பிதழ் (Probate) பெற்று அதனை இணைத்து அனுப்பினால்தான், நிறுவனம் அப்பங்குகளின் மாற்றத்தை பதிவு செய்யும்.

2. உயில் எழுதி வைக்காமல் இறக்கும் போது, அப்பங்குகளின் மீதான உரிமைகள் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நிருவாகிக்கு (Administrator) செல்கிறது. இதற்கு உரிய நீதிமன்றத்திடமிருந்து நிருவாக உரிமைப் பத்திரம் (Letters of

Administration) பெற வேண்டும்.

3. உறுப்பினர் நொடிப்புநிலையராகும் பொழுது (Insolvant) அவரது பங்கு களின் மீதான உரிமையும் சொத்தாட்சியருக்கு (Official Receiver or Assignee) செல்கிறது. இதற்கு சொத்தாட்சியர் நியமித்தலின் உத்திரவு நகல் அல்லது அவரது நியமனம் பதிப்பிக்கப்பட்டுள்ள அரசிதழின் நகல், நிறுவனத்திடம் அளிக்கப்பட வேண் டும்.

4. புத்தி சுவாதீனம் அற்றுப்போகும் போது, நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப்பாளருக்கு (Guardian) பங்குகளின் மீதான உரிமை மாற்றப்படும். இதற்கு நீதி மன்ற ஆணை நகல் நிறுவனத்திடம் அளிக்கப்பட வேண்டும்.

(இதையடுத்து வரக் கூடிய வினாவின் விடையில் பங்குகளுக்குப் பெயர் நியமனம் செய்யும் வகைமுறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றையும் சுருக்கமாக மேற்படி வினாவிற்கான விடையில் சுட்டிக்காட்டினால் நலம் பயக்கும்.)

57. Nomination of Shares (பங்குகளுக்கு பெயர் நியமனம் செய்தல் - குறுகிய விடை எழுதுக.)

பங்குகள் மாற்றத்திற்கு 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் சீரான வகை முறைகள் பலவற்றை செய்துள்ளதை நாம் ஏற்கனவே கண்டோம். எனினும், பின்வரும் சூழலில் ஒரு சிக்கல் எழுகிறது. அதாவது பங்கு வைத்திருப்பர் அல்லது கடனீட்டுப் பத்திரம் வைத்திருப்பவர், சட்டநிலை பிரதிநிதி (வாரிசு) யாரும் இல்லாமல் இறந்துவிட் டால், அவரது பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்கள் மீது யாருக்கு உரிமை எழு கிறது, அவை யாருக்குச் சென்றடைய வேண்டும் என்பதில் குழப்பம் ஏற்படுகிறது. தற்போது இதைத் தீர்ப்பதற்காக 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் **பிணையங்களுக்கு (பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள்) பெயர் நியமனம் செய்யும் அதிகாரம் என்ற தலைப்பில் (Power to nominate)** ஓர் எளிய நடை முறையை **பிரிவு 72** வாயிலாக அறிமுகப்படுத்தியுள்ளது. அது வருமாறு:–

1. நிறுவனமொன்றின் பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்களை வைத்திருக்கும் நபர் ஒவ்வொருவரும், அவரது இறப்புக்கு பிறகு, அவை எந்த நபருக்கு சென்றடைய வேண்டும் என்பது குறித்து அந்நபரின் பெயரை அவர் உயிருடன் இருக்கும் எந்த நேரத்திலும் நியமனம் செய்யலாம் என்று **பிரிவு 72(1)** கூறுகிறது.

2. நிறுவனமொன்றின் பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்களை ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் கூட்டாக வைத்திருந்தால், அவ்வாறு கூட்டாக வைத் திருப்பவர்கள் அனைவரும் சேர்ந்து, தங்கள் இறப்புக்கு பிறகு, அவற்றில் உள்ள அனைத்து உரிமைகளும் எந்த நபருக்கு சென்றடைய வேண்டும் என்பது குறித்து அந்நபரின் பெயரை அவர்கள் உயிருடன் இருக்கும் போது நியமனம் செய்யலாம் என்று **பிரிவு 72(2)** கூறுகிறது.

3. நிறுவனமொன்றின் பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் குறித்து

அச்சமயத்தில் அமலில் உள்ள வேறு சட்டம் எதிலும் அல்லது உயில்வழி ஏற்பாடு அல்லது வேறுவித ஏற்பாடு எதிலும் யாது அடங்கியிருப்பினும் அதைப் பொருட்படுத்தாது, பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களின் மீதான உரிமை சென்றடைவதற்காக நபர் எவர் மீதும் வழங்குவதற்கு கருதி பெயர் நியமனம் ஒன்று செய்யப்படுமிடத்து, அவ்வாறு பெயர் நியமனம் செய்யப்பட்ட நபர், அப்பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களை கொண்டிருப்பவர் அல்லது நேர்விற்கேற்ப கூட்டாக கொண்டிருப்பவர் கள் இறக்கும் போது, அவர்/அவர்கள் அப்பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் மீது கொண்டிருந்த உரிமைகள் அனைத்துக்கும் உரிமையாளர் ஆவார். பெயர் நியமனத்தில் மாறுபாடு ஏதும் செய்யப்படாத போது அல்லது அந்நியமனம் இரத்து செய்யப்படாத போது, மேற்கண்டவாறு உரிமை பெறுவதிலிருந்து மேற்படி பெயர் நியமனம் செய்யப்பட்ட நபர் (நாமினி) மற்ற எல்லா நபர்களையும் விலக்கி விடுவார் என்று **பிரிவு 72(3)** கூறுகிறது.

பிரிவு 72(3) கூறும் மேற்படி வகைமுறை பெயர் நியமனத்தைப் பொறுத்த வரை மிக முக்கியமான ஒன்றாகும். ஏனெனில், பொதுவாக பெயர் நியமனம் செய்யப் படும் நபர், அவரை நியமனம் செய்தவர் இறக்கும் நேர்வில், அவருக்குரியவற்றின் மீது உரிமை பெறுவார். ஆனால் இந்த உரிமையை இறந்து போனவரின் மற்ற வாரிசுகளின் பொறுப்பாண்மையராக (டிரஸ்டி) மட்டுமே அவர் அடைவார். இந்த உரிமையை அவர் அடைந்த பிறகு, அதை மற்ற வாரிசுகள் (யாரேனும் இருப்பின்) அவர்களுக்கு பிரித்து அளிக்க வேண்டும். மாறாக அவரே தனக்கு முழுமையாகச் சொந்தமானதாக உரிமை கொண்டாட முடியாது. ஆனால் மேற்படி பிரிவு 72(3)–இல் கூறப்பட்டுள்ள வகைமுறை வாசிக்கும் போது, பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்கள் தொடர்பாக பெயர் நியமனம் செய்யப்பட்ட நபரே, அவரை நியமனம் செய்தவர்/கள் இறக்கும் போது, முழுமையான உரிமை பெறுகிறார் என்பது தெளிவாகிறது. அவ்வாறு உரிமை பெறுவதிலிருந்து அவர் மற்ற நபர்களை விலக்கி விடுகிறார். எனவே இத்தகு நேர்வில் மற்ற வாரிசுகள் உரிமை பெற முடியாது.

பங்கள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களைக் கொண்ட நபரால் பெயர் நியமனம் செய்யப்பட்ட நபர் ஓர் இளவராக (மைனர்) இருந்து, அவர் அவ்வாறு அவ்வாறு இளவராக இருக்கும் காலகட்டத்தில் இறந்துவிட்டால், அப்பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களின் மீதான உரிமை எந்த நபரைச் சென்றடைய வேண்டும் என்பது குறித்து அந்நபரின் பெயரை நியமனம் செய்ய வேண்டியது அத்தகு பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களைக் கொண்டவருக்கு சட்டப்படியானதாகும் என்று **பிரிவு 72(4)** கூறுகிறது.

58. Distinguish between Transfer and Transmission of shares. (வேறுபடுத்திக் காட்டுக : பங்குகள் மாற்றம் மற்றும் வாரிசு வழி பங்கு உரிமை மாற்றம்.)

பங்குகள் மாற்றம் [Transfer of Shares]	வாரிசுவழி பங்குரிமை மாற்றம் [Transmission of Shares]
1. இங்கு பங்கு மாற்றல் ஆவணம் எழுதப்படுகிறது.	இங்கு எழுதப்படுவதில்லை.
2. பங்கு மாற்றம் பங்குகளை மாற்றுபவரின் விருப்பப்படி செய்யப்படுகிறது.	இது சட்டத்தின் செயல்பாட்டால் நடைபெறுகிறது.
3. பங்கு மாற்றம் எப்பொழுது வேண்டுமானாலும் நடைபெறலாம். அதாவது உறுப்பினர் தம்முடைய பங்குகளை விற்பனை செய்ய முடிவு செய்து விட்டால், பங்கு மாற்றம் நடைபெறும்.	வாரிசு வழி பங்கு உரிமை மாற்றம் எப்பொழுது வேண்டுமானாலும் நிகழ்வதல்ல. உறுப்பினரின் இறப்பு, நொடிப்பு, புத்தி சுவாதீனமற்றுப் போதல் ஆகிய நேர்வுகளின் பொழுது மட்டுமே, இங்கு பங்கு மாற்றம் நடைபெறுகிறது.
4. பங்கு மாற்றத்தின் போது பங்குகளின் ஒரு பகுதியைக் கூட மாற்றலாம்.	வாரிசு வழி பங்கு உரிமை மாற்றலில் ஒரு பகுதி பங்குகளை மாற்றம் செய்ய முடியாது.
5. பங்கு மாற்றத்தின் போது உரிய முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.	இங்கு முத்திரைக் கட்டணம் செலுத்தப் பட வேண்டியதில்லை.
6. பங்கு மாற்றத்தின் போது மாற்றத்திற்கான மறுபயன் இருத்தல் வேண்டும்.	இங்கு மறுபயன் இருக்க வேண்டிய அவசியமில்லை.

59. Transfer of Shares and Transmission of Shares - Write short notes. (பங்குகள் மாற்றம் மற்றும் வாரிசுவழியில் பங்கு மாறுதல் - குறுகிய விடை எழுதுக.)

(இது ஒரு முக்கிய வினா. தேர்வுகளில் அடிக்கடி வினவப்படுகிறது. எனவே முந்தைய வினாக்களின் விடைகளில் இருந்து தொடர்புடையதை தொகுத்து சுருக்கமாக எழுதுக)

பின்குறிப்பு : பங்கு மற்றும் அதன் மாற்றம் தொடர்பாக முந்தைய 1996–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் பல்வேறு வகைமுறைகள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் அவற்றையெல்லாம் இந்த 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனங்கள் சட்டம் நீக்கறவு செய்து விட்டு, எளிமைப்படுத்தியுள்ளது.

உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்கள்
[Members and Shareholders]

60. Define a 'Member'. What are the modes of acquiring membership of a company ? ('உறுப்பினர்' என்பதை வரையறு. ஒரு நிறுவனத்தில் எம்முறைகளில் ஒருவர் உறுப்பினராகலாம் ?)

(அல்லது)

2 Describe the several ways in which a person can became a member of a company. (ஒரு நபர் நிறுவனத்தின் உறுப்பினராவதற்கு உள்ள பல்வேறு வழிகளை விளக்குக.)

(அல்லது)

Who are the members of a company ? Distinguish between members and shareholders. How is membership terminated? (ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள் யார் ? உறுப்பினர்களுக்கும் பங்குதாரர்களுக்குமுள்ள வேற்றுமைகளைக் குறிப்பிடுக. உறுப்பினர் உரிமை எவ்வாறு

நீக்கப்படுகிறது?)

(அல்லது)

State the various modes in which a person may become a member of a company. When a person cease to be a member? (ஒரு நபர் நிறுவனத்தின் உறுப்பினராவதற்கு உள்ள பல்வேறு வழிமுறைகளைக் குறிப்பிடுக. எப்பொழுது ஒருவர் உறுப்பினராக இருப்பதற்கான தகுதியை இழக்கிறார்?)

(அல்லது)

What are the various ways in which a person may become a member of a company. What are the rights and liabilities of a member? When a member loses his membership? (ஒரு நபர், நிறுவனத்தில் எந்நெந்த வழிகளில் உறுப்பினராகலாம்? உறுப்பினர்களின் உரிமைகளும் பொறுப்புகளும் யாது? எப்போது ஒரு நபர் தனது உறுப்பினர் தகுதியை இழக்கிறான்?)

(அல்லது)

Who can be a member of a company? What are the different modes in which a person can become a member of a company? What are his rights and liabilities? (ஒரு நிறுமத்தில் யார் உறுப்பினராக முடியும்? ஒரு நிறுமத்தில் ஒரு நபர் உறுப்பினராக பல்வேறு வழிமுறைகள் யாவை? அவருடைய உரிமைகள் மற்றும் பொறுப்பு நிலைகள் யாவை?)

முன்னுரை:

பலர் ஒன்று கூடி வியாபாரம் செய்யும் நோக்கமுடன் நிறுவப்படும் இயக்கமே நிறுவனமாகிறது. அதில் அவ்வாறு ஒன்று சேர்ந்தவர்கள் **ஆதரவாளர்கள்** (Subscribers) என்றும், பின்னர் நிறுவனம் பதிவானவுடன் **உறுப்பினர்கள்** (Members) அல்லது **பங்குதாரர்கள்** (Shareholders) என்றும் குறிப்பிடப்படுகின்றனர்.

உறுப்பினர் - வரையறை:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 2(55)** 'உறுப்பினர்கள்' எனும் பதத்திற்கு வரையறை தருகிறது. அதன்படி,

(i) ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் ஆதரவாளர்களாக கையொப்பமிடுபவர்கள் யாவரும், அந்நிறுவனத்தின் உறுப்பினர்களாக ஆவதற்கு ஒப்புக் கொண்டவர்களாகக் கருதப்படுபவர்கள் (shall be deemed to have agreed to become members of a company) மற்றும் அந்நிறுவனம் பதிவு செய்யப்படுவதன் பேரில், அவர்கள் யாவரும் உறுப்பினர்களாக, உறுப்பினர்கள் பதிவேட்டில் பதியப் பெறுகிறார்கள் (on its registration, shall be entered as members in its register of members) [பிரிவு 2(55)(i)]. அதாவது இங்கு



நிறுவனப் பதிவிற்கு முன்பு உறுப்பினர்களாக கருதப்பட்ட ஆதரவாளர்கள், நிறுவனப் பதிவிற்குப் பின்பு, பதிவு பெற்ற உறுப்பினர்களாக ஆகிறார்கள்.

2. நிறுவனத்தின் உறுப்பினராக விழைந்து எழுத்துமூலம் ஒப்புக் கொண்ட, மற்றும் உறுப்பினர்கள் பதிவேட்டில் பெயர் பதியப் பெற்ற பிற நபர்கள் ஒவ்வொருவரும், அந்நிறுவனத்தின் உறுப்பினர் ஆவர் [பிரிவு 2(55)(ii)].

3. நிறுவனத்தின் பங்குகளை கொண்டிருக்கும் மற்றும் நிறுவன ஆவண வைப்பீட்டகத்தின் பதிவேடுகளில் (records of the depository) பயன்பெறும் உரிமையாளராக (benefical owner) பெயர் பதியப் பெற்ற நபர் ஒவ்வொருவரும், அந்நிறுவனத்தின் உறுப்பினர் ஆவர் [பிரிவு 2(55)(iii)].

உறுப்பினர் மற்றும் பங்குதாரர் (Member and Share holder) - நுணுக்கமான வேறுபாடுகள்:

சில விதிவிலக்கான சூழ்நிலையில் தவிர 'உறுப்பினர்' என்ற சொல்லும் 'பங்குதாரர்கள்' என்ற சொல்லும் ஒரே பொருளையே தருகின்றன. பொதுவாக, இவை இரண்டும் ஒத்த தன்மையுடையதாகும். ஆனால் சில சமயங்களில் மட்டும் வேறுபடுகின்றன. உதாரணமாக, பொறுப்புறுதியால் வரம்புடையதாக்கப்பட்ட நிறுவனங்கள் (Companies limited by guarantee) அல்லது வரம்பற்ற நிறுவனங்கள் (Unlimited companies) ஆகியவற்றிற்கு பங்கு மூலதனம் (Share Capital) என்பது கிடையாது. எனவே அந்நிறுவனத்தை உருவாக்கிய நபர்கள் உறுப்பினர்கள் மட்டுமே ஆவர்; பங்குதாரர்கள் ஆகமாட்டர். அதே நேரம் பங்குகளால் வரம்புடையதாக்கப்பட்ட நிறுவனத்தின் (Companies limited by shares) பங்குதாரர்கள், அவசியம் அந்நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஆவார். இவ்வாறு மேற்படி இரண்டு பதங்களும் மிக மிக நுணுக்கமான அளவில்தான் வேறுபடுகின்றன.

ஒருவர், ஒரு நிறுவனத்தில் உறுப்பினராகும் முறைகள்:

1. அமைப்பு முறையேட்டில் ஆதரவாளர்களாக கையெழுத்திடுவதால் (By subscribing to memorandum):

இம்முறை குறித்து நாம் ஏற்கனவே கண்ட 2(55)(i)–வது பிரிவு கூறுகிறது. இதன்படி அமைப்பு முறையேட்டில் ஆதரவாளர்களாக (subscribers) கையெழுத்திடுபவர்கள், நிறுவனம் பதிவு செய்யப்பட்ட பிறகு, உறுப்பினர்கள் பதிவேட்டில் (Register of members) உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுகிறார்கள்.

Official Liquidator v. Suleman Bhai[1] – எனும் வழக்கில் அமைப்பு முறையேட்டில் ஆதரவாளராகக் கையொப்பமிடுபவர், அவ்வாறு கையொப்பமிட்டவுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உறுப்பினராகிவிடுகிறார் என்றும், உறுப்பினராவதற்காக இவர் விண்ணப்பம் எதையும் செய்யத் தேவை இல்லை என்றும், இவருக்கு பங்குகள் ஏதும் ஒதுக்கப்பட வேண்டியதில்லை என்றும், இவரது பெயர், தவறுதலாக உறுப்பினர் பதிவேட்டில் பதிவு செய்யப்படாவிட்டாலும் இவரது நிலை மாறுவதில்லை என்றும், நிறுவனம் பதிவானவுடனேயே ஒரு உறுப்பினருக்குரிய அனைத்து உரிமைகளையும் பொறுப்புகளையும் கொண்ட ஒரு முழு உறுப்பினர் நிலையை இவர் அடைந்து விடுகிறார் என்றும் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது.

2. தகுதிப் பங்குகளை ஏற்றுக்கொள்வதால் (Qualification Shares):

இயக்குனராக இருக்க இசைவு தெரிவித்து அப்பதவியின் தகுதிக்குரிய பங்குகளை ஏற்றுக் கொள்வதாக எழுத்துமூலம் பதிவாளரிடம் தாக்கல் செய்பவர், அமைப்பு முறையேட்டினில் கையொப்பமிட்டவர் போன்று, நிறுவனம் பதிவானவுடன் தானாகப் பங்குதாரர் அல்லது உறுப்பினராகிறார்.

3. விண்ணப்பம் செய்து பங்குகள் ஒதுக்கப்படுவதால் (By Allotment):

நிறுவனம் திட்ட அறிவிப்புடன் இணைந்து அனுப்பிய குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, குறிப்பிட்ட விண்ணப்பத் தொகையைச் செலுத்தி, அதன்படி பங்குகள் ஒதுக்கப்படின், ஒதுக்கப்பட்ட பங்குத் தொகையை செலுத்தி ஒருவர் உறுப்பினராகலாம். இம்முறை ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் உள்ளதால், இவ்வாறு உறுப்பினராவதற்கு ஒப்பந்தச் சட்டத்தின் அனைத்து விதிகளும் பின்பற்றப்பட வேண்டும்.

4. பங்குகளை மாற்றம் செய்வதால் (By Transfer) :

நிறுவனத்தின் உறுப்பினராக இருக்கும் ஒருவரிடமிருந்து, அவரது பங்குகளை, பங்கு மாற்றம் செய்யப் பெற்று மற்றொருவர் அந்நிறுவனத்தின் உறுப்பினராகிவிடலாம். அதாவது ஒருவர் பங்கு மாற்று நிலையத்தின் வாயிலாக, ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்குகளை வைத்துள்ள மற்றொரு உறுப்பினரிடமிருந்து (பங்குதாரரிடமிருந்து) பங்குகளை வாங்கலாம். பின்னிட்டு அவற்றைத் தன் பெயருக்கு மாற்றிக் கொள்ள நிறுவனத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பித்தல் வேண்டும். இந்த விண்ணப்பத்தின் அடிப்படையில், அவரது பெயர் உறுப்பினர்கள் பதிவேட்டில் பதியப்படுகிறது. இங்கு இவ்வாறு பங்கு மாற்றம் செய்வதாலும் ஒருவர் உறுப்பினராகிறார். இந்நிலைப் பாட்டைத்தான் பிரிவு 2(55)(ii)–ஆனது, நிறுவனத்தின் உறுப்பினராக விழைந்து எழுத்துமூலம் ஒப்புக் கொண்ட, மற்றும் உறுப்பினர்கள் பதிவேட்டில் பெயர் பதியப் பெற்ற பிற நபர்கள் ஒவ்வொருவரும், அந்நிறுவனத்தின் உறுப்பினர் ஆவர் என்று கூறுகிறது. எனினும் இதற்கு 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 56–இல் கூறியுள்ள விதிமுறைகளை கண்டிப் பாக பின்பற்ற வேண்டும்.

1. (1879) 4 Ex Div 216 : 48 LJ Ex 597 : 41 LT 298 : 27 WR 858

5. வாரிசுவழி பங்குரிமை மாறுதலினால் (By Transmission) :

நிறுவன உறுப்பினர் ஒருவர் இறந்துவிட்டால், அவருடைய சட்டமுறைப் பிரதி நிதி (வாரிசு) (Legal Representative), அவரது பங்குகளின் மீதான உரிமையைப் பெறுகிறார். இவ்விதமே நிறுவனத்தின் பங்குதாரர் நொடிப்புநிலை எய்தினால், அவருடைய சட்டமுறைப் பிரதிநிதியான சொத்தாட்சி அலுவலர், பங்குரிமையை உடனே பெறுகிறார். இங்கு மேற்கண்ட இரு சட்டமுறைப் பிரதிநிதிகளுமே, அந்நிறுவனத்தின் உறுப்பினர்களாகிவிடுகின்றனர். எனினும், பங்குரிமை மாறியது குறித்து, சட்டமுறைப் பிரதிநிதி நிறுவனத்திற்கு அறிவிப்பு செய்து, பங்குரிமை மாற்றத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு பதிவான பிறகுதான் உரிமை மாற்றம், செயல் விளைவுக்கு (அமலுக்கு) வருகிறது.

6. முரண்தடையால் உறுப்பினராதல் (By Estoppel) :

முரண்தடைக் கோட்பாட்டின் அடிப்படையில், அதாவது தவறாக ஒருவருடைய பெயர், உறுப்பினர்கள் பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருந்தது எனில், அவர் உறுப்பினர்களுக்கான கூட்டங்களில் பங்கு கொள்ளுதல், பங்காதாயத்தைப் பெறுதல் போன்ற உரிமைகளை அடைவதன் மூலம் உறுப்பினராகலாம்.

7. நிறுவனம் தர வேண்டிய பணத்திற்குப் பதிலாக பங்குகளாக வழங்குவதால் :

நிறுவனத்தைத் தோற்றுவித்தவர்களுக்கும் மற்றும் இதரப் பணிகளைச் செய்தவர்களுக்கும், நிறுவனம் பணத்திற்குப் பதிலாக பங்குகளாக வழங்கினால் அவர்களும் உறுப்பினர்களாகின்றனர்.

எப்படி உறுப்பினர் பதவி முடிவுக்கு வருகிறது? [How is membership terminated? (or) Cessation of Membership]:

உறுப்பினர் பதவி என்பது ஒருவர் விரும்பி ஏற்றுக் கொள்வதாகும். எனவே அவர் தனது விருப்பப்படி உறுப்பினர் பதவியை எப்போது வேண்டுமாயினும் துறந்து விடலாம். எனினும், சில சமயங்களில் இவ்வுறுப்பினர் பதவி கட்டாயமாக முடிவுக்கு வருகிறது. ஒருவருடைய பெயர் நிறுவன உறுப்பினர் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டால், அவருடைய உறுப்பினர் பதவி முடிவுக்கு வந்துவிட்டதாகக் கூறலாம். பொதுவாக பின்வரும் சூழ்நிலைகளில் உறுப்பினர் பதவி முடிவுக்கு வருகிறது.

1. பங்குகளை பிறருக்கு மாற்றிக்கொடுக்கும் பொழுது ;
2. பங்குகள் பறிமுதல் (Forfeiture) செய்யப்படும் பொழுது ;
3. பங்குகள் நிறுவனத்திடம் சரண் செய்யப்படும் (ஒப்படைக்கப்படும்) (Surrender) பொழுது;
4. உறுப்பினர் இறந்தால் அல்லது மனக் கோளாறு அடைந்தால்;
5. உறுப்பினர் நொடிப்பு நிலை (Insolvency) அடைந்தால் ;

6. உறுப்பினரின் ஒப்பந்தம் தவிர்தகு நிலையதாயின், அவர் அதை முறைப் படி உரிய காலத்திற்குள் தள்ளுபடி செய்யும் பொழுது;

7. நீதிமன்றத்தின் நிறைவேற்றுகை (Execution Proceedings) நட வடிக்கைகளால், உறுப்பினரின் கடனுக்காக அவரது பங்குகள் பற்றுகை செய்யப்பட்டு, விற்கப்படும் பொழுது;

8. நிறுவனம் தன் பற்றுரிமையை (Right to Lien) நிறைவேற்றுவதற்காக, அதற்குட்பட்ட பங்குகளை விற்றால், அப்பங்குகளுக்குரியவர்களின் உறுப்பினர் பதவி முடிவுக்கு வருகிறது.

9. பங்குகளை பிறருக்கு இலவசமாக கொடுக்கும் பொழுது;

10. பங்குகள், பங்குப் பற்றாணையாக (Share Warrant) மாற்றப்படும் பொழுது;

11. மீட்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகள் (Redeemable Preference Share) மீட்கப்படும் பொழுது; மற்றும்

12. நிறுவனம் கலைக்கப்படும் (Winding-up) பொழுது.

உறுப்பினர்களின் உரிமைகளும் பொறுப்புகளும் (Rights and Liabilities of a Member):

I. உறுப்பினர்களின் உரிமைகள் (Rights of a Member):

உறுப்பினர்களின் உரிமைகள் நிறுவனச் சட்டத்திலும், பொதுச் சட்டங் களிலும் காணப்படுகின்றன. மேலும் இவை அமைப்பு முறையேடு மற்றும் செயல் முறை விதிகளிலும் வகுத்துரைக்கப்பட்டுள்ளன. எனினும் சட்டத்தினால் கொடுக்கப் பட்டுள்ள உரிமைகளை, அமைப்பு முறையேடு அல்லது செயல்முறை விதிகளின் வாயி லாக மாற்றவோ, குறைக்கவோ முடியாது. அத்தகு சட்டமுறை உரிமைகள் வருமாறு.

1. நிறுவனம் வெளியிடும் புதிய பங்குகளை வாங்குவதற்கான முன்னுரிமை. இது 'வாங்கு முன்னுரிமை' (Right of Pre-emption) எனப்படுகிறது.

2. பங்குகளை மாற்றி அளிக்கும் உரிமை.

3. உறுப்பினர்கள் பதிவேட்டில் பெயரைப் பதிந்து கொள்ளவும், அதுபோல் பெயரை நீக்கிக் கொள்ளவும் உள்ள உரிமை.

4. பங்குச் சான்றிதழைப் பெறும் உரிமை.

5. உறுப்பினர்கள் பதிவேடு, உறுப்பினர்கள் அட்டவணை (index of members), கடனீட்டுப் பத்திரதாரர்கள் பதிவேடு மற்றும் அட்டவணை, ஆண்டுக் கணக்கு (annual returns) ஆகிய ஆவணங்களை ஆய்வு செய்யும் உரிமை. அவற்றி லிருந்து எடுகுறிப்புகள் (extracts) மற்றும் நகல்களை எடுத்துக் கொள்ளும் உரிமை.

6. நிறுவனப் பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பைப் பெறுதல், அக்

கூட்டங்களில் கலந்து கொள்ளுதல், வாக்களித்தல் ஆகிய உரிமைகள்.

7. நிறுவனக் கூட்டங்களில் பதிலாளைக் (Proxy) கொண்டு, வாக்களிக்கும் உரிமை.

8. நிறுவனத்தின் எந்த ஒரு கூட்டத்திலும் வாக்கெடுப்பு கோரும் உரிமை.

9. நிறுவன ஆண்டுப் பொதுக் கூட்டம் தவிர, வேறு கூட்டத்தை கூட்ட முடியாத நிலை இருக்கும் பொழுது, அக்கூட்டத்தைக் கூட்டுவதற்காக தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கும் உரிமை.

10. நிறுவனத்தின் அடுத்த ஆண்டுப் பொதுக் கூட்டம் மற்றும் அக்கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் குறித்து முன்னறிவிப்பு கொடுக்கக் கோரும் உரிமை.

11. நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு, இலாப–நட்டக் குறிப்புஆகிய ஆவணங்களின் நகல்களைப் பெறும் உரிமை. அவ்வாறே தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையின் நகலைப் பெறும் உரிமை (பிரிவு 136)

12. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தணிக்கையாளர்களை நியமனம் செய்யும் நடவடிக்கைகளில் பங்கேற்கும் உரிமை..

13. நிறுவனத்தின் விவகாரங்கள் குறித்து புலனாய்வு செய்யும்படிக் கோரி தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்யும் உரிமை.

14. நிறுவனத்தின் விவகாரங்கள், பொது நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அல்லது உறுப்பினர்களை அடக்கும் முறையில் உள்ளதாகவும், அவ் விவகாரங்களை ஒரு முடிவிற்கு கொண்டு வரும்படிக் கோரியும், அதன் தவறான மேலாண்மைக்கு எதிராக உரிய பரிகாரங்களை வழங்கக் கோரியும், தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கும் உரிமை.

15. நிறுவனத்தைக் கலைக்கக் கோரி, தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கும் உரிமை.

II. உறுப்பினர்களின் பொறுப்புகள் (Liabilities of a Member):

உறுப்பினர்களின் பொறுப்புகள், நிறுவனத்தின் தன்மையைப் பொறுத்து அமைகிறது. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாத நிறுவனத்தின் **(Company with unlimited liability)** கடன்களுக்கு, உறுப்பினர்கள் தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பாகிறார்கள்.

பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் (Company limited by shares) உறுப்பினர்கள், அவர்கள் அந்நிறுவனத்தில் வாங்கியுள்ள பங்குகளின் முழு மதிப்பின் அளவிற்குப் பொறுப்புடையவர்கள் ஆகிறார்கள்.

நிறுவனம் கலைக்கப்படுவதற்கு முன்பு, உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய பணத்தைச்செலுத்தக் கோரி அந்நிறுவனத்தின் இயக்குனர்கள் கோரலாம். நிறுவனம் கலைக்கப்படும் பொழுது, நிறுவனக் கலைப்பதிகாரி பணத்தைக் கோரலாம்.

உறுப்பினர்களின் பொதுவான பொறுப்பு பின்வரும் நிலைகளில் எழுகிறது. அவை,–

1. உறுப்பினர் ஒவ்வொருவரும், அழைப்புத் தொகையையும் பொறுப்புறுதித் தொகையையும் ரொக்கமாகச் செலுத்தல் வேண்டும்.
2. நிறுவன அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின்படி செயலாற்ற வேண்டும்.
3. நிறுவனம் கலைக்கப்படும் பொழுது, பங்குகளின் மீது செலுத்தப் படாமல் உள்ள தொகையைச் செலுத்த வேண்டும்.

61. Who can become members? Discuss. (யார் ஒரு நிறுவனத்தின் உறுப்பினராகலாம்? விவாதிக்க.)

(அல்லது)

Who can be a member of a company? What are the different modes in which a person can become a member of a company? (ஒரு நிறுவனத்தின் உறுப்பினராக யார் ஆக முடியும்? ஒருவர் ஒரு நிறுவனத்தின் உறுப்பினராகக் கூடிய பல்வேறு முறைகள் யாவை?)

முன்னுரை:

நிறுவனச் சட்டம் உறுப்பினராவதற்கு எத்தகுதியையும் குறிப்பிடாவிட்டாலும் ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதி படைத்த அனைவரும், ஒரு நிறுவனத்தின் உறுப்பின ராகலாம். ஏனெனில், ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாகத்தான் ஒருவர் ஒரு நிறுவனத்தின் உறுப்பினராகிறார். அவ்வாறு உறுப்பினராகக் கூடியவர்களின் சட்ட நிலைப்பாட்டை பின்வருமாறு காண்போம்.

ஒரு நிறுவனத்தின் உறுப்பினராகக் கூடியவர்கள்:

1. இளவர் (Minor) :

ஆங்கிலச் சட்டப்படி ஓர் இளவர் நிறுவனத்தில் உறுப்பினராகலாம் (பங்கு தாரராகலாம்). ஆனால் இந்தியச் சட்டத்தில் இந்நிலை முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. ஏனெனில் இந்திய ஒப்பந்தச் சட்டப்படி இளவருடன் செய்துகொள்ளும் ஒப்பந்தம் இல்லா நிலையதாகும். இது **Mohari Bibi v. Dharmadas Ghose**[1] எனும் புகழ்பெற்ற வழக்கில் தீர்ப்பாக கூறப்பட்டது. ஆனால் சமீப காலங்களில், முன்பு அமைக்கப்பட்டிருந்த நிறுவன சட்ட வாரியம் ஒரு இளவருக்காக அவரது சட்டமுறை யான பாதுகாவலர் கையொப்பமிட்டு, எழுத்துமூலமாக உறுப்பினர் ஆவதற்கு ஒப்பந்தம் செய்யலாம் எனத் தீர்மானித்துள்ளது. எனினும் ஒரு இளவர், நிறுவனம் ஒன்றில் உறுப்பினராவது இன்றும் ஒரு முரண்பாடான கருத்தாகவே நிலவி வருகிறது என்பதுதான் உண்மையான நிலைப்பாடாகும்.

1. (1903) ILR 30 Cal. 539 (P.C.)

2. நிறுவனம் மற்றும் பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் (Company and Subsidiary Company) :

ஒரு நிறுவனம் சட்ட நபரானதாகையால் (legal person), அது மற்றொரு நிறுவனத்தின் உறுப்பினராகலாம். ஆனால் ஒரு நிறுவனம் தான் வெளியிட்ட பங்குகளை தானே வாங்குதல் கூடாது என்று 67–வது பிரிவில் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் ஒரு நிறுவனம், அதன் அமைப்பு முறையேடும் செயல்முறை விதிகளும் அனுமதித்தால், அதன் பிடிப்பு நிறுவனத்தின் (Holding Company) பங்குகளை வாங்கி அதன் உறுப்பினராகலாம். ஆனால், பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் (Subsidiary Company), தன்னைப் பிடித்துக் கொண்டுள்ள பிடிப்பு நிறுவனத்தின் பங்குகளை வாங்க முடியாது. எனவே அதன் உறுப்பினராக முடியாது.

3. கூட்டாண்மை நிறுமம் (Partnership Firm) :

கூட்டாண்மை நிறுமம் ஒரு தனி நபர் அல்ல. எனவே ஒரு நிறுவனத்தில் உறுப்பினராக முடியாது. எனினும் அந்நிறுமம், ஒரு நிறுவனத்தில் உறுப்பினராக விரும்பினால், கூட்டாளிகளின் பெயரில் பங்குகள் வழங்கப்படும். கூட்டாளிகள் அனைவரும் கூட்டு பங்குதாரர்களாக (Joint Share Holders) ஆவார்கள்.

4. வெளிநாட்டவர் (Foreigner) அல்லது புறக்குடியிருப்பாளர் (Non-resident) :

வெளிநாட்டவர் ஒருவர் ஒரு நிறுவனத்தின் உறுப்பினராகலாம். ஆனால் அவர் பகைமை நாட்டவராக ஆகிவிட்டால், அவரது உறுப்பினர் உரிமை நிறுத்தி வைக்கப்படும்.

5. நொடிப்புநிலை அடைந்தவர் (Insolvent) :

நொடிப்புநிலையில் உள்ள ஒருவர், நொடிப்பு நிலையராக விளம்பப்படும் வரை, அவர் நிறுவனத்தின் உறுப்பினராக இருக்கலாம். உறுப்பினர் பதிவேட்டில் அவரது பெயர் இருக்கும் வரை உறுப்பினருக்கு உள்ள அனைத்து உரிமைகளையும் அவர் கொண்டவராக இருப்பார்.

6. பொறுப்பாண்மையர் (Trustee) :

பொறுப்பாண்மையர் எனும் தகுநிலையில் ஒருவர் ஒரு நிறுவனத்தின் உறுப்பினராக முடியாது.

-o0o-

பங்காதாயம்
[Dividend]

62. Dividend - Write short notes. (பங்காதாயம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Interim Dividend - Write short notes. (இடைக்கால பங்காதாயம் - குறுகிய விடை எழுதுக.)

3

பங்காதாயம் - விளக்கம்:

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அடையாளம், அது ஆண்டுதோறும் தனது பங்குதாரர்களுக்கு அளிக்கும் பங்காதாயம் ஆகும். அதாவது வியாபாரத்தில் வரும் இலாபத்தில் ஒரு பகுதியை பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிப்பது கூட்டுப் பங்கு நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் தொகை **'பங்காதாயம்'** எனப்படுகிறது. சுருங்கச் சொன்னால், பங்காதாயம் என்பது நிறுவனத்தின் பகிர்வு இலாபத்திலிருந்து (divisible profit) பங்குதாரர் ஒவ்வொருக்கும் கிடைக்கக்கூடிய தொகையாகும்.

பங்காதாயம் - பிரிவு 2 (35) தரும் வரையறை:

பங்காதாயம் என்பதற்கான விளக்கத்தை நாம் முன் சென்ற பக்கத்தில் கண்டோம். அதேநேரம் அதற்கான சட்ட வரையறை ஏதும் உள்ளதா என்று பார்க்கும் பொழுது, **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 2(35)-ஆனது** பங்காதாயம் பற்றி விரிவாக வரையறுக்காமல், **"பங்காதாயம் என்பது இடைக்கால பங்காதாயம் எதையும் உள்ளடக்கியதாகும்"** என்று மட்டும் சுருக்கமாகக் கூறுகிறது.

பங்காதாயம் தொடர்பான சட்ட வகைமுறைகள்:

பங்காதாயம் பற்றி நிறுவனங்கள் சட்டம் இரத்தினச் சுருக்கமாக மேற்கண்ட வாறு வரையறைத்தாலும், பங்காதாயம் குறித்து **"பங்காதாயத்தின் விளம்புகை மற்றும் செலுத்துகை" (Declaration and Payment of Dividend)** என்ற தலைப்பில் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் ஒரு தனி அத்தியாயமாகக் கொடுக்கப்பட்டுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது. அதன் கீழான 123 முதல் 127 வரையிலான பிரிவுகள் பங்காதாயம் பற்றி விளக்குகிறது.

பங்காதாயத்தின் விளம்புகை (Declaration of dividend) பற்றி பிரிவு 123–ம், செலுத்தப்படாத பங்காதாயக் கணக்கு (Unpaid dividend account) பற்றி பிரிவு 124–ம், முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (Investor Education and Protection Fund) பற்றி பிரிவு 125–ம், பங்காதாயத்திற்கான உரிமை, உரிமைப் பங்குகள் மற்றும் மீதூதியப் பங்குகள் ஆகியன பங்குகள் மாற்றத்திற்கான பதிவு நிலுவையில் இருக்கும் போது இருத்தி வைக்கப்பட வேண்டும் (Right to dividend, rights shares and bonus shares to be held in abeyance pending registration of transfer of shares) என்று பிரிவு 126–ம், பங்காதாயங்களை பகிர்ந்தளிக்கத் தவறுவதற்கான தண்டனை (Punishment for failure to distribute dividends) பற்றி பிரிவு 127–ம் கூறுகின்றது. இவை தவிர வேறு சில சட்டப் பிரிவுகளிலும் பங்காதாயம் பற்றிய வகைமுறைகள் காணப்படுகின்றன.

பங்காதாயம் வழங்கல்:

பங்குதாரர்கள் வாங்கியுள்ள பங்குகளின் கணக்குப்படியோ அல்லது செலுத்தப்பட்ட பங்குத் தொகையின்படியோ பங்காதாயம் வழங்கப்படலாம். பங்காதாயம் அளிப்பது நிறுவனத்தின் உள்ளார்ந்த அதிகாரமாகும் (inherent power). இதை அந்நிறுவனத்தின் செயல்முறை விதிகளோ அல்லது அமைப்பு முறையேடோ குறிப்பிட வேண்டுமென்பதில்லை. எனினும் பங்காதாயம் வழங்கப்படுவதற்கு ஒரு சில கட்டுப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவை வருமாறு.

பங்காதாயம் வழங்கலின் மீதான கட்டுப்பாடுகள்:

1. பங்காதாயம் நிறுவனத்தின் இலாபத்தில் இருந்துதான் வழங்கப்பட

1. **"Dividend"** includes any interim dividend - **Section 2(35) of the Companies Act, 2013.**

வேண்டும், என்று **பிரிவு 123(1)** கூறுகிறது.

2. பங்காதாயம் மூலதனத்திலிருந்து வழங்கப்படுதல் ஆகாது.

3. பங்காதாயத்தை பின்வரும் தொகையிலிருந்துதான் வழங்க வேண்டும்.

(a) அந்தந்த ஆண்டில், நிறுவனம் அடைந்த இலாபத்திலிருந்து நிறுவனத்தின் சொத்துக்களுக்குச் சட்டப்படி தேவையான தேய்மானத் தொகையை ஒதுக்கிய பிறகு, மீதமுள்ள இலாபத்திலிருந்து பங்காதாயம் வழங்கப்படலாம் அல்லது முந்தைய நிதி ஆண்டுகளில் அடைந்த இலாபத்திலிருந்து நிறுவனத்தின் சொத்துக்களுக்குச் சட்டப்படி தேவையான தேய்மானத் தொகையை ஒதுக்கிய பிறகு, மீதமுள்ள இலாபத்திலிருந்து பங்காதாயம் வழங்கலாம், அல்லது இரண்டிலிருந்தும் வழங்கலாம்.

(b) மைய அரசு அல்லது மாநில அரசால் கொடுக்கப்பட்ட பொறுப்புறுதி ஒன்றின்படி நிறுவனத்தால் பங்காதாயம் செலுத்தப்படுவதற்காக அந்தந்த அரசுகள் வழங்கும் பணத்திலிருந்து பங்காதாயம் வழங்கலாம் [பிரிவு 123 (1) (a) மற்றும் (b)].

எனினும் ஒரு நிறுவனத்தின் தடையற்ற காப்பு நிதி தவிர வேறு காப்பு நிதிகளில் இருந்து அந்நிறுவனத்தால் பங்தகாதாயம் ஏதும் செலுத்தப்படல் ஆகாது அல்லது விளம்பப்படக் கூடாது.

4. **பிரிவு 51-இன்படி** ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அனுமதித்தால், ஒவ்வொரு பங்கிற்கும் செலுத்தப்பட்ட தொகையின் விகிதத்திற்கு தக்கவாறு பங்காதாயம் வழங்கலாம். ஆனால் இவ்வாறு செய்ய வேண்டுமெனில், சில பங்குகளின் மீது செலுத்தப்பட்ட தொகையானது, மற்ற பங்குகளின் மீது செலுத்தப்பட்ட தொகையைக் காட்டிலும் அதிகமானதாக இருக்க வேண்டும். மற்றபடி, பொதுவாக பங்காதாயம், பங்குகளின் மதிப்பேற்கேற்றவாறு அளிக்கப்படுகிறது.

5. அதிக இலாபம் அடைந்தாலும், நிறுவனம் பங்காதாயம் வழங்க வேண்டுமெனும் கட்டாயம் கிடையாது. இயக்குனர்கள், பங்காதாயம் வழங்குவதற்கு முடிவு செய்த பின்னர்தான் பங்குதாரர்கள் அவ்வுரிமையைப் பெறுகின்றனர். பொதுக் கூட்டமே விரும்பினாலும் சட்டப்படி பங்காதாயம் வழங்கப்பட முடியாது. ஆனால் இயக்குனர்கள் மோசடி செய்யும் கருத்துடன் பங்காதாயம் தர மறுத்தால், பங்குதாரர்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடலாம்.

6. நிறுவனத்தின் இயக்குனரவையானது நிதியாண்டு எதன் போதும் **இடைக்கால பங்காதாயம் (Interim Dividend)** வழங்குவதை விளம்பலாம். இது எந்த நிதியாண்டில் இவ்வாறு இடைக்கால பங்காதாயம் வழங்க விளம்புகை செய்யப்பட உள்ளதோ அந்த நிதியாண்டின் இலாப–நட்டக் கணக்கின் உபரி நிதியிலிருந்து மற்றும் இலாபங்களிலிருந்து இடைக்கால பங்காதாயம் வழங்கப்படலாம் என்று **பிரிவு 123(3)** கூறுகிறது. நன்முறையில் இலாபமீட்டும் நிறுவனங்களே பொதுவாக இடைக்கால பங்காதாயம் வழங்க முடியும்.

7. இடைக்கால பங்காதாயம் உள்ளிட்ட பங்காதாயத்தை வழங்குவதற்கான விளம்புகை செய்யப்பட்ட தேதியிலிருந்து அய்ந்து நாட்களுக்குள் அதற்கான தொகையை அட்டவணை வங்கி ஒன்றில் திறக்கப்பட்ட தனிக் கணக்கில் நிறுவனம்

வைப்பீடு செய்தல் வேண்டும் என்று **பிரிவு 123(4)** கூறுகிறது.

8. பதிவு செய்யப்பட்ட பங்குதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரம் பெற்றவர்களுக்கு அல்லது அவர்களது வங்கிகளுக்குதான் பங்காதாயம் வழங்கப்பட வேண்டும் என்றும், ரொக்கமாகத் தவிர வேறுவழிகளில் செலுத்தப்படல் ஆகாது என்றும் **பிரிவு 123(5)** கூறுகிறது. எனினும் இவ்வாறு ரொக்கமாக செலுத்தப்பட வேண்டிய அப்பங்காதாயத்தை காசோலை அல்லது பங்காதாய உரிமைச் சீட்டு (Dividend Warrant) அல்லது வேறு மின்னணு மாற்றம் (electronic mode) எதன் வாயிலாகவும் வழங்குவது தடுக்கப்படவில்லை என்பது இங்கு கவனத்திற்குரியது.

9. பங்காதாயம் வழங்க முடிவு செய்த பிறகுதான், அது நிறுவனம் செலுத்த வேண்டிய கடனாகிறது. பங்காதாயம் வழங்க விளம்புகை செய்தவுடன், அவ்வாறு விளம்புகை செய்து 30 தினங்களுக்குள் அது பங்குதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும் அல்லது அவர்களுக்கு **பங்காதாய உரிமைச் சீட்டு** (Divident Warrant) அனுப்பப்பட வேண்டும்.

10. இவ்வாறு 30 தினங்களுக்குள் வழங்கப்படாத அல்லது கோரப்படாத பங்காதாயத்தை, மேற்படி முப்பதாவது நாள் முடிவுற்ற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், **'செலுத்தப்படாத பங்காதாயக் கணக்கு'** (Unpaid Divident Account) எனும் ஒரு கணக்கில் நிறுவனம் மாற்ற வேண்டும் என்று **பிரிவு 124(1)** கூறுகிறது.

10. செலுத்தப்படாத பங்காதாயக் கணக்கில் மாற்றப்பட்ட தொகையானது ஏழாண்டு காலத்திற்கு செலுத்தப்படாமல் அல்லது கோரப்படாமல் இருந்தால் அது பிரிவு 125–இன் கீழ் மைய அரசால் நிறுவப்பட்டுள்ள **முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு** (Investor Education and Protection Fund) மாற்றப்பட வேண்டும் என்று **பிரிவு 124(5)** கூறுகிறது.

11. மேற்கண்டவாறு மாற்றப்பட்ட செலுத்தப்படாத அல்லது கோரப்படாத பங்காதாயத்திற்குரிய அனைத்து பங்குகளையும் அந்நிறுவனம் **முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு** மாற்ற வேண்டும் என்று **பிரிவு 124(6)** கூறுகிறது.

12. மேற்கண்ட வகைமுறைகளை கடைப்பிடிப்பதில் தவறுகை புரியும் நிறுவனம் மற்றும் அதன் அலுவலருக்கு தண்டனை உண்டு என்று பிரிவு **124(7)** கூறுகிறது.

13. பங்குகள் மாற்றுதல் ஆவணம் எதுவும் பதிவுக்காக நிறுவனத்திடம் வழங்கப்பட்டு, அதன் பதிவை நிறுவனம் செய்யவில்லையானால், அப்பங்குகளுக்குரிய பங்காதாயத்தை செலுத்தப்படாத பங்காதாயக் கணக்கிற்கு நிறுவனம் மாற்றல் வேண்டும். எனினும் இதற்கிடையில் அப்பங்குகளின் பதிவு பெற்ற உரிமையாளர் அதற்கான பங்காதாயத்தை பங்குகளை மாற்றிப் பெறுபவருக்கு வழங்கும்படி நிறுவனத்திற்கு எழுத்துமூலம் அதிகாரமளித்திருந்தால், அது அவருக்கு பங்காதாயம் வழங்குதல் வேண்டும் என்று **பிரிவு 126(1)** கூறுகிறது.

14. பங்காதாயத்திற்கான விளம்புகையை செய்த பிறகும், பங்காதாயமோ, அதற்கான உரிமைச் சீட்டையோ முப்பது நாட்களுக்குள் நிறுவனம் வழங்கவில்லை எனில், அதற்கும் அதன் அலுவலர்களுக்கும் **பிரிவு 127-இன்படி** தண்டனை உண்டு.

மூலதனம்
[Capital]

63. Reserve Capital - Write short notes. (இருப்பு மூலதனம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Explain the different kinds of share capital - Write short notes. (பல்வேறு வகை பங்கு மூலதனம் பற்றி எழுதுக.)

(அல்லது)

Kinds of Capital - Write short notes. (மூலதனத்தின் வகைகள் - குறுகிய விடை எழுதுக.)

மூலதனம் (Capital):

எந்தத் தொழிலைச் செய்வதற்கும் முதலீடு தேவை. 'வெறுங்கையால் முழம் போட முடியாது' என்பார்கள். அந்த வகையில் ஒரு நிறுவனம் தான் எடுத்துக் கொண்ட தொழிலை நல்ல முறையில் செய்ய, முதலீடு தேவை. இங்கு அத்தகு முதலீடே, '**மூலதனம்**' எனப்படுகிறது.

இருப்பு மூலதனம் (Reserve Capital):

'இருப்பு மூலதனம்' என்பதற்கு எளிய முறையில் விளக்கம் காண, நாம் மூலதனத்தின் சில வகைகளை காணுதல் வேண்டும்.

அதாவது, ஒரு நிறுவனம் தனக்குத் தேவையான மூலதனத் தொகையை தனது அமைப்பு முறையேட்டில் குறிப்பிடுகிறது. இது அந்நிறுவனத்தின் **'அதிகார பூர்வமான (அனுமதிக்கப்பட்ட) மூலதனம்' (Authorised Capital)** எனப்படுகிறது.

பின்னிட்டு அம்மூலதனத் தொகையை, பொது மக்களுக்கு தனது பங்குகளை வெளியிடுவதன் வாயிலாகத் திரட்டிக் கொள்கிறது. எனினும் அம்மூல தனத் தொகை முழுவதற்கும் உண்டான மதிப்பிற்கு பங்குகளை வெளியிட வேண்டும் எனும் கட்டாயம் ஏதுமில்லை. அதன் பகுதியளவுத் தொகைக்கும் நிறுவனம் பங்குகளை வெளியிட லாம். எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனம் தனது அமைப்பு முறையேட்டின் மூலதனத் தொகையில் ஒரு பாதிக்கு மட்டும் பங்குகளை வெளியிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, அவ்வாறு வெளியிடப்பட்ட பங்குகளின் வாயிலாகப் பெறப்படும் மூலதனம், **'வெளியிடப்பட்ட மூலதனம்' (Issued Capital)** எனப்படும். இதை **'சாதாரண பங்கு மூலதனம்' (Equity Share Capital)** என்றும் அழைக் கலாம்.



ஒரு வேளை அந்நிறுவனம் தனது மூலதனத் தொகை முழுவதற்கும் பங்கு களை வெளியிட்டு, அம்முழுப்பங்குகளை யும் பொது மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையானால் (வாங்கவில்லையானால்), அவ்வாறு வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தின் ஒதுக்கப்பட்ட பகுதி **'ஏற்றுக் கொள் ளப்பட்ட பங்குத் தொகை மூலதனம்' (Subscribed Capital)** எனப்படும்.

இங்கு மீதியிருக்கும் மூலதனத் தொகை, **'அழைக்கப்படாத மூலதனம்' (Uncalled Capital)** எனப்படுகிறது.

எனினும் மீதியிருக்கும் மூலதனத் தொகைக்கு பங்குகளை வாங்க அந் நிறுவனம் உடனடியாக அழைக்க வேண்டியதில்லை. இந்நிலையில் அந்நிறுவனம் பங்குகளின் வாயிலாக உண்மையில் பெறும் மூலதனம், **'செலுத்தப்பட்ட மூலதனம்' (Paid-up Capital)** எனப்படுகிறது.

மேற்கண்டதில் பங்குகள் பெற பொது மக்களுக்கு அழைப்புவிடுக்காமல், மீதியிருக்கும் மூலதனத்தை அந்நிறுவனம் **'இருப்பு மூலதனமாக' (Reserve Capital)** மாற்றிக் கொள்ளலாம். (இது 'ஒதுக்கப்பட்ட மூலதனம்' என்றும் கூறப்படுகிறது).

ஒரு நிறுவனம் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம், அழைக்கப்படாத மீதியுள்ள பங்கு மூலதனம் (Uncalled Capital) முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை நிறுவனம் கலைக்கப்படும் பொழுது தவிர, மற்ற நேரங்களில் அழைத்தல் கூடாது என்று விளம்புகை செய்யலாம்.

எனவே இத்தகு இருப்பு மூலதனத்தை ஒரு நிறுவனம் பெற வேண்டுமெனில், அது கலைக்கப்படும் நிலை வரும் பொழுதுதான், அதற்கான அழைப்பை பொது மக்களிடம் செய்தல் வேண்டும். மேலும் இதன் மீது நிறுவனம் எவ்வித பற்றுரிமையும் (Charge) கொண்டாட முடியாது.

சுருங்கக் கூறின், ஒரு நிறுவனம் தனது அழைக்கப்படாத மூலதனத்தை, அது கலைக்கப்படும் பொழுது அழைத்துக் (பொது மக்களுக்கு அத்தொகையின் அளவிற்கு பங்குகளை வெளியிட்டுப் பெற்றுக்) கொள்ளலாம் என்று சிறப்புத்தீர்மானம் நிறைவேற்றி, ஒதுக்கிக் கொள்ளும் மூலதனத் தொகையே, **'இருப்பு மூலதனம்'** அல்லது **'ஒதுக்கப்பட்ட மூலதனம்'** எனப்படுகிறது.

இந்த இருப்பு மூலதனத்தைத் தவிர, மற்றொரு மூலதனமும் உண்டு. அது **'நடப்பு மூலதனம்' (Working Capital)** எனப்படுகிறது. அதாவது ஒரு நிறுவனத்தின் மூலதனமும், அது தன் உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோரிடமிருந்து கடன் பெற்ற தொகைகளும் சேர்ந்துதான், நடப்பு மூலதனமாகிறது. இந்த மூலதனத்தை, நிறுவனம் தனது தொழிலை அல்லது வியாபாரத்தைச் செய்யவும், பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்கவும், அவ்வப்போது ஏற்படும் இதர செலவுகளுக்கும் பயன்படுத்துகிறது.

64. Explain the different modes in which the capital of a Company may be reduced. What are the cases in which reduction procedure is not required ? (ஒரு நிறுவனத்தின் மூலதனத்தைக் குறைப்பதற்குரிய பல்வேறு முறைகளை விளக்குக. எந்நிகழ்வுகளில் குறைப்பது சம்பந்தமான நடைமுறை தேவையற்றது?)

(அல்லது)

Discuss the circumstances in which and the process by which a company can reduce its share capital. (ஒரு நிறுவனம் தன் பங்கு மூலதனத்தை எந்த சூழ்நிலையில் எந்த முறையில் குறைக்கலாம் என்பதை விவாதிக்க.)

(அல்லது)

Examine the legal provision relating to the alteration of capital clause. (மூலதனப் பகுதியை மாற்றுவது தொடர்பான சட்ட வகைமுறையை ஆராய்க.)

(அல்லது)

Reduction of Share Capital - Write short notes.
(பங்கு மூலதனக் குறைப்பு - குறுகிய விடை எழுதுக.)



முன்னுரை:

நிறுவனத்திற்கு கடன் அளித்தவர் களும் மற்றும் அதனுடன் தொடர்பு கொள் ளும் அனைத்து வெளியார்களும் அதன் மூல தனத்தையே பெரிதும் நம்பி இருக்கின்றனர். இதனால் ஒரு நிறுவனம் அதன் மூலதனத்தை எளிதில் குறைத்துக் கொள்ள முடியாதபடி, நிறுவனச்சட்டம் பல்வேறு தடைகளை விதித்துள்ளது. அவற்றை **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 66** பின்வருமாறு விளக்குகிறது.

தீர்ப்பாயத்தின் ஒப்புதலுடன் மூலதனத்தைக் குறைக்கும் முறைகள்:

தனக்கென பங்கு மூலதனத்தை கொண்ட, பங்குகளால் அல்லது பொறுப் புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுவனமொன்று அளிக்கும் விண்ணப்பத்தின் பேரில் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் (National Company Law Tribunal) செய்யும் உறுதிப்பாட்டிற்குட்பட்டு (confirmation), அது தனது பங்கு மூலதனத்தை ஒரு சிறப்புத் தீர்மானத்தின் வாயிலாக பின்வரும் வழிகளில் குறைக்கலாம், என்று **பிரிவு 66(1)** கூறுகிறது. அதன்படி,

(a) செலுத்தப்படாத பங்கு மூலதனம் தொடர்பாக அதன் பங்குகள் எதிலா வது உள்ள பொறுப்பை தீர்த்தல் (extinguish) அல்லது குறைத்தலின் மூலம் மூலதனத்தைக் குறைக்கலாம்;

(b) அவ்வாறு பங்குகள் எதிலாவது உள்ள பொறுப்பை தீர்த்தோ, தீர்க்காமலோ அல்லது குறைத்தோ, குறைக்காமலோ

(i) இழந்துபட்ட அல்லது இருக்கக் கூடிய சொத்துக்களால் ஈடு காட்டப் பெறாத செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தை இரத்து செய்வதன் மூலம், பங்கு மூலதனத்தைக் குறைக்கலாம்; அல்லது

(ii) நிறுவனத்தின் தேவைக்கு அதிகமாக உள்ள செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகையைத் திருப்பி அளிப்பதன் மூலம் பங்கு மூலதனத்தைக் குறைக்கலாம்.

நிறுவனம் மேற்கூறியவைகளைச் செய்யும் போது அதற்கு ஏற்றவாறு அமைப்பு முறையேட்டை மாற்றிக் கொள்ளலாம்.

எனினும் ஒரு நிறுவனம் இந்தச் சட்டம் செயல்விளைவுக்கு வருவதற்கு முன் அல்லது அதற்குப் பின்னிட்டு தான் ஏற்றுக் கொண்ட வைப்பீடுகள் எதையும் திருப்பிச் செலுத்துவதில் அல்லது அதன் மீதான வட்டி செலுத்துவதில் பாக்கி வைத்திருந்தால்,

பங்கு மூலதனக் குறைப்பு செய்யப்படல் ஆகாது.

பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான நடைமுறைகள்:

1. சிறப்புத் தீர்மானமும் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பித்தலும் (Special Resolution and Application to the Company Law Board): பங்கு மூல தனத்தைக் குறைப்பதற்கு, முதற்கண் சம்பந்தப்பட்ட நிறுவனம் சிறப்புத் தீர்மானம் (Special resolution) ஒன்றை நிறைவேற்ற வேண்டும். இச்சிறப்பு தீர்மானத்தை நிறைவேற்றியவுடன், மூலதனம் குறைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யும்படி தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திற்கு அந்நிறுவனம் **பிரிவு 66(1)** –இன்படி விண்ணப்பம் செய்ய வேண்டும்.

2. அறிவிப்பு கொடுத்தல் (Giving notice): பங்கு மூலனத்தைக் குறைத் துக் கொள்வதற்காக ஒரு நிறுவனம் மேற்கண்ட பிரிவு 66(1)–இன்படி செய்யும் விண்ணப்பம் தொடர்பாக தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயமானது மைய அரசு, பதி வாளர் மற்றும் (பட்டியலிடப்பட்ட நிறுவனமெனில்) பங்கு பரிவர்த்தனை வாரியம் (செபி), நிறுவனத்திற்கு கடனீந்தவர்கள் ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்ப வேண் டும். இந்த அறிவிப்பு கிடைக்கப் பெற்ற மூன்று மாதங்களுக்குள் மேற்படியார்கள் முன் வைக்கும் கூற்றுகளை தீர்ப்பாயம் பரிசீலனை செய்ய வேண்டும். ஒருக்கால் இந்த மூன்று மாதங்களுக்குள் மேற்படியார்கள் யாரும் தங்கள் கூற்றுகளை தெரிவிக்க வில்லையெனில், விண்ணப்பம் செய்த அந்நிறுவனம் தனது பங்கு மூலதனத்தைக் குறைத்துக் கொள்வதற்கு மேற்படியார்கள் யாருக்கும் ஆட்சேபணை இல்லை என்று அனுமானிக்கப்படுதல் வேண்டும் என்று **பிரிவு 66(2)** கூறுகிறது.

3. தீர்ப்பாயம் ஆணை பிறப்பித்தல் (Order by the Tribunal): இவ் வாறு ஒரு நிறுவனம் தனது மூலதனத்தைக் குறைப்பதால் அதற்கு கடனீந்தோரின் நலன் ஏதும் பாதிப்பிற்குள்ளாகிறதா என்பதை தீர்ப்பாயம் கவனிக்க வேண்டும். இது குறித்து **பிரிவு 66(3)** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, நிறுவனத்திற்கு கடனீந் தோர் ஒவ்வொருவரின் கடன் அல்லது கோரிக்கையானது அந்நிறுவனத்தால் தீர்க்கப் பட்டுள்ளது அல்லது முடிவு செய்யப்பட்டுள்ளது அல்லது அதற்கான பிணையம் வழங் கப்பட்டுள்ளது அல்லது அவரது இசைவு பெறப்பட்டுள்ளது என்று தீர்ப்பாயம் மன நிறைவு அடையும்பட்சத்தில், அது பொருத்தமெனக் கருதும் அத்தகு வரைவுரைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் அந்நிறுவனம் தனது மூலதனத்தைக் குறைத்துக் கொண்டிருப்பதை உறுதி செய்து ஆணை பிறப்பிக்கலாம்.

எனினும் மூலதனத்தைக் குறைத்து கொள்ள உத்தேசிக்கும் அந்நிறுவனத் தின் கணக்கு வழக்கு பராமரிப்பானது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 133 குறித்துரைக்கப்பட்ட கணக்கு வழக்கு தரநிலைகளுக்கு அல்லது சம்பந்தப் பட்ட வேறு வகைமுறைகளுக்கு இணங்க இல்லையென்றாலோ, அது குறித்து அந் நிறுவனத் தணிக்கையாளரின் சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லையென்றாலோ, மூலதனத்தைக் குறைப்பதற்கான விண்ணப்பத்திற்கு தீர்ப்பாயம் ஒப்புதல் அளிக்காது.

4. ஆணையை வெளியிடுதல் (Publication of the Order): மேற்

சென்ற பிரிவு 66(3)–இன் கீழ் மூலதனத்தைக் குறைத்துக் கொள்வதை உறுதி செய்து தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணையை அத்தீர்ப்பாயம் ஏவுரைக்கும் அத்தகு முறையில் அந்நிறுவனம் வெளியிடுதல் வேண்டும் என்று **பிரிவு 66(4)** கூறு கிறது.

5. ஆணையை பதிவாளரிடம் வழங்குதல் (Delivery of the order and minute to the Registrar): தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணையின் சான்று நகல் ஒன்றை நிறுவனங்களின் பதிவாளரிடம் அந்நிறுவனம் வழங்க வேண்டும். மேலும் அச்சான்று நகலுடன் (அ) பங்கு மூலதனத் தொகை, (ஆ) அது எத்தனை பங்குகளாக பிரிக்கப்பட வேண் டுமோ அத்தனை பங்குகளுக்கான எண்ணிக்கை, (இ) ஒவ்வொரு பங்கினுடைய மதிப்பு, (ஈ) பதிவின் போது, அந்த ஒவ்வொரு பங்கின் மீதும் செலுத்தப் பட்டதாகக் கருதப்படும் தொகை ஏதேனுமிருப்பின் அது, ஆகிய விவரங்களைக் காட் டுவதும் தீர்ப்பாயத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டதுமான கூட்ட நடவடிக்கை பதிவின் (மினிட்) சான்று நகல் ஒன்றையும் அந்நிறுவனம் பதிவாளரிடம் வழங்க வேண்டும். இவ்விரண்டையும் ஆணையின் நகல் கிடைக்கப் பெற்ற முப்பது நாட்களுக்குள் நிறுவனங்களின் பதிவாளரிடம் அந்நிறுவனம் அளிக்க வேண்டும். அதை பதிவளார் பதிந்து கொண்டு, அதற்கான சான்றிதழ் ஒன்றை அந்நிறுவனத்திற்கு வழங்குவார் என்று **பிரிவு 66(5)** கூறுகிறது.

6. சொந்தப் பிணையங்களை திரும்ப வாங்குவதற்குப் பொருந்தது (Not applicable to buy-back its own securites by a company): பிரிவு 68–இன் கீழ் ஒரு நிறுவனம் தனது சொந்த பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங் களையே (பிணையங்களை) திரும்ப வாங்குவதற்கு இந்த பிரிவு 66–இல் உள்ளது எதுவும் பொருந்தாது என்று **பிரிவு 66(6)** கூறுகிறது.

7. உறுப்பினர் பொறுப்பல்ல (Member is not liable): அந்நிறுவனத் தின் கடந்தகால அல்லது நிகழ்கால உறுப்பினர் ஒருவர், அவர் வைத்திருக்கும் பங்கின் மீது அவரால் செலுத்தப்பட்ட தொகைக்கும் மற்றும் தீர்ப்பாயத்தின் மூலதனக் குறைப்பு ஆணையால் நிர்ணயம் செய்யப்பட்ட பங்கின் மதிப்பிற்கும் இடையிலான வேறுபாட்டுத் தொகையை விட அதிகமாக தொகை செலுத்தும்படி செய்யப்படும் அழைப்பிற்கு பொறுப்புடையவர் அல்ல. அது போல் அதற்கு பங்களிப்பதற்கும் பொறுப்பல்ல என்று **பிரிவு 66(7)** கூறுகிறது.

8. கடனீந்தோருக்கு நிறுவனத்தின் பொறுப்பு (Liability of the company to the creditors): பங்கு மூலதனக் குறைப்பை ஆட்சேபணை செய்வதற்கு உரிமையுள்ளவரும் நிறுவனத்திற்கு கடனீந்தோருமான நபர் ஒருவரின் பெயர், பங்கு மூலதனக் குறைப்பு நடவடிக்கைகள் அல்லது அவற்றின் தன்மை அல்லது அவரது கடன் அல்லது கோரிக்கையின் விளைவு ஆகியன குறித்து அவரது அறியாமை காரணமாக, கடனீந்தோரின் பட்டியலில் சேர்க்கப்படாதிருந்து, பங்கு மூலதனம் குறைக்கப்பட்ட பிறகு அவரது கடன் அல்லது கோரிக்கை அந்நிறுவனத்தால் செலுத் தப்பட இயலவில்லையானால்,–

(அ) பங்கு மூலதனக் குறைப்பு ஆணையை பதிவாளரிடம் பதிவு செய்யும்

தேதியில் உறுப்பினராக இருந்த ஒவ்வொருவரும், கடனீந்தோரின் கடன் அல்லது கோரிக்கையின் செலுத்துகைக்கு பங்களிக்க பொறுப்புடையவர்கள். அதாவது, அத் தேதிக்கு உடனடி முந்தைய தேதியில் நிறுவனக் கலைப்பு நடவடிக்கைகள் தொடங்கி இருப்பின் எவ்வாறு அவ்வுறுப்பினர் பங்களிக்கப் பொறுப்புடையவர் ஆவாரோ அவ்வா றான ஒரு தொகைக்கு மிகாததொரு தொகைக்கு அவர் பொறுப்புடையவர்; மற்றும்

(ஆ) நிறுவனம் கலைக்கப்பட்டால், அக்கடனீந்தோர் செய்யும் விண்ணப் பம் மற்றும் மேற்கண்ட அவரது அறியாமைக்கான நிரூபணத்தின் (proof) பேரில், அவரது கடன் அல்லது கோரிக்கைக்கு மேற்கண்டவாறு பங்களிக்கப் பொறுப்புடைய நபர்களின் பட்டியல் ஒன்றை தீர்ப்பாயம் தயாரித்து, அவர்களை நிறுவனக்கலைப்பின் போது சாதாரண பங்களிப்பவர்களாக பாவித்து, கடனீந்தோருக்கு தொகை செலுத் தக் கோரி அழைப்பு விடுத்து ஆணையை வலியுறுத்தலாம்.

இவ்வாறு **பிரிவு 66(8)** கூறுகிறது.

9. பங்களிப்பாளர்களின் உரிமைகளை பாதிக்காது (Nothing shall affect the rights of contributories): மேற்கண்ட பிரிவு 66(8)–இல் கூறப் பட்டுள்ள எதுவும் பங்காளிப்பாளர்கள் அவர்கள் தங்களுக்குள் கொண்டுள்ள உரிமை களை (rights of the contributories among themselves) பாதிக்காது என்று **பிரிவு 66(9)** கூறுகிறது.

10. நிறுவன அலுவலர்களின் மோசடி (Fraud by the officers of the company): நிறுவனமொன்றின் அலுவலர் எவரும் (அ) பங்கு மூலதனக் குறைப்பை ஆட்சேபணை செய்வதற்கு உரிமை பெற்ற கடனீந்தோர் எவரது பெயரையாவது தெரிந்தே மறைத்தால், (ஆ) கடனீந்தோரின் கடன் தன்மை அல்லது கோரிக்கைத் தொகையை தெரிந்தே திரித்துரைத்தால், (இ) மேற்கண்ட மறைத்தல் மற்றும் திரித்துக் காட்டுதல் எதற்கும் உடந்தையாக அல்லது தொடர்புடையவராக இருந்தால், அவர் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 447–இன் கீழ் மோசடிக் குற்றத் திற்கு பொறுப்பாவார் என்று **பிரிவு 66(10)** கூறுகிறது.

11. நிறுவனத்திற்கு அபராதம் (Fine): மேற்படி பிரிவு 66(4)–இல் கூறப் பட்டுள்ள வகைமுறைகளை (தீர்ப்பாயத்தின் ஆணையை அது ஏவுரைக்கும் வண்ணம் நிறுவனம் வெளியிடுதல்) பூர்த்தி செய்ய அந்நிறுவனம் தவறினால், அதற்கு அய்ந்து இலட்ச ரூபாய்க்கும் குறையாத ஆனால் இருபத்தைந்து இலட்ச ரூபாய் வரையில் நீட்டிக்கத்தக்க அபராதம் விதிக்கப்படும் என்று **பிரிவு 66(1)** கூறுகிறது.

அமைப்பு முறையேட்டின் மூலதனப் பகுதியை மாற்று வதற்கான வகைமுறைகள் (Provisions for Alteration of share capital Clause):

பங்கு மூலதனத்தைக் கொண்ட வரம்புடைய ஒரு நிறுவனம், தனது அமைப்பு முறையேட்டில் உள்ள மூலதனப் பகுதியை (Capital Clause) பின்வரும் காரணங்

களின் பொருட்டு மாற்றியமைத்துக் கொள்ளலாம் என்று **பிரிவு 61(1)** குறிப்பிடுகிறது. ஆனால் இவ்வாறு மாற்றிக் கொள்வதற்கு அதன் செயல்முறை விதிகள் (Articles of Association) அதற்கு அதிகாரமளித்திருக்க வேண்டும். அவை,–

1. புதிய பங்குகளை வெளியிடுவதன் மூலம் தனது அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை உயர்த்திக் கொள்வதற்காக;
2. பங்கு மூலதனம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை, பெரும் தொகைக்கான பங்குகளாக தொகுப்பதற்காக அல்லது பிரிப்பதற்காக;
3. முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையாவது பங்குத் தொகுப்பாக மாற்றுவதற்கும், அதுபோல் பங்குத் தொகுப்பை எந்த மதிப்பையும் கொண்ட முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மீண்டும் மாற்றுவதற்காக;
4. தனது பங்குகளை அமைப்பு முறையேட்டில் நிர்ணயம் செய்யப்பட்டதை யும் விட குறைவான தொகைக்கான பங்குகளாக உட்பிரிவு செய்வதற் காக;
5. ஏற்றுக் கொள்ளப்படாத பங்குகளை இரத்து செய்து, அதன் பேரில் மூலதனத்தைக் குறைத்துக் கொள்ள. (எனினும் இவ்வாறு பங்குகளை இரத்து செய்வது ஓர் பங்கு மூலதனக் குறைப்பாக கருதப்படல் ஆகாது **– பிரிவு 61(2)]**.

மேற்கண்ட செயல்களில் எதையாவது செய்ய, சம்பந்தப்பட்ட நிறுவனம் தனது பொதுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும்.

பங்கு மூலதனத்தை மாற்றியமைத்துக் கொண்டால் அது குறித்து பதிவாள ருக்கு அந்நிறுவனம் அறிவிப்பு அனுப்ப வேண்டும் (Notice to be given to Registrar for alteration of share capital) என்று **பிரிவு 64** கூறுகிறது. அதாவது, (அ) ஒரு நிறுவனம் தனது பங்கு மூலதனத்தை மேற்கண்ட வழிகளில் மாற்றிக் கொண்டால், (ஆ) மைய அரசு செய்யப்பட்ட ஆணை ஒன்று, நிறுவனமொன் றின் அனுமதிக்கப்பட்ட மூல தனத்தை உயர்த்தும் விளைவைக் கொண்டிருந்தால், (இ) மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் எதையம் ஒரு நிறுவனம் மீட்டால், அது நேர்விற் கேற்றவாறு அத்தகு மாற்றம், அல்லது உயர்வு அல்லது மீட்பிலிருந்து முப்பது நாட் களுக்குள் அறிவிப்பு ஒன்றை மாற்றியமைக்கப்பட்ட அமைப்பு முறையேட்டு ஒன்றுடன் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும் என்று **பிரிவு 64(1)** கூறுகிறது.

இதற்கு முரணாக நடக்கும் நிறுவனம் மற்றும் அலுவலருக்கு அபராதம் விதிக்கப்படும் என்று **பிரிவு 64(2)** கூறுகிறது.

பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான முறைகள், அதற்கான நடைமுறை மற்றும் மூலதனப் பகுதியை மாற்றுவதற்கான வகைமுறைகள் பற்றி முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் பல்வேறு பிரிவுகளின் கீழ் விவரித்தன. அவை தற்போது இந்த 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவுகள் 66, 61 மற்றும்

64–இன் வாயிலாக மிகவும் சுருங்கிவிட்டன என்றே கூற வேண்டும்.

65. "A company cannot purchase its own shares". - Discuss. ("ஒரு நிறுவனம் தனது சொந்தப் பங்குகளை தானே வாங்குதல் இயலாது".- விவாதிக்க.)

முன்னுரை:

பொதுவாக ஒரு நிறுவனம் தான் வெளியிட்ட தனது சொந்தப் பங்குகளை தானே வாங்கிக் கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இவ்வாறு வாங்கிக் கொள்வதால், நிரந்தர மூலதனக் குறைப்பு (permanent reduction of share capital) ஏற்படுகிறது. எனவே, தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் உறுதி செய்யாமல், இவ்வாறு வாங்கிக் கொண்டால், அது 'சட்ட முரணானதாகும்' (illegitimate). மேலும் நிறுவனச் சட்டத்தை மீறிய செயலாகவும் (violation of statute law) ஆகும். இவ்வாறு ஒரு நிறுவனம் தனது பங்குகளை தானே வாங்கும் செயலுக்கு, 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 67** சில தடைகளை விதித்துள்ளது. அவற்றைப் பின்வருமாறு காண்போமா?

ஒரு நிறுவனம், தனது பங்குகளை தானே வாங்குதல் - தடைகள் (Restrictions):

பங்குகளால் அல்லது பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட, பங்கு மூலதனத்தைக் கொண்ட எந்நிறுவனமும், தனது சொந்தப் பங்குகளைத் தானே வாங்கிக் கொள்ள அதிகாரமளிக்கப்படவில்லை. எனினும், அவ்வாறு வாங்குவதன் விளைவாக மூலதனக் குறைப்பு ஏற்பட்டு, அது நிறுவனச் சட்டத்தின் பிரிவு 66–இன் வாயிலாக அனுமதிக்கப்பட்டு, செயலுக்கு வந்தால், மேற்கண்ட நிறுவனங்கள் தனது சொந்தப் பங்குகளை தானே வாங்கிக் கொள்ளலாம், என்று **பிரிவு 67(1)** கூறுகிறது.

மேற்படி பிரிவின் நோக்கம் யாதெனில், ஒரு நபர் நிறுவனத்தின் சொத்துக்களிலிருந்தே அதன் பங்குகளுக்கு தொகை செலுத்தி, அந்நிறுவனத்தின் கட்டுப்பாடு முழுவதையும் அடைவதைத் தடுப்பதே ஆகும். வேறு விதத்தில் கூறுவதெனில், நிறுவனத்தின் கருவூலப் பெட்டியை ஒருவர் தனது சொந்த நலனுக்காக சுருட்டிக் கொள்வதைத் தடுப்பதே (to prevent a person from plundering the coffres of the company for his own benefit) ஆகும்.

மேற்கண்ட காரணத்திற்காகவே பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் (Subsidiary Company) ஒன்று, தன்னைப் பிடித்துக் கொண்டுள்ள பிடிப்பு நிறுவனத்தின் (Holding Company) பங்குகளை வாங்க அனுமதிக்கப்படுவதில்லை.

Trevor v. Whitworth[1] – எனும் வழக்கில், ஒரு நிறுவனத்தின் செயல் முறை விதிகளில், 'ஒரு நிறுவனத்தின் பங்குகளை விற்க விரும்பும் எவரிடமிருந்தும்,

1. (1887) 12 App Cas 408 : (1886-90) ALL ER Rep. 46

அந்நிறுவனத்தின் இயக்குனரவை நியாயமானது எனக் கருதும் அத்தகு விலைக்கு அவரது பங்குகளை அது வாங்கிக் கொள்ளலாம்' என்று வகை செய்யப்பட்டிருந்தது. இறந்துபோன பங்குதாரர் ஒருவரின் சட்டமுறைப் பிரதிநிதிகளிடமிருந்து 533 பங்குகளை, அந்நிறுவனத்தின் சார்பாக அதன் இயக்குனர் ஒருவர் வாங்கிக் கொண்டார். ஆனால் அப்பங்குகளுக்கான முழுத் தொகையையும் செலுத்துவதற்கு முன்னர், அந்நிறுவனம் கலைக்கப்பட்டது. எனவே மேற்படி சட்டமுறைப் பிரதிநிதிகள், தாங்கள் விற்ற பங்குகளுக்கான தொகையைக் கோரி வழக்கிட்டனர். அதில், மேற்கண்ட நடவடிக்கை முழுவதுமே, அந்நிறுவனத்தின் வரம்பை மீறியதாகும் என்றும், ஒரு நிறுவனத்தின் சொந்தப் பங்குகளை வாங்கும் நோக்கத்திற்காக அதன் நிதி பயன்படுத்தப்படுவது சட்ட முரணானதாகும் என்றும், ஏனெனில், அவ்வாறு பங்குகளை வாங்குதல் என்பது, நிறுவனத்தின் வியாபாரத்திற்கு அப்பாற்பட்டது என்றும், எனவே அது சட்டத்தை மீறியதாகும் என்றும் **நீதிப்பெருமகனார் வாட்சன் (Lord Watson)** கூறினார். மேலும், அவ்வாறு வாங்கியது செல்லாது என்று தீர்ப்புரைத்தார்.

மேற்படி வழக்கில் கூறப்பட்ட விதிக்கான காரணத்தை, பின்னிட்டு எழுந்த **Re Exchange Banking Corpn.**[1] – எனும் வழக்கில் **ஜெசல் எனும் நீதிபதி (Jessel M.R.)** விளக்கினார். அதன்படி, நிறுவனத்திற்கு கடன் கொடுப்பவர்கள், தாங்கள் கொடுக்கும் கடன் தொகை, அந்நிறுவனத்தின் வியாபாரத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படும் எனும் நம்பிக்கையில் அவ்வாறு கடன் கொடுக்கின்றனர். எனவே அந்நிறுவனம் தனது மூலதனத்தை அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதனை பங்குதாரர்களுக்கு திருப்பிக் கொடுத்தல் கூடாது என்றும் கூற உரிமை படைத்தவர்கள் என்று அவர் கூறினார். அதாவது நிறுவனம் வெளியிடும் பங்குகளை பொது மக்கள் வாங்கி அதன் பங்குதாரர்கள் ஆகின்றனர். பங்குகளை விற்றதனால் கிடைத்த தொகை, அந்நிறுவனத்தின் மூலதனம் ஆகிறது. இந்நிலையில் அப் பங்குகளை அந்நிறுவனமே திரும்ப வாங்கிக் கொள்வது என்பது, மீண்டும் மூலதனத் தொகையை அவர்களிடமே திருப்பிக் கொடுத்தலுக்கு ஒப்பாகும். மேலும் அந் நிறுவனத்திற்கு கடன் கொடுத்தவர்களின் கடன் தொகையை அந்நிறுவனத்தின் வியாபார முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தாமல், மேற்கண்டவாறு பங்குகளை திரும்ப வாங்குவதற்காகப் பயன்படுத்துதல் என்பது மிகவும் அபத்தமாகும். எனவே இது தவிர்க்கப்பட வேண்டும் என்பதே மேற்படி வழக்கில் கூறப்பட்ட கருத்தின் உட் கிடைப் பொருளாகும்.

தனது சொந்தப் பங்குகளை வாங்குவதன் மீது பிரிவு 67(1) விதித்துள்ள மேற்படி தடைக்கு மேலும் வலு சேர்க்கும் பொருட்டு, **பிரிவு 67(2)**–ஆனது பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, பொது நிறுவனம் எதுவும், அந்நிறுவனத்தின் அல்லது அதன் பிடிப்பு நிறுவனங்களின் பங்குகளை வாங்குவதற்கு ஏதுவாக எந்நபருக்கும் எவ் வகையிலும் பணம் வழங்குதல் கூடாது என்று மற்றொரு தடையையும் விதிக்கிறது.

இந்த வகையில் **Heald v. O'Connor**[2] – எனும் வழக்கில், ஒரு நிறுவனம்

1. (1882) 21 Ch. D 519 at pp 533-34
2. (1971) 2 All ER 1 105

தனது சொந்தப் பங்குகளை வாங்கிக் கொள்வதற்கு ஏதுவாக ஒரு நபருக்கு கடன் கொடுக்கும் பொருட்டு அந்நபருடன் செய்து கொண்ட உடன்படிக்கை இல்லாநிலை யது (void) என்றும், அவ்வுடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு அளிக்கப்பட்ட பொறுப்புறுதியும் இல்லாநிலையது என்றும் கூறப்பட்டது.

எனினும் மேற்கண்ட பிரிவு 67(2)–ஆனது பின்வரும் வகையிலான நடவடிக்கைகளைத் தடை செய்யவில்லை. அதாவது,

(a) ஒரு வங்கி நிறுவனம் தனது இயல்பான வணிக நடவடிக்கையின் பொழுது, பங்குகளை வாங்க ஒருவருக்கு பணம் கடன் கொடுத்தல்;

(b) நிறுவனப் பணியாளர்களுக்காக அல்லது அவர்களின் சார்பில், அவர்களது நலனுக்காக, ஒரு நிறுவனத்தின் முழுவதும் செலுத்தப் பட்ட பங்குகளை அவர்களது பொறுப்பாண்மையர்கள் (trustees) வாங்குவதற்காக பணம் அளித்தல்;

(c) ஒரு நிறுவனத்தின் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை (fully paid shares) அந்நிறுவனத்தின் பணியாளர்கள் வாங்குவதற்கும், அவற்றை அவர்கள் தங்கள் பயன்மிகு உடைமையுரிமையில் (beneficial ownership) வைத்திருக்கவும், அந்நிறுவனம் அவர்களுக்கு பணம் கடன் கொடுத்தல். இதில் வரும் 'பணியாளர்' (employee) எனும் பதம், அந்நிறுவனத்தின் இயக்குனர்கள் அல்லது மேலாளர்களை உள்ளடக்கியது அல்ல.

மேற்படி (c) எனும் கூறின் கீழ் அந்நிறுவனம் அளிக்கும் கடன் தொகையா னது, அப்பணியாளர்களின் ஆறு மாத ஊதியத் தொகைக்கும் அதிகமாக இருத்தல் கூடாது என்று **பிரிவு 67(3)** கூறுகிறது.

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் அல்லது அதற்கு முந்தைய சட்டத் தின் கீழ் ஒரு நிறுவனம் வெளியிட்ட முன்னுரிமை பங்குகள் எதையும் மீட்பதற்கு அந் நிறுவனத்திற்குள்ள உரிமையை இந்தப் பிரிவு 67–இல் கூறப்பட்டுள்ள எதுவும் பாதிக் காது என்று **பிரிவு 67(4)** கூறுகிறது.

தனது சொந்த பிணையங்களை (பங்குகள்) வாங்குவ தற்கு ஒரு நிறுவனத்திற்குள்ள அதிகாரம் (Power of company to purchase its own securities) :

ஒரு நிறுவனம் தனது சொந்தப் பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களை (அதாவது பிணையங்களை) வாங்குவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது என்று பிரிவு 68(1) கூறுகிறது. இதற்காக நிறுவனங்கள் சட்டத்தில் அடங்கியுள்ள எதிலும் யாது கூறப்பட்டிருப்பினும், அது இங்கு ஒரு பொருட்டல்ல. ஆனால் இவ்வாறு வாங்குவது பிரிவு 68(2)–இன் வகைமுறைகளுக்கு உட்பட்டதாகும். இதை **'buy-back'** என்று ஆங்கிலத்தில் நிறுவனச் சட்டம் குறிப்பிடுகிறது. சற்று விரிவாக வருமாறு:–

எதிலிருந்து திரும்ப வாங்கலாம் - பிரிவு 68(1):

இந்தச் சட்டத்தின் அடங்கியுள்ள எதிலும் யாது கூறப்பட்டிருப்பினும், ஆனால் பிரிவு 68(2)–இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு, ஒரு நிறுவனம்,

(அ) தனது தடையற்ற காப்பு நிதியிலிருந்து (out of its free reserves)

(ஆ) மிகை தொகை பிணையங்கள் கணக்கிலிருந்து, அல்லது (out of the securities premium account)

(இ) பங்குகள் அல்லது குறித்துரைக்கப்பட்ட வேறு பிணையங்கள் எதை யும் வெளியிடுவதால் கிடைக்கும் தொகையிலிருந்து (out of the proceeds of the issue of any shares or other specified securities)

தனது சொந்த பங்குகளை அல்லது குறித்துரைக்கப்பட்ட வேறு பிணையங்களை வாங் கலாம் என்றும், இவ்வாறு வாங்குதல் 'திரும்ப வாங்குதல்' (buy-back) எனப்படு கிறது என்றும் **பிரிவு 68(1)** கூறுகிறது.

எனினும், ஒத்த வகையான பங்குகள் அல்லது ஒத்த வகையான வேறு பிணையங்களின் முந்தைய வெளியீட்டினால் கிடைக்கப் பெற்ற தொகைகளிலிருந்து பங்குகள் அல்லது வேறு பிணையங்கள் எதையும் ஒரு நிறுவனம் திரும்ப வாங்குதல் ஆகாது என்று பிரிவு 68(1)–இன் கீழான வரம்புரை வாசகம் கூறுகிறது.

திரும்ப வாங்குதலுக்கான நிபந்தனைகள் - பிரிவு 68(2):

ஒரு நிறுவனம் தனது சொந்தப் பங்குகள் அல்லது வேறு பிணையங்களை வாங்க வேண்டும் என்றால் அதற்கு பின்வரும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று பிரிவு 68(2) கூறுகிறது. அவை,

(அ) நிறுவனத்தின் செயல்முறை விதிகள் மேற்கண்டவாறு திரும்ப வாங்குதலை அனுமதித்திருக்க வேண்டும்;

(ஆ) திரும்ப வாங்குதலுக்கு அதிகாரமளிக்கும் சிறப்புத் தீர்மானம் ஒன்று நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்;

எனினும் இவ்வாறு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றும் நடை முறை பின்வரும் நேர்வுகளுக்குப் பொருந்தாது.

(i) நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சாதாரண மூலதனம் மற்றும் தடையற்ற காப்பு நிதியின் மொத்தத்தில் பத்து விழுக்காடு அல்லது அதற்கும் குறைவாக திரும்ப வாங்குதல் இருப்பின்,

(ii) அத்தகு திரும்ப வாங்குதல் நிறுவனக் கூட்டத்தில் நிறைவேற் றப்படுகின்ற தீர்மானம் ஒன்றின் வாயிலாக இயக்குனரவை யால் அனுமதிக்கப்பட்டிருப்பின்

(இ) நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் தடையற்ற கூப்பு நிதியின் நிகர மொத்தத்தில் இருபத்தைந்து விழுக்காடு அல்லது அதற்கும் குறைவாக திரும்ப வாங்குதல் இருக்க வேண்டும்;

(ஈ) திரும்ப வாங்குதலுக்குரிய பங்குகள் மற்றும் வேறு பிணையங்கள் அனைத்தும் முழுவதும் செலுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்;

(உ) அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகம் எதிலும் பட்டியலிடப்பட்ட பங்குகள் மற்றும் வேறு பிணையங்களின் திரும்ப வாங்குதலானது பங்கு மாற்று வாரியத்தால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கியதாக இருக்க வேண்டும்; மற்றும்

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகம் எதிலும் பட்டியலிடப்படாத பங்குகள் மற்றும் வேறு பிணையங்களின் திரும்ப வாங்குதலானது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு விதிகளுக்கு இணங்கியதாக இருக்க வேண்டும்.

எனினும், திரும்ப வாங்குதலுக்காக செய்யப்பட்ட முந்தைய முனைவின் மூடுகைத் தேதியிலிருந்து (from the date of closure of the preceeding offer of buy-back) கணக்கிடப்படுகின்ற ஓராண்டிற்குள் திரும்ப வாங்குதலுக்கான முனைவு ஏதும் செய்யப்படுதல் ஆகாது.

திரும்ப வாங்குதலுக்கான அறிவிப்பு - பிரிவு 68(3):

பங்குகள் மற்றும் வேறு பிணையங்களை திரும்ப வாங்க நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாம் ஏற்கனவே கண்டோம். அக்கூட்டத்திற்கான அறிவிப்புடன், பின்வரும் விவரங்களைக் குறிப்பிடும் விளக்க உரை ஒன்றும் இணைக்கப்பட வேண்டும். அவ்விவரங்கள்,–

(அ) முக்கியச் சங்கதிகள் அனைத்தும் முழுதளவிலும் முழுமையாகவும் வெளிப்படுத்தப்பட வேண்டும்;

(ஆ) திரும்ப வாங்குதலுக்கான அவசியம்;

(இ) திரும்ப வாங்குதலின் கீழ் வாங்க கருதப்படுகின்ற பங்குகள் மற்றும் பிணையங்களின் வகை;

(ஈ) திரும்ப வாங்குதலுக்காக முதலீடு செய்யப்படவுள்ள தொகை; மற்றும்

(உ) திரும்ப வாங்குதலை முடிப்பதற்கான கால வரையறை.

திரும்ப வாங்குதலை முடிப்பதற்கான கால அளவு - பிரிவு 68(4):

பொதுக் கூட்ட சிறப்புத் தீர்மானம் அல்லது நேர்விற்கேற்றவாறு இயக் குனரவை கூட்டத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு கால அளவுக்குள் திரும்ப வாங்குதலை நிறுவனம் முடித்துவிட வேண்டும்.

யாரிடமிருந்து திரும்ப வாங்கலாம்? - பிரிவு 68(5):

ஒரு நிறுவனம்,

(அ) ஏற்கனவே இருக்கும் பங்குதாரர்கள் அல்லது பிணையம் வைத்திருப்போர்களிடமிருந்து விகிதாச்சார அடிப்படையில்

(ஆ) வெளிச் சந்தையிலிருந்து

(இ) பங்குத் தொகுப்பு விருப்பம் அல்லது நேர்மையான வியர்வைப் பங்குத் திட்டம் ஒன்றின்படி (under a scheme of stock option or sweat equity) நிறுவனத்தின் பணியாளர்களுக்கு வெளியிடப் பட்ட பிணையங்களை வாங்குவதன் மூலம்

பங்குகளை திரும்ப வாங்கலாம்.

செல்வநிலை விளம்புகை மற்றும் ஆணையுறுதியாணம் தாக்கல் - பிரிவு 68(6):

பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானம் அல்லது நேர்விற் கேற்றவாறு இயக்குனரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச் சியாக தனது சொந்தப் பங்குகளை அல்லது வேறு பிணையங்களை திரும்ப வாங்க உத்தேசிக்கின்ற நிறுவனமொன்று, அவ்வாறு திரும்ப வாங்குவதற்கு முன்பு, தனது செல்வநிலை விளம்புகை (declaration of solvency) ஒன்றை பதிவாளர் மற்றும் பங்கு பரிவர்த்தனை வாரியத்திடம் தாக்கல் செய்தல் வேண்டும். அதில் நிறுவனத்தின் இயக்குனர்களில் குறைந்தபட்சம் இருவர் கையொப்பமிட வேண்டும். அதில் ஒருவர் மேலாண்மை இயக்குனராக இருக்க வேண்டும். மேலும் அது குறித்து சரிபார்த்து ஆணையுதியாவணம் (verified by an affidavit) ஒன்றை நிறுவன இயக்குனரவை தாக்கல் செய்தல் வேண்டும். அதில் தாங்கள் தங்கள் நிறுவனத்தின் விவகாரங்களை முழுமையாக விசாரணை செய்ததாகவும், அதன் அடிப்படையில் தங்கள் நிறுவனம் பொறுப்புகளை எதிர் கொள்ளும் அளவிற்கு திறன் படைத்ததாகவும், தங்கள் இயக் குனரவையால் மேற்படி விளம்புகை ஏற்றுக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டிற் குள் அது நொடிப்புநிலை எய்த வாய்ப்பில்லை (will not be rendered insolvent) என்றும் தாங்கள் ஓர் அபிப்பிராயத்திற்கு வந்துள்ளதாகவும் குறிப்பிட வேண்டும்.

எனினும் நிறுவனமொன்றின் பங்குகள் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகம் எதிலும் பட்டியலிடப்படவில்லை எனில், செல்வநிலை விளம்புகையை அந்நிறுவனம் பங்குப் பரிவர்த்தனை வாரியத்திடம் தாக்கல் செய்ய வேண்டியதில்லை.

திரும்ப வாங்கிய சொந்தப் பங்குகளை அழித்தல் - பிரிவு 68(7):

தனது சொந்தப் பங்குகள் அல்லது வேறு பிணையங்களை திரும்ப வாங்கிய நிறுவனமொன்று, அவற்றை மேற்படி திரும்ப வாங்குதல் முடிவுற்ற இறுதித் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஒழித்துவிட வேண்டும் அல்லது இயல்நிலையில் அழித்துவிட வேண்டும்.

மேலுமொரு வெளியீட்டை செய்தலாகாது - பிரிவு 68(8):

பங்குகள் மற்றும் வேறு பிணையங்களை திரும்ப வாங்குதலை முடித்த நிறுவனமொன்று, அதே வகையான பங்குகள் அல்லது பிணையங்களின் மேலுமொரு வெளியீட்டை ஆறு மாதங்களுக்குள் செய்தல் ஆகாது. அதுபோல் புதிய பங்குகளை ஒதுக்கீடு செய்யவும் கூடாது. எனினும் மீதூதிய பங்கு உள்ளிட்ட வேறு வழிகள் மூலம் வெளியிடலாம்.

பதிவேட்டை பராமரித்தல் வேண்டும் - பிரிவு 68(9):

பங்குகள் மற்றும் வேறு பிணையங்களை திரும்ப வாங்கிய நிறுவனமொன்று, அவ்வாறு வாங்கிய பங்குகள் மற்றும் பிணையங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்றை பராமரித்து வர வேண்டும். அதில் திரும்ப வாங்கிய பங்குகள் மற்றும் பிணையங் களுக்கு செலுத்தப்பட்ட மறுபயன் (விலை), அவற்றை இரத்து செய்த தேதி, அவற்றை ஒழித்த அல்லது அழித்த தேதி, தேவைப்படும் வேறு விவரங்களை பதிய வேண்டும்.

விவர அறிக்கை தாக்கல் செய்தல் வேண்டும் - பிரிவு 68(10):

திரும்ப வாங்குதலை முடித்த நிறுவனமொன்று, அவ்வாறு திரும்ப வாங்கி யது குறித்த விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை (ரிடர்ன்) ஒன்றை, அத்திரும்ப வாங்குதல் முடிவுற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவாளர் மற்றும் பங்குப் பரிவர்த்தனை வாரியத்திடம் தாக்கல் செய்தல் வேண்டும். அதே நேரத்தில் நிறுவன மொன்றின் பங்குகள் அங்கீகரிக்கப்பட்ட பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட வில்லையெனில், அத்தகு அறிக்கை எதையும் அந்நிறுவனம் தாக்கல் செய்ய வேண்டி யதில்லை.

அபராதம் மற்றும் சிறைத்தண்டனை - பிரிவு 68(11):

மேற்கண்ட வகைமுறைகளை நிறைவேற்றுவதில் ஒரு நிறுவனம் தவறுகை புரிந்தால் அதற்கு அபராதம் விதிக்கப்படும். நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட அலுவ லருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

66. Company buy-back of its shares - Write short notes. (நிறுவனம் அதனுடைய பங்குகளை திரும்பவும் வாங்குதல் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Buy-back share - Write short notes. (பங்குகளை திரும்ப வாங்குதல் - குறுகிய விடை எழுதுக.)

[முந்தைய வினாவின் விடையில் "தனது சொந்த பிணையங்களை (பங்கு கள்) வாங்குவதற்கு ஒரு நிறுவனத்திற்குள்ள அதிகாரம் **(Power of company to purchase its own securities)**" என்ற தலைப்பின் கீழ் கூறப்பட்டுள்ளதை எழுதுக.]

-o0o-

கடன் பெறும் அதிகாரங்கள்
[Borrowing Powers]

67. Discuss the borrowing powers of a Company. Explain the various methods of borrowing powers also. (ஒரு நிறுவனத்தின் கடன் பெறுதலுக்கான அதி காரங்களை விவரி. கடன் பெறுதலுக்கான பல்வேறு முறை களையும் விவரி.)

(அல்லது)

5

Explain borrowing powers of a Company. (ஒரு நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரத்தினை விளக்குக.)

(அல்லது)

Borrowing Powers - Write short notes. (கடன் கொள்ளும் அதிகாரம் - குறுகிய விடை எழுதுக.)

கடன் பெறும் அதிகாரங்கள் - விளக்கம்:

ஒரு நிறுவனம் செயல்பட பணம் தேவை. இத்தேவையின் ஒரு பகுதியை பங்குகள் வெளியீட்டு மூலம் அந்நிறுவனம் பெற்றுக்

கொள்ளும்; மீதத்திற்கு நிறுவனம் பொது மக்களிடமிருந்து கடன் பெறும். தகுந்த பிணையங்களை அளிப்பதன் வாயிலாக, வர்த்தகம் புரியும் நிறுவனம் (trading company) ஒவ்வொன்றும் கடன் பெறலாம். இதற்கு அந்நிறுவனத்திற்கு உட்கிடையான அதிகாரம் உண்டு. ஆனால் கடன் பெறும் அளவானது, அந்நிறுவனத்தின் செயல் முறை விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். வர்த்தகம் புரியாத நிறுவனங்களுக்கு மேற்கண்டவாறு கடன் பெறும் உட்கிடையான அதிகாரம் கிடையாது. எனவே அந்நிறுவனங்களின் அமைப்பு முறையேட்டில் அத்தகு கடன் பெறும் அதிகாரம் வெளிப்படையாக வழங்கப்பட்டிருந்தாலொழிய, அவை கடன் பெற இயலாது.

கடன் பெறுவதற்கு தடைகள் (Restrictions on Borrowings):

நிறுவனத்தின் கடன் பெறும் அதிகாரத்தை, அதன் இயக்குனர்கள் செயற்படுத்துவர். இவர்களது அதிகாரம் கட்டுப்பாடுடையது. எடுத்துக்காட்டாக, நிறுவனச் சட்டத்தின் பிரிவு 180(1)(c)–இன்படி நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம், தடையற்ற காப்பு இருப்புகள் (free reserves) (எந்த குறிப்பிட்ட நோக்கிற்கும் ஒதுக்கி வைக்கப்படாதவை) ஆகியவற்றின் கூட்டுத் தொகைக்கு மிகாத தொகையை நிறுவனத்திற்காக இயக்குனர்கள் கடனாகப் பெறலாம். ஆனால், இத்தொகைக்கு மேல் கடன் பெற வேண்டுமெனில், நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களின் இசைவை, இயக்குனர்கள் பெற வேண்டும்.

இந்த வரம்பிற்கு அதிகமாக ஒரு நிறுவனம் கடன் பெற்றிருந்தால் அக்கடன் செல்லத்தக்கதல்ல என்றும், எனினும் கடன் வழங்கியவர் அவ்வரம்பை (கடன் உச்ச வரம்பு) அறியாமலும், நல்லெண்ணத்துடனும் கடன் கொடுத்திருந்தால், அது செல்லத் தக்கதாகிவிடும்.

அதிகாரவரம்பு மீறிய கடன் (Ultra vires loan) :

ஒரு நிறுவனம் வாங்கும் கடனை, அந்நிறுவனத்தின் அதிகாரவரம்பு மீறிய கடன் (ultra vires loan), அதிகாரவரம்பு மீறாக் கடன் (intra vires loan) என இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

'அதிகாரவரம்பு மீறிய கடன்' என்பது, ஒரு நிறுவனம் உட்கிடையான அல்லது வெளிப்படையான அதிகாரம் ஏதுமின்றி பெறும் கடனாகும். இது '**நிறுவனத்தின் அதிகாரவரம்பு மீறிய கடன்**' என்றும் அழைக்கப்படுகிறது. அதிகார வரம்பு மீறாக் கடன் என்பது, நிறுவனத்தின் அதிகாரத்திற்குட்பட்டு பெறப்படும் கடன் ஆகும். ஆனால் இக்கடன் சில சமயங்களில் இயக்குனர்களின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கலாம். அப்பொழுது இக்கடன், '**இயக்குனர்களின் அதிகாரத்தை மீறிய கடன்**' என்று அழைக்கப்படுகிறது.

ஒரு நிறுவனம், தனது அதிகாரவரம்பை மீறி வாங்கும் கடன் இல்லா நிலையதாகும் (void). இச்செயலினால் கடன் எதுவும் ஏற்படாது. இக்கடனுக்காக கொடுக்கப்பட்ட பிணையமும் (Security) செல்லாததாகும். நிறுவன உறுப்பினர்கள் அனை

வரும் சேர்ந்து, இக்கடனை ஏற்று பொதுக் கூட்டத்தில் உறுதிப்படுத்தினாலும், இதனை செல்லத்தக்கதாக மாற்ற முடியாது. கடன் அளித்தவர் இக்கடனை, நிறுவனத் திடமிருந்து திரும்பப் பெற எவ்வித உரிமையையும் கோர முடியாது. ஏனெனில், பொதுக் கொள்கையின் (public policy) அடிப்படையில், அதிகாரவரம்பு மீறிய கடன், மேற் கண்டவாறு இல்லாநிலை அடைகிறது.

எனினும், கடன் அளித்தவருக்கு நியாயப்படி பின்வரும் உரிமைகள் உண்டு.

வரம்பு மீறிய கடனாக இருக்கும் போது கடன் அளித் தவருக்கு கிடைக்கும் உரிமைகள் (Lender's right when borrowing is ultra vires) :

ஒரு நிறுவனம் தனது அதிகார வரம்பை மீறிக் கடன் பெற்றால், பணம் கடன் அளித்தவருக்கு நிறுவனத்திற்கெதிராக எவ்வித சட்டபூர்வமான கடனும் இல்லை. எனவே இக்கடனைத் திரும்பப் பெற நிறுவனத்திற்கெதிராக எவ்வித உரிமையும் கடன் அளித்தவருக்கு இல்லை. எனினும் இக்கடன் தொடர்பாக அவருக்கு பின்வரும் சில உரிமைகள் இருக்கவே செய்கின்றன. அவை,–

1. உறுத்துக்கட்டளை அல்லது தடையாணை (Injunction) :

கடன் கொடுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்படாமல் இருந்தால், கடன் அளித்தவர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து, உறுத்துக்கட்டளைக்கான உத்தரவு ஒன்றைப் பெற உரிமை படைத்தவர். இதனால், நிறுவனம் அப்பணத்தை செலவிடா வண்ணம் தடை செய்யலாம்.

2. மாற்றீட்டு உரிமை (Subrogation) :

கடன் பெற்ற பணத்தை நிறுவனம், தனது சட்டமுறையான கடன்களைத் தீர்க்கப் பயன்படுத்தியிருந்தால், பயன்படுத்தப்பட்ட தொகையளவுக்கு கடனளித்தவர் கடனீந்தோர் பட்டியலில் இடம் பெற்று, நிறுவனத்திடமிருந்து பணத்தைத் திரும்பப் பெறலாம். அதாவது, மாற்றீட்டு உரிமையின் அடிப்படையில் நிறுவனத்தின் மீது அவர் வழக்குத் தொடரலாம்.

3. அடையாளம் காட்டுதலும் தேடிக் கண்டுபிடித்தலும் (Identification and Tracing) :

கடனளித்தவர் தனது கடன் பணத்தையோ அல்லது அதனைப் பயன்படுத்தி வாங்கப்பட்ட சொத்தையோ அடையாளம் காட்ட முடிந்தால், அவர் தனது பணத் தையோ அல்லது கடன் தொகைக்கு வாங்கப்பட்ட சொத்தையோ பெற உரிமை கோர லாம். அச்சூழலில் நிறுவனம் வாங்கியுள்ள கடன் தொகைக்கு, கடனீந்தவரின் பொறுப் பாண்மையராக அந்நிறுவனம் கருதப்படும்.

4. இழப்பீடு பெறுதல் (Recovery of Damages) :

இயக்குனர்கள், தங்களது அதிகாரங்களை மீறி கடன் வாங்கும் பொழுது, அக்கடன் இயக்குனர்களின் அதிகாரவரம்பை மீறிய கடன் ஆகிறது. எனவே,

அவர்களிடமிருந்து உரிய இழப்பீடு பெற கடன் அளித்தவருக்கு உரிமை உண்டு.

5. நிறுவனத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட ஆனால், இயக்குனர்களின் அதிகார வரம்பை மீறிய கடன் அல்லது வரம்பு மீறாக் கடன் [Borrowing which is intra vires the company and ultra vires the Directors (or) Intra vires loan]:

நிறுவனத்தால் வாங்கப்பட்ட கடன், இயக்குனர்களின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டு, ஆனால் நிறுவனத்தின் அதிகாரங்களுக்கு உட்பட்டிருந்தால், அது வரம்பு மீறாக் கடன் (Intra vires loan) எனப்படும். இயக்குனர்கள் என்போர், நிறுவனத்தின் முகவர்கள். எனவே, இத்தகு கடனை நிறுவனம் தனது பொதுக் கூட்டத்தில், உறுப்பினர்களின் இசைவுடன் ஏற்று உறுதிப்படுத்துவதன் மூலம் செல்லத்தக்க கடனாக மாற்ற முடியும்.

நிறுவனம் இக்கடனை ஏற்றுக் கொள்ளாடில், கடன் அளித்தவருக்கு நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க உரிமை இல்லை. இயக்குனர்களின் அதிகாரங்கள் இரகசியமாக கட்டுப்படுத்தப்பட்டிருந்து, அதை கடனளித்தவர்கள் அறியாமலிருந்தால், கடனளித்தவர்களுக்கு நிறுவனமே பொறுப்பாகும்.

கடன் பெறுதலுக்கான பல்வேறு முறைகள் :

ஒரு நிறுவனம், கடனீட்டுப் பத்திரங்களை (Debentures) வெளியிட்டோ, அல்லது தனது சொத்துக்களின் மீது பொறுப்பு (charge) ஏற்படுத்தியோ கடன் பெறலாம். விரிவாக அடுத்து வரும் அத்தியாயங்களில் காண்க.

-o0o-

கடனீட்டுப் பத்திரங்கள்
[Debentures]

68. What is meant by a Debenture? State the rights and remedies available to a debenture-holder. (கடனீட்டுப் பத்திரம் என்பதன் பொருள் யாது ? கடன் பத்திரம் வைத்திருப்பவரின் உரிமைகளையும் தீர்வழிகளையும் குறிப் பிடுக.)

(அல்லது)

6 **Explain the term debenture and state the rights and remedies available to a debenture holder.** ("கடனீட்டுப் பத்திரம்" என்னும் சொற்றொடருக்கு விளக்க மளித்து மற்றும் கடனீட்டுப் பத்திரதாரரின் உரிமைகள் மற்றும் தீர்வழிகளையும் குறிப்பிடுக.)

(அல்லது)

Explain what is meant by 'Debenture' and examine the powers of a debenture holder to realise his amount. (கடனீட்டுப் பத்திரம் என்றால் என்ன என்பதை

விளக்கி, கடனீட்டுப் பத்திரதாரர் ஒருவர் தனது தொகையை திரும்பப் பெற அவருக்குள்ள அதிகாரங்களை ஆராய்க.)

(அல்லது)

What do you mean 'debenture'? Examine the charateristic features of a debenture. What are the remedies available to the debenture holder? (கடனீட்டுப் பத்திரம் என்றால் என்ன? இதன் சிறப்பான பண்புகளை விவரிக்க. கடனீட்டுப் பத்திரதாரருக்கான தீர்வழிகள் யாவை?)

(அல்லது)

Define a debenture. What are the advantages of a floating charge created in the properties of the company in favour of the debenture holder. (கடனீட்டுப் பத்திரம் என்பதை வரையறு. கடனீட்டுப் பத்திர தாரருக்கு ஆதரவாக நிறுவனச் சொத்துக்களின் மீது படரும் பொருட்பிணைப் பொறுப்பு ஏற்படுத்தப்படுவதன் நன்மைகள் யாவை?)

(அல்லது)

Debentures - Write short notes. (கடனீட்டுப் பத்திரங்கள் - குறுகிய விடை எழுதுக.)

கடனீட்டுப் பத்திரம் - பொருள் :

ஒரு நிறுவனம் தனக்குத் தேவையான மூலதனத்தைப் பெரும்பாலும் பொது மக்களுக்கு பங்குகள் வழங்கியே பெறுகிறது. சில சமயங்களில் பங்குகள் மூலம் வசூலிக்கப்பட்ட பணம் நிறுவனத்திற்கு போதாதாக இருக்கலாம். மேலும் பணம் தற் காலிகமாக தேவைப்படலாம். இம்மாதிரியான சூழலில் தேவைப்படும் பணத்தை, நிறு வனம் பொது மக்களிடமிருந்து கடன் வாங்குகிறது. இதன் பொருட்டு, நிறுவனம் வெளியிடும் பத்திரங்களே, **'கடனீட்டுப் பத்திரங்கள்' (Debentures)** எனப்படும். கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் பொது மக்களிடமிருந்து நிறுவனம் பணத்தைக் கடனாகப் பெறுகிறது. பணத் தேவையில்லாத பொழுது உடனே அப்பணத் தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறது. கடனீட்டுப் பத்திர தொகைக்கு, நிறுவனச் சொத்துக்களின் மீது படரும் பொருட்பிணைப் பொறுப்பு (floting charge) உள்ளது. எனவே நிறுவனம் கடன் தொகையைத் திருப்பித் தரவில்லையானால், அச்சொத்துக் களை கையகப்படுத்துவதன் மூலம் கடனீட்டுப் பத்திரதாரர்கள், தாங்கள் அளித்த கடன் தொகையை வசூலித்துக் கொள்ளலாம்.

கடனீட்டுப் பத்திரம் (Debenture) - வரையறை:

2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 2(30)-இன்படி, **'கடனீட்டுப் பத்திரம்'** என்பது, நிறுவனத்தின் சொத்துக்களின் மீது பொருட்பிணைப் பொறுப்பு (charge) ஏற்படுத்தியிருந்தாலும், இல்லாவிடினும், கடன் ஒன்றுக்கு சான்று

கூறும் அந்நிறுவனத்தின் கடனீட்டுப் பத்திரத் தொகுதி (debenture stock), பிணைப்பத்திரங்கள் (bonds) அல்லது வேறு ஆவணம் எதையும் உள்ளடக்கியதாகும்[1].

மேற்கண்ட வரையறையின் சாரத்தைக் கவனித்தால் 'கடனீட்டுப் பத்திர மென்பது கடனுக்குரிய சான்றாகும்' என்பது தெளிவாகும். அதாவது நிறுவனம் திரும்பச் செலுத்த வேண்டிய கடனுக்கு, அது அளிக்கும் ஒப்புதலாகும்.

ஒரு நிறுவனம் பங்குகளின் வாயிலாகப் பெரும் மூலதனத்தைப் பெற்றிருப் பதால், அதன் பேரில் தனது தற்காலிகத் தேவைக்கான பணத்தைப் பொது மக்களிட மிருந்து மிகவும் எளிதில், குறைந்த வட்டிக்குப் பெற முடிகிறது. இவ்வாறு எளிதில் கடன் பெறும் வாய்ப்பை பெற்றிருப்பது நிறுவனத்தின் முக்கிய நன்மைகளில் ஒன்று என்று கூறினால் அது மிகையாகாது.

கடனீட்டுப் பத்திரத்தின் சிறப்பான பண்புகள் (Characteristic Features of a Debenture):

1. கடனீட்டுப் பத்திரம் ஒரு நிறுவனத்தால் பொது மக்களுக்கு வெளியிடப் படுவதாகும். அதன் மூலம் தனக்குத் தேவையான கடன் தொகையை திரட்டிக் கொள் கிறது.

2. இது பொதுவாக, கடன்பட்டிருப்பதை ஒப்புக் கொள்ளும் ஒரு சான்றித ழின் வடிவில் அமைந்திருக்கும்.

3. இது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பொது முத்திரையின் (Common Seal) கீழ் வெளியிடப்படுகிறது. எனினும் இப்பொது முத்திரை **2015-ஆம் ஆண்டு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தின்படி** கட்டாயமான ஒன்றல்ல.

4. இது ஒரு தொகுதியில் ஒன்றாக அமைந்திருக்கக் கூடியதாகும். எனினும் ஒரே ஒரு கடனீட்டுப் பத்திரம் கூட வெளியிடப்படலாம். எனவே ஒரு தனி நபருக்கு, நிறுவனத்தின் சொத்துக்களை அடைமானம் அல்லது பொருட்பிணைப் பொறுப்பின் அடிப்படையில் பிணையமாகக் காண்பித்து பெறப்படும் கடனும், கடனீட்டுப் பத்திரம் எனும் வரையறைக்குள் வரக்கூடியதே. ஆனால் நடைமுறையில், கடனீட்டுப் பத்திரங்கள் பலருக்கும் பொதுவாக வெளியிடப்படுகின்றன.

5. வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதற்கான காலம் அல்லது திருப் பிச் செலுத்தக் கூடிய தேதி, கடனீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். மேலும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய அசல் தொகையும், அதற்கான வட்டியும் அதில் குறிப் பிடப்பட்டிருக்கும். எனினும் நிலையான அல்லது மீட்கத்தகாத கடனீட்டுப் பத்திரங் களை வெளியிட நிறுவனத்திற்கு தடையேதுமில்லை. இந்த வகையில், கடனீட்டுப் பத்திரங்கள் மீட்கத்தகாதனவாகவோ அல்லது ஏதாவதொரு நிகழ்வின் பொழுது

1. **"Debenture"** includes debenture stock, bonds or any other instrument of a company evidencing a debt, whether constituting a charge on the assets of the company or not. **- Section 2(30) of the Companies Act, 2013.**

மீட்கத்தக்கனவாகவோ (அது எவ்வளவு காலம் தள்ளி வரக்கூடியதாக இருப்பினும்), அல்லது ஒரு குறிப்பிட்ட காலம் முடிந்த பின்னரே செலுத்தப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக, அவை செல்லத்தகாதனவாகிவிடாது.

6. பொதுவாக, கடனீட்டுப் பத்திரங்கள் நிறுவனத்தின் சொத்துக்கள் முழுவதின் மீதோ அல்லது சொத்துக்களின் ஒரு பகுதி மீதோ பொருட்பிணைப் பொறுப்பை (Charge) ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். எனினும் இவ்வித பொறுப்பு ஏதுமின்றியும் நிறுவனம் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடலாம் என்று நாம் முன்னதாகக் கண்ட பிரிவு 2(30) கூறுகிறது.

7. கடனீட்டுப் பத்திரங்களை மீட்கும் போது அவற்றை முழுவதுமாகவோ, பகுதியாகவோ பங்குகளாக மாற்றிக் கொள்ளும் விருப்பத்தைத்தேர்வை அளித்து ஒரு நிறுவனம் வெளியிடலாம் என்று **பிரிவு 71 (1)** கூறுகிறது.

8. நிறுவனத்தின் கூட்டங்களில் கலந்து கொண்டு வாக்களிக்கும் உரிமை, கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு இல்லை என்று **பிரிவு 71(2)** கூறுகிறது.

9. கடனீட்டுப் பத்திரம் வாயிலாக பெற்ற கடனுக்கு பிணையமளித்தும் கடனீட்டுப் பத்திரங்களை (secured debentures) ஒரு நிறுவனம் வெளியிடலாம் என்று **பிரிவு 71(3)** கூறுகிறது.

10. கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட, ஒரு நிறுவனம் முதலில் பொறுப்பாண்மை (Trust) ஒன்றை நிறுவ வேண்டும். அதற்கு பொறுப்பாண்மைப் பத்திரம் (Trust Deed) ஒன்றை எழுதி நிறைவேற்ற வேண்டும். இது கடனீட்டுப் பொறுப்பாண்மைப் பத்திரம் (Debenture Trust Deed) எனப்படுகிறது. கடனீட்டுப் பத்திர பொறுப்பாண்மையர், கடனீட்டுப்பத்திரம் வைத்திருப்பவர்களின் நலன்களை பாதுகாத்து, அவர்களின் குறைகளை சட்டப்படி தீர்க்க வேண்டும் என்று **பிரிவு 71(6)** கூறுகிறது.

கடனீட்டுப் பொறுப்பாண்மைப் பத்திரம் (Debenture Trust Deed):

ஒரு நிறுவனம் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட, அது முதலில் பொறுப்பாண்மை ஒன்றை நிறுவ வேண்டும் என்று மேலே கண்டோம். ஏன் இவ்வாறு நிறுவ வேண்டும் எனும் வினா எழுந்தால், அதில் வியப்பொன்றுமில்லை. நிறுவனம் தனது சொத்துக்களை அடைமானம் அல்லது பொருட்பிணைப் பொறுப்பின் அடிப்படையில் பிணையமாகக் காண்பித்து, அதன் பேரில் கடன் வழங்கும்படிக் கோரி கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுகிறது. ஆனால் கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு, அச்சொத்துக்களின் மீது நிறுவனத்திற்கு எத்தகு உரிமை உள்ளது, அது செல்லத்தக்கதா அல்லது அந்நிறுவனம் பின்னிட்டு கடன் தொகையைச் செலுத்தத் தவறினால் அப் பிணையங்களை வலியுறுத்திச் செயற்படுத்த முடியுமா என்பதையெல்லாம் கவனிப்பதற்கு நேரம் இருப்பதில்லை. எனவே அவர்கள் தங்களில் சிலரை, அவற்றையெல்லாம் மேற்பார்வையிட்டு, தங்கள் பொதுவான நலனைக் காத்துக் கொள்ளும் பொருட்டு,

அக்கடனீட்டுப் பத்திர வெளியீட்டிற்கு பொறுப்பாண்மையர்களாக (Trustees) நிய மிக்கலாம். இதன் அடிப்படையில் கடனீட்டுப் பொறுப்பாண்மைப் பத்திரம் (Debenture Trust Deed) ஒன்று வரையப்படுகிறது. இதில் அப்பொறுப்பாண்மையர்களின் பெயர் குறிக்கப்படுகின்றன.

மேலும் கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு ஆதரவாக நிறுவனத்தின் சொத்துக்கள் அப்பொறுப்பாண்மையர்களிடம் அடைமானம் வைக்கப்படுகிறது அல்லது அவற்றின் மீது பொருட்பிணைப் பொறுப்பை உருவாக்கித் தருகிறது. இப்பத்திரத்தில் கடனீட்டுப் பத்திரதாரர்களின் உரிமைகளும் வரையறுக்கப்பட்டிருக்கும். இத்தகு ஏற்பாட்டின் மூலம் எழும் அனுகூலம் யாதெனில், கடனீட்டுப் பத்திரதாரர்களின் நலனை கவனித்துக் கொள்ள வேண்டியது, பொறுப்பாண்மையர்களின் பணியாகிறது. அவர்கள் நேர்மையுடனும், உரிய கவனத்துடனும் செயல்பட்டு, கடனீட்டுப் பத்திர தாரர்களின் நலன்களை பாதுகாத்து வர வேண்டும். மேலும் இதனால் விளையும் மற்றொரு அனுகூலம் யாதெனில், சம்பந்தப்பட்ட நிறுவனம், கடனீட்டுப் பத்திரங்களின் வாயிலாகப் பெற்ற கடன் தொகையைச் செலுத்தத் தவறினால், அந்நிறுவனம் அளித்துள்ள பிணையங்களை வலியுறுத்திச் செயற்படுத்தி, அதன் மூலம் கடனீட்டுப் பத்திர தாரர்கள் அளித்துள்ள கடன் தொகையை வட்டியுடன் பெற்றுத் தர உரிய நடவடிக்கைகளை, அக்கடனீட்டுப் பத்திரதாரர்களின் சார்பாக பொறுப்பாண்மையர்கள் மேற் கொள்ள வேண்டும்.

கடனீட்டுப் பத்திரதாரருக்குள்ள உரிமைகள் (Rights of Debenture- holders):

கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு, நிறுவனச் சட்டம் சில உரிமைகளை அளித்துள்ளது. அவற்றைப் பின்வருமாறு காண்போமா?

1. முதற்கண், கடனீட்டுப் பத்திரம் உடைய எவரும் தமக்குச் சேர வேண்டிய அசலையும் வட்டியையும் பெற உரிமையுடையவர்கள்.

2. கடனீட்டுப் பத்திர வெளியிட்டிற்கு, தங்களின் சார்பாக, தங்களில் சிலரை தங்கள் நலன்களை காக்கும் பொருட்டு, பொறுப்பாண்மையர்களாக நியமிக்கக் கோர கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு உரிமையுண்டு.

3. கடனீட்டுப் பொறுப்பாண்மைப் பத்திரத்தை பார்வையிடவும், அதன் நகலொன்றைப் பெற்றுக் கொள்ளவும் கடனீட்டுப் பத்திரதாரருக்கு உரிமையுண்டு.

4. நிறுவன உறுப்பினர்கள் மற்றும் கடனீட்டுப் பத்திரதாரர்களின் பதிவேடு, ஆண்டறிக்கைகள், அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள், ஆவணங்கள் ஆகியவற்றைப் பார்வையிடவும், அதிலிருந்து நகலெடுத்துக் கொள்ளவும் கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு உரிமையுண்டு என்று பிரிவு 94(2) மற்றும் 94(3) கூறுகிறது.

5. அதுபோல் ஆண்டு வரவு–செலவுக் கணக்குகளைப் பார்வையிடவும், அவற்றிலிருந்து நகலெடுத்துக் கொள்ளவும் உரிமையுண்டு.

கடனீட்டுப் பத்திரதாரருக்குள்ள தீர்வழிகள் (Remedies of Debenture- holders):

கடனீட்டுப் பத்திரங்களின் மூலம் பெற்ற கடன் தொகைகளை, சம்பந்தப் பட்ட நிறுவனம் திருப்பித் தரவில்லையானால், அங்கு கடனீட்டுப் பத்திரதாரர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே அவர்கள் தங்கள் கடன் தொகைகளைத் திரும்பப் பெறுவதற்கு தீர்வழிகள் வகை செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்தீர்வழிகள், கடனீட் டுப் பத்திரத்தில் கண்டுள்ள வரைமுறைகளின்படி (terms) அமைகின்றன. அவை வருமாறு.

1. கடன் தொகையை செலுத்த நிறுவனம் தவறினால், தனக்காகவும் இதர கடனீட்டுப் பத்திரதாரர்களின் சார்பாகவும், அக்கடனுக்காக அடைமானம் அல்லது பொருட்பிணைப் பொறுப்பின் அடிப்படையில் பிணையமாக வைக்கப்பட்ட சொத் துக்களை, சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் கீழ் அடைமானம் பெற்றவர் ஒருவர் செய்வதைப் போன்று (as mortgagee under the Transfer of Property Act), விற்று அக்கடன் தொகையை வசூலித்துக் கொள்ளலாம்.

2. கடனீட்டுப் பத்திரத்தில் கண்டுள்ள வரைமுறைகள் அனுமதித்தால், கடனீட்டுப் பத்திரதாரர்கள் தங்கள் கடனுக்கு பிணையமாகக் காண்பிக்கப்பட்ட நிறுவனச் சொத்துக்களின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள, சொத்துப் பேணுநர் (Receiver) ஒருவரை நியமிக்கலாம். அவ்வாறு அனுமதிக்கவில்லையானால், சொத்துப் பேணுநரை நியமிக்கக் கோரி தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு சொத்துப் பேணுநர் நியமிக்கப்படும் மேற்கண்ட இரண்டு நேர்வுகளிலும், அவர் நியமிக் கப்பட்ட விபரத்தை அதிலிருந்து 30 தினங்களுக்குள் நிறுவனங்களின் பதிவாளருக்கு அவர்கள் அறிவிக்க வேண்டும். அவர் அவ்விபரத்தை தனது பதிவேட்டில் குறித்துக் கொள்வார் [பிரிவு 84(1)]. அச்சொத்துப் பேணுநர், நிறுவனத்தின் சொத்துக்களை தம் பொறுப்பில் எடுத்துக் கொண்ட பிறகு, அவை குறித்த வரவு செலவுக் கணக்குகளை பராமரித்து வந்து, அவற்றை ஆறு மாதங்களுக்கொரு முறை, நிறுவனங்களின் பதிவாளரிடம் சமர்பிக்க வேண்டும். மேலும் சொத்துப் பேணுநர் நியமிக்கப்பட்ட விபரத்தை அந்நிறுவனத்தின் அனைத்து விலைப்பட்டியலிலும் (invoice), சரக்கு களுக்கான கேட்பாணையிலும் (order for goods), வியாபாரக் கடிதத்திலும் குறிப் பிடப்பட வேண்டும்.

3. நிறுவனத்தின் சொத்துக்களை, சொத்துப் பேணுநர் தம் பொறுப்பில் எடுத்துக் கொண்ட பிறகு, அந்நிறுவனம் அச்சொத்துக்களை தனது வியாபாரத்திற் காகப் பயன்படுத்த முடியாது. எனினும் அந்நிறுவனம் பயன்மிகு முறையில் கலைக்கப் படுவதற்கு, அது வியாபாரம் செய்ய வேண்டியதும், அதற்கு அச்சொத்துக்களைப் பயன்படுத்த வேண்டியதும் அவசியமாக இருக்கலாம். அச்சமயத்தில், கடனீட்டுப் பத்திரதாரர்கள் அச்சொத்துக்களை நிருவகிக்க மேலாளர் (Manager) ஒருவரையும் நியமிக்கலாம் அல்லது அவ்வாறு நியமிக்கும்படி தீர்ப்பாயத்திடம் விண்ணப்பித்து, அது பிறப்பிக்கும் ஆணையின் வாயிலாகவும் அவரது நியமனத்தைப் பெறலாம். இவ்வாறு

நியமிக்கப்படும் மேலாளர் ஒருவர், ஒரு சொத்துப் பேணுநருக்குள்ள மேற்கண்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகளுக்கு உரியவராவார்.

4. கடன் தொகையை திருப்பித் தராத நிறுவனத்தைக் கலைக்கக் கோரி, கடனீட்டுப் பத்திரதாரர்கள் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கலாம்.

5. கடனுக்கு ஈடாக நிறுவனம் அளித்த சொத்துப் பிணையங்களை, அது மீட்பதிலிருந்து தடுக்கக் கோரி (Fore-closure) கடனீட்டுப் பத்திரதாரர்கள் வழக் கிடலாம்.

6. நிறுவனம் நொடிப்பு நிலை எய்தினால், அதன் பிணையங்களை விற்று மீதமுள்ள கடன் தொகையை சொத்தாட்சி அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ள லாம்.

7. கடனீட்டுப் பொறுப்பாண்மை பத்திரத்தில் (Debenture Trust Deed) கண்டுள்ள வரைமுறைகள் அனுமதித்தால், பொறுப்பாண்மையர்களின் வாயிலாக நிறுவனத்தின் சொத்துக்களை விற்று, தங்களுக்குரிய கடன் தொகையைப் கடனீட்டுப் பத்திரதாரர்கள் பெறலாம்.

8. நிறுவனக் கலைப்பு ஏற்படும்போது கடனீட்டுப் பத்திரதாரர் கொடுத்த கடனுக்கு நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொண்ட பிணையம் போதவில்லை எனில், மீதித் தொகையை நிறுவனத்திடமிருந்து கோரலாம்.

69. What are the different kinds of debentures? What are the remedies provided for a debenture - holder under the company law ? (வெவ்வேறு கடனீட்டுப் பத்திரங்கள் யாவை ? நிறுவனச் சட்டத்தில் ஒரு கடனீட்டுப் பத்திரதாரருக்கு வகை செய்யப்பட்டுள்ள தீர்வழிகள் யாவை ?)

(அல்லது)

Describe the different kinds of debentures and point out the rights of a debenture holder. (பலவகைப்பட்ட கடனீட்டுப் பத்திரங்களை விளக்கி கடனீட்டுப் பத்திரதாரரின் உரிமைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

What do you mean by debentures? Explain the various kinds of debentures and the law relating to debenture. (கடனீட்டுப் பத்திரம் என்றால் என்ன? இதன் வகைகள் மற்றும் இது குறித்தான விதிகளை விளக்குக.)

கடனீட்டுப் பத்திரங்களின் பல்வேறு வகைகள் (Various Kinds of Debentures):

I. மாற்றியல்பு கடனீட்டுப் பத்திரங்கள் (Convertible Debentures):

மாற்றியல்பு தன்மையின் அடிப்படையில் கடனீட்டுப் பத்திரங்கள் பின்

வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

(அ) பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரம் (Registered Debenture): நிறுவனம் கடனீட்டுப் பத்திரதாரர் பதிவேடு ஒன்றை வைத்திருக்கும் [பிரிவு 88(1)(b)]. அதில் கடனீட்டு பத்திரதாரர் பற்றிய விவரங்கள் பதிந்து கொள்ளப்படும். இத்தகைய கடனீட்டுப் பத்திரதாரர், **'பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரதாரர்'** (Registered Debenture-holder) ஆவார். அவருக்கு வழங்கப்படும் கடனீட்டுப் பத்திரங்கள், 'பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரங்கள்' (Registered Debenture) என்று அழைக்கப்படுகின்றன. இத்தகு பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரதாரர்களிடம் அவர்களது கடனுக்கான வட்டியும், கோரினால் அசல் தொகையும் அளிக்கப்படும். இக்கடனீட்டுப் பத்திரதாரர், தக்க மாற்றுகை முறையாவணம் (Instrument of Transfer) ஒன்றில் கையொப்பமிட்டு இக்கடனீட்டுப் பத்திரங்களை வேறு ஒருவருக்கு மாற்ற முடியும்.

(ஆ) கொணர்பவர் கடனீட்டுப் பத்திரம் (Bearer Debenture): இவ் வகையின்படி கடனீட்டுப் பத்திரம் ஒன்றைக் கொணர்பவர், அதன் உரிமையாளராகக் கருதப்படுகிறார். வட்டி பெறுவதற்கான சீட்டுகள் (Interest Coupons) இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும். வட்டியும் அசலும், இப்பத்திரத்தை வைத்திருப்பவரிடம் எவ்வித அடையாளமும் கோரப்படாமல் தரப்படும். இதனை, வைத்திருப்பவர் பற்றிய விவரங்கள் பதியப்படுவதில்லை. இதனை யாருக்கு வேண்டுமானாலும் மாற்றியளிக்கலாம். ஏனெனில் இது ஒரு மாற்றுமுறையாவணமாக கருதப்படுகிறது. முறைப்படி இதை வைத்திருப்பவரே, இதன் உரிமையாளர் ஆவார்.

II. *பிணையக் கடனீட்டுப் பத்திரங்கள்* (Security Debentures):

நிறுவனச் சொத்துக்களின் அடிப்படையில் பிணையம் பெற்ற கடனீட்டுப் பத்திரங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

(அ) பிணையம் பெறா கடனீட்டுப் பத்திரம் (Unsecured Debenture): கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடும்போது பெரும்பாலும் நிறுவனத்தின் சொத்துக்கள் பிணையமாக காண்பிக்கப்படும். அவ்வாறு பிணையமாக சொத்துக்களைக் காண்பிக்காமல் வெளியிடப்படும் கடனீட்டுப் பத்திரம் **'பிணையம் பெறா கடனீட்டுப் பத்திரம்' (Unsecured Debenture)** எனப்படும். இதனை 'சாதாரண கடனீட்டுப் பத்திரம்' (Simple Debenture) என்றும் அழைக்கலாம்.

(ஆ) பிணையம் பெற்ற கடனீட்டுப் பத்திரம் அல்லது அடைமானக் கடனீட்டுப் பத்திரம் (Secured or Mortgaged Debenture) : நிறுவனத்தின் சொத்துக்களை பிணையமாக காண்பித்து வெளியிடப்படும் கடனீட்டுப் பத்திரம் 'பிணையம் பெற்ற கடனீட்டுப் பத்திரமாகும்'. நிறுவனத்தின் நிலம், கட்டிடம் போன்ற சில சொத்துக்களை அடைமானமாக வைத்து வெளியிடப்படும் கடனீட்டுப் பத்திரம், நிலையான பொருட்பிணைப் பொறுப்புடையதாகும் (Fixed Charge).

அவ்வாறின்றி, அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் சில சொத்துக்களான தொழில் உரிமம் (Licence), வணிகக் குறி உரிமை ஆகியவற்றை பிணையமாகக் காண்பித்து வெளியிடப்படும் கடனீட்டுப் பத்திரம், படரும் பொருட்பிணைப் பொறுப்பு டையதாகும் (Floating Charge).

III. மீட்பின் அடிப்படையிலான கடனீட்டுப் பத்திரங்கள் (Redeemability):

மீட்பின் அடிப்படையில், கடனீட்டுப் பத்திரங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

(அ) மீட்புக் கடனீட்டுப் பத்திரம் (Redeemable Debenture) : ஒரு குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்ட காலக் கெடுவின் முடிவில் கடன் தொகை செலுத்தத் தக்க கடனீட்டுப் பத்திரம், 'மீட்புக் கடனீட்டுப் பத்திரம்' எனப்படுகிறது. குறிப்பிட்ட சில காலத்திற்கு மட்டும் பணம் தேவைப்படும் நிறுவனங்கள், இவ்வகை கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுகின்றன.

(ஆ) மீட்க முடியாத கடனீட்டுப் பத்திரம் (Irredeemable Debenture): இக்கடனீட்டுப் பத்திரங்களின் மீட்பிற்கு குறிப்பிட்ட தேதி எதுவும் நிருணயம் செய்யப்படுவதில்லை. நிறுவனம் கலைக்கப்பட்டால்தான் இப்பத்திரங் களின் மீதான கடன் திருப்பியளிக்கப்படும். எனவே இதனை 'நிரந்தர கடனீட்டுப் பத்திரம்' **(Perpetual Debenture)** என்றும் அழைக்கலாம். நிறுவனம் வட்டி செலுத்துத் தவறும்போது, இவ்வகைக் கடனீட்டுப் பத்திரம் மீட்கக் கூடியதாகிறது.


கடனீட்டுப் பத்திரங்களின் வகைகள் (Kinds of Debentures)
I. மாற்றியல்பு கடனீட்டுப் பத்திரங்கள் (Convertible Debentures)
II. பிணையக் கடனீட்டுப் பத்திரங்கள் (Security Debentures)
III. மீட்பின் அடிப்படையிலான கடனீட்டுப் பத்திரங்கள் (Redeemability)
(அ) பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரம் (Registered Debenture)
(ஆ) கொணர்பவர் கடனீட்டுப் பத்திரம் (Bearer Debenture)
(அ) பிணையம் பெறா கடனீட்டுப் பத்திரம் (Unsecured Debenture)
(ஆ) பிணையம் பெற்ற கடனீட்டுப் பத்திரம் (Secured Debenture)
(அ) மீட்புக் கடனீட்டுப் பத்திரம் (Redeemable Debenture)
(ஆ) மீட்க முடியாத கடனீட்டுப் பத்திரம் (Irredeem -able Debenture)

கடனீட்டுப் பத்திரதாரருக்கான தீர்வழிகள்:

(முந்தைய வினாவின் விடையில் காண்க).

70. What are the various rules relating to issue of debentures by a company ? (ஒரு நிறுவனம் கடன் பத்திரங்கள் வெளியிடுவதற்கான பல்வேறு விதிகள் யாவை?)

ஒரு நிறுவனம் தன்னுடைய பங்குகளை வெளியிடும் பொழுது கடைப்பிடிக்கும் விதிகளையே, கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடும் பொழுதும் கடைப்பிடிக்கிறது. **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 71 உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில்** கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவது குறித்த வகைமுறைகள் அடங்கியுள்ளன. அவை வருமாறு.

1. ஒரு நிறுவனம் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களின் வகைகள், வெளியீட்டு நிபந்தனைகள், வட்டி வீதம் ஆகியவற்றை அதன் இயக்குனரவைக் கூட்டத்தைக் கூட்டி தீர்மானிக்க வேண்டும்.

2. நிறுவனம், முன்பு வாங்கிய கடன் தொகையும், தற்பொழுது வாங்க விருக்கும் கடன் தொகையும் மொத்தமாகச் சேர்த்தால், அத்தொகை, செலுத்திய மூலதனத்தையும் காப்பு இருப்பையும் விட அதிகமாக இருப்பின், அந்நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தைக் கூட்டி, கடனீட்டுப் பத்திரம் வெளியிட உறுப்பினர்களின் இசைவைப் பெற வேண்டும்.

3. சில வரைவுரைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு நிறுவனம் தான் பெறும் கடனுக்கு பிணையமளித்து, கடனீட்டுப்பத்திரங்களை வெளியிடலாம் [பிரிவு 71(3)].

4. கடனீட்டுப் பத்திரம் வெளியிடும் நிறுவனமொன்று, பங்காதாயம் செலுத்துவதற்காக கிடைக்கும் நிறுவன இலாபங்களிலிருந்து "கடனீட்டுப் பத்திர மீட்புக் காப்புக் கணக்கு" (debenture redemption reserve account) ஒன்றை உருவாக்குதல் வேண்டும். அதில் வரவு வைக்கப்பட்ட தொகைகளை கடனீட்டுப்பத்திரங்களை மீட்பதற்குத் தவிர வேறு நோக்கங்களுக்கு நிறுவனம் பயன்படுத்துதல் ஆகாது. [பிரிவு 71(4)].

5. கடனீட்டுப் பத்திரங்களுக்கு ஆதரவு கோரி ஒரு நிறுவனம் திட்ட அறிவிப்பு வெளியிடுவதற்கு அல்லது முனைவு செய்வதற்கு அல்லது பொது மக்களை அல்லது அய்நூறுக்கும் மேலான தனது உறுப்பினர்களை அழைப்பதற்கு முன்னர், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடனீட்டுப்பத்திர பொறுப்பாண்மையர்களை (debenture trustees) நிறுவனம் நியமனம் செய்தல் வேண்டும். [பிரிவு 71(5)].

6. கடனீட்டுப் பத்திரங்கள் பொருட்பிணை பொறுப்புடன் (Debenture with charge) வெளியிடப்பட்டால், அது குறித்த விபரங்களை 30 தினங்களுக்குள் நிறுவனப் பதிவாளருக்கு தெரியப்படுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

7. பதிவாளரிடமிருந்து அதற்கான பதிவுச் சான்றிதழ் ஒன்றைப் பெற்று

கடனீட்டுப் பத்திரம் ஒவ்வொன்றிலும், அது பற்றிய புறக்குறிப்பு செய்தல் வேண்டும்.

8. அட்டவணை வங்கியொன்றில் தனிக் கணக்கு ஆரம்பித்து, கடனீட்டுப் பத்திர விண்ணப்பதாரர்களிடமிருந்து பெற்ற எல்லா பணத்தையும் அக்கணக்கில் செலுத்த வேண்டும்.

9. கடனீட்டுப் பத்திரங்கள் பொதுமக்களிடம் விற்கப்படுவதால், முன் கூறியவாறு திட்ட அறிவிப்பாகக் கருதப்படும் (Deemed Prospectus) ஒன்று வெளி யிடப்பட வேண்டும். மேலும் கடனீட்டுப் பத்திரங்களுக்கான விண்ணப்பப்படிவத்துடன் முறையேடு ஒன்றையும் சேர்க்க வேண்டும். அதில் நிறுவனத்தின் திட்ட அறிவிப்பு குறித்த முக்கிய அம்சங்கள் குறிப்பிடப்பட வேண்டும். கடனீட்டுப் பத்திரங்களுக்கு ஆதரவளிக்க (வாங்க) பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கும் மேற்கண்டவாறான ஆவணம் எதுவும் அந்நிறுவனத்தின் திட்ட அறிவிப்பாக கருதப்படுவதாகும் (பிரிவு 25)

10. திட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து அய்ந்து தினங்களுக்குள் கடனீட்டுப் பத்திரங்களை ஒதுக்கீடு செய்தல் கூடாது.

11. ஒதுக்கல் (Allotment) செய்த மூன்று மாதங்களுக்குள் கடனீட்டுப் பத்திரங்களை தயாரித்து, அவற்றை அளிப்பதற்கு தயாராக வைத்திருக்க வேண்டும்.

12. நிறுவனம் பராமரித்து வரும் பொருட்பிணைப் பொறுப்பு பதிவேட்டில் (Register of Charges) கடனீட்டுப் பத்திரங்களையும், பொருட்பிணைப் பொறுப்பு பற்றிய விபரங்களையும் பதிவு செய்தல் வேண்டும்.

13. கடனீட்டுப் பத்திரதாரர்களின் பதிவேடு ஒன்றைத் (Register of Debenture holder) தயாரித்து அதில் கடனீட்டுப் பத்திரதாரரின் பெயர், முகவரி, தொழில், வாங்கிய கடனீட்டுப் பத்திரங்களின் எண்ணிக்கை, ஒதுக்கல் தேதி ஆகிய விபரங்களைப் பதிய வேண்டும். (பிரிவு 88)

14. இறுதியாக கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு, கடனீட்டுப் பத்திரத்தை (கடனீட்டுப் பத்திர சான்றிதழ்) (Debenture Certificate) வழங்க வேண்டும்.

15. கடனீட்டுப் பத்திர வெளியிடுகையில் குறித்துரைக்கப்பட்ட வரை வுரைகள் மற்றும் நிபந்தனைகளின்படி ஒரு நிறுவனம் அதற்கான வட்டி வழங்குதலை அல்லது கடனீட்டுப் பத்திரங்களை மீட்பைச் செய்தல் வேண்டும். [பிரிவு 71(8)].

16. கடனீட்டுப் பத்திரப்படி பெறப்பட்ட மீதான கடனின் அசல் செலுத்தப்பட வேண்டிய பாக்கியாக நிற்கும் காலத்தில், அதைச் செலுத்துவதற்கு ஈடாக போதுமான அளவில் நிறுவனச் சொத்துக்கள் இல்லை என்றோ, அல்லது அவை அநேகமாக போதாத ஒன்றாக ஆகவிருக்கிறது என்றோ கடனீட்டுப் பொறுப்பாண்மையர் ஒரு முடிவுக்கு எச்சமயத்தில் வந்தாலும், அவர் அது குறித்து நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத் திடம் மனு செய்யலாம். இதன் அடிப்படையில் தீர்ப்பாயம் சம்பந்தப்பட்ட நிறுவனத் தையும், இந்த விடயத்தில் அக்கறையுடைய வேறு நபர் எவரையும் கேட்டறிந்து, அந் நிறுவனம் மேற்கொண்டு எந்தப் பொறுப்புக்கும் ஆளாக வண்ணம் கடனீட்டுப்

பத்திரதாரரின் நலனுக்கு அவசியமான அத்தகு தடைகளை அதன் மீது விதித்து ஆணையிடலாம் [பிரிவு 71(9)].

17. முதிர்வுத் தேதியின் போது கடனீட்டுப் பத்திரங்களை ஒரு நிறுவனம் மீட்கத் தவறினாலோ, அதற்கு உரிய காலத்தில் வட்டி செலுத்தத் தவறினாலோ, கடனீட்டுப் பத்திரதாரர்களில் ஒருவரோ, அனைவருமோ அல்லது கடனீட்டுப் பொறுப் பாண்மையரோ தீர்ப்பாயத்திடம் செய்யும் மனுவின் பேரில், அது சம்பந்தப்பட்ட தரப் பினர்களை அழைத்து விசாரித்து, கடனீட்டுப்பத்திரங்களின் மீதான அசல் மற்றும் வட்டி பாக்கியை உடனடியாகச் செலுத்தி அவற்றை மீட்கும்படி அந்நிறுவனத்திற்கு ஆணையிடலாம் [பிரிவு 71(10)].

18. தீர்ப்பாயம் மேற்கண்டவாறு பிறப்பிக்கும் ஆணையை நிறைவு செய்வ தில் தவறுகை புரிந்தால், அத்தவறுகைக்கு பொறுப்பான நிறுவன அலுவலர் ஒவ் வொருவரும் சிறைத்தண்டனைக்கும் அபராதத்திற்கும் ஆளாவார்கள் [பிரிவு 71(11)].

19. நிறுவனத்தின் கடனீட்டுப் பத்திரங்கள் எதையாவது எடுத்துக் கொள் ளவும் மற்றும் அதற்கு செலுத்துகை புரியவும் அதனுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந் தம் ஒன்றை, குறித்தவகை நிறைவேற்றத்திற்கான தீர்ப்பாணை (a decree for specific performance) ஒன்றினால் வலியுறுத்திச் செயல்படுத்தலாம் [பிரிவு 71(12)].

20. கடனீட்டுப் பத்திரங்களின் வெளியிடுகையை அடைவதற்கான நடை முறை, கடனீட்டுப் பத்திர பொறுப்பாண்மைப் பத்திரத்தின் படிவம், பொறுப்பாண்மை பத்திரத்தை கடனீட்டுப் பத்திரதாரர்கள் பார்வையிடல், அதிலிருந்து நகல் பெறுதல், உருவாக்கப்பட வேண்டிய கடனீட்டுப்பத்திர மீட்புக் காப்பின் அளவு மற்றும் தொடர் புடைய இதர விடயங்களை மைய அரசு வகுத்துரைக்கலாம் [பிரிவு 71(13)].

71. Distinguish between Debenture and Share. (கடனீட்டுப் பத்திரத்திலிருந்து பங்கை வேறுபடுத்துக.)

கடனீட்டுப்பத்திரம் [Debenture]	பங்கு [Share]
1. கடனீட்டுப் பத்திரம், நிறுவனத்தின் சொந்த மூலதனம் ஆகாது.	பங்கு நிறுவனத்தின் சொந்த மூல தனமாகக் கருதப்படுகிறது.
2. கடனீட்டுப் பத்திரதாரர் ஒருவர் நிறுவனத்திற்கு கடனளித்தவர் (Creditor) ஆவார்.	பங்குதாரர் நிறுவனத்தின் உரிமையாளர் (Owner) ஆவார்.
3. கடனீட்டுப் பத்திரதாரருக்கு நிறுவன நிருவாகத்தில் கலந்து கொள்ளும் உரிமையில்லை.	பங்குதாரர்களுக்கு, நிருவாகத்தில் கலந்து கொள்ளும் உரிமையுண்டு.

கடனீட்டுப்பத்திரம் [Debenture]	பங்கு [Share]
4. கடனீட்டுப் பத்திரதாரருக்கு வட்டி (interest) வழங்கப்படும்.	பங்குதாரர்களுக்கு பங்காதாயம் (divident) வழங்கப்படும்.
5. இது மீட்கப்படக் கூடியதாகும்.	இவை மீட்கப்படுவதில்லை.
6. இது, நிறுவனம் தொழில் தொடங்கிய சிலஆண்டுகள் கழித்தே வெளியிடப் படும்.	இவை நிறுவனம் பதிவு செய்யப் பட்டவுடன் வெளியிடப்படும்.
7. இப்பத்திரங்களுக்கு பிணையமாக நிறுவனத்தின் சொத்துக்கள் அடைமானம் வைக்கப்படுகிறது.	பங்குகளுக்குப் பிணையமாக ஏதும் அளிக்கப்படுவதில்லை.
8. இவற்றை பங்குகளாக மாற்றலாம்.	இவற்றை கடனீட்டுப் பத்திரங்களாக மாற்ற முடியாது.
9. வரம்பற்ற பொறுப்புடைய பொது நிறுவனங்கள் கடனீட்டுப் பத்திரம் வெளியிட முடியாது.	எல்லா வகை பொது நிறுவனங்களும் பங்குகளை வெளியிடலாம்.
10. கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு நிறுவனத்தின் கூட்டங்களில் கலந்து கொண்டு வாக்களிக்கும் உரிமை இல்லை.	பங்குதாரர்களுக்கு நிறுவனக் கூட்டங் களில் கலந்து கொண்டு வாக்களிக்கும் உரிமையுண்டு.

-oOo-

படரும் பொறுப்பும் நிலையான பொறுப்பும்
[Floting Charge and Fixed Charge]

7

72. What is Floating Charge? Distinguish it from Fixed Charge.When does a floating charge become fixed? (படரும் பொறுப்பு என்றால் என்ன? அதை நிலையான பொறுப்பு என்பதினின்று வேறுபடுத்திக் காட்டுக. படரும் பொறுப்பு எப்பொழுது நிலையான பொறுப்பாக உருவடைகிறது?)

(அல்லது)

Enumerate the way in which money borrowed by a company may be secured. What is the effect of non registration of a charge by a company? (ஒரு நிறுமம் கடனாகப் பெறப்பட்ட பணத்தைப் பிணைப்புள்ளதாக ஆக்கக் கூடிய வழிகளை கணக்கிடுக. ஒரு நிறுமத்தின் பற்றுப் பொறுப்பை பதிவு செய்யாமையின் விளைவு யாது?)

(அல்லது)

Floating charges - Write short notes. (படரும் பற்றுப் பொறுப்பு - குறுகிய விடை எழுதுக)

(அல்லது)

Floating charges - Write short notes. (இழையுறு பற்றுப் பொறுப்பு - குறுகிய விடை எழுதுக)

பொறுப்பு (Charge) - 2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 2(16) தரும் வரையறை:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 2(16)** –இன்படி **'பொறுப்பு' (Charge)** என்பது, "நிறுவனமொன்றின் அல்லது அதன் பொறுப்பேற்று நிறுவனங்கள் ஏதேனும் ஒன்றின் அல்லது அவை இரண்டின் சொத்து அல்லது சொத் திருப்புகளின் மீது உருவாக்கப்படுகின்ற ஓர் நலன் அல்லது பற்றுரிமை என்று பொருள்படும். மேலும் அது அடைமானம் ஒன்றையும் உள்ளடக் கியதாகும்"[1]

ஒரு நிறுவனம், கடன் பெறுவதற்காக அதன் சொத்துக்களின் மீது பொறுப்பு அல்லது அடைமானம் ஏற்படுத்தலாம். இங்கு வரும் பொறுப்பு என்பதை நாம் **'பொருட் பிணைப் பொறுப்பு'** என்றும் கூறலாம். இதன்படி, ஒரு நிறுவனம் தனது சொத்துக்களின் பேரில் பொருட்பிணைப் பொறுப்பை ஏற்படுத் திக் கடன் வாங்க அதிகாரம் உண்டு.

இரு வகைகள்:

பொருட்பிணைப் பொறுப்பு இரு வகைப்படும். அவை,

1. படரும் பொறுப்பு (Floating Charge);
2. நிலையான பொறுப்பு (Fixed Charge).

படரும் பொறுப்பு (Floating Charge) - பொருள் :

எப்பொழுதும் மாறிக் கொண்டிருக்கும் சொத்துக்களின் மீது ஏற்படுத்தப் படும் பொறுப்பு, படரும் பொறுப்பாகும். இப்பொறுப்பு, குறிப்பிட்ட சொத்துக்கள் மீது என்றில்லாமல் எல்லாச் சொத்துக்கள் மீதும் பற்றுப் பொறுப்பு கொள்வதாகும். இத்தகு பற்றுப் பொறுப்பு உள்ள பொழுது, நிறுவனம் தனது சொத்துக்களை தொழிலுக்காக பயன்படுத்தவும், தேவையானால் விற்கவும் உரிமை பெற்றுள்ளது. நிகழ்கால அல்லது எதிர்கால சொத்துக்கள் மீது உள்ள நியாயமான பொறுப்புதான் படரும் பொறுப்பாகும். இப்பொறுப்பு ஒரு நிரந்தர நிலையை அடையும் வரை, மாறிக் கொண்டே இருக்கும். பிறகு அவற்றிற்குண்டான சொத்துக்களின் மீது நிரந்தரமாகி நிலையான பொறுப்பை

1. **"Charge"** means an interest or lien created on the property or assets of a company or any of its undertakings or both as security and includes a mortgage - **Section 2(16) of the Companies Act, 2013.**

உண்டாக்குகின்றன. இதனால் இது **"இழையுறு பற்றுப் பொறுப்பு"** என்றும் அழைக்கப்படுகிறது.

படரும் பொறுப்புக்கு எடுத்துக்காட்டாக, கையிருப்புச் சரக்குகள் (Stock in trade), தொழில் உரிமம் (licence), வாணிகக்குறி (Trademark), பதிப்புரிமை (Copy Right) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

நிலையான பொறுப்பு (Fixed Charge) - விளக்கம் :

நிலையான பொருட்பிணைப் பொறுப்பு என்பது, நிறுவனத்தின் குறித்த வகையான சொத்துக்களின் பேரில் அதாவது உறுதியான சொத்துக்கள் மீது ஏற்படுத்தப்படும் பொறுப்பாகும்.

எடுத்துக்காட்டாக, நிறுவனத்தின் நிலம், கட்டிடம் அல்லது இயந்திரத்தின் மீதான பொருட்பிணைப் பொறுப்பைக் கூறலாம். இப்பொறுப்பிற்குட்பட்ட சொத்துக்களை நிறுவனம், இப்பொறுப்பினைக் கொண்டுள்ளவரின் இசைவின்றி பயன்படுத்த முடியாது.

நிலையான பொறுப்புக்கும் படரும் பொறுப்புக்கும் உள்ள வேறுபாடுகள் (Distinctions between Fixed Charge and Floating Charge):

நிலையான பொறுப்பு [Fixed Charge]	படரும் பொறுப்பு [Floating Charge]
1. இது ஒரு நிறுவனத்தின் குறித்த வகையான சொத்துக்களின் மீது மட்டும் ஏற்படுத்தப்படும் பொருட் பிணைப் பொறுப்பாகும்.	இது நிறுவனத்தின் மாறிக் கொண்டிருக்கும் சொத்துக்களின் மீது ஏற்படுத்தப்படும் பொருட்பிணைப் பொறுப்பாகும்.
2. இப்பொறுப்பிற்கு நிறுவனத்தின் நிலம், கட்டிடம், இயந்திரங்கள் ஆகியவற்றின் மீதான பொறுப்பினை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.	இப்பொறுப்பிற்கு நிறுவனம் தனது கையிருப்பு சரக்குகள், தொழில் உரிமம், வாணிகக் குறி, பதிப்புரிமை ஆகிய வற்றை பிணையமாக வைத்துக் கடன் பெறுவதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.
3. பொறுப்பிற்குட்பட்ட சொத்துக்களை உரிமை மாற்றம் செய்தல் இயலாது.	பொறுப்பிற்குட்பட்ட சொத்துக்களை தங்கு தடையின்றி உரிமை மாற்றம் செய்யலாம்.

படரும் பொறுப்பு எப்பொழுது நிலையான பொறுப்பாக உருவடைகிறது? (Crystallisation of floating charge):

படரும் பொறுப்பிற்குட்பட்ட சொத்துக்களை, சம்பந்தப்பட்ட நிறுவனம் மீண்டும் நிலையான பொறுப்பிற்குட்படுத்தலாம். இது பின்வரும் சூழலில் நிகழ்கிறது.

(1) அந்நிறுவனம் கலைக்கப்படும் பொழுது;

(2) அந்நிறுவனம் தொழில் செய்வதை நிறுத்திவிடும் பொழுது;

(3) நிறுவனத்தின் சொத்துக்களுக்கு சொத்துப் பேணுநர் நியமனம் செய்யப்படும் பொழுது;

(4) கடனீட்டுப் பத்திரத்தின் மீதான அசலையோ, வட்டியையோ செலுத்துவ தற்கு நிறுவனம் தவறியிருந்து, அதன் பொருட்டு கடனீட்டுப்பத்திர தாரர் பொருட்பிணைப் பொறுப்பாக வழங்கப்பட்ட பிணையத்தை செயற் படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது,

(5) படரும் பொறுப்புக்கான பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிகழ்வு நடக்கும் போது,

படரும் பொறுப்பு, நிலையான பொறுப்பாக உருவடைகிறது. இந்நிலைப்பாடு **'படரும் பொறுப்பு நிலையாகல்'** (Crystallisation of floating charge) எனப்படும். இச் சமயத்தில் நிலையான பொறுப்பு முன்னுரிமை (Preference) பெறுகிறது.

எனினும் கடனீட்டுப் பத்திரதாரர்கள், தங்கள் கடனை வசூலித்துக் கொள் ளும் பொருட்டு படரும் பொறுப்பின் அடிப்படையிலான பிணையத்தை செயற்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை, அந்நிறுவனத்தின் சொத்துக்களின் மீதான படரும் பொறுப்பு, அப்பொறுப்பாகவே தொடர்ந்திருக்கும். நிலையான பொறுப் பாக மாறாது. இதனைப் பின்வரும் வழக்கு விளக்குகிறது.

Government Stock and other Securities Investment Co. Ltd. v. Manila Railway Co. Ltd.[1]

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, ஒரு நிறுவனம் தனது நிகழ்கால மற்றும் எதிர்கால சொத்துக்கள் அனைத்தின் மீதும் படரும் பொறுப்பை ஏற்படுத்தி, அதைப் பிணையமாகக் காண்பித்து கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டது. அக் கடனில் அசல் தொகையை நீண்ட காலத்திற்குப் பிறகும், வட்டியை அரையாண்டிற் கொரு முறை ஒரு குறிப்பிட்ட தினத்திலும் அளிப்பதாக அந்நிறுவனம் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தது. எனினும் வட்டி செலுத்த வேண்டிய தேதியிலிருந்து மூன்று மாதங் களுக்கு, அதனைச் செலுத்தாமல் அந்நிறுவனம் தவறுகை புரியும் வரை, அது தனது தொழிலுக்காக, அச்சொத்துக்களை விற்கும், அடைமானம் அல்லது வேறு விதத்தில் வகை செய்யும் உரிமையை தன்னிடமே தக்க வைத்துக் கொண்டிருந்தது. இந்நிலை யில் அந்நிறுவனம் வட்டி செலுத்தத் தவறுகை புரிந்து, மூன்று மாதங்களுக்கும்

1. (1897) AC 81 : 75 LT 553 Per Lord Macnaghten

மேலாகக் கடந்துவிட்டது. ஆனால் அவ்வட்டியைப் பெற கடனீட்டுப் பத்திரதாரர்கள் எந்த நடவடிக்கையையும் அம்மூன்று மாதங்களுக்குள் அந்நிறுவனத்திற்கு எதிராக எடுக்கவில்லை. இதற்கிடையில், அந்நிறுவனம் தனது சொத்துக்களை மற்றொருவரி டம் அடைமானம் வைத்துவிட்டது. இவ்வாறு அடைமானம் வைத்தது செல்லாதது என்றும், எப்பொழுது நிறுவனம் கடனீட்டுப் பத்திரத்தின் மீதான வட்டியை செலுத்தத் தவறிவிட்டதோ, அப்பொழுதே அது தனது சொத்துக்களின் மீது ஏற்படுத்திக் கொடுத்த படரும் பொறுப்பு நிலையாகிவிட்டது (நிலையான பொறுப்பாகிவிட்டது) என்றும் கூறி கடனீட்டுப் பத்திரதாரர்கள் பின்னிட்டு வழக்குத் தொடர்ந்தனர்.

ஆனால் நீதிமன்றம் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளாமல், மேற்கண்ட அடை மானம் செல்லத்தக்கதே என்றும், நிறுவனம் வட்டி செலுத்தத் தவறியதன் காரணமாக, தானாக படரும் பொறுப்பு ஒன்று நிலையாகிவிடாது என்றும், அத்தவறுகை புரிந்த பின்பு, கடனீட்டுப் பத்திரதாரர்கள் அவ்வட்டியை (அல்லது அசலைப்) பெற அந்நிறு வனத்திற்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பேரில்தான், படரும் பொறுப்பு நிலையாகிறது என்றும், இதுவே படரும் பொறுப்பு நிலையாகல் தொடர்பான உண்மையான நிலைப்பாடு (real crystallisation) என்றும் தீர்ப்புரைத்தது.

In Re Indus Films Corporation Ltd.[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனம் தான் பெற்ற கடனுக்காக, அப்போது தன் உடைமையில் இருந்த மற்றும் அதற்குப் பின்னிட்டு அக்கடன் தீர்க்கப்படும் வரை கொண்டு வரத்தக்க தனது இயந்திரங்கள் உள்ளிட்ட இதர சொத்திருப்புகள் மீது பற்றுரிமை ஏற்படுத்தியது. இதை நீதிமன்றம் ஓர் படரும் பொறுப்பு என்று தீர்மானித் தது. ஏனெனில், அந்நிறுவனம் தன்னிடம் தற்போதிருக்கும் மற்றும் எதிர்காலத்தில் தன் உடைமையில் வரும் இயந்திரங்கள் உள்ளிட்ட சொத்திருப்புகளை பிணையமாகக் காட்டி பணம் கடன் பெற்றது ஓர் படரும் பொறுப்பே ஆகும் என்றும், எனவே அவற்றின் பயன்பாட்டின் மீது தடை எதையும் விதிக்கவியலாது என்றும் நீதிமன்றம் கூறியது.

Bank of Baroda v. H.B. Shivdasani[2]

இந்த மற்றொரு வழக்கில் ஒரு நிறுவனம் தனது வணிகம் மற்றும் சொத் திருப்புகளை தனக்கு கடனளித்தவர்களுக்கே மாற்றிவிட்டது. இந்நேர்வில், படரும் பொறுப்பு உள்ளது என்று கூறுமளவிற்கு அங்கு ஏதுமில்லை என்றும், எனவே இங்கு அது நிலையாகிவிட்டது என்றும் பம்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Re Hi Fi Equipments (Cabinets) Ltd.,[3]

இவ்வழக்கில் ஒரு நிறுவனம் தனது நிலையான தொழிற்கூடம் மற்றும் இயந் திரத்தின் மீது நிலையான பொறுப்பு ஒன்றை ஏற்படுத்தியது. ஆனால் அந்நிறுவனத் தில் உறுதியாக பதிக்கப் பெற்ற இயந்திரம் ஏதுமில்லை. எனவே இதை படரும் பொறுப்பு என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

1. AIR 1939 Sindh 100
2. AIR 1926 Bom 427
3. (1988) BCLC 65 Ch. D.

பற்றுப் பொறுப்பை பதிவு செய்தல் (Registration of Charges) - பிரிவு 77 :

ஒரு நிறுவனம் தான் வாங்கிய கடனுக்காக தனது சொத்து அல்லது சொத் திருப்புகளின் மீது பற்றுப்பொறுப்பை உருவாக்கினால், அதன் விவரங்களை அவ்வாறு உருவாக்கியதிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டி யது அந்நிறுவனத்தின் கடமையாகும் என்று **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 77(1)** கூறுகிறது. அதற்குரிய ஆவணங்களில் அந்நிறுவனமும், யாரிடம் அப்பற்றுப் பொறுப்பு உருவாக்கப்பட்டதோ அவரும் (charge holder) கையொப்பம் செய்தல் வேண்டும்.

Banaras Bank v. Bank of Bihar[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனம் தான் செய்து கொண்ட பற்றுப் பொறுப்பை பதிவு செய்வதற்காக விண்ணப்பம் ஒன்றை குறித்துரைக்கப்பட்ட முப்பது நாட்களுக் குள் பதிவாளரிடம் சமர்ப்பித்துவிட்டது. ஆனால் அது பதிவாளரின் கவனக்குறைவு காரணமாக சுமார் இரண்டரை ஆண்டுகள் கழித்து பதிவு செய்யப்பட்டது. இங்கு பற்றுப் பொறுப்பை ஒரு நிறுவனம் பதிவு செய்தல் வேண்டும் என்ற கடமை, அந் நிறுவனம், குறித்துரைக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் பதிவாளரிடம் விண்ணப்பம் அளித்தவுடன் முடிவுற்றுவிட்டது என்றும், எனவே அது முற்றிலும் செல்லத்தக்ககதே என்றும், அதை வலியுறுத்திச் செயற்படுத்தலாம் என்றும் நீதிமன்றம் கருத்துரைத்தது.

பதிவாளரிடம் மேற்கண்டவாறு பதிவு செய்யப்பட்ட பற்றுப் பொறுப்பிற்கு சான்றாக அவர் பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் என்று **பிரிவு 77(2)** கூறுகிறது.

உருவாக்கப்பட்ட பற்றுப் பொறுப்பு பதிவாளரிடம் மேற்கண்டாவறு பதிவு செய்யப்பட்டு, பதிவு சான்றிதழ் வழங்கப் பெற்றிருந்தாலன்றி அதை நிறுவனக் கலைப் பதிகாரியே, நிறுவனத்திற்கு கடன் கொடுத்தவரோ பரிசீலனைக்கு எடுத்துக் கொள் ளல் ஆகாது என்று **பிரிவு 77(3)** வரையறுக்கிறது.



பற்றுப் பொறுப்பு ஒன்றால் பெறப்பட்ட பணத்தின் செலுத்துகைக்காக செய்து கொள் ளப்படும் ஒப்பந்தம் அல்லது கடப்பாடு எதற்கும் மேற்படி பிரிவு 77(3)–இல் கூறப்பட்டுள் ளது எதுவும் குந்தகமாகாது என்று **பிரிவு 77(4)** கூறுகிறது.

ஒரு நிறுவனம் மேற்குறித்த 30 நாட்களுக்குள் பற்றுப்பொறுப்பை பதிவு செய்யாது போனால் என்ன செய்வது,

1. AIR 1947 Oudh 117 :
See also Bank of India v. Depro Foods Ltd. (1988) 64 Comp. Cas 324

அதன் விளைவுகள் பற்றி **பிரிவு 78** பின்வருமாறு கூறுகிறது.

பற்றுப் பொறுப்பை பதிவு செய்யாமையால் ஏற்படும் விளைவுகள் (Effects of Non-registration of Charge):

பற்றுப் பொறுப்பை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் (Application for registration of charge) பற்றி **பிரிவு 78** கூறுகிறது. எனினும் அதை ஒரு நிறுவனம் பதிவு செய்யாவிடின் எத்தகு விளைவுகள் ஏற்படுகின்றன என்பதும் மேற்படி பிரிவிலேயே அடங்கியுள்ளன. அதன்படி, ஒரு நிறுவனம் தான் உருவாக்கிய பற்றுப் பொறுப்பை மேற்குறிப்பிடப்பட்ட முப்பது நாட்களுக்குள் பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டியது அதன் கடமையாகும். இதில் தவறுகை புரிந்தால் அந்நிறுவனம், நிறு வனச் சட்டத்தின்படி குற்றப் பொறுப்புக்கு ஆளாக நேரிடும். எனினும் இந்நிலையில் அப்பற்றுப்பொறுப்பை, யாருக்கு ஆதரவாக பற்றுப் பொறுப்பு (அதாவது யார் நிறுவனத் திற்கு கடன் கொடுத்தாரோ அவர்) உருவாக்கப்பட்டதோ அவர், அதற்குரிய ஆவணத் துடன் பதிவு செய்ய பதிவாளரிடம் விண்ணப்பம் செய்யலாம்.

அந்த விண்ணப்பத்தின் பேரில், பற்றுப் பொறுப்பை உருவாக்கிய அந்நிறு வனத்திற்கு பதிவாளர் 14 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்புவார். இதற்குப் பின்னிட்டு, அந்நிறுவனம் தானே முன் வந்து பற்றுப் பொறுப்பை பதிவு செய்யவில்லை என்றாலோ, அல்லது அவ்வாறு பதியாததற்கு போதுமான காரணம் காட்டவில்லை என்றாலோ, பதிவாளர் அவ்விண்ணப்பத்தை அத்தகு கட்டணம் அல்லது கூடுதல் கட்டணம் செலுத்தப்படுவதன் பேரில் அனுமதிக்கலாம்.

மேற்படி கட்டணம் அல்லது கூடுதல் கட்டணங்களை யாருக்கு ஆதரவாக பற்றுப் பொறுப்பு உருவாக்கப்பட்டதோ அவர், சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து வசூலித்துக் கொள்ள உரிமை படைத்தவர்.

ஒரு நிறுவனம் பற்றுப் பொறுப்பை பதிவு செய்யாததன் காரணமாக மேலும் சில விளைவுகளும் பின்வருமாறு ஏற்படுகின்றன. அவை,

1. அப்பற்றுப் பொறுப்பு, நிறுவனம் கலைக்கப்படும் போது கலைப்பதிகாரி க்கு எதிராக இல்லாநிலையதாகும். நிறுவனச் சொத்துக்களின் மீது பற்றுப் பொறுப்பு உருவாக்கப்பட்டிருந்தால், அச்சொத்துக்களைப் பொறுத்தவரை அது கடனீந்தவர் களுக்கு எதிராக இல்லாநிலையதாகும் (void).

2. அந்நிறுவனம் தான் பெற்ற கடனை உடனடியாக திருப்பிச் செலுத்தும் பொறுப்புக்கு ஆளாகும்.

3. பதிவு செய்யப்படாத பற்றுப் பொறுப்பு இல்லாநிலையதாவதால் கலைப்பு நடவடிக்கையின் போது, பற்றுப்பொறுப்பை வைத்திருப்பவர் (கடனீந்தவர்) பிணையம் பெறா கடனீந்தவர் ஆகிறார்.

4. பற்றுப்பொறுப்பின் விவரங்களை பதிவு செய்யாமல் விடுவது, 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 86–இன்படி தண்டிக்கத்தக்கதாகும்.

-o0o-

இயல் IV

நிறுவன செயலாட்சி

[இயக்குனர்கள் – சுதந்திரமான இயக்குனர்கள், பெண் இயக்குனர்கள் மற்றும் மேலாண்மை அலுவலர்கள், கூட்டங்கள், கணக்குகள் மற்றும் தணிக்கைகள், உள்ளக தணிக்கை முறை, தேசிய நிதிநிலை அறிக்கையளிக்கும் முகமை, மின்னணு தாக்கல் மற்றும் தகவல் தொழில் நுட்பச் சட்டம், 2000, கூட்டுறு சமூகப் பொறுப்புடைமை, பெரும்பான்மையினர் அதிகாரங்கள் மற்றும் சிறுபான்மையினர் உரிமைகள், அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மை தடுப்பு, புலன் விசாரணை, ஆய்வாளர்களின் அதிகாரங்கள். தேசிய சட்டத் தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள், உள்ளிருப்போர் வணிகம்]

Corporate Governance

[Directors - Independent directors, woman directors and managerial personnel, Meetings, Accounts and audits, Internal auditing, National Financial Reporting Authority, e-filing and Information Technology Act, 2000, Corporate Social Responsibility, Majority powers and Minority rights, Prevention of opperession and mismanagement, Investigation, Powers of inspectors, Powers of NCLT, Insider Trading]

இயக்குனர்கள்
[Directors]

73. "The Directors occupy a pivotal position in the structure of companies." - Explain. ("ஒரு நிறுவனத்தின் அமைப்பில் மையமாக இயங்கும் ஒரு நிலையை இயக்குனர்கள் வகிக்கிறார்கள்." - இக்கூற்றினை விளக்கவும்.)

1

(அல்லது)

Examine the proposition that "Directors are the trustees of the Company in certain respect and agents of the Company in certain other respects." ("இயக்குனர்கள், சில நிகழ்வுகளில் நிறுவனத்தின் பொறுப்பாளர்களாக செயல்படுகின்றனர் மற்றும் வேறு சில நிகழ்வுகளில் அதன் முகவர்களாக செயல்படுகின்றனர்" என்ற வாசகத்தை ஆராய்க.)

(அல்லது)

"Directors are not only agents but are also in some sense trustees of the Company" - Comment. ("இயக்குனர்கள் பங்கமைப்பின் முகவர்கள் மட்டுமல்லர். ஆனால் சில சூழ்நிலைகளில் பொறுப்பாட்சியாளர்களுமே" - விவரி.)

(அல்லது)

"A director is not a servant of any master and he cannot be the servant of the company or of any one. He is the controller of the company's affairs" - Explain. ("ஒரு இயக்குநர் என்பவர் ஒவ்வொரு பணி வழங்குநரின் பணியாளர் அல்ல. அவர் அந்நிறுமத்தின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துபவர் ஆவார்" - விளக்குக.)

முன்னுரை:

இயக்குனர்கள் ஒரு நிறுவனத்தின் முகவர்களாகவும், பொறுப்பாண்மையர்களாகவும், உறுப்புகளாகவும் (அங்கங்கள்) உள்ளனர். எனவே, "**ஒரு நிறுவனத்தின் அமைப்பில் மையமாக இயங்கும் ஒரு நிலையை இயக்குனர்கள் வகிக்கிறார்கள்**" என்று கூறுவதில் மிகையொன்றுமில்லை.

ஒரு நிறுவனத்தில் இயக்குனர்களின் முக்கியத்துவம் (Importance of Directors in a Company):

ஒரு நிறுவனம் கண்ணுக்குப் புலனாகாத செயற்கை நபராகையால், அது தன் செயல்களை தானே செய்து செய்வது என்பது இயலாத ஒன்று. எனவே நிறுவனத்தின் வியாபாரத்தை செய்ய, மனித முகவர்கள் (Human Agents) தேவைப்படுகின்றனர். அம்மனித முகவர்கள்தாம் இயக்குனர்கள் என்போர்.

இத்தகு இயக்குனர்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 149(1)** பின்வருமாறு கூறுகிறது.

அதன்படி, "நிறுவனமொன்று தனிநபர்களை இயக்குனர்களாகக் கொண்ட **இயக்குனரவை (Board of Directors)** ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும், மேலும் அது

(அ) **பொது நிறுவனமாக** இருக்கும் நேர்வில் குறைந்தபட்சம் மூன்று இயக்குனர்களையும், **தனியார் நிறுவனமாக** இருக்கும் நேர்வில் குறைந்தது இரண்டு இயக்குனர்களையும், **ஒரு நபர் நிறுவனமாக** இருக்கும் நேர்வில் ஒரு இயக்குனரையும் கொண்டிருக்க வேண்டும்; மற்றும்

(ஆ) அதிகபட்சமாக பதினைந்து இயக்குனர்களை கொண்டிருத்தல் வேண்டும்.

எனினும் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிய பிறகு பதினைந்து இயக்குநர்களுக்கும் அதிகமானவர்களை நிறுவனமொன்று நியமனம் செய்யலாம்.

மேலும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு நிறுவன வகை அல்லது வகைக ளானவை குறைந்தபட்சம் **ஓர் பெண் இயக்குனரை** (one woman director) கொண்டிருத்தல் வேண்டும்."[1]

ஒரு நிறுவனம் தொடங்கிய தேதியிலிருந்து ஓராண்டிற்குள் மேற்கண்டவாறு இயக்குனர்களை நியமனம் செய்தல் வேண்டும் என்று பிரிவு 149(2) கூறுகிறது. மேலும் முந்தைய பட்டிகை ஆண்டில் குறைந்தபட்சம் 182 நாட்களுக்கு இந்தியாவில் தங்கி யிருந்த ஒருவரையாவது அந்நிறுவனம் தனது இயக்குனராக கொண்டிருத்தல் வேண் டும் என்று பிரிவு 149(3) கூறுகிறது. பட்டியலிடப்பட்ட பொது நிறுவனம் ஒவ்வொன்றும் தனது இயக்குனர்கள் எண்ணிக்கையின் மொத்தத்தில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பகுதி பேர்களை **சுதந்திரமான இயக்குனர்களாக (Independent Directors)** கொண்டிருக்க வேண்டும் என்று பிரிவு 149(4) கூறுகிறது. அடுத்து, மைய அரசால் வழங்கப்படும் **இயக்குனர் அடையாள எண் (Director Identification Number - DIN)** ஒதுக்கப்படாத எவரும் ஒரு நிறுவனத்தின் இயக்குனராக நியமனம் செய்யப் படுதல் ஆகாது என்று பிரிவு 154 கூறுகிறது.

நிறுவனமொன்றின் இயக்குனர்களைப் பற்றிய அடிப்படை வகைமுறைகள் மேற்கண்டவாறு இருக்க, "இயக்குனர்", "இயக்குனரவை" ஆகிய பதங்களின் வரை யறையை 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் பின்வருமாறு தருகிறது.

இயக்குனர் - வரையறை (Definition of Director):

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 2(35)** இயக்குனர் என்ற பதத்தை பின்வருமாறு சுருக்கமாக வரையறுக்கிறது. அதன்படி, **"இயக்குனர் என்பது நிறுவனமொன்றின் இயக்குனரவையால் நியமனம் செய்யப்படும் ஓர் இயக்குனர் என்று பொருள்படும்".**[2]

---

1. Every company shall have a Board of Directors consisting of individuals as directors and shall have—

   (a) a minimum number of three directors in the case of a public company, two directors in the case of a private company, and one director in the case of a One Person Company; and

   (b) a maximum of fifteen directors:

   Provided that a company may appoint more than fifteen directors after passing a special resolution:

   Provided further that such class or classes of companies as may be prescribed, shall have at least one woman director

   - Section 149(1) of the Companies Act, 2013.

2. **'Director'** means a director appointed to the Board of a company

   - Section 2(34) of the Companies Act, 2013.

இயக்குனர் - வரையறை (Definition of Director):

2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 2(10)** இயக்குனர் என்ற பதத்தை பின்வருமாறு வரையறுக்கிறது. அதன்படி, "ஓர் நிறுவனம் தொடர்பாக **'இயக்குனரவை'** அல்லது **'அவை'** என்பது நிறுவன இயக்குனர்களின் கூட்டான அமைப்பு என்று பொருள்படும்".[1]

இயக்குனர்களின் பங்கு (Role of Directors):

ஒரு நிறுவன அமைப்பில் மையமாகவும் இதயமாகவும் விளங்கும் இவர்கள், தங்களிடையே கருத்து வேறுபாடு கொண்டால் நிறுவனத்தின் செயல்முறையே நிலை குலைந்து போகிறது. நிறுவனம் நீடித்து நிற்பதும், நிலைகுலைந்து சாய்வதும் இயக் குனர்களின் கையில்தான் உள்ளது எனலாம். இவர்கள் ஒரு நிறுவனத்தின் பல்வேறு பட்ட செயற்பாடுகளில் பங்கு கொண்டு, தங்கள் பொறுப்பினை நிறைவேற்றுவதால், அந்நிறுவனத்தில் இவர்களின் நிலையை அறுதியிட்டுக் கூற முடிவதில்லை. எனினும் அவற்றுள் இயக்குனர்களின் முக்கியப் ஆற்றும் பங்காக பின்வரும் செயற்பாடுகளைக் குறிப்பிடலாம். அவை, இயக்குநர்கள் முகவர்களாகவும் (Agents), வேறு சில நிகழ்வு களில் அதன் பொறுப்பாளர்களாவும் (Trustees), இன்னும் வேறு சில நிகழ்வுகளில் அதன் உறுப்புகளாகவும் (Organs) செயற்படுகின்றனர். இவை குறித்த விபரங்கள் வருமாறு.

1. இயக்குனர்கள், முகவர்களாக (Directors as Agents):

ஒரு நிறுவனத்தின் இயக்குனர்கள் பெரும்பாலும், அதன் முகவர்களாக செயற்படுகின்றனர். நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே, இவர்கள் சட்டத்தின் கண்களில் முகவர்களாகவே தென்பட்டனர். ஆகவே முகமையின் பொது விதிகளைக் (General Principles of Agency) கொண்டுதான், இயக்குனர்களுக் கும் நிறுவனத்திற்கும் இடையே உள்ள உறவும் மற்றும் இயக்குனர்களுக்கும் நிறு வனத்துடன் தொடர்புகொள்ளும் நபர்களுக்கும் இடையே உள்ள உறவும் நிருணயிக் கப்படுகிறது. இதன்படி இயக்குனர்களை முகவர்களாகக் கொண்டால், ஒரு முகவருக் குரிய அனைத்து உரிமைகளும், கடமைகளும் அதிகாரங்களும், பொறுப்புகளும் இயக்குனர்களுக்கும் உள்ளதெனக் கூறலாம். எனவே ஒரு முகவரைப் போல் ஒரு இயக்குனரும் நிறுவனத்திற்காக செய்த செயலுக்குச் சொந்த முறையில் பொறுப்பாக மாட்டார்கள். எடுத்துக்காட்டாக, பின்வரும் வழக்கொன்றைக் கவனிப்போம்.

Ferguson v. Wilson[2]

நிறுவனத்தின் இயக்குனர்கள், சில பங்குகளை வாதிக்கு ஒதுக்கீடு (Allot-

1. **'Board of Directors'** or **'Board'**, in relation to a company, means the collective body of the directors of the company
- Section 2(10) of the Companies Act, 2013.
2. (1866) 2 Ch App 77

ment) செய்தனர். ஆனால் நிறுவனத்தின் பங்குகள் தீர்ந்து போய் விட்டதால் அப் பங்குகளை, அவர்களால் வாதிக்கு கொடுக்க முடியவில்லை. வாதி இயக்குனர்கள் மீது வழக்கு தொடுத்தபோது இதற்கு இயக்குனர்களுக்கு தனிப்பட்ட பொறுப்பு கிடை யாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எனவே இயக்குனர்களின் செயல், நிறுவனத்தின் செயலாகவும், இயக்குனர் களுக்கு வழங்கப்பட்ட அறிவிப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அறிவிப்பாகவும், இயக்குனர்களின் தவறுதல்கள் நிறுவனத்தின் தவறுதல்களாகவும் கருதப்பட்டு நிறுவனம் ஒரு முதல்வரைப் போல் (Principal) பொறுப்புக்குள்ளாக்கப்படுகிறது. மேலும் ஒரு முகவருக்கு இருப்பதுபோல் வெளிப்படை அதிகாரம், உட்கிடை அதிகாரம், உண்மையான அதிகாரம், அவசர அதிகாரம் ஆகிய அனைத்து அதிகாரங்களையும் கொண்டவர்களாக இயக்குனர்கள் விளங்குகின்றனர். இயக்குனர்கள் நிறுவனத் தின் முகவர்களேயன்றி பங்குதாரர்களின் முகவர்கள் அல்ல என்பதை இங்கு நினைவில் கொள்வது சாலச்சிறந்தது.

2. இயக்குனர்கள் பொறுப்பாண்மையர்களாக (Directors as Trustees):

அடுத்தபடியாக இயக்குனர்கள் நிறுவனத்தின் பொறுப்பாண்மையர்களாக வும் கருதப்படுகின்றனர். இக்கருத்து அவ்வளவு சரியானதல்ல என்றாலும் இதில் ஓரளவு உண்மையில்லாமலில்லை. இயக்குனர்கள் உண்மையில் நிறுவனத்தின் சொத்துக்களுக்கு உரிமையுடையவர்களாவர். ஆனால் சட்டம் அவர்களுக்கு



நிறுவனத்தின் சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், சொத்துக்கள் யாவும் நிறுவனத்திற்கே முழுச் சொந்தமானது என்றும் கூறுகிறது. ஆனால் இயக்குனர்கள் பல சூழ்நிலைகளில் பொறுப்பாண்மையர்களைப் போல் நிறுவனத்தின் பங்குரிமை மாற்றங்களுக்கு இசைவளிப்பது, பங்குகளை ஒதுக்கீடு செய்வது, ஒப்படைக்கப்பட்ட பங்குகளை ஏற்றுக் கொள்வது, பங்காதாயம் வழங்குவது, நிறுவனத் தின் நிதிகளைச் செலவழிப்பது, நிறுவனத்திற்காக சொத்துக்களை வாங்குவது,

விற்பது முதலான பற்பல செயல்களில் அவர்கள் செயல்படுகின்றனர். எனவே இயக்குனர்கள், பொறுப்பாண்மையர்களைப் போல் முழு நம்பிக்கைக்குகந்தவர்களாக நிறுவனத்தின் முழு நன்மையையும் கருத்தில் கொண்டு நிறுவனத்திற்காக செயலாற்ற வேண்டிய பல கடமைகளைக் கொண்டுள்ளனர்.



மேற்கூறிய காரணங்களினால்தான் இயக்குனர்கள் நிறுவனத்தின் பொறுப்பாண்மையர்களாகவும் செயல்படுகின்றனர் என்ற கருத்து உண்மையாக உள்ளது. எனினும், இயக்குனர்கள் நிறுவனத்தின் பொறுப்பாண்மையர்களாக கருதப் படுகிறார்களேயொழிய பங்குதாரர்களின் பொறுப்பாண்மையர்களாக அல்ல என்பதை நினைவில் கொள்ளல் அவசியம்.

3. இயக்குனர்கள் நிறுவனத்தின் உறுப்புகளாக (அங்கங்களாக) (Directors as Organs of the Company) :

மூன்றாவதாக இயக்குனர்கள் இன்றைய நிறுவனச் சட்டப்படி நிறுவனத் தின் உறுப்புகளாக (அதாவது அதன் அங்கங்களாக) கருதப்படுகின்றனர். நிறு வனங்கள் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டதோ அப்பொழுதிலிருந்து நிறுவனம் என்பது உறுப்புகளும், உணர்ச்சிகளும் அற்ற ஒரு செயற்கை நபர் என்ற கருத்து மிக ஆழமாக வேரூன்றிவிட்டது. இதற்குப் பின்னர் தோன்றிய நிறுவனங்கள் ஏராளமான தவறுகளையும் தீங்குகளையும் செய்துவந்தாலும் தண்டனைகள் ஏதுமின்றி தப்பி வந்தன. இவ்வாறு இயக்குனர்கள் நிறுவனத்தின் பெயரால் தீங்குகள் இழைத்து தண்டனைகளில் இருந்து தப்பிக்க முற்பட்டனர். இந்நிலைக்கு ஒரு முடிவு கட்ட நிறுவனச் சட்டத்தில் ஒரு புதிய கருத்து மலர்ந்தது.

இக்கருத்தின்படி இயக்குனர்கள் நிறுவனத்தின் உறுப்புகளாகவே கருதப் படுகின்றனர். இயக்குனர்களின் எண்ணங்கள் நிறுவனத்தின் எண்ணங்களாகவும், இயக்குநர்களின் குற்றங்களும் தீங்குகளும், நிறுவனத்தின் குற்றங்களாகவும்

தீங்குகளாகவும் பிரதிபலிக்கின்றன. எனவே நிறுவனத்தின் பெயரால் இயக்குனர்கள் செய்யும் தீங்குகளுக்கும், தவறுகளுக்கும், குற்றங்களுக்கும் அவர்களுக்கு சிறை வாசமும், அபராதமும் தண்டனையாக விதிக்கப்பட்டன. இத்தண்டனைகளில் அபராதத் தொகையின் அளவானது, 2013–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட புதிய நிறுவனங்கள் சட்டத்தின்படி பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது; சிறைவாசத்திற்கான காலஅளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இயக்குனர்களின் மேற்கண்ட பொறுப்பு நிலையை பின்வரும் வழக்கு விளக்குகிறது.

Lennard's Carrying Co. v. Asiatic Petroleum Co.[1]

1874–ஆம் ஆண்டின் வாணிகக் கப்பல் போக்குவரத்து சட்டப்படி (The Merchant Shipping Act of 1874) ஒரு கப்பலின் சொந்தக்காரர் தன் தவறுகை யில்லாமல் விளைந்த இழப்புக்கு பொறுப்பேற்கமாட்டார் என்று கூறுகிறது. இவ்வழக் கின்படி கப்பலின் சொந்தக்காரர் ஒரு நிறுவனம். அக்கப்பலால் உண்டாக்கப்பட்ட சேதம், நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் செய்த தவறினால் விளைந்ததாகும் என இழப்பீடு கோரி, நிறுவனத்தின் மீது தொடரப்பட்ட மேற்படி வழக்கில், உடலுறுப்பும் உயிருமற்ற அரூபமான நிறுவனம் குற்றமற்றது; தவறு செய்யும் தன்மையுடையதல்ல என வாதிடப்பட்டது. ஆனால் நீதிமன்றம் இவ்வாதத்தை ஏற்றுக் கொள்ளாமல், நிறு வனத்தின் எண்ணமும் செயலும், இயக்குனர்களின் எண்ணமும் செயலுமேயாகும் என்றும், இயக்குனர்களின் குற்றங்களும் தீங்குகளும் நிறுவனம் செய்ததாகும் என்றும் தீர்ப்புரைத்தது.

இம்முடிவு இன்றைய நிறுவனச் சட்டத்தில் பல பிரிவுகளிலும் எடுத்தாளப் பட்டுள்ளது. அவற்றின்படி நிறுவனங்களால் செய்யப்படும் எல்லாக் குற்றங்களுக்கும் தீங்குகளுக்கும், நிறுவனமும் அதன் அலுவலர் ஒவ்வொருவரும் (இயக்குனர் உட்பட) சிறைத் தண்டனைக்கும் அபராதத்திற்கும் ஆளாவார்கள்.

முடிவுரை:

ஒரு நிறுவனத்தில் இயக்குனர்களின் நிலை மற்றும் முக்கியத்துவத்தை மேற்கண்டவாறு மதிப்பிடும் போது, "**இயக்குனர் என்பவர் பணி வழங்குநரின் பணி யாளரோ அல்லது நிறுவனத்தின் பணியாளரோ அல்லது வேறு யாருடைய பணி யாளரும் அல்ல. அவர் அந்நிறுவனத்தின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துபவர் ஆவார்**" என்பது தெளிவாகப் புலனாகும்.

74. Explain the powers of Directors in a Company. (ஒரு நிறுவனத் தின் இயக்குனர்களின் அதிகாரங்களை விவரி.)

(அல்லது)

Examine the powers of director. (இயக்குனரின் அதிகாரங்கள் யாவை?)

(அல்லது)

1. (1915) AC 705 : (1914-15) ALL ER 280

Powers of Directors - Write short notes. (நிறுவனத்தின் இயக்குனர்களின் அதிகாரங்கள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Explain the legal status, powers and duties of directors in a company - Write short notes. (ஒரு நிறுமத்தில் உள்ள இயக்குநர்களின் சட்ட நிலை, ஆற்றல்களை மற்றும் கடமைகளை விளக்குக.)

(அல்லது)

Define Director. What are the powers and duties of the Director? (இயக்குநர் என்ற சொல்லை விளக்கி அவரது அதிகாரம் மற்றும் கடமையினை எடுத்துரைக்கவும்.)

முன்னுரை:

ஒரு நிறுவனத்தின் இயக்குனரவை, அந்நிறுவனத்தால் அதிகாரமளிக்கப் பட்ட அனைத்து செயல்களைச் செய்யவும், அதுபோல் அனைத்து அதிகாரங்களை செயற்படுத்தவும் உரிமை படைத்தது என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 179(1)** கூறுகிறது. அதாவது, நிறுவனச் சட்டப்படி ஒரு நிறுவனம் செய்யக்கூடிய எல்லா செயல்களையும், நிறுவனம் கையாளக்கூடிய எல்லா அதிகாரங்களையும் படைத்தவர்களாக இயக்குனர்கள் உள்ளனர்.

எனினும், ஒரு நிறுவனத்தில் இயக்குனரவை கொண்டுள்ள அதிகாரங் களுக்கு பின்வரும் இரண்டு வரம்புகள் உள்ளன. அவை, (1) இயக்குனரவை தனது அதிகாரங்களை நிறுவனச் சட்டத்தின் வகைமுறைகளின்படியும், நிறுவனத்தின் அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளுக்குட்பட்டும் அல்லது அவற்றுடன் முரண்படாத மற்றும் அவற்றின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குமுறைகளில் அடங்கியுள்ள வகைமுறைகளின்படியும் செயற்படுத்த வேண்டும். (2) நிறுவனப் பொதுக் கூட்டத்தால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டும் செயற்படுத்த வேண்டும்.

இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது நிறுவனத்தின் அமைப்பு முறையேடு அல்லது செயல்முறை விதிகளின்படி நிறுவனப் பொதுக் கூட்டத்தில் அந்நிறுவனத்தால் செயற் படுத்தப்பட வேண்டிய அதிகாரம் எதையும் அல்லது செய்ய வேண்டிய செயல் எதையும் இயக்குனரவை செய்தல் ஆகாது என்றும் மேற்படி **பிரிவு 179(1)** விதிக்கிறது.

நிறுவனப் பொதுக் கூட்டத்தில் செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதி எதுவும் இயக்குனரவையின் முந்தைய செயல் எதையும் செல்லாததாக்கிவிடாது, அது அந்த ஒழுங்குமுறைவிதி செய்யப்படாதிருப்பின் எவ்வாறு செல்லத்தக்கதாக இருந்திருக் குமோ அவ்வாறே செல்லத்தக்கதாக இருக்கும் என்று **பிரிவு 179(2)** கூறுகிறது.

இயக்குனர்களின் அதிகாரங்கள் (Powers of Directors):

பிரிவு 179(3)-இன்படி நிறுவனத்திற்காக, அந்நிறுவனத்தின் இயக்கு னரவை பின்வரும் அதிகாரங்களை செயற்படுத்தும் உரிமையைக் கொண்டுள்ள

தாகும். ஆனால் அவ்வாறு செயற்படுத்துவதற்கு, இயக்குனரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அத்தகு அதிகாரங்கள் வருமாறு.

(a) பங்குதாரர்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையை செலுத்தக் கோரி அவர்களுக்கு அழைப்பு விடுக்கும் அதிகாரம்;

(b) ஒரு நிறுவனம் தனது பங்குகளை அல்லது பிற பிணையங்களை பிரிவு 68–இன் கீழ் திரும்ப வாங்குவதற்கான (buy-back) அதிகாரம்;

(c) கடனீட்டுப் பத்திரங்கள் உள்ளிட்ட பிணையங்களை இந்தியாவிலோ, இந்தியாவிற்கு வெளியிலோ வெளியிடும் அதிகாரம்;

(d) பணம் கடன் பெறும் அதிகாரம்;

(e) நிறுவனத்தின் நிதிகளை முதலீடு செய்யும் அதிகாரம்; மற்றும்

(f) கடன் வழங்கும் அதிகாரம் அல்லது கடன்கள் குறித்து பொறுப்புறுதி அல்லது பிணையம் வழங்கும் அதிகாரம்;

(g) நிதிநிலை அறிக்கை மற்றும் இயக்குனரவையின் அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கும் அதிகாரம்;

(h) நிறுவனத்தின் தொழிலை பல்திறப்படுத்துவதற்கான அதிகாரம்;

(i) ஒருங்கிணைத்தல், சேர்தல் அல்லது மறுநிர்மாணம் செய்தலுக்கான அதிகாரம்;

(j) ஒரு நிறுவனத்தை பொறுப்பேற்கும் அதிகாரம் அல்லது மற்றொரு நிறுவனத்தை கட்டுப்படுத்தும் அல்லது அதில் கணிசமான பங்குகளை அடையும் அதிகாரம்;

(k) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு வேறு விடயத்திற்கான அதிகாரம்.

இயக்குனரவை (இயக்குனர்களின்) அதிகாரங்களின் மீதான கட்டுப்பாடுகள் (Restrictions on Powers of Board):

பிரிவு 180-இன்படி நிறுவனத்தின் இசைவை அதன் சிறப்புத் தீர்மானம் ஒன்றின் வாயிலாகப் பெற்ற பின்னர்தான், இயக்குனரவை பின்வரும் அதிகாரங் களைச் செயற்படுத்த முடியும். அவை,–

(a) நிறுவனம் மேற்கொண்டு வரும் தொழில் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை விற்பனை செய்வது, குத்தகைக்கு விடுவது அல்லது வேறு விதத்தில் வகை செய்வது;

(b) நிறுவனங்கள் சேர்தல் அல்லது ஒருங்கிணைத்தலின் விளைவாகப் பெறப்பட்ட இழப்பீட்டுத் தொகையை, நம்பிக்கைக்குரிய பிணையங் களில் (Trust Securities) வேறுவிதமாக முதலீடு செய்வது;

(c) கடன் வாங்குவது;

(d) இயக்குனர் ஒருவரிடமிருந்து பாக்கி நிற்கும் கடன் எதையும் செலுத்துவது, அல்லது அதற்கான திருப்பிச் செலுத்துகைக்கு கால அவகாசம் வழங்குவது;

நிதியங்களுக்கு பங்களிக்கும் அதிகாரம் (Power to contribute to funds):

(1) **பிரிவு 181-இன்படி** நல்லெண்ணத்துடன் கூடிய தரும மற்றும் பிற நிதியங்களுக்கு (bonafide charitable and other funds) ஒரு நிறுவனத்தின் இயக்குனரவை தொகை ஏதும் நன்கொடையாக அளிக்கலாம். அதாவது பங்களிக்கலாம்.

மேற்கண்டவாறு நன்கொடையளிக்கப்படும் தொகையின் மொத்தமானது, நிதியாண்டு எதிலும், அதற்கு உடனடி முந்தைய மூன்று நிதியாண்டுகளுக்கான மொத்த இலாபங்களின் சராசரியில் அய்ந்து சதவீதத்திற்கும் அதிகமாகச் சென்றால், அதற்கு நிறுவனப் பொதுக் கூட்டத்தில் முன்னதாக அனுமதி பெறப்பட வேண்டும்.

(2) **பிரிவு 182-இன்படி** அரசு நிறுவனம் அல்லாத ஒரு நிறுவனம் அல்லது குறைந்தபட்சம் மூன்று நிதியாண்டுகளாக நிலைபெற்றிருக்கும் ஒரு நிறுவனம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசியல் கட்சி எதற்கும் தொகை எதையும் பங்களிக்கலாம் (Contribution to any political party). இது அதன் முந்தைய மூன்று நிதியாண்டுகளின் போது கிடைத்த மொத்த இலாபங்களின் சராசரியில் ஏழரை சதவீதத்திற்கும் அதிகமாகச் செல்லுதல் ஆகாது.

(3) **பிரிவு 183-இன்படி** நிறுவனமொன்றின் இயக்குனரவை, அல்லது அதன் அதிகாரங்களை செயற்படுத்தும் நபர் அல்லது அதிகார அமைப்பு எதுவும் அல்லது அந்நிறுவனமே தனது பொதுக் கூட்டத்தில் தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு தொகையை தேசிய பாதுகாப்பு நிதிக்கு அல்லது தேசிய பாதுகாப்புக்காக மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேறு நிதிக்கு நன்கொடையாக பங்களிக்கலாம் (Contribution to the National Defence Fund).

இயக்குனர்கள் மற்றும் பங்குதாரர்களின் அதிகாரங்கள் - ஒரு ஒப்பு நோக்கல்:

இயக்குனர்கள் பங்குதாரர்களின் முகவர்கள் அல்ல. எனவே, இருவரும் தங்களது அதிகாரவரம்பிற்குட்பட்டு செயலாற்ற முழு உரிமையுடையவர்கள். செயல் முறை விதிகளால் இயக்குனரவைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தில் பங்குதாரர்கள் பொதுவாகத் தலையிட முடியாது. அவ்வாறே பங்குதாரர்களுக்குள்ள அதிகாரத்திலும் இயக்குனர்கள் தலையிட முடியாது. ஆனால் இயக்குனர்கள் தங்களது அதிகாரங்களுக்கு முரணாக நடந்தால், பங்குதாரர்கள் அவர்கள் அதிகாரத்தில் தலையிடுவதற்கு உரிமையுடையவராகின்றனர். எனவே பின்வரும் காரணங்களுக்காக இயக்குனர்களின் அதிகாரத்தில் தலையிட பங்குதாரர்கள் உரிமையுடையவர்களாக உள்ளனர்.

1. இயக்குனர்கள் தீங்கெண்ணத்துடன் செயல்படும்போது.
2. இயக்குனரவை திறமையற்றிருக்கும்பொழுது.
3. நிறுவனத்தின் பணங்களை முதலீடு செய்வது.
4. கடன் வாங்குவது.
5. கடன் தருவது.

மேற்கூறப்பட்டவைகளில் நிறுவனத்தின் பணத்தை முதலீடு செய்வது, கடன் வாங்குவது, கடன் தருவது முதலான அதிகாரங்களை மற்ற இயக்குனர்களுக்கு சட்டமுறைப்படி தீர்மானம் செய்து அளிப்படைவு (Delegate) செய்யலாம்.

75. What are the qualifications required for appointment of a director? What are the disqualifications? How can director be removed from office? (இயக்குனராக நியமிக்கப்படுவதற்குத் தேவைப்படும் தகுதிகள் யாவை? அவரது தகுதியின்மைகள் யாவை? இயக்குனர் ஒருவர் அவரது பதவியிலிருந்து எவ்வாறு நீக்கப்படுகிறார்?)

(அல்லது)

Director Indentification Number - Write short notes. (இயக்குனர் அடையாள எண் - குறுகிய விடை எழுதுக)

(அல்லது)

Who are the persons disqualified from being as Directors? (இயக்குனர்களாவதற்கு தகுதியற்றவர்கள் யார் யார் ?)

(அல்லது)

Disqualifications of Directors - Write short notes. (இயக்குநர்களின் தகுதியின்மைகள் - குறுகிய விடை எழுதுக)

இயக்குனராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் (Qualifications of a person to be appointed as Director):

இயக்குனர்களின் நியமனம் பற்றி **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 152** தனது பல்வேறு வகைமுறைகளின் வழியாகக் கூறுகிறது. அவற்றில் பல வகைமுறைகள் ஒருவர் இயக்குனராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகளைக் கூறுகின்றன. முந்தைய 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் மாதிரி செயல்முறை விதிகளில் ஒருவர் இயக்குனராக நியமிக்கப்பட பங்குத் தகுதி பெற்றவராக, அதாவது அவர் தனக்குரிய தகுதிப் பங்குகளை (qualification shares) பெற்றவராக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. தற்போது அந்நடைமுறையை 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் நீக்கிவிட்டு, பல்வேறு புதிய வகைமுறைகளைக் கூறுகிறது. சற்று விரிவாக வருமாறு:–

1. முதலில் ஒரு நிறுவனத்தில் செய்யப்பட வேண்டிய **முதல் இயக்குனரின் (First Directors)** நியமனம் பற்றி **பிரிவு 152(1)** கூறுகிறது. இவரது நியமனம் பற்றி ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் வகை செய்யப்படவில்லையானால், அந்நிறுவனத்திற்கான இயக்குனர்கள் முறைப்படி நியமனம் செய்யப்படும் வரை அமைப்பு முறையேட்டில் கையொப்பமிட்ட தனிநபர்களான ஆதரவாளர்கள், அதன் முதல் இயக்குனர்களாக கருதப்படுவார்கள். அவ்வாறே ஒரு நபர் நிறுவனத்தைப் பொறுத்த வரை அதனைத் தோற்றுவித்த தனிநபரான உறுப்பினர் ஒருவரே அதன் முதல் இயக்குனர் ஆவார்.

2. இயக்குனர் ஒருவர் நிறுவனத்தால் அதன் பொதுக் கூட்டத்தில் நியமனம் செய்யப்படுதல் வேண்டும் என்று **பிரிவு 152(2)** கூறுகிறது.

3. பிரிவு 154–இன்படி இயக்குனர் அடையாள எண் (Director Identification Number) ஒதுக்கப்பெறாத ஒருவர் நியமனத்தின் இயக்குனராக நியமனம் செய்யப்படுதல் ஆகாது என்று **பிரிவு 152(3)** கூறுகிறது. இது ஒரு இயக்குனரின் முக்கியத் தகுதி ஆகும்.

4. இயக்குனராக நியமனம் செய்யப்பட உத்தேசிக்கப்படும் ஒவ்வொரு வரும் மேற்கண்ட இயக்குனர் அடையாள எண்ணை நிறுவனத்திடம் வழங்க வேண்டும். மேலும் அவர், தான் ஒரு இயக்குனராக ஆவதற்கு தகுதியின்மை ஏதும் தனக்கில்லை என்று விளம்புகை ஒன்றை யும் சமர்ப்பிக்க வேண்டும் என்று **பிரிவு 152(4)** கூறுகிறது.

5. இயக்குனராக நியமனம் செய்யப்பட்ட நபர் ஒருவர், அவ்வாறு பதவி ஏற்றுக் கொள்வதற்கு தனது இசைவை அளிக்காமல் அவர் இயக்குனராக செயல் படுதல் ஆகாது என்றும், அந்த இசைவை அவரது நியமனத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும் என்றும் **பிரிவு 152(5)** கூறுகிறது.

6. இயக்குனர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்கும் குறையாத நபர்களின் பதவிக்காலம் ஒவ்வொரு ஆண்டும் சுழற்சி முறையில் முடிவுக்கு வரும். அதாவது அவர்கள் தங்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற பொறுப்புடையவர்கள் என்று **பிரிவு 152(6)** கூறுகிறது.

7. இயக்குனர்கள் ஓய்வு பெறுவதால் ஒரு நிறுவனத்தில் ஏற்படும் காலியிடத்தை நிரப்புவது தொடர்பான வகைமுறைகளை **பிரிவு 152(7)** கூறுகிறது.

இயக்குனர் அடையாள எண் ஒதுக்கீட்டிற்கான நடைமுறை (Allotment of Director Idenfication Number):

ஒரு நிறுவனத்தில் ஒரு நபர் இயக்குனராக நியமனம் செய்யப்பட வேண்டுமெனில் அவர் இயக்குனர் அடையாள எண் ஒதுக்கப் பெற்றவராக இருக்க வேண்டும் என்று பிரிவு 152(3) கூறுவதை நாம் ஏற்கனவே மேலே கண்டோம். ஒரு இயக்குனர் நியமனத்தைப் பொறுத்தவரை ஒரு இயக்குனரின் முக்கியத் தகுதியாகும். இதற்கான

நடைமுறை பற்றி 153 முதல் 158 வரையிலான பிரிவுகள் கூறுகிறது. சற்று விரிவாக வருமாறு:–

1. ஒரு நிறுவனத்தின் இயக்குனராக நியமனம் பெற விழையும் நபர், இயக்குனர் அடையாள எண் ஒதுக்கீட்டிற்காக மைய அரசிடம் விண்ணப்பம் செய்தல் வேண்டும் என்று **பிரிவு 153** கூறுகிறது.

2. இவ்வாறு விண்ணப்பம் பெறப்பட்ட ஒரு மாதத்திற்குள் மைய அரசு அந்த விண்ணப்பதாரருக்கு இயக்குனர் அடையாள எண் ஒன்றை ஒதுக்கீடு செய்தல் வேண்டும் என்று **பிரிவு 154** கூறுகிறது.

3. ஏற்கனவே இயக்குனர் அடையாள எண் ஒதுக்கப்பட்ட தனிநபர் எவரும், மற்றொரு இயக்குனர் அடையாள எண்ணைப் பெறுவதற்காக அல்லது அடைவதற் காக விண்ணப்பம் ஏதும் செய்தல் ஆகாது என்று ஒன்றுக்கு மேற்பட்ட இயக்குனர் அடையாள எண் பெறுவதிலிருந்து ஒருவரை **பிரிவு 155** கூறுகிறது.

6. மைய அரசிடமிருந்து இயக்குனர் அடையாள எண் பெற்ற ஒருவர், அந்த எண் குறித்த விவரங்களை நிறுவனத்திடம் தகவல் தெரிவிக்க வேண்டும். மேலும் தான் இயக்குனராக உள்ள அனைத்து நிறுவனங்களிடமும் தெரிவிக்க வேண்டும் என்று **பிரிவு 156** கூறுகிறது.

7. இயக்குனர் அடையாள எண் குறித்த தகவலை மேற்கண்டவாறு பெற்ற நிறுவனம் ஒன்று, அவ்வாறு கிடைக்கப் பெற்றதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அதை பதிவாளரிடம் வழங்குதல் வேண்டும் என்று பிரிவு **157(1)** கூறுகிறது. இதில் ஒரு நிறுவனம் தவறுகை புரிந்தால், அதற்கும், அதன் அலுவலருக்கும் தண்டிக்கப்படுவர் என்று பிரிவு **157(2)** கூறுகிறது.

8. இயக்குனர் ஒருவருக்குத் தொடர்புடையதும், நிறுவனச் சட்டத்தின் கீழ் வழங்கப்படக் கோரப்படுவதுமான விவர அறிக்கை, தகவல் அல்லது விவரங்களில் அவருக்குரிய இயக்குனர் அடையாள எண்ணைச் சுட்டிக்காட்ட அவர் கடப்பாடு கொண்டவர் என்று **பிரிவு 158** கூறுகிறது.

தண்டனை (Punishment for contravention) – பிரிவு 159 :

இயக்குனர் நியமனம் தொடர்பாக மேற்படி 152, 155, 157 ஆகிய பிரிவுகள் கூறும் வகைமுறைகளுக்கு முரணாக அத்தகு தனிநபர் அல்லது இயக்குனர் எவரும் நடந்தால், அவருக்கு ஆறுமாதம் வரை நீட்டிக்கக் கூடிய சிறைவாசமும், அய்ம்பதா யிரம் வரை நீட்டிக்கக் கூடிய அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும் என்று **பிரிவு 159** கூறுகிறது.

நிறுவனங்கள் (இயக்குனர்கள் நியமனம் மற்றும் தகுதி) விதிகள், 2014 [The Companies (Appointment and Qualification of Directors) Rules, 2014]:

பெண் இயக்குனர் நியமனம், சுதந்திரமான இயக்குனர்களின் தகுதிகள்

மற்றும்நியமனம், இயக்குனர் அடையாள அட்டை பெறுவதற்கான, சரண் மற்றும் இரத்து செய்வதற்கான நடைமுறை, இயக்குனர் மற்றும் முக்கிய மேலாண்மை அலுவலர்களின் பதிவேடு, சிறிய பங்குதாரர்களுக்கான இயக்குனர், இவை தொடர்பாக தாக்கல் செய்வதற்கான பல்வேறு படிவங்களின் மாதிரி ஆகியன பற்றி **நிறுவனங்கள் (இயக்குனர்கள் நியமனம் மற்றும் தகுதி) விதிகள், 2014** விரிவாகக் கூறுகின்றன.

தகுதியின்மைகள் (Disqualifications):

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 164(1)**–இன்படி பின் வருவோர் நிறுவனமொன்றின் இயக்குனராக நியமனம் செய்யப்பட தகுதியற்றர்கள் ஆவார்.

1. திடமற்ற மனதினர், மேலும் அவ்வாறு திடமற்ற மனதினராக தகுதிறம் வாய்ந்த நீதிமன்றம் ஒன்றால் விளம்புகை செய்யப்பட்ட நபர் (Person of unsound mind);
2. விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையர் (An undischarged insolvent);
3. தன்னை ஒரு நொடிப்பு நிலையராக முடிவு செய்யும்படி நீதிமன்றத்திடம் விண்ணப்பித்து, அது நிலுவையில் உள்ள நபர்;
4. தீயொழுக்கக் குற்றத்திற்காக நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டு, அதன் பொருட்டு, ஆறு மாதங்களுக்கு குறையாமல் சிறைத் தண்டனை பெற்று, அத்தண்டனை முடிந்து அய்ந்தாண்டுகள் நிறைவு பெறாத நபர்;
5. இயக்குனராக நியமிக்கப்பட தகுதியற்றவராக்கும் ஆணை ஒன்று நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்டு, அது செயல் விளைவில் (அமலில்) உள்ள நபர்;
6. தான் கொண்டுள்ள பங்குகளுக்கான அழைப்புத் தொகையை, அது செலுத்தப்பட வேண்டிய இறுதித் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேல் செலுத்தாமல் பாக்கி வைத்திருக்கும் நபர்;
7. முந்தைய அய்ந்தாண்டுகளின் போது பிரிவு 188–இன் கீழ் தொடர்புயை தரப்பினர் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தொடர்பான குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவர்;
8. பிரிவு 152(3)–இன் வகைமுறையை நிறைவு செய்யாதவர் (அதாவது இயக்குனர் அடையாள எண் ஒதுக்கப் பெறாதவர்);

மேலும் (a) தொடர்ச்சியான மூன்று நிதியாண்டுகளுக்கு நிதிநிலை அறிக்கைகள் அல்லது ஆண்டு விவர அறிக்கைகளை தாக்கல் செய்யாத நிறுவனமொன்றில், அல்லது (b) தன்னால் ஏற்கப்பட்ட வைப்பீடுகளை திருப்பிச் செலுத்துவதில் அல்லது அதற்கு வட்டி செலுத்துவதில் அல்லது கடனீட்டுப் பத்திரங்களை அதன்

கெடு தேதியில் மீட்பதில் அல்லது அதன் பேரில் பாக்கியாக நிற்கும் வட்டியை செலுத்துவதில் தவறுகை புரிந்த செய்த நிறுவனமொன்றின் இயக்குனர் ஒருவர் அல்லது ஏற்கனவே இயக்குனராக இருந்திருக்கின்ற ஒருவர், அந்த நிறுவனத்தில் ஒரு இயக்குனராக மறு நியமனம் செய்யப்படுதல் ஆகாது என்றும், அவ்வாறு தவறுகை புரிந்த தேதியிலிருந்து அய்ந்தாண்டுகளுக்கான ஒரு காலஅளவுக்கு வேறு நிறுவனங்களில் இயக்குனராக நியமனம் பெற முடியாது என்றும் **பிரிவு 164(2)** கூறுகிறது.

ஒரு தனியார் நிறுவனம், ஒருவரை இயக்குனராகத் பதவியில் அமர்த்திக் கொள்ள, மேற்கண்ட தகுதியின்மைகளுடன் கூடுதலாக வேறு சில தகுதியின்மைகளையும் தனது செயல்முறை விதிகளின் வாயிலாக வகுத்துக் கொள்ளலாம் என்று **பிரிவு 164(3)** கூறுகிறது.

மேற்படி தகுதியின்மைகள் மட்டுமல்லாது, **பிரிவு 165**–ஆனது மற்றொரு தகுதியின்மையையும் குறிப்பிடுகிறது. அதன்படி, ஒரு நபர் ஒரே நேரத்தில் இருபதுக்கும் அதிகமான நிறுவனங்களில் இயக்குனராக பதவி வகித்தல் கூடாது என்று கூறுகிறது. எனினும் நபர் ஒருவர் இயக்குனராக நியமனம் செய்யப்படுவதற்கான பொது நிறுவனங்களின் அதிகபட்ச எண்ணிக்கை பத்து ஆகும்.

இயக்குனரின் பதவி நீக்கம் (Removal of Directors):

(1) *நிறுவனத்தால் நீக்கம்* (Removal by the Company) - *பிரிவு 169*

பிரிவு 169(1)–இன்படி, இயக்குனர் ஒருவரின் பதவிக் காலம் முடிவதற்கு முன்பு, **சாதாரண தீர்மானம்** (Ordinary resolution) ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம், அவரை ஒரு நிறுவனம் அப்பதவியிலிருந்து நீக்கலாம். அதாவது பதவியில் இருக்கும் இயக்குனர் ஒருவரை சாதாரண தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்த நிறுவனம் நீக்கலாம். எனினும் இந்நடைமுறை பிரிவு 242–இன்படி தீர்ப்பாயத்தால் நியமனம் செய்யப்பட்ட இயக்குனர் ஒருவருக்குப் பொருந்தாது. மேலும் விகிதாச்சார பிரதிநிதித்துவத்துவத்தின்படி மொத்த இயக் குனர்கள் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினரைத் தேர்ந்தெடுக்கும் முறையை பிரிவு 162–இன்படி பின்பற்றும் ஓர் நிறுவனத்திற்குப் பொருந்தாது.

இயக்குனர் ஒருவரை மேற்கண்டவாறு நீக்குவதற்கு, அல்லது அவ்வாறு நீக்கம் செய்யப்பட்ட இடத்தில் வேறொருவரை நியமனம் செய்வதற்கு நிறைவேற்றப் படும் தீர்மானம் எதற்கும் **சிறப்பு அறிவிப்பு** (special notice) ஒன்று கொடுக்கப்பட வேண்டும் என்று **பிரிவு 169(2)** கூறுகிறது.

இயக்குனரை நீக்கம் செய்வதற்கான தீர்மானத்திற்கான சிறப்பு அறிவிப்பு கிடைக்கப் பெறுவதன் பேரில், அதன் நகல் ஒன்றை உடனடியாக சம்பந்தப்பட்ட இயக்குனருக்கு அந்நிறுவனம் அனுப்புதல் வேண்டும். இதையடுத்து தான் ஏன் நீக்கப் படக் கூடாது என்பதற்கான தனது ஆட்சேபணைகளை (வாதங்களை) பொதுக் கூட்ட தீர்மானத்தின் போது முன் வைக்க அவ்வியக்குனருக்கு உரிமை உண்டு என்று **பிரிவு 169(3)** கூறுகிறது.

சிறப்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட இயக்குனர் தனது வாதங்களை எழுத்துப்பூர்வமாக முன் வைத்து, அதை நிறுவன உறுப்பினர்களுக்கு அறிவிக்கை செய்யும்படி வேண்டினால், அந்நிறுவனம், நேரம் அனுமதித்தால் (அ) நீக்கம் செய்யப்படவுள்ள இயக்குனர் எழுத்துப்பூர்வமாக தனது வாதங்களைச் செய்துள்ளார் என்ற சங்கதியை உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படும் தீர்மானத்தின் மீதான அறிவிப்பு எதிலும் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் (ஆ) கூட்டத்திற்கான அறிவிப்பு அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அந்த இயக்குனர் முன் வைத்த எழுத்துப் பூர்வமான வாதத்தின் (ஆட்சேபணையின்) நகல் ஒன்றை அனுப்புதல் வேண்டும். ஒருக்கால் நேரமின்மை காரணமாகவோ, நிறுவனத்தின் தவறுகையினாலோ அவ்வாறு நகல் அனுப்பப்படவில்லையானால், கூட்டத்தின் போது அவரது (இயக்குனரின்) வாதத்தை வாசிக்கும்படி அவரை நிறுவனம் கேட்டுக் கொள்ளலாம்.

எனினும் நிறுவனமொன்றால் அல்லது பாதிக்கப்பட்டுள்ள நபர் வேறு எவராலும் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரில், நீக்கம் செய்யப்படவுள்ள இயக்குநர் ஒருவர் மேற்கண்டவாறு வாதத்தை முன் வைக்க அல்லது அதை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துக் கோருவதன் மூலம் தனக்குள்ள உரிமையை தவறாகப் பயன்படுத்தி அவதூறான விடயத்திற்காக வீண் விளம்பரம் தேடிக் கொள்கிறார் என்று தீர்ப்பாயம் மனநிறைவடைந்தால், அவ்விண்ணப்பத்தின் மீதான நிறுவனத்தின் செலவுத் தொகையை முழுவதுமாகவோ, அல்லது பகுதியாகவோ செலுத்தும்படி அவ்வியக்குனருக்கு ஆணையிடலாம். அந்நேர்வில் அவரது வாதத்தின் நகலை மேற்கண்டவாறு உறுப்பினர்களுக்கு அனுப்பத் தேவையில்லை. அதுபோல் கூட்டத்தின் போது அதை வாசிக்க வேண்டியதுமில்லை. இவ்வாறு **பிரிவு 169(4)** கூறுகிறது.

இயக்குனரின் நீக்கம் காரணமாக உருவான காலியிடத்தை, எந்தப் பொதுக் கூட்டத்தில் அவர் நீக்கப்பட்டரோ அதே பொதுக்கூட்டத்தில், மற்றொரு இயக்குனரின் நியமனத்தால் நிரப்பப்படலாம். எனினும் இதற்கும் முன் கண்டவாறு சிறப்பு அறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று **பிரிவு 169(5)** கூறுகிறது.

நீக்கம் செய்யப்பட்ட இடத்தில் நியமனம் செய்யப்பட்ட இயக்குனர் ஒருவர், தனக்கு முன்னால் பதவியில் இருந்த இயக்குனர் நீக்கப்படாமல் இருந்திருந்தால், அவர் எந்தத் தேதி வரையில் பதவியில் இருந்திருப்பாரோ அந்த தேதி வரை அப் பதவியை வகிக்கலாம் என்று **பிரிவு 169(6)** கூறுகிறது.

மேற்படி காலியிடம் நிரப்பப்படவில்லையானால், அதை இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி ஒரு தற்காலிக காலியிடமாக (casual vacancy) நிரப்பலாம் என்று **பிரிவு 169(7)** கூறுகிறது. எனினும் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட இயக்குனர் ஒருவரை மீண்டும் இயக்குனராக இயக்குனரவை மறுநியமனம் செய்தலாகாது.

ஒப்பந்த வரைவுரைகளின்படி அல்லது இயக்குனராக நியமிக்கப்பட்ட வரைவுரைகளின்படி அல்லது இயக்குனராக நியமனம் செய்யப்பட்டதை முடிவுறுத்தும் வேறு நியமனம் குறித்து செலுத்தப்படத்தக்க இழப்பீடு அல்லது தீங்கீடு எதையும் பெற இப்பிரிவின் கீழ் நீக்கம் செய்யப்பட்ட நபர் ஒருவரை இழக்கக் செய்யுமாறு இப்பிரிவில் உள்ள எதையும் எடுத்துக் கொள்ளுதல் ஆகாது. மேலும் இந்தச் சட்டத்தின் வேறு

வகைமுறைகளின் கீழ் இயக்குனர் ஒருவரை நீக்கம் செய்வதற்கான அதிகாரம் எதிலி ருந்தும் குறைவானதாக்கியதாக இப்பிரிவில் உள்ள எதையும் எடுத்துக் கொள்ளதல் ஆகாது என்று **பிரிவு 169(8)** கூறுகிறது.

(2) தீர்ப்பாயத்தால் நீக்கம் (Removal by Tribunal) - பிரிவு 242:

ஒரு நிறுவனம் தனது விவகாரங்களை பொது நலனுக்கு குந்தகமான முறை யில் நடத்துகிறது என்றோ, அல்லது தன்னை அல்லது வேறு உறுப்பினர்களுக்கு குந்தகமான முறையில் நடத்துகிறது என்றோ அல்லது அடக்குமுறைப்படுத்துகிறது என்றோ அல்லது அது தனது விவகாரங்களை தனது நலன்களுக்கே குந்தகமாக நடத்துகிறது என்றோ நிறுவனத்தின் உறுப்பினர் எவரும் புகார் கூறி, உரிய ஆணை ஒன்றுக்காக, நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்யலாம். அதே போன்று ஒரு நிறுவனம் தனது விவகாரங்களை பொது நலனுக்கு குந்தகமான முறையில் நடத்துகிறது என்று மைய அரசு அபிப்பிராயப்பட்டால், அதுவும் உரிய ஆணை ஒன்றுக்காக தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்யலாம் என்று **பிரிவு 241** கூறுகிறது.

இதையடுத்து வரும் பிரிவு 242 இது குறித்து தீர்ப்பாயத்திற்கு உள்ள அதிகாரங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. நிறுவனத்தின் உறுப்பினர் அல்லது மைய அரசு மேற்படி பிரிவு 241–இன்படி செய்யும் விண்ணப்பத்தின் பேரில், அந்நிறுவ னம் தனது விவகாரங்களை மேற்கண்டவாறு குந்தமாக நடத்துகிறது என்று தீர்ப்பாயம் அபிப்பிராயப்பட்டால், அது பிரிவு 242(2)–இல் கூறப்பட்டுள்ள பல்வேறு ஆணைகளில் உரியவற்றைப் பிறப்பிக்கலாம் என்று **பிரிவு 242(1)** கூறுகிறது.

அந்த ஆணைகளில் இயக்குனர்களின் நீக்கம் தொடர்பாக தீர்ப்பாயம் பிறப் பிக்கும் ஆணைகளைப் பற்றி மட்டும் இங்கு கண்டால் போதுமானதாகும். அதாவது, மேற்படி விண்ணப்பத்தின் பேரில், நிறுவனச் சட்டத்தீர்ப்பாயமானது,

1. சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கும் மற்றும் மேலாண்மை இயக்குனர் அல்லது வேறு இயக்குனர் அல்லது மேலாளருக்கு இடையில் ஏற்பட்ட உடன்படிக்கை எதையும் முடிவுறுத்த, இரத்து செய்ய அல்லது மாற்ற ஆணை பிறப்பிக்கலாம். **[பிரிவு 242(2)(e)]**.

2. அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர், மேலாளர் அல்லது இயக்குனர்களில் எவரையும் நீக்கம் செய்ய ஆணை பிறப்பிக்கலாம் **[பிரிவு 242(2)(h)]**.

3. மேற்கண்டவாறு நீக்கம் செய்யப்பட்டதற்குப் பிறகு அந்த இடத்தில் புதிய மேலாண்மை இயக்குனர் அல்லது மேலாளர் நியமனம் செய்யப்படுவதற்கான முறையை வகுத்துரைக்கலாம் **[பிரிவு 242(2)(j)]**.

76. How is the company management by undesirable persons prevented by the Company Law? (விரும்பத்தகாத நபர்கள் நிறுவன மேலாண்மையில் பங்கேற்றல் எவ்வாறு நிறுவனச் சட்டத்தால் தடுக்கப்படு கிறது?)

(தகுதி வாய்ந்த நபர்கள் ஒரு நிறுவனத்தின் மேலாண்மையை நடத்த வேண்டும் என்று நிறுவனச் சட்டம் எதிர்பார்க்கிறது. இங்கு அச்சட்டம் தகுதியற்ற நபர்கள் சிலரைக் கூறுகிறது. அவர்கள் 'விரும்பத்தகாத நபர்கள்' (undesirable persons) எனப்படுகின்றனர். அத்தகு நபர்கள் நிறுவன மேலாண்மையில் பங்கேற்றால், அவர்களுக்கு தண்டனை விதிக்கிறது. இது குறித்து 1956–ஆம் ஆண்டின் பழைய நிறுவனங்கள் தனது பிரிவு 202 மற்றும் 203–இன் வாயிலாகக் கூறியது. தற்போது இவை 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனங்கள் சட்டத்தில் இடம் பெறவில்லை. எனவே விரிவாக விவரிக்கப்படவில்லை –ஆர்.)

77. Discuss in detail the liabilities of the directors under the Companies Act. (நிறுவனச் சட்டத்தின் கீழ் இயக்குனர்களுடைய பொறுப்புகளை விளக்கமாக விவாதிக்க.)

(அல்லது)

Enumerate the duties of the Directors imposed upon them by law. (இயக்குனநர்களுக்கு சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள கடமைகளைக் கூறுக.)

(அல்லது)

Examine the liabilities of a director for (a) Ultra vires acts (b) negligence (c) Breach of trust (d) Mis-feasance. (ஒரு இயக்குனரின் (அ) வரம்பு மீறிய செயல்கள் (ஆ) கவனமின்மை (இ) பொறுப்புரிமை அமைப்பு மீறல் (ஈ) சட்டமுறைப்பிழை கடப்பாடுகளை ஆராய்க.)

முன்னுரை:

நிறுவனச் சட்டத்தின் கீழ் இயக்குனர்களுடைய பொறுப்புகளை (கடமைகளை) இரண்டு கோணங்களிலிருந்து விவாதிக்கலாம். அதாவது, பங்குதாரர்களுக்கு எதிரான பொறுப்புகள் மற்றும் மூன்றாவது நபர்களுக்கு எதிரான பொறுப்புகள். முதலில் பங்குதாரர்களுக்கு எதிரான பொறுப்புகளை ஆய்வோம்.

1. பங்குதாரர்களுக்கு எதிரான பொறுப்புகள்:

(அ) பொறுப்பாண்மை மீறுகை (நம்பிக்கை துரோகம்) (Breach of Trust) (அல்லது) முழு நம்பிக்கைக் கடப்பாடு (Fiduciary Obligation):

நிறுவனத்தின் பொறுப்பாண்மையராக (Trustee) இயக்குனர்கள் உள்ளனர், என்று நாம் முன்பே கண்டோம். இவர்கள் நிறுவனத்தின் நன்மை ஒன்றை மட்டுமே மனதில் கொண்டு, அதற்காகவே முழு மூச்சுடன் செயலாற்ற வேண்டும். நம்பிக்கைக்குரிய முறையில் நடக்க வேண்டும். இதை மீறி நம்பிக்கைத் துரோகம் செய்து ஏதேனும் இலாபமடைந்தால், அவ்விலாபத்தினை நிறுவனம் அவர்களிட

மிருந்து மீளப் பெறலாம். இதைப் பின்வரும் வழக்கு விளக்குகிறது.

Cook v. Deeks[1]

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நிறுவனம் இரயில்வே ஒப்பந்தப் பணி செய்து கொண்டிருந்தது. இதன் இயக்குனர்கள், நிறுவனத்திற்கு வர வேண்டிய ஒரு ஒப்பந்த வாய்ப்பை தங்களுக்கு சாதமாகப் பயன்படுத்திக் கொண்டு, நிறுவனத்தில் தங்களுக் குள்ள 3/4 பங்கு வாக்குரிமையின் மூலம் அவ்வொப்பந்தத்தில் நிறுவனத்திற்கு எந்த உரிமையும் கிடையாது என்று தீர்மானித்து, அந்த ஒப்பந்தத்தின் வாயிலாகப் பெற்ற பலன் அனைத்தையும் தங்களுடையதாக்கிக் கொண்டனர். சுருங்கக்கூறின், நிறுவனத்திற்கு வந்த ஒப்பந்த வாய்ப்பு ஒன்றை அவர்கள் தட்டிப் பறித்து, அதைத் தங்கள் பெயரில் செய்து கொண்டு பலனடைந்தனர்.

ஒப்பந்தத்தின் வாயிலாகப் பெற்ற பலன் நியாயப்படி நிறுவனத்தையே சேர்ந்த தாகும் என்றும், அதைத் தங்களுடையதாக்கிக் கொள்ள இயக்குனர்கள் தங்கள் வாக்குரிமை அதிகாரத்தை செல்லத்தக்க விதத்தில் பயன்படுத்த முடியாது என்றும் நீதிமன்றம் கூறி, நிறுவனத்தின் நம்பிக்கையை மீறி இயக்குனர்கள் பெற்ற பலனை, அவர்கள் நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்று உத்திரவிட்டது.

(ஆ) கவனக் குறைவு (Negligence) :

இயக்குனர்கள் நிறுவனத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொண் டால் மட்டும் போதாது; அவர்கள் உரிய கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் தங்களி டம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற வேண்டும். மாறாக, கவனக் குறைவுடன் அல்லது அஜாக்கிரதையுடன் செயல்பட்டு, நட்டம் ஏதும் விளைவித்தால், அதற்கு பங்குதாரர்களுக்கு பொறுப்பாகிறார்கள். தங்களது சொந்த விவகாரங்களில் இயக்குனர்கள் எவ்வாறு உரிய கவனத்துடனும், எச்சரிக்கையுடனும், திறமையுடனும் செயல்படுவார்களோ, அவ்வாறே நிறுவனத்தின் விவகாரங்களிலும் செயல்பட வேண்டும்.

In Re City Equitable Fire Insurance Company[2]

இவ்வழக்கில், 'ஆ' என்பவர் மேற்கண்ட நிறுவனத்தின் இயக்குனர் ஆவார். அந்நிறுவனம் தனது தொழிலை நடத்த முடியாமல், நிலைகுலைந்து போனது. எனவே அதன் கலைப்பிற்கு ஆணையிடப்பட்டது. அந்நிறுவனத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்த பொழுது, அந்நிறுவனம் தனது இருப்பில் கொண்டிருக்க வேண்டிய 12,00,000 பவுண்டு பணம் குறைந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அந் நிறுவனம் நிலைகுலைந்து போனதற்கு காரணம், தவறான முதலீடு, வராக் கடன், கையாடல் போன்றவைகளேயாகும். இந்த இழப்புகள் யாவும், மேற்படி 'ஆ' எனும் இயக்குனரின் கவனக்குறைவால் நிகழ்ந்தே என்று முடிவு செய்யப்பட்டு, அவரை மோசடி செய்த குற்றத்திற்காக நீதிமன்றம் தண்டித்தது.

---

1. (1916) 1 AC 554 : (1916-17) ALL Er Rep. 285
2. (1925) Ch 407 : (1924) ALL ER Re 485

கவனக்குறைவு, தவறுகை, சட்டமுறைப்பிழை (misfeasance), கடமை மீறுகை (breach of duty) அல்லது நம்பிக்கை மீறல் (breach of trust) ஆகிய வற்றினால் எழும் பொறுப்புகளிலிருந்து விடுவித்துக் கொள்ளும் பொருட்டு, நிறு வனத்தின் செயல்முறை விதிகளில் செய்யப்படும் வகைமுறைகள் அல்லது நிறுவனம் செய்து கொள்ளும் உடன்பாடுகள் இல்லாநிலையதாகும்.

(இ) வரம்பு மீறிய செயல்கள் (Ultra vires acts):

இயக்குனர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீறி, அவர் செயல் எதையும் புரிந்தால், எடுத்துக்காட்டாக, நிறுவனச் சட்டம், நிறுவனத்தின் அமைப்பு முறையேடு அல்லது செயல்முறை விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி அல்லாமல் வேறு விதங்களில் பணம் கடன் வாங்குதல் அல்லது நிறுவனத்தின் சொத்தினை அடைமானம் வைத்தல் போன்றவை, வரம்பு மீறிய செயல்கள் ஆகும். எனினும் இயக்குனர்கள் செய்த வரம்பு மீறிய செயல் செல்லுமென பொதுக் கூட்டத்தில் பங்கு தாரர்கள் ஏற்புறுதி (Retification) செய்யலாம். மேலும் அச்செயலை, நிறுவனத் தைக் கட்டுபடுத்துவதாக ஆக்கலாம். ஆனால் ஏற்புறுதி செய்யும்பொழுது பின்வரும் இரண்டு விடயங்களை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். (1) ஏற்புறுதி செய்த பங்குதாரர்கள், இயக்குனர்களின் செயலைப் பற்றி முழுவதும் அறிந்தவர்களாக இருக்க வேண்டும். (2) கூட்டத்தின் பொழுது தோன்றியிருந்த அனைத்து பங்குதாரர் களும் ஏற்புறுதி செய்ய வேண்டும்.

அமைப்பு முறையேட்டில் வரையறுக்கப்பட்டுள்ள நிறுவன அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட செயல்களை அதாவது வரம்பு மீறிய செயல்களை இயக்குனர்கள் புரிந்தால், அதற்காக அவர்கள் தங்கள் நிறுவனத்திற்கே பொறுப்பாக நேரிடும். எடுத் துக்காட்டாக, நிறுவனத்தின் நிதியை தவறாக செலளித்தால், அதை மீண்டும் நிறு வனத்திற்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்கு இயக்குனர்கள் ஆளாவார்கள். அதா வது நிறுவன நிதியை இயக்குனர்கள் பின்வரும் செயல்களுக்கு வழங்கினால், அது அந்நிதியை தவறாக செலவளித்தாகும். அத்தொகையை அவர்கள் நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

1. நிறுவன மூலதனத்திலிருந்து பங்காயதாயம் வழங்குதல்;
2. நிறுவன தோற்றுவிப்பாளர்களுக்கு மீதூதியம் வழங்குதல்;
3. ஒரு நிறுவனம் தான் வாங்க அதிகாரமில்லாத சொத்தை ஒன்று அதன் இயக்குனர் வாங்குதல்;
4. மூலதனத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்காமல் மூலதனத்தை திருப்பித் தருதல்.

(ஈ) சக இயக்குனர்களின் செயல் (Act of Co-directors):

ஒரு இயக்குனர், தான் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ இசைவு அளித்தாலன்றி, தன்னுடைய சக இயக்குனர் செய்த செயல்களுக்கும் புரிந்த தவறுகைகளுக்கும் பொறுப்பாகமாட்டார். ஆனால் பொறுப்பாண்மை மீறலுக்கு

(நம்பிக்கை துரோகத்திற்கு) இயக்குனர்கள் அனைவரும், தனித்தனியாக அல்லது சேர்ந்து பொறுப்பேற்க வேண்டும்.

(உ) சட்டமுறை பிழை (Misfeasance):

நிறுவனத்தின் செயல்களை இயக்குனர்கள் செய்யும் பொழுது, சட்டக் கடமைகள் எவற்றையாவது மீறி, அதன் மூலம் நிறுவனத்திற்கு நட்டம் விளைவிப்பது, சட்டமுறைப் பிழையாகும். எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தைக்கு பங்கு ஒதுக்கீடு செய்வது அல்லது கடன் கொடுத்தவர் ஒருவருக்கு மோசடியான முன்னுரிமை அளிப் பது அல்லது செயல்முறை விதிகளை மீறுவது ஆகியவற்றை சட்டமுறைப் பிழையாகக் குறிப்பிடலாம். இயக்குனர் இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

2. மூன்றாம் நபர்களுக்கு எதிரான பொறுப்புகள் :

(அ) உரிமையியல் பொறுப்புகள் (Civil Liabilities):

நிறுவனத்துடன் மூன்றாம் நபர்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களுக்கு அதன் இயக்குனர்கள் தனிப்பட்ட பொறுப்பாகமாட்டார்கள்; மாறாக அதற்கு நிறுவனமே பொறுப்பாகும். அதேபோல் ஒரு நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்தம், அந்நிறுவனத்தின் அதிகாரவரம்பை மீறியதாக இருப்பின், அதற்கும் இயக்குனர்கள் பொறுப்பாக மாட்டார்கள். ஏனெனில் அத்தகு ஒப்பந்தங்கள் சட்டத்தில் இல்லாநிலைய தாகும். ஆனால் நிறுவனமொன்றின் இயக்குனர் ஒருவர், அவ்வாறு அதன் இயக்குன ராக செயல்படும் சங்கதியை மறைத்து, தன்னுடைய சொந்தப் பெயரில் மூன்றாம் நபர் ஒருவருடன் ஒப்பந்தம் எதையும் செய்து கொண்டு, அதனால் நிறுவனத்திற்கு பாதிப்பு ஏதும் ஏற்பட்டால், அதற்கு அவ்வியக்குனரே சொந்தப் பொறுப்பாவார்.

மேலும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பாக அதன் இயக்குனர் ஒருவர் மோசடிக் குற்றம் புரியுமிடத்து, அல்லது வஞ்சகம் எதையும் செய்யுமிடத்து அல்லது தீங்குச் செயலுக்கு காரணமாகுமிடத்து, அவர் அந்த நடவடிக்கைகளினால் பாதிக்கப் பட்ட நபர்களுக்கு இழப்பீடு தர வேண்டிய சொந்தப் பொறுப்புக்கு ஆளாவார். அதே போல் செய்ய வேண்டிய செயல்களை செய்யாமல் விடுத்தமையினால் ஏற்படும் கேடு களுக்கும் (omissions) இயக்குனர்கள் மூன்றாம் நபர்களுக்குப் பொறுப்பாவார்கள்.

நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் மூன்றாம் நபர்களுக்கு இயக்குனர்கள் பின் வரும் சூழ்நிலைகளில் தனிப்பட்ட முறையில் பொறுப்பாகிறார்கள். பாதிக்கப்பட்ட மூன்றாம் நபர் இழப்பீடு கோரி இயக்குனர்கள் மீது வழக்கிடலாம். அவை,

1. நிறுவனச் சட்டத்தின் பிரிவு 26–இன்படி ஒரு திட்ட அறிவிப்பில் குறிப் பிடப்பட வேண்டிய விடயங்களை குறிப்பிடாமல் அதனை இயக்குனர்கள் பொது மக்களுக்கு வெளியிட்டால்,

2. பிரிவு 35–இன்படி உண்மையற்ற மற்றும் தவறாக வழிகாட்டும் கூற்றுகள் அடங்கிய திட்ட அறிவிப்பை வெளியிட்டு அதன் மூலம் பங்குகளை அல்லது கடனீட்டுப் பத்திரங்களை வாங்க பொது மக்களுக்கு அழைப்பு விடுத்தால், அவர்களுக்கு ஏற்படும் நட்டத்திற்கும் இழப்புக்கும் இயக்குனர்கள் பொறுப்பாவார்கள்.

3. பிரிவு 39–இன்படி, திட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச பங்குத் தொகைக்கு ஆதரவு சேராத நிலையில் பங்குகள் அல்லது கடனீட்டுப்பத்திரங் களை ஒதுக்கீடு செய்தால்.

4. பிரிவு 40–இன்படி பங்கு மாற்றகத்தில் ஈடுபடுத்தப்படவுள்ள பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் தொடர்பான வகைமுறைகளுக்கு முரணாக நடந்தால்.

5. திட்ட அறிவிப்பின் முதல் வெளியிடுகையிலிருந்து 120 நாட்களுக்குள் பங்குகளை நிறுவனத்தால் ஒதுக்க முடியாத நிலையில், பங்குகளுக்காக விண்ணப்ப தாரர்களிடமிருந்து பெற்ற பணத்தை அடுத்த 10 நாட்களுக்குள் அவர்களுக்கு திருப் பிச் செலுத்தத் தவறினால்.

6. நிறுவனத்தின் சார்பில் இயக்குனர்கள் செய்த மோசடி நடவடிக்கை களின் காரணமாக அந்நிறுவனத்திற்கு கடன் ஏதும் ஏற்பட்டிருந்தால், அதன் கலைப் பின் போது அவ்வியக்குனர்கள் அக்கடனுக்கு பொறுப்பாவார்கள்.

நிறுவனத்தின் முகவர்களாக இயக்குனர்கள் செயல்பட்டாலும், அவர்கள் புரி யும் தீங்குச் செயல்களுக்கு அவர்களே தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும்.

(ஆ) குற்றவியல் பொறுப்பு (Criminal Liability) :

2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனச் சட்டத்தின் வருகையால், இயக்குனர் கள் உள்ளிட்ட நிறுவன அலுவலர்கள் மீது சுமத்தப்படும் குற்றவியல் பொறுப்பின் அளவு பன்மடங்கு அதிகரித்துள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. அதாவது, நிறுவனச் சட்டத்தின் பெரும்பாலான பிரிவுகளின் முடிவில், அப்பிரிவில் கூறப்பட் டுள்ள வகைமுறைகளுக்கு முரணாக நிறுவனமோ, அதன் அலுவலர்களோ நடந்தால், அவர்களுக்கு தண்டனையாக விதிக்கப்படும் சிறைவாசம் மற்றும் அபராதமானது ஒரு தனிப்பிரிவாகவே கொடுக்கப்பட்டிருக்கும். இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க மோசடி, திரித்துக்காட்டுதல், நிதியைக் கையாடல் செய்தல், பொய் யுரைத்தல் ஆகிய குற்றங்கள் தற்போது நிறுவனச் சட்டத்திலேயே கொடுக்கப்பட்டு அவற்றுக்கான தண்டனைகளின் வகைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. எனவே இன்று ஒரு நிறுவனத்தை தொடங்கி நடத்த வேண்டும் என்றால் மிகக் கவனமாக இருக்க வேண்டும். சிறிது தவறினாலும் மிகக் கடுமையான அபராதம் அல்லது சிறை வாசத்திற்கு பொறுப்பாக நேரிடும் என்பதில் எள்ளவும் மாற்றுக் கருத்தில்லை.

இங்கு மற்றொரு விடயத்தையும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். அதாவது நிறுவன இயக்குனர்கள் மீது நேரடியாகவும், குறித்தவகையிலும் குற்றவியல் பொறுப்பை சுமத்தும் பல்வேறு சட்டப்பிரிவுகள் நிறுவனச் சட்டத்தில் உள்ளன. அதே நேரத்தில் மேலும் பல சட்டப்பிரிவுகளில் அபராதம் மற்றும் நேர்விற்கேற்றவாறு சிறைத் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய 'தவறுகை புரிந்த அந்நிறுவனமும் அதன் அலுவலர் ஒவ்வொருவரும்' என்ற சொற்றொடர்கள் இடம் பெறுவது வழக்கமாகும். இதில் வரும் **'தவறுகை புரிந்த அலுவலர் ஒருவர்' (Officer who is in default)** என்ற சொற் றொடரில் யாரெல்லாம் அடங்குவர் என்பது குறித்து அதற்கான வரையறையை **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 2(60)** பின்வருமாறு விளக்குகிறது.

மேற்படி சொற்டொரில்,

1. முழு நேர இயக்குனர்கள் (whole time directors)

2. முக்கிய மேலாண்மை அலுவலர்கள் (key managerial personnel)

3. முக்கிய மேலாண்மை அலுவலர்கள் இல்லாத நேர்வில், இயக்குனரவை யால் இதற்கென குறித்துரைக்கப்படுபவரும், அத்தகு பதவிக்கு தங்கள் இசைவை அளித்தவர்களுமான அத்தகு இயக்குனர் அல்லது இயக்குனர்கள்

4. இயக்குனரவையின் உடனடி அதிகாரத்தின் கீழ் வரும் நபர் எவரும் அல்லது பராமரிப்பு, கணக்குகள் அல்லது பதிவேடுகளை தாக்கல் செய்தல் மற்றும் அழித்தல், அதிகாரமளித்தல் உள்ளடங்கிய பொறுப்புடைமை எதுவும் சுமத்தப் பெற்ற முக்கிய மேலாண்மை அலுவலர் எவரும்

5. நிறுவனத்தின் இயக்குனரவை யாருடைய அறிவுரை, ஏவுரைகள் அல்லது வழிமுறைகளுக்கிணங்க செயல்படுவதை வழக்கமாகக் கொண்டுள்ளதோ, அந்நபர் எவரும். எனினும் இதில் தொழில்முறையில் இயக்குனரவைக்கு அறிவுரை வழங்கும் நபர் ஒருவர் அடங்கமாட்டார்.

6. இயக்குனர் ஒவ்வொருவரும்

7. நிறுவனத்தின் பங்குகள் எதையும் வெளியிடு அல்லது மாற்றம் செய்வது தொடர்பான விடயங்களில், பங்கு மாற்றம் செய்யும் முகவர்கள், பதிவாளர்கள் மற்றும் வணிக வங்கிகள்.

எனவே தவறுகை புரிந்த அலுவலர் ஒருவர் என்ற சொற்றொடரில் இயக் குனர் உள்ளிட்ட நிறுவன அலுவலர்கள் பலரும் குற்றப் பொறுப்புக்கு ஆளாகிறார்கள்.

பொதுவாக தவறுகை புரியும் அல்லது சட்ட வகைமுறைகளுக்கு முரணாக நடக்கும் இயக்குனர் அல்லது அலுவலருக்கான தண்டனையானது, சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவிலேயே வகுத்துரைக்கப்பட்டிருக்கும். எனினும் அவ்வாறு வகை செய்யப் படாத நேர்வில், அவர்களது தவறுகைச் செயலுக்காக பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கக் கூடிய அபராதமும், அத்தவறுகை தொடரும் ஒன்றாக இருக்கும் நேர்வில், அத்தவறுகையின் முதல் நாளுக்கு அடுத்து வரும் நாளொன்றுக்கு 1000 ரூபாய் வரை நீட்டிக்கக் கூடிய அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும் என்று 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 450 கூறுகிறது.

தண்டனைக்கான விவரங்கள் சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவிலேயே வகை செய் யப்பட்ட பிரிவுகள் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் மொத்தம் 17 சட்டப் பிரிவுகளில் வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக திட்ட அறிவிப்பில் உண்மையற்ற கூற்றுகளை செய்யும் நிறுவன அலுவலருக்கு மூன்றாண்டுகள் வரை யிலான சிறைவாசம் அல்லது 50000 ரூபாயிலிருந்து 3 இலட்சம் வரையிலான அபரா தம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும் என்று பிரிவு 26(9)–இல் வகை செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே சொன்னவாறு இப்படி மொத்தம் 17 சட்டப்பிரிவுகள் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் உள்ளன.

இயக்குனர்களின் வேறு சில பொறுப்புகள் (கடமைகள்):

1. இயக்குனரவைக் கூட்டங்களுக்கு இயக்குனர் தவறாமல் வர வேண்டும் (Duty to attend Board meetings). அவர், மூன்று கூட்டங்களுக்கு தொடர்ச்சி யாக வரத் தவறினால், அவரது பதவி பறி போகும் [பிரிவு 67(1)(b)].

2. நிறுவனத்துடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களில் அல்லது ஏற்பாடு களில் அல்லது நிறுவனம் வாங்கும், விற்கும் சொத்துக்களில் இயக்குனர்கள் தனிப் பட்ட முறையில் தமக்குள்ள சொந்த நலன் முழுவதையும் தெளிவாக இயக்குன ரவைக்கு அறிவித்து அவற்றிற்கு ஒப்புதல் பெற வேண்டும் (Duty to Disclosure of interest by Director). இல்லாவிடில் செல்லாது (பிரிவு 184).

3. இயக்குனரின் பொறுப்புடைமை அறிக்கையை வரைந்து, அதை இயக் குனரவையின் அறிக்கையுடன் இணைத்து பதிவாளருக்கு அனுப்பும் கடமை (Duty to prepare Director's Responsibility Statement and send to the Registrar alongwith Board's Report) இயக்குனருக்கு உண்டு [பிரிவு 134(1)(c)].

2. தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை மீண்டும் மற்றொருவருக்கு அளிப்படைவு செய்ய (ஒப்படைக்க) இயக்குனரால் இயலாது (Duty not to delegate). ஆனால் சில விதிவிலக்குகளின் கீழ் அதிகாரத்தை அளிப்படைவு செய்யலாம். உதாரணமாக, தொழில் முறைப்படி அவசிமேற்பட்டால் அல்லது ஒரு செயல், எழுத்து வேலையைச் சேர்ந்ததாயின், அதை அளிப்படைவு செய்யலாம்.

78. Corporate Social Responsibility - Write short notes. (நிறுவன சமூகப் பொறுப்புடைமை - குறுகிய விடை எழுதுக.)

நிறுவனங்களுக்கு உள்ள வணிக அல்லது தொழிற் பொறுப்புடைமைக்கும் கூடுதலாக சமூகப் பொறுப்புடைமையையும் 2013–இல் வந்த புதிய நிறுவனங்கள் சட்டம் விதிக்கிறது. இதற்காக அது ஒரு புதிய வகைமுறையை **பிரிவு 135**–இன் கீழ் செய்துள்ளது.நிறுவனங்கள் தங்கள் பங்குதாரர்களுக்கு ஆதாயம் தேடித் தருவதோடு மட்டுமல்லாமல், சமூகத்திற்கும் நன்மை ஏதும் செய்ய வேண்டும் என்ற நோக்கில் மேற்படி வகைமுறை நிறுவனச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது மிகை யல்ல. மேற்படி பிரிவு 135–இன்படி, நிதியாண்டு எதிலும் ஒரு குறிப்பிட்ட நிகர மதிப்பு அல்லது பயன்பாட்டுத் தொகை அல்லது நிகர இலாபம் கொண்ட நிறுவனம் ஒவ் வொன்றும், இயக்குனரவையில் நிறுவன சமூகப் பொறுப்புடைக் குழு (Corporate Social Responsibility Committee) ஒன்றைக் கட்டமைக்க வேண்டும். இது அந் நிறுவனம் தனது உடனடி முந்தைய மூன்று நிதியாண்டுகளில் ஈட்டிய சராசரி நிகர இலாபத்தில் குறைந்தபட்சம் 2 சதவீதத்தை வறுமை ஒழித்தல், கல்வி மேம்பாடு, பாலின சமத்தும், சுற்றுச்சூழல் மேம்பாடு போன்ற சமூக நல நோக்கங்களுக்கு செல விடுவதை உறுதி செய்ய வேண்டும். 2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பட்டி யல் VII–இல் அத்தகு செயல்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. அதை செயற்படுத்துவ தற்கான கொள்கை (Policy) ஒன்றை மேற்படி குழு வகுக்க வேண்டும்.

மேலாண்மை அலுவலர்கள்
[Managerial Personnel]

2

79. Explain the provision of the Companies Act in regard to appointment, term of office and remuneration of a Managing Director. What are the disqualifications to be a Managing Director? Can a person be appointed as Managing Director of more than one Company? (மேலாண்மை இயக்குனரை நியமித்தல், பதவிக்காலம் மற்றும் ஊதியம் தொடர்பான நிறுவனச் சட்டத்தின் விதிகளை குறிப்பிடுக. மேலாண்மை இயக்குனராக இருக்க தகுதியின்மைகள் யாவை? ஒரு நபர் ஒரு நிறுவனத்திற்கு மேற்பட்டு மேலாண்மை இயக்குனராக நியமிக்கப்பட முடியுமா?)

(அல்லது)

Managing Director - Write short notes. (மேலாண்மை இயக்குனர் - குறுகிய விடை எழுதுக.)

மேலாண்மை இயக்குனர் - யார்?

ஒரு நிறுவனத்தை நடத்துவதற்கு மிக அதிகமான அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ள இயக்குனர், மேலாண்மை இயக்குனர் என்றழைக்கப்படுகிறார். இந்த அதிகாரங்கள் அவருக்கு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டால் அல்லது செயல் முறை விதிகளால் அல்லது நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் ஒரு சாதாரண தீர்மானத்தால் அல்லது இயக்குனரவையின் தீர்மானத்தால் அளிக்கப் படலாம். மேலாண்மை இயக்குனர் என்ற பதத்தில் மேலாண்மை இயக்குனரின் பதவியை வகிக்கும் இயக்குனர் ஒருவரும் உள்ளடங்குவார். இவ்வாறு 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 2[54]** மேலாண்மை இயக்குனர் என்ற பதத்தை வரையறுக்கிறது.

மேலாண்மை இயக்குனருக்கு மேற்கண்டவாறு வழங்கப்பட்ட அதிகாரங்கள் இரத்து செய்யப்படலாம் அல்லது மாற்றப்படலாம் அல்லது குறைக்கப்படலாம். ஆனால் அவரது பதவியையே பறித்துக் கொண்டால், அதற்காக அவருக்கு இழப்பீடு தர வேண் டும். மேலும் ஒரு மேலாண்மை இயக்குனரின் பதவி முடிவடையுமாறு நிறுவனத்தின் செயல்முறைவிதிகள் மாற்றப்பட்டால், அந்நிறுவனம் அவருக்கு இழப்பீடு தர வேண் டும்.

இங்கு மேலாண்மை இயக்குனர், முழு நேர இயக்குனர், மேலாளர் ஆகியோர் **மேலாண்மை அலுவலர்கள்** என்ற சொற்றொடருக்குள் அடங்குவர். எனினும் இவர்களுக்குள் சில வேறுபாடுகள் உண்டு.

மேலாண்மை இயக்குனரை நியமித்தல்:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 196–ஆவது பிரிவானது **மேலாண்மை இயக்குனர், முழு நேர இயக்குனர் அல்லது மேலாளரின் நியமனம் [Appointment of managing director, whole time director or manager]** பற்றி பல்வேறு வகைமுறைகளின் கீழ் கூறுகிறது. அவை வருமாறு:–

நிறுவனம் எதுவும் ஒரே நேரத்தில் மேலாண்மை இயக்குனர் ஒருவரையும் மேலாளர் ஒருவரையும் நியமனம் செய்தல் அல்லது பணியமர்த்துதல் ஆகாது என்று பிரிவு 196(1) கூறுகிறது.

நிறுவனம் எதுவும் தனது மேலாண்மை இயக்குனராக, முழு நேர இயக்கு னராக அல்லது மேலாளராக நபர் எவரையும் அய்ந்து ஆண்டுகள் காலத்திற்கும் மேலான ஒரு காலகட்டத்திற்கு நியமனம் அல்லது மறு நியமனம் செய்தல் ஆகாது என்று பிரிவு 196(2) கூறுகிறது.

நிறுவனம் எதுவும் பின்வரும் நபர் எவரையும் மேலாண்மை இயக்குனராக, முழு நேர இயக்குனராக அல்லது மேலாளராக பணி நியமனம் செய்தல் ஆகாது அல்லது அவர்களை அவ்வாறு அப்பணியில் தொடர்ந்து வைத்திருத்தல் ஆகாது, என்று பிரிவு 196(3) கூறுகிறது. அவர்கள்,

(அ) 21 வயதிற்கும் குறைவாக உள்ள நபர் அல்லது 70 வயதை அடைந்த

நபர்;

(ஆ) விடுவிக்கப்பெறாத நொடிப்பு நிலையரானவர் அல்லது நொடிப்பு நிலையராக எப்போதேனும் தீர்மானிக்கப்பட்டிருப்பவர்;

(இ) தனக்கு கடனீந்தவர்களுக்கு பணம் செலுத்துவதை எப்போதேனும் நிறுத்தி வைத்தவர் அல்லது அவர்களுடன் எப்போதேனும் கடன்தீர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பவர்; அல்லது

(ஈ) குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தால் எப்போதேனும் தண்டிக்கப்பட்டு, ஆறு மாதங்களுக்கு மேலானதொரு கால அளவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்

மேலாண்மை இயக்குனர், முழு நேர இயக்குனர் அல்லது மேலாளரின் நியமனம் குறித்த வரைவுரைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அவர்களுக்கு செலுத்தப்படத்தக்க ஊதியத்திற்கு இயக்குனரவை அளிக்க வேண்டிய ஒப்புதல் மற்றும் அது அதன் அடுத்த பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தால் அளிக்கப்படும் ஒப்புதலுக்குட்பட்டது என்பது குறித்தும், இதில் பிரிவு 197–இன் வகைமுறைகள் மற்றும் பட்டியல் V அடங்கியுள்ள நிபந்தனைகள் குறித்தும் பிரிவு 196(4) கூறுகிறது.

மேற்படியார்களின் நியமனத்திற்கு நிறுவனப் பொதுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்படவில்லையானால், அத்தகு ஒப்புதலுக்கு முன் அவர்களால் செய்யப்பட்ட செயல் எதுவும் செல்லாததாக கருதப்படுதல் ஆகாது என்று பிரிவு 196(5) கூறுகிறது.

மேலாண்மை இயக்குனரின் பதவிக் காலம் (Term of Office of the Managing Director):

எந்நிறுவனமும், தனி நபர் ஒருவரை அதன் மேலாண்மை இயக்குனராக அய்ந்தாண்டுகளுக்கும் மேற்பட்ட ஒரு காலத்திற்காக நியமனம் செய்தல் கூடாது என்று பிரிவு 196(2) கூறுகிறது. அதாவது ஒருவரை மேலாண்மை இயக்குநராக அய்ந்தாண்டுகள் காலம் வரைதான் பதவியில் அமர்த்த வேண்டும். இந்த அய்ந்தாண்டுகள் காலம் முடிவடைந்தவுடன், அவர் தனது மேலாண்மை இயக்குனர் பதவியை விட்டு வெளியேறிவிட்டதாக கருதப்பட வேண்டும் (deemed to have vacated his office). எனினும் மேலாண்மை இயக்குனரின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன் ஓராண்டிற்கு முன்பே அவரையே மேலாண்மை இயக்குனராக மறு–நியமனம் (re-appointment) செய்தல் ஆகாது.

மேலாண்மை இயக்குனரின் ஊதியம் (Remuneration) :

ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் மேலாண்மை இயக்குனர், முழு நேர இயக்குனர், மேலாளர் ஆகியோர் உள்ளிட்ட இயக்குனர்களுக்கு பொது நிறுவனம் ஒன்றால் செலுத்தப்பட வேண்டிய மேலாண்மை ஊதியமானது அந்நிறுவனம் அந்நிதியாண்டில் ஈட்டிய நிகர இலாபத்தில் (net profits) 11% –க்கும் அதிகமாகச் செல்லக் கூடாது. ஒரே ஒரு மேலாண்மை இயக்குனரை மட்டும் ஒரு நிறுவனம் பெற்றிருப்பின், அவருக்கு செலுத்தப்பட வேண்டிய ஊதியம் நிறுவனத்தின் நிகர இலாபத்தில் (net

profits) 5%-க்கும் அதிகமாகச் செல்லக் கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட மேலாண்மை இயக்குனர்களை அந்நிறுவனம் பெற்றிருப்பின், அவர்கள் அனைவருக்கும் சேர்த்து செலுத்தப்பட வேண்டிய ஊதியம் நிறுவனத்தின் இலாபத்தில் 10%-க்கும் அதிகமாகச் செல்லக் கூடாது (பிரிவு 197).

மேலாண்மை இயக்குனராக இருக்க தகுதியின்மைகள் (Disqualifications):

நாம் ஏற்கனவே கண்ட பிரிவு 196(3)–இன்படி பின்வருவோர்கள் மேலாண்மை இயக்குநர்களாக பதவியில் அமர்த்தப்பட தகுதியற்றவர்களாவார்கள்.

(அ) 21 வயதிற்கும் குறைவாக உள்ள நபர் அல்லது 70 வயதை அடைந்த நபர்;

(ஆ) விடுவிக்கப்பெறாத நொடிப்பு நிலையரானவர் அல்லது நொடிப்பு நிலையராக எப்போதேனும் தீர்மானிக்கப்பட்டிருப்பவர்;

(இ) தனக்கு கடனீந்தவர்களுக்கு பணம் செலுத்துவதை எப்போதேனும் நிறுத்தி வைத்தவர் அல்லது அவர்களுடன் எப்போதேனும் கடன்தீர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பவர்; அல்லது

(ஈ) குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தால் எப்போதேனும் தண்டிக்கப்பட்டு, ஆறு மாதங்களுக்கு மேலானதொரு காலஅளவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்

ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு மேலாண்மை இயக்குனராக நியமிக்கப்பட முடியுமா?

ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு (அதன் துணை நிறுவனம் தவிர) மேலாண்மை இயக்குனராக நியமனம் செய்யப்பட முடியாது. அவ்வாறு அவர் ஒரே நேரத்தில் பதவி வகிக்கவும் முடியாது. எனினும், ஒரு நிறுவனத்தில் மேலாண்மை இயக்குனராக இருப்பவரை, மற்றொரு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனராக நியமனம் செய்ய வேண்டுமெனில், அந்நிறுவனத்தின் இயக்குனரவைக் கூட்டத்தில் அவரைத் தங்கள் மேலாண்மை இயக்குனராக நியமனம் செய்வதற்காக அக்கூட்டத்திற்கு வந்துள்ள அனைத்து இயக்குனர்களும் ஏகமனதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிற வேண்டும் என்று பிரிவு 203(3) கூறுகிறது.

80. Manager - Write short notes. (மேலாளர் - குறுகிய விடை எழுதுக.)

மேலாளர் – யார்?

'மேலாளர்' என்பவர் நிறுவன விவகாரங்களை கணிசமான அளவில் அல்லது முழுவதுமாக மேலாண்மை செய்யும் ஒரு தனிநபராவார். இவர், நிறுவன இயக்குனரவையின் கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் ஏவுரைக்கு உட்பட்டவர். மேலும் இப்பதத்தில் மேலாளர் ஒருவரின் பதவியை வகிக்கும் இயக்குனர் ஒருவர் மற்றும் வேறு

நபர் எவரும் உள்ளடங்குவார் என்று நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 2(53)** கூறுகிறது.

மேலாண்மை இயக்குனரும் மேலாளரும்:

மேலாண்மை இயக்குனரும், மேலாளரும் நிறுவன விவகாரங்களை கணிசமான அளவில் அல்லது முழுவதுமாக மேலாண்மை செய்பவர்களே. இந்த அளவில் இவர்கள் இருவரும் ஒத்துப் போகிறார்கள். ஆனால் இவர்களிடையே ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது. அதாவது, மேலாண்மை இயக்குனர் என்பவர், இயக்குனரவையின் ஒரு அங்கமாவார்; அதற்குக் கீழ்ப்படிந்தவர் அல்ல. மேலும் அவர் நிறுவனத்தின் பணியாளர் அல்ல. ஆனால், மேலாளர் என்பவர், இயக்குனரவையின் கண்காணிப்பிற்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்பட்ட, அதன் ஏவுரைகளுக்குக் கட்டுப்பட்ட, நிறுவனத்திடமிருந்து ஊதியம் பெறும் ஒரு பணியாளர் (paid executive) ஆவர்.

மேலாளரின் நியமனம்:

ஒரு மேலாண்மை இயக்குனரை நியமிப்பதற்கு எத்தகு வகைமுறைகள் பொருந்துமோ, அவை யாவும் மேலாளரை நியமிப்பதற்கும் பொருந்தும். அவற்றை நாம் ஏற்கனவே, சென்ற வினாவின் விடையில் பிரிவு 196–இன் கீழ் கண்டுள்ளோம்.

யாரை மேலாளராக நியமித்தல் கூடாது?

நிறுவனம் எதுவும் நிறுமம் (firm) அல்லது கூட்டுரு அமைப்பு (body corporate) அல்லது சங்கத்தை (association) தனது மேலாளராக நியமித்தல் கூடாது.

மேலாளராக நியமிக்கப்பட தகுதியின்மைகள் (Disqualifications):

பிரிவு 196(3)–இன் கீழ் நாம் ஏற்கனவே கண்ட தகுதியின்மைகள் அனைத்தும் அப்படியே மேலாளராக நியமிக்கப்படும் நபருக்கும் பொருந்தும்.

எத்தனை நிறுவனங்களுக்கு ஒருவர் மேலாளராக பதவி வகிக்கலாம்?

நாம் சென்ற வினாவின் விடையில் "ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு மேலாண்மை இயக்குனராக நியமிக்கப்பட முடியுமா?" என்ற தலைப்பில் பிரிவு 203(3)–இன் கீழ் கண்ட வகைமுறைகள் மேலாளர் நிலைக்கும் பொருந்துவதாகும். எனவே அவற்றை வாசித்துக் கொள்க.

மேலாளரின் ஊதியம்:

முந்தைய வினாவின் விடையில் கண்ட பிரிவு 197–இல் காண்க.

மேலாளரின் பதவிக் காலம்:

மேலாண்மை இயக்குனரின் பதவிக்காலம் தொடர்பாக பிரிவு 196 கூறும் வகைமுறைகள் அனைத்தும் மேலாளர் ஒருவரின் பதவிக்காலத்திற்கும் பொருந்தும்.

3

கூட்டங்கள்
[Meetings]

81. Briefly indicate the various kinds of meetings with their respective purpose dealt with under the Companies Act. (நிறுவனச் சட்டத்தின் கீழ் வைக்கப் பட்டுள்ள பல்வேறு கூட்டங்களைப் பற்றி சுருக்கமாகக் குறிப் பிட்டு அதன் நோக்கங்களையும் குறிப்பிடுக.)

(அல்லது)

What are the different kinds of meetings of share-holders provided under the Indian Companies Act? State their importance. (இந்திய நிறுவனச் சட்டத்தின் கீழ் உள்ள பங்குதாரர்களின் பல்வேறு வகையான கூட்டங்கள் யாவை? அதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Enumerate the different kinds of meeting as contemplated under the Companies Act. (நிறுவனச் சட்டத்தின் கீழ் உள்ள கூறப்பட்டுள்ள பல்வேறு வகையான கூட்டங்களைப் பற்றிக் கூறுக.)

(அல்லது)

Enumerate the various kinds of meetings of a company as envisaged by the Companies Act, 1956, bringing out the essential functions of each of them. (1956-ன் நிறுவனங்கள் சட்டத்தால் கூறப்பட்டுள்ள பல்வேறு வகையான கூட்டங்களை, அதன் முக்கியப் பணிகளை எடுத்துரைத்து விளக்குக.)

(அல்லது)

Explain the different kinds of meetings as provided under the Company's Act and point out when and how they are held. (நிறுவனச் சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள கூட்டங்களின் பல்வேறு வகைகளை விளக்கி, அவை எப்பொழுது மற்றும் எவ்வாறு நடத்தப்படலாம் என்பதை சுட்டிக் காட்டுக.)

(அல்லது)

Explain the annual general meeting of a company, its objectives and the requirements for holding a valid annual general meeting. (ஒரு நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தையும் அதன் முக்கியத்துவத்தையும், செல்லத்தக்க ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்குத் தேவையானவற்றையும் பற்றி விளக்குக.)

(அல்லது)

Requirements for a valid meeting - Write short notes. (தகுதியான கூட்டத்திற்கு தேவையானவைகள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Kinds of Meeting - Write short notes. (கூட்டங்களின் வகைகள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Annual General Meeting - Write short notes. (வருடாந்திர பொதுக் கூட்டம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Extraordinary General Meeting - Write short notes. (சிறப்புப் பொதுக் கூட்டம் - குறுகிய விடை எழுதுக.)

கூட்டங்கள் (Meetings):

நிறுவன விவகாரங்களின் பெரும்பகுதி, கூட்டங்களினால் முடிவு செய்யப் படுகிறது. நிறுவனங்களைப் பொறுத்தவரை கூட்டங்களும் தீர்மானங்களும் முக்கிய மானதாகும். 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனங்கள் சட்டத்தின்படி, ஒரு நிறுவனத் தின் கூட்டங்களை பின்வரும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. வருடாந்திர பொதுக் கூட்டம் (Annual General Meeting);
2. சிறப்பு பொதுக் கூட்டம் (Extraordinary General Meeting).

முக்கிய கவனத்திற்கு

முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 165–இன் கீழ் சட்டமுறையான கூட்டம் (Statutory Meeting) மற்றும் சட்ட முறையான அறிவிக்கை (Statutory Notice) தொடர்பான வகைமுறை கள் அடங்கி இருந்தன. ஆனால் அப்பிரிவு தற்போது 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனங்கள் சட்டத்தினால் விடப்பட்டுவிட்டன. எனவே நிறுவனங் களின் சட்டமுறையான கூட்டத்திற்கு வகைமுறைகள் ஏதும் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் கிடையாது என்பதை கவனத்தில் கொள்க. இதனால் முன்பு 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டப்படி மூவகையாக இருந்த நிறுவனக் கூட்டம் தற்போது 2013–ஆம் ஆண்டு சட்டப்படி இரண்டு வகையாக சுருங்கிவிட்டது. இந்நிலைப்பாட்டை மீறி சட்டமுறையான கூட்டம் பற்றிய வினா ஏதும் ஒருக்கால் தேர்வில் தவறுத லாகக் கேட்கப்பட்டுவிட்டால், அது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தால் விடப்பட்டுவிட்டது என்றும், தற்போது செயல்விளைவில் இல்லை என்றும் தயங்காமல் விடையளிக்கலாம். மாறாக விவரிக்க வேண்டிய அவசியமில்லை. காரணம், தற்போதைய புதிய பாடத்திட்டமே 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

கூட்டங்களின் பல்வேறு வகைகள் (Various Kinds of Meetings):

1. ஆண்டுப் பொதுக் கூட்டம் (Annual General Meeting):

இக்கூட்டம் எப்பொழுது கூட்டப்பட வேண்டும்? : ஆண்டுப் பொதுக் கூட்டம் குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 96** விளக்குகிறது. அதன்படி, ஒரு நபர் நிறுவனம் அல்லாத நிறுவனம் ஒவ்வொன்றும் தனது உறுப்பினர் களை அழைத்து ஆண்டிற்கொரு முறை பொதுக் கூட்டம் ஒன்றை நடத்த வேண்டும். இவ்வாறு நடத்தப்படும் கூட்டம், '**ஆண்டுப் பொதுக் கூட்டம்**' எனப்படுகிறது. இக் கூட்டத்தை அழைப்பதற்காக அனுப்பப்படும் அறிவிப்புகளில் அது 'ஆண்டுப் பொதுக்

கூட்டம்' என்பதை அறிவிக்க வேண்டும். நிறுவனத்தின் ஒரு ஆண்டுப் பொதுக் கூட்டத் தேதிக்கும் அதற்கு அடுத்த ஆண்டுப் பொதுக் கூட்டத் தேதிக்கும் இடையில் பதினைந்து மாதங்களுக்கும் மேல் இடைவெளி ஏற்பட்டிருக்கக் கூடாது.

எனினும் நிறுவனத்தின் முதல் ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் நேர்வில், அது நிறுவனத்தின் முதல் நிதியாண்டு முடிவுத் தேதியிலிருந்து ஒன்பது மாதங்களுக் குள் நடத்தப்படுதல் வேண்டும். மற்ற நேர்வுகளில் ஆறு மாதங்களுக்குள் நடத்தப்பட வேண்டும்.

ஒரு நிறுவனம் தனது முதல் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடத்துகிறது என்றால், அந்நிறுவனம் கூட்டுருவாக்கப்பட்ட (பதிவான) ஆண்டிலேயே நடத்தப்பட வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை.

முதல் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைத் தவிர, மற்ற ஆண்டுப் பொதுக் கூட்டங்களைப் பொறுத்தவரை அதை நடத்துவதற்கான காலத்தை தனிப்பட்ட காரணம் எதையும் முன்னிட்டு, மூன்று மாதங்களுக்கும் மிகாத ஒரு கால அளவுக்கு நீட்டிக்கும் அதிகாரம் பதிவாளருக்கு உண்டு **[பிரிவு 96(1)]**.

ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒவ்வொன்றும் தேசிய விடுமுறை நாள் ஒன்றாக அல்லாத நாள் எதிலும் அலுவல் நேரங்களில் அதாவது காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிக்குள் அழைக்கப்பட வேண்டும். இதை அந்நிறுவனத்தின் பதிவு அலு வலகத்தில் நடத்தலாம் அல்லது அப்பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநகரம், நகரம் அல்லது கிராமத்திற்குட்பட்ட வேறு இடம் எதிலும் நடத்தலாம். **[பிரிவு 96(2)]**.

ஒரு நிறுவனம் மேற்படி பிரிவு 96–இல் கூறப்பட்டவாறு ஆண்டுப் பொதுக் கூட்டத்தை கூட்டுவதில் தவறுகை புரிந்தால், அதன் உறுப்பினர் எவரேனும் செய்யும் விண்ணப்பத்தின் பேரில், நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை கூட்டுவதற்கான அழைப்பு விடுக்கலாம் அல்லது அவ்வாறு கூட்டும்படி நிறுவனத் திற்கு ஏவுரைக்கலாம். மேலும் அது உசிதமெனக் கருதலாகும் அத்தகு துணை அல்லது விளைவுறுத்தும் ஏவுரைகளையும் வழங்கலாம் **[பிரிவு 97(1)]**.

இவ்வாறு தீர்ப்பாயத்தால் கூட்டப்படும் பொதுக் கூட்டம், அந்நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமாகக் கருதப்படல் வேண்டும் **[பிரிவு 97(2)]**.

இக்கூட்டத்தின் முக்கிய நோக்கங்கள் (அல்லது) இக்கூட்டத்தின் முக் கியத்துவம் : (1) ஒரு நிறுவனத்தின் அறுதியான கட்டுப்பாடு அதன் பங்குதாரர்களின் கைகளில் உள்ளது. எனவே, அவர்களை இப்பொதுக் கூட்டத்தின் வாயிலாக ஆண்டிற் கொரு முறை ஒன்று திரட்டி, நிறுவனத்தின் செயல்பாடு குறித்து அவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பளித்தல், இக்கூட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இதனால் அவர்கள் நிறுவனத்தின் நிலையையும், அதன் மேலாண்மை அலுவலர் களின் செயற்பாடுகளையும் அறிந்து கொள்கின்றனர். எனவே பங்குதாரர்களின் நலனைக் காக்க உதவும் ஒரு கருவி என்று இக்கூட்டத்தை வருணிக்கலாம்.

(2) இக்கூட்டத்தின் வாயிலாகத்தான், இயக்குனர்கள் ஓய்வு பெறவோ அல்லது அவர்கள் தங்களையே மீண்டும் இயக்குனர்களாக தேர்ந்தெடுக்க வேண்டும்

என்று பங்குதாரர்களைக் கேட்கவோ முடியும். எனவே இயக்குனர் ஒருவரை மீண்டும் இயக்குனராகத் தேர்ந்தெடுக்க மறுத்தல் என்பது இக்கூட்டத்தின் மூலமாகத்தான் பங்குதாரர்களுக்குச் சாத்தியமாகிறது. எனவே நிறுவன மேலாண்மையின் மீதான உண்மையான கட்டுப்பாட்டை, இக்கூட்டத்தின் வாயிலாக பங்குதாரர்கள் பெறுகின்றனர் எனில் அது மிகையன்று.

(3) இக்கூட்டத்தில்தான் நிறுவனத்தின் வளர்ச்சியையும், அதன் எதிர்கால வாய்ப்புகளையும் பங்குதாரர்கள் ஆய்கின்றனர்.

சிறப்பு அலுவல் மற்றும் சாதாரண அலுவல் [பிரிவு 102]: மேற்கண்ட நோக்கங்கள் தவிர, ஒரு நிறுவனம் பின்வரும் தனது இரு அலுவல்களை இக்கூட்டத்தின் வழியாகத்தான் மேற்கொள்கின்றது. அவை (1) சிறப்பு அலுவல் (Special business); (2) சாதாரண அலுவல் (Ordinary business). அதற்கான நடைமுறை பற்றி **பிரிவு 102** பின்வருமாறு கூறுகின்றது.

(1) பொதுக் கூட்டம் ஒன்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப்பு அலுவலின் இனம் ஒவ்வொன்றையும் குறித்த பின்வரும் முக்கியச் சங்கதிளை குறிப்பிடும் கூற்று ஒன்று, அக்கூட்டத்தை அழைப்பதற்கான அறிவிப்புடன் இணைத்தல் வேண்டும். அதாவது,

(i) இயக்குனர் அல்லது மேலாளர் ஒவ்வொருவரும்

(ii) மற்ற முக்கிய மேலாண்மை அலுவலர்கள் ஒவ்வொருவரும்

(iii) மேற்கண்ட நபர்களுடைய உறவினர்கள்

முன்வைக்கும் இனம் ஒவ்வொன்றையும் குறித்த தன்மை அல்லது நிதிசார் அல்லது வேறுவித நலன் ஏதுமிருப்பின் அது. மேலும் மேற்படி இனங்களின் பொருள், பரவெல்லை மற்றும் விளைவுகள் பற்றி நிறுவன உறுப்பினர்கள் புரிந்து கொண்டு அதன் மீது ஒரு முடிவுக்கு வருவதற்கு ஏதுவாக இருக்கும் வேறு தகவல் அல்லது சங்கதிகள் எதுவும். **[பிரிவு 102(1)].**

(2) பின்வரும் அலுவல்கள் ஒரு நிறுவனத்தால் அதன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரண அலுவல்கள் ஆகும்.

(i) நிதிநிலை உரைகள், மற்றும் இயக்குனரவை மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கைகளை நிறுவனம் பரிசீலனை செய்தல்;

(ii) பங்காதாயத்தை நிறுவனம் விளம்புகை செய்வது;

(iii) ஒய்வு பெறுமிடத்தில் இயக்குனர்களை நியமனம் செய்வது;

(iv) தணிக்கையாளர்களை நியமனம் செய்வது மற்றும் அவர்களது ஊதியத்தை நிர்ணயம் செய்வது; **[பிரிவு 102(2)].**

மேற்கண்ட சாதாரண அலுவல்கள் தவிர பொதுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து அலுவல்களும் சிறப்பு அலுவல்களாகவே பாவிக்கப்படும். அதே

போல் நிறுவனத்தின் வேறு கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் அலுவல் ஒவ்வொன்றும் சிறப்பு அலுவல்களாகவே கருதப்படும்.

ஆண்டுப் பொதுக் கூட்டத்தை கூட்டாததால் ஏற்படும் விளைவுகள் (Consequences of default in holding the annual general meeting): (1) ஒரு நிறுவனம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை மேற்கண்டவாறு கூட்டவில்லையானால், அதன் உறுப்பினர் ஒருவர் அளிக்கும் விண்ணப்பத்தின் பேரில், தீர்ப்பாயம் அக்கூட்டத்தை கூட்டும்படி ஏவுரைக்கலாம் என்று **பிரிவு 97(1)** கூறுகிறது. (இதை நாம் விடையின் தொடக்கப் பகுதியில் ஏற்கனவே கண்டுள்ளோம்)

(2) ஒரு நிறுவனம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை பிரிவுகள் 97, 97 மற்றும் 98–இன்படி கூட்டத் தவறினாலோ, அல்லது ஆண்டுப் பொதுக் கூட்டத்தை கூட்டும்படி தீர்ப்பாயம் பிறப்பித்த ஏவுரையை கடைப்பிடிப்பதில் தவறுகை புரிந்தாலோ, அந்நிறுவனம் மற்றும் அதன் அலுவலர் ஒவ்வொருவரும் ஒரு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கத் தக்க அபராதம் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவர். இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டும் அவர்கள் அக்கூட்டத்தைக் கூட்டவில்லையானால், அவ்வாறு கூட்டத் தவறிய தேதியிலிருந்து நாளொன்றுக்கு ரூ.5000/– வரை அபராதம் விதிக்கப்படும் **[பிரிவு 99].**

2. சிறப்பு பொதுக் கூட்டம் (Extraordinary General Meeting):

இக்கூட்டம் எப்பொழுது கூட்டப்படலாம்?: 'அசாதாரண பொதுக் கூட்டம்' என்று மற்றொரு பெயரால் அழைக்கப்படும் 'சிறப்பு பொதுக் கூட்டம்' குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 100** கூறுகிறது.

ஆண்டுப் பொதுக் கூட்டம் தவிர மற்ற பொதுக் கூட்டங்கள் 'சிறப்பு பொதுக் கூட்டங்கள்' எனப்படும். நிறுவனத்தின் இயக்குனரவை தான் உசிதமெனக் கருதும் போதெல்லாம் இந்த சிறப்பு பொதுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கலாம் **[பிரிவு 100 (1)]**. அதாவது உகந்த அல்லது அவசரமான தனிச் சூழல்களில் இக்கூட்டத்தை **இயக்குனரவையே தன்னிச்சையாகக்** கூட்டலாம். இது தவிர, **உறுப்பினர்கள் செய்யும் வேண்டுகோளின் (requisition)** அடிப்படையிலும் இக்கூட்டத்தை இயக்குனரவை கூட்டலாம். அதற்கான நடைமுறை வருமாறு,–

பங்கு மூலதனம் கொண்ட நிறுவனமொன்றின் நேர்வில், அதன் குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் பத்தில் ஒரு பங்குக்கும் குறையாத பங்கு மூலதனத்தை கொண்டிருக்கும் உறுப்பினர்கள் செய்யும் வேண்டுகோளின் பேரில், இக்கூட்டத்தை அந்நிறுவனத்தின் இயக்குனரவை கூட்டுதல் வேண்டும். பங்கு மூலதனம் கொண்டிராத நிறுவனமொன்றின் நேர்வில், அதன் குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய மற்றும் அனைத்து உறுப்பினர்களுடைய மொத்த வாக்களிக்கும் திறனில் பத்தில் ஒரு பங்குக்கும் குறையாத வாக்குரிமையை கொண்டிருக்கும் உறுப்பினர்கள் செய்யும் வேண்டுகோளின் பேரில், இக்கூட்டத்தை இயக்குனரவை கூட்டுதல் வேண்டும். இங்கு வேண்டுகோளுக்குரிய விடயத்தின் மீது தொடர்புடைய தேதியன்று வாக்களிக்கும் உரிமையை மேற்கண்ட இரண்டு நேர்வுகளிலும் அவ்வுறுப்பினர்கள் பெற்றிருக்க வேண்டும் **[பிரிவு 100(2)]**.

இக்கூட்டத்தை கூட்டுவதற்கான மேற்படி வேண்டுகோளானது கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட வேண்டிய விடயங்களைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் அது வேண்டுகோள் செய்யப்படும் உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டு, நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும் **[பிரிவு 100(3)]**.

செல்லத்தக்க வேண்டுகோள் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 21 நாட்களுக்குள் இக்கூட்டத்தைக் கூட்ட இயக்குனரவை முன்மொழிய வேண்டும். எனினும் அத்தேதியிலிருந்து 45 தினங்களுக்குள் இக்கூட்டத்தை இயக்குனரவை கூட்டுதல் வேண்டும். அவ்வாறு இயக்குனரவை கூட்டவில்லையானால், அதற்கு வேண்டுகோள் செய்தவர்களே (requisitionists) இக்கூட்டத்தை அவ்வேண்டுகோள் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கூட்டிவிடலாம் **[பிரிவு 100(4)]**.

நிறுவனத்தின் இயக்குனரவையால் அழைக்கப்பட்டு நடத்தப்படும் கூட்டம் ஒன்றிற்கான அதே முறையிலேயே, வேண்டுகோள் செய்தவர்களால் கூட்டப்படும் கூட்டமும் அழைக்கப்பட வேண்டும் மற்றும் நடத்தப்பட வேண்டும் **[பிரிவு 100(5)]**.

வேண்டுகோள் செய்தவர்களால் கூட்டப்பட்ட மேற்படி கூட்டத்தை அழைப்பதற்கு ஆன நியாயமான செலவுகளை அவர்கள் நிறுவனத்திடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் **[பிரிவு 100(6)]**.

இக்கூட்டத்தின் நோக்கங்கள்: இக்கூட்டம், ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் விவாதிக்கப்படாத அலுவல்களை கவனிக்கவும், நிறுவனத்தின் அவசரமான மற்றும் முக்கியமான அலுவல்களைக் கவனிக்கவும் கூட்டப்படுகிறது.

செல்லத்தக்க கூட்டம் ஒன்றிற்குத் தேவையான கூறுகள் (Requisites of a Valid Meeting):

1. **கூட்டமானது உரிய அதிகாரம் பெற்றவரால் கூட்டப்பட வேண்டும் (Meeting should be called by Proper Authority):** நிறுவனத்தின் கூட்டத்தைக் கூட்ட உரிய அதிகாரம் படைத்தது, இயக்குனரவையாகும். அது கூட்டத்தை கூட்டத் தவறும் பொழுதுதான், அக்கூட்டத்தைக் கூட்டும்படி நிறுவனத்தின் உறுப்பினர்கள் அல்லது தீர்ப்பாயம், அந்நிறுவனத்தைக் கோரலாம்.

2. **முறையான அறிவிப்பு (Proper Notice):** ஒரு கூட்டம் கூட்டப்படவுள்ளது குறித்து 21 நாட்களுக்கும் குறையாத முறையான அறிவிப்பு ஒன்றை எழுத்துப்பூர்வமாக அல்லது மின்னணு வழியாக இயக்குனரவை கொடுக்க வேண்டும்[பிரிவு 101(1)]. இதை அதன் உறுப்பினர்கள், தணிக்கையாளர்கள் மற்றும் இயக்குனர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும் [பிரிவு 101(3)]. இந்த அறிவிப்பை வேண்டுமென்றே தனியொரு உறுப்பினருக்கு கொடுக்காமல் விடுத்தாலும், சம்பந்தப்பட்ட கூட்டம் செல்லாததாகும் [பிரிவு 101(4)].

3. **அறிவிப்பின் உள்ளடக்கம் (Contents of Notice):** நிறுவனக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பு ஒன்றில், அக்கூட்டம் கூட்டப்படவுள்ள தேதி,

இடம், நேரம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மேலும் அக்கூட்டத்தின் வாயிலாக என்னென்ன அலுவல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்பது குறித்த தக வலும் அதில் அடங்கியிருக்க வேண்டும். அதாவது கூட்டத்திற்கான நோக்கம் அதில் இடம் பெற்றிருத்தல் வேண்டும் [பிரிவு 101(2)].

4. முறைப்படி கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும் (Properly constituted): ஒரு கூட்டமானது முறைப்படி கட்டமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது உரிய நபர் அக்கூட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டும். மேலும் கூட்டத் திற்கு வந்திருக்க வேண்டிய குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை (Quorum) தொடர்பான வகைமுறைகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும். (இது பற்றி வினா எண்கள். 70 மற்றும் 71–இல் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அதில் காண்க.)

82. Chairman of the Meeting - Write short notes. (கூட்டத் தலைவர் - குறுகிய விடை எழுதுக.)

கூட்டத் தலைவர் - விளக்கம் : 2013-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 104 கூட்டத் தலைவர் குறித்துக் கூறுகிறது. நிறுவனக் கூட்டமொன்றின் அலுவல்களை முறைப்படி நடத்த, தலைவர் ஒருவர் வேண்டும். அவரே **'கூட்டத் தலைவர்'** (Chairman of the Meeting) எனப்படுகிறார்.

கூட்டத் தலைவரின் நியமனம் : இவரது நியமனம் பொதுவாக, நிறுவனத் தின் செயல்முறை விதிகளின் வாயிலாக ஒழுங்குபடுத்தப்படுகிறது. எனினும் இவரது நியமனம் குறித்து அவ்விதிகளில் எதுவும் வகை செய்யப்படவில்லையெனில், அக் கூட்டத்திற்கு நேர்முகமாக வந்துள்ள உறுப்பினர்கள், தங்களில் ஒருவரை, தங்கள் கைகளை உயர்த்திக் காட்டி வாக்களிப்பதன் மூலம், கூட்டத் தலைவராக தேர்ந்தெடுக் கலாம் **[பிரிவு 104(1)]**.

எனினும் கூட்டத் தலைவரை தேர்ந்தெடுக்க வாக்குப் பதிவு (Poll) கோரப் பட்டால், அது உடனடியாக நடத்தப்பட வேண்டும். வாக்குப் பதிவின் வாயிலாக வேறு நபர் எவரும் கூட்டத்தலைவராக தேர்ந்தெடுக்கப்படும் வரை, கைகளை உயர்த்திக் காட்டி வாக்களிக்கப்பட்டதன் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபரே கூட்டத் தலைவராக தொடர்ந்திருப்பார். வாக்குப்பதிவின் முடிவில் வேறு ஒருவர் கூட்டத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், கூட்டத்தின் எஞ்சியுள்ள பகுதிக்கு (rest of the meeting) அவரே கூட்டத் தலைவராக விளங்குவார். **[பிரிவு 104(2)]**.

கூட்டத் தலைவரின் முக்கியத்துவம்: நிறுவனச் சட்டத்தின் பார்வையில், கூட்டத் தலைவர் என்பவர் கூட்டத்தின் ஒழுங்கை நிலைநாட்டி, அதனை நன்முறையில் நடத்தி முடிக்கும் அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டதொரு முக்கியமான நபராவார். தீர்மானங்களை கூட்டத்தில் முன்னிடவும், வாக்குகளை எண்ணவும், அதன் முடிவைக் கூறவும், கையொப்பம் மூலம் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளுக்கு (minutes) சான்றளிக்கவும் அவரே தகுதியானவர் ஆவார்.

கூட்டத் தலைவரின் உரிமைகள்: (1) கூட்டத்தில் அமைதியையும் ஒழுங்கையும் காக்கும் உரிமை; (2) ஒழுங்குப் பிரச்சனை குறித்து தீர்மானிக்கும் உரிமை; (3) கூட்டத்தில் பேச விழைபவர்களுக்கு முன்னுரிமையைத் தரும் உரிமை; (4) கூட்டத்தில் நடக்கும் வாக்கு வாதங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் உரிமை; (5) கூட்டத்தை ஒத்தி வைக்கும் உரிமை; மற்றும் (6) தனது 'முடிவு செய் வாக்கை' (casting vote) பயன்படுத்தும் உரிமை. அதாவது கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட ஒரு விஷயம் குறித்து சமமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டால், அங்கு ஏற்படும் முட்டுக் கட்டை நிலையைத் (dead-lock) தீர்க்க, கூட்டத் தலைவர் தனது மேற்படி முடிவு செய் வாக்கை அளித்து அதில் முடிவு காணலாம்.

கூட்டத் தலைவரின் கடமைகள்: (1) கூட்டத் தலைவர் எப்பொழுதும் உண்மையாகவும், நிறுவனத்தின் நலன் ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டும் செயற்பட வேண்டும்; (2) கூட்டம் உரிய முறையில் கூட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதாவது கூட்டத்திற்கான அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதா, குறைவெண் உள்ளதா, தனது நியமனமே முறையாக உள்ளதா என்பதை கூட்டத் தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்; (3) கூட்டத்தின் அலுவல்கள் முறையோடும், ஒழுங்காகவும் நடக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்; (4) கூட்டத்தில் எழுப்பப்படும் வினாக்கள் குறித்து கூட்டத்தின் உணர்வைப் புரிந்து கொள்ள வேண்டும்; (5) தனது முடிவு செய் வாக்கை, உண்மை உணர்வுடன் நிறுவனத்தின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும்; (6) கூட்டத்தை ஒத்தி வைக்கும் அதிகாரத்தையும், வாக்குப் பதிவு அதிகாரத்தையும் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்; (7) ஒழுக்கம் தவறும் நபர்களை கூட்டத்திலிருந்து வெளியேற்ற வேண்டும்; மற்றும் (8) தீர்மானத்தின் மீதோ, தீர்மானக் கோரிக்கை மீதோ தங்கள் கருத்துக்களைக் கூற, கூட்டத்திற்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களுக்கு போதுமான, நியாயமான வாய்ப்பு வழங்கப்படுகிறதா என்பதை அவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

83. Quorum - Write short notes. (குறைவெண் - குறுகிய விடை எழுதுக.)

'குறைவெண்' குறித்து பிரிவு 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 103** கூறுகிறது.

ஒரு கூட்டத்திற்கு வருகை தர வேண்டிய குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கையே 'குறைவெண்' எனப் படுகிறது. பொதுவாக, ஒரு கூட்டம் நடத்தப்பட குறைந்தபட்சம் எத்தனை உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பது நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும். அப்படி குறிப்பிடப்படாவிட்டால் பொது நிறுவனமாயின் அய்ந்து உறுப்பினர்களும், தனியார் நிறுவனமாயின் இரண்டு உறுப்பினர்களும் கூட்டத்திற்கு நேரில் வந்தால் அதுவே போதுமானது.

எனினும், இந்த குறைவெண் எண்ணிக்கை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப மாறுபடக் கூடியதாகும். அதாவது பொது நிறுவனமொன்றின் நேர்வில் கூட்டத் தேதியன்று நிறுவன உறுப்பினர்களின் எண்ணிக்கை நூறுக்கும் அதிகமில்லை என்றால் மேற்கண்டவாறு அய்ந்து உறுப்பினர்கள் கூட்டத்திற்கு நேரில்

வந்தால் போதுமானது. இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை கூட்டத் தேதியன்று நூறுக்கும் மேலாக ஆனால் அய்நூறு வரையிலும் இருந்தால் பதினைந்து உறுப்பினர் களும், அய்நூறைத் தாண்டினால் இருபது உறுப்பினர்களும் கூட்டத்திற்கு நேரில் வந்தால் போதும் **[பிரிவு 103(1)]**.

ஒரு கூட்டத்தை நடத்துவதற்கான குறைவெண் உறுப்பினர்கள் அக்கூட்டத் திற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரை மணி நேரத்திற்குள் சேரவில்லை யெனில், (அ) அக்கூட்டத்தை அடுத்த வாரத்திற்கு அதே கிழமையில், அதே இடத்தி லும் நேரத்திலும் நடத்துவதற்காக ஒத்தி வைக்கலாம். அல்லது இயக்குனரவை தீர் மானிக்கும் தேதி, நேரம் மற்றும் இடத்திற்கும் ஒத்தி வைக்கலாம். ஒத்தி வைக்கப்பட்ட கூட்டம் அல்லது கிழமை, நேரம் இடம் மாற்றப்பட்ட கூட்டம் ஒன்றின் நேர்வில், நிறு வனம் தனது உறுப்பினர்களுக்கு மூன்று நாட்களுக்கு குறையாததொரு அறிவிப்பை தனிப்பட்ட முறையிலோ அல்லது செய்தித்தாளில் விளம்பரம் வெளியிடுவதன் வாயி லாகவோ வழங்க வேண்டும் **[பிரிவு 103(2)]**.

ஒத்தி வைக்கப்பட்ட கூட்டத்திலும் குறைவெண் இல்லாவிடில் அப்போதைய கூட்டத்தில் வந்திருப்போர்களின் எண்ணிக்கை போதுமானது **[பிரிவு 103(3)]**.

பொதுவாக குறைவெண் எண்ணிக்கை கூட்டத்தின் ஆரம்பத்தில் இருந் தால் மட்டும் போதாது. கூட்டம் முடியும் வரையில் தொடர்ந்து இருக்க வேண்டும். குறை வெண் இல்லாமல் ஒரு கூட்டம் நடந்தால், அக்கூட்டமே செல்லாது. உறுப்பினர்களால் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு குறைவெண் இல்லாவிடில் கூட்டம் கலைக்கப்பட்டதாகும். இது குறைவெண் இல்லாததினால் ஏற்படும் விளைவாகும்.

84. Poll - Write short notes. (வாக்கெடுப்பு - குறுகிய விடை எழுதுக.)

நிறுவனப் பொதுக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தைப் பற்றி உறுப்பினர்கள் தம் கருத்தினை தெரிவிப்பது, வாக்கெடுப்பு (Poll) மூலம் தீர் மானிக்கப்படுகிறது. கூட்டத்தின் முடிவுகள் பெரும்பான்மையான வாக்குகளால் (Vote) நிருணயிக்கப்படுகிறது. சாதாரணமாக, உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை உண்டு. ஒரு உறுப்பினருக்கு எத்தனை வாக்குகள் உண்டு என்பதை நிறுவன செயல்முறை விதிகளில் குறிப்பிடலாம். எனினும் பொதுவாக 'ஒரு பங்கு – ஒரு வாக்கு' எனும் முறைதான் பின்பற்றப்படுகிறது. வாக்கெடுப்பு கோருவதற்கான நடைமுறை குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 109** கூறுகிறது.

85. Proxy - Write short notes (மாற்றாள் - குறுகிய விடை எழுதுக.)

'மாற்றாள்' குறித்து பிரிவு 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 105** கூறுகிறது. நிறுவனக் கூட்டங்களுக்கு பங்குதாரர்கள் நேரில் வர வேண்டும். அப்படி அவர்கள் வர இயலாவிட்டால் தங்கள் சார்பாக வேறு நபர்களை நிறுவனக் கூட்டத்தில் பங்கு கொள்ள அனுப்பலாம். அவ்வாறு அனுப்பப்படும் ஆள் 'மாற்றாள்' எனப்படுகிறார். மாற்றாளை அனுப்ப விரும்பும் உறுப்பினர், மாற்றாள்

விண்ணப்ப படிவத்தை (Proxy Form) பூர்த்தி செய்து நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும். மாற்றாள், நிறுவன உறுப்பினராக இருக்க வேண்டுமென்று கட்டாயம் ஏதுமில்லை.

மாற்றாள் நியமிப்பது தொடர்பான சட்ட விதிகள் (பிரிவு 105) :

1. உறுப்பினர்கள் தங்கள் கையொப்பமிட்ட, எழுத்து மூலமான விண்ணப் பப்படிவத்தினை அளிப்பதன் மூலமாகத்தான் 'மாற்றாளை' நியமித்தல் முடியும்.
2. இம்மாற்றாள் நியமனப் படிவம், நிறுவனக் கூட்டம் கூட்டுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் நிறுவன இயக்குனர்களிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. ஒவ்வொரு கூட்டத்திற்கும் தனித்தனி மாற்றாள் படிவம் கொடுக்கப்பட வேண்டும்.
4. மாற்றாள் நிறுவன உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை.
5. மாற்றாள்களை நியமிக்கக் கோரும் அழைப்புகளை நிறுவனம் தனது சொந்த செலவில் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கக் கூடாது.
6. வாக்கெடுப்பு முறை (poll) மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் போது மட்டும், மாற்றாள் வாக்களிக்கும் உரிமையை பெறுகின்றார். மற்ற நேர்வுகளில் வாக்களிக்கவோ, கூட்டத்தில் பேசவோ மாற்றாளுக்கு உரிமை இல்லை.
7. நிறுவனக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடைபெறுவதாக இருப்பின் வாக் கெடுப்பிற்கு 24 மணி நேரத்திற்கு முன்னர் மாற்றாள் நியமனப் படிவம் கொடுக்கப்பட வேண்டும்.
8. மாற்றாள் நியமனப் படிவங்கள் நிறுவன செயல்முறை விதிகளின்படி உள்ளதா என்பதை நிறுவனத்தின் செயலாளர் சரிபார்க்க வேண்டும்.
9. மாற்றாளை நியமித்த உறுப்பினர், நிறுவனக் கூட்டத்தில் பங்கு கொண் டால், மாற்றாள் நியமனம் தானாகவே முடிவுக்கு வந்துவிடும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

-o0o-

தீர்மானங்கள்
[Resolultions]

86. Define the term 'Resolution' and explain its kinds. ('தீர்மானம்' என்பதை வரையறுத்து, அதன் வகைகளை விளக்குக.)

(அல்லது)

4 Types of Resolutions - Write short notes. (தீர்மானங்களின் வகைகள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Special Resolution - Write short notes. (சிறப்புத் தீர்மானம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Special Resolution - Write short notes. (சிறப்புத்

தீர்மானம் - குறுகிய விடை எழுதுக.)

தீர்மானம் (Resolution) - விளக்கம்:

'தீர்மானம்' என்பது தகுந்த முறையில் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தால் தீர்மான கோரிக்கை ஒன்றின் மீது எடுக்கப்பட்ட முடிவாகும். கூட்டத்தில் ஒருவரால் முன் மொழியப்பட்டு, உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு, வாக்கெடுப்பின் மூலம் பெரும் பான்மையினர் ஆதரவைப் பெற்ற ஒரு தீர்மானக் கோரிக்கையே (Motion), தீர்மான மாக வடிவெடுக்கிறது. தீர்மானக் கோரிக்கையை உறுப்பினர் ஒருவர் முன்மொழிவார். அது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, முடிவு செய்த பின், அது தீர்மானமாகும்.

தீர்மானத்தின் வகைகள் :

இயக்குனரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் யாவும் ஒரே மாதிரியாக உள்ளன. ஆனால் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் மூன்று வகையாக பிரிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு:

1. சாதாரணத் தீர்மானங்கள்;
2. சிறப்புத் தீர்மானங்கள்;
3. சிறப்பு அறிக்கை தேவைப்படும் தீர்மானங்கள்.

1. *சாதாரண தீர்மானம்* (Ordinary Resolution) - *பிரிவு* 114(1) :

நிறுவனப் பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் எளிய பெரும்பான்மை (simple majority) வாக்குகளால் நிறைவேற்றப்படும் தீர்மானம் 'சாதாரண தீர்மானம்' ஆகும். சுருங்கக் கூறின் உரிய அறிக்கை கொடுத்து கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில் நேர்முகமாக அல்லது மாற்றாள் மூலமாக கலந்து கொண்ட உறுப்பினர் களில் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம், 'சாதாரணத் தீர் மானம்' அல்லது 'பொதுவான தீர்மானம்' எனப்படுகிறது. தீர்மானத்திற்கு ஆதரவான வாக்குகளை உறுப்பினர்கள் தங்கள் கைகளை உயர்த்திக் காட்டுவதன் மூலம் அல்லது மின்னணு வழி மூலம் அல்லது வாக்கெடுப்பு மூலம் அளிக்கலாம். வாக்கு களை பெரும்பான்மை வாக்குகளை கணக்கிடும் பொழுது, வாக்கெடுப்பு முறை எது வானாலும், கூட்டத் தலைவரின் 'முடிவு செய் வாக்கும்' (Casting Vote) கணக்கில் கொள்ளப்படும். வேறுவிதமாகக் கூறுவதெனில், பொதுக் கூட்டத்தில் முன்மொழி யப்படும் தீர்மானம் ஒன்றிற்கு எதிராக கிடைத்த வாக்குகளை விட அதற்கு ஆத ரவாகக் கிடைத்த வாக்குகள் அதிகம் (பெரும்பான்மை) இருப்பின், அது, சாதாரணத் தீர்மானமாகும். [பிரிவு 114(1)].

நிறுவனச் சட்டம், நிறுவனத்தின் அமைப்பு முறையேடு அல்லது செயல் முறை விதிகளில் வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தால் மட்டுமே, ஒரு சிறப்புத் தீர்மானத்தை அல்லது சிறப்பு அறிக்கை தேவைப்படும் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். ஆனால் இவ்வாறு வகை செய்யப்படாத மற்ற அனைத்து விஷயங்களுக்கும், சாதாரணத் தீர்மானமே போதுமானது. எவ்வகைத் தீர்மானம் நிறைவேற்றப்பட

வேண்டும் என்பது, அதற்குச் சம்பந்தப்பட்ட அலுவலைப் பொறுத்ததாகும்; மாறாக எவ் வகைக் கூட்டம் என்பதைப் பொறுத்தல்ல. எனவே நாம் சென்ற அத்தியாயத்தில் கண்ட இருவகைக் கூட்டங்களிலும், மேற்கண்ட மூன்று விதமான தீர்மானங்களையும் நிறைவேற்றலாம். **பின்வரும் அலுவல்களைப் பொறுத்து சாதாரண தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினால், அதுவே போதுமானது. அவை,**

1. நிறுவனத்தின் பெயரை திருத்த (பிரிவு 16);
2. தள்ளுபடியில் பங்குகளை வெளியிட (பிரிவு 53);
3. நிறுவனத்தின் பங்கு மூலதனத்தை மாற்ற (பிரிவு 61);
4. பங்காதாயம் வழங்குவதை விளம்புகை செய்ய (பிரிவு 123);
5. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் இருப்பு நிலைக் குறிப்பேட்டுக்கு ஒப்புதல் வழங்க (பிரிவு 129);
6. பிடிப்பு நிறுவன உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகள் பிடிப்பிலுள்ள நிறுவனத்தின் கணகு வழக்குப் பேரடுகளை ஆய்வு செய்ய (பிரிவு 128);
7. தணிக்கையாளர்களை அமர்த்த (பிரிவு 139);
8. இயக்குனர்களை நியமனம் செய்ய (பிரிவு 152);
9. வகுத்துரைக்கப்பட்ட வரம்பிற்கும் அப்பால் நிறுவனங்களுக்கிடையே முதலீடு செய்ய (பிரிவு 186)
10. செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தால், நிறுவனத்தின் தன்னிச்சையான கலைப்பிற்கு ஒப்புதல் வழங்க (பிரிவு 304)
11. நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனம் மற்றும் ஊதியத்திற்கு ஒப்புதல் வழங்க (பிரிவு 310)
12. நிறுவனக் கலைப்பதிகாரி பதவியின் காலியிடத்தை நிரப்ப (பிரிவு 311)

2. சிறப்புத் தீர்மானம் (Special Resolution) - பிரிவு 114(2) :

இது பற்றி **பிரிவு 114(2)** கூறுகிறது. அதன்படி பொதுக் கூட்ட உறுப்பினர்கள் தங்கள் கைகளை உயர்த்திக் காட்டுதல் மூலம் அல்லது மின்னணு வழி வாயிலாக அல்லது வாக்கெடுப்பு முறையில் நேர்முகமாக அல்லது மாற்றாள் வாயிலாக அல்லது அஞ்சல் வாக்குச்சீட்டு வாயிலாக அளித்த வாக்குகளில் குறைந்தது நான்கில் மூன்று பங்கினரின் ஆதரவுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பின், அது 'சிறப்புத் தீர்மானம்' எனப்படுகிறது.

இத்தீர்மானம் நிறைவேற்றப்படும் பொதுக் கூட்டம் குறித்த அறிவிப்பை சம்பந்தப்பட்ட நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு அளிக்க வேண்டும். மேலும் நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு தீர்மானம், சிறப்புத் தீர்மானமாக நிறைவேற்றப்படவுள்ளது எனும் எண்ணத்தை அந்த அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.

சிறப்புத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட நான்கில் மூன்று பங்கு பெரும் பான்மை வாக்குகள் வேண்டும் என்ற தேவையின் நோக்கம் யாதெனில், நிறுவனத் தின் செயற்பாடுகள் தொடர்பான முக்கிய விவகாரங்களில் சிறுபான்மை பங்குதாரர் களின் (உறுப்பினர்களின்) நலன்களைக் காப்பதேயாகும்.

பின்வரும் அலுவல்களுக்காக, சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறை வேற்ற வேண்டியது ஒரு நிறுவனத்திற்கு அவசியமாகும். அவை,

1. நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்ற வும், அல்லது நிறுவனத்தின் நோக்கங்களை மாற்றவும் (நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் உறுதி செய்தலுக்குட்பட்டு) (பிரிவு 13);
2. மைய அரசின் ஒப்புதலுடன் ஒரு நிறுவனம் தனது பெயரை மாற்றிக் கொள்ள (பிரிவு 13);
3. நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் மாற்றம் செய்ய (பிரிவு 14);
4. பங்கு மூலதனத்தைக் குறைக்க (பிரிவு 66);
5. தனி வகையான பங்குகளுக்கான உரிமைகளில் மாற்றங்கள் கொண்டு வர (பிரிவு 48);
6. உறுப்பினர்களின் பதிவேட்டை நிறுவனத்தின் பதிவு அலுவலகம் அல்லாத வேறொரு இடத்தில் வைக்க (பிரிவு 94);
7. இயக்குனர்கள் அல்லது அவர்களது உறவினர்கள் எவரும் ஆதாயப் பதவி எதையும் வகிப்பதற்கு அனுமதி வழங்க (பிரிவு 188);
8. மேலாண்மை இயக்குனர், இயக்குனர் ஆகியோர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ஊதியத்தை தீர்மானிக்க (பிரிவு 197);
6. நிறுவனத்தின் விவகாரங்களை மைய அரசால் நியமனம் செய்யப்படும் ஆய்வாளர் ஒருவரைக் கொண்டு விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற விளம்புகை செய்ய (பிரிவு 213);
9. நிறுவனக் கலைப்பிற்கான ஆணையொன்றை நீதிமன்றத்திடமிருந்து பெற (பிரிவு 271)
10. நிறுவனத்தை அதன் இச்சைப்படி கலைத்திட (தன்னிச்சையான கலைப்பு) (பிரிவு 304);

மேற்கண்டவை தவிர, மேலும் பல அலுவல்களைச் செய்யவும் நிறுவனத்தின் சிறப்புத் தீர்மானம் தேவையாகிறது.

3. சிறப்பு அறிக்கை தேவைப்படும் தீர்மானங்கள் (Resolutions requiring Special Notice)- பிரிவு 115 ::

நிறுவனச் சட்டத்தின்படி நிறுவனக் கூட்டத்தில் சில வகையான தீர்மானங்

களைக் கொண்டு வர நிறுவனத்திற்கு சிறப்பு அறிக்கை கொடுக்கப்பட வேண்டும். இத்தீர்மானங்கள் 'சிறப்பு அறிக்கை தேவைப்படும் தீர்மானங்கள்' எனப்படுகின்றன.

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 115–இன்படி அத்தகு தீர்மானம் ஒன்றை முன்மொழிவதற்கான எண்ணத்தைக் காட்டும் அறிவிப்பு ஒன்றை நிறுவனத்தின் மொத்த வாக்குத் திறனில் ஒரு சதவீதத்திற்கும் குறையாத வாக்குத் திறனை கொண்டிருக்கும் உறுப்பினர்கள் அல்லது அய்ந்து இலட்சம் ரூபாய்க்கும் மேல் செல்லாத நிகர மொத்தத் தொகை செலுத்தப் பெற்ற பங்குகளைக் கொண்டிருக்கும் உறுப்பினர்கள் நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும். இதையடுத்து தீர்மானத்திற்கான அறிவிப்பை அந்நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு அளிக்க வேண்டும்.

சிறப்பு அறிக்கை தேவைப்படும் தீர்மானங்கள் வருமாறு (Resolutions requiring Special Notice):

1. ஓய்வு பெறும் தணிக்கையாளர் மறு நியமனம் செய்யப்படமாட்டார் என்பதை நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வகை செய்து தீர்மானமொன்றை நிறைவேற்ற (பிரிவு 140);
2. பதவியிலிருந்து ஓய்வு பெறும் தணிக்கையாளர் அல்லாத வேறு ஒருவரை தணிக்கையாளராக நியமிப்பதை ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்க (பிரிவு 140);
3. இயக்குனர் ஒருவரை அவரது பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே பதவி நீக்கம் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றிட (பிரிவு 169);
4. நீக்கம் செய்யப்பட்ட இயக்குனரின் இடத்தில் வேறொரு இயக்குனரை நியமனம் செய்வதை தீர்மானிப்பதற்காக (பிரிவு 284)
5. சிறப்பு அறிவிப்பு கொடுத்து தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று செயல்முறை விதிகள் வகை செய்யும் விடயங்கள் எதுவும்.

-oOo-

கணக்குகளும் தணிக்கைகளும்
[Accounts and Audits]

5

87. State the legal provisions of company law regarding the qualifications, appointment, remuneration and removal of an Auditor. (தணிக்கையாளர் ஒருவரின் தகுதிகள், நியமனம், ஊதியம் மற்றும் பதவி நீக்கம் குறித்த நிறுவனச் சட்டத்தின் வகைமுறைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Auditor - Write short notes. (தணிக்கையாளர் - குறுகிய விடை எழுதுக)

தணிக்கையாளரின் முக்கியத்துவம்:

ஒரு நிறுவனம் தனக்குத் தேவையான மூலதனத்தை பொது மக்களுக்கு பங்குகளை வெளியிடுவதானால் பெறுகிறது.

அதாவது பங்குதாரர்கள் அளிக்கும் பங்குத் தொகையை மூலதனமாகக் கொண்டு, ஒரு நிறுவனம் தனது தொழிலை மேற் கொள்கிறது. எனினும் நிறுவனத்தின் செயற்பாடுகளை நேரடியாகக் கவனிக்க பங்குதாரர்களால் முடியாது. ஏனெனில் நிறுவனத்தின் மீதான உண்மையான கட்டுப்பாடு, அதன் இயக்குனர்கள், மேலாண்மை அலுவலர்கள் கைகளில் உள்ளது என்று கூறினால் அது மிகையன்று.

இந்நிலையில் பங்குதாரர்களும் நிறுவனத்தின் செயற்பாடுகளையும், கணக்குகளையும் அறிந்து கொள்ள வகை செய்ய வேண்டும் எனும் நோக்கில், நிறுவனச் சட்டமானது ஒவ்வொரு நிறுவனமும் தணிக்கையாளர்களை கட்டாயம் நியமனம் செய்து கொள்ள வேண்டும் என்றும், அவர்கள் நிறுவனத்தின் செயற்பாடுகளையும், கணக்குகளையும் தணிக்கை செய்து, அவற்றை பங்குதாரர்களுக்கு அறிவிக்கப் பொறுப்புடையவர்கள் என்றும் விதிக்கிறது. எனவே தணிக்கையாளர்களை, பங்குதாரர்களின் பணியாட்கள் என்று கூறலாம். அவர்களது சார்பில் நிறுவனத்தின் செயற்பாடுகளையும், கணக்குகளையும் ஆண்டு இறுதியில் தணிக்கையாளர்கள் பரிசீலனை செய்கின்றனர். அவர்கள் கண்டறிந்தவற்றை, பங்குதாரர்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய பெரும் கடமையைக் அவர்கள் கொண்டுள்ளனர். இவர்களது தகுதிகள், தகுதியின்மைகள், நியமனம், நீக்கம், ஊதியம் ஆகியவை குறித்து பின்வருமாறு காண்போமா?

தணிக்கையாளரின் தகுதிகள் (Qualifications of Auditor):

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 141(1)**–இன்படி, பட்டயக் கணக்காயராக (Chartered Accountant) உள்ள ஒருவர் மட்டுமே, நிறுவனத்தின் தணிக்கையாளராக நியமனம் செய்யப்பட்ட தகுதி பெற்றவர் ஆவார்.

ஒரு கூட்டாண்மை நிறுமத்தில் உள்ள இந்தியாவில் தொழிலாற்றும் பெரும் பான்மைக் கூட்டாளிகள் மேற்கண்டவாறு பட்டயக்கணக்காயர்களாக இருப்பின், அந்த நிறுமத்தை அதன் பெயரிலேயே ஒரு நிறுவனம் தனது தணிக்கையாளராக நியமனம் செய்து கொள்ளலாம்.

வரம்புடைய பொறுப்புக் கூட்டாண்மை (limited liability partnership) ஒன்றை உள்ளடக்கிய நிறுமம் ஒன்று நிறுவனமொன்றின் தணிக்கையாளராக நியமனம் செய்யப்பட்டால், அதன் கூட்டாளிகளில் பட்டயக் கணக்காயராக உள்ளவர்கள் மட்டுமே அந்நிறுமத்திற்காக செயல்படவும் கையொப்பமிடவும் அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்று **பிரிவு 141(2)** கூறுகிறது.

தணிக்கையாளரின் தகுதியின்மைகள் (Disqualifications of Auditor) - பிரிவு 141 (3):

பிரிவு 141(3)–இன்படி பின்வருவோர், ஒரு நிறுவனத்தின் தணிக்கையாளர் களாக நியமனம் செய்யப்படும் தகுதியற்றவர்கள் ஆவர்.

(a) வரம்புடைய பொறுப்புக் கூட்டாண்மை நிறுமமொன்று அல்லாத கூட்டுரு அமைப்பு ஒன்று (a body corporate other than a limited liability partnership);

(b) நிறுவனத்தின் அலுவலர் அல்லது பணியாளர் (an officer or employee of the company);

(c) நிறுவனத்தின் அலுவலர் அல்லது பணியாளருக்கு கூட்டாளியாக இருப்பவர் அல்லது அவர்களது கீழ் பணியிலிருப்பவர் (a person who is a partner, or who is in the employment, of an officer or employee of the company);

(d) (அ) நிறுவனமொன்றின் அல்லது துணை நிறுவனத்தில், அல்லது பிடிப்பு அல்லது கூட்டு நிறுவனத்தில் அல்லது அத்தகு பிடிப்பு நிறுவனத்தின் துணை நிறுவனமொன்றின் பிணையம் (பங்குகள்) எதையும் கொண்டவராக அல்லது அவற்றில் நலன் கொண்டவராக இருக்கும் நபர் ஒருவர், அல்லது அவரது உறவினர் அல்லது கூட்டாளி;

எனினும் அவரது உறவினர் அந்நிறுவனத்தின் ஆயிரம் ரூபாய்க்கு மிகாத முக மதிப்புடைய பிணையம் அல்லது நலன் கொண்டவராக இருக்கலாம்.

(ஆ) அவ்வாறே நிறுவனமொன்றுக்கு கடன்பட்டவர்கள்; அல்லது

(இ) மூன்றாம் நபர் ஒருவர் நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டிய கடனுக்காக பொறுப்புறுதி ஒன்றை அல்லது பிணையம் எதையும் வழங்கியிருக்கும் நபர்.

(மேற்கண்டவர்களில் நபர் என்ற பதத்தில் அவரது உறவினர் மற்றும் கூட்டாளியும் அடங்குவர்.)

(e) நிறுவனமொன்றுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வணிகத் தொடர்பு கொண்ட நபர் அல்லது நிறுமம்;

(f) எந்நபரின் உறவினர் ஒருவர் நிறுவனமொன்றின் இயக்குனராக உள் ளாரோ, அல்லது ஒரு இயக்குனராக அல்லது முக்கிய மேலாண்மை அலுவலராக நிறுவனமொன்றின் பணியில் உள்ளாரோ அந்நபர்;

(g) வேறு எங்கேனும் முழு நேரப் பணியில் உள்ள நபர் ஒருவர் அல்லது

இருபதுக்கும் மேற்பட்ட நிறுவனங்களில் தணிக்கையாளர் நியமனம் பெற்றிருக்கும் நபர் ஒருவர் அல்லது நிறுமம் ஒன்று;

(h) மோசடிச் செயலை உள்ளடக்கிய குற்றம் ஒன்றுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு, அவ்வாறு தண்டிக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து ஆண்டுகள் காலம் முடிவடையாத நபர் ஒருவர்;

(i) எந்நபரது துணை நிறுவனம் அல்லது கூட்டு நிறுவனம் அல்லது வேறு வடிவிலான வணிக அமைப்பு எதுவும் ஆலோசனை அல்லது சிறப்புச் சேவைகள் வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதே அந்நபர் எவரும்

தணிக்கையாளராக நியமிக்கப்படத் தகுதியற்றவர் ஆவார்.

தணிக்கையாளர் ஒருவர் தனது நியமனத்திற்குப் பிறகு மேற்சென்ற தகுதி யின்மைகளில் எவற்றையாவது அடைந்தால், அவர் தனது தணிக்கையாளர் பதவியை காலி (vacated) செய்துவிட வேண்டும். தணிக்கையாளர் பதவியில் காலியாக இருக் கும் அந்த இடமானது ஒரு தற்காலிக காலியிடமாக (casual vacancy) கருதப்படு தல் வேண்டும் என்று **பிரிவு 141(4)** கூறுகிறது.

தணிக்கையாளர் நியமனம் - பிரிவு 139 :

பிரிவு 139(1)-இன்படி, ஒரு நிறுவனம் தனது ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒவ்வொன்றிலும், தனி நபர் அல்லது நிறுமம் ஒன்றை ஒரு தணிக்கையாளராக, அந்த கூட்ட முடிவிலிருந்து அதன் ஆறாவது ஆண்டு பொதுக் கூட்ட முடிவு காலம் வரை அப் பதவியில் இருக்குமாறு நியமனம் செய்தல் வேண்டும். இதிலிருந்து தணிக்கையாளர் ஒருவரின் பதவிக்காலம் அய்ந்து ஆண்டுகள் ஆகும் என்பது தெளிவாகிறது.

எனினும் இந்நியமனம் ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒவ்வொன்றிலும் உறுப் பினர்களால் ஏற்புறுதி செய்யப்பட வேண்டும். மேலும் இவ்வாறு நியமனம் செய்வதற்கு முன், சம்பந்தப்பட்ட தணிக்கையாளரிடமிருந்து எழுத்துப்பூர்வமான இசைவுக் கடிதம் ஒன்று பெறப்பட வேண்டும்.

அந்நபரோ அல்லது நிறுமமோ மேற்கண்டவாறு ஒரு தணிக்கையாளராக நியமனம் செய்யப்பட்டால், தனது நியமனம் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு நிபந் தனைகளுக்கு இணங்க இருக்கும் என்று சான்றிதழ் ஒன்றை அவரிடமிருந்து அல்லது அதனிடமிருந்து நிறுவனம் பெற வேண்டும்.

மேலும் அச்சான்றிதழில் அத்தணிக்கையாளர் பிரிவு 141–இல் வகை செய்யப் பட்டுள்ள வரன்முறைகளை நிறைவு செய்துள்ளாரா என்பதும் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். அதாவது பிரிவு 141–இல் கூறப்பட்டுள்ள தகுதியின்மைகள் ஏதும் இல்லை என்றும், அதில் கூறப்பட்டுள்ள இதர நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்றும் அத்தணிக்கையாளர் அச்சான்றிதழில் குறிப்பிட வேண்டும்.

மேலும் சம்பந்தப்பட்ட அந்நபர் தணிக்கையாளராக நியமனம் செய்யப்

பட்டுள்ளார் என்பது குறித்த தகவலை அவருக்கு நிறுவனம் தெரிவித்தல் வேண்டும். அத்துடன் அவர் அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அவரது நியமனம் குறித்த அறிவிப்பு ஒன்றை பதிவாளருக்கு நிறுவனம் அனுப்புதல் வேண்டும்.

இந்நியமன நடைமுறை தணிக்கையாளரின் மறு நியமனத்திற்கும் (re-appointment) பொருந்தும்.

தனி நபர் ஒருவரை அய்ந்து தொடர்ச்சியான ஆண்டுகளுக்கான ஓர் கால அளவுக்கும் மேலாக தனி நபர் எவரையும் ஒரு நிறுவனம் தணிக்கையாளராக நியமனம் அல்லது மறுநியமனம் செய்யக் கூடாது. அவ்வாறே அய்ந்து தொடர்ச்சியான ஆண்டுகளுக்கான இரு காலஅளவுக்கும் மேலாக தணிக்கை நிறுமம் (audit firm) எதையும் ஒரு நிறுவனம் தணிக்கையாளராக நியமனம் அல்லது மறுநியமனம் செய்யக் கூடாது என்று **பிரிவு 139(2)** கூறுகிறது.

எனினும் அய்ந்தாண்டு காலம் பதவி முடிந்த தணிக்கையாளர் ஒருவர் தனது பதவிக்காலம் முடிவுற்றதிலிருந்து மீண்டும் ஒரு அய்ந்தாண்டு காலத்திற்கு **அதே நிறுவனத்தில்** தணிக்கையாளராக மறு நியமனம் பெற தகுதியுடையவர் அல்ல. அவ்வாறே இரண்டு அய்ந்தாண்டு காலம் பதவி முடிந்த தணிக்கை நிறுமம் ஒன்று தனது பதவிக்காலம் முடிவுற்றதிலிருந்து மீண்டும் ஒரு அய்ந்தாண்டு காலத்திற்கு அதே நிறுவனத்தில் தணிக்கையாளராக மறு நியமனம் பெற தகுதியுடையது அல்ல.

நிறுவனத்தின் உறுப்பினர்கள் பின்வருவனவற்றிற்காக தீர்மானம் நிறை வேற்றலாம். அதாவது, நிறுவனத்தால் நியமனம் செய்யப்பட்ட தணிக்கை நிறுமத்தில், தணிக்கைக் கூட்டாளி அல்லது அவரது குழுவானது உறுப்பினர்கள் தீர்வு செய்யத் தக்கவாறு அத்தகு இடைவெளிகளில் மாற்றப்பட வேண்டும். அதாவது சுழற்றி முறையில் (rotate) தணிக்கையாளர் பதவியை வகிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட வேண்டும் என்று உறுப்பினர்கள் தீர்மானம் செய்யலாம். இவ்வாறு **பிரிவு 139(3)** கூறுகிறது. இவர்கள் எப்படி மாற்றப்பட வேண்டும் (சுழற்றப்பட வேண்டும்) என்பதற்குண்டான மைய அரசு தனது விதிகள் மூலம் வகுத்துரைக்கலாம் என்று **பிரிவு 139(4)** கூறுகிறது.

அரசு நிறுவனம் அல்லது மைய அரசு அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது அதனால் நேரடியாக அல்லது மறைமுகமாக கட்டுப்படுத்தப்படும் வேறு நிறுவனம் ஒன்றின் நேர்வில், ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் அந்த நிதியாண்டின் தொடக்கத்திலிருந்து 182 நாட்களுக்குள் இச்சட்டப்படி நிறுவனங்களின் தணிக்கையாளராக நியமனம் செய்யப்பட முறைப்படி தகுதி பெற்ற தணிக்கையாளர் ஒருவரை இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் நியமனம் செய்தல் வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்படும் தணிக்கையாளர் அடுத்த ஆண்டு பொதுக் கூட்டத்தின் முடிவு வரை அப்பதவி வகிக்க வேண்டும் என்று **பிரிவு 139(5)** கூறுகிறது.

ஒரு நிறுவனம் பதிவு செய்யப்பட்ட முப்பது நாட்களுக்குள் அதற்கான முதல்

தணிக்கையாளரை இயக்குனரவை நியமனம் செய்தல் வேண்டும் என்றும், இது அரசு நிறுவனம் அல்லாத மற்ற நிறுவனங்களுக்குப் பொருந்தக் கூடியது என்றும் **பிரிவு 139[5]** கூறுகிறது. அரசு நிறுவனம் ஒன்றைப் பொறுத்த நேர்வில் அது பதிவான திலிருந்து அறுபது நாட்களுக்குள் முதல் தணிக்கையாளரை இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர் நியமனம் செய்தல் வேண்டும் என்று **பிரிவு 139[6]** கூறுகிறது.

தணிக்கையாளரின் பதவியில் ஏற்படும் தற்காலிக காலியிடத்தை (casual vacancy) 30 நாட்களுக்குள் இயக்குனரவை நிரப்புதல் வேண்டும். ஆனால் ஒரு தணிக்கையாளரின் பதவித்துறப்பால் (resignation) ஏற்பட்ட காலியிடமானது, இயக் குனரவை பரிந்துரைத்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கூட்டப்படும் நிறுவனத் தின் பொதுக் கூட்டத்தில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும், என்று **பிரிவு 139[7]** கூறு கிறது. மேலும் தற்செயல் காலியிடத்திற்கு நியமனம் செய்யப்பட்ட தணிக்கையாளர் அடுத்து வரும் ஆண்டுப் பொதுக் கூட்டம் வரை அப்பதவியை வகிப்பார். இந்நிலைப் பாடே, எந்த ஒரு நிறுவனத்தின் கணக்குகள் இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக் கைத் துறைத் தலைவரால் நியமனம் செய்யப்படும் தணிக்கையாளரின் தணிக்கைக் குட்பட்டதோ அந்நிறுவனத்தில் ஏற்படும் மேற்படி தற்காலிக காலியிடத்தை 30 நாட் களுக்குள் மேற்படி தணிக்கைத் துறை தலைவர் நிரப்புதல் வேண்டும்.

ஒய்வு பெறும் தணிக்கையாளர் ஒருவரை நிறுவன ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஒரு நிறுமனம் மறு நியமனம் செய்யயலாம் என்று **பிரிவு 139[9]** கூறுகிறது.

ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தணிக்கையாளர் எவரும் நியமனம் அல்லது மறுநியமனம் செய்யப்படவில்லை என்றால், ஏற்கனவே பதவியில் இருக்கும் தணிக்கை யாளர் நிறுவனத்தின் தணிக்கையாளராக தொடர்ந்து நீடித்தல் வேண்டும் என்று **பிரிவு 139[10]** கூறுகிறது.

பிரிவு 177–இன்படி தணிக்கைக் குழு (Audit Committee) கட்டமைக் கப்பட வேண்டிய நிறுவனமொன்றில் அக்குழுவின் பரிந்துரையைக் கேட்டறிந்த பிறகே அனைத்து தணிக்கையாளர் நியமனங்களையும், தற்காலிக காலியிடத்தை நிரப்பு வதையும் அந்நிறுவனம் செய்தல் வேண்டும் என்று **பிரிவு 139[11]** கூறுகிறது.

தணிக்கையாளரின் நீக்கம் (Removal of Auditor) :

ஒரு நிறுவனம் தணிக்கையாளர் ஒருவரை அவரது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்பு நீக்க வேண்டுமெனில், அதை சிறப்புத் தீர்மானம் ஒன்றினால் மட்டுமே அந்நிறுவனம் செய்தல் வேண்டும். மேலும் இதற்கு மைய அரசின் ஒப்புதலை முன்னதாக பெற்றிருக்க வேண்டும் என்று **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 140[1]** கூறுகிறது. இவ்வாறு நீக்குவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட அத் தணிக்கையாளர் அதற்கு எதிரான தனது வாதங்களை முன் வைப்பதற்கு அவருக்கு நியாயமான வாய்ப்பு ஒன்றை (the auditor shall be given a reasonable opportunity of being heard) நிறுவனம் கொடுக்க வேண்டும். அவ்வாதங்களைக் கேட் டறிந்த பிறகே நிறுவனம் அவரை நீக்குவதற்கான ஒரு முடிவுக்கு வர வேண்டும்

தணிக்கையாளரின் ஊதியம் (Remuneration of Auditor):

தணிக்கையாளரின் ஊதியமானது, நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தால் நிருணிக்கப்படும் அல்லது நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் அத்தகு முறையில் முடிவு செய்யப்படும் என்று **பிரிவு 142(1)** கூறுகிறது. எனினும் இயக்குனரவையால் நியமனம் செய்யப்பட்ட முதல் தணிக்கையாளர் (the remuneration of first auditor) ஒருவரின் ஊதியத்தை அந்த அவையே தீர்மானிக்கும்.

தணிக்கையாளரின் ஊதியத்தில் அவருக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்திற்கும் கூடுதலாக நிறுவனத் தணிக்கை தொடர்பாக அவரால் செய்யப்பட்ட செலவுகள் ஏதுமிருப்பின் அதுவும், மேலும் அவருக்கு வசதிகள் ஏதும் வழங்கப்பட்டிருப் பின் அதுவும் உள்ளடங்கும். ஆனால் நிறுவனம் செய்த வேண்டுகோளின் பேரில் அவர் வழங்கிய சேவை வேறு எதற்காகவும் அவருக்கு வழங்கப்பட்ட ஊதியம் எதையும் அது உள்ளடக்காது என்று **பிரிவு 142(2)** கூறுகிறது.

88. Explain the rights, duties and liabilities of an Auditor. (நிறுவன தணிக்கையாளரைப் பற்றி குறிப்பிட்டு அவரின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளை விவரிக்க.)

(அல்லது)

What are the rights, duties and liabilities of an auditor? (தணிக்கையாளரின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்பு நிலைகள் யாவை?)

(அல்லது)

"Auditors are the watch dogs of a Company" - Explain. ("தணிக்கையாளர்கள் நிறுவனத்தின் காவல் நாய்கள் ஆவார்கள்" - விளக்குக.)

(அல்லது)

"An Auditor is a watch dog, but not a blood hound." Comment on the statement explaining the powers and duties of an auditor. ("ஒரு தணிக்கையாளர் காவல் நாய் போன்றவரேயன்றி குருப்பறியும் நாய் போன்ற வரல்ல". ஒரு தணிக்கையாளரின் அதிகாரங்களையும் கடமைகளையும் விளக்கி இக்கூற்றின் கருத்தினை ஆராய்க.)

(அல்லது)

Powers of auditor - Write short notes. (தணிக்கையரின் ஆற்றல்கள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Rights and duties of an Auditor - Write short notes. (தணிக்கையாளரின் உரிமைகள் மற்றும் கடமைகள் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

பொது மக்கள் ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்கி, அதன் பங்கு தாரர்கள் ஆகிவிடுகின்றனர். ஆனால் அவர்கள் அந்நிறுவனத்தின் செயற்பாடு எப்படிச் செல்கிறது, கணக்கு வழக்குகள் எவ்வாறு உள்ளது என்பது குறித்து அறிய விழைவதில்லை. மேலும் நிறுவனத்தின் மேலாண்மையிலும் பங்கு கொள்ள முடிவ தில்லை. எனவே நிறுவனத்தின் செயற்பாடுகளையும், அதன் கணக்குகளையும் பங்கு தாரர்களுக்கு ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சுட்டிக்காட்ட, ஒவ்வொரு நிறுவனமும் தணிக்கையாளர்களை நியமித்துக் கொள்ள வேண்டும் என்று நிறுவனச் சட்டம் விதிக்கிறது. தணிக்கையாளர்கள் நிறுவனத்தின் செயற்பாடுகளையும், அதன் கணக்குகளையும் தணிக்கை செய்து, ஆண்டு முடிவில் நிறுவனம் எந்நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது, அது இலாபமா, நட்டமா என்பது குறித்து பங்கு தாரர்களுக்கு தங்கள் அறிக்கையின் வாயிலாக எடுத்துரைக்கின்றனர். எனவே **தணிக்கையாளர்களை, பங்குதாரர்களின் பாதுகாவலன்** என்று கூறலாம்.

இதன் பொருட்டு, தணிக்கையாளர்களுக்கு எண்ணற்ற உரிமைகளையும், அதிகாரங்களையும் நிறுவனச் சட்டம் வழங்கியுள்ளது. மேலும் அவர் மீது பல்வேறு கடமைகளையும் சுமத்தியுள்ளது. எனவே **தணிக்கையாளர்களை நிறுவனத்தின் காவல் நாய்கள்** என்று குறிப்பிடலாம். நிறுவனம் தவறு செய்தால், அறிக்கை எனும் வாயால் குரைத்து, எசமானர்கள் எனும் பங்குதாரர்களை விழிப்படையச் செய்து விடும் திறன் படைத்தவர்களே, தணிக்கையாளர்கள்.

தணிக்கையாளரின் உரிமைகள் (Rights of an Auditor) அல்லது அதிகாரங்கள் (Powers of an Auditor):

2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 143(1), தணிக்கை யாளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளைக் குறிப்பிடுகின்றன. இந்த உரிமை களும், கடமைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. ஒருவருக்கு ஒரு கடமை உள்ளதெனில், அதை நிறைவேற்றும் பொருட்டு அது தொடர்பான உரிமையும் வழங்கப் படும். இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே தணிக்கையாளர்களின் உரிமை களும் கடமைகளும் அமைந்துள்ளன எனில் அது மிகையன்று. நாம் முதற்கண் தணிக் கையாளர்களின் உரிமைகளைப் (அதிகாரங்களைப்) பின்வருமாறு காண்போம்.

1. நிறுவனத்தின் கணக்கு ஏடுகள் மற்றும் சான்றுச் சீட்டுகளை தணிக் கையாளர் பார்வையிட உரிமையுடையவர் [பிரிவு 143(1)]. மேலும்,

2. அவர் தனது கடமைகளை நிறைவேற்றத் தேவையானதாகக் கருதும் அனைத்து தகவல்களையும், விளக்கங்களையும் நிறுவன அலுவலர்களிடமிருந்து கோரிப் பெற உரிமை படைத்தவர் [பிரிவு 143(1)].

3. தணிக்கையாளர் ஒருவர் தன்னால் ஆய்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் ஒவ்வொன்றையும் குறித்து அந்நிறுவன உறுப்பினர்களுக்கு அறிக்கையளிக்க வேண்டும் [பிரிவு 143(2)].

4. ஒரு நிறுவனத்திற்கு கிளை அலுவலகம் உண்டென்றால், அந்த அலுவலகக் கணக்குகளையும் அந்நிறுவனத்தின் தணிக்கையாளரே தணிக்கை செய்யும் உரிமை பெற்றவர் [பிரிவு 143(8)].

5. ஒரு நிறுவனத்தின் தணிக்கையாளராக நியமனம் செய்யப்பட்டவர் மட்டுமே அந்நிறுவனத்தின் தணிக்கை அறிக்கையில் கையொப்பமிட வேண்டும். மேலும் தணிக்கையாளரால் கையொப்பமிடப்பட வேண்டும் அல்லது அதிகாரபூர்வமானதாக்கப்பட வேண்டும் என்று சட்டத்தால் வேண்டுறுத்தப்படும் பிற ஆவணங்கள் எதிலும் தணிக்கையாளர் மட்டுமே கையொப்பமிட வேண்டும் அல்லது சான்றளிக்க வேண்டும் என்று பிரிவு 145 கூறுகிறது.

6. தணிக்கையாளர் என்ற முறையில் தொடர்புடைய நிறுவன அலுவலின் எதன் பகுதியிலும் கலந்து கொள்ள அவருக்கு உரிமை உண்டு. நிறுவனத்தின் பொதுக் கூட்டம் தொடர்பான அனைத்து அறிவிப்புகளும், தகவல் தொடர்புகளும் அதன் தணிக்கையாளருக்கும் அனுப்பப்பட வேண்டும். அப்பொதுக் கூட்டங்களில் நேர்முகமாகவோ, தணிக்கையாளரின் தகுதிகளைப் பெற்றுள்ள தனது பிரதிநிதி மூலமாகவோ கலந்து கொள்ள அவர் உரிமை படைத்தவர். மேலும் அப்பொதுக் கூட்டங்களில் தணிக்கையாளர் என்ற முறையில் தன்னைத் தொடும் அலுவலின் எதன் பகுதியிலும் பேசுவதற்கு அவருக்கு உரிமை உண்டு என்று **பிரிவு 146** கூறுகிறது.

7. இயக்குனரவை கூட்ட நடவடிக்கையின் பதிவுப் புத்தகங்களை ஆய்வு செய்ய (to inspect minute books of the Board) தணிக்கையாளருக்கு அதிகாரம் உண்டு.

8. நிறுவனத்திற்கு எதிராக புரியப்படும் மோசடிச் செயல்கள் குறித்து மைய அரசிடம் தெரிவிக்க தணிக்கையாளர் அதிகாரம் படைத்தவர்.

தணிக்கையாளரின் கடமைகள் (Duties) :

ஒரு நிறுவனத்தின் நிதி தொடர்பான விடயங்களில் அதற்கு ஏற்படும் இடர்பாடுகளை தனது அறிக்கைகளின் வாயிலாக வெளிப்படுத்துவதன் மூலம் அந்நிறுவனத்தின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்களை காப்பது தணிக்கையாளர் ஒருவரின் முதன்மைக் கடமையாகும். எனவே உறுப்பினர்களின் மதிப்பீட்டிற்காக, அவர்களது பரிசீலனைக்காக தான் பொருத்தமெனக் கருதும் அனைத்து விடயங்கள் குறித்தும் அவர்களுக்கு அறிக்கையளிக்க வேண்டிய சட்டக் கடப்பாட்டின் கீழ் தணிக்கையாளர் ஒருவர் உள்ளார் என்று சொன்னால் அது மிகையன்று. அத்தகு விடயங்கள் என்னென்ன என்று **பிரிவு 143[1]** பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது. அவை,

(அ) பிணையத்தின் பேரில் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கடன்களும் முன்பணங்களும் முறைப்படி திரும்பப் பெறப்பட்டு வருகிறதா மற்றும் இது தொடர்பாக நிறுவனம் செய்துள்ள வரைவுரைகள் (நிபந்தனைகள்) நிறுவனத்திற்கோ, அதன் உறுப்பினர்களுக்கோ குந்தகமாக உள்ளதா;

(ஆ) வெறுமனே பேரேட்டுப் பதிவுகளால் (book-entries) மட்டும் தெரிய வரும் நிறுவனத்தின் செயற்பாடுகள் நிறுவன நலன்களுக்கு குந்தகமாக உள்ளதா;

(இ) முதலீட்டு நிறுவனம் அல்லது வங்கி நிறுவனம் அல்லாத ஒன்றாக நிறுவனம் இருக்குமிடத்து, பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் மற்றும் இதர பிணையங் களை உள்ளடக்கிய நிறுவன சொத்திருப்புகளின் பெரும் பகுதி, அவை நிறுவனத்தால் வாங்கப்பட்டதின் போது இருந்த விலையை விட குறைவான விலைக்கு விற்கப் பட்டுள்ளதா;

(ஈ) நிறுவனத்தால் பெறப்பட்ட கடன்களும் முன்பணங்களும் வைப்பீடு களாக காட்டப்பட்டுள்ளதா;

(உ) நிறுவனத்தின் தனிமுறைச் (சொந்தச்) செலவுகள் நிறுவனத்தின் வருவாய்க் கணக்கில் ஏற்றப்பட்டுள்ளதா;

(ஊ) ரொக்கம் பெற்றதன் பேரில் பங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் ஏடுகளிலும் ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்குமிடத்து, அத்தகு ஒதுக்கீட்டிற்காக உள்ளபடியே ரொக்கம் பெறப்பட்டுள்ளதா, அவ்வாறு ரொக்கம் பெறப் படவில்லையானால் கணக்குப் பேரேடுகள், இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட நிலைப்பாடு சரியா, ஒழுங்கானதா மற்றும் தவறாக காட்டுவதாக இல்லையா.

மேற்கண்ட விடயங்கள் குறித்து தணிக்கையாளர் ஒருவர் விசாரணை செய்ய அதிகாரமும் கடமையும் கொண்டவர்.

இவை தவிர மற்றொரு முக்கிய கடமையும் தணிக்கையாளருக்குஉண்டு. அதாவது நாம் ஏற்கனவே கண்ட பிரிவு 142(2)–இன்படி தணிக்கையாளர் ஒருவர் தன்னால் தணிக்கை செய்யப்பட்ட நிறுவனக் கணக்குகள் குறித்தும், இருப்புநிலைக் குறிப்பேடு, இலாப–நட்டக் கணக்கு ஆகிய நிதிநிலை அறிக்கைகள் ஒவ்வொன்றைக் குறித்தும் நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு அறிக்கை அளிக்கக் கடமைப்பட்டவர். அதன் மூலம் நிறுவன விவகாரங்கள் தொடர்பான உண்மையான மற்றும் சரியான கண்ணோட்டத்தை நிதியாண்டு ஒவ்வொன்றின் முடிவிலும் அவர் வழங்க வேண்டும்.

எனினும் ஒரு நிறுவனம் தனது தொழிலை எவ்வாறு நடத்த வேண்டும் என்பது குறித்து அதற்கு ஆலோசனை வழங்கக் கடமைப்பட்டவர் அல்ல.

தணிக்கையாளரின் பொறுப்புகள் (Liabilities) :

1. இயக்குனர்கள் கொடுத்த நிறுவனத்தின் கணக்குகளை தணிக்கை செய்து அதனைப்பற்றி பங்குதாரர்களுக்கு அறிக்கையளிப்பது, தணிக்கையாளரின் முக்கிய பொறுப்பாகும். சுருங்கக்கூறின் தணிக்கையாளர் பங்குதாரர்களின் பணியாளராக உள்ளார்.

2. தணிக்கையாளர் நேர்மையானவராகவும் இருக்க வேண்டும். தன் கடமைகளை நிறைவேற்றுவதில் உரிய கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் நடந்து கொள்ள வேண்டும். இல்லாது போனால், இழப்பீடு கோரி அவர் மீது வழக்கு

தொடரப்பட வாய்ப்பு ஏற்படுகிறது.

3. தணிக்கையாளர் தனது உரிமைகளையும், அதிகாரங்களையும் தவறாகப் பயன்படுத்துவது நம்பிக்கைத் துரோகக் (Breach of Trust) குற்றமாகும்.

4. தணிக்கையாளர் தனது அறிக்கையை சட்டத்தில் குறிப்பிட்டபடி தயாரிக்க வேண்டும். தவறினால் தண்டனைக்குள்ளாவார். அதற்குரிய அபராதத்தை செலுத்த வேண்டிய நிலை ஏற்படக்கூடும்.

5. நிறுவனத்தின் திட்ட அறிவிப்பில் உண்மையற்ற கூற்றுகள் இருந்து அதற்கு தணிக்கையாளர் சான்றளித்து கையொப்பம் செய்தால், அவர் தண்டனைக்கு உள்ளாவார்.

இவ்வாறு தணிக்கையாளர்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்புகளை ஏற்க வேண்டியுள்ளது.

முடிவுரை:

தணிக்கையாளர்கள் என்பவர்கள், ஒரு நிறுவனத்தின் கணக்குகளை தணிக்கை செய்தன் மூலம், அந்நிறுவனத்தின் செயற்பாடுகளையும், நிலையையும் பங்குதாரர்களுக்கு எடுத்துரைக்கின்றனர். நிறுவனத்தின் ஏடுகளை ஆயும் பொழுது, அதில் தவறு காணப்பட்டால், அது தவறாக உள்ளது என்று விளம்பும் உரிமையும் அதிகாரமும் மட்டுமே தணிக்கையாளருக்கு உண்டு. அத்தவறு எதனால் ஏற்பட்டுள்ளது என்பது குறித்து புலன் விசாரணை செய்யும் உரிமையோ, கடமையோ அவருக்கு இல்லை. இதை மேற்கண்ட அவரது உரிமைகளையும், கடமைகளையும் காணுறும் பொழுது அறியலாம். எனவே அவர் நிறுவனத்தின் தவறுகளை பங்குதாரர்களுக்கு சுட்டிக்காட்டலாம். மாறாக அவரே நிறுவனத்திற்கெதிராக நடவடிக்கை எதையும் எடுக்க வியலாது. அவரது அறிக்கையின் அடிப்படையில் பங்குதாரர்கள்தான் நடவடிக்கை எடுக்க முடியும். எனவே, "**தணிக்கையாளர் என்பவர் ஒரு நிறுவனத்தின் காவல் நாயே தவிர, இரத்த வெறி பிடித்த வேட்டை நாயல்ல**" எனும் கூற்று சரியானதே.

89. Balance Sheet - Write short notes. (இருப்பு நிலைக் குறிப்பேடு - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Financial Statement - Write short notes. (நிதிநிலை அறிக்கைகள் - குறுகிய விடை எழுதுக.)

ஒவ்வொரு நிறுவனமும் தன்னுடைய தொழிலுக்கு ஏற்றவாறு, தேவையான பதிவேடுகளை தெளிவான முறையில் வைத்திருப்பது, இன்றியமையாத ஒன்றாகும். அவை நிறுவனத்தின் விவகாரங்களை உண்மையாகவும், நேர்மையாகவும் சுட்டிக் காட்டக்கூடியதாக இருக்க வேண்டும். ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இயக்குனர்கள் நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட இலாப-நட்டக் கணக்குகளையும், இருப்பு நிலைக் குறிப்பேட்டையும் தயாரித்து வைக்க வேண்டும்.

முந்தைய நிறுவனங்கள் சட்டம், 1956-இன்படி இருப்புநிலைக் குறிப்பு,

இலாப நட்டக் கணக்கு ஆகியன அந்ததப் பெயரிலேயே அப்படியே குறிப்பிடப்பட்டன. தற்போது இவை அனைத்தையும் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் **"நிதி நிலை அறிக்கை"** (Financial Statment) என்ற தலைப்பின் கீழ் ஒன்றாகச் சேர்த்துவிட்டது. இதற்கான வரையறையை **பிரிவு 2(40)** பின்வருமாறு தருகிறது.

நிறுவனம் ஒன்றின் தொடர்பாக உள்ள நிதிநிலை அறிக்கை என்பதில்,

(i) நிதியாண்டின் முடிவில் உள்ளவாறான இருப்பு நிலைக் குறிப்பு;

(ii) இலாப நட்டக் கணக்கு (profit and loss account), அல்லது இலாப நோக்கில் செயல்படாத நிறுவனமொன்றின் நேர்வில், அதன் வருமானம் மற்றும் செலவுக் கணக்கு (income and expenditure account);

(iii) ரொக்கப் பயன்பாடு அறிக்கை (cash flow statement)

(iv) சாதாரண பங்குகளின் மீதான பற்றுகள் குறித்த அறிக்கை;

(iv) இருப்புநிலை குறிப்பு அல்லது சாதாரண பங்குகளின் மீதான பற்றுகள் குறித்த அறிக்கை எதனுடனும் இணைக்கப்பட்ட விளக்கக் குறிப்பு (Explanatory Note) எதுவும்

அடங்கும். எனவே தற்போது ஒரு நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கை என்றால் அதில் மேற்கண்ட அனைத்தும் அடங்கும்.

நிலை இவ்வாறு இருக்க, இருப்பு நிலைக் குறிப்பு அல்லது இருப்பு நிலைக் குறிப்பேடு என்பது ஒரு நிறுவனத்தின் நிதி நிலையை மிகத் தெளிவாக படம் பிடித்துக் காட்டக் கூடிய ஓர் ஆவணமாகும். மேலும் நிறுவனத்தின் அனைத்து விபரங்களையும் அக்கக்காக பிரித்துத் தருகிறது. பிடிப்பு நிறுவனமாயின் (Holding Company), பிடிப்பிலுள்ள கிளை நிறுவனத்தின் (Subsidiary Company) முழு நிதி நிலையையும் இக்குறிப்பேடு ஒளிவு மறைவில்லாமல் உரைக்க வேண்டும்.

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் III–வது பட்டியலின் கீழான முதற் பகுதியில் **(Part I of the Schedule III)** இருப்பு நிலைக் குறிப்பு ஒன்றில் சுட்டிக் காட்டப்பட வேண்டிய விவரங்கள் என்னென்ன என்பதற்கான மாதிரி கொடுக்கப்பட்டுள்ளது. அதன் வரிசை எண். 1–இன் கீழ் பங்குதாரர்களின் நிதி, ஒதுக்கீடு நிலுவையில் உள்ள போது பெறப்பட்ட பங்கு விண்ணப்பப் பணம், நடப்பில் இல்லாத பொறுப்புகள், நடப்பு பொறுப்புகள் ஆகிய தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. வரிசை எண். 2–இன் கீழ் சொத்திருப்பு (assets) எனும் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றின் கீழ் நிறுவனத்தின் கணக்குகள் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

இதையடுத்து இருப்புநிலை குறிப்பை தயாரிப்பதற்குண்டான பொது அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. **பிரிவு 137-இன்படி** நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தால் ஏற்கப்பட்ட இருப்புநிலை குறிப்பு உள்ளடங்கிய நிதி நிலை அறிக்கையின் நகல் ஒன்றை அந்நிறுவனம் பொதுக் கூட்டத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும்.

தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பு
[National Financial Reporting Authority]

6

90. National Financial Reporting Authority - Write short notes. (தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பு - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Explain the constitution, functions and powers of National Financial Reporting Authority under the Companies Act, 2013. (2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பின் கட்டமைப்பு, பணிகள் மற்றும் அதிகாரங்களை விளக்குக)

முன்னுரை:

நிறுவனங்கள் தங்கள் கணக்குகளை பதிவிடுவது மற்றும் அதன் தணிக்கை அமைய வேண்டிய தரநிலைகள் தொடர்பான விடயங்களுக்காக தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகாரஅமைப்பு ஒன்றைக் கட்டமைக்க 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 132** வகை செய்கிறது.

இது அத்துடன் மட்டுமல்லாமல், தணிக்கையாளர்களை ஒழுங்குமுறைப் படுத்தவும், பட்டயக் கணக்காயர்களின் தொழில்முறை அல்லது வேறு தவறான நடத்தையை புலனாய்வு செய்யவும் பரந்த அதிகாரம் கொண்டுள்ளது. அவை தொடர்பாக இந்த அதிகாரஅமைப்பு பல்வேறு ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது. இந்த புதிய அதிகாரஅமைப்பு நிறுவனச் சட்ட வரலாற்றில் ஓர் மைல் கல் என்று சொன்னால் அதில் மிகையில்லை. சற்று விரிவாக வருமாறு:–

தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகாரஅமைப்பு:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் **கணக்குகளை பதிவிடுதல் மற்றும் தணிக்கைகான தரநிலைகள் (Accounting and auditing standards)** தொடர்பான விடயங்களுக்கு வகை செய்வதற்கு தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகாரஅமைப்பு ஒன்றை மைய அரசு அறிவிக்கை மூலம் கட்டமைக்கலாம் என்று **பிரிவு 132(1)** கூறுகிறது.

பணிகள்:

இந்த அதிகாரஅமைப்பு பின்வரும் பணிகளைச் செய்தல் வேண்டும் என்று பிரிவு 132(2) கூறுகிறது. அதாவது மேற்கண்டவாறு கட்டமைக்கப்படும் தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகாரஅமைப்பானது,

(அ) கணக்குகளை பதிவிடுதல் மற்றும் தணிக்கைக் கொள்கைகள் மற்றும் தரநிலைகளை நிறுவனங்கள் அல்லது அவற்றின் தணிக்கையாளர்கள் ஏற்றுக் கொள்வதற்காக உருவாக்குதல் மற்றும் முன் வைத்தல் மீது மைய அரசுக்கு பரிந்துரைகளைச் செய்தல் வேண்டும்.

(ஆ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு முறையில் கணக்குகளை பதிவிடும் தரநிலைகள் மற்றும் தணிக்கைத் தரநிலைகளைக் கண்காணித்து, அவற்றை நிறுவனங்கள் கடைப்பிடிப்பத்தை வலியுறுத்திச் செயற்படுத்த வேண்டும்.

(இ) அத்தகு தரநிலைகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதுடன் தொடர்புடைய தொழில்களின் சேவை குறித்த தரத்தை மேற்பார்வையிட வேண்டும். மேலும் அத்தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அறிவுறுத்த வேண்டும்.

(ஈ) மேற்கண்டவற்றுக்கு தொடர்புடைய அத்தகு வேறு பணிகளையும் செய்ய வேண்டும்.

கட்டமைப்பு:

தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகாரஅமைப்பின் கட்டமைப்பு

குறித்து **பிரிவு 132(3)** கூறுகிறது.

அதன்படி, இது தலைவர் (chair person) ஒருவரை கொண்டிருத்தல் வேண்டும். இவர் கணக்குப் பதிவியல், தணிக்கை, நிதி அல்லது சட்டத்தில் நிபுணத்துவம் பெற்றவராகவும், சிறந்த நபராகவும் இருக்க வேண்டும். இவரை மைய அரசும் மேற்படி அதிகார அமைப்பின் பதினைந்துக்கும் மிகாத உறுப்பினர்களும் நியமனம் செய்தல் வேண்டும்.

அத்தலைவரும், உறுப்பினர்களும் தங்கள் நியமனம் தொடர்பான நலனில் முரண்பாடு ஏதுமில்லை என்றும், சுதந்திரத்தில் குறைவு ஏதும் இல்லை என்றும் விளம்பகை ஒன்றை மைய அரசிடம் செய்ய வேண்டும்.

மேலும் மேற்படி தலைவரும் உறுப்பினர்களும் தங்கள் நியமன காலத்தின் போதும், அத்தகு நியமனம் முடிவுற்ற பிறகான இரண்டு ஆண்டுகளின் போதும் தணிக்கை நிறுமம் எதிலும் கூட்டாளிகளாக இருத்தலாகாது.

அதிகாரங்கள்:

தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பின் அதிகாரங்களை **பிரிவு 132(4)** பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது.

(அ) இது தானாகவோ அல்லது அத்தகு கூட்டுரு அமைப்புகளின் வகைகள் அல்லது நபர்களுக்காக மைய அரசால் செய்யப்படும் சுட்டிகை ஒன்றின் பேரிலோ, பட்டயக் கணக்காயர்கள் சட்டம், 1949–இன் கீழ் பதிவு செய்யப்பட்ட பட்டயக் கணக்காயர்களின் உறுப்பினர் அல்லது நிறுமம் எதனாலும் செய்யப்பட்ட தொழில்நீதியான அல்லது வேறு தவறான நடத்தை குறித்து புலனாய்வு செய்யும் அதிகாரம் படைத்தது.

மேற்கண்டவாறு தனது புலனாய்வை மேற்படி அதிகார அமைப்பு தொடங்கி இருக்கும் போது, அத்தகு தவறான நடத்தை விடயங்களில் வேறெந்த அமைப்பும் தனது நடவடிக்கைகள் எதையும் தொடங்கவோ, தொடரவோ கூடாது.

(ஆ) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் ஓர் உரிமை வழக்கை விசாரிக்கும் போது உரிமையியல் நீதிமன்றத்திற்கு பின்வரும் விடயங்களில் எத்தகு அதிகாரங்கள் உள்ளனவோ, அதே அதிகாரங்கள் இந்த அதிகார அமைப்பிற்கும் உண்டு. அவை,

(i) கணக்குப் பேரேடுகள் மற்றும் வேறு ஆவணங்களை கண்டறிதல் மற்றும் முன்னிலைப்படுத்துதல்

(ii) நபர்களுக்கு அழைப்பாணை விடுத்து அவர்கள் தன் முன் தோன்றுவதை வலியுறுத்தல் மற்றும் அவர்களை உறுதிமொழியின் பேரில் விசாரித்தல்;

(iii) ஒருவருடைய பதிவேட்டுப் புத்தகங்களை ஆய்வு செய்தல்;

(iv) சாட்சிகளை விசாரிக்க அல்லது ஆவணங்களை முன்னிலைப் படுத்த ஆணையங்கள் நியமித்தல்;

(இ) பட்டயக் கணக்காயர்களின் தொழில் மற்றும் வேறு தவறான நடத்தை யானது மெய்ப்பிக்கப்படும் பட்சத்தில், தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பு பின்வரும் ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் கொண்டதாகும். அவை,

(A) தண்டம் விதித்தல்

I. தனி நபர்களைப் (பட்டயக் கணக்காயர்) பொறுத்த வரை ஒரு இலட்சத்திற்கும் குறையாத, ஆனால் அவரால் பெறப்பட்ட கட்டணத்தில் அய்ந்து மடங்களவு நீட்டிக்கலாகும் அத்தகு தண்டத்தை (அபராதம்) விதிக்கலாம்.

II. நிறுமத்தைப் (பட்டயக் கணக்காயர்கள் நிறுமம்) பொறுத்தவரை பத்து இலட்சத்திற்கும் குறையாத, ஆனால் அந்நிறுமத்தால் பெறப்பட்ட கட்டணத்தில் பத்து மடங்களவு நீட்டிக்கலாகும் அத்தகு தண்டத்தை விதிக்கலாம்.

(B) குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு அல்லது பத்து ஆண்டுகளுக்கு மேல் செல்லாத அத்தகு உச்ச கால அளவு ஒன்றுக்கு இந்தியப் பட்டயக் கணக்காயர் கள் நிலையத்தின் உறுப்பினராக தன்னை தொழிலில் ஈடுபடுத்திக் கொள்வதிலிருந்து அவ்வுறுப்பினரை அல்லது நிறுமத்தை தடை செய்தல்.

பாதிக்கப்பட்டவரின் மேல்முறையீடு:

தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பு மேற்கண்டவாறு பிறப் பித்த ஆணையால் பாதிக்கப்பட்ட நபர் எவரும் மைய அரசால் கட்டமைக்கப்பட்டுள்ள மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பிடம் (Appellate Authority) மேல்முறையீடு

ஒன்றை தாக்கல் செய்யலாம் என்று **பிரிவு 132(5)** கூறுகிறது.

இந்த மேல்முறையீட்டு அதிகார அமைப்பில் தலைவரும், இருவருக்கு மிகாத உறுப்பினர்களும் அடங்கியிருப்பர் என்று **பிரிவு 132(6)** கூறுகிறது.

அலுவலக இடம்:

தேசிய நிதிசார் அறிக்கையளிக்கும் அதிகார அமைப்பின் அலுவலகம் அமைந்திருக்கும் இடம் புதுதில்லி ஆகும். எனினும் இது இந்தியாவில் தான் பொருத்த மெனக் கருதும் அத்தகு வேறு இடத்திலும் கூடலாம்.

முடிவுரை

இந்த அதிகார அமைப்பு ஒருபுறம் கணக்குப் பதிவிடல் மற்றும் தணிக்கைத் தரநிலைகள் கடைப்பிடிக்கப்படுவதை தீவிரமாக வலியுறுத்துகிறது. மற்றொரு புறம் பட்டயக் கணக்காயர்களின் தொழில் மற்றும் வேறு தவறான நடத்தைகளை புலனாய்வு செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறது. தவறான நடத்தை மெய்ப்பிக்கப்பட்டால், அவர்களை கடுமையாகவும் தண்டிக்கிறது. எனவே மேற்படி தொழிலர்கள் மிகுந்த விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் தொழிலாற்ற வேண்டும். மேலும் இத்தகு கண்காணிப்பின் காரணமாக நிறுவனமொன்றின் கணக்குப் பதிவியல் மேலாண்மை திறம்பட்டதாக மாறி வருகிறது என்றுதான் கூற வேண்டும்.

-o0o-

புலன் விசாரணை
[Investigation]

7

91. (a) Summarise the provisions regarding the power of Central Government to investigate into the affairs of a Company. (மத்திய அரசாங்கம் ஒரு நிறுவனத்தின் விவகாரங்களில் தலையிட்டு புலன் விசாரணை செய்யும் அதிகாரம் குறித்த சட்ட வகைமுறைகளைக் குறித்து கட்டுரை ஒன்றினை வரைக.)

(b) What are the powers of the persons appointed for carrying out such investigation ? (புலன் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்படும் நபரின் அதிகாரங்கள் யாவை ?)

(அல்லது)

Critically examine the provisions relating to the powers of central government to investigate into the affairs of a company? (ஒரு நிறுவனத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்ய மத்திய அரசிற்குள்ள

அதிகாரங்கள் தொடர்பான வகைமுறைகளை கூர்ந்தராய்க.)

(அல்லது)

What are the powers of National Company Law Tribunal to investigate into the affairs of a company? (ஒரு நிறுவனத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்ய தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள் யாவை?)

(அல்லது)

Investigation - Write short notes. (புலன் விசாரணை - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Inspectors - Write short notes. (ஆய்வாளர்கள் - குறுகிய விடை எழுதுக.)

புலன் விசாரணையின் தேவை (Need for Investigation):

பங்குதாரர்கள் அளிக்கும் பங்குத் தொகையே, நிறுவனத்தின் மூலதனமாகிறது. இதைக் கொண்டு நிறுவனம் தனது வியாபாரத்தை அல்லது தொழிலைச் செய்கிறது. ஒரு நிறுவனம் நன்முறையில் அம்மூலனத்தை பயன்படுத்தினால், அந்நிறுவனம் அதிக இலாபமீட்டுகிறது. இதனால் பங்குதாரர்களுக்கு உயர்ந்த சதவீதத்தில் பங்காதாயம் கிடைக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் மேம்படுகிறது.

எனவே ஒரு நிறுவனம் அத்தகு மூலதனத்தை தவறான நோக்கங்களுக்குப் பயன்படுத்தினால் அல்லது தனது செயற்பாடுகளைத் தவறாக நடத்தினால் அதனால் முடிவாகப் பாதிக்கப்படுபவர்கள், அந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கிய பங்குதாரர்களே.

இதைத் தடுக்கும் பொருட்டே, நிறுவனத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்தற்குண்டான வழிவகைகளை நிறுவனச் சட்டம் செய்துள்ளது. மைய அரசும், தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயமும் ஒரு நிறுவனத்தை புலன் விசாரணை செய்து உண்மை நிலையைக் கண்டறிய வேண்டும் என்று ஆணையிடலாம். இதற்கென ஆய்வாளர்களை நியமிக்கலாம். மேலும் ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள் கூட மேற்படி புலன் விசாரணையை செய்ய ஆணையிடும்படி கோரலாம்.

இவை குறித்த வகைமுறைகளை **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டமானது "ஆய்வு, விசாரணை மற்றும் புலனாய்வு" (Inspection, Inquiry and Investigation)** என்ற தலைப்பின் கீழ் 206 முதல் 229 வரையிலான பிரிவுகள் வாயிலாக விரிவாக விளக்குகின்றது. சுருங்கக் கூறின், பசுந்தோல் போர்த்திய புலிபோல் நடமாடும் நிறுவனங்களின் முகத்திரையைக் கிழித்து, அதனை அடையாளம் கண்டு கொள்ள மேற்கண்ட வகைமுறைகள் உதவிக்கு வருகின்றன எனில் அது மிகையன்று.

மைய அரசின் புலன் விசாரணை அதிகாரம் (Power of

Central Government to order Investigation) – பிரிவு 210:



ஒரு நிறுவனத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்று மைய அரசு அபிப்பிராயப்பட்டால், அது,–

(a) பிரிவு 208–இன் கீழ் பதிவாளர் அல்லது ஆய்வாளரின் அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பேரில்,

(b) நிறுவனத்தின் விவகாரங்கள் புலன் விசாரணை செய்யப்பட வேண் டும் என்று நிறுவனமொன்றால் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானம் ஒன்றின்படி கிடைக்கப் பெறும் தகவலின் பேரில், அல்லது

(c) பொதுமக்கள் நலனில் அக்கறை கொண்டு

அந்நிறுவனத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்வதற்கு ஆணையிடலாம், என்று **பிரிவு 210(1)** கூறுகிறது.

நிறுவனமொன்றின் விவகாரங்கள் புலன் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று ஒரு நீதிமன்றம் அல்லது தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் தன் முன் நடக்கும் வழக்கு நடவடிக்கைகள் எதிலும் ஆணையிட்டால், அதன்படி புலன் விசாரணை ஒன்றுக்கு மைய அரசு ஆணையிடுதல் வேண்டும் என்று **பிரிவு 210(2)** கூறுகிறது.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக நிறுவன விவகாரங்களை புலன் விசாரணை செய்வதற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை ஆய்வாளர் களாக மைய அரசு நியமனம் செய்யலாம். அவர்கள் அதன் மீது மைய அரசு ஏவுரைக் கும் அத்தகு முறையில் அறிக்கையளிக்க வேண்டும் என்ற **பிரிவு 210(3)** கூறுகிறது.

எனவே மைய அரசு பிரிவு 208(1)–இல் கண்டுள்ளவாறு மூன்று தலைப்பு களின் கீழ் நிறுவனமொன்றின் விவகாரங்களை புலன் விசாரணை செய்ய **ஆணையி டலாம் (may order)** என்பதும், நீதிமன்றமோ, தீர்ப்பாயமோ அத்தகு புலன் விசார ணைக்கு தன் முன் நடக்கும் வழக்கு நடவடிக்கையில் ஆணையிட்டால், அங்கு மைய அரசு அத்தகு புலன் விசாரணைக்கு பிரிவு 208(2)–இன்படி **ஆணையிடுதல் வேண்டும் (shall order)** என்பதும், புலன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க மைய அரசு ஆய்வாளர்களை பிரிவு 208(3)–இன்படி நியமனம் செய்யலாம் என்பதும் மேற்கண்டவற்றிலிருந்து தெளிவாகிறது.

இவை ஒவ்வொன்றையும் சற்று விரிவாகப் பின்வருமாறு காண்போமா?

(1) பதிவாளர் அல்லது ஆய்வாளரின் அறிக்கை கிடைக்கப் பெற்றதன்

பேரில் (On the receipt of report of the Registrar or inspector) - பிரிவுகள் 206, 207, 208 மற்றும் 210:

நிறுவனங்கள் சட்டம், 2013–இன் பிரிவு 208–இன் கீழ் பதிவாளர் அல்லது ஆய்வாளரின் அறிக்கை (ஆய்வறிக்கை) கிடைக்கப் பெற்றதன் பேரில், நிறுவன மொன்றின் விவகாரங்களை புலனாய்வு செய்ய மைய அரசு ஆணையிடலாம் என்று நிறுவனங்கள் சட்டம், 2013–இன் பிரிவு 210(1) (a) கூறுவதை நாம் ஏற்கனவே கண் டோம். எனவே இங்கு பிரிவு 208–இல் யாது கூறப்பட்டுள்ளது என்பதை கவனிப்பது அவசியமாகும்.

பிரிவு 208: இதில், பிரிவு 206–இன் கீழ் கணக்குப் புத்தகங்களை ஆய்வு செய்த பிறகு அல்லது விசாரணை ஒன்றைச் செய்த பிறகும் மற்றும் பிரிவு 207–இன் கீழ் நிறுவனத்தின் வேறு புத்தகங்கள் அல்லது தாள்களை ஆய்வு செய்த பிறகும், பதிவாளர் அல்லது ஆய்வாளரானவர் அறிக்கை ஒன்றை, தொடர்புடைய ஆவணங் களுடன் எழுத்துப்பூர்வமாக மைய அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. எனவே மேற்படி தலைப்பிற்கு விளக்கம் காண நாம் இங்கு பிரிவு 206 மற்றும் 207–இல் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை கண்டறிய வேண்டியது அவசிய மாக உள்ளது.

பிரிவு 206: நிறுவனமொன்று தாக்கல் செய்த ஆவணம் அல்லது அது அளித்த தகவல் எதையும் நிறுவனங்களின் பதிவாளர் பரிசீலனை செய்வதன் பேரில், அந்நிறுவனம் தொடர்பாக மேலும் சில தகவல்கள் அல்லது விளக்கம் அல்லது வேறு ஆவணங்களும் பரிசீலனைக்கு அவசியமாக உள்ளதென அவர் அபிப்பிராயப்பட்டால், அவர் எழுத்துப்பூர்வமான அறிவிப்பு ஒன்றை அந்நிறுவனத்திற்கு அனுப்பி, அதில் அவரால் குறித்துரைக்கப்படும் ஒரு நியாயமான காலத்திற்குள் (அ) அத்தகு தகவல் அல்லது விளக்கத்தை எழுத்துப்பூர்வமாக அளிக்கும்படி, அல்லது (ஆ) அத்தகு ஆவணங்களை முன்னிலைப்படுத்தும்படி அந்நிறுவனத்தைக் கோரலாம் என்று **பிரிவு 206(1)** கூறுகிறது.

பதிவாளர் தனது மேற்படி அறிவிப்பின் வாயிலாகக் கோரும் தகவல் அல்லது விளக்கம் அல்லது ஆவணங்கள் எதையும் அவரிடம் வழங்க அந்நிறுவனம் **பிரிவு 206(2)**–இன்படி கடமைப்பட்டதாகும்.

மேற்படி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்திற்குள் தகவல் அல்லது விளக்கம் எதையும் அந்நிறுவனம் வழங்கவில்லையென்றால் என்றாலோ, அல்லது அந் நிறுவனம் வழங்கிய ஆவணங்களை திறனாய்வு செய்வதன் பேரில் அது வழங்கிய தகவல் அல்லது விளக்கம் போதுமானதாக இல்லை என்றோ பதிவாளர் அபிப்பிராயப் பட்டால் அல்லது அந்நிறுவனம் வழங்கிய ஆவணங்களை பரிசீலனை செய்வதன் பேரில், அந்நிறுவனத்தில் அதிருப்தியானதொரு சூழல் நிலவுவதாகவும், கோரப்பட்ட தகவலின் முழு மற்றும் உண்மையான கூற்று ஒன்றை அந்த ஆவணங்கள் வெளிப் படுத்தாமல் உள்ளதாகவும் அவர் மனநிறைவடைந்தால், அவர் அந்நிறுவனத்தின் மேலும் சில கணக்குப் பேரேடுகள், புத்தகங்கள், தாள்கள் மற்றும் விளக்கங்களை தனது ஆய்விற்கு அத்தகு இடத்திலும் நேரத்திலும் முன்னிலைப்படுத்துமாறு கோரி

எழுத்துப்பூர்வமான மற்றொரு அறிவிப்பின் வாயிலாக அந்நிறுவனத்தை அழைக்கலாம் என்று **பிரிவு 206(3)** கூறுகிறது.

இதையடுத்து தன்னிடம் உள்ள அல்லது தனக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் அல்லது நிறுவனத்தின் நபர் எவராலும் முன் வைக்கப்பட்ட வாதத்தின் பேரில், அந்நிறுவனத்தின் அலுவலானது மோசடியான அல்லது சட்ட விரோதமான நோக்கங்களுக்காக நடத்தப்படுகிறது என்றோ அல்லது அது இச்சட்டத்தின் வகை முறைகளை நிறைவு செய்யவில்லை என்றோ அல்லது முதலீட்டாளர்களின் குறைகளுக்கு செவிசாய்க்கவில்லை என்றோ பதிவாளர் மனநிறைவடைந்தால், அவர் தனது எழுத்துபூர்வமான ஆணை ஒன்றின் வாயிலாக அந்நிறுவனத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை அதனிடம் தெரிவித்த பிறகு, அதில் குறிப்பிடப்பட்ட தகவல் அல்லது விளக்கம் எதையும் வழங்கும்படி அதை அழைக்கலாம். மேலும் இது தொடர்பாக அந்நிறுவனம் தனது வாதங்களை முன் வைப்பதற்கான நியாயமான தொரு வாய்ப்பை அதற்கு அளித்த பிறகு, தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு விசாரணையை பதிவாளர் மேற்கொள்ளலாம் என்று **பிரிவு 206(4)** கூறுகிறது.

எனினும், அங்கு நிலவும் சூழல்கள் மேற்படி விசாரணையை பதிவாளர் அல்லது தன்னால் நியமனம் செய்யப்பட்ட ஆய்வாளர் ஒருவர் செய்ய வேண்டுமென வேண்டுறுத்துவதாக மைய அரசு மனநிறைவடைந்தால், அது அவ்விசாரணையை செய்ய பதிவாளர் அல்லது ஆய்வாளருக்கு ஏவுரைக்கலாம்.

மேற்சென்ற வகைமுறைகளுக்கு யாதொரு குந்தகமுமின்றி, நிலவும் சூழல்கள் அவ்வாறு வேண்டுறுத்துவதாக மைய அரசு மனநிறைவடைந்தால், அது இந்நோக்கத்திற்காக தன்னால் நியமனம் செய்யப்பட்ட ஆய்வாளர் ஒருவரால் நிறுவனமொன்றின் புத்தகங்கள் மற்றும் தாள்களை ஆய்வு செய்ய ஏவுரைக்கலாம் என்று பிரிவு 206(5) கூறுகிறது. மேலும் அத்தகு ஆய்வைச் செய்ய சட்டப்படியான அதிகார அமைப்பு எதற்கும் மைய அரசு தனது பொது அல்லது தனி ஆணை வாயிலாக அதிகாரமளிக்கலாம் என்று பிரிவு 206(6) கூறுகிறது. மேற்கண்ட தகவல் அல்லது விளக்கம் அளிப்பதில் அல்லது ஆவணங்களை முன்னிலைப்படுத்துவதில் தவறுகை புரியும் நிறுவனத்திற்கும், அதன் அலுவலர் ஒவ்வொருக்கும் தண்டனையாக விதிக்கப்படும் அபராதம் பற்றி பிரிவு 206(7) கூறுகிறது.

பிரிவு 206 மேற்கண்டவாறு மிக நீளமாகக் கூறும் வகைமுறைகளை சற்றே தொகுத்துரைத்துச் கூறினால், நிறுவனமொன்றின் விவகாரங்கள் திருப்திகரமாக இல்லை என்பதையோ அல்லது அதன் அலுவலானது மோசடியான அல்லது சட்ட விரோதமான நோக்கங்களுக்காக நடத்தப்படுகிறது என்பதையோ அந்நிறுவனம் தாக்கல் செய்யும் ஆவணம், அல்லது அளிக்கும் தகவல் அல்லது விளக்கம் அல்லது முன் வைக்கும் வாதம் ஆகியவற்றை பரிசீலனை அல்லது ஆய்வு செய்வதன் பேரில் பதிவாளர் கண்டறிந்தால், அவர் அந்நிறுவன விவகாரங்களை விசாரணை செய்யலாம். அவ்வாறே அத்தகு விசாரணை ஒன்றை மேற்கொள்ள தன்னால் நியமனம் செய்யப்பட்ட ஆய்வாளர் ஒருவருக்கு மைய அரசு ஏவுரைக்கலாம். அதுபோல் பதிவாளருக்கும் மைய அரசு ஏவுரைக்கலாம்.

இனி பிரிவு 207 யாது கூறுகிறது என்பதை பின்வருமாறு காண்போம்.

பிரிவு 207: பதிவாளர் அல்லது ஆய்வாளர் மேற்படி பிரிவு 206–இன் கீழ் கோரும் கணக்குப் புத்தகங்கள் மற்றும் வேறு புத்தகங்கள் மற்றும் தாள்களை (books of account and other books and papers), சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் இயக்குனர், அலுவலர் அல்லது பணியாளர் மேற்படி பதிவாளர் அல்லது ஆய்வாளரிடம் முன்னிலைப்படுத்த வேண்டும். மேலும் அப்பதிவாளர் அல்லது ஆய்வாளர் கோரும் அத்தகு கூற்றுகள், தகவல் அல்லது விளக்கங்களை அவர்களிடம் சமர்ப்பித்து, ஆய்வு தொடர்பான அனைத்து உதவிகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று **பிரிவு 207(1)** கூறுகிறது.

பிரிவு 206–இன் கீழ் ஆய்வு அல்லது விசாரணை ஒன்றைச் செய்யும் பதிவாளர் அல்லது ஆய்வாளர், அந்நடவடிக்கைகளின் போது, (அ) மேற்படி கணக்குப் புத்தகங்கள், வேறு புத்தகங்கள் மற்றும் தாள்களின் நகல்களை எடுக்கலாம் அல்லது எடுக்கும்படி செய்யலாம்; அல்லது (ஆ) அவற்றை ஆய்வு செய்ததற்கு அடையாளமாக அவற்றில் அடையாளக் குறி எதையும் வைக்கலாம் அல்லது வைக்கும்படி செய்யலாம் என்று **பிரிவு 207(2)** கூறுகிறது.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் ஓர் உரிமை வழக்கை விசாரிக்கும் போது உரிமையியல் நீதிமன்றத்திற்கு பின்வரும் விடயங்களில் எத்தகு அதிகாரங்கள் உள்ளனவோ, அதே அதிகாரங்கள் மேற்படி ஆய்வு அல்லது விசாரணை செய்யும் பதிவாளர் அல்லது ஆய்வாளருக்கும் உண்டு என்று **பிரிவு 207(3)** கூறுகிறது. அவை,

(i) பதிவாளர் அல்லது ஆய்வாளர் குறிப்பிடும் அத்தகு இடம் மற்றும் நேரத்தில் கணக்குப் புத்தகங்கள் அல்லது வேறு ஆவணங்களை கண்டறிதல் மற்றும் முன்னிலைப்படுத்துதல்

(ii) நபர்களுக்கு அழைப்பாணை விடுத்து அவர்கள் தன் முன் தோன்றுவதை வலியுறுத்தல் மற்றும் அவர்களை உறுதிமொழியின் பேரில் விசாரித்தல்;

(iii) இடம் எதிலும் நிறுவனத்தின் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் எவற்றையும் ஆய்வு செய்தல்;

இந்தப் பிரிவின் கீழ் பதிவாளர் அல்லது ஆய்வாளர் பிறப்பிக்கும் ஏவுரைக்கு நிறுவனத்தின் இயக்குனர் அல்லது அலுவலர் எவரும் கீழ்ப்படியவில்லை எனில், அவர்களுக்கு விதிக்கப்படும் சிறைத்தண்டனை பற்றி **பிரிவு 207(4)** கூறுகிறது.

பிரிவு 207 மேற்கண்டவாறு கூறுவதை சற்று சுருங்கச் சொன்னால், பதிவாளர் அல்லது ஆய்வாளர் கோரும் புத்தகங்கள், ஆவணங்கள், தகவல் மற்றும் விளக்கங்களை நிறுவனத்தின் இயக்குனர், அலுவலர் அல்லது பணியாளர் மேற்படி பதிவாளர் அல்லது ஆய்வாளரிடம் சமர்ப்பித்து, அவர்களது ஆய்வுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும் என்பதுதான் இப்பிரிவின் சாரமாகும். இது, பிரிவு 206–இல் கூறப்பட்ட ஆய்வு அல்லது விசாரணைக்கான நடைமுறை பற்றியும், அதில் பதிவாளர் மற்றும் ஆய்வாளருக்கு உள்ள அதிகாரம் பற்றியும் கூறுகிறது.

பிரிவுகள் 206, 207, 208 மற்றும் 210-இன் தொகுப்புரை : பிரிவுகள் 206 மற்றும் 207–இன் கீழ் மேற்கண்டவாறு பதிவாளரும், ஆய்வாளரும் நிறுவன ஆவணங்கள் மற்றும் விவகாரங்களை ஆய்வும் விசாரணையும் செய்து, பிரிவு 208–இன்படி எழுத்துப்பூர்வமாக மைய அரசிடம் சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில், மைய அரசு அந்நிறுவனத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்ய பிரிவு 210(1)(a)–இன் படி ஆணையிடலாம்.

(2) உறுப்பினர்களின் விண்ணப்பத்தின் பேரில் (On an application mady by Members) - பிரிவு 213 (a):

ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் (National Company Law Tribunal) அளிக்கும் விண்ணப்பத்தின் பேரில், அந்நிறுவன விவகாரங்கள் மைய அரசால் நியமிக்கப்படும் ஆய்வாளர் ஒருவரால் புலன் விசாரணை செய்யப்பட வேண்டுமென ஆணையிடலாம். ஆனால் இவ்வாறு விண்ணப்பிக்க வேண்டுமெனில், பின்வரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று **பிரிவு 213(a)** கூறுகிறது. அதன்படி,

(i) பங்கு மூலதனம் கொண்டதொரு நிறுவனமாயின் (அதாவது பொது மக்களிடமிருந்து பங்குத் தொகை பெறும் நிறுவனம்), நூறுக்கும் குறையாத அதன் உறுப்பினர்கள் அல்லது அந்நிறுவனத்தின் மொத்த வாக்குரிமையில் பத்தில் ஒரு பங்கை வைத்திருக்கும் உறுப்பினர்கள் விண்ணப்பம் செய்தல் வேண்டும்; அல்லது

(ii) பங்கு மூலதனம் கொண்டிராத நிறுவனமாயின், அதன் உறுப்பினர் பதிவேட்டில் உள்ளவர்களில் அய்ந்தில் ஒரு பங்குக்கும் குறையாத நபர்கள் விண்ணப்பம் செய்தல் வேண்டும்;

மேற்கண்ட எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் செய்த விண்ணப்பத்தின் பேரில், மேற்படி தீர்ப்பாயமானது சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அவர்களது கருத்துக்களை கூற வாய்ப்பளித்த பிறகு, மைய அரசால் நியமிக்கப்பட்ட ஆய்வாளரால் அந்நிறுவனத்தின் விவகாரங்கள் புலன் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று ஆணை (order) ஒன்றை தீர்ப்பாயம் பிறப்பிக்கலாம்.

இவ்வாறு ஆணை பிறப்பிக்கப்படுவதன் பேரில் மைய அரசானது, அந்நிறுவனத்தின் விவகாரங்களை தான் ஏவுரைக்கலாகும் அத்தகு விடயங்கள் தொடர்பாக புலன் விசாரணை செய்து, அறிக்கையளிக்க ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த நபர்களை ஆய்வாளர்களாக (Inspectors) நியமித்தல் வேண்டும்.

மேலும் புலன் விசாரணைக்கு பிரிவு 210(1)(b)–இன்படி **மைய அரசு ஆணையிடுதல் வேண்டும்.** இங்கு **தீர்ப்பாயம் தன் முன் நடந்த வழக்கு நடவடிக்கையில் மேற்கண்டவாறு ஆணை பிறப்பிப்பதால்,** இதன் தொடர்ச்சியாக தன்னால் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் நிறுவனத்தின் விவகாரங்கள் புலன் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று ஆணையிட வேண்டியது மைய அரசுக்கு பிரிவு 210(2)–இன்படி **கட்டாயமானதாகும் (Mandatory).**

(3) பொதுமக்கள் நலனில் அக்கறை கொண்டு (In public interest) - பிரிவு 213 (b):

வேறு நபர் எவராலும் (உறுப்பினர்கள் அல்லாதோர்) தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் அளிக்கப்படும் விண்ணப்பத்தின் பேரில் அல்லது வேறுவிதமாக (அதாவது பொது மக்கள் நலனில் தானே முயன்று எடுக்கும் நடவடிக்கையில்), அந்நிறுவன விவகாரங்கள் மைய அரசால் நியமிக்கப்படும் ஆய்வாளர் ஒருவரால் புலன் விசாரணை செய்யப்பட வேண்டுமென அது ஆணையிடலாம். ஆனால் இதற்கு அந்நிறுவனத்தில் பின்வருவனவற்றை உணர்த்தும் சூழ்நிலைகள் நிலவுவதாக தீர்ப்பாயம் மனநிறைவடைய வேண்டும் என்று **பிரிவு 213(b)** கூறுகிறது. அச்சூழல்கள் வருமாறு:–

(i) ஒரு நிறுவனம் தனக்கு கடனீந்தவர்கள், உறுப்பினர்கள் அல்லது வேறு நபர் எவரையும் மோசடி செய்யும் கருத்துடன், அல்லது மோசடியான அல்லது சட்ட விரோதமான நோக்கத்திற்காக, அல்லது தனது உறுப்பினர்களில் எவரையும் அடக்கு முறைப்படுத்தும் விதத்தில் தனது அலுவலை நடத்துவதாக அல்லது அந்நிறுவனம் மோசடியான அல்லது சட்டவிரோதமான நோக்கம் எதற்காகவும் உருவாக்கப்பட்டது என்று;

(ii) நிறுவனத்தின் உருவாக்கம் அல்லது அதன் விவகாரங்களின் மேலாண்மைக்கு சம்பந்தப்பட்ட நபர்கள், அவை தொடர்பாக அந்நிறுவனத்திற்கு அல்லது அதன் உறுப்பினர்களுக்கு எதிராக மோசடி, சட்டமுரண் பிழை அல்லது பிற தீய நடத்தைக் குற்றங்களைப் புரிந்து கொண்டிருக்கின்றனர் என்று; அல்லது

(iii) ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள், அந்நிறுவனத்தின் விவகாரங்கள் குறித்து நியாயமான முறையில் எதிர்பார்க்கும் அனைத்து தகவல்களையும் அந்நிறுவனம் அவர்களுக்கு அளிக்க வேண்டும். மேலும் அத்தகவல்களில் அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் அல்லது இதர இயக்குனர் அல்லது மேலாளருக்குரிய தரகு (commission) கணக்கீட்டு தொடர்பான தகவலும் உள்ளடங்கியதாகும். அத்தகு தகவல்களை அந்நிறுவனம், அதன் உறுப்பினர்களுக்கு அளிக்கவில்லை என்று,

தீர்ப்பாயம் மன நிறைவடைந்தால் அது, சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அவர்களது கருத்துக்களை கூற வாய்ப்பளித்த பிறகு, மைய அரசால் நியமிக்கப்பட்ட ஆய்வாளரால் அந்நிறுவனத்தின் விவகாரங்கள் புலன் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று ஆணை (order) ஒன்றை பிறப்பிக்கலாம்.

இவ்வாறு ஆணை பிறப்பிக்கப்படுவதன் பேரில் மைய அரசானது, அந்நிறுவனத்தின் விவகாரங்களை தான் ஏவுரைக்கலாகும் அத்தகு விடயங்கள் தொடர்பாக புலன் விசாரணை செய்து, அறிக்கையளிக்க ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த நபர்களை ஆய்வாளர்களாக (Inspectors) நியமித்தல் வேண்டும். மேலும் புலன் விசாரணைக்கு பிரிவு 210(1)(c)–இன்படி மைய அரசு **ஆணையிடலாம்.** அதாவது இவ்வாறு ஆணையிட வேண்டிய மைய அரசுக்கு கட்டாயமான ஒன்றல்ல. அது **மைய அரசின் விருப்புரிமைக்குட்பட்டதாகும்** (discretionary).

மேற்கண்டவாறான புலன் விசாரணைக்குப் பிறகு, பின்வருவன மெய்ப்பிக் கப்பட்டால், அதாவது,

(i) அந்நிறுவனம் தனக்கு கடனீந்தவர்கள், உறுப்பினர்கள் அல்லது வேறு நபர் எவரையும் மோசடி செய்யும் கருத்துடன், அல்லது மோசடியான அல்லது சட்ட விரோதமான நோக்கத்திற்காக, அல்லது தனது உறுப்பினர்களில் எவரையும் அடக்கு முறைப்படுத்தும் விதத்தில் தனது அலுவலை நடத்துவதாக அல்லது அந்நிறுவனம் மோசடியான அல்லது சட்டவிரோதமான நோக்கம் எதற்காகவும் உருவாக்கப்பட்டது என்று;

(ii) நிறுவனத்தின் உருவாக்கம் அல்லது அதன் விவகாரங்களின் மேலாண் மைக்கு சம்பந்தப்பட்ட நபர், அவை தொடர்பாக அந்நிறுவனத்திற்கு அல்லது அதன் உறுப்பினர்களுக்கு எதிராக மோசடி, சட்டமுரண் பிழை அல்லது பிற தீய நடத் தைக் குற்றங்களைப் புரிந்து கொண்டிருக்கின்றனர் என்று,

மெய்ப்பிக்கப்பட்டால், தவறுகை புரிந்தவரான நிறுவனத்தின் அலுவலர் ஒவ்வொரு வரும் மற்றும் நிறுவனத்தின் உருவாக்கம் அல்லது அதன் விவகாரங்களின் மேலாண்மைக்கு சம்பந்தப்பட்ட நபர் அல்லது நபர்கள் மோசடிக் குற்றத்திற்காக பிரிவு 447–இல் வகை செய்யப்பட்டவாறான முறையில் தண்டிக்கப்படுவார்கள்.

புலன்விசாரணைக்குரிய செலவுத் தொகைகள் மற்றும் செலவுகள் செலுத்தப்படுவதற்கான பிணையம் (Security for payment of costs and expenses of investigation) – பிரிவு 214:

1. பிரிவு 210(1)(b)–இன்படி மைய அரசால் ஆணையிடப்பட்ட புலன் விசா ரணை, அல்லது

2. பிரிவு 213–இன் கீழ் தீர்ப்பாயம் ஒன்றால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் படியிலான புலன்விசாரணை

ஒன்றின் நேர்வில் மைய அரசு பிரிவு 210(3)–இன்படி அல்லது 213(b)–இன் கீழ் ஆய்வா ளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு முன்னர், அப்புலன் விசாரணைக்கான செலவுத் தொகைகளை மற்றும் செலவுகளை செலுத்துவதற்காக இருபத்தைந்தாயிரம் ரூபாய்க் கும் மிகாத பிணையம் ஒன்றை வழங்கும்படி விண்ணப்பதாரரை வேண்டுறுத்தலாம். மேலும் அப்புலன்விசாரணையின் முடிவானது, அதற்கு சம்பந்தப்பட்ட மேற்படி நபர்கள் மீது குற்றவழக்கு தொடர்கைக்கு (prosecution) இட்டுச் சென்றால், அப்பிணை யத்தை விண்ணப்பதாரருக்கு மைய அரசு திருப்பி அளித்துவிட வேண்டும் **(பிரிவு 214).**

அதாவது புலன்விசாரணை கோரி முகாந்திரமற்ற வீண் விண்ணப்பங்கள் செய்யப்படுவதைத் தடுக்க இவ்வாறு பிணையம் கோரும் நடைமுறை மேற்படி பிரிவின் வாயிலாக நிறுவனச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அவ்விண்ணப்பத்தில் கூறப் பட்டுள்ளது உண்மையாக இருக்கும்பட்சத்தில், நிறுவன அலுவலர்கள் மீது குற்ற வழக்

தொடரப்படுகின்றது. அச்சமயத்தில் புலன் விசாரணைக்கான செலவுத் தொகைகள் மற்றும் செலவுகளுக்காக விண்ணப்பதாரர் அளித்த பிணையத்தை அவருக்கே திருப்பிக் கொடுத்து விட வேண்டும்.

ஆய்வாளர்களின் அதிகாரம் (Power of Inspectors) - பிரிவு 217:

புலன்விசாரணை செய்வதற்காக நியமிக்கப்படும் ஆய்வாளர், ஒரு தனி நபராக மட்டுமே இருக்க முடியும். எனவே நிறுமம், கூட்டுரு அமைப்பு (body corporate) அல்லது சங்கம் வேறு எதுவும் (association) ஆய்வாளர்களாக நியமனம் செய்யப்பட முடியாது என்று **பிரிவு 215** கூறுகிறது.

அந்த வகையில் நிறுவன விவகாரங்களை புலன் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்படும் ஆய்வாளர்களுக்கு போதுமான அதிகாரங்களை 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் தனது **பிரிவு 217**–இன் வாயிலாக அளித்துள்ளது. அவை வருமாறு:–

1. ஆவணங்களை முன்னிலைப்படுத்தும்படி வலியுறுத்துவதற்கான அதிகாரம் (Power to enforce production of Documents): ஆய்வாளரின் புலன் விசாரணைப் பணியை எளிதாக்க, நிறுவன மேலாண்மையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் முகவர்கள் அனைவரும் அந்நிறுவனம் தொடர்பாக தங்கள் வசம் உள்ள புத்தகங்கள், தாள்கள் ஆகிய ஆவணங்கள் எதையும் ஆய்வாளர் முன்பு தருவிக்கவும், முன்னிலைப்படுத்தவும் கடமைப்பட்டவர்கள். மேலும் அவர்கள் ஆய்வாளரின் புலன்விசாணைக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் செய்யக் கடமைப்பட்டவர்கள். ஆய்வாளர் ஒருவர் தான் அவசியமெனக் கருதும் அத்தகு புத்தகங்கள் மற்றும் தாள்களை முன்னிலைப்படுத்தும்படி அல்லது தகவல் எதையும் வழங்கும்படி கூட்டுரு அமைப்பு எதையும் கோரும் அதிகாரம் படைத்தவர் **[பிரிவுகள் 217(1) மற்றும் (2)]**.

2. புத்தகங்களை தன் வசமே வைத்துக் கொள்ளும் (Power to keep books in custody): தன்னிடம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் அல்லது கூட்டுரு அமைப்பின் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை ஆய்வாளர் 182 நாட்கள் வரை தன் வசமே வைத்துக் கொள்ள அதிகாரம் படைத்தவர். பின்னர் அவற்றை அதற்குரிய நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பிடம் திரும்ப ஒப்படைத்துவிட வேண்டும் **[பிரிவு 217(3)]**. மீண்டும் தேவைப்பட்டால் அந்த புத்தகங்கள் மற்றும் தாள்களை மேலும் ஒரு 182 நாட்கள் வரை தன் வசம் ஒப்படைக்கப்படும் போது அந்நிறுவனம் அல்லது கூட்டுரு

அமைப்பை எழுத்துப்பூர்வமான கோரும் அதிகாரத்தையும் ஆய்வாளர் படைத்தவர்.

3. உறுதிமொழியின் பேரில் விசாரிக்கும் அதிகாரம் (Power to examine on oath): நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பு ஒன்றின் விவகாரங்கள் தொடர்பான அலுவலர்கள், பிற பணியாளர்கள், அல்லது முகவர்கள் எவரையும் உறுதி மொழியின் பேரில் (examination on oath) ஆய்வாளர் விசாரிக்கலாம். மேலும் மைய அரசின் முன்னனுமதியின் பேரில் வேறு நபர்கள் எவரையும் மேற்கண்டவாறு அவர் விசாரிக்கலாம். இதன் பொருட்டு மேற்கண்ட நபர்களை தன் முன் நேர்முகமாக முன்னிலையாகுமாறு அவர் கோரலாம் **[பிரிவுகள் 217(4)]**.

4. உரிமையியல் நீதிமன்றத்திற்குரிய அதிகாரங்களைக் கொண்டவர் (Power to have the powers vested in a civil court): உரிமையியல் நடை முறைச் சட்டத்தின் கீழ் ஓர் உரிமை வழக்கை விசாரிக்கும் போது உரிமையியல் நீதிமன் றத்திற்கு பின்வரும் விடயங்களில் எத்தகு அதிகாரங்கள் உள்ளனவோ, அந்த அதி காரங்கள் அனைத்தும் மைய அரசால் நியமனம் செய்யப்படும் ஓர் அலுவலரான ஆய் வாளருக்கும் உண்டு **[பிரிவு 217(5)]**. அவை,

(i) அத்தகு நபரால் குறித்துரைக்கப்படும் அத்தகு இடம் மற்றும் நேரத்தில் கணக்குப் புத்தகங்கள் அல்லது வேறு ஆவணங்களை கண்டறிதல் மற்றும் முன்னிலைப்படுத்துதல்

(ii) நபர்களுக்கு அழைப்பாணை விடுத்து அவர்கள் தன் முன் தோன்றுவதை வலியுறுத்தல் மற்றும் அவர்களை உறுதிமொழி யின் பேரில் விசாரித்தல்;

(iii) இடம் எதிலும் நிறுவனத்தின் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் எவற்றையும் ஆய்வு செய்தல்.

5. ஆவணங்களை பறிமுதல் செய்யும் அதிகாரம் (Power to seizure of documents): ஆய்வாளர் தனது புலன் விசாரணையின் பொழுது, நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பு ஒன்றின் புத்தகங்கள் அல்லது ஆவணங்கள் அழிக்கப் பட்டுவிடலாம், பயனற்றதாக்கப்படலாம், மாற்றப்படலாம், பொய்ப்பிக்கப்படலாம் அல்லது மறைத்து வைக்கப்படலாம் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக அவர் கருதினால், அவற்றை பறிமுதல் செய்வதற்கு ஆணையிடும்படி முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் அல்லது பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் விண்ணப்பம் செய்யலாம்.

6. தொடர்புடைய நிறுவனங்களின் விவகாரங்களையும் புலன் விசாரணை செய்யும் அதிகாரம் (Power to investigate affairs of related companies): நிறுவனமொன்றின் விவகாரங்களை புலன் விசாரணை செய்வதற் காக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆய்வாளர், தனது அவ்விசாரணையின் நோக்கத் திற்காக, அதே மேலாண்மையின் கீழ் அல்லது குழுவில் இருக்கும் மற்றொரு கூட்டுரு அமைப்பின் (நிறுவனத்தின்) (body corporate) விவகாரங்களையும் புலன் விசா

ரணை செய்வது அவசியம் என்று கருதினால், அவர் அவ்வாறு செய்ய அதிகாரம் படைத்தவர். இதற்கு மைய அரசின் முன்னனுமதி தேவை **[பிரிவு 219].**

7. அறிக்கையளிக்கும் அதிகாரம் (Power to report by the Investigator): மைய அரசு ஏவுரைத்தால் ஆய்வாளர் புலன் விசாரணை பற்றிய தனது இடைக்கால அறிக்கையை (interim report) மைய அரசுக்கு அனுப்ப வேண்டும். புலன் விசாரணையின் முடிவில், அவருடைய இறுதி அறிக்கையை (final report) மைய அரசுக்கு அனுப்ப வேண்டும் **[பிரிவு 223].**

ஆய்வாளர் அறிக்கையின் பேரில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் (Actions to be taken in pursuance of inspector's report) - பிரிவு 224:

ஆய்வாளரின் அறிக்கையிலிருந்து அந்நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பு வேறு எதற்கும் தொடர்பான நபர் எவரும் குற்றம் எதையாவது புரிந்திருப்பதாக மைய அரசுக்கு தோன்றினால், அது அந்நபர் மீது குற்ற வழக்கு தொடரலாம். அச்சமயத்தில் நிறவன அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் மைய அரசுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யக் கடமைப்பட்டவர்கள் **[பிரிவு 224(1)].**

நிறுவனம் அல்லது கூட்டு அமைப்பு வேறு எதுவும் நிறுவனச் சட்டத்தின் கீழ் கலைக்கப்பட வேண்டியதாக இருந்து, பிரிவு 213–இல் குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக அவை அவ்வாறு கலைக்கப்பட வேண்டியது உசிதமாக உள்ளதென மைய அரசிற்கு ஆய்வாளரின் அறிக்கையிலிருந்து தோன்றினால், அது இதற்கென அதிகாரமளித்துள்ள நபர் எவரையும், அந்நிறுவனத்தின் அல்லது கூட்டுரு அமைப்பின் கலைப்பிற்காக தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்திடம் மனு ஒன்றை அல்லது பிரிவு 241–இன் கீழான விண்ணப்பம் ஒன்றை அல்லது இரண்டையும் தாக்கல் செய்யும்படி செய்விக்கலாம் **[பிரிவு 224(2)].**

எந்த நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பின் விவகாரங்கள் புலன் விசாரணை செய்யப்பட்டதோ அதனால்

(a) அந்நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பின் தோற்றுவிப்பு அல்லது உருவாக்கம், அல்லது அதன் விவகாரங்களின் மேலாண்மை தொடர்பான மோசடி, சட்ட முரண் பிழை அல்லது பிற தீய நடத்தை குறித்து இழப்பீடு வசூலிப்பதற்காக; அல்லது

(b) தவறாக கையாளப்பட்டிருக்கிற அல்லது தவறாக இருத்தி வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதும், அந்நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பின் சொத்து எதையும் திரும்ப பெறுவதற்காக

வழக்கு நடவடிக்கைகள் பொது நலனில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஆய்வாளரின் அறிக்கையிலிருந்து மைய அரசுக்குத் தோன்றினால், அது அந்நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பின் கலைப்பிற்காக தான் முன்வந்து அதன் பெயரில் வழக்கு நடவடிக்கைகளை எடுக்கலாம் **[பிரிவு 224(3)].**

மேற்கண்டவாறு எடுக்கப்படும் வழக்கு நடவடிக்கைகள் எதிராய் அல்லது எதன் தொடர்பாகவும் மைய அரசால் செய்யப்பட்ட செலவுத் தொகைகள் மற்றும் செலவுகளுக்கு எதிராக அது அந்நிறுவனம் அல்லது கூட்டுத் அமைப்பால் ஈட்டுறுதி செய்யப்படுதல் வேண்டும் **[பிரிவு 224(4)]**.

நிறுவனமொன்றில் மோசடி நடந்துள்ளது என்றும், அதன் காரணமாக அந்நிறுவனத்தின் இயக்குனர், முக்கிய மேலாண்மை அலுவலர், வேறு அலுவலர் எவரும் அல்லது வேறு நபர் எவரும் அல்லது அமைப்பு எதுவும், சொத்திருப்பு, சொத்து அல்லது ரொக்கத்தின் வடிவிலோ அல்லது வேறு முறை எதன்படியோ தகாறான அனுகூலம் அல்லது ஆதாயம் அடைந்துள்ளனர் (அல்லது அடைந்துள்ளது) என்றும் ஆய்வாளர் ஒருவரால் செய்யப்பட்ட அறிக்கை குறிப்பிடுமிடத்து, மைய அரசானது அத்தகு சொத்திருப்பு, சொத்து அல்லது ரொக்கத்தை வெளியே எடுத்துள்ளது (disgorgement) குறித்து உரிய ஆணைகள் பிறப்பிக்கும்படியும், அந்த இயக்குனர், முக்கிய மேலாண்மை அலுவலர் அல்லது வேறு நபரை பொறுப்புக்கான வரம்புகள் ஏதுமின்றி தனிப்பட்ட பொறுப்புக்கு ஆளாக்குவதற்காக ஆணைகள் பிறப்பிக்கும்படியும் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்யலாம் **[பிரிவு 224(5)]**.

-oOo-

பெரும்பான்மையினர் விதி மற்றும் சிறுபான்மையினர் உரிமைகள் [Majority Rule and Minority Rights]

8

92. "The majority of the members of a Company are entitled to exercise the powers of management and control the operations of the Company" - Explain. What are the exceptions and limitations of this rule? ("ஒரு நிறுவனத்தின் பெரும்பான்மை உறுப்பினர் கள் மேலாண்மை அதிகாரத்தை செலுத்தவும், நிறுவனத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் தகுதியுடையவர்கள்" - விவரி. இவ்விதியின் விதிவிலக்குகள், கட்டுப்பாடுகள் யாவை?)

(அல்லது)

Explain the 'Majority Rule'. Is there any exceptions to this rule ? Discuss them. ('பெரும்பான்மையினர் விதி' என்பதனை விளக்கம் செய்யவும். இவ்விதிக்கு விதிவிலக்குகள் ஏதேனும் உள்ளதா? அவைகளை விவாதிக்கவும்.)

(அல்லது)

Principle of 'Majority Rule' - Write short notes. ('பெரும்பான்மையினர் விதி' - குறுகிய விடை எழுதுக.)



(அல்லது)

Explain the rule as to majority supremacy with its exceptions. (பெரும்பான்மை உயர் நிலை மேலாண்மை என்ற விதியினையும் அதன் விதிவிலக்குக ளையும் விளக்குக.)

(அல்லது)

Discuss about the rule laid down in "Foss Vs. Harbottle" and state is exceptions, if any. ("ஃபாஸ் எதிர் ஹார்பாட் டில்" வழக்கில் சொல்லப்பட்ட விதியினை விவரித்து அதற்கு விதிவிலக்கு இருப் பின் அதை எடுத்தியம்புக.)

(அல்லது)

Explain the rule in Foss V. Harbottle and the scope of its exceptions. (ஃபோஸ் எதிர் ஹார்பாட்டில் வழக்கின் விதியையும், அதற்கான விதிவிலக்குகளின் பரவெல்லையையும் விளக்குக.)

(அல்லது)

State the rule in Foss V. Harbottle and explain the exceptions. (ஃபோஸ் எதிர் ஹார்பாட்டில் வழக்கின் விதியைக் கூறி அதன் விதிவிலக்குகளை விளக்குக.)

(அல்லது)

Rule in Foss Vs. Harbottle - Write short notes. (ஃபோஸ் எதிர் ஹர்பாட்டில் வழக்கு விதி - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Foss Vs. Harbottle - Write short notes. (ஃபாஸ் எதிர் ஹர்பாட்டில் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Foss Vs. Harbottle Case - Write short notes. (ஃபாஸ் எதிர் ஹர்பாட்டில் வழக்கு - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

நிறுவனத்தின் அனைத்து முக்கிய முடிவுகளும் பெரும்பான்மைப் பங்குதாரர்

களின் தீர்மானங்களால் எடுக்கப்படுகின்றன. இம்முடிவுகளை சிறுபான்மை பங்கு தாரர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது உட்கிடையாக உணர்த்தப்பட்ட பொரு ளாகும். எனவே ஒரு நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குதாரர்களின் முடிவுகள், சிறுபான்மை பங்குதாரர்களைக் கட்டுப்படுத்தும் என்பது பொது விதியாகும். இவ்விதி **∴போஸ் - எதிர் - ஹர்பாட்டில்** எனும் பிரபலமான வழக்கில் உண்டாக்கப்பட்டதாகும். அவ்வழக்கின் விபரம் வருமாறு.

முக்கிய வழக்கு:

Foss v. Harbottle[1]

இவ்வழக்கில் நிறுவனமொன்றின் இரு பங்குதாரர்கள், அந்நிறுவன இயக் குனர்கள் மீது வழக்கு தொடுத்தனர். அதில் அவர்கள் மேற்படி இயக்குனர்கள், சில மோசடியான மற்றும் சட்ட விரோதமான செயல்களைப் புரிந்து நிறுவனத்தின் சொத் துக்களைப் பாழ்படுத்தி, இழப்பு ஏற்படுத்தியுள்ளதாகவும், அவ்விழப்பை அவர்கள் நிறுவனத்திற்கு ஈடு செய்ய வேண்டுமென்றும் நீதிமன்றத்திடம் முறையிட்டனர். ஆனால் அவர்களது முறையீட்டை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. ஏனெனில் நிறு வனத்திற்கு ஏற்பட்ட இழப்பை பெரும்பான்மையான பங்குதாரர்களே உறுதி செய்து வழக்கிட வேண்டுமே தவிர, சிறுபான்மை பங்குதாரர்கள் வழக்கிட முடியாது என்று நீதிமன்றம் கூறியது.

∴போஸ் -எதிர்- ஹர்பாட்டில் வழக்கு விதி:

இவ்வழக்கில் நீதிமன்றம் சில விதிகளை வகுத்துரைத்தது. அவை '**∴போஸ் -**

1. (1843) 67 ER 189 : (1843) 2 Hare 461

எதிர்-ஹர்பாட்டில் வழக்கு விதி' (Rule in Foss v. Harbottle) எனப்படுகிறது. அவ்விதிகள் வருமாறு.

1. நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் உறுதி செய்யும் அதிகாரம் பெரும்பான்மை பங்குதாரர்களின் கையில் உள்ளது.

2. இவ்வழக்கில் இயக்குனர்கள் விளைவித்தாக கூறப்படும் தீங்கு, அவ்விரு பங்குதாரர்களுக்கு மட்டும் தனியாக விளைவிக்கப்பட்டதல்ல. மாறாக நிறுவனம் முழுமைக்கும் விளைவிக்கப்பட்ட தீங்காகும். எனவே, அத்தீங்குகளுக்கு எதிராக, நிறுவனம் தன் பெயரிலேயே வழக்குத் தொடர வேண்டும்; மாறாக அந்நிறுவனத்தின் தனிப்பட்ட பங்குதாரர்கள் சிலர், நிறுவனத்தின் பெயரில் வழக்கிடும் உரிமையை தங்களுடையதாக எடுத்துக் கொண்டு, அவ்வாறு வழக்கிடக் கூடாது. அதாவது, அத் தீங்குகளால் நேரடியாக, தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படாத பங்குதாரர்களில் ஒரு சிலர் அவற்றிற்காக வழக்குத் தொடருதல் கூடாது. ஏனெனில் பெரும்பான்மை பங்கு தாரர்கள், அத்தீங்குகளுக்கு மறுப்பேதும் தெரிவிக்காமல், அவற்றிற்கு அங்கீகாரம் அளிக்கக்கூடும். அத்தகைய சூழ்நிலையில் சிறுபான்மையினரால் (ஒரு சில பங்கு தாரர்களால்) தொடரப்படும் வழக்குகளை நீதிமன்றங்களில் அனுமதிப்பது எவ்வித பயனையும் தராது.

3. சட்டத்தின் பார்வையில், மேற்கண்ட மாதிரியான நோக்கங்களுக்காக ஒரு நிறுவனமும், அந்நிறுவனத்தின் ஒட்டு மொத்த உறுப்பினர்களும் ஒன்றல்ல.

இவ்விதிகளின் அடிப்படையில்தான், நீதிமன்றம் மேற்படி வழக்கை நிரா கரித்துவிட்டது. இவ்விதி பின்னிட்டு எழுந்த ஆங்கில மற்றும் இந்திய வழக்குகள் பலவற்றிலும் நீதிமன்றங்களால் பின்பற்றப்பட்டது.

ஃபோஸ் -எதிர்- ஹர்பாட்டில் வழக்கு விதிக்கு உள்ள விதி விலக்குகள் (Exceptions to the Rule) :

ஃபோஸ் –எதிர்– ஹர்பாட்டில் வழக்கில் கூறப்பட்ட மேற்படி பொது விதியை அப்படியே வேதவாக்காக எடுத்துக் கொள்ள முடியாது. அப்படி எடுத்துக் கொண்டால், அங்கு சிறுபான்மை பங்குதாரர்களுக்கென எவ்வுரிமையும் இல்லாது போய் விடும். அவர்களை பெரும்பான்மை பங்குதாரர்கள் ஒடுக்கிவிடும் அபாயம் உண்டு. மேலும் நிறுவனத்தின் மேலாண்மையும் கட்டுப்பாடுகளற்ற குதிரை போல் தறி கெட்டு ஓட ஆரம்பித்துவிடும். எனவே இந்நிலையை தவிர்க்கும் பொருட்டு மேற்படி வழக்கு விதிக்கு, சில விதிவிலக்குகளை அந்நீதிமன்றங்களே வேறு பல வழக்குகளில் வகுத் தளித்துள்ளன. அவற்றை பின்வருமாறு காண்போமா?

1. வரம்பு மீறிய செயல்கள் (Ultra vires acts) :

நிறுவனத்தின் வரம்பு மீறிய செயல்களுக்காக அந்நிறுவனம் மற்றும் அதன் அலுவலர்கள் மீது, ஒரே ஒரு பங்குதாரர் கூட வழக்கிட முடியும். இத்தகு வரம்பு மீறிய செயல்களுக்கு பெரும்பான்மை பங்குதாரர்கள் அங்கீகாரம் அளிக்க முடியாது. ஒரு நிறுவனம் தனது அதிகாரங்களுக்கு உட்பட்டு செயற்படும் காலம் வரைதான், ஃபோஸ்

–எதிர்– ஹர்பாட்டில் வழக்கில் கூறப்பட்ட விதி பொருந்தும். இங்கு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டிற்கு உட்படாத செயல்கள், அந்நிறுவனத்தின் வரம்பு மீறிய செயலாகும். ஒரு முக்கிய வழக்கை பின்வருமாறு கவனிப்போம்.

Bharat Insurance Co. Ltd. v. Kanhaiya Lal[1]

இவ்வழக்கின் வாதி, பிரதிவாதி நிறுவனத்தின் ஒரு பங்குதாரர். அந்நிறுவனத்தின் நோக்கங்களுள் ஒன்று, "நிலம், வீடுகள், இயந்திரம் மற்றும் இந்தியாவில் உள்ள பிற சொத்துக்களின் பிணையத்தின் பேரில், நிறுவனம் வட்டிக்கு பணம் வழங்கலாம்" என்று கூறுகிறது. ஆனால் "அந்நிறுவனம் போதிய பிணையம் இல்லாமலும், அமைப்பு முறையேட்டிற்கு முரணாகவும் தனது நிதியை பல்வேறு விஷயங்களிலும் முதலீடு செய்துள்ளது" என்று கூறி, அம்மாதிரியான முதலீடுகளை செய்வதிலிருந்து பிரதிவாதி நிறுவனத்தைத் தடுக்க நிலையான உறுத்துக்கட்டளை ஒன்றை பிறப்பிக்க வேண்டும் என்று வாதி வழக்கிட்டார்.

இவ்வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. அதன்படி, ஒரு நிறுவனத்தின் உள்மேலாண்மை குறித்த அனைத்து விடயங்களுக்கும், அந்நிறுவனமே சிறந்த நீதிபதி; அதில் நீதிமன்றம் தலையிடக் கூடாது. எனினும் நிறுவனத்தின் நிதி உள்ளிட்ட பிற சொத்துக்களை பயன்படுத்துதல் என்பது, அந்நிறுவனத்தின் உள் மேலாண்மைக்குட்பட்டதொரு விடயமல்ல. மேற்படி வழக்கில் நிறுவனத்தின் இயக்குனர்கள், அதன் நிதியைப் பயன்படுத்துவதில் தங்களது அதிகார வரம்பை மீறி செயற்பட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இத்தகு சூழ்நிலைகளில் அந்த நிறுவனத்தின் ஒரேயொரு பங்குதாரர் கூட நிறுவனத்திற்கு எதிராக வழக்கிட முடியும் என்று நீதிமன்றம் கருத்துரைத்தது.

2. சிறப்பு பெரும்பான்மை வாக்குகள் தேவைப்படும் செயல்கள் (Acts requiring special Majority):

ஒரு நிறுவனம், தனது சில செயல்களைச் செய்ய, பங்குதாரர்களின் பொதுக் கூட்டத்தில் சிறப்புத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும். அந்த வகையில் நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குதாரர்கள், அத்தகு சில செயல்களை சட்டம் குறிப்பிடும் முறையில் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றாமல், சாதாரணத் தீர்மானம் ஒன்றின் வாயிலாக செய்ய முனைந்தால், அவ்வாறு செய்வதிலிருந்து அவர்களைத் தடுக்கும் பொருட்டு அந்நிறுவனத்தின் உறுப்பினர் எவரும் அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கிடலாம்.இவ்வாறு வழக்கிடுவதை **Dhakeswari Cotton Mills Ltd. v. Nil Kamal Chakravarty**[2] எனும் வழக்கில் கல்கத்தா உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

3. சிறுபான்மையினரை மோசடி செய்தல் (Fraud on the Minority):

சிறுபான்மை பங்குதாரர்களை மோசடி செய்து, அதன் மூலம் பெரும்பான்மை

1. AIR 1935 Lah 792 : 160 IC 24
2. AIR 1937 Cal. 645 : 41 CWN 1137

பங்குதாரர்கள் பயனடைய விழைந்தால் அல்லது அவ்வாறு செயற்பட்டால், அதனைத் தடுக்கும் பொருட்டு சிறுபான்மையினர் வழக்கு தொடரலாம்.

Menier v. Hopper's Telegraph Works[1]

இவ்வழக்கின் பொருண்மைகள்படி, A, B ஆகிய இரண்டு நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று போட்டியானவையாகும். A நிறுவனத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள், B நிறுவனத்தின் உறுப்பினர்களாகவும் உள்ளனர். A நிறுவனம் B நிறுவனத்தின் மீது வழக்கிடுகிறது. A நிறுவனத்தின் கூட்டத்தில் அதன் பெரும்பான்மை உறுப்பினர்கள் B நிறுவனத்திற்கு சாதகமாகவும் A நிறுவனத்திற்கு பாதகமாகவும் அவ்வழக்கை சமரசம் செய்து தீர்மானம் நிறைவேற்றினர். இதன் வாயிலாக அவர்கள் B நிறுவனத்திடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய பலன்களை A நிறுவனம் இழக்கும் படி முயற்சித்தனர். எனவே இதை எதிர்த்து A நிறுவனத்தின் சிறுபான்மை உறுப்பினர்கள், அப்பெரும்பான்மை உறுப்பினர்கள் மீது வழக்கிட்டனர். இவ்வழக்கில் A நிறுவனத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் செய்த தீர்மானம் செல்லாது என்றும், இவ்வாறு பெரும்பான்மை உறுப்பினர்கள் செயல்படுவது அதிர்ச்சிக்குரிய விஷயம் என்றும், சிறுபான்மையினரை மோசடி செய்து, பெரும்பான்மையினர் பலன் அனுபவித்தல் கூடாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

4. பெரும்பான்மையினரின் ஆதரவில் நிறுவனத்திற்கு தீங்கிழைப்பவர்கள் இருக்கும் பொழுது (When the Wrongdoers are in support of Majority):

சில சமயங்களில் நிறுவனத்திற்கு தீங்கிழைக்கப்பட்டிருப்பது கண் கூடாகத் தெரியும். ஆனால் தீங்கிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத வண்ணம் அவர்களுக்கு பாதுகாப்பாக பெரும்பான்மை உறுப்பினர்கள் இருப்பர். அதாவது தீங்கிழைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதை, பெரும்பான்மை பங்குதாரர்கள் அனுமதிப்பதில்லை. இந்நிலையில் நிறுவனத்தின் நலனைக் காக்க, நிறுவனத்தின் பெயரில் சிறுபான்மை உறுப்பினர்கள் அவர்கள் மீது வழக்கிடலாம். **இது :போஸ் - எதிர்- ஹர்பாட்டில் வழக்கு விதிக்கு நேர் எதிரான விதிவிலக்காகும்.**

5. நிறுவனத்தின் நலனிற்கு எதிரான மாற்றம் (Alteration against the interest of Company):

அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளை நிறுவனத்தின் நலனிற்கு எதிராக பெரும்பான்மையினர் மாற்றம் செய்தால், சிறுபான்மையினர் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

6. தனிப்பட்ட பங்குதாரர் ஒருவரின் உரிமைகளில் தலையிடுதல் (Individual Membership Rights):

பங்குதாரர் ஒருவரின் சட்டப்படியான உரிமைகள் மறுக்கப்பட்டால், அதை

1. (1874) 9 Ch App 350

எதிர்த்து அவர் வழக்கு தொடரலாம்.

Nagappa Chettiar v. Madras Race Club[1]

இவ்வழக்கில் பங்குதாரர் ஒருவர், நிறுவனத்தின் கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை, அவ்வாக்கை பதிந்து கொள்ளச் செய்யும் உரிமை, தேர்தலில் இயக்குனராக போட்டியிடும் உரிமை ஆகிய அவரது தனிப்பட்ட உரிமைகளை வலியுறுத்தி நிறுவனத் தின் மீது வழக்கிடலாம் என்று நீதிமன்றம் கூறியது.

Kraus v. Lloyd Property Ltd.[2]

இவ்வழக்கில் இயக்குனர் ஒருவர் நிறுவனச் செயல்முறை விதிகளின்படி தனது பதவியிலிருந்து ஓய்வு பெற மறுத்து, அப்பதவியை தொடர்ந்து வகித்து வந்தார். அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றால், அப்பதவிக்கு போட்டியிட முழு உரிமையும் தகுதியும் கொண்ட மற்றொரு பங்குதாரர் அங்கு உள்ளார். எனவே அவர் அவ்வியக் குனரை பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று கோரி வழக்கிட்டார். அதை நீதிமன் றம் அனுமதித்து, அப்பங்குதாரரின் தனிப்பட்ட உரிமைகளில் தலையிட நிறுவனத் திற்கு உரிமையில்லை என்று கருத்துரைத்தது.

7. சிறுபான்மையினர் ஒதுக்கப்படும்போது :

சிறுபான்மையினரை தனியாக ஒதுக்கி அதன் மூலமாக அவர்களுக்கு தீங்கிழைக்க பெரும்பான்மையினர் முயன்றால், அத்தகைய செயல்கள் சிறுபான்மை யினரையும், நிறுவனத்தையும் கட்டுப்படுத்தாது.

8. சிறுபான்மையினர் ஒடுக்கப்படுதல் மற்றும் தவறான மேலாண்மை (Oppression of Minority and Mismangament):

சிறுபான்மையினரை ஒடுக்கினாலும், நிறுவனத்தின் மேலாண்மையை தவறாக நடத்தினாலும் அவர்கள் பெரும்பான்மையினர் மீது வழக்கிடலாம். (இது பற்றி பின்வரும் வினாவில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதையும் இவ்வினாவின் விடைக்கு சட்டப் பிரிவுகளுடன் சுருக்கமாக சுட்டிக்காட்டுவது நன்று).

Kanika Mukherji v. Rameshwar Dayal Dubey[3]

இவ்வழக்கில், அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மையை தடுப்பதற்கு வகை செய்யும் நிறுவனச் சட்டத்தின் (1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம்) 397, 398 ஆகிய பிரிவுகளில் உள்ளடங்கியுள்ள கொள்கையானது, "ஃபோஸ் எதிர் ஹர்பாட் டில்" வழக்கு விதிக்கு ஒரு விதிவிலக்காகும் என்று கல்கத்தா உயர் நீதிமன்றம் கருத் துரைத்தது.

-oOo-

1. (1949) 1 MLJ 662, 667
2. (1965) VR 232
3. (1966) 1 Comp. LJ 65 (Cal.)

அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மையைத் தடுத்தல் [Prevention of Oppression and Mismanagement]

93. Explain and discuss the powers of the Tribunal to prevent oppression and mismanagement. (அடக்கு முறையையும், தவறான மேலாண்மையினரையும் தடுப்பதற்கான தீர்ப்பாயத்தின் சட்டத் திறன்களை விளக்கி கூர்ந்தாராய்க.)

(அல்லது)

9 **Examine the powers of the National Company Law Tribunal to prevent opperssion and mismanagement.** (அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மையை தடுப்பற்கு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்திற்கு உள்ள அதிகாரங்களை ஆராய்க.)

(அல்லது)

State the provisions in the Companies Act intended to safeguard the interests of minority

shareholders. (சிறுபான்மை பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப் பதற்கான நிறுவனச் சட்டத்தின் வகை முறைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

What are the special provisions in the Companies Act for prevention of Oppression of minority share holders? (சிறுபான்மை பங்கு தாரர்களை அடக்குவதைத் தடுப்பதற்கான நிறுவனச் சட்டத்தின் சிறப்பு வகை முறைகள் யாவை?)

(அல்லது)

Discuss the remedies available to a shareholder against oppersssion and mismanagement by the majority. (பெரும்பான்மையோரால் ஏற்படும் ஒடுக்குதல் மற்றும் ஒழுங்கீனமான மேலாண்மை ஆகியவற்றிற்கு எதிராக ஒரு பங்குதாரருக்கு கிடைக்கக் கூடிய தீர்வழிகளை ஆராய்க.)

(அல்லது)

"Majority will have its way but the minority must be allowed to have its say" - Discuss the statement with the law relating to protection of the minority and the prevention of mis-management of the company. ("பெரும்பான்மையினர் தங்கள் விருப்பப்படி செயல் பட முடிந்தாலும் சிறுபான்மையினர் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த அனுமதித்தல் வேண்டும்" - இக்கூற்றை ஒரு நிறுவனத்தின் சிறுபான்மையினர் பாதுகாப்பு மற்றும் தவறான நிர்வாகத்தை தடுத்தல் ஆகியவற்றுக்குண்டான சட்டத் தின் துணையுடன் ஆராயவும்.)

(அல்லது)

"The will of majority must prevail, is the principle of company management" - Explain. Is there any exceptions to this rule? ("நிறுவனத்தின் மேலாண்மையில் பெரும்பான்மையினரின் விருப்பமே மேலோங்கி இருக்கும் என்பதே கோட்பாடு' - விளக்குக. இந்த விதிக்கு விதிவிலக்குகள் உண்டா?)

(அல்லது)

"The principle embodied in Sections 241 and 242 of the Companies Act, 2013 which provide for prevention of oppression and mismangement, is an exception to the rule in "Foss Vs. Har-bottle"-Comment. ("நிறுவனச் சட்டம், 2013-ன் பிரிவுகள் 241 மற்றும் 242-ல் உள்ளடங்கியுள்ள ஒடுக்கப்படுதல் மற்றும் நிர்வாக சீர்கேடு ஆகியவற்றிற்கு எதிரான கொள்கை ஃபாஸ் எதிர் ஹெர் பாட்டில் என்ற வழக்கு விதிக்கு விதிவிலக் காக அமைந்துள்ளது" - விளக்கவுரை தருக.)

(அல்லது)

Explain the provisions of the Companies Act as to safeguard the interest of minority share holders. Refer to decided cases. (நிறுவனச் சட்டத்தில் சிறுபான்மை பங்குரிமையாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையங்களை விளக்குக. முடிவுற்ற வழக்குத் தீர்ப்புகளை குறிப்பிடுக.)

(அல்லது)

"The aim to protect the minority shareholders are not to do away totally with the principle of minority supremacy" - Explain. ("சிறுபான்மை பங்குதாரர்களைக் காப்பதன் குறிக்கோள்கள், பெரும்பான்மை பங்குதாரரின் உயர்தன்மையை முழுமையாக அகற்றி விடுவதற்காக அல்ல" - விளக்குக.)

(அல்லது)

Oppression - Write short notes. (ஒடுக்கப்படுதல் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

நிறுவனத்தின் மேலாண்மையில் பெரும்பான்மை பங்குதாரர்களின் ஆட்சி, ஃபோஸ் – எதிர்– ஹர்பாட்டில்" எனும் வழக்கின் வாயிலாக பல்லாண்டுகளுக்கு முன்பாகவே சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இச்சட்டப் பாதுகாப்பை கவசமாகக் கொண்டு, நடைமுறையில் பல சமயங்களில் பெரும்பான்மையினர் தங்களுடைய அதிகாரங்களை முறைகேடாகவும், சிறுபான்மையினரை அடக்குவதற்கும், நிறுவனத்தின் மேலாண்மையைத் தவறாக செய்வதற்கும் பயன்படுத்துகின்றனர். பெரும்பான்மையினர் இத்தகைய முறையற்ற செயல்களைத் தடுப்பதற்காகவே 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் 241 முதல் 246 வரையிலான சட்டப் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன என்று சொன்னால் அது மிகையாகா. அவற்றை சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

I. அடக்குமுறை (Oppression) - பொருள்:

Elder v. Elder & Watson Ltd.[1] எனும் வழக்கில், **'அடக்குமுறை'** எனும் பதத்தின் பொருளை **நீதிப்பெருமகனார் கூப்பர் (Lord Cooper)** அவர்கள்

1. 1952 SC 49 (Scotland)

பின்வருமாறு விளக்குகிறார். அதன்படி, 'அடக்குமுறை' என்பது, "பங்குதாரர் ஒருவ ரால் குறை கூறப்பட்ட நிறுவனத்தின் ஒரு நடத்தை, அதற்குரிய நியாயமான செயல் தொடர்பின் தர நிலைகளிலிருந்து கண்கூடாக விலகிச் செல்வதையும், பங்குதாரர் ஒவ்வொருவரும் எதை நம்பி எதன் பேரில் தங்கள் பணத்தை நிறுவனத்திடம் ஒப்படைக்கின்றனரோ அதன் நியாயமான பயன்பாட்டிற்குரிய நிபந்தனைகளை மீறு வதையும் குறைந்தபட்சம் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்."

Scottish Co-operative Wholesale Society v. Meyar[1] எனும் மற்றொரு வழக்கில், **நீதிப்பெருமகனார் சைமண்ட்ஸ் (Lord Simonds)** அவர்கள், "நிறுவனத்திற்கெதிராக குறை கூறும் பங்குதாரர் ஒருவர் நியாயமற்ற அல்லது கடுமை யான அல்லது கொடுங்கோன்மைக்குரிய சுமைகளின் கீழ் இருக்கும் நிலைப்பாடே", அடக்குமுறையாகும் என்றுரைக்கிறார்.

எனவே அடக்குமுறை என்பது நிறுவனம் சிறுபான்மை பங்குதாரர்களை நியாயமான முறையில் நடத்தாமல், அவர்களது முதலீட்டை தவறாகப் பயன்படுத்தி, அவர்கள் மீது அநீதியான, கடுமையான சுமைகளை விதித்தல், பொது நலனுக்கு குந்தகமாகச் செயல்படுதல் என்று கொள்ளலாம்.

In Re Hindustan Co-operative Insurance Society Ltd.[2] எனும் பிறிதொரு வழக்கின்படி, 1956–ஆம் ஆண்டில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் ஆயுள் காப்பீட்டு வணிகமானது கையகப்படுத்தப்பட்டது. அதற்குரிய இழப் பீடும் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்நிறுவனத்தில் பெரும்பான்மை வாக்குரிமை யைக் கொண்ட இயக்குனர்கள் மேற்படி இழப்பீட்டுத் தொகையை பங்குதாரர்களி டையே பிரித்துக் கொடுக்க மறுத்துவிட்டனர். மேலும் நிறுவனத்தின் நோக்கங்களை மாற்றுவதற்காகவும், அதன் மூலம் அவ்விழப்பீட்டுத் தொகை முழுவதையும் அப்புதிய நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்காகவும் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி னர்.

இதை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில், "பெரும்பான்மையினர் தங்களது அதிகாரத்தை வழிமையான மற்றும் தவறான முறையில் பயன்படுத்தியுள்ளனர் என்றும், சிறுபான்மையினரின் பணத்தை அவர்களது விருப்பத்திற்கு விரோதமாக வேறு வகையான வணிகத்தில் முதலீடு செய்யும்படி அவர்களைக் கட்டாயப்படுத்த முயற்சித்துள்ளனர் என்றும், ஆயுள் காப்பீட்டு வணிகத்தில் அதற்குரிய சட்டப் படியான பாதுகாப்புடன் தங்கள் பணத்தை முதலீடு செய்துள்ள சிறுபான்மையினரை, மேற்கண்டவாறு சட்டப்படியான பாதுகாப்பில்லாத வேறு வணிகத்தில் முதலீடு செய்ய அவர்களைக் கட்டாயப்படுத்துவது, **'அடக்குமுறையாகும்'** என்றும் நீதிமன்றம் கருத்துரைத்தது.

Mohan Lal Chandumall v. Punjab Co. Ltd.[3] – எனும் வழக்கில்

1. (1959) AC 324 at p. 342
2. AIR 1961 Cal. 443 : 65 CWN 68 : (1961) 31 Comp Cas 193
3. AIR 1961 Punj 485

வாக்களித்தல், கூட்டங்களைக் கூட்டுதல், இயக்குனர்களைத் தேர்ந்தெடுத்தல், பங்காதாயம் பெறுதல் ஆகிய உரிமைகளைப் பறிக்கும் வகையில் ஒரு நிறுவனம் தனது செயல்முறை விதிகளை மாற்றியது. இது சிறுபான்மையினரை ஒடுக்குவது மட்டு மின்றி, மிகவும் கொடுமையானது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

II. தவறான மேலாண்மை (Mismanagement) - பொருள்:

தவறான மேலாண்மை என்பது, ஒரு நிறுவனத்தின் விவகாரங்கள், பொது நலனுக்கு அல்லது அந்நிறுவனத்தின் நலன்களுக்கு குந்தகமாக நடத்தப்படுவதா கும். மேலும், அந்நிறுவனத்தின் மேலாண்மையில் அல்லது கட்டுப்பாட்டில் மாற்றங்கள் எதையும் செய்வதன் காரணமாக, அந்நிறுவனத்தின் விவகாரங்கள் பொது நலனுக்கு அல்லது அந்நிறுவனத்தின் நலன்களுக்கு குந்தகமாக நடத்தப்பட்டாலும், அது தவறான மேலாண்மையாகும்.

2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவுகள்:

இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது யாதெனில் முந்தைய 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் அடக்குமுறைக்கு எதிராக விண்ணப்பம் செய்து குறித்து அதன் பிரிவு 397-ம், தவறான மேலாண்மைக்கு எதிராக விண்ணப்பம் செய்து குறித்து அதன் பிரிவு 398-ம் கூறியது. ஆனால் தற்போதைய **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்** அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மை ஆகிய இரண்டுக்கும் எதிராக தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்வது குறித்து பிரிவு 241-இல் (அதாவது ஒரே பிரிவில்) வகைமுறைகள் கொடுக் கப்பட்டுள்ளன. அத்தீர்ப்பாயம் வழங்கும் நிவாரணங்கள் மற்றும் அதன் அதிகாரங்கள் குறித்து பிரிவு 242 விளக்குகிறது. மேற்படி பிரிவு 241-இன் கீழ் விண்ணப்பம் செய்ய யாருக்கு உரிமை உள்ளது என்பது குறித்து பிரிவு 244 கூறுகிறது.

இனி இம்முக்கியப் பிரிவுகளின் கீழான வகைமுறைகளை சற்று விரிவாக பின்வருமாறு காண்போம்.

அடக்குமுறைக்கு மற்றும் தவறான மேலாண்மைக்கு எதிரான நிவாரணம் பெறுவதற்காக தீர்ப்பாயத்திடம் விண்ணப்பித்தல் (Application to Tribunal for Relief of Oppression and Mismanagement) - பிரிவு 241:

2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 241(1)-இன்படி, நிறுவனமொன்றில்,

(a) அந்நிறுவனத்தின் விவகாரங்கள் பொது நலனுக்கு குந்தகமான முறை யில் அல்லது தன்னையோ, வேறு உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் எவரையோ அடக்கும் முறையில் அல்லது தனக்கு அல்லது அவர்களுக்கு குந்தகமான முறையில் அல்லது அந்நிறுவனத்தின் நலனுக்கு குந்தகமான முறையில் நடத்தப்படுவதாக அல்லது நடத்தப்பட்டு கொண்டிருப்பதாக; அல்லது

(b) அந்நிறுவனத்தின் மேலாண்மையில் அல்லது கட்டுப்பாட்டில் முக்கிய மாற்றம் நிகழ்ந்துள்ளதாகவும், அதன் காரணமாக நிறுவனத்தின் விவகாரங்கள் அநேகமாக அந்நிறுவனம் அல்லது அதன் உறுப்பினர்கள் அல்லது உறுப்பினர்களின் வகை எதற்கும் குந்தகமான முறையில் நடத்தப்படும் என்றும்.

புகார் செய்கின்ற அந்நிறுவனத்தின் உறுப்பினர் எவரும் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்யலாம்.

மேற்படி கூறு (b)–யில் கூறப்படும் **முக்கிய மாற்றமானது (material change)** (அ) அதன் இயக்குனரவையில், (ஆ) அதன் மேலாளரில், (இ) நிறுவன பங்குகளின் உரிமையுடைமையில், (ஈ) அந்நிறுவனத்திற்கு பங்கு மூலதனம் இல்லை யெனில், அதன் உறுப்பினர் நிலையில், அல்லது (உ) வேறு எந்த முறையிலும் ஏற்பட்டால், அது அந்நிறுவனத்தின் மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டில் நிகழ்ந்த முக்கிய மாற்றமாக கருதப்படும்.

அடுத்து **பிரிவு 241(2)**–இன்படி, நிறுவனமொன்றின் விவகாரங்கள் பொது நலனுக்கு குந்தகமான முறையில் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக மைய அரசு அபிப் பிராயப்பட்டால், அது தானே முன்வந்து தீர்ப்பாயத்திடம், இது தொடர்பான அதன் ஆணை ஒன்றுக்காக விண்ணப்பிக்கலாம். அதாவது நிறுவனமொன்றின் உறுப்பினர் மட்டுமல்ல, **மைய அரசும் தவறான மேலாண்மைக்கு எதிராக தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்யலாம்** என்பதை இப்பிரிவு 241(2) சுட்டிக்காட்டுகிறது.

மேற்படி பிரிவு 241(1)–இல் வரும் கூறு (a)–ஆனது **அடக்குமுறைக்கு (Oppersion)** எதிரான புகாருக்குரிய விடயங்கள் பற்றியும், கூறு (b)–ஆனது **தவறான மேலாண்மைக்கு (mismangement)** எதிரான புகாருக்குரிய விடயங்கள் பற்றியும் கூறுகிறது. இத்தகு புகார்களைக் கூறும் அந்நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவர் அது குறித்து உரிய நிவாரணங்களுக்காக தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்யலாம். எனினும் அந்த உறுப்பினர் பிரிவு 244–இன் கீழ் தீர்ப்பாயத்தின் ஆணை ஒன்றைப் பெறுவதற்காக அதற்கு விண்ணப்பம் செய்யும் உரிமை படைத்தவராக இருக்க வேண்டும். (பிரிவு 244 குறித்து இதன் முடிவில் காண உள்ளோம்.) இனி அந்த விண்ணப்பத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கவும், ஆணை பிறப்பிக்கவும் தீர்ப்பாயத்திற்கு உள்ள அதிகாரம் குறித்து பின்வருமாறு காண்போம்.

தீர்ப்பாயம் வழங்கும் நிவாரணம் (Relief by the Tribunal) - பிரிவு 242(1):

மேற்படி பிரிவு 241–இன் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், பிரிவு 242(1)–இன்படி

(a) அந்நிறுவனத்தின் விவகாரங்கள் பொது நலனுக்கு குந்தகமான முறையில் அல்லது உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் எவரையும் அடக்கும் முறையில் அல்லது பொது நலனுக்கு குந்தகமான முறையில் அல்லது அந்நிறுவன நலனுக்கு குந்தகமான முறையில் நடத்தப்படுவதாக அல்லது நடத்தப்பட்டு கொண்டிருப்பதாக

வும்; மற்றும்

(b) அந்நிறுவனத்தைக் கலைப்பது அத்தகு உறுப்பினர் அல்லது உறுப்பினர் களுக்கு நியாயமற்ற வகையில் குந்தகம் விளைவிப்பதாக, ஆனால் அதற்கான சங்கதிகள் அந்நிறுவனம் கலைக்கப்பட வேண்டியது நீதியும் நேர்மையுமானதாகும் என்பதன் அடிப்படையில் கலைப்பிற்கான ஆணை ஒன்றை பிறப்பிப்பதை வேறு விதமாக நியாயப்படுத்துகிறது என்றும்

அத்தீர்ப்பாயம் அபிப்பிராயப்பட்டால், அது மேற்கண்டவாறு புகார் கூறப்பட்ட விடயங் களை ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்கு, தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள் (Powers of Tribunal) – பிரிவு 242(2):

நாம் மேலே கண் பிரிவு 241(1)–ஆனது புகாருக்குரிய விண்ணப்பத்தின் மீது தீர்ப்பாயம் வழங்கும் நிவாரணம் மற்றும் அதற்காக ஆணை பிறப்பித்தலைப் பற்றிக் கூறுகிறது. இந்த விடயத்தில் அத்தீர்ப்பாயம் எத்தகு ஆணைகளைப் பிறப்பிக்க அதிகாரம் படைத்தது என்பது குறித்து **பிரிவு 241(2)** பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது. அதாவது, பிரிவு 241(1)–இன்படி தீர்ப்பாயம் தனது ஆணை ஒன்றின் வழி யாக நிறுவனமொன்றின் விவகாரங்களைப் பொறுத்தவரை பின்வருவனவற்றுக்கு வகை செய்யலாம். அவை,

(a) அந்நிறுவனம் தனது விவகாரங்களை வருங்காலத்தில் நடத்துவதற்கான ஒழுங்குமுறைக்கு வகை செய்தல்;

(b) அந்நிறுவன உறுப்பினர்களின் பங்குகள் மற்றும் நலன்களை அதன் வேறு உறுப்பினர்கள் அல்லது அந்நிறுவனமே விலைக்கு வாங்கிக் கொள்வதற்கு வகை செய்தல்;

(c) மேற்சொன்னவாறு அந்நிறுவனமே அப்பங்குகளை விலைக்கு வாங்கிக் கொள்ளும் நேர்வில், அதன் விளைவாக ஏற்படும் மூலதனக் குறைப் புக்கு வகை செய்தல்;

(d) அந்நிறுவனத்தின் பங்குகளை மாற்றுவது மற்றும் ஒதுக்கீது செய்வதன் மீது தடைகள்;

(e) அந்நிறுவனத்திற்கும், அதன் மேலாண்மை இயக்குனர், இயக்குனர், மேலாளருக்கும் இடையே எவ்வாறேனும் ஏற்பட்ட உடன்படிக்கை எதையும், தீர்ப்பாயத்தின் அபிப்பிரயாயத்தில் வழக்கின் சூழ்நிலை களுக்கு நீதியும் நேர்மையுமாக உள்ளவாறான அத்தகு வரைவுரைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் முடிவுறுத்துவது, இரத்து செய்வது அல்லது மாற்றியமைப்பது;

(f) அந்நிறுவனத்திற்கும், மேற்கண்டோர் அல்லாத வேறு நபருக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை எதையும் முடிவுறுத்துவது, இரத்து செய்வது அல்லது மாற்றியமைப்பது;

ஆனால் இவ்வாறு செய்வதற்கு முன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிப்பு கொடுத்து, அவரது இசைவைப் பெற வேண்டும்;

(g) இந்தப் பிரிவின் (பிரிவு 242) கீழான விண்ணப்பத் தேதிக்கு முன் மூன்று மாதங்களுக்குள் நிறுவனத்தால் அல்லது நிறுவனத்திற்கு எதிராக வாங்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட சொத்து தொடர்பான மாற்றம், சரக்குகளை வழங்குதல், செலுத்துதல், நிறைவேற்றம் அல்லது வேறு செயலை இரத்து செய்தல்;

(h) அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர், இயக்குனர் அல்லது இயக்குனர்களில் வேறு எவரையும் நீக்குவது;

(i) மேலாண்மை இயக்குனர், மேலாளர் அல்லது இயக்குனர் எவராலும், அவரது நியமனக் காலத்தின் போது பெறப்பட்ட முறையற்ற இலாபங் களை வசூலிப்பது. மேலும் அவ்வாறு வசூலிக்கப்பட்டதை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு மாற்றுவது அல்லது பாதிக்கப்பட்ட வர்களில் அடையாளம் காணத்தக்கவர்களுக்கு திருப்பிச் செலுத்துவது உள்ளடங்கிய பயன்பாட்டு முறை;

(j) அந்நிறுவனத்தின் பதவியில் இருக்கும் மேலாண்மை இயக்குனர், அல்லது மேலாளரை மேற்கண்டவாறு நீக்கியதற்குப் பின்னிட்டு, அந்த இடத்தில் மேலாண்மை இயக்குனர் அல்லது மேலாளரை நியமனம் செய்யும் முறை;

(k) தீர்ப்பாயம் ஏவுரைக்கலாகும் அத்தகு விடயங்களின் மீது தீர்ப்பாயத்தால் வேண்டுறுத்தப்படக் கூடியவாறு அறிக்கையளிக்க அத்தகு எண்ணிக் கையிலான நபர்களை இயக்குனர்களாக நியமனம் செய்வது;

(l) தீர்ப்பாயத்தால் பொருத்தமெனக் கருதப்படலாகும் அத்தகு செலவுத் தொகைகளின் விதிப்பு;

(m) தீர்ப்பாயத்தின் அபிப்பிராயத்தில் வகை செய்யப்பட வேண்டியது நீதியும் நேர்மையுமாக உள்ளது என்பதற்கான வேறு விடயம் எதற்கும் வகை செய்தல்.

ஆணையை பதிவாளரிடம் தாக்கல் செய்தல் - பிரிவு 242(3):

பிரிவு 241(1)–இன் கீழ் தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணையின் சான்று நகல் ஒன்றை, அந்த ஆணைத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பம் செய்வதற்கான உரிமை (Right to apply) - பிரிவு 244:

அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மைக்கு எதிராக நிவாரணம் பெற நிறுவனமொன்றின் உறுப்பினர் எவரும் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்யலாம் என்று பிரிவு 241 கூறுகிறது. ஆனால் இவ்வாறு விண்ணப்பிப்பதற்கு அந்த உறுப் பினருக்கு சில உரிமைகள் இருக்க வேண்டும் என்று **பிரிவு 244(1)** கூறுகிறது. அவை வருமாறு.

நிறுவனமொன்றின் பின்வரும் உறுப்பினர்கள் பிரிவு 241–இன் கீழ் விண்ணப்பம் செய்யும் உரிமை பெற்றவர்கள். அவர்கள்,

1. பங்குதாரர்கள் அளித்த பங்குத் தொகையை தனது மூலதனமாக கொண்டதொரு நிறுவனமாக அந்நிறுவனம் இருப்பின், அந்நிறுவனத்தின் 100 எண்ணிக்கைக்கும் குறையாத உறுப்பினர்கள் அல்லது அதன் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பத்தில் 1 பங்குகிற்கு குறையாத உறுப்பினர்கள், இவர்களில் எந்த எண்ணிக்கை குறைவாக உள்ளதோ அந்த எண்ணிக்கையுடைய உறுப்பினர்கள், அல்லது அந்நிறுவனத்தின் வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தில் பத்தில் 1 பங்கிற்கு குறையாத பங்கினை கொண்டுள்ள உறுப்பினர்கள் எவரும்; இது அந்த உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் தனது அல்லது தங்கள் பங்குகளின் தொகைக்கான மற்றும் இதர தொகைகள் அனைத்தையும் செலுத்தியிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக் குட்பட்டதாகும்.

2. மேற்கண்டவாறு பங்கு மூலதனத்தைக் கொண்டிராத ஒரு நிறுவனமாக அந்நிறுவனம் இருப்பின், அந்நிறுவனத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை யில் அய்ந்தில் 1 பங்கிற்கு குறையாத உறுப்பினர்கள்;

எனினும் உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் எவரும் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்வதன் பேரில், அவ்வுறுப்பினர்களை பிரிவு 241–இன் கீழ் விண்ணப் பம் செய்ய இயல்விக்கும் பொருட்டு மேற்கண்ட தேவைகளை அது தளர்த்தலாம் **[பிரிவு 244(1)-இன் கீழான வரம்புரை வாசகம்]**. (அதாவது மேற்கண்ட நிபந் தனைகளை தளர்த்தி உறுப்பினர் எவரையும் பிரிவு 241–இன் கீழ் விண்ணப்பம் செய்ய தீர்ப்பாயம் அனுமதிக்கலாம்).

பிரிவு 244(1)–இன்படி, மேற்கண்ட உறுப்பினர் எண்ணிக்கை நோக்கங் களுக்காக, ஒரு நிறுவனத்தின் பங்குகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூட்டாகக் கொண்டிருந்தால், அவர்கள் அனைவரும் ஒரே ஒரு உறுப்பின ராகக் கணக்கிடப்படுவர் **[பிரிவு 244(1)-இன் கீழான விளக்கம்]**.

பிரிவு 244(1))–இன் கீழ் விண்ணப்பிக்க நிறுவனமொன்றின் உறுப்பினர்கள் எவரும் உரிமை கொண்டிருக்குமிடத்து, அவர்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்கள், மீதமுள்ள உறுப்பினர்களின் இசைவை எழுத்து மூலமாகப் பெற்று, அவர்கள் அனைவரின் நலனுக்காகவும் அவர்களது சார்பாக தீர்ப்பாயத்திடம் விண் ணப்பிக்கலாம் என்று **பிரிவு 244(2)** கூறுகிறது.

இயல் V

சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் கலைப்பு

[சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு – இணைதல் மற்றும் கைப்பற்றல் – கலைப்பு மற்றும் கலைப்பின் வகைகள் – தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் சிறப்பு நீதிமன்றங்களின் நிருவாகமுறை – கலைப்பதிகாரியின் அதிகாரங்கள் – நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நிறுவனங்களின் பெயர்களை நீக்குதல், செயலற்ற நிறுவனங்கள் மற்றும் நலிவுற்ற நிறுவனங்களின் இயல்புமீட்பு, புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வு]

Compromises, Arrangements and Winding up

[Compromises, Arrangements and Amalgamations - Mergers and acquisitions, winding up and kinds of winding up - Administration of NCLT and Special Courts -Powres of Liquidators - Removal of names of companies from Register of companies - Defunct Companies and Restoration, Revival and Rehabilitation of Sick Companies]

சமரசங்களும் ஏற்பாடுகளும்
[Compromises and Arrangements]

1 **94. Briefly explain the provisions of the Companies Act, 2013 regarding the compromises and arrangements with creditors and members of a company. (ஒரு நிறுவனத்தின் கடனீந்தவர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் செய்து கொள்ளும் சமரசங்கள் மற்றும் ஏற்பாடுகள் குறித்த நிறுவனச் சட்டம், 2013ன் வகையங்களை சுருக்கமாக விளக்குக)**

(அல்லது)

Compromises and Arrangements - Write short notes. (சமரசங்கள் மற்றும் ஏற்பாடுகள் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நிறுவனங்களின் பங்களிப்பு மகத்தானது. ஒரு நிறுவனத்தின் கட்டமைப்பு என்பது அதன் தோற்றுவிப்பாளர், ஆதரவாளர், உறுப்பினர், பொது மக்கள், பங்குதாரர்கள், கடனீந்தவர்கள், மேலாண்மை இயக்குனர் உள்ளிட்ட இயக்குனர்கள், மேலாளர்கள், தணிக்கையாளர்கள், நிறுவன அலுவலர்கள் என பலரையும் உள்ளடக்கியதாகும். நிறுவனத்தின் நடவடிக்கைகளில் இவர்கள் அனைவரிடையேயும் ஒருமித்த கருத்து இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக இவர்களில் நிறுவனத்தின் உறுப்பினர்கள் மற்றும் அதற்கு கடனீந்தவர்கள் முக்கியமானவர்கள். அத்தகு உறுப்பினர்களும், கடனீந்தவர்களும் நிறுவனத்தின் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒத்துப்போக வேண்டும் என்பது சட்ட மல்ல. முரண்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும் அடிக்கடி எழுவது இயற்கையே. நிறுவனத்தின் தொழிற் பாதை தடையில்லாமல் செல்ல வேண்டுமெனில், அத்தகு முரண்பாடுகள் சுமூகமாக தீர்த்துக் கொள்ளபட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவேதான் நிறுவனங்கள் தங்கள் தகராறுகளை அல்லது கருத்து வேறுபாடுகளை அதற்குச் தொடர்புடைய தரப்பினர்களின் பரஸ்பர இசைவுடன் தீர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக சமரச நடவடிக்கைகளை (Compromise) நாடுகின்றன; சில ஏற்பாடுகளை (Arrangements) செய்து கொள்கின்றன.

மேலும் நிறுவனமொன்றின் வளர்ச்சிப் போக்கில் அது தன்னுடைய உறுப்பினர்கள் மற்றும் கடனீந்தவர்களுடன் சமரசம் செய்து கொண்டு தன்னை மறுசீரமைத்துக் (re-organise) கொள்ள வேண்டிய அவசியமும் எழுகிறது. குறிப்பாக ஒருங்கிணைப்பு (amalgamation) அல்லது பொறுப்பேற்பு (நிறுவனத்தின்தொழிலை விற்பது) (take over) வாயிலாக ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்துடன் இணைகிறது (merger). இவ்வாறு சமரசம், ஏற்பாடு, மறுசீரமைப்பு, சேர்ப்பு மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பாக **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 230 முதல் 237 வரையிலான சட்டப்பிரிவுகள்** தெளிவுற விளக்குகின்றன.

நாம் இந்த அத்தியாயத்தில் நிறுவனங்கள் தங்களது உறுப்பினர்கள் மற்றும் கடனீந்தவர்களுடன் செய்து கொள்ளும் சமரசம் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான நடைமுறைகளை 230, 231 ஆகிய இரு பிரிவுகளின் வாயிலாகக் காண உள்ளோம்.

சமரசம் – விளக்கம்:

'சமசரம்' என்ற பதத்திற்கான வரையறையை நிறுவனச் சட்டம் எங்கும் தரவில்லை. எனினும், சமரசம் என்ற பதம், பரஸ்பர இசைவு மற்றும் உடன்படிக்கையின் மூலம் தரப்பினர்கள் தங்கள் தகராறுகளை அல்லது கருத்து வேறுபாடுகளை சுமூகமாகத் தீர்த்துக் கொள்வது என்பதைக் குறிப்பிடுவதாகும். அதாவது, ஒரு சமரசத் திட்டத்தின் வாயிலாக **'விட்டுக் கொடுத்து பெறுவது' (give and take)** என்ற அடிப்படையில் தரப்



பினர்கள் தங்கள் பூசல்களை பரஸ்பரம் தீர்த்துக் கொள்ள உடன்படுகின்றனர்; இரு வரும் வெற்றி பெற்றவர்கள் ஆகின்றனர் (win-win). எனவே சமரசம் செய்து கொள்ள வேண்டுமெனில் அதற்கு ஒரு தகராறு அல்லது கருத்து வேறுபாடு இருக்க வேண்டும். தகராறு இல்லாமல் சமரசமும் இல்லை. நிறுவனச் சட்டத்தைப் பொறுத்த வரை சமரசத்திற்கான தகராறு அந்நிறுவனத்திற்கும், அதற்கு கடனீந்தவர்கள் மற்றும் உறுப்பினர்களின் உரிமைகளுக்கும் இடையே (between a company and its creditors or members) எழுவதாக உள்ளது.

ஏற்பாடு - விளக்கம்:

எவ்வாறு 'சமசரம்' என்ற பதத்திற்கான வரையறை நிறுவனச் சட்டத்தில் இல்லையோ, அவ்வாறே 'ஏற்பாடு' என்ற பதத்திற்கான வரையறையும் அது நேரடி யாகத் தரவில்லை. எனினும் ஏற்பாடு என்ற பதம் எதை உள்ளடக்கியது என்பதற்கு பிரிவு 230(1)–இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் [Explanation under section 230(1)] வகை செய்கிறது.

அதன்படி, **'ஏற்பாடு'** என்பது "பல்வேறு வகைகளான பங்குகளை தொகுப்ப தன் மூலம் அல்லது பல்வேறு வகைகளான பங்குகளாக பங்குகளைப் பிரிப்பதன் மூலம், அல்லது மேற்கண்ட இரண்டு முறைகளின் மூலம் நிறுவனத்தின் பங்கு மூல தனத்தை மறுசீரமைத்தலை உள்ளடக்குகிறது"[1] என்று அவ்விளக்கம் கூறுகிறது.

சமரசத்திற்கான திட்டம் எப்போது வகுக்கப்படுகிறது?

முன்சொன்னதைப் போல தகராறு அல்லது பூசல் ஒன்று இருக்கும் போது அங்கு சமரசத்தின் தேவை எழுகிறது. அதாவது ஒரு நிறுவனம் தனக்கு கடனீந்தவர்கள், தன்னுடன் தொடர்பு கொண்டுள்ள மற்ற நிறுவனங்கள் அல்லது நபர்கள் ஆகியோருடன் பின்வரும் சூழல்களில் ஏற்பட்ட தகராறுகளை தீர்க்கும்

1. For the purposes of this sub-section. **arrangement** includes a reorganisation of the company's share capital by the consolidation of shares of different classes orby the division of shares into shares of different classes, or by both of these methods.
- Explanation under Section 230(1) of the Companies Act, 2013.

முகமாக அது சமரத்திற்கான திட்டமொன்றை (scheme for compromise) வரை கிறது. அச்சூழல்களாவன:–

(i) அதன் கலைப்பிற்கு ஆணையிடப்பட்டிருக்கும் போது;

(ii) அந்நிறுவனம் தனது தொழிலை விட்டு வெளியேறும் நிறுவனமாக இருப்பின், அது விடயம் எதையும் சமரசத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள விழையும் போது;

(iii) அதன் மறுநிர்மாணம் மற்றும் ஒருங்கிணைப்பின் போது.

சமரசத்திற்கான காரணிகள் :

தனக்கு கடனீந்தவர்கள் மற்றும் தனது உறுப்பினர்களை ஒரு நிறுவனம் சமரசத்திற்கு அழைப்பு விடுப்பதற்கான காரணிகள் சில வருமாறு,–

(i) அந்நிறுவனம் தனது இயல்பான செயல்பாட்டின் போது, அது தனக்கு கடனீந்தவர்கள் அனைவருக்குமான கடன் தொகையை முழுதளவில் செலுத்த முடியாத போது;

(ii) அந்நிறுவனத்தின் அங்கங்கள் (units) சிலவற்றை, இழப்பில்லாமல் இயக்க முடியாத போது;

(iii) அது தனக்கு கடனீந்தவர்கள், அரசாங்கம், அல்லது பணியாளர் களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பாக்கியாக நிற்கும் கடன் தொகைகளை சமரசம் செய்து கொள்ள வேண்டிய தேவை எழும் போது;

(iv) அந்நிறுவனக் கலைப்பானது, கடனீந்தவர்கள் மற்றும் உறுப்பினர் களுக்கு மிகுந்த இன்னலைக் கொடுக்கும் போது.

ஏற்பாட்டிற்கான திட்டம் எப்போது வகுக்கப்படுகிறது?

பின்வரும் சூழல்களில் ஒரு நிறுவனம் ஏற்பாட்டிற்கான திட்டமொன்றை (scheme for arrangement) வகுப்பது அவசியமாக உள்ளது. அவை,

(i) நிறுவனத்தின் பங்கு மூலதனத்தை மறுசீரமைப்பதற்காக;

(ii) பங்குகளை புதிதாக வெளியிடுவதற்காக;

(iii) கடனீந்தவர்களுக்கு கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு பதிலாக அவர்களுக்கு பங்குகளை வழங்குதல்;

(iv) நிறுவனச் சொத்தின் மீதான உரிமைகளை விற்பது, வாடகைக்கு விடுவது போன்ற செயல்களுக்காக;

(v) பங்கின் ஒரு வகையை மற்றொரு வகை பங்காக மாற்ற;

சமரசம் அல்லது ஏற்பாட்டுத் திட்டத்திற்கான நடைமுறை (Procedure for the scheme of compromise and arrangment):

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 230–ஆனது சமரசம் அல்லது ஏற்பாடு செய்து கொள்வதற்கான நடைமுறை பற்றியும், அதற்கு தேசிய நிறவனச் சட்டத் தீர்ப்பாயத்தை துணைக்கு அழைப்பது பற்றியும் **"கடனீந்தவர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் சமரசம் அல்லது ஏற்பாடு செய்து கொள்வதற்கான அதிகாரம்"** (Power to compromise or make arrangements with creditors and members) என்ற தலைப்பில் படிப்படியாக விளக்குகிறது. அவற்றை பின் வருமாறு காண்போம்.

தீர்ப்பாயத்தின் ஆணை - பிரிவு 230(1):

செய்து கொள்ள உத்தேசிக்கப்படும் சமரசம் அல்லது ஏற்பாடு ஒன்று–

(a) ஒரு நிறுவனத்திற்கும் அதற்கு கடனீந்தவர்கள் அல்லது அவர்களின் வகையினர் எவருக்கும் இடையே (between a company and its creditors or any class of them); அல்லது

(b) ஒரு நிறுவனத்திற்கும் அதன் உறுப்பினர்கள் அல்லது அவர்களின் வகையினர் எவருக்கும் இடையே (between a company and its members or any class of them),

எனில், அந்நிறுவனம், அதற்கு கடனீந்தவர்கள் அல்லது அதன் உறுப்பினர்கள் எவரது விண்ணப்பத்தின் பேரில், அல்லது நிறுவனமொன்று கலைக்கப்படுகின்ற நேர்வில் அதன் கலைப்பதிகாரியின் விண்ணப்பத்தின் பேரில் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயமானது கடனீந்தவர்கள் அல்லது உறுப்பினர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பதற்காகவும், அது தான் ஏவுரைக்கின்ற அத்தகு முறையில் நடத்தப்படவும் ஆணையிடலாம் என்று **பிரிவு 230(1)** கூறுகிறது.

வெளிப்படுத்தப்பட வேண்டிய விவரங்கள் - பிரிவு 230(2):

மேற்கண்டவாறு செய்யப்படும் விண்ணப்பத்தில் அதைச் செய்கின்ற அந்நிறுவனம் அல்லது அதன் மேற்கண்ட நபர்கள் பின்வரும் விவரங்களை ஆணையுறுதியாவணம் வழியாக வெளிப்படுத்துதல் வேண்டும். அவை

(a) அந்நிறுவனத்தின் சமீபத்திய நிதிநிலை, கணக்குகளின் மீது தணிக்கையாளர் அளித்த சமீபத்திய அறிக்கை மற்றும் நிறுவனத்திற்கு எதிராக நிலுவையில் உள்ள புலன்விசாரணை அல்லது நடவடிக்கை போன்று அந்நிறுவனம் தொடர்பான அனைத்து முக்கியச் சங்கதிகள்;

(b) சமரசம் அல்லது ஏற்பாட்டில் சேர்க்கப்பட்ட பங்கு மூலதனக் குறைப்பு ஏதுமிருப்பின் அது;

(c) பிணையம் பெற்ற கடனீந்தவர்களின் மதிப்பில் 75 சதவீதத்திற்கும் குறையாதவர்களால் இசைவளிக்கப்பட்ட கூட்டுரு கடன் மறுகட்டமைப்பிற்கான திட்டம் எதுவும் (any scheme of corporate debt restructure). இதில் பின் வருவன உள்ளடங்கும்–

(i) வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் கடனீந்தவர் ஒருவர் வழங்கிய பொறுப்புடைமைக்கான வாக்குமூலம்;

(ii) பிணையம் பெற்ற மற்றும் பிணையம் பெறா இதர கடனீந்தவர் களின் பாதுகாப்பிற்கான காப்புநடவடிக்கைகள்;

(iii) நிறுவனத்திற்குத் தேவையான நிதியானது இயக்குனரவையால் ஒப்புதல் வழங்கப்பட்ட கூட்டுரு கடன் மறுகட்டமைப்புக்குப் பிறகு, தணிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப் படையில் அமைந்த கலைப்புச் சோதனையை உறுதிப்படுத்துவ தாக அத்தணிக்கையாளர்கள் வழங்கிய அறிக்கை;

(iv) கூட்டுரு கடன் மறுகட்டமைப்பு தொடர்பாக இந்திய சேம வங்கி யால் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளை ஏற்றுக் கொள் வதற்காக ஒரு நிறுவனம் உத்தேசிக்கமிடத்து, அதற்கான வாக்குமூலம்; மற்றும்

(v) நிறுவனமொன்றின் பங்குகள், கட்புலனாகும் மற்றும் கட்புல னாக, அசையும் மற்றும் அசையா சொத்து மற்றும் சொத்திருப்பு களுக்கு பதிவு பெற்ற மதிப்பீட்டாளர் ஒருவரால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை.

கூட்டத்திற்கான அறிவிப்பு - பிரிவு 230(3):

பிரிவு 230(1)–இன் கீழ் தீர்ப்பாயம் பிறப்பித்த மேற்படி ஆணைப்படி கூட்ட மொன்றைக் கூட்டுவதற்காக உத்தேசிக்கப்படுமிடத்து, அதற்கான அறிவிப்பு ஒன்றை நிறுவனத்திற்கு கடனீந்தவர்கள், அதன் உறுப்பினர்கள் மற்றும் கடனீட்டுப் பத்திரம் வைத்துள்ளவர்கள் அனைவருக்கும் நிறுவனத்தில் பதியப்பட்டுள்ள அவர்களது முகவரிக்கு தனித்தனியே அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் சமரசம் அல்லது ஏற்பாட்டிற்கான விவரங்களை வெளிப்படுத்தும் உரை ஒன்றையும், மதிப்பீட்டு அறிக்கையின் நகல் ஒன்றையும் இணைத்தல் வேண்டும். அதில் அச்சமரசம் அல்லது ஏற்பாடானது கடனீந்தவர்கள், முக்கிய மேலாண்மை அலுவலர்கள், தோற்றுவிப் பாளர்கள் மற்றும் தோற்றுவிப்பாளர் அல்லாத உறுப்பினர்கள், கடனீட்டுப் பத்திரம் வைத்துள்ளவர்கள் ஆகியோரின் மீது ஏற்படுத்தக் கூடிய விளைவையும், நிறுவனத் தின் இயக்குனர்கள் அல்லது கடனீட்டுப் பத்திர பொறுப்பாண்மையர்களின் முக்கிய நலனின் மீது அச்சமரசம் அல்லது ஏற்பாடானது ஏற்படுத்தக் கூடிய விளைவையும் விளக்கியிருக்க வேண்டும்.

இந்த ஆவணங்கள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் வலை

தளத்திலும் வைக்கப்பட வேண்டும். அந்நிறுவனம் பட்டியலிடப்பட்ட நிறுவமனமாக இருப்பின், பங்கு பரிவர்த்தனை வாரியத்திற்கும் மற்றும் சம்பந்தப்பட்ட பங்கு பரிமாற்ற கத்திற்கும் அனுப்பப்பட்டு, அதன் வலைதளத்திலும் வைக்கப்பட வேண்டும். மேலும் அறிவிப்பை செய்தித்தாளிலும் வெளியிட வேண்டும்.

கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை - பிரிவு 230(4):

மேற்கண்ட அறிவிப்பு அனுப்பப்பட்டவர்கள் அச்சமரசம் அல்லது ஏற்பாட்டை ஏற்றுக் கொள்வது குறித்து கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கலாம் என்பதை யும், அதை தாங்களே கூட்டத்தில் கலந்து கொண்டு அல்லது பதிலாள் மூலமாக, அல்லது அஞ்சல் வாக்குச் சீட்டு வாயிலாக அளிக்கலாம் என்பதையும் அந்த அறிவிப் பில் குறிப்பிட வேண்டும். எனினும் இதற்கு ஆட்சேபணை தெரிவிக்க வேண்டும் என்றால், சம்பந்தப்பட்ட அந்நபர் பங்கு மதிப்பில் குறைந்தது பத்து சதவீத பங்குகளை வைத்திருக்க வேண்டும் அல்லது சமீபத்தில் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக் கையின்படி மொத்த கடன் பாக்கியில் குறைந்தது அய்ந்து சதவீத கடன்பாக்கி உடையவராக இருக்க வேண்டும்.

வேறு யார்யாருக்கு அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும் - பிரிவு 230(5):

மேற்கண்ட அறிவிப்பையும், அதனுடன் முன் சொன்னவாறு இணைக்கப் பட்ட அனைத்து ஆவணங்களையும் பின்வருவோருக்கும் அனுப்பப்பட வேண்டும். (1) மைய அரசு, (2) வருமான வரி அதிகார அமைப்பினர், (3) இந்திய சேம வங்கி, (4) பங்குப் பரிவர்த்தனை வாரியம், (4) பதிவாளர், (5) சம்பந்தப்பட்ட பங்கு பரிமாற்றகங்கள், (6) முறையார்ந்த கலைப்பதிகாரி, (7) தேவைப்படின், இந்திய போட்டி ஆணையம். மேலும் இந்த சமரசம் அல்லது ஏற்பாட்டினால் அநேகமாக பாதிப்பிற்குள்ளாகக் கூடிய அனைத்து பகுதிசார் ஒழுங்குமுறையினர் மற்றும் அதிகார அமைப்பினருக்கும் அனுப் பப்பட வேண்டும். மேற்கண்டவர்கள் அச்சமரசம் அல்லது ஏற்பாடு குறித்து தங்கள் தரப்பில் முன் வைக்க வேண்டிய கருத்துகள் ஏதுமிருப்பின், அதை மேற்படி அறிவிப்பு கிடைக்கப் பெற்ற ஒரு மாதத்திற்குள் தெரிவிக்க வேண்டும். தவறினால், அச்சமரசம் அல்லது ஏற்பாட்டிற்கு மேற்படியார்கள் தரப்பில் கருத்துகள் ஏதுமில்லை என்று அனுமானித்தல் வேண்டும்.

சமரசம் அல்லது ஏற்பாட்டை தீர்ப்பாயம் அனுமதித்து ஆணையிடல் - பிரிவு 230(6):

கூட்டத்தில் நேர்முகமாக, அல்லது பதிலாள் அல்லது அஞ்சல் வாக்குச் சீட்டு மூலமாக வாக்களித்த கடனீந்தவர்கள் அல்லது உறுப்பினர்களின் மதிப்பில் நான்கில் மூன்று பங்கினர் கொண்ட பெரும்பான்மையினர் அச்சமரசம் அல்லது ஏற்பாட்டை ஒப்புக் கொண்டால், தீர்ப்பாயம் அதை அனுமதித்து பிறப்பிக்கும் ஆணையானது, சம்பந்தப்பட்ட நிறுவனம், கடனீந்தவர்கள் அல்லது உறுப்பினர்களை கட்டுப் படுத்துவதாகும். மேலும் கலைப்பிலுள்ள நிறுவனமெனில், அதன் கலைப்பதிகாரியை யும் மற்றும் அந்நிறுவனப் பங்காளிப்பாளர்களையும் கட்டுப்படுத்தும்.

தீர்ப்பாயத்தின் ஆணை வகை செய்யும் விடயங்கள் - பிரிவு 230(7):

மேற்படி பிரிவு 230(6)–இன்படி தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்படும் ஆணை ஒன்று பின்வரும் விடயங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையும் வகை செய்தல் வேண்டும். அதாவது,–

(a) முன்னுரிமைப் பங்குகளை சாதாரண (தகைமைப்) பங்குகளாக மாற்று வதற்காக சமரசம் அல்லது ஏற்பாடு வகை செய்தால், அத்தகு முன்னுரிமை பங்கு தாரர்களுக்கு, ஒன்று அவர்கள் பங்காதாயத்தை ரொக்கத்தின் வடிவில் பெறவோ, அல்லது அப்பங்காதாயத்தின் மதிப்பிற்குச் சமமான சாதாரண பங்குகளைப் ஏற்றுக் கொள்ளவோ விருப்பத்தேர்வு அளிக்கப்படல் வேண்டும்;

(b) கடனீந்தவர்களின் வகையினர் எவருக்கும் பாதுகாப்பளித்தல்;

(c) சமரசம் அல்லது ஏற்பாட்டின் விளைவாக பங்குதாரர்களின் உரிமைகள் மாறுபட்டால், அதற்கு 48–வது பிரிவின் கீழ் செயல்விளைவு கொடுக்கப்பட வேண்டும்;

(d) மேற்படி பிரிவு 230(6)–இன் கீழ் அச்சமரசம் அல்லது ஏற்பாட்டிற்கு கடனீந்தவர்கள் ஒப்புக் கொண்டால், நலிவடைந்த தொழிற் நிறுவனங்கள் (சிறப்பு வகைமுறைகள்) சட்டம், 1985–இன் கீழ் நிறுவப்பட்ட தொழில் மற்றும் நிதி மறு கட்டமைப்பு வாரியத்தின் முன் நிலுவையில் இருக்கும் நடவடிக்கைகள் எதுவும் அற்றுப் போகும்.

(e) சமரசம் அல்லது ஏற்பாட்டின் வரைவுரைகளை திறம்பட செயல்படுத்து வதற்கு தீர்ப்பாயத்தின் அபிப்பிராயத்தில் அவசியமாக உள்ள அத்தகு பிற விடயங்கள். இதில் இசைவளிக்காத பங்குதாரர்கள் வெளியேறுவதற்கான முனைவு உள்ளடங்கும்.

ஆணையை பதிவாளரிடம் தாக்கல் செய்தல் - பிரிவு 230(8):

தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணை கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள். அதனை நிறுவனம் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும்.

கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பதை தீர்ப்பாயம் கைவிடும் சூழல் - பிரிவு 230(9):

சமரசம் அல்லது ஏற்பாட்டுத் திட்டத்திற்கு குறைந்தபட்சம் தொன்னூறு சதவீத மதிப்பு கொண்ட கடனீந்தவர்கள் ஆணையுறுதியாவணம் வாயிலாக ஒத்துக் கொண்டு உறுதி செய்தால், அங்கு கடனீந்தவர்களின் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுப்பதை தீர்ப்பாயம் கைவிடலாம்.

சமரசம் அல்லது ஏற்பாடு அனுமதிக்கப்படாத நிலை - பிரிவு 230(10):

பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்களை (பிணையங்களை) திரும்ப

வாங்குதல் குறித்த சமரசம் அல்லது ஏற்பாட்டை தீர்ப்பாயம் அனுமதித்தல் ஆகாது. எனினும் அத்திரும்ப வாங்குதலானது பிரிவு 68–இன் வகைமுறைகளுக்கு இணங்க இருப்பின், அது குறித்த சமரசம் அல்லது ஏற்பாட்டை தீர்ப்பாயம் அனுமதிக்கும்.

நிறுவனங்களை பொறுப்பேற்கும் சமரசம் அல்லது ஏற்பாடு - பிரிவு 230(10):

சமரசம் அல்லது ஏற்பாடு எதுவும் நிறுவனமொன்றை பொறுப்பேற்பதற்காக செய்யப்பட்ட முனைவையும் உள்ளடக்கி இருக்கலாம். எனினும் பட்டியலிடப்பட்ட நிறுவனமொன்றின் நேர்வில், அதற்கான பொறுப்பேற்பானது பங்குப் பரிவர்த்தனை வாரியத்தால் வகுக்கப்பட்ட ஒழுங்குமுறைகளின்படி இருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் எடுக்க வேண்டிய நடவடிக்கை - பிரிவு 230(11):

பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் அல்லாத வேறு நிறுவனங்களை பொறுப் பேற்பதற்கான முனைவு குறித்து குறைகள் ஏதும் இருப்பின், பாதிக்கப்பட்டவர் அக் குறை தொடர்பாக தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் ஒன்றை அளிக்கலாம். அதன் பேரில் தீர்ப்பாயம் தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு ஆணையைப் பிறப்பிக்கலாம்.

மேற்கண்ட வகைமுறைகளின்படி சமரசம் அல்லது ஏற்பாட்டை தீர்ப்பாயம் அனுமதித்து ஆணையிடும் நடைமுறை நடக்கின்றது. எனினும் இதை வலியுறுத்திச் செயல்படுத்தும் பொழுதுதான் அச்சமரசம் அல்லது ஏற்பாடு முழுமை பெறுகிறது. அதற்கான அதிகாரத்தை பிரிவு 231–ஆனது தீர்ப்பாயத்திற்கே தருகிறது. சற்று விளக்கமாக வருமாறு:–

சமரசம் அல்லது ஏற்பாட்டை வலியுறுத்த தீர்ப்பாயத்திற் குள்ள அதிகாரம் (Power of Tribunal to enforce compromise or arrangement) - பிரிவு 231:

நிறுவனமொன்று குறித்த சமரசம் அல்லது ஏற்பாட்டை பிரிவு 230–இன் கீழ் அனுமதித்து ஆணையிடும் தீர்ப்பாயமானது,–

(a) அச்சமரசம் அல்லது ஏற்பாட்டு அமலாக்கப்படுவதை கண்காணிக்க அதிகாரம் பெற்றது;

(b) அத்தகு ஆணை ஒன்றை செய்கின்ற போது அல்லது அதற்குப் பின்னிட்டு, அச்சமரசம் அல்லது ஏற்பாட்டை முறைப்படி அமலாக்குவதற்கு பொருத்த மானது எனத் தான் கருதலாகும் விடயம் எது குறித்தும் அத்தகு ஏவுரைகளை வழங்க லாம் அல்லது அச்சமரசம் அல்லது ஏற்பாட்டில் அத்தகு மாற்றங்களைச் செய்யலாம், என **பிரிவு 231(1)** கூறுகிறது.

பிரிவு 230–இன் கீழ் அனுமதிக்கப்பட்ட சமரசம் அல்லது ஏற்பாடானது மாற்றங்களுடன் அல்லது மாற்றங்கள் இல்லாமல் திருப்திகரமாக அமலாக்கப்பட

முடியாது என்றோ, சமரசம் மற்றும் ஏற்பாட்டுத் திட்டத்தின்படி அந்நிறுவனம் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாது என்றோ, தீர்ப்பாயம் மனநிறைவடைந்தால் அது அந்நிறுவனக் கலைப்பிற்கான ஆணை ஒன்றைப் பிறப்பிக்கலாம். அந்த ஆணை பிரிவு 273–இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணையாக கருதப்படல் வேண்டும், என்று **பிரிவு 231(2)** கூறுகிறது.

இந்தப் பிரிவின் வகைமுறைகள், இந்தச் சட்டம் தொடக்கத்திற்கு வருவ தற்கு முன்பான சமரசம் அல்லது ஏற்பாடு ஒன்றை அனுமதித்து பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றுக்கும் இயன்ற வரை பொருந்தக் கூடியதாகும், என்று **பிரிவு 231(2)** கூறுகிறது.

முடிவுரை:

பூசல்கள் அல்லது தகராறுகள் இல்லாத வணிகங்கள் அல்லது தொழில்கள் இல்லாமல் இல்லை. அதில் நிறுவனத் தொழிலும் விதிவிலக்கல்ல. ஒரு நிறுவனத் திற்கு பெரிதும் இரண்டு தரப்பினரிடமிருந்து தகராறுகள் எழுகின்றன. அவர்களில் ஒரு தரப்பினர் அந்நிறுவனத்திற்கு கடனீந்தவர்கள், மற்றொரு தரப்பினர் அந் நிறுவனத்தின் உறுப்பினர்கள். இவ்விரு தரப்பினர்களும் வேண்டுமென்றே விரும்பி வீண் தகராறுகள் எதையும் செய்வதில்லை. சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் செயல்பாடு அல்லது செயற்படா நிலை காரணமாகவே தகராறுகள் தலை தூக்குகின்றன. அத்தகராறுகளை ஒரு நிறுவனத்தின் மேலாண்மை, தலையில் தூக்கி வைத்துக் கொண்டு தடுமாறுவதைத் தவிர்க்கவே நிறுவனங்கள் சட்டமானது சமரசம் மற்றும் ஏற்பாடு என்ற தலைப்பில் பல்வேறு வகைமுறைகளை படிப்படியான முறையில் கொடுத்துள்ளது எனில் அது மிகையன்று. தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் என்ற உயர்ந்த அதிகார அமைப்பு அதை முறைப்படி அனுமதித்து ஆணையிட்டு, வலியுறுத்திச் செயற்படும் நிகழ்வுடன் அச்சமரசம் அல்லது ஏற்பாடு முழுமை பெற்ற ஒன்றாகிறது.

-o0o-

மறுநிருமாணம், இணைதல் மற்றும் ஒருங்கிணைப்பு
[Reconstruction, Merger and Amalgamation]

2

95. Explain the provisions of the Companies Act for reconstruction and amalgamation of companies. (நிறுவனங்களின் மறு நிர்மாணம் மற்றும் ஒருங்கிணைப்பு பற்றிய நிறுவனச் சட்டத்தின் சட்ட வகைமுறைகளை விளக்குக.)

(அல்லது)

Reconstruction and Amalgamation - Write short notes. (மறு நிருமாணமும் ஒருங்கிணைப்பும் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Merger and Amalgamation - Write short notes.

(நிறுவனங்கள் இணைதல் மற்றும் ஒருங்கிணைதல் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Merger of Companies - Write short notes. (நிறுவனங்கள் இணைதல்- குறுகிய விடை எழுதுக.)

மறுநிருமாணம் (Reconstruction):

ஒரு நிறுவனம் தன் வியாபாரத்தை அல்லது தொழிலை வேறொரு புதிய நிறுவனத்திற்கு மாற்றுகிறது. இங்கு அவ்வாறு மாற்றிய பிறகு, அந்நிறுவனம் பழைய நிறுவனமாகிறது. தற்பொழுது பழைய நிறுவனத்தின் உறுப்பினர்கள் எத்தகு நலனை அப்பழைய நிறுவனத்தில் கொண்டிருந்தனரோ, அதே நலன்களையும், அதே வியாபாரம் அல்லது தொழிலையும் கொண்டு அப்புதிய நிறுவனம் செயற்பட்டால், அது அப்பழைய நிறுவனத்தின் '**மறு நிருமாணம்**' (Reconstruction) எனப்படுகிறது. அப்புதிய நிறுவனம் மேற்கண்ட மறு நிருமாணத்திற்கெனவே உருவாக்கப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மாறாக, ஏற்கனவே வேறு நோக்கங் களுடன் வேறு உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வரும் ஒரு நிறுவனத்திற்கு மேற்கண்டவாறு மாற்றுகை செய்வது, மறு நிருமாணமாகாது. சுருங்கச் சொன்னால், பழைய நிறுவனமொன்றின் தொழில் மற்றும் சொத்துக்களை எடுத்துக் கொண்டு, அதன் அதே தொழில் மற்றும் அதே உறுப்பினர்களைக் கொண்டு ஓர் புதிய நிறுவனம் உருவாக்கப்பட்டால், அது மறு நிருமாணம் என்று கூறப்படுகிறது.

மறுநிருமாணத்தின் தேவை:

இத்தகு மறு நிருமாணம் பல்வேறு காரணங்களுக்காக ஒரு நிறுவனத்திற்கு தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் கண்ட நோக்கங்களில் பெரும் மாற்றங்களைச் செய்தால், அதனை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் ஏற்றுக் கொள்ளாது. அப்பொழுது இருக்கும் ஒரே வழி யாதெனில், ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்கி, அதன் அமைப்பு முறையேட்டில் அப்புதிய நோக் கங்களைப் புகுத்தி, அதற்கு பழைய நிறுவனத்தின் வியாபாரத்தை அல்லது தொழிலை அதே உறுப்பினர்களுடன் மாற்றிவிடுதலேயாகும். எனவே முற்றிலும் புதிய நோக்கங் களை ஏற்றுக் கொள்ள பழைய நிறுவனம் மறுநிருமாணம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் இத்தகு மறுநிருமாணம், பங்குதாரர்கள் அல்லது கடனீந் தவர்களின் ஒரு பிரிவினரின் உரிமைகளில் முக்கிய மாற்றங்களை கொண்டு வருவ தற்கும் தேவைப்படுகிறது.

மேலும் ஒரு நிறுவனத்தின் மறு நிருமாணம் என்பது அந்நிறுவனத்தைக் கலைத்தோ, கலைக்காமலோ, அதன் நிதிக் கட்டமைப்பை மறுசீராக்குவது என்பதையும் குறிக்கும். இது நிறுவனத்தின் பங்குதாரர்கள் அல்லது கடனீந்தவர்கள் அந்நிறுவனத்திற்கு எதிராகச் செய்துள்ள கோரிக்கைகளை குறைத்தலையும் உள்ளடக்கியதாகும். மறுநிருமாணத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

1. நிறுவன மூலதனக் கட்டமைப்பை எளிமைப்படுத்துதல்;

2. நிறுவனச் சொத்துக்களின் மீது செய்யப்பட்ட நிலையான பற்றுப் பொறுப்புகளை குறைத்தல்;
3. கடந்த கால இழப்புகளை நீக்குதல்;
4. தொகுப்பு பங்காதாயங்களின் பாக்கிகளை சரியீடு செய்தல்; மற்றும்
5. நிறுவனத்தின் பயன்பாட்டு மூலதனத்தை உயர்த்துதல்.

எனவே நிதிநிலை சீர்கெட்ட ஒரு நிறுவனத்தை மீட்க இந்த மறு நிருமாணம் பெரிதும் உதவுகிறது என்று சொன்னால் அதில் மிகையொன்றுமில்லை.

இணைதல் (Merger):

இரண்டு நிறுவனங்கள் இணைவதை இணைதல் என்று எளிமையாகக் கூறலாம். ஆனால் அவ்வாறு ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்துடன் இணைவதன் வாயிலாக அந்நிறுவனம் தனது அடையாளத்தை முற்றிலும் இழந்துவிடுகிறது. வேறு வகையில் சொன்னால், ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அனைத்தும் மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு, அம்முதல் நிறுவனம் தனது அடையாளத்தை இழந்துபட்டால், அது இணைதல் எனப்படுகிறது.

ஒருங்கிணைப்பு (Amalgamation):

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஒன்றோடொன்று இணைந்து மூன்றாவதாக ஒரு புதிய நிறுவனம் உருவாக்கப்பட்டால், அது **'ஒருங்கிணைப்பு' (Amalgamation)** எனப்படும். மேற்கண்டவாறு இணையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்களின் சொத்துக்கள், உரிமைகள், அதிகாரங்கள், பொறுப்புகள் ஆகிய அனைத்தையும், இணைவதால் உருவான அப்புதிய நிறுவனம் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

இணைதலும் ஒருங்கிணைப்பும் (Merger and Amalgamation):

இணைதல், ஒருங்கிணைப்பு ஆகிய இரண்டு பதங்களுக்கும் நிறுவனச் சட்டம் எந்த வரையறையையும் தரவில்லை. நாம் ஏற்கனவே மேலே கண்ட பொதுவான வரையறையையே மேற்கண்ட பதங்களுக்கான வரையறையாக ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த இரண்டு பதங்களையும் கிட்டத்தட்ட ஒரே பொருளில் நிறுவனச்



சட்டம் எடுத்தாள்கிறது. எனினும் ஓர் மெல்லிய வேறுபாடு இரண்டு பதங்களுக் கிடையேயும் உள்ளதை நாம் மறுக்க முடியாது. அதன்படி இணைதல் என்பது ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத் துடன் இணைவது. இதன் காரணமாக மற்றொரு நிறுவனத்துடன் இணையும்அந்த ஒரு நிறுவனம் தனது அடையாளத்தை இழக்கிறது. அதேநேரம் ஒருங்கிணைப்பு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஒருங்கிணைவதாகும். இதன் காரணமாக அவ்வாறு ஒருங்கிணையும் அனைத்து நிறுவனங்களும் தங்களது அடையாளத்தை இழந்து ஒரு புதிய நிறுவனமாக வடிவெடுக்கிறது.

இங்கு ஏற்கனவே இருக்கும் அல்லது புதியதொரு நிறுவனத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள் தங்கள் தொழிலை மாற்றினால் அதுவும் ஒருங்கிணைப்பு எனப்படுகிறது. **'மாற்றியளிக்கும் நிறுவனம்' (Transferor Company)** என்பது எந்த ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்துடன் இணைவதன் மூலம் தனது தொழிலை அதற்கு மாற்றித் தருகிறதோ, அந்நிறுவனம் என்று பொருள்படும். இதனை **'ஒருங்கிணையும் நிறுவனம்' (Amalgamating Company)** என்றும் கூறலாம். அதுபோல் **'மாற்றியளிக்கப்பெறும் நிறுவனம்' (Transferee Company)** என்பது, அவ்வாறு இணைந்ததன் காரணமாக உருவான நிறுவனம் என்று பொருள்படும். இதனை **'ஒருங்கிணைந்த நிறுவனம்' (Amalgamated Company)** என்றும் அழைக்கலாம். எனவே இணைதல் மற்றும் ஒருங்கிணைதலுக்கு நிறுவனச் சட்டரீதியாக பெரும் வேறுபாடுகளோ, விளைவுகளோ இல்லை. எனினும் வருமான வரிச் சட்ட ரீதியாக விளைவுகள் உண்டு (அவை நமக்கு இங்கு தேவை யில்லை).

ஒருங்கிணைத்தலின் முக்கிய நோக்கம்:

ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்துடன் இணைவதன் அல்லது ஒருங் கிணைவதன் முக்கிய நோக்கம் யாதெனில், இணையும் இரண்டு நிறுவனங்களின் மறுநிருமாணிப்பிற்கு வழி வகுப்பதேயாகும் (Reconstruction of two or more companies merged or amalgamated).

மறு நிருமாணமும் ஒருங்கிணைப்பும் நிகழும் முறைகள்:

நிறுவனத்தின் மறு நிருமாணம் அல்லது ஒருங்கிணைப்பு பின்வரும் முறைகளில் ஏற்படலாம்.

1. ஏற்பாட்டிற்கான திட்டம் ஒன்றின் வாயிலாக (By a scheme of arrangement) (பிரிவு 230);

2. ஒரு நிறுவனத்தின் எல்லா அல்லது பெரும்பான்மை பங்குகளை, மற்றொரு நிறுவனம் அடைவதன் (By acquiring all or majority of shares in another company) (பிரிவு 235);

3. அமைப்புமுறையேட்டால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் ஒரு நிறுவனம் தனது தொழிலை மற்றொரு நிறுவனத்திற்கு விற்பதன் வாயிலாக (By the sale of undertaking under the powers conferred by the memorandum of the company);

4. 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களும் அயல்நாடுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களும் இணைதல் அல்லது ஒருங்கிணைதல் திட்டத்தின் வாயிலாக (By a scheme of merger or amalgamation of company with foreign company);

5. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இணைதல் அல்லது ஒருங்கிணைதலின் வாயிலாக நிறுவனம் அல்லது நிறுவனங்களின் மறுநிருமாணத்திற்காக வகுக்கப்பட்ட சமரசம் அல்லது ஏற்பாட்டுத் திட்டத்திற்கு, அனுமதியளித்து, தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணையின் வாயிலாக (By an order of National Company Law Tribunal sanctioning the scheme of compromise or arrangement for the purpose of of a scheme for the reconstruction of the company or companies involving merger or the amalgamation of any two or more companies) (பிரிவு 232);

6. மைய அரசு பிறப்பிக்கும் ஆணை ஒன்றின் கீழ் பொது நலனின் அடிப்படையில் நிறுவனங்களின் கட்டாய ஒருங்கிணைப்பின் வாயிலாக (By a compulsory amalgamation of companies in public interest by an order of the Central Government) (பிரிவு 237); (ஆனால் இது ஒருங்கிணைப்பிற்கு மட்டும் பொருந்தக் கூடியதாகும்.)

மேற்கண்டவற்றில் முதல் மூன்று முறைகளுக்கும் விளக்கம் தேவையில்லை. அவையே அவற்றின் இயல்பை விளக்குகின்றன. ஆனால் 5–வது மற்றும் 6–வது முறைகளுக்கு நாம் விளக்கம் காண வேண்டியது அவசியமாக உள்ளது. அவ்விளக்கம் வருமாறு.

மறுநிருமாணம் மற்றும் ஒருங்கிணைப்பிற்காக தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணை - பிரிவு 232:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 232(1)–இன்படி, சமரசம் அல்லது ஏற்பாடானது

(a) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள் இணைதல் அல்லது ஒருங்கிணைதலை உள்ளடக்கும் நிறுவனங்களின் மறுநிர்மாணத் திட்டம் ஒன்றின் நோக்கத்திற்காக அல்லது அதனுடன் தொடர்புடையதற்காக உத்தேசிக்கப்படுவதை தீர்ப்பாயத்திற்கு காட்டுகின்ற, அல்லது

(b) நிறுவனத்தின் தொழில், சொத்து அல்லது பொறுப்புகள் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றியளிக்க, அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்களுக்குள் பிரிக்கப்பட அல்லது மாற்றி யளிக்கப்பட அத்திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்படுவதை தீர்ப்பாயத்திற்கு காட்டுகின்ற மற்றும்

பிரிவு 230–இன் கீழ் (a) அந்நிறுவனத்திற்கும் அதற்கு கடனீந்தவர்களுக்கும், அல்லது (b) அந்நிறுவனத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்குமிடையே செய்து கொள்ள உத்தேசிக்கப்பட்ட சமரசம் அல்லது ஏற்பாட்டுத் திட்டத்தை அனுமதிப்பதற்காக, மேற் கண்ட நிறுவனம் அல்லது அதற்கு கடனீந்தவர்கள் அல்லது அதன் உறுப்பினர்கள் எவரேனும் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பமொன்றைச் செய்கிற விடத்து, அதன் பேரில், அத்தீர்ப்பாயமானது கடனீந்தவர்கள் அல்லது உறுப்பினர் களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பதற்காகவும், அது தான் ஏவுரைக்கின்ற அத்தகு முறையில் நடத்தப்படவும் ஆணையிடலாம். மேலும் இங்கு பிரிவு 230–இன் (3) முதல் (6) வரையிலான உட்பிரிவுகளின் வகைமுறைகள்[1] அப்படியே (mutatis mutandis) பொருந்தக் கூடியதாகும்.

மேற்படி கூட்டத்தில் என்னென்ன ஆவணங்கள் சுற்றுக்கு விடப்பட வேண்டும் என்பது குறித்து பிரிவு 232(2) கூறுகிறது. அவை,

(a) இணையும் நிறுவன இயக்குனர்களால் வரையப்பட்டு ஏற்கப்பட்ட அத் திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட வரைவுரைகளின் (நிபந்தனைகளின்) வரைவு (the draft of the proposed terms of the scheme drawn up and adopted by the directors of the merging company);

(b) அத்திட்ட வரைவின் நகல் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதற்கான உறுதியுரை (confirmation that a copy of the draft scheme has been filed with the Registrar);

(c) சமரசத்தின் விளைவு குறித்து, குறிப்பாக பங்கு மாற்ற விகிதத்தை திட்ட மிட்டுக் கொடுத்தும், மதிப்பீட்டில் உள்ள தனி வகை இடர்பாடுகளைக் குறித்துரைத் தும் பங்குதாரர்கள், முக்கிய மேலாண்மை அலுவலர்கள், தோற்றுவிப்பாளர்கள் மற்றும் தோற்றுவிப்பாளர்கள் அல்லாத பங்குதாரர்கள் விளக்குவதும், இணையும் நிறுவனங் களின் இயக்குனர்களால் ஏற்கப்பட்டதுமான ஓர் அறிக்கை;

(d) மதிப்பீடு குறித்த வல்லுநரின் அறிக்கை;

1. பக்கம் எண்கள். 383 மற்றும் 384–இல் காண்க.

(e) கணக்குப்பதிவின் அறிக்கையின் பிற்சேர்க்கை ஒன்று

பிரிவுகள் 232(1) மற்றும் 232(2)–இல் குறித்துரைக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதாக தீர்ப்பாயம் மனநிறைவடைந்த பிறகு, அது தனது ஆணை ஒன்றின் மூலம், மேற்படி சமரசம் அல்லது ஏற்பாட்டிற்கு அனுமதியளிக்கலாம் அல்லது அதற்குப் பிந்தைய ஆணை ஒன்றின் வாயிலாக, பின்வரும் விடயங்களுக்கு வகை செய்யலாம் என்று **பிரிவு 232(3)** கூறுகிறது. அதாவது,–

1. தீர்ப்பாயம் வேறுவிதமான நிர்ணயம் செய்யாவிட்டால், தரப்பினர்களால் நிர்ணயம் செய்யப்படக்கூடிய தேதி ஒன்றிலிருந்து மாற்றியளிக்கும் நிறுவனத்தின் தொழில் முழுவதையும் அல்லது அதன் பகுதி எதையாவது, அதன் சொத்து அல்லது பொறுப்புகளை மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு;

2. அத்திட்டத்தின் அடிப்படையில் மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்தால் (Transferee Company) ஒதுக்கீடு (allotment) அல்லது சரிஎதிரீடு (appropriation) செய்யப்பட வேண்டிய பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், கொள்கைப் பத்திரங்கள் அல்லது அதையொத்த வேறு முறையாவணங்களை நபர் எவருக்கும் அல்லது எவருக்காகவும் ஒதுக்கீடு அல்லது சரிஎதிரீடு செய்யப்படுவதற்கு;

3. மாற்றுகை நடைபெறும் தேதியன்று மாற்றியளிக்கும் நிறுவனத்தால் (Transferor Company) அல்லது அதற்கு எதிராக தொடரப்பட்டு நிலுவையில் உள்ள சட்டமுறை நடவடிக்கைகள் எதையும் (Legal Proceedings) மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்தால் அல்லது அதற்கு எதிராக தொடர்ந்து நடத்தப்படுவதற்கு;

4. மாற்றியளிக்கும் நிறுவனத்தைக் கலைக்காமல், அதனை முடிவிற்கு கொண்டு வருவதற்கு (dissolution, without winding up, of the transferor company);

5. சமசரம் அல்லது ஏற்பாட்டுத் திட்டத்தை எதிர்ப்பவருக்கு (the person who dissents from the scheme) உண்டான வகைமுறைகளைச் செய்வதற்கு;

6. மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்தின் பங்குகளை வெளிநாட்டு வாழ் இந்தியப் பங்குதாரருக்கு ஒதுக்கீடு செய்வதற்கு;

7. மாற்றியளிக்கும் நிறுவனத்தின் பணியாளர்களை மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு;

8. மாற்றியளிக்கும் நிறுவனமானது பட்டியலிடப்பட்ட ஒரு நிறுவனமாகவும், மாற்றியளிக்கப் பெறும் பட்டியலிடப்படாத ஓர் நிறுவனமாகவும் இருக்குமிடத்து, (அ) அம்மாற்றியளிக்கப் பெறும் நிறுவனமானது பட்டியலிடப்பட்ட ஓர் நிறுவனமாக ஆகும் வரை அவ்வாறு பட்டியலிடப்படாத நிறுவனமாகவே தொடர்ந்து நீடிக்கும்; (ஆ) மாற்றியளிக்கும் நிறுவனப் பங்குதாரர்கள் மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்தை ஏற்க விரும்பாவிட்டால், அவர்கள் வைத்திருக்கும் பங்குகளின் மதிப்பிற்கு தொகை செலுத்துவதற்காக வகைமுறை செய்வதற்கு. இதற்கான விலை மதிப்பீடு தொடர்பான ஏற்பாட்டிற்கு தீர்ப்பாயம் வகை செய்யலாம்.

9. மாற்றியளிக்கும் நிறுவனம் கலைக்கப்படுமிடத்து, அதனால் அதன் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்தின் பேரில் செலுத்தப்பட்ட கட்டணம் ஏதுமிருப்பின், அது மாற்றியளிக்கப் பெறும் நிறுவனம் தனது அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்தின் பேரில் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்திற்கு எதிராக, ஒருங்கிணைப்பிற்குப் பிறகு சரியீடு செய்யப்படுதல் வேண்டும்;

10. நிறுவனத்தின் மறு நிருமாணம் அல்லது ஒருங்கிணைப்பை நல்ல முறையில் முழுவதுமாகச் செய்து முடிப்பதற்குத் தேவையான அத்தகு இடை நிகழ்வான (incidental), தொடர்விளைவான (consequential) அல்லது துணை (supplemental) விடயங்களுக்கு (matters);

அடுத்ததாக, சொத்து அல்லது பொறுப்புகள் ஏதும் மாற்றப்படுவதற்கு தீர்ப்பாயத்தின் மேற்படி ஆணை வகை செய்யுமிடத்து, அவை மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்திற்கு மாற்றப்படல் வேண்டும் என்றும், தீர்ப்பாயம் அவ்வாறு ஏவுரைத்தால், பற்றுப் பொறுப்பிலிருந்து சொத்து ஏதும் விடுவிக்கப்படலாம் என்றும் **பிரிவு 232(4)** கூறுகிறது.

மேற்கண்டவற்றிற்காக தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணையின் சான்று நகல் ஒன்றை சம்பந்தப்பட்ட நிறுவனம், அது கிடைக்கப் பெற்ற 30 நாட்களுக்குள் நிறுவனங்களின் பதிவாளரிடம் பதிவிற்காக தாக்கல் செய்தல் வேண்டும் என்று **பிரிவு 232(5)** கூறுகிறது.

ஒருங்கிணைப்பிற்காக மைய அரசு பிறப்பிக்கும் ஆணை – பிரிவு 237:

பிரிவு 237(1)–இன்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப்படுவது பொது நலனுக்கு (Public Interest) அவசியமாக உள்ளது என்று மைய அரசு மனநிறைவடைந்தால், அது அந்நிறுவனங்களை ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்க ஆணையிடலாம். இந்த ஆணை அரசிதழில் (Official Gazette) அறிவிக்கை செய்யப்பட வேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்திற்கான அமைப்பு, சொத்து, அதிகாரங்கள், நலன்கள், அலுவலர்கள், சிறப்புரிமைகள், பொறுப்புகள், கடமைகள், கடப்பாடுகள் ஆகியன மேற்படி ஆணையில் குறிப்பிடப் படக்கூடியவாறு அமைந்திருத்தல் வேண்டும்.

மேலும் **பிரிவு 237(2)**–இன்படி மாற்றியளிக்கும் நிறுவனத்தால் அல்லது அதற்கு எதிராக தொடரப்பட்டு நிலுவையில் உள்ள சட்டமுறை நடவடிக்கைகள் எதையும் மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்தால் அல்லது அதற்கு எதிராக தொடர்ந்து நடத்தப்படுவதற்கு அந்த ஆணை வகை செய்யலாம். ஒருங்கிணைப்பிற்கு செயல்திறம் (effect) கொடுப்பதற்கு அவசியமாக உள்ள அத்தகு தொடர் விளைவான அல்லது துணை வகைமுறைகளையும் அவ்வுத்திரவில் மத்திய அரசு சேர்க்கலாம்.

பிரிவு 237(3)–இன்படி ஒருங்கிணைப்பிற்கு முன் மாற்றியளிக்கும் நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கும், கடனீந்தவர்களுக்கும் இருந்த அதே உரிமை

களும், நலன்களும் மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்திலும் தொடருகின்றன. ஒருக் கால் மாற்றியளிக்கப் பெறும் நிறுவனத்திற்கு எதிராக மாற்றியளிக்கும் நிறுவன உறுப்பினர் அல்லது கடனீந்தவர்களுக்கு ஏற்கனவே ஆதியில் இருந்த உரிமைகளுக் கும் நலன்களுக்கும் குறைவு ஏற்பட்டால், அதற்காக அவர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டி வரும். இதற்கான மதிப்பீடு மைய அரசு வகுத்துரைக்கும் அதிகார அமைப்பு ஒன்றால் செய்யப்படும். இதனை சம்பந்தப்பட்ட உறுப்பினர் அல்லது கடனீந்தவருக்கு மாற்றியளிக்கப் பெற்ற நிறுவனம் வழங்குதல் வேண்டும்.

பிரிவு 237(4)–இன்படி, மேற்கண்ட இழப்பீட்டின் மதிப்பீட்டால் பாதிப்படைந்த நபர் எவரும், அம்மதிப்பீட்டின் அறிவிக்கைத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு செய்யலாம்.

(a) மைய அரசு பிறப்பிக்க உத்தேசித்துள்ள ஆணையின் வரைவு நகலை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பாமலோ, (b) மேற்படி மேல்முறையீடு செய்வ தற்கான காலம் முடியாமலோ அல்லது மேல்முறையீடு செய்யப்பட்டிருக்குமிடத்து, அது இறுதியாக முடிக்கப்பெறாமலோ, மற்றும் (c) நிறுவனத்திடமிருந்து மைய அரசால் பெறப்படலாகும் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை பரிசீலித்து, அவற்றின் அடிப்படையில் தான் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகு மாற்றங்கள் எதையும் மைய அரசு செய்யாமலோ, அது இந்தப் பிரிவு 237–இன் கீழ் ஆணை எதையும் பிறப் பித்தல் ஆகாது என்று **பிரிவு 237(5)** கூறுகிறது.

மைய அரசு, தனது மேற்படி ஆணையை பாராளுமன்றத்தின் இரு அவைகளின் முன்னரும் வைக்க வேண்டும் என்று **பிரிவு 237(6)** கூறுகிறது.

-oOo-

நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நிறுவனங்களின் பெயர்களை நீக்குதல்
[Removal of Names of Companies from the Register of Companies]

3

96. Discuss the provisions of the Companies Act, 2013 with regard to the removal of names of companies from the register of companies. (நிறுவனங்களின் பெயர்களை நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நீக்குதல் தொடர்பாக 2013, நிறுவனங்கள் சட்டத்தின் வகை முறைகளை விவாதிக்க.)

(அல்லது)

Removal of names of Companies from the Register of Companies - Write short notes. (நிறுவனங்களின்

பதிவேட்டிலிருந்து நிறுவனங்களின் பெயர்களை நீக்குதல் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Defunct Company - Write short notes. (செயலற்ற நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Dissolve of Company - Write short notes. (நிறுவனம் கலைந்து போவது - குறுகிய விடை எழுதுக.)

செயலற்ற நிறுவனம் (Defunct Company):

ஒரு நிறுவனம் தன்னுடைய தொழிலைச் செய்யாமலோ அல்லது செயல் பாட்டில் இல்லாமலோ இருந்தால், அது **'செயற்ற நிறுவனம்'** அல்லது **'செயலற்றுப் போன நிறுவனம்'** என்று அழைக்கப்படுகிறது. இதனை **'இறந்து போன நிறுவனம்'** என்றும் கூறலாம். இது குறித்து முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத் தின் பிரிவு 560–இல் இதே தலைப்பின் கீழ் விரிவாக வகை செய்யப்பட்டிருந்தன. தற்போது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் **'செயலற்ற நிறுவனம்'** என்ற மேற்படி பதம் நீக்கப்பட்டு, அதற்கு இணையான வகைமுறைகள் சற்று கூடுதல் சட்ட திட்டங்களுடன் **'நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நிறுவனங்களின் பெயர்களை நீக்குதல்'** (Removal of names of companies from the register of companies) என்ற தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளன. ஒரு நிறுவனத்தின் பெயர் நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டுவிட்டால், அது கலைந்து போன தாகிறது (Dissolve). இவை குறித்து மேற் படி புதிய நிறுவனங்கள் சட்டத்தின் **248 முதல் 252 வரையிலான பிரிவுகள்** விளக்குகின்றன. அவற்றை பின்வருமாறு காண்போம்.

நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நிறுவனங்களின் பெயர்களை நீக்குதல் (Removal of names of companies from the register of companies) - பிரிவு 248:

பதிவாளரின் அறிவிப்பு - பிரிவு 248(1):

(a) ஒரு நிறுவனம் கூட்டுருவானதிலிருந்து (பதிவானதிலிருந்து) ஓராண்டுக்குள் தனது தொழிலை தொடங்கத் தவறிவிட்டது என்றும்;

(b) ஒரு நிறுவனத்தின் அமைப்புமுறையேட்டில் கையொப்பம் செய்துள்ள ஆதரவாளர்கள் அந்நிறுவனம் கூட்டுருவான தேதியிலிருந்து நூற்று எண்பது நாட் களுக்குள் செலுத்துவதாக பொறுப்பேற்றுக் கொண்ட சந்தா பணத்தை செலுத்தாமல் உள்ளனர் என்றும், அதற்காக பிரிவு 11(1)–இன் கீழ் செய்ய வேண்டிய விளம்புகை



ஒன்று அந்நிறுவனம் கூட்டுருவானதிலிருந்து ஓராண்டிற்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும்; அல்லது

(c) ஒரு நிறுவனம், நடப்பு ஆண்டுக்கு உடனடி முந்தைய இரு நிதியாண்டுகளாக தனது தொழிலை அல்லது செயல்பாட்டை செய்யவில்லை என்றும், அதற்காக அக்காலகட்டத்திற்குள் பிரிவு 455–இன் கீழ் 'செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம்' (Dormant Company) என்ற தகுநிலையை அடையும் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்காக விண்ணப்பம் எதையும் அளிக்கவில்லை என்றும் நம்புவதற்கு பதிவாளர் நியாயமான காரணம் கொண்டிருக்குமிடத்து, அவர் அந்நிறுவனத்தின் பெயரை நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கான தனது எண்ணத்திற்கான அறிவிப்பு ஒன்றை அந்நிறுவனத்திற்கும் அதன் இயக்குனர்கள் அனைவருக்கும் அனுப்புதல் வேண்டும். மேலும் அந்த அறிவிப்புத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மேற்படி நிறுவனமும், அதன் இயக்குனர்களும் மேற்கண்ட நீக்கம் தொடர்பான தங்கள் கூற்றுகளை, சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களுடன் அனுப்பும்படியும் பதிவாளர் தனது அறிவிப்பில் கோருதல் வேண்டும்.

நிறுவனத்தின் விண்ணப்பம் - பிரிவு 248(2):

மேற்கண்ட வகைமுறைகளுக்கு யாதொரு குந்தகமுமில்லாமல், நிறுவனமொன்று தனது பொறுப்புகளை சிறப்புத் தீர்மானம் ஒன்றின் மூலம் அல்லது செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைப் பொறுத்து அதன் எழுபத்தைந்து விழுக்காடு உறுப்பினர்கள் அளிக்கும் இசைவு ஒன்றின் வாயிலாக தீர்த்த பிறகு, அது பிரிவு 248(1))–இல் கூறப்பட்ட எல்லா அல்லது ஏதேனுமொரு அடிப்படையின் கீழ் தனது பெயரை நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்காக பதிவாளரிடம் விண்ணப்பமொன்றை அதற்கென வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் தாக்கல் செய்யலாம். பதிவாளர், அவ் விண்ணப்பத்தை பெறுவதன் பேரில், அது குறித்து பொது அறிவிப்பு ஒன்றை வெளியிடச் செய்ய வேண்டும்.

எனினும் சிறப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனமொன்றின் நேர்வில், அச்சட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட ஒழுங்குமுறை அமைப்பின் ஒப்புதல் பெறப்பட்டு, அதுவும் மேற்படி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

இந்நடைமுறைகள் பொருந்தாத நிறுவனம் - பிரிவு 248(3):

மேற்படி பிரிவு 248(2)–இல் கூறப்பட்ட நடைமுறைகள் பிரிவு 8–இன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவமொன்றுக்குப் பொருந்தாது. பிரிவு 8–ஆனது '**இலாப நோக்கமற்ற தரும நிறுவனங்களின் உருவாக்கம்**' (Formation of companies with charitable objects etc.) பற்றிக் கூறுகிறது. அதாவது தரும காரியங்களுக்கான நிறுவனங்களுக்கு மேற்படி நடைமுறைகள் பொருந்தாது.

அறிவிப்பு விளம்பரப்படுத்தப்பட வேண்டும் - பிரிவு 248(4):

மேற்படி பிரிவு 248(1) மற்றும் 248(2)–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு ஒன்று வகுத்துரைக்கப்பட்ட முறையில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும். மேலும் பொது மக்களின் தகவலுக்காக அரசிதழிலும் வெளியிடப்பட வேண்டும்.

நிறுவனம் கலைந்து போனதாகிறது - பிரிவு 248(5):

அறிவிப்பு அனுப்பப் பெற்ற நிறுவனத்தால் முரணாக ஏதும் காட்டப்பட வில்லையெனில், அதில் குறிப்பிடப்பட்ட காலக்கெடு முடிவுற்றவுடன், அந்நிறுவனத் தின் பெயரை நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து அடித்துவிட பதிவாளர் ஆணையிட லாம். இது குறித்த அறிவிப்பை அரசிதழில் பிரசுரித்தல் வேண்டும். அவ்வாறு அரசித ழில் பிரசுரிக்கப்பட்டவுன், அந்நிறுவனம் கலைந்துபோன ஒன்றாகிறது (stands dissolved).

நிறுவனம் தனது பொறுப்புகளை விடுவிக்க வேண்டும் - பிரிவு 248(6):

மேற்படி பிரிவு 248(6)–இன் கீழ் ஆணை ஒன்றை பதிவாளர் பிறப்பிக்கும் முன்னர், ஒரு நியாயமான காலத்திற்குள் அந்நிறுவனத்திற்குச் சேர வேண்டிய பாக் கித் தொகைகள் அனைத்தையும் வசூலிப்பதற்கு மற்றும் அந்நிறுவனத்தின் பொறுப்பு கள் மற்றும் கடப்பாடுகள் அந்நிறுவனத்தால் செலுத்தப்பட அல்லது விடுவிக்கப்படு வதற்குண்டான வகைமுறைகள் போதுமான அளவில் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து மனநிறைவடைய வேண்டும். தேவைப்பட்டால், இது குறித்து பொறுப்பேற்கும் கடிதம் ஒன்றை அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர், இயக்குனர் அல்லது நிறுவன மேலாண்மையின் பொறுப்பில் உள்ள வேறு நபரிடமிருந்து பதிவாளர் பெறுதல் வேண்டும்.

எனினும் அந்நிறுவனத்தின் பெயரை நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகும் கூட, அதன் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை செலுத்துவதற்காக அல்லது விடுவிப்பதற்காக அதன் சொத்துகள் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(இவ்வகைமுறையின் நோக்கம் யாதெனில், நிறுவனம் கலைந்துபோய் விட்டது என்றும், எனவே தங்கள் எவருக்கும் எந்தப் பொறுப்பும் இல்லை என்றும், அதற்கு நிறுவனத்தின் சொத்துக்களும் கட்டுப்பட்டதல்ல என்றும் அந்நிறுவனத்தின் அலுவலர்கள் யாரும் கூறி விடக்கூடாது என்பதாகும். எனவே இதற்கான பொறுப் பேற்புக் கடிதங்களைப் பெறுவதிலும், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு அந்நிறு வனத்தின் சொத்துக்களை கட்டுப்படுத்தக் கூடியதாக்குவதற்கும் பதிவாளர் மிகுந்த கவனத்துடன் செயல்படுதல் வேண்டும்.)

நிறுவன அலுவலர்களின் பொறுப்பு தொடரும் - பிரிவு 248(7):

மேற்படி பிரிவு 248(5)–இன்படி கலைந்து போன நிறுவனத்தின் இயக்குனர், மேலாளர் அல்லது மேலாண்மை அதிகாரங்கள் எதையும் செயலுறுத்தும் வேறு அலு

வலர் மற்றும் அதன் உறுப்பினர் ஒவ்வொருவருடைய பொறுப்பும் அப்படியே தொடரும். அதனை அந்நிறுவனம் கலைந்து போனதாக ஆகாமல் இருந்தால் எவ்வாறோ, அவ்வாறே வலியுறுத்திச் செயல்படுத்தலாம்.

நிறுவனத்தைக் கலைக்கவும் தீர்ப்பாயம் அதிகாரம் படைத்தது- பிரிவு 248(8):

நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து பெயர் அடிக்கப்பட்டுவிட்ட நிறுவன மொன்றைக் கலைக்க (to wind up) தீர்ப்பாயத்திற்கு உள்ள அதிகாரத்தை இப்பிரிவு 248–இல் உள்ள எதுவும் பாதிக்காது.

சில சூழல்களில் பிரிவு 248-இன் கீழ் விண்ணப்பம் செய்வதன் மீதான தடைகள் (Restrictions on making application under section 248 in certain situations) - பிரிவு 249:

ஒரு நிறுவனம் பிரிவு 248(2)–இன் கீழ் விண்ணப்பமொன்றை செய்வதற்கு முந்தைய மூன்று மாதங்களில் எந்த சமயத்திலும் பின்வரும் செயல்களைச் செய்திருந்தால், அது அவ்வாறு விண்ணப்பம் செய்தலாகாது என்று **பிரிவு 249(1)** கூறுகிறது. அவை வருமாறு:–

(a) அந்நிறுவனம் தனது பெயரை மாற்றிருந்தால் அல்லது தனது பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றியிருந்தால்;

(b) அந்நிறுவனம் தனது வணிகத்தை நிறுத்துவதற்கு உடனடி முன்ன தாக தனது சொத்தை அல்லது உரிமைகளை மதிப்பு ஒன்றிக்காக விற்றிருந்தால் அல்லது அதன் இயல்பான வணிகப் போக்கில் ஆதாயத்திற்காக விற்கும் நோக்கத் திற்காக வணிகத்தை வேறுவிதமாக செய்து கொண்டிருந்தால் அல்லது வணிகத்தை செய்து கொண்டிருந்தால் ;

(c) அந்நிறுவனம் பிரிவு 248(2)–இன் கீழ் விண்ணப்பம் ஒன்றை செய்யும் நோக்கத்திற்கு அவசியமான அல்லது உகந்த செயலில் ஈடுபடுவதைத் தவிர அல்லது அவ்வாறு விண்ணப்பம் செய்வது அல்லது நிறுவனத்தின் விவகாரங்களை முடிவுக்கு கொண்டு வருவது சரியா என்பதைத் தீர்மானிப்பதைத் தவிர அல்லது சட்டப்படியான வேண்டுறுத்தம் வேறு எதையும் நிறைவு செய்வதைத் தவிர, வேறு செயல்பாடு எதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தால்;

(d) அந்நிறுவனம் சமரசம் அல்லது ஏற்பாடு ஒன்றிற்கு அனுமதியளிக்க வேண்டிய தீர்ப்பாயத்திடம் விண்ணப்பமொன்றைச் செய்து, அவ்விடயம் இறுதியாக முடிக்கப்படாமலிருந்தால்;

(e) அந்நிறுவனம் தன்விருப்பப்படியோ அல்லது தீர்ப்பாயத்தாலோ கலைக்கப்படும் நடவடிக்கைகளில் இருந்தால்,

நிறுவனமொன்று பிரிவு 248(2)–இன் கீழான விண்ணப்பமொன்றை மேற்படி பிரிவு 249(1)–இன் வகைமுறைகளை மீறி தாக்கல் செய்தால், அதற்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதம் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படும் என்று **பிரிவு 249(2)** கூறுகிறது.

மேற்படி பிரிவு 249(1)–இல் கண்ட நிபந்தனைகள் பதிவாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டவுடன், பிரிவு 248(2)–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றை சம்பந்தப்பட்ட நிறுவனம் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் அல்லது அது பதிவாளரால் நிராகரிக்கப்படுதல் வேண்டும் என்று **பிரிவு 249(3)** கூறுகிறது.

கலைந்துபோனதாக அறிவிக்கப்பட்ட நிறுவனத்தின் விளைவு (Effect of company notified as dissolved) - பிரிவு 250:

ஒரு நிறுவனம் பிரிவு 248–இன்படி கலைந்துபோனதானால், அந்நிறுவனம் தொடர்பாக பின்வரும் விளைவுகள் ஏற்படுகின்றன. முதற்கண், அது பிரிவு 248(5)–இல் கண்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஓர் நிறுவனமாக செயல்படுவதை நிறுத்துதல் வேண்டும். இரண்டாவதாக அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கூட்டுருச் (பதிவுச்) சான்றிதழானது அத்தேதியிலிருந்து இரத்து செய்யப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

பெயரை நீக்க மோசடி விண்ணப்பம் (Fradulent application for removal of name) - பிரிவு 251:

ஒரு நிறுவனம் தனது பொறுப்புகளை ஏமாற்றும் எண்ணம் கொண்டு அல்லது அதற்கு கடனீந்தவர்களை வஞ்சிக்கும் நோக்கோடு அல்து வேறு நபர்களை மோசடி செய்யும் கருத்துடன் தனது பெயரை நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து நீக்க பிரிவு 248(2)–இன் கீழ் விண்ணப்பம் செய்துள்ளதாக கண்டறியப்படுமானால், இங்கு அந்நிறுவனம் கலைந்துபோனதாக அறிவிக்கை செய்யப்பட்டிருந்தாலும் கூட, அதன் மேலாண்மைக்கு பொறுப்பானவர்கள் அனைவரும் அத்தகு அறிவிக்கையின் விளைவாக பாதிப்படைந்த நபர்களுக்கு கூட்டாகவோ, தனித்தனியாகவோ பொறுப்பாவார்கள்; மேலும் பிரிவு 447–இன்படி மோசடிக் குற்றத்திற்காக தண்டிக்கப்படுவார்கள் என்று பிரிவு 251 கூறுகிறது.

தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு (Appeal to Tribunal) - பிரிவு 252:

ஒரு நிறுவனம் பிரிவு 248–இன் கீழ் கலைந்து போனதாக அறிவிக்கை செய்து பதிவாளர் பிறப்பித்த ஆணையால் பாதிக்கப்பட்ட நபர் எவரும், அந்த ஆணைத் தேதியிலிருந்த மூன்று ஆண்டுகளுக்குள் தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு செய்யலாம்.

நலிவுற்ற நிறுவனங்களின் இயல்புமீட்பு, புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வு
[Restoration, Revival and Rehabilitation of Sick Companies]

4

97. Revival and Rehabilitation of Sick Companies - Write short notes. (நலிவுற்ற நிறுவனங்களின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வு - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Sick Companies - Write short notes. (நலிவுற்ற நிறுவனங்கள் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

நலிவுற்ற நிறுவனங்களின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வு

தொடர்பான வகைமுறைகளை 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 253 முதல் 269 வரையிலான பிரிவுகள் விளக்குகின்றன. ஒரு நிறுவனத்தை நலிவுற்ற நிறுவனமாக விளம்புகை செய்வதற்குண்டான சூழல்கள் யாவை என்பது குறித்தும், அதே நேரத்தில் அத்தகு நிறுவனத்தை புதுப்பித்து மறுவாழ்வு அளிக்கும் நடைமுறை என்ன என்பது குறித்தும் இப்பிரிவுகள் தெளிவுபடுத்துகின்றன.

மேற்படி வகைமுறைகள் யாவும் முக்கியமாக பிணையம் பெற்ற கடனீந்த வர்களை (secured creditors) மையமாக வைத்தே சுழன்று வருகின்றன. பிணை யம் பெறா கடனீந்தவர்களின் (unsecured creditors) நிலையானது, நலிவுற்ற நிறுவனத்தின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்விற்கான திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப் படும் சமயத்தில் மட்டுமே உணரப்படுகிறது. பிரிவு 253–இல் வகை செய்யப்பட்டவாறு, ஒரு நிறுவனத்தை நலிவுற்ற நிறுவனமாக விளம்புகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையானது, அந்நிறுவனம் செலுத்தத் தவறிய கடன் பாக்கித் தொகையில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான மதிப்பை பிரதிபலிக்கும் பிணையம் பெற்ற கடனீந்தவர் களால் மட்டுமே செய்யப்பட முடியும். இனி விரிவாக...

நலிவுற்ற நிலையை தீர்மானித்தல் (Determination of sickness) - பிரிவு 253 :

ஒரு நிறுவனம் தனது கடன் பாக்கித் தொகையில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான மதிப்புக்கு தொடர்புடைய பிணையம் பெற்ற கடனீந்தவர்களால் விடுக்கப் படும் கோரிக்கை அறிவிப்பின் பேரில், அந்நிறுவனம் அந்த அறிவிப்பு கிடைக்கப் பெற்ற முப்பது நாட்களுக்குள் அக்கடன் தொகையை செலுத்தத் தவறினாலோ, அல்லது கடனீந்தவர்களின் நியாயமான மனநிறைவுக்கு ஏற்றவாறு பிணையம் அல்லது பாதுகாப்பு அளிக்கத் தவறினாலோ, அக்கடனீந்தவர்களில் எவரும் அந் நிறுவனம் ஓர் நலிவுற்ற நிறுவனமாக விளம்பப்பட வேண்டும் என்ற தீர்மானிப்பிற்காக தீர்ப்பாயத்திடம் விண்ணப்பமொன்றை அளிக்கலாம் என்று **பிரிவு 253(1)** கூறுகிறது.

அவ்விண்ணப்பதாரர் தனது மேற்படி விண்ணப்பத்துடன், அந்நிறுவனத்தை கலைப்பதற்கான அல்லது அதன் நிறைவேற்றுகைக்கான நடவடிக்கைகள் எதையும் அல்லது அந்நிறுவனத்தின் சொத்து அல்லது சொத்திருப்புகளை விற்பதை அல்லது அதற்காக சொத்துப் பேணுநர் நியமனம் செய்யப்படுவதை தடையாணை மூலம் நிறுத்தக் கோரி மற்றொரு விண்ணப்பத்தையும் செய்யலாம் என்று **பிரிவு 253(2)** கூறுகிறது.

மேற்படி **பிரிவு 253(2)**–இன்படி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணையானது நூற்று இருபது நாட்களுக்கு செயல்திறத்தில் இருக்கும் என்று **பிரிவு 253(3)** கூறுகிறது. மேற்படி பிரிவு 253(1) மற்றும் 253(2)–இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைகளில் ஒரு நிறுவனம் கூட விண்ணப்பமொன்றை தீர்ப் பாயத்திடம் தாக்கல் செய்யலாம் என்று **பிரிவு 253(4)** கூறுகிறது. அதாவது தன்னை நலிவுற்ற நிறுவனமான விளம்பக் கோரி சம்பந்தப்பட்ட நிறுவனமே விண்ணப்பம் தாக்கல் செய்யலாம்.



நிறுவனம் ஒன்று நலிவுற்ற நிறுவன மாகிவிட்டது என்று மைய அரசு அல்லது இந்திய சேம வங்கி அல்லது மாநில அரசு அல்லது அரசு நிதி நிறுவனம் ஒன்று அல்லது மாநில அளவிலான நிறுவனம் ஒன்று அல்லது அட்டவணை வங்கி ஒன்று நம்புவதற்கு போதிய காரணங்கள் இருப்பின், அது அந்நிறுவனம் குறித்த நடவடிக்கைகளுக்காக தீர்ப்பாயத்தி டம் சுட்டுகை (reference) ஒன்றைச் செய்யலாம் என்று **பிரிவு 253(5)** கூறுகிறது.

மேற்கண்டவாறு பிரிவு 253(1) அல்லது 253(4)–இன் கீழ் விண்ணப்பம் செய்யப் பட்டிருக்குமிடத்து, சம்பந்தப்பட்ட நிறுவனம் தனது சொத்துக்களை விற்கக் கூடாது அல்லது கடப்பாடு எதிலும் ஈடுபடுதல் ஆகாது என்று **பிரிவு 253(6)** கூறுகிறது. மேற்படி விண்ணப்பம் கிடைக்கப்பெற்று அறுபது நாட்களுக்குள் அந்நிறுவனம் நலிவுற்றதா இல்லையா என்பதை தீர்ப்பாயம் தீர்மானித் தல் வேண்டும் என்று **பிரிவு 253(7)** கூறுகிறது.

ஒரு நிறுவனம் நலிவடைந்துவிட்டது என தீர்ப்பாயம் மனநிறைவு கொள்ளு மிடத்து, அந்நிறுவனம் தனது கடன்களை அதற்கு இயன்றவரை ஒரு நியாயமான காலத்திற்குள் திரும்பிச் செலுத்த ஆணையிட வேண்டுமென **பிரிவு 253(8)** கூறுகி றது. அவ்வாறு திருப்பிச் செலுத்துவதற்கு பொருத்தமெனக் கருதும் அத்தகு காலத் தையும் அந்நிறுவனத்திற்கு தீர்ப்பாயம் வழங்கலாம் என்று **பிரிவு 253(9)** கூறுகிறது.

நிறுவனத்தின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்விற்கான விண்ணப்பம் (Application for revival and rehabilitation) - பிரிவு 254 :

பிரிவு 253–இன் கீழ் ஒரு நிறுவனம் நலிவுற்ற நிறுவனமாக தீர்ப்பாயத்தால் தீர்மானிக்கப்படுவதன் பேரில், அதன் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வு தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்படத்தக்க நடவடிக்கைகளை தீர்மானிக்கும்படி கோரி விண்ணப்பம் ஒன்றை அந்த நிறுவனத்தின் பிணையம் பெற்ற கடனீந்தவர் அல்லது அந்நிறுவனமே தீர்ப் பாயத்திடம் தாக்கல் செய்யலாம் என்று **பிரிவு 254(1)** கூறுகிறது.

அவ்விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றை இணைக்க வேண்டும் என்று **பிரிவு 254(2)** கூறுகிறது. அவை,

(a) நடப்பு நிதியாண்டுக்கு உடன் முந்தைய நிதியாண்டுக்கு தொடர்புடையதும், தணிக்கை செய்யப்பட்டதுமான நிறுவனத் தின் நிதிநிலை அறிக்கைகள்;

(b) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு கட்டணத்துடன் கூடியதும் உரிய முறையில் அதிகாரபூர்வமாக்கப்பட்டதுமான அத்தகு விவரங்கள் மற்றும் ஆவணங்கள்;

(c) நிறுவனத்தின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின் வரைவு ஒன்று;

ஒரு நிறுவனம் நலிவுற்ற நிறுவனமாக தீர்ப்பாயத்தால் தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் மேற்படி விண்ணப்பத்தை தீர்ப்பாயத்திடம் தாக்கல் செய்ய வேண்டுமென **பிரிவு 243(3)** கூறுகிறது.

இடைக்கால நிருவாகியின் நியமனம் (Appointment of Interim Administrator) - பிரிவு 256:

பிரிவு 254–இன் கீழ் விண்ணப்பமொன்றை பெறுவதன் பேரில், அவ்வாறு பெற்றதிலிருந்து ஏழு நாட்களுக்குள்

(a) விசாரணைக்கான தேதி ஒன்றை தீர்ப்பாயம் நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்வது, விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து தொன்னூறு நாட்களுக்குள் இருக்க வேண்டும்;

(b) இடைக்கால நிருவாகி ஒருவரை தீர்ப்பாயம் நியமித்தல் வேண்டும். அவர் கடனீந்தவர்களின் கூட்டம் ஒன்றை கூட்டி நடத்த வேண்டும். அதில் பிரிவு 254–இன் கீழான விண்ணப்பத்துடன் இணைத்து வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் விவரங்கள் மற்றும் நிறுவனத்தின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின் வரைவு ஆகியவற்றின் அடிப்படையில், அந்நலிவுற்ற நிறுவனத்தை புதுப்பித்து மறுவாழ்வளிக்க முடியுமா என்பது குறித்தும், தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு வேறு விடயங்கள் குறித்தும் பரிசீலனை செய்ய வேண்டும். இதையடுத்து அவர் தீர்ப்பாயத்தின் ஆணையிலிருந்து அறுபது நாட்களுக்குள் தனது அறிக்கையை தீர்ப்பாயத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(c) நலிவுறுற்ற நிறுவனத்தின் சொத்திருப்புகளை பாதுகாக்கவும், அந் நிறுவனத்தின் முறையான மேலாண்மைக்காகவும் தீர்ப்பாயம் அவசியமெனக் கருதும் அத்தகு பிற ஏவுரைகளை தீர்ப்பாயம் அந்த இடைக்கால நிருவாகிக்கு பிறப்பிக்கலாம் என்று **பிரிவு 256(1)** கூறுகிறது.

நிறுவன மேலாண்மையின் பொறுப்பு ஏற்றுக் கொள்ளும்படி இடைக்கால நிருவாகிக்கு ஏவுரைக்கப்படுமிடத்து, அதன் இயக்குனர்கள் மற்றும் மேலாண்மையானது, அதன் விவகாரங்களை மேலாண்மை செய்வதற்குரிய அனைத்து உதவிகளையும் ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று **பிரிவு 256(2)** கூறுகிறது.

தீர்ப்பாயத்தின் ஆணை (Order of Tribunal) - பிரிவு 258:

தீர்ப்பாயத்தால் நிர்ணயிக்கப்பட்ட விசாரணைத் தேதியன்று இடைக்கால நிருவாகி அளித்த அறிக்கையை பரிசீலனை செய்வதன் பேரில், நலிவுற்ற நிறுவனத்

திற்கெதிராக அதன் கடன் பாக்கி மதிப்பில் நான்கில் மூன்று பங்கினர் வந்திருந்து வாக்களிக்கும் கடனீந்தவர்கள்

(a) அந்நிறுவனத்தை புதுப்பித்து மறுவாழ்வளிக்க முடியாதென தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர் என்று தீர்ப்பாயம் மன நிறைவடைந்தால், அது அத்தகு கருத்துரையை பதிவு செய்து கொண்டு, அந்நிறுவனத்தின் கலைப்பிற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டும் என்று ஆணையிடலாம்; அல்லது

(b) சில நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்வதன் மூலம், அந்நலிவுற்ற நிறுவனம் புதுப்பிக்கப்படலாம் மற்றும் மறுவாழ்வளிக்கப்படலாம் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர் என்று தீர்ப்பாயம் மனநிறைவடைந்தால், அந்நிறுவனத்திற்கு ஒரு நிருவாகியை நியமனம் செய்து தீர்ப்பாயம் ஆணையிடலாம். மேலும் அந்நலிவுற்ற நிறுவனத்தின் உயிர்ப்பு மற்றும் மறுவாழ்விற்கான திட்டம் ஒன்றை தயாரிக்கும்படியும் அவரை தீர்ப்பாயம் ஏவுரைக்கலாம்.

இங்கு தீர்ப்பாயமானது, தான் பொருத்தமெனக் கருதினால், இடைக்கால நிருவாகி ஒருவரையே நிறுவனத்தின் நிருவாகியாக நியமனம் செய்யலாம்.

புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்விற்கான திட்டம் (Scheme of revival and rehabilitation) - பிரிவு 261:

முன்னதாக பிரிவு 254–இன்படி பிணையம் பெற்ற கடனீந்தவர்கள் தாக்கல் செய்த விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்த வரைவுத் திட்டத்தை மேற்கண்ட வாறு நியமனம் செய்யப்பட்ட நிறுவன நிருவாகி பரிசீலனை செய்த பிறகு, அவர் அந்நலிவுற்ற நிறுவனத்தின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்விற்கென திட்டம் ஒன்றை தயாரித்தல் வேண்டும். அதில் அந்நிறுவனத்தின் நிதி மறுகட்டமைப்பு, அதன் மேலாண்மையில் செய்யும் மாற்றத்தின் காரணமாக அதை முறையாக மேலாண்மை செய்தல், வேறு ஒரு நிறுவனத்துடன் அந்நலிவுற்ற நிறுவனத்தை ஒருங்கிணைத்தல், அதன் தொழிலை நல்ல நிலையில் உள்ள நிறுவனம் எடுத்துக் கொள்ளும்படி செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு வகை செய்யப்படலாம்.

திட்டத்திற்கு தீர்ப்பாயம் அளிக்கும் அனுமதி (Sanction of scheme by the Tribunal) - பிரிவு 262:

நிருவாகியால் தயாரிக்கப்பட்ட மேற்படி திட்டத்திற்கு கடனீந்தவர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். மேலும் அதை தீர்ப்பாயம் ஆய்வு செய்ய வேண்டும். இதையடுத்து அத்திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் அனைவரிடமிருந்தும் செல்லத்தக்க முறையில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பது குறித்து தீர்ப்பாயம் மனநிறைவடையும் பட்சத்தில், அது அத்திட்டத்திற்கு அனுமதியளித்து ஆணையிடலாம். இந்த ஆணையின் நகல் அந்நலிவுற்ற நிறுவனத்தால் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று **பிரிவு 262** கூறுகிறது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட திட்டம் செயல் விளைவுக்கு வரும் தேதியிலிருந்து அது அந்நலிவுற்ற நிறுவனம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடியதாகும் என்று **பிரிவு 263** கூறுகிறது.

நிறுவனக் கலைப்பு
[Winding up of a Company]

98. What is 'Winding up'? Enumerate the different modes of winding up. ("நிறுவனங்கள் கலைக்கப்படுதல்" என்றால் என்ன? நிறுவனங்கள் கலைக்கப்படுதலுக்கான பல்வேறு முறைகளை வரிசைப்படுத்தி விவரிக்கவும்.)

(அல்லது)

5 What are the different modes of Winding up of a Company? State in particular the circumstances in which the tribunal will order the winding up of a company on the ground that it is "Just and Equitable" to do so. (நிறுவனங்கள் கலைக்கப்படுவதற்குண்டான பல்வேறு முறை என்னென்ன? "நீதியும் நேர்மையு

மான காரணத்தின் அடிப்படையில் நிறுவனம் கலைக்கப்பட வேண்டும்" என தீர்ப்பாயம் உத்திரவிடும் சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

"Voluntary winding up of a company is of two kinds"- Explain. ("ஒரு நிறுவனம் தானாக கலைக்கப்படுதல் இரு வகைப்பட்டது" - விளக்குக.)

(அல்லது)

State the methods to wind up a company voluntarily. (ஒரு நிறுவனத்தை தன்னிச்சையாக கலைத்தலுக்கான முறைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

What are the circumstances in which a company may be wound up voluntarily. (ஒரு நிறுமம் தானாகவே கலைக்கப்படுவதற்கான சூழ் நிலைகள் யாவை?)

(அல்லது)

Explain the different modes of winding up of a Company. (ஒரு பங்கமைப்பு கலைப்பது குறித்த பல்வேறு முறைகளை விளக்கு.)

(அல்லது)

Who are the persons entitled to apply for the winding up of a Company ? Explain their respective rights. (ஒரு நிறுவனத்தைக் கலைப்பதற்கு விண்ணப்பம் செய்ய எந்தெந்த நபர்கள் உரிமையுடையவர்கள் ? அவர்கள் முறையேயான உரிமைகளை விளக்குக.)

(அல்லது)

Discuss briefly the various modes of Winding up of a Company. What are the effects and consequences of an order of winding up of a company by the Tribunal? (எந்தெந்த முறைகளின் அடிப்படையில் நிறுவனம் கலைக்கப்படலாம் என்பதைப் பற்றி சுருக்கமாக விவாதி. தீர்ப்பாய நிறுவன கலைப்பு ஆணையின் ஒன்றின் வாயிலாக ஏற்படும் விளைவுகள் மற்றும் அதனைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் யாவை ?)

(அல்லது)

What are the circumstances in which a company may be wound up voluntarily? What is the distinctions between compulsory winding up and voluntary winding up? (ஒரு நிறுவனம் தானாக கலைக்

கப்படுதலுக்குண்டான சூழ்நிலைகள் யாவை? கட்டாயக் கலைப்பிற்கும், தானாக கலைக்கப்படுவதற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?)

(அல்லது)

State the circumstances under which a company may compulsorily be wound up by a Tribunal. Who are entitled to petition for the winding up and under what circumstances? (ஒரு நிறுவனம் தீர்ப்பாயத்தின் கீழ் கலைக்கப்படுவதற்குண்டான சூழ்நிலைகளைக் குறிப்பிடுக. எச்சூழ்நிலைகளின் கீழ் நிறுவனம் கலைக்கப்பட எந்நபர்கள் விண்ணப்பிக்கலாம்?)

(அல்லது)

Enumerate the various circumstances under which the Tribunal can pass for compulsory winding up. (தீர்ப்பாயம் எந்தெந்த சூழ்நிலைகளில் ஒரு நிறுவனத்தின் கட்டாய கலைப்புக்கு உத்தரவிடலாம் என்தை விவரி.)

(அல்லது)

State the provisions of company law regarding winding up of a Company by Tribunal. (தீர்ப்பாயத்தின் கீழ் நிறுவனங்களை கலைப்பதற்கான நிறுவனச் சட்டத்தின் வகைமுறைகளைக் கூறுக.)

(அல்லது)

Explain the circumstances in which the Tribunal can order Compulsory winding up of a company and examine the role of a Committee on Inspection in Compulsory winding up. (ஒரு நிறுவனத்தின் கட்டாயக் கலைப்பிற்கு தீர்ப்பாயம் உத்தரவிடக் கூடிய சூழ்நிலைகளை விளக்கி, கட்டாய கலைப்பில் ஆய்வாளர்கள் குழுவின் பங்கை ஆராயவும்.)

(அல்லது)

Contributories - Write short notes. (பங்குக் கடப்பாட்டாளர்கள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Advisory Committee - Write short notes. (ஆலோசனைக் குழு - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Voluntary winding up - Write short notes. (தன் விருப்பத்தினால் கலைத்தல் - குறுகிய விடை எழுதுக.)

உங்கள் முக்கிய கவனத்திற்கு...

'நிறுவனக் கலைப்பு' என்பது நிறுவனச் சட்டத்தில் ஒரு முக்கியமான பகுதியாகும். பழைய 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 425–ன் கீழ் நிறுவனக் கலைப்பை பின்வரும் மூன்று முறைகளின் கீழ் செய்யலாம். அவை I. நீதிமன்ற உத்தரவின் கீழ் கலைப்பு (அல்லது கட்டாயக் கலைப்பு); II. தன் விருப்பக் கலைப்பு; III. நீதிமன்ற மேற்பார்வையின் கீழ் கலைப்பு.

1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தில் 2002–இல் கொண்டு வரப் பட்ட இரண்டாவது திருத்தச் சட்டத்தினால், **'தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப் பாயம்' (National Company Law Tribunal)** நிறுவப்பட்டது. இதை நிறுவுவதற்கு அத்திருத்தச் சட்டத்தின் 10FB முதல் 10GF வரையிலான சட்டப் பிரிவுகள் வகை செய்தன.

மேற்படி 2002–ஆம் ஆண்டின் இரண்டாவது சட்டத் திருத்தம் காரண மாக, ஒரு நிறுவனத்தைக் கலைப்பதற்கு நீதிமன்றத்திற்கு என்னென்ன அதிகாரங்கள் இருந்தனவோ அவையனைத்தும், தீர்ப்பாயத்திடம் கொடுக்கப் பட்டுவிட்டது. எனவே ஒரு நிறுவனத்தைக் கலைக்கும் அதிகாரம் நீதிமன்றத் திற்கு இல்லை; மேற்படி தீர்ப்பாயத்திற்குத்தான் உண்டு. அதுபோல் 'நீதிமன் றத்தின் மேற்பார்வையின் கீழ் கலைப்பு' எனும் பகுதியே நிறுவனச் சட்டத் திலிருந்து மேற்படி 2002–ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிட் டது. எனவே நிறுவனங்களை இரண்டு முறைகளில்தான் கலைக்க முடியும்.

இந்நிலையில் 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டமே நீக்கறவு செய் யப்பட்டு, **2013-ஆம் ஆண்டில் புதிய நிறுவனங்கள் சட்டம் இயற்றப்பட்டு விட் டது.** இதனால் 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டங்களும் தங்கள் செயல்திறனை இழந்து மறைந்து விட்டன.

எனினும் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டமும் ஒரு நிறுவனத்தை மேற்சொன்ன இரண்டு முறைகளில் மட்டுமே கலைக்க முடியும் என்பதை எடுத் துரைக்கிறது; நீதிமன்றக் கலைப்பு கிடையாது. அதுபோல் இரண்டாவது முறை யான தன்விருப்பக் கலைப்பில் முந்தைய சட்டத்தின்படி இருந்த இரண்டு வகைகளான (1) உறுப்பினர்கள் தன் விருப்பக் கலைப்பு மற்றும் (2) கடனீந் தவர்கள் தன்விருப்பக் கலைப்பு என்ற இரண்டையும் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே 'ஒரு நிறுவனம் நீதிமன்றத்தின் கீழ் கலைக்கப்படுவதற்குண்டான சூழ்நிலைகளைக் குறிப் பிடுக' என்று வினவப்பட்டால், முதற்கண் அவ்வினாவே தவறானதாகும். எனினும் ஒரு நிறுவனத்தை தீர்ப்பாயம் கலைப்பதற்கான சூழ்நிலைகளை தேர்வில் அதற்குரிய விடையாக எழுதலாம். - **ஆசிரியர்.**

நிறுவனக் கலைப்பு (Winding up) :

நீடித்த நிலைத்த வாழ்வைப் பெற்றுள்ளதாகக் கூறப்படும் நிறுவனங்களின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான், நிறுவனக் கலைப்பாகும். அதாவது நிறுவனச் சட்டப்படி, நிறுவனத்தின் நடவடிக்கைகளை முற்றுப் பெறச் செய்வதை **'நிறுவனக் கலைப்பு'** என்றழைக்கலாம்.

பேராசிரியர் கோவர் கூற்றுப்படி, "நிறுவனக் கலைப்பு என்பது, நிறுவனத்தின் வாழ்வை முடிக்கச் செய்து, அதன் சொத்தை அதற்கு கடன் அளித்தவர்கள் மற்றும் அதன் உறுப்பினர்களின் நலனுக்காக நிருவாகம் செய்விக்கச் செய்யும் ஒரு செயல்முறையாகும்; இதன் பொருட்டு நியமனம் செய்யப்படும் கலைப்பதிகாரி (Liquidator) என்றழைக்கப்படும் நிருவாகி ஒருவர், நிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டை தன் கையில் எடுத்துக் கொண்டு, அதன் சொத்துடைமைகளை திரட்டி, அதன் கடன்களை செலுத்தி, இறுதியாக உபரித் தொகைகளை உறுப்பினர்களிடையே அவர்களது உரிமைகளுக்கேற்ற வகையில் பிரித்தளிக்கிறார்."[1]

ஒரு நிறுவனம் கலைக்கப்பட்ட பிறகு அதனுடைய சொத்துக்களும், பொறுப்புகளும் கணக்கிடப்பட்டு முதலில் அதற்கு கடனீந்தவர்களுக்கு தொகை திருப்பித் தரப்படுகின்றன. இதன் பின்னிட்டு சொத்துக்கள் ஏதும் எஞ்சியிருப்பின் அவை உறுப்பினர்களுக்குப் பிரித்துத் தரப்படுகின்றன.

2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 270-வது பிரிவிலிருந்து 365-வது பிரிவு வரையிலான மொத்தம் 95 பிரிவுகள் நிறுவனக் கலைப்பு பற்றி கூறு கின்றன. ஒரு நிறுவனத்தைக் கலைப்பதற்கு மேற்கண்ட பிரிவுகள் கூறும் சட்ட சடங்குகளைக் காணும் பொழுது, "**ஒரு திருமணத்தைக் கலைப்பது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினமானது ஒரு நிறுவனத்தைக் கலைப்பதாகும்**" என்று கூறலாம்.

நிறுவனக் கலைப்பின் முறைகள் (Modes of Winding up):

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **270[1]-வது பிரிவின்படி** ஒரு நிறுவனத்தை பின்வரும் இரண்டு வழிகளில் கலைக்கலாம்.

I. தீர்ப்பாயத்தால் கலைக்கப்படுதல் [by the Tribunal];

II. தன் விருப்பக் கலைப்பு (Voluntary winding up).

இவ்விரு பெரும் முறைகளை பின்வருமாறு விரிவாகக் காண்போமா?

---

1. "Winding up of a company is the process whereby its life is ended and its property administered for the benefit of its creditors and members. An administrator, called a liquidator, is appointed and he takes control of the company, collects its assets, pays its debts and finally distributes any surplus among the members in accordence with their rights" - **Prof. Gower, The Principles of Modern Company Law, 647 (3rd edn. 1969)**

I. தீர்ப்பாயத்தால் கலைக்கப்படுதல் (அல்லது) கட்டாயக் கலைப்பு [Winding up by the Tribunal (or) Compulsory winding up]

நிறுவனச் சட்டப்படி தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பம் செய்து, அத்தீர்ப்பாய ஆணையின் பேரில் ஒரு நிறுவனம் கலைக்கப்படுமானால், அது **'தீர்ப்பாயத்தால் கலைக்கப்படுதல்'** எனப்படும். இதனை **'கட்டாயக் கலைப்பு'** (Compulsory winding up) என்றும் அழைக்கலாம்.

தீர்ப்பாயத்தால் கலைக்கப்படும் சூழ்நிலைகள் - பிரிவு 271:

ஒரு நிறுவனம் தீர்ப்பாயத்தால் கலைக்கப்படுவதற்குரிய சூழ்நிலைகளை **பிரிவு 271** கூறுகிறது. அச்சூழ்நிலைகளில் பிரிவு 272–இன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனு ஒன்றின் பேரில் ஒரு நிறுவனம் தீர்ப்பாயத்தால் கலைக்கப்படலாம். அவை வருமாறு:

1. கடன்களை செலுத்த முடியாமை (Inability to pay debts) [பிரிவு 271(1)(a)]:

ஒரு நிறுவனம் தான் செலுத்த வேண்டிய கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருக்கும் பொழுது, அதனைக் கலைக்கும்படி தீர்ப்பாயம் ஆணையிடலாம்.

Krishnamsetty Basav Rao v. Kubashi Machine Tools (P) Ltd.,[1] எனும் வழக்கில் ஒரு நிறுவனத்தைக் கலைப்பதற்கு ஆணையிடுவது என்பது தன்விருப்புரிமை அதிகாரத்திற்குட்பட்டது மட்டுமல்ல; அதனை அந்நிறுவனத்தின் நலனில் மட்டும் அக்கறை கொள்ளாமல் பொது மக்களின் நலனிலும் அக்கறை கொண்டு ஓர் இறுதி வழிமுறையாக நாட வேண்டும் என்று ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் (தற்போது தீர்ப்பாயம்) கருத்துரைத்தது. இவ்வழக்கில் அத்தகு தன் விருப்புரிமை அதிகாரத்தை மனுதாரர்களுக்கு ஆதரவாகச் செயற்படுத்த நீதிமன்றம் (தற்போது தீர்ப்பாயம்) மறுத்துவிட்டது. காரணம் அவர்கள் நிறுவன தொழிலகத்தின் நலனில் நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டாமல், தங்கள் சுயநல உள்நோக்கத் துடன் அத்தொழிலகத்தை கலைக்க மனுச் செய்துள்ளனர்.

Asea Brown Boveri Ltd. v. Boving Fouress Ltd.,[2] என்ற மற்றொரு வழக்கில் நிறுவனக் கலைப்பு என்பதை அதை நெருக்கடிக்குள்ளாக்கும் ஓர் கருவியாக பயன்படுத்துதல் ஆகாது என்றும், சம்பந்தப்பட்ட நிறுவனம் தனது இயல்பான வணிக நடவடிக்கையின் போது வழங்கிய காசோலையின் மதிப்பு மறுக்கப்

1. IV (2005) BC 324 (AP)
2. IV (2004) BC 405 (Kant) (DB)

பட்டதை வைத்துக் கொண்டு, அந்நிறுவனத்தால் அதன் கடன்களை திருப்பிச் செலுத்த முடியவில்லை, எனவே அதைக் கலைக்க வேண்டும் மனுச் செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கர்நாடகா உயர் நீதிமன்றம் (தற்போது தீர்ப்பாயம்) கூறி, முடிவில் அம்மனுவை தள்ளுபடி செய்து ஆணையிட்டது.

2. சிறப்புத் தீர்மானம் (Special Resolution) [பிரிவு 271(1)(b)]:

ஒரு நிறுவனம் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி, அது தீர்ப்பாயத்தால் கலைக்கப்பட வேண்டும் என முடிவு செய்யலாம். ஆனால் இதுவே முடிவானதல்ல. ஏனெனில் இது தீர்ப்பாயத்தின் தன்விருப்புரிமை அதிகாரத்திற்கு (discretionary power) உட்பட்டது. நிறுவனத்தின் முடிவு சரியானது எனத் தீர்ப்பாயம் தீர்மானித்தால், அதை அனுமதிக்கலாம். இவ்வாறில்லாமல் நிறுவனக் கலைப்பு பொது நலனுக்கும், நிறுவனத்தின் நலன்களுக்கும் எதிரானது எனத் தீர்ப்பாயம் கருதினால் அம்முடிவை தீர்ப்பாயம் செயல்படுத்தாது.

3. நாட்டு நலன்கள், பாதுகாப்பு ஆகியவற்றிற்கு எதிராகக் செயற்படல் (Acting against the interests of Nation and Security of the State) [பிரிவு 271(1)(c)] :

ஒரு நிறுவனம் இந்திய நாட்டின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டு நலன்கள், நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாடுகளுடன் கொண்டுள்ள நட்புறவு, பொது ஒழுங்கு, ஒழுக்கம் அல்லது அறநெறி ஆகியவற்றிற்கு எதிராக நடந்து கொள்வதாக தீர்ப்பாயம் முடிவு செய்தால், அந்நிறுவனத்தைக் கலைக்கும்படி தீர்ப்பாயம் ஆணையிடலாம்.

4. நலிவுற்ற நிறுவனங்களை கலைத்தல் (Winding up of Sick Companies) [பிரிவு 271(1)(d)] :

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் அத்தியாயம் XIX–இன் கீழ் ஒரு நிறுவனத்தைக் கலைக்கும்படி தீர்ப்பாயம் ஆணையிட்டிருந்தால், அதுவும் இப் பிரிவின் கீழ் ஒரு நிறுவனம் தீர்ப்பாயத்தால் கலைக்கப்பட்டதாகும். அதாவது மேற்படி அத்தியாயம் நலிவுற்ற நிறுவனங்களின் புதுப்பிப்பு மற்றும் மறுவாழ்வு (Revival and Rehabilitation of Sick Companies) பற்றிய வகைமுறைகளை விளக்குகின்றன. அவற்றின்படி நலிவுறுற்ற நிறுவனமாக விளம்புகை செய்யப்பட்ட நிறுவனமொன்றை புதுப்பிக்க அல்லது மறுவாழ்வளிக்க முடியாதெனும் போது, அதைக் கலைக்க தீர்ப்பாயம் ஆணையிடுகிறது.

5. பதிவாளரின் விண்ணப்பத்தின் பேரில் நிறுவனத்தைக் கலைத்தல் (Winding up on application made by Registrar) [பிரிவு 271(1)(e)] :

நிறுவனங்களின் பதிவாளரால் அல்லது இந்தச் சட்டத்தின் கீழான அறிவிக்கை மூலம் மைய அரசால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு நபர் எவராலும் விண்ணப்பமொன்று செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட நிறுவனம் மோசடியான முறையில் தனது விவகாரங்களை நடத்துகிறது அல்லது அது மோசடியான அல்லது சட்ட

விரோதமான நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது அல்லது அதன் உருவாக் கத்திற்கு அல்லது அதன் விவகாரங்களின் மேலாண்மைக்குச் சம்பந்தப்பட்ட நபர்கள் அது தொடர்பாக மோசடி, சட்டமுறைப் பிழை அல்லது தீயநடத்தைக் குற்றவாளிகளாக ஆனவர்கள் என்றும், எனவே அந்நிறுவனத்தைக் கலைப்பதே முறையானது என்றும் தீர்ப்பாயம் அபிப்பிராயப்பட்டால், அது அந்நிறுவனத்தைக் கலைக்க ஆணையிடலாம்.

6. நிதிநிலை அறிக்கை முதலியவற்றை பதிவாளரிடம் தாக்கல் செய்யத் தவறுகை (Default of company in filing with Registrar its financial statement etc.) [பிரிவு 271(1)(f)]:

ஒரு நிறுவனம் முந்தைய அய்ந்து தொடர்ச்சியான நிதியாண்டுகளுக்கு தனது நிதிநிலை அறிக்கைகள் அல்லது ஆண்டு வருமான விவர அறிக்கைகளை நிறுவனங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்யத் தவறினால் அந்நிறுவனத்தைக் கலைக்கும்படி தீர்ப்பாயம் உத்தரவிடலாம்.

7. நீதியும் நேர்மையுமான காரண அடிப்படையில் (Just and Equitable ground) [பிரிவு 271(1)(g)]:

நிறுவனத்தைக் கலைப்பதே நீதியும் நேர்மையுமான செயல் என தீர்ப்பாயம் அபிப்பிராயப்பட்டால், அதைக் கலைக்க ஆணையிடலாம்.

நீதியும் நேர்மையுமான காரணம் என்பதன் அடிப்படையில் ஒரு நிறுவனத் தைக் கலைப்பதற்கு தீர்ப்பாயம் மிகவும் பரந்த தன்விருப்புரிமை அதிகாரத்தைக் கொண்டு விளங்குகிறது. நீதியும் நேர்மையுமான காரணங்கள் என்னென்ன என்ற சரியாக குறிப்பிட்டுக் கூற முடியாவிட்டாலும், நீதிமன்றங்கள் எவையெல்லாம் அப்படிப் பட்ட காரணங்கள் என்று முடிவு செய்த காரணங்களைக் கொண்டு, நீதியும் நேர்மையு மான காரணங்கள் என்னென்ன என்பதை ஓரளவு தெரிந்து கொள்ளலாம். அஃதா வது, இன்றைய நிறுவனச் சட்டத்தின் கீழ் மேற்படி தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், அமைக்கப்படுவதற்கு முன்பு நீதிமன்றங்கள் பின்வரும் காரணங்களுக்காக நிறுவனத் தைக் கலைப்பது, நீதியும் நேர்மையுமானது என்று முடிவு செய்துள்ளன. அவை.

(i) முட்டுக்கட்டை நிலை (Dead lock): ஒரு நிறுவனத்தின் சில செயல் களைச் செய்ய, அந்நிறுவனத்தின் மேலாண்மையினர் ஏகமனதாக முடிவெடுக்க வேண்டும். அவர்கள் தங்களிடையே ஒத்துப்போகமல் இருந்தால், அங்கு முடிவெடுக்க முடியாது. இந்நிலையில் ஒரு முட்டுக்கட்டையான நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட முட்டுக்கட்டையான நிலையில், அந்நிறுவனத்தைக் கலைப்பதே நீதியும் நேர்மையான தாகும் என்று தீர்ப்பாயம் தீர்மானித்து, அந்நிறுவனத்தைக் கலைக்க உத்தரவிடலாம்.

In Re Yenidje Tobacco Co. Ltd.[1] – இவ்வழக்கில் W என்பவரும் R என்பவரும் தனித்தனியே புகைப் பூஞ்சுருளை (cigarette) உற்பத்தி செய்யும் வணி கம் செய்து வந்தனர். அவர்கள் இருவரும் தங்கள் வணிகத்தை ஒன்றிணைத்து ஒரு தனியார் நிறுவனம் தொடங்க உடன்பட்டனர். அந்நிறுவனத்தில் அவர்கள் இருவர்

1. (1916) 2 Ch 426 : (1916-17) All ER Rep 1050

மட்டுமே இயக்குனர்கள் மற்றும் பங்குதாரர்கள் ஆவர். மேலும் அவர்கள் இருவருக்கும் சம வாக்குரிமை இருந்தது. எனவே அவர்கள் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏதும் எழுந்தால் அதனை இசைவுத் தீர்ப்பு முறை (arbitration) மூலம் தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும் என்று அந்நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் பின்னிட்டு எழுந்த ஒரு பிரச்சனையில், இசைவுத் தீர்ப்பாளர் செய்த முடிவை அவர்களில் ஒருவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பகைமை பாராட்டி, நேரடியாக பேசிக் கொள்வதை தவிர்த்து, தங்கள் செயலாளர்கள் வாயிலாகப் பேசிக் கொண்டனர். இந்நிலை, அந்நிறுவனத்தின் முடிவுகளை எடுப்பதற்கு ஒரு முட்டுக்கட்டையான நிலையாகும் என்றும், எனவே அந்நிறுவனம் கலைக்கப்பட இது நீதியும் நேர்மையுமான காரணமாகும் என்றும் கூறி, அந்நிறுவனத்தைக் கலைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ii) அடித்தளம் இழப்பு (Loss of Substratum): ஒரு நிறுவனம் தனது முக்கிய நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் போனால் அல்லது அந்நோக்கத்திற்கு எது அடித்தளமாக விளங்கியதோ அதையே அந்நிறுவனம் இழந்துவிட்டால், அந் நிறுவனத்தை கலைப்பதே நீதியும் நேர்மையுமாகும்.

In Re German Date Coffee Co.[1] – இவ்வழக்கில் செர்மானிய அரசாங்கம் அளிக்கவிருக்கும் காப்புரிமை பட்டயத்தின் (Patent) கீழ் பேரீச்சத்தி லிருந்து, காஃபி தயாரிப்பதற்காக நிறுவப்பட்ட நிறுவனம், மேற்படி காப்புரிமைப் பட்டயத்தைப் பெற முடியவில்லை. எனவே இங்கு அந்நிறுவனம் தனது முக்கிய நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இதனால் அந்நிறுவனத்தைக் கலைப்பதே நீதியும் நேர்மையுமானதாகும் என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(iii) நட்டங்கள் அடைவது (Incurring Losses) : ஒரு நிறுவனம், தனது தொழிலை, வணிகத்தை இலாபத்திற்கு நடத்த முடியாமல், நட்டத்திற்கு நடத்தி வந்தால், அதைக் கலைப்பதே நீதியும் நேர்மையுமானதாகும். இலாபமீட்ட முடியாத தொழிலை நடத்தினால் என்ன? நடத்தாமல் மூடினால் என்ன? இரண்டும் ஒன்று தான். [இது தற்போது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் நலிவுற்ற நிறுவனங்களை கலைத்தல் என்ற தலைப்பில் ஒரு தனி அடிப்படையாகவே பிரிவு 271 (1)(d)–இன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது].

எனினும் எதிர்காலத்தில் நட்டமேற்பட வாய்ப்புள்ளது எனும் அச்சத்தின் காரணமாக பங்குதாரர்கள் அந்நிறுவனத்தைக் கலைக்கக் கோருதல் நீதியும் நேர்மை யுமாகாது என்று **In Re Mahanmandai Shastra Prakashik Samiti Ltd.**[2] எனும் வழக்கில் கருத்துரைக்கப்பட்டது.

(iv) சிறுபான்மையினரை ஒடுக்குதல் (Oppression of Minority): ஒரு நிறுவனத்தில் பெரும்பான்மையினராக இருக்கும் பங்குதாரர்கள், சிறுபான்மை

1. (1882) 20 Ch D 169
2. (1917) 15 All LJ 193

யினராக இருக்கும் பங்குதாரர்களை அடக்கி ஒடுக்கி, அவர்களுக்கு சிக்கல்களையும் சீரழிவுகளையும் உண்டாக்கினால், அந்நிறுவனம் கலைக்கப்படுவதே நீதியும் நேர்மை யுமானதுமென என்று தீர்ப்பாயம் முடிவு செய்யலாம்.

Loch v. John Blackwood Ltd.[1] – இவ்வழக்கில் சிறுபான்மைப் பங்கு தாரர்களின் பங்குகளை குறைந்த விலையில் வாங்கிவிட வேண்டும் எனும் அடக்கு முறையான எண்ணத்தில், அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் நிறுவனக் கூட்டங்களை கூட்டவோ அல்லது பங்காதாயம் வழங்கவோ மறுத்துவிட்டார். அந் நிறுவனத்தைக் கலைக்க பிரிவி கவுன்சில் நீதிமன்றம் ஆணையிட்டது.

(v) மோசடியான மற்றும் சட்ட முரணான நோக்கம் (Fradulent and Illegal Purpose): மோசடியான மற்றும் சட்ட விரோதமான நோக்கங்களைக் கொண்ட நிறுவனங்கள் கலைக்கப்படுதலே நீதியும் நேர்மையுமாகும். இத்தகு நிறு வனங்களை உடனடியாக கலைக்க தீர்ப்பாயம் ஆணையிடலாம் [இது தற்போது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் ஒரு தனி அடிப்படையாகவே பிரிவு 271(1)(e) – இன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது].

Universal Mutual Aid and Poor Houses Association v. A.D.Thippa Naidu[2] – இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் முக்கிய நோக் கம் இலாட்டரி நடத்துவதாகும். இந்நோக்கம் சட்ட முரணானதாகும். அதே நேரத்தில் அந்நிறுவனம், பொது மக்களுக்கு உதவி செய்யும் வேறு சில நல்ல நோக்கங்களைத் தன் அமைப்பு முறையேட்டில் கொண்டிருந்தது. எனினும் மேற்கண்ட ஒரு சட்ட முரணான நோக்கத்தின் காரணமாக அந்நிறுவனம் கலைக்கப்பட வேண்டியது நீதியும் நேர்மையுமானதாக உள்ளது என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறி அந்நிறுவனத் தைக் கலைக்க ஆணையிட்டது.

மேற்கண்ட ஏழு சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒரு நிறுவனத்தைக் கட்டாயமாகக் கலைக்கும் முழு அதிகாரம் தீர்ப்பாயத்திடம் உள்ளது.

ஒரு நிறுவனத்தைக் கலைக்க யார் மனுச் செய்தல் வேண்டும்? (Who shall present a petition?) - பிரிவு 272:

ஒரு நிறுவனத்தைக் கலைப்பதற்கான விண்ணப்பத்தை மனு ஒன்றின் வாயி லாக (by petition) தீர்ப்பாயத்திடம் செய்தல் வேண்டும் என்றும், அம்மனு பின்வரு வோர்களில் ஒருவரால் செய்யப்படுதல் வேண்டும் என்றும் **பிரிவு 272(1)** கூறுகிறது.

1. நிறுவனத்தால் (By Company) [பிரிவு 272(1)(a)] :

ஒரு நிறுவனம் கலைக்கப்படுவதற்கு அந்நிறுவனமே மனுச் செய்யலாம். குறிப்பாக நிறுவனம் கலைக்கப்படுவதற்கு அது செய்த சிறப்புத் தீர்மானம் ஒன்றுதான் காரணமென்றால், நிறுவனம்தான் மனுச் செய்ய வேண்டும். மேலும் இவ்வாறு

1. (1924) AC 783 : (1924) ALL ER Rep 200 (PC)
2. AIR 1933 Mad. 16 : 139 IC 644

தீர்ப்பாயத்திடம் மனுச் செய்ய வேண்டுமெனில், அத்தீர்மானம் நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் செல்லத்தக்க முறையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சிறப்புத் தீர்மானமாக இருத்தல் வேண்டும்.

2. கடனீந்தவர்களால் (By Creditors) [பிரிவு 272(1)(b)] :

நிறுவனத்திற்குக் கடனீந்தவர்கள் அந்நிறுவனத்தைக் கலைக்க தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கலாம்.

கடனீந்தவர்கள் என்பதில் 1. பிணையம் பெற்ற கடனீந்தவர்கள் (Secured Creditors); 2. கடனீட்டுப் பத்திரதாரர் (Debenture Holder); 3. கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கான பொறுப்பாண்மையர்கள் (Trustees for the holders of debentures) ஆகியோர் அடங்குவர் என்று **பிரிவு 272(2)** கூறுகிறது. அதே நேரம் வருநிலை கடனீந்தவர் (Prospective Creditor), நிகழ்வுநிலை கடனீந்தவர் (Contingent Creditor) என வேறு இரு பிரிவினரும் உள்ளனர். எனவே நிகழ்வுநிலை அல்லது வருநிலை கடனீந்தவர் அல்லது கடனீந்தவர்கள் எவரையும் உள்ளடக்கிய கடனீந்தவர் அல்லது கடனீந்தவர்கள் எவரும் நிறுவனத்தைக் கலைக்க தீர்ப்பாயத்திடம் மனு செய்யலாம் என்று பிரிவு 271(1)(b) கூறுகிறது.

மேற்கண்ட கடனீந்தவர்களில் நிகழ்வு நிலை கடனீந்தவரோ, வருநிகழ்வு கடனீந்தவரோ தீர்ப்பாயத்திடம் சமர்ப்பிக்கும் நிறுவனக் கலைப்பு மனு ஏற்கப்படுவதற்கு (admission) முன்னர், அதற்கு தீர்ப்பாயத்தின் அனுமதி (leave) பெறப்படல் வேண்டும். நிறுவனத்தைக் கலைப்பதற்கு முதற்தோற்ற வழக்கு உள்ளதாக தீர்ப்பாயம் அபிப்பிராயப்பட்டாலன்றி, மற்றும் தீர்ப்பாயம் நியாயமானதெனக் கருதும் அத்தகு செலவுத் தொகைகள் மனுவிற்கான செலவுத் தொகையாக வழங்கப்படும் வரை, அத்தகு அனுமதியை தீர்ப்பாயம் வழங்குதல் ஆகாது என்று **பிரிவு 272(6)** கூறுகிறது.

3. பங்களிப்பாளர்கள் அல்லது பங்குக் கடப்பாட்டாளர்களால் (By Contributories) [பிரிவு 272(1)(c)] :

பங்களிப்பாளர் - யார்?: நிறுவனம் கலைக்கப்பட்டால், முன்பு உறுப்பினர்களாக இருந்தவர்களும் தற்போது உறுப்பினர்களாக இருப்பவர்களும் நிறுவனத்தின் கடன் பொறுப்புகளைத் தீர்க்கவும், கலைப்புச் செலவிற்குப் பணம் தரவும் பொறுப்புடையவர்கள். இவர்கள் **பங்களிப்பாளர்கள்** எனப்படுவர்.

ஒரு நிறுவனத்தைக் கலைக்க பங்களிப்பாளர் மனுச் செய்ய வேண்டுமெனில், அதற்கு பின்வரும் சில தகுதிகள் தேவை. அதன்படி, 1. நிறுவனக் கலைப்பு தொடங்குவதற்கு உடன் முன்னதான பதினெட்டு மாத காலத்தின் பொழுது, எப்பங்குகளைப் பொறுத்து அவர் ஒரு பங்களிப்பாளராக உள்ளாரோ அப்பங்குகளை குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்காவது அவர் ஆதியில் நிறுவனத்திடமிருந்து ஒதுக்கீடு பெற்றவராகவும் அல்லது அவற்றை வைத்திருப்பவராகவும் அல்லது அவற்றை அவரது பெயரில் பதிவு செய்யப் பெற்றவராகவும் இருக்க வேண்டும்; அல்லது 2. அப்பங்குகள் அதன் முந்தைய உரிமையாளரின் இறப்பினால் அவருக்கு வாரிசுவழியில் வந்தடைந்த

தாக இருத்தல் வேண்டும். இங்கு அவர் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை வைத் திருப்பவர் என்பதோ, அந்நிறுவனத்திற்கு சொத்துடைமைகளே கிடையாது என்பதோ, அல்லது அந்நிறுவனத்தின் பொறுப்புகளை தீர்த்த பிறகு பங்குதாரர்களுக்கு பிரித்துக் கொடுக்க அதனிடம் உபரிச் சொத்துக்கள் இல்லை என்பதோ ஒரு பொருட்டல்ல, என்று **பிரிவு 272(3)** கூறுகிறது.

இங்கு பங்களிப்பாளர் என்ற பதத்திற்கு 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் தரும் வரையறையையும் நாம் காண வேண்டியது அவசியமாகும்.

நிறுவனங்கள் சட்டம், 2013–இன் **பிரிவு 2(26)**–இன்படி **"பங்களிப்பாளர்"** என்பது "ஒரு நிறுவனம் கலைக்கப்படுகின்ற நிகழ்வில் அதன் சொத்திருப்புகளுக்குப் பங்களிக்கப் பொறுப்புடைய நபர் ஒருவர் என்று பொருள்படும்." அடுத்து இப்பிரிவின் கீழான விளக்கமானது (Explanation), "இப்பிரிவின் நோக்கத்திற்காக, நிறுவன மொன்றில் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளைக் கொண்டிருக்கும் நபர் ஒருவர் பங்களிப்பாளராக கருதப்படுதல் வேண்டும், ஆனால் அத்தகு ஒரு பங்களிப்பாளராக உரிமைகளை இருத்தி வைத்துக் கொண்டிருக்கும் போது இந்தச் சட்டத்தின் கீழ் பங்களிப்பாளர் ஒருவரின் பொறுப்புகள் எதையும் கொண்டிருத்தல் ஆகாது என்பது இதன் மூலம் தெளிவாக்கப்படுகிறது" [1] என்று கூறுகிறது.

4. மேற்சொன்னவர்களில் அனைவராலும் அல்லது அவர்களில் எவரும் சேர்ந்து (By all or any of the persons specified in clauses (a), (b) and (c) together) [பிரிவு 272(1)(d)] :

இதற்கு முன் சென்ற சட்டக் கூறுகளின்படி ஒரு நிறுவனம், கடனீந்தவர்கள், பங்களிப்பாளர்கள் நிறுவனமொன்றைக் கலைக்க தீர்ப்பாயத்திடம் மனுச் செய்தல் வேண்டும் என்று கண்டோம். தற்போது இக்கூறின்படி இவர்கள் அனைவரும் சேர்ந் தும் ஒரு நிறுவனத்தைத் கலைக்க மனுச் செய்யலாம் அல்லது மேற்கண்ட மூன்று வகையினரில் எவரும் மற்றொருவருடன் சேர்ந்தும் மனுச் செய்யலாம்.

5. நிறுவனங்களின் பதிவாளரால் (By Registrar)[பிரிவு 272(1)(e)] :

ஒரு நிறுவனத்தைக் கலைக்க நிறுவனங்களில் பதிவாளர் தீர்ப்பாயத்திடம் மனுச் செய்யலாம் என்று பிரிவு பிரிவு 272(1)(e) கூறுகிறது.

அதே நேரத்தில் இங்கு இது தொடர்பாக பிரிவு 272(4) கூறுவதையும் நாம் காண வேண்டும். அதாவது, ஒரு நிறுவனத்தைக் கட்டாயமாகக் கலைப்பதற்குரிய 7 வகையான சூழ்நிலைகளை பிரிவு 271(1) குறிப்பிடுகிறது. அவற்றை நாம் ஆரம்பத்

---

1. **"Contributory"** means a person liable to contribute towards the assets of the company in the event of its being wound up.

   Explanation .- For the purpose of this clause, it is hereby clarified that a person holding fully paid up shares in a company shall be considered as a contributory but shall have no liabilities of a contributory under the Act whilst retaining rights of such a contributory

   - Section 2(26) of the Companies Act, 2013.

திலேயே விரிவாகக் கண்டோம். அப்பிரிவின் கீழான உட்கூறுகளில் (b), (d), (g) ஆகியன தவிர மற்ற கூறுகளில் கூறப்பட்டுள்ள அடிப்படைகளில் நிறுவனங்களின் பதிவாளர் ஒரு நிறுவனத்தைக் கலைக்க தீர்ப்பாயத்திடம் மனுச் செய்ய உரிமை படைத்தவர் என்று பிரிவு 272(4) கூறுகிறது. மேற்கண்ட உட்கூறுகளை தவிர, பதிவாளர் மனுச் செய்வதற்குரிய அடிப்படைகளைக் கொண்ட கூறுகளை மீண்டும் இங்கு ஒரு முறை சுருக்கமாக பார்த்துவிடுவோமா?

1. கடன்களை செலுத்த முடியாமை (Inability to pay debts) [பிரிவு 271(1)(a)]
2. நாட்டு நலன்கள், பாதுகாப்பு ஆகியவற்றிற்கு எதிராகக் செயற்படல் (Acting against the interests of Nation and Security of theState) [பிரிவு 271(1)(c)]
3. பதிவாளரின் விண்ணப்பத்தின் பேரில் நிறுவனத்தைக் கலைத்தல் (Winding up on application made by Registrar) [பிரிவு 271(1)(e)]
4. நிதிநிலை அறிக்கை முதலியவற்றை பதிவாளரிடம் தாக்கல் செய்யத் தவறுகை (Default of company in filing with Registrar its financial statement etc.) [பிரிவு 271(1)(f)]

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் பதிவாளர் தீர்ப்பாயத்திடம் மனுச் செய்வதற்கு முன்பாக மைய அரசின் முன்னனுமதியைப் பெறுதல் வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அதன் கலைப்பு குறித்து கருத்துக்கள் கூற ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலன்றி, மைய அரசு இந்த முன்னனுமதியை வழங்குதல் ஆகாது.

6. மைய அரசால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவராலும் (By any person authorised by the Central Government) [பிரிவு 272(1)(f)] :

சில சமயங்களில் மைய அரசு கூட ஒரு நிறுவனத்தைக் கலைப்பதற்கு தீர்ப்பாயத்திடம் மனுச் செய்யலாம். இதற்காக நபர் எவருக்கும் அது அதிகாரமளிக்கலாம். அதாவது, பிரிவு 210 அல்லது 213–இன்படி நிறுவனத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களின் அறிக்கையிலிருந்து, அந்நிறுவனம் தனக்கு கடனீந்தவர்கள் அல்லது தனது உறுப்பினர்களை மோசடி செய்கிறது என்றோ அல்லது அந்நிறுவனம் வேறுவிதமாக மோசடியான அல்லது சட்ட முரணான நோக்கங்களுக்காக நடத்தப்படுவதாகவோ, அல்லது அந்நிறுவனத்தின் உருவாக்கத்திற்கும் மேலாண்மைக்கும் சம்பந்தப்பட்ட நபர்கள் மோசடி, சட்டமுரண் பிழை அல்லது தீயநடத்தைக் குற்றவாளிகளானவர்கள் என்றோ மைய அரசு அறிந்தால் அது தன் சார்பில் அந்நிறுவனத்தைக் கலைப்பதற்காக தீர்ப்பாயத்திடம் மனுச் செய்ய நபர் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்.

7. மத்திய அரசால் அல்லது மாநில அரசால் (By the Central Government

or a State Government) [பிரிவு 272(1)(g)] :

பிரிவு 271(1)(c)–இன்படி ஒரு நிறுவனம் இந்திய நாட்டின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டு நலன்கள், நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாடுகளுடன் கொண்டுள்ள நட்புறவு, பொது ஒழுங்கு, ஒழுக்கம் அல்லது அறநெறி ஆகியவற்றிற்கு எதிராக நடந்து கொண்டால், அந்நிறுவனத்தைக் கலைக்கும்படி மத்திய அரசோ அல்லது மாநில அரசோ தீர்ப்பாயத்திடம் மனுச் செய்யலாம் என்று பிரிவு 272(1)(g) கூறுகிறது.

மேற்கண்டவர்கள் தீர்ப்பாயத்திடம் தாக்கல் செய்யும் மனுவின் நகலை நிறுவனங்களின் பதிவாளரிடமும் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவர் மேற்சென்ற வகைமுறைகளுக்கு யாதொரு குந்தகமுமின்றி, தனது கருத்துக்களை அம்மனு பெறப் பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று **பிரிவு 272(7)** கூறுகிறது.

தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள் (Powers of Tribunal) - பிரிவு 273:

நிறுவனத்தைக் கலைப்பதற்கான மனுவைப் பெறுவதன் பேரில், தீர்ப்பாயம் பின்வரும் ஆணைகளில் எதையும் பிறப்பிக்கலாம் என்று **பிரிவு 273(1)** கூறுகிறது. அவை,

(a) அம்மனுவை செலவுத் தொகையுடன் அல்லது செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்யலாம் (dismiss the petition with or without costs); அல்லது

(b) தான் பொருத்தமெனக் கருதும் இடைக்கால ஆணை எதையும் பிறப்பிக் கலாம் (make any interim order that it thinks fit); அல்லது

(c) கலைப்பிற்கான ஆணை பிறப்பிக்கப்படும் வரை, அந்நிறுவனத்திற்கு தற்காலிக கலைப்பதிகாரி ஒருவரை நியமனம் செய்யலாம் (appoint a provisional liquidator of the company till the making of a winding up order); அல்லது

(d) செலவுத் தொகையுடன் அல்லது செலவுத் தொகையின்றி அந் நிறுவனத்தைக் கலைப்பதற்கான ஆணையைப் பிறப்பிக்கலாம் (make an order for the winding up of the company with or without costs); அல்லது

(e) தான் பொருத்தமெனக் கருதும் வேறு ஆணை எதையும் பிறப்பிக்கலாம் (any other order as it thinks fit).

இதையடுத்து பின்வரும் மூன்று வரம்புரை வாசகங்கள் (Proviso) மேற்படி பிரிவு 273(1)–இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள. அவை

1. மனு சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து தொன்னூறு நாட்களுக்குள்

மேற்கண்டவற்றுக்கு தீர்ப்பாயம் ஆணை பிறப்பித்தல் வேண்டும்.

2. தற்காலிக கலைப்பதிகாரி (provisional liquidator) ஒருவரை நியமனம் செய்வதற்கு முன், அந்நிறுவனத்திற்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பி, அது தனது கருத்துக்களைக் கூற நியாயமான வாய்ப்பு ஒன்றை அதற்கு அளிக்க வேண்டும். எனினும் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டிய தனிக் காரணங்களின் அடிப்படையில், அவ்வாறு அறிவிப்பு அனுப்புதை தீர்ப்பாயம் கைவிடலாம்.

3. ஒரு நிறுவனம் தனது சொத்துடைமைகளை அவற்றிற்கு (assets) சமமான அல்லது அதிகமான ஒரு தொகைக்கு அவற்றை அடைமானம் செய்துள்ளது அல்லது அந்நிறுவனத்திற்கு சொத்துடைமைகளே இல்லை எனும் காரணத்திற்காக மட்டும், அந்நிறுவனத்தைக் கலைப்பதற்கான ஆணையைப் பிறப்பிக்க மறுத்தல் கூடாது.

ஒரு நிறுவனத்தைக் கலைப்பது நீதியும் நேர்மையுமானது எனும் அடிப்படையில் (just and equitable ground) அந்நிறுவனத்தைக் கலைப்பதற்காக மனுச் செய்யப்பட்டிருக்கும் பொழுது, தீர்ப்பாயமானது, மனுதாரர்களுக்கு பிற தீர்வழிகளும் உள்ளன என்றும், அத்தீர்வழிகளை நாடுவதற்குப் பதிலாக அந்நிறுவனத்தைக் கலைக்க நியாயமற்ற முறையில் மனுதாரர்கள் செயல்படுகிறார்கள் என்றும் அபிப்பிராயப்பட்டால், அது கலைப்பிற்கான ஆணையைப் பிறப்பித்தல் ஆகாது என்று **பிரிவு 273(2)** கூறுகிறது.

நிறுவனக் கலைப்பிற்கான நடவடிக்கைகள் (Proceedings of Winding up by Tribunal):

1. நிறுவனக் கலைப்பின் தொடக்கம் (Commencement of winding up):

நாம் இதுகாறும் ஒரு நிறுவனத்தைக் கட்டாயமாகக் கலைக்க யாரெல்லாம் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கலாம் என்று கண்டோம். அவர்களில் யாரேனும் ஒருவர் கலைப்பிற்கான மனுவை தீர்ப்பாயத்திடம் செய்த நேரத்திலிருந்து கலைப்பிற்கான நடவடிக்கை தொடங்குவதாகக் கருதப்பட வேண்டும் என்று பிரிவு 357(2) கூறுகிறது. ஆனால் ஒரு நிறுவனம் தன்னைத் தானே கலைத்துக் (தன்விருப்பால்) கொள்ள சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றினால், அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நேரத்திலிருந்து, அந்நிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கை தொடங்குவதாகக் கருதப்பட வேண்டும் என்று பிரிவு 357(1) கூறுகிறது. எனினும் அத்தீர்மானம் மோசடியாக அல்லது தவறுதலாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்று தீர்ப்பாயத்தின் முன் மெய்ப்பிக்கப்பட்டால், அக் கலைப்பு நடவடிக்கைகள் செல்லத்தக்க முறையில் எடுக்கப்பட்டதாக கருதப்படுதல் கூடாது, என்றும் அப்பிரிவு கூறுகிறது.

2. நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனம் (Appointment of Company Liquidator):

நிறுவனக் கலைப்பிற்கான ஆணை பிறப்பிக்கப்படும் சமயத்தில் மைய அரசால் பராமரிக்கப்பட்டு நிறுவனக் கலைப்பதிகாரிகளின் பட்டியலில் (panel of

company liquidators) இருந்து முறையார்ந்த கலைப்பதிகாரி (Official Liquidator) அல்லது கலைப்பதிகாரி ஒருவரை தீர்ப்பாயம் நியமனம் செய்தல் வேண்டும் என்று **பிரிவு 275(1)** கூறுகிறது. தற்காலிக கலைப்பதிகாரி ஒருவரின் அதிகாரங்களை தீர்ப்பாயமே வரையறுத்துக் கூறலாம் என்றும், அப்படி வரையறுத்துக் கூறாவிட்டால், கலைப்பதிகாரி ஒருவருக்கு உள்ள அதே அதிகாரங்களை அவர் கொண்டிருப்பார் என்றும் **பிரிவு 275(3)** கூறுகிறது. நிறுவனக் கலைப்பிற்கான ஆணை பிறப்பிக்கப்படும் போது தீர்ப்பாயம் பிரிவு 273(1)(c)–இன்படி முன்னதாக நியமனம் செய்திருந்த தற் காலிக கலைப்பதிகாரியை (Provisional Liquidator), நிறுவனக் கலைப்பு நடவடிக் கைகளை நடத்தும் நிறுவனக் கலைப்பதிகாரியாக (Company Liquidator) தீர்ப்பா யம் நியமனம் செய்யலாம் என்றும் **பிரிவு 275(7)** கூறுகிறது.

3. நிறுவனக் கலைப்பதிகாரி, தற்காலிக கலைப்பதிகாரி, பதிவாளர் ஆகி யோருக்கு தகவல் அனுப்புகை (Intimation to the Company Liquidator, Liquidator and Registrar):

நிறுவனக் கலைப்பிற்காக அல்லது தற்காலிக கலைப்பதிகாரியின் நியமனத் திற்காக தீர்ப்பாயம் ஆணையிடுகிறவிடத்து, அது குறித்து அவ்வாணை பிறப்பிக்கப் பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்கு மிகாத ஒரு காலகட்டத்திற்குள் நிறுவனக் கலைப்பதிகாரி அல்லது தற்காலிக கலைப்பதிகாரி அல்லது பதிவாளருக்கு தீர்ப்பாயம் தகவல் அனுப்புதல் வேண்டும் என்று **பிரிவு 277(1)** கூறுகிறது.

இதையடுத்து நிறுவனக் கலைப்பு அல்லது தற்காலிக கலைப்பதிகாரி நியமனத்திற்காக தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணையின் நகல் கிடைக்கப் பெற்றதன் பேரில், அந்நிறுவனம் தொடர்பான தனது பதிவேடுகளில் அது குறித்து மேற்குறிப்பு ஒன்றைச் செய்தல் வேண்டும். மேலும் அப்படி ஒரு கலைப்பு ஆணை அல்லது நியமன ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அரசிதழில் அறிவிக்கை செய்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட பங்கு பரிமாற்றகத்திற்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் என்று **பிரிவு 277(2)** கூறுகிறது.

நிறுவனத்தின் தொழில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தால் தவிர, நிறுவனக் கலைப்பு ஆணையானது அந்நிறுவனத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் அல்லது வேலையாட்கள் அனைவரையும் பணியில் இருந்து விடுவிக்கும் அறிவிப்பாக கருதப்படுதல் வேண்டும் என்று **பிரிவு 277(3)** கூறுகிறது.

4. கலைப்புக் குழு கட்டமைப்பு (Constitution of winding up committee):

கலைப்பிற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட மூன்று வாரங்களுக்குள், கலைப் புப் பணிகளை நிறைவேற்றுவதில் தனது கலைப்பு நடவடிக்கைகளுக்கு உதவிடவும், அதன் பணிகள் நடைபெறும் விதத்தை கண்காணிக்கவும் கலைப்புக் குழு ஒன்றை கட்டமைக்கக் கோரி நிறுவனக் கலைப்பதிகாரி தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் ஒன் றைச் செய்தல் வேண்டுமென பிரிவு 277(4) கூறுகிறது. இக்குழுவில் பின்வருவோர் அடங்கியிருப்பர். அவர்கள்,

(1) தீர்ப்பாயத்துடன் இணைந்த முறையார்ந்த கலைப்பதிகாரி,

(2) பிணையம் பெற்ற கடனிந்தவர்களின் பெயர் நியமனம் பெற்றவர்,

(3) தீர்ப்பாயத்தால் பெயர் நியமனம் செய்யப்பட்ட தொழிலர் ஒருவர்.

இக்கலைப்புக் குழுவின் கூட்டங்களை நிறுவனக் கலைப்பதிகாரி நடத்துதல் வேண்டும் என்றும், அது பின்வரும் கலைப்புப் நடவடிக்கைகளுக்கு உதவிட வேண்டும் என்றும், அவற்றைக் கண்காணிக்க வேண்டும் என்றும் **பிரிவு 277(5)** கூறுகிறது. அவை,

(1) நிறுவனத்தின் சொத்துடைமைகளை எடுத்துக் கொள்ளல்,

(2) நிறுவன விவகாரங்களின் அறிக்கையை ஆய்வு செய்தல்,

(3) நிறுவனத்தின் சொத்து, ரொக்கம் அல்லது வேறு சொத்துடைமைகள் எதையும் திரும்பப் பெறுதல். இதில் மேற்கண்டவற்றிலிருந்து அடையப் பெற்ற ஆதாயங்களும் அடங்கும்,

(4) நிறுவனத்தின் தணிக்கை அறிக்கைகள் மற்றும் கணக்குகளை மறுஆய்வு செய்தல்,

(5) சொத்துடைமைகளின் விற்பனை,

(6) கடனீந்தவர்கள் மற்றும் பங்களிப்பாளர்களின் பட்டியலை இறுதி செய்தல்,

(7) கோரிக்கைகளை சமரசம் செய்து கொள்ளல், கைவிடுதல் மற்றும் தீர்த்தல்,

(8) பங்காதாயம் ஏதேனுமிருப்பின் அதை செலுத்துதல்,

(9) தீர்ப்பாயம் அவ்வப்போது ஏவுரைக்கலாகும் அத்தகு வேறு பணி எதுவும்.

நிறுவனத்தின் கலைப்பிற்கான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை, கலைப்புக் குழுக் கூட்டங்களின் அறிக்கைகள் மற்றும் கூட்ட நடவடிக்கைப் பதிவு களை நிறுவனக் கலைப்பதிகாரி ஒவ்வொரு மாதமும் தீர்ப்பாயத்தின் பரிசீலனைக்காக அதன் முன் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அதில் கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருக்க வேண்டும் என்றும் **பிரிவு 277(6)** கூறுகிறது.

6. இறுதி அறிக்கை (Final Report):

நிறுவனக் கலைப்பதிகாரி இறுதி அறிக்கையின் வரைவு ஒன்றை தயார் செய்து, அதனை கலைப்புக் குழுவின் பரிசீலனைக்கும், ஒப்புதலுக்கும் அனுப்பி வைக்க வேண்டும் என்று **பிரிவு 277(7)** கூறுகிறது.

இதைத் தொடர்ந்து, அந்நிறுவனத்தின் கலைப்பிற்கான ஆணை பிறப்பிக் கப்படுவதற்காக, கலைப்புக் குழுவால் மேற்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட இறுதி அறிக்கையானது நிறுவனக் கலைப்பதிகாரியால் தீர்ப்பாயத்தின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று **பிரிவு 277(8)** கூறுகிறது.

கலைப்பு ஆணையின் விளைவு (Effect of Winding up Order) - பிரிவு 278:

நிறுவனத்தின் கலைப்பிற்காக தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணையானது, அதற்கு கடனீந்தவர்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் அனைவருக்கும் ஆதரவாக, அவ் விரு தரப்பினரும் இணைந்து கூட்டாக மனுச் செய்திருந்தால் எவ்வாறோ அவ்வாறு இயங்கும் என்று **பிரிவு 278** கூறுகிறது.

உரிமையியல் வழக்கு முதலியன நிறுத்திவைப்பு (Stay of suits etc. on winding up order) - பிரிவு 279:

நிறுவனக் கலைப்பிற்கான ஆணை அல்லது தற்காலிக கலைப்பதிகாரியின் நியமனத்திற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கும் போது, அந்நிறுவனத்தால் அல்லது அதற்கு எதிராக உரிமையியல் வழக்கு அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் எதுவும் தொடங்கப்படுதல் ஆகாது என்றும், அவ்வாறே அச்சமயத்தில் நிலுவையில் இருக்கும் அத்தகு உரிமையியல் வழக்கு அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் எதுவும் மேல் நடத்தப்படக் கூடாது என்றும், அவ்வாறு தொடங்கப்படவோ அல்லது மேல் நடத் தப்படவோ வேண்டுமெனில் அதற்கு தீர்ப்பாயத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் **பிரிவு 279(1)** கூறுகிறது. எனினும் இது உச்ச நீதிமன்றத்தில் அல்லது உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்கு நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது என்று **பிரிவு 279(2)** கூறுகிறது.

ஆலோசனைக் குழு (Advisory Committee) - பிரிவு 287:

நிறுவனக் கலைப்பிற்கான ஆணையை தீர்ப்பாயம் பிறப்பிக்கும் போது, நிறுவனக் கலைப்பதிகாரிக்கு ஆலோசனை வழங்கவும், தான் ஏவுரைக்கும் அத்தகு விடயங்களில் தனக்கு அறிக்கையளிக்கவும் ஆலோசனைக் குழு ஒன்றைக் கட்டமைக்க அது ஏவுரைக்கலாம் என்று **பிரிவு 287(1)** கூறுகிறது.

தீர்ப்பாயத்தால் நியமனம் செய்யப்பட்ட ஆலோசனைக் குழுவில் அந் நிறுவனத்தின் கடனீந்தவர்களாகவும், பங்களிப்பாளர்களாகவும் உள்ளவர்கள் மற்றும் கலைப்பில் உள்ள அந்நிறுவனத்தின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு

தீர்ப்பாயம் அத்தகு விகிதத்தில் ஏவுரைக்கலாகும் பனிரெண்டுக்கும் மிகாத வேறு நபர்கள் அடங்கியிருத்தல் வேண்டுமென **பிரிவு 287(2)** கூறுகிறது.

ஆலோசனைக் குழுவிற்கு யாரெல்லாம் உறுப்பினர்களாக இருக்கலாம் என்பதற்கான நபர்களை தீர்ப்பாயம் தீர்மானிப்பதற்கு ஏதுவாக கலைப்பிற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அந்நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து உறுதி செய்யப்பட்ட கடனீந்த வர்கள் மற்றும் பங்களிப்பாளர்களின் கூட்டமொன்றை நிறுவனக் கலைப்பதிகாரி நடத்துதல் வேண்டும் என்று **பிரிவு 287(3)** கூறுகிறது.

நியாயமான காலம் ஒன்றின் போது கலைப்பில் உள்ள நிறுவனத்தின் கணக் குப் புத்தகங்கள், பிற ஆவணங்கள், சொத்துடைமைகள் மற்றும் சொத்துக்களை ஆய்வு செய்யும் உரிமை ஆலோசனைக் குழுவிற்கு உண்டு என்று **பிரிவு 287(4)** கூறுகிறது.

கூட்டங்களை நடத்துவது தொடர்பான வகைமுறைகள், அங்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை மற்றும் ஆலோசனைக் குழுவால் நடத்தப்பட வேண்டிய அலுவல் முறையானது வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும் என்று **பிரிவு 287(5)** கூறுகிறது.

II. தன்விருப்பக் கலைப்பு
[Voluntary Winding up]

தன்விருப்பக் கலைப்பு என்பது தீர்ப்பாயத்தால் ஒரு நிறுவனம் கட்டாயமாகக் கலைக்கப்படும் (compulsory wind up by Tribunal) முறையிலிருந்து வேறு பட்டதாகும். அதாவது, இந்த தன்விருப்பக் கலைப்பில் நிறுவனத்தின் உறுப்பினர்கள் அதனைக் கலைப்பதற்காக தீர்ப்பாயத்திடம் மனுக் கொடுப்பதற்குப் பதிலாக, அந்நிறு வனம் கலைக்கப்பட வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை நிறை வேற்றுகிறார்கள். தன்விருப்பக் கலைப்பில் இருக்கும் முக்கிய அனுகூலம் யாதெனில், நிறுவனமும் அதற்கு கடனீந்தவர்களும் தங்கள் விவகாரங்களை தீர்ப்பாயத்திற்கு வராமலேயே தங்களுக்குள் சுமூகமாகத் தீர்த்துக் கொள்கிறார்கள். எனினும் நிறு வனக் கலைப்பு தொடர்பாக ஏதேனும் ஏவுரைகள் அல்லது ஆணை தேவைப்பட்டால், அதற்காக தீர்ப்பாயத்திடம் மனுச் செய்து கொள்ளலாம்.

ஒரு நிறுவனத்தை தீர்ப்பாயம் கலைப்பது என்பது, அந்நிறுவனத்திற்கு கடனீந்தவர் ஒருவரின் அல்லது சில நேரங்களில் பங்காளிப்பாளர் ஒருவரின் விரோத மனப்பான்மைச் செயலாகும். ஆனால் தன்விருப்பக் கலைப்பு என்பது சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கே உரிய செயலாகும். ஒரு நிறுவனம் மற்றொரு புதிய நிறுவனமாக உருவாவதன் மூலம் அல்லது தன்னுடைய தொழிலை மற்றொரு நிறுவனத்துடன் ஒருங்கிணைத்துக் கொள்வதன் மூலம் தன்னை மறுநிருமாணம் செய்து கொள்ள விழைந்தால், அங்கு அதற்கு தன்விருப்பக் கலைப்பு அவசியமாகிறது என்று கூறலாம்.

1956–ஆம் ஆண்டு நிறுவனங் கள் சட்டப்படி இந்த தன்விருப்பக் கலைப்பு 1. உறுப்பினர்கள் தன்விருப்பக் கலைப்பு (Members voluntary winding up); 2. கடனீந்தவர்களின் தன்விருப்பக் கலைப்பு (Creditors voluntary winding up) என இரு வகைப்படும். ஆனால் தற்போது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டமானது இந்த இரண்டிற்குமிடையே எந்த வேறுபாட்டையும் காணவில்லை. இம்மாதிரியான வகைப்பாடு தற்போதைய புதிய நிறுவனங்கள் சட்டத்தில் இல்லை. ஒரு தன்விருப்பக் கலைப்பு, அது உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பானாலும் சரி அல்லது கடனீந்தவர்களின் தன்விருப்பக் கலைப்பானாலும் சரி எப்படி இருந்தாலும், அவற்றைப் பொதுவாக தனது பிரிவுகள் 305 மற்றும் 306–இன் வழியாக விளக்குகிறது.

தன்விருப்பக் கலைப்பிற்கான சூழ்நிலைகள் (Circumstances in which company may be wound up voluntarily) – பிரிவு 304 :

பின்வரும் இரண்டு சூழ்நிலைகளின் கீழ் ஒரு நிறுவனத்தின் தன் விருப்பக் கலைப்பு நிகழ்கிறது என்று **பிரிவு 304** கூறுகிறது. அவை,

(a) சாதாரணத் தீர்மானத்தின் வாயிலாக (By Ordinary Resolution): ஒரு நிறுவனம் குறிப்பிட்ட காலம் வரை மட்டும் செயல்படும் என்று அதன் செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தால், அக்காலம் முடிந்ததும்; அல்லது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிகழ்ந்தால் நிறுவனம் கலைக்கப்பட வேண்டும் என்று அதன் செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தால், அந்நிகழ்ச்சி நிகழ்ந்தவுடனும், அந்நிறுவனம் தன்விருப்பாகக் கலைக்கப்பட வேண்டும் என்று தனது பொதுக் கூட்டத்தில் செய்யும் சாதாரணத் தீர்மானம் ஒன்றின் வாயிலாகக் கலைக்கப்படலாம். [பிரிவு 304(a)].

(b) சிறப்புத் தீர்மானத்தின் வாயிலாக (By Special Resolution): ஒரு நிறுவனம் தன்விருப்பாகக் கலைக்கப்பட வேண்டும் என்று அது சிறப்பு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் வாயிலாகவும் கலைக்கப்படலாம். [பிரிவு 304(b)].

தன்விருப்பக் கலைப்பின் முறைகள் :

நாம் முன்னதாக கண்டவாறு 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டப்படி, தன்விருப்பக் கலைப்பானது 1. உறுப்பினர்கள் தன்விருப்பக் கலைப்பு (Members voluntary winding up) என்றும், 2. கடனீந்தவர்கள் தன்விருப்பக் கலைப்பு (Creditors voluntary winding up) என்றும் இரு முறைகளில் நடந்தது. தற்போது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்படி இவை இரண்டிற்குமிடையே பெரிய வேறுபாடு ஏதுமில்லை. ஒரு நிறுவனத்தின் இயக்குனர்கள் தங்கள் நிறுவனத்தின் கடன் தீர்க்கும் நிலை தொடர்பாக **"செல்வநிலை விளம்புகை" (Declaration of Solvancy)** ஒன்றைச் செய்ய முடிந்தால், அதை 'உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பு' என்று எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு செய்ய முடியாது போனால், அதை

'கடனீந்தவர்களின் தன்விருப்பக் கலைப்பு' என்று கூறலாம். எனவே இந்த இரண்டிற்கும் இடையிலான முக்கிய வேறுபாடானது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் செல்வநிலை விளம்புகையை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது.

1. செல்வநிலை விளம்புகை செய்ய முடிந்தால் - பிரிவு 305:

இதன்படி, ஒரு நிறுவனம் நல்ல நிலைமையில் இயங்கிக் கொண்டிருக்கும் பொழுதே, அது கலைக்கப்படுகிறது. ஒரு நிறுவனத்தை, உறுப்பினர்கள் தன்விருப்பக் கலைப்பின்படி கலைக்க உத்தேசித்தால், முதலில் அந்நிறுவன இயக்குனர்கள், நிறுவனத்தின் கடன் தீர்க்கும் நிலையைப் பற்றி சட்டப்படி விளம்புகை (உறுதிமொழி) ஒன்றைச் செய்தல் வேண்டும். இது நாம் மேலே கண்டவாறு **'செல்வநிலை விளம்புகை' (Declaration of Solvancy)** எனப்படுகிறது. இதில் தங்கள் நிறுவனத்திற்கு கடன் ஏதும் இல்லை என்றோ அல்லது நிறுவனம் தன்விருப்பாக கலைக்கப்பட்டால், அதன் சொத்துடைகளை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டு நிறுவனத்தின் கடன் முழுவதையும் அடைத்துவிட முடியும் என்றோ விளம்புகை ஒன்றை அவ்வியக்குனர்கள் தங்கள் இயக்குனரவைக் கூட்டத்தில் ஆணையுறுதியாவணம் (affidavit) ஒன்றின் வாயிலாக அளிக்க வேண்டும் [பிரிவு 305(1)].

தன்விருப்பு நிறுவனக் கலைப்பிற்கான தீர்மானம் நிறைவேற்றப்படும் தேதிக்கு உடன் முன்னதான 5 வாரங்களுக்குள், மேற்படி விளம்புகையை இயக்குனர்கள் செய்து, அதனை அத்தேதிக்கு முன்னதாகவே நிறுவனங்களின் பதிவாளரிடம் பதிவுக்கு வழங்க வேண்டும் [பிரிவு 305(2)(a)].

மேலும் எவரையும் மோசடி செய்யும் நோக்கோடு நிறுவனம் கலைக்கப்படவில்லை என்றும் அவ்விளம்புகையில் இயக்குனர்கள் விளம்ப வேண்டும் [பிரிவு 305 (2)(b)].

அதோடு செல்வநிலை விளம்பப்பட்ட தேதி வரை தயாரிக்கப்பட்ட, நிறுவனத்தின் இலாப-நட்டக் கணக்குகள், இருப்புநிலை ஏடு, சொத்துடைமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விவரப்பட்டி ஆகியவற்றை நிறுவனத்தின் தணிக்கையாளர் தயார் செய்து அது குறித்த அவரது அறிக்கை ஒன்று செல்வநிலை விளம்புகையுடன் இணைக்கப் படுதல் வேண்டும் [பிரிவு 305(2)(c)].

நிறுவனத்திற்கு சொத்துடைமைகள் ஏதும் இருப்பின், அவற்றை பதிவு பெற்ற மதிப்பீட்டளார் ஒருவரைக் கொண்டு மதிப்பிட்டு, அவரது அறிக்கை ஒன்றையும் மேற்படி விளம்புகையுடன் இணைக்க வேண்டும் [பிரிவு 305(2)(d)].

இது **"தன்விருப்பக் கலைப்பு செய்ய உத்தேசிக்கப்படும் நேர்விலான செல்வநிலை விளம்புகை" (Declaration of solvency in case of proposal to wind up voluntarily)** எனப்படுகிறது.

ஒரு நிறுவனம் தன்விருப்புக் கலைப்பிற்காக தீர்மானம் நிறைவேற்றிய தேதியிலிருந்து 14 தினங்களுக்குள் அத்தீர்மானம் குறித்த அறிவிப்பை அரசிதழில் விளம்பரப்படுத்த வேண்டும். மேலும் அந்நிறுவனத்தின் பதிவு அலுவலகம் உள்ள மாவட்டத்தில் புழங்கும் செய்தித்தாளிலும் விளம்பரப்படுத்த வேண்டும் என்று **பிரிவு 307(1)** கூறுகிறது.

ஒரு நிறுவனம் மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றிய சமயத்திலிருந்து, அதன் தன்விருப்பக் கலைப்பு தொடங்குவதாகக் (Commencement of Voluntary winding up) கருத வேண்டும் என்று **பிரிவு 308** கூறுகிறது.

தன்விருப்பக் கலைப்பொன்றின் நேர்வில், கலைப்பு நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து அந்நிறுவனம் தொழில் செய்வது முடிவுக்கு வரும். எனினும் தொழிலுக்கு அனுகூலம் தரும் கலைப்பொன்றில் அந்நிறுவனம் அவ்வாறு செய்யும் தொழில் முடிவுக்கு வராது. மேலும் நிறுவனத்தின் கூட்டுரு நிலை, கூட்டுரு அதிகாரங்கள் ஆகியன அது கலைக்கப்படும் வரை தொடர்ந்திருக்கும் என்று **"தன் விருப்பக் கலைப்பின் விளைவு" (Effect of voluntary winding up) பிரிவு 309** எடுத்துரைக்கிறது.

செல்வநிலை விளம்புகையின் மூலம் செய்யப்படும் (உறுப்பினர்களின்) தன்விருப்பக் கலைப்பிற்குப் பொருந்தும் சட்ட வகை முறைகள் (Provisions applicable to Voluntary Winding up):

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 310 முதல் 318 வரையிலான சட்டப் பிரிவுகள், இத்தகு தன்விருப்பக் கலைப்பிற்குப் பொருந்தும்.

1. நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனம் (Appointment of Company Liquidator) - பிரிவு 310(1):

நிறுவனம் தனது பொதுக் கூட்டத்தில் தன்விருப்பக் கலைப்பிற்காக தீர்மானம் நிறைவேற்றியிருக்குமிடத்து, நிறுவன விவகாரங்களை கலைக்கும் நோக்கத்திற்காகவும், அதன் சொத்துடைமைகளை பகிர்ந்தளிப்பதற்காகவும் அது மைய அரசால் தயாரிக்கப்பட்டுள்ள பட்டியலில் இருந்து நிறுவனக் கலைப்பதிகாரி ஒருவரை நியமனம் செய்தல் வேண்டும். இவருக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தையும் பரிந்துரைக்க வேண்டும் என்று **பிரிவு 310(1)** கூறுகிறது.

2. இயக்குனரவையின் அதிகாரங்கள் முடிவுறும் (Cesser of Board's powers on appointment of Company Liquidator) – பிரிவு 313:

நிறுவனக் கலைப்பதிகாரி நியமனம் செய்யப்பட்டவுடன், இயக்குனரவை, மேலாண்மை இயக்குனர் அல்லது முழு நேர இயக்குனர்கள், மேலாளர் ஆகியோரின் அதிகாரங்கள் முடிவுக்கு வருகின்றன. நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனம்

குறித்து பதிவாளருக்கு அறிவிப்பு அனுப்புவதற்கு இயக்குனரவைக்கு உள்ள அதி காரம் மட்டும் இதற்கு விதிவிலக்கு **பிரிவு 313** கூறுகிறது.

3. தன்விருப்பக் கலைப்பில் நிறுவனக் கலைப்பதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் (Powers and Duties of Company in Voluntary winding up) – பிரிவு 314:

நிறுவனத்தின் உறுப்பினர்களால் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் வாயிலாக ஒரு நிறுவனம் கலைப்படுகிறவிடத்து, அதற்காக அந்நிறுவனத்தால் நியமனம் செய்யப்படுகின்ற நிறுவனக் கலைப்பதிகாரி கலைப்பு நடவடிக்கைகளை எடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றார். 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத் தின் பிரிவு 314 அவருக்கான பல்வேறு அதிகாரங்களையும் கடமைகளையும் பின் வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது. அவை,

1, உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பின் நேர்வில் நிறுவனத்தால் (அல்லது கடனீந்தவர்களால்) அவ்வப்போது தீர்மானிக்கப்படும் அத்தகு பணிகளை நிறுவனக் கலைப்பதிகாரி ஆற்றுதல் வேண்டும். அவ்வாறே அத்தகு கடமைகளையும் அவர் நிறைவேற்ற வேண்டும் என்று பிரிவு 314(1) கூறுகிறது.

2. பங்காளிப்பாளர்களின் விவரப் பட்டியலை நிறுவன கலைப்பதிகாரி தயாரிக்க வேண்டும். இதுதான் அதில் பங்காளிப்பாளர்களாக பெயர் குறிக்கப்பட்ட நபர்களின் பொறுப்புக்குரிய முதற்தோற்ற சான்றாகும் என்று பிரிவு 314(2) கூறுகிறது.

3. நேர்வின் தேவைக்கேற்றவாறு சாதாரண அல்லது சிறப்புத் தீர்மானத் தால் அனுமதி பெறும் நோக்கத்திற்காக நிறுவனத்தின் பொதுக் கூட்டத்திற்கு நிறுவனக் கலைப்பதிகாரி அழைப்பு விடுக்க வேண்டும். மேலும் தான் அவசியமெனக் கருதும் வேறு நோக்கம் எதற்காகவும் அத்தகு கூட்டத்திற்கு அவர் அழைப்பு விடுக்கலாம் என்று பிரிவு 314(3) கூறுகிறது.

4, நிறுவனத்திற்குரிய ஒழுங்கான மற்றும் முறையான கணக்கு வழக்குகளை நிறுவனக் கலைப்பதிகாரி பராமரித்து வர வேண்டும். அவற்றை உறுப்பினர்கள் அல்லது மைய அரசால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவரும் ஆய்வு செய்யலாம் என்று பிரிவு 314(4) கூறுகிறது.

5. நிறுவனத்தின் கணக்குகளுக்கான காலண்டு அறிக்கையை நிறுவனக் கலைப்பதிகாரி தயாரித்தல் வேண்டும். உரியவாறு தணிக்கை செய்யப்பட்ட அக்கணக்கறிக்கையை ஒவ்வொரு காலண்டு முடிவிலிருந்தும் முப்பது நாட்களுக்குள் அவர் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும். அவறினால் அவருக்கு அபராதம் விதிக்கப்படும் என்று பிரிவு 314(5) கூறுகிறது.

6. நிறுவனத்தின் கடன்களை நிறுவனக் கலைப்பதிகாரி செலுத்துதல் வேண்டும். பங்காளிப்பாளர்களின் உரிமைகளை அவர்களுக்கு சரிஎதிரீடு செய்தல் வேண்டும் என்று பிரிவு 314(6) கூறுகிறது,

7, நிறுவனக் கலைப்பதிகாரி தனது கடமைகளை நிறைவேற்றுவதில் உரிய கவனமும் சிரத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்று பிரிவு 314(7) கூறுகிறது.

8. மேற்கண்டதில் பிரிவு 314(5) தவிர, மற்ற வகைமுறைகளை நிறைவு செய்வதில் நிறுவனக் கலைப்பதிகாரி தவறுகை புரிந்தால், அவருக்கு பத்து இலட்சம் வரையிலான அபராதம் தண்டனையாக விதிக்கப்படும் என்று பிரிவு 314(8) கூறுகிறது.

4. குழுக்களை நியமித்தல் (Appointment of Committees) – பிரிவு 315:

கடனீந்தவர்கள் யாரும் இல்லாத நிறுவனமெனில் அது தனது பொதுக் கூட்டத்தில் தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு குழுக்களை தன்விருப்பக் கலைப்பை கண்காணிக்கவும் மற்றும் நிறுவனக் கலைப்பதிகாரி தனது பணிகளை நிறைவேற்றுவதில் அவருக்கு உதவிடவும் நியமனம் செய்யலாம்.

5. கலைப்பின் முன்னேற்றம் குறித்து நிறுவனக் கலைப்பதிகாரி அறிக்கையளித்தல் (Company Liquidator to submit report on progress of winding up) – பிரிவு 316:

நிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து காலண்டு தோறும் நிறுவனக் கலைப்பதிகாரி அந்நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு அறிக்கையளிக்க வேண்டும். மேலும் தேவைப்படும் போது ஆனால் குறைந்தபட்சம் ஒவ்வொரு காலாண்டிலும் ஒரு கூட்டதிற்காவது அழைப்பு விடுத்து நிறுவனக் கலைப்பு நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து உறுப்பினர்களை திருப்திபடுத்த வேண்டும்.

6. நபர்களை விசாரணை செய்யக் கோரி நிறுவனக் கலைப்பதிகாரி தீர்ப்பாயத்திற்கு அறிக்கையளித்தல் (Report of Company Liquidator to to Tribunal for examination of persons) – பிரிவு 317:

நிறுவனம் தொடர்பாக நபர் எவராலும் மோசடி ஒன்று புரியப்பட்டுள்ளதாக நிறுவனக் கலைப்பதிகாரி அபிப்பிராயப்பட்டால், அது குறித்து அவர் உடனடியான தீர்ப்பாயத்திடம் அறிக்கையளிக்க வேண்டும். இதன் பேரில் தீர்ப்பாயம், கலைப்பு நடவடிக்கைகளுக்கு யாதொரு குந்தகமுமின்றி, பிரிவு 210–இன் (நிறுவன விவகாரங்களை புலன் விசராணை செய்தல்) கீழ் புலன் விசாரணைக்கு ஆணையிடுதல் வேண்டும். அப்புலன் விசாரணை அறிக்கையை பரிசீலனை செய்வதன் பேரில், மோசடி செய்ததாக கூறப்படும் அந்நபரை தன் முன் தோன்றும்படி ஆணையிட்டு, அவரை அந்நிறுவனத்தின் தோற்றுவிப்பு அல்லது உருவாக்கம் அல்லது அதன் தொழிலை நடத்தும் முறை அல்லது அதன் ஓர் அலுவலராக அவரது நடத்தை மற்றும் தொடர்புகள் குறித்து விசாரித்தல் வேண்டும்.

7. இறுதிக் கூட்டமும் கலைப்பும் (Final Meeting and Dissolution) – பிரிவு 318:

நிறுவனம் முழுவதும் கலைக்கப்பட்டவுடன், நிறுவனக் கலைப்பதிகாரி அறிக்கையொன்றை தயாரித்தல் வேண்டும். அதில் நிறுவனத்தின் சொத்து அல்லது சொத்துடைமைகள் எவ்வாறு வகை செய்யப்பட்டன என்பது குறித்தும், அதன் கடன்கள் எவ்வாறு தீர்க்கப்பட்டன என்பது குறித்து கடனீந்தவர்களின் மன நிறைவுக்கு ஏற்ற வகையில் விளக்கிக் காட்ட வேண்டும். இதையடுத்து நிறுவனத்தின்

கலைப்பிற்கான இறுதிக் கணக்குகளை முன் வைப்பதற்காக அதன் பொதுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்த, அதற்கான விளக்கங்களை அளிக்க வேண்டும் என்று பிரிவு 318(1) கூறுகிறது.

மேற்கண்ட கூட்டமானது வகுத் துரைக்கப்படக் கூடிய அத்தகு வடிவிலும் முறையிலும் இருத்தல் வேண்டும் என்று பிரிவு 318 (2) கூறுகிறது.

நிறுவனக் கலைப்பதிகாரியின் அறிக்கையை நிறுவனப் பெரும்பான்மை உறுப்பினர்கள் பரிசீலனை செய்த பிறகு, தங்கள் நிறுவனம் கலைக்கப்படுவது குறித்து மனநிறைவடைந்தால், அதன் கலைப்பிற்கு அவர்கள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றலாம் என்று பிரிவு 318(3) கூறுகிறது.

கூட்டத்திற்குப் பிறகு இரண்டு வாரங்களுக்குள், பிரிவு 318(4)–இன்படி நிறுவனக் கலைப்பதிகாரியானவர்,

(a) பின்வரும் ஆவணங்களை நிறுவனங்களின் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும். அவை,

(i) நிறுவனத்தின் கலைப்பிற்கான இறுதிக் கணக்குகளின் நகல்;

(ii) கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்;

(b) நிறுவனக் கலைப்பதிகாரி தனது மேற்கண்ட அறிக்கையுடன் கலைப்பு தொடர்பான நிறுவனத்தின் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களுடன் விண்ணப் பொன்றை தீர்ப்பாயத்திடம் தாக்கல் செய்து, அதில் நிறுவனத்தைக் கலைப்பதற்கான ஆணையைப் பிறப்பிக்கும்படி வேண்டுதல் வேண்டும்.

நிறுவனக் கலைப்பதிகாரி அளித்த அறிக்கையை பரிசீலனை செய்த வகையில், அந்நிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கைகள் நியாயமாகவும் நேர்மையாகவும் நடந்துள்ளதாக தீர்ப்பாயம் மனநிறைவடையுமானால், அது நிறுவனக் கலைப்பதிகாரியின் மேற்படி விண்ணப்பம் கிடைக்கப் பெற்றலிருந்து அறுபது நாட்களுக்கு அந் நிறுவனத்தைக் கலைத்து ஆணையொன்றை பிறப்பித்தல் வேண்டும் என்று பிரிவு 318(5) கூறுகிறது.

இதைத் தொடர்ந்து அந்த கலைப்பு ஆணையின் நகலை நிறுவனக் கலைப்பதிகாரி முப்பது நாட்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும் என்று பிரிவு 318(6) கூறுகிறது.

இந்த நகல் கிடைக்கப் பெற்றவுடன், சம்பந்தப்பட்ட அந்நிறுவனம் கலைக்கப் பட்டுவிட்டதென அரசிதழில் அறிவிப்பு ஒன்றை பதிவாளர் உடனடியாக விளம்பரப் படுத்த வேண்டும் என்று பிரிவு 318(7) கூறுகிறது.

மேற்கண்ட வகைமுறைகளை நிறைவு செய்வதில் நிறுவனக் கலைப்பதிகாரி

தவறுகை புரிந்தால், அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என்று பிரிவு 318(9) கூறுகிறது.

2. கடனீந்தவர்களின் கூட்டம் (செல்வநிலை விளம்புகை செய்ய முடியாத நேர்வில்) – பிரிவு 306:

ஒரு நிறுவனத்தை, தன்விருப்பக் கலைப்பின்படி கலைக்க உத்தேசித்தால், முதலில் அந்நிறுவன இயக்குனர்கள், நிறுவனத்தின் கடன் தீர்க்கும் நிலையைப் பற்றி சட்டப்படி விளம்புகை ஒன்றை அளிக்க வேண்டும் என்றும், இது **'செல்வநிலை விளம்புகை' (Declaration of Solvancy)** என்றும் நாம் ஏற்கனவே கண்டோம். இதில் கடனேதுமில்லை அல்லது சொத்துடைமைகளை விற்று கடன்களை அடைத்து விட முடியும் என்று இயக்குனர்கள் செய்யும் விளம்புகை காரணமாக நிறுவனத்தின் விருப்பப்படி கலைப்பு நடக்கிறது. ஆனால் இதே விளம்புகையில் அந்நிறுவனம் தனது கடன் முழுவதையும் அடைக்க முடியாத நிலையில் உள்ளது என்றும், அதற்கெதிராக உள்ள கடன் கோரிக்கைகளின் மதிப்பு எவ்வளவு என்பது குறித்தும் இயக்குனர்கள் விளம்புகை செய்தால், அங்கு அந்நிறுவனத்திற்கு கடனீந்தவர்கள் கூடி கலைப்பு நடவடிக்கைகளை எடுக்கின்றனர்.

கடனீந்தவர்கள் தன்விருப்பக் கலைப்பிற்குப் பொருந்தும் சட்ட வகைமுறைகள் (Provisions applicable to a Creditors' Voluntary Winding up):

இதற்குத் தொடர்புடைய வகைமுறைகள் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 306 முதல் 318 வரையிலான சட்டப்பிரிவுகளில் காணப்படுகின்றன. [செல்வ நிலை விளம்புகையின் அடிப்படையில் நடக்கும் கலைப்பு தொடர்பான (உறுப்பினர்கள் தன்விருப்பக் கலைப்பு) வகைமுறைகளில் பல, இந்த கடனீந்தவர்களின் கூட்டத்தின் வாயிலாகத் தொடங்கும் கலைப்பிற்கும் (கடனீந்தவர்கள் தன்விருப்பக் கலைப்பு) சம் பந்தப்பட்டதாக (கலந்து வருவதாக) உள்ளது என்பதை அறிக)]. இனி விரிவாக...

1. கடனீந்தவர்களின் கூட்டம் (Meeting of the Creditors) – பிரிவு 306:

1. பிரிவு 306(1)–இன்படி, இம்முறையிலான கலைப்பின் முதற்கட்டமாக, நிறுவனம் தனது தன்விருப்பக் கலைப்பிற்கான தீர்மானத்தை முன் மொழிவதற்கான கூட்டமொன்றைக் கூட்ட வேண்டும். அத்துடன் அக்கூட்டம் நடத்தப்படும் அதே நாளில் அல்லது அதற்கு அடுத்த நாளில் அந் நிறுவனத்திற்கு கடனீந்தவர்களின் கூட்டம் ஒன்றிற் கும் நிறுவனம் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கான அறிவிப்பை, நிறுவனக் கூட்டத்திற்கான (உறுப் பினர்களின் கூட்டம்) அறிவிப்புடன்





சேர்த்து சம்பந்தப்பட்ட கடனீந்தவர்களுக்கு பதிவஞ்சல் வாயிலாக அந்நிறுவனம் அனுப்புதல் வேண்டும் என்று பிரிவு 306(1) கூறுகிறது.

2. நிறுவன இயக்குனரவையானது,–

(a) நிறுவனத்தின் முழு விவகாரங்கள் அடங்கிய அறிக்கையுடன் சேர்ந்த கடனீந்தவர்களின் பட்டியல் ஏது மிருப்பின் அதையும், முன் கண்ட பிரிவு 305–இன் கீழான செல்வநிலை விளம்புகை யின் நகல் மற்றும் கடன் கோரிக்கைகளின் தோராய மதிப்பீட்டையும் மேற்படி கூட்டத்தின் முன் வைக்க செய்தல் வேண்டும். மேலும்

(b) கூட்டத்திற்குத் தலைமை தாங்க இயக்குனர்களில் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டும் என்று பிரிவு 306(2) கூறுகிறது.

3. நிறுவனத்திற்கு கடனீந்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பின் வருமாறு அபிப்பிராயப்பட்டால், அதாவது,

(a) நிறுவனத்தை தன்விருப்பமாக கலைக்க வேண்டியது தரப்பினர்கள் அனைவரது நலனுக்கு ஏற்றது என்று அபிப்பிராயப்பட்டால் (தீர்மானித்தால்), அந் நிறுவனம் தன்விருப்பமாக கலைக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(b) தன்விருப்பக் கலைப்பில் விற்கப்படும் சொத்துடைமைகளின் விற் பனைத் தொகையிலிருந்து அந்நிறுவனம் தனது கடன்கள் முழுவதையும் அடைக்க இயலாது என்றும், அந்நிறுவனம் தீர்ப்பாயத்தால் (தீர்ப்பாயத்தால் கட்டாயமாகக் கலைக்கப்படுவது தொடர்பாக நாம் ஏற்கனவே கண்ட வகைமுறைகளின்படி) கலைக் கப்பட வேண்டியதே தரப்பினர்கள் அனைவரது நலனுக்கும் ஏற்றது என்றும் அபிப் பிராயப்பட்டால், அதன் பிறகான பதினான்கு நாட்களுக்குள் தீர்ப்பாயத்திடம் இதற் கென விண்ணப்பமொன்றை அளித்தல் வேண்டும், என்று பிரிவு 306(3) கூறுகிறது.

4. கடனீந்தவர்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கான அறிவிப்பானது அவ்வாறு நிறைவேற்றப்பட்டதிலிருந்து பத்து நாட்களுக்குள் அந்நிறு வனத்தால் பதிவாளரிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று பிரிவு 306(4) கூறுகிறது.

5. மேற்கண்ட வகைமுறைகளில் தவறுகை புரியும் நிறுவனத்திற்கும், அதன் இயக்குனருக்கும் தண்டனை உண்டு என்று பிரிவு 306(5) கூறுகிறது.

2. தீர்மானத்தை விளம்பரம் செய்ய வேண்டும் (Publication of resolution) – பிரிவு 307:

1. நிறுவனத்தை கலைக்க வேண்டும் என்று கடனீந்தவர்கள் பிரிவு 306 (3)–இன்படி தீர்மானம் நிறைவேற்றினால், அது நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து 14

தினங்களுக்குள் அத்தீர்மானம் குறித்த அறிவிப்பை அரசிதழில் விளம்பரப்படுத்த வேண்டும். மேலும் அந்நிறுவனத்தின் பதிவு அலுவலகம் உள்ள மாவட்டத்தில் புழங்கும் செய்தித்தாளிலும் விளம்பரப்படுத்த வேண்டும் என்று **பிரிவு 307(1)** கூறுகிறது.

3. நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனம் (Appointment of Company Liquidator) - பிரிவு 310(2):

நிறுவன விவகாரங்களை கலைக்கும் நோக்கத்திற்காகவும், அதன் சொத்துடைமைகளை பகிர்ந்தளிப்பதற்காகவும் அந்நிறுவனம் (உறுப்பினர்கள்) மைய அரசால் தயாரிக்கப்பட்டுள்ள பட்டியலில் இருந்து நிறுவனக் கலைப்பதிகாரி ஒருவரை நியமனம் செய்தல் வேண்டும். அந்த வகையில் நிறுவனத்தை கலைக்க வேண்டும் என்று கடனீந்தவர்கள் பிரிவு 306(3)–இன்படி தீர்மானம் நிறைவேற்றியிருக்குமிடத்து, நிறுவனக் கலைப்பதிகாரியை நியமனம் செய்வது என்பது நிறுவன மதிப்பில் பெரும் பான்மை கடனீந்தவர்களின் ஒப்புதல் பெற்ற பிறகு மட்டுமே செயல்விளைவுக்கு (அமலுக்கு) வரும் என்று **பிரிவு 310(2)** கூறுகிறது.

எனினும் அத்தகு பெரும்பான்மை கடனீந்தவர்கள் நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லையானால், மற்றொரு நிறுவனக் கலைப்பதிகாரியை (இதர) கடனீந்தவர்கள் நியமனம் செய்தல் வேண்டும்.

நிறுவனத்தால் (உறுப்பினர்களால்) நியமனம் செய்யப்பட்ட நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனத்திற்கு கடனீந்தவர்கள் ஒப்புதல் அளிக்கும் போது, அல்லது நேர்விற்கேற்ப தங்கள் விருப்பப்படி நிறுவனக் கலைப்பதிகாரியை நியமனம் செய்யும் போது, அவரது கட்டணம் குறித்து தகுந்த தீர்மானத்தை நிறைவேற்றுதல் வேண்டும் என்று பிரிவு 310(3) கூறுகிறது.

நிறுவனக் கலைப்பதிகாரியாக நியமனம் செய்யப்படுவதன் பேரில், அக் கலைப்பதிகாரி விளம்புகை ஒன்றை தனது நியமனத்திலிருந்து ஏழு நாட்களுக்குள் நிறுவனத்திடமும் கடனீந்தவர்களிடமும் செய்ய வேண்டும். அதில் தனது நியமனம் குறித்த நலனில் முரண்பாடு அல்லது சுதந்திரத் தன்மையின்மை ஏதேனுமிருப்பின் அது குறித்து வெளிப்படுத்த வேண்டும். அத்தகு கடப்பாடு அவரது நியமனக் காலம் வரை தொடர்ந்திருத்தல் வேண்டும் என்று பிரிவு 310(4) கூறுகிறது.

4. நிறுவனக் கலைப்பதிகாரியை நீக்கும் மற்றும் காலியிடத்தை நிரப்பும் அதிகாரம் (Power to remove and fill vacancy of Company Liquidator) - பிரிவு 311 :

மேற்படி பிரிவு 310–இன் கீழ் நியமனம் செய்யப்பட்ட நிறுவனக் கலைப்பதிகாரி, அவரது நியமனம் நிறுவனத்தால் (உறுப்பினர்களால்) செய்யப்பட்டிருந்தால் அந்நிறுவனத்தாலும், கடனீந்தவர்களால் (பெரும்பான்மையினரால்) ஒப்புதல் அளிக்கப் பட்டிருப்பின் அக்கடனீந்தவர்களாலும், அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்படவில்லை யெனில் மற்ற கடனீந் தவர்களாலும் நீக்கப்படலாம் என்று பிரிவு 311(1) கூறுகிறது.

மேற்கண்டவாறு நீக்கப்பட வேண்டிய நிறுவனக் கலைப்பதிகாரிக்கு அது குறித்த காரணங்களை விளக்கி எழுத்துப்பூர்வமான அறிவிப்பு ஒன்றை நிறுவனமும்

நேர்விற்கேற்றவாறு கடனீந்தவர்களும் கொடுக்க வேண்டும் என்று பிரிவு 311(2) கூறுகிறது.

நிறுவன உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கினர் அல்லது நேர்விற்கேற்றவாறு கடனீந்தவர்களின் மதிப்பில் நான்கில் மூன்று பங்கினர், நிறுவனக் கலைப்பதிகாரி தாக்கல் செய்யும் பதிலறிவிப்பை பரிசீலனை செய்த பிறகு, அவரை நீக்க வேண்டும் என்று முடிவு செய்தால், அவர் தனது பதவியை விட்டு விலகுதல் வேண்டும் என்று பிரிவு 311(3) கூறுகிறது.

பிரிவு 310–இன்படி நியமனம் செய்யப்பட்ட நிறுவனக் கலைப்பதிகாரியின் பதவியில் இறப்பு, பதவித்துறப்பு, நீக்கம் அல்லது வேறுவிதமாக காலியிடம் ஏற்படுமானால், அந்நிறுவனம் அல்லது அதற்குக் கடனீந்தவர்கள் அக்காலியிடத்தை மேற்படி பிரிவு 310–இல் கூறப்பட்டவாறு நிரப்புதல் வேண்டும் என்று பிரிவு 311(4) கூறுகிறது.

(மேற்சென்ற 3 மற்றும் 4–ஆம் பத்திகளில் கண்ட வகைமுறைகள் "செல்வ நிலை விளம்புகையின் அடிப்படையில் செய்யப்படும் உறுப்பினர்களின் தன் விருப்பக் கலைப்பிற்கும்" பொருந்துவதாகும் என்பதையும், இவற்றில் வரும் கடனீந்தவர்கள் தொடர்பான பகுதியை நீக்கிவிட்டால், அது உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பிற்கு பொருந்தும் வகைமுறையாகிவிடும் என்பதையும் கவனத்தில் கொள்க. இவ்விரண்டு பத்திகளில் வரும் விவரங்களில் கடனீந்தவர்கள் தொடர்பான பகுதியை மட்டும் நீக்கிவிட்டு உறுப்பினர்கள் தொடர்பான பகுதியை செல்வநிலை விளம்புகை அடிப்படையிலான உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பு தொடர்பான வினாவிற்குரிய விடையாக தேர்வில் எழுத வேண்டும் – **ஆர்)**

5. நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனம் குறித்து பதிவாளருக்கு அறிவிக்க வேண்டும் (Notice of appointment of Company Liquidator to be given to Registrar) - பிரிவு 312 (1):

நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனம் குறித்தும், அவரது பெயர் விவரங்களையும், அவரது பதவியில் ஏற்படும் காலியிடம் மற்றும் அதை நிரப்புவதற்காக நியமனம் செய்யப்படும் நிறுவனக் கலைப்பதிகாரியின் பெயர் குறித்த விவரங்களை அத்தகு நியமனம் அல்லது அத்தகு காலியிடம் ஏற்படுகின்ற தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் பதிவாளருக்கு அறிவிப்பொன்றை நிறுவனம் வழங்க வேண்டும்

6. இயக்குனரவையின் அதிகாரங்கள் முடிவுறும் (Cesser of Board's powers on appointment of Company Liquidator) – பிரிவு 313:

நிறுவனக் கலைப்பதிகாரி நியமனம் செய்யப்பட்டவுடன், இயக்குனரவை, மேலாண்மை இயக்குனர் அல்லது முழு நேர இயக்குனர்கள், மேலாளர் ஆகியோரின் அதிகாரங்கள் முடிவுக்கு வருகின்றன. நிறுவனக் கலைப்பதிகாரியின் நியமனம் குறித்து பதிவாளருக்கு அறிவிப்பு அனுப்புவதற்கு இயக்குனரவைக்கு உள்ள அதிகாரம் மட்டும் இதற்கு விதிவிலக்கு **பிரிவு 313** கூறுகிறது.

3. நிறுவனக் கலைப்பதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் (Powers and Duties of Company Liquidator in creditors winding up) – பிரிவு 314:

செல்வநிலை விளம்புகை அடிப்படையிலான உறுப்பினர்களின் தன் விருப்பக் கலைப்பு ஒன்றில் நியமனம் செய்யப்படும் நிறுவனக் கலைப்பதிகாரிக்கு எத்தகு அதிகாரங்களும் கடமைகளும் உள்ளனவோ அவை அனைத்தும் அப்படியே கடனீந்தவர்களின் தன்விருப்பக் கலைப்பிற்கும் பொருந்தும். அந்த அதிகாரங்களையும் கடமைகளையும் பிரிவு 314–இன் வாயிலாக நாம் ஏற்கனவே இதற்கு முன் சென்ற பக்கங்களில் கண்டுள்ளோம். எனவே அங்கு கொடுக்கப்பட்டுள்ளதை இங்கு அப்படியே பொருத்திக் கொள்ளலாம். (இருப்பினும் உறுப்பினர்கள் தன்விருப்பக் கலைப்பில், இவர் தனது அதிகாரங்களை நிறுவனத்தின் சிறப்புத் தீர்மானத்தால் கொடுக்கப்பட்ட அனுமதியுடன் பயன்படுத்துகிறார். ஆனால் கடனீந்தவர்களின் தன் விருப்பக் கலைப்பில், இவர் தனது அதிகாரங்களை கடனீந்தவர்கள் கூட்டத்தில் வழங்கப்படும் ஒப்புதலுடன் பயன்படுத்துகிறார்.)

4. குழுக்களை நியமித்தல் (Appointment of Committees) – பிரிவு 315:

பிரிவு 306–இன் கீழ் நடத்தப்படும் கடனீந்தவர்களின் கூட்டத்தில், அக் கடனீந்தவர்கள் தாங்கள் பொருத்தமெனக் கருதும் அத்தகு குழுக்களை கலைப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கவும் மற்றும் நிறுவனக் கலைப்பதிகாரி தனது பணிகளை நிறைவேற்றுவதில் அவருக்கு உதவிடவும் நியமனம் செய்யலாம்.

5. கலைப்பின் முன்னேற்றம் குறித்து நிறுவனக் கலைப்பதிகாரி அறிக்கையளித்தல் (Company Liquidator to submit report on progress of winding up) – பிரிவு 316(1):

நிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து காலண்டு தோறும் நிறுவனக் கலைப்பதிகாரி அந்நிறுவனத்தின் கடனீந்தவர்களுக்கு அறிக்கையளிக்க வேண்டும். மேலும் தேவைப்படும் போது ஆனால் குறைந்தபட்சம் ஒவ்வொரு காலாண்டிலும் ஒரு கூட்டதிற்காவது அழைப்பு விடுத்து நிறுவனக் கலைப்பு நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து கடனீந்தவர்களை திருப்திபடுத்த வேண்டும்.

6. நபர்களை விசாரணை செய்யக் கோரி நிறுவனக் கலைப்பதிகாரி தீர்ப்பாயத்திற்கு அறிக்கையளித்தல் (Report of Company Liquidator to to Tribunal for examination of persons) – பிரிவு 317:

நிறுவனம் தொடர்பாக நபர் எவராலும் மோசடி ஒன்று புரியப்பட்டுள்ளதாக நிறுவனக் கலைப்பதிகாரி அபிப்பிராயப்பட்டால், அது குறித்து அவர் உடனடியான தீர்ப்பாயத்திடம் அறிக்கையளிக்க வேண்டும். இதன் பேரில் தீர்ப்பாயம், கலைப்பு நடவடிக்கைகளுக்கு யாதொரு குந்தகமுமின்றி, பிரிவு 210–இன் (நிறுவன விவகாரங்களை புலன் விசராணை செய்தல்) கீழ் புலன் விசாரணைக்கு ஆணையிடுதல் வேண்டும். அப்புலன் விசாரணை அறிக்கையை பரிசீலனை செய்வதன் பேரில், மோசடி செய்ததாக கூறப்படும் அந்நபரை தன் முன் தோன்றும்படி ஆணையிட்டு, அவரை அந்நிறு

வனத்தின் தோற்றுவிப்பு அல்லது உருவாக்கம் அல்லது அதன் தொழிலை நடத்தும் முறை அல்லது அதன் ஓர் அலுவலராக அவரது நடத்தை மற்றும் தொடர்புகள் குறித்து விசாரித்தல் வேண்டும்.

7. இறுதிக் கூட்டமும் கலைப்பும் (Final Meeting and Dissolution) – பிரிவு 318:

இது குறித்து செல்வவிளம்புகை அடிப்படையிலான உறுப்பினர்களின் தன் விருப்பக் கலைப்பில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் அப்படியே கடனீந்தவர்களின் தன்விருப்பக் கலைப்பிற்கும் பொருந்தும். எனவே நாம் ஏற்கனவே அங்கு கண்ட பிரிவு 318–இன் கீழான வகைமுறைகளை இங்கு வாசித்துக் கொள்ளவும்.

8. நிறுவனம் மற்றும் கடனீந்தவர்களுக்கிடையிலான ஏற்பாடு எப்போது கட்டுப்படுத்தக் கூடியதாகும் (Arrangement when binding on company and creditors) – பிரிவு 321:

கலைக்கப்படும் நிலையில் உள்ள அல்லது கலைப்பு நடவடிக்கையில் உள்ள நிறுவனத்திற்கும் அதன் கடனீந்தவர்களுக்கும் இடையே ஏற்பாடு ஏதும் ஏற்பட்டால், அது நிறுவனத்தின் சிறப்புத் தீர்மானம் ஒன்றால் அனுமதிக்கப்பட்டால் மற்றும் அக்கடனீந்தவர்கள் அனைவருக்கும் செலுத்தப்பட மொத்த பாக்கித் தொகையின் மதிப்பில் நான்கில் மூன்று பங்கை வைத்திருக்கும் கடனீந்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அந்த ஏற்பாடு நிறுவனத்தையும் கடனீந்தவர்களையும் கட்டுப்படுத்தக் கூடியதாகும் என்று பிரிவு 321(1) கூறுகிறது.

மேற்கண்ட ஏற்பாடு செய்து முடிக்கப்பட்டதிலிருந்து மூன்று வாரங்களுக்குள் கடனீந்தவர் அல்லது பங்களிப்பாளர், அது குறித்து தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கலாம். அதன்பேரில் அந்த ஏற்பாட்டை தீர்ப்பாயம் திருத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது இரத்து செய்யலாம் என்று பிரிவு 321(2) கூறுகிறது. அதாவது இவ்வாறு செய்ய தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் உண்டு என்பதை இப்பிரிவு கூறுகிறது.

9. பிரச்சனைகளைத் தீர்மானிப்பது முதலியவற்றுக்காக தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பிக்கும் அதிகாரம் (Power to apply to Tribunal to have questions determined etc.) – பிரிவு 322:

இது ஒரு பொதுவான வகைமுறை. இதன்படி, நிறுவனக் கலைப்பதிகாரி அல்லது பங்களிப்பாளர் அல்லது கடனீந்தவர் எவரும் பிரச்சனைகளைத் தீர்மானிப்பது முதலியவற்றுக்காக தீர்ப்பாயத்திடம் விண்ணப்பிக்கலாம் என்று பிரிவு 322(1) கூறுகிறது. அதன்படி,

(a) நிறுவனமொன்றின் கலைப்பு நடவடிக்கையின் போது எழும் பிரச்சனை எதையும் தீர்மானிக்க; அல்லது

(b) கூட்டத்திற்கான அழைப்பை வலியுறுத்தும், வழக்கு நடவடிக்கைகளை நிறுத்தும் (தடை செய்யும்) அல்லது வேறு விடயம் எதற்குமான அதிகாரத்தை செயற்படுத்தக் கோரியும், மேலும் தீர்ப்பாயத்தால் ஒரு நிறுவனம் கலைக்கப்பட்டால்

அத்தீர்ப்பாயம் எத்தகு அதிகாரங்களை செயலுறுத்துமோ அந்த அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையேனும் செயற்படுத்தக் கோரியும் தீர்ப்பாயத் திற்கு விண்ணப்பிக்கலாம்.

நிறுவனக் கலைப்பதிகாரி அல்லது கடனீந்தவர் அல்லது பங்களிப்பாளர் எவரும் கலைப்பு நடவடிக்கை தொடங்கிய பிறகு நிறுவனத்தின் சொத்து அல்லது விளைவுகளுக்கு எதிராகத் தொடரப்பட்ட பற்றுகை, இடர் விற்பனை அல்லது நிறை வேற்றுகை எதையும் இரத்து செய்ய கோரி ஆணை ஒன்றைப் பிறப்பிக்க தீர்ப்பாயத் திடம் விண்ணப்பிக்கலாம் என்று பிரிவு 322(2) கூறுகிறது.

மேற்கண்ட இரு உட்பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் தீர்ப்பாயம் மனநிறைவடைந்தால், அது அவ்விண்ணப்பத்தை தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு வரைவுரைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதிக் கலாம் என்று பிரிவு 322(3) கூறுகிறது.

இப்பிரிவின் கீழ் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்துவதற்காகச் செய்யப்பட்ட ஆணையொன்றின் நகலொன்றை உடனடியாக பதிவாளருக்கு நிறுவனம் அனுப்புதல் வேண்டும். அவர் அந்நிறுவனம் குறித்த தனது ஏடுகளில் அது குறித்து சிறு குறிப் பொன்றை செய்தல் வேண்டும் என்று பிரிவு 322(4) கூறுகிறது.

10. தன் விருப்பக் கலைப்பின் செலவுத் தொகை (Costs of voluntary winding up) – பிரிவு 323:

நிறுவனக் கலைப்பில் உரியவாறு செலழிக்கப்பட்ட நிறுவனக் கலைப்பதிகாரி யின் கட்டணம் உள்ளடங்கிய செலவுத் தொகைகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் அனைத்தும், பிணையம் பெற்ற கடனீந்தவர்களின் உரிமைகளுக்கு உட்பட்டு, அந்நிறு வனத்தின் சொத்துடைகளிலிருந்து செலுத்தப்படத்தக்கதாகும். இச்செலவுத் தொகைகள் செலுத்தப்படுவதற்கு எல்லாக் கோரிக்கைகளையும் விட முதலிடம் கொடுக்க வேண்டும் என்று பிரிவு 323 கூறுகிறது. (இதுவும் ஒரு பொதுவான வகை முறையாகும்).

முடிவாக சில குறிப்புகள்:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 20–வது அத்தியாயம் நிறுவ னமொன்றின் கலைப்பு பற்றி வகைமுறைகளைக் கொண்டதாகும். அதில் வரும் முதல் பிரிவான 270–ஆனது **நிறுவனக் கலைப்பின் முறைகள் (Modes of winding up)** பற்றிக் கூறுகிறது. அதற்கடுத்து வரும் வகைமுறைகள் மொத்தம் 4 பகுதிகளின் கீழ் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. முதற்பகுதியானது, ஒரு **நிறுவனம் தீர்ப்பாயத் தால் கலைக்கப்படுவதற்கான (Winding up by the Tribunal)** வகைமுறைகள் பற்றி 271 முதல் 303 வரையிலான பிரிவுகள் கூறுகின்றன. இரண்டாம் பகுதியில் **தன்விருப்பக் கலைப்பு (Voluntary winding up)** பற்றி 304 முதல் 323 வரையி லான பிரிவுகள் கூறுகின்றன. இதில் உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பு மற்றும் கடனீந்தவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் நடத்தப்படும் கூட்டத்தின் மூலமான கலைப்பு பற்றிய வகைமுறைகள் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவ்வகைமுறைகள் ஒரே

பிரிவில் தனியாகவும், அதே பிரிவில் கலந்தும் கூறப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப் பிடத்தக்கதாகும். மூன்றாம் பகுதியில் **கலைப்பு முறை ஒவ்வொன்றுக்கும் பொருந் தும் வகைமுறைகள் (Provisions applicable to every mode of winding up)** சிலவற்றை 324 முதல் 358 வரையிலான பிரிவுகள் விளக்குகின்றன. நான்காம் பகுதியில் **முறையார்ந்த கலைப்பதிகாரிகள் (Official Liquidators)** பற்றி 359 முதல் 365 வரையிலான பிரிவுகள் விளக்குகின்றன.

நிறுவனச் சட்டத்தில் அதிக சட்டப்பிரிவுகளை உள்ளடக்கி மிக நீண்டதொரு அத்தியாயமாக விளங்கும் நிறுவனக் கலைப்பு பற்றிய வகைமுறைகள் தற்போதைய 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தைக் காட்டிலும் பழைய 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் ஒரு கட்டுக்கோப்பான விதத்தில் இருந்தது என்று கூறினால் அதை மறுக்கமுடியாது. காரணம் எளிமைதான். அதாவது, பழைய சட்டத் தில் நிறுவனத்தின் தன்விருப்பக் கலைப்பானது (1) உறுப்பினர்களின் தன்விருப்பக் கலைப்பு (2) கடனீந்தவர்களின் தன்விருப்பக் கலைப்பு என இரு வகைகளில் பிரிக்கப் பட்டு, அவற்றுக்கு முறையே பொருந்தும் வகைமுறைகள் தனித்தனியாக கொடுக்கப் பட்டிருந்தன. அத்துடன் அவற்றின் ஆங்கில மொழிநடையானது திரும்பத்திரும்ப ஒரே மாதிரியாக சுற்றி வளைக்காமல் தெளிந்த நீரோடை போல் இருந்தது.

ஆனால் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டமானது, மேற்கண்ட இரு வகையான தன்விருப்பக் கலைப்பிற்கும் வேறுபாடு எதையும் அதிகம் காட்டாமல், ஒன்றாக இணைத்தவாறு வகைமுறைகள் செய்துள்ளது. எடுத்துக்காட்டாக, நிறு வனக் கலைப்பதிகாரியின் நியமனம் (பிரிவு 310), நீக்கம் (பிரிவு 311), நியமனம் குறித்து பதிவாளருக்கு அறிவித்தல் (பிரிவு 312), குழுக்களை நியமனம் செய்தல் (பிரிவு 315) ஆகியவற்றில் மேற்கண்ட இரண்டு வகையான வகைமுறைகளும் கலந்து வருகின் றன. அதே நேரத்தில் செல்வநிலை விளம்புகை (பிரிவு 305), கடனீந்தவர்களின் கூட்டம் (பிரிவு 306), தன்விருப்பக் கலைப்பின் தொடக்கம் (பிரிவு 308) ஆகியன அது அதற்குரிய கலைப்பு பற்றிய வகைமுறைகளை தனியாக விளக்குகின்றன. மேலும் சில பிரிவுகள் எடுத்துக்காட்டாக, நிறுவனக் கலைப்பதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் (பிரிவு 314), இறுதிக் கூட்டமும் நிறுவனத்தின் கலைப்பும் (பிரிவு 318) ஆகியன மேற்கண்ட தன்விருப்பக் கலைப்பின் இரு வகைகளுக்கும் பொதுவானதாக உள்ளன. நிறுவனக் கலைப்பு தொடர்பான 2013–ஆம் ஆண்டு சட்டத்தின் ஆங்கில மொழி நடையானது நீண்ட வாக்கியங்களாக தேவையற்ற முறையில் அமைந்து வாசிப்பதற்கு சலிப்பூட்டும் வண்ணம் உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, நாம் இதுவரை கண்ட இந்த அத்தியாயத்தில் நிறுவ னக் கலைப்பு தொடர்பான வகைமுறைகள் ஒரு சீரான அலைவரிசையில் படிப்படியாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றை எளிதாக வாசித்து மனதில் பதிந்து கொள்வதற்கு ஏதுவாக ஆங்காங்கே வழிகாட்டும் குறிப்புகளும் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப் பட்டுள்ளன. நிறுவனக் கலைப்பு தொடர்பாக தேர்வில் கேட்கப்படும் வினாவை நன்கு வாசித்துப்புரிந்து விடையளிக்கவும். தீர்ப்பாயத்தால் கலைக்கப்படும் விதம் பற்றி வினா கேட்கப்பட்டால் அது குறித்து மட்டும், தன்விருப்பக் கலைப்பு குறித்து வினா கேட்கப்

பட்டால் மேற்கண்ட இரண்டு முறைகள் குறித்தும், உறுப்பினர்கள் தன்விருப்பக் கலைப்பு பற்றி தனியாக வினவப்பட்டால் அது தொடர்பானது மட்டும், அவ்வாறே கடனீந்தவர்களின் கலைப்புக்கு அது சம்பந்தப்பட்டது மட்டும் எழுதி விடையளிக்கவும்.

99. Give an account on official liquidator. What are the powers of liquidator? (கலைப்பு அலுவலர் பற்றி குறிப்பு எழுதுக. கலைப்பு அலுவலரின் அதிகாரங்கள் யாவை?)

(அல்லது)

Official Liquidators - Write short notes. (கலைப்பு அதிகாரிகள் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Discuss the provisions relating to the summary procedure of liquidation under the Companies Act, 2013. (நிறுவனங்கள் சட்டம் 2013ன் கீழ் சுருக்க நடைமுறை கலைப்பு தொடர்பான வகைமுறைகளை விவாதிக்க)

முன்னுரை:

ஒரு நிறுவனத்தை இரண்டு முறைகளின் கீழ்க் கலைக்கலாம். அவை (1) தீர்ப்பாய ஆணையின் கீழ் கலைக்கப்படுதல் (2) தன்விருப்பக் கலைப்பு. இக்கலைப்பு நடவடிக்கைகளில், அந்தந்த நேர்விற்கேற்ப, இரண்டு விதமான கலைப்பதிகாரிகள் அப்பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்கள், (1) முறையார்ந்த கலைப்பதிகாரி (Official Liquidator). (2) கலைப்பதிகாரி (Liquidator). இவர்களில் ஒருவர் நிறுவனக் கலைப்பதிகாரி (Company Liquidator) அல்லது தற்காலிக கலைப்பதிகாரியாக (Provisional Liquidator) நியமனம் செய்யப்படலாம். இவர்களைக் குறித்து பின்வருமாறு காண்போமா?

முறையார்ந்த கலைப்பதிகாரி (Official Liquidator):

பட்டயக் கணக்காயர்கள், வழக்குரைஞர்கள், நிறுவனச் செயலாளர்கள், மதிப்பு கணக்காயர்கள் ஆகியோரின் பெயர்களை உள்ளடக்கியதும் மைய அரசால் பராமரிக்கப்பட்டு வருவதுமான பட்டியலில் இருந்து அல்லது அத்தகு பட்டயக் கணக்காயர்கள், வழக்குரைஞர்கள், நிறுவனச் செயலாளர்கள், மதிப்புக் கணக்காயர்கள் மைய அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகு வேறு தொழிலர்களைக் கொண்ட நிறுமங்கள் அல்லது கூட்டுரு அமைப்புகள் அல்லது நிறுவன விடயங்களில் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்களும் அத்தகு தொழிலர்களை ஒரு கலவையாக கொண்ட நபர்களின் நிறுமம் அல்லது கூட்டுரு அமைப்பிலிருந்து முறையார்ந்த கலைப்பதி காரி ஒருவரை நிறுவனமொன்றின் கலைப்பிற்கு தீர்ப்பாயம் ஆணையிடும் சமயத்தில் அது நியமனம் செய்யலாம் என்று **பிரிவு 275** கூறுகிறது.

கலைப்பதிகாரி (Liquidator) மற்றும் நிறுவனக் கலைப்பதிகாரி (Company Liquidator):

முறையார்ந்த கலைப்பதிகாரி என்ற பதமும் கலைப்பதிகாரி என்ற பதமும் ஏறத்தாழ ஒன்றேயாகும். நிறுவனமொன்றைக் கலைப்பதற்கான ஆணையை தீர்ப்பாயம் பிறப்பிக்கும் போது அது மேற்கண்டவாறு முறையார்ந்த கலைப்பதிகாரி ஒருவரையோ அல்லது கலைப்பதிகாரி ஒருவரையோ நியமனம் செய்கிறது. இவர்கள் இருவரும் மைய அரசால் மேற்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வரும் பட்டியலில் இருந்து நியமனம் செய்யப்படுபவர்கள் ஆவார். இவர்கள் இருவரில் ஒருவரை நிறுவனக் கலைப்பதிகாரியாக (Company Liquidator) தீர்ப்பாயம் நியமனம் செய்கிறது.

தற்காலிக கலைப்பதிகாரி (Provisional Liquidator):

ஒரு நிறுவனத்தைக் கலைக்கக் கோரி தாக்கல் செய்யப்படும் மனு கிடைக்கப் பெறுவதன் பேரில், தற் காலிக கலைப்பதிகாரி ஒருவரை பிரிவு 273(1)(c)–இன்படி தீர்ப்பாயம் நியமனம் செய்கிறது. இவர் அந்நிறுவனத்தைக் கலைப்பதற்காக தீர்ப்பாயம் ஆணை பிறப்பிக் கும் வரை அவ்வாறு தற்காலிக கலைப்பதிகாரியாக தொடர்ந்து நீடித்திருப்பார்.

வேறு விதத்தில் சொல்வதென்றால், ஒரு நிறுவனம் தீர்ப்பாயத்தின் ஆணையால் கலைக்கப்படும் பொழுது, இத்தற்காலிக கலைப்பதிகாரி நியமிக்கப்பட வேண்டிய சூழல் உருவாகிறது. அதாவது, கலைப்பிற்கான மனு கொடுக்கப்பட்ட பின்னர் ஆனால் கலைப்பிற்கான ஆணை பிறப்பிக்கப்படும் வரை எச்சமயத்திலும், தீர்ப்பாயமானது, முறையார்ந்த கலைப்பதிகாரி ஒருவரை (Official Liquidator) அந்நிறுவனத்தின் தற்காலிக கலைப்பதிகாரியாக (Provisional Liquidator) நியமனம் செய்யலாம். அவரது அதிகாரங்களை தீர்ப்பாயமே வரையறுத்துக் கூறலாம் என்றும், அப்படி வரையறுத்துக் கூறாவிட்டால், கலைப்பதிகாரி ஒருவருக்குள்ள அதே அதிகாரங்களை அவர் கொண்டிருப்பார் என்றும் பிரிவு 275(3) கூறுகிறது.

மேலும் நிறுவனக் கலைப்பிற்கான ஆணையை தீர்ப்பாயம் பிறப்பிக்கின்ற போது, இவர் தனது தற்காலிக கலைப்பதிகாரி பதவியை வகித்தல் இயலாது. இவர் அந்நிறுவனத்தைக் கலைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிறுவனக் கலைப்பதிகாரியாக (Company Liquidator) ஆகிவிடுகிறார் என்று பிரிவு 275(7) கூறுகிறது.

முறையார்ந்த கலைப்பதிகாரிகளுக்கு பொருந்தும் வகை முறைகள் (The provisions applicable to Official Liqui-

dators):

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் அத்தியாயம் 20 நிறுவனக் கலைப்பு பற்றி கூறுகிறது. அதன் கீழ் வரும் நான்காம் பகுதியில் "முறையார்ந்த கலைப் பதிகாரிகள்" பற்றிய வகைமுறைகள் 359 முதல் 365 வரையிலான பிரிவுகளின் வாயிலாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

நாம் மேலே கண்டவாறு **ஒரு நிறுவனம் தீர்ப்பாயத்தின் ஆணையால் கலைக்கப்படும் போது** இத்தகு முறையார்ந்த கலைப்பதிகாரிகள் நியமனம் செய்யப் படுகிறார்கள். தொடர்புடைய வகைமுறைகளை இனி பின்வருமாறு காண்போம்.

1. முறையார்ந்த கலைப்பதிகாரியின் நியமனம் (Appointment of Official Liquidator) – பிரிவு 359:

தீர்ப்பாயத்தால் நிறுவனமொன்று கலைக்கப்படுவதற்குத் தொடர்பான இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, முறையார்ந்த கலைப்பதிகாரியின் பணிகளை நிறை வேற்றுவதற்கு அவசியமென மைய அரசு கருதலாகும் அத்தகு எண்ணிக்கையிலான முறையார்ந்த கலைப்பதிகாரிகள், இணை, துணை அல்லது உதவி முறையார்ந்த கலைப்பதிகாரிகளை அது நியமனம் செய்யலாம் என்று பிரிவு 359(1) கூறுகிறது.

மேற்கண்டவாறு நியமனம் செய்யப்படும் கலைப்பதிகாரிகள், மைய அரசின் முழு நேர அலுவலர்கள் ஆவர் என்று பிரிவு 359(2) கூறுகிறது.

முறையார்ந்த கலைப்பதிகாரி (Official Liquidator), முறையார்ந்த இணைக் கலைப்பதிகாரி (Joint Official Liquidator), முறையார்ந்த துணை கலைப்பதிகாரி (Deputy Official Liquidator), முறையார்ந்த உதவி கலைப்பதி காரி (Assistant Official Liquidator) ஆகியோரின் சம்பளம் மற்றும் இதர படிகள் மைய அரசால் வழங்கப்படும் என்று பிரிவு 359(3) கூறுகிறது.

2. முறையார்ந்த கலைப்பதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் (Powers and functions of Official Liquidator) – பிரிவு 360:

முறையார்ந்த கலைப்பதிகாரியானவர், மைய அரசு வகுத்துரைக்கலாகும் அத்தகு அதிகாரங்களை செயற்படுத்த வேண்டும். அதுபோல் அத்தகு கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று பிரிவு 360(1) கூறுகிறது.

மேற்சென்ற வகைமுறைக்கு யாதொரு குந்தகமுமின்றி, முறையார்ந்த கலைப்பதிகாரியானவர்–

(a) இந்தச் சட்டத்தின் கீழ் நிறுவனக் கலைப்பதிகாரி ஒருவரால் செயற் படுத்தப்படலாகும் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையாவது செயற்படுத்தலாம்; மற்றும்

(b) தீர்ப்பாயத்தால் அல்லது மைய அரசால் ஏவுரைக்கப்பட்டால், கலைப்பு நடவடிக்கைகளிலிருந்து எழும் விடயங்கள் குறித்து விசாரணைகள் அல்லது புலன்விசாரணைகள் நடத்தலாம் என்று பிரிவு 360(2) கூறுகிறது.

2. கலைப்பிற்கான சுருக்க நடைமுறை (Summary procedure for liquidation) – பிரிவு 361:

ஒரு நிறுவனம் இந்த அத்தியாயத்தின் கீழ் (அதாவது தீர்ப்பாயத்தின் ஆணையால் அல்லது தன்விருப்பத்தினால் நிறுவனம் கலைக்கப்படுதல்) கலைக்கப் பட வேண்டியவிடத்து, அந்நிறுவனம்–

(i) ஒரு கோடி ரூபாய்க்கும் மிகாத புத்தக மதிப்புடைய சொத்துடைமைகளை கொண்டிருந்தாலும்

(ii) வகுத்துரைக்கப்படலாகும் நிறுவனங்களின் அத்தகு வகை அல்லது வகைகளைச் சேர்ந்ததாக இருந்தாலும்,

இந்தப் பகுதியின் கீழ் வகை செய்யப்பட்ட சுருக்க நடைமுறையின்படி அந் நிறுவனத்தைக் கலைக்க மைய அரசு ஆணையிடலாம் என்று பிரிவு 361(1) கூறுகிறது.

மேற்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுமிடத்து, மைய அரசானது முறையார்ந்த கலைப்பதிகாரி ஒருவரை அந்நிறுவனத்தின் கலைப்பதிகாரியாக நியமனம் செய்தல் வேண்டுமென பிரிவு 361(2) கூறுகிறது.

இதையடுத்து முறையார்ந்த கலைப்பதிகாரி உடனடியாக அந்நிறுவனத் திற்கு உரிமையுடைய அல்லது அவ்வாறு தோன்றுகின்ற சொத்துடைமைகள், அதன் விளைவுகள் மற்றும் தொடர்தகு பாத்தியங்கள் அனைத்தையும் தனது பாதுகாப்புப் பொறுப்பிலும் கட்டுப்பாட்டிலும் எடுத்துக் கொள்ளல் வேண்டும் என்று பிரிவு 361(3) கூறுகிறது.

முறையார்ந்த கலைப்பதிகாரி, தனது நியமனத்திலிருந்து முப்பது நாட்களுக் குள், அந்நிறுவனத்தின் தோற்றுவிப்பு, உருவாக்கம் அல்லது அதன் விவகாரங்களின் மேலாண்மையில் மோசடி ஏதும் புரியப்பட்டுள்ளதா, இல்லையா என்பது குறித்த தனது அபிப்பிராயத்திற்குரிய அறிக்கை ஒன்றையும், அத்துடன் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு முறையிலும் படிவத்திலும் கூடிய அறிக்கை ஒன்றையும் மைய அரசுக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்று பிரிவு 361(4) கூறுகிறது.

மேற்கண்ட அறிக்கையை பெறுவதன் பேரில், மேற்கூறிய மோசடி எதுவும் அந்நிறுவனத்தின் தோற்றவிப்பாளர்கள், இயக்குனர்கள் அல்லது வேறு அலுவலர் எவராலும் புரியப்பட்டுள்ளதாக மைய அரசு மனநிறைவடைந்தால், அது அந்நிறுவன விவகாரங்களை மேற்கொண்டு புலன்விசாரணை செய்து அறிக்கையளிக்கும்படி ஏவுரைக்கலாம் என்று பிரிவு 361(5) கூறுகிறது.

இதையடுத்து அளிக்கப்படும் புலன் விசாரணை அறிக்கையை பரிசீலனை செய்த பிறகு, இந்த அத்தியாயத்தின் பகுதி I–இன் கீழ் (அதாவது தீர்ப்பாயத்தின் ஆணையால் கலைக்கப்படுதல்) அல்லது இந்தப் பகுதியின் கீழ் (சுருக்க நடைமுறை யில் கலைக்கப்படுதல்) அந்நிறுவனத்தின் கலைப்பைத் தொடர மைய அரசு ஆணை யிடலாம் என்று பிரிவு 361(6) கூறுகிறது.

3. நிறுவனச் சொத்துடைமைகளின் விற்பனை மற்றும் அதற்கு வர வேண்டிய

பாக்கியாக நிற்கும் கடன்களை வசூலித்தல் (Sale of assets and recovery of debts due to company) – பிரிவு 362:

முறையார்ந்த கலைப்பதிகாரியானவர், தனது நியமனத்திலிருந்து அறுபது நாட்களுக்குள் நிறுவனத்தின் அசையும் மற்றும் அசையா சொத்துடைமைகள் அனைத்தையும் விரைவாக விற்பனை செய்தல் வேண்டும் என்று பிரிவு 362(1) கூறுகிறது.

அதுபோல் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகைகளை தன்னிடம் வைப்பீடு செய்யுமாறு அந்நிறுவனத்தின் கடனாளிகளுக்கும், பங்களிப்பாளர்களுக்கும் அவர் அறிவிப்பு ஒன்றை தனது நியமனத்திலிருந்து முப்பது நாட்களுக்குள் அனுப்ப வேண்டும் என்று பிரிவு 362(2) கூறுகிறது.

கடனாளி எவராவது மேற்கண்டவாறு தனது கடன் தொகையை வைப்பீடு செய்யவில்லையெனில், இதற்காக முறையார்ந்த கலைப்பதிகாரி செய்யும் விண்ணப்பத்தின் பேரில், மைய அரசானது தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு ஆணைகளைப் பிறப்பிக்கலாம் என்று பிரிவு 362(3) கூறுகிறது.

இவ்வாறு முறையார்ந்த கலைப்பதிகாரியால் வசூலிக்கப்பட்ட தொகையானது, இந்திய சேம வங்கியில் உள்ள இந்திய பொதுக் கணக்கில் வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்று பிரிவு 362(4) கூறுகிறது.

4. கடனீந்தவர்களின் கோரிக்கைகளை முறையார்ந்த கலைப்பதிகாரி தீர்வு செய்தல் (Settlement of claims of creditors by Official Liquidator) – பிரிவு 363:

முறையார்ந்த கலைப்பதிகாரியானவர், தனது நியமனத்திலிருந்து முப்பது நாட்களுக்குள் நிறுவனத்திற்கு கடனீந்தவர்களை அழைத்து, அவர்கள் நிறுவனத்திற்கு அளித்துள்ள கடன் கோரிக்கைகளை மெய்ப்பிக்கக் கோர வேண்டும். இதை அத்தகு அழைப்பிலிருந்து முப்பது நாட்களுக்குள் கடனீந்தவர்கள் செய்ய வேண்டும் என்று பிரிவு 363(1) கூறுகிறது.

மேலும் கடனீந்தவர்களின் பட்டியலை முறையார்ந்த கலைப்பதிகாரி தயாரித்தல் வேண்டும். தொடர்ந்து அதில் இடம் பெற்றுள்ள கடனீந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரது கோரிக்கை ஏற்கப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்பது குறித்து எழுத்துப்பூர்வமான காரணங்களுடன் தெரிவிக்க வேண்டும் என்று பிரிவு 363(2) கூறுகிறது.

5. கடனீந்தவரால் மேல்முறையீடு (Appeal by creditor) – பிரிவு 364:

மேற்படி பிரிவு 363–இன் கீழ் முறையார்ந்த கலைப்பதிகாரி எடுத்த முடிவால் பாதிக்கப்பட்ட கடனீந்தவர் எவரும், அந்த முடிவிலிருந்து முப்பது நாட்களுக்குள் அதை எதிர்த்து மைய அரசிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யலாம் என்று பிரிவு 364(1) கூறுகிறது. இதன் பேரில் மைய அரசு முறையார்ந்த கலைப்பதிகாரியின் அறிக்கையைப் பரிசீலனைசெய்த பிறகு, அம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யலாம் அல்லது முறையார்ந்த கலைப்பதிகாரியின் முடிவை மாற்றியமைக்கலாம் என்று பிரிவு 364(2) கூறுகிறது. கடனீந்தவர்களில் எவரது கோரிக்கைகள் ஏற்கப்பட்டனவோ,

அவர்களுக்கு முறையார்ந்த கலைப்பதிகாரி தொகை செலுத்த வேண்டும் என்று பிரிவு 364(3) கூறுகிறது. கோரிக்கைகளின் தீர்வு நடவடிக்கை எதன் போதும், மைய அரசானது அவசியமெனக் கருதினால், அது விடயம் எதையும் தேவையான ஆணை களுக்காக தீர்ப்பாயத்திற்குச் சுட்டியனுப்பலாம் என்று பிரிவு 364(4) கூறுகிறது.

6. நிறுவனக் கலைப்பிற்கான ஆணை (Order of dissolution of company) – பிரிவு 365:

சம்பந்தப்பட்ட நிறுவனம் இறுதியாக கலைக்கப்பட வேண்டுமென முறை யார்ந்த கலைப்பதிகாரி மனநிறைவடைந்தால், அவர் அது குறித்த அறிக்கை ஒன்றை–

(i) மைய அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதாவது பிவு 364(4)–இன் கீழ் தீர்ப்பாயத்திற்கு சுட்டுகை ஒன்று செய்யப்படுகின்ற நேர்வில்; மற்றும்

(ii) மற்ற நேர்வுகளில், மைய அரசுக்கும் மற்றும் தீர்ப்பாயத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரிவு 365(1) கூறுகிறது.

மைய அரசு அல்லது நேர்விற்கேற்றவாறு தீர்ப்பாயமானது அத்தகு அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பேரில், நிறுவனத்தின் கலைப்பிற்கு ஆணையிடலாம் என்று பிரிவு 365(2) கூறுகிறது.

இவ்வாறு ஒரு ஆணை செய்யப்பட்டதையடுத்து, அந்நிறுவனத்தின் பெயரை நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து பதிவாளர் அடித்துவிடல் வேண்டும் என்றும், அது குறித்து அறிவிக்கை ஒன்றை விளம்பரப்படுத்த வேண்டும் என்றும் பிரிவு 365(3) கூறுகிறது.

(தேர்வில் கேட்கப்படும் வினாவிற்கு ஏற்ற மற்றும் பொருத்தமான வகை முறைகளை மேற்சென்ற வகைமுறைகளில் இருந்து விடையாக எழுதவும் – ஆர்)

100. State the powers and duties of Company Liquidator in the winding up of a company by the Tribunal. (தீர்ப்பாயத்தால் நிறுவனம் ஒன்று கலைக்கப்படுவதில் நிறுவனக் கலைப்பதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளைக் குறிப்பிடுக.)

ஒரு நிறுவனத்தை தீர்ப்பாயம் தனது ஆணை ஒன்றின் வாயிலாக கட்டாய மாகக் கலைக்கும் போது, அதற்காக நிறுவனக் கலைப்பதிகாரி ஒருவர் நியமனம் செய் யப்படுகிறார். அவரது அதிகாரங்கள் மற்றும் கடமைகள் பற்றி பிரிவு 290 பின்வருமாறு விளக்குகிறது. வேறு விதத்தில் கூறுவதெனில், தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணை ஒன்றின் கீழான நிறுவனக் கலைப்பில் நியமிக்கப்படும் நிறுவனக் கலைப்பதிகாரி பின்வரும் அதிகாரங்களைக் கொண்டவர். அவர் அவ்வதிகாரங்களை தீர்ப்பாயத்தின் ஏவுரைகளுக்குட்பட்டு செயற்படுத்த வேண்டும் என்று **பிரிவு 290(1)** கூறுகிறது. **இப்பிரிவு ஒரு நிறுவனக் கலைப்பதிகாரியின் அதிகாரங்களை பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது.**

(a) நிறுவனம் பயன்மிகு முறையில் கலைக்கப்படுவதற்கு தேவையான தாக உள்ள காலம் வரை, அதன் தொழிலை மேற்கொள்ளலாம்.

(b) நிறுவனத்திற்காகவும் அதன் பெயரிலும் அனைத்து செயல்களையும் செய்யலாம் மற்றும் அனைத்து பத்திரங்களையும், இரசீதுகளையும் மற்றும் வேறு ஆவணங்களையும் எழுதிக் கொடுக்கலாம்.

(c) நிறுவனத்தின் அசையும், அசையாச் சொத்துக்கள், வழக்குத் தொடர் தகு பாத்தியங்களை எவருக்கும் அல்லது கூட்டுரு அமைப்பு எதற்கும் பொது ஏலத்தில் அல்லது தனிப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ், அவற்றை மாற்றியளிக்கும் அதிகாரத்துடன் அவர் விற்கலாம்.

(d) நிறுவனத்தின் தொழில் முழுவதையும் விற்கலாம்.

(e) நிறுவனத்தின் சொத்துக்களை பிணையாமாக்கி, பணம் திரட்டலாம்.

(f) நிறுவனத்தின் பெயரிலும், அதன் சார்பாகவும் உரிமையியல் அல்லது குற்றவியல் வழக்குகளைத் தொடுக்கலாம் அல்லது எதிர்க்கலாம்.

(g) கடனீந்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அழைப்பு விடுத்து அவர்களது கோரிக்கைகளைத் தீர்க்கலாம். மேலும் நிறுவனத்தின் சொத்துக்களை விற்று வந்த தொகைகளை இந்தச் சட்டத்தின் படியான முன்னுரிமைப்படி பிரித்தளிக்க லாம்.

(h) பதிவாளர் மற்றும் வேறு அதிகார அமைப்பு அலுவலகத்தின் கோப்பில் உள்ள நிறுவனத்தின் பதிவேடுகளையும் அறிக்கைகளையும் ஆய்வு செய்யலாம்.

(i) பங்களிப்பாளரின் நொடிப்பின் போது, அவரது சொத்துக்கெதிரான பாக்கிக்காக, முன்னுரிமையையும், உரிமைக் கோரலையும் மெய்ப்பித்து, பங்கதாயத் தைப் பெறலாம்.

(j) நிறுவனத்தின் பெயரிலும் மற்றும் நிறுவனத்தின் சார்பாகவும், அதன் தொழில் நடைமுறையில், மாற்றுச் சீட்டு, உண்டியல்கள் அல்லது கடனுறுதிச் சீட்டு எதனையும் வரையலாம், ஏற்கலாம், பிறப்பிக்கலாம் அல்லது மேலெழுதலாம்.

(k) தனது அலுவலகப் பெயரில், இறந்து போன பங்களிப்பாளர் ஒருவரது நிருவாகக்முறை பத்திரத்தைக் (Letters of Administration) கோரிப் பெறலாம். அதுபோல் பங்களிப்பாளரிடமிருந்து அல்லது அவரது சொத்திலிருந்து வர வேண்டிய பணத்தைப் பெறலாம்.

(l) தொழில்ரீதியாக உதவியை நபர் எவரிடமிருந்தும் பெறலாம் அல்லது தனது கடமைகள், கடப்பாடுகள் அல்து பொறுப்புகளை நிறைவேற்று வதில் தொழில் ரீதியான நபர்களை நியமனம் செய்யலாம். மேலும் நிறுவனத்தின் சொத்துடைமைகளைப் பாதுகாக்க முகவர் ஒருவரை நியமனம் செய்து, தானே செய்ய இயலாத அலுவல் எதையும் அம்முகவர் மூலம் செய்யலாம்.

(m) (i) நிறுவனத்தைக் கலைப்பதற்காக; (ii) சொத்துடைமைகளை பகிர்ந் தளிப்பதற்காக; (iii) நிறுவனக் கலைப்பதிகாரியாக தனது கடமைகள் மற்றும் கடப்பாடுகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படலாகும், அத்தகு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க லாம். மேலும் ஏடு, பத்திரம், ஆவணம், விண்ணப்பம், மனு, ஆணை யுறுதியாவணம், பிணைமுறி அல்லது முறையாவணம் ஆகியவற்றில் கையொப்பம் செய்யலாம் அல்லது நிறைவேற்றித் தரலாம் அல்லது மாறுபடுத்தலாம்.

(n) நிறுவனத்தின் கலைப்பிற்கு அவசியப்படலாகும் அத்தகு ஆணைகள் அல்லது ஏவுரைகளைப் பிறப்பிக்க வேண்டி தீர்ப்பாயத்திடம் விண் ணப்பிக்கலாம்.

மேற்கண்டவாறு நிறுவனக் கலைப்பதிகாரியால் செயற்படுத்தப்படும் அதிகாரங்கள், தீர்ப்பாயத்தின் முழுமையான கட்டுப்பாட்டிற்குட்பட்டதாகும் என்று **பிரிவு 290(2)** கூறுகிறது.

மேற்சென்ற வகைமுறைகளில் யாது கூறப்பட்டிருந்தாலும் அதைப் பொருட் படுத்தாது, இதற்காக தீர்ப்பாயம் குறித்துரைக்கலாகும் அத்தகு பிற கடமைகளையும் நிறுவனக் கலைப்பதிகாரி செய்தல் வேண்டும் என்று **பிரிவு 290(3)** கூறுகிறது.

நிறுவனக் கலைப்பதிகாரியின் கடமைகள்:

1. நிறுவனத்திற்குரிய முறையான ஏடுகளை நிறுவனக் கலைப்பதிகாரி வகுத்துரைக்கப்படக் கூடிய முறையில் பராமரித்து வர வேண்டும். அதில் நிறுவனக் கூட்ட நடவடிக்கைப் பதிவுகளையும், தொடர்புடைய வேறு விடயங்களையும் பதிந்து வர வேண்டும் என்று பிரிவு 293(1) கூறுகிறது.

2. நிறுவனக் கலைப்பதிகாரியானவர், தன்னால் பெறப்பட்ட தொகைகள் மற்றும் தன்னால் செலுத்தப்பட்ட தொகைகக்ள் ஆகிய இரண்டுக்குமான கணக்கு வழக்குகள் உள்ளடங்கிய கணக்குப் புத்தகங்களை உரிய முறையிலும் ஒழுங்காகவும் பராமரித்து வர வேண்டும் என்று பிரிவு 293(1) கூறுகிறது.

3. தனது வரவு செலவுக் கணக்குகளை குறைந்தபட்சம் ஆண்டிற்கு இரு முறையாவது தீர்ப்பாயத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரிவு 293(2) கூறுகிறது.

4. நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை தீர்ப்பாயம் தணிக்கை செய்ய வேண்டும். அந்நோக்கத்திற்காக அதற்குரிய பண ஒப்புகைகள் (வவுச்சர்) மற்றும் தகவல்களை நிறுவனக் கலைப்பதிகாரி தீர்ப்பாயத்திடம் வழங்க வேண்டும் என்று பிரிவு 293(3) கூறுகிறது.

5. நிறுவனக் கணக்குகள் தணிக்கை செய்யப்படுகின்ற போது, அதன் நகல் ஒன்றை நிறுவனக் கலைப்பதிகாரி தீர்ப்பாயத்திடம் தாக்கல் செய்ய வேண்டும். மற்றொரு நகலை அவர் பதிவாளரிடம் வழங்க வேண்டும் என்று பிரிவு 293(4) கூறுகிறது.

6. சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகள் அரசு நிறுவனம் (Government Company) ஒன்றிற்குத் தொடர்புடையதாக இருப்பின், அதன் நகல் ஒன்றை (அ) அந்த அரசு நிறுவனத்தில் மைய அரசு ஒரு உறுப்பினர் என்றால், மைய அரசுக்கும், (ஆ) அந்த அரசு நிறுவனத் தில் மாநில அரசு ஒரு உறுப்பினர் என்றால், சம்பந்தப்பட்ட மாநில அரசுக்கும், அந்த அரசு நிறுவனத்தில் மைய அரசும் மாநில அரசும் உறுப் பினர்கள் என்றால், மைய அரசு மற்றும் மாநில அரசுக்கும் அனுப்ப வேண்டும் என்று பிரிவு 293(5) கூறுகிறது.

101. What are the powers and duties of a company liquidator in voluntary winding up? (ஒரு தன்விருப்பக் கலைப்பில், நிறுவனத்தைக் கலைப்பவரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளைக் கூறுக.)

தன்விருப்பக் கலைப்பில் நிறுவனக் கலைப்பதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் (Powers and Duties of Company in Voluntary winding up) குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 314 கூறுகிறது. இவற்றை நாம் ஏற்கனவே தன்விருப்பக் கலைப்பு என்ற தலைப்பின் கீழ் பக்கம் எண். 430–இல் விரிவாகக் கண்டுள்ளோம். எனவே அங்கிருக்கும் விவரங்களை வாசித்துக் கொள்க.

அப்பிரிவில் உள்ள அதிகாரங்கள், கடமைகள் மட்டுமல்லாது, பின்வரும் சில கடமைகளும் அவருக்கு உண்டு. அதாவது ஒரு நிறுவனம் தீர்ப்பாயத்தின் ஆணை யால் கலைக்கப்படும் பொழுது நியமிக்கப்படும் கலைப்பதிகாரிக்கு உள்ள அதே கடமைகள், தன்விருப்பக் கலைப்பில் நியமனம் செய்யப்படும் கலைப்பதிகாரிக்கும் உண்டு. அந்த வகையில், (1) அவர் நிறுவனத்தின் சொத்தை தன் பொறுப்பில் எடுத் துக் கொள்ள வேண்டும்; (2) கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளை உரிய புத்தகங்களில் பதிந்து வர வேண்டும்; (3) நிறுவனத்தின் கணக்குகளை தணிக்கை செய்விக்க வேண்டும்; (5) உறுப்பினர்களின் மற்றும் கடன் அளித்தவர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

-o0o-

தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்
[National Company Law Tribunal and Appellate Tribunal]

6

102. National Company Law Tribunal - Write short notes. (தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Company Law Appellate Tribunal - Write short notes. (நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் - குறுகிய விடை எழுதுக.)

பின்னணி:

முந்தைய 1956–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தில், 1963–ஆம் ஆண்டில் செய்யப்பட்ட நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத் தின் வாயிலாக, நிறுவனச் சட்ட வாரிய நிருவாகம் (Board of Company Law Administration) எனும் ஒரு புதிய பகுதி (Part

IA) புகுத்தப்பட்டது. இதன் கீழான பிரிவு 10E-ஆனது, நிறுவனச் சட்ட வாரியத்தை அமைக்க மத்திய அரசிற்கு அதிகாரமளித்தது. இந்த அதிகாரம் 1988–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தால் புதுப்பிக்கப்பட்டது. மேலும் இது மேற்படி பிரிவில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. நிறுவனச் சட்ட வாரியமானது, நிறுவனச் சட்டத்தால் அல்லது வேறு சட்டங்களால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன் படுத்தி செயலாற்ற வேண்டும் அல்லது மத்திய அரசிற்கு நிறுவனச் சட்டப்படி வழங்கப் பட்டுள்ள அத்தகு அதிகாரங்களை உபயோகித்தும் செயலாற்ற வேண்டும்.

இதையடுத்து 1956–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தில் 2002–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட நிறுவனங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் [Companies (Second Amendment) Act, 2002] வாயிலாக, 10FA எனும் ஒரு புதிய பிரிவு புகுத்தப்பட்டது. அது பிரிவு 10E-ன் கீழ் அமைக்கப்பட்ட மேற்படி **நிறுவனச் சட்ட வாரியத்தையே (Company Law Board) கலைத்துவிட்டது (shall stand dissolved)** [பிரிவு 10FA (1)]. மேலும் நிறுவனச் சட்ட வாரியத்தில் பதவி வகித்து வந்த தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், அலுவர்கள் மற்றும் பிற பணி யாட்கள் உடனடியாக தங்கள் பதவிகளை விட்டு விலகுதல் வேண்டும் என்று கூறியது [பிரிவு 10FA (2)].

நிறுவனச் சட்ட வாரியத்திற்கு ஒரு மாற்று அமைப்பாக செயல்படும் பொருட்டு, மேற்படி 2002–ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் வாயிலாக **'தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயம்' (National Company Law Tribunal)** ஒன்று அமைக் கப்பட்டது. நிறுவனச் சட்ட வாரியத்தின் முன்பு நிலுவையில் இருந்த அனைத்து வழக்குகளும், நடவடிக்கைகளும், விஷயங்களும், மேற்படி தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டமே நீக்கறவு செய்யப்பட்டு, 2013–ஆம் ஆண்டில் புதிய நிறுவனங்கள் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் 1956–ஆம் ஆண்டு சட்டத்தில் 2002–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தமும் சட்ட ஏடுகளை விட்டு மறைந்துபோனது. இதன் தொடர்ச்சியாக அத் திருத்தச் சட்டத்தின்படி கட்டமைக்கப்பட்ட தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயமும் மறைந்து போனது.

ஆனால் 2013–ஆம் ஆண்டில் புதிதாக இயற்றப்பட்ட நிறுவனங்கள் சட்டத் தில் அத்தியாயம் XXVII–இன் கீழ் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் என்ற தலைப்பில் மீண்டும் இடம் பிடித்தது. இந்த அத்தியாயத் தின் கீழான 407 முதல் 434 வரையிலான சட்டப்பிரிவுகள் இத்தீர்ப்பாயத்தின் கட் டமைப்பு, உறுப்பினர்கள் மற்றும் தலைவரின் தகுதி, மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டமைப்பு, அதன் உறுப்பினர்கள் மற்றும் தலைவரின் தகுதி, அவர்களைத் தேர்ந் தெடுக்கும் முறை, பதவிக்காலம், ஊதியம் மற்றும் படிகள், பணித் துறப்பு, நீக்கம், பணியாளர்கள், தீர்ப்பாயத்தின் அமர்விடங்கள், தீர்ப்பாயம் பிறப்பிக்கும் ஆணைகள், அவற்றிலிருந்து எழும் மேல்முறையீடுகள், நடைமுறை என தொடர்புடைய விடயங்கள்

பலவற்றை விளக்குகின்றன. எனவே இன்றைய நிறுவனங்கள் சட்டப்படி, தேசிய நிறுவனச் சட்ட வாரியமோ, 2002–ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தால் கட்டமைக்கப் பட்ட தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயமோ செயல்திறத்தில் இல்லை. மாறாக 2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனங்கள் சட்டத்தின் கீழான தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயமும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமும்தான் செயல்திறத்தில் உள்ளது.

தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் செல்லும் தன்மை குறித்து உச்ச நீதிமன்றத்தில் எழுந்த முக்கிய வழக்குகள்:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்படியான தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் கட்டமைப்பு மற்றும் அதன் செல்லும்தன்மை குறித்து உச்ச நீதி மன்றத்தில் எழுந்த **Madras Bar Association v. Union of India and Another**[1] என்ற வழக்கில் அத்தீர்ப்பாயம் தொடர்பான பல வகைமுறைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

அதாவது நிறுவனச் சட்ட வாரியம் (Company Law Board), தொழில் மற்றும் நிதி மறுசீரமைப்பு வாரியம் (Board of Industrial and Financial Reconstruction), தொழில் மற்றும் நிதி மறுசீரமைப்பு மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு (Appellate Authority for Industrial and Financial Reconstruction), உயர் நீதிமன்ற அதிகாரவரம்பில் செயற்படும் நிறுவன நீதிமன்றங்கள் (Company courts in the jurisdictional High Courts) ஆகியன தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத் தின் வரவால் மறைந்துவிட்டன என்று சொன்னால் அது மிகையன்று. அவற்றுக்கெல் லாம் ஓர் மாற்று அமைப்பாக தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் விளங்கக் கூடியதா கும்.

எனினும் 2013–ஆம் ஆண்டில் புதிய நிறுவனங்கள் சட்டம் வந்த பிறகும் மைய அரசு தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தை கட்டமைக்காமல் இருப்பது குறித் தும், அதன் அரசியலமைப்புச் சட்டப்படியான செல்லும் தன்மை குறித்தும் வினவி இந்திய உச்ச நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு ஒன்று மெட்ராஸ் வழக்குரைஞர் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் குறித்த 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் வகைமுறைகளை மாண்பமை இந்திய தலைமை நீதியரசர் எச்.எல்.தத்து அவர்களின் தலைமையின் கீழ் அமைந்த அய்ந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு ஆயம் ஆராய்ந்தது.

முடிவில் 2015–ஆம் ஆண்டு மே 14–ஆம் தேதியில் உச்ச நீதிமன்றம் வழங் கிய தீர்ப்புரையில்[1], அது தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் அரசியலமைப்புப்படி யான செல்லும் தன்மையை நிலைநிறுத்தியது. எனினும், அத்தீர்ப்பாயத்தின் கட்டமைப்பு தொடர்பான பல்வேறு வகைமுறைகளை உச்ச நீதிமன்றம் நீக்கிவிட்டது. மேலும் அது தொடர்பான விதிகளில் உரிய மாற்றங்களைச் செய்யும்படி மைய அரசுக்கு

1. Judgment dated May 14, 2015 in Writ Petition (C) No. 1072 of 2013

பரிந்தரைத்தது.

முன்னதாக 2010–ஆம் ஆண்டிலேயே மெட்ராஸ் வழக்குரைஞர் சங்கம் தொடர்ந்த **Union of India vs. R. Gandhi, President, Madras Bar Association**[2] என்ற முதல் வழக்கின் தீர்ப்பில், அது தொடர்பான சட்ட வகைமுறை களை உச்ச நீதிமன்றம் ஆராய்ந்து, அவற்றில் உள்ள பல்வேறு சட்டக் குறைபாடுகளை மைய அரசுக்குச் சுட்டிக்காட்டியது. இதையடுத்து அவ்வகை முறைகளை மைய அரசு திருத்தியது. மேலும் அக்குறைகள் சரி செய்யப்பட்டுவிட்டன என்றும் உச்ச நீதிமன்றத் தில் மைய அரசு வாதிட்டது.

நிலை இவ்வாறு இருக்க 2013–ஆம் ஆண்டில் புதிய நிறுவனச் சட்டம் இயற் றப்பட்டுவிட்டது. மைய அரசு சரி செய்வதாக வாதிட்ட முந்தைய வகைமுறைகள் இப் புதிய சட்டத்திலும் இடம் பெற்ற காரணத்தால், அவற்றின் செல்லும்தன்மை குறித்து மீண்டும் அதாவது இரண்டாவதாக மெட்ராஸ் வழக்குரைஞர் சங்கம் மேற்கண்டவாறு நீதிப்பேராணை மனு ஒன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. ஏற்கனவே கூறியபடி, அவ்வகை முறைகளை நீக்க உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு ஆயம் இரண்டாவது நீதிப்பேராணை மனுவின் வாதத்தின் போது ஒத்துக் கொண்டது. சுதந் திரமான நீதித்துறை, அதிகாரங்களின் பகிர்வு ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பாயம் தொடர்பான சில வகைமுறைகளை நீக்க ஆணையிட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக தீர்ப்பாயத்தில் தலைமை வகிக்கும் நபர்கள் மற்றும் உறுப்பினர்களின் தேர்வு முறை மற்றும் நியமனம் தொடர்பாக நிலவும் பல்வேறு சட்டக் குறைபாடுகள் களையப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டன. உதாரண மாக, அரசின் இணை செயலாளர் ஒருவர், அத்தீர்ப்பாயத்தின் தொழில்நுட்ப உறுப்பின ராக இருத்தல் வேண்டும் என்று பிரிவு 409 கூறுகிறது. ஆனால் உச்ச நீதிமன்றமோ அப்பதவிக்கு அரசுச் செயலாளர் அல்லது கூடுதல் செயலாளர் ஒருவரை நியமனம் செய்வதுதான் சட்டப்படி சரியானது என்றும், எனவே பிரிவு 409 செல்லாது என்றும் கூறியது. இவ்வாறு பல்வேறு பிரிவுகளை செல்லாது என்று உச்ச நீதிமன்றம் கருத் துரைத்துள்ளது.

இறுதியில் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டு தீர்ப் பாயத்தை மேற்கண்டவாறான மாற்றங்களுடன் விரைவில் கட்டமைக்கவும், அதன் செயற்பாட்டிற்கு வழிவகுக்கவும் மைய அரசுக்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள் ளது.

இனி தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பா யம் தொடர்பான வகைமுறைகளை பின்வருமாறு காண்போம்.

தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் தொடர்பான சட்ட வகைமுறைகள்:

1. தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் கட்டமைப்பு (Constitution

1. (2010) 11 SCC 1

of National Company Law Tribunal): தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் என்றழைக்கப்படும் தீர்ப்பாயமொன்றை மைய அரசு கட்டமைக்க வேண்டும் என்றும், அது அறிவிக்கை மூலம் குறித்துரைக்கலாகும் அத்தகு தேதியில் இருந்து செயல் விளைவுக்கு வருதல் வேண்டும் என்றும் 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத் தின் பிரிவு 408 கூறுகிறது. இதில் தலைவர் ஒருவரும், அத்தகு எண்ணிக்கையிலான நீதிமுறை மற்றும் தொழில்நுட்ப உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர்.

2. தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் உறுப் பினர்களின் தகுதி (Qualification of President and Members of Tribunal): உயர் நீதிமன்ற நீதிபதியாக அய்ந்தாண்டுகள் பதவி வகித்துள்ள ஒருவர் இதன் தலைவர் ஆவார் என்று பிரிவு 409(1) கூறுகிறது.

(அ) உயர் நீதிமன்ற நீதிபதியாக இருக்கின்ற ஒருவர், அல்லது (ஆ) குறைந்த பட்சம் அய்ந்தாண்டுகளாக மாவட்ட நீதிபதியாக இருக்கின்ற ஒருவர், அல்லது (இ) குறைந்தபட்சம் பத்தாண்டுகளாக நீதிமன்றமொன்றில் வழக்குரைஞராக இருக்கின்ற ஒருவர் இத்தீர்ப்பாயத்தின் நீதிமுறை உறுப்பினர்களாக (Judicial Members) பதவி வகிப்பதற்கு தகுதி படைத்தவர்கள் ஆவர் என்று பிரிவு 409(2) கூறுகிறது.

இதன் தொழில்நுட்ப உறுப்பினர்களாக (Technical Members) பதவி வகிப்பதற்கு தகுதி பெற்றவர்களை பிரிவு 409(3) பட்டியலிட்டுக் காட்டுகிறது. இவர் களில் இந்திய கூட்டுருமை சட்டப் பணி அல்லது இந்திய சட்டப் பணியில் உறுப்பினராக இருப்பவர், பட்டயக் கணக்காயர், நிறுவனச் செயலாளர் போன்றோர் அடங்குவர்.

3. தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டமைப்பு (Constitution of Appellate Tribunal): தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் பிறப் பிக்கும் ஆணைகளிலிருந்து செய்யப்படும் மேல்முறையீடுகளை விசாரிப்பதற்காக தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் என்றழைக்கப்படும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஒன்றை மைய அரசு கட்டமைக்க வேண்டும் என்றும், அதில் தலைவர் ஒருவரும், பதினொன்றுக்கும் மிகாத நீதிமுறை மற்றும் தொழில்நுட்ப உறுப்பினர்கள் அடங்கியிருப்பர் என்றும் பிரிவு 410 கூறுகிறது.

4. தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் தகுதிகள் (Qualifications of Chairperson and Members of Appellate Tribunal): இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதியாக அல்லது உயர் நீதிமன்ற தலைமை நீதியரசராக பதவி வகிக்கும் ஒருவர் இதன் தலைவர் ஆவார் என்று பிரிவு 411(1) கூறுகிறது.

உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவி வகிக்கும் ஒருவர் அல்லது தீர்ப்பாயமொன் றின் நீதிமுறை உறுப்பினராக அய்ந்தாண்டுகளாக பதவி வகிக்கும் ஒருவர் இதன் நீதிமுறை உறுப்பினர் ஆவார் என்று பிரிவு 411(2)–ம், தொழில்நுட்ப உறுப்பினரின் தகுதி பற்றி பிரிவு 411(3)–ம் கூறுகிறது.

5. தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் உறுப்பினர்

களின் தேர்ந்தெடுப்பு (Soloction of Mombors of Tribunal and Appellate Tribunal): இந்திய தலைமை நீதியரசருடன் கலந்தாலோசித்த பிறகு தீர்ப்பாயத்தின் தலைவர், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் நீதிமுறை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுதல் வேண்டும் என்று பிரிவு 412(1) கூறுகிறது.

தீர்ப்பாயத்தின் உறுப்பினர்கள் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தொழில்நுட்ப உறுப்பினர்கள் தேர்வுக் குழு ஒன்றின் பரிந்துரையின் பேரில் நியமனம் செய்யப்படுதல் வேண்டும் என்று பிரிவு 412(2) கூறுகிறது. இக்குழுவின் கூட்டத்தை கூட்டும (நிறுவன) விவகாரங்கள் அமைச்சகத்தின் செயலாளர் நடத்துதல் வேண்டு மென பிரிவு 412(3) கூறுகிறது. மேற்கண்ட உறுப்பினர்களை பரிந்துரைப்பதற்கான நடைமுறையை இக்குழுவே தீர்மானித்தல் வேண்டுமென பிரிவு 412(4) கூறுகிறது. தேர்வுக் குழுவில் காலியிடம் உள்ளது என்பதாலோ, அல்லது அதன் கட்டமைப்பில் குறைபாடு உள்ளது என்பதாலோ, அதனால் செய்யப்பட்ட உறுப்பினர் நியமனம் எது வும் செல்லாத ஒன்றாகிவிடாது என்று பிரிவு 412(5) கூறுகிறது.

6. தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டமைப்பு தொடர்பான இதர வகைமுறைகள் (Other provisions relating to the constitution of Tribunal and Appellate Tribunal): பிரிவு 413–ஆனது தீர்ப்பாயத் தின் தலைவர், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் இதர உறுப்பினர் களின் பதவிக்காலம் (Term of office of President, chairperson and other members) பற்றி விளக்குகிறது. அதுபோல் பிரிவு 414–ஆனது உறுப்பினர்கள் பணிக்கான ஊதியம், படிகள் மற்றும் இதர வரைவுரைகள் மற்றும் நிபந்தனைகளை (Salary, allowance and other terms and conditions of service of Members) தெளிவுபடுத்துகிறது. பிரிவு 415–ஆனது தீர்ப்பாயத்தின் தலைவர் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் பதவியில் காலியிடம் ஏற்படும் சமயத்தில் அங்கு அவ்வாறு தற்காலிகமாக செயல்படுவதற்குரிய நபர்களின் நியமனம் (Acting President and Chairperson of Tribunal or Appellate Tribunal) பற்றி விளக்குகிறது. பிரிவு 416–ஆனது உறுப்பினர்களின் பணித்துறப்பு (Resignation of Members) பற்றி எடுத்துரைக்கிறது. பிரிவு 417–ஆனது உறுப்பினர்களின் நீக்கம் (Removal of Members) பற்றிய நடைமுறையை விளக்குகிறது. பிரிவு 418–ஆனது தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் ஊழியர் (Staff of Tribunal and Appellate Tribunal) தொடர்பான வகைமுறைகளை கூறுகின்றது. பிரிவு 419–ஆனது தீர்ப்பாயத்தின் அமர்வாயங்கள் (Benches of Tribunal) பற்றி கூறு கின்றது. அந்த வகையில் இதன் முதன்மை அமர்வாயம் புது தில்லியில் அமைந்திருக்க வேண்டும் என்று கூறுகிறது.

7. தீர்ப்பாயத்தின் ஆணைகள் (Orders of Tribunal): தங்கள் வாதத்தை எடுத்துரைக்கும் நியாயமான வாய்ப்பொன்றை சம்பந்தப்பட்ட தரப்பினர் களுக்கு அளித்த பிறகு, தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு ஆணைகளை தீர்ப் பாயம் பிறப்பிக்கலாம் என்று பிரிவு 420(1) கூறுகிறது.

பதிவுகளிலிருந்து வெளிப்படையாகத் தெரியும் தவறு எதையும் சரி செய்யும் முகமாக தீர்ப்பாயமானது தான் பிறப்பித்த ஆணை எதையும் அதன் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் எப்போது வேண்டுமானாலும் திருத்தலாம் என்றும், அத்தவறை தீர்ப்பாயத்தின் கவனத்திற்கு தரப்பினர்கள் கொண்டு வந்தால், அத்தகு திருத்தத்தைச் செய்யலாம் என்றும் பிரிவு 420(2) கூறுகிறது. எனினும் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ள ஆணை ஒன்றில் அத்தகு திருத்தத்தை தீர்ப்பாயம் செய்தலாகாது.

தான் பிறப்பித்த ஆணையின் நகல் ஒன்றை சம்பந்தப்பட்ட தரப்பினர் களுக்கு தீர்ப்பாயம் அனுப்ப வேண்டும் என்று பிரிவு 420(3) கூறுகிறது.

8. தீர்ப்பாயத்தின் ஆணைகளிலிருந்து மேல்முறையீடு (Appeal from orders of Tribunal): தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணையால் குறையுற்ற நபர் எவரும் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு செய்யலாம் என்று பிரிவு 421(1) கூறுகிறது.

தரப்பினர்களின் இசைவுடன் தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணை ஒன்றிலிருந்து மேல்முறையீடு எதுவும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு எழாது என்று பிரிவு 421(2) கூறுகிறது.

தீர்ப்பாயத்தின் ஆணை நகல் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து நாற்பத் தைந்து நாட்களுக்குள் அந்த ஆணையால் குறையுற்ற நபர் மேல்முறையீடு தாக்கல் செய்ய வேண்டும் என்று பிரிவு 421(3) கூறுகிறது. எனினும் நாற்பத்தைந்து நாட்களுக் குள் மேல்முறையீடு செய்ய முடியாமல் போனதற்கு போதிய காரணம் ஏதும் அந்நபர் காட்டினால், அதற்குப் பிறகு மேலும் ஒரு நாற்பத்தைந்து நாட்களுக்குள் அவர் மேல் முறையீடு செய்யலாம். அவர் காட்டும் காரணம் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு மனநிறைவளிக்குமானால், அது அவரது மேல் முறையீட்டை பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளலாம்.

மேல்முறையீடு கிடைக்கப் பெறுவதன் பேரில், சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் தங்கள் வாதத்தை முன் வைப்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு நியாயமான வாய்ப்பு ஒன்றை மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் நல்க வேண்டும். அவ்வாதத்தைக் கேட்டறிந்த பிறகு, தீர்ப்பாயத்தின் ஆணையை தான் பொருத்தமெனக் கருதும் வகையில் உறுதி செய்து, மாற்றியமைத்து அல்லது இரத்து செய்து ஆணை பிறப்பிக்கலாம் என்று பிரிவு 421(4) கூறுகிறது.

9. விரைவாக முடித்தல் (Expeditious disposal): தன் முன் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பம், மனு அல்லது நேர்விற்கேற்றவாறு மேல்முறையீடு ஆகிய வற்றை தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது இயன்ற வரை விரை வாக முடிக்க வேண்டும், மேலும் அவை தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முடிப்பதற்கான முயற்சி அனைத்தையும் தீர்ப்பாயம் அல்லது நேர்விற் கேற்றவாறு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் செய்ய வேண்டும் என்றும் பிரிவு 422 கூறு கிறது.

10. உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு (Appeal to Supreme

Court): மேல்முறையீட்டு தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணையால் நபர் எவரும் குறையுற்று இருப்பின், அவர் அந்த ஆணை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அதிலிருந்து எழும் சட்டப்பிரச்சனை தொடர்பாக உச்ச நீதிமன்றத்திடம் மேல் முறையீடு தாக்கல் செய்யலாம் என்று பிரிவு 423 கூறுகிறது.

11. தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் நடைமுறை (Procedure before Tribunal and Appellate Tribunal): தன் முன் எழும் வழக்கு நடவடிக்கைகள் எதிலும் தீர்ப்பாயமோ, மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமோ உரிமையியல் நடைமுறைச் சட்டத்தால் வகுக்கப்பட்ட நடைமுறையை பின்பற்றக் கடமைப்பட்டதல்ல. ஆனால் இந்தச் சட்டத்தின் கீழான வகைமுறைகளுக்குட்பட்டு, இயற்கை நீதிக் கோட்பாடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். மேலும் தனது நடைமுறையை தானே ஒழுங்குமுறைப்படுத்திக் கொள்ளும் அதிகாரமும் அவற்றுக்கு உண்டு என்று பிரிவு 424(1) கூறுகிறது.

இந்தச் சட்டத்தின் கீழான தனது பணிகளை செய்யும் நோக்கங்களுக்காக, தீர்ப்பாயமும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமும் பின்வரும் விடயங்களைப் பொறுத்து உரிமையியல் வழக்கு ஒன்றை விசாரணை செய்யும் போது ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்கு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் எத்தகு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ, அதே அதிகாரங்களைக் கொண்டதாக அவை விளங்கும் என்று பிரிவு 424(2) கூறுகிறது. அவ்விடயங்கள், (அ) நபர் எவருக்கு அழைப்பாணை விடுத்து, அவர் தன் முன் தோன்றுவதை வலியுறுத்தல் மற்றும் அவரை உறுதிமொழியின் பேரில் விசாரணை செய்தல், (ஆ) ஆவணங்களின் கண்டெடுப்பு மற்றும் முன்னிலைப்படுத்துதலை வேண்டுறுத்தல், (இ) ஆணையுறுதியாவணத்தின் பேரில் சாட்சியம் பெறுதல், (ஈ) பொதுப் பதிவேடு அல்லது ஆவணம் அல்லது அதன் நகலை அலுவலகம் எதிலிருந்தும் தருவிக்கக் கோருதல், (உ) சாட்சிகள் அல்லது ஆவணங்களை விசாரித்தறிய ஆணையங்களைப் பிறப்பித்தல், (ஊ) தவறுகைக்காக வாதம் ஒன்றைத் தள்ளுபடி செய்தல் அல்லது ஒருதலைப்பட்சமாக தீர்மானித்தல், (எ) தவறுகைக்காக தள்ளுபடி செய்து அல்லது ஒருதலைப்பட்சமாக தீர்மானித்து பிறப்பிக்கப்பட்ட ஆணையை இரத்து செய்தல், (ஏ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு வேறு விடயங்கள் எதுவும்.

தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணை எதையும், ஒரு உரிமையியல் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணை எவ்வாறு நிறைவேற்றப்படுமோ அதே முறையில் நிறைவேற்றலாம் என்றும், மேலும் அதனை நிறைவேற்றுவதற்காக சம்பந்தப்பட்ட ஆணைக்குரிய நிறுவனத்தின் பதிவு அலுவலகம் உள்ள இடத்தின் மீது அல்லது அந்த ஆணைக்குரிய நபரின் வசிப்பிடம் அல்லது தொழிலிடம் அல்லது பணியிடத்தின் மீது வட்டார அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றத்திற்கு மாற்றியனுப்பலாம் என்றும் பிரிவு 424(3) கூறுகிறது.

தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தன் முன் நடக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 193, 196 மற்றும் 228–இன் கீழ் நீதிமுறை நடவடிக்கைகள் ஆகும் என்றும், தீர்ப்பாயமும் மேல்

முறையீட்டுத் தீர்ப்பாயமும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 195–இன் நோக்கங்களுக்காக ஒரு உரிமையியல் நீதிமன்றமாக கருதப்படுதல் வேண்டும் என்றும் பிரிவு 424(4) கூறுகிறது. அதாவது தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகள் நீதிமுறை நடவடிக்கைகள் என்பதால், அவற்றில் பொய்ச் சாட்சியம் அளித்தல் அல்லது நீதிமுறை நடவடிக்கையில் அமரும் பொது ஊழியருக்கு உட்கருத்துடன் அவமதிப்பு செய்தல் அல்லது இடைஞ்சல் செய்தல் ஆகிய குற்றங்களைப் செய்பவர் இந்திய தண்டனைச் சட்டப்படி தண்டிக்கப்படுவர். இதற்காக நடவடிக்கை எடுக்கும் நோக்கத்திற்காக தீர்ப்பாயமும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமும் ஓர் உரிமையியல் நீதிமன்றமாக கருதப்படும்.

12. அவமதிப்பை தண்டிக்கும் அதிகாரம் (Power to punish for contempt): உயர் நீதிமன்றம் ஒன்றுக்கு ஏற்படும் அவமதிப்பு தொடர்பாக அது எத்தகு அதிகாரவரம்பு, அதிகாரங்கள், மற்றும் அதிகார அமைப்பை கொண்டுள்ளதோ, அவை அனைத்தையும் அப்படியே தீர்ப்பாயமும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமும் தனக்கு ஏற்படும் அவமதிப்பிலும் கொண்டுள்ளன. இதற்காக அவை நீதிமன்றங்கள் அவமதிப்புச் சட்டம், 1971–இன் வகைமுறைகளின் கீழான அதிகாரங்களைச் செயற்படுத்தலாம் என்று பிரிவு 425 கூறுகிறது.

13. அதிகாரங்கள் அளிப்படைவு (Delegation of Powers): வழக்கு நடவடிக்கை அல்லது மேல்முறையீடு தொடர்பான விடயம் எதையும் விசாரித்து அறிக்கை வழங்க தனது அலுவலர்கள், பணியாளர்கள் அல்லது தன்னால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரையும் தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் தனது பொது அல்லது குறித்தவகையிலான ஆணை வாயிலாக ஏவுரைக்கலாம் என்று பிரிவு 426 கூறுகிறது.

14. இதர வகைமுறைகள் (Other Provisions): தீர்ப்பாயத்தின் தலைவர், உறுப்பினர்கள், அலுவலர்கள் ஆகியோர் பொது ஊழியர்கள் என்று பிரிவு 427–ம், இந்தச் சட்டத்தின் கீழ் நன்னம்பிக்கையில் எடுக்கப்பட்ட செயலின் விளைவாக ஏற்பட்ட இழப்பு அல்லது தீங்குக்கு எதிராக உரிமையியல் வழக்கு, குற்ற வழக்கு தொடர்கை அல்லது வேறு சட்ட நடவடிக்கை எதுவும் தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், அதன் தலைவர், உறுப்பினர், அலுவலர் அல்லது பிற பணியாளருக்கு எதிராக எழாது என்று பிரிவு 428–ம், நலிவடைந்த நிறுவனம் அல்லது நிறுவனக் கலைப்பு தொடர்பான நடவடிக்கைகள் எதிலும் தலைமை பெருநகர குற்றவியல் நடுவரின் உதவியைக் கோர தீர்ப்பாயத்திற்கு அதிகாரமுண்டு என்று பிரிவு 429–ம், தீர்ப்பாயத்தால் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதையும் ஏற்றுக்கொள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரவரம்பு இல்லை என்று பிரிவு 430–ம், தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் பதவியில் காலியிடம் ஏற்பட்டதால், அதன் செயல்கள் அல்லது நடவடிக்கைகக்ள் எதுவும் செல்லாத ஒன்றாகிவிடாது என்று பிரிவு 431–ம், வழக்கு நடவடிக்கை அல்லது மேல்முறையீடு எதற்கும் தொடர்புடைய தரப்பினர் ஒருவர், தானே நேர்முகமாக தோன்றி அவற்றை

நடத்தலாம் அல்லது தனக்காக வழக்கு நடத்த பட்டயக் கணக்காயர்கள், நிறுவனச் செயலாளர்கள் அல்லது சட்டத் தொழி லாற்றுநர்கள் அல்லது வேறு நபர் எவருக்கும் அவர் அதிகாரமளிக்கலாம் என்றும், இது சட்டநிலை பிரதிநிதித்துவத்திற்காக அத் தரப்பினருக்குள்ள உரிமை என்று பிரிவு 432–ம், காலவரையறைச் சட்டத்தின் வகை முறைகள், தீர்ப்பாயம் மற்றும் மேல் முறையீட்டுத் தீர்ப்பாய நடவடிக்கைகள் மற்றும் நேர்விற்கேற்றவாறு மேல்முறையீடு களுக்குப் பொருந்தும் என்றும் பிரிவு 433–ம், நிறு வனச் சட்ட வாரியம் (Company Law Board), தொழில் மற்றும் நிதி மறு சீரமைப்பு வாரியம் (Board of Industrial and Financial Reconstruction), தொழில் மற் றும் நிதி மறுசீரமைப்பு மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு (Appellate Authority for Industrial and Financial Reconstruction), உயர் நீதிமன்ற அதிகாரவரம் பில் செயற்படும் நிறுவன நீதிமன்றங்கள் (Company courts in the jurisdictional High Courts) ஆகியவற்றில் நிலுவையில் உள்ளதும் நிறுவனங்கள் தொடர் பானதுமான வழக்கு நடவடிக்கைகள் சிலவற்றை மாற்றுவது தொடர்பாக பிரிவு 434–ம் விளக்குகிறது.

முடிவுரை:

தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை மைய அரசு விரைவில் கட்டமைத்தால் அது பல்வேறு நிறுவனங்களுக்கும் அவை தொடர்பான மற்றவர்களுக்கும் பெரிதும் உதவிகரமாக இருக்கும். நிறுவனச் சட்ட வாரியம் போன்று ஆங்காங்கே பல்வேறுபட்ட நீதிப்போல்வு அமைப்புகளில் நிலுவை யிலும், தேக்கத்திலும் உள்ள வழக்குகள் பலவற்றுக்கு விரைவில் தீர்வு கிட்டும்.

-o0o-

சிறப்பு நீதிமன்றங்கள்
[Special Courts]

103. Special Courts - Write short notes. (சிறப்பு நீதிமன்றங்கள்- குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Special Courts under the Companies Act, 2013- Write short notes. (நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் சிறப்பு நீதிமன்றங்கள்- குறுகிய விடை எழுதுக.)

7

சிறப்பு நீதிமன்றங்களின் நோக்கம்:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் அத்தியாயம் XXVIII சிறப்பு நீதிமன்றங்களின் கட்டமைப்பு மற்றும் அவற்றின் அதிகாரங்களை தனது 435 முதல் 446 வரையிலான பிரிவுகளின் வாயிலாக விளக்குகிறது. ஏற்கனவே நிறுவனங்கள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளை விசாரிக்க தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் கட்டமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்க மீண்டும் ஒரு நீதிமுறை அதிகாரஅமைப்பான சிறப்பு நீதிமன்றங்கள் ஏன் கட்டமைக்கப்பட வேண்டும் என்ற வினா எழுந்தால், அதில் வியப்

பொன்றுமில்லை. இங்கு நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயமானது நிறுவன விவகாரங்கள் தொடர்பான வழக்கு நடவடிக்கை களை விசாரித்து, ஆணை பிறப்பிப்பதற்காக கட்டமைக்கப்பட்டதாகும். ஆனால் சிறப்பு நீதிமன்றம் அவ்வாறான நோக்கத்திற்காக கட்டமைக்கப்பட்டதல்ல. அது நிறுவனச் சட்டத்தின் கீழ் எழும் மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றங்களை விசாரித்து சம்பந்தப் பட்ட நிறுவனம் அல்லது அதன் இயக்குனர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு தண்டனை யளிப்பதற்காக மைய அரசால் கட்டமைக்கப்படுவதாகும்.

சிறப்பு நீதிமன்றங்கள் தொடர்பான வகைமுறைகள்:

1. சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுதல் (Establishment of Special Courts): இந்தச் சட்டத்தின் (அதாவது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம்) கீழான குற்றங்களைவிரைவாக விசாரிக்க வகை செய்யும் நோக்கத்திற்காக மைய அரசு, அறிவிக்கை மூலம், தேவைப்படலாகும் எண்ணிக்கையிலான சிறப்பு நீதிமன்றங் களை நிறுவ வேண்டும் அல்லது அவ்வாறு சுட்டியமர்த்த வேண்டும் என்று பிரிவு 435 (1) கூறுகி றது.

இதற்கு தனி நீதிபதி ஒருவரை மைய அரசு நியமித்தல் வேண்டும் என்றும், இந்நியமனத்தை அந்நீதிபதி எங்கு பணியாற்றுகிறாரோ அதன் மீது அதிகாரவரம்பு கொண்ட உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதியரசரின் இசைவுடன் செய்ய வேண்டும் என்று பிரிவு 435(2) கூறுகிறது.

இந்நியமனத்திற்கு உடனடி முன்னதாக அத்தனி நீதிபதி அமர்வு நீதிபதி யாக அல்லது கூடுதல் அமர்வு நீதிபதியாக பணியாற்றினாலன்றி அவரை அவ்வாறு நியமித்தல் ஆகாது என்று பிரிவு 435(3) கூறுகிறது.

2. சிறப்பு நீதிமன்றங்களால் விசாணை செய்யப்படக் கூடிய குற்றங் கள் (Offences triable by Special Courts): குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் யாது கூறப்பட்டிருந்தாலும், ஒரு சிறப்பு நீதிமன்றம் இந்நிறுவனச் சட்டத்தின் கீழான குற்றங்கள் அனைத்தையும் விசாரணை செய்ய அதிகாரம் படைத்தது என்றும், அதற்கான நடைமுறை குறித்தும் பிரிவு 436 விளக்குகிறது.

3. மேல்முறையீடு மற்றும் சீராய்வு (Appeal and revision): உயர் நீதிமன்றத்தின் வட்டார எல்லைக்குள் அமைந்துள்ள சிறப்பு நீதிமன்றம் ஒன்று, அவ் வுயர் நீதிமன்றத்தின் வட்டார எல்லைக்குள் வழக்குகளை விசாரிக்கும் ஓர் அமர்வு நீதிமன்றமாக இருந்தால் எவ்வாறோ அவ்வாறே, அதிலிருந்து எழும் மேல்முறையீடு மற்றும் சீராய்விற்குப் பொருந்தும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் அனைத்து அதிகாரங்களையும் உயர் நீதிமன்றம் செயற்படுத்தலாம் என்று பிரிவு 437 கூறுகிறது.

4. சிறப்பு நீதிமன்றத்தின் முன் நடக்கும் வழக்கு நடவடிக்கைகளுக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பொருந்துகை (Application of Code to proceedings before Special Court): சிறப்பு நீதிமன்றத்தின் முன் நடக்கும் வழக்கு நடவடிக்கைகளுக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் வகைமுறைகள்

பொருந்தும் என்றும், அந்நோக்கத்திற்காக சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமர்வு நீதிமன்றமாக கருதப்படுதல் வேண்டும் என்றும், சிறப்பு நீதிமன்றத்தின் முன் குற்ற வழக்கை நடத்தும் நபரை அரசு குற்றவியல் வழக்கு தொடருநராக (வழக்குரைஞராக) கருதுதல் வேண்டும் என்றும் பிரிவு 438 கூறுகிறது.

5. குற்றங்கள் பிடியாணை வேண்டுவதாகும் (Offences to be non-cognizable): இந்நிறுவனச் சட்டத்தின் கீழான குற்றங்கள் ஒவ்வொன்றையும் பிடியாணை வேண்டும் குற்றமாக (புலன் கொள்ளாக் குற்றம்) கருதுதல் வேண்டும் என்றும், இதற்கு பிரிவு 212(6)–இன் கீழான குற்றம் விதிவிலக்கு என்றும் பிரிவு 439(1) கூறுகிறது.

நிறுவனம் எதனாலும் அல்லது அதன் அலுவலர் எவராலும் செய்யப்பட்டதாக சாட்டுரைக்கப்படும் குற்றம் எதனையும், பதிவாளர், பங்குதாரர் அல்லது இதற்கென மைய அரசால் அதிகாரமளிக்கப்பட்ட நபரின் எழுத்துப்பூர்வமான புகாரின் பேரில் தவிர, நீதிமன்றம் எதுவும் புலன் கொள்ளக் கூடாது என்று பிரிவு 439(2) கூறுகிறது.

எனினும் பிணையங்களின் (பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள்) வெளியீடு மற்றும் மாற்றுகை, பங்காதாயம் செலுத்தப்படாமை தொடர்பான குற்றங்களை, இந்தியப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் ஒருவரால் எழுத்துப்பூர்வமாக செய்யப்படும் புகாரின் பேரில் நீதிமன்றம் புலன் கொள்ளலாம் என்று மேற்படி பிரிவு 439(2)–இன் கீழான வரம்புரை வாசகம் கூறுகிறது. மேலும் இந்த உட்பிரிவில் உள்ள எதுவும், நிறுவனமொன்று அதன் அலுவலர் எவர் மீதும் தொடுக்கும் குற்ற வழக்குக்கு பொருந்தாது.

புகார்தாரர் மேற்சொன்னவாறு பதிவாளராக இருந்தால் அல்லது மைய அரசால் அதிகாரமளிக்கப்பட்ட நபராக இருந்தால், சம்பந்தப்பட்ட குற்றத்தை விசாரிக்கும் நீதிமன்றத்தின் முன் அவர் தோன்ற வேண்டிய அவசியமில்லை என்று பிரிவு 439(3) கூறுகிறது.

நிறுவனக் கலைப்பு விடயங்கள் தொடர்பான குற்றங்களைப் பொறுத்து நிறுவனக் கலைப்பதிகாரி ஒருவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை எதற்கும் பிரிவு 439(2)–இன் வகைமுறைகள் பொருந்தாது என்று பிரிவு 439(4) கூறுகிறது.

6. இடைமாறுகால வகைமுறைகள் (Transitional provisions): இச் சட்டத்தின் செய்யப்பட்டதும், சிறப்பு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படக் கூடியதுமான குற்றம் எதுவும், அவ்வாறு சிறப்பு நீதிமன்றம் ஒன்று நிறுவப்படும் வரை, சம்பந்தப்பட்ட பகுதியின் மீது அதிகாரவரம்பு கொண்ட அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டும் என்று பிரிவு 440 கூறுகிறது.

7. சில குற்றங்களை சமரசம் செய்து கொள்ளல் (Compounding of certain offences): இந்நிறுவனச் சட்டத்தின் கீழ் அபராதம் மட்டும் விதித்து தண்டிக்கப்படக் கூடிய குற்றங்கள் சமரசம் செய்து கொள்ளப்படலாம் என்றும், அவ்வாறு சமரசம் செய்து கொள்ளப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குள்

நிறுவனமோ, அதன் அலுவலரோ மீண்டும் அதே குற்றம் செய்தால், அங்கு சமரச நடவடிக்கை பொருந்தாது என்றும் பிரிவு 441 கூறுகிறது.

8. இடைநின்றிணைத்தல் மற்றும் சமரசக் குழு (Mediation and Conciliation Panel): மைய அரசு அல்லது தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் நடக்கும் வழக்கு நடவடிக்கைகளின் நிலுவையின் போது தரப் பினர்களிடையே இடைநின்றிணைத்து சமரசம் செய்வதற்காக வகுத்துரைக்கப்படலா கும் அத்தகு தகுதிகளைக் கொண்ட வல்லுநர்கள் அடங்கிய இடைநின்றிணைத்தல் மற்றும் சமரசக் குழு என்றழைக்கப்படும் வல்லுநர்கள் குழு ஒன்றை மைய அரசு பரா மரித்து வர வேண்டும் என்றும், தரப்பினர்கள் எவரும் தங்கள் வழக்கு நடவடிக்கை களை இதனிடம் சமரசத்திற்காக சுட்டியனுப்ப விண்ணப்பிக்கலாம் என்றும், சில சமயங்களில் மைய அரசே, தீர்ப்பாயமே அவ்வாறு சுட்டியனுப்பலாம் என்றும், இதன் பேரில் அக்குழு தனது பரிந்துரைகளை அச்சுட்டிகையின் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் நேர்விற்கேற்றவாறு மைய அரசு, தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட் டுத் தீர்ப்பாயத்திற்கு அனுப்பலாம் என்றும் பிரிவு 442 கூறுகிறது.

9. இதர வகைமுறைகள் (Other Provisions): நிறுவன குற்ற வழக்கு தொடருநர்களை நியமனம் செய்ய மைய அரசுக்குள்ள அதிகாரம் (Power of Central Government to appoint company prosecutors) பற்றி பிரிவு 443–ம், விடுதலைத் தீர்ப்பிலிருந்து மேல்முறையீடு செய்வது (Appeal against acquittal) குறித்து பிரிவு 444–ம், நியாயமான காரணமின்றி குற்றஞ்சாட்டியதற்கு இழப்பீடு கோருதல் (Compensation for accusation without reasonable cause) தொடர்பாக பிரிவு 445–ம், விதிக்கப்படும் அபராதங்களை எந்தெந்த தலைப்பிற்கு பொருத்துவது (Application of fines) என்பது குறித்து ஏவுரைக்க நீதிமன்றத்திற் குள்ள அதிகாரம் பற்றி பிரிவு 446–ம் விளக்குகிறது.

முடிவுரை:

நிறுவனச் சட்டத்தின் வகைமுறைகளை மீறும் நிறுவனத்திற்கும், அதன் அலுவலர் ஒவ்வொருவருக்கும் அபராதம் அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்பதை நாம் இந்நூல் முழுவதிலும் பல இடங்களிலும் வாசித்திருக்கிறோம். அந்த வகையில் நிறுவனச் சட்டத்தை ஓர் இரண்டாம் இந்திய தண்டனைச் சட்டம் என்று கூறினால் அது மிகையன்று. குறிப்பாக அபராதத் தொகையின் அளவு மற்றும் சிறைத் தண்டனையின் கால அளவானது 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பன்மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. எனவே நிறுவனம் அல்லது அதன் இயக்குனர் உள்ளிட்ட அலுவலர்கள் எவரும் நிறுவனச் சட்டத்திற்கு எதிராக புரியும் குற்றங்களை விசாரிக்கவும், அவர்களை உரியவாறு தண்டிக்கவுமே தனியாக நீதிமன்றங்கள் தேவைப்படுகின்றன. அந்த வகையில் அத்தகு அதிகாரங்களுடன் மைய அரசால் நிறுவப்படக் கூடியதுதான் சிறப்பு நீதிமன்றங்கள் ஆகும். நிறுவனக் குற்றங்கள் தொடர்பாக ஏற்கனவே விசாரித்து வந்த அமர்வு நீதிமன்றங்களின் பணிச் சுமையை இச்சிறப்பு நீதிமன்றங்கள் குறைக்கும் என்றால் அதில் மாற்றுக்கருத்தில்லை.ள

செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம்
[Dormant Company]

8

104. Dormant Company - Write short notes. (செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம் பற்றி 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் **பிரிவு 455** விளக்குகிறது. இதற்கு முந்தைய 1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் இப்படி ஒரு வகை நிறுவனம் கிடையாது. இது 2013–ஆம் ஆண்டு சட்டத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது நாம் ஏற்கனவே கண்டுள்ள **"செயலற்ற நிறுவனம்" (Defunct Company)** என்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். செயலற்ற நிறுவனத்தில் செயல் ஏதும் இல்லை. அது செயற்பாட்டிலேயே இல்லை. ஆனால் இவ்வகை நிறுவனத்தில் அது தனது செயலை நிறுத்தி வைத்துள்ளது. சற்று விரிவாக வருமாறு.

வரையறை - பிரிவு 455(1):

நிறுவனச் சட்டப்படி அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட

நிறுவனம் ஒன்று, எதிர்கால திட்டத்திற்காக அல்லது சொத்துடைமை அல்லது அறிவு சார் சொத்து ஒன்றை வைத்திருப்பதற்காக அல்லது அந்நிறுவனத்திற்கு குறிப்பிடத் தக்க கணக்கு வழக்கு நடவடிக்கை (significant accounting transaction) ஏதும் இல்லாமல் இருப்பின், அத்தகு நிறுவனம் ஒன்று அல்லது அத்தகு இயங்கா நிறுவனம் (inactive company) ஒன்று தனக்கு **'செயல் நிறுத்தி வைத்திருக்கிற நிறுவனம்'** என்ற தகுநிலையைத் (status) வழங்குமாறு கோரி நிறுவனங்களின் பதிவாளரிடம் விண்ணப்பம் செய்ய லாம் என்று பிரிவு 455(1) கூறுகிறது. அதாவது, 'செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம்' என்றால் பின்னிட்டு செயல்படும் நோக்கத்திற்காக தற்காலம் செயல்படா மல் இருக்கும் நிறுவனம் என்று பொருள்படும் என்று எளிமையாகக் கூறலாம்.

பிரிவு 455(1)-இன் கீழான சில விளக்கங்கள்:

மேற்படி பிரிவு 455(1)–இல் இடம் பெற்றுள்ள இரண்டு பதங்களுக்கு உண்டான விளக்கத்தை அப்பிரிவின் கீழான விளக்கப் பகுதி தருகிறது. அதன்படி

(i) **"இயங்கா நிறுவனம்" (inactive company)** என்பது, தொழில் அல்லது செயல்பாடு எதையும் செய்து கொண்டிருக்காத, அல்லது கடந்த இரண்டு நிதியாண்டுகளின் போது குறிப்பிடத்தக்க கணக்கு வழக்கு நட வடிக்கையை செய்திராத, அல்லது கடந்த இரண்டு நிதியாண்டுகளின் போது நிதிநிலை அறிக்கைகள் மற்றும் ஆண்டு அறிக்கைகளை தாக்கல் செய்திராத நிறுவனம் ஒன்று என்று பொருள்படும்.

INACTIVE

(ii) **"குறிப்பிடத்தக்க கணக்கு வழக்கு நடவடிக்கை" (signififcant accounting transaction)** என்பது, பின்வருவன **அல்லாத** நடவடிக்கை எதுவும் என்று பொருள்படும். அவை,

(அ) நிறுவனம் ஒன்று பதிவாளருக்கு கட்டணம் செலுத்துதல்;

(ஆ) இந்தச் சட்டத்தின் அல்லது வேறு சட்டம் எதனின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அந்நிறுவனத்தால் செய்யப்பட்ட செலுத்துகைகள்;

(இ) இந்தச் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பங்குகள் ஒதுக்கீடு செய்தல்; மற்றும்

(ஈ) அந்நிறுவனம் தனது அலுவலகம் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்காக செலுத்தியவை.

இதர வகைமுறைகள்:

செயல்நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம் என்ற தகுநிலைக்கு அனுமதி வேண்டும் விண்ணப்பத்தை பரிசீலனை செய்வதன் பேரில், விண்ணப்பதாரருக்கு அதற்கான சான்றிதழ் ஒன்றை பதிவாளர் வழங்குதல் வேண்டும் என்று பிரிவு 455(2)

கூறுகிறது.

செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றை பதிவாளர் பராமரித்து வர வேண்டும் என்று பிரிவு 455(3) கூறுகிறது.

தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகளுக்கு நிதி நிலை அறிக்கைகள் அல்லது ஆண்டு அறிக்கைகள் தாக்கல் செய்திராத நிறுவனமொன்றின் நேர்வில், அந்நிறுவனத்திற்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பி, அதன் பெயரை செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனங்களின் பதிவேட்டில் பதிவாளர் பதிந்து கொள்ள வேண்டும் என்று பிரிவு 455(4) கூறுகிறது.

செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனம் ஒன்று வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு குறைந்தபட்ச எண்ணிக்கையிலான இயக்குனர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், அத்தகு ஆவணங்களைத் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், தனது அத்தகுநிலையை அவ்வாறு பதிவேட்டில் இருத்தி வைத்துக் கொள்வதற்காக அத்தகு ஆண்டுக் கட்டணத்தை பதிவாளரிடம் செலுத்த வேண்டும் என்றும், அத்தகு ஆவணங்களை இணைத்தும், அத்தகு கட்டணத்தை செலுத்தியும் செய்யப்படுகின்ற விண்ணப்பத்தின் பேரில், அந்நிறுவனம் இயங்கும் நிறுவனமாக (active company) ஆகும் என்றும் பிரிவு 455(5) கூறுகிறது.

இந்தப் பிரிவின் தேவைகளை நிறைவு செய்யத் தவறிய செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனமொன்றின் பெயரை, அதற்கான பதிவேட்டிலிருந்து பதிவாளர் அடித்துவிட வேண்டும் என்று பிரிவு 455(6) கூறுகிறது.

முடிவுரை:

நிறுவனத்தைத் தோற்றுவித்து தொழில் அல்லது வணிகம் செய்யத் தொடங்கியவுடன் நிறுவனச் சட்டத்தின் வகைமுறைகளின் கண்டிப்பான பார்வைக்கு அது ஆளாகிறது. நிறைய சட்டச் சடங்குகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது. இந்நிலையில் ஒரு நிறுவனம் உடனே அவ்வாறு தனது தொழிலைத் தொடங்காமல், எதிர்கால திட்ட நோக்கத்திற்காக உரிய நேரத்தில் செயல்படும் பொருட்டு தன்னை அமைத்துக் கொண்டால் அது செயல் நிறுத்தி வைத்திருக்கின்ற நிறுவனமாகிறது. அத்தகு நிறுவனங்களுக்கு 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் வகுத்துக் கொடுத்துள்ள ஒரு வசதியே மேற்கண்ட எளிய சட்ட நடைமுறைகள்.

105. Small Company under 2013 Act - Write short notes. (2013 சட்டத்தின் கீழ் சிறு நிறுவனம் - குறுகிய விடை எழுதுக.)

சிறு நிறுவனம்:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தால் புதிததாக அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு வகை நிறுவனம் "சிறு நிறுவனம்" ஆகும். இதற்கான வரையறை

பிரிவு 2(85) பின்வருமாறு தருகிறது.

சிறு நிறுவனம்[1] – பிரிவு 2(85) தரும் வரையறை:

சிறு நிறுவனம் என்பது பொது நிறுவனம் அல்லாத ஓர் நிறுவனம் என்று பொருள்படும். மேலும் அது பின்வரும் இரண்டு கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும். அவை,

(i) அய்ம்பது இலட்ச ரூபாய்க்கு மிகாத அல்லது வகுத்துரைக்கப்படலாமெனக் கூடிய அத்தகு உயர்ந்தபட்ச தொகையை ஆனால் அய்ந்து கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செல்லாத ஒரு தொகையை செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக அச்சிறு நிறுவனம் கொண்டிருக்க வேண்டும்.

(ii) இறுதி இலாப நட்டக் கணக்கின்படி இரண்டு கோடி ரூபாய்க்கு மிகாத அல்லது வகுத்துரைக்கப்படலாமெனக் கூடிய அத்தகு உயர்ந்தபட்ச தொகையை ஆனால் இருபது கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செல்லாத ஒரு தொகையை அது தனது பயன்பாட்டுத் தொகையாக (turnover) கொண்டிருக்க வேண்டும்.

எனினும், மேற்சென்ற எதுவும்

(A) பிடிப்பு நிறுவனம் அல்லது பிடிப்பிலுள்ள துணை நிறுவனம் ஒன்றுக்கு;

(B) பிரிவு 8–இன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றுக்கு (அதாவது இலாப நோக்கமில்லாத தரும காரியங்களுக்கான நிறுவனம் ஒன்றுக்கு); அல்லது

(C) சிறப்புச் சட்டம் எதனாலும் வழிநடத்தப்படும் நிறுவனம் அல்லது கூட்டுரு அமைப்பு ஒன்றுக்குப்

பொருந்தாது.

-o0o-

1. நவம்பர், 2015–க்கான பல்கலைக்கழக வினாத்தாளில் பின்வருமாறு ஒரு வினா கேட்கப் பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. அது, "Private Company and small company under 2013 Act - Write short notes (2013 சட்டத்தின் கீழ் தனியார் மற்றும் சிறு நிறுவனம் – குறுகிய விடை எழுதுக). இதற்கு விடையாக தனியார் நிறுவனம் பற்றி இந்நூலில் 2015–ஆம் ஆண்டு திருத்தச் சட்டடத்தின்படி விளக்கப்பட்டுள்ளது குறித்தும், சிறு நிறுவனம் தொடர்பாக மேற்கண்ட வரையறை குறித்தும் எழுதலாம் – ஆர்.

இயல் VI

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம்

[இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியச் சட்டம், 1992 – 2014–ஆம் ஆண்டு திருத்தங்கள் – இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் அமைப்பு – வாரியத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் – கூழ்ச்சி மற்றும் வஞ்சக திட்டங்கள், உள்ளிருப்போர் வணிகம் மற்றும் பங்குகள் அல்லது கட்டுப்பாட்டை கணிசமாக அடைதலுக்குத் தடை – தண்டங்கள் மற்றும் தீர்மானிப்பு முறை – பங்கு மேல்முறையிட்டு தீர்ப்பாயம் – பலவகைப்பட்டவை]

Securities Exchange Board of India

[Securities Exchange Board of India (SEBI) Act, 1992 - Amendments 2014 - Establishment of Securities Board of India - Powers and Functions of Board - Prohibition of Manipulative and Deceptive Devices, Insider Trading and Substantial Acquisition of Securties or Control - Penalties and Adjudication - Securities Appellate Tribunal - Miscellaneous]

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் – அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகள் [Securities Exchange Board of India - Establishement, Powers and Functions]

1 **106. Briefly examine the establishement of Securities Exchange Board of India and its powers and functions.** (இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் பற்றி சுருக்கமாக ஆய்வு செய்க.)

(அல்லது)

Securities Exchange Board of India (SEBI) - Write short answers. (இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் உள்ளிட்ட பிணையங்களில் முத லீடு செய்யும் முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், பங்குச் சந்தையின் மேம்பாட்டை வளர்ச்சியுறச் செய்யவும், அதனை ஒழுங்குமுறைப்படுத்தவும், அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு உடனிகழ்வான விடயங்களுக்காகவும் வாரியம் ஒன்றை அமைப்பதற்காக 1992–ஆம் ஆண்டில் **இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியச் சட்டம் (The Securities Exchange Board of India, 1992)** இயற்றப் பட்டது. இது பின்னிட்டு **"பங்குகள் சட்டம் (திருத்தச்) சட்டம், 2014"**–ஆல் **[The Securities Laws (Amendment) Act, 2014]** திருத்தப்பட்டது. இந்த வாரியம் ஆங்கிலத்தில் சுருக்கமாக **"செபி" (SEBI)** என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது.

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் – அமைப்பு:

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியச் சட்டம், 1992–இன் அத்தியாயம் 2 இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் நிறுவுகை (அமைப்பு) பற்றிய வகைமுறை களைக் கொண்டதாகும்.

அதன் கீழான **பிரிவு 3-ஆனது**, இச்சட்டத்தின் நோக்கத்திற்காக இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் என்ற பெயரில் வாரியம் ஒன்றை மைய அரசு நிறுவ வேண்டும் என்றும், இது அப்பெயரால் நிலையாகத் தொடர்ந்து செயல்படுவதும் பொது முத்திரையைக் கொண்டதுமான ஓர் கூட்டுரு அமைப்பு என்றும், இது அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை அடையவும், அவற்றை விற்கவும், அவ்வாறே ஒப்பந்தங் களில் ஈடுபடவும் அதிகாரம் கொண்டது என்றும், இது தனது பெயரில் வழக்கிடவும், வழக்கிடப்படவும் கூடியது என்றும், இதன் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ளது என்றும், இது இந்தியாவின் வேறு பகுதிகளில் அலுவலகங்களை நிறுவலாம் என்றும் கூறுகிறது.

பிரிவு 4–ஆனது இந்த வாரியத்தின் மேலாண்மை (Management of the Board) பற்றி கூறுகிறது. அதன்படி, இவ்வாரியம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாகும். அதாவது,

(அ) தலைவர்,

(ஆ) நிதி மற்றும் நிறுவனங்கள் சட்ட நிருவாகத்தைக் கையாளும் மைய அரசு அமைச்சகத்தின் அலுவலர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் படும் உறுப்பினர் இருவர்,

(இ) இந்திய சேம வங்கியின் அலுவலர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் படும் உறுப்பினர் ஒருவர்,

(ஈ) அய்ந்து உறுப்பினர்கள். இவர்களில் குறைந்தபட்சம் மூவர் மைய அரசால் நியமனம் செய்யப்படும் முழு நேர உறுப்பினர்கள்.

வாரிய விவகாரங்களின் மீதான பொதுவான கண்காணிப்பு, ஏவுரைக்கும் அதிகாரம் மற்றும் மேலாண்மையானது வாரிய உறுப்பினர்கள் அவையிடம் உள்ளது. வ வாரியத்தால் செயலுறுத்தப்படக் கூடிய அனைத்து அதிகாரங்களையும், செயல்களை யும் இந்த அவை செய்யலாம். இத்தகு அதிகாரம் வாரியத்தின் தலைவருக்கும் உண்டு.

மேற்கண்ட (அ) மற்றும் (ஈ)–யில் கண்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களை மைய அரசு நியமித்தல் வேண்டும். (ஆ) மற்றும் (இ)–யில் கண்ட உறுப்பினர்களின் பெயர்களை முறையே மைய அரசும் இந்திய சேம வங்கியும் முன் மொழிய வேண்டும்.

மேற்கண்ட (அ) மற்றும் (ஈ)–யில் கண்ட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் திறன் வாய்ந்தவர்களாக, நேர்மையானவர்களாக, அனுபவம் உடையவர்களாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் பங்குச் சந்தை தொடர்பான பிரச்சனைகளை கையாளுவதற்கான தங்கள் தகுதிறனை காண்பித்திருக்க வேண்டும். அத்துடன் சட்டம், நிதி, பொருளாதாரம், கணக்குப் பதிவியல், நிர்வாகம் அல்லது மைய அரசின் அபிப்பிராயத்தில் வாரியத்திற்கு பயனுடையதாக உள்ள வேறு துறைகளில் சிறப்பான அறிவும் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

பிரிவு 5–ஆனது தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் பணிக்குரிய நிபந்தனைகள் (Term of office and conditions of service of Chairman and members of the Board) பற்றிக் கூறுகிறது. பதவிக்காலம் முடிவ தற்கு முன்பாக இவர்களை பதவியிலிருந்து நீக்க வேண்டுமெனில் இவர்களுக்கு குறைந்தபட்சம் மூன்று மாத கால அறிவிப்பு ஒன்று எழுத்துப்பூர்வமாக கொடுக்கப்பட வேண்டும். அதுபோல் இவர்கள் தங்கள் பதவியை மைய அரசுக்கு மூன்று மாத கால அறிவிப்பு கொடுத்து விட்டு துறக்கலாம்.

பிரிவு 6–ஆனது உறுப்பினரை பதவியிலிருந்து நீக்குதல் (Removal of member from office) பற்றி கூறுகிறது. அதன்படி, உறுப்பினர் ஒருவரை அவரது பதவியிலிருந்து மைய அரசு பின்வரும் சூழல்களில் நீக்கலாம். அவர்,



(அ) நொடிப்புநிலை எய்தியவராக தீர்மானிக்கப்பட்டிருந்தால்,

(ஆ) மனநலம் குன்றியவராக இருந்து, அவ்வாறு தகுதிறம் வாய்ந்த நீதிமன்றம் ஒன்றால் விளம்புகை செய்யப்பட்டிருந்தால்,

(இ) மைய அரசின் அபிப்பிரயாத்தில் அவர் தீயொழுக்க நடத்தையை உள்ளடக்கிய குற்றம் ஒன்றிற்காக தண்டிக்கப்பட்டிருந்தால்,

(ஈ) மைய அரசின் அபிப்பிராயத்தில் அவர் தனது பதவியை தொடர்ந்து வகிப்பது என்பது பொது நலனுக்கு பாதகமாகும் என்ற வகையில் அவர் தனது பதவி நிலையை தவறாக பயன்படுத்தியிருந்தால்,

எனினும் உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு முன் அவர் அதற்கு எதிரான தனது வாதங்களை எடுத்துரைப்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றை அவருக்கு நல்குதல் வேண்டும்.

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் - அதிகாரங்கள் மற்றும் பணிகள் (Powers and Functions of the Board):

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் பற்றி **பிரிவு 11** விளக்குகிறது. அவை வருமாறு:–

(1) பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்யும் முதலீட்

டாளர்களை பாதுகாக்க வேண்டியது இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் முதற் கடமையாகும். மேலும் வாரியம் தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு நடவடிக்கை களால் பங்குச் சந்தையின் மேம்பாட்டை வளர்ச்சியுறச் செய்யவும், ஒழுங்குமுறைப் படுத்தவும் கடமை கொண்டுள்ளது.

(2) வாரியம் தான் பொருத்தமெனக் கருதும் நடவடிக்கைகளில் பின் வருவன உள்ளடங்கும். அவை,

(அ) பங்கு மாற்றகம் மற்றும் பங்குச் சந்தைகள் வேறு எதனுடைய அலுவலையும் ஒழுங்குமுறைப்படுத்துதல்;

(ஆ) பங்குத் தரகர்கள், பங்கு உட்தரகர்கள், பங்கு மாற்று முகவர்கள், பங்கு வெளியிடுகை வங்கிகள், பொறுப்பாண்மைப் பத்திரத்தின் பொறுப்பாண்மையர்கள், பங்கு வெளியிடுகை ஒன்றின் பதிவாளர் கள், பங்குகளை மறுவிற்பனைக்காக வாங்குபவர்கள், இலாகா மேலாளர்கள், முதலீட்டு விளம்பரதாரர்கள் மற்றும் பங்குச் சந்தை களுடன் ஏதேனுமொரு வகையில் ஒருங்கிணைந்த அத்தகு வேறு இடை நிற்பவர்களைப் (intermediaries) பதிவு செய்தல் மற்றும் அவர்களது பணியை ஒழுங்குமுறைப்படுத்துதல்;

(இ) பதிவகங்கள், பங்கேற்பாளர்கள், பிணையங்களை பாதுகாப்பு பொறுப்பில் வைத்திருப்பவர்கள், வெளிநாட்டு நிறுவன முதலீட்டா ளர்கள், நம்பகத் தரம் வழங்கும் முகமைகள், மற்றும் இதற்கென அறிவிக்கை மூலம் வாரியம் குறித்துரைக்கலாகும் அத்தகு வேறு இடைநிற்பவர்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களது பணியை ஒழுங்குமுறைப்படுத்துதல்;

(இ) கூட்டு முயற்சி முதலீட்டு நிதி மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டங் கள், பரஸ்பர நிதிகளை பதிவு செய்தல் மற்றும் அவை செயற்படும் விதத்தை ஒழுங்குமுறைப்படுத்துதல்;

(ஈ) சுய ஒழுங்குமுறை அமைப்புகளை வளர்ச்சியுறச் செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல்;

(உ) பங்குச் சந்தைகள் தொடர்பான மோசடியான மற்றும் நியாயமற்ற வணிக நடவடிக்கைகளை தடை செய்தல்;

(ஊ) முதலீட்டாளர் கல்வியை வளர்ச்சியுறச் செய்தல் மற்றும் பங்குச் சந்தைகளின் இடை நிற்பாளர்களுக்கு பயிற்சி அளித்தல்

(எ) பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்களில் உள்ளிருப்போர் வணிகத்தை தடை செய்தல்;

(ஏ) பங்குகளை கணிசமாக அடைதல் மற்றும் நிறுவனங்களின் பொறுப்பை எடுத்துக் கொள்ளலை ஒழுங்குமுறைப்படுத்துதல்;

(ஐ) பங்குச் சந்தைகள், பரஸ்பர நிதிகள், பங்குச் சந்தையுடன் ஒருங்கிணைந்த வேறு நபர்கள், இடைநிற்பவர்கள் மற்றும் பங்குச்சந்தையில் உள்ள சுய ஒழுங்குமுறை அமைப்புகள் ஆகியோர்களிடமிருந்து தகவல் கோருதல், அவற்றின் ஆய்வை மேற்கொள்ளல், விசாரணைகள் மற்றும் தணிக்கைகள் செய்தல்;

(ஒ) பிணைய ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1956–இன் வகை முறைகளின் கீழ் மைய அரசால் ஒப்படைவு செய் யப்படலாகும் அத்தகு அதிகாரங்களை செயலுறுத் தல் மற்றும் அத்தகு பணிகளை நிறைவேற்றுதல்;

(ஓ) இப்பிரிவின் நோக்கங்களை நிறைவேற்றறுவதற்காக கட்டணங்கள் அல்லது இதர கட்டணங்களை விதித்தல்;

(ஔ) மேற்சென்ற நோக்கங்களுக்காக ஆய்வு மேற்கொள்ளல்;

(ஃ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகு வேறு பணிகளைச் செய்தல்.

முடிவுரை:

இந்த அதிகாரங்கள் மற்றும் பணிகள் தவிர, பிரிவு 11(2)(ஐ)–இன்படி விசாரணை மேற்கொள்ளும்போது, உரிமையியல் வழக்கொன்றை விசாரணை செய்யும் போது சில விடயங்களின் மீது ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்கு எத்தகு அதிகாரங்கள் உள்ளனவோ அதே அதிகாரங்கள் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியமும் கொண்டிருக்கும் என்று **பிரிவு 11(3)** கூறுகிறது.

மேலும் விசாரணை அல்லது புலனாய்வு நிலுவையில் இருக்கும் போது அல்லது அது முடிவடைந்த பிறகு, முதலீட்டாளர்கள் அல்லது பங்குச் சந்தையின் நலனில் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க லாம் என்று **பிரிவு 11(4)** கூறுகிறது. அவை, (அ) அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகத்தில் பங்கு எதையும் வணிகம் செய்வதை இரத்து செய்யலாம். (ஆ) பங்குச் சந்தையில் நுழைவதிலிருந்து நபர் எவரையும் தடுக்கலாம். மேலும் பங்குகளை வாங்குவது, விற்பது அல்லது கையாளுவதிலிருந்து அவற்றுடன் ஒருங்கிணைந்த நபர் எவரையும் தடை செய்யலாம். (இ) பங்கு மாற்றகத்தின் அலுவலகப் பொறுப்பாளர் எவரையும் இடைநீக்கம் செய்யலாம். (ஈ) புலனாய்வில் உள்ள நடவடிக்கைக்கு தொடர்பான பங்குகளை பறித்து வைக்கலாம் அல்லது அதன் விற்பனைத் தொகையை நிறுத்திக் கொள்ளலாம். (உ) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மீறிய இடை நிற்பவர் அல்லது நபர் எவரது வங்கிக் கணக்குகளை ஒரு மாதத்திற்கு மிகாத காலஅளவுக்கு பற்றுகை (ஜப்தி) செய்யலாம்.

-oOo-

சூழ்ச்சி மற்றும் வஞ்சக திட்டங்கள், உள்ளிருப்போர் வணிகம் மற்றும் பங்குகள் அல்லது கட்டுபாட்டை கணிசமாக அடைதலுக்குத் தடை [Prohibition of Manipulative and Deceptive Devices, Insider Trading and Substantial Acquisition of Securities or Control]

2

107. Prohibition of Manipulative and Deceptive Devices under SEBI Act - Write short answers. (செபி சட்டத்தின் கீழ் சூழ்ச்சி மற்றும் வஞ்சக திட்டங்களுக்கு தடை - குறுகிய விடை எழுதுக.)

(அல்லது)

Insider Trading - Write short answers. (உள்ளிருப்போர் வணிகம் - குறுகிய விடை எழுதுக.)

முன்னுரை:

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியச் சட்டத்தின் பிரிவு 12A–ஆனது சூழ்ச்சி மற்றும் வஞ்சக திட்டங்கள், உள்ளிருப்போர் வணிகம் மற்றும் பங்குகள் அல்லது கட்டுப் பாட்டை கணிசமாக அடைதலின் மீதான தடை குறித்து பின்வருமாறு விளக்குகிறது.

தடை:

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியச் சட்டத்தின் பிரிவு 12A-இன்படி,

நபர் எவரும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ–

(அ) அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட அல்லது பட்டியலிட உத்தேசிக்கப்பட்ட பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் (பிணையங் கள்) எதையாவது வெளியிடுவது, வாங்குவது அல்லது விற்பது தொடர்பாக சூழ்ச்சி அல்லது வஞ்சக திட்டம் எதையும் பயன்படுத்துதல் அல்லது செயலுக்குட்படுத்துதல் ஆகாது அல்லது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு அல்லது இதன் கீழ் செய்யப் பட்ட விதிகள் அல்லது ஒழுங்கு முறை விதிகளுக்கு முரணாக திட்டமிடுதல் ஆகாது;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட அல்லது பட்டியலிட உத்தேசிக்கப்பட்ட பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் (பிணையங் கள்) வெளியிடுதல் அல்லது கையாளுதல் தொடர்பாக மோசடி செய்வதற்காக திட்டம், வகுமுறைத்திட்டம் அல்லது யுக்தி எதையும் செயலுக்குட்படுத்துதல் ஆகாது;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட அல்லது பட்டி யலிட உத்தேசிக்கப்பட்ட பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் (பிணையங்கள்) வெளியிடுதல் அல்லது கையாளுதல் தொடர்பாக இந்தச் சட்ட வகைமுறைகளுக்கு அல்லது இதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளுக்கு முரணாக நபர் எவருக்கும் மோசடி அல்லது வஞ்சகம் செய்கின்ற அல்லது செய்யக் கூடிய செயல், நடவடிக்கை, வணிகப் போக்கு எதிலும் ஈடுபடுதல் ஆகாது;

(ஈ) உள்ளிருப்போர் வணிகத்தில் (insider trading) ஈடுபடுதல் ஆகாது;

(உ) விடயம் அல்லது பொதுத் தகவல் அல்லாத தகவலை உடைமையில் கொண்டிருக்கும் பொழுது பங்குகள் அல்லது கடனீட்டுப்பத்திரங்களை (பிணையங் களை) கையாளுதல் ஆகாது அல்லது அந்த விடயம் அல்லது பொதுத் தகவல் அல்லாத தகவலை இந்தச் சட்ட வகைமுறைகளுக்கு அல்லது இதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளுக்கு முரணான முறையில் நபர் வேறு எவருக்கும் தெரிவித்தல் ஆகாது.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட அல்லது பட்டி யலிட உத்தேசிக்கப்பட்ட பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்களுக்குரிய (பிணையங் களுக்குரிய) நிறுவனமொன்றின் சாதாரண பங்கு மூலதன விழுக்காட்டை விட அதிகமான பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்களின் (பிணையங்களின்) அல்லது நிறுவனம் எதனின் கட்டுப்பாட்டையும் இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளுக்கு முரணாக அடைதல் ஆகாது. (அதாவது ஒரு

நிறுவனத்தின் பங்குகளை கணிசமாக அடைதல் அல்லது அதன் கட்டுப்பாட்டை கணிசமாக அடைதலை இவ்வகைமுறை தடை செய்கிறது.)

உள்ளிருப்போர் வணிகம் (Insider Trading) :

உள்ளிருப்போர் வணிகத்தில் நபர் எவரும் நேர்முகமாக அல்லது மறை முகமாக ஈடுபடுதல் ஆகாது என்று பிரிவு 12A(ஈ) கூறுவதை நாம் மேலே கண்டோம். அந்த வகையில் நாம் இங்கு உள்ளிருப்போர் வணிகம் என்பது யாது என்பதற்கான விளக்கத்தை காண வேண்டியது அவசியமாக உள்ளது.

2013–ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் **பிரிவு 195** இது குறித்து விளக்கு கிறது. அதன்படி,

(1) நிறுவனமொன்றின் இயக்குனர் அல்லது முக்கிய மேலாண்மை அலுவலர் உள்ளிட்ட எவரும் உள்ளிருப்போர் வணிகத்தில் ஈடுபடுதல் ஆகாது.

எனினும் இந்த உட்பிரிவில் உள்ள எதுவும் வணிகத்தின் அல்லது தொழிலின் இயல்பான போக்கில் அல்லது சட்டம் வேறு எதனின்படி வேண்டுறுத்தப் படும் தகவல் தொடர்பு எதற்கும் பொருந்தாது.

விளக்கம் – இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக,–

(அ) **"உள்ளிருப்போர் வணிகம்" (Insider trading)** என்பது–

(i) நிறுவன பிணையங்கள் (பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள்) குறித்து பொதுத் தன்மை அல்லாத விலை கூர்உணர்வுடைய தகவல் (non-public price sensitive information) எதையும் அணுகலாம் என்று நியாயமாக எதிர் பார்க்கக் கூடிய நிறுவனத்தின் இயக்குனர் அல்லது முக்கிய மேலாண்மை அலுவலர் அல்லது வேறு அலுவலர் எவரும் முதல்வராக அல்லது முகவராக அத்தகு இயக்குனர் அல்லது முக்கிய மேலாண்மை அலுவலர் அல்லது வேறு அலுவலர் எவராலும் பிணையங்களுக்கு ஆதரவளிக்கப்படும், வாங்கப் படும், விற்கப்படும், கையாளப்படும் அல்லது ஆதரவுக்கு, வாங்குவதற்கு, விற்பதற்கு அல்லது கையாளுவதற்கு உடன் படும் ஓர் செயல் என்று பொருள்படும்; அல்லது

(ii) நபர் எவருக்கும் பொதுத் தன்மை அல்லாத விலை கூர் உணர்வுடைய தகவல் (non-public price sensitive information) எதையும் நேர்முகமாக அல்லது மறைமுகமாக தருவிப்பது அல்லது தெரிவிப்பது பற்றி ஆலோசனை வழங்கும் ஓர் செயல்;

என்று பொருள்படும்.

(ஆ) **"விலை கூர்உணர்வுடைய தகவல்" (Price sensitive informa-**

tion) என்பது பிரசுரிக்கப்பட்டால் நிறுவன பங்குகளின் (பிணையங்களின்) விலையை அநேகமாக விடயபூர்மாக பாதிக்கும் எனக் கூடியதும் நிறுவனமொன்றுக்கு நேர்முகமாக அல்லது மறைமுகமாக தொடர்புடையதுமான தகவல் எதுவும் என்று பொருள்படும்.

(2) இந்தப் பிரிவின் வகைமுறைகளை நபர் எவரும் மீறினால், அவருக்கு அய்ந்தாண்டுகள் வரை நீட்டிக்கலாகும் கால அளவு ஒன்றுக்கு சிறைவாசம் அல்லது அய்ந்து இலட்ச ரூபாய்க்கு குறையாத ஆனால் இருபத்தைந்து கோடி ரூபாய்க்கு நீட்டிக்கலாகும் அல்லது உள்ளிருப்போர் வணிகத்திலிருந்து கிடைத்த இலாபத் தொகையின் அளவில் மூன்று மடங்கு, இவற்றில் எது அதிகமமோ அந்தத் தொகைக்கான அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்.

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (உள்ளிருப்போர் வணிகத் தடை) ஒழுங்குமுறை விதிகள், 2015 [SEBI (Pro-hibition of Insider Trading) Regulations, 2015] :

உள்ளிருப்போர் வணிகத்திற்கான தடை குறித்து 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் கூறுவதை இதுகாறும் நாம் மேலே கண்டோம். அதுபோல் இத் தடை குறித்து தனியாக ஒழுங்குமுறை விதிகளும் 2015–ஆம் ஆண்டில் இயற்றப் பட்டுள்ளன. அவை **இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (உள்ளிருப்போர் வணிகத் தடை) ஒழுங்குமுறை விதிகள், 2015** தலைப்பில் அழைக்கப்படுகின்றது. இது 2015–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15–ஆம் தேதியன்று அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டு, **2015, மே மாதம் 15-ஆம் தேதி முதல் செயல் விளைவுக்கு** வந்தது. இது முன்னதாக 1992–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட **இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (உள்ளிருப்போர் வணிகம்) ஒழுங்குமுறை விதிகளுக்குப்** [SEBI (Insider Trading) Regulations, 1992] பதிலாக, நிறுவனச் சட்டம், 2013–இன் வகைமுறைகளையொட்டி கொண்டு வரப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த ஒழுங்குமுறை விதிகள் பின்வரும் சில முக்கிய பதங்களுக்கு வரையறை தருகின்றது. அதாவது,

விதி 2(1)(g)–ஆனது **"உள்ளிருப்போர்" (Insider)** என்பதற்கு வரையறை தருகிறது. அதன்படி உள்ளிருப்போர் என்பது, (i) தொடர்புடைய நபர் ஒருவர்; அல்லது (ii) பிரசுரிக்கப்படாத விலை கூர்உணர்வுடைய தகவலை தம் உடைமையில் கொண்டிருப்பவர் அல்லது அதை அணுகக் கூடியவர் என்று பொருள்படும்.

விதி 2(1)(l)–ஆனது **"வணிகம்" (trading)** என்பதற்கு வரையறை தருகிறது. அதன்படி, வணிகம் என்பது பிணையங்கள் (பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள்) எதற்கும் ஆதரவளித்தல், வாங்குதல், விற்றல், கையாளுதல் அல்லது ஆதரவளிக்க, வாங்க, விற்க, கையாள உடன்படுதலை உள்ளடக்கியது என்று பொருள்படும்.

விதி 2(1)(ஈ)–ஆனது **"பிரசுரிக்கப்படாத விலை சூர்உணர்வுடைய தகவல்" (unpublished price sensitive information)** என்பது பொதுவாக கிடைக்கத்தக்கதானால், அது அநேகமாக பிணையங்களின் விலையை விடயபூர்வமாக பாதிக்கும் எனக்கூடியதும், நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பொதுவாக கிடைக்காததும் நிறுவனமொன்றுக்கு அல்லது அதன் பிணையங்களுக்கு தொடர்புடையதுமான தகவல் எதுவும் என்று பொருள்படும். இது பின்வருவன தொடர்பான தகவலை சாதாரணமாக உள்ளடக்கும், ஆனால் அவற்றிற்கு மட்டுமே வரம்புடையதாகாது.

(i) நிதிநிலை முடிவுகள்;

(ii) பங்காதாயங்கள்;

(iii) மூலதனக் கட்டமைப்பில் மாற்றம்;

(iv) தொழிலின் இணைப்பு, இணைப்பிலிருந்து விடுபடல், அடைதல், பட்டியலிலிருந்து வெளியேறல், வகை செய்தல் மற்றும் விரிவாக்குதல், மேலும் அத்தகு வேறு நடவடிக்கைகள்;

(v) முக்கிய மேலாண்மை அலுவலர்களில் மாற்றங்கள்; மற்றும்

(vi) பட்டியல் உடன்படிக்கைக்கிணங்க விடயபூர்வமான நிகழ்வுகள்;

முடிவுரை:

மேற்கண்ட வகைமுறைகள் யாவும் நிறுவனங்களில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களின் நலன் எவ்வகையிலும் பாதிப்படைந்துவிடக் கூடாது, நாட்டின் பொருளாதார மேம்பாடு மற்றும் நிறுவனங்களின் வளர்ச்சியில் சுணக்கம் ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டவை என்று கூறினால் அது மிகையன்று. குறிப்பாக பங்குகளின் விலை ஏற்றத்தாழ்வு, மூலதனக் கட்டமைப்பில் செய்யப்படும் மாற்றங்கள், பங்காதாயங்களின் வீகிதம் ஆகியன குறித்த இரகசியத் தகவல்களை விற்று வணிகம் செய்வதை உள்ளடக்கிய உள்ளிருப்போர் வணிகச் செயல்களின் மீது இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் ஒரு கண்கொத்திப் பாம்பாக உள்ளது என்று சொன்னால் அதில் மாற்றுக் கருத்தில்லை.

-o0o-

தண்டங்களும் அவற்றைத் தீர்மானிக்கும் முறையும் [Penalties and Adjudication]

108. Penalties and Adjudication under the SEBI Act - Write short answers. (செபி சட்டத்தின் கீழ் தண்டங்களும் தீர்மானிப்பும் - குறுகிய விடை எழுதுக.)

3

முன்னுரை:

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியச் சட்டம், 1992–இன் வகைமுறைகளை மீறும் நபருக்கு பல்வேறு வகையான தண்டங்களை அச்சட்டம் அபராதத்தின் வடிவில் விதிக்கிறது. அவற்றை அச்சட்டத்தின் 15A முதல் 15HB வரையிலான பிரிவுகள் விரிவாக விளக்குகின்றன. இந்நிலையில் 2014–இல் இயற்றப்பட்ட **"பங்குகள் சட்டம் (திருத்தச்) சட்டம், 2014"**–ஆனது மேற்படி 1992–ஆம் ஆண்டு சட்டத்தில் பல்வேறு திருத்தங்களைக் கொண்டு வந்தது. அவற்றில் 1992–ஆம் ஆண்டு செபி சட்டம் வகுத்துரைத்த அபராதத் தொகை

யின் அளவை உயர்த்தி திருத்தங்களைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தண்டங்கள் (Penalties):

பின்வரும் தவறுகைகளுக்கு இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியச் சட்டம், 1992 அபராதம் விதிக்கிறது.

1. பிரிவு 15A – தகவல், விவர அறிக்கை முதலியவற்றை வழங்குவதில் தவறுகை புரிதலுக்கான தண்டம் (அபராதம்) (Penalty for failure to furnish information, return, etc.).
2. பிரிவு 15B – வாடிக்கைதாரர்களுடன் உடன்படிக்கையில் ஈடுபட நபர் எவரும் தவறினால் அதற்கான தண்டம் (Penalty for failure by any person to enter into agreement with clients).
3. பிரிவு 15C – முதலீட்டாளர்களின் குறைகளை தீர்க்கத் தவறுவதற்கான தண்டம் (Penalty for failure by any person to enter into agreement with clients).
4. பிரிவு 15D – பரஸ்பர நிதியம் தொடர்பான தவறுகைகள் சிலவற்றுக்கான தண்டம் (Penalty for failure to redress investors' grievances).
5. பிரிவு 15E – விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை சொத்துடைமை மேலாண்மை நிறுவனம் ஒன்று கடைப்பிடிக்கத் தவறுவதற்கான தண்டம் (Penalty for failure to observe rules and regulations by an asset management company).
6. பிரிவு 15F – பங்குத் தரகர்களைப் பொறுத்த தவறுகைக்கான தண்டம் (Penalty for default in case of stock brokers).
7. பிரிவு 15G – உள்ளிருப்போர் வணிகத்திற்கான தண்டம் (Penalty for insider trading).
8. பிரிவு 15H – நிறுவனத்தின் பங்குகள் மற்றும் தொழிலை அடைந்ததை வெளியிடாமைக்கான தண்டம் (Penalty for non-disclosure of acquisition of shares and takeovers).
9. பிரிவு 15HA – மோசடியான மற்றும் நியாயமற்ற வணிக நடவடிக்கை களுக்கான தண்டம் (Penalty for fraudulent and unfair trade practices).
10. பிரிவு 15HB – தண்டத்திற்கென தனியாக வகை செய்யப்படாதவிடத்து, சட்ட மீறுகைக்கான தண்டம் (Penalty for contravention where no separate penalty has been provided).

தண்டங்களை தீர்மானிக்கும் முறை (Adjudication):

தண்டங்களை தீர்மானிக்கும் அதிகாரம் (Power to Adjudicate) - பிரிவு 15I:

முன்சென்ற பல்வேறு வகையான தவறுகைகளுக்கு இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் அபராதம் விதிக்க அதிகாரம் படைத்தது. தற்போது இதற்கான நடைமுறை என்ன, அபராதத் தொகையை எப்படி தீர்மானிக்க வேண்டும், வாரியத்தின் அதிகாரம் என்ன என்பதற்கான வகைமுறைகளை இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியச் சட்டம், 1992–இன் **பிரிவு 15I** பின்வருமாறு விளக்குகிறது. அதன்படி,

(1) பிரிவுகள் 15A, 15B, 15C, 15D, 15E, 15F, 15G, 15H, 15HA, 15HB ஆகிய வற்றின் கீழ் தீர்மானிப்பதற்காக, தண்டம் எதையும் விதிக்கும் நோக்கத்திற்காக கருத்து கேட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பு ஒன்றை சம்பந்தப்பட்ட நபர் எவருக்கும் நல்கிய பிறகு வகுத்துரைக்கப்பட்ட முறையில் விசாரணை ஒன்றை நடத்த மண்டல தலைவர் தகுதிக்கும் குறையாத அலுவலர் எவரையும் தீர்மான அலுவலராக வாரியம் நியமனம் செய்தல் வேண்டும்.

(2) விசாரணை ஒன்றை நடத்தும் போது, விசாரணைக்குட்பட்ட விடயத் திற்கு பயனுடையதாக அல்லது தொடர்புடையதாக இருக்கலாம் என்று தீர்மானிப்பு அலுவலர் அபிப்பிராயப்படும் ஆவணம் எதையும் முன்னிலைப்படுத்துமாறு அல்லது வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளைப் பற்றி நன்கறிந்த நபர் எவரையும் சாட்சியமளிக்க நேர்முகமாக தோன்றுமாறு வலியுறுத்தி அழைப்பாணை அனுப்ப அவர் அதிகாரம் படைத்தவர். அத்தகு விசாரணையின் பேரில் மேற்கண்ட உட்பிரிவு (1)–இல் குறித்துரைக்கப்பட்ட பிரிவுகளின் வகைமுறைகளை எதையேனும் நிறைவு செய்யத் தவறுகை புரிந்துள்ளதாக தீர்மானிப்பு அலுவலர் மனநிறைவடைந்தால், அவர் அந்தப் பிரிவுகளின் வகைமுறைகளுக்கிணங்கியவாறு தாம் பொருத்தமெனக் கருதும் அத்தகு தண்டத்தை விதிக்கலாம்.

பிரிவு 15I -இன் கீழ் தண்டங்களின் அளவை தீர்மானிக்கும் போது தீர்மானிப்பு அலுவலர் கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் (Factors to be taken into account by the adjudicating officer While adjudging quantum of penalty under section 15-I) - பிரிவு 15J :

பிரிவுகள் 15A, 15B, 15C, 15D, 15E, 15F, 15G, 15H, 15HA, 15HB ஆகிய வற்றில் வகுத்துரைக்கப்பட்டுள்ள அபராதத் தொகையின் அளவை தீர்மானிக்கும் போது தீர்மானிப்பு அலுவலர் பின்வரும் காரணிகளை கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது,–

(அ) தவறுகையின் விளைவாக அடைந்த விகிதாச்சாரமற்ற ஆதாயம் அல்லது நியாயமற்ற அனுகூலம்;

(ஆ) தவறுகையின் விளைவாக முதலீட்டாளர் ஒருவருக்கு அல்லது முதலீட்டாளர்களின் குழு ஒன்றுக்கு விளைவிக்கப்பட்ட இழப்பின் அளவு;

(இ) தவறுகையை திரும்பத்திரும்ப செய்யும் தன்மை;

மேற்சென்ற மூன்று காரணிகளை கருத்தில் கொண்டு தீர்மானிப்பு அலுவலர் தண்டத் தொகையை (அபராதத் தொகையை) தீர்மானித்தல் வேண்டும்.

வசூலான தண்டத் தொகைகளை வரவு வைத்தல் (Crediting sums realised by way of penalties to Consolidated Fund of India) - **பிரிவு 15JA :**

தண்டத்தொகைகளின் வாயிலாக வசூலான தொகைகளை இந்திய தொகுப்பு நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்று பிரிவு 15JA கூறுகிறது.

-oOo-

பங்கு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் [Securities Appellate Tribunal]

109. Securities Appellate Tribunal - Write short answers. (பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் - குறுகிய விடை எழுதுக.)

4 பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை நிறுவுதல் - பிரிவு 15K:

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியச் சட்டம், 1992–இன் பிரிவு 15K பங்கு (பிணையங்கள்) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களின் நிறுவுகை (Establishment of Securities Appellate Tribunals) பற்றி விளக்குகிறது. அதன்படி,

(1) இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது அச்சமயத்தில் செயல் திறத்தில் (அமலில்) உள்ள வேறு சட்டம் எதனின் கீழ் வழங்கப்பட்ட

அதிகாரவரம்பு, அதிகாரங்கள் மற்றும் அதிகார அமைப்பை செயல்படுத்த பங்கு மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் எனறழைக்கப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தீர்ப்பாயங்களை மைய அரசு அறிவிக்கை மூலம் நிறுவுதல் வேண்டும்.

(2) பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் எந்த விடயங்கள் அல்லது இடங்கள் மீது அதிகாரவரம்பு செயல்படுத்தக் கூடுமோ அவற்றைக் குறித்து மேற்கண்ட அறிவிக்கையில் மைய அரசு குறித்துரைக்க வேண்டும்.

கட்டமைப்பு - பிரிவு 15L:

மைய அரசால் அறிவிக்கை மூலம் நியமனம் செய்யப்படக் கூடிய முன்னிலை வகிக்கும் அலுவலர் (Prosiding Officor) மற்றும் இரண்டு வேறு உறுப்பினர்களைப் பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

முன்னிலை வகிக்கும் அலுவலர் அல்லது உறுப்பினர் களாக நியமனம் செய்யப்படத் தகுதி - பிரிவு 15M:

(1) உச்ச நீதிமன்றத்தின் பதவியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற நீதிபதியாக அல்லது உயர் நீதிமன்றத்தின் பதவியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற தலைமை நீதியரசராக இருந்தாலன்றி, நபர் ஒருவர் பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்னிலை வகிக்கும் அலுவலராக நியமனம் செய்யப்பட தகுதியுடையவர் ஆகார்.

எனினும் பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்னிலை வகிக்கும் அலுவலரானவர் இந்திய தலைமை நீதியரசருடன் அல்லது அவரது பெயர் நியமனதாரருடன் கலந்தாலோசித்ததன் பேரில் மைய அரசால் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) திறன், நேர்மை மற்றும் அனுபவம் கொண்ட மற்றும் பங்குச் சந்தை தொடர்பான பிரச்சனைகளைக் கையாளுவதில் தகுதிறனை காட்டியிருக்கிற மற்றும் நிறுவனச் சட்டம், பினையப் சட்டங்கள், நிதி, பொருளாதாரம் அல்லது கணக்குப் பதிவியலில் தகுதியும் அனுபவமும் கொண்ட நபராக இருந்தாலன்றி, அவர் பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் உறுப்பினராக நியமனம் செய்யப்படத் தகுதியுடைய வர் ஆகார்.

முன்னிலை வகிக்கும் அலுவலர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம்- பிரிவு 15N:

பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்னிலை வகிக்கும் அலுவலர் மற்றும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் பதவியில் சேரும் தேதி முதல் அய்ந்தாண்டு காலம் வரை பதவி வகிப்பர். மேலும் அவர்களுக்கு மறுநியமனத்திற்கும் தகுதி உண்டு.

முன்னிலை வகிக்கும் அலுவலரின் ஊதியம் மற்றும் படிகள் - பிரிவு 15O:

பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஒன்றில் முன்னிலை வகிக்கும் அலுவலர் மற்றும் இதர உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படத்தக்க ஊதியம் மற்றும் படிகள் (ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் இதர ஓய்வுகால பலன்கள்) மற்றும் பணிக்குரிய இதர வரைவுரைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

காலியிடத்தை நிரப்புதல் - பிரிவு 15P:

தற்காலிக வருகையின்மை தவிர வேறு காரணங்களுக்காக பங்கு மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் முன்னிலை வகிக்கும் அலுவலர் அல்லது வேறு உறுப்பினர் எவரது பதவியிலேனும் காலியிடம் ஏற்பட்டால், அதை இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்கியவாறு மைய அரசு வேறு ஒரு நபரைக் கொண்டு நிரப்புதல் வேண்டும். மேலும் காலியிடம் நிரப்பப்பட்ட கட்டத்தில் இருந்து பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் நடவடிக்கைகள் தொடரலாம்.

பணித்துறப்பு மற்றும் நீக்கம் - பிரிவு 15Q:

(1) பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்னிலை வகிக்கும் அலுவலர் அல்லது உறுப்பினர் வேறு எவரும் தன் கைப்பட மைய அரசுக்கு எழுதிய அறிவிப்பின் மூலம் தனது பதவியை துறுக்கலாம்.

(2) பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்னிலை வகிக்கும் அலுவலர் அல்லது உறுப்பினர் எவரும் மெய்ப்பிக்கப்பட்ட தீய நடத்தை அல்லது திறனின்மையின் அடிப்படையில் மைய அரசின் ஆணையின்றி பதவியில் இருந்து நீக்கப்படுதல் ஆகாது. இது தொடர்பான விசாரணையை உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர் செய்தல் வேண்டும். அதில் சம்பந்தப்பட்ட அலுவலர் அல்லது உறுப்பினருக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச் சாட்டுரைகள் குறித்து அவருக்கு தெரிவித்து, அவர் அவை குறித்து தனது வாதங்கள் கேட்கப்படுதவற்கான நியாயமான வாய்ப்பு ஒன்றை அவருக்கு நல்குதல் வேண்டும்.

(3) முன்னிலை வகிக்கும் அலுவலர் அல்லது உறுப்பினர் வேறு எவரின் தீய நடத்தை அல்லது திறனின்மை குறித்த புலன்விசாரணைக்கான நடைமுறையை, விதிகள் மூலம், மைய அரசு ஒழுங்குறுத்தலாம்.

மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை கட்டமைக்கும் ஆணையே இறுதியானது - பிரிவு 15R:

பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்னிலை வகிக்கும் அலுவலர் அல்லது உறுப்பினராக நபர் எவரையும் நியமனம் செய்து மைய அரசு பிறப்பித்த ஆணை எதையும் எந்த முறையிலும் வினவுதல் ஆகாது. மேலும் பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டமைப்பில் குறைபாடு உள்ளதென்ற அடிப்படையில் மட்டுமே, அதன் செயல் அல்லது அதன் முன்னர் நடக்கும் நடவடிக்கை எதையும் எந்த முறையிலும் வினவுதல் ஆகாது.

பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் ஊழியர் - பிரிவு 15S:

(1) மைய அரசு தான் பொருத்தமெனக் கருதும் அத்தகு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு வழங்கலாம்.

(2) இவர்கள் பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்னிலை வகிக்கும் அலுவலரின் பொதுக் கண்காணிப்பின் கீழ் தங்கள் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) இவர்களது ஊதியங்கள் மற்றும் படிகள் மற்றும் இவர்களது பணிக்குரிய இதர நிபந்தனைகள் யாவும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு - பிரிவு 15T:

(1) நபர் எவரும்,–

(அ) இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் ஆணை ஒன்றினால்; அல்லது

(ஆ) இந்தச் சட்டத்தின் கீழான தீர்மானிப்பு அலுவலர் ஒருவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றினால்

குறையுற்றிருந்தால், அவர் அந்த விடயத்தின் மீது அதிகாரவரம்பு கொண்ட பங்கு மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (இந்த உட்பிரிவு பிணையங்கள் சட்டம் (திருத்தச்) சட்டம், 2014–ஆல் விடப்பட்டுவிட்டது.)

(3) மேற்கண்ட உட்பிரிவு (1)–இன் கீழான மேல்முறையீடு ஒவ்வொன்றும் வாரியம் அல்லது நேர்விற்கேற்றவாறு தீர்மானிப்பு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் நகல் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். மேலும் அது வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகு படிவத்திலும், அத்தகு கட்டணத்துடன் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

(4) மேல்முறையீடு கிடைக்கப் பெறுவதன் பேரில் மேல்முறையீட்டிற்குரிய தரப்பினர்கள் தங்கள் வாதங்களை எடுத்துரைக்கும் வாய்ப்பை ஒன்றை அவர்களுக்கு நல்கிய பிறகு, எதற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த ஆணையை உறுதி செய்து, மாற்றியமைத்து அல்லது இரத்து செய்து அதன் மீது தான் பொருத்தமெனக் கருதும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கலாம்.

(5) தான் பிறப்பித்த ஆணையின் நகல் ஒன்றை பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது வாரியத்திற்கும், மேல்முறையீட்டின் தரப்பினர்களுக்கும் அனுப்ப வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட தீர்மானிப்பு அலுவலருக்கும் அனுப்ப வேண்டும்.

(6) பங்கு மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முன் தாக்கல் செய்யப்பட்ட

மேல்முறையீட்டை இயன்ற வரை விரைவாக முடித்து, அது கிடைக்கப் பெற்ற ஆறு மாதங்களுக்குள் இறுதியாக முடிவுறுத்த வேண்டும்.

பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் நடைமுறை மற்றும் அதிகாரங்கள் - பிரிவு 15U:

(1) பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுத்துரைக்கும் நடைமுறைக்குக் கட்டுப்பட்டதல்ல. ஆனால் அது இயற்கை நீதிக் கோட்பாடுகளின்படி வழிநடத்தப்படக் கூடியதாகும். மேலும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் விதிகளுக்கும் உட்பட்டதாகும். அத்துடன் பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது தான் அமரும் இடங்கள் உள்ளிட்ட தனது சொந்த நடைமுறையை தான் ஒழுங்குறுத்தும் அதிகாரங்கள் பெற்றதாகும்.

(2) உரிமையியல் வழக்கொன்றை உரிமையியல் நீதிமன்றமொன்று விசாரணை செய்யும் போது பின்வரும் விடயங்களில் எத்தகு அதிகாரங்கள் கொண்டிருக்குமோ அதே அதிகாரங்களை இந்தச் சட்டத்தின் கீழான பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமும் கொண்டிருக்கும். அதாவது,–

(அ) நபர் எவருக்கும் அழைப்பாணை அனுப்பி தன் முன் தோன்ற வலியுறுத்தல் மற்றும் அவரை உறுதிமொழியின் பேரில் விசாரணை செய்தல்;

(ஆ) ஆவணங்களை கண்டெடுத்து முன்னிலைப்படுத்த வேண்டுறுத்தல்;

(இ) ஆணையுறுதியாவணத்தின் பேரில் சாட்சியம் பெறல்;

(ஈ) சாட்சிகள் மற்றும் ஆவணங்களை விசாரிக்க ஆணையங்களைப் பிறப்பித்தல்;

(உ) தனது முடிவுகளை மறுஆய்வு செய்தல்;

(ஊ) விண்ணப்பம் ஒன்றை விண்ணப்பதாரர் வருகை தராத தவறுகைக்காக தள்ளுபடி செய்தல் அல்லது அதை ஒருதலைப்பட்சமாக தீர்மானித்தல்;

(எ) தவறுகைக்காக விண்ணப்பத்தை தள்ளுபடி செய்த ஆணை எதையும் அல்லது தன்னால் ஒருதலைப்பட்சமாக பிறப்பிக்கப்பட்ட ஆணை எதையும் இரத்து செய்தல்;

(ஏ) வகுத்துரைக்கப்படலாமெனக் கூடிய வேறு விடயம் எதுவும்.

(3) பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் நடவடிக்கை ஒவ்வொன்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 193 மற்றும் 228–இன் பொருளுக்குட்பட்டும் மற்றும் பிரிவு 196–இன் நோக்கத்திற்காகவும் ஓர் நீதிமுறை நடவடிக்கை ஆகும். மேலும் பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது குற்றவியல் நடைமுறைச்

சட்டத்தின் பிரிவு 195 மற்றும் அத்தியாயம் 26–இன் அனைத்து நோக்கங்களுக்காகவும் ஓர் உரிமையியல் நீதிமன்றமாக கருதப்படுதல் வேண்டும்.

சட்டமுறை பிரதிநிதித்துவதற்கான உரிமை - பிரிவு 15V:

பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் தரப்பினர் ஒருவர் தானே நேர்முகமாக தோன்றி தனது வழக்கை முன் வைக்கலாம் (legal representation) அல்லது அதற்காக பட்டயக் கணக்காயர்கள் அல்லது நிறுவன செயலாளர்கள் அல்லது செலவுத் தொகை கணக்காயர்கள் அல்லது சட்டத் தொழிலாற்றுநர்களுக்கு அதிகாரமளித்து தனது வழக்கை முன் வைக்கச் செய்யலாம்.

பொது ஊழியர்கள் - பிரிவு 15X:

பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்னிலை வகிக்கும் அலுவலர், உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் பொது ஊழியர்கள் ஆவர். அதன் முன்னிலை வகிக்கும் அலுவலர், இதர அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 21–இன் பொருளுக்குள் பொது ஊழியர்களாக கருதப்படுதல் வேண்டும். (Presiding Officer, Members and staff of Securities Appellate Tribunals to be public servants)

உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரவரம்பில்லை - பிரிவு 15Y:

இந்தச் சட்டத்தின் கீழ் தீர்மானிப்பு அலுவலர் நியமனம் செய்யப்பட்ட அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் தீர்மானிப்பதற்குரிய விடயம் எது குறித்தும் உரிமையியல் வழக்கு அல்லது நடவடிக்கை எதையும் ஏற்றுக் கொள்ள உரிமையியல் நீதிமன்றம் எதற்கும் அதிகாரவரம்பில்லை. மேலும் இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரம் எதன்படியும் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை எது குறித்தும் நீதிமன்றம் அல்லது வேறு அதிகார அமைப்பு எதனாலும் உறுத்துக்கட்டளை எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு - பிரிவு 15Z:

பங்கு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முடிவு அல்லது ஆணை எதனாலும் குறையுற்ற நபர் எவரும் அந்த முடிவு அல்லது ஆணை தனக்கு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், அதிலிருந்து எழும் சட்டப் பிரச்சனை எதன் மீதும் உச்ச நீதிமன்றத்திடம் மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்.

-o0o-



பிரச்சனைகளும் தீர்வுகளும்
Problems and Solutions

1. 'X' incorporated a company of which he was the managing director. In that capacity he appointed himself as a pilot of the company. In course of his employment, he died in a flying accident. Whether his widow entitled to claim compensation under Workmen's Compensation Act?

X என்பவர் ஒரு நிறுவனத்தை நிறுவி தான் அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக செயல்பட்டு வந்தார். தன்னை அந்த நிறுவனத்தின் விமானியாக நியமனம் செய்து கொண்டார். அவ்வாறு விமானியாக பணியில் ஈடுபட்டுள்ளபோது விமான விபத்தில் மரணமடைந்துவிட்டார். அவரின் விதவை மனைவி வேலையாள் நஷ்டஈடு சட்டத்தின் கீழ் நஷ்டஈடு பெற உரிமையுள்ளவரா?

தீர்வு:

ஒரு நிறுவனம் பதிவானவுடன், அது அதன் உறுப்பினர்களினின்று முற்றிலும் வேறுபட்ட ஒரு தனி செயற்கை நபர் **(Separate Artificial Person)** என்றழைக்கப்படுகிறது. அதாவது ஒரு நிறுவனம் அதன் உறுப்பினர்களிலிருந்து வேறுபட்டு நின்று, ஒரு தனியான சட்ட நபராக செயல்படுகிறது. இயற்கையான நபர்கள் பலர், உறுப்பினர்களாக ஒன்று கூடி நிறுவனம் எனும் பெயரில் செயற்கையான ஒரு சட்ட நபரை உருவாக்குகின்றனர். இங்கு அவ்வுறுப்பினர் களை, அந்நிறுவனம் தனது கூட்டுருத் திரையால் **(Corporate veil)** மறைத்துக் கொண்டு செயல்படுகிறது. எனவேதான் '**கூட்டுருத் திரை**' என்றழைக்கப்படும் நிறுவனத்தின் திரை **(Corporate veil)**, அதன் உறுப்பினர்கள் அனைவரையும் மறைத்து சட்டத்தின் முன்பு அதனை ஒரு தனி நபராக செயல்படச் செய்கிறது என்கிறோம். மேற்கண்டவாறு, ஒரு நிறுவனத்தை இயக்குபவர்கள், இயற்கை நபர்கள் என்றாலும், அவர்களது இறப்பின் காரண மாக, அவர்கள் அமைத்த நிறுவனமும் இறந்துவிடாது. அது ஒரு செயற்கை நபராக, நிலையான வாழ்வு பெற்றதாக உள்ளது. ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தி

னராக இருந்த போதிலும், நிறுவனம் அக்குடும்பத்தினின்று முற்றிலும் வேறுபட்ட ஒரு தனி நபர் ஆகும். இதுவே **'நிறுவனத்தின் தனித்தன்மை'(Corporate Entity)** எனப்படுகிறது. இக் கருத்து **Saloman v. Saloman & Co. Ltd.**[1] என்ற வழக்கில் ஏற்படுத்தப்பட்டதாகும்.

இதன் அடிப்படையில் எழுந்த மற்றொரு வழக்கான **Lee v. Lee's Air Farming Ltd.**[2] எனும் வழக்கில் லீ என்பவர் ஒரு நிறுவனத்தை உருவாக்கி பதிவு செய்தார். அதற்கு அவரே நிருவாக இயக்குனர். இத் தகுதியின் அடிப்படையில், அந்நிறுவனத்திற்கு தன்னையே விமானியாக நியமனம் செய்து கொண்டார். அவ்வாறு நிறுவனத்திற்காக விமானம் ஓட்டிக் கொண்டு செல்கையில், விபத்து ஏற்பட்டு அவர் மரணமடைந்தார். எனவே அவரது விதவை மனைவி வேலையாள் நட்டஈட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தார். அதில் நீதிமன்றமானது, இவ்வாறு நட்டஈடு கோரி வழக்கிடுவதற்கு அவ்விதவைக்கு உரிமை உண்டு என்றும், நிறுவனம் என்பது வேறு, நிறுவனத்தின் நிருவாக இயக்குனர் என்பவர் வேறு என்றும், நிறுவனத்தின் இத்தனித்தன்மை காரணமாக இறந்து போன நிருவாக இயக்குனரே அந்நிறுவனத்தின் உரிமையாளராகவும், அதே சமயத்தில் அவரே அதன் வேலையாளாகவும் இருக்கிறார் என்றும் குறிப்பிட்டு, அவரது விதவை மனைவிக்கு நட்டஈடு வழங்கியது.

நமது பிரச்சனையை ஒத்தவாறு உள்ள மேற்படி வழக்கின்படி, விமான விபத்தில் இறந்து போன X–ன் விதவை மனைவி, அவரது இறப்பிற்காக வேலையாள் நட்டஈட்டுச் சட்டத்தின் கீழ் நட்டஈடு பெற உரிமை படைத்தவரே என்பதுதான் இங்கு தீர்வு.

2. A company was incorporated in India for the purpose of selling Basumathi Rice. The Pakistan company held the bulk of the shares in the Indian Company. All the directors belonged to Pakistan. The real control of the Indian company was in Pakistan. During the Kargil war the Indian company controlled by the Pakistanis proceeded an action to recover a trade debt in India. Discuss.

பாசுமதி அரிசி விற்பனை செய்வதற்காக ஒரு நிறுவனம் இந்தியாவில் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் பெரும்பாலான பங்குகளை பாகிஸ்தானிய நிறுவனமே பெற்றிருந்தது. மேலும் அதன் பெருவாரியான இயக்குநர்களும் பாகிஸ்தானியர்களே. எனவே பாகிஸ்தானில் இருந்து கொண்டே இந்திய நிறுவனத்தை இயக்கி கட்டுப்பாடு செய்யப்பட்டது. கார்கில் போரின் பொழுது இந்தியாவில் தன்னுடைய வணிகக் கடனை பாகிஸ்தான் வசூல் செய்ய நடவடிக்கையினை எடுத்தது சரியா என்பதை விவாதிக்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் கார்கில் போரின் பொழுது இந்தியாவில் தன்னுடைய வணிகக் கடனை பாகிஸ்தான் வசூல் செய்ய நடவடிக்கையினை எடுத்தது சரியல்ல என்று தான் தீர்வு கூற வேண்டும். இங்கு இந்திய நிறுவனத்தின் **சுவட்டுருமத் திரையை விலக்கிப் பார்த்தால் (lifting the corporate veil)**, அதன் கட்டுப்பாடு முழுவதையும் பாகிஸ்தான் நிறுவனம் கொண்டிருப்பது புலனாகும். எனவே அதை ஒரு இந்திய நிறுவனம் என்று கூறுவதைக் காட்டிலும் பாகிஸ்தான் நிறுவனம் என்று கூறுவதுதான் பொருத்தமானதாகும். இந்தியாவில் இருக்கும் ஆனால் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இயங்கும் அது ஒரு பகைமை

1. (1897) AC 22
2. (1961) AC 12 : (1960) 3 All ER 420

நிறுவனமாகும். ஆகவே அது இந்தியாவில் தனது வணிகக் கடனை வசூலிக்க நடவடிக்கை எடுப்பது என்பது பொதுக் கொள்கைக்கு விரோதமானதாகும். பகைமை நிறுவனத்தின் நடவடிக்கைகளை நீதிமன்றம் பரிசீலனைக்கு ஏற்காது.

3. X, is the owner of all shares except one share in a timber company. He insured company's timbers in his own name. The timbers were destroyed on fire. Whether the Insurance Company is liable to pay compensation to X?

ஒரு மர நிறுவனத்தின் ஒரு பங்கு தவிர மற்ற அனைத்து பங்குகளும் X என்ற நபருக்கு சொந்தமானது. அந்த நிறுவனங்களின் மரங்களை தன் பெயருக்கு காப்பீடு செய்கிறார். நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் மரங்கள் சேதமடைந்து விடுகின்றன. அந்த காப்பீடு நிறுவனம் X என்ற நபருக்கு நஷ்டஈடு வழங்கக் கடமைப்பட்டுள்ளதா?

தீர்வு:

Macaura v. Northern Assurance Co. Ltd.[1] – எனும் வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பின்படி, காப்பீடு நிறுவனம் X என்ற நபருக்கு நஷ்டஈடு வழங்கக் கடமைப்பட்டதன்று. (அதன் பொருண்மைகளுக்கு இந்நூலின் பக்கம் எண்.25–இல் காண்க.)

4. A Company was incorporated with the object of protecting and promoting users of cycles and tricycles on public roads. The Company altered its object clause and extended the protection to the users of all vehicles including motor cars. Is the alteration valid?

இரண்டு சக்கர மிதி வண்டிகளையும், மூன்று சக்கர மிதி வண்டிகளையும் பொது சாலைகளில் பயன்படுத்துபவர்களைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் கருத்தில் கொண்டு ஒரு நிறுவனம் நிறுவப்பட்டது. மோட்டார் கார்கள் உள்பட எல்லா வகை வண்டிகளைப் பயன்படுத்துவோர்களின் பாதுகாப்பையும் உள்ளடக்கி, அந்த பங்கமைப்பின் நோக்கம் பற்றிய விதிக் கூறு மாற்றப்பட்டது. இந்த மாறுதல் செல்லத்தக்கதா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை **In Re Cyclists Touring Club**[2] - எனும் வழக்கின் சங்கதிகளை ஒத்ததாகும். அவ்வழக்கின்படி, இரண்டு சக்கர மிதி வண்டி ஓட்டுபவர்களை (Cyclists) விபத்துகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு ஒரு சங்கம் (Club) ஆரம்பிக்கப் பட்டது. ஆனால் அது நான்கு சக்கர வண்டி ஓட்டுபவர்களையும் பாதுகாக்க வேண்டுமெனும் நோக்கத்தில், தனது அமைப்பு முறையேட்டை மாற்றியது. ஆனால் இங்கு இரண்டு சக்கர வண்டி ஓட்டுபவர்களை பாதுகாத்தல் என்பதே, நான்கு சக்கர வண்டி ஓட்டுபவர்களால் அவர்களுக்கு விபத்து ஏதும் ஏற்படக் கூடாது எனும் நோக்கத்தின் அடிப்படையில்தான் என்றும், இவ்வாறிருக்கும் பொழுது, நான்கு சக்கர வண்டி ஓட்டுபவர்களையும் பாதுகாக்க அமைப்பு முறையேட்டை மாற்றியது செல்லாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. இங்கு மேற்கண்ட இரண்டு நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது. இவ்வாறே மேற்படி பிரச்சனையிலும் தீர்வு காணலாம். அதன்படி, மாறுதல் செல்லத்தக்கதல்ல என்பதே தீர்வு.

1. (1925) AC 619
2. (1907) 1 Ch. 269

5. Mr. X, a shareholder, brought an action against the company that it has made several investments without adequate security and contrary in the objectives of the company. Hence Mr. X prays the court to grant perpetual injunction to restrain the directors from making such investments. Can Mr. X succeed?

நிறுவனம் எந்தவித பாதுகாப்பும் இல்லாமலும், நோக்கங்களுக்கு எதிராக முதலீடு செய்வதை எதிர்த்து திரு X என்ற பங்குதாரர் வழக்குத் தொடுத்தார். நிறுவனம் பாதுகாப்பற்ற முறையில் முதலீடு செய்வதை தடை செய்யும் பொருட்டு நிலையான உறுத்துக்கட்டளை வேண்டு மாறு திரு X நீதிமன்றத்தை வேண்டினார். X வெற்றி பெறுவாரா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை வரம்பு மீறல் கோட்பாட்டின் (Doctrine of Ultra vires) அடிப் படையில் அமைந்ததாகும்.

பதிவு பெற்ற நிறுவனமொன்றின் உறுப்பினர்கள் (பங்குதாரர்கள்), அந்நிறுவனம் தனது அமைப்பு முறையேட்டில் கண்டுள்ள நோக்கங்களின்படி செயலுற வேண்டும் என்று கோர உரிமை படைத்தவர்கள் என்பது காலங்காலமாக உள்ள சட்ட நிலைப்பாடாகும். அந்த வகையில், ஒரு நிறுவனம் வரம்பு மீறிய செயலைச் செய்ய முயன்றால், அவ்வாறு செய்வதி லிருந்து அதனைத் தடுக்கும் பொருட்டு அதன் உறுப்பினர் எவரும் நீதிமன்றத்தை அணுகி உறுத்துக்கட்ட பெறலாம்.

ஒரு நிறுவனம் முதலீடு செய்யலாம். ஆனால் அதற்கு பாதுகாப்பு இருக்க வேண்டும். அது சொத்துப் பிணையமாகவோ, வேறு வகையிலோ இருக்கலாம். மேலும் அந்நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் கூறப்பட்டுள்ள நோக்கங்களையொட்டி முதலீடு செய்யப்பட வேண்டும். இவற்றுக்கு எதிராக அல்லது இவற்றை மீறி நிறுவனம் முதலீடு செய்தால், அது வரம்பு மீறிய செயலாகும். இவ்வாறு முதலீடு செய்வதை தடை செய்யக் கோரி அதன் பங்குதாரர் நீதிமன்றத் தில் வழக்கிட்டு நிலையான உறுத்துக்கட்டளை பெறலாம். அதில் அவர் வெற்றி பெறுவார் என்பதே மேற்படி பிரச்சனைக்கு தீர்வாகும். இதற்கு அடிப்படையாக பின்வரும் சில வழக்குகளை நாம் காணலாம்.

Trevor v. Whitworth[1] என்ற வழக்கில் ஒரு நிறுவனம் அதன் அமைப்பு முறை யேட்டில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்குள் வராத நடவடிக்கைகளுக்காக அது தனது நிதியை பயன்படுத்தலாகாது என்று கருத்துரைக்கப்பட்டது.

Jehangir R.Modi v. Shamji Ladha[2] இவ்வழக்கில், ஒரு நிறுவனத் தின் இயக்குனர்கள் தங்களுக்கு அந் நிறுவனத்தால் அதிகாரமளிக்கப்படாத செயல் ஒன்றில் நிறுவனத்தின் பணத்தை முடக்கினர். இப்பணத்தை திரும்பவும் நிறுவனத் திற்கு செலுத்த வேண்டும் என்று அதன் பங்குதாரர் எவரும் இயக்குனர்கள் மீது வழக்குத் தொடரலாம் என்றும், அச்சமயத்தில் அந்நிறுவனத்தை அவ்வழக்கின் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் பம்பாய் உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது.

---

1. (1887) 12 AC 409 (415)
2. (1866-67) 4 Bom HCR 185

R. v. Sinclair, Queens-wood, E.W.Smithson[1] - இவ்வழக்கில் நிறுவனத்தின் நிதியை அதன் இயக்குனர்கள் நன்கு திட்டமிட்டு தவறான நோக்கங் களுக்காகப் பயன்படுத்தினால், அவர்களுக்கு எதிராக மோசடி செய்த குற்றத்திற்காக குற்றவியல் நடவடிக்கை கூட எடுக்கலாம் என்று கூறப்பட்டது.

Aviling Barford Ltd. v. Perion Ltd.[2] என்ற வழக்கில் அதிகார மளிக்கப்படாத நோக்கங்களுக்காக நிறுவனத்தின் இயக்குனர்கள் அதன் பணத்தை வாரியிறைத்தால், அதனால் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்புகளுக்கு அவ்வியக்குனர் கள் பொறுப்பாவர் என்றும், நிறுவனத்தின் சொத்தை அதன் பங்குதாரர் ஒருவருக்கு பாதி விலைக்கு விற்றது வரம்புமீறிய செயலாகும் என்றும், அதை ஏற்புறுதி கூட செய்ய முடியாது என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

6. A Company resolved and sought confirmation for shifting its registered office from Banglore to Ahamedhabad due to some exployees disturbance. The employees strongly objected. Discuss.

நிறுவன ஊழியர்களின் பிரச்சனைகள் காரணமாக தன்னுடைய பதிவு அலுவலகத்தை பெங்களூரில் இருந்து அகமதாபாத்திற்கு மாற்றுவது என்று தீர்மானித்து முடிவெடுக்கப்பட்டது. அவற்றை நிறுவன ஊழியர்கள் உறுதியாக எதிர்த்தனர். விவாதிக்க.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வு காண ஒரு நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை மாற்று வதற்காக அதன் அமைப்பு முறையேட்டை திருத்துவதற்குண்டான சட்ட வகைமுறைகளை ஆராய வேண்டியது அவசியமாகும். இது குறித்து **2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் 13(5)** பின்வருமாறு விளக்குகிறது. அவற்றின்படி,

நிறுவனத்தின் பதிவு அலுவலக இடத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவது தொடர்பாக அதன் அமைப்பு முறையேட்டில் செய்யப்படும் மாற்றத் திற்காக மைய அரசிடம் விண்ணப்பித்து அதன் ஒப்புதல் பெற வேண்டும். தவறினால் அந்த மாற்றம் செயல்விளைவுக்கு வராது. அதாவது செல்லாது என்று **பிரிவு 13(4)** கூறுகிறது.

மேற்கண்ட பதிவு அலுவலக இட மாற்றத்திற்கான விண்ணப்பத்தை மைய அரசு 60 நாட்களில் முடித்து ஆணை பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு ஆணை பிறப்பிப்பதற்கு முன், மேற்படி இட மாற்றமானது நிறுவனத்திற்கு கடனீந்தவர்கள், கடனீட்டுப் பத்திரம் வைத்துள்ள வர்கள் மற்றும் நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்ட இதர நபர்களின் இசைவைப் பெற்றுள்ளது என்று மைய அரசு மனநிறைவடைய வேண்டும். மேலும் நிறுவனத்திற்குள்ள கடன்கள் மற்றும் கடப்பாடுகளை அடைப்பதற்கு அது போதுமான ஏற்பாடுகளை செய்துள்ளதா என்பது குறித் தும், அல்லது அவ்வாறு அடைப்பதற்கு போதுமான பிணையம் அளித்துள்ளதா என்பது குறித் தும் மைய அரசு மன நிறைவடைய வேண்டும் என்று **பிரிவு 13(5)** கூறுகிறது.

நமது மேற்படி பிரச்சனையில் நிறுவனத்தின் பதிவு அலுவலகம் ஒரு மாநிலத்தி லிருந்து (பெங்களூர்) மற்றொரு மாநிலத்திற்கு (அகமதாபாத்) மாற்றுவது என்று தீர்மானித்து முடிவெடுக்கப்படுகிறது. இதற்கு அந்நிறுவனம் தனது அமைப்புமுறையேட்டின் பதிவு அலுவலகப் பகுதியில் மாறுதல் செய்ய வேண்டும். இம்மாற்றத்திற்கு மைய அரசிடம் விண்ணப்

1. (968) 1LR 1246
2. (1989) BCLC 626 Ch.D.

பித்து ஒப்புதல் பெற வேண்டும். இவ்வாறு மைய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டு மெனில், பிரிவு 13(5)–இன்படி அந்நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்ட இதர நபர்கள் அம்மாற்றத் திற்கு இசைவு அளித்துள்ளார்கள் என்று அது மனநிறைவடைய வேண்டும். இங்கு இதர நபர்கள் என்ற பதத்தில் நிறுவனத்தின் ஊழியர்களும் அடங்குவர். ஆனால் நமது பிரச்சனையில் அவ்வூழியர் கள் மேற்படி இடமாற்றத்திற்கு ஆட்சேபணை தெரிவிக்கின்றனர். அதாவது அவர்கள் தங்கள் இசைவை அளிக்கவில்லை. இந்நிலையில் அந்நிறுவனம் தனது பதிவு அலுவலகத்தை இட மாற்றம் செய்யவியலாது என்பதே இங்கு தீர்வாகும்.

7. The Articles gave the company a lien on all shares which were not fully paid up for calls due to the company. Ram was the only person holding fully paid up shares and partly paid up shares. The Company altered its articles so as to enable itself to have lien on fully paid up shares also. Thereby the company gave itself a lien over Ram's fully paid up shares also. Whether it is valid?

ஒரு நிறுவனம் கோரிக்கை பாக்கிக்காக "முழுவதும் செலுத்தப்படாத பங்குகளின்" பேரில் பற்றுரிமை பெற்றிருந்தது. அந்த நிறுவனத்தில் ராம் என்ற ஒரே நபர் தான் முழுத் தொகை செலுத்தப்பட்ட பங்குகளையும், பகுதி தொகை செலுத்தப்பட்ட பங்குகளையும் பெற்றிருந்தார். நிறுவனம் செயல்முறை விதியில் உள்ள முழுவதும் செலுத்தப்படாத என்ற வார்த்தையை விலக்கியது. அதன் விளைவாக நிறுவனம் முழுவதும் செலுத்தப்படாத பங்குகளின் பேரிலும் பற்றுரிமை பெற்றது. இதன்படி நிறுவனத்திற்கு ராமுடைய முழுத் தொகை செலுத்தப்பட்ட பங்குகளின் மீதும் பற்றுரிமை கிடைத்தது. இது சட்டப்படி செல்லுமா?

தீர்வு:

2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் 14–ஆவது பிரிவின்படி, ஒரு நிறுவனம் தன் செயல்முறை விதிகளை மாற்றுவதற்கு மிக அதிகமான உரிமை பெற்றுள்ளது. அந்த உரிமையை இழப்பதற்கு நிறுவனத்திற்கே உரிமை கிடையாது. ஆனால் அந்த உரிமையின் மீது சில தடைகளையும் (வரம்புகள்) சட்டம் விதித்துள்ளது. அவற்றில் ஒன்றின்படி, செயல் முறை விதிகளில் செய்யப்படும் மாறுதல் உறுப்பினர்களின் பொறுப்பை அதிகமாக்கி னாலும் அல்லது அவர்கள் ஏற்றுக் கொண்ட பங்குகளுக்கு அதிகமான பங்குகளை ஏற்கச் செய்தாலும், அதற்கு உறுப்பினர் ஒவ்வொருவரின் ஒப்புதலையும் பெற வேண்டும். இவ்வாறு பெறாமல் செய்யப்படும் மாறுதல் செல்லாது. நமது மேற்கண்ட பிரச்சனையில், ராமுடைய முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளின் மீதும் பற்றுரிமை ஏற்படும் வகையில் செயல்முறை விதிகள் மாற்றப்படுகின்றன. எனவே ராமுவின் பொறுப்பு அதிகமாகிறது. இதற்கு ராமுவின் எழுத்து மூலமான ஒப்புதலையும் நிறுவனம் பெறவில்லை. எனவே அம்மாற்றம் செல்லத்தக்க தல்ல என்பதே தீர்வு.

8. The Articles of Association of a Company provided that share certificate issued by it must be signed by two directors and the secretary and it must bear the Company's seal. The secretary of the Company had forged the signature of the directors and affixed the seal without authority while issuing the certificate. To what extent the certificate is binding on the Company?

ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளின்படி பங்குச் சான்றிதழ் வழங்கும் போது

அந்நிறுவனத்தின் இரு இயக்குனர்கள் மற்றும் செயலரின் கையொப்பங்களும் மற்றும் நிறுவனத்தின் முத்திரையும் முறையாகப் பதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் செயலர் பங்குச் சான்றிதழ் ஒன்று வழங்கும் போது அச்சான்றிதழில் இரு இயக்குனர்களின் கையொப்பங்களை மோசடி செய்த வண்ணம் இட்டு மற்றும் நிறுவனத்தின் முத்திரையும் அதிகாரமில்லாமல் பதிவு செய்து கொடுத்தார். இச்சான்றிதழ் நிறுவனத்தை எவ்வகையில் கட்டுப்படுத்தும்?

(அல்லது)

The Share certificate issued by the Company's Secretary who had forged the signatures of two directors and affixed the seal of the Company. Whether the company is bound by the Share Certificate?

நிறுவனத்தின் செயலர் இரண்டு இயக்குனர்களின் கையொப்பத்தையும் பொய்யாக இட்டு, நிறுவனத்தின் முத்திரையையும் பொய்யாக பதித்து பங்குச் சான்றிதழை வழங்கினார். இச்சான்றிதழுக்கு நிறுவனம் பொறுப்பாகுமா?

(அல்லது)

X, a secretary of a company forged the signature of two directors on share certificate and issued it without authority. Plaintiff, a bonafide purchaser of share certificate argued that the share certificate is valid. Decide.

ஒரு நிறுவனத்தின் செயலாளரான X என்பவர் இரண்டு இயக்குனர்களின் கையெழுத்துக்களை பங்குச் சான்றிதழில் இட்டு போலி பங்கு சான்றிதழை அதிகாரமின்றி வழங்குகிறார். அந்த விபரம் அறியாது நல்லெண்ணத்தில் பங்குச் சான்றிதழை வாங்கியுள்ள வாதி பங்குச் சான்றிதழ் செல்லத்தக்கது என வாதிடுகிறார். தீர்மானிக்க.

(அல்லது)

A share certificate was issued by the company's secretary. He affixed the seal of the company and forged the signatures of two directors. X the transferee of such forged share certificate contended that whether the signatures were forged or genuine one was a part of internal management and therefore the company should be stopped from denying genuiness of the document. Whether this contention can be accepted?

ஒரு நிறுவனத்தின் செயலாளர் இரண்டு இயக்குனர்களின் கையெழுத்து போல போலி கையொப்பமிட்டு, நிறுவனத்தின் முத்திரையிட்டு போலி பங்கு சான்றிதழ் தயாரித்து X என்ற நபருக்கு மாற்றி விடுகிறார். அதன் பின் X தனது வாதத்தில் கையெழுத்து போலியானதா அல்லது உண்மையானதா என்பது உட்புற நடைமுறைக்குட்பட்டது. ஆகவே நிறுவனம் அது வழங்கிய ஆவணத்தின் உண்மை தன்மையை மறுக்க முடியாது என வாதிடுகிறார். அவரின் வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதா?

தீர்வு:

Royal British Bank v. Turquand[1] வழக்கில் கூறப்பட்ட விதியின்படி, ஒரு நிறுவனத்தின் உட்புற மேலாண்மையை (indoor management) வெளியார்கள் அறிந்து வைத்திருக்க வேண்டியதில்லை; ஒரு நிறுவனம் தனது உட்புற மேலாண்மையில் செய்யும் செயல்களுக்கு, அதுவே பொறுப்பாகும். இது **'டர்க்குவாண்ட் வழக்கு விதி' (Rule in Turquand Case)** என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது. ஆனால் இவ்விதிக்கு, சில விதிவிலக்குகள் உள்ளன. அவற்றின்படி, நிறுவனம் பொறுப்பாகாது. அவ்விதிவிலக்குகளில் ஒன்றின்படி, ஒரு நிறுவனத்தின் அலுவலர்கள், அதன் அதிகாரமின்றி செய்யும் ஒரு முழுமை யான பொய்யாவணம் புனைதல் **(complete forgery)** செயலுக்கு, அந்நிறுவனம் பொறுப்பா காது; சம்பந்தப்பட்ட அலுவலர்களே பொறுப்பு. எனவே பொய்யாவணம் புனைதல் என்பது டர்க்குவாண்ட் வழக்கு விதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட ஒன்று.

இந்நிலைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக **Ruben v. Great Fingall Consolidated Ltd.**[2] எனும் வழக்கு அமைகிறது. மேற்கண்ட பிரச்சனையும் இவ்வழக்கின் அடிப்படையில் அமைந்ததே. வழக்கின் பொருண்மைகள்படி, இவ்வழக்கில் நிறுவனத்தின் செயலாளர், பங்கு சான்றிதழில் மோசடியான முறையில் நிறுவனத்தின் முத்திரையிட்டு, இரண்டு இயக்குனர்களின் கள்ளக் கையெழுத்திட்டு வழங்கினார். இக்கையெழுத்துக்கள் உண்மையானதா, கள்ளத்தனமானதா என்று கூற வேண்டிய அதிகாரம் அந்நிறுவனத் திற்குத்தான் உண்டு என்றும், எனவே, இது அந்நிறுவனத்தின் உட்புற மேலாண்மையைச் சார்ந்தது என்றும், அவற்றின் உண்மைத் தன்மையை (genuineness) மறுப்பதிலிருந்து அந் நிறுவனம் முரண்தடை (estopped) செய்யப்பட வேண்டும் என்றும் அப்பங்குச் சான்றிதழைப் பெற்றவர் வாதிட்டார். ஆனால் அச்சான்றிதழ், கள்ளத்தனமானதா அல்லது உண்மையானதா என்று கூற அச்செயலாளருக்கு எவ்வித அதிகாரத்தையும் அந்நிறுவனம் உள்ளபடியாகவோ, உட்கிடையாகவோ அளிக்கவில்லை. எனவே, இது அந்நிறுவனத்தின் உட்புற மேலாண்மையைச் சார்ந்தது ஆகாது. இதனால் அச்சான்றிதழ் கள்ளத்தனமானது என்று அந்நிறுவனம் மறுக்கலாம் என்றும், இத்தகு பொய்யாவணம் புனைதல், டர்க்குவாண்ட் வழக்கில் கூறப்பட்ட விதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டதாகும் என்றும், அதற்கு நிறுவனம் பொறுப்பல்லஎன்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. எனவே அப்பங்குச் சான்றிதழ் பெற்றவரின் மேற்படி வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

மேற்கண்டவற்றின் அடிப்படையில், நமது மேற்படி பிரச்சனையில் அவ்வாறு பொய்யாவணம் புனைந்து வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ், நிறுவனத்தைக் கட்டுப் படுத்தாது; நிறுவனம் பொறுப்பாகாது. மேலும் பொய்யாவணம் புனைந்து கொடுக்கப்பட்ட விபரத்தை அறியாமல் நல்லெண்ணத்தில் பங்குச் சான்றிதழை வாங்கியுள்ள வாதி பங்குச் சான்றிதழ் செல்லத்தக்கது என்று வாதிட முடியாது. எனினும், மேற்கண்ட விபரத்தை அறியாமல் நல்லெண்ணத்தில் அப்பங்குச் சான்றிதழ் வாங்கியதை, வாதி நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியுமென்றால், அவர் சம்பந்தப்பட்ட செயலர் மீது இழப்பீடு கோரி வழக்கிடலாம்; நிறுவனத்திற் கெதிராக வழக்கிட முடியாது. (தொடர்புடைய விளக்கத்திற்கு இந்நூலின் பக்கம் எண். 155–இல் காண்க.)

9. A prospectus contained a statementthat the Company had paid regular dividends for the last 4 yeas. This statement was

1. (1856) 119 ER 886
2. (1966) AC 439

factually not correct; but the prospectus did not state that for the last 2 years the Company has paid dividends out of the accumulated profits. Is the statement in the prospectus false or misleading?

ஒரு திட்ட அறிவிப்பில், கடந்த 4 ஆண்டுகளுக்கு நிறுவனம் பங்காதாயங்களை ஒழுங்காகச் செலுத்தி வந்தது எனும் கூற்று காணப்பட்டது. இக்கூற்று உண்மைப்படி சரியான தல்ல; ஆனால் கடந்த 2 ஆண்டுகளுக்கு அந்நிறுவனம் தனது திரட்டப்பட்ட இலாபங்களி லிருந்து செலுத்தி வந்தது என்பதை திட்ட அறிவிப்பு குறிப்பிடவில்லை. திட்ட அறிவிப்பில் உள்ள இக்கூற்று தவறானதா அல்லது திரித்துக்காட்டுவதா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையின்படி, ஒரு நிறுவனத்தின் திட்ட அறிவிப்பில், அது கடந்த 4 ஆண்டுகளுக்கு ஒழுங்காக பங்காதாயம் வழங்கி வந்தது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக் கூற்று உண்மையில் சரிதான். ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக பங்காதாயத்தை 'திரட்டப்பட்ட இலாபங்களிலிருந்து' (Accumulated Profits) வழங்கியது எனும் கூற்று திட்ட அறிவிப்பில் காணப்படவில்லை. எனவே மேற்படி கூற்று, தவறானதா அல்லது திரித்துக் காட்டுவதா என்பதே தற்பொழுதைய பிரச்சனையாகும்.

இப்பிரச்சனைக்கு தீர்வு காண முதலில் 'பங்காதாயம்' என்பதின் பொருளை அறிதல் அவசியம். அதன்படி, (1) நிறுவனத்தின் இலாபத்திலிருந்து பகிர்ந்து அளிக்கப்படுவது, பங்காதாயம்; (2) அது நிறுவனத்தின் மூலதனத்திலிருந்து அளிக்கப்படக் கூடாது.

நமது மேற்படி பிரச்சனையில், நிறுவனத்தின் 'திரட்டப்பட்ட இலாபங்களிலிருந்து தான்' பங்காதாயம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இது குறித்து திட்ட அறிவிப்பில் கூறாமல் விடுத்தது, ஒரு தவறு அல்ல. மேலும் 4 ஆண்டுகளாக நிறுவனம் பங்காதாயத்தை ஒழுங்காக வழங்கி வந்ததுஎனும் கூற்றையும் திரித்துக் காட்டுதல் என்றும் கூற முடியாது.

10. The Articles of Association of a Company provided for payment of Dividend from third year of its commencement of business. Although the Company made no profits from third year to Eighth year, the directors paid dividend for all the year out of reserves. Is the payment valid? Are the Directors liable to refund the amount so paid?

ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் மூன்றாவது ஆண்டிலிருந்து, பங்கு ஆதாயம் தரப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்நிறுவனம் மூன்றாவது ஆண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரையிலும் எவ்வித லாபமும் அடையவில்லை. இருந்த போதிலும் அனைத்து வருடங்களுக்கும் பங்கு ஆதாயம் இருப்பு பணத்தில் இருந்து கொடுக்கப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்டது செல்லத்தக்கதா? அத்தொகையை இயக்குனர்கள் திருப்பித் தர கடமைப்பட்டவர்களா?

தீர்வு:

பங்காதாயம் என்பது நிறுவனத்தின் இலாபத்திலிருந்து அளிக்கப்படக் கூடிய தாகும். இருப்பு பணத்திலிருந்து அளிக்கப்படுவதல்ல. மேற்படி பிரச்சனையில், மூன்றாவது ஆண்டில் முதல் எட்டு ஆண்டுகள் வரையிலும், நிறுவனம் எவ்வித இலாபத்தையும் அடையாத பொழுதும், தனது இருப்பு நிதியிலிருந்து பங்காதாயம் வழங்கி உள்ளது. இவ்வாறு வழங்கப் பட்டிருப்பது, நிறுவனச் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும் அத்தொகையை நிறுவனத்தின் இயக்குனர்கள், நிறுவனத்திற்கு திருப்பித் தரக் கடமைப்பட்டவர்கள் ஆவார்.

மேற்கண்ட நிலைப்பாட்டை ஒட்டி எழுந்த **The Rex (King) v. Kylsand (Lord)**[1] எனும் வழக்கில், திட்ட அறிவிப்பில் 1911–ஆம் ஆண்டிலிருந்து 1927–ஆம் ஆண்டு வரை, நிறுவனம் 5% பங்காதயம் (Dividend) வழங்கியதென்றும், 1914–ஆம் ஆண்டு மட்டும் பங்காதாயம் வழங்கவில்லை என்றும், 1926–ஆம் ஆண்டு 4% பங்காதாயம் வழங்கியதென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் உண்மையில் நிறுவனம் பல வருடங்களாக இழப்புகள் அடைந்து, தனது சேமிப்பு நிதிகளிலிருந்து பங்காதாயம் வழங்கி வந்தது. எனவே திட்ட அறிவிப்பில் கூறியது உண்மை என்றாலும், அது முழு உண்மையல்ல என்றும், திட்ட அறிவிப்பு ஒரு திரித்துக் காட்டல் என்றும் முடிவு செய்யப்பட்டது.

11. A applies for some shares of a company on the basis of prospectus which contains a misstatement. The shares are allotted to A who afterwards transfers them to B. Can B bring an action for rescission on the ground of misstatement?

திட்ட அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிறுவனத்தின் சில பங்குகளை பெற 'A' என்பவர் மனு செய்கிறார். அந்த திட்ட அறிவிப்பு தவறான தகவல்களை கொண்டிருந்தது. 'A'–க்கு பங்குகள் ஒதுக்கப்படுகின்றன. பின்னர் அவர் அவற்றை 'B'–க்கு மாற்றுகிறார். தவறான தகவலை காரணங்காட்டி தள்ளுபடி செய்ய 'B' நடவடிக்கை எடுக்க முடியுமா?

(அல்லது)

A applied for some shares of a Company on the basis of a prospectus which contains a misstatement. The shares are allotted to A who afterwards transfers them to B. B then transfer it to C. Now C found out there are misrepresentations in the prospectus. Can C bring an action for recession against the Company or to proceed against B ? Advise C.

திட்ட அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு பங்கமைப்பின் சில பங்குகளைப் பெற **A** என்பவர் மனு செய்கிறார். அந்த திட்ட அறிவிப்பு தவறான தகவல்களை கொண்டிருக்கிறது. **A**–க்கு பங்குகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சில நாட்களுக்குப் பின் **A** அதை **B**–க்கு விற்று விடுகிறார். பிறகு **B** அதை **C**–க்கு விற்று விடுகிறார். **C** அந்த திட்ட அறிவிப்பு தவறான தகவல்களை கொண்டிருக்கிறது என அறிகிறார். அதைக் காரணங்காட்டி, **C**–ஆல் ஒப்பந்தத்தை நிறுவனத்திடமிருந்து தள்ளுபடி செய்ய இயலுமா? இல்லை **B** மீது வழக்கு தொடர முடியுமா? ஆலோசனை வழங்குக.

தீர்வு:

திட்ட அறிவிப்பின் அடிப்படையில் நிறுவனத்திடமிருந்து நேரடியாக பங்குகளை ஒதுக்கப் பெற்ற பங்குதாரர் ஒருவரே, அதில் உள்ள உண்மையற்ற கூற்றுகள் குறித்து, அதன் இயக்குனர்கள் மற்றும் தோற்றுவிப்பாளர்கள் மீது வழக்கிட்டு தீர்வழி பெற முடியும். மாறாக அவர் அப்பங்குகளை மற்றொருவரிடமிருந்து பங்குச் சந்தையின் வாயிலாக மாற்றிப் பெற்றிருந்தால், அவருக்கு மேற்கண்டவர்களுக்கு எதிராக தீர்வழி எதுவும் கிடையாது என்று **Peek v. Gurney**[1] எனும் வழக்கில் உரைக்கப்பட்டது.

---

1. (1932) KB 442
2. (1873) 43 LJ Ch 19 : (1861-73) All ER rep 116

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, தவறான கூற்றுகள் அடங்கிய மோசடியான திட்ட அறிவிப்பு ஒன்றை நிறுவனத்தின் சார்பாக பிரதிவாதிகள் வெளியிட்டனர். அதன் நகல் ஒன்றை வாதி பெற்றார். ஆனால் பங்குகள் எதையும் பெற அவர் நேரடியாக நிறுவனத்திற்கு விண்ணப்பிக்கவில்லை. இந்நிலையில் பங்குகள் ஒதுக்கீடு முடிவடைந்து ஆறு மாதங்கள் கழித்து, வாதியானவர் பிரதிவாதி நிறுவனத்தின் 2,000 பங்குகளை மற்றொரு பங்குதாரரிடமிருந்து பங்குச் சந்தையின் வாயிலாக வாங்கினார். திட்ட அறிவிப்பில் மோசடி நிகழ்ந்துள்ளது என்று கூறி, இயக்குனர்கள் மீது அவர் வழக்கிட்டார். ஆனால் இவ்வழக்கை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

அப்பொழுது, ஒரு நிறுவனத்தின் திட்ட அறிவிப்பை வெளியிடும் அலுவலகம், தன் நிறுவனத்தின் பங்குகள் ஒதுக்கப் பெற்றவர்களாக ஆகுமாறு பொது மக்களை அழைக்கிறது. இவ்வாறு பங்குகள் ஒதுக்கப் பெற்ற பிறகு, அந்த அலுவலகத்தின் பணி முடிவடைந்து விடுகிறது. எனவே பங்குகள் ஒதுக்கப் பெற்றவர்களுக்கு நிறுவனம் கொண்டுள்ள பொறுப்பு, அப்பங்குகள் அவர்களிடமிருந்து மற்றவர்கள் கைகளுக்கு மாறிமாறிச் செல்லும் பொழுதும் தொடர்வதில்லை. எனவே பங்குகள் ஒதுக்கப்பட்ட பின்னர் பங்குச் சந்தையின் மூலம் எழும் பிந்தைய பங்கு வர்த்தக நடவடிக்கைகளுக்கு, இயக்குனர்கள் முடிவில்லாமல் பொறுப்பாக்கப்படுதல் கூடாது என்று நீதிமன்றம் கருத்துரைத்தது.

இவ்வழக்கின் அடிப்படையில், மேற்கண்ட இரு பிரச்சனைகளில் முதலாவதில் வரும் 'B' என்பவர் நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கவியலாது.

எனினும், திட்ட அறிவிப்பின் கூறப்பட்டுள்ள கூற்றுக்களின் உள்நோக்கமானது, அவற்றினடிப்படையில் பங்குகளுக்காக விண்ணப்பிப்பவர்களை மட்டுமல்லாது, அப்பங்குகளை அவர்களிடமிருந்து பின்னிட்டு மாற்றிப் பெறுபவர்களையும் வாங்கத் தூண்ட வேண்டும் என்று இருப்பின், நிறுவனத்தின் பங்கு வெளியீட்டுப் பணி முடிவடைந்து விடுவதில்லை. அதில் கூறப்பட்ட பொய்யான கூற்றுகளுக்கு அந்நிறுவனமும், திட்ட அறிவிப்பு வெளியிடும் நபரும் பொறுப்பாவார்கள், என்று **Andrews v. Mockford**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

அதுபோல், **Hedley Byrne & Co. Heller & Partners**[2] எனும் வழக்கில், திட்ட அறிவிப்பின் அடிப்படையில் ஒருவர் பங்குகளுக்காக விண்ணப்பம் செய்து, அவற்றை நிறுவனம் ஒதுக்கீடு செய்த பிறகு, அது தவறான தகவல்களை கொண்டது என்று அவர் அறிந்திருப்பின், அதன் பொருட்டு நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, அப்பங்குகளை மற்றொருவருக்கு மாற்றியளித்தால், அதனால் அம்மற்றொருவருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு அவரே பொறுப்பாவார். அதாவது தவறான தகவல்களைக் கொண்ட திட்ட அறிவிப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட பங்குகளை விண்ணப்பம் மூலம் பெற்றிருக்கும் ஒருவர், அதில் கண்டுள்ள கூற்றுகள் தவறானவை என்று தெரிந்திருந்தே, அவை உண்மையானவைதாம் என்று மற்றொருவரை நம்ப வைத்து, அவருக்கு அப்பங்குகளை மாற்றியளித்தால் (விற்றால்), அதற்கு அவர்தாம் பதில் கூற வேண்டும்; நிறுவனமல்ல. மாற்றிப் பெற்றவர் அவர் மீது இழப்பீடு கோரி வழக்கிட முடியும்.

மேற்கண்ட வழக்கின் அடிப்படையில் நமது இரண்டாவது பிரச்சனையில், திட்ட அறிவிப்பில் தவறான கூற்றுகள் அடங்கியுள்ளது என்ற விபரத்தை தெரிந்திருந்தும் B என்பவர், தனக்கு பங்குகளை விற்றுவிட்டார் என்பதை நீதிமன்றத்தில் C என்பவர் மெய்ப்பிக்க

1. (1896) 1 QB 372, 383 : (1896) 73 LT 726
2. (1964) AC 465 : (1963) 2 All ER 575

முடியுமெனில், அவர் B–யின் மீது வழக்கிட்டு அப்பங்களை தள்ளுபடி செய்ய முடியும். மாறாக நிறுவனத்திற்கெதிராக வழக்கிட முடியாது என்பதே இங்கு நாம் B–க்கு வழங்கும் ஆலோசனையாகும்.

12. 'S' on the instructions of promoters of a company prepared Memorandum of Association and Articles of Association, paid the Registeration fees and got the company incorporated. 'S' claims the expenses from the company, but the company refuses to pay. Will 'S' succeed?

'S' என்பவர் நிறுவனத் துவக்குனர்கள் அறிவுரையின்படி திட்ட அறிவிப்பு மற்றும் செயல்முறை விதிகளை தயாரித்து, பதிவுக் கட்டணம் செலுத்தி நிறுவனத்தை பதிவு செய்கி றார். 'S' அதற்குண்டான செலவுகளை நிறுவனத்திடம் கோருகிறார். ஆனால் நிறுவனம் கொடுக்க மறுக்கிறது. 'S' வெற்றி பெறுவரா?

தீர்வு:

நிறுவனம் தோன்றுவதற்கு முன் அதன் சார்பாக தோற்றுவிப்பாளர்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் அல்லது அவர்களது அறிவுரையின்படி செய்யப்படும் செயல்கள் ஆகியவற்றிற்கு, நிறுவனம் பொறுப்பாகாது. ஒப்பந்தங்களின் நலனை நிறுவனம் பெற்றாலும், பலனை இவர்கள் தர வேண்டிய பொறுப்புக்குள்ளாகிறார்கள். ஏனெனில், பதிவுக்கு முன்னால், ஒரு நிறுவனம், ஒப்பந்தம் செய்து கொள்ளும் சட்டத் தகுதியற்றது **(non-entity)**. எனவே, நிறுவனத்திற்காக செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கு தோற்றுவிப் பாளர்களே பொறுப்புடைய வர்கள். இதனை பின்வரும் வழக்கு தெளிவாக விளக்குகிறது.

In Re English & Colonial Produce Co.[1] - எனும் வழக்கில், தோற்றுவிப் பாளர்கள் சிலரின் அறிவுரைப்படி, வழக்குரைஞர் ஒருவர் நிறுவனத்தின் பதிவுக்கு தேவையான ஆவணங்களை தயார் செய்து, அந்நிறுவனத்தைப் பதிவும் செய்து கொடுக்கிறார். இதன் பொருட்டு, அவர் பதிவுக் கட்டணம் மற்றும் தொடர்புடைய பிற செலவுகளைச் செய்துள்ளார். பின்னிட்டு அவர் அச் செலவுகளைக் கோரிய பொழுது, நிறுவனம் தர மறுத்துவிட்டது. எனவே அவர் நிறுவனத்தின் மீது வழக்கிட்டார். ஆனால் அவரது மேற்படி சேவைகளுக்கு நிறுவனம் எத்தொகையையும் செலுத்த வேண்டியதில்லை என்றும், அவர் செலவு செய்த காலத்தில் அந்நிறுவனமே தோன்றியிருக்கவில்லை என்றும் கூறி, அவ்வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

இவ்வழக்கின் அடிப்படையில், மேற்படி பிரச்சனையில் வரும் 'S' என்பவர் தமது வழக்கில் வெற்றி பெற முடியாது என்பதுதான் இங்கு தீர்வு. (எனினும் தோற்றுவிப்பாளர் மீது வழக்கிட்டு வெற்றி காணலாம்.)

13. The promoters of a company, before its incorporation enter into an agreement with P to buy a plot of land on behalf of the company. After incorporation the company refuses to buy the said plot of land. Has P any remedy?

ஒரு நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள் அதை பதிவு செய்வதற்கு முன்பு 'P' என்பவருடன் நிறுவனத்திற்காக மனையிடம் ஒன்று வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

1. (1906) 2 Ch 435 : 22 TLR 669

பதிவு செய்த பிறகு நிறுவனம் அந்த மனையிடத்தை வாங்க மறுக்கிறது. 'P'–க்கு ஏதாவது பரிகாரம் உண்டா?

தீர்வு:

முன் சென்ற பிரச்சனையின் தீர்வில் கண்டபடி, ஒரு நிறுவனத்தின் பதிவுக்கு முன்பு தோற்றுவிப்பாளர்கள் மற்றொருவருடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு நிறுவனம் பொறுப்பாகாது; தோற்றுவிப்பாளர்களே பொறுப்பாவார். எனவே மேற்படி பிரச்சனையில் வரும் 'P' என்பவர் தோற்றுவிப்பாளர்கள் மீது வழக்கிட்டு, தனது மனையிடத்தை ஒப்பந்தப்படி வாங்கிக் கொள்ளும்படி அவர்களை கட்டாயப்படுத்தலாம். ஆனால் இதற்கு சற்று மாறுபட்ட நிலையில் உள்ள பின்வரும் வழக்கொன்றை நாம் இங்கு கவனித்தல் அவசியம்.

Smallwood v. Black[1] எனும் வழக்கில், ஒரு நிறுவனத்தை பதிவு செய்ய உத்தேசித்துள்ள இயக்குனர்கள், மனையிடம் ஒன்றை வாங்குவதற்காக அதன் உரிமையாளரிடம் ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். பதிவிற்குப் பிறகு, அந்நிறுவனம் அந்த மனையிடத்தை வாங்க மறுக்கிறது. எனவே அவ்வுரிமையாளர், ஒப்பந்தம் செய்த இயக்குனர்கள் மீது அவ் வொப்பந்தத்தை குறித்த வகையில் நிறைவேற்றி (Specific Performance of Contract) தரும்படி கோரி வழக்கிட்டார். ஆனால் இவ்வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. ஏனெனில் தோற்றுவிப்பாளர்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தால் ஏற்படும் விளைவானது, தோற்றுவிக்கப்பட உள்ள நிறுவனத்தின் சார்பாக, வருங்காலத்தில் அதன் இயக்குனர்களாக பதவி வகிக்கவிருக்கும் நபர்களால் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்திலிருந்து எழும் விளைவில் இருந்து மாறுபட்டதாகும். இங்கு இயக்குனர்களின் வாயிலாக, அந்நிறுவனமே ஒப்பந்தத்தை மேற் கொள்வதாக கருதப்படுகிறது. எனவே ஒப்பந்த மீறுகையினால் பாதிக்கப் படுபவர், நிறுவனம் அல்லது இயக்குனர்கள் மீது வழக்கிட்டு நிவாரணம் பெறவியலாது. (மேற் கண்ட நிலைப்பாட்டில் நீதிமன்றங்கள் ஆணித்தரமான கருத்துக்களை விளம்பாமல், மழுப்ப லான கருத்துக்களை கூறியுள்ளன. எனவே இங்கு குழப்பம் தவிர்க்க இயலாததாக உள்ளது.)

14. X applied for shares in a Company. Shares were allotted to him and the letter of allotment was sent to the Company's Agent to deliver by hand to X. Before the letter was delivered. X withdrew his application. Can he become a shareholder?

ஒரு நிறுவனத்தில் X என்பவர் பங்குகளுக்காக விண்ணப்பம் செய்தார். அவருக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டு, பங்கு ஒதுக்கீட்டுக் கடிதமானது X–ன் கையில் கொடுப்பதற்காக, அது அந்நிறுவனத்தின் முகவருக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அக்கடிதம் கொடுக்கப்படுவ தற்கு முன்னதாக, X தனது விண்ணப்பத்தை திரும்பப் பெற்றுக் கொண்டார். அவர் ஒரு பங்கு தாரராக முடியுமா?

தீர்வு:

பங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளதை பங்கு விண்ணப்பதாரருக்கு அறிவிக்க வேண்டும் (Allotment of shares must be communicated). அறிவிப்பு அஞ்சல் மூலமானதாயின், இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 4 மற்றும் 5–வது பிரிவுகளில் கண்டுள்ள விதிகள் பின்பற்றப்பட வேண்டும். எனவே உரிய தபால்தலைகளை ஒட்டி, சரியான முகவரி எழுதி ஒதுக்கீட்டுக் கடிதத்தை ஒரு நிறுவனம் அஞ்சலில் சேர்த்துவிட்டால், அந்த ஒதுக்கீடு முழுமை பெறுகிறது.

1. (1965) 39 ALJR 405 (HC)

ஒதுக்கீட்டுக் கடிதம் இழந்துபட்டாலும், ஒதுக்கீடு பெற்றவர், அந்நிறுவனத்தின் பங்குதார ராகவே கருதப்படுவார். ஏனெனில், கடிதம் அஞ்சலில் சேர்க்கப்பட்ட உடனேயே, அவருக் கெதிராக ஒப்பந்தம் முழுமை பெற்று விடுகிறது.

ஆனால், அதே சமயத்தில் ஒதுக்கீட்டுக் கடிதம் அஞ்சலில் சேர்க்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும், பங்கு விண்ணப்பம் செய்தவர், தனது விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அதுபோல், நிறுவனமும், ஒதுக்கீட்டுக் கடிதம் விண்ணப்பதாரரின் கைக்கு கிடைக்கும் முன்னர் எந்நேரத்திலும் தனது ஒதுக்கீட்டுக் கடிதத்தை திரும்பப் பெறலாம்.

நமது மேற்படி பிரச்சனையில், பங்கு ஒதுக்கீட்டுக் கடிதமானது அஞ்சலில் சேர்க்கப் படவில்லை. மாறாக, அது நிறுவனத்தின் முகவருக்கு அனுப்பப்பட்டு, X–ன் கையில் தரும்படி பணிக்கப்பட்டுள்ளது. இங்கு X–யிடம் சேர்க்கும் பொருட்டு, நிறுவனத்தின் முகவருக்கு ஒதுக்கீட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. இது, கிட்டத்தட்ட அஞ்சலில் ஒதுக்கீட்டுக் கடிதத்தை சேர்ப்பதற்கு ஒப்பாகும். எனவே, தற்பொழுது, X தனது பங்கு விண்ணப்பத்தை திரும்பப் பெற இயலாது. (தனக்கு அக்கடிதம் வந்து சேருவதற்கு முன்னர் கூட). நிறுவனம் எப்பொழுது ஒதுக்கீட்டுக் கடிதத்தை X–யிடம் சேர்க்கும் பொருட்டு, தனது முகவரிடம் கொடுத்துவிட்டதோ, அப்பொழுதே, X–ன் திரும்பப் பெறும் உரிமை பறிபோய் விடுகிறது. எனவே X அந்நிறுவனத் தின் ஒரு பங்குதாரரே ஆவார்.

15. X, a minor was registered as a shareholder in a company. He received dividends and continued to receive dividend after attaining majority. The company was dissolved. Whether X is liable as a shareholder?

X, என்பவர் இளவராக இருந்த போது ஒரு நிறுவனத்தின் பங்குனராகிறார். அது முதல் பங்கு ஆதாயம் பெற்று வந்து தான் உரிய வயதை அடைந்த பின்னரும் தொடர்ந்து பங்கு ஆதாயம் பெற்று வருகிறார். இந்நிலையில் நிறுவனம் கலைக்கப் படுகிறது. X என்பவர் பங்குனர் என்ற நிலையில் பொறுப்பாவரா?

(அல்லது)

X, an Infant was registered as share holder in a Company. After attaining majority he received dividends from the Company. The Company incurres loss and it was dissolved. Whether X is liable as contributory?

X, என்ற நபர் தான் இளவராக இருக்கும் போது ஒரு நிறுவனத்தின் பங்குனரா கிறார். அதன் பின் உரிமை வயதடைந்தவுடன் நிறுவனத்திடமிருந்து தனக்கு சேர வேண்டிய பங்காதாயத்துகையை பெறுகிறார். நிறுவனம் நட்டத்திற்குள்ளாகி கலைக் கப்படுகிறது. X என்ற நபர் பங்களிப்புதாரர் என்ற முறையில் பொறுப்புக்குள்ளாவாரா?

தீர்வு:

ஒரு இளவருக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டதன் வாயிலாக, அவர் சம்பந்தப்பட்ட நிறு வனத்தின் பங்குதாராகிவிடுகிறார். பின்னிட்டு அவர் உரிய வயதை அடைந்தவுடனும், தனது பெயர் உறுப்பினர் பதிவேட்டில் பதியப் பெற்றுள்ளது என்பதை அறிந்தவுடனும், அவர் ஒரு நியாயமான காலத்திற்குள் தனக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளை மறுதலிக்கும் விருப்புரிமை

பெற்றவர். அவ்வாறு அவர் மறுக்காமல் வெறுமனே இருந்துவிட்டால், அவர் தன்னை அந் நிறுவனத்தின் பங்குதாரராக ஏற்றுக் கொள்கிறார் என்று பொருளாகும். இந்நிலையில் ஒரு பங்குதாரருக்குரிய பொறுப்புகள் அவருக்கு எழுகிறது. மேலும் ஒரு பங்காளிப்பாருக்கு உரிய பொறுப்புகளும் எழுகிறது.

மேற்படி பிரச்சனை, மேற்கண்ட விளக்கத்திலிருந்து சற்று மாறுபட்ட நிலையில் அமைந்த **Fazulbhoy Jaffar v. Credit Bank of India Ltd.**[1] எனும் வழக்கின் பொருண்மைகளை அப்படியே பின்பற்றி அமைந்ததாகும். இதில் ஒரு இளவர், பங்குதாரராக ஒரு நிறுவனத்தின் உறுப்பினர் பதிவேட்டில் பதியப் பெறுகிறார். அவர் உரிய வயதடைந்த (majority) பிறகு அந்நிறுவனத்திடமிருந்து பங்காதாயத்தைப் பெறுகிறார். இந்நிலையில் அந்நிறுவனம் கலைக்கப்பட்டது. மேற்கண்ட சூழலில் அவர் தனது பங்குதாரர் நிலைப்பாட்டை மறுக்கும் உரிமை படைத்தவரா எனும் வினா மேற்படி வழக்கில் எழுந்தது. அவ்வினாவிற்கு விடையளிக்கும் முகமாக நீதிமன்றம் கூறிய கருத்தின்படி, அவர் தன்னை ஒரு பங்குதாரராக நம்புவதற்கு அந்நிறுவனத்தை மனப்பூர்வமாக அனுமதித்துள்ளார். மேலும் அந்த நம்பிக்கை யில், தான் உரிய வயதடைந்ததிலிருந்து தனக்கு பங்காதாயம் வழங்கும்படியும் அந்நிறுவனத் தைச் செய்துள்ளார். எனவே, தற்பொழுது அவர் தன்னை அந்நிறுவனத்தின் ஒரு பங்குதார ரல்ல என்று கூறவியலாது. அவர் அவ்வாறு முரணாகக் கூறுவதிலிருந்து தடை (estopped) செய்யப்படுகிறார்.

எனவே இதன் அடிப்படையில் நமது மேற்கண்ட முதல் பிரச்சனையிலும், X என்பவர் ஒரு பங்குதாரரே (Shareholder). எனவே ஒரு பங்குதாரருக்குரிய பொறுப்புகள் அவருக்கு உள்ளது என்பதே தீர்வு. இரண்டாவது பிரச்சனையில், X என்ற நபர் பங்களிப்புதாரர் (Contributory) என்ற முறையில் பொறுப்புக்குள்ளாவார்

16. An application was made by a father as a guardian of his minor daughter for certain shares. The company registered the shares in the name of the daughter described as minor. The company went into liquidation and the name of the father was placed on the list of contributories. Is he liable?

வயது வராத மகளுக்காக தந்தை ஒரு நிறுவனத்தின் சில பங்குகளை விண்ணப் பித்திருந்தார். பங்குகளை மகள் பேரில் இளவர் என்று குறித்து அந்த நிறுவனம் பதிவு செய்தது. பின்பு அந்த நிறுவனம் கலைக்கப்பட்டதும் தந்தையினுடைய பெயர் கடப்பாட்டாளர்கள் (பங்களிப்பாளர்) பட்டியலில் இடம் பெற்றிருந்தது. அவர் பொறுப்பாவாரா?

தீர்வு:

ஒரு இளவருக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டதன் வாயிலாக, அவர் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பங்குதாராகிவிடுகிறார். பின்னிட்டு அவர் உரிய வயதை அடைந்தவுடனும், தனது பெயர் உறுப்பினர் பதிவேட்டில் பதியப் பெற்றுள்ளது என்பதை அறிந்தவுடனும், அவர் ஒரு நியாயமான காலத்திற்குள் தனக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளை மறுதலிக்கும் விருப்புரிமை பெற்றவர். அவ்வாறு அவர் மறுக்காமல் வெறுமனே இருந்துவிட்டால், அவர் தன்னை அந்நிறுவனத்தின் பங்குதாரராக ஏற்றுக் கொள்கிறார் என்று பொருளாகும். இந்நிலையில் ஒரு பங்குதாரருக்குரிய பொறுப்புகள் அவருக்கு எழுகிறது.

1. AIR 1914 Bom 128 : ILR 39 Bom 331 : 27 IC 335

ஆனால், அவர் இளராக இருக்கும் பொழுதே (during his minority), அந் நிறுவனம் கலைக்கப்பட்டு விட்டால், அவருக்கு எப்பொறுப்பும் கிடையாது. எடுத்துக்காட்டாக பின்வரும் வழக்கொன்றை கவனிப்போம்.

Palaniappan v. Official Liquidator[1] - எனும் வழக்கில் இளவர் ஒருவருக்கு அவரது காப்பாளர் (Gaurdian) செய்த விண்ணப்பத்தின் அடிப்படையில் பங்குகள் ஒதுக்கப் பெற்றன. பின்னிட்டு அந்நிறுவனம் நட்டமடைந்து, அதனால் கலைக்கப்பட்டது. இங்கு அவ் விளவரோ அல்லது அவரது காப்பாளரோ (தந்தை), பங்களிப்பாளர்கள் (Contributories) முறையில் பொறுப்புடையவர்கள் அல்லர் என்று நமது மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

மேற்கண்ட வழக்கின் அடிப்படையில், நமது பிரச்சனையில் வரும் இளவர், பங்களிப்பாளர் எனும் முறையில் பொறுப்புடையவர் அல்ல என்பதே தீர்வாகும்.

17. A allows his name apart from any agreement to become a member to appear on the Register of members. He also holds himself out as the member of the Company. The Company goes into liquidation and his name is put on the list of contributories. He now seeks to avoid liability. Can he do so?

உறுப்பினர் பதிவேட்டில் தம்முடைய பெயர் இடம் பெறுவதற்கு, ஒரு அங்கத்தினராவ தற்குள்ள ஒப்பந்த சார்பின்றி A இயங்குகிறார். நிறுவனத்தில் உறுப்பினராக தம்மையும் காட்டிக் கொண்டிருக்கிறார். நிறுவனம் நொடித்துப் போய் அவருடைய பெயர் பங்கு கடப்பாட்டா ளர் பட்டியலில் சேர்க்கப்படுகிறது. அவர் இப்பொழுது அக்கடப்பாடு நிலையைத் தவிர்க்க முயற்சிக்கிறார். அவரால் அவ்வாறு தவிர்க்க முடியுமா?

தீர்வு:

நிறுவனச் சட்டத்தின் 2(55)–ஆவது பிரிவு 'உறுப்பினர்கள்' எனும் பதத்திற்கு வரையறை தருகிறது. அதன்படி, ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் ஆதரவாளர் களாக கையொப்பம் செய்பவர்கள் மற்றும் நிறுவனத்தின் உறுப்பினர்களாக ஆவதற்கு எழுத்து மூலம் தங்களது இசைவினைத் தெரிவிக்கும் மற்றும் உறுப்பினர் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்ட நபர்கள், நிறுவனத்தின் உறுப்பினராகிறார்கள். எனவே, ஒரு நிறுவனத்தின் உறுப்பினராவதற்கு (1) அவர் தமது இசைவினை எழுத்து மூலம் அளித்து செய்து கொண்ட உடன்பாடு; மற்றும் (2) உறுப்பினர் பதிவேட்டில் அவரது பெயர் பதிவு தேவை. எனவே, ஒரு நபர் உறுப்பினராவதற்கான உடன்பாட்டை மேற்கொண்டு, அவர் தன் பெயரை, உறுப்பினர் பதிவேட் டில் தோன்ற அனுமதித்தாலோ அல்லது தானே உறுப்பினராக அறிவித்துக் கொண்டாலோ அல்லது அவ்வாறு அறிவிப்பதை அனுமதித்தாலோ அவர் முரண்தடைக் கோட்பாட்டின்படி அந்நிறுவனத்தின் உறுப்பினராவார். ஆனால், அதே சமயத்தில், ஒரு நபரின் பெயர், உறுப்பினர் பதிவேட்டில் இடம் பெற்றிருக்கிறது என்ற காரணத்திற்காக மட்டுமே அவர் முரண்தடைக் கோட்பாட்டின்படி உறுப்பினராக மாட்டார். அங்கு உறுப்பினராவதற்கான எழுத்து மூலமான ஒப்பந்தம் இருத்தல் வேண்டும்.

மேற்படி பிரச்சனையில் A என்பவர் தம்முடைய பெயர், உறுப்பினர் பதிவேட்டில் இடம் பெறுவதற்கு ஒப்பந்தம் ஏதுமின்றி இயங்குகிறார். மேலும் நிறுவனத்தில் உறுப்பினராக தம்மை

1. AIR 1942 Mad. 470 : (1942) 1 MLJ 425 : 201 IC 731

காட்டிக் கொண்டிடுமிருக்கிறார். இங்கு A என்பவர் உறுப்பினராவதற்கான ஒப்பந்தம் ஏது மின்றி அவர் அவ்வாறு இயங்குகிறார் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே அவர் என்னதான் நிறுவனத்தின் உறுப்பினராக தம்மைக் காட்டிக் கொண்டாலும், ஒப்பந்தம் இல்லாத வரையில் அவர் நிறுவனத்தின் உறுப்பினராக முடியாது.

எனவே, A என்பவர் மேற்படி நிலையை தனக்கு சாதகமாக சுட்டிக்காட்டி, பங்கு கடப்பாட்டாளர் நிலையைத் தவிர்க்கலாம். எனினும், ஒரு நபரின் பெயர் உறுப்பினர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்து, அவர் அந்நிலையை ஏற்றுக் கொண்டு, உறுப்பினராக செயல்பட்டிருந் தால், அவர் உறுப்பினராக இசைவளித்த எழுத்து மூலமான ஒப்பந்தம் இருந்ததாக எதிரிடை யான சான்றுடன் மறுக்கப்பட்டாலொழிய, அவர் உறுப்பினர் என்றே அனுமானம் செய்யப்படும். பின்னர் உறுப்பினருக்குரிய உரிமைகள் ஏற்படும். அதுபோல் பங்குக் கடப்பாட்டாளர் போன்ற பொறுப்பு நிலையையும் தவிர்க்க இயலாது.

18. A bus company was sold by its owner X to a Company for Rs. 1,40,000 in consideration of fully paid up shares of that amount. On liquidation, the value of the business was found to be Rs. 80,000. The liquidator sued X for the balance amount. Advise X.

'X' என்ற பேருந்து நிறுவனத்தின் சொந்தக்காரர் தன் நிறுவனத்தை மற்றொரு நிறுவனத்திற்கு ரூ.1,40,000ற்கு விற்று விடுகிறார். அந்த தொகைக்கு ஈடாக முற்றிலும் கொடுக்கப்பட்ட பங்குகளாக அவருக்கு அளிக்கப்பட்டது. எதிர்பாராத விதமாக அந்நிறுவனம் கலைக்கப்பட்டது. கலைப்பதிகாரி அந்த நிறுவனத்தின் மதிப்பு ரூ.80,000 என்று மதிப்பிடுகி றார். கலைப்பதிகாரி 'X'ன் மீது மீதி தொகைக்கு வழக்கு தொடருகிறார். 'X'ற்கு அறிவுரை தருக.

தீர்வு:

ஒருவருக்கு பங்குகள் ஒதுக்கப்பட்ட பின், அவர் அவற்றிற்குரிய தொகை முழுவதை யும் செலுத்த வேண்டியவராகிறார். அவ்வாறு செலுத்தப்படுவதன் பேரில், அவருக்கு பங்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. அந்த வகையில் ஒரு பங்குச் சான்றிதழில் கண்ட ஒவ்வொரு பங்குக்கும் உரிய தொகை முழுவதுமாக செலுத்தப்பட்டுவிட்டது என்று அச்சான்றிதழில் குறிப் பிடப்பட்டிருப்பின், அவை, 'முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகள்' ஆகின்றன. இந்நிலையில் அப் பங்குகளுக்குரிய தொகை முழுவதும் செலுத்தப்படவில்லை என்று நிறுவனம் கூற முடியாது. அவ்வாறு கூறுவதிலிருந்து அந்நிறுவனம் முரண்தடை செய்யப்பட்டுள்ளது (Estoppel as to Payment on shares). இதனால் அப்பங்குகளுக்குரிய தொகை முழுவதும் செலுத்தப்பட்டு விட்டது என்று நம்பி அவற்றை நல்லெண்ணத்துடன் வாங்கும் ஒருவர் பாதுகாக்கப்படுகிறார்.

Bloomenthal v. Ford[1] எனும் வழக்கில், தொகை முழுவதும் செலுத்தப்பட்டு, தனக்கு வழங்கப்பட்ட 10,000 பங்குகளின் பிணையத்தின் அடிப்படையில் B என்பவர் 1,000 பவுண்டு பணத்தை ஒரு நிறுவனத்திற்கு கடனாக வழங்குகிறார். ஆனால் உண்மையில் எத்தொகையும் அப்பங்குகளுக்காக செலுத்தப்பட்டிருக்கவில்லை. இந்நிலையில் நிறுவனம் கலைக்கப்பட்டது. அப்பொழுது, அப்பங்குகளுக்குரிய மீதித் தொகையைச் செலுத்தும்படி, அந் நிறுவனம் கோரியது. அப்பொழுது, அப்பங்குகளுக்கான தொகை முழுவதும் செலுத்தப்பட வில்லை என்று அந்நிறுவனமோ அல்லது கலைப்பதிகாரியோ மறுத்துக் கூற முடியாது என்றும், எனவே B என்பவரை பங்காளிப்பாளர் பட்டியலில் (List of Contributories) வைக்க

1. (1897) AC 156 : 76 LT 205

முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

மேற்கண்ட விளக்கம் மற்றும் வழக்கின்படி, நமது மேற்படி பிரச்சனைக்கும் தீர்வு காணலாம். அதாவது, 'X' என்ற பேருந்து நிறுவனத்தின் சொந்தக்காரர் தன் நிறுவனத்தை மற்றொரு நிறுவனத்திற்கு ரூ.1,40,000–ற்கு விற்று, அத்தொகைக்கு ஈடாக அம்மற்றொரு நிறுவனத்தின் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளைப் பெறுகிறார். ஆனால் அந்நிறுவனம் கலைக்கப்பட்டது. கலைப்பதிகாரி அம்மற்றொரு நிறுவனத்தின் மதிப்பு ரூ.80,000 என்று மதிப் பிடுகிறார். எனவே மீதித் தொகை கோரி 'X'-ன் மீது கலைப்பதிகாரி வழக்கு தொடருகிறார். ஆனால் எப்பொழுது பங்குகளுக்குரிய தொகை முழுவதும் செலுத்தப்பட்டுள்ளது என்று கூறி, அந்நிறுவனம் 'X'–க்கு பங்குகளை வழங்கிவிட்டதோ, அதன் பிறகு அப்பங்குகளுக்கான தொகை முழுவதும் செலுத்தப்படவில்லை என்று அந்நிறுவனமோ அல்லது கலைப்பின் பொழுது நியமனம் செய்யப்படும் கலைப்பதிகாரியோ மறுத்துக் கூற முடியாது. எனவே, மீதித் தொகை கோரி 'X'-ன் மீது கலைப்பதிகாரி வழக்கிட முடியாது என்பதே இங்கு தீர்வாகும்.

19. A transfered his shares to B. But the directors refuse to register the transfer. Later on a call was made on A. Could A recover the amount of the call from B.

B–க்கு தம்முடைய பங்குகளை A உரிமை மாற்றம் செய்து கொடுத்தார். ஆனால் இயக்குனர்கள் அந்த உரிமை மாற்றத்தைப் பதிவு செய்ய மறுத்தனர். பின்னர், A–யிடம் பங்குத் தொகை கோரி அழைப்பு செய்யப்பட்டது. B–யிடமிருந்து அழைப்பு தொகையை A திரும்பப் பெற முடியுமா?

தீர்வு:

ஒருவர், ஒரு நிறுவனத்தில் தனக்குள்ள பங்குகளை மற்றொருவருக்கு உரிமை மாற்றம் செய்து கொடுத்து, அம்மாற்றமானது முறையாகப் பதிவு செய்யப்பட்டுவிட்டால், பிறகு பங்குகளை மாற்றியளித்தவருக்கு (Transferor) அந்நிறுவனத்தின் பங்காதாயங்கள் பெறும் உரிமை உட்பட எவ்வித எதிர்கால உரிமையும் கிடையாது. அதுபோல பிற்கால பங்குத் தொகை அழைப்புக்கு பணம் செலுத்தும் பொறுப்பும் அவருக்கு கிடையாது. மேற்படி உரிமைகளும், பொறுப்புகளும் பங்குகளை மாற்றியளிக்கப் பெற்றவருக்கு (Transferee) வந்துவிடும்.

நமது மேற்படி பிரச்சனையில், பங்கு உரிமை மாற்றத்தை இயக்குனர்கள் பதிவு செய்ய மறுத்துள்ளனர். இந்நிலையில் A–யிடம் பங்குத் தொகை கோரி அழைப்பு செய்யப் பட்டுள்ளது. பங்குரிமை மாற்றம் முறைப்படி பதிவு செய்யப்படாததால், A–தான் பங்குத் தொகை அழைப்பை ஏற்று, பங்குத் தொகையை செலுத்த வேண்டும். அதாவது, பங்குரிமை மாற்றம் பதிவு செய்யப்படாததால், அப்பங்குகளுக்கு இன்னமும் A–தான் உரிமையாளர். எனவே B–யிடமிருந்து அழைப்புத் தொகையை A திரும்பப் பெற முடியுமா, எனும் வினாவிற்கே இங்கு இடமில்லை.

ஒருவேளை, மேற்படி பங்குரிமை மாற்றத்தை இயக்குனர்கள் பதிவு செய்ய இசை வளித்திருப்பின், அதன்பின் அழைப்பிற்கிணங்க பங்குத் தொகையை A செலுத்தி விட்டிருந் தால், அதை B–யிடமிருந்து A திரும்பப் பெற இயலும்.

20. A transfered his shares to two persons and lodged the certificate to the company. The company certified the transfer but instead of destroying the original certificate, returned it to the

transferor who borrowed money on it. Discuss the company's liability to the lender.

அ என்பவர் தன்னுடைய பங்குகளை இரண்டு நபர்களுக்கு மாற்றம் செய்ய வேண்டி அதன் சான்றிதழினை நிறுவனத்திடம் ஒப்படைத்தார். நிறுவனம் பங்கு மாற்றத்தினை பதிவு செய்து மூலச் சான்றிதழினை கோடிட்டு அழிக்காமல் அவரிடமே திரும்ப ஒப்படைக்கிறது. எனவே அ என்பவர் அதன் மீது கடன் வாங்கினார். கடன் கொடுத்தவர் மீதான நிறுவனத்தின் பொறுப்பு குறித்து விவாதிக்க.

தீர்வு:

இப்பிரச்சனையில் அந்நிறுவனம் செய்தது தவறு. அது மூலப் பங்குச் சான்றிதழை அழித்துவிட்டிருக்க வேண்டும். எனினும் இம்மாதிரியான தருணங்களில் அந்நிறுவனம் பங்குச் சான்றிதழை மாற்றிப் பெற்றவருக்கு பொறுப்பாகுமே தவிர, வேறு வெளி நபர்களுக்கு அல்ல. அதாவது அப்பங்குச் சான்றிதழ் மீது அ என்பவருக்கு கடன் கொடுத்தவருக்கு அது எவ்வகையிலும் பொறுப்பாகாது.

இப்பிரச்சனை **Bishop v. Balkis Consolidated Co.**[1] என்ற வழக்கின் சங்கதிகளை அப்படியே அடியொற்றி அமைந்ததாகும். இவ்வழக்கில் B என்பவர் தனது பங்குகளை இருவருக்கு மாற்றுகிறார். இந்த மாற்றத்திற்கு செயல்விளைவு கொடுப்பதற்காக தனது பங்குச் சான்றிதழை நிறுவனத்திடம் ஒப்படைக்கிறார். நிறுவனமும் அம்மாற்றத்திற்கு சான்றளிக்கிறது. ஆனால் அசல் (மூல) பங்குச் சான்றிதழை அழித்து விடுவதற்குப் பதிலாக, அதை பங்குகளை மாற்றித் தரும் B என்பவரிடமே திரும்ப கொடுத்து விடுகிறது. அவர அதன் மீது மோசடியாக கடன் பெற்றுவிடுகிறார். இதில் தீர்ப்புரைத்த நீதிமன்றம் இம்மாதிரியான நேர்வுகளில் நிறுவனம், கடன் கொடுத்தவருக்கு பொறுப்பாகாது என்றும், அது பங்குகளை மாற்றிப் பெற்றவருக்குத்தான் (transferee) பொறுப்பாகுமே தவிர, வேறு எவருக்கும் அல்ல என்றும் கூறியது.

21. A Company's directors to make a call. But one of them had not been validly appointed. Can the call be enforced?

ஒரு பங்கமைப்பின் (நிறுவனத்தின்) இயக்குனர்கள் வரவழைப்புக் கட்டணத்தைத் தீர்மானித்தனர். ஆனால் அவர்களில் ஒருவர் செல்லத்தக்க முறையில் நியமிக்கப்படவில்லை. அவ்வரவழைப்பு செல்லுறுத்தப்பட இயலுமா?

தீர்வு:

ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்படும் பொழுது, அது தான் வெளியிடும் பங்கின் முழு மதிப்பையும் வசூலிப்பதில்லை. நிறுவனங்கள், பொதுவாக பங்குகளின் மதிப்பில் ஒரு பகுதியை விண்ணப்பத்துடனும், மற்றொரு பகுதியை பங்கு ஒதுக்கலின் போதும், மீதமுள்ள பகுதியை பல்வேறு தவணைகளிலும் வசூலிக்கின்றன. இவ்வாறு வசூலிக்கப்பட வேண்டிய பங்குத் தொகைகளை பெற வேண்டி விடுவிக்கப்படும் கட்டளையே **'அழைப்புகள்' (Calls)** அல்லது 'வரவழைப்புக் கட்டளை' எனப்படுகிறது. நிறுவனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் தாம் வாங்கியுள்ள பங்குகளின் செலுத்தப்படாத பங்கினை செலுத்தும் பொறுப்பினைக் கொண்டவர்கள். அவ்வாறு செலுத்தப்படாத பகுதியினை, செலுத்தும்படி முறையாகக் கோரி அனுப்பப்படும் அறிவிக்கை **'பங்குத் தொகை அழைப்பு' (Calls on Shares)** எனப்படுகிறது.

1. (1890) 25 QBD 512 (CA)

ஒரு அழைப்பு செல்லத்தக்கதாக அமைய வேண்டுமெனில், அது பல்வேறு விதி களின்படி அமைந்திருக்க வேண்டும். அவை வருமாறு. 'அழைப்பானது' இயக்குனரவையின் தீர்மானத்தால் செய்யப்பட வேண்டும் (A Call must be made under a resolution of board of directors); இயக்குனரவையில் உள்ள இயக்குனர்கள் முறைப்படி நியமனம் செய் யப்பட்டிருக்க வேண்டும் (duly appointed). அவர்கள் முறையான தகுதி பெற்றிருக்க வேண் டும் (duly qualified). அவர்களின் கூட்டமானது முறைப்படி நடத்தப்பட்டிருக்க வேண்டும் (duly convened). கூட்டத்திற்கு தேவையான குறைந்த எண்ணிக்கை (quorum) இருந் ததா என்பதை கவனிக்க வேண்டும். அழைப்பு குறித்த தீர்மானமானது, முறைப்படி நிறைவேற் றப்பட்டிருக்க வேண்டும் (duly passed). இவற்றில் ஏதேனும் ஒரு சிறு ஒழுங்கின்மை (irregularity) ஏற்பட்டாலும், அழைப்பானது செல்லத்தகாததாகிவிடும். அதனை செல்லுறுத்த இய லாது.

நமது மேற்படி பிரச்சனையில், இயக்குனர்களில் ஒருவர் செல்லத்தக்க முறையில் நிய மனம் செய்யப்படவில்லை. எனவே அவ்வியக்குனர்கள் தீர்மானித்த அழைப்பை செல்லுறுத்த இயலாது.

22. A Company allots certain shares to C at a discount without the requisite formalities. In the winding up of the Company C disclaimed his liability as a contributory. Can he do so?

தேவையான வழிமுறைகளைப் பின்பற்றாமல் ஒரு பங்கமைப்பு C–க்கு சில பங்குகளை குறைவு விலையில் பங்கீடு செய்கிறது. பங்கமைப்பின் கலைப்பில் C தனது கடப்பாளர் பொறுப்பு நிலையை மறுக்கிறார். அவர் அப்படி செய்ய இயலுமா?

தீர்வு:

பங்குகளை குறைவு விலையில் வெளியிட, ஒரு நிறுவனம் பல்வேறு விதிகளை பின்பற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் நமது பிரச்சனையில், தேவையான வழிமுறைகளைப் பின்பற்றாமல் ஒரு நிறுவனம் C–க்குச் சில பங்குகளை குறைவு விலையில் பங்கீடு செய்கிறது. தேவையான வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது என்ற நன்னம்பிக்கையின் அடிப்படையி லேயே C அப்பங்குகளை ஏற்றுக் கொண்டுள்ளார். இந்நிலையில் உண்மை நிலை C–க்கு தெரிந்ததும், அவர் அதை மறுக்கலாம். எனவே, C தனது கடப்பாளர் பொறுப்பு நிலையை மறுக்க முடியும். ஒருவேளை, தேவையான வழிமுறைகளை பின்பற்றாமல் பங்குகளை குறைவு விலையில் அளிக்கப்படுவதை தெரிந்தே, அவற்றை C ஏற்றுக் கொண்டிருந்தால், அவர் தனது பொறுப்பு நிலையை மறுக்கவியலாது.

23. A Company was incuring losses and its shares were partly paid up. M, a member of the Company holding 15 shares, surrenders his shares to the Company. The Company's Board accepts the surrender. Will the surrender be valid?

ஒரு பங்கமைப்பிற்கு இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. 15 பங்குகளை வைத் திருந்த அந்த பங்கமைப்பின் அங்கத்தினரான M தனது பங்குகளைப் பங்கமைப்பிடம் சரணடையச் செய்கிறார். பங்கமைப்பின் குழு அதை ஏற்கிறது. அந்த ஏற்பு செல்லத் தக்கதா?

தீர்வு:

ஒரு உறுப்பினர் தனது பங்குகளை சரணடைவு (Surrender) செய்துவிட்டால், அவர் தனக்குள்ள பொறுப்பிலிருந்து விடுவிப்பு பெறுகிறார். ஒருவேளை நிறுவனம் நட்ட மடைந்து, கலைக்கப்பட்டுவிட்டால், அவரது பெயர் பங்குக் கடப்பாட்டாளர் (Contributory) பட்டியலில் இடம் பெறாது. எனவே நிறுவனத்தின் கடன்களுக்கு அவர் பொறுப்பாக மாட்டார். ஆனால் பங்குகளை சரணடைவு செய்வது, அவ்வுறுப்பினரை அவரது பொறுப்பிலிருந்து விடுவிக்கும் பொருட்டு இருத்தல் கூடாது (Surrender should not be used as a device for reliving a shareholder from his liability). இக்கருத்து **Mangal Sain v. Indian Merchants Bank, Amritsar**[1] எனும் வழக்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நமது மேற்படி பிரச்சனையில், ஒரு நிறுவனத்திற்கு இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக் கிறது. (அது விரைவில் கலைப்பு நிலைக்கு வரலாம்). இந்நிலையில் M என்பவர் தனது பங்கு களை சரண் செய்கிறார். அதை நிறுவனத்தின் இயக்குனரவையும் ஏற்கிறது. இதிலிருந்து M என்பவர், நிறுவனம் கலைக்கப்பட்டுவிட்டால், தனக்கு ஏற்படவிருக்கும் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளும் எண்ணம் கொண்டிருப்பது தெளிவாகப் புலப்படுகிறது. மேலும் அவருக்கு உதவியாக இயக்குனரவையானது பங்குகளை ஏற்றுக் கொண் டிருப்பதும், மேற்படி எண்ணத்தை வலுப்படுத்துகிறது. எனவே M என்பவர், நிறுவனம் இழப்பு அடைந்து கொண் டிருக்கும் சமயத்தில் செய்த பங்குகள் சரண், செல்லாது என்பதே இங்கு தீர்வாகும்.

24. There are only two directors on the board and one refuses to act with the other. There is no provision in the articles enabling the general meeting of the shareholders to increase or reduce the number of directors. What rights do the shareholders have?

இயக்குனரவையில் இரு இயக்குனர்கள் மட்டுமே இருந்தனர். அவர்களில் ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து செயல்பட மறுக்கிறார். இயக்குனர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அல்லது குறைக்க பங்குதாரர்களின் பொதுக் கூட்டத்தைக் கூட்ட செயல்முறை விதிகளில் வழிவகை ஏதுமில்லை. பங்குதாரர்களுக்கு என்ன உரிமைகள் உள்ளன?

தீர்வு:

மேற்படி பிரச்சனை **Barron v. Potter**[2] எனும் வழக்கின் பொருண்மைகளை ஒத்ததாகும்.

ஒரு நிறுவனத்தில் இரண்டு இயக்குனர்கள் மட்டுமே இருக்கையில், அவர்களுக் குள் ஒரு விஷயம் குறித்து கருத்து வேறுபாடு தோன்றினால், அங்கு அது குறித்து முடிவெடுக்க முடியாத முட்டுக்கட்டை நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் பங்கு தாரர்கள் தலையிடுவதன் பேரில், நிறுவனம் தனது மேற்படி விஷயத்தைத் தீர்மானிக்க, தனது உள்ளார்ந்த அதிகாரங்களை (inherent power) பயன்படுத்தி தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

மேற்படி பிரச்சனையில், இயக்குனரவையில் இரண்டு இயக்குனர்கள் மட்டுமே இருந்தனர். அவர்களில் ஒருவர் மற்றொருவருடன் இணைந்து செயல்பட மறுக்கிறார். பங்கு தாரர்களின் பொதுக் கூட்டத்தில் இயக்குனர்களின் எண்ணிக்கையை கூட்டவோ அல்லது குறைக்கவோ எவ்வித வகைமுறையும் நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் கிடையாது. இந்நிலையில் பங்குதாரர்களுக்கு கிடைக்கும் உரிமை அல்லது தீர்வழி யாதெனில், மேற்படி

1. AIR 1928 Lah 240
2. (1914) 1 Ch. 895

விபரத்தை நிறுவனத்திடம் அறிவிப்பதுதான்.

இவ்வாறு இயக்குனர்கள் தங்களுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தி செயல்பட மறுப்பதால், நிறுவன நிருவாகத்தில் ஒரு முட்டுக்கட்டையான நிலை ஏற்படுகிறது. எனவே நிறுவனம் தன்னுடைய உள்ளார்ந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, நிறுவன நிருவாகத்தை சீர்தூக்கி வைக்கும் பொருட்டு, கூடுதல் இயக்குனர்களை நியமித்து, பங்குதாரர்களுக்கு தீர்வழியளிக்கலாம்.

25. There were two directors in a Company. They failed to agree to an application for a transfer. One was in favour of granting the transfer and the other refused to do so. The applicant sues the Company. Decide by giving reasons.

ஒரு நிறுவனத்தில் இரண்டு இயக்குனர்கள் இருந்தனர். மாற்றம் கோரி செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்திற்கு அவர்கள் ஒத்துப் போக இயலவில்லை. மாற்றத்திற்கு ஒருவர் ஆதரவு தெரிவிக்கிறார். மற்றொருவர் அவ்வாறு மாற்ற மறுக்கிறார். விண்ணப்பதாரர் நிறுவனத்திற்கு எதிராக வழக்கிடுகிறார். காரணங்கள் கூறி தீர்மானிக்க.

தீர்வு:

ஒரு நிறுவனத்தில் இரண்டே இயக்குனர்கள் இருக்கும் பொழுது, அவர்கள் ஒத்துப் போக இயலவில்லையென்றால், அங்கு ஒரு முட்டுக்கட்டையான நிலை ஏற்படுகிறது. இதனைக் களையும் பொருட்டு நிறுவனம் தனது உள்ளார்ந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, கூடுதல் இயக்குனர்களை நியமித்து, மேற்படி பிரச்சனைக்கு தீர்வு வழங்கும் படி ஏற்பாடு செய்யலாம்.

நமது மேற்படி பிரச்சனையில் விண்ணப்பதாரர், நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தால் (எதிரிடையான காரணம் ஏதுமில்லையென்றால்) மேற்கண்ட காரணங்களால் அவருக்கு சாதமாகவே தீர்ப்பு அமையும். பங்கு மாற்றம் அவருக்கு சாதகமாக அளிக்கப்படும்.

26. The sole director of a Company paid into his account in the Bank, cheques drawn in favour of the Company. The Bank collected the amount and credited it in his account. The Company on behalf of a debenture holder sued the Bank for damages. Whether it can get damages?

ஒரு நிறுவனத்தின் ஒரே இயக்குனர் நிறுவனத்தின் பேரில் வழங்கப்பட்ட காசோலைகளைத் தன் கணக்கில் சேர்த்துக் கொள்ளும்படி ஒரு வங்கியிடம் கூறினார். வங்கியும் அவ்வாறு செய்தது. நிறுவனம் ஒரு கடனீட்டுப் பத்திரதாரரின் சார்பாக வங்கியின் மீது இழப்பீட்டிற்கான வழக்கு தொடர்ந்தது. இழப்பீடு பெற முடியுமா?

தீர்வு:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 149–வது பிரிவின்படி, ஒரு பொது நிறுவனமாயின் குறைந்தபட்சம் மூன்று இயக்குனர்களும், ஒரு தனி நிறுவனமாயின் குறைந்த பட்சம் இரண்டு இயக்குனர்களும் இருத்தல் வேண்டும். ஆனால் மேற்படி பிரச்சனையில் ஒரே இயக்குனர் மட்டுமே உள்ளார். மேற்படி பிரிவின்படி அவ்வாறு இருக்க வாய்ப்பில்லை. பிரச்சனையின் ஆரம்பகட்டமே வலுவிழந்துவிடுவதால், அடுத்தகட்டத்திற்கு போவதில் அர்த்தமில்லை. எனினும் இதனையே இரண்டு இயக்குனர்கள் இருப்பதாகக் கொண்டால், மேற்படி பிரச்சனைக்கு பின்வருமாறு தீர்வு காணலாம்.

நிறுவனம் இழப்பீடு கோரி வங்கியின் மீது வழக்கு தொடர்வதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட இயக்குனரின் மீது நம்பிக்கை மோசடி குற்றத்திற்காக புகார் கொடுக்கலாம். மேலும் மேற்படி இயக்குனர் முறையற்ற விதத்தில் தனது கணக்கில், நிறுவனத்திற்குரிய காசோலைகளை வரவு வைத்து சேர்த்த தொகையையும் வழக்கிட்டுப் பெறலாம். சம்பந்தப்பட்ட வங்கியை குற்ற உடந்தைக் குற்றத்திற்கு உள்ளாக்கலாம். ஆனால் அதே சமயத்தில் கடனீட்டுப் பத்திரதாரர் நிறுவனத்தைக் கேள்வி கேட்க இயலாது. ஏனெனில் இது இயக்குனரின் வெளிப் படையான அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட செயலாகும் (Acts outside of apparent authority). எனவே இயக்குனரின் மேற்படி செயலுக்கு நிறுவனம் பொறுப்பேற்கவியலாது. மேற்படி பிரச்சனை **Underwood Ltd. v. Bank of Liverpool**[1] எனும் வழக்கின் சங்கதி களை ஒத்ததாகும். கடனீட்டுப் பத்திரதாரர் இயக்குனர் மீதும் வங்கியின் மீதும் வழக்கிட்டு தக்க இழப்பீடு பெறலாம். இது 'உட்புற மேலாண்மைக் கோட்பாட்டிற்கு' ஒரு விதிவிலக்காக அமைந் துள்ளது. (மேற்படி கோட்பாட்டை 'செயல்முறை விதிகள்' எனும் அத்தியாயத்தின் கீழ் பக்கம் எண். 156–இல் காண்க.)

எனினும் ஒரு நபர் நிறுவனத்தைப் (One Person Company) பொறுத்தவரை ஒரேயொரு இயக்குனர் இருந்தால் போதுமானது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

27. X, a managing director of a company tried to get from the gas board a contract for the Company. The gas board refused to allot the contract to the Company but it was willing to allot the contract to X personally. So he resigned from the Company under the pretence of ill health and obtained the contract for himself. Whether he is liable to account for the benefits to the Company?

ஒரு நிறுவனத்தின் X என்ற நிர்வாக இயக்குனர் எரிவாயு வாரியத்திடமிருந்து நிறுவனத்திற்காக நிறுவனத்தின் பெயரில் ஒப்பந்தம் பெற முயற்சிக்கிறார். ஆனால் வாரியம் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்து கொள்ள தயாராக இல்லை என கூறிவிட்டு ஆனால் X என்ற நபருடன் ஒப்பந்தத்தில் ஈடுபட தயாராக உள்ளது என தெரிவித்தது. ஆகவே X தன் நிர்வாக இயக்குனர் பதவியை உடல்நிலை சரியில்லை என பொய் காரணம் கூறி ராஜினாமா செய்து விடுகிறார். அதன் பின் X ஒப்பந்தத்தை வாயு வாரியத்திடமிருந்து தன் பெயரிலேயே பெற்று விடுகிறார். X என்பவர் ஒப்பந்தம் மூலம் ஈட்டிய லாப கணக்கை நிறுவனத்திடம் ஒப்படைக்க கடமைப்பட்டவரா?

தீர்வு:

நிறுவனத்தின் பொறுப்பாண்மையராக (Trustee) இயக்குனர்கள் உள்ளனர். இவர்கள் நிறுவனத்தின் நன்மை ஒன்றை மட்டுமே மனதில் கொண்டு, அதற்காகவே முழு மூச்சுடன் செயலாற்ற வேண்டும். நம்பிக்கைக்குரிய முறையில் நடக்க வேண்டும். இதை மீறி நம்பிக்கைத் துரோகம் செய்து ஏதேனும் இலாபமடைந்தால், அவ்விலாபத்தினை நிறுவனம் அவர்களிடமிருந்து மீளப் பெறலாம். இந்நிலைப்பாட்டை பின்வரும் வழக்கு எடுத்துரைக்கிறது.

Industrial Development Consultants Ltd. v. Cooley[2] - எனும் வழக் கில் ஒரு நிறுவனத்தின் நிருவாக இயக்குனர், நிறுவனத்திற்காக அரசாங்க ஒப்பந்தம் ஒன்றை

1. (1924) 1 KB 775 : (1924) All ER Rep 230
2. (1972) 1 WLR 443 : 2 All ER 162

வாயு வாரியத்திடமிருந்து பெற முயற்சித்தார். ஆனால் அவ்வாரியம், அந்நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்க வியலாது என்று தெளிவாகக் கூறிவிட்டது. ஆனால் அந்நிருவாக இயக்குனரிடம் தனிப்பட்ட விதத்தில் ஒப்பந்தத் தொடர்பு கொள்ள தயாராக உள்ளது என்று கூறியது. எனவே அவர் தனக்கு உடல் நிலை சரியில்லை என்று பொய்க் காரணம் காட்டி, தனது நிருவாக இயக்குனர் பதவியை இராஜினாமா செய்தார். பின்னிட்டு அவ்வொப்பந்தத்தை வாயு வாரியத் திடமிருந்து தன் பெயரில் எளிதாகப் பெற்று, கொள்ளை இலாபம் அடைந்தார். இதையறிந்த நிறுவனம் அந்த இலாபம் தனக்குரியது என்று கூறி, அதற்குரிய கணக்கை ஒப்படைக்கும்படி அவர் மீது வழக்கிட்டது. நீதிமன்றமும் அவ்வாறே இலாப கணக்கை ஒப்படைக்கும்படி அவருக்கு உத்தரவிட்டது. அப்பொழுது, நிறுவனத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்து நிருவாக இயக்குனர் தவறியுள்ளார் என்றும், நம்பிக்கைத் துரோகம் புரிந்துள்ளார் என்றும், எனவே அவர் அடைந்த இலாபத்திற்கு நிறுவனத்திற்கு கணக்கு ஒப்படைக்க வேண்டிய பொறுப்புடையவரே என்றும் நீதிமன்றம் கருத்துரைத்தது.

நமது பிரச்சனையை ஒத்த மேற்படி வழக்கின் அடிப்படையில், X என்பவர் ஒப்பந்தம் மூலம் ஈட்டிய இலாப கணக்கை நிறுவனத்திடம் ஒப்படைக்க கடமைப்பட்டவரே.

28. The Directors of a company got a contract in their names under circumstances which made it breach of trust by them and also contributed themselves as trustees of the contract for the company. By their votes as holders of ¾ of the shares, they indued the company to pass a resolution declining that it had no interest in the contract. Are the Directors liable to account to the company the profits they made on the contract?

இயக்குனர்கள் தங்கள் பெயரிலேயே ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொண்டு நம்பிக்கை முறிவைக் காட்டும் சூழ்நிலைகளில் அந்த ஒப்பந்தத்திற்கு நிறுவன பங்கு பலத்தை கொண்டு நிறுவனத்திற்கு இந்த ஒப்பந்தத்தில் ஒரு இலாபமும் இல்லை என்று தீர்மானம் செய்து விடுகின்றனர். இயக்குனர்களுக்கு மேற்படி ஒப்பந்தத்தில் தங்களுக்கு கிடைத்த இலாபத்தை நிறுவனத்திற்கு கணக்கு காட்ட வேண்டிய பொறுப்பு உள்ளதா?

தீர்வு:

இயக்குனர்கள் நிறுவனத்திற்கு பொறுப்பாண்மையர்களாக செயல்படுகின்றனர். இவர்கள் நிறுவனத்தின் நன்மைக்காகவே முழு மூச்சுடன் செயலாற்ற வேண்டும். நம்பிக்கைக் குரிய முறையில் நடக்க வேண்டும். மேற்படி பிரச்சனையில் இயக்குனர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்து, தங்களது பெயரில் செய்து கொண்ட சில ஒப்பந்தங்களின் மூலம் இலாபம டைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் செய்து இயக்குனர்கள் இலாபம் ஏதேனும் பெற்றிருந்தால், நிறுவனத்திற்கு கணக்கு காட்ட வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. இந்த இலாபத்தை நிறுவனம் அவர்களிடமிருந்து மீளப் பெறலாம். இதை பின்வரும் வழக்கு விளக்குகிறது.

Cook v. Deeks[1] - இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நிறுவனம் இரயில்வே ஒப்பந்தப் பணி செய்து கொண்டிருந்தது. இதன் இயக்குனர்கள், நிறுவனத்திற்கு வர வேண்டிய ஒரு ஒப்பந்த வாய்ப்பை தங்களுக்கு சாதமாகப் பயன்படுத்திக் கொண்டு, நிறுவனத்தில் தங்களுக் குள்ள ¾ பங்கு வாக்குரிமையின் மூலம் அவ்வொப்பந்தத்தில் நிறுவனத்திற்கு எந்த உரிமையும்

1. (1916) 1 AC 554 : (1916 -17) All ER Rep 285

கிடையாது என்று தீர்மானித்து, அந்த ஒப்பந்தத்தின் வாயிலாகப் பெற்ற பலன் அனைத்தையும் தங்களுடையதாக்கிக் கொண்டனர். சுருங்கக் கூறின், நிறுவனத்திற்கு வந்த ஒப்பந்த வாய்ப்பு ஒன்றை அவர்கள் தட்டிப் பறித்து, அதைத் தங்கள் பெயரில் செய்து கொண்டு பலனடைந்தனர்.

ஒப்பந்தத்தின் வாயிலாகப் பெற்ற பலன் நியாயப்படி நிறுவனத்தையே சேர்ந்ததாகும் என்றும், அதைத் தங்களுடையதாக்கிக் கொள்ள இயக்குனர்கள் தங்கள் வாக்குரிமை அதிகாரத்தை செல்லத்தக்க விதத்தில் பயன்படுத்த முடியாது என்றும் நீதிமன்றம் கூறி, நிறுவனத்தின் நம்பிக்கையை மீறி இயக்குனர்கள் பெற்ற பலனை, அவர்கள் நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்று உத்திரவிட்டது.

நமது மேற்கண்ட பிரச்சனையை ஒத்தவாறு உள்ள மேற்கண்ட வழக்கின்படி, அவ் வியக்குனர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வாயிலாக அவர்களுக்கு கிடைத்த இலாபத்தை நிறுவனத்திற்கு கணக்கு காட்ட வேண்டிய பொறுப்புடையவர்களே என்பதே தீர்வு.

29. On account of unruly behaviour on the part of some members, the chairman of a general meeting proposes to adjourn the meeting sine die. Some members oppose the adjournment and demand poll. Advise the chairman.

சில உறுப்பினர்களின் கட்டுக்கடங்கா நடத்தையினால் ஒரு பொதுக் கூட்டத்தின் அவைத் தலைவர் நாள் குறிப்பிடாது கூட்டத்தினை ஒத்தி வைக்க முடிவு செய்கிறார். சில உறுப்பினர்கள் ஒத்தி வைப்பை எதிர்த்து வாக்கெடுப்பு ஒன்றினை வேண்டுகிறார்கள். அவைத் தலைவருக்கு அறிவுரை வழங்குக.

தீர்வு:

அவைத் தலைவரின் ஒத்தி வைப்பு மீது வாக்கெடுப்பு கோரப்பட்டால், நிறுவனச் சட்டப்படி அது உடனடியாக நடத்தப்பட வேண்டும். மற்ற விஷயம் தொடர்பானதாயின், வாக் கெடுப்பு கோரப்பட்டதிலிருந்து 48 மணி நேரங்களுக்குள் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

நமது மேற்படி பிரச்சனையில், அவைத் தலைவர் கூட்டத்தினை நாள் குறிப்பிடாது ஒத்தி வைக்க முடிவு செய்கிறார். அதை எதிர்த்து சில உறுப்பினர்கள் வாக்கெடுப்பு ஒன்றினை வேண்டுகிறார்கள். எனவே, அவைத் தலைவர் வாக்கெடுப்பினை உடனடியாக நடத்த வேண்டும்.

அவைத் தலைவருக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் முறையை நெறிப்படுத்தும் உரிமை உண்டு. எனினும் பொதுவாக வாக்குச் சீட்டு முறையே பின்பற்றப்படும். வாக்குச் சீட்டில் உறுப்பினர்கள் தங்களது தேர்வைக் குறிப்பிடுவார்கள்.

உறுப்பினர்கள் தங்கள் வாக்குரிமையைச் செயல்படுத்தியதும், அவைத் தலைவர் இரு சோதனையாளர்களை (Scrutineers) வாக்குச் சீட்டுகளைச் சோதனையிடும் பொருட்டு அமர்த்த வேண்டும். இவர்கள் இது பற்றி சோதனை செய்து அறிக்கை தருவர். இவர்களில் ஒருவர், அவைத் தலைவர் இசைந்தால், கூட்டத்திற்கு வருகை தந்த நிறுவனத்தின் உறுப்பின ராக இருக்க வேண்டும். வாக்கெடுப்பின் முடிவு தீர்மானத்தின் மீது கூட்டத்தின் முடிவாகக் கருதப்படும். மேற்கண்டவாறு, வாக்கெடுப்பின் போது அவைத் தலைவர் செயல்படுதல் வேண்டும்.

30. Two hundred fifty members of a Limited Company duly deposited a requisition for holding a meeting of the Company on a

certain day at 3.00 p.m. On the day so fixed at 3.40 p.m. four members were present. Can they transact any business?

ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனத்தினை சார்ந்த 250 உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட தேதியில் 3.00 மணி அளவில் கூட்டம் ஒன்றினை கூட்ட வேண்டிய உரிய வேண்டுகோள் ஒன்று விடுத்தனர். அவ்வாறு குறிப்பிட்ட தினத்தில் 3.40 மணி அளவில் நான்கு உறுப்பினர்கள் மட்டுமே வருகை புரிந்திருந்தனர். அவர்கள் வியாபாரரீதியில் செயல்பட முடியுமா? ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 103(1)–வது பிரிவின்படி, ஒரு கூட்டத் திற்கு குறைந்தபட்சமாக எத்தனை உறுப்பினர்கள் வருகை தர வேண்டும் என்பதை ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் கூறவில்லையெனில், அந்நிறுவனம் ஒரு பொது நிறுவன மாக (Public Company) இருப்பின் குறைந்தபட்சம் 5 உறுப்பினர்களும், தனியார் நிறுவன மாக (Private Company) இருப்பின் குறைந்தபட்சம் 2 உறுப்பினர்களும் வந்திருந்தால் போதும்.

அதேபோல் பிரிவு 103(2)–இன்படி, வேண்டுகோளின் (requisition) பேரில் அழைக் கப்பட்ட கூட்டமானது, அது ஆரம்பிப்பதற்கென நிருணயிக்கப்பட்டிருந்த நேரத்திலிருந்து, அரை மணி நேரத்திற்குள் (30 நிமிடங்களுக்குள்) குறைந்தபட்ச உறுப்பினர்கள் வரவில்லை என்றால், அக்கூட்டம் இரத்து செய்யப்பட்டதாக (cancelled) பொருளாகும். வேறு விதங் களின் பேரில் அழைக்கப்பட்ட கூட்டமானது, அடுத்த வாரத்தில் அதே கிழமையில், அதே நேரத் திற்கு ஒத்தி வைக்கப்படும் (adjourned). பிறகு மீண்டும் கூட்டப்பட்ட கூட்டத்திலும் குறைந்த அளவு உறுப்பினர்கள் அரை மணி நேரத்திற்குள் ஆஜராகவில்லை எனில், வந்திருக்கும் உறுப் பினர்களைக் கொண்டு கூட்டம் நடத்தலாம் என்று பிரிவு 103(3) கூறுகிறது. இங்கு ஒரு முக் கியப் பிரச்சனை எழுகிறது. அதாவது, மேற்கண்டவாறு மறு முறை கூட்டப்பட்ட கூட்டத்திற்கு ஒரேயொரு உறுப்பினர் மட்டும் வந்திருந்தால், அவர் அக்கூட்டத்தை நடத்த முடியுமா எனும் வினா எழுகிறது. அதற்கு விடையளிக்கும் முகமாக, **Sharp v. Dawas**[1] எனும் வழக்கில் "கூட்டம் என்பதே ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒன்றாகச் சேர்ந்து வருதலாகும்... ... ..." எனவே ஒரேயொருவர் நடத்துவது கூட்டமாகாது ("The word 'meeting' prima facie means a coming together of more than one person... ..."), என நீதிப்பெருமகனார் **Lord Coleridge** அவர்கள் கூறினார்.

இனி நமது பிரச்சனைக்கு வருவோம். பிரச்சனைப்படி, 150 உறுப்பினர்கள் கூட்டத் தைக் கூட்டுவதற்கு வேண்டுகோள் விடுக்கின்றனர். ஒரு தனியார் நிறுவனம் என்றால், அதிகபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 200 நபர்கள்தாம். பொது நிறுவனத்திற்கு அப்படிப் பட்ட உச்ச வரம்பு எதுவும் கிடையாது. நமது பிரச்சனையில் 150–க்கும் மேற்பட்ட உறுப்பினர் களைக் கொண்தொரு நிறுவனம் எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, உறுப்பினர்களின் எண்ணிக்கை 200–க்கும் அதிகமாக இருப்பதால், அந்நிறுவனம் தனியார் நிறுவனமாக இருக்க முடியாது என்பதும், அது ஒரு பொது நிறுவனமாகும் என்பதும் புலனாகிறது.

நாம் மேலே கண்ட பிரிவு 103(1)–இன்படி, ஒரு கூட்டத்திற்கு, அந்நிறுவனம் பொது நிறுவனமானால், குறைந்தபட்சம் 5 உறுப்பினர்கள் ஆஜராகியிருக்க வேண்டும். ஆனால் மேற்படி பிரச்சனையில், 4 உறுப்பினர்கள் மட்டுமே ஆஜராகியுள்ளனர்.

1. (1876) 2 QBD 26

அதேபோல், 3.00 மணி அளவில் கூட்டம் தொடங்கப்பட வேண்டும். 3.40 வரை 4 உறுப்பினர்களே வந்துள்ளனர். மேலும் இது வேண்டுகோளின் (requisition) பேரில் அழைக்கப்பட்ட கூட்டமாகும். எனவே பிரிவு 103(2)–ன்படி கூட்டம் தொடங்க குறிப்பிடப்பட்ட நேரத்திலிருந்து அரை மணி நேரங்களுக்குள் குறைந்தபட்ச உறுப்பினர்கள் ஆஜராகவில்லையெனில், அக்கூட்டம் இரத்து செய்யப்பட்டதாகப் பொருளாகும். 3.00 மணிக்கு தொடங்கும் எனப்பட்ட கூட்டமானது 3.40 மணி ஆகிவிட்டது; அதாவது அரை மணி நேரமும் கடந்து அதற்கு மேலும் 10 நிமிடங்கள் ஆகிவிட்டது. எனவே குறிப்பிட்ட காலத்திற்குள் குறைந்த அளவு உறுப்பினர்கள் ஆஜராகாததால், அக்கூட்டம் இரத்து செய்யப்பட்டதாகப் பொருளாகும். எனவே கூட்டத்திற்கு வந்திருக்கும் 4 உறுப்பினர்களும், வியாபாரரீதியில் (அலுவலல்கள்) செயல்பட முடியாது என்பதே தீர்வாகும்.

31. Under a company's articles two directors constituted a quorum for a meeting of the board. Two directors were present and they appointed one of themselves as managing director and co-editor of the paper run by the company. The appointments were challenged as invalid. Decide.

நிறுவனம் ஒன்றில், செயல்முறை விதிகளின் கீழ், இயக்குனரவையின் கூட்டத்திற்கு இரண்டு இயக்குனர்கள் தேவையான குறைவெண் வரம்புடையராக இருந்தனர். கூட்டத்திற்கு வந்த இரு இயக்குனர்கள், தங்களிலேயே ஒருவரை நிறுவனத்தால் நடத்தப்பட்ட செய்தித்தாளின் மேலாண்மை இயக்குனராகவும், இணை ஆசிரியராகவும் நியமித்துக் கொண்டனர். இந்நியமனங்கள் செல்லாததென வழக்காடப்பட்டது. முடிவு செய்க.

தீர்வு:

ஒரு நிறுவனத்தின் நடவடிக்கைகளில் அதன் இயக்குனர்கள் சொந்த நலன் எதையும் கொண்டிருப்பின், அதை இயக்குனரவையின் முதல் கூட்டத்தில் வெளிப்படுத்த வேண்டும் (Duty to disclose interest). அவர் நலன் கொண்டுள்ள விஷயம் குறித்து இயக்குனரவை கூட்டத்தில் விவாதம் நடத்தப்படும் பொழுது அவர் அதில் கலந்து கொள்ளக் கூடாது. மேலும் அக்கூட்டத்தில் அவர் வாக்களிக்கக் கூடாது. அக்கூட்டத்திற்கு அவர் வந்திருந்தாலும், கூட்டத்தின் குறைவெண் எண்ணிக்கை நோக்கங்களுக்காக அவரையும் சேர்த்து கணக்கிடல் கூடாது. மீறி வாக்களித்தால், அது செல்லாது. இந்நிபந்தனைகள் எல்லாம் எதற்கெனில், அவர் அவ்வாறு கலந்து கொண்டால், தனது சொந்த நலனுக்கு உகந்ததாக உள்ள தீர்மானக் கோரிக்கைக்கே வாக்களிக்கக் கூடும் அல்லது அதற்கு வாக்களிக்கும்படி மற்ற இயக்குனர்களுடன் ஏற்பாடு எதையும் செய்து கொள்ளக் கூடும். இதை நிறுவனச் சட்டம் தவிர்க்க விழைகிறது.

எடுத்துக்காட்டாக **In Re North Eastern Insurance Co. Ltd.**[1] எனும் வழக்கில் சில இயக்குனர்கள் இயக்குனரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, வாக்களித்ததன் மூலம், அவர்களில் இருவருக்கு நிறுவனம், கடனீட்டுப் பத்திரங்களை ஒதுக்கும்படி தீர்மானம் நிறைவேற்றினர். இத்தீர்மானம் செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

மேற்படி பிரச்சனையை ஒத்த மற்றொரு வழக்கான **V.Ramaswami Iyer v. Madras Times Printing and Publishing Co.**[2] என்பதில் இயக்குனரவைக்

1. (1919) 1 Ch 198
2. AIR 1915 Mad 1179

கூட்டத்திற்கு குறைவெண் வரம்பாக இரண்டு இயக்குனர்கள் வந்திருந்தால் போதும் என்று ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இரண்டு இயக்குனர்கள் வந்திருந்தனர். அவர்கள், தங்களில் ஒருவரை நிருவாக இயக்குனராகவும் மற்றும் அந்நிறுவனம் நடத்தி வந்த செய்தித்தாளின் இணை ஆசிரியராகவும் நியமனம் செய்து கொண்டனர். இங்கு அந்நியமனங்கள் செல்லாது என்று மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஏனெனில் இவ்விரு இயக்குனர்களில் ஒருவர் தம்மை நிருவாக இயக்குனராகவும், இணை ஆசிரியராகவும் நியமனம் செய்து கொள்ள வேண்டும் எனும் சொந்த நலன் உடையவராக உள்ளார். எனவே அவரை மேற்கண்ட நிபந்தனைகள்படி இயக்குனரவைக் கூட்டத்திலிருந்து விலக்கினால், அங்கு மேற்கண்ட குறைவெண் வரம்பே இல்லை (அதாவது இரண்டு இயக்குனர்கள் எனும் குறைவெண் இல்லை). எனவே மேற்கண்ட குறைவெண் இல்லாமல் செய்யப்பட்ட நியமனம் செல்லாது.

மேற்கண்ட சட்டப் பிரிவு மற்றும் வழக்குகளின்படி, மேற்கண்ட பிரச்சனையில் செய்யப்பட்டுள்ள நியமனங்கள் செல்லாது என்பதே முடிவு.

32. On the failure of the directors of a company to call a meeting on requisition the members themselves sent a notice to all the members for a meeting to be held at the registered office, but the M.D. locked the office premises. Hence the meeting was held at other place. Decide the validity of the meeting.

ஒரு நிறுவனத்தின் இயக்குனர்கள், உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கூட்டத்தை கூட்டத் தவறியதால் உறுப்பினர்களே அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு செய்து நிறுவன பதிவு அலுவலகத்தில் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டது. ஆனால் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் கூட்டம் நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு அலுவலகத்தை பூட்டிவிட்டதால் வேறு இடத்தில் அந்நிறுவனத்தின் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் செல்லும் தன்மை குறித்து முடிவு செய்க.

தீர்வு:

நிறுவனத்தின் கூட்டத்தை கூட்டுவதற்கான அறிவிப்பில் அது கூடும் இடம், நாள் மற்றும் நேரம் குறித்துரைக்கப்பட வேண்டும். எனினும் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் கூட்டத்தை நடத்த முடியாத நெருக்கடியான சூழல் ஏதும் உருவானால், அதனை வேறு ஏதேனும் இடத்தில் நடத்தலாம். இந்நிலையில் அக்கூட்டம் செல்லத்தக்கதே.

நமது மேற்படி பிரச்சனையில் நிறுவனத்தின் கூட்டத்தை கூட்டக் கோரி உறுப்பினர்கள் அழைப்பு விடுத்தும் அதனை இயக்குனர்கள் கூட்டவில்லை. எனவே அக்கூட்டத்தை நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் கூட்ட உறுப்பினர்கள் முடிவெடுத்து, உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவிப்பு அனுப்பினர். இதைத் தடுப்பதற்காக நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை மேலாண்மை இயக்குனர் பூட்டிவிட்டார். இங்கு கூட்டத்தை நடத்த முடியாமல் ஒரு நெருக்கடியான சூழல் உருவாகியுள்ளது. எனவே அறிவிப்பில் கூறப்பட்டதற்கு முரணாக வேறு இடத்தில் கூட்டத்தை கூட்டியது செல்லத்தக்கதே என்பது இப்பிரச்சனைக்கான தீர்வாகும்.

இத்தீர்வுக்கு மேற்கோளாக **MRS.Rathna velusami v. MRS Manicka velu Chettiar**[1] என்ற வழக்கைச் சுட்டிக்காட்டலாம். இதில் நிறுவனத்தின் பதிவு அலுவல

1. AIR 1955 Mad. 542

கத்தை அதன் மேலாண்மை இயக்குனர் பூட்டிவிட்டார். எனவே கூட்டமானது வேறு இடத்தில் நடைபெற்றது. அதில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இங்கு அத்தகு கூட்டமும் அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் செல்லத்தக்கதே என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

33. S, a shareholder, after appointing P as his proxy at a meeting of the company, himself attended and voted on a particular resolution. P thereafter claimed to exercise his vote. Examine the validity of his claim.

S எனும் பங்குதாரர் ஒருவர், P என்பவரை நிறுவனத்தின் ஒரு கூட்டத்திற்கு தனது மாற்றாளாக நியமனம் செய்த பிறகு, தானே நேர்முகமாக கூட்டத்தில் கலந்து கொண்டு, ஒரு குறிப்பிட்ட தீர்மானத்தின் மீது வாக்களித்தார். இதன் பின்னிட்டு P என்பவர் தனது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று கோரினார். அக்கோரிக்கையின் செல்லத்தக்க நிலை குறித்து ஆராய்க.

தீர்வு:

மாற்றாள் (Proxy) அமர்த்தல் என்பது திரும்பப் பெறத்தக்கதெனினும், மாற்றாள் வாக்களிக்கும் முன் அது திரும்பப் பெறப்பட வேண்டும். மாற்றாள் அமர்த்தியிருந்த ஒரு பங்குதாரர், தானே நேர்முகமாக கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களித்தால், மாற்றாள் அமர்த்தல் தானாக திரும்பப் பெற்றதாகிவிடும்.

நமது மேற்படி பிரச்சனையில் P–யை தமது மாற்றாளாக நியமித்திருந்த பொழுதும் S கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களித்துவிட்டார். இதனால் P–யின் வாக்குரிமை தானாக திரும்பப் பெற்றதாகிவிட்டது. எனவே P வாக்குரிமை கோர முடியாது என்பதே தீர்வு.

34. A company was controlld equally by Ramu, Raju, Shyam and Sundar. Ramu and Raju filed suit against Shyam and Sundar alleging that they fradulently converted company's assets for their personal use. Shyam and Sundar argued that the suit ought to have been filed by the company and not by Individual shareholders. Whether the suit is maintainable?

ஒரு நிறுவனத்தின் நிருவாகம் ராமு, ராஜு, ஷ்யாம் மற்றும் சுந்தர் என்பவர்களது கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. இந்நிலையில் எதிர்வாதிகளான ஷ்யாம் மற்றும் சுந்தர் இருவரும் நிறுவனத்துக்கு சொந்தமான சொத்துக்களை தங்கள் சொந்த பயன்பாட்டிற்கு மாற்றிக் கொண்டு விட்டதாக கூறி வாதிகளான ராமு மற்றும் ராஜு வழக்குத் தொடர்கிறார்கள். ஆனால் ஷ்யாம் மற்றும் சுந்தர் இருவரும் நிறுவனம் மட்டுமே வழக்கிட முடியும், தனி பங்குனர்கள் வழக்கிட முடியாது என வாதிடுகிறார்கள். வழக்கு நிலை நிறுத்தத்தக்கதா?

தீர்வு:

இப்பிரச்சனை **'அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மையைத் தடுத்தல்'** (Prevention of Oppression and Mismanagement) எனும் பகுதியின் கீழ் எழுவதாகும். இதில் வரும் **Foss v. Harbottle**[1] எனும் வழக்கின்படி நிறுவன மேலாண்மையினர் செய்யும்

1. (1843) 67 ER 189 : (1843) 2 Hare 461

தீங்குகளையும், தவறுகளையும் எதிர்த்து, அவர்கள் மீது அந்நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குதாரர்களே வழக்கிட முடியும்; சிறுபான்மைப் பங்குதாரர்கள் அவ்வாறு வழக்கிட முடியாது. அதாவது அவர்கள் விளைவிக்கும் தீங்குச் செயல்களுக்காக, அந்நிறுவனம், பெரும்பான்மை பங்குதாரர்களின் வாயிலாக, தனது பெயரிலேயே அவர்கள் மீது வழக்கிட வேண்டுமே தவிர, சிறுபான்மை (தனி) பங்குதாரர்கள் வழக்கிடக் கூடாது என்பது மேற்படி வழக்கில் நீதிமன்றம் வகுத்துக் கொடுத்த விதியாகும். ஆனால் இவ்விதி, சிறுபான்மை பங்குதாரர்களை பெரும் பான்மை பங்குதாரர்கள் ஒடுக்குவ தாக உள்ளது. எனவே இதற்கு சில விதிவிலக்குகள் வகுக் கப்பட்டன. அவற்றின்படி சிறுபான்மை பங்குதாரர்கள் கூட, தீங்கிழைக்கும் மேலாண்மையினர் மீது வழக்கிட முடியும்.

அவற்றில் ஒரு விதிவிலக்கு, பெரும்பான்மையினரின் ஆதரவில் நிறுவனத்திற்கு தீங்கிழைப்பவர்கள் இருக்கும் பொழுது (When the Wrongdoers are in support of Majority), சிறுபான்மை பங்குதாரர்கள் நிறுவனத்தைக் காக்க, நிறுவனத்தின் சார்பில் தங்கள் பெயரிலேயே அத்தீங்கிழைப்பவர்கள் மீது வழக்கிடலாம் என்று கூறுகிறது.

இவ்விதிவிலக்கு தொடர்பாக எழுந்த **Glass v. Atkin**[2] எனும் வழக்கை அடிப் படையாகக் கொண்டதே மேற்படி பிரச்சனையாகும். இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, ஒரு நிறுவனம், இரு வாதிகள் மற்றும் இரு பிரதிவாதிகளின் சம கட்டுப்பாட்டில் இருந்தது. மேற்படி இரண்டு பிரதிவாதிகளும், நிறுவனத்தின் சொத்துக்களை தங்கள் சொந்தப் பயன்பாட்டிற்கு மாற்றிக் கொண்டனர் என்று குற்றஞ்சாட்டி அவர்கள் மீது மேற்கண்ட இரண்டு வாதிகளும் வழக்கிடுகின்றனர். இவ்வழக்கை நீதிமன்றம் அனுமதித்து பின்வருமாறு கூறியது. அதன்படி, ஒரு நிறுவனத்தின் நலன் பாதிக்கப்படும் பொழுது, அந்நிறுவனமே தனது பெயரில் வழக்கிட வேண்டும் என்பது பொது விதி. எனினும், அவ்விரண்டு பிரதிவாதிகளும் அந்நிறுவனத்தின் மீது கட்டுப்பாடு கொண்டிருப்பதால், தங்கள் மீது வழக்குத் தொடுப்பதிலிருந்து அவர்கள் அந் நிறுவனத்தை எளிதில் தடுத்து விடக் கூடும் என்றும், எனவே இச்சூழலில் அவ்விரு வாதி களும், அந்நிறுவனத்தின் நலனைக் காக்க, அதன் சார்பில், அவ்விரு பிரதிவாதிகளின் மீது வழக்கிட உரிமை படைத்தவர்களே என்றும் கூறியது.

எனவே மேற்கண்டவற்றின் அடிப்படையில், 'நிறுவனம் மட்டுமே வழக்கிட முடியும், தனி பங்குனர்கள் வழக்கிட முடியாது' என்று ஷ்யாம், சுந்தர் ஆகிய இரு பிரதிவாதிகளும் செய்த வாதங்கள் ஏற்புடையதல்ல. ராமு, ராஜு ஆகிய இரு வாதிகளும் தொடர்ந்த வழக்கு நிலை நிறுத்தத்தக்கதே. வெற்றி நிச்சயம்.

35. "A" and "B" are two rival companies. The majority of the members of Company "A" were also the members of company "B". Company "A" commenced an action against Company "B". At a meeting of Company "A", the majority passed a resolution to compromise the action in a manner favourable to Company "B" and unfavourable to Company "A". Whether the resolution is valid?

A நிறுவனம் மற்றும் **B** நிறுவனம் ஆகிய இரண்டும் பகைமை கொண்ட நிறு வனங்கள் ஆகும். **A** நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குனர்கள் **B** நிறுவனத்தின் உறுப்பி னராக உள்ளார்கள். **A** நிறுவனம் **B** நிறுவனத்தின் மீது வழக்கிடுகிறது. **A** நிறுவனத்தின் கூட்டத்தில் அதன் பெரும்பான்மை உறுப்பினர்கள் **B** நிறுவனத்திற்கு சாதகமாகவும் **A**

1. (1967) 65 DLR (2nd) 501

நிறுவனத்திற்கு பாதகமாகவும் அமையும் வண்ணம் ஷரத்துகள் கொண்டு வழக்கை சமாதானம் செய்வதற்கு தீர்மானம் இயற்றுகிறார்கள். அந்த தீர்மானம் செல்லுபடியாகுமா?

தீர்வு:

இப்பிரச்சனை, இதற்கு முந்தைய பிரச்சனையைப் போன்று 'அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மையைத் தடுத்தல்' (Prevention of Oppression and Mismanagement) எனும் பகுதியின் கீழ் எழுவதாகும். **Foss v. Harbottle**[1] எனும் வழக்கில் கூறப்பட்ட விதிக்கு, பின்வரும் ஒரு சூழல் விதிவிலக்காக அமைகிறது. அதன்படி, சிறுபான்மை பங்குதாரர்களை மோசடி செய்து, அதன் மூலம் பெரும்பான்மை பங்குதாரர்கள் பயனடைய விழைந்தால் அல்லது அவ்வாறு செயற்பட்டால், அதனைத் தடுக்கும் பொருட்டு சிறுபான்மையினர் வழக்கு தொடரலாம். இந்நிலைப்பாட்டை பின்வரும் வழக்கு விளக்கிறது.

Menier v. Hopper's Telegraph Works[2] – எனும் வழக்கில் A, B ஆகிய இரண்டு நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று போட்டியானவையாகும். A நிறுவனத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள், B நிறுவனத்தின் உறுப்பினர்களாகவும் உள்ளனர். A நிறுவனம் B நிறுவனத்தின் மீது வழக்கிடுகிறது. A நிறுவனத்தின் கூட்டத்தில் அதன் பெரும்பான்மை உறுப்பினர்கள் B நிறுவனத்திற்கு சாதகமாகவும் A நிறுவனத்திற்கு பாதகமாகவும் அவ்வழக்கை சமரசம் செய்து தீர்மானம் நிறைவேற்றினர். இதன் வாயிலாக அவர்கள் B நிறுவனத்திடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய பலன்களை A நிறுவனம் இழக்கும்படி முயற்சித்தனர். எனவே இதை எதிர்த்து A நிறுவனத்தின் சிறுபான்மை உறுப்பினர்கள், அப்பெரும்பான்மை உறுப்பினர்கள் மீது வழக்கிட்டனர். இவ்வழக்கில் A நிறுவனத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் செய்த தீர்மானம் செல்லாது என்றும், இவ்வாறு பெரும்பான்மை உறுப்பினர்கள் செயல்படுவது அதிர்ச்சிக்குரிய விஷயம் என்றும், சிறுபான்மையினரை மோசடி செய்து, பெரும்பான்மையினர் பலன் அனுபவித்தல் கூடாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

மேற்கண்ட வழக்கின் அடிப்படையில் நமது பிரச்சனை அமைந்துள்ளது. A எனவே நிறுவனத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் செய்த தீர்மானம் செல்லாதது என்பதே தீர்வு.

36. The majority 90% shareholders wanted to buy the 10% minority shares. Since the minority shareholders are not willing to this, the majority shareholders altered the Articles of Association enabling them to purchase the minority shares compulsorily. Discuss its validity.

ஒரு நிறுவனத்தில் 90% பங்குகளை வைத்திருக்கும் பெரும்பான்மை பங்குதாரர்கள் சிறுபான்மை பங்குதாரர்களிடமுள்ள 10% பங்குகளையும் வாங்க விரும்பினர். இதற்கு சிறுபான்மை பங்குதாரர்கள் உடன்படவில்லை என்பதால் பெரும்பான்மை பங்குதாரர்கள் நிறுவனத்தின் சட்ட விதிமுறைகளை திருத்தம் செய்து சிறுபான்மை பங்குதாரர்களின் பங்குகளை கட்டாயமாக வாங்குவதற்கு வழி செய்தனர். இதன் செல்லும் தன்மையை விவாதிக்க.

தீர்வு:

முதற்கண், ஒரு நிறுவனத்தின் சிறுபான்மை பங்குதாரர்களை ஒடுக்கும் பொருட்டு,

1. (1843) 67 ER 189 : (1843) 2 Hare 461
2. (1874) 9 Ch App 350

அந்நிறுவனத்தின் செயல்முறை விதிகளை திருத்துவதை, நிறுவனச் சட்டம் அனுமதிப்பதில்லை. இரண்டாவதாக, ஒரு நிறுவனம் தனது சிறுபான்மை பங்குதாரர்களின் பங்குகளை பறிமுதல் செய்தல் கூடாது.

இவற்றையொட்டி எழுந்த **Brown v. British Abrasive Wheel Co.**[1] எனும் வழக்கின்படி, ஒரு நிறுவனத்தில் 98% பங்குகளை வைத்திருக்கும் பெரும்பான்மை பங்குதாரர்கள், 2% பங்குகளை வைத்திருக்கும் சிறுபான்மையினரின் பங்குகளை வாங்க விழைந்தனர். ஆனால் இதற்கு சிறுபான்மை பங்குதாரர்கள் உடன்படவில்லை. எனவே பெரும்பான்மை பங்குதாரர்கள், வலுக்கட்டாயமாக சிறுபான்மை பங்குதாரர்களின் பங்குகளை வாங்கும் பொருட்டு, நிறுவனத்தின் செயல்முறை விதிகளை திருத்தியமைக்க தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர். இதை எதிர்த்து சிறுபான்மை பங்குதாரர்கள் வழக்கிட்டனர். அப்பொழுது, மேற்கண்டவாறு திருத்தியமைக்கப் பெறும் புதிய செயல்முறை விதிகள், நிறுவனம் முழுவதற்குமான நன்மை எதையும் கொடுப்பதாகத் தெரியவில்லை என்றும், அவ்வாறு திருத்துவது நீதியும் நேர்மையுமாகாது என்றும், எனவே அத்தீர்மானம் செல்லத்தக்கதல்ல என்றும் நீதிமன்றம் மேற்படி வழக்கில் தீர்ப்புரைத்தது.

மேற்கண்டவற்றின்படி, மேற்படி பிரச்சனையில் பெரும்பான்மை பங்குதாரர்கள், சிறுபான்மை பங்குதாரர்களின் பங்குகளை வாங்கும் பொருட்டு செயல்முறை விதிகளில் செய்த திருத்தம் செல்லாது என்பதே தீர்வாகும்.

37. The plaintiffs who were in minority in the defendant company carried on a competing business. The majority of the shares were held by the directors, who passed a special resolution, altering the company's articles and conferring a power for the directors to acquire any shareholder's shares who competed with the company's business. Decide the validity of the resolution.

எதிர்வாதி நிறுவனத்தில் சிறுபான்மையினராக உள்ள வாதிகள் நிறுவனத்திற்கு எதிராக போட்டி வணிகத்தில் ஈடுபட்டனர். பெரும்பான்மை பங்குகளை வைத்துள்ள இயக்குநர்கள் ஒரு சிறப்புத் தீர்மானத்தின் மூலம் செயல்முறை ஏட்டை திருத்தி நிறுவனத்திற்கு எதிராக போட்டி வணிகத்தில் ஈடுபடும் உறுப்பினர்களின் பங்குகளை வாங்க அதிகாரம் அளிக்கப்பட்டது. தீர்மானத்தின் செல்லும் தன்மை குறித்து முடிவு செய்க.

தீர்வு:

இப்பிரச்சனையில் கவனிக்கத்தக்க கூறு யாதெனில் ஒரு நிறுவனத்தின் சிறுபான்மை வாதிகள் அந்நிறுவனத்திற்கு எதிராக போட்டி வணிகத்தில் ஈடுபடுவது. அதாவது ஒரு நிறுவனத்தின் பங்குதாரர்களாக இருந்து கொண்டு அந்நிறுவனத்திற்கு எதிராக போட்டி வணிகம் புரிவது. இது தவறாகும். காரணம், அச்சிறுபான்மையினர் அந்நிறுவனத்தின் வணிக இரகசியங்களை அறிந்தவர்களாக இருப்பர்; மேலும் அந்நிறுவனம் தொடர்பு கொண்டுள்ள வாடிக்கையாளர்கள், வங்கியர்கள், அதன் அலுவலர்களை அறிந்திருப்பர். எனவே அவர்கள் தாங்கள் பங்குதாரராக உள்ள நிறுவனத்தின் நலனுக்கு எதிராக செயல்படுவதாகவே இங்கு பொருளாகும். எனவே போட்டி வணிகத்தில் ஈடுபடும் சிறுபான்மை பங்குதாரர்களின் (உறுப்பினர்களின்) பங்குகளை வாங்க அதிகாரம் அளிப்பதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் செல்லத்தக்கதேயாகும்.

1. (1919) 1 Ch. 290

இப்பிரச்சனை **Sidebottom v. Kershaw Lease and Co.** [1] என்ற வழக்கின் சங்கதிளை அப்படியே பின்பற்றி அமைந்ததாகும். அதில் பிரதிவாதி நிறுவனத்தில் சிறுபான்மை யினராக உள்ள வாதிகள், அந்நிறுவனத்திற்கு எதிராக போட்டி வணிகத்தில் ஈடுபடுகின்றனர். அந்நிறுவனத்தின் இயக்குனர்கள் அதன் பெரும்பான்மை பங்குகளை வைத்திருக்கின்றனர். இந்நிலையில் அந்நிறுவனம் தனது வணிகத்திற்கு எதிராக போட்டி வணிகம் புரியும் சிறு பான்மை வாதிகளின் பங்குகளை வாங்க இயக்குனர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சிறப்பு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி தனது செயல்முறை விதிகளை திருத்துகிறது. இதை யடுத்து, இத்தீர்மானம் செல்லாது என்றும், ஏனெனில் அது நிறுவனம் முழுமைக்கும் நன்மை தரக்கூடியதல்ல என்றும் சிறுபான்மை வாதிகள் வழக்கிட்டு வாதிட்டனர்.

ஆனால் இவ் வாதத்தை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. அது தனது தீர்ப்பில் நிறு வனத்திற்கு எதிராக போட்டி வணிகத்தில் ஈடுபடும் சிறுபான்மை பங்குதாரர்களின் (வாதிகள்) வெளியேற்றுவதற்காக அவர்களது பங்குகளை வாங்க இயக்குனர்களுக்கு அதிகாரம் அளித் தது அந்நிறுவனத்திற்கு நிச்சயமாக நன்மை தரக்கூடியதாகும் என்றும், அத்தகு உறுப்பினர் கள் அந்நிறுவனத்தின் வணிக இரகசியங்களை அறியக்கூடிய முக்கிய வாய்ப்பை பெற்ற வர்கள் என்றும், இது அந்நிறுவனத்தின் அடிப்படை நலனை வெகுவாக பாதிக்கும் என்றும் கூறியது.

இங்கு சிறுபான்மையினரின் நலன் எதுவும் ஒடுக்கப்படவில்லை. மேலும் நிறுவனத் தின் தீர்மானத்தை ஓர் தவறான மேலாண்மை என்றும் கூறவியலாது. எனவே மேற்சென்ற பரிசீலனை மற்றும் வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் நிறுவனம் நிறைவேற்றிய தீர்மானம் செல்லத்தக்கது என்பதே இங்கு இறுதியான முடிவாகும்.

38. The directors of a company were authorised to make payment towards any charitable objects for any general public. Hence the directors of the company has given Rs. 2 lakhs to a trust formed for the promotion of technical and business knowlege. Discuss.

நிறுவனம் இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அறச்செயல் நோக் கத்திற்காக பொது மக்களுக்கு பண உதவி அளிக்கலாம் என்று சொல்லப்பட்டது. இயக்குநர் களும் தொழில்நுட்ப மற்றும் பொது அறிவை பெருக்குவதற்காக ஒரு பொறுப்பமைவை உருவாக்கி அதற்கு ரூ. 2 இலட்சத்தை அளித்தனர். விவாதிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வு காண நாம் **A.Lakshmanaswami Mudaliar v. Life Insurance Corporation of India**[2] என்ற வழக்கை காண வேண்டியது அவசியமாகும்.

இவ்வழக்கில், நிறுவனத்தின் பணத்தை அறம் அல்லது நன்நோக்கம் எதற்கும் அல்லது பொதுமக்கள் நலனுக்காக அல்லது பயன்தரும் நோக்கத்திற்காக பயன்படுத்த நிறுவன இயக்குனர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. இதன்படி, அவர்கள், தொழில் நுட்ப மற்றும் வியாபார அறிவை வளர்க்க முயலும் அறக்கட்டளை (Trust) ஒன்றிற்கு இரண்டு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கினர். ஆனால் அந்நிறுவனத்தின் இயக்குனர்கள் அவர்கள் விரும்பிய அறம் அல்லது பொது நல நோக்கத்திற்காக நிறுவனத்தின் பணத்தை

1. (1920) 1 Ch. 154
2. AIR 1963 SC 1185 : (1963) 33 Comp Cas 420 : (1962) 32 Comp Cas 1022

செலவளிக்க முடியாது என்றும், தங்கள் நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கு உப யோகமாகயிருக்கும் அறம் அல்லது பொதுநல நோக்கங்களுக்கு மட்டுமே செலவழிக்க முடியும் என்றும், எனவே அந்நிறுவனம் அளித்த நன்கொடை வரம்பு மீறியது (ultra vires) என்றும் நமது உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. அதாவது ஒரு நிறுவனத்தின் நோக்கத்தை மீறி, அதன் இயக்குனர்கள் தம் இச்சைப்படி செயல்பட முடியாது என்பது மேற்கண்ட வழக்கிலிருந்து நமக்கு தெளிவாகக் கூடிய ஒன்றாகும்.

இவ்வழக்கில் தீர்ப்புரைத்த மாண்பமை நீதியரசர் ஷா, "அளிக்கும் கொடைக்கும் நிறுவனத்தின் வியாபார நலனுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும்" என்று கூறினார்.

BIn Re W & M Roith Ltd.[1] என்ற ஆங்கில வழக்கொன்றில் நிறுவன நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய ஆய்வறிவை வளர்ப்பதற்காக அளிக்கப்படும் கொடை, அதுபோல் நிறுவனப் பணியில் சேரும் நபர்களை ஊக்கப்படுத்த நிறுவனத்தின் மேனாள் பணியாளர்களின் விதவைகளுக்கு அளிக்கும் தொகை ஆகியன செல்லத்தக்கதே என்றும், அது நிறுவன நோக்கங்களின் வரம்பிற்கு உட்பட்டது (intra vires) என்றும் கருத்துரைக்கப் பட்டது.

எனினும் இங்கு 2013–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட புதிய நிறுவனங்கள் சட்டத்தின் தொடர்புடைய வகைமுறைகளையும் இங்கு காண வேண்டியது அவசியமாகும். இதன் **பிரிவு 181-இன்படி** நிறுவனமொன்றின் இயக்குனரவையானது நல்லெண்ணத்துடன் கூடிய அறப் பணி நிதி மற்றும் வேறு நிதிகளுக்கு (bonafide charitable and other funds) தொகை கொடுக்கலாம் என்று கூறுகிறது. அதாவது நிறுவனத்தின் வியாபாரத்திற்கோ, அதன் பணியாளர்களின் நலனுக்கோ நேரடியாகத் தொடர்பில்லாத அறப்பணி நிதி மற்றும் வேறு நிதிகளுக்கு ஒரு நிறுவனத்தின் இயக்குனரவை நன்கொடையளிக்கலாம். ஆனால் நிதி யாண்டு ஒன்றில் இவ்வாறு அளிக்கப்படும் தொகையின் மொத்தமானது அந்நிறுவனத்தின் முந்தைய மூன்று நிதியாண்டுகளின் சராசரி நிகர இலாபங்களில் அய்ந்து சதவீதத்திற்கு மேல் சென்றால், அதற்கு நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் முன்னதாக ஒப்புதல் பெறப்பட வேண்டும். இப்பிரிவில் கூறப்பட்டுள்ள "வேறு நிதிகள்" (other funds) என்ற சொற்கள், நிறுவனத்தால் நிறைவேற்றப்படும் சிறப்புத் தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட எந்த வகையான நிதிக்கும் நன்கொடையளிக்க வகை செய்வதாகும்.

முடிவாக மேற்படி பிரச்சனையில் நிறுவனத்தின் இயக்குனர்கள் தொழில் நுட்ப மற்றும் வியாபார அறிவை வளர்க்க முயலும் அறக்கட்டளை (Trust) ஒன்றிற்கு இரண்டு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியது செல்லத்தக்கது என்பதே இங்கு தீர்வாகும்.

39. A company's memorandum stated that it was formed for working a Brazil patent which would be granted for manufacturing sugar from Beetroot but intended patent was never granted. Hence the company purchased French patent and started the manufacturing process. Discuss.

ஒரு நிறுவனத்தின் அமைப்புமுறை ஏடு பிரேசில் நாட்டு காப்புரிமை பெற்று பீட்ரூட்டில் இருந்து சர்க்கரை தயாரிக்க இருப்பதாக கூறப்பட்டது. அவ்வாறு நினைத்திருந்த காப்புரிமை வழங்கப்படவே இல்லை. எனவே பிரான்ஸ் நாட்டின் காப்புரிமையினைப் பெற்று

1. (1967) 1 All ER 427

சர்க்கரை தயாரிக்க ஆரம்பித்தது. விவாதிக்க.

தீர்வு:

இப்பிரச்சனை **In Re German Date Coffee Co.**[1] என்ற வழக்கின் பொருண்மைகளை பின்பற்றி அமைந்ததாகும். இவ்வழக்கின்படி, ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில், அந்நிறுவனம் ஜெர்மன் நாட்டு காப்புரிமை பெற்று பேரிச்சம் பழத்திலிருந்து காபி தயாரிக்கும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவ்வாறு நினைத்திருந்த ஜெர்மன் நாட்டு காப்புரிமை வழங்கப்படவே இல்லை. எனவே அந்நிறுவனம் சூடான் நாட்டு காப்புரிமையைப் பெற்று காபி தயாரிக்க ஆரம்பித்தது.

இந்நிலையில் அந்நிறுவனம் எந்த முதன்மை நோக்கத்திற்காக உருவாக்கப் பட்டதோ அந்நோக்கம் ஈடேறாமல் போய்விட்டது என்றும், எனவே அந்நிறுவனத்தை கலைக்க ஆணையிட வேண்டும் என்றும் கூறி அதன் பங்குதாரர்கள் இருவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், அந்நிறுவனத்தின் உண்மையான நோக்கம், ஜெர்மன் நாட்டு காப்புரிமையின் கீழ் மாற்றுவழியில் காபி தயாரிப்பது என்றும், ஆனால் அது சாத்தியமாகாமல் போய்விட்டது என்றும், எனவே அந்நிறுவனத்தை கலைப்பதே நீதியும் நேர்மையுமானதாகும் என்றும் கூறியது.

நமது மேற்படி பிரச்சனையிலும் பிரேசில் நாட்டு காப்புரிமையைப் பெற்று பீட்ரூட்டில் இருந்து சர்க்கரை தயாரிப்பது என்பது அந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். ஆனால் பிரேசில் நாட்டு காப்புரிமை கிடைக்கவில்லை. எனவே பிரான்ஸ் நாட்டு காப்புரிமையைப் பெற்று சர்க்கரை தயாரிப்பது என்பது அமைப்பு முறையேட்டின் நோக்கத்தை மீறியதாகும். எனவே வரம்பு மீறல் கோட்பாட்டின்படி இது செல்லாது. அமைப்பு முறையேட்டில் கூறப்பட்ட முதன்மை நோக்கமே நடைமுறைச் சாத்தியமில்லாது போய்விட்ட நிலையில், அந்நிறுவனத்தை கலைக்க ஆணையிடுவதே சரியான தீர்வாகும்.

40. The promoters of a company, before its incorporation enter into an agreement with A to buy 100 Acres of land on behalf of the company. After incorporation, the company refuses to buy the said land. Discuss.

ஒரு நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள் நிறுவனத்தின் சார்பாக 100 ஏக்கர் நிலம் வாங்குவதற்காக அ என்பவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர். நிறுவனம் உருவாக்கப்பட்ட பிறகு மேற்கண்ட நிலங்களை வாங்க அந்நிறுவனம் மறுக்கிறது. விவாதிக்க.

தீர்வு:

பொதுவாக ஒரு நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள் பதிவு செய்யப்படவிருக்கும் நிறுவனத்தின் சார்பில் சொத்துக்களை வாங்கவோ அல்லது சேவைகள் அல்லது உரிமை களைப் பெறவோ ஒப்பந்தங்கள் செய்து கொள்வதுண்டு. இவ்வகை ஒப்பந்தங்கள் பூர்வாங்க ஒப்பந்தங்கள் (Preliminary Contracts) அல்லது பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்கள் (Pre-incorporation Contracts) என்றழைக்கப்படும்.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், நிறுவனம் தோன்றுவதற்கு முன் அதன் தோற்றுவிப்பாளர்களால் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள், நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது. ஒப்பந் தங்களின் நலனை நிறுவனம் பெற்றாலும், பலனை இவர்கள் தர வேண்டிய பொறுப்புக்குள்ளா

1. (1882) 2 Ch D, 169

கிறார்கள். ஏனெனில், பதிவுக்கு முன்னால், ஒரு நிறுவனம், ஒப்பந்தம் செய்து கொள்ளும் சட்டத் தகுதியற்றது **(non-entity)**. எனவே, நிறுவனத்திற்காக செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கு தோற்றுவிப்பாளர்களே பொறுப்புடையவர்கள்.

அதே நேரத்தில் பதிவுக்கு முந்தைய ஒப்பந்தங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனம் வழக்கிட முடியுமா என்ற ஒரு வினாவும் இங்கு எழுகிறது. இதற்கு பதில் "முடியாது" என்பதுதான். அதாவது, ஒரு நிறுவனம் பதிவுக்கு முந்தைய ஒப்பந்தத்தின் மீது வழக்கிட முடியாது. மேலும் அதனடிப்படையில் நலன் எதையும் கோர முடியாது. அதுபோல் அத்தகு ஒரு ஒப்பந்தத்தை ஏற்புறுதி செய்யவும் முடியாது. பதிவாகாத அதாவது சட்டப்படி இல்லாத ஒரு நிறுவனத்தின் சார்பாக ஒருவர் ஒப்பந்தம் செய்து கொண்டால், அதற்கு அவரே தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவர் ஆவார்.

எனினும், ஒரு நிறுவனம் முன்னதாக செய்து கொள்ளப்பட்ட பூர்வாங்க ஒப்பந்தம் ஒன்றின் நிபந்தனைகளின் அடிப்படையில், அது பதிவான பிறகு, மற்றொரு புதிய ஒப்பந்தத்தை செய்து கொண்டால், அந்த பூர்வாங்க ஒப்பந்தத்தில் நிறுவனத்திற்காக யார் (இங்கு தோற்று விப்பாளர்கள் அல்லது முகவர்கள் என எடுத்துக் கொள்ளலாம்) ஈடுபட்டார்களோ அவர்களது பொறுப்பு மறைந்துவிடும். அப்புதிய ஒப்பந்தத்திற்கு நிறுவனமே பொறுப்புடையதாகிவிடும்.

தோற்றுவிப்பாளர்களுக்கு சில பொறுப்புகளை நிறுவனச் சட்டமும், வழக்கு வழி தீர்ப்புகளும் விதிக்கின்றன. அந்த வகையில் தொடங்கும் நிறுவனத்தின் சார்பில் பிறருடன் தோற்றுவிப்பாளர் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களுக்கு அவரே தனிப்பட்ட முறையில் பொறுப் புடையவர். ஒப்பந்தம் செய்து கொண்ட நபர்களின் இசைவின் பேரில், தோற்றுவிப்பாளரின் பொறுப்பை நிறுவனம் ஏற்றுக் கொள்ளும் வரையில், அவரது பொறுப்பு நீடிக்கும்.

மேற்சென்ற விவாதங்களின் அடிப்படையில் நமது மேற்படி பிரச்சனையை ஆய்வு செய்தால், சம்பந்தப்பட்ட நிறுவனம் உருவாக்கப்படுவதற்கு முன் அதன் தோற்றுவிப்பாளர்கள் நிறுவனத்தின் சார்பாக 100 ஏக்கர் நிலம் வாங்குவதற்காக அ என்பவருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு **அவர்களே தனிப்பட்ட முறையில் பொறுப்பாவர்.** காரணம், நிறுவனம் உரு வாக்கப்பட்ட பிறகு அது அந்நிலங்களை வாங்க மறுக்கிறது. அதே சமயம் அந்நிறுவனம் தனது உருவாக்கத்திற்குப் பின்னிட்டு அந்த ஒப்பந்தத்தை ஏற்புறுதி செய்தால், அதன் நன்மை தீமை களுக்கு அதுவே பொறுப்பாகும் என்பதே இங்கு தீர்வாகும்.

41. A a shareholder after appointing B as his proxy to attend a meeting at the company AGM. but A himself attended the AGM meeting and voted on a particular resolution. Thereafter B claims to excercise his vote. Examine the claims of B.

அ என்ற பங்குரிமையர் நிறுவனத்தின் AGM கூட்டத்தில் பங்கு கொள்ள ஆ என்பவரை நியமனம் செய்த பிறகு அ என்பவரே அக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஒரு தீர் மானத்தின் மீது வாக்களித்தார். அதன் பிறகு ஆ என்பவர் தனது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று கோருகிறார். ஆ–வின் கோரிக்கையினை ஆராய்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனை மாற்றாள் நியமனம் தொடர்பானது. அதற்குரிய விதிமுறைகளை 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 105–வது பிரிவு விளக்குகின்றது. அவற்றை நாம் ஏற்கனவே இந்நூலின் 326–ஆம் பக்கத்தில் கண்டுள்ளோம்.

அந்த வகையில் இப்பிரச்சனை மாற்றாள் நியமனத்தின் இரத்து தொடர்புடைய

தாகும். கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க செய்யப்படும் மாற்றாள் நியமனமானது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் செயல்முறை விதிகளுக்கு உட்பட்டு இரத்து செய்யப்படத்தக்க தாகும். ஆனால் இவ்வாறு இரத்து செய்வதற்குரிய தகவலை சம்பந்தப்பட்ட கூட்டம் தொடங்கு வதற்கு முன்னதாக நிறுவனத்தின் அலுவலகத்திற்கு தெரிவித்துவிட வேண்டும்.

K.P.Chackocham v. Federal Bank[1] என்ற வழக்கில் நிறுவனத்தின் கூட்டம் தொடங்கிய பிறகு மாற்றாள் நியமன இரத்திற்கான தகவல் பெறப்பட்டது. இதற்கிடை யில் அம்மாற்றாள் வாக்களித்துவிட்டிருந்தார். கூட்டம் தொடங்கிய பிறகு பெறப்பட்ட மாற்றாள் நியமன இரத்து செல்லாது என்றும், மாற்றாள் அளித்த வாக்கு கணக்கில் சேர்த்துக் கொள்ளப் படாது என்றும் கூறப்பட்டது.

ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் மாற்றாள் நியமனத்தை இரத்து தொடர்பாக வகைமுறை ஏதும் இல்லாத நிலையில், மாற்றாள் நியமனத்தை இரத்து செய்வதற் கான அதிகாரம் மிகவும் பரந்தது ஆகும். இறுதி வாக்கெடுப்பு நடப்பதற்கு முன் எந்த சமயத்திலும் மாற்றாள் நியமனத்தை இரத்து செய்யலாம் என்று **Narain Chettiar v. Kaleeswar Mills** [2] என்ற வழக்கில் கருத்துரைக்கப்பட்டது.

நமது மேற்படி பிரச்சனையில் அ என்ற பங்குரிமையர் (பங்குதாரர்) நிறுவனத்தின் ஆண்டு பொதுக் கூட்டத்தில் பங்கு கொள்ள ஆ என்ற மாற்றாளை நியமனம் செய்திருந்தார். பின்னிட்டு அவ்வாறு நியமனம் செய்த அ என்ற பங்குரிமையரே கூட்டத்தில் நேர்முகமாக கலந்து கொண்டு ஒரு தீர்மானத்தின் மீது தனது வாக்கை அளித்துவிட்டார். எனவே இங்கு அவர் நியமனம் செய்த மாற்றாள் நியமனம் தானாகவே இரத்தாகிவிட்டது. இந்நிலையில் ஆ என்ற மாற்றாள் தனது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று கோருவது செல்லாது என்பதே தீர்வாகும். ஆ–வின் கோரிக்கை நிராகரிக்கப்படத்தக்கதாகும்.

42. X applied by shares in a company. The application was accepted and the letter of allotment was sent to the company's agent to deliver in person to X. Before the letter was delivered to X, withdraw his application. Discuss the allotment of shares.

ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்க எக்ஸ் என்பவர் விண்ணப்பித்தார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒதுக்கீட்டு கடிதத்தினை எக்ஸ்–இடம் நேரடியாக கொடுக்க நிறுவனத் தின் முகவரிடம் கொடுத்தனுப்பப்பட்டது. அக்கடிதம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக எக்ஸ் தனது விண்ணப்பத்தினை திரும்பப் பெற்றுக் கொள்கிறார். பங்குகள் ஒதுக்கீட்டினைப் பற்றி விவாதிக்க.

தீர்வு:

பங்குகளை ஒதுக்கீடு செய்வது தொடர்பான விதிகளுக்கு இந்திய ஒப்பந்தச் சட்டத் தின் வகைமுறைகள் நன்கு பொருந்துவதாகும். அதாவது ஒப்பந்தச் சட்டத்தின் அடிப்படைக் கூறுகளான முனைவு (Offer) மற்றும் முனைவேற்பு (acceptance) தொடர்பான கோட் பாடுகள், பங்குகளைக் கோரி விண்ணப்பித்தலுக்கும், அதன் பேரில் பங்குகளை ஒதுக்கீடு செய்தலுக்கும் பொருந்துவதாகும். அந்த வகையில் பங்குகளை கோரி விண்ணப்பம் செய்பவர் அதற்காக முனைவு செய்வதாக பொருளாகும். அவரது விண்ணப்பதை ஏற்று அவருக்கு அந்நிறுவனம் பங்குகளை ஒதுக்கீடு செய்தால், அவரது முனைவு நிறுவனத்தால் ஏற்றுக்

1. (1989) 66 Comp Cas 953 (Ker)
2. AIR 1952 Mad. 515

கொள்ளப்பட்டதாகப் பொருளாகும். இதைத் தொடர்ந்து பங்கு ஒதுக்கீடானது ஒரு செல்லத் தக்க மற்றும் கட்டுப்படுத்தத்தக்க ஒப்பந்தமாகிவிடும். எனவே பங்கு ஒதுக்கீடானது அறிவிப்பு செய்யப்பட வேண்டும் (Allotment must be communicated).

அதாவது, பங்கு ஒதுக்கியது குறித்து, நிறுவனம் பங்கு ஒதுக்கப்பட்டவருக்கு தகவல் அளிக்க வேண்டும். இது மிகவும் கட்டாயமான ஒரு விதியாகும். இத்தகவலை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். சரியான முகவரியிட்டு, உரிய முத்திரை ஒட்டி அனுப்பப்பட்ட ஒதுக்கீட்டுக் கடிதம் சென்று சேர்வதில் காலதாமதம் ஏற்பட்டாலும் அல்லது செல்லும் வழியில் அக்கடிதமே தொலைந்து போய்விட்டாலும், போதுமான முறையில் ஒதுக்கீடு அறிவிப்பு செய்யப்பட்டுவிட்டதாகவே கருதப்படும்.

Household Fire and Carriage Accident Insurance Co. v. Grant[1] என்ற வழக்கில், கிராண்ட் எனும் பெயருடைய பிரதிவாதி, பங்குகள் பெற வேண்டி வாதி நிறுவனத்திற்கு விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பம் தபாலில் அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து, பங்கு ஒதுக்கீட்டுக் கடிதமும் அனுப்பப்பட்டது. ஆனால் அக்கடிதம் பிரதிவாதியை சென்றடையவே இல்லை. எனினும் அவர் வாதி நிறுவனத்தின் ஒரு பங்குதாரரே என்றும், ஒரு பங்குதாரருக்குரிய பொறுப்புகளை உடையவர் என்றும் தீர்ப்புரைக்கப்பட்டது.

அதே நேரத்தில் பங்குகள் பெறுவதற்கான முனைவையும் ஒதுக்கீட்டையும் திரும்பப் பெறுவது [(Revocation of Application (offer) and Allotment (acceptance)] தொடர்பான சட்ட நிலைப்பாட்டையும் நாம் இங்கு ஆராய வேண்டியுள்ளது. அதாவது, ஒருவர் பங்குகள் பெறுவதற்கான முனைவை (அதாவது, விண்ணப்பத்தை) அதன் ஏற்பு அறிவிக்கப் படுவதற்கு முன்பு எந்த நேரத்திலும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். நிறுவனமும் பங்கு ஒதுக் கீட்டை அதன் அறிவிப்பு முடிவடைவதற்கு முன்பு எந்த நேரத்திலும் திரும்பப் பெற்றுக் கொள்ள லாம்.

இனி நமது மேற்படி பிரச்சனைக்கு வருவோம். அதில் ஒரு நிறுவனத்தின் பங்கு களை வாங்க எக்ஸ் என்பவர் விண்ணப்பித்தார். அதாவது பங்குகளை வாங்க முனைவு செய் தார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒதுக்கீட்டு கடிதத்தினை எக்ஸ்–இடம் நேரடியாக கொடுக்க நிறுவனத்தின் முகவரிடம் கொடுத்தனுப்பப்பட்டது. ஆனால் இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், அக்கடிதம் நிறுவனத்தின் முகவரிடம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக எக்ஸ் தனது விண்ணப்பத்தினை திரும்பப் பெற்றுக் கொள்கிறார். எனவே அவருக்கு பங்கு ஒதுக் கியது செல்லாது. ஒருக்கால் நிறுவனத்தின் பங்கு ஒதுக்கீட்டு கடிதமானது முகவரிடம் கொடுக் கப்பட்ட பிறகு, எக்ஸ் தனது விண்ணப்பத்தை திரும்ப பெற்றுக் கொண்டிருந்தால், அவருக்கு ஒதுக்கப்பட்ட பங்குகள் செல்லத்தக்கதாகும். எக்ஸ் அந்நிறுவனத்தின் பங்குதாரராகிவிடு வார். மேலும் அவருக்கு பங்குதாரருக்குரிய பொறுப்புகள் வந்துவிடும். இங்கு ஒதுக்கீட்டு கடிதத்தை எக்ஸ்–யிடம் நேரடியாகக் கொடுக்க முகவரிடம் கொடுத்தனுப்புவது என்பது அக்கடிதத்தை தபாலில் சேர்ப்பதற்கு ஒப்பாகும்.

43. The memorandum of association of a company was signed by five adult persons and the guardians of two minors. The guardians made separate signature for each of the minors. The company was registered. Discuss the validity of its registration.

நிறுவனத்தின் அமைப்புமுறை ஏட்டில் 5 வயதடைந்த நபர்களும் 2 இளவர்களின்

1. (1879) 4 Ex Div 216 : 48 LJ Ex 597 : 41 LT 298 : 27 WR 858

சார்பாக அவர்களின் பாதுகாவலர்களும் தனித்தனியே கையொப்பமிட்டனர். நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. நிறுவனப் பதிவின் செல்லும் தன்மை குறித்து விவாதிக்க.

தீர்வு:

இப்பிரச்சனை **Moosa Goolam Ariff v. Ebrahim Goolam Ariff**[1] என்ற வழக்கின் பொருண்மைகளை பின்பற்றி அமைந்ததாகும்.

இவ்வழக்கில் ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில், உரிய வயதடைந்த நபர்கள் இருவரும், மேலும் அச்சமயத்தில் இளவர்களாக (minors) இருந்த அய்ந்து பேர்களின் சார்பாக அவர்களது காப்பாளர் (guardian) ஒருவரும் கையொப்பம் செய்தனர். இவ்வாறு கையொப்பம் செய்கையில், மேற்கண்ட அய்ந்து இளவர்களில் ஒவ்வொருவரின் சார்பாகவும் அக்காப்பாளர், தனித்தனியாக கையொப்பம் செய்தார். எனினும் பதிவாளர் மேற்படி நிறுவனத்தை பதிவு செய்து கொண்டு, அதற்குரிய பதிவுச் சான்றிதழை வழங்கிவிட்டார். இச் சான்றிதழை இல்லாநிலையது என்று விளம்ப வேண்டுமென வாதி நீதிமன்றத்தில் வழக் கிட்டார்.

இங்கு அமைப்பு முறையேட்டில் கையொப்பம் செய்தவர்களில் அய்வர், இளவர்கள். எனவே அவர்களை ஒரு நிறுவனத்தின் ஆதரவாளர்களாகக் கொள்ள முடியாது. இதனால் ஒரு பொது நிறுவனத்தை உருவாக்குவதற்குத் தேவையான ஏழு நபர்கள் இங்கு சேரவில்லை. எனவே, நிறுவனச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் சரிவர பூர்த்தி செய்யப்பட வில்லை; பதிவாளர் அந்நிறுவனத்திற்கு பதிவுச் சான்றிதழை வழங்கியிருத்தல் கூடாது என்று **நீதிப்பெருமகனார் மெக்னாட்டன் (Lord Macnaghten)** கூறினார். ஆனால் அவரே தொடர்ந்து, ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழானது, அந்நிறுவனம் முறைப் படி பதிவு செய்யப்பட்டது என்பதற்கு அறுதியாக சான்று கூறும் ஒரு ஆவணமாகும் என்று கூறினார்.

மேற்படி பிரச்சனையில் 5 வயதடைந்த நபர்கள் மற்றும் 2 இளவர்கள் உள்ளனர். இங்கு மேலெழுந்தவாரியாக பார்த்தால், ஒரு பொது நிறுவனத்தை உருவாக்குவதற்குத் தேவை யான 7 நபர்கள் உள்ளனர். ஆனால் அவர்களில் இருவர் இளவர்கள். அவர்கள் இருவருக் காகவும் முறையே அவர்களது காப்பாளர்கள் இருவரும் அமைப்பு முறையேட்டில் தனித் தனியாக கையொப்பம் செய்கிறார்கள். இங்கு மொத்தம் ஏழு நபர்கள் உள்ளனர் என்ற அடிப் படையில் அந்நிறுவனத்தை பதிவாளர் பதிவு செய்துவிடுகிறார். ஆனால் இந்திய ஒப்பந்தச் சட்டப்படி இளவர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியற்றவர்கள். எனவே அவர்கள் ஒரு நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் கையொப்பமிட்டு, அதன் ஆதரவாளர்களாக ஆக முடி யாது. மேலும் அவர்கள் தங்கள் காப்பாளர் மூலமாகக் கூட ஆதரவாளர்களாக ஆக முடியாது. எனவே இங்கு நிறுவனத்தை பதிவு செய்தது செல்லாத ஒன்றாகும் என்பதே தீர்வு.

-o0o-

வாழ்க தமிழ்!

வளர்க சட்டத் தமிழ்!!

1. ILR (1913) 40 Cal. 1 (P.C.)

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக வினாத்தாள்கள்

University Question Papers

புதிய பாடத்திட்டப்படி

மூன்றாண்டு சட்டக்கல்வி

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, NOVEMBER 2018

(Three Year Regular Course)
Second Year - Third Semester

COMPANY LAW

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What are the steps to be taken for the formation of a company? Explain the effects of the issue of a certificate of incorporation.
ஒரு நிறுமம் நிறுவுவதற்குச் செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் யாவை? பதிவுச் சான்றிதழ்

வழங்கப்படுவதின் விளைவுகளை விளக்கவும்.

2. Is pre-incorporation contracts binding on the company? What are the remedies available to the party to such contracts?
நிறுமம் பதிவு செய்வதற்கு முன்னால் செய்யப்பட்ட ஒப்பந்தம், நிறுமத்தைக் கட்டுப்படுத்துமா? அவ்வகை ஒப்பந்தத்தில் தரப்பினருக்கானத் தீர்வழிகள் யாவை?

3. Explain the powers and duties of company's liquidator.
நிறுவன கலைப்பாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. "Directors occupy a pivotal position in the structure of a company" - Explain.
"ஒரு நிறுமத்தின் மையமாக இயக்குநர்கள் அமைந்துள்ளனர்" – விளக்குக.

5. "An auditor is a watch dog but not a blood hound" - Comment and explain the powers and duties of an auditor.
"தணிக்கையாளர் ஒரு காவல் நாய்தானேயொழிய இரத்த வெறி பிடித்த வேட்டை நாயல்ல" எனும் கூற்றை விமர்சித்து தணிக்கையாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்குக.

6. Define 'share'. What are the different types of shares that may be issued by a company? What are the rules relating to allotment of shares?
'பங்குகள்' என்பதை வரையறு. ஒரு நிறுவனம் வெளியிடுகின்ற பலதரப்பட்ட பங்குகள் யாவை? பங்குகள் ஒதுக்கீட்டிற்கான விதிகள் யாவை?

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Royal British Bank Vs. Turquand
இராயல் பிரிட்டிஷ் பேங்க் எதிர் டர்குவாண்ட்

(b) Kinds of Meetings
கூட்டங்களின் வகைகள்

(c) Debentures
கடனீட்டுப்பத்திரங்கள்

(d) Preference shares
முன்னுரிமைப்பங்குகள்

(e) Constructive Notice
கொள்நிலை அறிவிப்பு

(f) Floating charge
படரும் பொறுப்பு

(g) Government Company

அரசு நிறுமம்

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. Sevan was appointed as the managing director of the plaintiff company on the condition that, "he shall not at any time while he shall hold the office of Managing Director (or) afterwards solicit (or) entice away the customers of the company". His employment was determined under an agreement. Shortly afterwards he started business in the name of a company which solicited the plaintiff's customers. he was sued for breach of agreement. Decide.

   இவ்வழக்கில் செல்வன் என்பவர் பிரதிவாதி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவர் அந்த நிறுவனத்தில் பொறுப்பில் இருக்கும் பொழுது அல்லது விலகிய பிறகு நிறுவனத்தின் வாடிக்கையாளர்களைத் தன்னிடம் வரும்படி தூண்டு வதில்லை என்று மேற்படி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆனால் அவர் நிறுவனத்தை விட்டு விலகிய பிறகு வேறொரு நிறுவனம் நிறுவி அதனுடன் தன் முந்தைய நிறுவனத்தின் வாடிக்கையாளர்களை தொடர்பு கொள்ளுமாறு தூண்டினார். எனவே ஒப்பந்தத்தை மீறியதாகக் கூறி அவர் மீது வழக்குத் தொடரப் பட்டது. முடிவு செய்க.

9. Notices were posted on October 17, for a meeting to be held on November 7. The notice was held to be short by one day, as in computing the intervel of twenty one days, the date of posting and date of meeting should be excluded. Is the meeting a valid one?

   கூட்டம் நடைபெறும் தேதி நவம்பர் 7 என கூட்டத்திற்கான அறிவிப்பு அக்டோபர் மாதம் 17–ஆம் தேதியன்று தபாலில் அனுப்பப்பட்டது. அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள் மற்றும் கூட்டம் நடைபெறும் நாள் இவற்றைத்தவிர்த்து கணக்கிட வேண்டும் என்பதால் இருபத்தியொரு நாள் இடைவெளிக்கு ஒரு நாள் முன்பாக கூட்டம் நடைபெற வேண்டியுள் ளது. இந்தக்கூட்டம் செல்லும் நிலையதா?

10. X company pledges to Y company, on mortgage of assets. The procedure laid down in the Articles for such transaction is not complied with. The directors of the two companies are the same. is the mortgage valid?

    X எனும் நிறுவனம் தன் சொத்துக்களை Y நிறுவனத்திற்கு அடைமானத்தில் விட்டது. மேற்கண்ட பரிமாற்றம் குறித்து நடைமுறைகள் எதுவும் அதன் செயல்முறைவிதியின்படி மேற்கொள்ளப்பட இல்லை. மேற்கண்ட இரு நிறுவனத்திற்கும் ஒரே இயக்குனர்கள்தான். மேற்கண்ட அடைமானம் செல்லுமா?

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, MAY 2019

(Three Year Regular Course)

Second Year - Third Semester

COMPANY LAW

Time : 2 1/2 hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What are the compulsory clauses in a Memorandum of Association? How can a company alter its memorandum?
அமைப்பு முறையேட்டின் இன்றியமையா முக்கிய கூறுகள் யாவை? எவ்வாறு ஒரு நிறுவனம் அதன் அமைப்பு முறையேட்டினை மாற்றம் செய்ய இயலும்?

2. What is Prospectus? What are its kinds?
திட்ட அறிவிப்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

3. Briefly examine the establishment of Securities and Exchange Board of India and its powers and functions.
இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் பற்றி சுருக்கமாக ஆய்வு செய்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the various modes of winding up of a company.
ஒரு நிறுவனம் கலைக்கப்படும் பல்வேறு முறைகளை விளக்கவும்.

5. Discuss the circumstances in which and the process by which a company can reduce its share capital.
ஒரு நிறுவனம் தன் பங்கு மூலதனத்தை எந்த சூழ்நிலையில் எந்த முறையில் குறைக்கலாம் என்பதை விவாதிக்க.

6. What do you mean by debentures? Explain the various kinds of debentures and the law relating to debenture.
கடனீட்டுப்பத்திரம் என்றால் என்ன? இதன் வகைகள் மற்றும் இது குறித்தான விதிகளை விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

   (a) Share warrant
   பங்குப்பற்றாணை

   (b) Golden rule

பொன் விதி

(c) Alteration of Article
செயல்முறை விதிகளில் மாற்றம்

(d) Promoters
துவக்குநர்கள்

(e) Proxy
மாற்றாள்

(f) Annual Report
ஆண்டறிக்கை

(g) Transfer of shares
பங்கு மாற்றம்

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. X, a director of a company, fails to attend three consequtive meetings of the Board without obtaining leave of absence from the Board. Should x vacate his office?

ஒரு நிறுவனத்தில் X என்ற இயக்குநர் தான் வராமல் இருப்பதற்கு எவ்வித விடுப்பினையும் குழுமத்திடம் இருந்து பெறாமல் வரிசையாக மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளத்தவறுகிறார். X தனது பதவியை இழப்பாரா?

9. An application was made by a father as a guardian of his minor daughter for certain shares. The company registered the shares in the name of the daughter describing as a minor. The company went into liquidation and the name of the father was placed on the list of contributories. Is he (father) liable? Decide.

இளவர் மகளுக்காக தந்தை ஒரு நிறுமத்தில் சில பங்குகளுக்கு விண்ணப்பித்திருந்தார். பங்குகளை மகள் பெயரில் இளவர் என்று குறித்து அந்த நிறுமம் பதிவு செய்தது. பின்பு அந்த நிறுமம் கலைக்கப்பட்டதும் தந்தையினுடைய பெயர் கடப்பாட்டாளர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. தந்தை பொறுப்படைவிற்குள்ளாகுவாரா? முடிவு செய்க.

10. A company created a floating charge by issuing bebentures. Three months interest become due and the debenture holders did not take any steps. The company made a mortgage of a specific part of its property. Did the debenture holders have priority over the mortgage?

கடனீட்டு ஆவணங்கள் வழங்கி தன் சொத்தின் மீது படரும் பற்றை ஒரு நிறுமம் உருவாக்கியது. மூன்று மாத வட்டி நிலுவை இருந்தும் கடனீட்டு ஆவணம் பெற்றவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்குள் சொத்தின் ஒரு பகுதியை நிறுமம் அடைமானம் வைத்தது. கடனீட்டு ஆவணம் பெற்றவர்களுக்கு இச்சொத்தின் மீது முன்னுரிமை உள்ளதா?

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, NOVEMBER 2019

(Three Year Regular Course)

Second Year - Third Semester

COMPANY LAW

Time : 2 1/2 hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Memorandum of Association is the constitution of the companies - Decide. How and to what extent it protects the outsiders?

   நிறுமங்களின் அமைப்புமுறைப்பதிவேடு அந்நிறுமத்தின் அமைப்பு விதித்தொகுதி ஆகும். விவரிக்க மற்றும் இது எந்த அளவிற்கு வெளியாட்களைப் பாதுகாக்கும்?

2. Define Shares and state the various types of shares. Explain the circumstances in which shares can be forfeited.

   பங்குகள் என்பதனை வரையறை செய்து பல்வேறு வகையான பங்குகளைக் குறிப்பிடவும். எந்தெந்த சூழ்நிலைகளில் பங்குகள் பறிமுதல் செய்யப்படுகிறது என்பதை விளக்குக.

3. Explain the Doctrine of "Indoor Management" and point out the exceptions if any.

   உட்புற மேலாண்மைக் கோட்பாடு என்பதனை விளக்கி, இவ்விதிக்கான விதிவிலக்குகளை குறிப்பிடுக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Briefly explain the salient features of the Companies Act 2013.

   2013–ம் ஆண்டு நிறும சட்டத்தின் சிறப்பு இயல்புகளை சுருக்கமாக விளக்குக.

5. What is meant by Debentures and state the characteristic features of a debenture? What are the remedies available to debenture holder?

   கடனீட்டு பத்திரம் என்றால் என்ன? ஒரு கடனீட்டுப்பத்திரத்தின் தனிச்சிறப்பு பண்புகளைக் கூறுக. கடனீட்டு பத்திர ஆவணதாரர்களுக்கு உண்டான தீர்வழிகள் யாவை?

6. Explain the different kinds of meetings as provided under the Companies Act and point out when and how they are held.

   நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள கூட்டங்களில் பல்வேறு வகைகளை

விளக்கி, அவை எப்பொழுது மற்றும் எவ்வாறு நடத்தப்படலாம் என்பதைக் கூறுக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

   (a) Company and Hindu Joint Family firm
   நிறுவனம் மற்றும் இந்து கூட்டுக்குடும்ப நிறுமம்

   (b) Share and Stock
   பங்கு மற்றும் பங்குத்தொகுப்பு

   (c) Qualification and disqualification of Directors
   இயக்குநர்களின் தகுதியும் மற்றும் தகுதியின்மையும்

   (d) Procedure for alteration of capital clause
   மூலதனப்பகுதியை மாற்றுவதற்கான வகைமுறைகள்

   (e) Official Liquidators
   கலைப்பு அதிகாரிகள்

   (f) Balance Sheet
   இருப்புநிலைக்குறிப்பேடு

   (g) Quorum
   குறைவெண்

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The provisions of the Articles of a company authorised the company to expel a member, but it expelled a member and forfeited his shares. Is it valid?

   ஒரு நிறுவனத்தின் செய்முறை விதிகள் நிறவனத்தின் அங்கத்தினரை விலக்குவதற்கு அதிகாரம் வழங்கியது. மேற்படி அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறவனம் ஒரு அங்கத்தினரை விலக்கி அவர் பங்குகளைப் பறிமுதல் செய்தது. இது செல்லுமா?

9. A company's directors decided to make call on shares. But one of them had not been validly appointed. Can the call be enforced?

   ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் பங்கு அழைப்புக்கட்டணத்தைத் தீர்மானித்தனர். ஆனால் இயக்குநர்களில் ஒருவர் செல்தகு முறையில் நியமிக்கப்படவில்லை. இந்நோர்வில் பங்கழைப்புக்கட்டணம் செலுத்தப்பட இயலுமா?

10. An advocate on the instructions of promoters of a company prepared a memorandum and Articles of Association, paid the registration fees and got the company incorporated. Advocate claims the expenses. Discuss.

    ஒரு வழக்கறிஞர் நிறுமத்துவக்குநர்கள் அறிவுரையின்படி அமைப்பு முறை மற்றும் செயல்

முறை ஏட்டினை தயாரித்து, பதிவுக்கட்டணம் செலுத்தி நிறுமத்தை பதிவு செய்தார். வழக்கறிஞர் அதற்குரிய செலவுத்தொகையினை நிறுமத்திடம் கோருகிறார். விவாதிக்கவும்.

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, JANUARY 2021

(Three Year Regular Course)
Second Year - Third Semester

COMPANY LAW

Time : 2 1/2 hours Maximum : 7 0 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. "An Auditor is a watch dog but not a blood hound" Discuss.
"ஒரு தணிக்கையாளர் காவல் நாய் போன்றவரேயன்றி வேட்டை நாய் அல்ல" – விவாதிக்க.

2. What is the Golden Rule for framing Prospectus? Examine the legal effects of untrue statements in the prospectus?
திட்ட அறிவிப்பு தயாரிப்பு குறித்த பொன் விதி யாது? திட்ட அறிவிப்பிலுள்ள பொய்யானக் கூற்றுகளின் சட்ட விளைவுகளை ஆராய்க.

3. Explain the consequences of ultravires transactions.
வரம்பு மீறல் நடவடிக்கைகளினால் ஏற்படும் விளைவுகளை விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Define "Company" - Explain the lifting of corporate Veil.
"நிறுவனம்" என்பதை வரையறு. நிறுவனத்திரை தூக்கப்படுதல் என்ற கோட் பாட்டை விளக்குக.

5. Explain the powers of the National Company Law Tribunal to investigate into the affairs of a company.
ஒரு நிறுமத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்யும் தேசிய நிறும சட்டத்தீர்ப்பாயத்தின் அதிகாரங்களை விளக்குக.

6. Define Voluntary Winding Up and state how it differs from compulsory winding up.

தன்னார்வ கலைப்பு என்றால் என்ன? இது எவ்வாறு கட்டாயக்கலைப்பில் இருந்து மாறுபடுகிறது என்பதை விவரிக்க.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) One man company
ஒரு நபர் நிறுவனம்

(b) Prospectus
திட்ட அறிக்கை

(c) Transfer of shares and transmission of shares.
பங்குகள் மாற்றம் மற்றும் சட்ட விதி பங்கு மாறுதல்

(d) Proxy
பதிலாள்

(e) Preference Share
முன்னுரிமைப்பங்கு

(f) Divident
பங்கதாயம்

(g) Foss Vs. Harbottle
ஃபாஸ் எதிர் ஹர்பாட்டில்

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A company suffered loss due to the conduct of its Director. Shanker, a member of the company brought an action against the director to make good the losses suffered by the company. Will Shankar succeed?

ஒரு நிறும இயக்குநரின் நடத்தையால் நிறுமமானது மிகுந்த இழப்பிற்குள்ளானது. சங்கர் என்ற அந்நிறும உறுப்பினர் இயக்குநருக்கு எதிராக இழப்பை சரி செய்வதற்காக நல்லெண்ண நடவடிக்கை மேற்கொள்கிறார். சங்கர் வெற்றி பெறுவாரா?

9. The main object of a company is to manufacture cement. Whereas the board of Directors decided to go in for manufacturing solar panels and related products - Discuss.

ஒரு நிறுமத்தின் முதன்மையான நோக்கம் சிமெண்ட் உற்பத்தி செய்வது. ஆனால் இயக்குநர்கள் குழுமம் சூரியத்தகடுகள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்களை உற்பத்தி செய்ய முடிவு செய்தது. விவாதிக்க.

10. A and B were the only members of a private company. Both die in an accident. The Registrar of company wants to delete the company from the Register. Can he do so?

அ மற்றும் ஆ இருவரும் மட்டுமே ஒரு தனியார் நிறுமத்தின் உறுப்பினர்கள். அவர்கள் இருவரும் ஒரு விபத்தில் இறந்து விடுகின்றனர். நிறுமப்பதிவாளர் அந்நிறுமத்தை நிறுமப் பதிவேட்டிலிருந்து நீக்க விரும்புகிறார். அவர் அவ்வாறு செய்ய இயலுமா?

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, FEBRUARY 2022

(Three Year Regular Course)
Second Year - Third Semester

COMPANY LAW

Time : 2 1/2 hours Maximum : 7 0 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What is Articles of Association? Examine the salient features of Articles of Association and the importance of Articles of Association in the administration of company.

செயல்முறை ஏடு என்றால் என்ன? செயல்முறை ஏட்டின் சிறப்பியல்புகளையும், நிறும நிர்வாகத்தில் அவற்றின் முக்கியத்துவத்தையும் ஆராய்வக.

2. Explain the powers and functions of SEBI, (Securities and Exchange Board of India).

செபியின் (இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்) அதிகாரம் மற்றும் பணிகளை விவரிக்கவும்.

3. Who are the persons entitled to apply for the winding up of a company? Expain their respective rights.

ஒரு நிறுவனத்தை கலைப்பதற்கு விண்ணப்பம் செய்ய எந்தெந்த நபர்கள் உரிமையுடையவர்கள்? அவர்களின் முறையேயான உரிமைகளை விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the doctrine of "Indoor Management" and point out the exceptions if any.

"அகநிலை மேலாண்மைக் கோட்பாடு" என்பதனை விளக்கி இவ்விதிக்கான விதிவிலக்குகளை குறிப்பிடுக.

5. What do you mean by debentures? Explain the various kinds of debentures.

கடனீட்டுப் பத்திரம் என்றால் என்ன? இதன் வகைகளைப் பற்றி விளக்குக.

6. Examine the liability of a director for

(a) Ultra vires acts

(b) Breach of trust

பின்வருவனவற்றுள் ஒரு இயக்குநரின் கட்டுப்பாடுகளை ஆராய்க:

(அ) வரம்பு மீறிய செயல்கள்

(ஆ) பொறுப்புரிமை அமைப்பு மீறல்

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Transfer of shares
பங்கு மாற்றம்

(b) Share Warrant
பங்கு பற்றாணை

(c) Promoters.
துவக்குநர்கள்

(d) Powers of auditors
தணிக்கையாளரின் அதிகாரங்கள்

(e) Illegal association
சட்டமுரண் அமைப்பு

(f) Sweat equity shares
வியர்வைத் தகைமை பங்குகள்

(g) Effect of forged documents
போலி ஆவணங்களின் விளைவு

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A company resolved and sought confirmation for shifting its registered office from Chennai to Bhopal due to some disturbance of ex-employees. The employees are strongly objecting it. Decide.

ஒரு நிறுமம், நிறும முன்னாள் ஊழியர்களின் பிரச்சினைகள் காரணமாக தன்னுடைய பதிவு அலுவலகத்தை சென்னையில் இருந்து போபாலுக்கு மாற்றுவது என தீர்மானித்து உறுதிப்படுத்தலுக்குக் கோரியது. இம்முடிவை நிறும ஊழியர்கள் வன்மையாக எதிர்த்தனர் – தீர்மானிக்க.

9. A company's directors decided to make "call on shares" but one of them had not been validly appointed. Can the call be enforced?

ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் பங்கு அழைப்புக் கட்டணத்தைத் தீர்மானித்தனர். ஆனால் இயக்குநர்களில் ஒருவர் செல்லத்தகு முறையில் நியமிக்கப்படவில்லை. இந்நேர்வில் பங்கழைப்புக் கட்டணம் செயலுறுத்தப்படஇயலுமா?

10. 'R' a proxy of 'V' filed the proxy form in the XYZ Co.Ltd., seven days ahead of its Annual General Meeting. Whether it is valid or not.

XYZ என்ற நிறுமத்தின் ஆண்டு பொதுக் கூட்டத்திற்கு 'V' என்ற உறுப்பினருக்கு பதிலாக 'R' என்பவர் கலந்து கொள்ள பதிலாள் மனு ஏழு நாட்களுக்கு முன்பாகவே தாக்கல் செய்யப்பட்டது. அது செல்லுபடியாகுமா?

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, JUNE 2022

(Three Year Regular Course)

Second Year - Third Semester

COMPANY LAW

Time : 2 1/2 hours Maximum : 7 0 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. "The State of mind of the Directors is the State of mind of the Company" - Explain the powers and duties of Directors in the Company.

"இயக்குனர்களின் மனநிலையே நிறுவனத்தின் மனநிலையாகும்" – இயக்குனர்களுக்கு நிறுவனத்திலுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்கவும்.

2. Enumerate the kinds of Share capital and explain the principles and

restrictions as to allotment of shares.

பங்கு மூலதனத்தின் வகைகளை குறிப்பிட்டு பங்கு ஒதுக்கீட்டுக்குரிய விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை விளக்கவும்.

3. Does the Lifting of the Corporate Veil prove to be advantageous or disadvantageous to the company? Analyse.
நிறுவன திரை விலக்கல், நிறுவனத்திற்கு சாதகமானதா? பாதகமானதா? ஆராய்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. What is Insider trading? What are the penalties and adjudication under the SEBI Act (The Securities and Exchange Board of India Act, 1992)?

உள்பேர வர்த்தகம் என்றால் என்ன? செபி சட்டத்தின் (இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்) கீழ் உள்ள அபராதங்கள் மற்றும் தீர்வழிகளை குறிப்பிடவும்.

5. Differentiate Ordinary resolution from special resolution passed in company meeting.

நிறுவன கூட்டத்தில் நிறைவேற்றப்படும் பொது தீர்மானம் மற்றும் சிறப்பு தீர்மானத்தை வேறுபடுத்துக.

6. What are the contents of Prospectus and State the golden legacy role in framing the Prospectus.

திட்ட அறிவிப்பின் உட்கூறுகள் யாவை? திட்ட அறிவிப்பை உருவாக்குவதில் உள்ள தங்க மரபு விதி குறித்து விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) National Company Law Tribunal
தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம்

(b) Distinguish Company and Partnership firm.
நிறுவனம் மற்றும் கூட்டாண்மை நிறுமத்தை வேறுபடுத்துக.

(c) Pre-incorporation Contracts.
நிறுவன பதிவிற்கு முந்தைய ஒப்பந்தங்கள்.

(d) Corporate Social Responsibility.
நிறுவன சமூக பொறுப்பு

(e) Proxy.
பதிலாள் வாக்குரிமையாளர்.

(f) Floating charge.
படரும் பற்று.

(g) Royal British Bank v. Turquand.
ராயல் பிரிட்டிஷ் வங்கி எதிர் டர்குவாண்ட்

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' applied for 300 shares in a company. A clerk in the company who owned no shares executed a transfer in favour of 'A'. The company without verifying clerk's share certificate registered and issued new share certificate to 'A'. Analyse whether the share certificate of 'A' is valid.

'அ' என்பவர் ஒரு நிறுவனத்தில் 300 பங்குகளுக்கு விண்ணப்பித்தார். பங்குகள் எதுவும் இல்லாத அந்நிறுவனத்தின் கணக்காளர் 'அ'விற்கு பங்கு மாற்றம் செய்தார். கணக்காளரின் பங்கு சான்றிதழை சரிபார்க்காமல், நிறுவனமும் அம்மாற்றத்தை பதிவு செய்து 'அ'விற்கு புது பங்கு சான்றிதழை வழங்கியது. 'அ'வின் பங்கு சான்றிதழ் செல்லுமா என்று ஆராய்க.

9. The directors of the company were authorised to make payment towards any charitable or benevolent object. With shareholders' resolution, the directors paid two lakhs to a trust formed for the purpose of promoting technical and business knowledge. Is company liable? Is the payment valid? Analyse.

நிறுவனத்தின் இயக்குனர்கள் தொண்டு அல்லது கருணை சார்ந்த நோக்கத்திற்கு நிதியுதவி அளிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தனர். பங்குதாரர்களின் தீர்மானத்துடன், தொழில்நுட்பம் மற்றும் வியாபார அறிவை மேம்படுத்தும் அறக்கட்டளைக்கு, இயக்குனர்கள் இரண்டு லட்சம் நிதி வழங்கினர். இந்நிதியுதவி செல்லுபடியாகுமா? நிறுவனத்தை கட்டுபடுத்துமா? ஆராய்க.

10. The company adjourned Annual General Meeting of the year 2019 and finally conducted it on March 2020. Then the next Annual General Meeting was held on June 2021. Discuss the validity of meeting of the company. Is company liable?

நிறுவனம் 2019–இல் நடைபெற வேண்டிய ஆண்டு பொது கூட்டத்தை தள்ளிவைத்து 2020, மார்ச் மாதத்தில் நடத்தியது. பின்பு அடுத்த ஆண்டு பொது கூட்டத்தை 2021 ஜூன் மாதத்தில் நடத்தியது. கூட்டத்தின் செல்லுந்தன்மையை விளக்குக. நிறுவனம் பொறுப்பாகுமா?

ஐந்தாண்டு சட்டக்கல்வி

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.A.,B.L., DEGREE EXAMINATIONS, NOVEMBER 2015

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Briefly explain the salient features of the Companies Act, 2013.
   2013–ம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் சிறப்புகளை சுருக்கமாக விளக்குக.

2. Define the doctrine of indoor management and state the rules and exceptions of this doctrine.
   உட்புற மேலாண்மை கோட்பாட்டினை வரையறை செய்து அதன் விதிகளையும் விதிவிலக்குகளையும் குறிப்பிடுக.

3. Explain what are the remedies available in case of misrepresentation in the prospectus.
   திட்ட அறிவிக்கையில் திரித்துக் கூறப்பட்டிருந்தால் அதற்கான நிவாரணங்கள் என்ன?

4. Explain the majority powers and minority rights and state its exceptions with decided cases.
   பெரும்பான்மையினரின் அதிகாரங்களையும் சிறுபான்மையினரின் உரிமைகளையும் விளக்கி அதன் விதிவிலக்குகளை முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு குறிப்பிடுக.

5. Discuss the powers and functions of the National Company Law Tribunal.
   தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கவும்.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:
   ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Define one man company
ஒரு நபர் நிறுவனம் என்பதை வரையறு

(b) Promoters
தோற்றுவிப்பாளர்கள்

(c) Memorandum of Association
அமைப்புமுறை ஏடு

(d) Prospectus
திட்ட அறிவிக்கை

(e) Allotment of shares
பங்குகளை ஒதுக்கீடு செய்தல்

(f) Debentures
கடனீட்டுப் பத்திரங்கள்

(g) Woman directors
மகளிர் இயக்குநர்கள்

(h) Corporate Social Responsibility
வணிக நிறுவனங்களின் சமூக அக்கரை

(i) Quorum
குறைவெண் வரம்பு

(j) SEBI
செபி

PART C - (4 X 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding Two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The memorandum of association of a company was signed by five adult persons and the guardians of two minors. The guardians made separate signature for each of the minors. The company was registered. Discuss the validity of its registration.

நிறுவனத்தின் அமைப்புமுறை ஏட்டில் 5 வயதடைந்த நபர்களும் 2 இளவர்களின் சார்பாக அவர்களின் பாதுகாவலர்களும் தனித்தனியே கையொப்பமிட்டனர். நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. நிறுவனப் பதிவின் செல்லும் தன்மை குறித்து விவாதிக்க.

8. The directors of a company were authorised to make payment towards any charitable objects for any general public. Hence the directors of the company has given Rs. 2 lakhs to a trust formed for the promotion of technical and business knowlege. Discuss.

நிறுவனம் இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அறச்செயல் நோக்

கத்திற்காக பொது மக்களுக்கு பண உதவி அளிக்கலாம் என்று சொல்லப்பட்டது. இயக்குநர்களும் தொழில்நுட்ப மற்றும் பொது அறிவை பெருக்குவதற்காக ஒரு பொறுப்பமைவை உருவாக்கி அதற்கு ரூ. 2 இலட்சத்தை அளித்தனர். விவாதிக்கவும்.

9. A company's memorandum stated that it was formed for working a Brazil patent which would be granted for manufacturing sugar from Beetroot but intended patent was never granted. Hence the company purchased French patent and started the manufacturing process. Discuss.

ஒரு நிறுவனத்தின் அமைப்புமுறை ஏடு பிரேசில் நாட்டு காப்புரிமை பெற்று பீட்ரூட்டில் இருந்து சர்க்கரை தயாரிக்க இருப்பதாக கூறப்பட்டது. அவ்வாறு நினைத்திருந்த காப்புரிமை வழங்கப்படவே இல்லை. எனவே பிரான்ஸ் நாட்டின் காப்புரிமையினைப் பெற்று சர்க்கரை தயாரிக்க ஆரம்பித்தது. விவாதிக்க.

10. The promoters of a company, before its incorporation enter into an agreement with A to buy 100 Acres of land on behalf of the company. After incorporation, the company refuses to buy the said land. Discuss.

ஒரு நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள் நிறுவனத்தின் சார்பாக 100 ஏக்கர் நிலம் வாங்குவதற்காக அ என்பவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர். நிறுவனம் உருவாக்கப்பட்ட பிறகு மேற்கண்ட நிலங்களை வாங்க அந்நிறுவனம் மறுக்கிறது. விவாதிக்க.

11. A a shareholder after appointing B as his proxy to attend a meeting at the company AGM. but A himself attended the AGM meeting and voted on a particular resolution. Thereafter B claims to excercise his vote. Examine the claims of B.

அ என்ற பங்குரிமையர் நிறுவனத்தின் AGM கூட்டத்தில் பங்கு கொள்ள ஆ என் பவரை நியமனம் செய்த பிறகு அ என்பவரே அக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்தார். அதன் பிறகு ஆ என்பவர் தனது வாக் குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று கோருகிறார். ஆ–வின் கோரிக்கை யினை ஆராய்க.

12. X applied by shares in a company. The application was accepted and the letter of allotment was sent to the company's agent to deliver in person to X. Before the letter was delivered to X, withdraw his application. Discuss the allotment of shares.

ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்க எக்ஸ் என்பவர் விண்ணப்பித்தார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒதுக்கீட்டு கடிதத்தினை எக்ஸ்–இடம் நேரடியாக கொடுக்க நிறுவனத்தின் முகவரிடம் கொடுத்தனுப்பப்பட்டது. அக்கடிதம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக எக்ஸ் தனது விண்ணப்பத்தினை திரும்பப் பெற்றுக் கொள்கிறார். பங்குகள் ஒதுக்கீட்டினைப் பற்றி விவாதிக்க.

B.A.,B.L., DEGREE EXAMINATIONS, MAY 2016

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Define Company and explain the advantages and disadvantages of incorporation of a company.
   நிறுவனம் என்பதை வரையறை செய்து அதை நிறுவனமாக இணைக்கப்படுவதால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் விளக்குக.
2. Distinguish the Memorandum of Association from Articles of Association.
   அமைப்புமுறை ஏட்டினை செயல்முறை ஏட்டில் இருந்து வேறுபடுத்திக்காட்டு.
3. Explain the procedure and requisites of valid meetings.
   செல்லத்தக்க கூட்டத்தை கூட்டுவதற்கான தேவைகள் மற்றும் நடைமுறைகளைப் பற்றி விளக்குக.
4. Discuss the rules laid down in Foss Vs. Harbottle and state its exceptions if any.
   ஃபாஸ் எதிர் ஹெர்பாட்டில் என்ற வழக்கில் சொல்லப்பட்ட விதிமுறைகளை விவாதித்து அதன் விதிவிலக்குகளைக் குறிப்பிடுக.
5. Define defunct and sick Company and state the rules regarding revival and rehabilitation of it?
   செயலற்ற மற்றும் நலிவுற்ற நிறுவனத்தை வரையறை செய்து அதனை மீட்டுயிர்த்து புணரமைத்தல் பற்றிய விதிமுறைகளைக் குறிப்பிடுக.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:
   ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

   (a) Private company
   தனியார் நிறுவனம்

   (b) Lifting the corporate veil
   திரை விலக்கல்

   (c) Prospectus
   திட்ட அறிக்கை

   (d) Floating Charge
   படரும் பற்று

   (e) Preferential Shares

முன்னுரிமைப்பங்குகள்

(f) National Financial Reporting Authority
தேசிய நிதி அறிவிப்பு ஆணையம்

(g) Dormant company under the Act 2013
2013 வருட சட்டத்தின்படி செயலற்ற நிறுவனம்

(h) Amalgamation of companies
நிறுவனங்களை இணைத்தல்

(i) Company Law Appellate Tribunal
நிறுவனச்சட்ட மேல்முறையீட்டுத்தீர்ப்பாயம்

(j) Winding up of company
நிறுவனக்கலைப்பு

PART C - (4 X 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding Two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. An advocate on the instructions of promoters of a company prepared a memorandum and articles of association, paid the registration fees and got the company incorporated. Advocate claims the expenses. Discuss.

ஒரு வழக்கறிஞர் நிறுவனத்துவக்குநர்கள் அறிவுரையின்படி அமைப்பு முறை மற்றும் செயல்முறை ஏட்டினைத் தயாரித்து, பதிவுக்கட்டணம் செலுத்தி நிறுவனத்தை பதிவு செய்தார். வழக்கறிஞர் அதற்குண்டான செலவுத்தொகையினை நிறவனத்திடம் கோருகிறார். விவாதிக்கவும்.

8. A prospectus contained a statement that the company had paid regular dividents for the last 7 years. This statement was factually not correct, because only for the last 4 years the company had paid dividents out of the accumulated profits. Decide the validity of prospectus and dividents.

நிறுவனத்தின் திட்ட அறிவிப்பில் கடந்த 7 ஆண்டுகளாக பங்காதாயங்களை ஒழுங்காக கொடுத்து வந்தது என்று கூறப்பட்டது. இக்கூற்று சரியானது இல்லை. காரணம் கடந்த 4 ஆண்டுகளாக மட்டுமே அந்நிறுவனம் தனது திரட்டப்பட்ட இலாபங்களில் இருந்து பங்காதாயங்களை கொடுத்து வந்துள்ளது. திட்ட அறிவிப்பு மற்றும் பங்காதாயத்தின் செல்லதக்கதை குறித்து முடிவு செய்க.

9. The main object of a company is to manufacture cement whereas the board of directors decided to go in for manufacturing solar panel and related products. Discuss.

ஒரு நிறுவனத்தின் முக்கிய நோக்கம் சிமெண்ட் உற்பத்தி செய்வது. ஆனால் இயக்குநர்கள் வாரியத்தின் முடிவின்படி சூரியத்தகடு மற்றும் அதனோடு இணைந்த

பொருட்களை தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. விவாதிக்க.

10. A transferred his shares to B. But the directors of the company refuse to register the transfer. Thereafter a call was made to A. Could A recover the amount of othe call from B? Discuss.

அ என்பவர் தன்னுடைய பங்குகளை ஆ என்பவருக்கு மாற்றினார். நிறுவனத்தின் இயக்குநர்கள் அப்பங்கு மாற்றத்தை பதிவு செய்ய மறுத்தனர். அதன் பிறகு பங்கு தொகை கோரி அ-க்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அ பங்குத்தொகையினை ஆ-விடம் இருந்து திரும்பப்பெற முடியுமா? விவாதிக்கவும்.

11. A company is in great need of further capital. The majority representing 98% of the shares are willing to provide, if they can buy up the 2% minority shares. By refusal, the majority shareholders passed a resolution to purchase the minority shares compulsorily. Discuss the majority shareholders resolution.

ஒரு நிறுவனத்திற்கு கூடுதல் நிதி தேவைப்பட்டதால் 98% பங்குகளைப்பெற்றுள்ள பெரும்பான்மையினர் 2% பங்குகளைப்பெற்றுள்ள சிறுபான்மையினரின் பங்குகளையும் வாங்கினால் முதலீடு செய்ய தயாராக இருப்பதாக தெரிவித்தனர். அவர்கள் மறுக்கவே பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் பங்குகளை கட்டயாமாக வாங்க வேண்டி ஒரு தீர்மானத்தை இயற்றினர். பெரும்பான்மை பங்குதாரர்களின் தீர்மானத்தின் நிலையினை விவாதிக்க.

12. 200 members of a limited company duly deposited a requisition for holding a meeting of the company on 5.09.2015 at 10 a.m. On that day, only 14 members were presdent after an hour. Can they conduct a meeting.

200 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் கூட்டத்தை 5.9.2015 அன்று காலை 10,00 மணியளவில் கூட்ட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அந்நாளில் ஒரு மணி நேரம் கழித்து அக்கூட்டத்திற்கு 14 உறுப் பினர்களே வருகை புரிந்தனர். அக்கூட்டத்தினை அவர்கள் நடத்தலாமா?

B.A.B.L., DEGREE EXAMINATIONS, NOVEMBER 2016

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. What are the legal steps to be taken for the formation of a company? Explain the effects of the issue of a certificate of incorporation.

ஒரு நிறுமம் நிறுவுவதற்குச் செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் யாவை? பதிவுச்சான்றிதழ் வழங்கப்படுவதின் விளைவுகளை விளக்கவும்.

2. What do you mean by the doctrine of indoor management? What are the exceptions to this doctrine ? Illustrate with case laws.

உட்புற மேலாண்மைக்கோட்பாடு என்பது பற்றி தாங்கள் அறிவது என்ன? அக்கோட் பாட்டிற்குள்ள விதிவிலக்குகள் யாவை? அதைத்தகுந்த வழக்குகளுடன் விவரி.

3. "Directors occupy a pivotal position in the structure of a Company" - Explain.

"ஒரு நிறுமத்தின் மையமாக இயக்குநர்கள் அமைந்துள்ளனர்". விளக்குக.

4. Explain the term debenture and state the rights and remedies available to a debenture holder.

"கடனீட்டு ஆவணம்" என்னும் சொற்றொடருக்கு விளக்கமளித்து, கடனீட்டு ஆவணதாரரின் உரிமைகள் மற்றும் தீர்வழிகளைப்பற்றி குறிப்பிடுக.

5. Discuss the powers and functions of the National Company Law Tribunal.

நாட்டு நிறுமச்சட்ட தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கவும்.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற் றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Pre-incorporation contracts
நிறுமம் தொடங்குவதற்கு முன்னுள்ள ஒப்பந்தங்கள்

(b) Holding and subsidiary company
பற்றுடமை மற்றும் துணைநிலை நிறுமம்

(c) Dividents
பங்கு ஆதாயம்

(d) Forfeiture of shares
பங்கு பறிமுதல்

(e) Golden rule of Prospectus
திட்ட அறிவிப்பின் பொன் விதி

(f) Ruben vs. Great Fingall Consolidated Co. Ltd.,
ரூபன் எதிர் கிரேட் பிங்கால் கன்சாலிடேட்டட் கம்பெனி

(g) Special resolution
தனித்தீர்மானம்

(h) Floting charge
பற்றுப்பொறுப்பு

(i) Winding up of company

நிறுவனக்கலைப்பு

(j) SEBI

செபி

PART C - (4 X 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding Two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. X, a minor, was registered as a shareholder in a company. He received dividents and continued to receive dividents even after attaining majority. The company was dissolved. Decide whether X is liable as a shareholder.

X என்பவர் இளவராக இருந்தபொழுது ஒரு நிறுமத்தின் பங்குதாரராகிறார். அது முதல் பங்கு ஆதாயம் பெற்று வந்ததுடன் தான் உரிய வயதை அடைந்த பின்னரும், தொடர்ந்து பங்கு ஆதாயம் பெற்று வருகிறார். இந்நிலையில் நிறுமம் கலைக்கப்படுகிறது. X என்பவர் பங்குதாரர் என்ற நிலையில் பொறுப்பாவாரா?

8. An association enters into a contract for lease of fishing rights. Subsequently the association was registered as a company. The pond owner refused to give effect to the contract. The company decided to sue for specific performance. Decide.

ஒரு சங்க அமைப்பு மீன் பிடிக்கும் குத்தகை உரிமைக்காக ஒப்பந்தம் ஒன்றை செய்தது. பிறகு அச்சங்கம் நிறுவனமாக பதிவு செய்தது. ஒப்பந்தத்தை செயல்படுத்த குட்டை உரிமையாளர் மறுத்தார். நிறுவனம் குறித்த வகை நிறைவேற்றத்தின் கீழ் வழக்கிட முடிவு செய்தது. தீர்மானிக்கவும்.

9. Comany A issues a circular marked as 'private circulation' only asking for subscription to its shares. Discuss whether the circular is a Prospectus. Give reason.

அ என்ற நிறுமம் "தனியாக சுற்றுக்கு மட்டும்" என்ற சொற்றொடருடன் பங்குக்கான சந்தாவை பெறும் பொருட்டு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்தச் சுற்றறிக்கையை திட்ட அறிவிப்பு என்று கொள்ளலாமா? காரணம் கூறவும்.

10. A cheque was signed by the Directors on company's behalf stating the name as "G.L.Agencies Ltd.". But the real name of the company was "G.A.Agencies Ltd.". State whether the director or the company become liable.

ஒரு காசோலையில் ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள் "ஜிஎல் ஏஜென்சீஸ் லிமிடெட்" என்ற கையெழுத்திட்டனர். ஆனால் அந்த நிறுவனத்தின் உண்மையான பெயர் "ஜிஅ ஏஜென்சீஸ் லிமிடெட்" என்பதாகும். இந்த வழக்கில் இயக்குநர்கள் அல்லது நிறுவனம் இவற்றில் யார் பொறுப்புக்குரியவர்கள்?

11. A and B are two rival companies. Majority of the members of A were also members of B. A commenced a suit against B. At a meeting of A company, the majority passed a resolution to compromise the action favourable to B company and not favourable to A company. Examine the effect of the resolution.

Aயும் Bயும் இரண்டு போட்டியிடுகின்ற நிறுவனங்கள். Aயின் பெரும்பான்மை உறுப்பினர்கள் Bயின் உறுப்பினர்களாகவும் இருந்தனர். Bயின் மீது A ஒரு வழக்கைத் தொடங்கியது. அவ்வழக்கை B நிறுவனத்திற்கு சாதகமாகவும், A நிறுவனத்திற்கு பாதகமாகவும் இருக்கும்படியாக ஒரு சமரச முடிவு செய்வதற்கு Aயின் கூட்டம் ஒன்றில் அதன் பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள். இத்தீர்மானத்தின் விளைவுகளை ஆராய்க.

12. X, a company. purchases its own shares. Is it valid? If it is so explain to what extent and in what circumstances it is valid.

X என்ற நிறுவனம் அதன் சொந்த பங்குகளை விலைக்கு வாங்கியது. இது செல்லுமா? அப்படியானால் எந்த அளவிற்கு? எந்தெந்தச்சூழ்நிலையில் அது செல்லும் என்பதை விளக்குக.

B.A.B.L., DEGREE EXAMINATIONS, MAY 2017

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain briefly the theory of independent corporate personality and when does the court allow lifting the corporate veil.

சுதந்திரமான கூட்டாண்மை ஆளுமையினை சுருக்கமாக விளக்கி அதன் திரையை விலக்க நீதிமன்றம் எப்பொழுது அனுமதிக்கும்?

2. Memorandum of association is the constitution of the companies - Define. How and to what extent it protects the outsiders?

ஒரு நிறுமத்தின் அமைப்பு முறைப்பதிவேடு அந்நிறுமத்தின் அமைப்பு விதித்தொகுதி ஆகும். விவரிக்க. இது எந்த அளவிற்கு வெளியாட்களைப் பாதுகாக்கும்?

3. Define "shares" and state the various types of shares. Explain the circumstances in which shares can be forfeited.

"பங்குகள்" என்பதை வரையறை செய்து பல்வேறு வகையான பங்குகளைக் குறிப்பிடவும்.

எந்தெந்த சூழ்நிலைகளில் பங்குகள் பறிமுதல் செய்யப்படுகிறது என்பதை விளக்குக.

4. Explain the powers of the National Company Law Tribunal to investigate term debenture and state the rights and remedies available to a debenture holder.
ஒரு நிறுமத்தின் விவகாரங்களை புலன் விசாரணை செய்யும் பொருட்டு நாட்டு நிறுமச் சட்டத்தீர்ப்பாயத்தின் அதிகாரங்களை விளக்குக.

5. Define voluntary winding up and state how it differs from compulstory winding up.
தன்னார்வக்கலைப்பு என்றால் என்ன? இது எவ்வாறு கட்டாயக்கலைப்பில் இருந்து மாறுபடுகிறது என்பதை விவரிக்க.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) One man company
ஒரு நபர் நிறுமம்

(b) Prospectus
திட்ட அறிக்கை

(c) Transfer of shares and transmission of shares
பங்குகள் மாற்றம் மற்றும் வாரிசுவழியில் பங்கு மாறுதல்

(d) Proxy
பதிலாள்

(e) Preference share
முன்னுரிமைப்பங்கு

(f) Divident
பங்காதாயம்

(g) Foss vs. Harbottle
ஃபாஸ் எதிர் ஹார்பாட்டில்

(h) Alteration of Articles of Association
செயல்முறை விதிகள் திருத்தம்

(i) Amalgamation of companies
நிறுமங்கள் இணைதல்

(j) Characteristic features of debentures
கடனீட்டு ஆவணங்களின் குண இயல்புகள்

PART C - (4 X 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding

Two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A and B were the only members of a private company. Both die in an accident. The Registrar of Companies wants to delete the company from the register. Can he do so?

அ மற்றும் ஆ இருவரும் ஒரு தனியார் நிறுமத்தின் ஏக உறுப்பினர்கள். அவர்கள் இருவரும் ஒரு விபத்தில் இறந்துவிடுகின்றனர். நிறுமப்பதிவாளர் அந்நிறுமத்தை நிறுமப் பதிவேட்டிலிருந்து நீக்க விரும்புகிறார். அவர் அவ்வாறு செய்ய இயலுமா?

8. A company created a floating charge by issuing debentures. Three months interest became due and the debenture holders did not take any steps. The company made a mortgage of a specific part of its property. Did the debenture holders have priority over the mortgage?

கடனீட்டு ஆவணங்கள் வழங்கி, தனது சொத்தின் மீது படரும் பொறுப்பை ஒரு நிறுமம் உருவாக்கியது. மூன்று மாத வட்டி நிலுவை இருந்தும் ஆவணம் பெற்றவர்கள் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இதற்குள் சொத்தின் ஒரு பகுதியை நிறுமம் அடைமானம் வைத்தது. கடனீட்டு ஆவணம் பெற்றவர்களுக்கு இச்சொத்தின் மீது முன்னுரிமை உள்ளதா?

9. A company was incorporated with the object of protecting cyclists on public roads. The company altered its object clause of the Memorandum of Association and extended protection to motorists also. is the alteration valid?

மிதி வண்டிகளைப் பொதுச்சாலைகளில் மிதிப்பவர்களுடைய பாதுகாப்புக்காக ஓர் நிறுமம் நிறுவப்பட்டது. இந்த நிறுமம் மோட்டார் வாகனம் ஓட்டுபவர்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தனது அமைப்பு முறையேட்டிலுள்ள நோக்கம் பற்றிய விதிக்கூறுகளை மாற்றியது. இந்த மாற்றம் செல்லத்தக்கதா?

10. A company's directors decided to make call on shares. But one of them had not been validly appointed. Can the call be enforced?

ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் பங்கு அழைப்புக்கட்டணத்தைத் தீர்மானித்தனர். ஆனால் இயக்குநர்களில் ஒருவர் செல்தகு முறையில் நியமிக்கப்படவில்லை. இந்நேர்வில் பங்கழைப்புக் கட்டணம் செயலுறுத்தப்பட இயலுமா?

11. A a shareholder, after appointing B as his proxy to attend a meeting at the company Annual General Meeting (AGM), A himself attended the AGM meeting and voted on a particular resolution. Thereafter B claims to exercise his vote. Examine the claim of B.

அ என்ற பங்குரிமையர் நிறுமத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் பங்கு கொள்ள ஆ என்பவரைத் தனக்குப்பதிலாக நியமனம் செய்த பிறகு அ என்பவரே ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கு கொள்ள ஆ என்பவரைத் தனக்குப்பதிலாக நியமனம் செய்த பிறகு அ என்பவரே ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஒரு தீர்மானத்தின் மீது வாக்

களித்தார். அதன் பிறகு ஆ என்பவர் தனது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்று கோருகிறார். ஆ–வின் கோரிக்கையினை ஆராய்க.

12. A company resolved and sought confirmation for shifting its registered office from Banglore to Ahmedabad due to some ex-employees' disturbance. The employees strongly objected it. Decide.

ஒரு நிறுமம், நிறும முன்னாள் ஊழியர்களின் பிரச்சனைகள் காரணமாக தன்னுடைய பதிவு அலுவலகத்தை பெங்களூரில் இருந்து அகமதாபாத்திற்கு மாற்றுவது என தீர்மானித்தது. இம்முடிவை நிறும ஊழியர்கள் வன்மையாக எதிர்த்தனர். – தீர்மானிக்க.

B.A.B.L., DEGREE EXAMINATIONS, NOVEMBER 2017

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Define "Company". Explain the doctrine of lifting the corporate veil.

"நிறுவனம்" என்பதை வரையறு. நிறுவனத்திரை தூக்கப்படுதல் என்ற கோட்பாட்டை விளக்குக.

2. What is the Golden Rule for framing Prospectus ? Examine the legal effects of untrue statements in the prospectus.

திட்ட அறிவிப்பு தயாரிப்பு குறித்த பொன் விதி யாது? திட்ட அறிவிப்பிலுள்ள பொய்யானக் கூற்றுகளின் சட்ட விளைவுகளை ஆராய்க.

3. Explain the consequences of Ultra vires transactions.

வரம்பு மீறல் நடவடிக்கைகளினால் ஏற்படும் விளைவுகளை விளக்குக.

4. Explain the different kinds of meetings as provided under the Company Act and point out when and how they are held.

நிறுவனச்சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள கூட்டங்களின் பல்வேறு வகைகளை விளக்கி, அவை எப்பொழுது மற்றும் எவ்வாறு நடத்தப்படலாம் என்பதைக் கூறுக.

5. Examine the circumstances undre which a company may be compulsorily wound up by the National Company Law Tribunal.

எந்தச்சூழ்நிலைகளில் ஒரு நிறுவனம் தேசிய நிறுவனச்சட்ட தீர்ப்பாயத்தினால் கட்டாய முறையில் கலைக்கப்படலாம் என்பதை ஆராய்க.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Company and Hindu Joint Family firm
நிறுவனம் மற்றும் இந்து கூட்டுக்குடும்ப நிறுமம்

(b) Share and Stock
பங்கு மற்றும் பங்குத்தொகுப்பு

(c) Qualification and disqualification of Directors.
இயக்குநர்களின் தகுதியும் மற்றும் தகுதியின்மையும்

(d) Procedure for Alteration of capital clause
மூலதனப்பகுதியை மாற்றுவதற்கான வகைமுறைகள்

(e) Official liquidators
கலைப்பு அதிகாரிகள்

(f) Balance Sheet
இருப்புநிலை குறிப்பேடு

(g) Quorum
குறைவெண்

(h) Features of Shares
பங்குகளின் தன்மைகள்

(i) Forged transfer
போலிக்கையொப்பமிட்ட மாற்றம்

(j) Wood Vs. Odessa Water Works Company
உட் Vs. ஒடிஸ்ஸா வாட்டர் ஒர்க்ஸ் கம்பெனி

PART C - (4 X 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding Two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A company was incorporated with the object of protecting and promoting users of cycles and tricycles on public roads. The company altered its objects clause and extended protection to the users of all vehicles including motor cars. Is the alteration valid?

ஒரு நிறுமம் மிதிவண்டிகள் மற்றும் மூன்று சக்கர மிதி வண்டிகளை சாலைகளில் உபயோகிப்பவர்களின் பாதுகாப்பிற்கு உருவாக்கப்பட்டது. அந்நிறுவனம் தன் குறிக்கோளை மாற்றிக்கொண்டு அதன் பாதுகாப்பை எல்லா வாகனங்கள் உபயோகிப்பர்களுக்

காகவும் மாற்றியது. இவ்வகை மாற்றம் செல்லத்தக்கதா?

8. The provisions of the Articles of a company authorised the company to expel a member, but it expelled a member and forfeited his shares. Is it valid?

ஒரு நிறுவனத்தின் செய்முறை விதிகள் நிறுவனத்தின் அங்கத்தினரை விலக்குவதற்கு அதிகாரம் வழங்கியது. மேற்படி அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறுவனம் ஒரு அங்கத்தினரை விலக்கி அவர் பங்குகளைப் பறிமுதல் செய்தது. இது செல்லுமா?

9. A cement manufacturing company was incurring losses and its shares were partly paid-up. Anjana being a member of the company holding 100 shares surenders her shares to the company. The company's Board of Directors accepts the surrender. Will the surrender be valid as per the Company Law?

பகுதி செலுத்தப்பட்ட பங்குகளைக் கொண்டிருக்கும் சிமெண்ட் தயாரித்து வரும் ஒரு நிறுவனத்தில் இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அந்த நிறுவனத்தில் உறுப்பினராக இருந்து வரும் அஞ்சனா தான் வைத்திருக்கும் 100 பங்குகளையும், அந்த நிறுவனத்தி டமே ஒப்புவிப்புச்செய்கிறார். அந்த ஒப்புவிப்பினை இயக்குநர் குழுமம் ஏற்றுக்கொள் கிறது. இந்த சரண் நிறுவனச்சட்டத்தின் கீழ் செல்லத்தக்கதுதானா?

10. A and B are two rival companies. The majority of the shareholders of the company A were also the members of the company B. Company A commenced an action against company B. At a meeting of company A, the majority passed a resolution to compromise the action in a manner favourable to company B company and unfavourable to company A. Whether the resolution is valid?

A மற்றும் B ஆகிய இரண்டு நிறுமங்களும் பகைமை கொண்ட நிறுமங்கள் ஆகும். A நிறுமத்தின் பெரும்பான்மை பங்குநர்கள் B நிறுமத்தின் உறுப்பினராக உள்ளார்கள். A நிறுமம் B நிறுமத்தின் மீது வழக்கிடுகிறது. A நிறுமத்தின் கூட்டத்தில் அதன் பெரும் பான்மை உறுப்பினர்கள், B நிறுமத்திற்கு சாதகமாகவும், A நிறுமத்திற்கு பாதகமாகவும் அமையும்படி ஷரத்துக்கள் கொண்டு வழக்கை சமாதானம் செய்வதற்கு தீர்மானம் இயற்றுகிறார்கள். இந்த தீர்மானம் செல்லுபடியாகுமா?

11. A secretary of a company issued a share certificate to X with the seal of the company, forging the signatures of two of the directors of the company. As it was a forged instrument, the company disowned it stating that he was not a shareholder. What remedies are available to X?

ஒரு நிறுவனத்தின் செயலர் பங்குச்சான்றிதழில் மோசடியான முறையில் நிறுவனத்தின் முத்திரையிட்டு இரண்டு இயக்குநர்களின் கையெழுத்தினை கள்ளத்தனமாக போட்டு X என்பவருக்கு வழங்கினார். சான்றிதழ் பொய் ஆவணம் எனக்கூறி நிறுவனம் அவரைப் பங்குநர் இல்லையென மறுத்தது. X என்பவருக்குரிய தீர்வழிகள் என்ன?

12. A Hindu joint family consisting of a father and five major sons and another such family consisting of a father and five major sons and one minor son carried on Banking business as owners thereof. Discuss if this organization requires registration under the Indian Companies Act?

ஒரு தந்தையும் ஐந்து உரிமை வயது வந்த மகன்களும் கூடிய ஒரு இந்து கூட்டுக் குடும்பமும், ஒரு தந்தையும், ஐந்து உரிமை வயது வந்த மகன்களும், ஒரு இளவர் மகனும் கூடிய மற்றொரு இந்து கூட்டுக்குடும்பமும் ஒரு வங்கித்தொழிலை அதன் உரிமையாளர் களாக நடத்தி வந்தனர். இந்த அமைப்பு இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதை விவாதிக்க.

B.A.B.L.,/B.A.,LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2018

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Briefly explain the salient features of the Companies Act, 2013.
2013–ம் ஆண்டு நிறுவ சட்டத்தின் சிறப்பு இயல்புகளை சுருக்கமாக விளக்குக.

2. The Memorandum of Association is a fundamental document of a company - Explain.
அமைப்பு முறையேடு என்பது ஒரு நிறுமத்தின் அடிப்படை ஆவணமாகும் – விளக்குக.

3. List out and explain the different kinds of share capital under the Companies Act, 2013.
2013–ன் நிறுமச்சட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு வகை பங்கு மூலதனம் பற்றி வரிசைப் படுத்தி விளக்குக.

4. Who are the persons entitled to apply for the winding up of a company? Explain their respective rights.
ஒரு நிறுவனத்தை கலைப்பதற்கு விண்ணப்பம் செய்ய எந்தெந்த நபர்கள் உரிமை யுடையவர்கள்? அவர்களின் முறையேயான உரிமைகளை விளக்குக.

5. Explain the doctrine of "Indoor Management" and point out the exceptions if any.
"அகநிலை மேலாண்மைக்கோட்பாடு" என்பதனை விளக்கி, இவ்விதிக்கான விதிவிலக்குகளை குறிப்பிடுக.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற் றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Effect of forged documents
போலி ஆவணங்களின் விளைவு

(b) Borrowing powers of company
நிறுமங்களின் கடன் வாங்கும் ஆற்றல்

(c) Promoters
துவக்குநர்கள்

(d) Statutory Report
சட்ட வழியான அறிக்கை

(e) Powers of auditors
தணிக்கையாளரின் ஆற்றல்

(f) Derry Vs. Peek
டெரி எதிர் பீக்

(g) Rights of Debeture holders
கடனீட்தழ் உடையோரது உரிமைகள்

(h) Lifting the corporate veil
நிறுமத்தின் திரைசீலை விலக்கப்படுதல்

(i) Illegal association
சட்டமுரண் அமைப்பு

(j) Sweat equity shares
வியர்வைத்தகைமை பங்குகள்

PART C - (4 X 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding Two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A company was authorized by its articles of association to purchase its own shares. X sold his shares to the company and before the price was paid, the company went into liquidation. X claimed to prove in the liquidation proceedings for the price of the shares. Can he succeed in his claim?

தன்னுடைய சொந்த பங்குகளைத்தானே விலைக்கு வாங்குவதற்கு தன் செயல்முறை விதிகளால் ஒரு நிறுமத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. X என்பவர் தன்னுடைய பங்குகளை நிறுமத்திற்கு விற்று பணத்தை பெறுவதற்கு முன் நிறுமம் கலைக்கப்பட்டது. கலைப்பு நடவடிக்கையில் பங்குகளின் விலைக்கான தொகையைப்பெறுவதற்காக X மெய்ப்பிக்கும் உரிமை கோரினார். அந்த உரிமைக்கோரிக்கையில் அவர் வெற்றி பெற முடியுமா?

8. On the failure of the directors of a company to call a meeting on requisition the members themselves sent a notice to all the members for a meeting to be

held at the registered office, but the M.D. locked the office premises. Hence the meeting was held at other place. Decide the validity of the meeting.

ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள், உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கூட்டத்தைக் கூட்டத்தவறியதால் உறுப்பினர்களே அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு செய்து நிறும பதிவு அலுவலகத்தில் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டது. ஆனால் நிறுமத்தின் மேலாண்மை இயக்குநர் கூட்டம் நடைபெறுவதைத் தடுக்கும் பொருட்டு அலுவலகத்தை பூட்டிவிட்டதால் வேறு இடத்தில் அந்நிறுமத்தின் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் செல்லும் தன்மை குறித்து முடிவு செய்க.

9. A company suffered loss due to the conduct of its director, Shankar, a member of the company brought an action against the director to make good the losses suffered by the company. Will Shankar succeed?

ஒரு நிறும இயக்குநரின் நடத்தையால் நிறுமமானது மிகுந்த இழப்பிற்குள்ளானது. சங்கர் அந்நிறும உறுப்பினர், இயக்குநருக்கு எதிராக இழப்பை சரி செய்வதற்காக நல்லெண்ண நடவடிக்கை மேற்கொள்கிறார். சங்கர் வெற்றி பெறுவாரா?

10. X applied for some shares in a company. His application was sent by post. A letter of allotment was dispatched by the company, soon after, but the later never reached the applicant. Decide the liability of X as a shareholder.

ஒரு நிறுமத்தின் சில பங்குகள் வாங்குவதற்காக X என்பவர் விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பம் தபாலில் அனுப்பப்பட்டது. பங்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடிதம் நிறுமத் தால் உடன் அனுப்பப்பட்டது. ஆனால் அக்கடிதம் விண்ணப்பதாரரை சென்றடைய வில்லை. பங்குதாரர் என்ற முறையில் X என்பவரின் கடப்பாடுகளை ஆராய்க.

11. An advocate on the instructions of promoters of a company prepared a Memorandum and Articles of Association, paid the registration fees and got the company incorporated. Advocate claims the expenes. Discuss.

ஒரு வழக்கறிஞர் நிறுமத் துவக்குநர்கள் அறிவுரையின்படி அமைப்புமுறை மற்றும் செயல் முறை ஏட்டினை தயாரித்து, பதிவுக்கட்டணம் செலுத்தி நிறுமத்தை பதிவு செய்தார். வழக் கறிஞர் அதற்குரிய செலவுத்தொகையினை நிறுமத்திடம் கோருகிறார். விவாதிக்கவும்.

12. The main object of a company is to manufacutre cement. Whereas the Board of Directors decided to go in for manufacturing solar panels and related products. - Discuss.

ஒரு நிறுமத்தின் மேலான நோக்கம் சீமைக்காரை உற்பத்தி செய்வது. ஆனால் இயக் குநர்கள் குழும முடிவின்படி சூரியத்தகடுகள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்களை உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டது. விவாதிக்க.

B.A.B.L.,/B.A.,LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : Three hours

Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the 'Golden Rule'in framing prospectus. Examine the legal remedies of untrue statements in the prospectus.
திட்ட அறிவிப்பு வகுத்தமைப்பதிலுள்ள 'பொன்விதி'–ஐ விளக்குக. திட்ட அறிவிப்பில் உள்ள உண்மையற்றக் கூற்றுகளினால் ஏற்படும் சட்ட விளைவுகளை ஆராய்க.

2. How and to what extent can the memorandum of association of a company be altered?
ஒரு நிறுமத்தின் அமைப்பு முறையேட்டினை எப்படி எந்த அளவிற்கு மாற்றலாம்?

3. Define defunct and sick company and state the rules regarding revival and rehabilitation of it.
செயலற்ற மற்றும் நலிவுற்ற நிறுமத்தை வரையறை செய்து அதனை மீட்டுயர்த்தி புனரமைத்தல் பற்றிய விதிமுறைகளைக் குறிப்பிடுக.

4. "Constructive notice cautions and indoor management assists the outsiders of the company" - Discuss.
"ஒரு நிறுமத்தின் வெளியாட்களை கொள்நிலை அறிவிப்பு எச்சரிக்கிறது. உட்புற நடைமுறைக்கோட்பாடு அவர்களுக்கு உதவுகிறது" – இக்கூற்றை விளக்குக.

5. Discuss the powers and functions of the National Company Law Tribunal.
நாட்டு நிறுமச்சட்ட தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கவும்.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Reduction of share capital
பங்கு மூலதனம் குறைப்பு

(b) Ultra virus
வரம்பு மீறல்

(c) Floating charge
படரும் பற்றுப்பொறுப்பு

(d) Preference shares
முன்னுரிமைப்பங்குகள்

(e) Rights and duties of an Auditor
தணிக்கையாளரின் உரிமைகள் மற்றும் கடமைகள்

(f) Government company
அரசு நிறுமம்

(g) Dissolution
கலைத்தல்

(h) Erlanger v. New Sombrero phosphate Co.
எர்லாஞ்சர் எதிர் நியூ சாம்ப்கிரோ பாஸ்பேட் நிறுமம்

(i) Promoters
துவக்குநர்கள்

(j) Woman directors
மகளிர் இயக்குநர்கள்

PART C - (4 X 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding Two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A transferred his shares to B. But the directors of the company refuse to register the transfer. Thereafter a call was made to A. Could A recover the amount of the call from B? Discuss.

அ என்பவர் தன்னுடைய பங்குகளை ஆ என்பவருக்கு மாற்றினார். நிறுமத்தின் இயக்குநர்கள் அப்பங்கு மாற்றத்தை பதிவு செய்ய மறுத்தனர். அதன் பிறகு பங்கு தொகை கோரி அ–க்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அ பங்கு தொகையினை ஆ–விடம் இருந்து திரும்பப்பெற முடியுமா? விவாதிக்கவும்.

8. An application was made by a father as a guardian of his minor son for certain shares. The company registered the share in the name of the son described as minor. The company went into liquidation and the name of the father was placed in the list of contributors. Is he liable?

இளவர் மகனுக்காக தந்தை காப்பாளராக ஒரு நிறுமத்தின் சில பங்குகளுக்கு விண்ணப்பித்து இருந்தார். பங்குகளை மகனின் பெயரில் இளவர் என்று குறித்து அந்நிறுமம் பதிவு செய்தது. பின்பு அந்நிறுமம் கலைக்கப்பட்டதும் தந்தையினுடைய பெயர் காப்பாளர்கள் பட்டியலில் இடம் பெற்றது. அவர் பொறுப்பாவாரா?

9. Annual meeting of a company for 2013 is not called but in 2014 a meeting for 2013 and 2014 is called and held. Is it legal and proper?

ஒரு நிறுமத்தின் 2013–ம் ஆண்டைய பொதுக்கூட்டம் கூட்டப்படவில்லை. ஆனால் 2014–ம் ஆண்டில் 2013 மற்றும் 2014–ம் ஆண்டிற்கும் சேர்த்து அழைக்கப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டது. இது சட்டப்படி செல்லுமா?

10. One of the directors of the company proposes to visit U.S.A. for 4 months and the Board of Directors wants to appoint an alternate director in his place. Advise the company.

ஒரு நிறுமத்தின் இயக்குனர் 4 மாதங்களுக்கு U.S.A. செல்ல விரும்புகிறார். அந்நிறுமத்தின் இயக்குனர் குழு அவருக்குப்பதில் மாற்று இயக்குனரை நியமனம் செய்ய விரும்புகின்றது. நிறுமத்திற்கு அறிவுரை வழங்கவும்.

11. B a proxy of S filed the proxy form in the XYZ Co. Ltd., seven days ahead of its Annual General Meeting. Whether it is valid or not?

XYZ என்ற நிறுமத்தின் ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு S என்ற உறுப்பினருக்குப் பதிலாக R என்பவர் கலந்து கொள்ள பதிலாள் மனு 7 நாட்களுக்கு முன்பாகவே தாக்கல் செய்யப்பட்டது. அது செல்லுபடியாகுமா?

12. A company formed with the object of increasing the practice and protect the use of two wheelers want to alter the memorandum so as to include the object of increasing the practice of the use of motor cars also. Discuss how far such an alteration is valid

ஒரு இரு சக்கர வண்டிகளின் பயன்பாட்டைப்பெருக்கி பேணிப்பாதுகாக்கும் நோக்கத் துடன் நிறுவப்பட்ட ஒரு நிறுமம் அதன் அமைப்பு முறையேட்டினை மாற்றம் செய்து மோட்டார் வண்டிகளின் பயன்பாட்டையும் அதிகரிக்கும் நோக்கத்தை செய்ய விரும்பு கிறது. இத்தகைய மாற்றம் எந்த அளவிற்கு செல்லும் தன்மையது என்பதை விவாதிக்க.

B.A.B.L.,/B.A.,LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2019

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. What is Articles of Association? Examine the broad features of Articles of Association and importance in the administration of company.

செயல்முறை ஏடு என்றால் என்ன? செயல்முறை ஏட்டின் சிறப்பியல்புகளையும், நிறும நிர்வாகத்தில் அவற்றின் முக்கியத்துவத்தையும் ஆராய்க.

2. State the rules of allotment of Shares. What are the effects of an irregular allotment.

பங்கு ஒதுக்கீட்டிற்கான பல்வேறு விதிகளை குறிப்பிடுக. முறையறு பங்கு ஒதுக்கீட்டின் விளைவுகள் யாவை?

3. Examine the liabilities of a director for

(a) Ultra vires acts

(b) Negligence

(c) Breach of trust

(d) Mis-feasance

பின்வருவனவற்றில் ஒரு இயக்குநரின் கடப்பாடுகளை ஆராய்க.

(அ) அதிகாரவரம்பு மீறிய செயல்கள்

(ஆ) கவனமின்மை

(இ) பொறுப்புரிமை அமைப்பு மீறல்

(ஈ) சட்டமுறைப்பிழை

4. What is Winding up? Enumerate the different modes of Winding up.
நிறுமங்கள் கலைக்கப்படுதல் என்றால் என்ன? நிறுமங்கள் கலைக்கப்படுவதற்கான பல்வேறு முறைகளை விவரிக்கவும்.

5. Explain the powers and functions of SEBI.
செபியின் அதிகாரம் மற்றும் கடமைகளை விவரிக்கவும்.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Golden Rule
பொன் விதி

(b) Forfeiture of shares
பங்குகளை பறிமுதல் செய்தல்

(c) Certificate of incorporation
பதிவுச்சான்றிதழ்

(d) Constructive notice
கொள்நிலை அறிவிக்கை

(e) Reserve Capital
இருப்பு மூலதனம்

(f) Poll
வாக்கெடுப்பு

(g) Statutory meeting
சட்டமுறையான கூட்டம்

(h) Royal British Bank Vs. Turquand
ராயல் பிரிட்டிஷ் வங்கி – எதிர் – டர்க்குவாண்ட்

(i) Debentures
கடனீட்டிதழ்

(j) Balance sheet

இருப்பு நிலைக்குறிப்பேடு

PART C - (4 X 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding Two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The share certificate issued by the company's secretary who had forged the signatures of two directors and affixed the seal of the company. Whether the company is bound by the share certificate.

நிறுமத்தில் செயலர் இரண்டு இயக்குனர்களின் கையொப்பத்தையும் புனைவு செய்து, நிறுமத்தின் இலச்சனையையும் பொய்யாக பதித்து பங்குச்சான்றிதழை வழங்கினார். இச்சான்றிதழுக்கு நிறுமம் பொறுப்பாகுமா?

8. Ramu applies some shares of a company on the basis of prospectus which contains a misstatement. The shares are alloted to Ramu, who afterwards transfers them to Gopu. Can Gopu bring an action for rescission on the ground of misstatement?

திட்ட அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிறுமத்தின் சில பங்குகளை பெற ராமு என்பவர் மனு செய்கிறார். அந்த திட்ட அறிவிப்பு தவறான தகவல்களை கொண்டிருந்தது. ராமுவிற்கு பங்குகள் ஒதுக்கப்படுகின்றன. பின்னர் அவர் அவற்றை கோபு–க்க மாற்றுகிறார். தவறான தகவல்களை காரணம் காட்டி பங்குகளை தள்ளுபடி செய்ய கோருவதற்கு கோபுவுக்கு உரிமை உள்ளதா?

9. The promoters of a company, before its incorporation enter into an agreement with Raja to buy a plot of Land on behalf of the company. After incorporation the company refuses to buy the said plot of land. Can Raja claim any remedy?

ஒரு நிறுமத்தின் துவக்குநர்கள் அதை பதிவு செய்வதற்கு முன்பு ராஜா என்பவருடன் நிறுமத்திற்காக மனையிடம் ஒன்று வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டனர். பதிவு செய்த பிறகு நிறுமம் அந்த மனையிடத்தை வாங்க மறுக்கிறது. ராஜாவுக்கு ஏதாவது தீர்வழி கோர இயலுமா?

10. A company's directors make a call. But one of them had not been validly appointed. Can the call be enforcd?

ஒரு நிறுமத்தின் இயக்குனர்கள் அழைப்புக்கட்டணத்தைத் தீர்மானித்தனர். ஆனால் அவர்களுள் ஒருவர் முறையாக நியமிக்கப்படவில்லை. அவ்வழைப்பு செல்லுறுத்தப்பட இயலுமா?

11. Saran, a shareholder, after appointing Krishnan as his proxy at a meeting of the company, himself attended and voted on a particular resolution. Krishnan thereafter claimed to exercise his vote. Exmine the validity of his claim.

சரண் எனும் பங்குதாரர், கிருஷ்ணன் என்பவனை நிறுவனத்தின் ஒரு கூட்டத்திற்கு பதிலாளாக நியமனம் செய்த பிறகு, தானே நேர்முகமாக கூட்டத்தில் கலந்து கொண்டு, ஒரு குறிப்பிட்ட தீர்மானத்தின் மீது வாக்களித்தார். இருப்பினும் கிருஷ்ணன் என்பவர் தனது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று கோரினார். அக்கோரிக்கையின் செல்தகு நிலை குறித்து ஆராய்க.

12. Z a company, purchases its own shares. Is it valid? If it is so, explain to what extent and in what circumstances it is valid?

Z என்ற நிறுவனம் அதன் சொந்த பங்குகளை விலைக்கு வாங்கியது. இது செல்லுமா? அப்படியானால் எந்த அளவிற்கு, எந்தெந்த சூழ்நிலையில் அது செல்லும் என்பதை விளக்குக.

B.A.B.L.,/B.A.,LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. What is Social responsibility? How is it incorporated in Companies Act, 2013?

சமூக பொறுப்புடைமை என்றால் என்ன? இது எவ்வாறு 2013–ம் ஆண்டின் நிறுமச்சட்டத்தில் இணைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளது?

2. Who are the members of a company? Distinguish between members and shareholders.

ஒரு நிறுமத்தின் உறுப்பினர்கள் யார்? உறுப்பினர்களுக்கும் பங்குதார்களுக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

3. What do you mean by debentures? Explain the various kinds of debentures and the law relating to debendures.

கடனீட்டிதழ் என்றால் என்ன? இதன் வகைகள் மற்றும் இது குறித்த விதிகளை விளக்குக.

4. Explain the provisions of the Companies Act 2013 for reconstruction and amalgamation of companies.

நிறுமங்களின் மறு அமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பற்றிய 2013–ஆம் ஆண்டின் நிறுமச்சட்டத்தின் சட்ட வகைமுறைகளை விளக்குக.

5. Who are all the persons entitled to apply for the winding up of a company? Explain their respecitive rights.
ஒரு நிறுமத்தை கலைப்பதற்கு விண்ணப்பம் செய்ய எந்தெந்த நபர்கள் உரிமை யுடையவர்கள்? அவர்களது முறையேயான உரிமைகளை விளக்குக.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மேல் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Share warrant
பங்கு பற்றாணை

(b) Official Liquidator
கலைப்பு அலுவலர்

(c) Defunct companies
செயல் இழந்த நிறுமங்கள்

(d) Lifting the corporate veil
நிறுமத்தின் திரைசீலை விலக்கப்படுதல்

(e) Kinds of Meeting
கூட்டங்களின் வகைகள்

(f) Foss Vs, Harbottle case
ஃபாஸ் எதிர் ஹார்பாட்டில்

(g) National Company Law Tribunal
நாட்டு நிறுமச்சட்ட தீர்ப்பாயம்

(h) Quorum
குறைவெண் வரம்பு

(i) Oppression
ஒடுக்கப்படுதல்

(j) Special resolution
தனித்தீர்மானம்

PART C - (4 X 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding Two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A, a company, issues a circular marked "For private circulation only" asking for subscription to its shares. Discuss whether the circular is a prospectus;

அ என்ற நிறுமம் 'தனியார் சுற்றுக்கு மட்டும்' என்ற சொற்றொடருடன் பங்குத்தொகை பெறும் பொருட்டு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த சுற்றறிக்கையை திட்ட அறிவிப்பு என்று கொள்ளலாமா?

8. In a general body meeting all the members of a private company were killed in a bomb blast. Does the company cease to exist due to the death of all lthe members? State the reason.

ஒரு தனியார் நிறுமத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது வெடிகுண்டு வீச்சுக் காரணமாக அனைத்து உறுப்பினர்களும் கொல்லப் பட்டனர். அனைத்து உறுப்பினர்களின் இறப்பினால் நிறும செயல்பாடு முடிக்கப்படுமா? காரணம் கூறவும்.

9. A company resolved and sought confirmation for shifting its registered office from Chennai to Gandhi Nagar due to disturbances of some employees. The employees strongly objected. Determine.

நிறும பணியாளர் பூசல் காரணமாக நிறும பதிவு அலுவலகத்தை சென்னையிலிருந்து காந்தி நகருக்கு மாற்றுவது என்று தீர்மானித்து முடிவெடுக்கப்பட்டது. அவற்றை நிறும பணியாளர்கள் வலுவாக எதிர்த்தனர். தீர்மானிக்க.

10. The directors of a company paid the divident out of the share capital. Such act was challenged by shareholders. Advise to the shareholders.

ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் பங்கு மூலதனத்திலிருந்து பங்கு ஆதாயத்தை எடுத்து வழங்கினார்கள். இயக்குநர்களின் இச்செயலை பங்குதாரர்கள் மறுதலித்தனர். பங்கு தாரர்களுக்கு உரிய அறிவுரை வழங்கவும்.

11. A company lends to Y company on mortgage of assets. The procedure laid down in the Articles of Association for such transaction is not complied with. The directors of the two companies are the same. Is the morttgage valid?

A எனும் நிறுமம் நிறுமச்சொத்துக்களை Y என்ற நிறுமத்தில் அடைமானம் செய்தது. மேற் கண்ட பரிமாற்றம் குறித்து நடைமுறைகள் எதுவும் அதன் செயல்முறை விதிகளின்படி மேற்கொள்ளப்படவில்லை. மேற்கண்ட இரு நிறுமத்திற்கும் ஒரே இயக்குநர்கள்தான். மேற்கண்ட அடைமானம் செல்லுமா?

12. A company created a floating charge by issuing debentures. Three months interest became due and the debenture holders did not take steps. The company made a mortgage of specific part of its property. Did the debenture holders have priority over the mortgage?

கடனீட்டிழ்களை வழங்கி, தன் சொத்தின் மீது படரும் பொறுப்பை ஒரு நிறுமம் உருவாக்கியது. மூன்று மாதம் வட்டி நிலுவையில் இருந்தும், கடனீட்டிதழ் பெற்றவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்குள் சொத்தின் ஒரு பகுதியை நிறுமம் அடைமானம் வைத்தது. கடனீட்டிதழ் பெற்றவர்களுக்கு இச்சொத்தின் மீது முன்னுரிமை உள்ளதா?

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For the candidates admitted during 2017-2018)

B.A.,LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JANUARY 2021

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester

COMPANY LAW

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Define "Company". Explain the doctrine of Lifting of corporate veil.
'நிறுவனம்' என்பதை வரையறு. நிறுவனத்திரை விலக்குதல் என்ற கோட்பாட்டை விளக்குக.

2. Examine the legal provisions relating to the alteration of capital clause.
மூலதனப்பகுதியை மாற்றுவது தொடர்பான சட்ட வகைமுறையங்களை ஆராய்க.

3. Explain the different modes of winding up of a company.
ஒரு நிறுமம் கலைப்பது குறித்த பல்வேறு முறைகளை விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. What is allotment of shares? What are the restrictions on allotment of shares? What is the effect of irregular allotment?
பங்குகள் ஒதுக்கீடு என்றால் என்ன? பங்கு ஒதுக்கீட்டின் மீதான வரம்புகள் யாவை? ஒரு முறையற்ற ஒதுக்கீட்டின் விளைவு யாது?

5. Elaborately explain the different kinds of meetings under the Company's Act 2013.
2013–ம் ஆண்டு நிறுவனச்சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள பல வகை கூட்டங்களைப்பற்றி விரிவாக விளக்குக.

6. What is the procedure for alterting the Articles of Association of a Company? State its limitations.
ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகளை மாற்றுவதற்காக கையாளப்படும் நெறிமுறைகள் யாவை? இதற்குரிய வரம்புகளைக் கூறுக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Corporate Social responsibility
பொது நிறுமத்தின் சமூகப்பொறுப்பு

(b) Defunct Company
செயலற்ற நிறுமம்

(c) SEBI
இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம்

(d) Doctrine of Indoor Management
அக நிர்வாகக் கோட்பாடு

(e) Ruben vs. Great Fingall Consolidated Co. Ltd.,
ரூபன் எதிர் கிரேட் பிங்கால் கன்சாலிடேட் கம்பெனி லிட்

(f) Share and stock
பங்கு மற்றும் பங்குத்தொகுப்பு

(g) Rights and duties of an Auditor
தணிக்கையாளரின் உரிமைகள் மற்றும் கடமைகள்

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A company created a floating charge by issuing debentures. Three months interests become due and the debenture holders did not take any steps. The company made a mortgage of a specific part of its property. Did the debenture holders have priority over the mortgages?
கடனீட்டு பத்திரங்கள் வழங்கி, தன் சொத்தின் மீது படரும் பொறுப்பை ஒரு நிறுவனம் உருவாக்கியது. மூன்று மாத வட்டி நிலுவை இருந்தும் கடனீட்டு பத்திரம் பெற்றவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்குள் சொத்தின் ஒரு பகுதியை நிறுவனம் அடமானம் வைத்தது. கடனீட்டுப்பத்திரம் பெற்றவர்களுக்கு இச்சொத்தின் மீது முன்னுரிமை உள்ளதா?

9. 'A company purchases its own shares' - Decide its validity
அ என்ற நிறுமம் அதன் சொந்த பங்குகளை விலைக்கு வாங்கியது. இதன் செல்லும் தன்மையை முடிவு செய்க.

10. A transferred his shares to B. But the directors of the company refuse to register the transfer. Thereafter a call was made to A. Could A recover the amount of the call from B. Discuss.
அ என்பவர் தன்னடைய பங்குகளை ஆ என்பவருக்கு மாற்றினார். நிறுவனத்தின் இயக்குநர்கள் அப்பங்கு மாற்றத்தை பதிவு செய்ய மறுத்தனர். அதன் பிறகு அ பங்குத் தொகையினை ஆ–விடம் இருந்து திரும்பப்பெற முடியுமா? விவாதிக்கவும்.

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, FEBRUARY 2022

(Five Year Regular Course)
Third Year - Sixth Semester

COMPANY LAW

Time : 2 1/2 hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What is allotment of shares? What are the restrictions on allotment of shares? What is the effect of irregular allotment?
பங்குகள் ஒதுக்கீடு என்றால் என்ன? பங்குகள் ஒதுக்கீட்டின் மீதான வரம்புகள் யாவை? ஒரு முறையற்ற ஒதுக்கீட்டின் விளைவு யாது?

2. Briefly examine the establishment of Securities and Exchange Board of India and its power and functions.
இந்தியப் பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் ஆக்க அமைப்பு, அதிகாரம் மற்றும் பணிகளைப் பற்றிச் சுருக்கமாக ஆய்வு செய்க.

3. Describe the different kinds of debentures and point out the rights of the debenture holders.
பலவகைப்பட்ட கடனீட்டு ஆவணங்களை விளக்கி கடனீட்டு ஆவணதாரரின் உரிமைகளைக் குறிப்பிடுக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Discuss briefly the various modes of winding up of a company. What are the effects and consequences of an order of winding up of a company by the Tribunal?
எந்தெந்த முறைகளில் நிறுமம் கலைக்கப்படலாம் என்பதைப் பற்றி சுருக்கமாக விவாதி. தீர்ப்பாய நிறும கலைப்பு ஆணை ஒன்றின் வாயிலாக ஏற்படும் விளைவுகள் மற்றும் அதனைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

5. Briefly explain the salient features of the Companies Act, 2013.
2013–ம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் சிறப்புகளை சுருக்கமாக விளக்குக.

6. Define the doctrine of indoor management and state the rules and excep-

tions of this doctrine.

உட்புற மேலாண்மை கோட்பாட்டின் வரையறை செய்து அதன் விதிகளையும் விதிவிலக்குகளையும் குறிப்பிடுக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Corporate Social Responsibility.
வணிக நிறுமங்களின் சமூகப் பொறுப்பு.

(b) National Company Law Tribunal
நாட்டு நிறுமச் சட்ட தீர்ப்பாயம்.

(c) Fixed charge and Floating charge-Distinguish.
நிலையிருப்பு பொறுப்புக்கும், பற்றுப் பொறுப்புக்கும் உள்ள வேறுபாடுகள்.

(d) Memorandum of Association.
அமைப்பு முறையேடு.

(e) Constructive notice.
கொள்நிலை அறிக்கை.

(f) Reconstruction and Amalgamation.
மறு நிருமாணமும், ஒருங்கிணைப்பும்.

(g) Share certificate and share warrant.
பங்குச் சான்றிதழ் மற்றும் பங்குப் பணப்பற்றாணை.

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. On the failure of the directors of a company to call a meeting on requisition, members themselves sent a notice to all the members for a meeting to be held at the registered office. But the Managing Director (MD) locked the office premises to prevent the holding of the meeting. Hence the meeting was held at other place. Decide the validity of the meeting.

ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டத்தைக் கூட்டத் தவறியதால் உறுப்பினர்களே அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு அனுப்பி நிறுமப் பதிவு அலுவலகத்தில் கூட்டம் நடைபெறும் என்று தெரிவித்தனர். ஆனால் நிறுமத்தின் மேலாண்மை இயக்குநர் கூட்டம் நடைபெறுவதைத் தடுக்கும் பொருட்டு அலுவலகத்தைப் பூட்டிவிட்டதால் வேறு இடத்தில் அந்நிறுமத்தின் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் செல்லுந்தன்மையினை தீர்மானிக்கவும்.

9. The directors of a company were authorised to make payment towards any

charitable objects for any general public. Hence the directors of the company has given Rs.2 lakhs to a trust formed for the promotion of technical and business knowledge. Discuss.

நிறுவனம் இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அறச்செயல் நோக்கத்திற்காக பொது மக்களுக்கு பண உதவி அளிக்கலாம் என்று சொல்லப்பட்டது, இயக்குநர்களும் தொழில்நுட்ப பொது அறிவை பெருக்குவதற்காக ஒரு பொறுப்பமைவை உருவாக்கி அதற்கு ரூ,2 இலட்சத்தை அளித்தனர். விவாதிக்கவும்.

10. 'A' a shareholder after appointing 'B' as his proxy to attend a meeting at the company AGM, 'A' himself attended the AGM meeting and voted on a particular resolution Thereafter 'B' claims to exercise his vote. Examine the claims of 'B'.

'அ' என்ற பங்குரிமையாளர் நிறுவத்தின் AGM கூட்டத்தில் பங்கு கொள்ள 'ஆ' என்பவரை நியமனம் செய்த பிறகு 'அ' என்பவரே அக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்தார். அதன் பிறகு 'ஆ' என்பவர் தனது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று கோருகிறார், 'ஆ'வின் கோரிக்கையினை ஆராய்க.

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, JUNE 2022

(Five Year Regular Course)
Third Year - Sixth Semester

COMPANY LAW

Time : 2 1/2 hours Maximum : 7 0 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What is prospectus? Discuss the nature and extent of the liability of directors with regard to untrue statements in the prospectus.

திட்ட அறிவிப்பு என்றால் என்ன? திட்ட அறிவிப்பில் உண்மையான தகவல்களுக்கு எதிராக இயக்குநர்களின் பொறுப்பு மற்றும் இயல்பை விளக்கி கூறவும்.

2. Define 'Director' under the Companies Act 1956. Explain the law relating to appointments and removal of director.

1956–ம் ஆண்டு நிறுவன சட்டத்தின் கீழ் இயக்குநர் யார் என்பதை வரையறுத்து மற்றும் அவர் எவ்வாறு நியமனம் செய்யப்படுகிறார் என்றும், எவ்வாறு நீக்கப்படுகிறார் என்றும் விளக்குக.

3. Briefly indicate the various kinds of meetings with their respective purposes dealt with under the Companies Act.
நிறுவனச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள பல்வேறு வகையான கூட்டங்களை அவைகளின் நோக்கங்களுடன் சுருக்கமாக சுட்டிக்காட்டுக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. The Memorandum of Association is a fundamental document of a company. Explain.
'அமைப்பு முறையேடு' என்பது ஒரு நிறுவனத்தின் அடிப்படை பட்டயமாகும் – விளக்குக.

5. What do you mean by debentures? Explain the various kinds of debentures and the law relating to debentures.
கடனீட்டுதழ் என்றால் என்ன? இதன் வகைகள் மற்றும் இது குறித்தான விதிகளை விளக்குக.

6. Discuss the circumstances in which and the process by which a company can reduce its share capital.
ஒரு நிறுவனம் தன் பங்கு மூலதனத்தை எந்தச் சூழ்நிலையில் எந்த முறையில் குறைக்கலாம் என்பதை விவாதிக்க.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Alteration of Article.
செயல்முறை விதிகளின் மாற்றம்.

(b) Promoters.
துவக்குநர்கள்.

(c) Transfer of shares.
பங்கு மாற்றம்.

(d) Qualification and disqualification of directors.
இயக்குநர்களின் தகுதியும் மற்றும் தகுதியின்மையும்.

(e) Prevention of oppression and mismanagement.
அடக்கு முறையையும் தவறான மேலாண்மைகளையும் தடுத்தல்.

(f) Members and shareholders.
உறுப்பினர்களும் பங்குதாரர்களும்.

(g) Resolutions.
தீர்மானங்கள்.

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The directors of a company paid the dividend out of the share capital. Such act was challenged by shareholders. Advise to the shareholders.

ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள் பங்கு மூலதனத்திலிருந்து பங்கு ஆதாயத்தை எடுத்து வழங்கினார்கள். இயக்குநர்களின் இச்செயலை பங்குதாரர்கள் எதிர்த்தனர். பங்குதாரர்களுக்கு உரிய அறிவுரை வழங்கவும்.

9. Ram had subscribed for the memorandum of a company for 100 shares. The company was duly registered but ultimately he took only 10 shares. The company was wound up. What is the extent of Ram's liability.

ராம் என்பவர் ஒரு நிறுவனத்தின் 100 பங்குகள் வாங்க அமைப்பு முறையேட்டினை பெற்று சந்தா அனுப்பினார். அந்த நிறுமம் முறைப்படி நிறுமச்சட்டத்தின் கீழ் பதிவும் செய்யப் பட்டது. நிறுமம் பதிவு செய்யப்பட்ட பின்பு ஆனால் அவர் 10 பங்குகள் மட்டும் பெற்றுக் கொண்டார். அந்த நிறுவனம் கலைக்கப்பட்டது. ராமுவின் பொறுப்பு நிலை என்ன?

10. 'X' applies for some shares of a company on the basis of prospectus, which contains a misstatement. The shares are allotted to 'X', who afterwards transfers them to 'A'. Can 'A' bring an action for rescission on the ground of misstatement?

திட்ட அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிறுவனத்தின் சில பங்குகளைப் பெற 'ஒ'–என்பவர் மனு செய்கிறார். அந்த திட்ட அறிவிப்பு தவறான தகவல்களை கொண்டிருந்தது. 'ஒ'விற்கு பங்குகள் ஒதுக்கப்படுகின்றன. பின்னர் அவர் அவற்றை 'அ'–விற்கு மாற்றுகிறார். தவறான தகவல்களை காரணங்காட்டி தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க முடியுமா?

புதிய வடிவிலான வினாத்தாள் எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது?

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்களின் வடிவமைப்பானது பல்லாண்டுகளாக **A, B, C** என்ற முன்று பகுதிகளை மட்டுமே கொண்டிருந்தது. இதன் கீழ் முறையே நெடு வினா, சிறு குறிப்பு எழுதுக வினா, பிரச்சனை வினா ஆகியன கேட்கப்பட்டன. ஆனால் தற்போது இந்த வடிவமைப்பு மாற்றப்பட்டு **A, B, C, D** என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

பகுதி **A**-யில் நெடு வினாக்கள் மூன்று கேட்கப்படுகின்றன. அவற்றில் நீங்கள் இரண்டு வினாக்களை தேர்ந்தெடுத்து ஒவ்வொன்றுக்கும் 500 சொற்களில் விடை யளிக்க வேண்டும். ஒவ்வொரு விடைக்கும் 12 மதிப்பெண்கள் வீதம் இரண்டு வினாக் களுக்கான விடைகளுக்கு மொத்தம் 24 மதிப்பெண்கள். பகுதி **B**-யில் மூன்று குறு வினாக்கள் கேட்கப்பட்டு அவற்றில் நீங்கள் இரண்டு வினாக்களுக்கு 300 சொற் களில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொன்றுக்கும் 7 மதிப்பெண் வீதம் இரண்டுக்கு 14 மதிப்பெண்கள். பகுதி **C**-யில் சிறு குறிப்புகள் எழுதுக வினாக்கள் 7 கேட்கப் படுகின்றன. அவற்றில் ஐந்துக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடைக்கும் 4 மதிப்பெண் என்ற அடிப்படையில் ஐந்துக்கு மொத்தம் 20 மதிப் பெண்கள். பகுதி **D**-யில் பிரச்சனைகள் வடிவில் வினாக்கள் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறு மொத்தம் மூன்று வினாக்கள் கொடுக்கப்பட்டு, அவற்றில் இரண்டுக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். உங்கள் விடையில் வினா தொடர்பான சட்டப் பிரிவுகள் மற்றும் வழக்கு களைச் சுட்டிக்காட்டி, தகுந்த காரணங்களுடன் விளக்க வேண்டும். பிரச்சனைக்கான தீர்வு ஒவ்வொன்றுக்கும் 6 மதிப்பெண்கள் வீதம் இரண்டுக்கு 12 மதிப்பெண்கள்.

டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் மேற்கண்டவாறு வினாத்தாள் வடிவமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் தேர்வெழுதும் காலம் மற்றும் மதிப்பெண்களிலும் மாற்றத்தை கொண்டு வந்தது. அவை வருமாறு,

(1) தேர்வெழுதும் காலம் 3 மணி நேரங்களில் இருந்து 2 ½ மணி நேரமாக குறைக்கப்பட்டுள்ளது.

(2) மதிப்பெண்களும் அவ்வாறே குறைக்கப்பட்டுள்ளது. அதாவது 100 மதிப் பெண்கள் என்பது தற்போது 70 மதிப்பெண்களாக குறைக்கப்பட்டுள் ளது. மீதியுள்ள 30 மதிப்பெண்கள் கல்லூரி வகுப்பு செயல்முறை தேர்வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டுள்ள மேற்சொன்ன 2 1/1 மணி நேர காலத்தை கருத்தில் கொண்டு, விரைவாக விடை எழுதி முடிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

தேர்வுக்கு தயாராகும் மாணவ, மாணவியருக்கு சில முக்கியக் குறிப்புகள்

1956–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட நிறுவனச்சட்டம் நீக்கறவு செய்யப் பட்டு, 2013–ஆம் ஆண்டில் புதிய நிறுவனச்சட்டம் செயல்விளைவுக்கு வந்தது. இதிலும் தொடர்ந்து பல திருத்தங்கள் செய்யப்பட்டன. அதற் காக, 2015, 2017, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் திருத்தச்சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

புதிய நிறுவனச்சட்டத்தின் வருகையொட்டி தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகமும் தனது பழைய பாடத்திட்டத்தை மாற்றி புதிய பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. புதிய சட்டம், புதிய பாடத்திட்டம் என நிறுவனச் சட்டம் புது வடிவெடுத்துள்ளது என்று சொன்னால் அதில் மிகையொன்றுமில்லை. அவற்றின் அடிப்படையில் இந்த பதினொன்றாம் பதிப்பு புதிதாக மலர்ந்துள்ளது.

2013–ஆம் ஆண்டின் புதிய நிறுவனங்கள் சட்டம், 1956–ஆம் ஆண்டின் பழைய நிறுவனங்கள் சட்டத்திலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளது. புதிய சட்டத்தில் சில விடயங்கள் விரிவாக்கப்பட்டுள்ளன; சில விடயங்கள் சுருக்கப்பட்டுள்ளன. புதிய சட்டக் கருத்துருக்கள் அறிமுகப்படுத்துள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு நபர் நிறுவனத் தைக் குறிப்பிடலாம். மேலும் பழைய பிரிவுகளில் அடங்கியிருந்த பல விடயங்கள் விடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக திட்ட அறிவிப்புக்கு பதிலான அறிக்கையைக் குறிப்பிடலாம்.

புதிய பாடத்திட்டமானது, உள்ளபடியே புதிய முறையில் வடிவமைக்கப்பட்டுள் ளது. கூடுதல் பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதுபோல் புதிய பகுதிகளும் சேர்க்கப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்திற்கென (செபி) ஒரு தனிப் பகுதியே ஒதுக்கப்பட்டுள்ளதை இங்கு சுட்டிக்காட்டலாம். எனவே இந்நூல் முழுவதையும் கவனமாக படித்தறியவும்.

இனி தேர்வுக்கு தயாராகும் மாணவ, மாணவியருக்கு இந்த நிறுவனச் சட்டப்பாடம் தொடர்பாக சில முக்கியக் குறிப்புகள் வருமாறு:-

முதற்கண் நிறுவனத்தின் வரையறையை தெளிவாக படித்தறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் பல நெடுவினாக்களின் ஆரம்பத்தில் 'நிறுவனம் என்றால் என்ன? அல்லது 'நிறுவனத்திற்கு வரையறை தருக'' என்று வினவப்படுகிறது.

அடுத்ததாக, நிறுவனத்தின் இயல்புகளைப் பொறுத்து ஒரு நெடுவினா கேட்கப்படலாம். அதுபோல் நிறுவனத்தின் திரை தூக்கப்படுதல் என்பது மிக முக்கிய மான தலைப்பாகும். இதிலிருந்து ஒரு நெடு வினா அல்லது குறுகிய விடையெழுதுக வினா, வழக்குகள் அல்லது பிரச்சனைகள் கேட்கப்பட வாய்ப்புண்டு.

இதற்கடுத்து, ஒரு தனியார் நிறுவனத்திற்கும் பொது நிறுவனத்திற்கும்

இடையிலான வேறுபாடுகளை நன்கு படித்தறியவும். அதுபோல் கூட்டாண்மை நிறுமத் திற்கும், இந்து கூட்டுக் குடும்பத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை நன்கு படித் துக் கொள்ளவும். மேலும் நிறுவனத்தின் பல்வேறு வகைகளிலிருந்து நெடு வினா அல்லது குறுகிய விடையெழுதுக வினாக்கள் கேட்கப்பட வாய்ப்புண்டு. குறிப்பாக தனி நிறுவனம், பொது நிறுவனம், ஒரு நபர் நிறுவனம், சிறு நிறுவனம், சட்ட முரணான சேர்க்கை ஆகியன குறித்தும் வினா வரலாம்.

இதையடுத்து நிறுவனத்தை பதிவு செய்தல், அமைப்பு முறையேடு, செயல் முறை விதிகள், திட்ட அறிவிப்பு, தோற்றுவிப்பாளர்கள் ஆகிய தலைப்புகள் மிகமிகமிக முக்கியமானவை. நெடுவினாக்கள், குறுகிய விடையெழுதுக வினாக்கள், பிரச்சனை வினாக்கள் என்று இதிலிருந்து பரவலாக வினாக்கள் கேட்கப்படுகின்றன. எனவே கவனமுடன் படித்துக் கொள்ளவும்.

அடுத்ததாக, பங்குகள், பங்கு ஒதுக்கீடு, பங்குத் தொகை அழைப்புகள், பங்குகள் பறிமுதல் செய்யப்படுதல், பங்குதாரர்கள் அல்லது உறுப்பினர்கள், மூலதனம், கடன் பெறும் அதிகாரங்கள், கடனீட்டுப் பத்திரம் ஆகியவற்றிலிருந்து குறுகிய விடை யெழுதுக வினாக்களை எதிர் நோக்கலாம்.

படரும் பொறுப்பும் நிலையான பொறுப்பும் எனும் தலைப்பு மிக முக்கியமான தாகும். இது குறித்து நெடுவினா வரலாம்.

இயக்குநர்கள், கூட்டங்கள், தீர்மானங்கள், தணிக்கையாளர்கள், மறு நிர்மாணம் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றிலிருந்து நெடு வினா மற்றும் குறுகிய விடையெழுதுக வினாக்களையும், பிரச்சனை வினாக்களையும் எதிர்நோக்கலாம்.

'அடக்கு முறை மற்றும் தவறான மேலாண்மையைத் தவிர்த்தல்' எனும் தலைப்பில் 'ஒரு நிறுவனத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள், மேலாண்மை அதி காரத்தைச் செலுத்தவும், நிறுவனத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் தகுதி யுடையவர்கள் – விவரி. இவ்விதியின் விதிவிலக்குகள், கட்டுப்பாடுகள் யாவை" எனும் வினா அடிக்கடி கேட்கப்படுகிறது என்பதை அறியவும்.

அதுபோல் 'நிறுவனக் கலைப்பு' எனும் தலைப்பு அதிமுக்கியமானதாகும். இதிலிருந்து நிச்சயமாக நெடு வினா மற்றும் குறுகிய விடையெழுதுக வினாவை எதிர் நோக்கலாம். இப்பாடத்தைப் பொறுத்தவரை, உரிய அடிப்படை வழக்குகளை தேர்வில் குறிப்பிட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம், பங்கு மேல்முறையீட்டு தீர்ப்பாயம், தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சிறப்பு நீதிமன்றம் ஆகிய தலைப்புகள் மிக முக்கியம். இவற்றிலிருந்து நிச்சயம் ஒரு நெடுவினாவையும், குறுகிய விடையெழுதுக வினாவை தேர்வில் எதிர்நோக்கலாம்.

பிரச்சனை வினாக்களுக்கு எவ்வாறு விடையளிப்பது என்பது அடுத்த பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது.

தேர்வில் வெற்றி பெற நல்வாழ்த்துகளுடன்!

– ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்.

"பிரச்சனைகளுக்கு தீர்வு காண்" வினாக்களுக்கு விடையளிப்பது எப்படி? (How to Answer the "Solve the Problem" questions)

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் மூன்றாண்டு சட்டக் கல்வியில் 2018–ஆம் ஆண்டிலும், ஐந்தாண்டு சட்டக்கல்வியில் 2021–ஆம் ஆண்டி லும் அறிமுகப்படுத்திய புதிய வடிவிலான வினாத்தாளின் பகுதி D–யில் பிரச்சனை வடிவிலான வினாக்கள் மூன்று கேட்கப்பட்டு அவற்றில் ஏதேனும் இரண்டிற்கு தீர்வளிக்க வேண்டும்.

பிரச்சனை வினாக்களைப் பொறுத்தவரை நிறுவனச்சட்டத்தின் பின்வரும் தலைப்புகள் மிக முக்கியமானவை.

1. திரை தூக்கப்படுதல்,
2. வரம்புமீறல் கோட்பாடு,
3. குறைவெண்,
4. பங்கு மாற்றம்,
5. பங்குச் சான்றிதழ்,
6. திட்ட அறிவிப்பு,
7. அடக்குமுறை மற்றும் தவறான மேலாண்மை

இதுகாறும் நடந்த முந்தைய ஆண்டு தேர்வுகளின் வினாத்தாள்களை ஆராய்ந்து பார்த்தால், மேற்சொன்ன பகுதிகளிலிருந்து ஏராளமான பிரச்சனை வினாக்கள் வினவப்பட்டுள்ளதை அறிந்து கொள்ளலாம்.

பிரச்சனைக்கு சரியான தீர்வு தெரியவில்லை என்பதால், அந்த வினாவிற்கு விடையளிக்காமல் விட்டுவிடக்கூடாது. இதனால் தேர்ச்சி பெறுவதற்கான குறைந்த பட்ச மதிப்பெண்களை இழந்து விடுவீர்கள். எனவே விடை சுத்தமாக தெரியாத பிரச்சனை வினாவை அப்படியே விட்டுவிடாமல், அதற்கு நிறுவனச் சட்டத்தின் அடிப் படைக் கோட்பாடுகளை நினைவில் கொண்டு இரு தரப்பிலும் உங்கள் வாதங்களை முன் வைத்து விடை தரலாம்.

தமிழ் வினாவுடன் ஆங்கில வினாவையும் ஒருமுறை வாசித்துவிட்டு சட்டப் பிரிவுகள் மற்றும் வழக்குகளை சுட்டிக்காட்டி திறம்பட விடையளிக்கவும்.

பல சமயங்களில் ஏற்கனவே தீர்வான வழக்குகளே, பிரச்சனைகள் வடிவில் மாற்றப்பட்டு வினவப்படுகின்றன. எனவே முக்கிய வழக்குகளை நன்கு படித்துக் கொள்ளவும்.

தேர்வில் அதிக மதிப்பெண் பெற என்ன வழி?

புதிய முறை வினாத்தாள் சற்று கடினமானது. பழைய முறை வினாத்தாள் 3 பகுதிகளாக மட்டும் இருந்தது. விடையெழுத 3 மணி நேரம் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய முறை வினாத்தாள் 4 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. விடை எழுத அனுமதிக்கப்பட்ட காலம் 2 1/2 மணி நேரமாக குறைக்கப்பட்டுள்ளது. அதாவது கேட்கப்படும் வினாக்கள் அதிகம், அதே நேரம் அதற்கு விடையெழுத அனுமதிக்கப்பட்ட நேரம் குறைவு.

எனவே விருப்பத் தேர்வு போக விடையளிக்க வேண்டிய அத்தனை வினாக்களுக்கும் விடையளிக்கவும்; எவற்றையும் விட்டுவிட வேண்டாம். குறிப்பாக சிறு குறிப்பு எழுதுக வினாக்களில் விடையளிக்க வேண்டிய ஐந்து வினாக்களில் எவற்றையும் விட்டுவிட வேண்டாம். அது போல் பிரச்சனை வடிவிலான வினாக்களுக்கு, நன்கு தீர்வு தெரிந்த வினாக்களை முதலில் தேர்ந்தெடுத்து தீர்வளிக்கவும். சரியான தீர்வு தெரியாத பிரச்சனைக்கு தொடர்புடைய சட்டப்பிரிவைச்சுட்டிக்காட்டி வாதிட்டு எழுதவும். அதாவது எக்காரணம் கொண்டும் விடையளிக்காது விட்டுவிட வேண்டாம். முயற்சி செய்யவும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற இவை யாவும் அடித்தளம் வகுக்கும்.

மேலும் படித்ததை எவ்வாறு நினைவில் நிறுத்தி, அதைத் தேர்வெழும் போது எவ்வாறு மீண்டும் நினைவிற்கு கொண்டு வருவது என்பது பற்றி 5R என்ற ஒரு சூத்திரத்தை மாணவச்சமுதாயத்தினர் கடைப்பிடித்தால் தேர்வில் நிச்சயம் அதிக மதிப்பெண்களைப் பெறலாம் என்பது திண்ணம். அச்சூத்திரம் வருமாறு,–

படிப்பதற்கு '5R' சூத்திரம்

1 R	-	Read	-	ஒருமுறை படி;
2 R	-	Re-read	-	மற்றொருமுறை படி;
3 R	-	Remember	-	நினைவில் வைத்துக் கொள்;
4 R	-	Re-collect	-	நினைவிற்கு கொண்டு வந்து பார்;
5 R	-	Re-produce	-	எழுதிப்பார்; தேர்வில் வெளிப்படுத்து.

தேர்விலும் வாழ்விலும் வெற்றி பெற எனதன்பு வாழ்த்துக்கள்!

- வழக்குரைஞர், சட்ட நூலாசிரியர் மற்றும் சட்டத்தமிழாய்வு அறிஞர்

பி.ஆர்.ஜெ.

சட்டக்கல்வியாளர் திரு. பி.ஆர்.ஜெ. எழுதிய பிற நூல்கள்

1.	இந்திய தண்டனைச் சட்டம் (திருத்திய பதிமூன்றாம் பதிப்பு)	420–00
2.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – I (திருத்திய பத்தாம் பதிப்பு)	300–00
3.	குறித்தவகை நிவாரணச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	120–00
4.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – II (பத்தாம் பதிப்பு)	240–00
5.	நுகர்வோர் உரிமைகளும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும்	240–00
6.	மொழி பெயர்ப்புக்குப் பயனாகும் முக்கிய சட்டத் தமிழ் பதங்களும் விளக்கமும்	185–00
7.	அளவையியல் (அல்லது) தருக்கவியல் (Logic)	55–00
8.	சட்ட மொழியும் சட்டம் வரைதலும்	100–00
9.	சொத்துரிமை மாற்றுச் சட்டம் (வசதியுரிமைச் சட்டத்துடன்)	380–00
10.	சட்டப் பொருள் விளக்கம் (ஏழாம் பதிப்பு)	430–00
11.	வங்கியியல் சட்டம் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	230–00
12.	மாற்று முறையாவணங்கள் சட்டம்	150–00
13.	நிருவாகமுறைச் சட்டம் (ஐந்தாம் பதிப்பு)	395–00
14.	இந்திய அரசியலமைப்புச் சட்டம் I (மூன்றாம் பதிப்பு)	360–00
15.	இந்திய அரசியலமைப்புச் சட்டம் II (நான்காம் பதிப்பு)	395–00
16.	இந்திய சாட்சிய சட்டம் (பத்தாம் பதிப்பு)	460–00
17.	நிறுவனச் சட்டம் (பதினொன்றாம் பதிப்பு)	500–00
18.	இந்திய குடும்பச் சட்டம் I (ஒன்பதாம் பதிப்பு)	380–00
19.	இந்திய குடும்பச் சட்டம் II (திருத்திய எட்டாம் பதிப்பு)	370–00
20.	பொது நாட்டிடைச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	320–00
21.	இசைவுத் தீர்ப்பு, சமரசம் மற்றும் மாற்றுவழியில் தகராறுகள் தீர்வு முறை	320–00
22.	உரிமையியல் நடைமுறைச் சட்டம் (பதிமூன்றாம் பதிப்பு)	330–00
23.	குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்திய பதினொன்றாம் பதிப்பு)	495–00
24.	குற்றவியல் தத்துவம் மற்றும் தண்டனையியல் (திருத்திய எட்டாம் பதிப்பு)	410–00
25.	வாதுரைச் சட்டம் (மாதிரி வரைவுகளுடன்)	165–00
26.	பத்திரமெழுதும் முறையும் மாதிரிப் பத்திரங்களும் (ஒன்பதாம் பதிப்பு)	195–00
27.	நீதிமன்ற விதிகள் (எட்டாம் பதிப்பு)	120–00
28.	Rules of Court	90–00
29.	பொது வகையங்கள் விளக்கச் சட்டம்	100–00
30.	நீதிமன்ற ஆணையர்கள் மற்றும் சொத்துப் பேணுநர்கள் தொடர்பான சட்டம்	165–00
31.	குடியுரிமை தொடர்பான சட்டங்கள்	100–00
32.	வணிக நீதிமன்றங்கள் சட்டம் (திருத்திய இரண்டாம் பதிப்பு)	180–00
33.	ஆதார் சட்டம்	210–00
34.	ஊனங்கள் கொண்ட நபர்களின் உரிமைகள் சட்டம் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	200–00
35.	மனித உரிமைகளும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டமும் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	240–00
36.	தமிழ்நாடு கட்டட வாடகைச் சட்டம் (இரண்டாம் பதிப்பு)	160–00